சிவ சிவ ஓம் நமசிவாய சிவ சிவ ஓம் நமசிவாய



அறுபத்து மூவர் கதைகள்

பெரிய புராண வசனம்

பிரேமா™
பிரசுரம்



(பெரிய புராணம் முழுதும் வசன வடிவில்)

பதிப்பாசிரியர் :

அரு. ராமநாதன்

வசன வடிவில் எழுதியவர் :

துர்க்காதாஸ் எஸ். கே. ஸ்வாமி

பிரேமா™

பிரசுரம்

59, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

☎ :24800325, 24833180, 24811755.
e-mail : aruram@premapirasuram.com
website: www.premapirasuram.com

1952 ஸ்தாபிக்கப்பட்டது

பிரேமா பிரசுரம் - 254

முதற் பதிப்பு : ஜனவரி 1967
இருபத்து ஒன்றாம் பதிப்பு (பேப்பர் பேக்) : டிசம்பர் 2012
இருபத்து இரண்டாம் பதிப்பு (ஹார்டு பவுண்ட்) : ஜனவரி 2013
இருபத்து மூன்றாம் பதிப்பு (பேப்பர் பேக்) : மே 2014



விலை ரூ. 150/–

(ரூபாய் ஒரு நூற்று ஐம்பது மட்டும்)

கணிப்பொறி வடிவமைப்பு : ஏ.ஆர். எண்டர்பிரைசஸ், சென்னை - 24.
அச்சிட்டோர் : காரிஸ் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 29

4/2

அணிந்துரை

(முன்னாள் முதலமைச்சர் திரு.எம்.பக்தவத்ஸலம்.)

திருத்தொண்டர் புகழை உலகறியச் செய்த மகான், திருவாளர் அமைச்சர் சேக்கிழார் பெருமான் ஆவர். பக்திச் சுவை மிகச் சொட்டச் சொட்ட, அறுபத்து மூவர் நாயன்மார்களின் வரலாற்றை, அழகிய பாக்களாக, 'பெரிய புராணம்' என்ற பெயரால், பன்னிரெண்டாம் திருமுறையாக, உலகுக்கு அப்பெருந்தொண்டர் வழங்கினார். ''உலகெலாம்'' என்று தொடங்கும் அந்த அழகிய தமிழ்க்காவியம், உண்மையான தொண்டின் சுயநலமற்ற சேவையின்–ஆக்க சக்திகளுக்கு ஊக்கமளிக்கும் அரும்பணியின் சிறப்பை, தீந்தமிழ் விருத்தப் பாக்களால் விரிவாக எடுத்துரைக்கின்றது.

சோழப் பேரரசின் முதலமைச்சராகப் பணிபுரிந்த சேக்கிழார் பெருமானின் புகழ் நிலைத்திருக்க, இந்தத் தமிழ்க் காவியமே முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இன்றைய தினம் இந்த தமிழ்க் காவியத்தை செய்யுள் வடிவத்தில் படித்துப் பயன் பெறுபவர் மிகச் சிலரே. எனவே, இந்த அழகிய மகா காவியத்தைப் பாமரரும் அறியும் வகையில், எளிய நடையில், வசனரூபமாக, பிரேமா பிரசுராலயத்தார், ஓர் அழகிய நூலாக வெளியிட்டுள்ளனர். இந்தப் புதிய முயற்சி மிகவும் பாராட்டத் தக்கது.

இந்த வசன நூலில், அழகான ஓவியங்கள் கண்ணைக்கவரும் வகையில் காட்சியளிக்கின்றன. நமது பழம் பெரும் கோவில்களில் எல்லாம், ''அறுபத்து மூவர்'' நாயன்மார்களின், சிலைகளைக் காணலாம். ஆனால், அவர்கள் எங்கே பிறந்தார்கள், என்ன செய்தார்கள், எதற்காக அவர்களை வணங்குகிறோம் என்ற விவரம் பக்தர்களுக்குக் கூடத் தெரிவதில்லை. அறுபத்து மூவர் உற்சவம், சென்னை மயிலாப்பூரிலும், மற்ற ஊர்களிலும், ஆண்டுதோறும், வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுவது, அனைவரும் அறிந்ததே. ஆயினும் அறுபத்து மூவர் சமுதாயத்திற்கு செய்த திருத்தொண்டையும் உண்மையான பக்தியையும் அறிந்து நடப்பவர் வெகு சிலரே.

''அரசாங்க நிர்வாகத்திலிருப்பவர் எழுத்தாளராக இருக்க முடியுமா?'' என்று சிலர் சந்தேகப்படலாம் இந்த ஐயத்திற்கே இடமில்லை. ஏனெனில், சேக்கிழார் பெருமான், சோழப்பேரரசின் முதலமைச்சராய் இருந்தே ''திருத்தொண்டர் புராணம்'' பாடினார். அதேபோல, பாண்டிய நாட்டின் பிரதம மந்திரியாக இருந்தே மாணிக்க வாசகர், ''திருவாசகம்'' பாடினார்.

(முதற் பதிப்பிற்கு அளித்தது) **எம். பக்தவத்ஸலம்**
26.1.67

பொருளடக்கம்

இக் கதையை எழுதும்போது சரித்திர ஆதாரங்களுக்கு உதவிய சில முக்கியமான ஆராய்ச்சி நூல்கள் :-

1. The Pandyan Kingdom
2,3 The Cholas. Vol II (Part I & II)
4. Foreign Notices of South India (by Prof. K.A.Nilakanta Sastry)
5. The Mahavansa Part II (By L.C. Wijesinha.)
6. The Historical Inscriptions of Southern India (By S.R. Swell.)
7. South Indian Inscriptions.
8. Studies in the Ancient History of Tondamandalam (By R. Sathianathaier, M.A.L.T.)
9. Thirumalirunjolaimalai (Kallalagar Devastanam, Madura)
10. The Banas (By T.N. Rama Chandran, M.A.)
11. Inscriptions of the Pudukkottah State.
12. Gangas of Talakad (By M. V.K. Rao.)
13. Origin and Development of Saivism in South India.
14. பிற்காலச் சோழர் சரித்திரம் (பகுதி II)
15. பாண்டியர் வரலாறு (டி.வி. சதாசிவ பண்டாரத்தார்)
16. சோழர் வரலாறு
17. பெரிய புராண ஆராய்ச்சி
18. தமிழ்நாட்டு வட எல்லை (மா.இராசமாணிக்கனார் எம்.ஓ.எல்.)
19. சாஸனத் தமிழ்க் கவி சரிதம்
20. ஆராய்ச்சித் தொகுதி (மு.இராக வையங்கார்)
21. மூன்றாங் குலோத்துங்க சோழன் (வி.ரா. இராமச்சந்திர தீக்ஷிதர், எம்.ஏ)
22. தென்னாட்டு கல்வெட்டுகள் (பி.ஒ. எல். Degree Exam, by மு.சிவகுரு நாதன், பி.ஏ.)
23. சோழர் கோயிற்பணிகள் (ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை)
24. அகத்தியர் வரலாறு (துடிசை கிழார் அ. சிதம்பரனார்)
25. கம்பர் (டி.செல்வகேசவராய முதலியார், எம்.ஏ)
26. சரித்திரக் கொத்து (ஸி.ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி.ஏ)
27. செயற்கை நலம்
28. யான் கண்ட இலங்கை
29. கொங்குதேச இராசாக்கள் (சி.எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ.பி.எல்)
30. இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும் (வெ.ப. சுப்பிரமணிய முதலியார்.)
31. தமிழ் வீரம் (ரா.பி. சேதுப் பிள்ளை, பி.ஏ.பி.எல்)
32. இலக்கிய உதயம் II (எஸ். வையாபுரிப் பிள்ளை)
33. கள்ளர் சரித்திரம் (ந.மு. வேங்கடசாமி நாட்டார்)
34. பழந்தமிழாட்சி (ஞா.தேவநேயன், எம்.ஏ.)
35. பௌத்தமும் தமிழும் (மயிலை, சீனி, வெங்கடசாமி)
36. தமிழ் வரலாறு முதற்றொகுதி (ரா.இராகவையங்கார்)
37. தமிழ் நாவலர் சரிதை
38. வினோத ரசமஞ்சரி

மற்றும், இலக்கியங்கள், புராணங்கள், தத்துவ சாஸ்திரங்கள், கதை வளர வளர, ஆங்காங்கே சிறு குறிப்புகளுக்கு வேறு பல ஆராய்ச்சி நூல்களும் துணை புரியலாம்.



தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடி
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்

— சேக்கிழார்



கதைகள் பிறந்த கதை

நாம் சிவன் கோயிலுக்குப் போகிறோம். சுவாமியையும் அம்மனையும் தரிசித்துப் பிரசாதம் வாங்கிக் கொள்கிறோம். பிறகு பிராகாரத்தில் சுற்றி வரும்போது அங்கே அறுபத்து மூன்று நாயன்மார்களின் உருவச் சிலைகள் வரிசையாக அமர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். வந்து விடுகிறோம். சில சமயங்களில் அறுபத்து மூவர் உற்சவங்களுக்கும் போய் கும்பிடுகிறோம். ஆனால் அவ்வறுபத்து மூவரின் வரலாறுகள் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை. அவ்வரலாறுகள் நவரசங்களும் பொருந்திய சுவையான கதைகள்! நம் நவீனக் கதைகளைவிட அழுத்தமும் வேகமும் அடக்கமும் ஆழ்ந்த கருத்தும் ஆத்மார்த்தமான பயனும் வாய்ந்தவை. சேக்கிழாரால் இயற்றப் பெற்று பெரிய புராணம் எனவும் திருத்தொண்டர் புராணம் எனவும் வழங்கும் காவியத்தில் இக்கதைகள் அடங்கியுள்ளன. இவை பிறந்ததே ஒரு சுவையான கதையாகும்.

தொண்டை நாட்டில், புலியூர்க் கோட்டத்தில், குன்றத்தூரில், வேளாளர் குலத்தில், சேக்கிழார் குடி மரபில் காவிய ஆசிரியரான சேக்கிழார் பிறந்தார். அவருடைய இயற்பெயர் அருண்மொழி இராமதேவர் என்றாலும், தம்

குடிவழியில் அவர் மிகவும் சிறந்து விளங்கியதால் தம் குடிப்பெயராலேயே சேக்கிழார் என்று சிறப்பாக அழைக்கப்பட்டார். அவருடைய குடும்பப் பெரியோர் சோழ மண்டலத்து அரசியலில் தொடர் புடையவர்களாக விளங்கினார்கள்.

அந்தக் காலத்தில் அநபாய குலோத்துங்க சோழன் என்பவன் அரியணை ஏறியதும் அரசியல் பகைவரையெல்லாம் சிறைநீக்கி விடுதலை செய்து தன் நாட்டை அமைதியாகவும் நீதி நெறியோடும் அரசாளத் தொடங்கினான். அவன் சேக்கிழாரின் அறிவு ஆற்றல்களையும், நல்ல பண்புகளையும், தமிழ்ப் புலமையையும், அரசியல் திறமையையும் கண்டு அவரைத் தன் முதலமைச்சராக்கிக் கொண்டான். அவருக்குச் செங்கோல் ஒச்சும் தலைமைப் பதவியையும் உத்தமச் சோழப் பல்லவர் என்ற பட்டத்தையும் கொடுத்தான்.

அந்தச் சோழ மன்னன் ஒரு ரசிகன். கலாவினோதன்! அவன் காலத்தில் போர்களும் இல்லை. அதனால் கலைகளிலும், கேளிக்கைகளிலும் பொழுதைப் போக்கினான். காவியங்கள் படிப்பது, கதைகள் கேட்பது என்றால் அவனுக்குப் பிரியம் அதிகம்! ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியை அதன் தமிழ் இனிமைக்காக அநபாய குலோத்துங்க சோழன் மீண்டும் மீண்டும் படித்து அதிலே லயித்தான். அது அருமையானதொரு காதற் காவியம். சமண முனிவரான திருத்தக்கத் தேவரால் இயற்றப்பட்டது. ''துறவிகளான சமண சமயத்தவர்களால் இன்பத்துறையைப் பற்றிப் பாடமுடியுமா?'' என்று எதிர்தரப்பினர் அறைகூவல் விடுத்தபோது ''அதற்கும் சமணர்கள் வல்லவர்களே!'' என்று காட்டுவதற்காகவே அக்காவியம் எழுதப்பட்டது. அதனால் அதில் ஆண் பெண் இன்பத்துறை பற்றிய காதற் சுவையே மிகுந்திருப்பது இயல்பு. அக்காவியத்தையும், அதுபோன்ற வேறு பல காவியங்களையும் படிப்பதிலும், கதைகள் கேட்பதிலும் சோழமன்னன் பெரிதும் ஈடுபட்டான். அவற்றிலெல்லாம் சிருங்கார ரசமே நிரம்பி வழிந்தது! அவை எழுப்பும் ஆண் பெண் மோகக் கனவுகளிலும் விதம்விதமான கற்பனைகளிலுமே மன்னன் மூழ்கித் தன்னை மறந்து அதிக நேரம் செலவழிக்கலானான்.

இதை அமைச்சர் சேக்கிழார் அறிந்ததும் மிகவும் மனம் வருந்தினார். ''வாழ்க்கையிலாகட்டும், கதைகளிலாகட்டும் சிருங்கார ரசம் ஒன்று மட்டுமே பிரதானமல்ல. மற்ற ரசங்களும் இருக்க வேண்டும். அவற்றிற்கு அடிப்படையாக பக்திச் சுவையே பிரதானமாக அமைந்திருக்க வேண்டும்!'' என்று அவர் கருதியிருக்கலாம். அவர் சைவ சமயப் பற்றுதலும்

சிவபக்தியும் சிவனடியார்களிடம் பேரன்பும் கொண்டவர். தாம் பிறந்த ஊரான குன்றத்தூரில் மாடவீதி அமைத்து, சிவபெருமானுக்குத் திருநாகேச்வரம் என்னும் ஒரு கோயில் கட்டி நித்திய பூசைகளுக்கும் ஏற்பாடு செய்தவர். சைவ சமயம் வளர்ந்தால்தான் செந்தமிழும் தமிழர் பண்பும் வளரும் என்று நினைத்தார். மன்னன் கதைகள் கேட்பதில் பிரியமுள்ளவன் என்பதும் அவருக்குத் தெரியும். தமிழ்நாட்டில் வாழ்ந்து மறைந்த அறுபத்து மூன்று நாயன்மார்கள் முதலான சிவனடியாரின் வரலாறுகள் நவரசங்களும் நிறைந்த சுவையான கதைகளைப் போல் சிறந்து விளங்குகின்றன என்பதும் அவருக்குத் தெரியும்!

அதனால் ஒருநாள் சேக்கிழார் சோழ மன்னனிடம் சென்று, ''மாமன்னரே! நீர் சிவமதத்தினராக இருந்தும் அதற்குப் புறம்பான கதை, காவியங்களையே படிக்கிறீர்! சிவகதை இருக்க அவகதைகளை ஏன் படிக்கிறீர்? நெல் குத்தி உண்ணாமல் உமிகுத்திக் கை வருந்துவதால் பயன் என்ன? கறவைப் பசு இருக்க மலட்டுப் பசுவிடம் பால் கறக்க முயன்று மனம் தளர்வார் உண்டா? மென்கரும்பு இருக்க வன்கரும்பை மென்று தின்றால் ஜீரணிக்க முடியுமா? விளக்கின் நெருப்பு இருக்க மின்மினிப் பூச்சியின் மினுமினுப்பில் குளிர் காய முடியுமா? அரசே! நீர் படிக்கும் அவகதைகள் இம்மைக்கும் ஆகா; மறுமைக்கும் உதவா!'' என்றார்.

அதைக் கேட்டதும் அநபாய சோழன் ''நான் படிப்பது பயனில்லாத அவகதை என்பீராகில் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியளிப்பதாக நீர் குறிப்பிடும் சிவகதை என்பது என்ன? அது சீவக சிந்தாமணி போல் இடையில் வந்த நவகதையோ? தவக்கதையோ? பழங்கதையோ? தனிப்பெரும் புதுக்கதையோ? அதற்கு முன்னூல் உண்டா? இவ்வுலகில் அக்கதைகளைக் கேட்டவர் யார்? சொன்னவர் யார்? அந்த விவரத்தைச் சொல்லும்!'' என்று குதூகலத்தோடு கேட்டான்.

''சோழப் பேரரசே! நம் சிவபெருமானுக்கு அடியார்களாக விளங்கிய திருத்தொண்டர்களின் வரலாறுகளைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். அவை மிகவும் சுவையான கதைகள். அத்தொண்டர்களின் செயலையும் பெருமையையும் நம்பியாரூரரான சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பாட்டாகப் பாடப் புகுந்தார். அப்போது அம்பலத்தில் நடமாடும் நம் ஆண்டவரே, ''தில்லைவாழ் அந்தணர்தம்'' என்று பாடலுக்கு முதலடி எடுத்துக் கொடுக்க, பதினொரு பாடலைக் கொண்ட திருத்தொண்டத் தொகை என்னும் நூலை நம்பியாரூரர் இயற்றினார். அதன்பிறகு அந்நூலுக்குத் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் பொருள் விரித்துக் கூற நாரையூர்

நம்பியாண்டார் நம்பி என்பவர் திருத்தொண்டர் திருவந்தாதியை இயற்றினார். திருமுறை கண்ட இராஜராஜ சோழர், மற்றும் சிவாலய முனிவர் முதலானவர்கள் அந்நூலை மிகவும் பாராட்டி உலகில் விளங்கச் செய்தார்கள்!'' என்றார் அமைச்சர் சேக்கிழார்.

''அத்திருத் தொண்டர்களின் தூய கதைகளை எனக்கு விவரித்துச் சொல்லவேண்டும்!'' என்று சோழ மன்னன் கேட்டான்.

சுருக்கமாகவுள்ள சுந்தரரின் திருத்தொண்டத் தொகைக்கும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதிக்கும் சேக்கிழார் பொருள் விரித்து நாயன்மார் அறுபத்து மூவரின் வரலாறுகளையும் கதைகளைப்போல் சுவைபடச் சொன்னார்.

நவரசச் சுவைகளோடு பக்திச் சுவை அடிப்படையாக அமைந்துள்ள அவ்வரலாற்றுக் கதைகளையெல்லாம் அநபாயச் சோழ மன்னன் சுவாரசியமாகக் கேட்டான். உமையொரு பாங்கரான சிவபெருமானுக்குத் தொண்டு புரிந்து அடியார்கள் பரகதிப் பேறு அடைந்த விதத்தையெல்லாம் நினைத்து நினைத்து நெஞ்சம் உருகினான்.

பிறகு அவன் சேக்கிழாரை நோக்கி, ''இச்சிவனடியார்களின் உருக்கமான புண்ணிய வரலாறுகளை ஒரு பெரும் காவியமாக நீர் இயற்றி இந்த உலகிற்குத் தந்தருள வேண்டும்!'' என்று கேட்டுக் கொண்டான். சிவனடியார்கள் ஒவ்வொருவரும் பிறந்த நாடு, ஊர், குலம் முதலானவற்றோடு ஒவ்வொருவரும் செய்த திருத்தொண்டு, அவரவருடைய வாழ்க்கைப் போக்குகள், பெற்ற பேறுகள் முதலானவற்றை எல்லாம் விவரிக்க வேண்டும் என்றும் வேண்டினான். தொண்டு செய்ததால் பரம முக்தி அடைந்தோர் எவரும் அறியா ஜீவன் முக்தர்களாக இங்கு இருப்போர், இல்லறத்தில் இருந்தே இனிமையான முக்தி பெற்றோர், துறவறத்தில் நின்று சிவகதி பெற்றோர், பிரம்மச்சாரிகளாய் இருந்து அருள் பெற்றோர், சிவனடியார்களைப் பகைத்து நரகமடைந்தோர், பகைத்தும் அருள் பெற்றோர், சிவபூஜை செய்து முக்தி பெற்றோர், குருவருளால் முக்தி பெற்றோர் ஆகியோரின் வரலாறுகளை உவமை நயங்களோடும் கற்றாரும் மற்றாரும் மகிழும்படி கதைச் சுவையோடும் ஒரு மாபெரும் காவியமாகப் படைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டான்.

''நான் அம்பலக் கூத்தன் அருளால் அப்படியொரு காவியம் இயற்றுவேன்!'' என்றார் சேக்கிழார்.

"இனி நமக்கும் நம் நாட்டுக்கும் நம் சைவ சமயத்திற்கும் இந்த உலகத்திற்கும் தேவையான உம்முடைய ஒரே திருப்பணி அதுதான்!'' என்று அநபாய குலோத்துங்க சோழ மன்னன் கூறி, அந்த மகாகாவியம் இயற்றுவதற்காகச் சேக்கிழாருக்கு தேவையான ஆள் வசதிகள் செய்து கொடுத்து பொன்னும் பொருளும் வாரி வழங்கினான்.

திருத்தொண்டர்களின் வரலாறுகளைக் கதைக் காவியமாக சேக்கிழார் இயற்றத் தொடங்குவதற்கு முன்னால் அறுபத்து மூன்று நாயன்மார்களும் மற்ற சிவனடியார்களும் தோன்றி வாழ்ந்து திருத்தொண்டு புரிந்த ஊர் முதலான இடங்களுக்கெல்லாம் சென்று சிவனடியார்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளையெல்லாம் சேகரித்தார். ஆலயங்களிலுள்ள அடியார்களின் சிற்பங்கள், ஓவியங்களை எல்லாம் கூர்ந்து கவனித்துக் கதைத் தொடர்பிற்குரிய கருத்துகளையெல்லாம் தொகுத்துக் கொண்டார். தம் அனுபவத்தினாலும் பயிற்சியினாலும் கண்டறிந்த இசைக்கலை, மருத்துவம், சமய தத்துவம், சரித்திர ஆராய்ச்சி, தமிழ் இலக்கியம், வானவியல், பூமி இயல், உடலியல், அரசியல், நீதிமுறைகள் முதலானவற்றை எல்லாம் பயன்படுத்தக்கூடிய தன்மைகளையும் தெளிவுபடுத்திக் கொண்டார். பிறகு சேக்கிழார் தில்லைக்கூத்தர் பிரானின் திருவருள் பெற்றே காவியத்தை எழுதத் தொடங்கவேண்டும் என்றும், அவ்விறைவன் முன்னிலையிலே தம் காவியத்தை அரங்கேற்ற வேண்டும் என்றும் தீர்மானித்தார்.

உடனே அவர் தில்லை நகரான சிதம்பரத்தை நோக்கிப் பயணம் சென்றார். தில்லையின் எல்லையைக் கண்டதும் அவர் தரையில் விழுந்து வணங்கி எழுந்து நகருக்குள் சென்றார். சிவகங்கையான தாமரைக் குளத்தில் தீர்த்தமாடி நடராஜப் பெருமானை கண்குளிரக் கண்டு கைகூப்பிக் கும்பிட்டு உள்ளம் உருகிக் கண்ணீர் மல்கப் பேரானந்த வெள்ளத்தில் மூழ்கினார்.

பிறகு அவர் ஆனந்தக் கூத்தரை நோக்கி, "ஆண்டவனே! உம்முடைய அடியார்களான திருத்தொண்டர்களின் வரலாறுகளை ஒரு காவியமாகப் பாடுவதாக அடியேன் பொறுப்பேற்று உள்ளேன். அதற்கு அடிகளே, நீரே பாடலின் முதலடி எடுத்துக் கொடுக்க வேண்டும்!'' என்று வேண்டினார். உடனே அம்பலத்தில் கூத்தாடும் நடராஜப் பெருமானின் திருவருளால் "உலகெலாம்'' என்ற ஒரு சொல் வானொலி வாக்காக ஒலித்தது. "உலகெலாம்'' என்ற அந்த ஆண்டவனின் வார்த்தையையே முதல் முத்திரை முதலடியாகக் கொண்டு சேக்கிழார்

''திருத்தொண்டர் புராணம்'' என்னும் பெருங்காவியத்தைப் பாட நினைத்தார்.

''உலகெலாம்'' என்ற திருவாக்கு ஓங்கி ஒலிப்பதைக் கேட்டதுமே தில்லை வாழ் அந்தணர் முதலானவர்களெல்லாம் அதிசயித்து திருவருளை நினைத்து உள்ளுருகி, சேக்கிழாரைப் போற்றி அவருக்குத் திருமாலையும், திரு நீறும் பரிவட்டமும் இறைவன் சந்நிதியில் தந்து மகிழ்ந்தார்கள். சேக்கிழார் அவர்களையும் ஆண்டவனையும் வணங்கிச் சென்று ஆயிரங்கால் மண்டபத்தில் தவநெறியோடு அமர்ந்து இறைவனின் திருவருளோடு திருத்தொண்டர் புராணம் அல்லது பெரிய புராணம் என்னும் காவியத்தை எழுதி முடித்தார்.



அதையறிந்ததும் அநபாய சோழ மன்னன் தன் பரிவாரத்தோடு தில்லை நகருக்கு வந்தான். அவனைத் தில்லை வாழ் அந்தணர்களும் பெண்கள் பெரியோர் முதலான ஊர்மக்களும் சேக்கிழாரும் சேர்ந்து வரவேற்றார்கள். தன் அமைச்சரான சேக்கிழாரின் தவப் பொலிவைக் கண்டதும் சோழ மன்னன் தன்னையறியாமல் தலைமீது கைகுவித்து அவரை வணங்கி உள்ளூர மகிழ்ந்தான். பிறகு எல்லோரும் திருச்சிற்றம்பலத்தை அடைந்து ஆனந்தக் கூத்தனை வணங்கி உள்ளம் உருகி ஆனந்தப் பெருக்கில் நின்றார்கள்.

அப்போது, ''வையம் காக்கும் வளவனே! நாம் ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக் கொடுக்க நம் அன்பனான சேக்கிழான் அந்த முதலடியைக் கொண்டு திருத்தொண்டர்களின் வரலாறுகளை விரித்துப் பாடி, நல்லதொரு புராணமாக இயற்றியுள்ளான். அத்திருத் தொண்டர்

திறங்களை நீ கேட்பாயாக!'' என்ற ஒரு வானொலியும், அதோடு ஒரு சிலம்பொலியும் எழுந்தன.

மன்னன் மனமகிழ்ந்தான். சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தின் காவியக் கதைகளை எல்லோரும் கேட்டு இன்புறுவதற்காக ''அன்பர்களெல்லாம் விரைந்து வருக'' என்று அழைப்பு விடுத்தான். அழைப்பு ஓலைகளைத் தூதர்கள் வசம் நாடெங்கும் பல திசைகளிலும் அனுப்பினான்.

சிவசமயத்தவர்கள் திருப்பதிகங்களை ஓதிக்கொண்டும், அன்பர்கள் 'அரகரா!' என்ற பேரொலி எழுப்பிக் கொண்டும் வந்தார்கள். பலநாடுகளிலிருந்து கற்றாரும் மற்றாரும் மந்திரிகளும் தந்திரிகளும் மாவேந்தர்களும் பாவேந்தர்களும் திரண்டு வந்து சிதம்பரம் நகரில் குழுமினார்கள். தில்லைத் திருக்கூத்தர் திருமுன்னர் திருத்தொண்டர் புராண பிரசங்கத்திற்கான ஏற்பாடுகளை எல்லாம் சோழ மன்னன் செய்தான்.

வேதியர்கள் யாகசாலைகளில் வேள்விப் புகையை வளர்த்தார்கள். மாதர் புகைக்கும் அகிற்புகை எங்கும் சூழ்ந்து மணம் பரப்பியது. வீதிகள் சுத்தம் செய்யப்பட்டு வீடு வாசல்தோறும் கோமய நீரால் மெழுகப்பட்டு, முன்றிலில் கோலமிடப்பட்டு, ஆங்காங்கே வீதிகளில் தோரணங்கள் தொங்கவிடப்பட்டன. ஆடக நாடக சாலைகளும் முத்தணி அத்தாணி மண்டபங்களும் நடன மாதர்களின் ஆடல் அரங்குகளும், மாட மதில்கள் மாளிகை சூளிகை எங்கும் மாலைகளும் பொன்னரி மாலைகளும் தொங்கவிடப்பட்டு நகர் முழுவதுமே அலங்கரிக்கப்பட்டது. தமிழில் வல்லவர்கள், சிவாகமம் படித்தவர்கள், ஞானநூல் பல கற்றவர்கள், குருநெறிக்குரியவர்கள், இலக்கண இலக்கியங்களில் ஈடுபாடு உள்ளவர்கள், காவியங்களையும் கதைகளையும் பேசவல்லவர்கள் அனைவரும் தில்லை மன்றத்தில் ஏராளமாகக் கூடினார்கள்.


தில்லைக்கூத்தர் நடம்புரியும் திருச்சிற்றம்பலத்தில் முன்றிலை மறையவர்கள் கோமயத்தால் மெழுகி வெண்சுதையால் ஆறுகால் பீடம் ஒன்றை அமைத்து, அதன்மீது பசும்பட்டு விரித்து, அதன்மீது வெள்ளை மடித்துண்டு விரித்து மலர்களைத் தூவி, தூபங்கொடுத்து, அதன்மீது சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தை வைத்தார்கள். சேக்கிழார் பெருமானை, அநபாயச் சோழனும் மற்றவர்களும் வணங்கி, ''திருத்தொண்டர் புராணத்தை நீரே வாசித்துப் பொருள் உரைக்க வேண்டும்!'' என்று வேண்டினார்கள்.

அநபாயச் சோழன் முன்னிலையிலும், தில்லைத் திருக்கூத்தர் திருமுன்பும், ஏராளமான மக்கள் மகிழ, சேக்கிழார் தம்முடைய புராணக் காவியத்திலிருந்து அறுபத்து மூவர் கதைகளையும் தொகையடியார் கதைகளையும் இடையிடையே தேவாரப் பதிகங்களையும் தமிழ் நூல்களின் நல்லுரைகளையும் சொல்லிப் பொருள் விரித்துக் கூறினார். சிவபெருமானுக்கு உகந்த திருநாளும், ஞானசம்பந்தர் அவதரித்த திருநாளும், அவர் உமையம்பிகையிடம் ஞானப்பால் உண்ட திருநாளும், திருவாதிரை நாளாகையால் சித்திரை மாதத்தில் திருவாதிரை தினத்தன்று சேக்கிழார் தம் புராணத்தை அரங்கேற்றத் தொடங்கினார். தம்முடைய கதைப் பிரசங்கத்தை மறு ஆண்டு அதே சித்திரை திருவாதிரை தினத்தன்று முடிப்பதாகவும் சேக்கிழார் கூறினார்.

அன்று முதல் நாள்தோறும் புராணப் பிரசங்கம் நடைபெற்றது. கதைகள் கேட்பதற்காக நாளுக்கு நாள் கூட்டம் பெருகியது. கதைப் பிரசங்கம் நடைபெறும் ஒவ்வொரு நாளும் சோழ மன்னரின் ஏவற்படி திருமடங்களில் அன்பர்களின் கூட்டத்திற்கு அறுசுவை உணவுகள் கறி வகைகளோடும், பால், தேன், தாம்பூலம் முதலானவற்றோடும் வழங்கப்பட்டுப் பெரும் விருந்துகள் நடைபெற்றன. தில்லைநகர் முழுவதும் பூலோகச் சிவலோகம் போல் திகழ்ந்தது.

திருமுறைச் சேர்ப்போர், எழுதுவோர், இருந்து வாசிப்போர், கேட்போர் யாவரும் சிரமசைத்து சிறப்பாக நடக்கும் சேக்கிழாரின் கதைச் சொற்பொழிவைக் கேட்டு குதூகல மடைந்தார்கள். கதைகளைக் கேட்கும்போது சிலர் மகிழ்ந்து சிரிப்பார்கள். சிலர் உள்ளமுருகி அழுவார்கள். சேக்கிழார் செய்த அரும்பெரும் தவத்தை நினைத்து சிலர் புகழ்வார்கள். ‘‘இனி சோழ மன்னனுக்கு வேறு மத்தினர் கதைகளும் பிடிக்குமோ?’’ என்பார்கள். இவ்வாறு சேக்கிழார் கூறும் சிவனடியார்களின் கதைகளை சோழ மன்னனும் கேட்டு மகிழ்ந்து வந்தான். முதல் ஆண்டு சித்திரைத் திருவாதிரையில் ஆரம்பித்த கதை, மறு ஆண்டு சித்திரைத் திங்கள் திருவாதிரை நாளன்று முற்றுப் பெற்றது. ஊரெங்கும் ‘‘ஹர! ஹரா!’’ என்னும் முழக்கம் கடல் ஒலிபோல் முழங்கியது.

சேக்கிழார் அரங்கேற்றிய பெரிய புராண நூலை, மறையவர்கள் சிவமூல மந்திரங்களால் அருச்சனை செய்து கும்பிட்டுத் தூப தீபம் காட்டி ஆலத்தி எடுத்து மலர்கள் தூவி போற்றி, அந்நூலை ஐந்தாவது வேதம் என்று கூறிப் பெருமைப்படுத்தினார்கள். அநபாயச் சோழன் அந்நூலைப் பசும் பட்டினால் போர்த்தி பொன்தட்டில் வைத்தான்.



பிறகு அதை அவன் தன் பட்டத்து யானை மீது ஏற்றினான். சேக்கிழார் பெருமானையும் அந்த யானை மீது ஏறி அமரச் செய்து தானும் அவருக்குப் பின்னால் ஏறி உட்கார்ந்து சேக்கிழாருக்குத் தன் இரு கைகளாலும் வெண்சாமரம் வீசி வீதி நெடுகிலும் ஊர்வலம் வரச் செய்தான். ''இதுவன்றோ நான் செய்த தவப்பயன்?'' என்று பெருமைப்பட்டான்.

எல்லோரும் அந்த ஊர்வலத்தில் உற்சாகத்தோடு கலந்து சென்றார்கள். வீதியின் இருமருங்கிலும் வாழைகள், கமுகுகள் நாட்டி பூமாலைகளும் பொன்னரி மாலைகளும் தோரணங்களும் தொங்கவிட்டிருந்தார்கள். வீடுகள்தோறும் தூப தீபங்கள் ஏற்றி, சுடர் விளக்கும் மணி விளக்குகளும் ஏற்றி, ஆரத்திகள் எடுத்து, வேத ஒலிகளையும் எழுப்பி, இன்னிசைப் பதிகங்களும் பாடி சேக்கிழாரின் திருத்தொண்டர் புராண ஊர்வலத்தைப் பலவாறாகவும் வாழ்த்தி வரவேற்றார்கள்.

யானை பவனி வந்த பிறகு திருச்சிற்றம்பலத்தின் முன்பு நின்றது. யானைமீதிருந்த திருத்தொண்டர் புராணத்தை எடுத்துச் சென்று நடராஜப் பெருமானின் சந்நிதி முன்பு வைத்தனர். சேக்கிழாருக்கு தொண்டர்சீர் பரவுவார் என்ற திருநாமமும் ஞானமுடியும் சூட்டி சோழ மன்னன் வணங்கினான். மற்றவர்களும் வணங்கி மகிழ்ந்தனர். இவ்வாறு அரங்கேறிய பெரிய புராணம் சைவத் திருமுறை

பன்னிரண்டினுள் பன்னிரண்டாம் திருமுறையாக விளங்கும் பெருமையும் பெற்றது.

அநபாய சோழ மன்னன் அங்கிருந்தவர்களை நோக்கி, ‘‘தொண்டர் சீர் பரவுவாரின் தம்பியான பாலறாவாயர் எங்கே இருக்கிறார்?’’ என்று வினவினான். ‘‘அவர் குன்றத்தூரில் திருநாகேச்வரப் பெருமானுக்கு திருக்குளம் அமைத்துத் திருத்தொண்டு செய்து கொண்டிருக்கிறார்!’’ என்று சிலர் கூறினார்கள். உடனே சேக்கிழாரின் தம்பியான பாலறாவாயரை மன்னன் வரவழைத்து அவருக்குத் ‘‘தொண்டமான்’’ என்ற பெயரைச் சூட்டித் தன் அமைச்சராக்கிக் கொண்டான்.

சேக்கிழார் தில்லையிலேயே தங்கியிருந்து நாள்தோறும் கூத்தர் பிரானை வணங்கி வழிபட்டுச் சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்தார். அவர் கூறிய கதைகளைக் கேட்ட அநபாய சோழமன்னன் பேரின்பந் தரும் சிவாகம முறைப்படி ஒழுக்கமுடையவனாக வாழ்ந்து அரசாட்சி புரிந்தான். சிவநெறி தழைத்தது. செந்தமிழ் வளர்ந்தது. அறநெறி ஓங்கியது. ஆண்டவன் திருவருளும் எங்கும் நிறைந்தது!

ஆதி சிவன் பெற்ற தமிழிலே எத்தனையோ சமய நூல்கள் உலாவுகின்றன. சைவ சமயத்திலே, சிவனருள் வழியிலே அறம் வளர்த்த சிவனடியார்களில் முக்கியமானவர்கள் அறுபத்து மூவர். வேளாளர், வேதியர், வேடர், வேந்தர், வணிகர், வண்ணார், குறுநில மன்னர், குயவர், மருத்துவர், மாவிரதர், பாணர், சாணார், சாலியர், செக்கர், சிவயோகியர், செம்படவர், இடையர், இருமூவர் எனப் பல்வேறு குல மரபுகளைச் சேர்ந்தவர்களாக அவர்கள் இருந்தபோதிலும் சிவநெறியிலே ஒன்றுபட்டவர்கள். அவர்களைப் பற்றிய வரலாறுகள் பலவிதமான உணர்ச்சி பாவங்களோடும் உள்ளமுருக்கும் கட்டங்களோடும் பக்திச் சுவையின் அடிப்படையில் நெஞ்சைக் கவரும் வண்ணம் சேக்கிழார் இயற்றிய புராண காவியத்திலே அமைந்திருப்பதைக் காணலாம்.


காவியங்கள் பலவகைப்படும்; அவற்றிலே சிலவற்றில் உலகியலை மட்டும் காணலாம். சிலவற்றில் உயிரியலை மட்டும் காணலாம். சிலவற்றில் கடவுளியலை மட்டும் காணலாம். இம்மூன்றையும் பெரிய புராணத்தில் ஒருங்கே காணலாம். உலகியலால் இன்பம் செழிக்கும். உயிரியலால் அன்பு தழைக்கும். கடவுளியலால் அகவாழ்வு மலரும். இம் மூன்றும் சேக்கிழாரின் புராண காவியத்திலே ஒருங்கே அமைந்துள்ளன.

நமது தேசத்திலுள்ள புராண,ங்களில் பெரும்பாலானவை வடமொழி நூல்களை மூலமாகக் கொண்டவை. ஆனால்

பெரிய புராணம் மட்டும் நம் தமிழ் மொழியிலேயே முதல் நூலாக மலர்ந்த இலக்கியமாகும். இது புராண காவியம் என்றாலும் பௌராணிகத்தை மட்டும் வித்தாகக் கொண்டு எழுந்ததல்ல. தமிழகத்து பக்தி வரலாற்றையும், அடியார்களின் சரித்திரத்தையும் வித்தாகக்கொண்டு எழுந்த காவியமாகும். இது வட மொழியிலும் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அன்புடைமையையும் அருளியல்பையும் திருத்தொண்டையும் பொது வுடைமையாகக் கொண்ட இந்நூல் ருஷ்ய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டு, கம்யூனிஸ்டு ருஷ்யாவிலும் பல்லாயிரக் கணக்கானவர்களால் படித்துப் பாராட்டப் பெற்றுள்ளது.

இதில், ஆண்டவனிடம் ஆத்மீகப் பக்தி முதல் ஆண் பெண் காதல் வரை, துறவறம் முதல் இல்லறம் வரை, அருள் நெறி முதல் அரசியல் வரை, விவசாயம் முதல் வீரத் தொழில் வரை, தியாகம் முதல் சூதாட்டம் வரை, மென்மை முதல் வன்மை வரை, இயற்கை முதல் கற்பனை வரை, சரித்திரம் முதல் புராணம் வரை, சமதர்மம் முதல் சாதியாசாரம் வரை, பழமைப் பண்பாடு முதல் புதுமைப் புரட்சிவரை பலவிதமான பொருட் சிறப்புகளும் நிறைந்துள்ளன. 4,253 செந்தமிழ்ப் பாடல்களால் உருவாகியுள்ள இந்தப் பெரிய காவியத்தை முழுவதும் படிப்பதற்கோ, ஒவ்வொரு பாடலையும் அடிபிரித்தும் பதவுரை பொழிப்புரைகளோடு உற்றுணர்ந்து சுவைப்பதற்கோ, இந்த யந்திர நாகரிக காலத்தில் நம்மில் பலருக்கு அவகாசமோ பொறுமையோ இருப்பதில்லை. அதனால் அந்தப் பெரிய காவியம் முழுவதையும் வசன வடிவில் வடித்துத்தரும் பெரும் முயற்சி இப்புத்தகத்தில் கையாளப்பட்டுள்ளது. சேக்கிழார் தம்முடைய காவியத்தை ''மாக் கதை'' என்றே குறிப்பிட்டிருக்கிறார். சேக்கிழார் புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராண வரலாற்றிலும் ''அறுபத்து மூவர் கதை'' எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, பாடல்கள் உருவிலுள்ள பெரிய புராணம் முழுவதையும் இன்றையப் புதுமைத் தமிழில் கதைகள் போல் வசன வடிவில் அமைத்து, ''அறுபத்து மூவர் கதைகள்'' என்னும் தலைப்பில் இப் புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

வாசக அன்பர்கள் வரவேற்று வாழ்த்துவார்களாக!



அறுபத்து மூவர்
(சில வரலாற்றுக் குறிப்புகள்)

நாயன்மார் பெயர்	குலம்	நாடு	பிறந்த ஊர்	வழிபாடு	பிறந்த மாதமும் நட்சத்திரமும்
1. அதிபத்தர்	பரதர்	சோழநாடு	நாகைப்பட்டினம்	லிங்கம்	ஆவணி...ஆயில்யம்
2. அப்பூதியடிகள்	அந்தணர்	சோழநாடு	திங்களூர்	குரு	தை...சதயம்
3. அமர்நீதியார்	வணிகர்	சோழநாடு	பழையாறை	சங்கம்	ஆனி...பூரம்
4. அரிவாட்டாயர்	வேளாளர்	சோழநாடு	கணமங்கலம்	லிங்கம்	தை...திருவாதிரை
5. ஆனாயர்	இடையர்	மழநாடு	மங்கலவூர்	லிங்கம்	கார்த்திகை...ஹஸ்தம்
6. இசைஞானியார்	ஆதிசைவர்	நடுநாடு	திருநாவலூர்	லிங்கம்	சித்திரை
7. இடங்கழியார்	சிற்றரசர்	கோனாடு	கொடும்பாளூர்	சங்கம்	ஐப்பசி...கார்த்திகை
8. இயற்பகையார்	வணிகர்	சோழநாடு	காவிரிப்பூம்பட்டினம்	சங்கம்	மார்கழி...உத்திரம்
9. இளையான்குடி மாறர்	வேளாளர்	சோழநாடு	இளையான்குடி	சங்கம்	ஆவணி...மகம்
10. உருத்திர பசுபதியார்	அந்தணர்	சோழநாடு	திருத்தலையூர்	லிங்கம்	புரட்டாசி...அஸ்வினி
11. எறிபத்தர்	(தெளிவில்லை)	சோழநாடு	கருவூர்	லிங்கம்	மாசி...ஹஸ்தம்
12. ஏயர்கோன் கலிக்காமர்	வேளாளர்	சோழநாடு	திருப்பெருமங்கலம்	லிங்கம்	ஆனி...ரேவதி
13. ஏனாதிநாதர்	சான்றார்	சோழநாடு	எயினனூர்	சங்கம்	புரட்டாசி...உத்திராடம்
14. ஐயடிகள் காடவர்கோன்	அரசர்	தொண்டைநாடு	காஞ்சிபுரம்	லிங்கம்	ஐப்பசி...மூலம்

நாயன்மார் பெயர்	குலம்	நாடு	பிறந்த ஊர்	வழிபாடு	பிறந்த மாதமும் நட்சத்திரமும்
15. கணநாதர்	அந்தணர்	சோழநாடு	சீர்காழி	குரு	பங்குனி...திருவாதிரை
16. கணம்புல்லர்	(தெளிவில்லை)	சோழநாடு	இருக்குவேளூர்	லிங்கம்	கார்த்திகை...கிருத்திகை
17. கண்ணப்பர்	வேடர்	தொண்டை நாடு	உடுப்பூர்	லிங்கம்	தை...மிருகசீரிடம்
18. கலிக்கம்பர்	வணிகர்	நடுநாடு	திருப்பெண்ணாகடம்	சங்கம்	தை...ரேவதி
19. கலியர்	வாணியர்	தொண்டை நாடு	திருவொற்றியூர்	லிங்கம்	ஆடி...கேட்டை
20. கழறிற்றறிவார்	அரசர்	மலைநாடு	கொடுங்களூர்	லிங்கம்	ஆடி...சுவாதி
21. கழற்சிங்கர்	அரசர்	தொண்டை நாடு	காஞ்சிபுரம்	லிங்கம்	வைகாசி...பரணி
22. காரியார்	(தெளிவில்லை)	சோழநாடு	திருக்கடவூர்	லிங்கம்	மாசி...பூராடம்
23. காரைக்கால் அம்மையார்	வணிகர்	சோழநாடு	காரைக்கால்	சங்கம்	பங்குனி...சுவாதி
24. குங்கிலியக் கலயர்	அந்தணர்	சோழநாடு	திருக்கடவூர்	லிங்கம்	ஆவணி...மூலம்
25. குலச்சிறையார்	(தெளிவில்லை)	பாண்டி நாடு	மணமேற்குடி	குரு	ஆவணி...அனுஷம்
26. கூற்றுவர்	அரசர்	பாண்டி நாடு	களந்தை	லிங்கம்	ஆடி...திருவாதிரை
27. கோச்செங்கட் சோழர்	அரசர்	சோழநாடு	சிதம்பரம்	லிங்கம்	மாசி...சதயம்

நாயன்மார் பெயர்	குலம்	நாடு	பிறந்த ஊர்	வழிபாடு	பிறந்த மாதமும் நட்சத்திரமும்
28. கோட்புலியார்	வேளாளர்	சோழநாடு	திருநாட்டியத் தானகுடி	லிங்கம்	ஆடி...கேட்டை
29. சடையனார்	ஆதிசைவர்	நடுநாடு	திருநாவலூர்	லிங்கம்	மார்கழி...திருவாதிரை
30. சண்டேசுரர்	அந்தணர்	சோழநாடு	திருச்சேய்ஞலூர்	லிங்கம்	தை...உத்திரம்
31. சத்தியார்	வேளாளர்	சோழநாடு	விரிஞ்சியூர்	சங்கம்	ஐப்பசி...பூசம்
32. சாக்கியர்	வேளாளர்	சோழநாடு	திருச்சங்கமங்கை	லிங்கம்	மார்கழி...பூராடம்
33. சிறுப்புலியார்	அந்தணர்	சோழநாடு	திருஆக்கூர்	லிங்கம்	கார்த்திகை...பூராடம்
34. சிறுத்தொண்டர்	மாமாத்திரர்	சோழநாடு	செங்காட்டங்குடி	சங்கம்	சித்திரை...பரணி
35. சுந்தரர்	ஆதிசைவர்	நடுநாடு	திருநாவலூர்	குரு	ஆடி...சுவாதி
36. செருத் துணையார்	வேளாளர்	சோழநாடு	ஆவூர்	லிங்கம்	ஆவணி...பூசம்
37. சோமாசிமாறர்	அந்தணர்	சோழநாடு	திருவம்பர்	குரு	வைகாசி...ஆயில்யம்
38. தண்டியடிகள்	(தெளிவில்லை)	சோழநாடு	திருவாரூர்	லிங்கம்	பங்குனி...சதயம்
39. திருக்குறிப்புத் தொண்டர்	வண்ணார்	தொண்டை நாடு	காஞ்சிபுரம்	சங்கம்	சித்திரை...சுவாதி
40. திருஞான சம்பந்தர்	அந்தணர்	சோழநாடு	சீர்காழி	குரு	வைகாசி...மூலம்
41. திருநாவுக்கரசர்	வேளாளர்	நடுநாடு	திருவாமூர்	குரு	சித்திரை...சதயம்
42. திருநாளைப் போவார்	பறையர்	சோழநாடு	ஆதனூர்	லிங்கம்	புரட்டாசி...ரோகிணி

நாயன்மார் பெயர்	குலம்	நாடு	பிறந்த ஊர்	வழிபாடு	பிறந்த மாதமும் நட்சத்திரமும்
43. திருநீலகண்டர்	குயவர்	சோழநாடு	சிதம்பரம்	சங்கம்	தை...விசாகம்
44. திருநீலகண்ட யாழ்ப்பாணர்	பாணர்	நடுநாடு	எருக்கத்தம்புலியூர்	குரு	வைகாசி...மூலம்
45. திருநீலநக்கர்	அந்தணர்	சோழநாடு	சாத்தமங்கை	லிங்கம்	வைகாசி...மூலம்
46. திருமூலர்	(தெளிவில்லை)	வடநாடு	(தெரியவில்லை)	குரு	ஐப்பசி...அஸ்வினி
47. நமிநந்தியடிகள்	அந்தணர்	சோழநாடு	ஏமப்பேரூர்	லிங்கம்	வைகாசி...பூசம்
48. நரசிங்கமுனை யரையர்	சிற்றரசர்	நடுநாடு	திருநாவலூர்	சங்கம்	புரட்டாசி...சதயம்
49. நின்றசீர் நெடு மாறர்	அரசர்	பாண்டிய நாடு	மதுரை	குரு	ஐப்பசி...பரணி
50. நேசர்	சாலியர்	குடகு	காம்பிலி	சங்கம்	பங்குனி...ரோகிணி
51. புகழ்ச்சோழர்	அரசர்	சோழநாடு	உறையூர்	சங்கம்	ஆடி...கார்த்திகை
52. புகழ்த் துணையார்	ஆதிசைவர்	சோழநாடு	செருவிலிபுத்தூர்	லிங்கம்	ஆவணி...ஆயில்யம்
53. பூசலார்	அந்தணர்	தொண்டை நாடு	திருநின்றவூர்	லிங்கம்	ஐப்பசி...அனுஷம்
54. பெருமிழலைக் குறும்பர்	குறும்பர்	சோழநாடு	பெருமிழிலை	குரு	ஆடி...சித்திரை
55. மங்கையர்க் கரசியார்	அரசியார்	பாண்டிய நாடு	மதுரை	குரு	சித்திரை...ரோகிணி

நாயன்மார் பெயர்	குலம்	நாடு	பிறந்த ஊர்	வழிபாடு	பிறந்த மாதமும் நட்சத்திரமும்
56. மானக் கஞ்சாறர்	வேளாளர்	சோழநாடு	கஞ்சாறூர்	சங்கம்	மார்கழி...சுவாதி
57. முருகர்	அந்தணர்	சோழநாடு	திருப்புகலூர்	சங்கம்	வைகாசி...மூலம்
58. முனையாடுவார்	வேளாளர்	சோழநாடு	திருநீடூர்	சங்கம்	பங்குனி...பூசம்
59. மூர்க்கர்	வேளாளர்	சோழநாடு	திருவேற்காடு	சங்கம்	கார்த்திகை...மூலம்
60. மூர்த்தியார்	வணிகர்	பாண்டிய நாடு	மதுரை	லிங்கம்	ஆடி....கிருத்திகை
61. மெய்ப் பொருளார்	சிற்றரசர்	நடுநாடு	திருக்கோவிலூர்	சங்கம்	கார்த்திகை...உத்திரம்
62. வாயிலார்	வேளாளர்	தொண்டை நாடு	திருமயிலாப்பூர்	லிங்கம்	மார்கழி...ரேவதி
63. விறன்மிண்டர்	வேளாளர்	மலைநாடு	செங்குன்றூர்	சங்கம்	சித்திரை...திருவாதிரை

தொகையடியார் :

தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர் பிறந்தார், முழுநீறு பூசிய முனிவர், முப்போதும் திருமேனி தீண்டுவார், அப்பாலும் அடிசார்ந்தார் ஆகிய ஒன்பதின்மரும் தொகையடியார்களாவர். அவர்களில் தில்லைவாழ் அந்தணர் தில்லையில் உள்ள தீட்சிதர்கள், முப்போதும் திருமேனி தீண்டுவார், ஆதிசைவர், மற்றவர்கள், ஊர், குலம், நட்சத்திரம் முதலியவற்றை அறிய முடியவில்லை.

சமயக் குரவர் நால்வர் :

அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர்.

அறுபத்து மூவரின் வரலாற்றுக் காலம்

(சில ஆராய்ச்சிக் குறிப்புகள்)

சங்க காலத்திற்குப் பிறகு, கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஐந்தாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை, தமிழகத்தின் வரலாற்றில், தெளிவான நிகழ்ச்சிகளை ஆராய்வதற்கு மிகவும் கடினமான காலமாகும். இதை 'இருண்ட காலம்' என ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். இந்தக்காலத்தில் தமிழகம் களப்பிரர் கைவசமாக இருந்தது என்று கூறுபவர்களும் உண்டு. சுமார் கி.பி. 575ல் முதலாம் சிம்ம விஷ்ணு என்ற பல்லவ மன்னன் சோழரையும், களப்பிரரையும் வென்றான். அந்தக் காலத்தில், களப்பிரர் வசமாயிருந்த பாண்டிய நாட்டை, பாண்டியன் கடுங்கோன் (கி.பி. 575–600) மீட்டான். சைவ சமயக் குரவர்களான திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்ற இருவரும் அந்தக் காலத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப் படுகின்றனர்.

1. அவர்களுக்கு முற்பட்ட நாயன்மார்கள் : (கி.பி. 300–600)

1. அமர் நீதியார், 2. கண்ணப்பர், 3. எறிபத்தர், 4. அரிவாட்டாயர், 5. மூர்த்தியார், 6. சண்டேசர், 7. காரைக்காலம்மையார், 8. நமிநந்தியடிகள், 9. திருமூலர், 10. தண்டியடிகள், 11. சாக்கியர், 12. கூற்றுவர், 13. புகழ்ச்சோழர், 14. ஐயடிகள் காடவர்கோன், 15. கணம்புல்லர், 16. புகழ்த்துணையார், 17. கோச்செங்கட் சோழர்.

திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும், பிற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்தவர்கள். இச்சோழ மன்னர்கள் தஞ்சையில் தங்கள் ஆட்சியைத் தொடங்கும்வரை பழையாறையைத் தலைநகராகக் கொண்டிருந்தார்கள்.

2. இவர்கள் காலத்து நாயன்மார்கள் : (கி.பி. 600–660)

1. குலச்சிறையார், 2. குங்கிலியக் கலயர், 3. முருகர், 4. அப்பூதியடிகள், 5. திருநீலநக்கர், 6. சிறுத்தொண்டர், 7. நின்றசீர் நெடுமாறர், 8. மங்கையர்க்கரசியார், 9. திருநீல கண்ட யாழ்ப்பாணர்.

பல்லவ மன்னர்களான முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 615–630) முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி.630–668) என்ற இருவரின் ஆட்சிக் காலத்தில், தமிழகத்தில் சைவ சமயம் வேரூன்றி சமணர்களின் ஆதிக்கம் குறையலாயிற்று.

3. திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் காலத்திற்கும், சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த நாயன் மார்கள் : (கி.பி. 660–840)

1. இயற்பகையார், 2. இளையான்குடிமாற நாயனார், 3. ஏனாதி நாதர், 4. ஆனாயர், 5. உருத்திரப் பசுபதியார், 6. அதிபத்தர், 7. இடங்கழியார், 8. மெய்ப் பொருளார், 9. திருநாளைப் போவார், 10. திருக்குறிப்புத் தொண்டர், 11. சிறப்புலியார், 12. கலியர், 13. கலிக்கம்பர், 14. காரியார், 15. வாயிலார், 16. சத்தியார், 17. பூசலார், 18. நேசர், 19. மூர்க்கர், 20. திருநீல கண்டர், 21. கணநாதர், 22. முனையாடுவார்.

4. சுந்தரர் காலத்து நாயன்மார்கள் : (கி.பி. 840–865)


1. இசை ஞானியார், 2. ஏயர்கோன் கலிக்காமர், 3. கழற் சிங்கர், 4. கழறிற்றறிவார், 5. செருத்துணையார், 6. சோமாசி மாறர், 7. கோட்புலியார், 8. சடையனார், 9. பெருமிழலைக் குறும்பர், 10. மானக்கஞ்சாறர், 11. நரசிங்க முனையரையர், 12. விறன்மிண்டர்.

5. காலம் அறியமுடியாத தொகையடியார்கள் :

1. முப்போதும் திருமேனி தீண்டுவார், 2. அப்பாலும் அடிசேர்ந்தார், 3. முழுநீறு பூசிய முனிவர், 4. பரமனையே பாடுவார், 5. பொய்யடிமையில்லாத புலவர், 6. தில்லைவாழ் அந்தணர், 7. திருவாரூர்ப் பிறந்தார், 8. பத்தராய்ப் பணியாற்றுவார், 9. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்.



உலகெலாம் உணர்ந்(து) ஓதற்கு அரியவன்;
நிலவு லாவிய நீர்மலி வேணியன்;
அலகில் சோதியன்; அம்பலத்து, ஆடுவான்;
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்.



1. திருமலையில்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனான சிவபெருமானின் பொன்னிற மேனிபோல் பிரகாசிப்பது இமயமலை! அந்தப் பனிமலையின் அகலமும், நீளமும் உயரமும் காண்போரை மயங்கச் செய்யவல்லது.

அத்தகைய இமயமலைத்தொடரிலே, சிவபெருமானின் பொன்னிற மேனியில் வெண்திருநீறு பூசியிருப்பதுபோல் பொலிவது திருக்கயிலைமலை! அம்மலையில் அன்பருக்கன்றி வேறு எவ்வகையாருக்கும் இன்ன தன்மையன் என்றறிய ஒண்ணாத சிவபெருமான் சிறப்பாக வாழ்ந்திருப்பார். அங்கு



அண்ணல் சிவபெருமான் வீற்றிருப்பதால் சுவர்க்க, மத்திய, பாதலம் என்கின்ற மூன்று உலகங்களும் தைத்திரியம், பௌடியம், தலவ களம், சாமம் என்ற நான்கு வேதங்களும் செய்த அளவற்ற தவப் பயனாகிய புண்ணியங்கள் எல்லாம் ஒருங்கே திரண்டு உருப் பெற்றது போலத் தூய வெண்மையாகத் திருக்கயிலைமலை அமைந்திருக்கும். இத்தகைய திருக்கயிலை மலையானது உலகம் என்ற கொடியிலே எண்ணற்ற தலங்கள் என்னும் தளிர்களின் நடுவிலே வெண்மலர்போல மலர்ந்திருக்கும்.

அந்த மலைச்சாரலிலே, நான்மறைகளின் நாதமும், வித்தியாதரர்களின் வீணாகானமும், கார்மேகங்களின்

முழக்கமும், யானைகளின் பிளிறலும், தேவதுந்துபிகளின் ஆரவாரமும் இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருக்கும்.

குளிர்ச்சியான வானத்திலே அனந்தகோடித் தேவர்கள் தலைவணங்கிச் சூழ்ந்து நிற்பார்கள். அவர்கள் அணிந்திருக்கும் மணிமகுடங்களும், வாடா மலர்களும் ஒருபுறம் முனிவர்கள் கைகூப்பி நிற்கும் அஞ்சலி மாலைகளும் மாலைவரிசை போலவே ஓயாமல் தென்பட்டுக் கொண்டிருக்கும்! ஒருபுறம் ஐம்பெரும் பூதங்களையும் தேவர்களின் பதவிகளையும் படைக்கும் வல்லமை உள்ள கோடி கோடி சிவ பூதகணங்கள் படர்ந்து ஆடிப்பாடிக் கூத்தாடும்!



திருக்கயிலை மலையின் வெண்ணிறத்தைத்தான் என்னென்பது? தெய்வநாயகனின் திருவடிகளைத் தரிசிக்கவந்த நான்முகன், தன் வாகனமாகிய அன்னத்தை வெளியே விட்டுச் செல்வான். தரிசிக்கத் தக்க காலமல்லாத காரணத்தால் அவன் மீண்டும் வெளியே வருவான். அப்போது ஜோதி மயமான கயிலைமலையின் தூய வெண்மையில் அன்னத்தின் அழகிய வெண்மையும் கலந்து நிற்பதால் அன்னத்தைக் காண இயலாது அன்னவன் திகைத்து விழிப்பான்!

திருக்கயிலையின் முதற் கோபுர வாயிலிலே, திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்கள் பலரும், சிவனடியார்களும் நெருங்கிக் கூடி, சிவபிரானின் திருவருளைப் பெறுவதற்குக் காத்திருப்பார்கள். அந்த வாசலில், நந்தியெம்

பெருமான் கையிலே பொற்பிரம்பு ஏந்தியவராய் காவல் செய்து கொண்டிருப்பார்.

அளவிடமுடியாத மாண்பினாலும், சிவபெருமான் வீற்றிருப்பதாலும், அத்திருக்கயிலை மலை ★அநபாய சோழனின் மனம் போல, ஓங்கி விளங்குகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்கயிலை மலையின் அடிவாரத்திலே பக்தர்களான முனிவர்களும் சுத்த யோகிகளும் பல்லாயிரர் கூடியிருப்பார்கள். அவர்களுக்கு நடுவில் உபமன்னிய முனிவர் என்னும் உன்னத ஞானியார் அமர்ந்திருப் பார். அவர் புலி முனிவரின் (வியாக்கிரபாத முனிவரின்) புதல்வர். சிவ பக்தியில் சிறந்தவர். இன்ன தன்மையன் என்று அறியவொண்ணாத சிவபெருமானின் தன்மையை உணர்ந்து அந்த பக்தி ஆர்வத்திலே தழைப்பவர். துவாரகைக்கு இறைவனாகிய கண்ணபிரானின் முடியின் மீதே திருவடி வைத்துச் சிவதீட்சை செய்தவர். சகல உயிர்களுக்கும் நாதனாகிய சிவபெருமான் திருவருட் தொண்டிற்கு ஆதி அந்தம் இல்லை என்பதைத் தெளிந்துணர்ந்து எப்போதும் திருத்தொண்டு ஆற்றும் பேறு பெற்றவர். அவர் குழந்தையாக இருந்தபோது அழுது, ஆண்டவன் திருவருளால் பெற்ற பாற்கடலைச் சித்தம் மகிழ உண்டு வளர்ந்தவர்.

ஒரு சமயம் அவர் மற்ற முனிவர்களுடனும், சிவயோகியார்களுடனும் வேத வேதாந்த ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருந்தார். அப்போது திடீரென்று ஆயிரம் சூரியர்கள் ஒருங்கே திரண்டு வருவது போன்று பொங்கும் பேரொளி ஒன்று முன்னால் தோன்றியது. அந்த ஒளியைக் கண்டவுடன் அங்கிருந்த மாதவ முனிவர்கள் அனைவரும் வியப்புற்று, உபமன்னிய முனிவரை வணங்கி, ‘‘இங்கே தோன்றிய இந்த அதிசயம் என்ன?’’ என்று கேட்டார்கள்.

உடனே உபமன்னிய முனிவர் மதிசூடிய சிவபெருமானைத் தியானித்து, அந்தப் பேரொளியின் காரணத்தைச் சிந்தித்து அறிந்தார். பிறகு அவர் முனிவர்களை நோக்கி, ‘‘எம்பெருமானின் திருவருளால் திருக்கயிலையில் இருந்து தென் திசையை அடைந்து திருநாவலூரில் தோன்றி வளர்ந்த வன்தொண்டன் என்னும் சுந்தரமூர்த்தி மீண்டும் எம்பெருமானின் திருவருளால் நம் திருக்கயிலைக்குத் திரும்பி

★ இந்த அநபாய சோழனை, ஆராய்ச்சியாளர்கள் இரண்டாங் குலோத்துங்க மன்னன் என்று கூறுவர். இவன் ஆட்சிக்காலம் கி.பி. 1133–1150. இம்மன்னனுக்குச் சேக்கிழார் அமைச்சராக இருந்தார். இம்மன்னனே திருத்தொண்டர் புராணம் பாடக் காரணமாயிருந்தவன்.

வருகிறார்!'' என்று கூறினார். பிறகு அந்நீள் சடை மாமுனிவர் எழுந்து தம் கைகளைத் தலைமீது கூப்பிய வண்ணம் பேரொளி தோன்றிய திசையை நோக்கி ஆனந்தக் கண்ணீர் பெருகக் கும்பிட்டார்.

மற்ற முனிவர்கள் தங்கள் சந்தேகத்தைத் தெளிவித்துக் கொள்வதற்காக, அவரை நோக்கி, ''மாமுனிவரே! நித்தியமான சிவபெருமானின் தாமரை மலர் போன்ற திருவடிகளையன்றி, வேறு எவரையும் எதையும் வணங்காத தாங்கள் இந்தச் சோதியைக் கண்டதும் கரங்குவித்ததென்ன?'' என்று கேட்டார்கள்.

அதற்கு உபமன்னிய முனிவர், ''இப்பேரொளிப் பிழம்பாக எழுந்தருள்பவர், தம்பிரானாகிய ஜீவபெருமானையே தம்முள்ளத்தால் தழுவிக் கொண்ட சிவமயமான நம்பியாரூரர்! நாம் வணங்கும் தன்மை வாய்ந்தவர்!'' என்று கூறினார்.

உடனே முனிவர்களும், மற்றவர்களும் அந்தப் பேரொளியை வணங்கினார்கள். பிறகு அவர்கள் உபமன்னிய முனிவரை நோக்கி, ''எங்கள் உள்ளத்தையெல்லாம் கவர்ந்த இப்பேரொளி வடிவமான நம்பியாரூரரின் தவப்பெருமையையெல்லாம் நாங்கள் கேட்க விரும்புகிறோம். ஆகவே, நீங்கள் அருள் கூர்ந்து இவரைப்பற்றி எங்களுக்கு விளக்கிக் கூறவேண்டும்!'' என்று வேண்டிக் கேட்டார்கள்.

உபமன்னிய முனிவர் மனமகிழ்ந்து உள்ள வண்ணம் கூறலானார்.

திருக்கயிலையில் வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொருள் வள்ளலான சிவபெருமானுக்கு அள்ளு திருநீறும் சாத்தும் மதுமலர் மாலையும் எடுத்துவரும் திருத்தொண்டர் ஒருவர் உண்டு! அவர் பெயர் ஆலால சுந்தரர்! அவர் ஒருநாள் வழக்கம்போல முதல்வன் தனக்கு இன்ன மலர்கள் ஆகுமென அன்றலர்ந்த நன்மலர்கள் கொய்துவர நந்தவனச் சூழலுக்குச் சென்றார். அங்கு அவருக்கும் முன்னதாகவே இரண்டு இளம் பெண்கள் வந்திருந்தார்கள். அவ்விருவரும் ஆளுடைய நாயகியான உமாதேவியாரின் தோழிப்பெண்கள்! ஞானப் பூங்கோதையான உமாதேவியாரின் இயற்கை மணம் கமழும் கூந்தலுக்குப் பூக்கள் கொய்து வரவே அப்பூவையர் இருவரும் நந்தவனம் புகுந்தார்கள். அவர்கள் அனிந்ததை, கமலினி என்பவர்கள்; அனிந்ததையின் அழகிற்கு அளவுமில்லை; அழிவுமில்லை. கமலினியோ ஆய்ந்த கூந்தலில் கந்தமாலை சூடிய காந்த அழகி! அப்பூவைமார் இருவரும் பூங்கொடிகளில் கொத்துக் கொத்தாக நறுமலர்கள் கொய்து கொண்டிருக்கும்



போது ஆலால சுந்தரர் அவ்வழகிகள் மீது தம் மனதைச் செலுத்தினார்.

வானவர் ஈசர் அருளென அவர் மண்ணிடை மனிதராகப் பிறந்து மாதவம் செய்த தென்னாடு வாழ்ந்திடவும் தீதற்ற திருத்தொண்டத் தொகை பாடிடவும் போவதற்காகவே'', அவ்வாறு மங்கையர் மீது மனதைப் போக்கி ஆலால சுந்தரர் காதல் கொண்டார். காதல் மங்கையரும் ஆலால சுந்தரரின் காட்சியையே தங்கள் கண்களில் கொண்டு மெய்மறந்து நின்றார்கள்! பிறகு தங்களை உணர்ந்து, அப்பாவையர் பார்வதி பிராட்டிக்காகப் பனிமலர் பறித்துக் கொண்டு ஆலால சுந்தரரின் உள்ளங்கவர அன்னம்போல் நடந்தார்கள். அவர்கள் அகன்றபின் ஆலால சுந்தரரும் அன்றலர்ந்த நன்மலர்களில் எம்மை ஆளும் ஈசனுக்குப் பொருந்துவனவாகிய பன்மலர் கொய்து சென்றார்.

எல்லாவற்றுக்கும் மூலகாரண மூர்த்தியாகிய சிவபெருமான், ஆலால சுந்தரரின் மனப்போக்கை அறிந்து அருள்விழியால் அவரை நோக்கி, ''ஆலால சுந்தரா! நீ மாதர் மீது மனம் வைத்தாய்! அதனால் நீ தென்னாட்டில் மானுடனாகப் பிறந்து, அம்மெல்லிய மங்கையரோடு காதல் இன்பத்தில் கலந்திருந்து தாபம் தீர்ந்த பின்னர் மீண்டும் இங்கு வந்தணைவாயாக!'' என்று கட்டளையிட்டார். மனப்போக்குதான் மனிதப் பிறவிக்கு வித்து என்பதையும்

உடல் நினைவுகளை உலகியலில்தான் அனுபவித்து தீர்த்து சுத்த பவனமாகிய திருக்கயிலைக்குத் திரும்பிவர முடியும் என்பதையும் அதன் மூலம் உணர்த்தினார்.

அதைக் கேட்ட ஆலாலசுந்தரர் நடுநடுங்கி, சிவனை கைகூப்பித் தொழுது கலங்கி, ''ஐயனே! தங்கள் திவ்விய திருவடிகளை நீங்கிச் செல்லும் சிறுமையாளனாகிவிட்டேன்! ஆயினும் மையல் மயமான மானுடனாய்ப் பிறந்து நான் மயங்கும் போது, அடியேனைத் தடுத்து ஆட்கொண்டு அருள் புரிய வேண்டும்!'' என்று வேண்டிக் கொண்டார்.

''கருணைப் பெருங்கடலான சிவபெருமான் அந்த வேண்டுகோளுக்கு இரங்கி, ''அவ்வாறே ஆகுக!'' என்று அருள்புரிந்தார். பின்னர் ஆண்டவன் அருளிய வண்ணமே தென்னாட்டில் அனிந்ததை, கமலினி என்னும் இரு நங்கையரோடு நம்பி சுந்தரர் தோன்றி, மானுடத் தோற்றத்தில் தங்கியிருந்து காதலின்பம் துய்த்து இப்போது இங்கே திருக்கயிலைக்குப் பேரொளிப் பிழம்பாகத் திரும்பி வருகிறார்'' என்று உபமன்னிய முனிவர் கூறி, சுந்தரமூர்த்தி நாயனாரின் தவப்பெருமையையும் வரலாற்று வன் செயல்களையும் விவரித்துச் சொன்னார்.

அதைக் கேட்டதும் முனிவர்கள் ''ஆகா! பந்த மானுடப் பிறவியாக ஆலால சுந்தரர் பிறந்த தென்னாடானது எட்டு திசைகளிலும் மேம்பட்டு விளங்குவதற்கு அந்நாடு செய்த புண்ணியம்தான் என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கு உபமன்னிய முனிவர் பின்வருமாறு கூறலானார்:

''ஒப்பற்ற புலிக்காலனாம் அரும் முனிவர் எனவும் வியாக்கிரபாத முனிவர் எனவும் புகழப்படும் என் தந்தை பூஜித்த சிதம்பரம் என்னும் சிவத்தலம் தென்னாட்டில்தான் இருக்கிறது! அந்த ஸ்தலம் தன்னை நோக்கும் உயிர்களுக்குத் தன்னிடம் பெரும்பற்றை விளைவிக்குமாகையால் அது பெரும்பற்றப் புலியூர் எனவும் அழைக்கப்படும். அத்திருப்பதியில் எம்மை ஆளும் மெய்த் தவக்கொடியான சிவகாமிவல்லி அம்மையார் தவமே உருவாக வீற்றிருப்பார். அவள் காணும்படியாக அம்மையப்பரான நடராஜப் பெருமான் விருப்பத்தோடு தில்லையம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் எனும் நெடு நடனம் ஆடுவார். ஆகவே அத்தகைய மேன்மை வாய்ந்தது தென் திசையைத் தவிர வேறு எத்திசை உண்டு. ஐம்புலன்களை ஒரு வழியில் நிறுத்தி மனதை ஒருமையில் நிறுத்தவல்ல ஜீவன் முக்தர்களுக்கு அது இருப்பிடமெனப் போற்றப்படும் பெருமை நிறைந்தது.

''காதல் மங்கையான நிலமகளின் இதயத் தாமரைபோல் திருவாரூர் என்னும் திருப்பதியும் தென் திசையில்தான் மலர்ந்திருக்கிறது. உயிர்கள் அனைத்திடமும் மலரும் நெஞ்சத்தாமரை மொட்டுப் போன்றது அத் திருவாரூர்! அங்கு வேதமூலமான சிவமும் பிரணவமும் வெளிப்பட்டு மங்கையொருபாகரான தியாகராசப் பெருமான் எழுந்தருளியுள்ளார். ஏழு உலகங்களையும் ஈன்ற எம்பிராட்டியான காமாட்சியம்மையார் தனிப்பெரும் தத்துவத்தினால், தம்பிரானை எய்தி கம்பையாற்றின் கரையிலே கயிலைநாதரை வழிபட்ட ★காஞ்சீபுரம் என்னும் சிவத்தலம் ஒன்று உண்டு! அது வானத்துத் தேவரும் போற்றும் வையகத்துத் திருப்பதி! அத் திருப்பதியும் தென் திசையில்தான் உள்ளது.

நம் குருமூர்த்தியான நந்திதேவர், தவஞ்செய்து நம்பெருமானின் பொங்கும் திருவருளைப் பெற்ற ★திருவையாறு என்னும் ஒரு திருப்பதியும் உண்டு. விரிசடையில் கங்கை மலர, சிவந்த கையில் அக்னி மலர, சிவபெருமான் அங்குத் திகழ்கிறார். அவ்வூரும் தென்னாட்டில்தான் உள்ளது: எல்லாத் தேசங்களையும் சிறப்புறச் செய்யும் தென்னாட்டில்தான் (திருத்தோணிபுரம்) சீர்காழி என்னும் சிவத்தலமும் அமைந்திருக்கிறது. இன்னும் எம்பெருமானைப் பூஜிக்கத் தக்க புண்ணிய ஸ்தலங்கள் பல தென்திசையில் இருக்கின்றன. எனவே திசைபற்றி பேசப்புகுந்தால், தென்திசைக்கு வேறு எந்தத் திசையுமே ஈடிணையாகாது! என்று கூறிய உபமன்னிய முனிவர் வன்தொண்டரான சுந்தரமூர்த்தி நாயனாரின் செயல்களை எடுத்துரைத்தார்.

சிவநேசத் தொண்டர்களின் வரலாற்றைத் தொகுத்துக் கூறும் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தை சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில் புற்றிடங் கொண்ட பெருமானின் திருவருளால் முன் பாடியருளினார். அதை இன்று சேக்கிழாராகிய நான் விரித்துக் கூறப் பேராவல் கொண்டேன். அத்திருத்தொண்டத் தொகையே இந்த மாக் கதைக்கு நற்பதிகமாகும்; இந்தப் பதிகத்தை நமக்கு விளங்குமாறு நம்பியாண்டார் நம்பி என்னும் குருநாதர் தம்

★ காஞ்சீபுரம் – இந்த ஸ்தலம் சக்தி தன்மை மிகுந்த பிருத்வீத் தலம் ஆகும்.

★ திரு + ஐயாறு – ஐந்து ஆறுகள். அவையாவன : சுவாமிபாத கங்கை, தேவி கங்கை, இடபகங்கை, காவிரி, நந்தி தேவர் உவகை வடிவு கொண்ட நதி என்பன.

மனமார வகைப்படுத்தி திருவந்தாதியாகக் கூறியருளினார். அதைத் தழுவி சிவனடியார்களின் வரலாறுகளை விரித்துக் கூறுவோம்.

உலகம் உய்யவும், சைவம் தழைத்தோங்கவும் நம்பியாரூரரான சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகை சோழ நாட்டில் பிறந்தது. அவரால் பாடப்பெற்ற அடியார்களின் திருக்கூட்டம் எப்பொழுதும் நிறைந்து வாசம் செய்யும் காவிரி வளநாடான சோழ நாட்டின் சிறப்பையே முதலில் கூறுவோம்.

2. திருநாட்டில்



சோழமன்னர்கள், இமயமலையின் உச்சியில் தங்கள் புலிக் கொடியை நாட்டிய பெருமை உடையவர்கள். அம்மன்னர்களுக்கு உரியதாகிய முத்தமிழ் வழங்கும் சோழ நாட்டைக் காவிரியாறு வளமைப்படுத்துகிறது. அக்காவிரி வள நாட்டின் இயல்பை விரித்துக் கூறுகிறேன்.

இமயமலையில் இருந்து தென் திசைக்கு வந்த அருந்தவ முனிவரான அகத்தியரின் கமண்டலம் ஒருசமயம் கவிழ்ந்தது. அப்போது கமண்டலத்திலிருந்து விழுந்த தூய நீரே காவிரி நதியாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. அந்நதியானது அழகான நிலமங்கையின் திருமார்பில் திகழும் நீர் முத்து மாலையைப்போல் காட்சியளிக்கும்.

சையமலை என்னும் பெரிய மலையிலிருந்து பொங்கி வரும் அக்காவிரி நதியானது பூமகளை வளர்க்கும் செவிலித்தாய் போன்றது. அது நீரினை வழங்கி வையகத்தில் எல்லா உயிர்களையும் வளர்த்து நாள்தோறும், நன்னிலம் உய்யச்

செழிப்பூட்டும் தன்மை வாய்ந்தது. அந்நதி கருநிறத் திருமால் படுத்துறங்குவதுபோல் தோன்றும். திருமாலின் உச்சிச் சுழி மலர்போலவே அதன் வெள்ளப் பெருக்கின்மீது நீர்ச்சுழியும் மலரும் கிளம்பிவரும். அகத்தியரின் அழகான நற்கமண்டலம் தன்னைத்தாங்கிய பெருமை உள்ளது. பல்லுயிர்களையும் போற்றி வளர்க்கும் மாண்பும் உள்ளது. இவற்றினால் அந்தப் பொன்னி மாநதி நான்முகனான பிரம்மதேவனைப் போலவும் விளங்கும்! நிலாச் சூடிய சிவபெருமானின் சடைமுடி உச்சியில் இருந்து கங்கை வெள்ளம் பொழிவது போலவே சையகிரிமலை முடி உச்சியிலிருந்து பொழியும் காவிரி நதியும் அழியாத நீரோட்டம் உள்ளது. அதனால் என்றும் இளமை கழியாத கன்னி நதி எனவும் பெயர் பெற்றது.

வண்ணமலையில் பிறந்த மேன்மையாலும் எண்ணற்ற அறங்கள் வளர்க்கும் ஈகைத் தன்மையாலும் அந்நதியானது உமா தேவியின் உள்ளத்தில் நெகிழும் கருணையின் ஒழுக்கம் போன்றது!

அதன் ஆற்றங்கரைகளில் எண்ணற்ற சிவத்தலங்களும் நிறைந்திருக்கும்! அத்தலங்களை மணங்கமழும் மலர்களாலும் நன்னீராலும் அந்நதியும், அர்ச்சித்து, வழிபட்டு, சிவாலயங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பிரானைத் தொழுது செல்லும். அதனால் தேவர் நாயகரான சிவபெருமானின் அன்பர்களுக்குச் சமமாக அப்பொன்னி நதியும் விளங்கும்.

காவிரியாற்றில் கட்டிளம் பெண்கள் கலகலவென்ற சிரிப் பொலிகளுடன் நீராடி நீந்தி விளையாடுவார்கள். அப்போது அவர்களின் மார்பகங்களில் பூசியிருக்கும் குங்குமமும் புனைந்திருக்கும் சந்தனமும் கரைந்து தெள்ளிய அலைகள்மீது கலந்தோடும். அதனால் தெள்ளிய நீரும் தன் வெள்ளி ஒளியிழந்து மருவி மங்கிச் செல்லும்.

காவிரியாற்றில் புதுப்புனல் திரண்டு வரும்போது வரை முகட்டிலிருந்து வண்ண மலைப்பூக்களைப் புதுவெள்ளம் கொண்டு வந்து விரித்திடும்; அவ்வாசனைப் பூக்களில் புதுமது பொங்கிடும்; அவற்றைக் கண்டு வண்டுகள் விரைந்தெழுந்து முழங்கிடும். அதனால் இயற்கையாகவே குளங்கள் நிறைந்து வளம் செறிந்த சோழநாடு, காவிரி வெள்ளத்தின் நீர்க்கால்களால் மேலும் மேலும் செழித்தோங்கும்! ஆற்றில் மிதந்து விரைந்து செல்லும் தண்ணீர், அதன் கரையோரங்களில் உள்ள மதகுகளின் ஊடே பாய்ந்து போய் வயல்களில் புகுந்திடும். அதை எதிர்கொண்டு வரவேற்கும் உழவர்கள் மகிழ்ச்சியால் கைதட்டி ஆரவாரம் செய்வார்கள். அந்த ஓசை அண்டர் வானத்திற்கு அப்பாலும் போய் அதிரும்.



வயல்களில் அழகான நாற்றைப் பறிப்பவர்களின் மேன்மையும், குளிர்ச்சியான நாற்று முடிகளைச் சேர்ப்பவர்களின் செய்கையும், ஓசை நிறைந்த வயல்களைப்போல் உழவர்களின் வரிசையும் காதல் செய்வதுபோல் கருத்தைக் கவரும் காட்சிகளாக எங்கும் மலிந்திருக்கும். உழுத படைச்சால் மிகவும் ஊறிச் சேறு குழம்பிய வயல்களில், மருதநிலத் தெய்வத்தைத் தொழுது நாற்று நடுபவர்களின் வரிசை காவிரி வளநாட்டின் பரப்பெல்லாம் தென்படும்!

நீர் நிறைந்த வயல்களில் வளரும் நெற்பயிர்களின் சுருள் விரிவதை உழவர்கள் கண்டதும் களை களையும் காலம் இதெனக் காட்டுவார்கள். உடனே களை களையும் உழவர் பெண்கள் விரைந்து வருவார்கள். குளிர் முத்துக்களைச் சொரியும் சங்குகளை காலில் இடறுவதால் இடைதளர்ந்து அசைவார்கள். வண்டுகள் அலையும் கூந்தல் கொண்டைகள் அலைவுற வயல் வரப்புகளுக்கு வந்து சேர்வார்கள்.

அப்பெண்கள் செங்குவளைப் பூக்களைப் பறித்துத் தங்கள் கருங் கூந்தலில் அணிவார்கள். அப்போது பூக்களோடு கூந்தலில் சிறைப்படும் வண்டுகளை அழகிய தாமரைக் கைகளைக் கொண்டு விரட்டி ஓட்டி அயல் வண்டுகளையும் வரவழைப்பார்கள். பிறை நிலா நெற்றியில் வியர்வை அரும்ப, முத்துப் பற்களில் முல்லைப் புன்சிரிப்பு அரும்ப, தாமரைப் பூவிலுள்ள புதிய தேனை வாய் வைத்துக் குடித்து மயங்குவார்கள். அத்தகைய உழவுப் பெண்கள் பல்லாயிரவர் வயல் வரப்புகளில் வந்து நிறைந்திருப்பார்கள்.



பகல் நேரங்களில் வயல்பக்கம் வருவோர் போவோர் எல்லாம் ''இவைகள் கரும்புகள் அல்ல, நெற்பயிர்கள்'' என்றும் ''இவைகள் கமுகுகள் அல்ல, கரும்புகள்!'' என்றும், ''இவைகள் நீலப்பூவின் துகள் அல்ல; அப்பூக்களைக் குடையும் வண்டுகள்!'' என்றும், ''இவைகள் பூ மொட்டுகள் அல்ல; பூவையரின் மார்பக மொட்டுகள்!'' என்றும், ''இவைகள் அமுதமல்ல, உழவுப் பெண்களின் வாய்மொழிகள்!'' என்றும் மயங்கிப் பேசுவார்கள்.

வெயிலில் பெண்கள் வேலை செய்யும்போது, அவர்களின் சிறுமிகள் வயல் ஓரங்களில் ஆமை ஓடுகளை அடுப்பாகவும், தசை கழிந்த சங்கைக் கரிய பானையாகவும், வெண்சங்கின் சிறு முத்துக்களை அரிசிகளாகவும் பாவித்து வைத்து, பூந்தேனை உலைநீராகப் பெய்து, சிகப்புநிற ஆம்பல் பூவை நெருப்பாகப் பொருத்தி ஊதி விளையாடுவார்கள்.


காடுகள் எல்லாம் கரும்புத் தோட்டங்களாகவும், பூங்கா எல்லாம் பூவையராகவும், பக்கமெல்லாம் கருங்குவளைப் பூக்களின் பரப்பாகவும், வயலெல்லாம் சங்குகளின் விரிப்பாகவும், நீர்நிலைகளின் கரைகள் எல்லாம் இளமை அன்னங்களாகவும், குளமெல்லாம் கடலாகவும் தோன்றும்! ஆகவே நலங்கள் எல்லாம் நீர் நாடான சோழ நாட்டில் நிறைந்திருக்கும். நாடெல்லாம் அதற்கு இணையாகும் நாடு வேறு எதுவும் இல்லை!

கரும்பாலைகளில் கரும்பைப் பாய்ப்பவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யும் ஓலங்களும், சோலைகளில் வண்டுகள் இரைந்து

எழும் ஓசையும், உலகம் ஓங்க அந்தணர்கள் ஓதும் நான்மறை ஒலியும் கடலின் ஓசையைவிடப் பெரிதாகக் கலந்து முழங்கும்!

அன்னங்கள் நீந்தி விளையாடும் அகன்ற தடாகங்களில் எருமைகள் விரும்பி விழுந்து மூழ்கிக் குளிக்கும். அப்போது தெறிக்கும் நீர்த்துளிகளோடு இளம் வாளை மீன்கள் திரண்டெழுந்து கமுக மலர்களின் உயரத்திற்குப் பாய்ந்து வானவில்லைப் போல் தோற்றமளிக்கும்.

கனிமரச் சோலைகளில் பாடிப் பயிலும் களிவண்டுகள் அத்தடாகத்தில் தாவி விழுந்து அங்குள்ள பூக்களின் புதுத்தேனை உண்டு மகிழும். அதைக் கண்டு தடாகத்துக் கயல்மீன்கள் மாறுபட்டு மேலே பாய்ந்து கனிமரச் சோலைகளைத் தாவி அங்குள்ள கனிகளைச் சாடும். நீண்ட வயல்களில் உள்ள நெற்பயிர்கள் இயற்கையாகக் கருவுற்று, கருமுதிர்ந்து பசலை நிறம் கொண்டு கதிர்ச்சுருள் விரித்துச் சிவநேசச் செல்வர்களின் மலர்ந்த சிந்தை போல கதிர்களெல்லாம் மலர்ந்திருக்கும்! பக்தி வசப்பட்டுப் பரமனுக்கு ஆளான அன்பர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது தலைவணங்கி வணக்கம் செய்வதைப்போல் வரிசையான நெற்பயிர்களும் தங்களுடைய முதிர்ந்த தலைகளாகிய கதிர்களைத் தாழ்த்தி வணங்கிக் கொண்டிருக்கும்!



அத்தகைய சோழநாட்டில் அறுவடை செய்யும் செந்நெற் கதிர்களை மலைகள் போல் அடுக்கி வைப்பார்கள். விரும்பிப் பிடித்த பலவகை மீன்களை படர்நெடுங் குன்றுகள்போல் பரப்பி வைப்பார்கள். அரி சங்குகள் சொரிந்த முத்துகளை ஒளிவீசும் மலைகளைப்போல் தொடுத்து வைப்பார்கள். பறித்த மலர்க் கட்டுகளை தேனருவி பொழியும் மலைகளைப் போலத் தொகுத்து வைப்பார்கள்.

பெரிய மலைகள் போன்ற நெற்போர்களைக் கரும்பெரும் எருமைக் கூட்டங்கள் தங்கள் வலிய கால்களால் உச்சியிலிருந்து சரித்தபடி வட்டமிட்டுச் செல்லும். அந்தக் காட்சி அரும்பெரும் இமயமலைச் சாரலைச் சூழ்ந்து வட்டமிடும் கருமேகக் கூட்டம் போலவே தோன்றும்! நெற் போர்களை

எருமைக் கூட்டங்கள் சரித்து மிதித்தவுடன் கைத்தொழிலில் வல்லவர்களான உழவர்கள் வைக்கோலை ஆராய்ந்து எடுத்துக்கட்டி, அகற்றி விட்டு, நெற்களைப் பதர் போகும்படியாக மழை தூறுவதுபோல் தூற்றுவார்கள். பிறகு செந்நெல்லைப் பொற்குன்றாகவும் கருநெல், வெண்ணெல் முதலானவற்றை நவமணிக்குன்றாகவும் பிரித்துக் குவித்து வானத்தை மறைக்கும் நெற்குன்றுகளாகவே ஆக்கி விடுவார்கள்!

குடிமக்கள் தங்கள் வருமானத்தில் ஆறிலொரு பங்கு அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய கடமையை ஆற்றி மிகுந்ததைக் கொண்டு அறங்களைப் பேணி, கடவுளையும் பெரியோரையும், விருந்தினரையும் பண்புள்ள சுற்றத்தாரையும் தாங்கிக் காத்து, நல்லவர்களாக விளங்கி, நல்லறச் செயல்களை மிகவும் சிறந்தோங்கச் செய்வார்கள். இத்தகைய குடிமக்களுடன் மலைகள் போன்ற, மாடமாளிகைகள் நிறைந்த ஊர்கள் பலப்பல சோழ நாடெங்கும் மலர்ந்துள்ளன.


கரும்பாலைகளில் மன்னர்கள் கரும்பைக் காய்ச்சும்போது கிளம்பும் இனிய கரும் புகையோ, அழகிய மங்கையர் தங்கள் கூந்தலுக்கு இடும் அகில் துண்டுகளின் வாசனைப் புகையோ பெரும் யாகசாலை தோறும் யூபஸ்தம்பங்களை நிறுத்திச் செய்யப்படும் வேள்வித் தீயின் புகையோ, வானத்தில் வரும் கருமேகத் தொகையோ மாடமாளிகைகள் மரச் சோலைகள் எங்கும் சூழ்ந்திருக்கும்!

தென்னை மரங்கள், செருந்தி நறுமலர்கள், நாரத்தை மரங்கள், அரச மரங்கள், பச்சிலை மரங்கள், குளிர் மலர்கள் உள்ள குரவ மரங்கள், அடிபெருத்த பனைமரங்கள், சந்தன மரங்கள், பன்மலர் நாகமரங்கள், வஞ்சி, காஞ்சி, நிறைமலர்க் கோங்கம், பாதிரி, சுரபுன்னை, கொன்றை, சாதி, செம்மல், மல்லிகை, அனிச்சம், குருக்கத்தி, சரளம், மகிழம், சண்பக வகைகள், தாழைப்பூ, கமுகம், புன்னை முதலானவையெல்லாம் சோழ நாட்டில் நிறைந்திருக்கும்.

மங்கள காரியங்களும், திருமண முழக்கங்களும், பெண்களின் தாமரை முகங்களும், பண்ணோசை போன்ற பாவையரின் மழலைச் சொற்களும், புத்தொளி வீசும் ஆபரணங்களும், புதுமலர்ப் பந்தர்களும், செழிப்பான வயல்களும், சோழ நாட்டில் நிறைந்து அங்கு எந்த இடமும் மகாலக்ஷ்மியின் வாசஸ்தலம் போல் விளங்கும்!


மேகங்களும், யானைகளும், வேதமும், வேதம் ஓதும் இடங்களும், யாகமும் சடங்குகளும், இன்பமும் மகிழ்வும், யோகமும் தவமும்; ஊசலும் தெருக்களும், போகமும் பொலிவும்; புண்ணிய முனிவர்களும், பண்ணிசை தரும் விபஞ்சி யாழும், பெண்களின் பாதங்களில் பூசியுள்ள செம்பஞ்சுக் குழம்பு படியும் அடையாளங்களும்; வண்டுகள் மோதும் கூந்தல்களும், இசை வளர்க்கும் புல்லாங்குழல்களும், தொண்டர்கள் தங்கும் மடங்களும், இருக்கு வேதப் பாடங்களும், பலவிதச் சோலைகளும், ஆத்தியும் பலா மரங்களும், பக்கங்களிலெல்லாம் யானைக்குட்டிகளும், வண்டுகள் ஊதும் மலரிடங்களும், அழகான வீடுகளில் ஆனந்தப் பாட்டுகளும், சிறுமியர் பயிலும் அம்மானை விளையாட்டுகளும், நீண்ட கொடிகளும் நீதிப் பண்டகசாலைகளும், இதழ்கள் ஆழ்ந்த பூமாலைகளும், கணவன் மனைவியர் சூழ்ந்து வரும் வரிசைகளும் எங்கும் தென்படும்!

வீதிகளில் விழாக் கொண்டாட்டங்களின் ஆரவாரமும், வீடுகளில் விருந்தினரின் ஆரவாரமும் அடிக்கடி எழும்பிக் கொண்டேயிருக்கும்! பல்வேறு சாதிகளும் தங்கள் அறநெறியி லிருந்து பிறழமாட்டார்கள். பிள்ளைகளும் மோகப் பருவமுடைய ஆடவரும், மனைவியரும் வழி தவறாமல் வாழ்வார்கள். பறவைகளும் மிருகங்களும் கூட ஒரு நீதி நியதியுடன் இணைந்து வாழும். திருமகளும் அந்நாட்டில் தங்கியிருந்து வாழ்வதையே விரும்புவாள்! சிவாயநம என்னும் அஞ்செழுத்தை ஓதுவதால் அந்நாட்டில் அகப்பிணியும், புறப்பிணியும் வர அஞ்சி விலகிச் செல்லும்! நற்றமிழ்ப் பரப்பின் எல்லையுள் திருநாடு என நாம் புகழும் சோழநாடு மிகவும் சிறந்தோங்கி நிற்கும்! என்றும் தன் தோள் வலிமையால் பகைமை நீக்கி தனியுரிமையுடன் வையத்தை இனிமையாகப் பரிபாலிக்கும் அநபாய சோழனின் பொற்குடை நிழலின் கீழ் அந்நாடு குளிர்ச்சி பெறுகிறது என்றால், மற்றதன் பெருமையை நம்மால் வரம்பு கட்டி விளக்கிக் கூறமுடியுமோ?



3. திருநகரில்

பெருவளம் கொழிக்கும் சோழநாட்டின் பழமையான நகரங்களில் திருவாரூர் மிகவும் சிறப்புடையதாகும். அது திருமாலின் தேவியாகிய இலக்குமிதேவி வழிபட்ட தலம். செஞ்சடையில் பிறை சூடிய சிவபெருமான் அத்திருநகரையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருக்கிறார்.



அந்த நகரத்தில் வேத ஓசையும், வீணை ஓசையும், சோதி வானவர்களின் தோத்திர ஓசையும், மாதர்களின் ஆடல் ஓசையும் சிலம்பு ஓசையும், மணி ஓசையும், மத்தள ஓசையும், கீத ஓசையும், இன்ப ஓசைகளாகக் கிளர்ந்தெழுந்து கொண்டேயிருக்கும். மங்கல வாத்தியங்களின் பேரொலியுடன் மாடத் தெருக்களில் செல்லும் மணித் தேரின் ஒலியும், யானைகளின் ஒலிகளோடு குதிரைகளின் ஒலிகளும், எல்லையின்றி எங்கும் எழுந்து ஒலிக்கும்!

மாடமாளிகைகள், குளிகை மண்டபங்கள், கூடசாலைகள், கோபுரத் திண்ணைகள், நீண்ட சாளரங்களையுடைய கலையரங்குகள் இவற்றிலெல்லாம் ஆடல் மங்கையரின் அழகிய சிலம்பொலிகள் ஆரவாரம் செய்யும்!

மேற்கூறிய ஆடல் கணிகையரான பதியிலாரின் மாளிகைகளுள் ஒன்றில் பார்வதிப் பிராட்டியின் தெய்வீகத் தோழிகளில் ஒருத்தியாகிய கமலினி அவதரித்தாள். அந்தக் கமலினியே மானுடப் பிறப்பில் உருத்திரக் கணிகையாக பரவையென விளங்கினாள். அந்தப் பரவை வாழ்ந்த வீதியானது, சிவபெருமான் சுந்தரருக்காகக் காதல் தூது நடந்த சிறப்பைப் பெற்றது. அடிமுடி அறியவொண்ணாத அண்ணலான சிவபெருமான் தமது திருவடிகள் தேயத் தமது தொண்டருக் காகத் தூது நடந்ததாலும், அவரது செந்தாமரைப் பாதம் பட்டதாலும், அந்த வீதியும் அத்திருநகரும் தெய்வமணமும், சைவமணமும் கமழும் தன்மையுடையதாக ஆயிற்று.

வீடுகளில் இருந்து பெண்கள் சிவப்பேறிய கண்களுடன் வெளிவந்து செங்குங்குமத்தின் குழம்பைத் தெளிப்பார்கள். அப்போது அவர்கள் கூந்தலில் சூடிய பூச்சரங்களில் இருந்து மகரந்தப் பொடிகள் கீழே உதிர்ந்து செங்குங்குமச் சேற்றை உலரச் செய்யும்! விடையேறி ஊர்வலம் வரும் வள்ளலான தியாகேசப் பெருமானுடைய திருவாரூரின் பக்கமெல்லாம் திருப்பதிகங்களின் இனிமையான ஓசை முழங்கும். அப்பதிகங்களைக் கிளிகளும் பாடும்; நாகணவாய்ப் பறவைகளும் கேட்கும்.

பிரகாசமான ஆபரணங்களும் பேரொலிகளும் நானாவிதப் பண்டங்களும் வளங்களும் பலவழியாகவும் வந்து நிறைவதால் ஆவண வீதிகள் கடல்கள் போலவே காட்சியளிக்கும். தெருக்களில் வேதங்கள் மட்டுமன்றி யானைகளும் மாறி மாறி முழங்கும். வானவீதியில் அழகான தேவர்கள் மட்டுமன்றி தோரணங்களில் மாவிலைகளும் சூழ்ந்திருக்கும்! அங்கு தாழ்ந்த சடையினர், சைவர்கள், பெருந்தவசிகள், அறநெறியில் வாழ்ந்த முனிவர்கள், மறையோர்கள், இன்பத் துறைகளில் விரும்பி வாழ்பவர்கள் முதலான பல்வேறு துறையினரும் நிறைந்திருப்பார்கள். இத்தகைய பழம் பெரும் நகரான திருவாரூரானது

நிலமகளுக்கு அழகான நெற்றிப் பொட்டுப் போலவும், மலர்மகளான இலக்குமி தேவி வாழ்வதற்கேற்ற செந்தாமரை மலர் போலவும் விளங்குகிறது.

அத்தகைய பழமை மிக்க திருவாரூரிலே, சூர்ய வமிசத்தில், அநபாய சோழனின் குலமுதல்வனாக மனுநீதிச் சோழன் என்ற ஒரு மன்னன் தோன்றி அரசாண்டு வந்தான். அவன் தன் மண்ணில் வாழும் உயிர்களையெல்லாம் தன் கண்களைப் போலவும், தன் ஆவியைப் போலவும் பாதுகாத்து வந்தான். விண்ணகத்துத் தேவர்கள் மகிழ்ந்திடும்படி மண்ணகத்தில் எண்ணிலாத அறவேள்விகள் செய்து இணையற்றவனாகத் திகழ்ந்தான். அறம், பொருள், இன்பம், நிறைந்த அறநெறிகளிலே அவன் வாழ்ந்தான். அவனது ஆட்சிச் சக்கரம் அகிலமெலாம் சூழ்ந்திட, சுற்றுப்புற மன்னர்கள் கப்பப் பொருட்களுடன் கடைவாசலில் சூழ்ந்திட பகை கடிந்து அவன் நல்லாட்சி நடத்தினான். பழைய மனுநூலின்படி நீதிபரிபாலனம் செய்து, மனுநீதிச் சோழன் என்றே தன் பெயரை ஆக்கிக் கொண்டான். புற்றிடங்கொண்ட



பெருமானாகிய வன்மீக நாதரின் பூஜைக்குரிய படித்தரங்களைச் சிவாகம முறைப்படி அச்சோழ மன்னன் நியமித்தான்.

அவன் முற்பிறப்பில் செய்த தவத்தின் பயனாக அவனது தேவியின் திருவயிற்றில் மகன் ஒருவன் பிறந்தான். சிங்கக்குட்டி போன்ற அவ்வரசிளங்குமரன் நன்னெறியில் நின்று பல கலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றான். குதிரையேற்றம், யானையேற்றம், படைக்கலப்பயிற்சி, தேரோட்டுதல் முதலிய வற்றையும் பயின்று பிறவி எடுத்தது ஒரு பாக்கியமே என்று போற்றும்படி சிறந்து விளங்கினான். அவன் பெயர் வீதி விடங்கன். அவன் தன் தந்தை மனம் மகிழும்படியான நற்குணங்கள் நிறைந்து தந்தையின் அளவிலாத அன்பிற்குப் பாத்திரமானான். அவன் இளவரசுக்குத் தகுதியடைந்து உதய சூரியனைப் போல் வளர்ந்து வந்தான்.

இவ்விதமாக அரசிளங்குமரன் வீதிவிடங்கன் வளர்ந்து வரும் காலத்தில் ஒரு நாள் அவன் தன் அரண்மனையில் இருந்து உலாக் கிளம்பி, பல இளங்குமரர்களும் சேனைகளும் தன்னைச் சூழ்ந்துவர, மாடவீதியின் வழியாகத் தேர் ஓட்டிச் சென்று கொண்டிருந்தான். அவன் தேரோட்டிச் சென்ற அழகான மாட வீதியில் அவனுடைய தேருக்கு முன்னதாக, மங்கலப் பாடகர்கள் ஒருபக்கம் வாழ்த்தொலி பாடிய வண்ணம் சென்றனர். மணம் கமழும் கூந்தலையுடைய மங்கையர் கைவளையல்கள் சிந்தச் சென்றனர். முரசங்களும், சங்குகளும் ஒருபுறம் முழங்கின. அப்போது மன்னவனின் நீதியையும், மனோதிடத்தையும் மாபெரும் தருமத்தையும் சோதிக்க

வந்ததுபோல் அழகான இளம் பசுங்கன்று ஒன்று எம்மனிதரும் காணாதபடி தெருவினூடே துள்ளி ஓடிவந்து வீதிவிடங்கனின் தேர்ச்சக்கரத்தில் எதிர்பாராத விதமாக விழுந்து, பிராணா பாயத்தில் சிக்கியது. தேரின் சக்கரம் வேகமாக உருட்டப் பட்டதால், அந்தக் கன்று தன் உயிரை இழந்தது!

அதைக் கண்டு உருகிய தாய்ப்பசு, கதறி ஓடிவந்து துடிதுடித்தது! வாயில்லா அப்பசு அலறி, நெஞ்சு சுழன்று மனம் சோர்ந்து உடல் நடுங்கி கீழே தெருவில் விழுந்து மண்ணில் புரண்டது.

அத்தாய்ப் பசுவின் கதறலையும் துடிப்பையும் கண்ட அரச குமாரன் மனம் வருந்தினான். ‘‘வந்து விட்டது இங்கே அபாயம்!’’ என்று சொல்லி தடுமாறினான். உயிர் பதைத்தான். உயிர் நீத்துக் கிடந்த கன்றைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். நெஞ்சமெல்லாம் துயரில் அழுந்த அறிவிழந்து பொறுமினான்.



''இந்த பசுவும் கன்றும் என் உணர்வெனும் பெருமையும் இன்று மாளும்படி இப்படி நேர்ந்து விட்டதே! நான் என்ன செய்வேன்?'' என்று வீதி விடங்கன் மன மிடிந்தவனாகத் தன் தேரிலிருந்து கீழே வீழ்ந்தான்.

அலறும் தாய்ப் பசுவைப் பார்த்துப் பார்த்து அவன் ஆருயிர் பதைத்துப் பதைத்துச் சோர்ந்தான். தெருவில் செத்துக்கிடக்கும் பசுங்கன்றைப் பார்த்துப் பார்த்து நீண்ட பெருமூச்சிழைத்து இரங்கி நின்றான். ''மலர்தலை உலகம் காக்கும் மனுநீதிச் சோழரெனும் மாபெரும் மன்னராகிய என் தந்தைக்கு இந்தப் பெரும் பழியை இப்பூவுலகில் சுமத்தவோ நான் பிள்ளையாகப் பிறந்தேன்?'' என்று வீதிவிடங்கன் பரிதவித்தான். ''அறியாது வந்து சேர்ந்த இப்பழியை மாற்றும் வகை என்ன? மாமறை நூல் ஓதும் வாய்மையாளரான அந்தணர்கள் விதிக்கும் வழியில் பரிகாரம் செய்வதே தருமம் என்றால், என் தந்தையார் இதை அறிவதற்கு முன்பே, அந்தப் பரிகாரத்தைச் செய்வேன்!'' என்று வீதிவிடங்கன் தீர்மானித்துக் கொண்டு, தன் சிந்தனையிலிலுள்ள வெந்துயரெல்லாம் தீர்வதற்காக திருமறையவரின் இருக்கையை நோக்கிச் சென்றான். அப்போது வாயில்லாப் பசு என்ன செய்தது?

தன் கன்றினைச் சாகக் கொடுத்த தாய்ப் பசுவோ தன் துன்பத்தையும், உயிரையும் தாங்க இயலாமல் தளர்ந்து தத்தளித்தது. தீப்பொறி பறக்கப் பெருமூச்சு விட்டது. முகத்தில் கண்ணீர் வழியக் கதறிக் கொண்டு, தன்னுயிரைப் போல மன்னுயிரைக் காக்கும் மனுநீதிச் சோழனின் அரண்மனையை நோக்கி ஓடியது.

அரண்மனை வாயிலில் பொன்போல் மின்னும் ஆராய்ச்சிமணி கட்டப்பட்டிருந்தது. குடிமக்கள் தங்கள் குறையை மணியடித்துத் தெரிவிப்பதற்காகவே அரண்மனை வாசலில் அத்தகைய ஆராய்ச்சிமணி கட்டி வைக்கப் பட்டிருந்தது. அந்த மணியை தாய்ப்பசு தன் கொம்பினால் பலம்கொண்ட மட்டும் ஆட்டி அடித்தது.

இதுவரை மணியடித்து முறையிடக் குறையுடையார் யாரும் இல்லாததால் இப்போது அந்த மணி ஓசை இதுவரை கேளாத புதிய ஓசை போலவே அதிர்ந்தது. பலப்பறை முழக்கமோ, பாவத்தின் பேரொலியோ, அரச வமிசத்து ஒரே மகனின் ஆவியைக் கொண்டு போக வரும் எமனது எருமைக்கடா வாகனத்தின் கழுத்தணி மணியின் ஆர்ப்பாட்டமோ என்னும்படி ஆராய்ச்சி மணி அடித்துக் கொண்டேயிருந்தது.

அந்த மணியின் ஓசை மனுநீதிச் சோழனின் செவியிலும் புகுந்து இரைந்தது. உடனே சோழ மன்னன் திடுக்கிட்டு அரியாசனத்தை விட்டுக் குதித்து ஓடி அரண்மனை வாயிலை அடைந்தான். அங்கு நின்ற காவலர்கள் அரசனை வணங்கி, ''இந்தப் பசு எங்கிருந்தோ வந்தது! இதுவரை தூங்கிய நம் மணியை இப்பசு தன் கொம்பினால் அசைத்து அடித்தது!'' என்றார்கள்.

பசுவை மனுநீதிச் சோழன் உற்றுப் பார்த்தான். அதன் துயர் கண்டு வருந்தினான். ''இப்பசு வந்து முறையிடும்படியாக இதற்கு நேர்ந்த குற்றம் குறை என்ன?'' என்று தன் அமைச்சர்களை இகழ்ச்சியாக நோக்கினான்.

அப்போது கல்வி கேள்விகளில் முதியோரும், முன்பு நடந்ததை அறிந்தவருமான அமைச்சர் ஒருவர் முன்வந்து அரசனை வணங்கி, ''சோழ மன்னவரே! தங்கள் தவப் புதல்வன் வீதிவிடங்கன் தன் மணித்தேரில் ஏறி, தேர்ப்படைகள் புடைசூழ, அரசுலாவும் தெருவில் தேரோட்டிப் போகும்போது இப்பசுவின் இளங்கன்று இளவரசனின் தேர்க்காலில் வந்து அகப்பட்டு இறந்தது. அதனால் வருந்தித் தளரும் இந்தத் தாய்ப்பசு இங்கே வந்து நீதிமணியை அடித்திருக்கிறது!'' என்றார்.

அதைக் கேட்டதும் கன்றினை இழந்த பசுவைப்போல மனுநீதிச் சோழன் மனம் வருந்தினான். ''இந்த வினை எப்படி வந்து சேர்ந்தது?'' என்று புலம்பினான். நஞ்சு தலைக்கேறினாற் போல மயக்குற்று விழுந்தான்; எழுந்தான்; பசுவைப் பார்த்தான்; இரங்கினான்; ஏங்கினான்; மனங்கலங்கினான்; ''என் அரசாட்சி நன்று! நன்று!'' என்று தன்னைத்தானே இகழ்ந்து கொண்டான்.

''மன்னுயிரையெல்லாம் தன்னுயிரெனக் காத்து வையகத்தை யெல்லாம் ஒரே நீதியுடன் பரிபாலிக்கும் மன்னவனாம் என் அரசாட்சி நன்று! நன்று!!'' என்று ஒரு சமயம் பொறுமுவான். பிறகு ''இதற்கு என்ன செய்தால் தீரும்!'' என்று விம்முவான். தன் இளங்கன்றைக் காணாத தாய்ப்பசுவின் முகத்தைப் பார்த்துப் பார்த்து மன்னவன் படும் துயரம் அளவில்லாமல் பெருகிக் கொண்டேயிருந்தது!

அதைக் கண்டு அமைச்சர்கள் அவனை வணங்கி, ''மன்னர் பெருமானே! சிந்தை தளரவேண்டாம்! இதற்குப் பரிகாரம் உண்டு. பசுவதை செய்தவர்களுக்கு வேத

அந்தணர்கள் விதித்த பரிகார முறையில் தங்கள் மைந்தனையும் கொண்டு போய் நிறுத்துவதே அறமாகும்! அதுதான் வழக்கமாகும்!'' என்றார்கள்.

அதைக் கேட்ட அரசன் அவர்களை நோக்கி ''வழக்கமென்று நீங்கள் கூறும் பிராயச்சித்தம் கன்றை இழந்து கதறும் தாய்ப்பசுவின் துயர நோய்க்கு மருந்தாகி விடுமா? என் மைந்தனையும் இழக்கத் துணிந்து விடுவேன் என்பதற்காகவா நீங்கள் இவ்விதம் கூறுகிறீர்கள்? அதற்காக நீங்கள் கூறுவது போலச் சாஸ்திர வழிப் பிராயச்சித்தம் செய்துவிடும் இந்தப் போலித்தனத்திற்கு நான் சம்மதித்தால் தருமந்தான் சலியாதோ? தன்னுயிரைப் போல மன்னுயிரைக் காப்பவன் அல்லவோ – மானிலம் காக்கும் காவலனாவான்? அவன் மன்னுயிர் காக்கும்போது, தன்னாலும் தன் பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வர்களாலும், கொடும் மிருகங்கள் முதலான ஏனைய உயிர்களாலும், துன்பம் விளையக்கூடிய ஐந்து பயங்களையும் தீர்த்து அறத்தைக் காப்பவனல்லவோ? இன்று என் புதல்வன் செய்த பாதகச் செயலுக்கு வெறும் பிராயச்சித்தம் செய்யச் சம்மதித்துவிட்டு, நாளை அந்நியன் ஒருவன் ஓர் உயிரைக் கொன்றால் அதற்கு நீதியாக அவனுக்கு கொலைத் தண்டனை விதிக்க முடியுமா? அவ்வாறு நான் விதிப்பேனாகில் பண்டைய மனுவின் நீதி நூல் பின்வந்த மனுவால் துடைப்புண்டு ஒழிந்தது என்ற பழிச்சொல் பிறக்குமே? அத்தகைய பழிச்சொல்லை மண்ணுலகில் நான் பெறுவதற்கோ, இத்தகைய பிராயச்சித்த வழியை மொழிந்தீர்கள்? இவ்வாறு குறுக்கு வழி கூறுவது மந்திரிகளுக்கு வழக்கந்தான்!'' என்றான்.

இவ்வாறு அரசன் இகழ்ந்துரைப்பதைக் கேட்டு மதியமைச்சர்கள் எதிர் நின்று, ''அரசே! இத்தகைய நிகழ்ச்சி இதற்கு முன்பும் நடந்திருக்கிறது. இதற்காகத் தாங்கள் அருமை மகனை இழக்க முயல்வது மரபன்று. வேத விதிப்படி பரிகாரம் செய்வதே தொன்று தொட்டு வரும் பழமையான நெறியாகும். தொன்னிலங் காவலரே!'' என்று கும்பிட்டுக் கூறினார்கள்.

அதைக் கேட்ட அரசனின் முகமானது அனலிற்பட்ட செந்தாமரையைப் போலச் சிவந்து உலர்ந்தது. அவன் நீதி நூலின் உண்மைத் தன்மையை உணர்ந்தவனாகையால் மிகவும் வருந்திக் கோபித்து அமைச்சர்களை நோக்கி, ''இவ்வாறு நீங்கள் பழுதே உரைத்தீர்கள்! நீங்கள் கூறும் வேத வழிப் பிராயச்சித்த முறைகள் ஒருபுறம் கிடக்கட்டும்! நேர்மையான உண்மை நிலையை நீங்கள் சிந்திக்காமலே பேசுகிறீர்கள்!

இதற்கு முன் இத்தகைய நிகழ்ச்சி எங்கே நடைபெற்றது? இந்த உலகில் வேறு எந்தப் பசு இத்தகைய பெருந்துன்பத்தால் பெருமூச்சு விட்டுக் கதறி நீதிமணியை அடித்தது? இந்திரன், பிரமன், திருமால், முதலான தேவர்களெல்லாம் வந்து வழிபடும்படி சிவபெருமான் வீற்றிருக்கும் இந்தத் திருவாரூரில் பிறந்த ஒருயிரை என் மகன் கொன்று விட்டான்! ஆகையால் அவனை நான் துணிந்து கொல்வதே முறையாகும்! இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! மேலும் இப்பழிக்கு இனிச் செய்யக் கூடியது இதுவே ஆகும். கன்றினை இழந்து இந்தத் தாய்ப்பசு படும் மனத்துயரை அகற்ற முடியாத அரசனாகிய நான், இந்தத் தாய்ப்பசுவைப் போலவே என் மகனையும் இழந்து துயரப்பட வேண்டும். அதுவே தருமமாகும்!'' என்று தன் முடிவைத் தெரிவித்து செயற்கரிய அரும்பொருள் செய்யத் துணிந்தான். அமைச்சர்களோ, அரசனின் முடிவையும், உறுதியையும் அறிந்து ஒன்றும் பேச இயலாமல் அஞ்சி அகன்றனர்.

நீதி தவறாத மனுநீதிச் சோழன் தன் ஒரே மைந்தனான வீதிவிடங்கனை உடனே அழைத்து வரச்செய்து அமைச்சர் ஒருவரை நோக்கி, ''பசுவின் கன்று இறந்த அதே வீதியிலே இவனைக் கிடத்தி இவன் மீது தேரை வேகமாகவும் பலமாகவும் செலுத்தக் கடவாய்!'' என்று ஆணையிட்டான். அத்தகைய ஆணையை நிறைவேற்ற மனமில்லாத அந்த அமைச்சர் அவ்விடத்தை விட்டுச் சென்று தம்முயிரைத் தாமே மாய்த்துக் கொண்டார்.


அதன்பிறகு மனுநீதிச் சோழன் தன் மகனைத் தானே அழைத்துக் கொண்டு சென்று, பசுவின் கன்று இறந்த அந்த வீதியை அடைந்தான். தன் குலத்திற்கு ஒரே ஒரு மைந்தன் தானே இருக்கிறான் என்பதையும் அவன் எண்ணவில்லை. தர்மத்தின் வழியில் செல்வதே தன் கடன் என்று கொண்டான். தன் அருமைப் புதல்வனின் மார்பிலே தேர்ச்சக்கரம் ஏறிச் செல்லும்படியாகத் தானே தேரைச் செலுத்தினான். இத்தகைய மனுவேந்தனின் அபூர்வமான அரசாட்சி அரிதோ, எளிதோ?

கருணை வேந்தனின் இச்செயற்கரிய செயலைக்கண்டு மண்ணகத்தவர்கள் கண்ணீர் மழை பொழிந்தார்கள். விண்ணகத் தேவர்கள் பூமழை சொரிந்தார்கள். அத்தகைய அரசியல் அண்ணலவன் கண்ணெதிரே, காளை வாகனத்தின்மீது வீதிவிடங்கப் பெருமானாகிய சிவபெருமான் அவ்வீதியில் எழுந்தருளி விண்ணவர் கைதொழக் காட்சி தந்தார். தலைச்சடையில் இளம் பிறையணிந்து அருள்மயமான

நெற்றிக் கண்ணொளி வீச இடது பக்கம் உமாதேவியரோடு, எப்பக்கமும் பூதகணங்கள் போற்றியிசைக்கக் காட்சி தந்தருளிய எம்பெருமானை மனுநீதிச் சோழன் போற்றி வணங்கினான். அவனுக்கு இறைவன் திருவருள் தந்தார். அந்நிலையில் பசுவின் கன்று மீண்டும் உயிர் பெற்று எழுந்தது. மனுநீதிச் சோழனின் மகனும், அமைச்சரும் ஒருங்கே உயிர் பெற்று எழுந்தனர். முன்னவனே முன்நின்றால் முடியாத பொருள் உண்டோ?

இளவரசன் தன் தந்தையின் காலில் விழுந்து வணங்கினான். அவனை எடுத்துத் தழுவி மனுநீதிச் சோழன் தன் நெடுந்துயரம் நீங்கிப் பெரிதும் மனம் மகிழ்ந்தான். தன் கன்றினைக் கண்டு தாய்ப்பசுவும் தன் துன்பம் நீங்கி மகிழ்ந்தது. அந்தக் கன்று தன்தாயை அடைந்து அதன் மடியில் அன்பு மீதூறப் பெருகிய பாலைப் பருகிக் களித்தது. வெற்றி வேந்தனாம் மனுநீதிச் சோழனுக்குத் திருவீதியிலே திருவருள் தந்த தியாகேசப் பெருமானின் கருணையையும் அடியார்க்கு எளியவனாக வரும் பெருமையையும் ஏழுலகமும் எடுத்துக் கூறும்!


இவ்விதமாக அறவழி நிற்கும் எண்ணற்ற அடியார்களுக்குத் திருவருள் புரியும் வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவாரூரின் சிறப்பை நாம் வர்ணித்துச் சொல்வது எளிதான செயலோ? இத்தகைய திருவாரூர் நகருக்குப் புற்றிடங் கொண்ட பெருமானின் பூங்கோயில் அகமலராகப் பொலிகிறது!



குறிப்பு : ஆரூர் கொண்ட சோழனின் அறத்தினைச் சோதிக்க வேண்டி இந்திரன் தாய்ப் பசுவாகவும், இமயன் கன்றாகவும் வந்ததாக கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது.

4. திருக்கூட்டம்

புற்றிடங் கொண்ட பெருமானும் பூதநாயகருமான தியாகேசப் பெருமான் வீற்றிருக்கும் திருவாரூர்க் கோயிலைப் பூங்கோயில் என்று யாவரும் போற்றுவார்கள். அக்கோவில் முற்றத்தைச் சூழ்ந்திருக்கும் பழைய மதில்களின் திருவாசல் முன்னால் தேவாசிரியன் மண்டபம் என்னும் ஒரு




திருக்காவணம் உண்டு. அந்த மண்டபத்தில், பூமியைப் படைக்கும் நான்முகப் பிரமனும், பூமகளைத் தன் மார்பில் வைத்திருக்கும் திருமாலும், மற்ற வானத்துத் தேவர்களும் எப்போதும் நீங்காமல் நிறைந்து உறைந்திருப்பார்கள். சிவனடியார்களும் அங்கு வந்து கூடுவார்கள். துன்பம் தீர்க்கும் அத்தொண்டர்களின் திருமேனியில் பூசியிருக்கும் திருநீற்றின் ஒளியாலும் அவர்களிடம் நிறைந்துள்ள தூய்மையாலும் அவர்கள் ஓதும் ஐந்தெழுத்தின் ஓசையாலும் அந்த மண்டபம் ஆயிரம் திருப்பாற்கடலைப் போல் திகழ்கிறது.

அகில காரணரான ஆதிப் பரமனின் திருவடிகளைப் பணிபவர்கள் தாம் அகில லோகங்களையும் ஆளுவதற்கு உரியவர் என்று அகில லோகத்தில் உள்ளவர்களும் அங்கு வந்து அடைவதால் அந்த மண்டபத்தில் அகில லோகமும் அடங்கியிருப்பது போலிருக்கும்!

மண்டபத்தில் குழுமியிருக்கும் அடியார்கள் முன்னாளில் ஆண்டவனால் விரும்பி ஆட்கொள்ளப்பட்டவர்கள்; அன்பு வடிவம் கொண்டவர்கள்; கைத்திருத்தொண்டு செய்யக் கடமைப் பட்டவரும் மற்ற துறையினருமாக அடியார் கூட்டத்தில் நிறைந்திருப்பார்கள். மாசு மருவு இல்லாமல் மணிபோல் ஒளிவீசும் உடம்பின்மீது பூசும் திருநீறு போலவே உள்ளத்திலும் புனிதர்கள்; தங்கள் தேஜஸினால் எத்திசையையும் பிரகாசிக்கச் செய்வார்கள். பேசவொண்ணாப் பெருமை பெற்றவர்கள்; ஐந்து பூதங்களும் தத்தம் நிலையில் கலங்கினாலும் அவர்கள் மாதொருபாகரின் மலரடிகளை மறவாதவர்கள்; குற்றமற்ற குணக்குன்று போன்றவர்கள்; ஆசையை அகற்றியவர்கள்; வறுமையும் பொருட் செல்வமும் அழிந்த அருந்தவச் செல்வர்கள்; செங்கல் ஓட்டினையும் செம்பொன்னையும் ஒன்றாகவே கருதும் மனப் பக்குவம் உடையவர்கள்; பற்றற்றவர்கள்; இறைவனை மனதிற்கொண்டு பக்தி மேலீட்டில் அவரைக் கும்பிடுதல் ஒன்றையேயன்றி மோட்சத்தையும் விரும்பாத வெற்றியாளர்கள். அவர்கள் அணியும் ஆரம் உருத்திராக்கக் கண்டிகை! உடுத்தும் ஆடை கந்தை! அவர்கள் பணி ஈசன் திருப்பணியன்றி வேறு எதுவும் இல்லாதவர்கள். ஈரம் குளிர்ந்த அன்பினர்.

எந்தவிதக் குறையும் இல்லாதவர்கள்! இத்தகைய சிவநேச வீரர்களின் தன்மையை என்னால் அளவிட்டு விளம்ப முடியுமா? இவர்கள் வேண்டும் விதமாக வேடங்கள் எடுத்து உலகைக் காப்பவர்கள். தாண்டவப் பெருமானின் தனிப்பெரும் தொண்டர்கள். இத்தகையவர்களின் அருட் பெருமைகளில் எதையறிந்து நான் எடுத்துப் புகழ்வேன்? சிறப்புடைய இச்சிவனடியார்களின் திருக்கூட்டத்தைப் பற்றி ஆலால சுந்தரர் பாடியருளினார். அந்தப் பாடல்களே திருத்தொண்டத் தொகையாகும்.



5. சுந்தரமூர்த்தி நாயனார் (தடுத்தாட்கொண்ட புராணம்)

கங்கை, சந்திரன், பாம்பு, கொன்றை மலர் ஆகியவற்றை அணிகலன்களாகத் தம் தலைமுடியில் சூடியவர் சிவபெருமான்! அவரால் தடுத்து ஆட்கொள்ளப்பெற்ற தனிப் பெருந்தொண்டர் சுந்தரமூர்த்தி நாயனார்! அந்நாயனார் பிறந்த நாடு கற்புள்ள பெண்கள் நிறைந்த திருமுனைப்பாடி நாடு ஆகும். வளமை மிகுந்த அந்த நாட்டில் வைதீகச் சைவநெறித் தழைத்தோங்க சுந்தரர் தோன்றும் பேறு பெற்ற ஊர் திருநாவலூர்!



அவ்வூர் வாய்மை குன்றாத் திருமறையவர்கள் நிறைந்திருக்கும் திருத்தலமாகும். அவ்வூரில் சிவபெருமானுக்குப் பரம்பரை வழியாக அன்படிமை கொண்ட சைவ அந்தணர் குலத்தில் சடையனார் என்ற ஓர் அன்பர் தோன்றிச் சிறந்து விளங்கினார். அவருடன் கற்பின் வாழ்க்கை நடத்தி வந்த மனைவியின் பெயர் இசைஞானியார். அவர்களுக்கு எம்பெருமானின் திருவருளினால் உலகத் தீமைகள் நீங்கி சிவநெறியில் உலகம் உய்ய சுந்தரர் பிறந்தார். அவருக்கு நம்பியாரூரன் என்று பெற்றோர் பெயர் சூட்டினார்கள்.

நம்பியாரூரர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தார். திருமாலின் சங்கு, சக்கரம், கதை, கட்கம், சாரங்கம் முதலிய அம்சங்கள் கொண்ட ஐம்படைத்தாலி என்ற ஆபரணத்தை அவர் பிறந்த ஐந்தாம் நாளன்று அவருடைய மார்பில் அணிவித்தார்கள். கால்களிலே சிறு சதங்கை கட்டி நெற்றியில் 'சுட்டி' சாத்தி இடுப்பிலே செம்பொன் அரைஞாண் மின்னச் சிறு குழந்தையாக நம்பியாரூரர் தெருவிலே சிறு தேர் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது அந்த நாட்டு அரசராகிய நரசிங்க முனையரையர் அத்தெரு வழியே பவனி வந்தார். தெருவிலே தேர் உருட்டி விளையாடிக்

கொண்டிருந்த நம்பியாரூரரை அவர் கண்டார். கண்டதுமே நம்பியாரூரரின் மீது அவர் பேரன்பு கொண்டு அப்பாலகரின் பெற்றோர்களிடம் சென்று நம்பியாரூரரைத் தமக்கு அபிமான புத்திரராக அளிக்கும்படி பெரும் நட்புரிமையுடன் வேண்டினார். பெற்றோர்களின் உடன்பாட்டினால் நம்பியாரூரரை அன்பினால் மகன்மை கொண்டு, அரசர் தம் அரண்மனையை அடைந்தார். அரசிளம் குமரருக்கேற்றாற்போல் குழந்தை நம்பியாரூரரை வளர்த்து வந்தார். அரண்மனையில் அரச குடும்பத்தில் அரசரின் காதல் பிள்ளையாக வளர்ந்த போதிலும் நம்பியாரூரர் தமது ஆதி சைவ அந்தணர் மரபுக்குரிய முறையிலே ஒழுகி வளர்ந்து வந்தார்.

உரிய பருவம் வந்ததும் வேத முறைப்படி பூணூல் அணிந்தார். கலைகள் பலவற்றைக் கற்றார். செல்வத்திலும், கல்வியிலும் சிறப்புற வளர்ந்த அவர் திருமணப்பருவத்தை அடைந்தார். அதனால் அவருடைய தந்தை சடையனார் தம் தனித் திருமகனுக்குத் திருமணம் செய்ய விரும்பித் தங்கள் ஆதி சைவ அந்தணர் குலத்தில் தங்கள் அருபெரும் மரபிற்கு ஏற்ற ஒரு குடும்பத்தில் பெண் தேடினார். அத்தகையதொரு பழம்பெரும் குடும்பம் ஒன்று புத்தூரில் இருந்தது. அக்குடும்பத்தைச் சேர்ந்த சடங்கவிச் சிவாசாரியார் என்னும் மறையவருக்கு ஒரு பெண் இருந்தாள். அக்கன்னிப் பெண் செந்தாமரை போன்ற அழகுடையவள். அவளை நம்பியாரூரருக்குத் திருமணம் செய்விக்கச் சில பெரியோரின் மூலம் சடையனார் செய்தியனுப்பினார். அப்பெரியோர்கள்



நம்பியாரூரரின் குலம், கோத்திரம், அறிவு முதலியவற்றையெல்லாம் சடங்கவியாரிடம் கூறினார்கள். அதை நன்மையென ஏற்று சடங்கவிராயர் முகம்மலர்ந்து தம் புதல்வியை நம்பியாரூரருக்குத் திருமணம் செய்து கொடுப்பதற்கு அன்போடு சம்மதம் தெரிவித்தார். அவர் இசைந்த வார்த்தையைக் கேட்ட பெரியோர் நம்பியாரூரரின் தந்தையிடம் சென்று அதைச் சொன்னார்கள்.

அச்செய்தியைக் கேட்டு சடையனார் பெரிதும் மனம் மகிழ்ந்தார். பிறகு நரசிங்கமுனைய மன்னரின் செல்வப் பெருக்கிற்கு ஏற்பத் தம் செல்வனுக்கு அவர் திருமணம் செய்ய முனைந்தார். அவரும் உறவினர்களும் திருமணத்திற்கான மங்கல நாளை நிச்சயித்து, திருமண ஓலையை புத்தூருக்கு அனுப்பினார்கள். அழகான கயல்விழி மங்கையரும் ஆடவர் பலரும் அந்த மங்கல மணவினை ஓலையை ஏந்திச் சென்று, வாசனை மலர்ச் சோலைகள் அடர்ந்த புத்தூரை அணுகினார்கள். அங்கு சம்பந்தபுரத்தைச் சேர்ந்த பெண்களின் தாமரை முகங்கள் மலர ஆண்களும் முகம் மலர்ந்து அவர்களை எதிர்கொண்டு வரவேற்றுப் பணிவுடன் திருமண நிச்சயதார்த்த ஓலையை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு மகிழ்ச்சி பொங்கிப் புரள, ‘‘திருமணம்! திருமணம்!!’’ என்று மேலும் பலர் அறியச் சொல்லி, மங்கல திருமணத்திற்கான காரியங்களையெல்லாம் அனைவரும் புகழும்படிச் செய்வதில் உற்சாகமாக ஈடுபட்டார்கள். திருமணம் எந்தவிதக் குறைவுமின்றி சிறப்புற நடந்தேறும் வண்ணம் தேவையான பொருட்களையெல்லாம் சேகரித்தார்கள். பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மணப்பந்தலுக்கு ஆண்கள் உள்ளக் கிளர்ச்சியோடு வந்து முளைப்பாலிகை அமைத்தார்கள்.

திருமணத்திற்கு முதல் நாள் இரவன்று மங்கல வாத்தியங்கள் முழங்க, மாப்பிள்ளை நம்பியாரூரரை வாழ்த்தி அவருக்கு பைம்பொன் திருமணிக் காப்பை அணிவித்து வேத விதிகள் வழுவாமல் மணத்துறைச் சடங்குகள் அனைத்தையும் செய்தார்கள். மறுநாள் மார்பில் மாலை அணிந்திருக்கும் சுந்தரரான நம்பியாரூரரின் திருமணக் கோலத்தைக் காணவேண்டும் என்கிற ஆவலோடு செங்கதிர் சூரியனும் அதிவிரைவில் உதித்தான். சோதிடர்கள் குறித்த முகூர்த்த வேளை வருவதற்கு முன்பாக, நம்பியாரூரரை மார்பில் பூணூலும் இரத்தினமாலை பூமாலையும் பொங்கித் தவழ, மங்கலக் குளியல் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவருக்கு வாசனைத் தைலம் தேய்த்தார்கள். மணங்கமழும் தூய நீர்ப்பாத்திரத்தின் அருகே, இரத்தினங்கள் இழைத்துப் பொன்னால் செய்யப்பட்ட கால்களுடன் கூடிய ஓர்

ஆசனத்தின் மீது சுந்தரரை அமர்த்தி அவரை நீராட்டினார்கள். அரிசனம் சாத்தி அவருடைய உடல் அழகு புது மெருகுடன் விளங்கும்படி செய்தார்கள். அகில் புகையின் வாசனை ஊட்டப்பட்ட அழகான பட்டாடைகளை அவருக்கு அணிவித்தார்கள்.

ஒப்பனை செய்வதில் கைதேர்ந்த ஒருவன் தன் முன்கையில் சுற்றிய ஒரு துணியைக் கொண்டு, சுந்தரரின் தலைக்குடுமி, ஈரத்தை உலர்த்தி, நகநுனியால் வகிர்ந்து சிக்கறுத்துப் பிரகாசமாகக் குடுமியை முடித்தான். கர்ப்பூரப் பொடியாலும் வண்ண மலர்களாலும் ஆன பன்னீரில் சந்தனத்தைக் கரைத்து அவருக்குப் பூசினான். கஸ்தூரிச் சாந்து தோய்ந்த வாசனைக் கலவைகளையெல்லாம் சாத்தினான். மார்பில் முப்புரி நூல் பசும்பாலைவிட வெண்மையாக மின்ன கைவிரல்களில் திருமணப் பவித்திரம் தாங்கி, சுந்தரர் வெகு அழகாக விளங்கினார். பூமலர்ப்பிணையல் மாலை, பூங்கொத்துக்களால் அமைந்த கொண்டை மாலை, நீளமாலை முதலான பல மாலைகளும் அணிந்து இருளகற்றும் பிரகாசமான இரத்தின ஆபரணங்கள் பலவும் தரித்து சுந்தரர் திருமணக் கோலம் பூண்டார்.

தன்னை ஆட்கொள்ளும் நாதரான சிவபெருமானின் திருவடிகளை மனதிலே எண்ணி நம்பியாரூரர் திருவெண்ணீறு பூசிக் கொண்டார். பிறகு தம்மை வளர்த்த மன்னவரின் செல்வச் சிறப்பும், தங்கள் வைதீகச் சிறப்பும், உற்றார் உறவினர்களும் புடைசூழ குதிரை மீதேறிப் புத்தூருக்குச் சென்றார். பெண் வீட்டார் நம்பியாரூரரை எதிர்கொண் டழைக்கப் பிரமாத ஏற்பாடு செய்திருந்தார்கள். வாத்தியங்கள் பல முழங்க, யோக வாழ்த்தொலிகள் எங்கும் எழும்ப, பெண்கள் நயந்து பல்லாண்டு எனப் போற்ற, வேத ஒலிகளும் சேர்ந்து ஓங்கின!

நம்பியாரூரரின் திருமணக் கோலத்தைக்கண்டு களிப்பதற்காகப் பலரும் விரைந்து வந்து வீதியில் திரண்டு கூடினார்கள். மங்கல கீதம் இசைக்கும் வாத்தியக் குழுவினர், வேதம் ஓதும் மறையவர் கூட்டங்கள் முதலானவர்களோடு மாலையும் மணமும் சூழ்ந்த மைந்தர் பலரும் நெருங்கி நின்றார்கள். மார்பில் குங்குமம் பூசி இளமைப் பூரிப்போடு விளங்கும் பெண்களும் எங்கும் பரந்தெழுந்து நின்றார்கள்.

வாத்தியங்கள் நெருங்கி ஒலிக்க, வீசும் சாமரைகள் மேலே எழும்ப, பெருங்குடை நெருங்கிச் செல்ல, பூங்கொடிகள் நெருங்கி ஆட, புதுமண ஊர்வலம் வந்து சேர்வதால்

மறையவர்களின் புத்தூர் மணம் வந்த புத்தூர் ஆயிற்று! வீதியெங்கும் நறுமண மலர்களையும், வாசனைப் பொடிகளையும் தூவி கலவைச் சந்தனத்தின் தெளி நீரையும் தெளித்தார்கள். நிறைகுடம், தூபம், தீபம், முளைப்பாலிகைகள் முதலானவற்றையெல்லாம் பலர் ஏந்தி வந்தார்கள். எல்லோருமாக வள்ளல் நம்பியாரூரரை மணம் எதிர்கொள்ள வந்தார்கள்.

மாப்பிள்ளையான நம்பியாரூரரைக் காணும் சிலர், ''ஆகா! இத்தகைய இளங்காளையைக் காண எத்தனையோ கண்கள் வேண்டும்!'' என்பார்கள். ''பெண்களில் பெருந்தவம் செய்தவள் சடங்கவியாரின் கன்னி இளம் பெண்!'' என்பார்கள். வேறு சிலர், ''மண்ணகம் களிப்புற வந்த திருமணம் கண்டு வாழ்ந்தோம்!'' என்பார்கள்.

''ஆண்களில் சிறந்தவரான நம்பியாரூரரின் அருள் நோக்கு எனும் வெள்ளத்தில் அலைந்தோம்!'' என்றும், ''அவர் ஏறிச் செல்லும் குதிரை நம்மைத் தாண்டிச் செல்லும்போது நமக்காக மெல்லவே நடந்தது!'' என்றும் ''அணிந்திருக்கும் ஆபரணத்திற்கும் ஒரு தனி அழகு வழங்குகிறார் இந்தப் புண்ணிய மூர்த்தி! இவரைக் காண்பதே நமக்கு ஒரு புண்ணியம்!'' என்றும் பெண்கள் கூட்டம் பலப்பல பேசிச் சென்றார்கள்.

வள்ளல் நம்பியாரூரர் புதுமணக் கோலத்தோடு குதிரைமீது சென்று வாசனை வீசும் திருமணப் பந்தல் முன்னால் வந்து நின்றார். அங்கு பெரு மழை பொழியப்போகும் மேகக் கூட்டத்தின் பெரு முழக்கம்போல் வெண் சங்குகளெல்லாம் முழங்கின. நம்பியாரூரர் தம் குதிரையை விட்டிறங்கி திருமணப் பீடத்தில் அமர்ந்தார். அப்போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது!

முன்பு திருக்கயிலையில் ஆலால சுந்தரர் இரு பெண்கள்மீது காதல் கொண்டதால் அவரைப் பூமியில் மானுடராகப் பிறக்கும்படி சிவபெருமான் கட்டளையிட்டபோது சுந்தரரைச் சமயத்தில் தடுத்து அடிமை கொள்வதாக வாக்களித்தாரல்லவா? அதைச் சிவபெருமான் தம் மனதில் நினைத்துக்கொண்டு ஒரு முதிய அந்தணர் வடிவம் தாங்கி வந்தார். அவர் தம் நெற்றிக் கண்ணை மறைக்கும் விதமாக வெண்பட்டுப் போல் நெற்றியில் வெண்மையான விபூதி பூசியிருந்தார். பூரணச் சந்திரன் வெண்ணிலவு பொழிவது போல் வெண்ணரைத் தலைமுடி விழுந்து துவண்டது. காதுகளிலே கண்டிகையும், குழையும் மார்பிலே பூணூலும் உருத்திராக்க மணியும், தோள்களிலே உத்தரிய வெண்துகிலும்,

இடையிலே பழமையான கோவணமும், ஒரு கையில் குடையும், மறுகையில் தருப்பை முடிந்த மூங்கில் தண்டமும் கொண்டு அக்கிழவர் தள்ளாடிய நடையுடன் மணப்பந்தலை நோக்கி, நடந்து வந்தார். சிவபெருமானின் இத்தகைய வேடத்தைக் கண்டவர்கள், ''இவ்வடிவம் இளமையிலிருந்து எழுந்து முதிர்ந்த பேரழகு வடிவமோ? மூப்பின் முதிர்ந்த வடிவமோ? வைதீக நெறியை உலகில் விளைவித்த முதல்வர் இவர்தாமோ?'' என்று ஐயுறும்படி அக்கிழவர் வந்து சேர்ந்தார்.

மணப்பந்தலில் மணவினை துவங்கும் நேரத்தில் அவர் நம்பியாரூரரின் எதிரில் சென்று சபையினர் முன் நின்று, அங்கிருந்த பெரியவர்களைப் பார்த்து, ''எல்லோரும் நான் சொல்வதைக் கேளுங்கள்!'' என்றார்.

அதைக் கேட்டதும் மணக் கோலத்திலிருந்த நம்பியாரூரரும் மற்றைய அந்தணப் பெருமக்களும், ''பெரியவரே! உம் வரவு நல்வரவாகுக! நாங்கள் செய்த தவத்தால்தான் இங்கு வந்திருக்கிறீர்! நீர் சொல்ல வந்ததைச் சொல்லும்!'' என்றார்கள்.

சிவபிரானாகிய முதியவர் உடனே நம்பியாரூரரை நோக்கி, ''உனக்கும் எனக்கும் உள்ள உடன்பாட்டால் முன்னம் ஒரு பெரும் வழக்கும் இருக்கிறது! அந்த வழக்கை முடித்த பிறகுதான் உன் திருமணத்தை நீ நடத்த முயலவேண்டும்!'' என்று மொழிந்தார். உடனே நம்பியாரூரர் அம்முதியவரை நோக்கி, ''என்னிடம் உமக்கு ஒரு வழக்கு உண்டு என்றால் அந்த வழக்கை முடிக்காமல் நான் திருமணம் செய்துகொள்ள மாட்டேன்! ஆகையால் முதலில் உம் வழக்கைக் கூறும்!'' என்றார்.

''கேளுங்கள், மறையோர்களே! இந்த நாவலூரன் எனக்கு ஆட்பட்ட அடியான். எனக்கு உடமையான அடிமை! இதுதான் நான் சொல்ல வந்த வழக்கு!'' என்றார் முதியவர். இப்படிக் கூறியவர் தேவர்களையும், பிரமன், திருமால் முதலான திருவுடையார் அனைவரையும், வேறடிமையாகக் கொண்டிருக்கும் சிவபெருமான்தான்! ஆனால் அதை உணராத கூட்டத்தினர் அனைவரும் அந்தக் கிழவரின் பேச்சைக் கேட்டுத் திகைத்தார்கள். ''இந்த அந்தணர் என்ன நினைத்து இதுபோலச் சொல்கிறார்?'' என்று எல்லோரும் குமுறினார்கள். சிலர் அவர்மீது கோபம் கொண்டு சீறியெழுந்தார்கள். சிலர் அவரைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள். மாப்பிள்ளையான திருநாவலூரரும், ''ஆகா! இந்த வேதியர் கூறும் வசனம் வெகுநன்றாக இருக்கிறதே!'' என்று ஏளனம் செய்து சிரித்தார். அவருடைய சிரித்த முகத்தை நோக்கிக் கிழவர் சினத்துடன்

நடுங்கி, உத்தரியத் துகில் நழுவி விழுந்து விடாதபடி ஒரு கையால் தாங்கிப் பிடித்துக்கொண்டு வேகமாகத் தள்ளாடி நடந்துவந்து நம்பியாரூரருக்கு முன்னால் எதிர்நின்று, ''ஓகோ! அந்தக் காலத்தில் உன் அப்பனுக்கு அப்பனான உன் பாட்டன் எனக்கு ஆள் அடிமை ஓலை எழுதிக் கொடுத்திருக்கும்போது நீ இன்று சிரித்தது ஏனடா?'' என்று கேட்டார்.

மாசில்லா மரபில் வந்த வள்ளலான நாவலூரரர் அவ்வேதியரை உற்றுப் பார்த்ததும் பழைய நேசத்தின் சிந்தைக் கசிவால் சிரிப்பு நீங்கினார். பிறகு அவர் அக்கிழவரை நோக்கி, ''வேதியரே, குற்றமற்ற அந்தணர்கள் மற்றோர் அந்தணருக்கு அடிமையாவது என்ற வார்த்தையை இன்றுதான் உம்மிடமிருந்து கேட்கிறோம்! இப்படிப் பேசும் நீர் என்ன பித்தனோ?'' என்றார்.

''பித்தனும் ஆகப் பின்னும் பேயனும் ஆக என்னை நீ எத்தனை தீங்கு சொன்னாலும் நான் எதற்கும் வெட்கப்பட மாட்டேன். அப்படி என்னைப்பற்றி எத்தனை நீ பேசினாலும் அத்தனைக்கும் என்னை ஒன்றும் அறிந்து கொள்ளவில்லை யென்றுதான் அர்த்தம்! ஆகவே நீ வீணாக எதிர்நின்று விளையாட்டாக வித்தகம் பேசவேண்டாம்! எனக்கு ஆளடிமையான நீ, எனக்குப் பணி செய்யவேண்டும்!'' என்றார்.

''வழக்காடும் இவ்வேதியரின் வடிவத்தைப் பார்க்கும்போது என் உள்ளத்தில் அன்பு உருகி நிற்கிறது! ஆனால் இவர் பேசிய பித்த வார்த்தையோ? உடனே கோபத்தையும் உண்டாக்குகிறது! ஆளடிமை ஓலை ஒன்று உண்டு என்று இவர் சொல்கிறாரே அதன் உண்மையைப் பார்த்து விடுகிறேன்!'' என்று வன்தொண்டரான நம்பியாரூரர் தன்னை ஆட்கொள்ள வந்த அன்புத் துணைவரை நோக்கி, ''வேதியரே! ஆளடிமை ஓலை ஒன்று இருக்கிறது என்று சொன்னீரே, அந்த ஓலையை எடுத்துக் காட்டுக!'' என்றார்.

'ஓலையைக் காட்டுக' என்று நம்பி உரைத்ததும் கிழவேதியர் ஏளனமான குரலில், ''நீ அந்த ஓலையைக் காணத் தகுதியுள்ளவனா? அந்த ஓலையை நீதி சபையின் முன்னிலையில் நான் காட்டியபிறகு எனக்கு அடிமைப்பணி புரியத்தான் நீ தகுதியுள்ளவன்!'' என்று கூறினார்.

அதைக்கேட்டதும் நம்பியாரூரர் வெகுண்டு விரைந்து சென்று வேதியரை விரட்டத் தொடங்கினார். கிழவேதியரிட மிருந்த அடிமை ஓலையை பலாத்காரமாகப் பறிக்கவும் முயன்றார். அந்த அளவில் முதியவர் மணப்பந்தரினூடே தள்ளாடித் தள்ளாடி ஓடலானார். நான்முகனும், திருமாலும் தொடர முடியாத சிவபெருமானான அக்கிழ வேதியரை



நாவலூரர் பின்தொடர்ந்து ஓடிச்சென்று பலவந்தமாகப் பிடித்துக் கொண்டார். பிறகு, அவர் அவ்வேதியரின் கையிலிருந்த அடிமை ஓலையை வெடுக்கெனப் பறித்து, ''அந்தணர் வேறொருவருக்கு ஆட்பட்டு அடிமைத் தொழில் செய்தல் என்ன முறை?'' என்று கேட்டுக் கொண்டே அவ்வோலையைக் கிழித்தெறிந்தார்.

உடனே முடிவிலா முதல்வரான முதியவர் நம்பியாரூரரைப் பிடித்துக் கொண்டு ''இப்படி நீ ஓலையைக் கிழித்தெறிதல் முறையோ?'' என்று முறையிட்டார்.

அருகில் நின்றவர்கள் அவ்விருவரையும் விலக்கி, ''இதுவரை உலகில் இல்லாத ஒரு வழக்கமாக ஒரு பெருவழக்கைக் கொண்டு வந்து வாதாடிச் சண்டையிடும் திருமறை முனிவரே! நீர் எங்கிருப்பவர்? சொல்லும்!'' என்று கேட்டார்கள்.

அதற்கு எல்லாமாய் எங்குமாய் விளங்கும் அவ்வேதியர், ''நான் தற்போது இங்குதான் இருக்கிறேன்! என் இருப்பிடமும் வெகு தூரமன்று! அது வெண்ணெய் நல்லூர். அது ஒருபுறம் இருக்கட்டும்! தரும வழி தவறி வன்செயலாக இந்த ஆரூரன் என் கையிலிருக்கும் அடிமை ஓலையைப் பறித்துக்

கிழித்துவிட்டானே? இதிலிருந்தே இவன் என் அடிமை என்பதை உங்களுக்கு நிரூபித்துவிட்டான்!'' என்றார்.

அதைக் கேட்ட நம்பியாரூரர் தம் மனத்துள், ''இவன் பழைய மன்றாடி போலும்! நீதிமன்றத்தில் வழக்காடி வழக்காடிப் பழக்கப்பட்டிருப்பான்!'' என்று நினைத்து, அன்பு மனமும் ஆத்திரத்தால் பொங்க வேதியரைப் பார்த்து, ''நீர் வெண்ணெய் நல்லூர்வாசி என்றால் உம்முடைய பிழைநெறி வழக்கை அங்கேயே போய் பேசிக்கொள்ளும்! போம்!'' என்றார்.

அதைக் கேட்டு வேதியர், நிமிர்ந்து நின்று, ''நாம் திருவெண்ணெய் நல்லூருக்கே போனாலும் நல்லதுதான்! அந்த ஊரிலே புனிதமான வேதங்களை உணர்ந்த வேதியர்கள் பலர் இருக்கிறார்கள். என்னிடமோ ஆதியில் எழுதப்பட்ட மூல ஓலை ஒன்றும் இருக்கிறது! அதை அறநெறியாளர்களின் முன்னிலையில் நான் எடுத்துக்காட்டி நீ எனக்கு அடிமைதான் என்பதைச் சாதிப்பேன்!'' என்று கூறிவிட்டுத் தடியை வேகமாக ஊன்றி முன்னதாக நடந்தார்.

வேகமாகச் செல்லும் அம்முதியவரை நம்பியாரூரரும் வேகமாகப் பின்தொடர்ந்தார். அது கவரும் முகங்கொண்ட காந்தத்தை இரும்பொன்று வலியச் சென்று அணைவது போல் இருந்தது!

அது கண்ட எண்ணற்ற சுற்றத்தார்கள் திகைத்தார்கள். 'இந்த வழக்கு என்ன ஆகுமோ?' என்று எல்லோரும் எண்ணியவாறு சென்று, நல்ல அந்தணர்கள் வாழும் திருவெண்ணெய் நல்லூரை அடைந்தார்கள்.

திருவெண்ணெய் நல்லூரில் வேதம் அறிந்த அந்தணர்கள் நிறைந்த பேரவையின் முன்பு முதியவரான வேதியர் சென்று, சபையினரை நோக்கி, ''அவையோரே! நாவலூரில் வாழும் இந்த நம்பியாரூரன் என் அன்பிற்குரிய அடிமையாவான்! அதற்குச் சான்றாக நான் காட்டிய ஆளடிமை ஓலையை இவன் கிழித்துவிட்டு இப்போது மூதறிஞர்களான உங்கள் முன் அவனே வழக்காடவும் வந்திருக்கிறான். இதுதான் என் முறையீடு!'' என்று கூறினார்.

அதைக் கேட்டதும் அந்தணர் அவையில் இருந்த அறிஞர்கள் அதிக வியப்புற்றுக் கிழவேதியரைப் பார்த்து, ''மறை ஓதும் அந்தணர்கள் மற்றவருக்கு அடிமையாகும் வழக்கம் இம்மாநிலத்தில் எங்கும் இல்லையே? அப்படியிருக்க நீர் என்ன சொன்னீர் ஐயா?'' என்று கேட்டார்கள்.

‘‘நான் இங்கு வழக்காட வந்தது சரியன்றோ? இவன் கிழித்த ஆளடிமை ஓலை இவன் தந்தையின் தந்தை எனக்கு எழுதிக் கொடுத்ததாகும்!’’ என்று வேதியர் கூறிவிட்டுத் தனியாக நின்றார்.

அவையிலுள்ள பெரியோர்கள் ஆலோசித்துவிட்டு நம்பியாரூரரை நோக்கி, ‘‘முன்பு உம் பாட்டனார் மனம் இசைந்து உடன்பாட்டின்மீது எழுதிய ஆள் அடிமை ஓலையை அவர் எடுத்துக் காட்டினார் என்றால் அதை இன்று வேகமாக நீர் பறித்துக் கிழிப்பது வெற்றியைத் தந்துவிடுமோ? அதுவும் தசையெலாம் ஒடுங்கி வயது முதிர்ந்த அப்பெரியவரிடமிருந்து ஓலையை வலிய வாங்கிக் கிழிப்பது எந்த வகையில் வெற்றியாகும்? முற்றறிவுடைய அம்முதியவர் தம் வழக்கைப் பொருத்தமாகச் சொல்லிவிட்டார். ஆகவே இதற்கு அசைவற்று நிற்கும் நம்பியாரூரரின் எண்ணந்தான் என்ன?’’ என்று கேட்டார்கள்.

நம்பியாரூரர் அவர்களை நோக்கி, ‘‘நூல்கள் அனைத்தும் உணர்ந்த பெரியோர்களே! நான் ஆதி சைவ அந்தணன் என்று நீங்கள் அறிவீர்கள்! அத்தகையவனான என்னை தமக்கு அடிமை என்று இந்த அந்தணர் சாதிக்கிறார் என்றால், இது என் மனதினால் கூட உணரமுடியாத மாயையாகத்தான் இருக்கிறது. இதற்கு மேல் நான் என்னதான் சொல்லமுடியும்? இது எனக்குத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராகும்!’’ என்று கூறினார்.

நடுநிலையுள்ள அறநெறியாளர் தங்கள் எதிரே நிற்கும் திருமறை முனிவரை நோக்கி, ‘‘ஐயா! இந்த உலகத்தில் இன்று இவரை உமது அடிமை என்று சொல்வது வழக்கத்தில் இல்லாத கொடூர வாசகம் என்றாலும் அதை நீர் நன்றாக உறுதிப்படுத்த வேண்டும்! அதாவது அனுபவம் அல்லது உரிமைப் பதிவுப் பத்திரம் அல்லது அயலாரின் சாட்சியம் என்னும் இம்மூன்றில் ஏதாவது ஒன்றைக் காட்டி உமது வழக்கை வலியுறுத்தும்!’’ என்றார்கள்.

‘‘இந்த ஆரூரன் முன்பு முரண்டெழுந்த கோபத்தால் கிழித்த ஓலை அசல் ஓலை அல்ல! மூல ஓலையிலிருந்து பார்த்தெழுதிய நகல் ஓலையே ஆகும். வழக்கு விசாரணையின்போது பெருமையுடன் காட்டுவதற்காக மூல ஓலையை என்னிடமே வைத்திருக்கிறேன்!’’ என்றார் மாயையில் வல்லவரான கிழ வேதியர்.

‘‘அந்த முதல் ஓலையைக் காட்ட உம்மால் முடியுமென்றால் அதை இங்கே காட்டும்!’’

''இந்த நம்பியாரூரன் முன்பு பலாத்காரமாக என் படி ஓலையைப் பறித்துக் கிழித்ததைப் போல் இப்போது என் மூல ஓலையையும் வலிமையால் பறிக்கக் கூடாது என்று சொல்ல உங்களுக்குச் சக்தி இருக்குமானால் அந்த மூல ஓலையை இந்தச் சபையில் காட்டுவேன்!'' என்றார் கிழ வேதியர்.

''நான்மறைச் செல்வரே! இந்தச் சபையில் உம்முடைய மூல ஓலைக்கு எந்தவிதமான தீங்கும் நேராத வண்ணம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்!'' என்றார்கள் அவையோர். அதைக் கேட்டதும் நம்பியாரூரரின் அல்லல் தீர்த்து ஆட்கொள்ள வந்த சிவபெருமானாகிய வேதியர், அந்த மூல ஓலையை எடுத்துச் சபையோர் முன் காட்டினார். அவருடைய கையில் ஓலையைக் கண்டதும் சபையினர் அங்குள்ள கணக்கரை ஏவி அந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்பதைப் படிக்கச் சொன்னார்கள். கணக்கர் உடனே அந்த ஓலையைத் தொழுது வாங்கி, அதன் சுருள் பெருமடியை நீக்கி, அதன் பழமையை உற்றுப் பார்த்துத் தெளிவு பெற்று சபையினர் அனைவருக்கும் கேட்கும்படியாக அதில் உள்ள வாசகங்களைப் பின்வருமாறு படித்துக் கூறலானார்.

''திருநாவலூரில் இருக்கும் ஆதி சைவனாகிய ஆரூரன் எழுதிக் கொடுப்பதாவது: பெருமுனியான திருவெண்ணெய் நல்லூர் பித்தனுக்கு நானும் என் வழிமுறையில் வருகின்ற சந்ததியினரும் வழி வழியாகத் தொண்டு செய்து வருவோம் என்பதற்கு ஆதாரமாக, உள்ளமும் புறமும் ஒருமைப்பட்டு இந்த ஓலையை எழுதிக் கொடுத்தேன். இதற்கு என் கையெழுத்து.''

இவ்விதம் ஓலையில் எழுதப்பட்ட வாசகங்களைக் கேட்ட பிறகு சபையினர் அந்த ஓலையில் ஆரூரரின் கையெழுத்துக்குப் பிறகு சாட்சிக் கையெழுத்துப் போட்டவர்களின் கையெழுத்துகளையும் சரிபார்த்து, ''அவை சரியாக இருக்கின்றன!'' என்றார்கள்.

பிறகு மாசிலாத அம் மறையவர்கள் நம்பியாரூரரை நோக்கி, ''ஐயா! இந்த ஓலையில் உள்ள கையொப்பம் உமது பாட்டனாரின் கையெழுத்துத்தானா என்பதை நன்றாகப் பார்த்து அறிந்து சொல்லும்!'' என்றார்கள்.

நம்பியாரூரரை வலிய ஆட்கொள்ள வந்த வள்ளலான கிழவேதியர் குறுக்கிட்டு, ''இவனுடைய பாட்டனார் எழுதிக் கொடுத்த ஓலையின் கையெழுத்தை இவனோ கண்டறியவல்லவன்? இவனுடைய பாட்டனார் கையெழுத்திட்ட ஓலை வேறு ஏதாவது இருக்குமேயானால் அதைக் கொண்டு

இந்த ஓலையுடன் நீங்களே ஒப்பிட்டுப் பார்த்து உங்கள் மனதில் தோன்றியதைச் சொல்லுங்கள்!'' என்றார்.

உடனே சபையில் உள்ளவர்கள் ஒன்று திரண்டு நம்பியாரூரரின் சந்தேகம் தெளிவதற்காக அவருடைய பாட்டனாரின் கையெழுத்துள்ள வேறு ஓலையைப் பாதுகாப்புப் பெட்டகத்திலிருந்து கொண்டு வரச்செய்து அதை இந்த ஆளடிமை ஓலையுடன் ஒப்பிட்டுப் பார்த்து, ''இரண்டு ஓலையில் உள்ள கையெழுத்துகளும் ஒத்திருக்கின்றனவே! இனிச் செயல் இல்லை!'' என்று வியந்தார்கள். பிறகு பண்புமிக்க அவ்வந்தணர்கள் நம்பியாரூரரை நோக்கி, ''நம்பியாரூரரே! இந்த நான்மறை முனிவருக்கு நீர் தோற்றுவிட்டீர்! ஆகையால் விதிப்படி இவருக்கு ஏவல் தொண்டு செய்வதே உமது கடமையாகும்'' என்று விளம்பினார்கள்.

அதற்கு நம்பியாரூரர், ''நான் அவ்வாறு அவருக்கு அடிமையாக இருக்கவேண்டும் என்பதுதான் விதிமுறை என்றால், நான் அதற்கு இசைய மாட்டேன் என்று கூற முடியுமா?'' என்று சொல்லித் தம் சம்மதத்தையும் தெரிவித்து நின்றார். பிறகு அவையோர்களாகிய அந்தணர்கள் கிழ வேதியரை நோக்கி, ''அரு முனிவரே! நீர் முன்பு காட்டிய ஓலையில் நீர் வாழ்வது எங்கள் பெருமைக்குரிய திருவெண்ணெய் நல்லூர் என்று கூறியிருக்கிறதே? அப்படியானால் அந்த ஊரில் உமக்குத் தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் வீட்டையும் உம்முடைய வாழ்க்கை முறைமைகளையும் காட்டும்!'' என்று கேட்டார்கள்.

அந்தணருக்கு அந்தணர் அடிமையாதல் இல்லை என்னும் வழக்கத்தை உடைத்தெறிந்து அதிசயமான வழக்கில் அபூர்வமான வெற்றிபெற்ற புண்ணிய மூர்த்தியான கிழவேதியர் சபையினரை நோக்கி, ''எம்மை நீங்கள் ஒருவரும் அறியவில்லையென்றால் என்னோடு வாருங்கள், காட்டுகிறேன்'' என்று கூறி முன் நடந்தார். சபையினரும் நம்பியாரூரரும், அம்முதியவர் பின்னால் சென்றார்கள். இவ்வாறு எல்லோரும் பின்தொடர முதியவரோ முன் நடந்து திருவருட்டுறை என்னும் திருவெண்ணெய் நல்லூர் கோவிலுக்குள் புகுந்து திடீரென்று மாயமாய் மறைந்தார்! பின்னால் வந்த சபையினரும் நம்பியாரூரரும் அம்முதியவரைக் காணாது திகைத்து நின்றார்கள்.

''மார்பில் பூணூல் மின்னக் குழம்பி நின்ற நம்பியாரூரர், ''எங்கள் சிவபெருமானின் திருக்கோயிலினுள் அந்த வேதியர் புகுந்தது ஏன்?'' என்று அதிசயித்து, பெரும் வியப்போடு அவர் மட்டும் தனியாகத் தொடர்ந்து கோயிலினுள்ளே சென்றார். அங்கு வேதியரைப் பலவாறாகவும் கூவியழைத்தார்.

உடனே சிவபெருமான் உமாதேவியுடன் ரிஷப வாகனத்தின் மீது தோன்றி, நம்பியாரூரருக்கு உணர்த்தலானார்: ''நம்பியாரூரா! நீ முன்பு கயிலையிலே நமக்கு அணுக்கத் தொண்டனாக இருந்தாய்! அப்போது ஒரு சமயம் கமலினி, அனிந்ததை என்னும் இரு சேடிமார் மீது நீ காதல் கொண்டு மனம் அலைந்தாய்! அக்காதலை நீ அனுபவிப்பதற்காக நம்முடைய ஏவலின்படி மண்ணுலகில் மனிதனாகப் பிறந்தாய். உலகியல் சம்பிரதாய மணத்தால் துன்புறும் வாழ்க்கை உன்னைத் தொடராமல் அறுப்பதற்காக உன்னை நாம் தொடர்ந்து வந்து நல்லறிவுள்ள அந்தணர்கள் முன்னிலையில் உன்னைத் தடுத்து ஆட்கொண்டோம்!'' என்று கூறி, முன்னர் திருக்கயிலையில் நடந்தனவற்றை நம்பியாரூரருக்கு உணர்த்தியருளினார். ஆண்டவன் ஒலியைக் கேட்டதும் தாய்ப்பசுவின் குரலைக் கேட்ட இளங்கன்று போல் நம்பியாரூரர் ஆனந்தத்தால் கதறினார். அவருடைய கைகால் முதலான அங்கங்களிலெல்லாம் மயிர்ச் சிலிர்ப்பு பெருகியெழுந்தன. அவர் தம் இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கிக் கூப்பித் தொழுதவாறு ஆனந்தம் பெருக, ''மன்றாடியாரே! அடியேனை வலியவந்து தடுத்தாட்கொண்ட செயல், திருவம்பலத்தில் திருநடனம் ஆடும் தேவரீரின் திருவருள் கருணையோ?'' என்று அன்புப் பெருக்கோடு விம்மினார்.

அப்போது தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சக்கருவி என்ற ஐந்து வகையான வாத்தியங்களும் முழங்கின. விண்ணிலே விண்ணவர் பொழியும் பூமழை மண்ணகத்திலே பரவிக் கமழ்ந்தன. மண்ணவர் பெரு மகிழ்ச்சி பொங்க, நான்கு மறைகளும் முழங்கி ஆரவாரம் செய்ய, அண்ணல் நம்பியாரூரருக்கு ஆண்டவன் அருள் புரியலானார்.

''நீ வழக்கு மன்றத்திலே நம்மை மறுத்து வன்மையாகப் பேசியதால் இன்று முதல் 'வன்தொண்டன்' என்னும் பெயர் பெற்றாய்! நீ நமக்கு அன்பினால் செய்யக்கூடிய தொண்டு ஒன்று உண்டு. எமக்கு விருப்பமான பலதிற அர்ச்சனைகளுள் பாட்டே மிகச் சிறப்பாகும்; ஆகவே மண்ணுலகில் நம்மை இன்சொல் தமிழால் பாடுவாயாக!'' என்றார் தூய மறை பாடும் வாயார்.

பிரம்மாவினாலும் திருமாலினாலும் அறிய முடியாதவரும் திருவைந்தெழுத்தின் கருப்பொருளாய் விளங்குபவருமான சிவபெருமான், 'நம்மைப் பாடுக' என்று அருள் கூர்ந்தவுடன், நம்பியாரூரர் தம் இரு கரங்களையும் சிரம்மேல் கூப்பி வணங்கி, திருச்சிற்றம்பலத்தில் ஆடும் சிவபிரானின் பொற்பாதங்களை மனத்தால் கும்பிட்டு ''எனக்காக வேதியர் வடிவெடுத்து

என்னை வழக்கின் மூலம் வென்று ஆட்கொள்ள வந்தீர்! அதன் பயனை அடியேன் அறியவில்லை! அதை எனக்கு உணர்த்தி என்னை உய்யக்கொண்ட பெருமானே! கோதிலா அமுதே! இன்று உம் குணப் பெருங்கடலை நாயேன் எப்படி அறிந்து என்ன சொல்லிப் பாடுவேன்?'' என்று மொழிந்தார்.

அன்பரை ஆண்டவன் தம் அழகான கண்களால் அருளோடு நோக்கி, ''முன்பு என்னைப் பித்தன் என்றே மொழிந்தாய்! அதனால் என் பெயரைப் பித்தன் என்றே வைத்துப் பாடுவாயாக!'' என்று அருளினார்.

உமையம்மையை உடம்பில் ஒரு பாதியாகக் கொண்டு தாயைவிட இனியவராக விளங்கும் சிவபெருமானைப் ''பித்தா, பிறைசூடி!'' என்று நம்பியாரூரர் பெரிதாகக் குறிப்பிட்டுத் தம் திருப்பதிகத்தை இந்த உலகமெல்லாம் உய்யப் பாடத் துவங்கினார்.

தமிழிசைப் பண்ணில் படிப்படியாய் உயர்ந்து ஸ்வரவின்னியாஸ சிறப்புகளால் செவிக்கு இனிமை தரும் ★**இந்தோளம்** என்ற தமிழ்ப்பண்ணை வகைப்படுத்தி தாள லயத்துடன் இறைவனாகிய சிவபெருமானை எல்லாவற்றிலும் நிகரற்றவரான நம்பியாரூரர் பின்வருமாறு பாடினார்.

பித்தா! பிறைசூடி! பெருமானே! அருளாளா!
எத்தால் மறவாதே நினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் ருட்டுறையுள்
அத்தா! உனக்கு அளா(ய்) ஆனி அல்லேன் எனலாமே

காரூர் புனல் எய்திக்கரை கல்வித்திரைக் கையால்
பாரூர் புகழ் எய்தித் திகழ் பன்பாணிம உந்திச்
சீரூர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட் துறையுள்
ஆரூரன் எம் பெருமாற்கு ஆளல்லேன் எனலாமே,

– **தேவாரப் பாடல்.**

★ இந்தோளம் – கர்நாடக இசையில் ஹிந்தோளம். இந்துஸ்தானி இசையில் மால்கோஷ், ஸ்வரஸ்தானம். ச, க, ம, த, நி. (மேல் நிஷாதம்)

நன் மக்கள் வாழும் திருவெண்ணெய் நல்லூரில், திருவருட் துறைக்கோவிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், தம்மை வன்தொண்டர் இன்சொல்லால் தமிழிசை பாடியதைக் கேட்டு மகிழ்ந்தார். ''இன்னும் இதுபோலவே பலவகையாகவும் நம் புகழைப் பாடுவாயாக!'' என்று கூறி மறைந்தார்.

புத்தூரில் நடைபெறவிருந்த நம்பியாரூரரின் திருமணத்தில் சிவபிரான் குறுக்கிட்டு அவரைத் தடுத்தாட் கொண்டதினால் அந்தத் திருமணம் நடைபெறவில்லை. சடங்கவி சிவாசாரியாரின் அன்பு மகளான மணப்பெண் தன் திருமணம் தவறிய செயலால் தவக்கோலம் பூண்டு, நம்பியாரூரரையே தனி நாதனாக நினைத்து அவரையே ஓயாமல் உணர்வு வழியில் தியானித்தாள். அதன் மூலமாகவே சிவலோக முக்தி எளிதில் பெறும் தன்மையும் பெற்றாள்.

நம்பியாரூரரான சுந்தரமூர்த்தியார் தம்மை வேதியர் ஆட்கொண்ட பிறகு திருவெண்ணெய் நல்லூரை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கும் தடாகங்கள் சூழப்பெற்ற திருநாவலூரை அடைந்தார். அங்கு அவர் தேவர்பிரானைப் பணிந்து ஒரு திருப்பதிகம் பாடினார். பிறகு சிவனுறையும் திருத்துறையூருக்குச் சென்று, ''ஆண்டவனே! தீவினையால் தவறான வழியில் செல்லாமல் என்னைத் தடுத்து ஆண்டாய்! இனி அடியேனுக்கு தவநெறியைத் தந்தருள வேண்டும்!'' என்று தம்பிரான் முன் நின்று பிறப்பு வழிக்கு விலக்காகும் ஒரு திருப்பதிகத்தைப் பாடினார்.

> "மத்தம் மதயானையின் வெ்ண் மருப்புந்தி
> முத்தம் கொணர்ந்தெற்றி யோர் பெண்ணை வடபால்
> பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
> அத்தா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே,''

– சுந்தரர் தேவாரம்.

ஐம்புலன்களும் ஒன்றும்படி தவத்திலே வன்தொண்டர் விரும்பிய நெறியைக் கொடுத்தருள வேண்டும் என்பதற்காக திருத்துறையூர் சிவபெருமானின் திருப்பாதங்களைப் பூக்களால் அர்ச்சித்துப் போற்றி யெனப்பாடி வன்தொண்டர் தொழுதார். பிறகு அவர் திருத்துறையூரை விட்டுப் புறப்பட்டார். வேறு பல சிவத் தலங்களுக்கும் அவர் சென்று இறைவனை வழிபட்டார்.

அதன் பிறகு பொற்புலியூர் என்னும் தில்லையம்பலத்தில் நடராஜப் பெருமானின் ஆனந்தக் கூத்தைத் தொழுவதற்கு

நினைவுற்று பெரும் ஆவலோடு சிதம்பர நகரை நோக்கிப் பயணம் புறப்பட்டார்.

வழியில் தென்பெண்ணை ஆறு தென்பட்டது. மலைகளில் வளரும் சந்தனம், அகில் முதலிய மரங்களின் இலைகளையும், கிளைகளையும், மயில்பீலிகளையும், மலர்களையும், மணிகளையும் சுமந்து அலைகளோடு ஓடிவரும் குளிர்ந்த நீரையுடையது தென்பெண்ணை ஆறு. அந்த ஆற்றை நம்பியாரூரர் கடந்தேறி திருவதிகை வீரட்டானம் என்னும் திருத்தலத்தின் பக்கம் வந்தார். அப்போது சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய நெடுந்தேரில் மேற்றிசைக் கடலை அடையும் மாலை நேரம்.

திருவதிகை வீரட்டானம் என்பது ஆளுடைய திருநாவுக்கரசர் அடியாராகி புல் செதுக்கும் கருவியான உழவாரப் படை கொண்டு கைத்தொண்டு புரிந்த திருத்தலமாகும். ஆகையால் நம்பியாரூரர் அந்த ஊர் மண்ணை மிதிக்க மனம் ஒருப்படாமல் திருவதிகைக்கு அருகில் உள்ள 'சித்த வடம்' என்னும் மடத்தில் புகுந்தார். வண்டுகளின் ரீங்கார ஓசையுடன் பூஞ்சோலைகள் அந்த மடத்தைச் சூழ்ந்திருந்தன. அந்த மடத்தில் தங்கிய நம்பியாரூரர் தம் மனதில் திருவீரட்டானத்து இறைவனின் திருப்பாதங்களை நினைத்து வணங்கி, சுற்றிலும் பரிவாரத்தினர் துயில் கொள்ள அவரும் பள்ளி கொண்டார்.

அதைக் கண்டு திருவீரட்டானத்து சிவபெருமான் ஒரு கிழவேதியராக வடிவமெடுத்து வந்து ஒருவரும் அறியா வண்ணம் பொது மடத்தில் புகுந்து, மலர்மாலை அணிந்த வன்தொண்டரின் தலைமுடிமீது தம்முடைய தாமரைமலர்ப் பாதங்களை வைத்துப் படுத்துத் தூங்குவதுபோல் நடித்தார்.

யாரோ ஒருவர் தன் தலைமீது பாதங்களை வைத்துப் படுத்திருப்பதை உணர்ந்த நம்பியாரூரர், விழித்து எழுந்து பார்த்தார். அங்கே ஒரு முதியவர் படுத்திருப்பதைக் கண்டார். உடனே நம்பியாரூரர் அம்முதியவரை எழுப்பி, ''மறையவரே! உம்முடைய பாதங்களை என் தலைமீது ஏனையா வைத்தீர்?'' என்று கேட்டார். அதற்கு அந்த முதியவர், ''நீ துயில் கொள்கிற திசையை அறிய முடியாமல் என் பாதங்கள் உன் தலைமீது வைத்தது என் மூப்பினால் நேர்ந்ததாகும்! அதை நீயே பார்த்துக் கொள்!'' என்று கூறினார். அதற்கிசைந்து தமிழ் நாதராகிய நம்பியாரூரர் தம்தலையை வேறுபக்கம் வைத்து, மீண்டும் தூங்கினார். மீண்டும் அம்முதியவர் தம் பாதங்களை அவர் தலைமீது நீட்டவே, நம்பியாரூரர்

துணுக்குற்றெழுந்து, ''இவ்விதம் பலதடவைகள் என்னை மிதித்தீர்! நீர் யார்?'' என்று கேட்டார்.

கங்கையை சடைக்குள் மறைத்த சிவபெருமானாகிய முதியவர், ''என்னை நீ அறியவில்லையோ?'' என்று கேட்டு மறைந்தார். அவர் மறைந்ததும் ஆரூரர், ''ஆகா! என்னுடைய தலைமீது தம்முடைய திருப்பாதங்களை வைத்தருளிய அந்த முதியவர் திருவீரட்டானத்து சிவபெருமானே என்பதை அறிந்து கொள்ளாமல் இறுமாப்புடன் என்ன காரியம் செய்துவிட்டேன்,'' என்று பெரிதும் வருந்தினார். பிறகு அவர் உணர்வு தெளிந்து, வீரட்டானத்தில் அமர்ந்த சிவபெருமானின் திருவடிகளை நினைத்துப் பணிந்து வணங்கி, ''தம்மானை அறியாத சாதியார் உளரே!'' என்று துவங்கும் ஒரு திருப்பதிகத்தைப் பாடினார்.

மறுநாள் காலையில் அவர் கெடிலம் நதிக்குச் சென்றார். பொன்னையும் மணியையும், போரிடும் யானைகளின் வெண்ணிறத் தந்தங்களையும், வெண்முத்துக்களையும் வாசனைப் பூக்களையும், நறுமணங்கமழும் சந்தனக் கட்டைகளையும் கெடிலநதி தன் வலிமையான அலைக்கரங்களால் திரட்டிக்கொண்டு வந்து திருவதிகைத் தலத்தை வழிபடுவதால், அந்நதி தென்திசைக் கங்கை என வழங்கப்படும். அந்த கெடிலம் நதியில் நம்பியாரூரர் நன்றாக நீராடி சிவபெருமானின் அடி போற்றி வணங்கினார். பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டு திருமாணிக்குழி என்னும் சிவத்தலத்தை அடைந்தார். அவ்வூர் சரித்திரச் சிறப்புடையதாகும். போர்வலித் தோள்கள் படைத்த மாவலிச் சக்கரவர்த்தி யாகம் செய்தபோது, செங்கண் திருமால் வாமன அவதாரமெடுத்து யாகச் சாலையில் தோன்றி, மூன்று அடி மண் தானம் கேட்டார். அத்தகைய திருமால் சிவனைப் பூசித்து வழிபட்ட திருத்தலம்தான் திருமாணிக்குழியாகும். அங்குள்ள பரம்பொருளை நம்பியாரூரர் பணிந்து திருவடி வணங்கிவிட்டு, திருத்தினை நகருக்குச் சென்றார். அங்கு பணிந்தவருக்கு வரம் தரும் பரமசிவனை வணங்கினார். பிறகு இன்னிசைத் தமிழ் பாடிக்கொண்டே வன்தொண்டரான சுந்தரர் பயணம் புறப்பட்டார்.

யாழ் ஒலியும் மத்தளத்தின் ஒலியும், நாத ஒலியும், வேத ஒலியும், அரம்பையரின் கீத ஒலியும் ஓயாமல் முழங்கும் சிதம்பர நகரின் எல்லைப் புறத்தை நம்பியாரூரர் அடைந்தார். இரத்தின மாலையும் பூமாலையும் அணிந்த அச்செம்மல் அங்கு பறவைகளின் ஒலிகளைக் கேட்டார். வெண்சங்குகள் நிறைந்த தடாகங்களிலே குளிர்ச்சியான தாமரை மலர்களை அழகான கெண்டை மீன்கள் அசையச் செய்வதையும் அருகிலுள்ள விசாலமான வயல்களில் விலாங்கு மீன்கள் தாவிப்

பாய்வதையும் கண்டார். நீர்ப் பறவைகள் நீந்துவதனால் நீரில் ஒலி எழும்புவதையும் கண்டார். தில்லையம்பதியின் எல்லையைத் தொழுதாலே, ஆணவம், கர்மம், மாயை ஆகிய மும்மூலங்களையும் நீக்கி முக்தியருளுமாகையால் அத்தில்லைநகரின் எல்லையை நம்பியாரூரர் வணங்கினார். நாகமரங்கள், மாமரங்கள், மகிழ மரங்கள், தென்னை, இலவங்கம், நாரத்தை, கமுகம், குங்குமம், குளிர் வாழை, இலுப்பை முதலானவை தழைத்திருக்கும் சோலைகள் பலவற்றை அவர் கண்டார்.

மேகக் கூட்டங்கள் மலிந்திருக்கும் அச்சோலைகள் மீது குயில்கள் குவிந்து கூவின. போக பூமியைவிடச் சிறந்து பொலிவுறும் வயல்கள் பலவற்றையும் அவர் கடந்து நகருக்குள் புகுந்தார். வன்னி, கொன்றை, சுரபுன்னை, சண்பகம், ஆத்தி, முருக்கம், செருந்தி, மந்தாரம், கோங்கு, குரவம், வாசனைப் புன்னை, கொடிமல்லிகை, பாதிரி, வில்வம், சிறு சண்பகம், மரு, மல்லிகை, முல்லை, நந்தியாவர்த்தம், அலரி முதலானவை நிறைந்த நந்தவனங்கள் பலவற்றையும் அவர் வணங்கிச் சென்றார். ஏழு உலகமும் உய்ய எம்பிராட்டி சிவகாமவல்லி கண்டு மகிழத் தனிப் பெரும் நடனம் புரியும் நடராஜரின் சிலம்பொலியைப் போற்றும் நான்மறைப்பதியை நம்பியாரூரர் கண்டார். மேகங்கள் ஏறும் உயர்ந்த மதில்களையும் குளிர்ச்சியான அகழிகளையும் எதிரே கண்டு மகிழ்ந்தார். தூக்கிய திருவடியாகிய தாமரை மலரின் தேனை நுகரவேண்டும் என்னும் ஆசையோடு வேதங்களாகிய வண்டுகள் சுற்றுப்புறங்களில் முழங்கின. மதிலைச் சுற்றி, ஆழமான அகழிகளில் இருக்கும் தாமரை மலர்களில் உள்ள வண்டுகள் அருகே மலர்ந்திருக்கும் தாழம்பூக்கள் தோறும் சென்று சென்று, அப்பூக்களில் மூழ்கி அவற்றில் நிறைந்திருக்கும் வெண்ணிற மகரந்தப் பொடியைப் பூசிக்கொண்டு பாடிக் களித்தன. அதனால் அவை திருநீறு பூசிய சிவனடியார்கள் போலத் தோற்றமளித்தன. அத்தகைய இயற்கைக் காட்சிகளை யெல்லாம் இறைவனருளாக நம்பியாரூரர் கண்டு களித்தவாறு எதிரே சென்றார்.

வெண்கொடி ஆட, மணி ஒலி முழங்க, தில்லையின் நான்கு திசைகளும் பிருமதேவரின் நான்கு முகங்களைப் போல் திகழ்ந்தன. ஊருக்கு அழகாக விளங்கும் நான்கு திருவாசல்களில் வடதிசைத் திருவாசலுக்கு வன்தொண்டர் வந்து சேர்ந்தார். அங்கு சிவனடியார்கள் பலர் அன்போடு வந்து நம்பியாரூரரை எதிர்கொண்டு வரவேற்று வணங்கினார்கள். ஆரூரரும் அவர்களை எதிர் வணங்கிப் பிறகு, நடராஜப் பெருமானைக் கும்பிடும் விருப்போடு

திருவீதியில் புகுந்தார். அவ்வீதியில் பொன் வண்ணமாகத் திகழும் மணிமாளிகைகள் பல நெருங்கியிருந்தன.

அங்கு நான்கு மறைகளும் முழங்கும் பக்கத்தில், நடன அரங்குகளில் நடனமாடும் ரம்பையரின் சதங்கை ஒலிகள் முழங்கும். மேகம் தவழும் வானத்தில் ஐவகை வாத்தியங்கள் முழங்கும். வாசமாலைகளில் வண்டுகள் முழங்கும். பொங்கும் அன்பின் அருவி போலக் கண்களில் நீர் பொழிய சிவனடியார்கள் எம்பிரானைப் போற்றியிசைக்கும் ஒலிகளும் எங்கும் முழங்கும். வெண்ணிலா தங்கும் சிவபெருமானின் விரிசடையில் கங்கையும் முழங்கும். தேவ தேவர் வாழும் அத்தகைய திருவீதி அது!

குபேரப்பட்டணத்தைப் போல அவ்வீதியிலுள்ள மாடமாளிகைகள் வானோங்கி நிற்கும். அம்மாளிகைகளில் நெருங்கியிருக்கும் கொடிகள் வானத்தை உண்பனபோல் இருக்கும். யோக சிந்தையுள்ள வேதியர்கள் வளர்க்கும் ஓமப் புகை வானத்தை எட்டி மேக வரிசைகளினூடே, மின்னலெனத் தோன்றி மறையும்! கோபுர நாசிகளின் பக்கங்களில் மயில்கள் தோகை விரித்தாடும். ஆகுதி செய்வதற்குரிய யாக குண்டங்கள் தோறும் நெருப்பு சுடர் வீசும். மணிவாசல்களிலெல்லாம் மலர் மாலைகள் கட்டப்பட்டுத் தொங்கும். திண்ணைகளிலெல்லாம் மங்கலக் கலசங்கள் தென்படும். தேர் வரிசைகளிலெல்லாம் பெருமை ஒளி வீசும். சத்திரங்களிலெல்லாம் செந்நெல் சோறு மலைபோல் குவிந்திருக்கும். தண்ணீர்ப் பந்தல்களிலெல்லாம் குளிர்ச்சியான நீர் வகைகள் நிறைந்திருக்கும். நீண்ட வீதியெங்கும் தேவர் கூட்டம் நிறைந்திருக்கும்.

உலகனைத்திலும் உள்ள எல்லையற்ற அழகையெல்லாம் தில்லையில் காணலாம். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் முதலான புண்ணியப் புனித அன்பர்கள் பலரால் முன்பு புகழ்ந்து பாடப்பெற்ற புண்ணிய ஸ்தலம் அது! அண்ணல் நடராஜப் பெருமான் ஆனந்தக் கூத்தாடும் தில்லையம்பலத்தைச் சுற்றிப் பொன்போல் பிரகாசிக்கும் திருவீதியை நம்பியாரூரர் வணங்கினார். காதலன்பர்களும், கணநாதர்களும் தடையின்றிப் புகும் பொற்கோலத் திருவாசலை நம்பியாரூரர் வணங்கி, தலைமீது குவிந்த கைகளோடு உள்ளே நுழைந்தார். செம்பொன் மாளிகையென மின்னலிடும் பேரம்பலமான மேருவை முறைப்படி நம்பியாரூரர் வலம் வந்து வணங்கினார். பிறகு வணங்கிய மகிழ்ச்சியோடு உள்ளே புகுந்தார். பிரணவ வடிவமான திருச்சிற்றம்பலத்தின் முன்னேயுள்ள திரு அணுக்கள் திருவாயிலையும் அவர் அடைந்தார். வையம் பொலிவுற, மறையெனும் சிலம்பு ஒலிக்க, திருமாலும் பிரமனும் தேட,

ஐயன் சிவபெருமான் சிதாகாசத்திலே ஆனந்தக் கூத்தாடும் அழகை ஆரூரர் கண்டார். கும்பிட்ட கைகள் மலர, கண் குளிர, மனங்குளிர, கூத்தப் பெருமானை ஆரூரர் தரிசித்தார். உள்ளத்தில் அன்புணர்ச்சி உந்தி, அந்தக்கரணத்தை இயக்கத் திருக்களிற்றுப் பாடி அருகே தவப்பெரியோர் வந்து தொழுது எழுந்தார். பொன்னம்பலத்தில் ஆடும் பெருமானை அவர் தரிசித்தபோது, அவருடைய ஐம்புலன்களின் அறிவையெல்லாம் அவருடைய கண்களே ஒருங்கே கவர்ந்து கொண்டன. மனம், சித்தம், புத்தி, அகங்காரம் எனும் அளப்பரும் அந்தக்கரணங்கள் நான்கும் சிந்தை ஒன்றிலேயே லயித்தன. இராக்கதம், தாமசம், சாத்துவிகம் எனும் மூன்று குணங்களும் சாத்வீகம் என ஒன்றேயாகி நின்றன. பிறை சூடிய பெருமான் ஆனந்த எல்லையில் ஆடும் தனிப்பெரும் கூத்தைக் கண்டதால் பேரின்ப வெள்ளம் பொங்கியது. அந்த வெள்ளத்தினுள் நம்பியாரூரர் மூழ்கி மாறிலா மகிழ்ச்சியிலே மலர்ந்து நின்றார்.

பிறகு அவர், ‘‘எம்பெருமானே! வெண்ணிலா மலர்ந்த விரிசடை அண்ணலே! உம்முடைய திருநடனத்தைக் கும்பிடப் பெற்ற எனக்கு, இந்த மண்ணுலகில் எடுத்த பிறவியே பெரும் இன்பம் தருவதாயிற்று!’’ என்று கண்களில் ஆனந்த அருவி நீர் சொரிய, தலைமீது கைம்மலர் குவித்து ஒரு பதிகம் பாடி வாழ்த்தி வணங்கினார். அப்போது பாடிப் பரவசமாய் இருந்த நம்பியடிகளின் காதில் விழும்படி, ‘‘அன்பனே! பொன்னியாறு பாயும் வளத்தால் வயல்கள் பொலிவுறும் திருவாரூரில் நம்பால் வருக!’’ என்னும் அருள்ஒலி வானத்தில் கேட்டது. வன்தொண்டர் அதை உணர்ந்தெழுந்தார். ஆடல் பெருமானின் பேரருளினால் திகழ்ந்த அக்கட்டளையைத் தம் தலைமீது கொண்டு, கைகள் கும்பிட்டபடி புறப்பட விடைபெற்றுக்கொண்டு, பொன்னம்பலத்தை வலம் வந்து வணங்கி வெளிப்பட்டு, எழுநிலைக் கோபுரம் கடந்து சென்றார். பிறகு அவர் நின்று கோபுரத்தை நோக்கி, பூமியில் விழுந்து வணங்கினார். பிறகு மங்கலம் நிறைந்த வீதிவழியே அவர் நடந்து தென் திருவாசலைக் கடந்து, தூரத்திலே வந்து திரு எல்லையைக் கும்பிட்டார்.

பிறகு சிவபெருமானின் திருவருளை மனதில் நினைத்துக் கொண்டே கொள்ளிட நதியை நம்பியாரூரர் கடந்து சென்றார்.

நம்பியாரூரரும் மற்ற சிவனடியார்களும் சிவநாமத்தைக் கூறிக்கொண்டே திருக்கழுமலம் என்னும் சீகாழி நகரின் எல்லையை அடைந்தனர். இத்தலம் இவ்வுலகம் முழுவதிலும் சிறந்த புகழ் வாய்ந்தது. உமாதேவியாரின் திருமுலைப்பாலாகிய



அமுதத்தை உண்டு வளர்ந்த திருஞானசம்பந்த சுவாமிகள் பிறந்தருளும் பேறு பெற்ற தலமாகும் சீகாழி!

‘‘ஆளுடைய பிள்ளையான திருஞானசம்பந்தர் திரு அவதாரம் செய்த, இப்பெருமை மிகுந்த சீகாழியை நான் மிதியேன்!’’ என்று ஆரூரர், அந்த ஊரின் எல்லைப்புறத்தை வணங்கி வலம் வந்தார். அப்போது, சிவபெருமான் உமாதேவியாருடன் இடபவாகனத்தில் தோன்றி நம்பியாரூரருக்கு எதிரே காட்சி தந்தருளினார். வன்தொண்டர் பேரன்பு கொண்டு நின்று இறைவனைக் கும்பிட்டு, ‘‘அலைகடலில் தோணிபோல் மிதந்த திருத்தோணிபுரத்தாரை நான் கண்டு கொண்டேன். கயிலையினில் வீற்றிருந்தபடி!’’ என்று பண்ணிசையோடு ஒரு திருப்பதிகம் பாடினார். பிரளய காலத்திலும் சீகாழி அழியாமல் ஊழிப் பெருவெள்ளத்தில் தோணிபோல் மிதந்ததால் அதற்குத் தோணிபுரம் என்றொரு பெயரும் உண்டு.

தோணிபுரப் பெருமான் காட்சி கொடுத்து மறைந்ததும் நம்பியாரூரர் மேற்செல்ல விரும்பி சீகாழி நகரை வணங்கிவிட்டு, திருக்கோலக்கா என்னும் தலத்தை அடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கி செந்தமிழ்ப்

பாமாலைகள் பாடினார். பிறகு அவர் அங்கிருந்து திருப்புன்கூரை அடைந்து அங்குள்ள சிவலோகநாதரைப் பேரன்புடன் அடிபணிந்து தமிழ் பாடி வாழ்த்தி வணங்கினார். பிறகு வழியில் உள்ள சிவத்தலங்கள் பலவற்றைத் தரிசித்துக் கொண்டு மணம் நிறைந்த காவிரிக்கரையை அடைந்தார். அங்கு காவிரியாற்றில் தீர்த்தமாடி திருமயிலாடுதுறை என்னும் மாயவரத்தில் குடி கொண்டிருக்கும் மயூரநாதரை வழிபட்டார். பின்னர் வழியில் உள்ள சிவத்தலங்களான திருஅம்பர்மாகாளம், திருப்புகலூர் முதலான திருத்தலங்களை வணங்கிவிட்டு, திருவாரூர் எல்லையை வந்தடைந்தார்.

அப்பொழுது பிறை நிலவையும் கங்கையையும் சடை முடிமேல் அணிந்த தியாகேசப் பெருமான் திருவாரூரில் வாழும் பெரியோரின் கனவிலும், அடியார்களின் கனவிலும் தோன்றி, ‘‘நாம் அழைத்ததால் நம்பியாரூரன் ஆராத காதலோடு இவ்வூருக்கு வருகின்றான். அவனை எல்லோரும் மகிழ்ந்து எதிர் கொண்டு அழைத்து வாருங்கள்!’’ என்று ஆணையிட்டு மறைந்தார். தியாகேசப் பெருமான் கூறியருளியதைக் கேட்ட திருத்தொண்டர்கள் அப்பெருமானது கட்டளையை மற்றவர்களுக்கும் தெரிவித்து, ‘‘எம்பிரானார் அருள்தான் இருந்த விதம் இதுவானால் அவரல்லவோ நம் தலைவராவார்!’’ என்று எழுந்த அன்போடு தேவர் உலகமே இறங்கி எதிர் கொண்டழைக்க வந்ததைப் போல் யாவரும் நம்பியடிகளை எதிர் கொண்டழைக்கப் புறப்பட்டுச் சென்றார்கள். மாளிகைகளையும், மண்டபங்களையும் வாசமிக்க மாலைகளாலும் மாவிலைத் தோரணங்களாலும் ஆலவட்டக் கொடிகளாலும் வாழை மரங்களாலும் அலங்கரித்தார்கள். பசும் பொன் குடங்களையும் ஒளிவீசும் மணி விளக்குகளையும் உயர்ந்த வாயில்தோறும் வரிசையாக வைத்தார்கள். அழகான திண்ணைகளைத் தூய சந்தனக் குழம்பிட்டு மெழுகி, பொன்னாற் செய்யப்பட்ட குடங்களில் கும்பமிட்டு பொன்னாலான பொடிகளையும், முத்து மணிகளையும் பரப்பினார்கள். இதழ்கள் விரிந்த வாசனை மலர்களால் தொடுக்கப்பட்ட மலர் மாலைகளைக் கொண்டு பூப்பந்தர்கள் அமைத்தார்கள். வீதிகளில் புழுதி அடங்கும்படியாக வாசனைப் பனிநீரை அதிகமாகத் தெளித்தார்கள்.

மங்கல கீதம் பாட, மழை மேகம்போல் வாத்தியங்கள் முழங்க, திண்ணைகள்தோறும், செங்கயல்விழிப் பெண்கள் நடனம் பயில, திருவாரூர் வாசிகள் நம்பியாரூரரை வரவேற்கத் தயாரானார்கள். நகர் மதிலின் திருவாயிலுக்கு வெளியே அடியார்கள் எல்லோரும் ஒருங்கு சேரவந்து நம்பியாரூரரை எதிர் கொண்டழைத்தனர். தம்மை வரவேற்று வணங்குபவர்கள் முன்னால், வன்தொண்டர் கைகூப்பிக் கும்பிட்டு நின்று, சிந்தை

களிப்புற வீதியினூடே செல்லும் திருத்தொண்டர்களை நோக்கி, "எந்தை இருப்பதும் ஆரூர்! எவர் எம்மையும் ஆள்வரோ, கேளீர்" என்னும் சந்த இசைப்பதங்களைப் பாடினார்.

"சந்தம்பல அறுக்கில்லேன்; சாந்தவர் தம் அடிச்சாரேன்;
முந்திப் பொருவிடை ஏறிமூவுலகும் திரிவானே
கந்தம் கமழ் கொன்றை மாலைக் கண்ணியன்
விண்ணவர் ஏத்தும்
எந்தை இருப்பதும் ஆரூர்! அவர் எம்மையும்
ஆள்வரோ, கேளீர்!"

– சுந்தரர் தேவாரம்,

இவ்விதம் பாடியவாறே தியாகேசப் பெருமான் கோயிலின் திருவாயிலை நம்பியாரூரர் அடைந்தார். வானோங்கி நீண்டிருக்கும் அத்திருவாயிலை நோக்கி, மண்ணுற விழுந்து ஐந்துறுப்பால் வணங்கினார்; மாலைகள் தூங்கும் தேவாசிரிய மண்டபத்தைத் தொழுதார். ஊனையும் உயிரையும் உருகச் செய்யும் பேரன்பு கொண்டு, தம்முடைய கைகளைத் தலைமேல் கூப்பியவண்ணம் தியாகேசப் பெருமானின் மூலட்டானத்து திருமாளிகை வாசலில் புகுந்தார். அங்கு புற்றிடங்கொண்ட பழம் பெருமானை, பூங்கோயில் மேவிய பிரானை, யார்க்கும் பற்றிடமாகிய பரம்பொருளை, பார்வதி பாங்கனை, பங்கயச் செல்வியின் அர்ச்சனைக்குப் பாத்திரமாகி அருள்புரிந்த அண்ணலைத் தரிசித்து நம்பியாரூரர் மண்மீது வீழந்து வணங்கினார். அதனால் நற்றமிழ் நாவலூரரான அவர் இவ்வுலகில் மனிதப்பிறவி எடுத்ததின் பயனைப் பெற்று மகிழ்ந்தார். அன்பு பெருக, உள்ளம் உருகி அலைய, அட்டாங்கமாகவும் பஞ்சாங்கமாகவும் வணங்கியெழுந்து, முடிவிலாத தெய்வீகக் காதல் முதிர்ந்து ஓங்கி, ஐம்புலன்களும் ஒன்றி நாயகன் சேவடி எய்தப் பெற்று, அதன் இன்ப வெள்ளத்திடை மூழ்கி நின்றார். அவ்வாறு நின்றவாறே வன்தமிழ் மாலை பாடினார்.

அப்போது தியாகேசப் பெருமானின் திருவருளினாலே, "நம்மை உனக்குத் தோழனாகத் தந்தோம்! நாம் முன்பு உன்னை தடுத்தாட் கொண்டபோது, திருமண மன்றலில் நீ கொண்டிருந்த மணக் கோலத்தையே என்றும் நீ புனைந்து, உன் காதல் வேட்கை தீர வாழ்ந்து மண்மீது விளையாடுவாயாக!" என்று ஒரு வான் ஒலி ஆரூரர் கேட்கும்படி எழுந்தது.

அந்த அருள் வாக்கைக் கேட்ட நம்பியாரூரர், "என்னை ஆட்கொள்ள வந்த அருமறையனே! ஆரூர் அமர்ந்த

அருமாமணியே! பார்வதி பாங்கனே! உன்னுடைய அளப்பரிய கருணையை என்னென்று கூறுவேன்? இன்று நாயேனையும் ஒரு பொருளாக எண்ணி தாமரைப் பாதம் தந்தது உன் பெருங் கருணையல்லவா?'' என்று தியாகேசப் பெருமானைப் பலவாறாகவும் வாழ்த்தி வணங்கினார். தம்பிரானையே தோழனாகப் பெற்ற உள்ளக் களிப்போடு வெற்றிக் காளைபோல் நம்பியாரூரர் நடந்து வீதிவிடங்கப் பெருமான் முன் சென்று தொழுது துதித்து திருமாளிகையை வலம் வந்தார். அன்று முதல் அடியார்களெல்லாம் நம்பியாரூரரை ''தம்பிரான் தோழர்'' என்று அழைப்பாராயினர். தம்பிரான் தோழரான சுந்தரர் தம் இறைவரின் கட்டளைப்படித் திருமணக் கோலம் பூண்டு, சைவப் பொலிவிற்குரிய விபூதி ருத்திராக்கங்கள் புனைந்து, சந்தனமும் மணிமாலையும் பூமாலையும் அணிந்து திருமேனி மேலும் மேலும் அழகு பொலிவுறும்படி அலங்காரங்களெல்லாம் செய்துகொண்டு தவ மன்னராகத் திகழ்ந்தார். புற்றிடங் கொண்ட பெருமானைத் துதித்துப்பாடி, இன்ப வெள்ளத்தில் திளைத்தும் வந்தார்.



முன்பு திருக்கயிலையில் பார்வதி தேவியாருக்குச் சிறப்பாக உரிமைத் தொண்டு புரியும் பாங்கிமாரான கமலினி, அனிந்ததை என்னும் இரு பெண்கள் நந்தவனத்தில் பூப்பறிக்கும்போது ஆலால சுந்தரரின்

காதலுக்குப் பாத்திரமானவர்களல்லவா? அவ்விரு சேடிமாரில் கமலினி என்பவர் திருவாரூரில் வந்து அவதரித்தார்.

உருத்திர கணிகையரான பதியிலார் குலத்தில் கதிர்மணி பிறந்ததுபோல் கமலினி தோன்றினார். (பதியிலார் குலத்தை தேவதாசி இனத்தினர் எனக் கூறுவாரும் உள்ளனர். ஆனால் அக்காலத்திய கணிகையர் ஒழுக்கம் பேணி, கடவுளன்பில் கருத்தூன்றி தொண்டு புரிபவர்கள். உருத்திர கணிகைமார் சிவபெருமானையே பதியாகக் கொண்டு சிவத்தொண்டு புரிய உறுதி கொண்ட பெண்மணிகள், ஆண்டவனைத் தவிர அவர்களுக்கு வேறு பதியின்மையால் அவர்கள் பதியிலார் என்றழைக்கப் பட்டார்கள்.)



அந்தப் பதியிலார் குலத்தில் தோன்றிய கமலினி என்னும் பாவைக்கும் பரவையார் என்னும் பெயரை திருவாதிரை நன்னாளில் சூட்டினார்கள். அந்தப் பரவையாருக்குச் சுற்றத்தார்கள், 'குழந்தை சுகமாக வாழவேண்டும்' எனக் காப்பிட்டு, மாதங்கள் தோறும் ஒவ்வொரு பருவத்திற்குரிய மங்கல விழாக்கள் கொண்டாடினார்கள். அறிவில் மிக்காரோ, ''வரம் தரு மங்கை இங்கு வந்தனள்!'' என்று அகம் மகிழ்ந்தார்கள்.

பரவையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து தளர் நடைப் பருவம் பயின்றார். ''மான்களில் இளம் பெண்மானோ, தெய்வ மலரின் அரும்போ, தேனின் இளம் பதமோ, இளம் பவளக் கொடியோ, வெண்ணிலவின் இளம் பிறைக் கொழுந்தோ, காமன் தான் இளம் பருவம் கற்கும் தனி இளம் வில்லோ?'' என்று கண்டவர்கள் நினைக்குமாறு பரவையாரின் இனிமையான அழகு நாளுக்கு நாள் வளர்ந்து பொங்கியது. உமையம்மையிடம் பரவை கொண்டிருந்த பேரன்பும், நாள் தோறும் வளர்ந்து வந்தது. கழங்கு, அம்மானை, பந்து, ஊசல், முதலிய பெண்களுக்குரிய விளையாட்டுகளிலும், இனிமையான தமிழிசைப் பாட்டுக்களைப் பாடுவதிலும் இமயக் கொடியான பார்வதி தேவியின் பாதங்களை நினைத்து, அன்புருகப் பாடுவதிலும் பரவையார் சிறந்து விளங்கினார். இவ்வாறு பரவையார் தன் குழந்தைமைப் பருவமும், பேதமைப் பருவமும் நீங்கி, அள்ளுவதற்கு அமைந்த அழகோடு மங்கைப் பருவமும் அடைந்து, மன்மதனின் புதுமைப் பொருட் குவியலையும் வனப்பங்களையும் பெற்றார். உள்ளத்திலே மெய்மைத் தன்மையும் முன்னைய உணர்வும் தோன்ற வாழ்வு நடத்தி வந்தார்.

ஒரு நாள் பூங்கோயிலில் குடிகொண்டிருக்கும் சிவபெருமானின் பூங்கழலைப் பேரன்போடு வணங்குவதற்காக வழக்கம்போல பரவை நாச்சியார் புறப்பட்டார். பக்கத்திலே தோழிகள் புடைசூழ தெருவிலே தன் அழகின் படரொளி சூழ, தேன் மணக்கும், கூந்தலின் வாசனை திசையெங்கும் சென்று சூழ பரவை நாச்சியார் நடந்து சென்றார். சிலம்புகள் அணிந்த காலடிகள், ''இந்த மண் உலகத்தை வென்று அடிமைப் படுத்தினோம்!'' என்று ஆரவாரம் இட மணிமுத்து ஆபரணம் அணிந்த அழகான இடை இந்த உலகை வென்ற துணிவு கொண்டு ஆரவாரமிட, கருமேகத்தை சுருள் கூந்தல் வென்றதால், ''விண்ணுலகமும் எனக்குப் பணியும்!'' என்று வண்டுகள் ஆரவாரமிட, பரவை நாச்சியார் நடந்து சென்றார். அப்போது தம்பிரான் தோழரான நம்பியாரூரர் புற்றிடங்கொண்ட பெருமானை போற்றித் தொழுது விட்டுத் தம் பரிவாரத்தினர் புடைசூழத் திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்போது நல்வினை கூட்ட, பரவையெனும் பாவையை நம்பியாரூரர் கண்டார். சிரிப்பு குவிந்து மின்னும் சிவந்த வாய்; வில்லென வளைந்த நெற்றி; வேல் போன்ற கூர்மையான கண்கள்; பிரகாசமான ஆபரணங்கள்; இத்தனையும் ஒருங்கே வாய்ந்த பரவையாரின் அழகு வடிவத்தைப் பார்த்துப் பார்த்து நம்பியாரூரர் பரவசமடைந்தார். ''இந்தப் பெண்மணி யார்? விரும்பியதையெல்லாம் வரையில்லாமல் அள்ளிக் கொடுக்கும் தெய்வீகக் கற்பக மரத்தின் பூங்கொம்போ? காமன் தன்

பெருவாழ்வோ? அழகான புண்ணியத்தின் புண்ணியமோ? புயற்கூந்தல் சுமந்து விற்புருவமும், குவளைக் கண்ணும், பவளவாயும், மலர் முகமும், நிலா நெற்றியும், கொடியிடையும் ஒருங்கே பூத்து நிற்கும் வாசனைப் பூங்கொடியோ? அற்புதமோ? சிவனருளோ? நான் அறியேன்!'' என்று நம்பி யாரூரர் அதிசயித்தார்.

''ஆகா! இப்பேரழகு வடிவத்தை யாரால்தான் படைத்திருக்க முடியும்? அனைத்தையும் படைக்கும் அந்த நான்முகப் பிரமன்தான் இத்தகைய பேரழகை ஓவியமாகக்கூட வரைய முடியாமல் தன் உள்ளத்தால் உருவகப் படுத்தியிருப்பான்! அவன் மிகவும் சிரமப்பட்டு உருவாக்கிய மணி விளக்கோ இவள்? மூவுலகிலுள்ள நற் பயன்களெல்லாம் ஒருங்கே ஓர் உருவாய்த் திரண்டு என் கண்முன் இப்பெண்ணாக நின்றது'' என்று நம்பியாரூரர் நினைத்து பரவை நாச்சியாரைப் பார்த்துக் கொண்டே நின்றார்.

அவ்விருவருக்குமிடையே காதற்போர் தொடுக்க மன்மதனாரும் படைதாங்கி நடு நின்றார்!

வேந்தர் கோலமும் தவக்கோலமும் ஒருங்கே பூண்டு பிரகாசிக்கும் அறிஞரான நம்பியாரூரரைப் பரவை நாச்சியாரும் தன் கண் கடை புரள, கயல் விழி வியக்க, பண்டைவிதி கூட்டக் கண்டு மயங்கினார். ஆண்டர் பிரான் திருவருளால் அயலார் அறியாதபடி மனம் விரும்பி நின்றார். நம்பியின் திருமேனி கண்கொள்ளாப் பேரழகு பொழிவதையும், ஒளி விரிப்பதையும், விண் கொள்ளாப் பேரொளியாய் நிற்பதையும் நாச்சியார் பரவை பார்த்துக் கொண்டே நின்றார். அந்த சுந்தரியைச் சுந்தரரும் எதிர்நோக்கவே, அம்மெல்லியல் மங்கையார் தன் எண்ணத்தில் அடங்காத காதல் கொண்டார். இதற்கு முன் எப்போதுமே அடைந்திராத, அத்தகைய வேட்கையின் புதுமை உணர்ச்சியானது பெண்மைக்கே இயல்பான நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு எனும் நாற்குணங்களை அமுக்கிக் கொண்டு வளர்ந்தெழுந்தது. பரவை நாச்சியார் காதல் உணர்ச்சியோடு நம்பியாரூரரைப் பார்த்து, ''இவர் என் முன்னே வந்து தோன்றிய திருமுருகனோ? பெருகும் ஒளியால் தன்னிகரற்ற காமதேவனோ? மந்திர ஜால வித்தை புரியும் வித்தியாதரனோ? மின்னிவிடும் செஞ்சடைப் பெருமானின் மெய்யருள் பெற்றுள்ளவரோ? திரியாத என் மனதையும் திரித்த இவர் யாரோ?'' என்று நினைத்தார். அண்ணல் நம்பியாரூரரிடம் அளவு கடந்த காதலினால் பரவை நாச்சியாரின் நாணம் முதலான உள்நிறைக் குணங்கள் நான்கும் ஒருபுறம் சாய்ந்தன என்றாலும், அந்தப் பெண் மலர்ப் பூங்கொடி சிவ நேசத்தால்

தன் மனதை ஓரளவு கட்டுப்படுத்தி, கண்ணுதல் பெருமானை வழிபடும் பேரன்பைக் கைக்கொண்டு பூங்கோயிலுக்குள் செல்லலானார். காலதேவனோ அப்பாவையின் அருகில் தன் கரும்பு வில்லை வளைத்து, ஐம்புலன்களையும் கவரும் பஞ்சபாணங்களைத் தொடுத்து எங்கும் தடை செய்யலானான். அதனால் பரவை நாச்சியார் பெரும் மடப்பம் வரப்பெற்று தத்தளித்தார். அவரது தேன்மலர் கூந்தல்மீது சிறைவண்டு கலந்து ரீங்காரமிட்டு வேட்கையை அதிகப்படுத்த, அவர் பூங்கோயில் அமர்ந்த பிரானின் பொற்கோயிலினுள் போய்ப் புகுந்தார்.

அதைக் கண்டதும் வன்தொண்டரான நம்பியாரூரர், ''என் மனதைக் கவர்ந்து கொண்டு செல்லும் அந்த மங்கை, மயிலின் இயல்புடையவள்! இனிமையான கொவ்வைக்கனி போன்ற வாயிதழ்கள் வாய்ந்தவள். இளங்கொடி போல் இளமையும் மென்மையும் பொருந்தியவள்!'' என்று நினைத்து, ''அவள்தான் யார்?'' என்று கேட்டார். அதற்கு அருகில் நின்றவர்கள், ''அவள்தான் பெண்களில் சிறந்தவளான நங்கை பரவையார்! விண்ணகத் தேவர் தரத்தினருக்கும் மேற்பட்டவள்!'' என்று கூறினார்கள்.

பெயரைக் கேட்டதும் நம்பியாரூரர் பெருங்காதலினால் ''பரவை! பரவை!'' என்று பிதற்றத் தொடங்கினார். ''இவள் பெயரோ பரவை! பெண்மையிலோ பெருங்கடல் போல் சிறந்த பரவை! அழகிலோ தேவர் அவை விரும்பும் ரம்பையரைவிட மேன்மையான பரவை! ஒளிவீசும் இவளுடைய முத்துப் பற்களின் வரிசையோ முல்லை அரும்புகள்! திருமகளும் இவளிடம் பரவிப் பொலிவுறும் பேரழகுப் பரவை! இவளுடைய திருவுருவத்தின் மென்மைச் சாயல் எனும் அழகுப் பரப்பிடை அகப்பட்டுக் கொண்ட என் ஆசையோ ஏழு பரவையாகும். (ஏழு கடல்களாகும்!)'' என்று இதுபோல் பலவும் நினைத்து தம்பிரான் தோழரான சுந்தரர் பெரிதும் காதல் வயப்பட்டு மயங்கினார். சிவபெருமானின் அருள் வழியில் முன்தொடர்ந்து வரும் காதல் முறைமையினால் நம்பியாரூரர் கட்டுண்டு, ''நல்லது! என்னை ஆட்கொண்ட எம்பிரானிடமே செல்வேன்!'' என்று உள்ளூர மகிழ்ந்து தேவர்பிரானின் கோயிலுள் புகுந்தார்.

அதற்குள் பரவை நாச்சியார் வன்மீக நாதப் பெருமானை வலம் செய்து வணங்கி விட்டு, திருக்கோயிலின் வேறொரு புறமாகப் புறப்பட்டார். தம்பிரான் தோழரான நம்பியாரூரரோ, வேகமாகப் பெருகும் காதலினால் மெல்லியல் பரவையாரை அடைய விரும்பி, பாம்பு மாலை புனைந்த பரமசிவனாரை அடிபணிந்து தொழுது, ''என் இன்னுயிர் அன்னமான பரவையார் இங்கே திருநீலகண்டப் பெருமானை விட்டு நீங்கி

எங்கே எவ்வாறு சென்றாள்?'' என்று வியந்தார். சிவந்த வாயிதழ்களும் வெண்முத்துச் சிரிப்பும் கொண்ட பூங்கொடியைத் தேடியலையவும் ஆரம்பித்தார்.

''பந்த பாசமாம் வினைப்பற்று அறுக்கும் சிவபெருமானிடம் நான் மிகுந்த ஆசை கொண்டுள்ளேன்! அந்த ஆசை மேலும் ஓர் ஆசையை ஊட்டுவதுபோல் பரவை ஓர் அழகுருவமாகத் தோன்றினாள்! என் சிந்தை மயக்கமுற ஈசனாரின் அருள் போன்ற பரவை எவ்வழியாகச் சென்றாள்? உம்பர் நாயகனான சிவபெருமானின் திருவடிகளையன்றி வேறு எதையும் நம்பும் விதம் அறியாதிருந்த என்னை நடுங்குறச் செய்து, புதிய மயக்கம் மூட்டி, கொடிபோல் துவண்டு, எம்பிரான் அருள்போல் பரவை எவ்வழியாகச் சென்றாள்? பந்தமும் வீடும் தரும் பரமனின் திருவடிகளையே சதா ஆர்வத்தோடு நினைக்கும் என் சிந்தையிலே, இப்போது பரவை வந்து புதுமயக்கம் தந்து, மான் எனவே விழித்து, எந்தையார் அருள் போல் எவ்வழிச் சென்றாள்?'' என்று நம்பியாரூரர் கூறி மிகவும் ஆற்றாமையோடு, ''என் உயிர் போன்ற பரவை நின்றது எங்கே?'' என்று தேடினார். முத்தாபரணம் பூண்ட இளமைப் பூரிப்பான கொங்கைகளும் வாசனை வீசும் கூந்தலும் கொண்டு வஞ்சிக் கொடிபோல் குலுங்கும் பரவையாரைத் தேடிக் கொண்டே தேவாசிரிய மண்டபத்திற்கு நம்பியாரூரர் வந்து சேர்ந்தார். பரவை நாச்சியாரின் கருங்குவளைக் கண்களே அவரது கருத்தில் மலர்ந்து சிரித்துக் கொண்டிருந்தன! அத்தகைய காதலியை அடைய வேண்டும் என்ற ஒரே ஆசையால் சுந்தரர் வேறு யாரோடும் ஒரு வார்த்தையும் பேசாமல் அயர்ந்திருந்தார். பிறகு அவர், ''என் ஆண்டவனான தியாகேசப் பெருமானே பூவின் மங்கையாம் பரவையைத் தந்தருளி எனக்கு உயிர் கொடுப்பார்!'' என்று மனம் அடங்கினார்.

அப்போது அவரது சிந்தை விரும்பிய இன்னமுதத்தைக் கடலிடைக் கடைந்தெடுத்துக் காட்ட முயல்பவன்போல் சூரியன் தன் ஏழு குதிரை தேரோடும் மேற்றிசைக் கடலில் புகுந்தான். பொய்கையில் பகல் நேரத்தைப் போக்கிய பறவைக் கூட்டங்கள் தங்கள் கூடுகளை நோக்கிப் பறந்து சென்றன. பிரிந்து தனித்திருக்கும் நாயகனும் நாயகியும் மோக நோயால் நடுக்குறத் துன்பம் தரும் மாலை நேரம் வந்து சேர்ந்தது! வானமும் இருண்டது. பஞ்சின் மெல்லடிப் பரவையரான விலை மகளிரின் உள்ளத்தையும், வஞ்சகரின் வல்வினையையும், பரமசிவனின் அஞ்செழுத்தை உணராத அறிவிலிகளின் நெஞ்சையும் போலவே வானம் இருண்டது.

''மாசு மருவற்ற சிந்தையரான வன்தொண்டர் வருந்தினால், வளையும் இடுப்புள்ள பெண்களுக்கு யார்தான் பிழைப்பார்?'' என்று இரவு எனும் நங்கை எழுந்து, வாசனை மலர்கள் அணிந்தவாறு நடந்து புன்முறுவல் பூப்பதுபோல் இருள் வானத்திலே வெண்ணிலாவும் பூத்தது!

அல்லி மலர்கள் சூரிய வெப்பத்திற்கு ஆட்படாமல் சுருங்கி ஒதுங்கி, வெண்ணிலாவின் குளிர்ச்சியான கதிர்க் கரங்கள் தீண்டியதும் மலர்ந்தன. அது கற்புள்ள குடும்பப் பெண்கள் அந்நியரின் மோகத் துன்புறுத்தலுக்கு ஆட்படாமல் வருந்தி, தங்கள் ஆருயிர் நாயகன் கை தீண்டியதும் உள்ளம் மலர்வது போலிருந்தது! வானத்தில் நீளும் வெண்ணிலா அண்டமெலாம் பரந்த பரசிவ அண்ணலின் வெண்ணீற்றுப் பேரொளிபோல் பிரகாசித்தது!

பூங்குளங்களில் பறவையொலிகள் நீங்கிய அந்தி மாலை நேரத்தில், தம்பிரான் தோழரான சுந்தரர் தனித்திருந்தார். பரவையாம் பரவை தந்த படர்பெருங் காதலும் ஆவி சூழ்ந்த திருவருளும் கொண்டிருந்தார்.

அவர் மனமிளகி, ''என் ஆண்டவனின் நெற்றிக் கண் நெருப்பால் எரிக்கப்பட்டு வெந்த காமன் இப்போது ஆண்டவனின் அடியாரான என் முன் உருவெடுத்து வந்து நின்று மோக பாணம் தொடுப்பதோ? எந்தையார் அருள் இவ்வண்ணமோ?'' என்பார். ''வெண்ணிலாவே! பரவைமீது கொண்ட வேட்கையினால் நான் படும் துன்பத்தைக் கண்டும் என்மேல் நின்று நீ நெருப்புக் கதிர்களைத் தூவி நிரப்பலாமா? என்னை ஆண்டவரின் கங்கைச் சடைமுடியில் குடியிருக்கும் குளிர் நிலா நீயல்ல!'' என்பார்.

''ஆழ்கடலே! அடுத்தடுத்து ஆசை அலைகளை அலைத்தெழும் ஆழ்கடலே! என் ஆண்டவருக்கே உன் அலைக்கரங்களால் நஞ்சை எடுத்து நீட்டிய நீ, என்னை என்னதான் செய்ய மாட்டாய்?.... தமிழுடன் பழகிய இனிய தென்றலே! நீ பிறந்தது எங்கள் சிவபெருமானின் பொதிகை மலையிலே! நீ சிறப்பாக வந்தணைந்தது தெய்வத் திருநாட்டின் வயல்கள் சூழ்ந்த தடாகங்களிலே! அப்படியிருக்க, நீ கொதிக்கும் நெருப்பைப்போல் வெப்பம் வீசுகிறாயே! அவ்வாறு வெப்பம் வீசும்படியான பாபச் செயலை, நீ எங்கே பழகினாய்?''

இவ்விதம் ஆரூரர் இன்னும் பல புலம்பிக் கொண்டிருக்கும் போது, காதல் மன்னராகிய அவ்வள்ளலிடம் தன் தனிப்பெரும் உள்ளத்தைப் பறிகொடுத்த அன்னமான பரவை நாச்சியாரின் செய்கையைச் சொல்வோம்.

திருக்கோயிலில் திருநீலகண்டப் பெருமானின் திருவடிகளைப் பரவை நாச்சியார் வணங்கிவிட்டுத் தம் காதலரை முன்னே பெறுபவர் போல் தோழிகள் புடை சூழப் புறப்பட்டார். பெருங்காதலோடு இளமையின் பூரிப்பான தனங்களைத் தாங்கி, அதனால் இடை தளர்வுற நடந்தார். சுந்தரமூர்த்தியை நினைத்த வண்ணம் அவர்மீதே தன் மனம் தனித்துச் செல்ல அதனால் பெரும் மையல் கொண்டு பரவை நாச்சியார், தம் மணி மாளிகைக்கு வந்து சேர்ந்தார்.

சிறிய பாதங்கள் மீது சிலம்புகள் சிறிதளவே ஒலிக்க பரவை நாச்சியார் மெல்ல நடந்து யாரோடும் பேசாமல் ஒதுங்கிச் சென்று, மாளிகையின் மேன்மாடத்தில் ஏறினாா். அங்கு பரகதத் தூண் திகழும் மணித்திண்ணையில் வந்து பொற்கால் பஞ்சணைக் கட்டிலில் ஏறி, வாடாமலர் படுக்கையின்மீது சாய்ந்து ஒளி நிலா முற்றத்திலே தங்கியிருந்தார்.

அப்போது பரவை நாச்சியார் தம் அருகிலிருந்த தோழியின் முகத்தை நேரே நோக்கி, ‘‘நாம் திருவாரூர் தியாகேசப்பெருமானை வணங்கிச் சென்றபோது வீதி வழியே நம் எதிரில் வந்தவர் யார்?’’ என்று கேட்டார்.

அதற்கு தோழி, ‘‘அவரா? திருமாலும் பிரமனும் தேடியும் அடிமுடி காணப்பெறாதவரான சிவபெருமானே அவருக்காக இப்பூவுலகில் அந்தணராய்த் தோன்றி, அப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட ஆதிசைவத் திருத்தொண்டர்! நம்பிரானுக்கு உகந்த நம்பியாரூரர்! தம்பிரானுக்குத் தோழர்!’’ என்றாள்.

அந்த வார்த்தையைக் கேட்டதுமே பரவை நாச்சியார் பரவசமடைந்து, ‘‘எம்பிரான் தொண்டரோ?’’ என்று மனம் பூரித்தார். வன்தொண்டரான சுந்தரர்மீது வைத்த மனப் பூர்வமான காதல் அளவின்றி வளர்ந்து பொங்கியது. அந்தக் காதலின் வேகத்தை பரவை நாச்சியாரால் தாங்க முடியவில்லை. அதனால் நாணம் முதலான நாற்குணங்களும் நீங்க, உயிர் ஒன்றை மட்டும் தன்னுடலில் தாங்கி, தன்னை மறந்தவராய் மெல்லிய இடை துவள, பெருமூச்சு விட்டார்! பிறகு மெல்லிய பஞ்சணைமீது தொப்பென்று விழுந்தார்!

அதைக் கண்ட சேடிகள் பரவை நாச்சியாரின் உடம்பைத் தொட்டுப் பார்த்து, அது கொதிப்பதை உணர்ந்து பதறினார்கள். உடனே நறுமணச் சந்தனக் குழம்பை அள்ளி அள்ளி பரவையின் உடம்பெங்கும் அதிகமாகப் பூசினார்கள். அரும் பனி நீரையும் நாச்சியாரின் உடம்பின்மீது வீசித் தெளித்தார்கள். ஈர இளந்தளிர்களை குளிரக் குளிரப் பரப்பினார்கள். ஆனால்

அவர்கள் செய்த இவையெல்லாம் பெரும் நெருப்பில் நெய் பொழிந்தது போன்றே இருந்தது. அதன்மீது மேலும் ஓம விறகு இடுவது போல், காமதேவனும் தன் கரும்பு வில்லின் வலி மையைக் காட்டி காம வேகமான மலரம்புகளை நாச்சியார் மீது பொழிந்தான். அதன் விளைவாக மலர்மஞ்சத்தில் பரவை நாச்சியார் தூங்கவும் முடியவில்லை. வீசி வரும் தென்றல் காற்று தன் அருகே நெருங்குவதையும் பொறுக்க முடியவில்லை. இராக்காலத்து நீலவானத்தில் வெண்ணிலா பொங்கியெழுவதையும் பொறுக்க முடியவில்லை. தன்னடக்கம் முதலான பெண்மைப் பண்புகளையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை! தோகை மயிலென பரவை நாச்சியார் துள்ளி எழுந்தார். தன் கருங்கூந்தலின் பாரத்தையும் தாங்க முடியாமல் தத்தளித்தார். அந்த நாச்சியாரின் வாய் உதடுகள் அவரையும் மீறித் துடித்தன. இலவம் பூப்போல் இயற்கையாகவே சிவந்திருக்கும் அவருடைய வாய் மெல்லத் திறந்ததும், ஆற்றாமையோடு பரவை நாச்சியார் தம் தோழிகளைப் பார்த்துச் சொல்லலானார்:

''பூ மணக்கும் கூந்தல் அழகிகளே! இது என்ன புதுமை? வானத்துச் சந்திரன் தன் ஒளிக்கிரணங்களை நீட்டி என்னைச் சுட்டெரிக்கிறான். அது போதாதென்று நீங்கள் வேறு சந்தனக் குழம்பாம் நெருப்பைப் பனி நீரோடு கலந்து என் உடம்பெல்லாம் தடவுகிறீர்கள். அடி கொடுமைக்காரிகளே! விடுங்களடி விடுங்களடி! இங்கு வந்த வெண்ணிலாவும், வாசனை வீசிவரும் தென்றல் காற்றும் என்னை எரிக்கவே வந்திருக்கின்றன! ஆனால் நம்பியாரூரரோ...? ஆகாச கங்கையை விரிசடையில் சூடிய எம்பெருமானின் அருள் பெற்றவர்! அவர் எனக்கு அருள் புரியவில்லை!...ம்! இராப்பொழுதோ என்னைப் பொறுத்தவரை சீக்கிரம் விடியாது! தன்னடக்கமும் நாவடக்கமும் என்னிடம் சிறிதும் தங்கியிராது! வாட்டும் தனபாரம் மனபாரங்களிலிருந்து விடுபட ஒருவழியும் அறியேன்! இவ்வளவு வேதனையில் மூழ்கித் துடிக்கும் எனக்கு நீங்களோ உயிர் பிழைக்க ஒரு வழியும் சொல்லாமல் இருக்கிறீர்கள்! பலரும் விரும்பி அனுபவிக்கும் இன்பவேதனை என்பது இதுதானோ? காமக்கணைகள் தொடுத்துப் படையெடுத்துவந்த மன்மதனாரோ என்னைவிட்டு அகலாமல் நிற்கிறார்? பிறை சூடிய பெருமானின் அருள் பெற்ற நம்பியாரூரரோ இதை அறியமாட்டார்! தேரும் கொடியும் திருவீதியெங்கும் ஒளி வீசத் திருவாரூரில் எழுந்தருளிய தியாகேசப் பெருமானே! உம்மைத் தவிர யார்தான் என் துயரை அறிவார்கள்? அடியவர்க்கு எளியவரே! உம் அடியவளான நான் இப்படித் துன்புற்றுச் சோர்வுறுவதுதான் உம் திருவுள்ளமோ? நிலவும் நீரும் சூடிய விரிசடைப் பெருமானே!

உமது விடைமீது ஏறி விரைந்து வருவீராக! உமது அன்பிலார் போல நானோ இந்தத் துன்பப்படுவேன்?''

இவ்வாறு பரவை நாச்சியார் பலவாறும் புலம்பிக் கொண்டிருந்தார். அவரையும் நம்பியாரூரரையும் இப்பூவுலகில் தோன்றும்படி சிவபெருமான் முன்பொரு சமயம் திருக்கைலையங்கிரியில் கட்டளையிட்டருளினாரல்லவா? அவர் இப்போது அவர்களுக்கு அருளும் வகையை யார்தான் அறிவார்கள்?

தேவர்களும் பணியும் திருவாரூர் தியாகேசப் பெருமான் தம் அடியார்களின் கனவில் தோன்றி, ''நம் வன்தொண்டன் நம்பியாரூரனுக்கும் பரவைக்கும் திருமணத்தை நீங்கள் செய்யுங்கள்!'' என்று அறிவித்தருளி மறைந்தார். பிறகு நம்பியாரூரர் மகிழ அவருடைய கனவிலும் பெருமான் தோன்றி, ''உனக்கு மங்கை பரவை தன்னைத் தந்தோம்! இதை நம் அடியார்கள் அறியும்படியே உரை செய்தோம்!'' என்று கூறி அருளினார். பிறகு அன்னநடைப் பரவையின் கனவிலும் அவர் தோன்றி, ''உனக்கும் ஆரூரனுக்கும் திருமணம் அதி சீக்கிரம் நடக்கும்!'' என்று உணர்த்தினார்.

காமத்துயரில் சுவல்வாரின் நெஞ்சில் கரையாத இருளும், கழியாத இரவின் அடையாமத்து இருளும் ஒருங்கே அகலப் பொழுது புலர்ந்தது. வானத்தில் செங்கதிர்ச் செல்வன் உதயமாகும் அதிகாலை நேரத்தில் சிவனடியார்களெல்லாம் ஒன்று கூடினார்கள். சேமத் துணையான தியாகேசப் பெருமானின் திருவருளை வணங்கி, நம்பியாரூரர் மகிழ அவருக்கும் பரவை நாச்சியாருக்கும் முறைப்படி திருமணம் நடத்தி வைத்தார்கள்.

தென்னாவலூரரான நம்பியாரூரர் தேவர் பிரானின் திருவருளினால் பரவையை அடைந்து நாச்சியாரோடு கூடி மகிழ்ந்தார். பரவை மென்மையே உருவானவர்! ஒளி வீசிப் பூங்கொடிபோல் துவளும் மெல்லிய இடையுடையவர்! பொன்போல் தேமல் படர்ந்த நாச்சியாரின் தனங்களையே மலைகளாகக் கொண்டு, அவரோடு கூடிக் கலப்பதையே மலையுச்சியாகக் கொண்டு, யோக பரம்பரையினர் யோகம் பயில்வதைப் போல், போகம் பயில்வதை நாளுக்கு நாள் நம்பியாரூரர் அதிகமாக விரும்பினார். பரவையைத் தமக்குத் தந்தருளித் தன்னையாளும் தம்பிரானின் திருப்பாதத் தாமரைகளைத் தம்முடைய தலையிலும் சிந்தையிலும் மலரச் செய்து திருப்பதிகம் பாடினார். எம்பெருமானுக்குப் பைந்தமிழ்ப் பாமாலைகள் பல சூடிப் பரவையெனும் மின்னிடையாரோடு கூடி விளையாடி வந்தார்.



மாளிகையிலும், அருகிலுள்ள சோலையிலும், தாமரை மலரும் தடாகத்தின் பக்கத்திலும், செய்குன்றிலும், அதன் அருகிலுள்ள திண்ணையிலும், குளிர்ந்த முத்துப் பந்தரின் கீழேயுள்ள அழகான ஆசனத்திலும் அவர் பரவையோடு கூடி வாழ்ந்து வந்ததோடு, தங்கள் நாதர் கோயிலுக்குப் போய் நம்பிரானைக் கும்பிடவும் நம்பியூரர் அடிக்கடி விரும்புவார்.

ஒருநாள் அவர் வழக்கம்போல் அழகுக் கிளர்ச்சியூட்டும் ஆடைகள் உடுத்தி, சந்தனக் குழம்பில் தோய்ந்த குங்குமக் கலவை சாத்தி, தலையில் சுந்தரக் கிரீடமும், உடம்பில் சுடர்மணி ஆபரணங்களும் தரித்து, தேவேந்திரச் செல்வத்தைவிட மேலான எழில் பெற்றுப் பிரகாசமாகத் தோற்றமளித்தார். பிறகு கையில் பொற்கோல் அலங்கரிக்க, காதுகளில் தோடுகள் ஒளி வீச, மார்பில் முப்புரி நூல் துவள, நெற்றியில் திருநீறு விளங்க அவர் வெளிக்கிளம்பினார்.

''ஆகா! நம்பியாரூர் ஐயனுக்கு இது அழகாய்த்தான் இருக்கிறது!'' என்று ஆயிழைப் பெண்களெல்லாம் போற்ற,

சைவத் திருக்கோலம் செழிக்க தெருவில் இறங்கி நடந்தார். அவரைப் பார்த்தவர்களெல்லாம் தெருவின் இருமருங்கும் கூட்டமாக நின்று, ''ஆகா! நாவலூரில் தோன்றிய சைவ நற்றவக் களிறே!'' என்றும் ''பகைவரின் முப்புரங்களை எரித்த முக்கண் பெருமானின் அன்பரே!'' என்றும் ''பெருமை மிக்க ஆரூர் மறையவர் தலைவர்!'' என்றும் பலவாறாகப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

நீளமான திருவீதியில் நம்பியாரூரர் வந்தார். அவ்வீதியில், கையிலே ஆட்டுக் கிடாவோ, குரங்கோ, கோழியோ, காடை கவுதாரிகளோ பிடித்துக்கொண்டு போவோர் பயில்மொழி கற்பித்தபடியே முன்சென்றார்கள். பெரிய பூக்கூடைகளோ, வாசனைத் திரவியப் பைகளோ, வெற்றிலைப் பாக்குப் பைகளோ வைத்திருப்போர் சூழ்ந்திருந்தார்கள். விசாலமான விழிகளிலே மைதீட்டிய மங்கையர் ஆங்காங்கே மறுகி நின்றார்கள்.

நம்பியாரூரர் தம் பொன்னிறத் தோள்களும் மார்பின் மாலைகளும் அசைந்து மின்ன, நான்மறை முனிவரோடு, அண்ணலார் கோயிலை வந்தணைந்தார். அங்கு தேவாசிரிய மண்டபத்தில் மிகச் சிறந்த சிவனடியார்கள் எண்ணிலோர் கூடியிருந்தார்கள்.

அவர்களை முதலில் வணங்காமல் நம்பியாரூரர் தம் இறைவனை வணங்குவதற்காக ஒருபுறம் ஒதுங்கிச் சென்றார். அதைக் கண்டதும் அடியார்களின் திருக்கூட்டத்தில் இருந்த விறன்மிண்ட நாயனார் என்பவருக்குக் கோபம் வந்துவிட்டது. அடியார்களை முதலில் வணங்கிய பிறகுதான் ஆண்டவனை வணங்க வேண்டும் என்பது அவருடைய கொள்கை. அதனால் அவர், ''நம் அடியார்களின் திருக்கூட்டத்தைப் பேணாமல் செல்லும் நம்பியாரூரனும் நமக்குப் புறம்பு; அவனை ஆட்கொண்ட சிவபெருமானும் புறம்பு!'' என்றார் (விறன்மிண்ட நாயனாரின் வரலாற்றில் காண்க.)

அதை அறிந்ததும் நம்பியாரூரர், ''இந்தத் திருத்தொண்டர் கூட்டத்தில் என்னையும் ஒருவனாக்கி, அடியார்களுக்கு நான் அடியானாகச் செய்யும் நாள் எந்நாளோ?'' என்று பரமன் தாள் பணிய விரைந்து சென்றார்.

''அடியவர்க்கு அடியனாவேன்!'' என்னும் அன்பு நம்பியாரூரரின் உள்ளத்திலே வளர்ந்து பொங்க, அவர் திருக்கோயிலின் கொடி வாசலைத் தொட்டுக் கைகுவித்துக் கும்பிட்டுவிட்டு உள்ளே புகுந்தார். கொன்றை மலரணிந்த தியாகேசப் பெருமான் அவருக்குக் காட்சியளிக்கும் விதமாக அவருக்கு எதிரே தோன்றி நின்றார்.

அவருடைய பொற்பாதங்களை ஆரூரர் பணிந்து, ''ஆகா! இவை வேத வண்டுகள் சூழ்ந்திருக்கும் செந்தாமரைப் பாதங்கள்! இவை அன்பர் சிந்தையிலே மலர்ந்து, பெரும் பரமானந்தம் என்னும் நன்மதுவைப் பொழியும்! இப்போது இவை எனக்கும் பரமானந்தத் தேனைத் தந்து எதிரே நிற்கின்றன! இத் திருப்பாதங்கள் உலகம் உய்யத் தில்லையம்பலத்தில் நடனம் ஆடின! காலனை உதைத்ததால் கறுத்தன. சிவகாமியின் செங்கைகள் மெல்ல வருடியதால் சிவந்தன! நீதிமாதவர் நெஞ்சங்களிலே பொன்னொளி பொழிவன! தன்னை உணராதவர்களை உணரச் செய்வன! ஜோதியாய் எழுந்து ஜோதியுட் ஜோதியாய் தோன்றியபோது இத்திருவடிகளின் ஆதி அந்தங்களை நெடுமாலும் பிருமனும் காணமுடியாதளவு பெருகின! உபநிஷதங்களின் ஞானபாகத்திலே ஏறி நிற்பன! பேதையேனாகிய நான் செய்த பிழை பொறுத்து என்னை ஆண்டன! குற்றமானவற்றைத் தீர்க்க இசைந்தன! ஓ, பூதநாதா! உன் தாமரைப் பாதங்களைப் பணிகிறேன்!'' என்று போற்றி வணங்கினார்.

அவர் விரும்பும் பெருநிலையை சிவபெருமான் அவருக்கு அருள முன்வந்து, சிவனடியார்களின் வழித் தொண்டை உணரச் செய்து, பிறகு அவ்வடியார்களின் பெருமையையும் கூறலானார்:

''அவ்வடியார்களின் பெருமைக்கு அளவே இல்லை. பெருமையால் அவர்கள் தம்மையே ஒப்பார்! இடையறாமல் தியானித்ததால் எம்மை அடைந்தார். ஒருமையுணர்வால் உலகை வெல்வார். ஊனம் ஒன்றும் இல்லார். அருமையாம் நிலையில் நின்றார். அன்பினால் உண்மை இன்பம் நுகர்வார். பிறப்பு இறப்புகளைக் கடந்து நிற்பார். இத்தகைய அடியார்களின் திருக்கூட்டத்தை நீயும் அடைவாயாக!'' என்று நாதனார் திருவருள் செய்தார்.

''நான் இங்கே குறை தீர்ந்த தவநெறியைப் பெற்றேன்!'' என்று நம்பியாரூரர் வணங்கித் துதித்தார்.

''எம் அடியார்களை நீதியால் நீ பணிந்து பொருள் நிறைந்த செந்தமிழ்ப் பாக்களால் பாமாலை பாடுவாயாக!'' என்று அண்ணலார் கூறினார்.

தன்னையாளும் நாதன் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்டு திருமுனைப்பாடி நாதர் தம் தலையால் வணங்கி, ''எம்பெருமானே! அடியார்களின் வரலாறு இன்னதென்றும்

அவர்களுடைய தன்மை எப்படிப் பட்டதென்றும் அறியாதவனாகிய நான் எவ்வாறு அவர்களை ஏத்திப்பாடுவேன்! அவர்களை நான் புகழ்ந்து பாமாலை பாடும் இயல்பை அடியேனுக்குத் தந்தருளும்!'' என்றார்.

இமயச் செல்வியை இடப்பக்கம் கொண்ட சிவபெருமான் உலகம் உய்யத் திருமறைகளைத் தந்தருளிய தமது திருவாக்கினால் ''தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று பாமாலையின் முதல் அடியை எடுத்துக் கொடுத்து, ''ஆரூரா! எல்லையிலாப் புகழுடைய எம் அடியார்களின் பெருமையை நீ இசைப்பாட்டால் எடுத்து இயம்புவாயாக!'' என்றார்.

அவருடைய திருவடிகளில் வன்தொண்டர் தம் தலை படிய அடி வணங்கித் திருவருளை மேற்கொள்ளும்போது தியாகராசப் பெருமான் மறைந்தார்.

அதன்பிறகு நம்பியாரூரர் சிவனடியார்களின் திருக்கூட்டம் நிறைந்துள்ள தேவாசிரிய மண்டபத்திற்குச் சென்றார். அவர் திருக்கூட்டத்தினரைத் தூரத்திலிருந்து பார்க்கும்போதே பலமுறையாகத் தொழுது அன்பு பொங்கத் தாழ்ந்து வணங்கி, எழுந்து சென்று அவர்கள் அருகே வந்து நின்றார். என்றென்றும் சிவநெறியில் நிலைபெற்ற அவ்வீரர்கள் ஒவ்வொருவர் திருப் பெயரையும் சொல்லி, 'இவர்க்கடியேன்' என்று தொடங்கும் திருத்தொண்டத் திருப்பதிகத்தை ஆர்வத்தோடு பாடினார். ஆண்டவன் அடியெடுத்துக் கொடுத்த ''தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்பதை முதலடியாகக் கொண்டு தெய்வ நாயகனின் திருவருட் துணையினால் உணர்வு பெற்று, திருத்தொண்டத் தொகையெனும் திருப்பதிகத்தை வன்தொண்டர் உலகம் புகழப் பாடிச் சிவனடியார்களின் எதிரே வணங்கி நின்றார்.

சிவனடியார்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். நம்பியாரூரர் அத்திருக் கூட்டத்தின் நடுவே சென்றணைந்தார்.

நம்பியாரூரரான சுந்தர மூர்த்தி நாயனார் திருத் தொண்டத் தொகையைப் பாடியருளிவிட்டுத் திருவாரூர் தியாகேசப் பெருமானைத் திரிகாலங்களிலும் மனமுருகி, அன்போடு வணங்கிப் பிரியாமல் திருவாரூரிலே வாழ்ந்து வந்தார்.

அந்தக் காலத்தில் 'குண்டையூர்' என்ற ஊரில் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் வேளாள மரபைச் சேர்ந்தவர். அவரைக் 'குண்டையூர்க் கிழார்' என்றே அனைவரும் அழைப்பார்கள். அவர் சுந்தரமூர்த்தி நாயனாரிடம் பேரன்பு

கொண்டவர். அதனால் அவர் செந்நெல்லும் பருப்பும் பிற பொருட்களும் சுந்தரரின் மனைவியாரான பரவை நாச்சியாரின் மாளிகைக்கு நீண்ட நாளாகத் தவறாமல் அனுப்பிக் கொண்டிருந்தார். இவ்விதமாகக் குண்டையூர்க் கிழார் தொண்டாற்றி வரும்போது, வானம் பொய்த்து மழையில்லாமையால் நிலத்தின் வளங்கள் குன்றின. ஒரு நாள் சுந்தரருக்கு நெல்லும் பிறபடித்தளங்களும் வழக்கம்போல் அனுப்புவதற்குப் போதாதிருப்பதைக் கண்டு குண்டையூர்க் கிழார் பெருங் கவலைகொண்டு, அன்றிரவு முழுவதும் உணவுகொள்ளாமல் துயின்றார். அப்பொழுது சிவபெருமான், அவருடைய கனவில் தோன்றி, ''ஆரூரனுக்குப் படியளப்பதற்காக உனக்கு நெல் தந்துள்ளோம்!'' என்று கூறி மறைந்து குபேரனை ஏவினார். அதனால் அந்தக் குண்டையூர் முழுவதும், நெல் மலையானது. ஆகாயமும் மறையும்படி நிறைந்தோங்கியது.

குண்டையூர்க் கிழார், விடியற்காலையில் விழித்தெழுந்தவுடன் அந்த நெல் மலையைக் கண்டார். அதைக் கண்டதும் அவர் அதிசயம் கொண்டு, சிவபெருமானின் அருட்செயலைப் போற்றினார். கொவ்வைவாய்ப் பரவையாரின் கணவரான சுந்தரமூர்த்தி நாயனாரைத் தொழுது எழுந்தார். நாயனாருக்கு அனுப்பும்படி சிவபெருமான் தந்தருளிய இவ்வளவு பெரிய நெல் மலையை, யாராலும் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல முடியாது. இச்செயலினை நம்பியாரூரருக்கு நானே சென்று விண்ணப்பம் செய்வேன்!'' என்று நினைத்து திருவாரூருக்குச் சென்றார். சிவபெருமான், அவருக்கும் முன்னதாக நம்பியாரூரரிடம் சென்று, குண்டையூர்க் கிழாருக்கு நெல் மலையைத் தந்தருளிய செயலைத் தெரிவித்தார். அதையறிந்த நம்பியாரூரர், குண்டையூரை நோக்கிப் புறப்பட்டார். வழியில் இருவரும் எதிரெதிரே சந்தித்தனர். அப்பொழுது குண்டையூர்க் கிழார் சுந்தரமூர்த்தி நாயனாரை வணங்கி, ''அடியேன் தங்களுக்கு நெடுங்காலமாகச் செய்து வந்த திருத்தொண்டு, இன்று முட்டுப்பாடுற்றது. அது கண்டு, சிவபெருமான், தாமே நெல்மலை அளித்தருளினார். அந்த நெல்மலை, மனிதர்களால் எடுக்கப்படும் அளவுடையதன்று. மேலும் அது என்னால் செய்யக்கூடிய பணியுமன்று'' என்று விண்ணப்பம் செய்தார். அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி நாயனார், சிவபெருமானைத் தியானித்து, குண்டையூர்க் கிழாரோடு சென்று குண்டையூரை அடைந்தார்.

அங்கு ஆகாயத்தை அளாவிய நெல்மலையைக் கண்ட நம்பியாரூரர் வியப்புற்றார். சிவனாரின் திருவடிகளை வணங்கி, ''பரவை வீட்டிற்கு, இந்நெல்லை எடுத்துச் செல்ல ஆட்களையும் சிவபெருமானே தந்தருளினாலன்றி, இவ்வளவு

நெல்லையும் எவ்வகையாலும் எடுத்துச் செல்ல இயலாது'' என்று கருதி, குண்டையூருக்கருகிலிருந்த 'திருக் கோளிலி' என்னும் திருப்பதியை அடைந்தார். அங்கு கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானை வணங்கி, ''வாளனக் கண்மடவாள் வாடி வருந்தாமே'' என்ற கருத்துக் கொண்ட ''நீலி நினைந்தடியேன் உமை'' என்று தொடங்கும் திருப்பதிகத்தினைப் பாடித் துதித்தார். அப்பொழுது, ''சிவபெருமான் திருவருளினால், இன்று பகற்பொழுது கழிந்தபிறகு நம்முடைய மூலகணங்கள், பரவையரது மனையளவு மட்டுமன்றி, திருவாரூர் முழுவதும் நிறையும்படி நெல் மலையைத் தூக்கிக் கொண்டு வந்து தரும்!'' என்று ஒரு வானொலி எழும்பியது. சுந்தரர் அதைக் கேட்டு சிவபெருமானின் திருவருளை வணங்கி, பிற தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூருக்குத் திரும்பிச் சென்றார்.

திருவாரூரில் நம்பியாரூரர், முதலாவதாக புற்றிடம் கொண்ட பெருமானை வணங்கித் துதித்து, பரிசனங்கள் சூழ பரவையாரது திருமனையை அடைந்தார். பரவையார் கொவ்வை வாயில் புன்சிரிப்புடன் மகிழும்படி சுந்தரர் குண்டையூரில் நிகழ்ந்த செயல்களெல்லாம் எடுத்துச் சொல்லி, அங்கு பரவையரோடு இன்புற்று இன்பமுடன் இருந்தார். அதன்பின், இறைவன் திருவருளின் ஏவுதலினாலே அன்று இரவிலே சிவபூதங்கள், குண்டையூரிலிருந்த நெல்மலையை எடுத்துக் கொண்டு சென்று, பரவையாரின் திருமாளிகையை நிறைவித்து திருவாரூர் முழுதும் நெல்மலையாக்கின. அன்றிரவு கழிந்தபிறகு, திருவாரூர் மக்கள் அந்த நெல்மலையைக் கண்டு, ''இந்நெல் மலைகள், எவ்வுலகில் விளைந்தனவோ?'' என்று அதிசயித்தும், ''மான்விழிப் பரவையாருக்கு நம்பியாரூரர் அளித்தது இவை!'' என்றும், ''பாக்கியவதியான பரவையாருக்கு இந்நெல்லினை சேமித்து வைக்க இடம் அரிதாகும்!'' என்றும் பற்பலவாறு பேசினார்கள்.

நம்பியாரூரர் தமக்களித்த நெல்லினையெல்லாம் பார்த்த பரவையார் மிகவும் மகிழ்ந்து, ''இன்று உங்கள் வீடுகளின் எல்லைக்குட்பட்ட நெல்லையெல்லாம் அவரவர் வீட்டிற்கு எடுத்துப் பெய்து கொள்க!'' என முரசறையும்படி செய்வித்தார்.

திருவாரூர் மக்கள், அவரவர் வீட்டிற்கு அருகில் இருந்த நெற்குவியல்களையெடுத்து, நெற்களஞ்சியங்களில் சேமித்துக் கொண்டு சுந்தரமூர்த்தி நாயனாரை அன்போடு பணிந்தனர்.

சுந்தரமூர்த்தி நாயனார், திருவாரூரில் இருந்து வரும்போது ஒருநாள் 'கோட்புலியார்' என்னும் சிவனடியார்

நம்பியாரூரரை அடைந்து அவர் திருவடிகளில் வணங்கி, தமது ஊராகிய 'திருநாட்டியத்தான்குடி' என்னும் ஊருக்கு வந்தருளுமாறு வேண்டினார். நம்பியாரூரர் அதற்கு இசைந்தார். அவரது ஒப்புதலைப் பெற்றுக் கொண்ட கோட்புலியார், தம் ஊருக்குச் சென்றார். அதன் பிறகு சுந்தரர் திருவாரூரில் இருந்து புறப்பட்டுச் சிவத்தலங்கள் பலவற்றையும் வணங்கிக் கொண்டு, திருநாட்டியத்தான்குடியை அடைந்தார். சேனாதிபதியான கோட்புலி நாயனார், தம் ஊர் முழுவதையும் அலங்கரித்து, சுந்தரமூர்த்தி நாயனாரை, எதிர் கொண்டழைத்து, தமது திருமாளிகைக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு பொற்பீடத்தின் மேல் சுந்தரரை அமரச் செய்து, அவருடைய பாதத் தாமரைகளை, தூய நீர் கொண்டு கோட்புலியார் விளக்கினார். அந்த நீரினை தம் மீதும் தம் மாளிகை முழுதும் தெளித்துக் கொண்டார். பிறகு கலவைச் சந்தனம், அகிற்சாந்து, கஸ்தூரி குழம்பு, தாம்பூலம், திருப்பள்ளித் தாமத்துக்குரிய அலங்கார மாலை வகைகள், கையாபரணவகைகள், பலவிதப் பரிவட்டங்கள் முதலியவற்றை வரிசையாக வைத்தார்.

பிறகு நம்பியாரூரரின் எதிரிலேயே கோட்புலியார் நின்று அவரை வணங்கி, பூசனைகள் புரிந்து, வழிபட்டு, தமது மனையில் நட்புரிமையினால் பேரன்போடு திருவமுது செய்வித்தார். பிறகு தம் புதல்விகளான 'சிங்கடியார், வனப்பகையார்,' என்ற இருவரையும் அழைத்து, நம்பியாரூரரின் திருவடிகளை வணங்கும்படிச் செய்து, தானும் வணங்கினார். பிறகு அவர் நம்பியாரூரரை நோக்கி, ''இவர்கள் அடியேன் பெற்றெடுத்த பெண்கள்! இவர்களை அடிமையாக ஏற்றுக் கொண்டருளி, உங்கள் திருவடிகளை இப்பெண்கள் தொழுது உய்யுமாறு கருணை செய்தருள வேண்டும்!'' என்று வேண்டினார். அதைக் கேட்டதும் பரவையாரின் கணவரான நம்பியாரூரர், ''இப்பெண்கள் இருவரும் என்னுடைய புத்திரிகளேயாவர்!'' என்று சொல்லி, அப்பெண்களைத் தம்முடைய மடிமீது அமர்த்தி, புத்திரிகள் என்ற அன்பின் மனக்கசிவுடனே அணைத்து, கண்ணீர் துளிர்க்க உச்சி மோந்து, அவர்கள் வேண்டியவற்றை அளித்து, மக்கள் முறைமை கொண்டாடினார்.

பிறகு தம்பிரான் தோழரான நம்பியாரூரர், திருநாட்டியத்தான் குடியிலுள்ள கோயிலுக்குச் சென்று சிவபெருமானை வணங்கி, ''பூணாணாவதோரரவம்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். அந்தப் பதிகத்தில் கோட்புலியாரைச் சிறப்பித்து, திருக்கடைக் காப்பில் சிங்கடியாரைத் தமது பெண்ணாகப் பெற்றது தோன்ற, தம்மை 'சிங்கடியப்பன்' என்று அமைத்துப் பாடி வணங்கினார்.

பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டு, ''திருவலிவலம்'' என்னும் ஊரையடைந்து, இறைவனை வணங்கி, ''வலி வலந்தன்னில் வந்து கண்டேனே!'' என்ற முடிவையுடைய திருப்பதிகத்தைப் பாடினார். அந்தத் திருப்பதிகத்தில் நின்று மகிழ்ந்து, ''ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பாட்டுக்களைக் கேட்டீர்!'' என்று சிறப்பித்துப் பாடி மீண்டும் திருவாரூரை அடைந்தார்.

அங்கு தியாகேசப் பெருமானை வணங்கிச் சென்று பரவையாரின் திருமனையில், விருப்பத்துடன் தங்கியிருந்து மகிழ்ந்து வரலானார்.

திருவாரூரில் திருப்பங்குனி உத்திரத் திருநாள் அணுகியது. அந்தத் திருவிழாவில், பரவையார் அடியார்களுக்கு வேண்டுவனவற்றையெல்லாம் குறைபாடின்றிக் கொடுப்பதற்காகப் பொன் தேவைப்பட்டது. பரவையாருக்குப் பொன் கொண்டு தருவதற்கு எண்ணிய நம்பியாரூரர், திருப்புகலூருக்குச் சென்று அங்கு கோயில் கொண்டுள்ள சிவபெருமானை வணங்கி திருப்பதிகம் பாடி, தாம் எண்ணிவந்த கருத்தை விண்ணப்பித்துக் கும்பிட்டார். பாடியும், பரமனருளால் பொன் பெறாமையால் அருகிலுள்ள எந்தத் திருமடத்திற்கும் செல்லாமல் தூக்கம் வந்து அமுக்கியதால் அன்பர்களுடன் அக்கோவிலின் அழகான திருமுற்றத்திலே துயில் கொள்ள விரும்பினார். அந்தக் கோயிலுக்கு வெளியே திருப்பணி செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த சுட்ட செங்கற்கள், பலவற்றை வருவித்து, அவற்றை அடுக்கி உயரமாக ஆக்கி, திருமுடிக்குத் தலையணையாகத் தமது வெண்பட்டாடையை விரித்து, அதன்மீது துயில் கொண்டார். பிறகு, நம்பியாரூரர் விழித்தெழுந்தபொழுது, சிவபெருமானுடைய திருவருளினால், அவர் தலையணையாக வைத்திருந்த செங்கற்களெல்லாம் பொன்கற்களாயிருக்கக் கண்டு வியந்தார்; திகைத்தார்; திருப்புகலூர் இறைவனின் திருவருளைத் துதித்தார்; அவருடன் துயில் கொண்ட அடியார்களும், துயில் நீங்கி யெழுந்தனர். சுந்தரமூர்த்தி நாயனார், அந்த அடியார்களுடன் திருக்கோயிலுக்குச் சென்று, இறைவன் திருவருளை வியந்து ''தம்மையே புகழ்ந்து'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி, இறைவனின் அருள் விடைபெற்று செம்பொற் கட்டிகளையும் உடன் கொண்டு திருப்பனையூரை அடைந்தார். திருப்பனையூரின் எல்லைப்புறத்திலே சிவபெருமான் திருவருட் கூத்தோடு எதிரே காட்சியளித்தார். அதைக் கண்டு சுந்தரர் அப்படியே நிலத்திலே விழுந்து வணங்கி, எழுந்து நின்று ''ஆடுமாறு வல்லார் அவரே அழகியரே'' என்று முடிவுறும் திருப்பதிகத்தைப் பாடி வணங்கினார். செம்பொற் கட்டிகளாகிய செங்கற்களை அவ்வூர் மக்களில் சிலர் தூக்கி வர, அவற்றை

பரவையார் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, தாம் மட்டும் மற்ற சிவனடியார்களுடன் திருவாரூர் திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கே புற்றிடம் கொண்ட பெருமானை வணங்கி விட்டுப் பரவையாரின் வீட்டையடைந்தார். முல்லையரும்புகள் போன்ற பற்களுடன் புன்முறுவல் பூக்கும் பரவையாரோடு சுந்தரர் மகிழ்ந்திருந்தார்.

பல நாட்கள் சென்ற பிறகு நம்பியாரூரர், திருநன்னிலத்துப் பெருங்கோயிலுக்குச் சென்றார். அங்குள்ள சிவபெருமானை வணங்கி, 'தண்ணியல் வெம்மையினான்' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிவிட்டு அங்கிருந்து திருவீழிமழலைக்குப் புறப்பட்டார். அவர் வருகையை அறிந்த திருவீழிமழலை வேதியர்கள், பந்தலிட்டு, நடை பாவாடை விரித்து, வாழை கமுகுகளை வரிசைபெற நாட்டி மகர தோரணங்களை அழகு பெறக் கட்டி, நம்பியாரூரரை எதிர் கொண்டழைத்தனர். நம்பியாரூரரும் மகிழ்ச்சியுடன் திருவீழிமழலையை வணங்கி, விமானக் கோயிலை அடைந்து, சிவபிரானைத் துதித்து ''விழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே'' என்று இறுதியில் முடியும் திருப்பதிகத்தைப் பாடி, அவ்வூரிலேயே சில நாட்கள் தங்கியிருந்தார்.

அதன் பிறகு, அங்கிருந்து திருவாஞ்சியம், திருப்புத்தூர், திருநறையூர், திருச்சித்தீஸ்வரம், அரசிற்கரைப்புத்தூர், திருவாவடுதுறை முதலிய திருத்தலங்களுக்குச் சென்று, திருப்பதிகங்கள் பாடிவிட்டுக் காவிரியின் தென்கரையின்மேல் திகழும் பல பதிகளையும் பணிந்து, 'திருவிடைமருதூர்' என்ற ஸ்தலத்தை வந்தடைந்தார். அங்குள்ள சிவபிரானை வணங்கி, பதிகப் பாமாலை சூட்டினார். அங்கிருந்து தொண்டர்களுடனே திருநாகேஸ்வரத்தையடைந்து, இறைவனை வழிபட்டு ''பிறையணி வாணுதலரன்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப் பணிந்தார். பிறகு திருச்சிவபரத்தையடைந்து வணங்கினார். அங்கிருந்து ★திருக்கலைய நல்லூர் சென்று, அங்குள்ள இறைவனை வணங்கி, 'குரும்பை முலை' என்று துவங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். அந்தப் பதிகத்தில் இறைவனைப் பற்றிக்கூறும் புராண வரலாறுகளைச் சிறப்பாக எடுத்தமைத்துப் பாடினார். அங்கிருந்து 'திருக்குடமூக்கு, திருவலஞ்சுழி' என்ற

★ திருக்கலைய நல்லூர் : இது இப்போது, ''சாக்கோட்டை'' என்று வழங்கப்படுகிறது. அரசலாற்றின் தென்கரையில் உள்ளது. உயிர்களை அடைத்த கலையமானது, பிரளய வெள்ளத்தில் தங்கிய இடமாகையால், இந்தப் பெயரைப் பெற்றது.

ஸ்தலங்களுக்கு அவர் சென்று இறைவனை வணங்கிவிட்டுத் திருநாவுக்கரசருக்கு சிவபெருமான் திருவடித் தீக்ஷை செய்தருளிய திருநல்லூரைச் சிறப்பித்துப் பாடிப் பணிந்தார்.

அதன் பிறகு திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி முதலிய திருப்பதிகளையடைந்து வணங்கித் தொழுது விட்டு, 'திரு ஆலம் பொழிலை' சென்று வணங்கி, அன்றிரவு அவ்வூரில் துயில் கொண்டார். அவருடைய கனவிலே சிவபெருமான் தோன்றி ''மழபாடியின்கண் வருவதற்கு நினைக்க மறந்தனையோ?'' என்று கேட்டுத் தமது இளமைத் திருக் கோலத்தைக் காட்டியருளினார். நம்பியாரூரர் விழித்தெழுந்தவுடன் காவிரி நதியின் வடகரையிலேறிச் சென்று 'திருமழ பாடியினை' அடைந்தார். அங்கு கோயில் கொண்டுள்ள இறைவனை வணங்கி மயிர்க்கூச்செறிய உள்ளமுருகி, 'பொன்னார் மேனியனே' என்று தொடங்கி ''அன்னே! உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே!'' என்று துதித்துப் பைந்தமிழ்ப் பதிகம் பாடி வணங்கிவிட்டு அங்கேயே சிலகாலம் தொண்டர்களுடன் தங்கியிருந்தார். பிறகு சுந்தரர் அங்கிருந்து புறப்பட்டுக் காவிரி நதியின இருகரையிலுமுள்ள பல பதிகளை வணங்கி, மேற்கு நோக்கிச் சென்று, 'திருவானைக்கா'வை அடைந்தார். அங்குள்ள தொண்டர்கள் அவரை எதிர்கொண்டு அழைத்தனர். சுந்தரமூர்த்தி நாயனார், திருத்தொண்டர்களுடன் திருக்கோயிலுக்குச் சென்று இறைவன் திருவடிகளில் விழுந்து வணங்கி, ஆனந்தக் கண்ணீர் பெருக ''மறைகளாயின நான்கும்'' என்று தொடங்கி 'எம்மை யாளுடையாரே' என்று முடியும் திருப்பதிகத்தைப் பாடினார். அந்தப் பதிகத்தில் உறையூர்ச் சோழர் மணியாரத்தை அணிந்து கொண்டபடியே காவிரியில் மூழ்கும்போது, அந்த ஆரம் நீரினுள் தவறி விழுந்து போக, அதையறிந்த அவ்வரசர் ''சிவபெருமானே கொண்டருளும்'' என்று வேண்டிக் கொள்ள அந்த மணியாரம், திருமஞ்சனக் குடத்தினுள்ளே புகுந்து திருமஞ்சனம் ஆட்டியபோது, அதனைச் சிவபெருமான் அணிந்து அவ்வரசனுக்கு அருள்புரிந்த தன்மையைச் சுந்தரர் சிறப்பித்துப் பாடினார்.

பிறகு அவர், 'திருப்பாச்சிலாக் கிராமம்' என்ற தலத்தை அடைந்தார். அங்குள்ள சிவன் கோயிலை வலம் வந்து, இறைவனார் திருமுன்பு வணங்கி, பொருட்காதல் பெருக விரும்பித் துதித்தார். அவர் நினைத்த பொன் பொருளை அப்போது இறைவர் அருளவில்லை. அதை நேராக நின்று அன்பு நீங்காத அச்சத்துடன் பொருந்திய திருத்தோழமைப் பணியால் உள்ளம் புழுங்கி, புறம்பு நின்ற

திருத்தொண்டர்களின் முகம் நோக்கி, முறையிடுவோரைப்போல ''இவரல்லாதில்லையோ பிரானார்'' என்ற மகுடம் அமைத்து, ''வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி 'ஏசின ஆல்ல' என்னும் திருக்கடைக் காப்புச் சாத்தினார். உடனே சிவபெருமான் தூய பொற்குவியலைச் சொரிந்தருளினார். இறைவனின் பெருங்கருணையை நம்பியாரூரர் வியந்து துதித்தவாறு அங்கும் சிலகாலம் தங்கியிருந்தார்.

பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டு, காவிரியின் இருகரையினிலுமுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் தொழுது விட்டுத் திருப்பைஞ்ஞீலித் தலத்தை அடைந்தார். அங்கு அவர் திருக்கோபுரத்தை வணங்கி வலம் வரும்போது, சிவபெருமான் நம்பியாரூரர் கண் முன்பு, கங்காளர் வேடத்துடன் காட்சியளித்தார். தாருகாவனத்து முனிவர்களது மங்கையர்களின் மனதைக் கவரும்படி வரும் சிவபெருமானின் பிக்ஷாடன திருவுருவத்தைக் கண்டு, அம்மங்கையர் கொண்ட மையலினாலே வினவுகிற பொருளுடைய சொற்களாக அமைத்து ''காருலாவிய'' என்று பாடலடி தொடங்கித் துதித்து 'ஆரணிய விடங்கரே' என்ற திருப்பதிகம் பாடித் திருக்கடவுக் காப்புச் சாத்தி வணங்கினார். பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டு 'திருவீங்கோய் மலை' முதலான சிவஸ்தலங்கள் பலவற்றையும் அன்பர் கூட்டத்தோடு வணங்கிக் கொண்டு சென்று, கொங்கு நாட்டிலுள்ள ★ '**திருப்பாண்டிக் கொடுமுடி**' என்னும் சிவஸ்தலத்தை அடைந்தார். அங்குள்ள திருக்கோயிலுக்குச் சென்று, இறைவன் திருமுன்பு நின்று வணங்கி அவரது பொன்னார்ந்த திருமேனியை நோக்கி, ''இங்குள்ள இவரை மறக்க ஒண்ணாது. இவரையே நான் மறந்தாலும்கூட இவர் தம் திருப்பெயரையே சொல்லிச் சொல்லிப் பழகிய என்னுடைய நாவானது இடைவிடாமல் இவரது திருநாமமாகிய திருவைந்தெழுத்தையே சொல்லும்'' என்ற திருக்குறிப்பைக் கருத்தாகக் கொண்டு நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடினார். பிறகு இறைவனிடம் விடைபெற்று மேல் கொங்கு நாட்டில் ★**காஞ்சி நதிக்கரையிலிருக்கும்** திருப்பேரூர் என்னும் திருத் தலத்தை வந்தடைந்தார். அங்கு

---

1. ★ திருப்பாண்டிக் கொடுமுடி : இது கறையூர்ப் பாண்டிக் கொடுமுடி எனவும் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் 'கொடுமுடி' என்றே அழைக்கின்றனர்.

2. ★ காஞ்சி நதி : இது கோயம்புத்தூரை அடுத்த பேரூருக்கு மேற்கே, சுமார் 35 மைலில் வெள்ளிமலையில் தோன்றி, பேரூர் வழியாக வரும்வரை, காஞ்சி நதி என்றும், அதற்கு மேல் காவிரியுடன் கலக்கும் வரை, நொய்யல் என்றும் பெயர் பெற்றுள்ளது.

சிவபெருமான் தில்லையம்பலத்திலே நின்றாடுகிற தமது திருக்கோலத்தை நேராகக் காட்டி யருளினார். அந்தக் காட்சியை சுந்தரர் கண்டதும் சிவானந்த மெய்தினார். பிறகு அங்கிருந்து சென்று ★**திருவெஞ்சமாக்** கூடலினை நெடுந்தூரம் நடந்து சென்று, தென் திசையிலுள்ள திருக்கற்குடியை அடைந்தார். அங்குள்ள கற்குடிநாதரை வணங்கித் திருப்பதிகம் பாடினார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு, திருவாறை மேற்றளி, திருவிண்ணம்பர், திருப்புறம்புயம் முதலிய ஸ்தலங்களிலுள்ள இறைவனைப் பணிந்து பதிகம் பாடிக் கொண்டு, ★**திருக்கூடலையாறு** என்னும் தலத்தையடைந்தார். ஆனால் அவ்வூரை வணங்காது திருமுதுகுன்றம் எனும் தலத்தைநோக்கி நம்பியாரூரர் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது சிவபெருமான் ஒரு வேதியர் வடிவங்கொண்டு, சுந்தரர் முன்பு வந்து நின்றார். சுந்தரர் அவரை அன்போடு வணங்கி ‘‘இன்று திருமுதுகுன்றத்துக்குச் செல்வழியை எனக்குச் சொல்லும்!’’ என்று கேட்டார். வேதியர் வேடத்திலிருந்த இறைவரும் ‘‘இந்த வழி கூடலாற்றூரைச் சேர்வதாகும்’’ என்று கூறிச் சுந்தரருக்கு வழித் துணையாக உடன் சென்றார். ஊரை நெருங்கும்போது திடீரென்று துணையாய் வந்த வேதியர் மறைந்தார்.

சுந்தரர் அதைக் கண்டு கைகூப்பித் தொழுது வழித்துணையாய் வந்தவர், சிவபெருமானே என்று உணர்ந்து ‘‘அடிகள் இவ்வழி வந்த அதிசயம் அறியேனே’’ என்ற கருத்துடன் ‘‘வடிவுடை மழுவேந்தி’’ என்று தொடங்கும் திருப்பதிகம் பாடித் திருக்கூடலாற்றூரை அடைந்தார். அங்கு இறைவனை வணங்கித் துதித்து, அவரிடம் விடைபெற்று திருமுதுகுன்றத்தை அடைந்தார். அங்குள்ள திருக்கோயிலினுள் சென்றார். வலம் வந்தார். உள்ளே சென்றார்; ஆண்டவனை வணங்கித் தொழுது ‘‘நஞ்சியிடை’’ என்று தொடங்கும் திருப்பதிகம் பாடித் தொழுதார். தான் பொருள் பெறவிரும்பி வந்திருக்கும் குறிப்பினை விளக்க ‘‘மெய்யை முற்றப் பொடி’’ எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். பனிமதிச் சடையர் அவரை வாழ்த்தி பன்னிரண்டாயிரம்

---

3. ★ திருவெஞ்சமாக் கூடல் : இது வெஞ்சன் என்ற அரக்க மன்னன் தலைநகராக இருந்ததால் இப்பெயரைப் பெற்றது.

4. ★ திருக்கூடலையாற்றூர் : இது சிதம்பரத்திற்கு மேற்கே குமராட்சியிலிருந்து, சுமார் ஐந்து மைல் தொலைவில் உள்ளது. இந்த ஸ்தலம், மணிமுத்தாறும் வசிஷ்ட நதியும் கூடிய பிறகு, வடவெள்ளாறும் கூடுமிடத்தில் உள்ளமையால், இந்தப் பெயரைப் பெற்றுள்ளது.

பொன்னைத் தந்தார். அதைக் கண்ட நம்பியாரூரர் பேருவகை கொண்டு இறைவன் தாள் பணிந்து, ''ஐயனே! நீர் தந்தருளிய இப்பொன் முழுதும் திருவாரூர் மக்கள் வியக்குமளவில் அங்கே வரப்பெற அருள் புரிய வேண்டும்'' என்று இறைஞ்சினார். அதைக் கேட்ட இறைவர் ''இப்பொன் முழுதையும் இங்குள்ள திருமணி முத்தா நதியிலே இட்டுவிட்டுத் திருவாரூர்க் கமலாலயம் சென்று அங்குள்ள திருக்குளத்திலிருந்து பெற்றுக் கொள்வாயாக!'' என்று வானிலிருந்து ஒரு வாக்காக இயம்பினார்.

அவ்வாறே ஆண்டவன் தந்த அருள்வாக்கை ஆரூரர் பெற்றுக்கொண்டு மணிமுத்தாற்றுக்கு பொன்னோடு சென்று பொன்னில் மச்சம் வெட்டி ''அன்று என்னை விரைந்தாட் கொண்ட அருள் இதில் அறிவேன்!'' என்று பொற்குவியலை யெல்லாம் ஆற்றில் போட்டார். பிறகு ''ஆன்ம லாபத்திற்குரிய பணிபுரியும் அந்தணர்கள் வாழும் திருவம்பலத்திலே சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தை நேரே கண்டு கும்பிடுவோம்!'' என்று எண்ணித் திருமுதுகுன்றை வணங்கித் தில்லையை நோக்கிச் சென்றார்.

செல்லும் வழியிலுள்ள திருப்பதிகளையெல்லாம் சுந்தரர் தொழுது விட்டுத் திருக்கடவூரைப் போற்றிசைத்து தில்லை மூதூரை அடைந்தார். திருவீதி, முதலியவற்றை வணங்கி உள்ளே சென்றார். திருமாளிகையை வலம் வந்தார். பின் நடராசப் பெருமானின் திருநடனக் காட்சியைக் கண்டு உடல் சிலிர்க்க, உள்ளம் உவகை பெற அவரடி வணங்கினார். ஆண்டவனைத் திருப்போரூரிலே கண்ட நிலையை சிறப்பாகக் கருத்தில் கொண்டு, 'மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். சைவ நெறியான நன்னெறியில் நிற்பவர்களுக்கு, காலன் கைப்பட்டு நரகம் அடையாத அருளினைத் தரும் சர்வ வல்லவனின் பெருமையைத் திருப்பேரூரில் கண்டு மகிழ்ந்ததைச் சிறப்பித்து, அப்பதிகத்தில் அமைத்தருளினார். பின் தில்லைவாழ் அந்தணர்கள் தம்மைப் போற்ற அங்கேயே சிலகாலம் தங்கியிருந்தார். பிறகு அவர் தில்லையிலிருந்து புறப்பட்டு திருக்கருப்பறியலூர் என்னும் பதியிலுள்ள ★**திருக்கொகுடிக் கோயிலை** அடைந்து, திருக் கோபுரத்தைத் தொழுதார். உள்ளே சென்று, பெருமகிழ்வுடன் இறைவனைத் துதித்து வணங்கி, இறைவனை நினைக்க நினைக்க எழும் இன்பப் பெருக்கினை

1. ★ திருக்கொகுடிக் கோயில் : கொகுடி என்ற ஒரு வகை முல்லை மலரைப் போல அமைந்த கோயிலாகும்.

விளக்கும் ''சிம்மாந்து'' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். பின் திருப்பழமண்ணிப் படிக்கரை என்னும் ஊரையடைந்து இறைவனை வணங்கி 'முன்னவன்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி மேலே சென்றார். திருவாழ்கொளி புத்தூரினைத் தாண்டிச் சென்று, பின் அவ்விறைவனை வணங்காதது நினைந்து திரும்பி வந்து, 'தலைக்கலன்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடித் துதித்தார். பிறகு அவர் ★திருக்கானாட்டுமுள்ளூருக்குச் சென்றார். அப்பொழுது வழியிலே சிவபெருமான் தோன்றி, அவருக்குக் காட்சி தந்தார். ''இறைவன் பாத மலர் கண்டேன்'' என்ற கருத்துக்கள் தெரிய 'வள்வாய மதிமிளிரும்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிவிட்டுப் பின் ★'திருஎதிர் கொள்பாடி' என்னும் தலத்தை அடைந்து 'மத்த யானை' என்று பாடலடி தொடங்கி 'எதிர்கொள்பாடி என்பது அடைவோம்' என்று முடியும் சித்தநிலைத் திருப்பதிகம் பாடி, இறைவனை வழிபட்டார். பிறகு அவர் திருவேள்விக்குடிக்குச் சென்று அங்குள்ள இறைவனையும் வணங்கிப் பின் திருத்துருத்தினை எனும் தலத்தில் 'மூப்பதுமில்லை' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடித் துதித்து இறைவன் அங்கு காட்டிய திருமணக் கோலத்தையும் தம் மனதுட் கொண்டு, பின் பல ஊர்கள் வழியாகச் சென்று திருவாரூரை அடைந்தார். அங்கு இறைவனை வணங்கி விட்டுப் பின் பரவையாரது திருமாளிகையையடைந்தார். அவரைக் கண்டதும் பரவையார் தன் தாமரைக் கண்கள் மலர, கொவ்வைப் பழம் போன்ற சிவந்த வாயில் குமிழ்ச்சிரிப்பு பொங்கத் தன் கணவரை வணங்கிப் பெரிதும் உபசரித்து ''எங்களையும் நினைத்தருளினீர்களே! உங்கள் கருணைக்கு யாம் தகுதியுடையோமோ?'' என்று சொல்லி மகிழவே பரவையாருடன் நம்பியாரூரர் இனிமையாக வாழ்ந்து வரலானார்.

ஒரு நாள் அவர் பரவையாரை நோக்கி, ''திருமுதுகுன்றப் பெருமான் நமக்களித்த பொன்னைத் திருமணி முத்தாற்றில் புகும்படி இட்டோம். இப்போது அப்பொன்னை நம் திருவாரூர்

---

2. ★ திருக்கானாட்டு முள்ளூர் : இது இப்போது 'கானாட்டாம் புலியூர்' என்று வழங்கப்படுகிறது.

3. ★ திரு எதிர்கொள்பாடி : இது மேலைத் திருமணஞ்சேரி என வழங்கப்படுகின்றது. அன்பனாகிய அரசகுமாரன் ஒருவனைச் சிவபெருமான் மாமனாய் எதிர்கொண்டு அழைத்துச் சென்ற ஐதீகத்தால், இந்தப் பெயரினைப் பெற்றதாகக் கூறுகின்றனர்.

கமலாலயத் திருக்குளத்தில் போய் அவரருளால் எடுத்துக் கொண்டு வருவோம். என்னுடன் வருவாய்!'' என்று கூப்பிட்டார். ''என்ன அதிசயம் இது! என்று, நீங்கள் என்ன சொன்னீர்கள்?'' மின்னல் கொடி போன்ற பரவையார் ஒரு சிறு புன்சிரிப்புடன் கேட்டார். ''நங்கையே! என் நாதன் அருளால் குளத்திலிருந்து பொன்னை எடுத்து உனக்குத் தருகிறேன்! பொய்யல்ல'' என்றார் சுந்தரர். அவ்வாறே தம்பதிகள் இருவரும் புறப்பட்டார்கள். பூங்கோயிலினுட் புகுந்து புனிதர் வன்மீகநாதரின் திருவடிகளை நம்பியாரூரர் வணங்கி விட்டுத் திருமாளிகையினை வலம் வந்து, திருக்குளத்தை அடைந்தார். பிறகு அவர் தம் துணைவியான பரவையாரை கரையிலே நிறுத்திவிட்டுக் குளத்திலே இறங்கி, நாற்புறமும் பொன்னைப் பெறுவதற்குத் தடவினார். முன்னாளில் போட்டு வைத்த பொன்னைத் தேடியெடுப்பது போலவே தடவித் தடவிப் பார்த்தார்! ஆனால் இறைவன் செய்த சோதனையால் பொன் கிடைக்கவில்லை. நம்பியாரூரரின் பாட்டினைப் பெற வேண்டும் என்ற இறைவனின் எண்ணம் நம்பியாரூரருக்குப் புரியாததால் உடனே பொன் அகப்படவில்லை! பரவையாரோ ''பொன்னை ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடுகிறீர்! அருள் இதுவோ! சொல்லும்!'' என்று சிரித்தார். அதைக் கண்டு பெரிதும் வருந்திய நாயனார் ''ஆற்றினில் போட்டுக் குளத்தினில் பெற்றுக்கொள்ளச் சொன்னீரே! இப்போது அருளின்றி என்னைத் தவிக்க வைப்பதும் முறைதானோ?'' என்று இறைவனை இறைஞ்சித் தொழுதார். ''பெருமானே! என் பரவையார் சிவந்த வாயால் சிரிக்குமளவுக்கு என்னை ஆளாக்காமல் முன் அருளியபடியே சீக்கிரம் பொன்னைக் கொடும்!'' என்ற கருத்தில் ''பொன் செய்த மேனியினீர்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றினார். அப்போதும் குளத்தில் பொன் கிடைக்கப் பெறாமல் பெரிதும் மனமுடைந்து பின் ''ஏத்தா திருத்தறியேன்'' என்னும் திருப்பாட்டில் இறைவனை ''அருட்பெருங் கூத்தனே! ஆற்றில் இட்ட பொன்னை இக்கோமளமாகிய பரவையின் முன்னே தந்தருளுவாய்'' என்று துதித்தார்.

அப்போது இறைவன் அருள் சுரந்தது. திருக்குளத்தில் பொன் திரளாக எழுந்தது; நம்பியாரூரர் உள்ளம் குளிர்ந்தது; பொன்னையெல்லாம் எடுத்துக் கொண்டு பூரிப்போடு கரையேறினார். அதைக் கண்டு விண்ணவர்களும் மலர்மாரி பொழிந்தனர். நிலவுலகத்தினர் ''இது என்ன அதிசயம்! இத்தகைய பேறு யாருக்குத்தான் கிடைக்கும்?'' என்று அதிசயித்து தொழுதார்கள். கரையேறிய நம்பியாரூரரோ, பொன்னில் சிறிது எடுத்து, மாற்றுக்கு மூலமாகத் தாம் முன்பு கொண்டு வந்த மச்சத்தோடு ஒப்பிடும்படி உரைத்துப் பார்த்தார்.

சிவபெருமானின் திருவருளால் மாற்றுத் தாழ்ந்திருக்கக் கண்டார். பெரும் அதிர்ச்சியடைந்து மீண்டும் இறைவனைத் தொழுது பாடினார். மெய்யன்பரின் பாடலை மீண்டும் மீண்டும் கேட்பதற்காகவே இவ்வாறெல்லாம் சோதனை தந்த சிவபெருமான், பின்மாற்றுக் குறையாப் பொன்னைத் தந்தருளினார். பெருமகிழ்வோடு பொன்னைக் கொண்டு நம்பியாரூரர் குளக்கரையிலுள்ள பரவையாரிடம் வந்தார். பிறகு பொன்னையெல்லாம் ஆட்களின் மேல் சுமையாக ஏற்றுவித்துப் பரவையாருடனே திருமாளிகைக்கு அனுப்பி விட்டுத் தாம் திருமூலட்டானேசுவரரது திருவடிகளைச் சென்று வணங்கினார். அதன்பிறகு திருவீதியின் வழியாக பரவையாரின் திருமாளிகையினுள்ளே புகுந்து மங்கல வாழ்த்தின் ஒலி சிறந்து ஓங்க, சிந்தையெல்லாம் மகிழ்ச்சி நிறையப் பரவையாருடன் இன்புற்றுத் தங்கியிருந்தார்.

இவ்வாறு நம்பியாரூரர் சில நாட்கள் இன்புற்றிருந்த பிறகு தலயாத்திரை செல்ல வேண்டுமென்ற வேட்கை எழவே, திருவாரூரிலிருந்து புறப்பட்டு திருநள்ளாற்றையடைந்தார். பின் திருக்கடவூர், சென்று, 'மருவார் கொன்றை' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். பின் திருக்கடவூர் வீரட்டானத்தில் கூற்றுவனுடைய வீரம் தொலைத்த சிவபெருமானின் திருவடிகளைப் பணிந்து ''பொடியார் மேனியனே'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். பிறகு திருவலம்புரம் என்னும் திருப்பதியை அடைந்து, இறைவனைப் பணிந்து 'எனக்கினி' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். அதன்பிறகு நவரத்தினங்களாலாகிய தீபத்தையும், முத்துக்களாகிய பூக்களையும், அலைகளாகிய கைகளினால் கடலானது ஏந்திக் கொண்டு வழிபாடு செய்யும் திருச்சாய்க்காடு என்னும் சிவதலத்துக்குச் சென்றார். அங்குள்ள இறைவனை வணங்கி விட்டுத் திருவெண்காடு, திருநனிபள்ளி, திருச்செம்பொன்பள்ளி முதலிய தலங்களை வணங்கினார். அதன்பின்னர் திருநின்றியூர்த் திருக்கோயிலுக்குச் சென்று சிவபெருமானை வணங்கித் திருப்பதிகம் பாடும்பொழுது திருநாவுக்கரசர் பாடியருளிய 'ஏழெழுநூறு' (7 X 700 = 4900) திருப்பதிகங்களைப் பற்றிப் பாராட்டிப் பாடினார். அங்கு அடியார்களோடு சில காலம் தங்கியிருந்துவிட்டு பயணம் செல்லும்போது 'திருநீடூர்' என்னும் திருத்தலத்தை வணங்காமல் சென்றுவிட்டார். சிறிது தூரம் சென்றதும், தமது மெய்யுணர்வினால் திரும்பி வந்து 'பரவனைப் பணியா விடலாமே' என்ற திருப்பதிகம் பாடிக்கொண்டு, திருக்கோயிலினுள்ளே சென்று இறைவனை வணங்கினார். அதன்பின் திருப்புன்னூர், திருக்கோலக்கா என்ற ஸ்தலங்களை வணங்கினார். திருக்கோலக்காவின்

நகர்ப்புறத்திலே நம்பியாரூரருக்கு இறைவன் எதிர்க்காட்சி தந்தருளினார். அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து பாடிய திருப்பதிகத்தில், திருஞானசம்பந்தர் தமது திருக் கைகளால், கைத்தாளம் போட்டு ஆர்வத்துடன் பாடுவதைக் கண்ட சிவபெருமான், அது கண்டு இரங்கித் திருவருள் கொண்டு, திருப்பொற்றாளம் கொடுத்தருளியதைப் பாராட்டித் துதித்தார். அங்கிருந்து சீகாழியை அடைந்தார். அங்கு திருஞானசம்பந்தர் திருவடிகளைத் துதித்துக் கொண்டு, 'திருக்குருகாவூர்' என்னும் தலத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.



அப்படிச் செல்லும்போது, நம்பியாரூரர் தம் தொண்டர் கூட்டத்தோடு பசியாலும் தாகத்தாலும் வருந்திக் கொண்டே நடந்து சென்றார். அவர் நிலையையுணர்ந்த சிவபெருமான் தண்ணீரும் பொதி சோறும் கொண்டு நம்பியாரூரர் நடந்து வரும் வழியில் வெய்யிலின் வெப்பத்தைத் தணிப்பதற்காக குளிர்ந்த தாமரைத் தடாகம் போன்ற ஒரு தண்ணீர்ப் பந்தலை அமைத்து வேதியர் போல் வேடமிட்டுக் கொண்டு, நம்பியாரூரரை எதிர் நோக்கிக் காத்திருந்தார். நம்பியாரூரர், அடியார்கள் திருக்கூட்டத்துடன் அந்தப் பந்தலுக்குள் புகுந்து, வேதியர் வேடத்திலிருந்த சிவபெருமானை நோக்கி, 'சிவாய நம' என்று சொல்லிக் கொண்டே அவரருகில் அமர்ந்தார். வேதியர், நம்பியாரூரரை நோக்கி, ''ஐயா! நீங்கள் இப்பொழுது மிகவும் பசியால் வாடுகிறீர். என்னிடமுள்ள இப்பொதிச் சோற்றைத் தருகிறேன். இனிமேலும் காலம் தாழ்த்தாமல் இதைச் சாப்பிட்டு குளிர் நீரும் குடித்து இளைப்பாறும்!'' என்று சொன்னார். அதைக் கேட்ட நம்பியாரூரர் ''வேதியராகிய இவர் கொடுக்கும் பொதிச் சோற்றை மறுக்கலாகாது'' என்று வேதியர் கொடுத்த கட்டுச்

சோற்று மூட்டையைப் பெற்றுக்கொண்டு, அடியார்க்குமளித்துத் தாமும் திருவமுது செய்தார். மிகவும் பசித்து வந்த அடியார்களும் அருந்தும்படி வேதியர் கருணையுடன் அளித்த பொதிச்சோறு வளர்ந்து பெருகியது. எல்லோரும் உணவுண்டு, இறைவனின் திருவருளைப்போல் குளிர்ந்திருந்த தண்ணீரைப் பருகி, இறைவன் திருப்புகழைப் பாடித் துதித்தனர். பிறகு உண்ட களைப்பினால் நம்பியாரூரர் பள்ளிகொண்டு துயின்றார். அடியவர்களும் சோறுண்ட மயக்கத்தில் துயின்றார்கள். உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டல்லவா? அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது, வேதியராக வந்த இறைவன் தண்ணீர்ப்பந்தலுடன் மறைந்து விட்டார். நம்பியாரூரர் துயில் நீங்கியெழுந்தபோது, வேதியரையும் பந்தலையும் காணாமல் திகைத்தார். வேதியராய் வந்தவர் சிவபெருமானே என்றுணர்ந்து 'இத்தனையா மாற்றம் அறிந்திலேன்' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியவாறே 'திருக்குருகாவூர் வெள்ளடை' என்னும் திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கிப் பணிந்து, பல பதிகங்களைப் பாடினார். அங்கேயே தமது திருத் தொண்டர்களுடன் சிலகாலம் தங்கியிருந்தார். அதன் பிறகு திருக்கழிப்பாலை என்னும் தலத்தை வந்தடைந்தார். அங்குள்ள இறைவனைத் துதித்துவிட்டு, திருத்தில்லை வந்தார். அங்கு பொன்னம்பலத்தில் ஆடும் தூக்கிய திருவடியை இறைஞ்சி இன்னிசை பாடிவிட்டு திருத்தினை நகரை அடைந்தார். அங்குள்ள இறைவனை வணங்கிப் போற்றியிசைத்து விட்டு திருநாவலூருக்குச் சென்றார். நாவலூர் மக்கள், அவரை நகர்ப்புறத்திலேயே எதிர்கொண்டு வரவேற்றனர். நம்பியாரூரர் அவர்களுடன் திருக்கோயிலுக்குள் சென்று 'கோவலன் நான்முகன்' என்ற திருப்பதிகத்தைப் பாடி இறைவனை வணங்கினார். திருநாவலூரில் அன்பிற் சிறந்த அடியார்களோடு சிலகாலம் தங்கியிருந்தார்.

பிறகு நம்பியாரூரர், தொண்டை நாட்டு சிவஸ்தலங்களை வணங்க எண்ணினார். உடனே நல்லூரில் இருந்து புறப்பட்டு, பல ஆறுகளையும், மலர்கள் நிறைந்த முல்லை நிலங்களையும், குறிஞ்சி நிலங்களையும், மருத நிலங்களையும் கடந்து: திருக்கழுக் குன்றத்தை அடைந்தார். அங்குள்ள இறைவனை வணங்கி, இன்னிசைத் திருப்பதிகம் பாடி அங்கே சிலகாலம் தங்கியிருந்தார். அதன் பிறகு அவர் தம் அடியார் கூட்டத்தோடு திருக்கச்சூருக்குச் சென்றார். அங்குள்ள திருஆலக் கோயில் என்ற ஆலயத்தில், இறைவனை வணங்கித் துதித்து, ஒருபுறம் தங்கியிருந்தார். அப்போது திருவமுது செய்யும் காலமாயிற்று. சமையற்காரர்கள் வரவில்லை; அதனால் நம்பியாரூரர் மிகவும் பசியால் வருந்துவதை அறிந்த சிவபெருமான், ஓர் ஏழை அந்தணர் வடிவமெடுத்துக் கொண்டு கையில் ஒரு வெறும்

திருவோட்டினை ஏந்தி வந்து, நம்பியாரூரர் முகத்தைப் பார்த்து, ''நீர் பசியால் மிகவும் வருந்தி இளைப்புற்றிருக்கின்றீர்; உமது பசி வேட்கை நீங்கும். நான் இப்போதே சோறு யாசகம் வாங்கி உமக்குக் கொண்டு வந்து தருகிறேன். நீர் அப்புறம் போகாமல் இங்கேயே அமர்ந்திரும்!'' என்று சொல்லி விட்டு, திருக்கச்சியூரிலுள்ள அந்தணர் வீடுகள்தோறும் பிச்சையெடுக்கச் சென்றார். வெள்ளிய திருநீற்றின் அழகு திகழவும், முப்புரி நூலின் ஒளி அசைந்து விளங்கவும், பாத தாமரைகள் நிலத்தின்மேல் பொருந்தவும், கண்டவர் மனமெல்லாம் உருக உச்சி வெய்யலில் சோற்றுப் பிச்சைக்காக அலைந்தார். அவ்வாறு யாசகம் வாங்கிய சோற்றை எடுத்துக் கொண்டு வந்தார். நம்பியாரூரர் முன் வந்து இனிய சோற்றையும் கறிகளையும் கொடுத்துப் ''பசி தீரும்படி உண்பீர்!'' என்றார்.

சுந்தரமூர்த்தி நாயனார், வேதியரின் பெருங்கருணையைப் பாராட்டி, அவரை அன்புடன் வணங்கி, அவற்றை வாங்கித் தம்மோடு இருந்த அடியார்களோடு திருவமுது செய்தார். அப்பொழுது அருகில் நின்றவர் போலவே நின்ற வேதியர் ஆகிய சிவபெருமான், நம்பியாரூரர் அறியாதபடி மறைந்து விட்டார். அதைக் கண்டதும் நாவலூரர் தம்மிடம் வேதியர் வடிவில் வந்தவர் சிவபெருமானே என்று மதித்து ''அடியேன் பொருட்டு திருமேனி தாங்கி, உச்சி வெய்யலில் உம் திருவடிகள் வருந்த எழுந்தருளி வந்த பெருங்கருணை இருந்தவாறுதான் என்னே!'' என்று மனங்கசிந்துருகி, 'முதுவாயோரி' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி இறைவனைப் பணிந்தார்.

பின்னர் நம்பியாரூரர் இறைவன் இன்னருளால் அங்கிருந்து புறப்பட்டு, வேறு சில சிவத்தலங்களையும் அடைந்தார். விருப்பமுடன் தன்னை வரவேற்ற அடியார்களையும் அன்புடன் கூட்டிச் சென்று முக்கட் பெருமானின் திருவடிகளைப் பணிந்தார். திவ்ய திருப்பதிகங்கள் பாடினார். பின் திருவேகம்பர் எழுந்தருளியுள்ள காஞ்சிபுரம் வந்தடைந்தார். சுந்தரமூர்த்தி நாயனார் வருகை புரியும் பெரும் பேற்றைப் பெற்ற மகிழ்ச்சியில், காஞ்சிமாநகரில் வாழ்வோர், தோரணங்களையும் தூப தீபங்களையும் ஏற்றி வீதிகளையும், வீடுகளையும் அலங்கரித்து, எல்லைப்புறத்திற்கு வந்துள்ள நாவலூர் நம்பிகளை எதிர்கொண்டு வரவேற்று வணங்கினார்கள். நம்பியாரூரரும் மகிழ்வோடு, அவர்களுடன் சென்று திருவேகாம்பரத் திருக்கோயிலை அடைந்து, உணர்ச்சிப் பெருக்கால் ஒவ்வோரிடத்திலும் நின்று பரவசமாகிப் பாடிப் பரவினார். பின் அங்கிருந்து திருகாமக் கோட்டத்தை அடைந்து வணங்கி திருக்கச்சி மேற்றளியினை அணைந்து

அன்போடு பணிந்து 'நுந்தாவொண் சுடரே!' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிப் போற்றினார். ★திருவோண காந்தன் தளியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பணிந்து, உரிமையோடு தோழமைத் திறம் பேசினார். பிறகு தம் அடிமைத் திறத்தையும் எடுத்துக் காட்டி, பொற்காசுகள் வேண்டியிருப்பதையும் சுட்டிக் காட்டி 'நெய்யும் பாலும்' என்று தொடங்கும் அழகிய திருப்பதிகம் பாடினார். இறைவன் திருவுளம் இரங்கியது. எண்ணற்ற பொற்காசுகள் இவரைச் சுற்றிக் குவிந்தன. அவற்றைப் பெற்றுக் கொண்ட நம்பிகள் பேருவகையடைந்து பின் அங்கிருந்து புறப்பட்டு திருக்கச்சியனேக தங்காவதத்தை அடைந்தார். செங்கண் விடையாரைப் பணிந்தார். 'தேனெய் புரிந்துழல்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். இறைவன் தங்கியிருக்கும் இடமே இது? என்ற கருத்துடன் அமைந்த இப்பதிகத்தைப் பாடி பரவச நிலையில் துதித்தார். பின் இறைவனது பிற தானங்களையும் சென்று வணங்கி விட்டு, 'திருவன் பார்த்தான் பனங்காட்டூர்' சென்றடைந்தார். பிறப்பிலேயே பிறந்த பிணிகளையும், துன்பங்களையும், தீரா நோய்களையும், தீர்க்கவல்ல தீர்க்கதரிசியை வணங்கி, 'விடையின் மேல் வருவானை' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். பின் திருமாற்பேறு, திருவல்லம் முதலிய பதிகளை வணங்கிவிட்டு மேற்கிலே சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் மேலும் பல இடங்களையும் தரிசித்துவிட்டு மேகங்கள் சூழ்ந்த சிகரங்களைக் கொண்ட திருக்காளத்தி மலையை அடைந்தார்.

கண்ணப்பரின் துன்பத்தைத் துடைத்து சிவபெருமான் மகிழ்ந்திருந்த காளத்தி மலையை நம்பியாரூரர் அணுகிப் பணிந்தார். மலைமேல் ஏறிச் சென்று, மலைமேல் மருந்தாயிருக்கும் சிவனாரின் திருப்பாதம் போற்றி, 'செண்டாடு விடையாய்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். அதோடு அன்புப் பெருக்கினால் ஆனந்த மிகுதியினால் கண்ணப்ப தேவரின் திருவடிகளையும் வணங்கினார். பிறகு அங்கிருந்தவாறே திருப்பருப்பதம், திருக்கேதாரம் முதலிய வடநாட்டுத் தலங்களைத் தம் மனதால் நினைத்து அத்திசைகள் நோக்கித் தொழுது, திருப்பதிகம் பாடினார். பின் அங்கிருந்து புறப்பட்டு, சிவலோகம் போல இறைவன் அமர்ந்திருக்கும் திருவொற்றியூர் என்னும் திருப்பதியை

★திருவோண காந்தன் தளி : இது ஓணன், காந்தன் என்ற இரண்டு அசுரர்கள் பூசித்தமையால் இப்பெயர் பெற்றது. தனிக் கோயில். இரண்டு சந்நிதிகள் ஒரே ஆலயத்தில் உள்ளன. (தளி– கோயில்) இது, கச்சி ஏகாம்பரத்துக்கு மேற்கே சர்வ தீர்த்தத்திற்கு வடமேற்கே, சுமார் முக்கால் மைல் தொலைவில் உள்ளது.

வந்தடைந்தார். அவரது வருகையையறிந்த சிவனடியார்கள் வீதிகளையும், வீடுகளையும் அலங்கரித்து, மங்கல இசைக் கருவிகளோடு மாதர்களும் ஆடவர்களும் அவருக்கு ராஜ வரவேற்பைத் தந்தார்கள். அவ்வூரிலுள்ள சிவன் கோவிலைக் கண்டு எண்ணிலாப் பெரும் பக்தி கொண்டு, விண்ணினை அளக்கும் திருக்கோபுரத்தை வலம் வந்தார். பின் உடலும் உயிரும் கரையும் வண்ணம், நிலமுற இறைவன் முன் விழுந்து 'ஒற்றி நகர் நீங்கல்' என்னும் எழுத்தினைப் புகுத்தி, எழுதும் 'எழுத்தறியும் பெருமான்' ஆகிய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி அமுத இசை பொருந்தப் ''பாட்டும் பாடிப் பரவி'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். பின் அவ்வூரிலேயே நம்பியாரூரர் சிலகாலம் தங்கியிருந்தார்.

★**ஞாயிறு** என்னும் ஊரிலே ஞாயிறு கிழார் என்னும் வேளாளர் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

முன்பு திருக்கயிலையில் நம்பியாரூரரைக் காதலித்த இரு பெண்களில் அனிந்ததையார் என்பவர் நம்பியாரூரரை முன்னிட்டுப் பூவுலகில் மானுடப் பெண்ணாகப் பிறக்கும் வரம் பெற்று வந்து சிவபெருமானின் திருவருளால் ஞாயிறு கிழாருக்கு அருமை மகளாகப் பிறந்தார். அவருக்கு சங்கிலி யார் என்னும் பெயர் சூட்டப்பட்டது. உமாதேவியின் மலர்ப்பாதம் மறவாத அன்பு சங்கிலியாரின் உள்ளுணர்வில் ஊறியிருந்தது. சங்கிலியார் பிறந்து வளர்ந்து சிறுமியர்களோடு விளையாடிப் பருவங்கள் தோறும் பண்புகளில் வளர்ந்து, ஒழுக்கங்களில் சிறந்து, தன் மரபுச் செயல்களோடு தெய்வீக உணர்ச்சிச் செயல்களிலும் எவரும் அதிசயிக்கும் வண்ணம் மகிழ்ந்து பருவத்தை அடைந்தார். அதைக் கண்டதும் சங்கிலியாரின் தந்தை தம் மனைவியைப் பார்த்து, ''நம் பெண்ணின் அழகுக்கும் குணத்துக்கும் அறிவுக்கும் இம்மண்ணுலக மாந்தர்கள் எவருமே ஈடாக மாட்டார்கள். அவளுக்கு மணப்பருவம் வந்திருப்பதால் நல்ல முறையில் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்!'' என்றார்.

அதைக் கேட்டு அவரது மனைவியாரும், ''சீக்கிரம் மணமகனைத் தேர்ந்தெடுங்கள்!'' என்றாள். இவ்வாறு தாய்

★ஞாயிறு : இந்தத் தலத்தில் உள்ள ஒரு தாமரைத் தடாகத்தில், நடுவே தனியாக மலர்ந்திருந்த தாமரையின்மேல், காசி யாத்திரையாகச் செல்லும் ஒரு சோழனுக்கு இறைவன், சூரியனாகத் தோன்றிக் காட்சி தந்தார். அதனால் இப்பெயர் பெற்றது. இது சென்னைக்கு வடகிழக்கு இருப்புப் பாதையில் சுமார் 17 மைல் தொலைவிலுள்ள மீஞ்சூர் நிலையத்திற்கு வடக்காக 17 மைல் தொலைவில் உள்ளது.

தந்தையர் பேசுவதைக் கேட்டதும் சங்கிலியார் மனம் வாடினார். ‘‘சிவபெருமானின் திருவருளைப் பெற்ற ஒருவருக்கே நான் உரியவளாயிருக்க, இவர்கள் திட்டமும், செயலும் என்னை, எந்நிலையில் ஆக்குமோ?’’ என்று திகைத்தார். அடுத்த கணமே உணர்வு மயங்கி மிகவும் அயர்ந்து கீழே தரையில் விழுந்தார். அதைக் கண்ட அவரது தாய் தந்தையர்கள் பதறித் துடித்து, சங்கிலியாரைப் பரிந்தெடுத்து, ‘‘இவருக்கு என்ன நேர்ந்தது?’’ என்று குழம்பி குளிர்நீரைத் தெளித்துச் சங்கிலியாரின் மயக்கத்தை நீக்கி ‘‘உனக்கு என்னம்மா நிகழ்ந்தது? ஏனம்மா இப்படி மயங்கி விழுந்தாய்’’ என்று கேட்டார்கள். அதற்கு சங்கிலியார் தன் மனநிலையை மறைக்காமல், ‘‘நீங்கள் இன்று என்னைப் பற்றிப் பேசியது என் தன்மைக்கு இசையாது. சிவனடியார் ஒருவருக்கே நான் உரியவள். இனிச் சிவபெருமான் திருவழியைத் தவிர, தாங்கள் காட்டும் ஒரு வழியும் என்னை அணுகாது! இனிமேல் நான் திருவொற்றியூருக்குச் சென்று சிவபெருமானின் அருள் வழியிலேயே நிற்பேன்’’ என்றார். சங்கிலியாரின் வார்த்தைகள் பெற்றவர்களின் உள்ளத்தில் அயர்வையும் பயத்தையும் அதிசயத்தையும் மூட்டின. இருந்தாலும் இதை வெளிக்காட்டிக் கொள்ளாமலும் மற்ற ஒருவருக்கும் சொல்லாமலும் மனதிற்குள்ளேயே மூடி மறைத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய நெருங்கிய உறவினன் ஒருவன் உண்மையறியாமல் சங்கிலியாரைத் திருமணம் புரிந்து கொள்ள விரும்பிப் பெண் பேசுவதற்காகச் சிலரை அனுப்பினான். வந்தவர்களுக்கு உண்மை விபரம் கூறி, வேதனை தரக்கூடாது என்று கருதிய ஞாயிறுகிழார், தந்திரமாய் வருத்தம் வந்திடாதபடி ஏதோ பேசி அனுப்பிவிட்டார்.

மணம் பேச வந்தவர்கள் திரும்பிப் போய் சேருவதற்குள் சங்கிலியாரைப் பெண் கேட்டு அனுப்பின மணமகன் ஏதோ ஒரு பெரும் பாவமும் தீங்கும் செய்து விட்டவனைப்போல் திடீரென உயிர் நீத்து இறந்துவிட்டான். இந்நிகழ்ச்சி சங்கிலியாரின் பெற்றவர்களை மேலும் அதிர வைத்தது. ‘‘சங்கிலியாருக்குத் தகாத திருமணப் பேச்சை எடுத்தால் வரக்கூடாத இன்னல்களும் அபாயங்களும் வருமென உலகிற்குக் காட்ட சிவபெருமான் செய்த விதியே இந்த நிகழ்ச்சி!’’ என்று முடிவு கட்டினார்கள்.

‘‘நம் மகள் தெய்வப் பெண்! இவள் செய்கையையும் மனத்தையும் அறிந்தோர் இனி இவளைப் பற்றிப் பேசவும் அஞ்சுவார்கள். ஈசர் திறமின்றி இவள் வேறு வார்த்தையும் அறியாள்! இவளுடைய குணத்தை முன்னிட்டு இவள் குறிப்பித்தபடியே இவளைத் திருவொற்றியூர் இறைவனிடம்

கொண்டு போய் விட்டு விடுவோம்!'' என்று பெற்றவர்கள் எண்ணினார்கள். தங்கள் உற்றார் உறவினர்களுக்கும் இந்நிலையை அறிவித்தார்கள். பிறகு இன்மொழிச் சங்கிலி யாரை அவர்கள் நோக்கி, ''நீ திருவொற்றியூரை அடைந்து கண்ணுதல் பெருமானின் திருவருளோடு கன்னிமாடத்தில் தங்கித் தவம் புரிவீர்'' என்று கூறினார்கள். பிறைசூடிய பெருமானின் விதியாலே வேறு வழியின்றி தந்தையும் சுற்றத்தாரும் மங்கை சங்கிலியார் சொன்னபடி செய்யவும் துணிந்தார்கள். அவர்கள் பெருஞ் செல்வத்துடன், சங்கிலி யாரைத் திருவொற்றியூருக்கு அழைத்துச் சென்று, திருக்கோயிலினுள்ளே புகுந்து, இறைவனை வணங்கி, அவ்வூரில் உள்ளோருக்கு அறிவித்து, அவர்களுடைய சம்மதத்தின் பேரில், திருக்கோயிலின் பக்கத்திலேயே கன்னிமாடம் ஒன்றை அமைத்தார்கள். பிறகு கன்னி மாடத்திற்கு வேண்டிய சேடியர், ஏவற் பெண்டிர் முதலிய பாதுகாப்புகளைச் செய்து, தக்க செல்வங்களையும் வகுத்து வைத்து, தன் மகளை நோக்கி, ''நாங்கள் உனக்கு வேண்டிய பணிகளைச் செய்ய நீ ஈசனாருக்கு ஏற்ற பணி செய்தலையே விரும்பி, இக்கன்னி மாடத்தில் தங்கி வாழ்!'' என்று கூறி, கண்ணீர் பொழிய, மனம் தரியாது சுற்றத்தார்களோடு கூடி, இறைவனை வணங்கி, விடைபெற்று, தமது ஊராகிய ஞாயிற்றூருக்குத் திரும்பிச் சென்றார்கள். காதல் புரிந்து தவம் புரியும் கன்னியான சங்கிலியார் அந்தக் கன்னி மாடத்தில் தங்கியிருந்து இறைவனின் வழிபாட்டுக்குரிய காலங்கள் தோறும், திருக்கோயிலுக்குச் சென்று, இறைவனை வணங்கி வருவார். தம்மாலியன்ற திருப்பணியைச் செய்யும் பொருட்டு, மலர்கள் நிறைந்த திருப்பூமண்டபத்தினுள் சுற்றிலும் திரையால் சூழப்பட்ட ஒரு பக்கத்திலமர்வார்! முற்பிறவியில் கைலையங்கிரியில் தாம் செய்து கொண்டிருந்த மலர்மாலை தொடுக்கும் திருப்பணியின் தன்மையினையே தொடர்ந்து உணர்வு தலைப்பட்டதனால், பூங்கொடி போன்ற சங்கிலி யார்அவ்வக் காலங்களுக்கேற்றபடி சிவபெருமானின் முடியில் சாத்துவதற்குரிய மலர் மாலைகளைத் திரை மறைவில் இருந்த படியே தம் கைகளால் தொடுத்துக் கொடுத்து வரலானார்.

இவ்விதமாக சங்கிலியார், திருத்தொண்டு செய்து வரும்போது ஆண்டவனருளால் கந்தமாலைச் சங்கிலியாரை நம்பியாரூரர் காதல் மணம் புரிய வரும் பருவம். ஆகையால், ஒருநாள் முன்னை விதியின்படி சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றியூர்ப் பெருமானைத் தரிசிப்பதற்காக திருக்கோயிலி னுள்ளே புகுந்தார். அவர் இறைவனை வணங்கி, திருப்பதிகம் பாடி பலவகையிலும் அடியார்கள் செய்யும் திருத் தொண்டுகளைப் பார்வை இட்டு வணங்கிச் செல்லும் பொழுது,

தாமரைத் தடாகம் போன்ற திருப் பூமண்டலத்தினுள் புகுந்தார். அங்கு அன்பையே நாராகக் கொண்டு திருவைந்தெழுத்தையும் நெஞ்சம் தொடுக்க, கைகளால் மலர் தொடுத்து என்பும் மனமும் உருக, பணி புரியும் அடியார்களை நம்பி யாரூரர் கண்டு தொழுது சென்றார். பிறகு வேறொரு தனியிடத்தில் சங்கிலியார் முன்னாட்களில் வழக்கம்போல் திரைக்கு உள்ளிருந்து பூமாலைகள் தொடுத்து அப்பணி முற்றிய தும் திரையை நீக்கி இறைவருக்குச் சாத்தும்படி தாம் கட்டிய மாலையைக் கொடுத்து விட்டு மின்னல் போலத் திரையின் பின் மறைந்ததை நம்பியாரூரர் தம் ஊழ்வினைத் திறனால் கண்டார்.



துளையாத முத்தையும், வண்டுகள் உண்ணாத புது மலரின் அரும்பையும் போன்ற சங்கிலியாரை நம்பியாரூரர் கண்டதும், அவர் சிந்தை நிறை யழிந்தது. சங்கிலியாரிடமே போய் விழுந்தது. அவர்மீது மன்மதன் எய்யும் மலரம்புகளின் தாக்குதலைப் பொறுக்க முடியாமல் நம்பியாரூரர் ஒருபுறம் வந்தார். அவர் அங்குள்ளாரை நோக்கி, ''இங்கு திரையினுள்ளே பொன்னும், மணியும் விளங்கும் புதிய ஒளியமுதத்தைக் கலந்து, இளம் நிலாவின் குளிரொளியிலே குழைத்துச் சமைத்த மின்னற்கொடி போல் விளங்கும் பெண்ணொருத்தி தோன்றி மறைந்தாள். அவள் என்னுள்ளத்தைத் திரியும்படி செய்துவிட்டாள்! அவள் யார்?' என்று கேட்டார். அதற்கு அருகில் நின்றவர்கள் அவர்தான் 'நங்கை சங்கிலியார்' என்பவர். பெருகும் தவத்தால் ஈசருக்குப் பணிபுரியும் கன்னியராவர் என்று கூறினார்கள். அதைக் கேட்டதுமே சுந்தரமூர்த்தி நாயனார், 'எம்பெருமான் இரு பெண்களின் பொருட்டும் திருவருளால் எனக்கு இப்பிறவியைக் கூட்டுவித்தார். அவர்களில் ஒருத்தி பரவையார். மற்றொருத்தி இவள்தான்!'' என்று மருண்டார். 'மின்னார் சடையாருக்கு

இம்மின்னற் கொடியாள் தொடுக்கும் மலரோடு, என் ஆருயிரையும் சேர்த்துக் கட்டுகிறாள். இவளைச் சிவபெருமானின் திருவருளாலே பெறுவேன்!' என்று நினைத்து ஆவலோடு திருக்கோயிலினுள் சென்றார்.

அங்கு தம்பிரான் தோழரான நம்பியாரூரர் திருவொற்றியூர் தியாகராஜப் பெருமானை வணங்கித் தொழுது, ''உம்மிடம் உமாதேவியாரை ஒரு பக்கத்தில் வைத்து மகிழ்வதுமல்லாமல் தலையிலே கங்கை ஒருத்தியையும் மறைத்தருளும் பெரும் காதல் உடையவரே! இங்கு உமக்குத் திருமாலை தொடுத்துக் கட்டியும் எனது உள்ளக் கட்டு என்னும் மாலையை அவிழ்த்தும், செயல் புரிந்த நிலாமுகத்தினளான சங்கிலியை எனக்குத் தந்தருளி என் வருத்தத்தைத் தீரும்!'' என்று பலவாறு கூறி வேண்டி வெளியே வந்தார். ''எம்பெருமானே! நீ என் எண்ணங்களெல்லாம் உமக்கு அடிமையாகுமாறு எண்ணுகிற என் மன வலிமையையெல்லாம் அந்த மங்கை உடையும்படிச் செய்தாள். செய்வதொன்றும் நானறியேன்! எனக்கு அருள்புரியும்!'' என்று எண்ணி மனந்தளர்ந்து கோயிலின் ஒருபுறம் வந்து இருந்தார். கதிரவன் சாய்ந்து மாலைக்காலம் வந்தது. அந்தி மாலைப்பொழுதைக் கண்டு அதிகம் அயர்ந்தார். தம்பிரான் தோழரான சுந்தரர் பெரும் காதலோடு சங்கிலியாரை மணம் புணர்தலை விரும்பி, சிவபெருமான் தமக்கருள் புரியும் தோழமையை எண்ணி யெண்ணி மனம் நெகிழ்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது, சிவபெருமான், அந்த வன்தொண்டர் முன் வந்து ''இந்த உலகில் யாராலும் அடையமுடியாத பெருந்தவப் பூங்கொம்பான சங்கிலியாரை உனக்குத் தருகின்றோம். உன் மனதில் கொண்ட கவலையை ஒழி!'' என்று கூறியருளினார். நம்பியாரூரர் மகிழ்ந்து பேரன்பு பொங்கப் போற்றி, ''அன்று திருவெண்ணெய் நல்லூரில் நீராகவே வலியவந்து, என்னை ஆட்கொண்டருளி ஒன்றுமறியாத எனக்கு உறுதியளித்தீர். இன்றும் எனது உயிரைக் காக்கும் பொருட்டு இவளை எனக்கு மணம் செய்விப்பதாக ஏற்று நின்றீர்!'' என்று கூறித் தம்பிரானின் திருவடிகளில் விழுந்து பணிந்து துதித்தார்.

இவ்வாறு நம்பியாரூரருக்கு அருள் செய்த சிவபெருமான், அன்று நள்ளிரவில் சங்கிலியாரின் கன்னிமாடத்தையடைந்து தூண்டும் சோதி விளக்குப் போன்ற சங்கிலியாரின் கனவில் தோன்றினார். கனவில் தோன்றிய இறைவனாரின் திருவடிகளில் சங்கிலியார் வீழ்ந்து வணங்கி, பரவசமுற்று அன்புடன் பொங்கி எழுந்து ''அடியேன் உய்யும் பொருட்டு இங்கு எழுந்தருளினீர்! இந்தப் பெரும் பேற்றுக்கு, யான் என்ன செய்யவல்லேன்?'' என்று துதித்தார். அதற்கு சிவபெருமான் ''தவத்தில் சிறந்த சங்கிலியே கேள்! என்னிடம்

பேரன்பு கொண்டவனும் மேருமலையினும் மேன்மையான தவத்தை உடையவனும், உலகமறிய திருவெண்ணை நல்லூரில் என்னால் தடுத்தாட் கொள்ளப்பட்டவனுமாகிய சுந்தரன், உன்னை வேண்டி என்னிடம் வந்து யாசித்தான்! இளமைப் பூரிப்புடையவளே! நீ அவனை மணத்தால் அணைந்து மகிழ்ந்திருப்பாயாக!'' என்று கூறினார். உடனே சங்கிலியார் அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி, ''எம்பிரானே! நீர் அருளிச் செய்த அவருக்கு நான் உரியேன்! உமது அருட்கட்டளையை நான் தலைமேற் கொள்கிறேன். ஆனால் என்னை முறைப்படி திருமணத்தால் நம்பியாரூரருக்குக் கொடுத்தருளும்போது உம்மிடம் அடியாள் கூறவேண்டுவது ஒன்றுள்ளது!'' என்று கூறிவிட்டு, உடம்பின் ஒரு பாகத்தில் உமாதேவியாரையும் உச்சிப் பின்னலின் சடையில் கங்கையையும் வைத்திருக்கும் சிவபெருமானின் முன்னிலையில் பெரும் நாணத்தோடு நின்று ''அந்த ஆரூரர் திருவாரூரில் மிகவும் மகிழ்ந்துறைபவர் என்பதனையும் நீர் மனதில் வைத்துக் கொண்டு, அதற்கேற்றவாறு அருள் செய்தல் வேண்டும்!'' என்றும் விண்ணப்பம் செய்தார்.

திருவாரூரில் பரவையிடம் நம்பியாரூரர் மிகவும் மகிழ்ந்திருப்பவராயிற்றே என்பது அந்த விண்ணப்பத்தில் உள்ள குறிப்பாகும்.

அப்பொழுது சிவபெருமான் நம்பியாரூரரின் நிலையை உணர்ந்து ''சங்கிலியே! நம்பியாரூரன் உன்னை விட்டுப் பிரியாதிருப்பதற்கு உன்னை முன்னிட்டு ஒரு சபதம் செய்வான்!'' என்று கூறிவிட்டு, அங்கிருந்து மறைந்தார். பிறகு சிவபெருமான் நம்பியாரூரரிடம் சென்று, ''நீ சங்கிலியை மணம் செய்து கொள்ளும் நிலையினை, நாம் அவளுக்கு எடுத்துரைத்தோம். அது நிறைவேறுவதற்காக அவளிடம் நீ செய்யவேண்டிய குறை ஒன்றுள்ளது!'' என்றார். அதைக்கேட்ட நம்பியாரூரர் மனமகிழ்ந்து, அவரை வணங்கி, ''அய்யனே! அடியேன் செய்யவேண்டிய குறை என்ன?'' என்று கேட்டார். அதற்குச் சிவபெருமான் ''நீ அவளை மணம் செய்து கொள்வதானால் அவளை நீ பிரியாது அவளோடு ஒன்றியிருப்பதாக ஒரு சபதம் செய்யவேண்டும்! ஆகவே நீ இன்றிரவே அவளிடம் சென்று அச் சபதத்தைச் செய்க!'' என்று கூறினார். சுந்தரர், சிவபெருமானை நோக்கி, ''எம்பெருமானே! என்ன செய்தால், இந்தத் திருமணம் முடியுமோ அதை நான் செய்வேன். அதற்குப் பெருமானே உம் திருவருளும் கிடைக்க வேண்டும்!'' என்று வேண்டினார்.

அதைக் கேட்ட சிவபெருமான், புன்னகைசெய்து, சுந்தரரின் முகத்தைப் பார்த்து ''நீ சபதம் செய்வதாகிய உன்

செயலை நீ முடிப்பதற்கு இனியும் நான் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டார்.

கச்சணிந்த சங்கிலியார்பால் தம் மனதைப் பறிகொடுத்து விட்ட நம்பியாரூரர் ''சங்கிலியாரைப் பிரிந்துபோவதில்லை யெனச் சபதம் செய்தால் சிவபெருமானின் வேறு பல ஸ்தலங்களையும் சென்று வணங்கவேண்டிய கடமையுடைய எனக்கு அது ஒரு தடையாகுமே!'' என்ற கருத்தை மனத்திற் கொண்டு, இறைவனைப் பணிந்து எழுந்து, சிவபெருமானை நோக்கி ''நான் சங்கிலிக்கு அவளைப் பிரியேன் என்று சபதம் செய்து கொடுக்கும் பொருட்டு உம் திருக்கோயிலுக்கு உம் சந்நிதியின் முன் அடியேன், அவளோடு வந்தால், அப்பொழுது உமது சந்நிதியைவிட்டு நீர் நீங்கிச் சென்று மகிழ மரத்தின் கீழே இடமாகக் கொண்டு அமர்ந்தருள வேண்டும்!'' என்று வேண்டினார். தம்பிரான் தோழரான சுந்தரரின் வேண்டு கோளுக்கு சிவபெருமான் இசைந்து, ''நம்பீ! நீ சொன்னபடியே நாம் செய்வோம்!'' என்றார். உடனே சுந்தரர் மகிழ்ச்சியுடன் ''எம்பெருமானே! இனிமேல் எனக்கு எச்செயல்தான் அரியதாக இருக்கும்?'' என்று கூறி, சிவபெருமானைத் துதித்து வணங்கி, கூப்பிய கரங்களோடு விடைபெற்று வெளியே சென்றார்.

செஞ்சடைப்பெருமான், நம்பியாரூரரிடம் ஒரு திருவிளையாடல் புரிய விரும்பியோ அல்லது சங்கிலியாரின் இடைவிடாத வழியடிமைப் பெருமையினாலோ மீளவும் அன்றிரவே, சங்கிலியாரிடம் வந்து முன்போலக் கனவில் தோன்றி, ''நங்கையே! உனக்கு நம்பியாரூரன் நயமாக ஒரு சபதம் செய்துகொடுப்பான். ஆனால் அந்த சபதத்தை நமது திருக்கோயிலில் நம் சந்நிதியின் முன்னால் செய்ய முயல்வான்! அதற்கு நீ இசையாமல், மகிழமரத்தின் கீழ் வந்து செய்யச் சொல்லி அச்சபதத்தை வாங்கிக்கொள்!'' என்று குறிப்பித்தார். அதைக் கேட்டதும் சங்கிலியார் கைகூப்பி வணங்கி, ''மாலயனால் அறிவதற்கரியவரே! அவர் இரகசியத்தை நீர் எனக்குக் கூறியருளியதனால், நான் அடியேனாக ஏற்றுக் கொள்ளப்பெற்றேன்!'' என்று கூறி, கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொழிய இறைவரது சேவடிகளில் விழுந்து பணிந்து எழுந்தார். இவ்வாறு அந்த மங்கையாருக்கு அருள்புரிந்துவிட்டு ஜடாமகுடர் மறைந்தார். சிவபெருமான் தன் கனவிலே கூறி மறைந்ததைக் கண்டதும் சங்கிலியார் பேரதிசயமடைந்து விரைவில் விழித்தெழுந்தார். சிவபெருமானுடைய திருவருளை எண்ணி எண்ணி வியந்தார். அதனால் உறக்கம் வராததால், சங்கிலியார் தம்மருகே தூங்கிக் கொண்டிருந்த தோழிமார்களை எழுப்பினார். 'நீங்கல்' என்ற எழுத்தை எழுதி, அதனால் எழுத்தறியும் பெருமான் எனப் போற்றப்பெற்ற திருவொற்றியூர் தியாகராஜர், தாமாகவே தன் கனவில் இருமுறையும்

வந்தருளித் தன்னிடம் கூறியனவற்றையெல்லாம் சங்கிலியார் தம் தோழியர்களிடம் தெரிவித்தார். அதைக் கேட்ட தோழியர்கள், அச்சமும், வியப்பும், மகிழ்ச்சியும் அடைந்து சங்கிலியாரை வணங்கினார்கள்.

மறுநாள் திருப்பள்ளியெழுச்சிக்குரிய மலர் மாலைகளைத் தொடுப்பதற்குரிய பொழுதானது கண்டு சங்கிலியார், தம்முடன் கூடித் தொண்டுபுரியும் தோழியர்களுடன் திருக்கோயிலுக்குச் சென்றார். சுந்தரர், இறைவனது ஆணையினாலாகிய சபதத்தைச் சங்கிலியாருக்குச் செய்துகொடுக்க ஏற்ற காலம் அதுவே என்று கருதி, சங்கிலியாரின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு, திருக்கோயிலின் முன்பு காத்திருந்தார். அப்பொழுது, அங்கு தம் எதிரில் வந்த சங்கிலி யாரின் சமீபத்தில் சென்று தமக்குச் சிவபெருமான் திருவருள் புரிந்த திறன்களையெல்லாம் எடுத்துக் கூறினார். சங்கிலியார் சிவபெருமானுடைய கட்டளைக்கு உடன்பட்டு, மறுமொழி ஒன்றும் கூறாமல் நாணத்தோடு நெளிந்து தோழியர்களுடன் கூடி ஒதுங்கிச் சென்று, திருக்கோயிலினுள் புகுந்தார். சுந்தரர், தம் காதலியைப் பின்னே தொடர்ந்து சென்று, ''ஆயிழையீர்! இவ்வூரிலிருந்து நான் உம்மைப் பிரிந்துபோகாத நிலையைச் சூளுரைத்து நான் சபதம் செய்ய சிவபெருமான் திருச்சந்நிதியின் முன் வருவீராக!'' என்று கூறினார். சங்கிலி யாரின் கனவை, முன்னமேயே அவர் சொல்லக் கேள்விப்பட்டிருந்த சேடியர்கள், சுந்தரரை நோக்கி ''எம்பெருமானே! இதன்பொருட்டு இமயவர் தம் பெருமானாகிய சிவபிரான் திருச்சந்நிதியின் முன்பு சென்று, சபதம் செய்வது தகாது!'' என்று கூறினார்கள்.

அப்போது தம்பிரான் தோழரான சுந்தரர் தம் சிவபெருமானின் செயலையறியாமல், ''பெண்களே! பின்னை நான் எங்கு சபதம் செய்து தரவேண்டும்?'' என்று கேட்டார். அதற்கு அத்தோழியர்கள் ''மகிழமரத்தின் கீழே சபதம் செய்து தாரும்'' என்று சொன்னார்கள். அதைக்கேட்ட சுந்தரர் மனம் மருண்டு, ''இவர்கள் சொன்னபடி மகிழமரத்தடியில் சபதம் செய்ய மறுத்தால் இந்நிகழ்ச்சி பழிச் சொல்லானாலும் ஆகும். ஆகையால் இவர்கள் கேட்டபடி அவ்வாறே சபதம் செய்வதற்கு உடன்படவேண்டும்!'' என்று துணிவுகொண்டு, ''அதுவே உங்கள் கருத்தானால் அவ்வாறே செய்யலாம்; வாருங்கள்!'' என்று கூறினார். அவர்கள் மகிழமரத்தின் கீழே செல்ல, தாமும் போய்ச்சேர்ந்து, சங்கிலியாரும் மற்ற தோழியரும் காணும்படி, என்றும் முதிராத மகிழ மரத்தை நம்பியாரூரர் மும்முறை வலம் வந்து நின்று, 'நான் இந்த திருவொற்றியூரைவிட்டு நீங்கிச் செல்லேன்!'' என்று சபதம்



செய்தார். அதைக் கண்டு சங்கிலியார் மனம் கலங்கி, ''சிவபெருமானுடைய கட்டளையினாலன்றோ பாவியான் இதைக் கண்டேன்!'' என்று மனதினுள் துக்கப்பட்டுக்கொண்டு தனியாக ஒருபுறம் சென்று மறைவாக மனம் வருந்தி அமர்ந்தார். சுந்தரர் தம் சபதத்தை முடித்த பிறகு திருக்கோயிலுக்குள் சென்று, இறைவனைப் பணிந்து, ''எம்பெருமானே! எனக்கு அருள் நாளும் தர இருந்தீர்! இப்போது நீ செய்தவிதம் அழகாக இருக்கிறது!'' என்று கூறி, சிவபெருமானின் திருவைந்தெழுத்தை எடுத்து ஓதி, பெரு மகிழ்ச்சியுடன் வெளியே சென்றார். நம்பியாரூரர் அங்கிருந்து சென்ற பிறகு சங்கிலியார், தினசரி மாலைகள் கட்டும் திருப்பூமண்டபத்துள் சென்று, வழக்கம்போல தமது திருத்தொண்டைச் செய்து முடித்து, சிவபெருமானது அருட்செயலை தம் கருத்தில் கொண்டு பணிந்து கன்னிமாடத்தை அடைந்தார்.

திருவொற்றியூர்ச் சிவபெருமான், தாம் ஆட்கொண்ட 'வன்றொண்டர்' நினைத்த செயலை, அன்றிரவே முடித்தருளும் பொருட்டு, திருவொற்றியூரிலுள்ள தொண்டர்களின் கனவில் தோன்றி, ''நம்பியாரூரனுக்கு நங்கை சங்கிலியை நம் ஏவலினால் யாவரும் அறியும் வண்ணம் சடங்குகளுடன் திருமணம் செய்து கொடுப்பீர்களாக!'' என்று கட்டளையிட்டு மறைந்தருளினார். அவ்வூர்த் திருத்தொண்டர்களும் அவ்வூராரும், சிவபெருமான கட்டளையைத் தலைமேற்கொண்டு, எல்லோருமாக ஒன்றுகூடி சங்கிலியாருக்கு, நாயனாரைக்

கண்குளிரச் சிறப்பாய்த் திருமணம் முடித்து வைத்தார்கள். சுந்தரர், சிவபெருமான் திருவருளால், சங்கிலியாரை மணந்து அவருடன் கூடி இல்லறத்தில் ஈடுபட்டார். திருமகளின் அழகையும் பின்னடையச் செய்யும் சங்கிலியாரின் தூய அழகையும், தெய்வ நலத்தையும் நம்பியாரூரர் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலன்களாலும் அனுபவித்துப் பெருங்காதலோடு சங்கிலியாரிடம் தங்கியிருந்தார்.

வீணையைப்போன்ற குரலும், மொழியும், அழகிய புன்னகையும், குழைகள் மின்னும் காதும், மாவடு போன்ற விழிகள் காது வரை கடை புரளும் கண்ணழகும் அழகிய தனங்களும், அதற்கேற்ற பெண்மை அங்கங்களும் கொண் டுள்ள சங்கிலியாரிடம், தாம் கண்ட இன்பத்தையே நம்பியாரூரர் பேரின்பமாகக் கொண்டார். சங்கிலியாரின் காதல் துறையில் நம்பியாரூரர் படிந்திருக்கும் காலத்தில் இருவரும் கூடி மகிழும்போது ஓர்யுகம் ஒரு கணமாகவும், ஊடிப் பிணங்கும்போது ஒரு கணம் ஒரு யுகமாகவும் தோன்றும். இவ்வாறு சங்கிலியாருடன் இணை பிரியாமல் திருவொற்றி யூரில் மகிழ்ந்திருக்கும் சிறப்பினால் நம்பியாரூரர் இறைவனின் திருப்பாதத்தைப் பணிந்து தொழாமலேயே இருந்து விட்டார். இப்படியே காலம் கடந்தது. இப்படிப்பட்ட சமயத்தில் தென்றல் காலம் வந்தது. பொங்கும் தமிழ்ப்பொதிகை மலையிலிருந்து பிறந்து, பூமணத்தையும் சந்தன மரத்தில் படிந்து அதன் மணத்தையும், சுமந்துகொண்டு குளிர்ந்த அருவிச் சாரலிடை வளர்ந்து வளமுற்ற கொழுந்தென்றல் திருவொற்றியூரைத் தேடி வந்தது.

வசந்த காலத்திய அத்தென்றலைக் கண்டதும், திருவாரூரில் தியாகேசப் பெருமானின் வசந்த விழா உற்சவம் நம்பியாரூரருக்கு நினைவு வந்தது. அழகிய நெற்றியுடைய பெண்மணிகள் பக்கத்தே சூழ, வசந்தக் கொலுமண்டபத்தில் தியாகராச உற்சவமூர்த்தி எழுந்தருளியிருக்கும் காட்சியையும், அந்தக் காட்சியினூடே இசை போன்ற மொழியுடைய 'பரவை நாச்சியார்' ஆடிப்பாடி மகிழ்வதையும் தன் கண் முன்னால் காண்பது போலவும், கேட்பது போலவும் தன் மனதால் கருதினார். திருவாரூர் பூங்கோயிலினுள் அமர்ந்தாரை, புற்றிடம் கொண்டாரை, நீங்காத காதலினால் நினைந்தாரை, நினைவாரை ''இவ்விடத்தில் நான் மறந்திருந்தேன்'' என்று வருந்தி மிகவும் மனமகிழ்ந்தார். திருவாரூர்ப் பெருமானை பிரிந்திருக்கும் பிரிவாற்றாமையால் அவர் மிகவும் நினைத்து ''பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்!'' என்று பாடலடி தொடங்கி ''எத்தனை நாள் பிரிந்திருக்கேன்

என் ஆரூர் இறைவனையே?'' என்ற குறிப்புடன் திருப்பதிகம் பாடி இரங்கினார்.

பிறகு ஒருநாள், திருவாரூரைப் பற்றி மிகவும் நினைத்த நம்பியாரூரர் திருவொற்றியூர்ப் பெருமானின் திருக்கோயிலை அடைந்து வணங்கிக் கொண்டு திருவொற்றியூர் எல்லையை அடைந்து, எல்லையைக் கடக்க ஓரடி வைத்தார். அடுத்த அடி வைப்பதற்குள்ளாக சபதம் தவறிய காரணத்தால், அவரது கண்களில் ஒளி மறைந்து அவர் மூர்ச்சித்து விழுந்தார். பிறகு யாது செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை. அவர் திகைத்தார்; பெருமூச்சு விட்டார். ''மகிழ மரத்தடியில் இறைவன் மீது ஆணையிட்டுச் சங்கிலியாருக்கு நான் செய்து கொடுத்த சத்தியம் தவறியதால் இது நிகழ்ந்தது'' என்று நினைத்தார். பிறகு, ''இத்துன்பம் நீங்கும்படி எம்பெருமானையே வேண்டிப் பாடுவேன்'' என்று எண்ணி, 'அழுக்கு மெய்கொடு' என்று தொடங்கும் திருப்பதிகத்தை திருவொற்றியூர் பெருமான்மீது பாடி நிலமுற விழுந்து, வணங்கியெழுந்து நின்று, தனது குற்றத்தையும் பழியையும் போக்கியருளுமாறு மிகவும் நினைந்து வேண்டினார். அப்பொழுதும் இறைவன் அருளாது வாளாயிருந்தார். ஆயினும் கண்கெட்டும் பார்வை தெரியாமற் போயினும், சுந்தரர் கையினை சிரமேற் கூப்பித் தொழுது திருவாரூரைச் சென்று தொழ நினைந்தவாறே நடந்த வண்ணமாயிருந்தார். உடன் செல்வோர்கள் தமக்கு வழிகாட்டி முன்செல்ல, திருவடமுல்லை வாயிலை அடைந்தார். தொண்டைமானுக்கு முன்னாளில் அருள் செய்த திருமுல்லைவாயில் நாயகரை வணங்கி, ''சங்கிலியின் பொருட்டு என் கண்களை மறைத்தீர்!'' என்ற தன்மை விளங்கும்படித் திருப்பதிகம் பாடி ''எனது துயரினைக் களைந்திட வேண்டும்!'' என்று துதித்து, மேலும் நடந்தே 'திருவெண்பாக்கம்' என்னும் திருப்பதியை அடைந்தார்.

சுந்தரர் வருகையை அறிந்த தொண்டர்கள், அவரை எதிர்கொண்டு வணங்க, நம்பியாரூரர் அவருடன் கூடி நகரை வலம் வந்து, சிவபெருமானின் கோயில் முன்பு சென்று வணங்கித் துதித்து, ''பெருமானே! இத் திருக்கோயிலினுள் நீர் மகிழ்ந்து வீற்றிருக்கின்றீரோ'' என்று விண்ணப்பஞ் செய்ய, இறைவர் அவருக்கு ஊன்றுகோல் ஒன்றைமட்டும் கொடுத்தருளி, இணக்கமில்லாத மொழியால் ''நாம் இங்கு உள்ளோம்! நீர் போம்!'' என்று அந்நியர் போல் இயம்பினார். அப்பொழுது நம்பியாரூரர், ''பிழையுளன பொறுத்திடுவர்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி, ''எம்பெருமானது திருவருள் இங்கு இவ்வளவே இருந்தது போலும்'' என்று கருதித் தொண்டர்களுடன் இறைவரை வணங்கி, அங்கிருந்து புறப்பட்டு பழயனூரை அடைந்தார். காரைக்கால் அம்மையார்,

திருத்தலையாலே நடந்து வலம் வந்ததும், இறைவன் திருநடனம் செய்வதுமான திருவாலங்காட்டின் அருகே நம்பியாரூரர் நின்று ''முத்தா! முத்தி தரவல்ல'' என்று தொடங்கும் இசைத் திருப்பதிகம் பாடித் துதித்தார். பிறகு 'திருஊரல்' என்னும் திருத்தலத்தை வணங்கிக் காஞ்சிமா நகரை வந்தடைந்தார்.

சோலைகள் சூழ்ந்த திருக்கச்சிக் காமக்கோட்டத்தில் உயிர்களிடம் கொண்ட பெருங்கருணையினால் அறம் வளர்த்து வரும் காமாட்சியம்மையாரின் திருக்கோயில் முன்னே நம்பியாரூரர் வந்து வணங்கினார். பிறகு உலகமுழுவதையும் படைத்து, காத்து, அழித்து மீளப் படைக்கும் முதல்வருடைய 'திருவேகம்பம்' கோயிலினுள் சென்று, நம்பியாரூரர் வணங்கி, ''எம்பெருமானே! விண்ணவர்கள் அமுதுண்பதற்காக, விஷத்தையுண்ட கண்ணாளா! கச்சி ஏகம்பனே! கடையேனாகிய நான் எண்ணாமல் செய்த குற்றத்தை பொறுத்தருளி, இங்கு அடியேன் உன்னைக் காணும்படிக் கண்ணளித்திடல் வேண்டும்!'' என்று வீழ்ந்து வணங்கினார். கயல்போன்ற கண்கள் படைத்த காமாட்சியம்மையார் தாமரை போன்ற தம் சிவந்த தளிர்க் கரங்களால் பனி படர்ந்த மலர்கொண்டு அர்ச்சித்துப் பணிந்த நாதரின் சேவடியை நம்பியாரூரர் நினைத்து, பொங்கி வரும் அன்போடும் போற்றினார். மங்கை உமை தழுவ, உடல் குழைந்த பெருமான் மனமிரங்கி நம்பியாரூரருக்கு மறைந்த இடது கண்பார்வையைக் கொடுத்து தமது திருக்கோலத்தையும் காட்டியருளினார். அதைக் கண்ட சுந்தரர் நிலமுற விழுந்து வணங்கி, ''ஆலந்தானுகந்து அமுது செய்தானை'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி ஆனந்தக் கூத்தாடினார். பிறகு அவ்வூரிலேயே சில காலம் தங்கியிருந்தார்.

பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டுப் போகும்போது, திருவாரூர்த் தியாகேசப் பெருமானின் நினைவுவரவே, 'அந்தியும் நண்பகலும்' என்று பாடலடி எடுத்து ''தென்திருவாரூர் புக்(கு) எந்தை பிரானாரை என்று கொல் எய்துவதே?'' என்று பொருள் படும் திருப்பதிகம் பாடியபடியே செல்லலானார். வழியிலுள்ள திருப்பதிகளை வணங்கித் துதித்துக்கொண்டு 'திருவாமாத்தூர்' என்னும் தலத்தையடைந்து, ஆமாத்தூர் அழகர்தமை அடி வணங்கித் திருப்பதிகம் பாடினார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு, தொண்டை வள நாட்டைக் கடந்து சோழ நாட்டை அடைந்தார். சோழ நாட்டின் எல்லையின் ஒருபக்கமுள்ள 'திருநெல்வாயிலறத் துறை' என்னும் ஊருக்குச் சுந்தரர் சென்றார். அங்குள்ள சிவபெருமானைத் தொழுது 'கல்வாய் அகிலும்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி, அங்கேயே சிலகாலம்

தங்கியிருந்தார்; பின் அங்கிருந்து சில ஊர்கள் வழியாகத் திருவாவடுதுறையை அடைந்தார். அவருக்கு அங்கே அடியார்களால் பெரிய வரவேற்புக் கிடைத்தது. பின் அவர்களுடன் சிவபெருமானின் பொன் மாளிகையை வலம் வந்து, திருமுன்பு நின்று வணங்கி, ''கங்கை வாழ் சடையாய், ஒரு கண்ணிலேன்!'' என்று வருந்தி, ''இங்கு எனக்கு யார் உறவு?'' என்ற கருத்துள்ள திருப்பதிகம் பாடினார்.

பின் அங்கிருந்து புறப்பட்டார். திருத்துருத்தி என்னும் திருப்பதியை அடைந்தார். அங்குள்ள கோயிலினுள் சென்று, சிவபெருமானை வணங்கி, ''அடியேன் உடம்பின் மேலுற்ற பிணியின் துன்பத்தை ஒழித்தருள வேண்டும்'' என்று வணங்கித் துதித்தார். அதற்குச் சிவபெருமான் ''நீ இந்தக் கோயிலின் வடபக்கமுள்ள தீர்த்தக் குளத்தில் நீராடினால் இப்பிணி நீங்கும்'' என்று திருவருள் புரிந்தார். நாயனார், இறைவன் சொற்படி அக்குளத்தில் மூழ்கினார். உடனே அந்தப் புதிய நோய் நீங்கப் பெற்று மாணிக்கம்போல் ஒளிவீசும் திருமேனியைப் பெற்றார்.

அதைக் கண்டவர்கள் வியந்தனர். நம்பியாரூரர் கரையேறி ஈரம் மாற்றி, வேறாடை புனைந்துகொண்டு, கோயிலுக்குச் சென்று 'மின்னுமா மேகம்' என்னும் திருப்பதிகத்தை இசையோடு பாடினார். பிறகு திருத்தொண்டர்களுடன் அங்கிருந்து புறப்பட்டு வழியிலுள்ள பல சிவஸ்தலங்களையும் வணங்கிக் கொண்டு திருவாரூர் தம் எதிரே தோன்றக் கண்டார். திருவாரூரை தமது ஒரு கண்ணால் கண்டும் மனநிறைவு பெறாத நாயனார் நிலத்தில் வீழ்ந்து நெடிதுயிர்த்தார்.

பொழுது மயங்கும் மாலைப்பொழுதில் திருவாரூரினுள்ளே சென்று, 'திருப்பரவையுன் மண்டலி' என்னும் திருக்கோயிலை அடைந்து 'தூவாயா' என்று தொடங்கி ''எனது துன்பத்தைப் போக்கி என் கண் தெரிய அருள் காட்டிட வேண்டும்!'' என்ற கருத்துடன் அருந்தமிழ்ப் பாமாலையைச் சூட்டினார். பிறகு தொண்டர்களுடன் கூடி, திருவாரூர் மூலவரை, அர்த்த ஜாம வேளையிலே சென்று வணங்கினார். அப்பொழுது சிவ பெருமானின் திருத்தொண்டர்கள் தமக்கெதிரே வர, அவர்களை நோக்கி 'குருகு பாய' என்று பாடலடி தொடங்கி, முன்பு சிவபெருமான் அயலார் போல் தம்மை கேட்ட வருத்தத்தினால் திருப்பதிகத்தினை ஒருதலைக்காதல் புலப்படும் கைக்கிளைத் திணையில் வைத்துப் பாடியவாறே, அவர்களுடன் சேர்ந்து, ''தேவாசிரியன்'' என்னும் மண்டபத்தின் முன் சென்று வணங்கினார். பிறகு 'பூங்கோயில்' என்னும் திருமாளிகையில் எழுந்தருளிய புனிதர்

திருமுன்பு வீழ்ந்து வணங்கி, ''துயரக் கடலில் வருந்தும் அடியேனை எடுத்துக் கரையேற்றி நானிழந்த வலது கண்ணையும் எனக்குத் தந்தருளும்'' என்று வேண்டினார். பருகா இன்னமுதமான சிவபெருமானைத் தன் கண்களால் பருகுவதற்குப் பேரார்வத்துடன், ''மற்றைக் கண்களையும் தாரீர்!'' என்று இறைஞ்சினார். ''மீளாவடிமை'' என்று பாடலடி தொடங்கி ''உமது திருவடியை அன்புடன் பேணும் அடியார்களுக்கு ஆகும் துன்பங்களை நீர் தரிக்க மாட்டீரே!'' என்ற குறிப்புடன் கூடிய திருப்பதிகம் பாடினார்.

அப்பொழுது புற்றிடம் கொண்ட பெருமான், நம்பியாரூரருக்கு இரங்கி, வலக்கண் பார்வையையும் கொடுத்தருளினார். வன்றொண்டரின் முகம் மலர்ந்தது. அவர் இரு கண்களையும் அகல விழித்துப் பார்த்துப் பரவசப்பட்டார். இறைவனது கருணையை வியந்தார். மகிழ்ச்சிப் பெருக்கால் ஆடிப்பாடினார். இவ்வாறு வழிபட்டு வெகுநேரம் வரை இறைவனை வணங்கித் தொழுதபின் 'பூங்கோயிலை' வலம் வந்து தம் அன்பருடன் தேவாசிரிய மண்டபத்தருகே தங்கியிருந்தார்.

இது இப்படியிருக்க, அதே திருவாரூரில் முன்பு முதல் மனைவியான பரவையாரை நம்பியாரூரர் பிரிந்து சென்ற பிறகு, பரவையார் அவரது பிரிவாற்றாமையால் தன் மாளிகையில் தனியேயிருந்து மிகவும் தளர்ந்து வாடினார். பொங்கும் காதல் மேலிட மிகவும் ஏங்கி நம்பியாரூரரை நினைத்து நினைத்துப் பரவையார் விம்மினார். ஒவ்வொரு நாளும் இரவு பகலாகவும், பகல் இரவாகவும் கழிந்தன. இவ்வாறு சிலநாள் கழிந்தபிறகு சிவநெறி சேரும் நம்பியாரூரர், திருவொற்றியூருக்குச் சென்று அங்கு சங்கிலியாரைக் காதல் மணம் புரிந்துகொண்டார் என்ற செய்தியை பரவையாரின் உறவினர் வர்ணித்துக் கூறியதால், பரவையார் தன்னையறியாமலேயே பெருங் கோபங்கொண்டு நிலையா நெஞ்சோடு மனம் தளர்ந்தார். மெல்லிய மலர் மஞ்சத்தில் படுத்தாலும் தூங்குவதில்லை. விழித்திருந்தாலும் ஒருநிலையில் இருப்பதில்லை! இருக்கையில் இரார்; நில்லார்; நடவார்; வேறிடத்திற்குச் செல்லார்; நம்பியாரூரரை மறக்கவும் மாட்டார்; நினைக்கவும் விரும்ப மாட்டார்; என் செய்வார்? மன்மத பாணங்களையும் சகிக்கமாட்டாமல் தவிப்பார். உள்ளத்தி லுள்ளதை வாய் திறந்து சொல்லவும் மாட்டார். எலும்பை யெல்லாம் உருக்கும் பிணக்கோ அல்லது பிரிவோ யாதொன்றும் அறியமாட்டாது, அவையிரண்டிற்கும் இடைப்பட்டு தத்தளித்தார்.

இவ்வாறு திருவாரூரில் பரவையார் தம் மாளிகையில் கவலையினால் செயலற்று மனமுடைந்து வருந்தும்போது

நம்பியாரூரர் திருவாரூரில் திருக்கோயிலில் தங்கியிருந்தார். குவளை மலர்க் கண்களையுடைய பரவையாரின் வீட்டுக்கு நம்பியாரூரரின் பரிசனங்களில் சிலர் முன்புபோலச் செல்ல முயன்றார்கள். ஆனால் பரவையார் நம்பியாரூரர்மீது கொண்ட கோபத்தினால் அவர்களை தம் வீட்டினுள் நுழையாதபடி தடுத்தார். அவர்களில் சிலர் நம்பியாரூரரிடம் சென்று, ''திருவொற்றியூரில் நீங்கள் சங்கிலியாரை மணந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் பரவையார் அறிந்தமையால் பரவையாரின் மாளிகையினுள் நாங்கள் நுழையமுடியாதபடி தடுக்கப் பட்டோம்!'' என்று கூறி வணங்கினார்கள். அதைக்கேட்ட நம்பியாரூரர், மனம் கலங்கினார். ''இனி இதற்கு என் செய்வது?'' என்று ஆலோசித்தார். பிறகு உலக இயல்பு அறிந்த சில மாந்தர்களைத் தம் காதற் பரவையாரின் கோபத்தை நீக்கிவரும் பொருட்டுத் தூதாக அனுப்பி வைத்தார். அவர்கள், பரவையாரிடம் மாளிகைக்கு வந்து புல்லி யெனும் துயர்க் கடலில் அழுந்திக் கிடக்கும் பரவையாரைச் சந்தித்து அவரது கோபத்தைத் தணிவிக்கும் பண்புடன் முன்சென்று ''எம்பிராட்டியின் பெருந்தன்மைக்கு இவ்வாறு ஊடியிருந்து நாயகரைக் கோபித்துத் தனித்திருப்பது தகுதியாகுமோ'' என்று பலவகை நீதிகளை எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பரவையார், அவர்களின் வார்த்தைகளை மறுத்து சற்றும் கோபம் தணியாதவராய் ''அவர் எனக்குக் குற்றம் புரிந்தவர். குற்றம் உள்ள அவர் சார்பில் என்னிடம் இன்னும் வலி யுறுத்திப் பேசுவீர்களேயானால் எனது உயிர் நீங்கிவிடும்!'' என்று கூறினாள். தூது வந்தவர் அதைக் கேட்டு அஞ்சி வெளியேறி நிகழ்ந்தவற்றையெல்லாம் நம்பியாரூரரிடம் அறிவித்துச் சென்றார்கள்!

பரவையாரின் பதிலைக் கேட்ட நம்பியாரூரர், மனம் நடுங்கிச் சோர்வுற்றார். துயரக் கடலிலிருந்து நீங்கி, கரையேறுவதற்குரிய தோணி போன்றவரைக் காணாததால், இரவில் நடுஜாமத்தில் வருந்தியவாறு இருந்தார். ஆலயத்தில் அர்த்த ஜாமப் பணி அடங்கி அருகிலிருந்த யாவரும் துயின்றனர். தெருக்களில் ஜன நடமாட்டம் இன்றி எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தனர். பேயும் உறங்கும் அந்த நள்ளிரவில் நம்பியாரூரரான சுந்தரர் மட்டும் வருத்தத்துடன் உட்கார்ந்து சிந்திக்கலானார்.

தம்பிரான் தோழரான நம்பியாரூரர், சிவபெருமானை நினைத்து, ''என்னை ஆளுடைய பெருமானே! முன்வினைப் பயனால் இப்பிறவியில் என்னையடைந்த பரவையாரிடம் நான் செல்வதற்கு நினைந்து அருள் செய்வீர். இந்த அர்த்த ஜாம நேரத்தில் அன்னம் போன்ற பரவையாரிடம் நீரே எழுந்தருளிச் சென்று அவளது பிணக்கைத் தீர்த்தால்தான் நான் உயிர்



பிழைப்பேனே தவிர வேறு செயலில்லை!'' என்று வேண்டினார். அடியார்களின் துன்பங்களைச் சிறிதும் தரிக்கலாற்றாத சிவபெருமான், தம்மால் தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனாருக்கு ஏற்பட்ட குறையை நீக்காதிருக்க வல்லாரோ? தனக்குத் தோழரான நம்பியாரூரர், தன்னுடன் பழகி, பலகாலம் வாழ்ந்த பரவையாரிடத்தில் தானாகவே செல்ல மனவலி மையற்றுத் தவித்திருக்கும் இந்த நேரத்தில், உமாபாங்கர் சும்மா இருப்பாரா? தன்னையே முழுதாக அளித்து தன் பொன் போன்ற தளிர்க் கைகளால் தழுவியதால் பட்ட உமையாளின் வளைத்தழும்பும், ஸ்தனச் சுவடும் கொண்ட பெருமானல்லவா அவர்? திருமாலாலும்கூட காணமுடியாத திருவடிகள் பூமியில் பொருந்தும்படி நம்பியாரூரர் காண அவர் முன் சிவபெருமான் தோன்றினார். அதைக் கண்டு நம்பியாரூரர் பெருமகிழ்ச்சி கொண்டார். உடல் நடுங்க, ரோமம் சிலிர்க்க இரண்டு கைகளும் தலைமேலேறிக் குவிய இறைவரது திருவடிகளில் விழுந்து வணங்கினார். அப்பொழுது சிவபெருமான் தமது தோழரை நோக்கி, ''உனக்கு உற்றது என்ன,'' என்று கேட்டார். அதற்கு ஆரூரர் ''நானே தொடங்கிக் கொண்ட குற்றத்தைப் பொறுத்து, இன்னமும் என்னை ஆட்கொள்ள வேண்டியது உமது கடமையாகும். உம்முடைய திருவருள் கூட்டியதால்தான் அடியேன் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்தணைந்தேன். அச்செய்தியைக் கொடியிடைப் பரவையார் தானே அறிந்து கொண்டாள். இப்போது அவளிடம் நான் சென்றால் உயிரையே

விடுவேன் என்று துணிந்திருக்கிறாள். நான் என்ன செய்வது? நான் உமக்கு அடியனேயானால், நீர் எனக்குத் தாயினும் நல்ல தோழருமாகித் தம்பிரானாக இருப்பது உண்மையேயானால் அறிவிழந்து மனமுடைந்த அடியேன் படும் துன்பத்தைப் போக்கும்! இவ்விரவிலேயே பரவையாரிடம் சென்று அவளுடைய ஊடலைத் தீர்த்து, அவளை எனக்குத் தாரும்'' என்று விண்ணப்பம் செய்தார்.

அன்பு ஒன்றினையே வேண்டி நிற்கும் சிவபெருமான், அடியார் வேண்டுகோளை நிறைவேற்றாமலிருப்பாரோ? சிவபெருமான் நம்பியாரூரரின் முகத்தைப் பார்த்து ''உன் துன்பத்தை ஒழி நீ! நாம் உனக்கு ஒரு தூதனாகி இப்பொழுதே பரவையிடம் போகிறோம்!'' என்றார். வன்றொண்டரான சுந்தரர் எல்லையற்ற மகிழ்ச்சியோடு இறைவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கியெழுந்து, ''முல்லைச் சிரிப்பு முகிழ்க்கக்கூடிய பரவையின் மாளிகை மாடத்திற்கு நீர் விரைந்து சென்று இவ்விரவிலேயே அவளுடைய புலவியை நீக்கும்'' என்று போற்றித் தொழுதார்.

தேவர்கள் வாழ்வதற்காக, ஆலகால நஞ்சினை அமுதமாக உண்டருளிய நீலகண்டப் பெருமான், தம் தொண்டனாரின் துயரம் நீக்குவதற்காக பரவையாரின் மாளிகை நோக்கி, தொண்டரின் தூதுவராகச் சென்றார். சிவபெருமான், பரவையாரின் வீடு நோக்கி, காதலின் தூதராக விரைந்து நடந்து சென்றபோது கங்கை தாங்கும் அவருடைய சடைமுடிகளில் பாம்புகளும் தொடர்ந்து வந்தன. வேதங்களும் அவரைத் தொடர்ந்தன. பூதகணங்களும் தேவர்களும் முனிவர்களும் அவரைப் பின்தொடர்ந்தார்கள். நம்பியாரூரரின் மனமும் தொடர்ந்து வந்தது. இவ்வாறு சிவபெருமானைச் சூழ்ந்து வருபவர்களின் நெருக்கத்தால், அந்த திருவாரூர் திருவீதியே சிவலோகமாகக் காட்சியளித்தது. சிவபெருமான் தம்முடன் வந்தவர்களை ஒருபுறமாக நிறுத்திவிட்டுத் தம்மை அர்ச்சனை புரியும் ஒரு சிவ வேதியர் வடிவங்கொண்டு தாம் மட்டும் தனியே பரவையிடம் செல்லலானார். பரவையாரின் மாளிகையின் வாசற்கதவு இறுக மூடப்பட்டுத் தாழிடப்பட்டிருந்ததால், அக்கதவின் முன்னால் அருச்சக வேஷதாரி நின்று, ''பாவாய்! கதவைத் திறவாய்'' என்று அழைத்தார். அப்பொழுது பரவையார் தூங்காமல் விழித்து வருந்திக் கொண்டிருந்ததால் ''யார் நம்மை இப்பொழுது அழைப்பவர் எம்பெருமானுக்குப் பூசை செய்யும் மறையவர் போலும்!'' என்று துணிந்து ''சிவபெருமானுக்குப் பூஜைப் பணி செய்பவர் பாதி இரவில் இங்கு வந்தது என்ன காரணத்தினாலோ?'' என்று பயமும் அடைந்தார். வந்திருப்பவர்

உடம்பில் ஒரு பாதியாக உமாதேவியைக் கொண்டிருக்கும் பரமசிவனாரேயாவார் என்பதை யறியாமல் பதைப்புடனே வந்து வாயிற் கதவைத் திறந்தார்.

நம்பியாரூரர் காரணமாகத் தூதராய் வந்து நிற்கும் சிவபெருமானின் அருச்சகர் வேடத்தை பரவையார் பார்த்துக் குழம்பி ''உலகம் முழுவதும் உறங்கும் இவ்வேளையில் நீர் ஏன் இங்கு வந்தீர்? என்னை ஆளுடைய இறைவரே இங்கு எழுந்தருளி வந்தவர்போல் விளங்க மாா்பில் பூணூல் அணிந்த அந்தணரே! நீர் இங்கு வந்த காரணம் என்ன?'' என்று கேட்டார். அதற்கு அருச்சகரான சிவபெருமான் பரவையைப் பார்த்து, ''நங்கையே! நீ மறுக்காது இணங்குவாயாகில் நான் வந்த செய்தியைக் கூறுவேன்!'' என்றார். அதைக் கேட்டதும் கயல்விழிப் பரவையார் ''நீரே இங்கு வந்த காரியம் இன்னதென்று முன்னதாகச் சொல்வீரானால், இங்கு அது எனக்கு இசைவதேயாகில் ஒரு வேளை நான் இணங்குதல் கூடும்!'' என்று கூறினார்.

இறைவனாரும் விடாமல், ''பெண்ணே! இங்கு நம்பியாரூரர் வரவேண்டும்!'' என்று கூறினார்.

அதைக் கேட்டதும் பரவையார், துணுக்குற்று, ''மிகவும் நன்று நும் பெருமை!'' என்று குமுறி, ''என்னிடம் அவர் புங்குனித் திருநாளன்று திரும்பி வருவாரென்று எதிர் பார்த்திருந்தேன். அவரோ வசந்த விழாவில் திரும்பி வருவதாக என்னிடம் சொல்லி விட்டு, திருவொற்றியூருக்குச் சென்று அங்கே சங்கிலியாரிடம் தொடர்புகொண்டார். அத்தகையவருக்கு இங்கு வருவதற்கு ஏற்ற சார்பும் ஒன்று உண்டோ? நீர் நள்ளிரவில் வந்து சொன்ன காரியம் வெகு அழகாக இருக்கிறது!'' என்றார்.

அதைக் கேட்டதும் சிவபெருமானாகிய அருச்சகர், ''நங்கையே! உன்னிடம் நம்பியாரூரன் செய்த குற்றங்களை நீ மனதிலே கொள்ளாமல் உன் கோபம் நீங்கித் துன்பத்தை ஒழிப்பதற்கல்லவோ உன்னை நான் வேண்டிக் கொண்டேன்? ஆகையால் நீ என் வேண்டுகோளை மறுப்பது, அடாத செயலாகும்!'' என்று கூறினார்.

மறை முனிவரான சிவவேதியரைப் பரவையார் ஏறிட்டுப் பார்த்து, ''நீர் பெண்கள் விஷயமான இந்தக் காரியத்திற்காக, இந்த வாசற்படி வருவது உம் பெருமைக்கும் தக்கதன்று! மேலும் திருவொற்றியூரை உறுதியாகக் கொண்ட நம்பியாரூரர் இங்கு வருவதற்கு நான் இசையவும் மாட்டேன். நீரும் போம்!'' என்று மறுத்துக் கூறினார்.

பரவையாரின் பதிலைக்கேட்ட சிவபெருமான், தமக்குள்ளாகவே நகைத்துக்கொண்டு, தமது தோழராகிய நம்பியாரூரர் படும் காதல் வேட்கையைக் காணவேண்டுமென்ற திருவிளையாடலை மனதில்கொண்டு, தமது மெய்யுருவத்தைப் பரவையாருக்குக் காட்டாமல் பரவையாரின் மறுதளிப்பையே தம் தூதின் விளைவாகக் கைக்கொண்டு அங்கிருந்து திரும்பிச் சென்றார்.

இறைவரைத் தூதராக அனுப்பிவிட்ட பிறகு, அவர் வெற்றியுடன் வருவதையே எதிர்நோக்கிக் கொண்டிருந்த வன்றொண்டர் ''அறிவில்லாத நான் பரவையாரின் புலவி தீர்த்து வரும் பொருட்டு, எம்பிரானையே போய்வர வேண்டினேனே!'' என்று புலம்பினார். ''எப்படியும் அவர் பரவையாரை என் காதலில் இசைவுறச் செய்தே, திரும்புவார்'', என்று எண்ணினார். பிறகு ''என் பரவையின் மாளிகைக்கு தூது சென்ற பெருமானார் அங்கு யாது செய்தாரோ? இறைவரைக் கண்டால் பரவைதான் மறுப்பாளோ? என்னுடைய மனத்துயரை அறிந்துசென்ற சிவபெருமான் பரவையாரது சிறு ஊடலைத் தீர்க்காமல் திரும்பி வரமாட்டார்!'' என்று பலவாறும் கருதினார்; தூது சென்ற சிவபெருமான் திரும்பி வரும் வழிநோக்கி, அவரை எதிர்கொள்ள ஆவலோடு சிறிது தூரம் செல்லுவார்; அவர் வருகையைக் காணாமல் திரும்ப வருவார்; மனம் வருந்தி மயங்கி நிற்பார்; மனம் சோர்ந்து ஒருபுறம் அசைவற்று இருப்பார்; சிவபெருமான் இன்னும் திரும்பி வரவில்லையே; அவர் காலம் தாழ்த்தமாட்டாரே!'' என்று திரும்புவார்; மன்மதன் பொழியும் மலர்க்கணைகள் மழைபோல வந்துவிழ ஒதுங்கியிருப்பார்; இவ்வாறு சுந்தரர் துன்புற்றிருந்தார்.

நம்பியாரூரர் இவ்விதமாக வருந்திக் கொண்டிருக்கும் போது, ''சிவபெருமான் பரவையாரிடமிருந்து மீண்டு, அர்ச்சகர் போலன்றி தாமாந் தன்மையறியும்படியுள்ள கோலத்துடன் அந்த நள்ளிரவு பகல்போல பேரொளியுடன் திகழ வந்தார். சிவபெருமான் வருவதைக் கண்டவுடன், சுந்தரர் அணையுடைத்துக்கொண்டு ஓடும் வெள்ளத்தைப் போல மிக்க மகிழ்ச்சியுடனே, அவரை எதிர்கொண்டு வணங்கி அவரது திருமுகத்தில் தோன்றிய புன்னகையைக் கண்டு, அவருடைய திருவிளையாட்டை அறியாதவராகி பரவையின் புலவியை நீக்கி இசைவு செய்து வந்தனர்!'' என்றே எண்ணமிட்டு, ''எம்பெருமானே! முன்பு நீர் என்னை ஆட்கொண்டருளியதற் கேற்பவே இன்றும் பரவையாரின் கோபத்தையெல்லாம் தீர்த்து வந்தருளினீர்!'' என்று கூறினார். அதைக் கேட்ட சிவபெருமான் ''நீ நம்மிடம் கூறிய வண்ணமே நாம் பரவையாரின் இல்லத்தையடைந்து, அவளிடத்தில் உனது திறன்களையெல்லாம் எடுத்துக் கூறி வேண்டினோம். ஆனால்

பரவையோ, ஏற்றுக் கொள்ளவில்லை! நாம் எவ்வளவோ வேண்டியும் அவள் வெப்பமாகவே பதில் சொல்லி மறுத்துவிட்டாள்!'' என்றார்.

அண்ணலார் சொன்னதைக் கேட்டு நம்பியாரூரர் நடுக்கமுற வணங்கி, ''நீர் சொல்லியருளியும், உமது அடியவளாகிய பரவையோ மறுப்பாள்? நாங்கள் அடிமைத் திறத்தில் வைத்து எண்ணுதற்குரியவர் அல்லோம் என்பதனை இன்று அறியச் செய்தீர். வானவர்கள் வாழவேண்டிப் பாற் கடலின் நஞ்சை உண்டீர். முப்புரங்களை எரித்தபோது, மூவரைத் தடுத்து ஆட்கொண்டீர்! மார்க்கண்டேயனுக்காக காலனையுதைத்து, அந்த மார்க்கண்டனைஅடிமைகொண்டீர்! இத்தகைய பெருங்கருணையுடைய உமக்கு அடியேன் வேண்டத் தகாதவன் என்று கருதினால், நீர் வெறுமனே திரும்பி வராமல் வேறு என்ன செய்வீர்? இன்று என் அடிமையை நீர் வேண்டாவிட்டால், அன்று என்னை வலிய ஆட்கொண்டது ஏன்? என் மனநோயையும், துயரத்தையும் நேரிலேயே கண்டுள்ளீர்! பரவையாரிடத்து இன்றே நான் சேர்வதற்கு வழி செய்யாராகில் என் உயிர் நீங்கிவிடும்!'' என்று கூறி அவரது திருவடிகளில் வீழ்ந்தார்.

சிவபெருமான், தமது திருவடியில் வீழ்ந்த நம்பியாரூரரை அருளோடு பார்த்து, ''நாம் மீண்டும் ஒரு முறை பரவையிடம் தூதுபோய் அவளை இப்போதே நீ சென்றடையும்படி சொல்கிறோம். உன்னுடைய துயரை ஒழிப்பாயாக!'' என்று கூறினார். சிவபெருமானது அமுதமாகிய மதுரவாக்கைப் பெற்ற, நம்பியாரூரர் தமது மனக்கவலையை நீக்கி ''உமது தொண்டனாகிய அடியேனை அச்சம் கெடுத்து ஆட்கொள்ளும் முறை இதுவன்றோ?'' என்று போற்றினார். சிவபெருமான் மீண்டும் தூதுசெல்ல எழுந்தருளினார். நம்பியாரூரர், அவர் பின்னாலேயே சிறிது தூரம் சென்று வணங்கி, மனமயக்கத்துடன் மீண்டார்.

சிவபெருமான் பரவையாரின் திருமாளிகைக்குத் தூது நடந்தார்.

பிறை நிலா நெற்றி படைத்த பரவையார், தம்மிடம் மறையவராய்த் தூதுவந்தவர் சென்ற பிறகு ''சிவவேதியர் குலத்துடன் வந்த அவர் இறைவரேயாம்'' என்று உணர்ந்தும் அதிசயம் பலவும் தோன்ற, அதைக்கண்டு அச்சம்கொண்டு ''ஐயோ! என் அறிவினாலேயே கெட்டுவிட்டேனே! எமது பெருமான் திரு முன்பு எதிராக மொழி தந்து என்ன செய்ய மறுத்தேன்!'' என்று வருந்தினார். கணகள் உறக்கம் கொள்ளாதவராய்ச் செயலிழந்து, ''இங்கு இன்று

எம்பெருமானார் தாமே தோழராகிய நம்பியாரூரருக்காக அர்ச்சகர் வேடந்தாங்கி வந்தடைந்தார்! அவரை நான் இன்னாரென்று தெரிந்து கொள்ளாத பாவியானேனே!'' என்று இரங்கி, வாசலை நோக்கியவாறே தோழியர்களுடனே மனமழிந்து வருந்திக் கொண்டிருந்தார்.

பரவையார் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் அந்த சமயத்தில், சிவபெருமான் தூதராக முன்போலன்றி தாமாந்தன்மையை அறிவிக்கும் சுயகோலத்துடன், அளவற்ற பூதகண நாதர்களும், தேவர்களும், முனிவர்களும், சித்தர்களும், இயக்கர்களும் சூழ்ந்து வர, பரவையார் திருமாளிகையை அடைந்தார். அப்பொழுது, பரவையாரின் திருமாளிகை திருக்கைலாயம் போல் விளங்கியது. சிவபெருமானை வரவேற்று எதிர்கொண்ட பரவையார், தம் மெய்நடுங்க மகிழ்ச்சி பொங்க அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். சிவபெருமான் பரவையாரை நோக்கி, ''பூங் கூந்தல் பரவையே! தோழன் என்ற உரிமையினாலே நம்பியாரூரன் எம்மை ஏவ, மீண்டும் நாம் உன்னிடம் இப்போது வந்தோம்! பரவையே! முன்போல் மறுக்காதபடி உன்னைப் பிரிந்து வருந்தும் சுந்தரன், உன்னிடம் வரப்பெறுதல் வேண்டும்!'' என்றார்.

பரவையார் சிவபெருமான் முன்பு மிகவும் அச்சம் கொண்டு, வருந்திய உள்ளத்துடன் கைகளை தன்கூந்தலின் மேற் கூப்பிக்கொண்டே ''அடியேன் முன்னாளில் செய்த பெரிய தவப்பயன் போல் இப்பொழுது எழுந்தருளினீர்! முன்பு சிவவேதியர் கோலத்துடன் எழுந்தருளினீர்! அதனை அடியேன் அறிகிலேன்!'' என்று கூறிக் கண்களில் கண்ணீர் துளித்துளியாகச் சிந்த மீண்டும் தொழுது, ''உம்முடைய ஒளி பொருந்திய சேவடி வருந்த ஓர் இரவு முழுவதும் மாறுதலில்லாது அடியவர் பொருட்டு அங்குமிங்குமாக அலைவதைக் கண்டபிறகும், அடியேன் இசையாமல் வேறு என்ன செய்வேன்?'' என்றார்.

பரவையார் மொழிந்ததைக் கேட்ட சிவபெருமான், ''நங்கையே! உனது பெருந்தன்மைக்கேற்றவாறே நல்லுரை பகன்றாய்!'' என்று அவளைப் பாராட்டிவிட்டு, சுந்தரரிடம் திரும்பிச் செல்லலானார். பரவையாரும் சிறிது தூரம் அவரது பின்னால் சென்று, வணங்கித் தம் மனைக்குத் திரும்பினார்.

சிவபெருமான் தாமாகவே தூதாகச் சென்று, தொண்டனாரை ஆட்கொள்ளும் அந்த அருட்செயலைக் கண்ட பலவகைப்பட்ட சிவபூத கணநாதர்களும், பிறரும் மகிழ்ச்சியால் ஆடியும் பாடியும் பின் சென்றார்கள். சிவபெருமானோ நம்பியாரூரரைப் பரவையாரிடம் விரைவில் அனுப்பிவைக்கும்

மகிழ்ச்சியில், தம்முடிமீதுள்ள கங்கை நீர் ததும்பும்படி விரைந்து சென்றார். நம்பியாரூரரான சுந்தரரோ, ''சிவபெருமான் இன்னும் என்ன செய்கிறாரோ? இன்னும் திரும்பி வரவில்லையே!'' என்று வருத்தம் கொண்டு, இறைவர் சென்ற அவ்வீதியையே எதிர்நோக்கி நின்று கொண்டிருந்தார். அப்பொழுது சிவபெருமான், சுந்தரரிடம் வந்து சேர்ந்தார்.

சுந்தரர், சிவபெருமானை எதிர்கொண்டு அவரது திருவடிகளில் விழுந்து வணங்கி, ''எம்பெருமானே! என்னுயிரைக் காவாது துன்பம் செய்யும் பரவையிடமிருந்து என்ன குறைகொண்டு வந்தீர்?'' என்று கேட்டார். சிவபெருமான் ''நம்பியே! நாம் பரவையாரது புலவியினால் வந்த கோபத்தைத் தணியச் செய்தோம்! இனிமேல் நீ போய் அவளை அடைவாயாக!'' என்று சொல்லியருளினார். அதைக் கேட்டதும் நம்பியாரூரர் மனக்களிப்படைந்து ''போகம், மோக்ஷம் என்னும் இரண்டையும் மறக் கருணையாலும் அறக் கருணையாலும் உயிர்களுக்கு அருள்கின்றவர் நீர்தான் என்பதை நீரே அனைவருக்கும் புலப்படுத்திக் காட்டினீர்! இனி அடியேனுக்கு என்ன துன்பமுள்ளது?'' என்று சொல்லி அவரது திருவடிகளில் வீழ்ந்தார். அடியாருடைய அன்புக்காக எளிதில் எழுந்தருளி வந்த சிவபெருமான், ''நீ அப்பரவையிடம் செல்வாயாக!'' என்று கூறிவிட்டுத் தமது திருப்பூங்கோயிலுக்குள் சென்றார். நம்பியாரூரர், சிவபெருமான் பின்னாலேயே சிறிது தூரம் தொடர்ந்து சென்று, அவரை வழியனுப்பிவிட்டு வணங்கி, அருள்விடைபெற்று மீண்டார்.

பிறகு நம்பியாரூரர், ''எம்பெருமானது ஆற்றல்தான் என்னே!'' என்று மகிழ்ந்து, பரவையாரது மாளிகையின் வாயிலை நோக்கிப் பெருங்காதலோடு சென்றார். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். பரிசனங்கள் வந்து சூழ்ந்தனர். மெல்லிய தென்றல் எதிர் கொண்டழைத்தது. மலர்மாலை, கலவைச் சந்தனம், கஸ்தூரிச் சாந்து, ஆபரணங்கள், பட்டு ஆடைகள் முதலியவற்றைப் பரிசனங்கள் முன்னே ஏந்திச் செல்ல, சுந்தரமூர்த்தி நாயனார் பின்னே செல்லலானார்.

பரவையார் தம் நீண்ட நெடுங்கண்களுக்கு மைதீட்டிப் பெருமகிழ்ச்சியோடும், விருப்பத்தோடும் தம் மாளிகை முழுவதும் நெய்விளக்குகளையும், தூபங்களையும், நிறைகுடங்களையும் வரிசையாக வைத்தார். மலர் மாலைகளையும், மணி மாலைகளையும் தொங்கவிட்டார். தோழியர்கள் சூழ்ந்து வாழ்த்துக் கூறப் பரவையார் தம் திருவாசல் முன்பு வந்து நின்று, நம்பியாரூரரை எதிர்கொண்டு வரவேற்கக் காத்து

நின்றார். அப்பொழுது சுந்தரர், பரவை நாச்சியார் முன்பு வந்தார். நம்பியாரூரரைக் கண்டவுடனேயே நாச்சியார், காதல் வெள்ளத்திலே கரை காணாது திளைத்த மனத்தினராய், நாணமும் அச்சமும் தோன்ற வணங்கினார். அந்நாச்சியாரின் தளிர்க் கரத்தைப் பற்றிக்கொண்டு நம்பியாரூரர், மாளிகையினுள்ளே புகுந்தார். இருவரும் தங்கள் பெருமானார் தமக்காகத் தூது நடந்த திருவருட் பெருங்கருணைத் திறத்தைப் போற்றினார்கள். முன்புபோல் இருவரும் கூடி இன்பவெள்ளத்தில் மூழ்கி, ஒருவரில் ஒருவர் மேவும் நிலைமையில் உயிர் ஒன்றாகும்படிக் கலந்தார்கள்! காதல் வயத்திலும், தெய்வீகச் சிந்தனையிலும் இருவரும் இருந்தார்கள். புற்றிடங்கொண்ட சிவபெருமானை நாள்தோறும் சுந்தரர் இடைவிடாமல் சென்று வணங்கித் திருப்பதிகங்களாகிய தமிழ்ப் பாமாலைகளைச் சாத்தி திருவாரூரில் பெருமகிழ்ச்சியோடு தங்கியிருந்தார்.

பரவை நாச்சியாரிடம் சிவபெருமானை நம்பியாரூரர் தூதனுப்பிய செய்தி திருப்பெரு மங்கலம் என்னும் ஊரிலுள்ள ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்பவருக்கு எட்டியது. ‘‘கேவலம் பெண்ணொருத்தியை முன்னிட்டு ஆண்டவனையா அடியான் தூது அனுப்புவது? அவ்வாறு சிவபெருமானையே தூதாக ஏவிய நம்பியாரூரனும் ஒரு திருத்தொண்டனா?’’ என்று விறன்மிண்ட கலிக்காம நாயனார் கோபம் கொண்டார். இதையறிந்ததும் நம்பியாரூரரான சுந்தரர் தம்பிரானான சிவபெருமானிடமே சென்று முறையிட்டார். சிறந்த சிவனடியார்களான அவர்கள் இருவரையும் ஒருமைப்படுத்த சிவபெருமான் திருவுள்ளங்கொண்டு, கலிக்காமருக்குக் கொடும் சூலை நோயை உண்டாக்கி, ‘‘உன்னை வாட்டும் இந்த நோய் நம்பியாரூரன் தீர்த்தாலன்றி வேறு எந்த வழியாலும் தீராது!’’ என்று கூறினார். ஏயர்கோன் கலிக்காமரோ மனங்குமுறி, ‘‘அந்த வன்தொண்டன் வந்து என் நோயைத் தீர்ப்பதைக் காட்டிலும், என் வயிற்றை வாட்டி வதைக்கும் அந்நோயை என் வயிற்றோடு கிழித்தெறிந்து நான் சாவேன்!’’ என்று கூறி அவ்வாறே தம் உடைவாளால் தம் வயிற்றைக் கிழித்துக்கொண்டு உயிர் நீத்தார். அவருடைய வெற்றுடலை நம்பியாரூரர் கண்டதும் தாமும் அதே உடைவாளால் தம் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றார். அப்போது சிவபெருமானின் அருளால் ஏயர்கோன் கலிக்காமர் உயிர் பெற்றெழுந்து, நம்பியாரூரரைத் தடுத்துக் கட்டித் தழுவிக்கொண்டார். பிறகு இருவரும் சிறந்த நண்பர்களாகி பல சிவத்தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கினார்கள். (இதன் விரிவை ‘ஏயர்கோன் கலிக்காம நாயனார்’ என்பதன் கீழ் காண்க.)

சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றுத் தொடர்ச்சியை 'கழற்றறிவார் நாயனார்' வரலாற்றினூடேயும், சுந்தரர் வெள்ளையானைமீது திருக்கயிலைக்குச் சென்று பெரும் பேறு பெற்றதை 'வெள்ளையானை' என்பதன் கீழும் காண்க.

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகை கீழே தரப்பட்டுள்ளது.

திருத்தொண்டத் தொகை

பண் – கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்,
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்,
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்,
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்,
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்,
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கு
அடியேன்,

அல்லி மென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!
இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க்கு அடியேன்,
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்,
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்,
கடவூரிற் கலையன்றன் அடியார்க்கும் அடியேன்,
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்,
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்,
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்,
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்,
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்,
மெய்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கு அரையன்றன் அடியார்க்கும் அடியேன்,
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்,
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்,
ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்,
ஒலிபுனல் சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க்கு அடியேன்;
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே,

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலார் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்,
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்,
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்,
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்,
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே!

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்,
சீர்கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்,
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க்கு அடியேன்,
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்,
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்,
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே!

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்,
பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க்கு அடியேன்,
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க்கு அடியேன்,
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க்கு அடியேன்,
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி விரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்,
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே!

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங்காரிக்கும் அடியேன்,
நிறை கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்,
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதி
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்,
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க்கு அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே!

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்,
மடல்சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்,
புடைசூழ்ந்த புலியதன்மேல் அரவாட ஆடிப்
பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும்
அடியேன்,
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே!

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்,
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்,
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்,
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்,
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்,
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்,
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்,
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே!

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்,
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கு அடியேன்,
திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்,
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்,
ஆரூரில் அம்மானுக்கு அன்பரா வாரே!

திருச்சிற்றம்பலம்

தம்பிரான் தோழரான அவர் பாடிய திருத்தொண்டத் தொகை வரிசைக் கிரமப்படியே சிவனடியார்களான நாயன்மார்களின் திருத்தொண்டுகளை இனிப் போற்றிக் கூறுகிறேன்.



6. தில்லைவாழ் அந்தணர்

ஆண்டவன் ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி, சோதியாய் உணர்வுமாகி, தோன்றிய பொருளுமாகி, பேதியாய் ஏகமாகி, பெண்ணுமாய் ஆணுமாகி, இவற்றையெல்லாம் போதிப்பவனாகவும் நின்று தில்லையம்பலத்தில் ஆனந்தப் பொதுநடனம் ஆடுகின்றான். அத்திரு நடனத்தைப்



போற்றுகின்றேன்! போற்றுகின்றேன்! கற்பனைக்கும் எட்டாச் சோதியான இறைவன் கருணையே உருவமாகி, அற்புதக் கோலம் பெருகி நிற்கிறான். வேதாந்தத் தத்துவங்களின்மீது ஒளிவீசி, சிதாகாச சொரூபமாய்த் திகழும் திருச்சிற்றம்பலத்தினுள் ஆனந்தக் கூத்தன் நின்று அழகாகக் களிநடனம் ஆடுகிறான். ஆடும் அவனது பூங்கழல்களைப் போற்றுகிறேன்! போற்றுகிறேன்! அம்பலக் கூத்தனைப் போற்றி தில்லையில் வாழும் அந்தணர்களின் திறத்தை இனிச் சொல்லுகிறேன்.

தில்லை என்பது சிதம்பரமாகும். அங்கு வெண்ணீறு அணிந்த பொன்மேனிக் கோலத்தோடு களிநடனமாடுகிறார் நடராஜப் பெருமான், அப்பெருமானுக்குத் திருத்தொண்டு புரியும்

பேறு பெற்றவர்களே தில்லைவாழ் அந்தணர்கள். அதனால் பெருமையின் வரம்பிற்கு அவர்கள் ஓர் எல்லையாக உருவானார்கள். அம்பலத்தில் ஆடுகின்ற அம்பலவாணரைத் தொழுது திருவடிகளை அடையவேண்டுமென்று தொண்டு புரிவதே அவர்களுக்குரிய பெருந்தவமாகும்! பெருகும் அன்பால் திருவடித்தவம் புரிந்து நன்மையைப் பேணி வாழும் நெறியிலே நிற்பார்கள்! பொங்கி வளரும் திருவருட் செல்வம்போல, ஓங்கி வளரும் திருப்பணிகளை அவர்கள் ஏத்தி நின்று, கிரியைகள் முதலான மங்கலத் தொழில்கள் புரிந்து, நடராஜப் பெருமானை நான்கு மறைகளாலும் துதிப்பார்கள். மற்றும் தங்களுக்கேற்ற பண்போடு இறைவனுக்கு அணுக்கத் தொண்டு அகத் தொண்டு முதலியவற்றையும் சிறப்புறச் செய்வார்கள். கூத்தப் பெருமானின் திருக்கோயிலுக்குள் அகம்படித் தொண்டு புரிந்தும் உள்ளம் மகிழ்வார்கள்.

அவர்கள் ருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களையும் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய ஆறு தொழில்களையும், ஞானம், கிரியை, சரியை, யோகம் என்ற நான்கு உபாயங்களையும் குற்றமறக் கற்றவர்கள். தருமத்தையே பொருளாகக் கொண்டு தத்துவ நெறியிலே அவர்கள் மனமும், வாழ்க்கையும் செல்லும். அதற்காகவே வேத வேதங்களைப் பயில்வதில் வல்லவர்கள். வேதங்கள் கூறுகிறபடி ஆகவனியம், காருகபத்தியம், தக்கணாக்கினியம் என்ற மூன்று விதமான யாகங்களையும் வளர்த்து உலகத்து உயிர்களைக் காத்தருள்வார்கள். பிற உயிர்களிடம் அவர்கள் கருணை உடையவர்கள். திருத் தில்லை நடராஜப் பெருமானுக்கு ஆளாகி திருவருட் செல்வம் பெற்றதினால் குணமே உருவானவர்கள். மாசில்லாத மரபிலே வந்து, மாறுதல் இல்லாத ஒழுக்கம் பூண்டவர்கள்! தங்களுக்குரிய ஆறுவகைத் தொழில்களைக் கையாள்வதாலே, உலகத்தில் அரும் துன்பங்களையெல்லாம் அகற்றியுள்ளார்கள். விபூதியே அவர்களது வாழ்வில் அடையும் செல்வம் எனக் கருதும் மனோபக்குவம் மிகுந்தவர்கள். நடராஜப் பெருமானிடம் பேரன்புகொண்டு வாழ்வதே இவ்வுலகத்தில் கிடைத்தற்கரிய பேறாகும் என்று கருதிப் பெருவாழ்வு வாழ்பவர்கள்!


அப்பெரியோர்கள் தானமும் தவமும் செய்வதில் வல்லவர்கள்! தகாத பகுதியில் சாராதவர்கள். குற்றமோ ஊனமோ ஒன்றுமில்லாதவர்கள். உலகமெல்லாம் புகழ்ந்து போற்றும் மானமும் பொறுமையும் தாங்கி நின்று இல்லறம் நடத்துபவர்கள். சிந்தையிலே தெய்வத்தன்மை நிறைந்த

இவ்வேதியர்கள் தில்லைவாழ் மூவாயிரம் அந்தணர்கள் எனப் போற்றப்படுவார்கள். இப்பிறவியிலே சிவபெருமானின் திருவருளைப் பெற்று வாழ்ந்தவர்களாகையால் இனிமேல் இவ்வுலகில் பெறக்கூடிய பேறு எதுவும் இல்லாதவர்கள்! நன்னெறியில் அவர்களுக்கு ஒப்பாக அவர்களே சிறந்து விளங்கித் தலைமையானார்கள்.

இத்தகைய தில்லைவாழ் அந்தணர்களின் பெருமையை நான் எடுத்துச் சொல்வது எளிய காரியமா? தென் தமிழ் செய்த தவத்தின் பயனாய், திருத்தொண்டத் தொகையை நம்பியாரூரர் பாடுவதற்கு முன்னால் 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கு அடியேன்' என்று தியாகேசப் பெருமானே பாடலின் முதலடியை எடுத்துக் கொடுத்தாரல்லவா? அப்பெருமானின் திருவாக்கால் ஆரூரர் கோத்த பாமாலையிலே தில்லைவாழ் அந்தணர்கள் முதலிடம் பெற்றவர்கள் என்றால் அவர்களின் அருட்பெருமையை யாரால்தான் அளவிட்டுக் கூறமுடியும்? இந்த பூமியில் உயர்ந்த இடம் தில்லைநகர். அங்கு தோன்றிய தில்லை அந்தணர் மூவாயிரவர் அகிலமெல்லாம் புகழும் திருமறையோராக என்றென்றும் தில்லையம்பலக் கூத்தரின் திருநடனத்தைப் போற்றி வாழ்வாராக! இனி திருநீலகண்டக் குயவனார் என்னும் சிவநேசத் தொண்டரின் தவ ஆற்றலைக் கூறுகிறேன்.

''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்.



7. திருநீலகண்ட நாயனார்

வேதியருக்குரிய திருநகராகத் தில்லை மூதூர் திகழ்ந்த காலத்திலே குயவர் குலத்திலே ஒருவர் தோன்றினார். அவர் சிவ பக்தியில் சிறந்தவர். சிற்றம்பலத்தில் நடராஜப் பெருமான் மங்கையொரு பாகம் நோக்கி, ஆதியந்தமில்லாமல் ஆடும் அற்புதத் தனிக்கூத்தைக் கண்டு களிப்புற்று, பெருமானின் திருவடிகளை வாழ்த்தி, வழிபடுவதில் அவர் மிகவும் விருப்பமுள்ளவர். பொய்மை நீக்கி அறவழியிலே வாழ்பவர். விரிசடைப் பெருமானுக்குப் பேரன்பர். சிவபெருமான் உலகம் உய்ய நஞ்சு உண்டபோது சிவகாமியம்மையார் பெருமானின் கழுத்தைப் பிடித்து நஞ்சு இறங்குதலை நிறுத்தினார் அல்லவா? நஞ்சு செய்த தவத்தால்தான் அது சிவபெருமானின் கண்டத்திலே என்றென்றும் தங்கியிருந்து நீலகண்டமாக விளங்குகிறது என்று அவர் எண்ணமிட்டுச் சிவபெருமானையே நினைத்து நினைத்து, 'திருநீலகண்டம்! திருநீலகண்டம்!' என்று ஓயாமல் சொல்லி மகிழ்வார். அதனால் அவரைத் 'திருநீலகண்ட நாயனார்' என்றே எல்லோரும் அழைத்து வந்தார்கள்.



சைவ சமயத்தின் உண்மையான திருவருட் செல்வமே தம் வாழ்வின் பொருள் என்று கருதி திருநீலகண்டர் அதையே சார்ந்து நிற்கும் மனப்பான்மையுள்ளவர். சிவபக்தியோடு

சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு புரியவும் பெரும் விருப்பமுள்ளவர். குயவரான திருநீலகண்டர் தம் குலத் தொழிலையொட்டித் தம்முடைய சீவனத்துக்காகச் சட்டி பானைகள் முதலான மண்பாண்டங்களை ஏராளமாகச் செய்து வாழ்க்கை நடத்தி வந்தார். சிவனடியார்களுக்கென்று அவர்கள் உள்ளம் மகிழச் சிறப்பாகத் திருவோடுகள் செய்து வழங்குவதையும் ஒரு திருத்தொண்டாக நடத்தி வந்தார். உலகத்தவர்களையொட்டி அவர் தம் மனைவியோடு இல்லறம் புரிந்து இனிமையாகவும் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவி இளமையானவள். அருந்ததி போல் கற்பில் சிறந்தவள். அழகிலும் சிறந்தவள். திருநீலகண்டரோ இளமை மேலோங்கித் தூண்ட இன்பத்துறையில் மிகவும் விருப்புடையவராகத் தம் மனைவியோடு கூடி மகிழ்ந்து வாழ்ந்து வந்தார்.



அவ்வாறு வாழும்போது திருநீலகண்டர் ஒருநாள் சிற்றின்பத்தில் அதிக ஆவல்கொண்டு ஏதோ ஒரு மயக்கத்தில் விலைமகளான பரத்தையொருத்தியோடு கூடி மகிழ்ந்திருந்து விட்டுத் தம் வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

அதை அறிந்த அவருடைய மனைவி, 'என்னிடம் பிரியமுள்ள என் கணவர் இப்போது பரத்தையொருத்தியைக் கட்டியணைத்து விட்டு வந்திருக்கிறாரே' என்பதை நினைத்து மனமும் மானமும் பொறுக்காமல், தன் கணவரோடு மனஸ்தாபமுற்றாள். விலைமகளைக் கட்டியணைத்த கைகளால் குலமகளான தன்னைத் தன் கணவன் தொடக்கூட விடக்கூடாது என்று ஊடல் கொண்டாள். ஆயினும் அவள் தன் வீட்டு வேலைகளையும் இல்லறப் பணிகளையும் கணவனுக்குரிய பணிவிடைகளையும் செய்து தன் கணவரோடு கூடி மகிழும் உடலுறவிற்கு மட்டும் சம்மதிக்காமல்

வாழ்ந்து வந்தாள். இது வெளியுலகிற்குத் தெரியாதபடி தம் குடும்ப கௌரவத்தையும் காப்பாற்றி வந்தாள்.

கட்டிளம் மனைவி, தேன் ததும்பும் தாமரைப் பூவைப்போல் தோற்றம் வாய்ந்தவள். செந்தாமரையில் வாழும் மகாலட்சுமியை விடப் பேரழகு உள்ளவள். அவற்றை எல்லாம் பார்த்துப் பார்த்துச் சொக்கிய திருநீலகண்டர் அவளோடு கூடி மகிழத் துடிதுடித்தார். ஆனால் மனைவியோ கூடலுக்கு இணங்காமல் பிணங்கிப் பிணங்கி, ஊடலைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே வந்தாள். தம்பதிகளுக்கிடையே மூண்ட அந்தப் பிணக்கை எப்படியாவது தீர்க்கவேண்டுமென்று திருநீலகண்டர் விரும்பினார். ஆபரணங்களோடு மினுமினுக்கும் மனைவியின் இளமையையும், மென்மைச் சாயலையும், பூங்கொடிபோல் பின்னிக்கொள்ளும் தன்மையையும், பொற்கொடி போன்ற பிரகாசத்தையும் பார்த்துப் பார்த்து திருநீலகண்டர் மோகவசப்பட்டு, மனைவியின் முன்னால் சென்று நெஞ்சுருக இரக்கவுரைகள் பல கூறி, இன்னுரைகளும் பல கூறி அவளை அப்படியே கட்டித் தழுவ முயன்றார். அதைக் கண்டு வெகுண்ட மனைவி, அவருடைய பிடிக்கு எட்டாதபடித் துள்ளித் தாவி நின்று ‘‘எம்மைத் தீண்டாதீர்! திருநீலகண்டத்தின்மீது ஆணை!’’ என்று கூவினாள்.

திருநீலகண்டத்தின்மீது திருநீலகண்டர் பெரும் பக்தி கொண்டவராதலால், அந்தத் திருநீலகண்டத்தின் மீதே தம் மனைவி ஆணையிட்டதைக் கேட்டதும், அவளைத் தீண்டாமல் விட்டு விட்டு அப்பால் நகர்ந்தார்.

அந்தக் கணம் முதல் அவர் அவளைத் தன் மனைவியாகப் பாராமல், அயலார் பெண்ணைப் போலவே பார்த்து, ‘‘இவள் எம்மை என்று பன்மையில் கூறியதால் இவளையும் இவளது பெண் இனமான மற்ற மாதர்களையும் என் மனதாலும் தீண்டமாட்டேன்!’’ என்று ஆணையிட்டார். அன்று முதல் அவர்கள் இருவரும் உடலுறவில்லாமலேயே கணவன் மனைவியாக வாழ்ந்து வருவதில் ஈடுபட்டார்கள். கற்பில் சிறந்தவளான திருநீலகண்டரின் மனைவி தன்னுடைய அழகான உடல்மட்டும் தன் நாயகனிடம் படாமல் மற்ற பணிகளையெல்லாம் அன்புடன் செய்து வந்தாள்.

இவ்வாறு கணவனும் மனைவியும் வீட்டை விட்டுத் துறவாமல் ஒரே வீட்டினுள் வெவ்வேறானவர்களாக இருந்து, ஆசையோடு கூடி மகிழும் உடலுறவு எதுவும் இல்லாமலும், அதை அயலார் அறியாத வண்ணமும் குடும்ப வாழ்க்கை நடத்தி வந்தார்கள். இளமை மிகுந்த அவ்விருவரும் அந்த இளமையின் ஆசைத் தூண்டுதல்களுக்கு ஆட்படாமல்,

திருநீலகண்டத்தின்மீது வைத்த ஆணையொன்றையே போற்றிக் காலம் தள்ளி வந்தார்கள்.

ஆண்டுகள் பலவும் கழிந்தன. வளமையும் வலிமையும் மிகுந்த இளமைக்காலம் நீங்கி அவ்விருவர்களுக்கும் உடலில் முதுமை வந்தடைந்தது. இருவரும் உடல் தளர்ந்து சரிந்து சாயலானார்கள். ஆனாலும் தம்பிரான்மீது கொண்ட அன்பில் அவர்கள் சிறிதும் தளரவோ சரிந்து சாயவோ இல்லை!

இவ்வாறு அவர்கள் வைராக்கிய நெறியைக் கடைப்பிடித்து வரும் காலத்தில் விரிசடைப் பெருமான் அவர்களுடைய வைராக்கியத்தைச் சோதித்து அவர்களின் தன்மையை உலகிற்கு விளக்கி உணர்த்தவும் ''பக்தி வைராக்கியமான நன்னெறி இது'' என்று உலகத்தோர் விரும்பிப் போற்றவும், பொது மக்களுக்கு அந்தப் பக்தி வைராக்கிய மார்க்கத்தை எடுத்துக்காட்டவும் விரும்பினார்.

அதற்காக சிவபெருமான் ஒரு சிவயோகி வேடமெடுத்தார். இடையிலே அரைஞாணோடு கூடிய கோவணம். உடம்பின்மீது ஒளிவீசும் திருநீற்றின் தெய்வத்தன்மை, தோளிலும் மார்பிலும் துவளும் பூணூல். திரிபுண்டரம் அணிந்த நெற்றியிலே ஒரு பிரகாசம்! தலையிலே நெடுஞ்சடை தெரியாதபடி சிரித்துச் சுருண்டு கிடக்கும் தலைமயிர்! ஒளிவீசும் பற்களிடையே, வெண்ணிலா உதயமாவதுபோல் ஒரு புன்சிரிப்பு! கையிலே பிச்சையிடும் திருவோடு! இந்தத் தோற்றத்தோடு சிவயோகிபோல் சிவபெருமான் மாறுவடிவமெடுத்து திருநீலகண்டக் குயவனார் வீட்டுக்கு வந்தார்.

வந்த சிவயோக நாதரைக் கண்ணுற நோக்கிய திருநீலகண்டர் அன்பு மிகக்கொண்டு, ''புண்ணியத் தொண்டரான சிவனடியாரல்லவா?'' என்று போற்றித் தொழ விரும்பி, உவகையுடன் எதிர்கொண்டு வரவேற்று வணங்கினார். பிறைசூடிய சிவபெருமானைச் சிவனடியார் என்றே நினைந்து திருநீலகண்டர் தம் வீட்டினுள் அழைத்துச் சென்று பெருமகிழ்ச்சி பொங்கிட முறைப்படி வழிபட்டு உபசாரப் பூஜைகளையும் பெரும் விருப்போடு செய்து நின்றார். பிறகு அவர் சிவயோகியாரை நோக்கி, ''எம்பிரானே! அடியேன் தங்களுக்குச் செய்யவேண்டிய பணி யாது?'' என்று கேட்டார்.

தேவர்க்கெல்லாம் நாயகரான சிவபெருமான் ஒரு தொண்டரைப் போலவே நடித்து, ''அன்பனே! நான் தருகிற இத் திருவோட்டை உன்னிடம் பத்திரமாக வைத்திருந்து நான் திரும்பி வந்து கேட்கும்போது திருப்பித் தரவேண்டும்!'' என்று

கூறி அத்திருவோடுகளின் மகிமையை வர்ணிக்கலானார்: ''அப்பனே! இத்திருவோட்டுக்கு இணையானது இந்த உலகில் வேறு எதுவும் கிடையாது. தனக்குத் தானே ஒப்பானது! தன்னிடம் சேரும் எல்லாப் பொருள்களையும் தூய்மையாக்கக் கூடியது. பொன்னையும் நவமணிகளையும் விட மிகவும் போற்றத்தக்கது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்தத் திருவோட்டை உன்னிடம் கொடுக்கிறேன்! இதை நீ வாங்கிப் பத்திரமாக வை!'' என்று கூறினார். பழமையான குயவர் குலத்தில் தோன்றிய திருநீலகண்டர் அந்தத் திருவோட்டை வாங்கி, அவசர அவசரமாகத் தம் வீட்டினுள் ஒரு பக்கத்தில் பாதுகாப்பான ஒரு மூலையில் வைத்துவிட்டுச் சிவயோகியாரிடம் திரும்பி வந்தார். அவர் திருவோட்டை வைத்ததுமே சிவயோகியார் அங்கிருந்து புறப்பட்டுவிட்டார். நீலகண்டரும் யோகியாருடன் சிறிது தூரம் சென்று அவரை வழியனுப்பி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தம் வீட்டுக்குத் திரும்பினார். சிவயோகியாக வந்தருளிய கூத்தப் பெருமானோ தம்முடைய பொன்னம்பலத்துக்குள் போய் மறைந்தார்.

பன்னெடும் நாட்கள் கழிந்த பின்னர் சிவபெருமான் நீலகண்டக் குயவரின் சத்திய விரதத் தன்மையையும், அவருடைய மனோவுறுதியையும் உலகிற்குக் காட்ட விரும்பினார். அதற்காக தம்முடைய திருவோடு வைத்திருந்த இடத்திலிருந்து அதை மறைந்தொழியும்படிச் செய்தார். பிறகு அவர் முன்போலவே சிவயோகியார் வடிவம் தாங்கிக் குயவனாரின் வீட்டுக்கு வந்தார்.

அவரைத் திருநீலகண்டக் குயவனார் எதிர்கொண்டு வரவேற்று வணங்கி, ''தேவரீர் அடியேனை நினைத்து இங்கு எழுந்தருளியது நாங்கள் செய்த தவப்பயனேயாகும்!'' என்று கூறி நின்றார். அவரைச் சிவயோகியார் உற்றுப் பார்த்தார். ''திருநீல கண்டா! உன்னிடம் நான் முன்பு கொடுத்து வைத்த என் திருவோட்டைத் திருப்பிக் கொடுத்துவிட்டு நில்!'' என்றார் எல்லாவற்றையும் ஆக்கவும் வல்ல அந்தச் சிவயோகியார்.

அவர் 'சீக்கிரமாகக் கொடு' என்பது போல் வேகமாகக் கூறியதால், அவருடைய திருவோட்டை எடுத்து வந்து கொடுப்பதற்காக, அதைப் பத்திரமாக வைத்திருந்த இடத்திற்கு திருநீலகண்டர் ஓடினார். ஆனால் அவர் வைத்திருந்த இடத்தில் அந்தத் திருவோட்டைக் காணவில்லை. திருநீலகண்டர் திகைத்துப் பதறிச் சுற்று முற்றும் பார்த்தார். திருவோடு அகப்படவே இல்லை! தம் அருகில் நின்றவர்களிடமும் தம் வீட்டில் உள்ள எல்லோரிடமும் அதைப்பற்றி விசாரித்தார்: யாவரும் தமக்குத் தெரியாதென்று கூறிவிட்டார்கள். வீட்டினுள் எங்கெங்கே தேடியும்

திருவோட்டைக் காண முடியவே இல்லை! அது மறைந்த மாயத்தை அறியாதவரான திருநீலகண்டர், இனி என்ன செய்வது, என்ன பதில் சொல்வது என்பதொன்றும் தெரியாமல் மனம் மயங்கித் தயங்கி நின்றார்.

சிவயோகியாராக வந்த சிவபெருமானோ தானும் அவ் வீட்டினுள் புகுந்து, அங்கு மலைத்து நிற்கும் திருநீலகண்டரின் காதில் விழும்படி, ''திருநீலகண்டா! ஒரு நொடிப்பொழுதில் என் திருவோட்டைக் கொண்டு வருவதாக உள்ளே ஓடினாயே, அதை எடுத்துவர ஏன் இவ்வளவு நேரம்?'' என்று கூக்குரல் இட்டார்.

தம் திருநீலகண்டத்தை மறைத்து வந்து நிற்கும் அச்சிவயோகியாரிடம் திருநீலகண்டத் தொண்டர் திரும்பி வந்து, கைகூப்பிச் சிவயோகியாரைக் கும்பிட்டுப் பணிவுடன் கூறலானார்; ''சிவவேதியரே! எந்தையே! விருப்பூட்டும் உம் திருவோட்டை நான் வைத்த இடத்தில் தேடினேன். அதைக் காணவில்லை! வேறு இடங்களிலும் தேடினேன். அது கிடைக்கவில்லை! ஆகையால் பழைய திருவோட்டைவிட நல்லதாகப் புத்தம்புதிய திருவோடு ஒன்று நானே உமக்குச் செய்து தருகிறேன். அதை ஏற்றுக் கொள்ளும்! என்னுடைய இந்தப் பிழையைப் பெரியோராகிய தாங்கள் பொறுத்தருள வேண்டும்!'' என்று திருநீலகண்டர் யாசித்து நின்றார்.

அதைக் கேட்டதும் சிவயோகியார் கோபம் மூண்டவராய் நாயனாரைச் சினந்து நோக்கி, ''என்ன சொன்னாய்? புதுத் திருவோடா செய்து கொடுக்கப் போகிறாய்? நான் உன்னிடம் கொடுத்த பழைய மண் ஓட்டைத் தவிர வேறு பொன்னாலே நீ செய்து கொடுத்தாலும் அது எனக்கு வேண்டாம். அதை நான் ஏற்றுக் கொள்ளவே மாட்டேன்! உன்னிடம் பாதுகாக்கும்படி கொடுத்த என்னுடைய பழைய மண் ஓட்டையே கொண்டுவா!'' என்று முழங்கினார்.

''கேடு இல்லாத பெரியவரே! என்னிடம் நீர் கொடுத்த திருவோடு காணாமற் கெட்டுப்போய் விட்டது. அதை நான் கவலையுடன் எங்கெங்கு தேடியும் காணவில்லை! அதனாலே உம் பழைய திருவோட்டைவிட இன்னும் நல்லதாக, நெடுங்காலத்திற்குப் பயன்படக்கூடிய விதமாக ஒரு புதிய திருவோடு செய்து தருகிறேன் என்றாலும் அதை ஏற்றுக் கொள்ளவும் மறுக்கிறீர்! நீர் இவ்வாறு மறுத்துரைத்துக் கோபித்து நிற்பது என் உணர்வையெல்லாம் ஒழித்து விட்டது. நான் என்ன செய்வேன்?'' என்று திருநீலகண்ட நாயனார் ஏக்கத்துடன் கூறினார்.

‘‘இனி ஆவது என்ன? உன்னிடம் அடைக்கலப் பொருளாக நான் கொடுத்து வைத்த என் திருவோட்டை நீ திருடிக்கொண்டாய்! நயவஞ்சக நடிப்புடன் பாசாங்குகள் பல செய்யும் நீ, பழிபாவங்களுக்குச் சிறிதும் கூச்சப்படமாட்டாய்! ஆகையால், இவ்வூரில் உள்ளவர்கள் எல்லோரும் பார்க்கும்படி உன்னை நான் வளைத்துப் பிடித்து உன்னிடம் வழக்காடி, நீ திருடிய என் திருவோட்டை நான் திருப்பி வாங்காமல் போகவே மாட்டேன்!’’ என்றார் புண்ணியப் பொருளாய் நின்ற சிவயோகியார்.

‘‘நான் உம்முடைய திருவோட்டைத் திருடவில்லை! என் உள்ளத்திலும் சிறிதும் கள்ளமில்லை! இதற்கு நான் என்ன செய்வேன்? நீரே சொல்லும்!’’ என்று திருநீலகண்ட நாயனார் மனம் நெகிழக் கூறினார்.

‘‘அப்படியானால் உன்னுடைய பிரிய புதல்வனின் கையைப் பிடித்துக்கொண்டு திருக்குளத்தில் மூழ்கித் திருவோடு காணாமற் போய்விட்டது என்று சத்தியம் செய்துவிட்டுப் போ! நான் விட்டுவிடுகிறேன்!’’ என்றார் சிவயோகியார்.

‘‘ஐயரே! நீர் சொல்லியருளிய வண்ணம் செய்வதற்கு எனக்குப் புதல்வன் இல்லையே! நான் என்ன செய்வேன்? சொல்லும்?’’ என்று திருநீலகண்ட நாயனார் கேட்டார்.

‘‘அப்படியானால் குற்றமற்ற உன் மனைவியின் கையைப் பிடித்தாவது தாமரைத் தடாகத்தில் மூழ்கிச் சத்தியம் செய்!’’ என்று சிவயோகியார் மொழிந்தார்.

‘‘நானும் என் மனைவியும் ஒரு சபதம் செய்துகொண்டு இருக்கிறோம். அதனால் என் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு திருக்குளத்தில் மூழ்க என் மனம் சம்மதிக்கவில்லை! நான் வேண்டுமானால் பொங்கி வரும் வெள்ளத்திலும் மூழ்கிச் சத்தியம் செய்து தருகிறேன். அதுவே போதும்!’’ என்றார் திருநீலகண்ட நாயனார்.

உடனே, சிவயோகியார் ஆத்திரங்கொண்டு, ‘‘என்னுடைய திருவோட்டையும் நீ திருப்பித் தரமாட்டாய்! அதை நீ திருடவில்லை என்பதற்கு நான் சொல்கிறபடி உன்னுடைய மனைவியின் அழகான தளிர்க்கையைப் பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்யவும் மறுக்கிறாய்! அவ்வளவு தூரம் உன் மனதைத் திடப்படுத்திக் கொண்டிருக்கிறாய். எனவே தில்லைவாழ் அந்தணர்கள் கூடியிருக்கும் பேரவைக்குச் சென்று என் வழக்கைக் கூறப் போகிறேன்!’’ என்றார்.

பிறகு நடுநிலைமை தவறாமல் நான்மறைவழி நிற்கும் தில்லைவாழ் அந்தணர்களின் திருச்சபைக்குச் சிவயோகியார் சென்று வழக்குத் தொடர்ந்தார். அவர் பின்னால் சென்ற திருநீலகண்ட நாயனார் பேரன்புடன் வழக்கின் பொருட்டு நியாய சபையை வந்தடைந்தார். வேதப் பிராமணராக வந்த சிவபெருமான் அங்குள்ள அருமையான வேதியர்களை நோக்கிச் சொல்லலானார்:


''மறையோர்களே! இங்கு நிற்கும் இந்தத் திருநீலகண்டக் குயவனிடம் நான் ஒரு திருவோடு கொடுத்து அதைப் பத்திரமாக வைத்திருக்கச் சொல்லியிருந்தேன். சிலகாலம் கழித்து வந்து நான் 'அந்த திருவோட்டைக் கொடு' என்றால் 'அந்த ஓடு காணாமற் கெட்டுப் போய்விட்டது'' என்கிறான்! உண்மையிலே அது தொலைந்து போயிருந்தால், தன் மனைவியின் கையைப் பிடித்துத் திருக்குளத்தில் மூழ்கித் திருவோடு கெட்டுவிட்டது என்று சத்தியம் செய்யவும் மாட்டானாம்! துணிந்து நிற்கிறான்!'

இவ்வாறு முக்கண்ணை மறைத்து சிவவேதியர் வழக்காடியதைக் கேட்டதும் தில்லைவாழ் அந்தணர்கள் நீலகண்டக் குயவனாரைப் பார்த்து, ''சற்குணம் நிறைந்த குயவரே! இதற்கு நீர் பதில் சொல்லும்!'' என்றார்கள்.

''பூணூல் அணிந்த பெரியோர்களே! இங்கு நிற்கும் சிவயோகியார் பெரும் செல்வம் இதுவென்று தந்த திருவோட்டை நான் பத்திரமாக என் வீட்டினுள் ஓரிடத்தில் வைத்திருந்தேன்! பிறகு தேடிப் பார்த்தபோது அதை வைத்த இடத்தில் காணவில்லை. அது எப்படியோ இடம் பெயர்ந்து மறைந்து தொலைந்துவிட்டது! இதுதான் உண்மையில் நடந்த விஷயம்!'' என்றார் திருநீலகண்டர்.

''குயவரே! இங்கு திருநீறு அணிந்து சிவப்பழமாக நிற்கும் இந்த வேதியர் உம்மிடம் கொடுத்து வைத்த திருவோட்டை நீர் தொலைத்துவிட்டீர் என்றால், அது உண்மையென்று இவர் சொல்கிறபடியே உம் மனைவியோடு திருக்குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்ய வேண்டும். அதுதான் நியாயம்!'' என்று தில்லைவாழ் அந்தணர்கள் தீர்ப்புக் கூறினார்கள்.

திருநீலகண்டர் தம் மனைவியைத் தீண்டுவதில்லையென மேற்கொண்டிருக்கும் சத்திய விரதத்தைத் திருச்சபையில் சொல்ல முடியவில்லை. அதனால் அவர், ''நியாயம் அவ்வாறானால் உங்கள் தீர்ப்பிற்கேற்ப ஏதோ பொருந்திய வகையில் நான் திருக்குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து



கொடுக்கிறேன், வாருங்கள்!'' என்று சொல்லி பெருந்தவச் சிவயோகியாருடன் திருச்சபையை விட்டுக் கிளம்பித் தம்முடைய வீட்டுக்கு வந்தார். அங்கிருந்து அவர்தம் மனைவியாரை அழைத்துக்கொண்டு, சிவயோகியாருடன் புறப்பட்டு திருப்புலீச்சுவரம் என்னும் கோவிலுக்கு முன்னால் உள்ள திருக்குளத்தை அடைந்தார். அங்கும் தம் மனைவியைத் தொடுவதில்லை என்னும் சத்தியவிரதத்தைக் காக்கும் பொருட்டு ஒரு மூங்கில் தண்டின் ஒரு முனையை மனைவியார் பிடித்துக் கொள்ள மற்றொரு முனையை அவர் பிடித்துக்கொண்டு திருக்குளத்தில் மூழ்குவதற்காக இறங்கினார்.

அதைக் கண்டதும் சிவவேதியர் துள்ளி அவரை நோக்கி, ''உம்முடைய மனைவியின் கையைத் தொட்டுப் பிடித்துக் கொண்டு சத்தியம் செய்து கொடு!'' என்று வற்புறுத்தினார். அதனால் திருநீலகண்டர் வேறு வழியின்றி தம் மனைவியைத் தொடுவதில்லையென்று திருநீலகண்டத்தின்மீது ஆணையிட்டுச் செய்திருக்கும் சத்திய விரதத்தையும், முன்பு நடந்த செயல்களையும் உலகத்தவர் பலரும் கேட்க வெளிப்படுத்திச் சொல்லிவிட்டுத் திருக்குளத்தில் தம் மனைவியாரோடு மூழ்கி எழுந்தார். அந்தத் திருக்குளத்தில் மூழ்கி எழுந்தபோது கணவன் மனைவி இருவரும் தங்களுடைய முதுமைக்கோலம் நீங்கி விருப்பமான இளமைப்பருவம் பெற்று எழுந்தார்கள். தேவரும் முனிவரும் சிறப்பித்துப் பொழியும் தெய்வீகப் புஷ்பங்களின் மழையில் மூழ்கி எழுந்தவர்களைப் போலவே தம்பதிகள் இருவரும் தோற்றமளித்தார்கள்.

அந்நிலையில் அவர்களைக் கண்டவர்களெல்லாம், ''இது என்ன அதிசயம்?'' என்று வியந்து நின்றார்கள். ஆனால் எல்லோருக்கும் முன்னால் வழக்காடி நின்ற சிவயோகியாரை மட்டும் அங்கு காணவில்லை! அவர் மறைந்துவிட்டார்

என்பதை உணர்ந்ததும், ‘‘இது என்ன மாயம்?’’ என்று எல்லோரும் மருண்டு நின்றார்கள்.

அப்போது சிவயோகியாக வந்த சிவபெருமான் வானவீதியில் தம் துணைவியாரோடு ரிஷபவாகனத்தில் காட்சி தந்தருளினார். அக்காட்சியைக் கண்ட நீலகண்ட நாயனாரும் அவர் மனைவியாரும் சிவபெருமானைக் கைகளாரக் கும்பிட்டுத் தொழுது பரவசமடைந்தார்கள். திருநீலகண்டரின் பெருமை நோக்கி விண்மீது காட்சியளிக்கும் சிவபெருமானைத் தேவர்களும் போற்றித் தொழுதார்கள். சிவபெருமான் சிற்றம்பலத்திலே திருக்கூத்தாடி அடியார்களின் வீடுதோறும் சென்று அவரவர் நிலைமையையும் பெருமையையும் வெளிப்படுத்திக் காட்டி உயர்நிலை அளிப்பவரல்லவா? அப்பெருமான் திருநீலகண்ட நாயனாரையும், அவருடைய மனைவியாரையும் நோக்கி, ‘‘ஐம்புலன்களையும் வென்ற அன்பர்களே! இந்த இளமை என்றும் நீங்காத கோலத்தோடு விருப்புடன் எம்மிடத்திலே இருப்பீர்களாக!’’ என்று திருவருள் புரிந்து மறைந்தார்.

இளமை மீண்ட திருநீலகண்டரின் மனைவியார், புன்னகைச் செவ்வாயும், மிருதுவான தோள்களும், கருமணல் போன்ற கூந்தலும் பெற்றுத் திகழ்ந்தார். பக்தி வைராக்கிய வலிமையுள்ள திருநீலகண்டரும் அவருடைய அழகான மனைவியும் திருவருளால் வலிமையுற்றுச் சிவலோகம் அடைந்து பெறுவதற்கரிய இளமை பெற்று பேரின்பத்தில் மகிழ்ந்திருந்தார்கள்.

தம்பதிகளுக்கிடையே ஆண்டவன்மீது வைத்த ஆணையை அயலார் அறியாவண்ணம் கட்டிக்காத்த திருநீலகண்டர் பெருமைக்குரிய சிவனடியாராவார்! அவருடைய பெருமையை நான் அறிந்தவரை வாழ்த்திச் சொல்லி விட்டேன். அடுத்ததாக இயற்பகையார் என்னும் சிவனடியார் செய்த திருத்தொண்டைச் சொல்கிறேன்.

‘‘திருநீலகண்டத்துக் குயவனாருக்கு அடியேன்’’

— சுந்தரர்.

ஓம் நமசிவாய

8. இயற்பகை நாயனார்

அநபாயச் சோழனின் குலப் பெருமையைப் பெருக்கிய சோழவள நாட்டில், காவிரி நதி பாய்ந்து வயல் வளங்களைப் பரப்பிச் சென்று கடலில் சங்கமமாகித் தீர்த்த ஸ்தலமாக விளங்கும் ஒரு நகரம் உண்டு. அது பூம்புகார் எனவும், காவிரிப்பூம்பட்டினம் எனவும் புகழ்பெற்று விளங்கும்.

அந்நகரில் வணிகர் குலத்தில் இயற்பகை என்னும் பெயர் கொண்ட ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் எல்லா நல்லறங்களிலும் மேலான இல்லறத்தை முறைப்படி நடத்தி வந்தார். வாணிபத்தொழில் செய்து வந்ததால், அவர் சிறந்த செல்வந்தராகவும், சிவநேசச் செல்வராகவும் விளங்கினார். அந்தி வானத்து வெண்பிறை சூடிய சிவபெருமானின் திருவடியார்களும், மற்றும் சிவனடியார்கள் யார் வந்தாலும், அவர்கள் விரும்பிக் கேட்பது எதுவாயிருந்தாலும் இல்லையென்று சொல்லாமல் உடனே குறைவின்றிக் கொடுக்கும் இயல்புள்ளவர். அப்படிக் கொடுப்பது உலக இயற்கைக்கு அப்பாற்பட்டதாகையால் அவரை எல்லோரும் இயற்பகையார் என்றே அழைத்தனர்.

உடம்பில் விபூதி அணிந்த சிவனடியார்கள் உள்ளத்தில் அருள் நிறைந்தவர்களாகவும் கங்காதரப் பெருமானுக்கு மெய்யடிமை பூண்டவர்களாகவும் இருப்பார்கள் என்றே இயற்பகையார் கருதுவார். அதனால் சிவனடியார்கள் மனதிற்குள் நினைப்பது அனைத்தையும் அவர் செயல் வடிவில் முடித்துக் கொடுத்து மாறுதல் இல்லாத நன்னெறியில் தம் அழகான மனைவியோடு இல்லறம் புரிந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்தார். சிவனடியார்கள் ஏவினதைச் செய்யும் பெருமையே வாழ்க்கையில் பெறும்பேறு என்று கருதி, சிவனடியார் எவர் வந்து எதைக் கேட்டாலும் இல்லையென்று கூறாமல் அதை உடனே கொடுத்துதவும் திருத்தொண்டைத் தொடர்ந்து நடத்திவந்தார்.

அவ்வாறு அவர் வாழ்ந்து வரும்போது அவருடைய மனப்பான்மையைச் சோதித்து அவருடைய திருத்தொண்டின் சிறப்பை உலகிற்கு உணர்த்த விரும்பிய கூத்தப் பெருமான் ஒரு வேதியராக வடிவெடுத்தார். பொன்னிற உடம்பில் தூய வெண்ணீறு விளங்க உள்ளத்தில் மகா காமாந்தகர் போலவும் தோற்றமளித்தார். காமுகருக்கே உரிய அந்தத் தூர்த்த வேடம் அவருடைய நாயகியான உமையம்மைக்குத் தெரியுமோ

தெரியாதோ நாமறியோம்! சிவபெருமான் அத்தகைய மோகாந்தகார மாய வடிவம் கொண்டு புகார் நகரத்து வணிக வீதியில் வந்து இயற்பகையாரின் வீட்டினுள் புகுந்தார்.

அவரைக் கண்ட இயற்பகை நாயனார், ''ஆகா! எந்தை எம்பிரான் அடியவரன்றோ என் வீடு தேடி வந்திருக்கிறார்!'' என்று அகம் மகிழ்ந்து, சிந்தையில் அன்பு பொங்க அவரெதிரே சென்று வணங்கி, சிறப்போடு அர்ச்சனைகள் பல செய்து, ''என்னுடைய முந்தையப் பெருந்தவத்தினாலோ முனிவர் இங்கே எழுந்தருளியிருக்கிறீர்?'' என்று பணிவோடு கூறினார்.

அவரிடம் வஞ்சகக் காமுகராய் வந்து நிற்கும் சிவ வேதியரோ அவரை நோக்கி, ''இயற்பகையாரே! உம்மிடம் சிவனடியார்கள் எவர் வந்து எதைக் கேட்டாலும் இல்லையென்று மறுக்காமல் நீர் மனமுவந்து கொடுப்பதாகக் கேள்விப்பட்டேன்! அதனால் நானும் உம்மிடம் ஒன்றை வேண்டி அடைவதற்காகவே இன்று இங்கே வந்திருக்கிறேன்! நான் கேட்பதை நீர் மனப்பூர்வமாகக் கொடுக்கச் சம்மதிப்பீரென்றால் அது என்னவென்று சொல்கிறேன்!'' என்றார்.

''சிவனடியாரே! எம்பெருமான் விரும்பும் பொருள் எதுவாயினும் அது என்னிடம் இருக்குமேயானால் அதைச் சிவனடியாருக்கே உடமையாக வழங்கிவிடுவேன்! அதில் சந்தேகமே இல்லை! நீர் விரும்புவது என்ன? அருள் கூர்ந்து சொல்லும்!'' என்றார் இயற்பகையார்.

காமுகராகவும் சிவவேதியராகவும் வேடம் கொண்டு வந்த சிவபெருமான், ''உன்னுடைய காதலுக்குரிய மனைவியை நான் கேட்டுப் பெறவே இங்கே விரும்பி வந்தேன்!'' என்றார்.

தகாத விருப்பத்தைக் கேட்டதும் இயற்பகையார் திடுக்கிடவில்லை. சிவவேதியரின் வார்த்தைகளைக் கேட்பதற்கு முன் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருந்தாரோ, அதைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சி கொண்டு சிவனடியாரை வணங்கி, ''அடியார்களே என்னிடம் உள்ள பொருளைத் தாங்கள் விரும்பிக் கேட்டது எனது புண்ணியப் பலனே!'' என்று உரைத்தார்.

பிறகு அவர் சட்டென்று தம் வீட்டிற்குள் விரைந்து சென்றார். வீட்டினுள் அவரது மனைவியார் தன் கூந்தல் நிறைய மது மலர்கள் சூடி இளமையோடும் அழகோடும் புதுமலர்போல் பூரித்து நின்றார். இல்லற வாழ்க்கைக்கும் காதலுக்கும் கற்புக்கும் சிறந்த அந்த மனைவியாரை நோக்கி, ''என் மனைமாட்சிக்குரிய மங்கையே! இன்று உன்னை இங்கே

வந்திருக்கும் சிவனடியாருக்குக் கொடுத்துவிட்டேன்!'' என்று இயற்பகையார் கூறினார்.

அதைக் கேட்டதும் மனையாள் உலகவழியையொட்டி மனங்கலங்கினார். பிறகு திருவருள் வழியில் மறைதெளிந்து தன் நாயகரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்.

''என் பிராண நாதரே! இன்று நீங்கள் எனக்கு அருள் செய்து அடியாளுக்கு இட்ட ஆணை இதுவென்றால் இதை நிறைவேற்றுவேன்! நீங்கள் சொல்வது ஒன்றை அடியாள் செய்வதைத்தவிர வேறு உரிமை எதுவும் எனக்கு உண்டோ?'' என்றுகூறித் தன் தனிப்பெருங் கணவரை வணங்கிப் பணிந்து நின்றாள். இயற்பகையார் தம் மனைவியை அழைத்துக்கொண்டு சிவவேதியர் இருக்கும் இடத்திற்கு வந்தார். அவருடைய மனைவி வேதியரின் பாதங்களிலே விழுந்து கும்பிட்டுப் பிறகு எழுந்து திகைத்து நின்றார். அப்போது மகாலட்சுமியையும்விட அதி அழகானவராகவும் உயர்ந்தவராகவும் தோற்றமளித்தார்.

சிவனடியாருக்குத் தம் மனைவியைக் கொடுத்துவிட்ட மாபெரும் தொண்டரான இயற்பகையார் மனம் மகிழ்ந்து, பேரானந்தத்தில் வாய் மலர்ந்து சிவவேதியரை நோக்கி, ''இன்னும் நான் என்ன செய்யவேண்டும்?'' என்று பணிவன்போடு கேட்டார்.

சாதி வேதியராக வந்த சிவபெருமான் அவரை ஏறிட்டு நோக்கி, ''நான் இந்தப் பெண்ணைத் தனியே அழைத்துக் கொண்டு போகும்போது, குடும்பப் பற்றுள்ள உன்னுடைய சுற்றத்தாரும், இந்த ஊர்ஜனங்களும் எங்களுக்கு இடையூறு விளைவிக்காதபடி உன் பந்துஜனங்களையும் இந்த ஊர் எல்லையையும் நாங்கள் தாண்டிப் போகும்வரை நீயும் எங்களுடன் துணையாக வரவேண்டும்!'' என்றார்.

அதைக் கேட்டதும் இயற்பகையார் 'இந்தக் குற்றேவலை நானே செய்ய முன்வந்திருக்க வேண்டும். என்னை உடையவர் குறிப்பிட்டுச் சொல்லும்வரை தாமதித்து நின்றது என் பிழையே ஆகும்!' என்று எண்ணமிட்டார். பிறகு அவர் தம் வீட்டினுள் சென்று பொன் பீதாம்பரத்தை எடுத்து அணிந்து அரைக்கச்சு கட்டி, கையில் ஒரு வாளையும் கேடயத்தையும் ஏந்திக்கொண்டு ஆண் சிங்கம்போல் திரும்பிவந்து காமுக வேதியரை வணங்கினார். பிறகு அவர் வேதியரையும், தம் மனைவியையும் முன்னால் நடந்துபோகுமாறு சொல்லிவிட்டு, அவர்கள் பின்னால் தாமே காவலாகச் சென்றார். போர்க்கோலம் பூண்டிருந்த இயற்பகையார் இனித் தன் ஊர்மக்களனைவரும் படையெடுத்து வந்தாலும் தனியொருவராக எதிர்த்துத்

தாக்கி அனைவரையும் மண்ணில் வெட்டித்தள்ள மனங்கொண்டிருந்தார்.

இவ்வாறு நிகழ்ந்த செய்தி ஊர் முழுவதும் பரவியது. இந்தச் செய்தியையறிந்த இயற்பகை வள்ளலாரின் உற்றார் உறவினர்களும் அவருடைய மனைவியாரின் சுற்றத்தாரும் தங்கள் குலத்துக்குப் பழி ஏற்படுவதா என்று மிகவும் ஆத்திரம் கொண்டார்கள்.

இது என்ன அக்கிரமம்? தாலிகட்டிய மனைவியை இன்னொருவனுக்குத் தானம் கொடுக்கும் இத்தகைய அடாத செயலைச் செய்தவர் இதுவரை இந்த உலகத்தில் யார்தான் உண்டு? மனித இயற்கைக்கும் உலக இயல்புக்கும் புறம்பான இந்தச் செயல்புரிந்த இயற்பகைதான் பைத்தியக்காரன் என்றால் உற்றார் உறவினர்களாகிய நாமும் சும்மா பார்த்துக் கொண்டிருப்பதா? நம் குலத்துப் பத்தினிப் பெண்ணொருத்தியை இன்னொருவன் கொண்டுபோவதா? கூடாது? அவர்களை விடவே கூடாது!'' என்று உற்றார் உறவினர்களனைவரும் குமுறியெழுந்தார்கள்.



''நம் குலத்துக்கு நேரிடும் இப்பெரும் பழியை நீக்கி, நம் குலப் பெருமையை மீட்போம்!'' என்று வீராவேசமாகக் கூக்குரல் இட்டு காமுக வேதியரை விரைந்து சென்று பிடிப்பதற்காக ஒருங்கே திரண்டு கூடினார்கள். எல்லோரும் வேல், வில், வாள் முதலான போர்க் கருவிகளை எடுத்துக் கொண்டு காற்றைப் போல் அதிவேகமாகப் பாய்ந்து சென்று காவிரிப் பூம்பட்டினத்தின் எல்லையை அடைந்தார்கள். இயற்பகையாரின் மனைவியை அழைத்துச் செல்லும் சிவவேதியரின் இருபக்கமும், முன்னும் பின்னும் மாபெரும் கடல் பொங்கியெழுந்துவந்து சூழ்ந்து கொள்வதுபோல் பந்துஜனங்கள் அனைவரும் பெரும் ஆரவாரங்களுடன் வளைத்துக் கொள்ளலானார்கள். எல்லோருக்கும் வழித்துணையான சிவபெருமானோ இப்போது தம்முடைய காமுகர் வேடத்திற்கு ஏற்பப் பெரும் காதல் கொண்டவர்போல் தம்மைக் காட்டிக் கொண்டு, இயற்பகையார் வழிகாட்ட இயற்பகையாரின் மனைவியோடு பின்னால் நடந்து போய்க் கொண்டிருந்தார்.



அவரை நோக்கிப் பந்துஜனங்கள், ''அடே பரமபாதகனே! போகாதே! இங்கே எங்கள் அருங்குலக் கொடியான பத்தினியை விட்டுவிட்டுப் பழி நீங்கிப்போ!'' என்று கூவியபடி எதிரே வந்து எங்கும் பரவி நின்றார்கள். சிவவேதியர் பயந்து நடுங்குபவர் போல இயற்பகையின் மனைவியாரைப் பார்த்தார்.

மனைவியாரோ, ''இறைவரே! சிறிதும் பயப்படவேண்டாம். இவர்களை இயற்பகையார் வெல்வார்!'' என்றார்.

தம் மனைவியார் சொன்னதைக் கேட்டதும் இயற்பகையாரோ தம் கால்களிலுள்ள வீர கண்டைகள் கலீர் கலீரென ஒலிக்க, வேதியருக்கு முன்னால்வந்து நின்று, ''அடிகளே! அடியேன் அவர்களையெல்லாம் வென்று தரையில் வீழ்த்துகிறேன்! தாங்கள் மனந்தளர வேண்டாம்!'' என்று தேறுதல் கூறினார். பிறகு அவர் வெற்றிச் சிங்கமென நிமிர்ந்து நின்றார். எதிரே அவருடைய பெரும் சுற்றத்தார்களெல்லாம் அவமானத்தோடு பழிதுடைக்க வந்து படர்ந்து நிற்பதைக் கண்டு இயற்பகையார் கோபாக்கினியால் அனற்பொறிகள் பறக்க அவர்களை உற்று நோக்கி, ''என் எதிரே ஒருவர்கூட நில்லாமல் ஓடிப்போய் உயிர் பிழைத்துக் கொள்ளுங்கள்! அப்படியில்லையெனில் என்னுடைய எரிசுடர் வாளுக்கு இரு துண்டாகி இரையாகவே எதிர்த்து நிற்பவராவீர்கள்!'' என்று எச்சரித்தார்.

உறவினர்கள் ஏளனத்தோடு இயற்பகையாரைப் பார்த்து ''ஏனடா, நீ என்ன காரியம் செய்துவிட்டு இப்படிப் பேசுகிறாய்?

உன் பித்தம்கொண்ட செய்கையால் நம் குலத்துக்கு வருகிற பழியை நீ நினைக்கவில்லை. ஊரார்கள் பழிப்பார்களே, பகைவர்கள் சிரிப்பார்களே என்று சிறிதும் நீ வெட்கப்படவில்லை! உன் மனைவியை எவனோ ஓர் அந்தணனுக்குத் தானம் கொடுத்துவிட்டோ எங்களிடம் வீரசாமர்த்தியம் பேசுகிறாய்? உனக்குத்தான் மானமில்லை என்றால் எங்களுக்குமா மானமில்லாமல் போய்விடும்? நாங்கள் அனைவரும் ஒருங்கே செத்தாலும் சாவோமே தவிர, இந்தப் பெண்ணை அந்த மறையவன் கொண்டுபோக நாங்கள் விடமாட்டோம்!'' என்று சீறினார்கள்.

அவர்களின் வார்த்தையைக் கேட்டதும் இயற்பகை நாயனார் மனதில் மூண்ட கோபம் அதிகமாகப் பொங்கியெழ அவர்களைநோக்கி, ''உங்கள் உடல்களைத் துண்டு துண்டாக வெட்டி எங்கும் வீசியெறிந்து உங்கள் உயிர்களையெல்லாம் விண்ணுலகத்துக்கு அனுப்பிய பிறகு இந்த நற்றவப் பெரியாரைப் போகவிடுகிறேன்!'' என்று சீறியெழுந்து எதிர்த்து நின்றார். சுற்றத்தார்கள் அவர்களை விட்டுவிட்டு அவருடைய மனைவியை அழைத்துச் செல்லும் சிவவேதியர்மீது பாய்ந்தார். வேதியரை மேலே செல்லவிடாமல் தடுக்கும் விதமாகப் பெரும் சினத்தோடு வழிமறித்து நின்று தாக்கலானார்கள். அதைக்கண்ட இயற்பகையார் சீறி முன்பாய்ந்து தன் கை வாளே துணையாக அதை இங்குமங்குமாக மாறிமாறி வீசித் தம் சுற்றத்தாரின் தோள்களையும் கால்களையும் தலைகளையும் வெட்டி வீசினார். வென்று கொல்லும் ஆண்புலியைப்போல் மிகவும் வீரத்தோடு அப்போர்க்களத்தில் விளையாடினார்.

முன்பு பலராக மூண்டு வந்து தாக்கிய சுற்றத்தார்கள் இப்போது சிதைந்து சிதறித் தனித்தனியாக வந்து முட்டினார்கள். வெவ்வேறு திசைகளில் நின்று வெவ்வேறு விதமாகப் போரிட்டார்கள். அவர்களனைவருக்கும் இயற்பகையார் தாம் ஒருவரே சமமானவராக ஆங்காங்கே அதிவேகமாகப் பாய்ந்து போராடி ஒவ்வொருவராக வெட்டி வீழ்த்தினார்.

அதன் விளைவாக எங்கும் குடல்கள் குவிந்தன. எங்கும் உடல்கள் வெட்டுண்டு விழுந்தன. எங்கும் தலைகள் விரிந்து கிடந்தன. எங்கும் கழுகுகள் வட்டமிட்டன. இயற்பகையாரின் விழிகளோ எங்கும் தீப்பொறி பறக்கக் கனன்றன. அந்தப் போர்க்களம் எங்கும் எதிர்ப்பவர் ஒருவர்கூட இல்லாமல் இயற்பகையார் திரிந்தார். பக்கங்கள் தோறும் இரத்தவெள்ளம் அலைவீசிப் பெருகி ஓட அந்தப் போர்க்களம் செங்களமாக மாறிவிட்டது.

எதிர்க்கவந்த சுற்றத்தார்களில் பயந்து ஓடியவர்கள் எல்லாம் உயிர் பிழைத்தார்கள். ஓடாது எதிர்த்து நின்றவர்களெல்லாம் உயிரொழிந்து மாண்டார்கள். கடைசியில் இயற்பகையார் தம்முடைய நீண்ட வாளோடு தனியொருவராகவே அந்த அமர்க்களத்தில் நின்றார். சிவவேதியருக்குத் தம் மனைவியைத் தானம் கொடுத்து அதற்கு இடையூறாகவந்த தம் சுற்றத்தார்களை யெல்லாம் தம் வாளாலேயே வெட்டி வீழ்த்தியபிறகு இயற்பகையார் பணிவன்புடன் சிவவேதியரை நோக்கி, "அடிகளே! தாங்கள் பயமில்லாமல் இந்தக் காட்டைத் தாண்டிச் செல்கிற வரைக்கும் உங்களுக்கு நான் துணையாக வந்து வழிவிடுவேன்!" என்று கூறி அவர்களோடு சென்றார்.

எவராலும் அறியவொண்ணாத சிவபெருமான் முன்னால் செல்ல, அவரைப் பின்தொடர்ந்து இயற்பகையாரின் பேதை மனைவியார் பின்னால் செல்ல, அவர்களுக்குக் காவலாக இயற்பகையாரே போர்வீரர் போல் இன்னும் பின்னால் நடந்து சென்றார்.

இவ்வாறு அவர்கள் மூவரும் திருச்சாய்க்காடு என்னும் திருத்தலத்தின் எல்லை அருகே வந்து சேர்ந்ததும் காமுக சிவவேதியர் வீரத்தோளரான இயற்பகையாரை நோக்கி, "இனிமேல் நீ வீட்டுக்குத் திரும்பிப் போகலாம்!" என்று செப்பினார். உடனே இயற்பகையார் அவ்வடியாரின் திருவடிகளில் தம் தலைபடிய விழுந்து கும்பிட்டு எழுந்து நின்று கைகள் கூப்பி வணங்கியபடியே உலகம் உய்யவந்த ஏழைப் பிராமணரை வாழ்த்தி 'இவ்வந்தணரின் திருவருளைப் பெறும் நற்பேறு பெற்றேன்!' என்று கூறிவிட்டுத் தம் மனைவியைத் திரும்பிக்கூடப் பாராமல் புறப்பட்டுச் சென்றார். இவ்வுலகத்தவர் செய்வதற்கரிய அருஞ்செயல் ஒன்றைச் செய்துவிட்டு நல்ல தொண்டரான இயற்பகை நாயனார் திரும்பிக்கூடப் பாராமல் செல்வதைக் கண்டதும், வேதியர் வேடம் தாங்கிவந்த சிவபெருமான் மகிழ்ச்சி பொங்கப் பார்த்தார்.

"இந்தத் தொண்டன் பொய்மை உள்ளம் இல்லாதவன்! தன் மனைவியை என்னிடம் கொடுத்துவிட்டுத் திரும்பிக்கூடப் பாராமல் போகிறானே! இவனுடைய அன்புதான் என்ன?" என்று சிவவேதியர் வியந்து இயற்பகை நாயனாரைத் திரும்பவும் கூவியழைக்கலானார்.

"இயற்பகை முனிவா ஓலம்! (அபயம்)! நீ திரும்பி வருவாயாக! ஓலம்! என்னை மறவாத மனம் படைத்தவனே,

ஓலம்! அன்பனே, ஓலம், ஓலம், செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம்!'' என்று சிவவேதியர் ஓலமிட்டார்.

அவர் கூப்பிடும் பேரோசை கேட்டு இயற்பகை நாயனார் பதறி, ''அடியேன், இதோ வந்தேன்! வந்தேன்! தங்களுக்குத் தீங்கிழைப்பவர் இன்னும் இருக்கிறார்களோ? இருந்தால் அவர்களும் என் போர் வாளுக்கு இரையாகி விடுவார்கள்!'' என்று கூவியபடி திரும்பி ஓடிவந்தார். அப்போது சிவபெருமான் மறைந்துவிட்டார். அதனால் இயற்பகையார் திரும்பி வந்து பார்த்தபோது சிவவேதியரைக் காணவில்லை!

தமது மனைவியார் மட்டும் தனித்து நிற்பதை இயற்பகையார் கண்டார்; திகைத்தார்.

அப்போது வானவீதியில் சிவபெருமான் ரிஷப வாகனத்தின்மீது தம் மனைவி உமாதேவியோடு திருக்காட்சி தந்தருளினார். அக்காட்சியைக் கண்டதுமே இயற்பகை நாயனார் தரையிலேயே விழுந்து விழுந்து கும்பிட்டார். எழுந்து எழுந்து நின்று கும்பிட்டார். ''எம்பெருமானே! என்ன சொல்லிப் போற்றுவதென்று அறியேன்! நீ வாழி! எனக்குக் காட்சி தந்தருளிய தோற்றத்தைப் போற்றுகிறேன்! எனக்காக விரைந்துவந்து அருள்புரிந்து, என்னை வழித் தொண்டனாக்கிக் கொண்டாயே, உன்னைப் போற்றுகிறேன். தில்லையம்பலத்திலே நடமாடும் உன் சேவடிகளைப் போற்றுகிறேன்!'' என்று போற்றி தம் உடம்பெல்லாம் மயிர்க்கூச்சலிடும்படி வணங்கி வணங்கி ஆனந்த வடிவாயினார்.

விண்ணில் காட்சியளிக்கும் சிவபெருமான் தம் அடியவரான இயற்பகையாரை நோக்கி, ''இந்த மண்ணுலகம் தன்னில் எம்மிடம் இவ்வளவு அன்பு காட்டிய உன் பக்தியின் திறம்கண்டு நாம் மகிழ்ந்தோம். பழுதில்லாதவனே! உன் மனைவியோடு நம்மிடம் வந்து சேர்வாயாக!'' என்று அன்பருள் புரிந்தார். தம்முடைய சிறந்த திருத்தொண்டரான இயற்பகை நாயனாருக்குத் திருவருள் நிலைகாட்டி, அவருக்கும் கற்பிற் சிறந்த அவருடைய மனைவியாருக்கும் பேரின்ப வீட்டுப்பேறு தந்தருளி மறைந்து சிவபெருமான் தம் பொன்னம்பலத்தில் புகுந்தார்.

வானவர் பூமாரி பொழிய, வேதங்கள் முழங்க, ஞானமாமுனிவர்கள் போற்ற இயற்பகை நாயனார் கும்பிட்டுத் தம் மனைவியாரோடு சிவலோகமடைந்து சிவபெருமானோடு உடனுறையும் பெருமையும், அழியாத இன்ப வாழ்வும் பெற்றார். போரில் இறந்த அவருடைய சுற்றத்தாரும் விண்ணுலகமடைந்து பிறவாப் பேரின்பம் பெற்றார்கள்.

இந்த மண்ணுலகில் ஒரு மனிதர், தான் கூடி மகிழ்ந்து இன்புறும் மனைவியை இறைவனடியாருக்குத் தானம் கொடுத்து, அதற்கு இடையூறு ஏதும் நிகழாமல் பாதுகாத்து உதவுவது அற்புதமாகும். அந்த அற்புதம் புரிந்த சிவத்தொண்டரான இயற்பகை நாயனாரைத் தொழுது வாழ்த்துவோம்!

இனி அடுத்தபடியாக இளைசை மாறன் என்னும் இளையான் குடி மாற நாயனாரின் கதையை வரைகிறேன்!

''இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்''

— சுந்தரர்.

9. இளையான்குடி மாற நாயனார்

இளையான்குடி என்னும் ஊரில் உழவுத்தொழில் புரியும் வேளாளர் குலத்தில் அக்குலத்தினர் செய்த தவத்தினால் மாறனார் என்னும் பெயருடைய ஒருவர் சிறந்து விளங்கினார்.

ஏர் பிடித்து உழும் வயல் வளத்தினால் அவருக்கு விவசாயத் தொழிலில் ஏராளமான வருமானம் கிடைத்து அளவுகடந்த செல்வம் குவிந்து கொண்டிருந்தது. ஆயினும் சிவபக்தியையும், சிவனடியார்களுக்குத் தொண்டு புரிதலையுமே உண்மையான செல்வமெனக் கருதி மாறனார் அகம் மகிழ்வார். விரிசடைப் பெருமானின் அடியார்களிடம் அவர் நிறைந்த அன்பு கொண்டு அந்த அன்பின் மேன்மையால் மனம் பண்பட்டு எப்போதும் நிலையான சிந்தையுடன் விளங்குவார். அத்தகைய பண்பட்ட சிந்தையும் உழைப்பால் வரும் செல்வமுமே இந்த உலகத்தில் மிகுந்து நிற்பதை விரும்பி, அவற்றால் அடையும் பெரும் பயன்களையும் அனுபவித்து மகிழ்வார். எலும்பு மாலை அணிந்த எம்பிரானுக்கு அன்பர் என்ற தன்மையினால் தம் வீட்டுக்கு எந்த நேரத்தில் எந்தச் சிவனடியார் வந்தாலும் மாறனாருக்குப் பக்தி முனைந்தெழும்! உடனே அவர் அச்சிவனடியாரை எதிர்கொண்டு வரவேற்று இரு கைகளையும் கூப்பிக் கும்பிட்டு, அடியார்களின் காதுகள் குளிர மிருதுவான இன்சொற்கள் கூறி அன்பு உண்டாகும்படி முன்னுரை வழங்குவார். பிறகு அடியாரை அழைத்துக்கொண்டு அவர் தம் வீட்டினுள் சென்று அடியாரின் பாதங்களைத் தூயநீரால் கழுவிப் பிரகாசிக்கச் செய்து, பேரன்போடு ஓர்



ஆசனத்தில் அமரவைத்து அருச்சனைகள் புரிவார். இவ்வாறு சிவனடியார்களைை மாறனார் பூசித்து வணங்கிய பிறகு அவர்கள் விருப்பப்படி நான்குவித உணவுகளையும் அறுசுவையோடு ஆக்கிப் படைத்துச் சிவனடியார்களைத் திருப்திப்படுத்துவார்.

இவ்வாறு தம் இல்லத்துக்கு எந்த நேரத்தில் சிவனடியார்கள் யார் வந்தாலும் அவர்களுக்குச் சோறிடுவதையே பெருந் தொண்டாகவும் தம் பிறவிப் பயனாகவும் கொண்டு மாறனார் வாழ்ந்து வந்தார். அவருடைய வீட்டுக்கு அளவில்லாத சிவனடியார்கள் வந்து அவரிடம் அமுதுண்டு, மனம் மகிழவே அந்த மகிழ்ச்சி நாளுக்குநாள் வளர்ந்து பெருகியதின் பயனாக அவருடைய செல்வ நிலையின் பரப்பும் மிகமிகப் பெருகி, அளகாபுரிப் பட்டணத்து குபேரனைப்போல் இளையான்குடிப் பகுதியில் மாறனார் வாழலானார்.

இவ்வாறு அவர் வாழும் நாளில் சிவபெருமான் ஓர் எண்ணங் கொண்டார். சிவனடியார்களுக்குச் சோறிடும் திருத்தொண்டை மாறனார், செல்வம் மிகுந்திருக்கும் காலத்தில் செய்வதோடல்லாமல், வறுமை வந்தடைந்து துன்புறுத்தும் காலத்திலும் அத்திருத்தொண்டைத் தளராது செய்யும் வல்லமை கொண்டவர் என்பதை உலகோர்க்கு உணர்த்த கூத்தப் பெருமான் விரும்பினார். அதனால் மாறனாரின் செல்வ வளம் மெல்ல மெல்லத் தேய்ந்து மறைந்து போகும்படி திருவுளங் கொண்டார். வளமான செல்வம்

நாள்தோறும் மாறி மாறி மறைந்ததும் வாட்டும் வறுமை நிலை மாறனாரை வந்தடைந்தது. ஆனால் செல்வ வளம் சுருங்கிவிட்டாலும் மாறனாரின் மனம் சுருங்கவில்லை! தரித்திரம் வந்து துன்புறுத்தும் காலத்திலும் அடியார்களுக்குச் சோறிடும் தொண்டில் அவர் சிறிதும் சலிப்பும் தளர்ச்சியும் கொள்ளாமல் குறைவறச் செய்துவந்தார். நாளுக்குநாள் வறுமை வளரவளர அவர் தம் வீட்டிலுள்ள பொருள்களை விற்றும் பிறகு தம்மையே விற்றுக் கொடுக்கத் தக்க அளவுக்கு கடன்கள் வாங்கியும் சிவனடியார்களுக்குச் சோறிடும் தம் திருத்தொண்டை இளையான்குடி மாறனார் சிறிதும் வழுவாமல் முன்பைவிட முதிர்ந்த அன்போடு செய்து வந்தார்.

இவ்வாறு நிகழ்ந்துவரும் நாளில் மாறனார் திருத்தொண்டின் பெருமை இத்தகையதென இவ்வுலகத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காக சிவபிரான், ஒரு சிவயோகியாரைப் போலத் திருவேடம்தாங்கி மாறனாரின் வீட்டுக்கு வந்தார். அப்போது நல்ல மழைக் காலம். நள்ளிரவு நேரம். அன்று இளையான்குடி மாற நாயனாருக்கு எந்தவித உதவியும் கிடைக்காததாலும் உண்ணுவதற்குக்கூட உணவில்லாமல் பலநாள் பட்டினி கிடந்ததாலும் பெரும் பசியைச் சமாளித்துக் கொண்டு இரவில் வெகுநேரம்வரை தனியாகக் கண்விழித்திருந்தார். பிறகு அவர் தம் வீட்டுக் கதவை அடைத்து உட்புறம் தாளிட்டுவிட்டு வீட்டினுள் சென்றார். அந்தச் சமயத்தில் சிவனடியாரைப் போல் வேடம் பூண்ட சிவபெருமான் விருந்து சாப்பிடுவதற்காக மாறநாயனாரின் வீட்டுக் கதவைத் தட்டினார். உடனே நாயனார் எழுந்துவந்து சிவனடியாரை எதிர்கொண்டு வரவேற்று விருந்தினராக அன்போடு உள்ளே அழைத்துச் சென்றார். மழையால் நனைந்திருக்கும் சிவயோகியாரின் உடம்பிலுள்ள ஈரத்தை மாறனார் துடைத்து, நல்லதொரு இடத்தில் அடியாரை அமரச் செய்தார். பிறகு அடியார் பசியாற அவருக்கு இன்னமுது ஊட்ட வேண்டுமென்று ஆசைகொண்டு மாறனார் தம் மனைவியாரிடம் சென்று ‘‘நம் வீட்டிற்கு வந்திருக்கும் சிவனடியார் மிகவும் பசித்திருக்கிறார்! என்ன செய்வது?’’ என்று கேட்டார்.

மனைவியார் துயரத்தோடு தன் கணவரை ஏறிட்டுப் பார்த்தார். மாறனார் தொடர்ந்து, ‘‘நமக்கு உண்ண உணவில்லையென்றாலும் அம்மையப்பருக்கு இனியவரான அச்சிவனடியாருக்கு நாம் இனிமையாகச் சோறிடவேண்டுமே! அதற்கு வழி என்ன? அவருக்குத் தகுந்தபடி விருந்து படைப்பது எப்படி? சொல்வாய் பெண் தெய்வமே!’’ என்று இரங்கிக் கேட்டார்.

அவரது மனைவியாரோ இன்னும் வருத்தத்தோடு, ''நம் வீட்டில் எதை வைத்து எப்படிச் சமைப்பது? விற்பதற்கோ வீட்டில் ஒரு பொருளுமில்லை. அண்டை அயலாரிடம் கடன் வாங்கலாமென்றாலோ அதற்கும் வழியில்லை, இனியும் நமக்குக் கடன் தருவார் யாருமில்லை. பொழுதும் போய் இரவு வெகுநேரம் ஆகிவிட்டது. அரிசியைக் கடனாக வாங்கலாம் என்றாலோ போவதற்கு இடமும் வேறில்லை! நான் என்ன செய்வேன்?'' என்றுகூறித் திகைத்தார். பிறகு தீவிரமாக யோசித்தார்.

அந்த அம்மையாருக்கு ஓர் உபாயம் தோன்றியது. உடனே அவர் தம் கணவரை நோக்கி, ''நம் வறுமை நீங்குவதற்காக இன்று பகற்பொழுதெல்லாம் வயலில் செந்நெல் விதைத்தோமே! அவ்விதைகள் இப்போது சேற்றில் ஊறி முளைவிட்டிருக்கும்! அவற்றை ஒரு கூடையில் வாரிக்கொண்டு வந்தால் அவற்றைக் கொண்டு கூடியவரை சோறு சமைக்கலாம். இதைத்தவிர வேறு ஒரு வழியும் எனக்குத் தோன்றவில்லை!'' என்றார்.

தம் மனைவி கூறிய அவ்வார்த்தைகளைக் கேட்டதும், நாயனாருக்குப் பெருஞ்செல்வம் பெற்றது போன்றதொரு பெருமகிழ்ச்சி உள்ளூரப் பொங்கியது. வயலில் விதைத்த செந்நெல்லைத் தோண்டியெடுத்து வரப் புறப்பட்டுவிட்டார். விதை நெல்லை விதைக்கே வேளாளர்கள் பயன்படுத்துவார்களே தவிர, விதையைக் குத்திச் சாப்பிடும் வழக்கமில்லை. ஆனால் மாறனாரோ, சிவனடியாருக்கு எப்படியாவது சோறிட வேண்டுமென்ற ஆர்வத்தால் அதைப் பொருட்படுத்தவில்லை. வயலுக்குக் கிளம்பிவிட்டார்.

வானம் பெருகி பெருமழை பொழிந்து கொண்டிருந்த அந்த நள்ளிரவில் எங்கும் ஒரே இருள் சூழ்ந்திருந்தது. வழிதிசை கண் மண் எதுவும் தெரியாத கும்மிருட்டு அது! உலகத்தவர் அஞ்சி நடுங்கும்படியான அந்த நடுச்சாமத்து இருட்டில் மாறனாரோ உள்ளூரச் சிவனடியார் அன்பு ஊக்கித் தூண்டுவதால் ஓர் இறை கூடையைத் தமது தலையிலே கவிழ்த்துக் கொண்டு, பறவைகளும் உறங்கும் வயற்புறத்தை நோக்கி நடந்தார். திசை தெரியாத கருமிருள் படலத்தினூடே மாறனார் தமக்குப் பழக்கமான வழித்தடத்தைக் குறிப்பால் உணர்ந்து கால்களினால் தட்டித் தடவியவாறு, தமது வயலை நோக்கிச் சென்றார். வயலை அடைந்ததும், மழை நீரில் மிதக்கும் செந்நெல் முளைகளைத் தம் கைகளினால் சேகரித்து அள்ளி அள்ளித் தம் கூடை நிறைய நிரப்பினார். பிறகு அந்தப் பெருங்கூடையைத் தம் தலைமீது தூக்கிச் சுமந்துகொண்டு, வீடு நோக்கி வேகமாகத் திரும்பி வந்தார்.

அவர் வருகையைப் பேராவலுடன் எதிர்பார்த்தபடி அவருடைய மனைவியார் தம்வீட்டு வாசலிலேயே காத்திருந்தார். நாயகர் வந்ததும் அவரது தலையிலுள்ள கூடையை அன்புடன் வாங்கிக்கொண்டு உள்ளே சென்றார். நெல் முளைகளில் படிந்திருந்த சேறு போகும்படியாக அவற்றை நீரினால் நன்றாகக் கழுவி ஊற்றினார். பிறகு அவர் தன் நாயகரை நோக்கி, ‘‘நெல் வந்துவிட்டது! ஆனால் அடுப்பில் தீ மூட்ட விறகு இல்லையே?’’ என்றார்.

அதைக் கேட்டதும் மாறனார் தம் வீட்டின் கூரையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்த கிலமான வரிச்சுக் கொம்புகளை அறுத்துத் தள்ளினார். நாயனாரின் மனைவி அவற்றை முறித்து அடுப்பில் வைத்து தீயை மூட்டி, ஈரமாயிருந்த நெல்முளைகளை வறுத்து, அவற்றை உரலில் இட்டுக் குற்றி, அரிசியாக்கினார். பிறகு அந்த அரிசியை உலையிலிட்டுச் சிறிதுகூட வெறுப்பு இல்லாமல் இனிமையாகச் சோறு சமைத்தார் அந்தக் கற்புக்கரசி. அதன்பிறகு அம்மையார் ‘‘சாதம் ஆகிவிட்டது! காய்கறிக்கு இனி என்ன செய்வோம்?’’ என்று தம் கணவரிடம் இறைஞ்சிக் கேட்டார். மாறனார் யோசித்தார். தம் வீட்டு விருந்துக்கு வந்திருக்கும் சிவனடியார் வழிநடந்த இளைப்போடும் வருத்தும் பசியோடும் துன்புறுவாரே என்று நினைத்து அன்புடன் தம்வீட்டின் கொல்லைப்புறத்திற்குச் சென்று அங்கு குழிகளில் முளைத்திருக்கும் சிறு கீரைகளையும், பூசணி முதலானவற்றின் புன்செய்க் குறும்பயிர்களையும் தம் கைகளினால் தடவி, பாசத்தின் பழிமுதல் வேரை அடியோடு பறிப்பவர்போல் பறித்துக் கொண்டு வந்து தம் மனைவியாரிடம் கொடுத்தார். கணவர் மனமகிழ்வோடு கொடுத்த அக்கறிகளை அம்மையார் வாங்கி, மிகவும் கவனமாக ஆய்ந்து நீர்விட்டுக் கழுவிச் சுத்தப்படுத்திப் புனிதமான பாத்திரத்தில் வைத்து தன் கைத்திறமையினால் வகை வகையான கறிகளாகச் சமைத்தார். பிறகு தன் கணவரை நோக்கி, கறியமுதுகளைக் காட்டி, ‘‘இனி ஒப்புயர்வற்ற சிவனடியாருக்கு இங்கே விருந்து பரிமாறி திருப்தியாக அமுது செய்விப்போம்!’’ என்றார்.

சிவனடியாரோ ஒருபுறம் உறங்குபவர்போலப் படுத்திருந்தார். எவராலும் உணர முடியாத ஒருவரான அப்பெருமானுக்கு விருந்து தயாராகிவிட்டதை உணர்த்த விரும்பிய மறை நாயனார் அச்சிவனடியாரின் முன்னே சென்று துயிலை நீக்கலானார்.

‘‘பெரியவரே! எழுந்தருள்க! மாயை இருளில் அழுந்திக் கிடக்கும் அடியேன் உய்யும்படி எழுந்தருளி இங்கு திருவமுது

செய்ய அருள்க!'' என்று மாற நாயனார் அன்புடன் அழைத்தார். உடனே சிவனடியார் வேடந்தாங்கி வந்த சிவபெருமான் சோதி வடிவமாய் எழுந்து தோன்றினார். அந்தச் சோதி வடிவமான காட்சியைக் கண்ட நாயனாரும் அவரது மனைவியாரும் திகைத்து நின்று மயங்கிக் குழம்பினார்கள். சிவபெருமான் மனம் மகிழ்ந்து இடபவாகனத்தில் உமாதேவியாரோடு அவர்களுக்குக் காட்சி தந்தருளினார்.

பிறகு அவர், தம் திருத்தொண்டரான மாறனாரைப் பார்த்து, ''அன்பனே! அறுசுவை உணவை என் அடியார்களுக்குப் படைத்து அன்பர் பூஜை செய்த அன்பனே! நீ உன் மனைவியாரோடு என் பெரு உலகத்தை அடைந்து எம்மிடம் வருக. அங்கு செல்வத்தில் சிறந்த குபேரன் சங்கநிதி, பதுமநிதி முதலிய செல்வங்களையெல்லாம் கையில் ஏந்தியவாறு உங்கள் வாய்மொழி ஆவல் கேட்டு உங்களுக்குப் பணிபுரிவான்! அங்கு நீங்கள் இணையற்ற இன்பத்தை அனுபவித்துக் கொண்டு இருப்பீர்களாக!'' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

இளையான்குடி மாற நாயனாரும் அவரது மனைவியாரும் பேரின்ப வீடடைந்து இன்புற்றிருந்தார்கள்.

அப்பெரியாரின் திருவடிகளை வணங்கி வாழ்த்திவிட்டு அடுத்ததாக மெய்ப்பொருள் நாயனாரின் அற்புதச் செயலை விளம்புகிறேன்!


''இளையான்குடி மாறன் அடியார்க்கும் அடியேன்''

— சுந்தரர்.



10. மெய்ப்பொருள் நாயனார்

சேது நாட்டின் தலைநகர் திருக்கோவலூராகும். அந்த நகரம் தென் ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. அந்த நகரத்தில் மலாடர் என்ற மரபினர் வாழ்ந்து வந்தார்கள்.



மங்கையொருபாகரான சிவபெருமானிடம் அவர்கள் அன்புகொண்டு வழிவழித் தொண்டு புரிந்து வரும் சைவ பரம்பரையினர்.

அந்த மலாடர் மரபில் மலையமான் வழிவந்தவரான ஒரு வேந்தர் சிறந்து விளங்கினார். வேத நன்னெறி விளங்கிட அவர் மேன்மை பூண்டு, வேத முதல்வனாம் சிவபெருமானிடம் பெருங்காதல் கொண்டார். அதன் விளைவாக ஈசனுக்கு அன்பர்களான சிவனடியார்களின் கருத்தறிந்து அவ்வேந்தர் அன்புடன் ஏவல் புரிவார்! அரசியல் துறையில் அவர் தம் பரம்பரை வழிவந்த அறநெறி வழுவாமல், குடிமக்களைப் பாதுகாத்து நன்கு அரசாண்டு வந்தார்.

அவர், மலைபோன்ற தம் தோள் வலிமையால் பகைவரின் சேனைகளைப் போரில் வென்று வெற்றி வீரராகவும் திகழ்ந்தார். சொன்ன சொல் தவறாத நீதி நேர்மையில் சத்திய

கங்கையையும் விடச் சிறந்து நிற்பார். கங்கை ஆடிய விரிசடைப் பெருமானான சிவபிரானிடம் அவர் பேரன்புகொண்டு, சிவனடியார்களின் திருவேடத்தையே மெய்ப்பொருளாகக் கருதி வந்ததால், அவரை அந்நாட்டு மக்கள் மெய்ப்பொருள் நாயனார் என்றே அழைத்து வந்தனர்.

சிவகாமி மங்கையைத் தமது உடலில் ஒரு பங்காகக் கொண்டிருக்கும் சிவபெருமானின் திருக்கோயில்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் பூஜை, ஏழிசைப் பாடல், ஆடல், வழிபாடு, திருவிழா முதலானவை சிறப்புடன் நடைபெறுவதற் காக அவ்வேந்தர் பெருமான் பெரும் பொருள்கள் கொடுத்துத் திருப்பணிகளும் செய்து வந்தார். அத்தகைய சிவநேச மன்னர், சிவனடியார்களின் திருவடிகளையே தமக்குத் துணையாகக் கொண்டிருந்தார். சிவனடியார்களைத் தவிர வேறு பற்றுதல் எதுவும் இல்லாதவராக அத்தகைய மனோபக்குவம் பெற்றிருந்தார். தாம் தேடிய பொன் பொருள் பெரும் செல்வம் முதலான தமது உடைமையெல்லாம் சிவனடியார்களுக்கே உரியனவாகும் என்று கருதி அந்த மனப்பான்மையோடு அவர் தம்மிடம் வரும் சிவனடியார்கள் விரும்புவனவற்றை யெல்லாம் மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்.

இவ்விதமாக மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களின் திருவடிவத்தையே மெய்ப்பொருள் என்று நம்பி அடியார்களுக்குப் பணி புரிந்து நல்லவிதமாக அரசாட்சி செய்துவரும் நாட்களில் முத்தநாதன் என்ற ஓர் அரசன் அவர்மீது பகைமை பூண்டு, அவரை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொள்ள விரும்பினான். அந்தப் பேராசையால் அவன் சேது நாட்டின்மீது பலமுறைகள் படையெடுத்து வந்தான். ஒவ்வொரு போரிலும் அவன் மெய்பொருள் நாயனாரிடம் தோற்றுத் தன் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, முதலிய யாவையும் இழந்து அவமானப்பட்டுப் போனான்.

இவ்விதமாகப் பலமுறைகள் படையெடுத்து வந்து தோற்றுப்போன முத்தநாதன் இனிமேல் தன் படை வலி மையினால் மெய்ப்பொருள் நாயனாரை நேர்மையான முறையில் வெற்றி கொள்ளமுடியாது என்பதை உணர்ந்தான். இனிமேல் சூழ்ச்சி முறையினாலே நாயனாரை வெல்ல வேண்டுமென்றும் அவன் துடித்தான். மெய்ப்பொருள் நாயனாரோ சிவனடியார்களின் திருவேடத்தையே மெய்ப்பொருளென நம்பி சிவனடியார்களிடம் மெய்யன்பு கொள்ளும் மனப்பான்மையாளர் என்பதை அவன் அறிந்தான்.

அதனால் சிவனடியாரைப் போலப் பொய்த் தவ வேடங்கொண்டு வஞ்சனையாலேயே நாயனாரை வெல்ல வேண்டும் என்று முத்தநாதன் முடிவு செய்தான்.

எனவே ஒருநாள் அவன் திருக்கோவலூருக்கு மறைமுகமாக வந்து சேர்ந்து தன் நெற்றியிலும் உடலெங்கிலும் திருநீறு பூசினான்; தலையிலுள்ள சடைகளைச் சுருட்டி ஒன்றாகக் கட்டினான். தன் உடைவாளைப் புத்தகக் கவளி ஒன்றில் மறைவாக வைத்துக் கட்டி, அந்தப் புத்தகக் கட்டைத் தன் கையில் தூக்கிக் கொண்டான். பிறகு கடும் புகையைத் தன்னுள்ளே மறைத்துக் கொண்டு எரியும் விளக்கைப்போல் முத்தநாதன் தன் மனத்துள் வஞ்சக எண்ணத்தை மறைத்து வைத்துக் கொண்டு சிவனடியார் போன்ற பொய்த் தவ வேடத்துடன் மெய்ப்பொருள் நாயனாரின் அரண்மனை நோக்கிப் புறப்பட்டு ராஜவீதியில் நடந்தான். மாளிகை மாடங்களிலெல்லாம் பூங்கொடி போன்ற பெண்கள் கூந்தலின் பூபாரம் தாங்காமல் நெளிந்தாட, மாட உச்சிகளில் சோதி வெண்கொடிகள் நிமிர்ந்தாட, அந்த நீண்ட வீதி நெடுகிலும் சுடரொளி வீசியது. அவ்வீதியில் முத்தநாதன் நடந்து சென்று மெய்ப்பொருள் மன்னரின் அரண்மனை மணிவாசலை அடைந்தான்.

வாசற் காவலர்கள் முத்தநாதனைச் சிவனடியார் என்றே நினைத்து, தூர நின்றபடியே கைகூப்பிக் கும்பிட்டு, ‘‘உள்ளே எழுந்தருளும்!’’ என்று உள்ளே செல்ல அனுமதித்தார்கள். இதுபோலவே அரண்மனையில் அடுத்தடுத்துள்ள தடைவாசல்கள் பலவற்றையும் கடந்து முத்தநாதன் உள்ளே சென்று கடைசியாக நாயனாரின் பள்ளியறை வாசலை வந்தடைந்தான்.

அப்போது மெய்ப்பொருள் நாயனார் தூங்கிக் கொண்டிருந்தார். அவரது படுக்கையறை வாயிலைத் தத்தன் என்னும் ஒப்பற்ற காவலன் ஒருவன் காவல் புரிந்தவாறு நின்றான். அவன் அங்கு வந்த கபடவேடதாரியை நோக்கி, ‘‘இந்தநேரம் மன்னர்பெருமான் உறங்கும் நேரம்; சமயமறிந்து போதல் வேண்டும்!’’ என்று அறிவுறுத்தினான்.

தத்தன் கூறிய தடைமொழிகளைக் கேட்ட முத்தநாதன், ‘‘நான் அரசனுக்கு வீடுபேறு அளிக்கவல்ல உறுதிப்பொருள்களைக் கூறவே வந்திருக்கிறேன். ஆகையால் என்னைத் தடை செய்யாமல் தள்ளி நில்!’’ என்று கூறித் தத்தனை விலக்கிக் கொண்டே படுக்கையறையினுள் புகுந்துவிட்டான். அங்கே பொன்னொளி வீசும் பொற்கட்டிலில் அழகான பஞ்சணைமீது மன்னர் பெருமானான மெய்ப்பொருள் நாயனார் படுத்துறங்கிக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திலே அரசமாதேவியும் கூந்தலின் பூமணம் கமகமவென்று வாசனை வீச, பூங்கொடி போல் மெல்லிய சாயலுடன் படுத்திருந்தாள்.

அதைக் கண்ட பிறகும் முத்தநாதன் பின்வாங்காமல் முன்னேறிச் சென்று பஞ்சணைக் கட்டிலை நெருங்கினான்.

அப்போது அரசமாதேவி சட்டென்று எழுந்து, மாலைசூடிய மன்னர் பெருமானை எழுப்பினாள்.

துயில் நீங்கி எழுந்த மெய்ப்பொருள் நாயனார் தம் எதிரே நிற்கும் வஞ்சகனாம் முத்தநாதனை உண்மையில் சிவனடியார் என்றே நம்பினார். உடனே அவர் தம் இரு கைகளையும் குவித்துக் கும்பிட்டபடியே கட்டிலை விட்டுக் கீழே குதித்தார். சிவனடியாரை எதிர்கொண்டு வரவேற்று தலைவணங்கி நின்று, ''அடிகளே! மங்கலம் பெருக எனக்குப் புதுவாழ்வே வந்திருப்பதுபோல வந்திருக்கிறீர்கள்! தாங்கள் இங்கு எழுந்தருளிய நோக்கம் என்னவோ?'' என்று பணிவுடன் கேட்டார்.

அதற்கு முத்தநாதன் ''உங்கள் இறைவன் முன்பு இயற்றி யருளிய ஆகம நூல்களுள் முதுமையான ஒரு நூல் என்னிடம் இருக்கிறது. அது இவ்வுலகில் வேறு எங்கும் இல்லாத அபூர்வமான நூல்! அதை உமக்குப் போதிப்பதற்காக இங்கு கொண்டு வந்திருக்கிறேன்!'' என்றான்.

அதைக் கேட்ட மெய்ப்பொருள் நாயனார் மகிழ்ந்தார். ''அடியேனுக்கு இதைவிடச் சிறந்த பேறு உண்டா? சிவபிரான் அருளிச் செய்த அந்த ஆகமத்தை வாசித்தருள வேண்டும்!'' என்றார்.

''அந்நூலை வாசிக்கும்போது நீயும் நானும் மட்டுமே தனித்து இருக்கவேண்டும்! மலர் சூடிய மனைவி இங்கே இருக்கக்கூடாது!'' என்று வஞ்சகன் முத்தநாதன் விளம்பினான்.

உடனே மெய்ப்பொருள் வேந்தர் தம் அருகில் மகாலட்சுமியென நிற்கும் தம் மனைவியை நோக்கி, ''நீ விருப்புடன் இங்கிருந்து விரைந்து அந்தப்புரத்திற்குப் போ!'' என்று ஏவினார். அரசமாதேவியும் அந்தப்புரத்திற்குப் போய்விட்டாள். அதன்பிறகு மெய்ப்பொருள் நாயனார், போலிச் சிவனடியாரை உயர்ந்த ஆசனத்தில் அமரச் செய்து தாம் மட்டும் தரையிலே உட்கார்ந்து கைகூப்பிக் கும்பிட்டு, ''மெய்யடியாரே! இனிமேல் தாங்கள் அருள் செய்யலாம்'' என்று வேண்டினார்.

முத்தநாதன் தனது வஞ்சகப் புத்தகக் கட்டை மடிமேல் வைத்து புத்தகத்தை அவிழ்த்தெடுப்பவன் போல நடித்தான். அதை நாயனார் வணங்கும் சமயமாகப் பார்த்து புத்தகக்

கட்டினுள் மறைத்து வைத்திருந்த தன் கொடுவாளை முத்தநாதன் எடுத்து, அவன் முன்பு நினைத்தவாறே படுகொலையான அந்தக் கொடுஞ் செயலை உடனே செய்து முடித்தான்.

மெய்ப்பொருள் நாயனார் குத்துண்டு கொலையுண்டு விழுகிற நேரத்திலும் மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று கருதி அந்தக் கபடவேடதாரியை வாழ்த்தி வணங்கினார். அவ்வாறு வணங்கியதின் மூலம் அவரே வென்றவருமானார்! படுக்கையறையினுள் முத்தநாதன் நுழைந்தபோதே காவலனான தத்தன் தன் மனம் முழுவதையும் அங்கேயே வைத்திருந்தான் ஆகையால் படுக்கையறையில் நிகழ்ந்த படுகொலைக் காட்சியைக் கண்டதும், நொடிப்பொழுதில் அரசர் பெருமான் அருகில் ஓடிவந்து அரசரை வாளால் குத்திய பாவியைத் தன் வாளினால் வெட்டியெறிய முயன்றான். அப்போது வஞ்சகனின் கைவாளினால் குத்தப்பட்டு, இரத்தம் பெருக்கெடுத்து ஓடக் கீழே சரிந்து விழும் மெய்ப்பொருள் நாயனார் தம் காவலனைத் தடுக்கும்விதமாகத் தமது நீண்ட கையை நீட்டி, ‘‘தத்தா! இவர் நம்மவர்! சிவனடியார்! அவரை ஒன்றும் செய்யாதே!’’ என்று தத்தனைத் தடுத்துத் தரைமீது வீழ்ந்தார்.

தத்தன் பெரும் வேதனை அடைந்து தன் வேந்தர் பெருமானைத் தாங்கிக் கொண்டே தலைவணங்கி, ‘‘பெருமானே! நான் என்ன செய்ய வேண்டும்?’’ என்று கேட்டான்.

நாயனார் புன்முறுவலுடன், ‘‘எம்பிரானின் அடியராகிய இவருக்கு எவராலும் வழியில் தீங்கு நேராதவாறு இவரைப் பாதுகாப்புடன் அழைத்துக் கொண்டு போய் விட வேண்டும் நீ!’’ என்று கட்டளையிட்டார்.

அவருக்கு முத்தநாதன் இழைத்த கொடுமையை அறிந்தவர்கள் எல்லோரும் ஓடிவந்து, ‘‘எம் அரசருக்குத் தீங்கிழைத்த கபட வேஷதாரியைக் கொல்வோம்!’’ என்று ஆத்திரத்துடன் கூவி ஆங்காங்கே முத்தநாதனைச் சுற்றி வளைத்துக் கொள்ளலானார்கள். அவர்களையெல்லாம் தத்தன் தடுத்து ‘‘இந்தத் தவ வேடனைப் பத்திரமாகக் கொண்டு போய் விடவேண்டும் என்பது அரசரின் ஆணை?’’ என்று கூறி முத்தநாதனைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றான். அரசரின் ஆணை என்றதும் மற்றவர்களெல்லாம் அஞ்சி வழி விட்டார்கள். இவ்வாறு முத்தநாதனைப் பத்திரமான நல்ல வழியில் தத்தன் அழைத்துச் சென்று நகரைக் கடந்து கானகத்தை அடைந்தான். அந்தக் காட்டில் முத்தநாதனைப் பழிவாங்குவதற்காக ஆட்கள் யாரும் வாளேந்தி வரமாட்டார்கள்

என்று கருதும்படியான ஒரு பாதுகாப்பான இடத்திற்கு வந்து சேர்ந்ததும் இனி அக்கொலைகாரப் பாவிக்கு அபாயமில்லையென்று தத்தன் நினைத்து அவனை வழியனுப்பினான். தன் கடமையை முடித்துக்கொண்டு நகருக்குத் திரும்பினான்.

கபட வேடதாரியைக் கோபித்துத் தாக்க வந்தவர்களை யெல்லாம் தத்தன் தடுத்து, வேடதாரியை அழைத்துக் கொண்டு போய் பத்திரமான இடத்தில் விட்டுவிட்டு வந்தானா என்ற நற்செய்தியைக் கேட்பதற்காகவே மெய்ப்பொருள் மன்னர், தடுமாறிப் பிரியும் தம் உயிரை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார்!

அவர் முன் தத்தன் வந்து வணங்கி நின்று, குறிப்போடு கொற்றவரின் முகத்தைப் பார்த்து, ''வேந்தர் பெருமானே! சிவனடியார் வேடத்தாலே தங்களை வென்ற பகைவனை ஓர் இடையூறுமின்றிப் பத்திரமாகக் கொண்டுபோய் விட்டு விட்டேன்!'' என்றான்.

அதைக் கேட்டதும் மெய்ப்பொருள் மன்னர் ஆனந்தத்தால் அகம் நிறைந்து, ஆவி குளிர்ந்து, தத்தனை நோக்கி, ''ஐயனே! இன்றைக்கு நீ செய்த உதவியைப்போல் வேறு யாவர்தான் செய்யவல்லவர்?'' என்று பெரிதும் பாராட்டி பெரும் கருணை சொரிந்தார்.

பிறகு அவர் தமக்குப் பின் அரசாளுவதற்குரிய இளவரசர் அமைச்சர் முதலானவர்களையும் மனம் வருந்தும் மனைவி மக்கள் உற்றார் உறவினர்களையும் அருகில் அழைத்து தம் இருதயத்தில் உள்ள கொள்கைகளையெல்லாம் அதி விரைவில் சொல்லிவிட வேண்டுமென்ற துடிப்புடன் அவர்களை நோக்கி, ''நீங்கள் அனைவரும் விதி முறைப்படி திருநீற்றுக்குத் தொண்டு புரியும் திருநெறியை அன்புடன் பாதுகாத்து உலகிலே கொண்டு செலுத்தி அரசியலை நடத்துங்கள்!'' என்று கூறிவிட்டு தில்லைக் கூத்தபிரானின் தாமரைத் திருவடிகளைச் சிந்தையில் எண்ணித் தியானித்தார்.

அப்போது அவர் நெடுநாளாய்த் தியானத்தில் கண்டுவந்த திருக்கோலத்துடனே நடராசப் பெருமான் அவருக்கு எதிரே தோன்றிக் காட்சி தந்தருளினார். விண்ணகத் தேவர்களுக்கும் எட்டாத தமது திருவடி நிழலை மெய்ப்பொருள் நாயனார் அடைந்து தம்மருகிலேயே இடையறாமல் கும்பிட்டுக் கொண்டிருக்கும் பெரும் பேற்றையும் கொடுத்தருளினார்.

இன்னுயிரைச் சிதைக்கும் வண்ணம் வஞ்சகப் பகைவன் வாளால் குத்திக் கொல்வதைக் கண்டும் அவ்வஞ்சகனின்

சிவனடியார் வேடமே மெய்ப்பொருள் என்று கருதி அஹிம்சா தர்மம் காத்த மெய்ப்பொருள் நாயனாரின் பெருமை உலகில் அரிதாகும். அப்பெருமையைப் போற்றி விட்டு, ''அடுத்ததாக விறன்மிண்ட நாயனாரின் திருவடிகளைச் சிந்தையில் வைத்து, அவருடைய திருத்தொண்டைக் கூறுகிறேன்.''

''வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்!''

– சுந்தரர்.

11. விறன்மிண்ட நாயனார்



கடல் அலைகள் கூடியணைக்கும் மலை நாடு மிகவும் அழகாக இருக்கும். கடல் வளத்திலும், நில வளத்திலும், மலை வளத்திலும் மிகுந்து அந்நாடு சிறந்து விளங்கும். பரசுராமன் என்ற தவமுனிவன் தவம் புரிந்து கொன்றை மாலையணிந்த சிவபிரானிடம் மழுவாயுதத்தைப் பரிசாகப் பெற்று,

வருணனின் மூலமாக அந்த மலை நாட்டைப் பெற்றான். ஜமதக்கினி முனிவரின் மகன் பரசுராமன். ஜமதக்கினி முனிவரை, கார்த்தவீரியன் என்ற க்ஷத்திரிய மன்னன் ஒருவன் கொன்றான். அதனால் அவனது அரசவமிசத்தையே கருவறுப்பதாக சபதம் செய்தான் பரசுராமன். அதற்காகச் சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து, பரசு என்னும் மழு ஆயுதத்தைப் பெற்றான். எண்ணற்ற அரசர்களைக் கொன்று, அவர்களது இரத்தத்தால் பிதுர்த் தர்ப்பணம் செய்தான். இதனால் பரசுராமனைப் பழி சூழ்ந்தது. அந்தப் பழியைப் போக்கிக் கொள்ள, மீண்டும் சிவபிரானை நோக்கித் தவஞ் செய்து, மறையவருக்காக ஒரு தனி நாடு வேண்டினான். வருணனை வேண்டித் தென் கடலில் தன் மழுவை வீசினான். அது விழுந்த இடம் மறையவருக்கு அளிக்கப்பட்டது. அதுவே மலையாள நாடு. (இது புராணக் கதை.)

கடல் அள்ளிச் சொரியும் கதிர் முத்துகளையும், கரும்பில் தோன்றும் கனிமுத்துகளையும், மூங்கில்களில் விளையும் குளிர் முத்துகளையும், யானைத் தந்தங்களில் ஒளிவீசும் நல்முத்துகளையும் முத்துப் பல் பாவையர் புன்சிரிப்பு முத்துகளோடு வகைதெரிந்து முறையாகக் கோர்க்கும் தனிச் சிறப்புடையது அந்தச் சேரநாடு. அந்த நாட்டில் மிகச் சிறந்த பழமையான ஓர் ஊர் உண்டு. அதன் பெயர் ★ செங்குன்றூர்.

அந்த ஊரில் வேத முறைப்படி ஒழுக்கம் தவறாத அந்தணர்கள் வாழ்ந்து வந்தார்கள். உழவுத் தொழில் புரியும் வயல் வளத்தால் வேளாளர்கள் அவ்வூரில் உயர்ந்தோங்கி, நெறியோடு வாழ்ந்து தூய குடிமக்களாகத் தலைசிறந் திருந்தார்கள்.

அவ் வேளாளர் குலம் விளங்க, விறன்மிண்ட நாயனார் என்னும் பெரியார் ஒருவர் அவதரித்தார். அவர் சிவபிரானின் திருவடிகளில் பற்றுக் கொள்வதைத் தவிர வேறு எந்தவிதப் பற்றுகளையும் தூரத் தள்ளிவிடுவார். சிவனடியார்களிடம் அவர் அளவிலாத பரிவுடையவர். சிவஸ்தலங்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் அவர் சென்று தரிசித்து தம் உள்ளே படரும்

★ செங்குன்றூர் என்பது திருவாங்கூர் கொல்லம் துறைமுகத்தில் இருந்து கீழ்த் திசையில் சுமார் பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ளது. இதை மலையாளத்தார் 'செங்கண்ணூர்' என வழங்குகின்றனர். கொங்கு நாட்டிலுள்ள திருக்கொடி மாடச் செங்குன்றூர் என்பது வேறாகும்.

இறைவன் காதலையே தம் வழியாகக் கொண்டு செல்வார். அவர் சிவனடியார்களிடம் முதிர்ந்த அன்பு கொண்டவர் ஆகையால் அவர் செல்லும் இடங்களில் எல்லாம் ஆங்காங்குள்ள சிவனடியார்களின் கூட்டத்தை முதலில் வணங்கிய பிறகுதான் சிவபெருமானை வணங்குவது அவரது வழக்கமாகும்.

ஒரு சமயம் விறன்மிண்ட நாயனார் தலயாத்திரை புறப்பட்டு மலைநாட்டைக் கடந்து பல சிவத்தலங்களையும் வணங்கிய பிறகு திருவாரூருக்கு வந்து சேர்ந்தார். அந்த ஊரில் அவர் சிலகாலம் தங்கியிருந்து, தியாகராஜப் பெருமானை நாள்தோறும் வணங்கிவந்தார். ஒருநாள் நம்பியாரூரரான சுந்தரமூர்த்தி நாயனார் அந்தத் திருக்கோயிலில் தியாகேசரை வணங்குவதற்காக வந்தார். அந்த வன்தொண்டர் இறைவனை நோக்கிச் செல்லும்போது தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்கும் சிவனடியார்களை முதலில் வணங்கிச் செல்லாமல் ஒருபுறமாக ஒதுங்கிச் செல்வதை விறன்மிண்ட நாயனார் கண்டார். உடனே விறன்மிண்டர் வாய் திறந்து ''அடியார்களை வணங்காமற் செல்லும் வன்றொண்டன் இவ்வடியார்களின் திருக்கூட்டத்துக்குப் புறம்பு! அவனை வலிய வந்தாட்கொண்ட சிவபெருமானும் புறம்பு!'' என்று கூறினார்.

அதைக் கேட்ட சுந்தரர் திகைத்து, சிவனடியார்களிடம் விறன்மிண்ட நாயனார் கொண்டிருக்கும் அன்புறுதியைக் கண்டு வியந்தார். உடனே அவர் ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்!'' என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப் பாடி, சிவனடியார் திருக்கூட்டத்தைத் தொழுது வணங்கினார். அதனால் விறன்மிண்டர் மகிழ்ந்து, ''இனி ஆரூரனும் ஆண்டவனும் அடியார் கூட்டத்தில் உள்ளவர்களாவர்!'' என்று கூறினார்.

இவ்வாறு சிவனடியார்களின் பெருமையை நிலைநாட்டிய விறன்மிண்ட நாயனார் இவ்வுலகில் சைவ நெறி போற்றி பெருந்தொண்டுகள் பல புரிந்து வந்தார். சிவபெருமான் மகிழ்ந்து, தம் கணங்களுக்குத் தலைமையாய் இருக்கும் கணநாயகர் பதவியை விறன்மிண்ட நாயனாருக்கு வழங்கியருளினார்.

உலகம் உய்ய, நாம் உய்ய, சைவ நன்னெறியின் சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகையை நம்பியாரூரரின் மூலம் பாடுவித்த பெருமை ஒன்றே விறன்மிண்ட நாயனாருக்குப் போதும்! அதைவிட வேறு பெருமை அவருக்கு என்ன வேண்டும்?

அந்நாயனாரின் பெருமையை நான் அறிந்தவரையில் கூறிவிட்டேன். அடுத்ததாக ஆறை வணிகர் அமர்நீதி நாயனாரின் திருத்தொண்டைக் கூறுகிறேன்.

(பெரிய புராணத்தில், சேக்கிழார் கூறாத கதைப் பகுதி கீழே தரப்பட்டுள்ளது)

''அடியார்களை வணங்காமல் சென்ற வன்தொண்டனும் அவனை வலியவந்து ஆட்கொண்ட சிவபெருமானும் அடியார் கூட்டத்துக்குப் புறம்பு'' என்று விறன்மிண்ட நாயனார் சொன்னபிறகு நம்பியாரூரருக்கு திருவாரூர் தியாகராசப் பெருமான் தம் திருக்கோயிலில் இரண்டாவது ஆவரணத்தின் மதிற்சுவரையொட்டிய வடக்கு வாயிலில் காட்சியளித்தார். அதையறிந்த விறன்மிண்ட நாயனார் கோபங்கொண்டார். ''இனிமேல் திருவாரூரில் அடியெடுத்து வைப்பதில்லை!'' என்று சபதம் செய்தார். தம் மனைவியை அழைத்துக் கொண்டு திருவாரூரின் வடக்கேயுள்ள புத்தாற்றங்கரையில் குடியேறினார். அங்கே ஒரு பந்தல் அமைத்து சிவனடியார்களை உபசரித்து வந்தார். அங்கு வரும் அடியார் யாராவது திருவாரூர் மண்ணை மிதித்ததாகச் சொன்னாலே அவ்வடியாரின் காலைத் தம்முடைய மழுவால் வெட்டுவதாக வேறு சபதஞ் செய்துகொண்டார்.

ஒருநாள் திருவாரூர் தியாகேசப் பெருமானே, சிவனடியாரைப் போல் வடிவமெடுத்து அவரிடம் வந்து, ''நாம் இருப்பது திருவாரூர்!'' என்றார். உடனே விறன்மிண்ட நாயனார் தமது சபதப்படி அச்சிவனடியாரின் கால்களை வெட்டுவதற்காக மழுவாயுதத்துடன் துரத்த, தியாகேசர் முன்னே ஓட, நாயனார் அவரைப் பின்தொடர்ந்து ஓடினார். இருவரும் திருவாரூர் எல்லையை அடைந்தனர். அப்போது சிவனடியார் வேடம் பூண்ட சிவபெருமான் ''வந்தோம் இப்பால்'' என்றார். தம் சபதம் தோல்வியடைந்ததை அறிந்த விறன்மிண்டர் தமது கால்களையே வெட்டிக்கொண்டார். உடனே சிவபிரான் காட்சி அளித்தார்! இது திருவாரூர் தல வரலாறு.

திருவாரூர் கோயிலின் மதிற்சுவரை ஒட்டிச் சுந்தரருக்கு தியாகேசப் பெருமான் காட்சி தந்த இடம் ஒட்டுத் தியாகேசர் கோயில் எனவும், விறன்மிண்ட நாயனார் பந்தல் அமைத்திருந்த இடம் ஆண்டிப் பந்தல் எனவும், ''வந்தோம் இப்பால்'' என்று நாயனாருக்கு குறிப்பிட்ட இடம் 'வெண்டாம்பாலை' எனவும் இக்காலத்தில் வழங்கப்படுகின்றன.

''விரிபொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டருக்கு அடியேன்''

— சுந்தரர்.

12. அமர்நீதி நாயனார்

காவிரி நதி பாயும் சோழவளநாட்டில், பழையாறை என்னும் நகரம் ஒன்றுண்டு. மிகவும் பழைமையான அந்நகர் இப்புவியிலே பெருமை மிகுந்தது. வண்டுகள் மதுவுண்டு



களித்து ரீங்காரமிடும் பூஞ்சோலைகள் அந்நகரைச் சூழ்ந்து வானளாவி நிற்கும். நகரினுள் மணிக்கொடிகளுடன் செழுமையான வீதிகள் நிறைந்திருக்கும். அந்நகரில் வணிகர் குலத்தைச் சேர்ந்த அமர்நீதியார் என்னும் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

அவர் சிறப்பாக வாணிபம் செய்து, பொன்னும் முத்தும் நவமணிகளும் புத்தாடைகளும் எந்த நாட்டிலிருந்தும் வந்து குவியும் வளத்தால் அளவிலாச் செல்வம் பெற்று அதிலேயே நிலைத்திருந்தார். அத்தகைய வணிகச் செல்வர் சிவநேசச் செல்வராகவும் திகழ்ந்து எப்பொழுதும் சிவபிரானையே சிந்தித்திருப்பார். அந்தி வண்ணத்து அண்ணலாருக்கு அன்புத்தொண்டு புரியும் சிவனடியார்கள் வந்தால் அவர்களுக்கு அமர்நீதியார் உணவிட்டு அவர்களின் கருத்தறிந்து கந்தையும் கீளுடையும் கோவணமும் கொடுத்து உதவுவார். (கந்தை என்பது நாலைந்து துணிகளை

ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி அதன்மேல் நூலிழையால் தைக்கப்பட்டிருக்கும் ஒருவகைப் போர்வை. கீள் என்பது கோவணம் கட்டுவதற்கு அரை ஞாணுக்குப் பதிலாக அணிவது, அவ்வாறு சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு புரிவதே தம் செல்வ வளத்தால் வரும் பயன் எனக் கருதுவார்.

ஒரு சமயம் அவர், திருநல்லூர் என்னும் சிவஸ்தலத்தில் வழக்கமாக நடைபெறும் திருவிழாவைக் காண்பதற்காகத் தம் மனைவி மகன் உறவினர் முதலானவர்களுடன் சென்றிருந்தார். அந்த ஊரில் நிருவாணியான சிவபெருமானின் திருவிழா காண்பதற்காகச் சிவனடியார்கள் திரண்டு வருவார்கள். அவ்வாறு வரும் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விப்பதற்காக அவ்வூரில் அமர்நீதியார் ஒரு திருமடம் கட்டியிருந்தார். அந்த மடத்திலேயே அமர்நீதியார் தம் சுற்றத்தாரோடு தங்கியிருந்து அவ்வூர் மகேசுரான மணிகண்டப் பெருமானை அன்போடு வணங்கி வாழ்த்திக் கொண்டும் அப்பெருமானின் திருவிழாச் சிறப்புக்களைச் சேவித்துக் கொண்டும், சிவனடியார்களுக்கு அமுதளித்தல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்து கொண்டும், திருவருளைப் பேணி நெஞ்சுருகி சிந்தை மகிழ்ந்து வசித்து வந்தார்.

அவ்வாறு அவ்வணிகர், வள்ளலாகச் சிறந்து விளங்கும் காலத்தில், பிறைசூடிய சிவபெருமான் தம்முடைய கோவணப் பெருமையை முன்காட்டி அமர்நீதி நாயனாருக்குத் திருவருள் செய்வதற்காக ஒருநாள் அந்தணர் குலத்துப் பிரம்மச்சாரியைப் போல் ஒரு வடிவமெடுத்தார்.

அந்த மாறுவேடத்திற்காகச் சிவபெருமான் தம் விரிசடையை மறைத்துத் தம் தலையிலே அழகாக ஒரு பிரம்மச்சாரி குடுமி வைத்துக் கொண்டார். நெற்றியிலே சைவ நெறியோடு விபூதி பூசினார். மார்பிலே அந்தணர்களுக்குரிய முப்புரிநூல் அணிந்தார். அந்தப் பூநூலிலே பிரம்மச்சாரியைக் குறிக்கும் விதமான மான் தோலை ஓரங்குல அளவு கட்டித் தொங்கவிட்டார். முஞ்சி எனும் ஒருவகைத் தருப்பைப் புல்லைத் தம் இடுப்பிலே அரைஞாணாக வரிந்து கட்டிக் கொண்டார். அதில் கோவண ஆடையையும் இழுத்துக் கட்டினார். திருநீற்றுப் பையையும் இரண்டு கோவணங்களையும் ஒரு தண்டில் கட்டி அந்தத் தண்டையும் தருப்பையையும் தம் கையில் எடுத்துக் கொண்டார். வஞ்சமற்ற அடியார்களின் நெஞ்சிலே என்றென்றும் நீங்கிடாது நிறைந்திருக்கும் திருவடிகளைத் தரையிலே வைத்து, மண்ணிலம் பொலிவுறக் கண்டவர் மனம் கரைந்துருக நடந்தார். அவ்வாறு நடந்து நடந்து அமர்நீதி நாயனாரின் திருமடத்திற்கு வந்து சேர்ந்தார்.

அந்தப் பிரம்மச்சாரியாரின் வடிவத்தைக் கண்டதும் அமர்நீதியார் முகம் மலர்ந்து உடனே விரைந்து வந்து அவரை வணங்கி வரவேற்று, ''அடிகளே! இதுவரை கண்டிராத தாங்கள் இந்தத் திருமடத்திற்கு இப்போது வந்தருளியிருக்கிறீர்கள் என்றால் அடியேன் செய்த முன் தவப்பயன்தான் என்ன?'' என்று உபசரித்தார்.

தம்மை வழிபடும் அந்த அன்பரை பிரம்மச்சாரியார் புன்சிரிப்புடன் நோக்கி, ''நீர் வணிக வள்ளலெனக் கேள்விப்பட்டோம். பெருகி வரும் அடியார்களுக்கெல்லாம் நீர் உணவிட்டு, நல்ல கந்தையும் கீளுடைகளும் புதிய வெண் துணிக் கோவணமும் கொடுப்பதாகவும் கேள்விப்பட்டோம்! ஆகையால்தான், நாம் உம்மைக் காணவந்தோம்!'' என்றார்.

''இந்தத் திருமடத்தில் நான்மறை நற்றவ அந்தணர்கள் அமுதுண்ண அந்தணர்களாலேயே சமைக்கப் பெற்ற அமுதும் உண்டு, ஆகையால் இன்று தாங்களும் இங்கேயே திருவமுது செய்தருள வேண்டும்!'' என்று அமர்நீதியார் இறைஞ்சி வணங்கினார்.

அவரது வேண்டுகோளுக்கு பிரம்மச்சாரியார் இணங்கி, ''நான் போய் கன்னி நதியான காவிரியிலே நீராடிவிட்டு வருகிறேன். ஒருவேளை மழை வந்தாலும் வரலாம். அதனால் நான் உலர்ந்த கோவணம் அணிந்து கொள்வதற்காக இந்தக் கோவணத்தை உம்மிடம் கொடுத்து வைக்கிறேன். நீர் இதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்து பிறகு நான் கேட்கும்போது கொடும்!'' என்று கூறித் தம் கைத்தண்டிலே கட்டப்பட்டிருந்த இரண்டு கோவணங்களில் ஒன்றை அவிழ்த்து அமர்நீதியாரிடம் கொடுத்து, ''இந்தக் கோவணத்தின் பெருமையை உமக்கு நான் சொல்ல வேண்டுவதில்லை! இந்தக் கோவணத்தை வாங்கி, நான் திரும்பி வரும்வரை இதை இகழாமல் உம்மிடத்தே பத்திரமாக வைத்திருந்து, பிறகு நான் வந்து கேட்டதும் இதைக் கொடும்!'' என்றார்.

அவர் தந்த கோவணத்தை அமர்நீதியார் பேரன்புடன் தம் கையிலே வாங்கிக் கொண்டு, ''பெரியவரே! நீங்கள் காவிரியாற்றில் குளித்துவிட்டு அதிவிரைவில் திரும்பி வந்தருள வேண்டும்!'' என்றார்.

உடனே கங்காதரனான பிரம்மச்சாரியார், காவிரி நதியில் நீராடிவரச் சென்றார்.

அவ்வேதியர் தம் கோவணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கூறிய மொழிகளை அமர்நீதியார் தம் நினைவில் வைத்துக்கொண்டு அவர் மற்றவர்களுக்கு வழங்கும் கந்தை

கோவணம் முதலான பொருட்களுடன் அந்தக் கோவணத்தை வைக்காமல் வேறு ஒரு தனியிடத்தில் சேமித்து வைத்தார்.

காவிரியில் நீராடச் சென்ற பிரம்மச்சாரி வேதியரோ, அக்கோவணத்தை அது சேமித்து வைக்கப்பட்ட இடத்தில் இருந்து நீங்கி மறையும்படிச் செய்தார். பிறகு அந்த மாய வேதியர் காவிரி நதியில்தான் நீராடிவிட்டு வந்தாரோ, அல்லது தம் செஞ்சடையிலுள்ள நீரில்தான் தோய்ந்து வந்தாரோ, வானத்து மழையில் நனைந்துகொண்டு வந்தவர் போல் ஈரம் சொட்டச் சொட்ட திருமடத்துக்கு வந்து சேர்ந்தார். அவர் வருவதற்குள் அமர்நீதியார் அறுசுவை உணவை ஆக்குவித்து, அவர் வந்ததும் அவரை வரவேற்று, ''சமையல் ஆயிற்று'' என்று கூறி வணங்கி திருவமுது அருந்த அழைத்தார். மழையில் நனைந்து ஈரத்துடன் வந்த பூணூல் வேதியரோ, தொண்டர் அன்பெனும் தூய நீரில் விளையாட விரும்பினார். அதனால் அவர் அமர்நீதியாரை நோக்கி, ''குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு, வந்திருக்கிறேன். என் ஈரக் கோவணத்தை நான் உடனே மாற்றிக் கொள்ளவேண்டும். இந்தத் தண்டிலே கட்டப்பட்டிருக்கும் கோவணமும் மழையில் நனைந்து ஈரமாக இருக்கிறது. ஆகவே நான் உம்மிடத்தில் முன்பு கொடுத்து வைத்த கோவணத்தை உடனே கொண்டு வந்து கொடும்!'' என்றார், கோவணக் கள்வர்.

அவரது வஞ்சனையை அறியாத அமர்நீதியார் உடனே தம் திருமடத்தினுள்ளே விரைந்து சென்று, தனியிடத்தில் தாம் சேமித்து வைத்திருந்த அந்தணரது கோவணத்தைத் தேடிப் பார்த்தார். ஆனால் அவர் வைத்த இடத்தில் அந்தக் கோவணம் காணப்படவில்லை. ''இங்கே சற்று முன்னர் வைத்த கோவணம் இந்த இடத்தை விட்டு எப்படிச் சென்றது?'' என்று திகைத்தவராய் அமர்நீதியார் எல்லா இடங்களிலும் தேடினார். எங்குமே அந்தக் கோவணத்தைக் காண முடியவில்லை!

''வேதியர் தந்த அந்தப் பிரகாசமான வெண்கிழிக் கோவணம் போன வழியை யோசிக்கும்போது அது எப்படியோ தவறித் தொலைந்து விட்டது! அதில் சந்தேகமே இல்லை!'' என்று அவர் மனம் படபடத்து தம் வீட்டிலுள்ள பொருள்களை யெல்லாம் குடைந்து பார்த்தார். அங்குமிங்கும் ஓடினார்; அலைந்தார். ஆனால் அந்தக் கோவணத்தை மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை! அமர்நீதியார் என்ன செய்வார்? வேதியரின் பெரும் சிக்கலில் மாட்டிக்கொண்டவர் போல் அப்படியே மலைத்து நின்றார். மனைவியோடு உறவினரும் தாமும் தலை குனியும்படி முன்வினை போல் இன்று இந்த இடர்வந்து சேர்ந்ததே என்று தவித்தார். அந்தச் சங்கடத்தைத்

தவிர வேறு ஒரு நினைவும் இல்லாதவராய் வருந்தினார். இனி வெறுமனே நிற்கவும் முடியாதவராகி, புதிதாக வேறொரு கோவணத்தை எடுத்துக்கொண்டு அமர்நீதியார் வந்தார்.

பிரம்மச்சாரியாரின் முன்னால் அவர் விரைந்து வந்து கைகூப்பி வணங்கி ''அடிகளே! நீர் அடியேனிடம் கொடுத்த கோவணத்தை ஓர் இடத்தில் நான் சேமித்து வைத்தேன்! இப்போது அந்த இடத்தில் கோவணத்தைக் காணவில்லை. அதை வேறு இடத்தில் எடுத்துச் சென்று யாரும் ஒளித்து வைக்கவுமில்லை! அது காணாமற் போன விதத்தையும் அடியேனால் அறியமுடியவில்லை! இத்தகைய அதிசயத்தை இதுவரையில் நான் கண்டதுமில்லை! ஆகவே வேறு நல்லதொரு கோவணத்தை உம்முன் கொண்டு வந்திருக்கிறேன். இது ஓர் ஆடையிலிருந்தோ, துணியில் இருந்தோ கிழிக்கப்பட்ட கோவணமல்ல; தனியாகவே, புதிதாக நெய்யப்பட்டது! நெற்றியில் பிரகாசமான திருநீறு அணிந்த வேதியப் பெருமானே! தங்களுடைய ஈரக் கோவணத்தைக் களைந்துவிட்டு, அதற்கு மாற்றாக இந்தக் கோவணத்தை அணிந்துகொண்டு, என்பிழையைப் பொறுத்தருளவேண்டும்!'' என்று வேண்டினார்.

அதைக் கேட்ட சிவபிரானாகிய அந்த பிரம்மச்சாரியார் வெகுண்டு, ''அமர்நீதியாரின் நிலைமை வெகு அழகாக இருக்கிறதே! உம்மிடம் என் கோவணத்தைக் கொடுத்து இடையில் ஒருநாள் கூடக் கழியவில்லை! அதற்குள் அது எப்படிக் கெட்டுத்தொலைந்துவிடும்? இன்று உம்மிடம் நான் கொடுத்து வைத்த கோவணத்தை நீர் அபகரித்துக்கொண்டு, அதற்குப் பதிலாக வேறு ஒன்றை எடுத்துக்கொள்ளுமாறு நீர் சொல்வது தகுமா? ''சிவனடியார்களுக்கு நல்ல கோவணம் கொடுப்பேன்'' என்று உலகம் முழுவதும் நீர் பறைசாற்றி வருவதெல்லாம் என் கோவணத்தைக் கவர்ந்து கொள்ளத் துணிந்து தானோ? இங்கே நீர் அதிக வேகமாகச் செய்கிற வாணிபம் நன்று; நன்று; மிக நன்று! இத்தகைய வாணிபம் உமக்கு வெகு அழகுதான்!'' என்று தீப்பொறிப் போல் துள்ளிச் சினந்தார்.

அவ்வேதியர் வெகுண்டதைக் கண்டதும் அமர்நீதியார் ஐம்பொறிகளும் கலங்கும்படி உணர்விழந்து முகம் வெளிற, ''ஐயனே! சிறியேனாகிய நான் செய்த இந்தப் பெரும் பிழையைப் பொறுத்தருள்வீராக! இந்தப் பிழையை நான் அறிந்தே வேண்டுமென்று செய்யவில்லை!'' என்று புலம்பி வேதியரின் பாதங்களைப் பணிந்து வருந்தி, ''ஐயனே! அடியேன் செய்த அறியாப் பிழைக்காகத் தாங்கள் கட்டளையிடும் எந்தப் பணியையும் நானே செய்வேன்! இக்கோவணம் மட்டுமின்றி

நயமான நல்ல பட்டாடைகளையும் நவமணிகளையும் ஏராளமாகக் கொடுக்கிறேன். அவற்றை ஏற்றுக் கொண்டு, அடியேனுக்கு அருள்புரிய வேண்டும்!'' என்று கூறி உடம்பில் அடங்காப் பயத்தோடு நிலைகுலைந்து வேதியரின் திருவடிகளைப் பலமுறை பணிந்து கெஞ்சினார்.

பிரம்மச்சாரியார் கோபம் தணிந்தவரைப் போலத் தோற்றமளித்து தம்மைப் பணிந்து நிற்கும் அமர்நீதியாரை நோக்கி, ''நீர் தருவதாகச் சொல்லும் பொன் மணிகள், பட்டாடைகள் முதலியவற்றைக்கொண்டு, நான் என்ன செய்யப் போகிறேன்? நான் அணியும் கோவணத்திற்குச் சமமானதொரு கோவணத்தைக் கொடுத்தால், அதுவே போதும்!'' என்று கூறினார். அதைக் கேட்டதும் அமர்நீதியார் சிந்தை மலர்ந்து, சிங்கம்போல் நிமிர்ந்து, ''ஐயனே! தங்களுடைய வெண்ணிறக் கோவணத்திற்குப் பதிலாக நான் தரும் பட்டாடை முதலானவற்றைப் பெற்றுக்கொள்ளவும் நீர் இசையவில்லை! அப்படியானால் கோவணத்திற்குச் சமமானதைக் கொடுக்கிற வகைதான் என்ன?'' என்று கேட்டார்.

''நான் உடுத்தியிருக்கும் கோவணத்தைத் தவிர, இதோ என் தண்டில் மற்றொரு கோவணம் இருக்கிறது. நீர் தொலைத்து விட்டதாகச் சொல்லும் கிழிந்த கோவணத்திறகு இது சமமான கோவணமாகும்!'' என்று வேதியர் தம் கைத்தண்டிலுள்ள ஈரக் கோவணத்தை அவிழ்த்துக் காட்டி, ''இதற்குச் சம எடையுள்ள கோவணத்தை நிறுத்துக் கொடுத்தாலே போதும்!'' என்றார்.

''நல்லது! மிகவும் நல்லது!'' என்று அமர்நீதியார் ஒப்புக் கொண்டு, ஒரு பெரிய தராசைக் கொண்டுவந்து நாட்டினார். சிவபெருமானாகிய பிரம்மச்சாரியார் தமது கையிலுள்ள கிழி கோவணத்தை தராசின் ஒரு தட்டில் வைத்தார். அமர்நீதியார் புதிதாக நெய்த கோவணத்தைத் தராசின் மற்றொரு தட்டில் வைத்தார். அவர் கோவணத்தை வைத்த தட்டானது எடை குறைந்து உயர்ந்தது. வேதியர் கோவணத்தின் எடைக்கு அது சமமாக நிறகமுடியவில்லை! அதைக்கண்ட அமர்நீதி நாயனார் அடியார்களுக்குத் தாம் வழங்குவதற்காகத் தம்மிடம் வைத்திருந்த கோவணங்கள் அனைத்தையும் கொண்டுவந்து, ஒவ்வொன்றாகத் தராசின் தட்டில் இட இட அந்தத் தட்டு உயர்ந்துகொண்டே இருந்ததே தவிர, வேதியர் கோவணத்திற்குச் சம நிறையாக நிற்கவே இல்லை! அதைக்கண்ட அமர்நீதி நாயனார் இதென்ன அதிசயமெனத் திகைத்தார். உலகத்தில் இல்லாத இப்படியொரு மாயைக் கோவணத்திற்கு எத்தனை கோவணங்களும் ஈடாக வரவில்லையே? என்று அவர் அதிசயித்து பட்டாடைகளுடன்

பல விதமான மெல்லிய பிற ஆடைகளையும் கொண்டுவந்து தராசுத் தட்டில் ஒவ்வொன்றாக இட இட, அந்தத் தட்டுதான் உயர உயர எழும்பியதே தவிர, வேதியரின் கோவணமுள்ள தட்டின் எடைக்குச் சமமாகவில்லை. துணிகளையெல்லாம் பொதி பொதியாகக் கொண்டு வந்து தட்டில் வைத்துப்பார்த்தார். அப்போதும் தராசுத் தட்டுகள் சமமாக நிற்கவில்லை! அடியாரின் அன்பு எனும் தட்டுக்கு ஆண்டவரின் அருளெனும் தட்டுத் தாழ்ந்தே நின்றது.

பட்டாடைகளோடு பலவித துணி வகைகளையும் கோடிகோடியாக வைத்தும் பக்தரின் தட்டுதான் மேலெழுந்து கொண்டிருந்ததே தவிர, வேத வேதியரின் கோவணத் தட்டு தாழ்ந்து கொண்டேயிருந்தது.

அதைக் கண்டு அமர்நீதி அடியார் அஞ்சி அந்தணரின் முன் சென்று வணங்கி, ''ஐயனே! நல்ல துணி வர்க்கம் நூல் வர்க்கங்களையெல்லாம் ஏராளமாகக் குவித்தும் என் தட்டின் நிலை இப்படியிருக்கிறதென்றால், இனி என்னிடமுள்ள பொன் பொருள்களைத் தட்டில் இடுவதற்காக அனுமதித்தருள வேண்டும்!'' என்று கெஞ்சினார்.

மங்கை பாகரான மறையவர் அதற்கிசைந்து, ''இங்கு நாம் வேறென்ன சொல்வதற்கு இருக்கிறது? உம்முடைய தனதிரவியங்களையாவது கொண்டு வந்து தட்டில் வைத்துப் பாரும்? எம் கோவணத்தின் எடைக்கு அது நேர் நின்றாலே எனக்குப் போதும்!'' என்றார்.

நல்ல பசும்பொன், வெள்ளி, நவமணித் திரள், பலவகை உலோகங்கள் முதலானவற்றையும் பிறபொருள்களையும் குவியல் குவியலாகக் கொண்டு வந்து அமர்நீதியார் தம் தராசுத் தட்டில் இடஇட, அந்தத் தட்டு சிறிதும் இறங்காமல் பொருள் எடைகள் பெருகி ஏற ஏறத் தட்டும் மேலே ஏறி ஏறி உயர்ந்தெழுந்து கொண்டேயிருந்தது. அதைக் கண்டு உலகத்தார் வியப்படைந்தனர்.

நான்மறைப் பொருள் நூல்களால் ஆகிய சிவபெருமானின் கோவணத்தை இட்ட தட்டுக்குச் சரியாக நிற்கக்கூடியது ஒன்றுண்டோ? அமர்நீதியாரின் செல்வங்களெல்லாம் மட்டுமின்றி எல்லா உலகங்களையுமே ஒன்று சேர்த்து வைத்துத் தராசில் நிறுத்தாலும் அவை எல்லாமே எம்பிரானின் கோவணத்திற்கு நேர் நிற்காது என்பது வெறும் புகழ்ச்சியோ?

இவ்விதமாக அமர்நீதியார் தம்மிடமிருந்த பொருள்கள் அனைத்தையும் வைத்துங்கூட தராசுத் தட்டுகள் சமநிலைக்கு

வராததைக் கண்டு, ''ஐயனே! என்னிடம் இருந்த பொன் பொருள் தனங்கள் ஒன்றைக்கூட விடாமல் எல்லாவற்றையுமே கொண்டு வந்து தராசுத் தட்டிலே வைத்துவிட்டேன். இனிமேல் நானும் என் மனைவியும் என் சிறு மகனுமே எஞ்சியிருக்கிறோம்! தலைவரே! தங்களுக்குத் திருவுளமிருப்பின் நாங்களும் தராசுத் தட்டில் ஏறுகிறோம்!'' என்றார்.

அவரது பக்தி நிலையைத் துலாக்கோலால் உலகத்தாருக்கு எடுத்துக்காட்ட விரும்பிய சிவபிரான், அம்மூவரும் தராசில் ஏறுவதற்கு ஒப்புக் கொண்டார்.

அமர்நீதியார் மிகவும் அகம் மகிழ்ந்து மாயவேதியரின் திருவடிகளைத் தம் தலையால் வணங்கினார். பிறகு மலர் சூடிய மனைவியோடும் மைந்தனோடும் அமர்நீதியார் அந்தத் தராசை வலம்வந்து இறைவனின் திருவெண்ணீற்று நெறியிலே நாங்கள் மெய்யடிமை பூண்டு, இதுவரை இயற்றி வந்த அன்பிலும் தொண்டிலும் நாங்கள் பிழையேதும் செய்யவில்லை என்றால் நாங்கள் ஏறியதும் இந்தத் தட்டு சமநிலையடைந்து துலை நேர் நிற்கட்டும்! என்று கூறிவிட்டு, திருநல்லூர் இறைவனை வணங்கி, ஐந்தெழுத்தை முறைப்படி ஓதியவண்ணம் துலாக்கோல் தட்டின் மீது தம் மனைவியோடும் மைந்தனோடும் ஏறி நின்றார்.

இறைவனின் திருவரையில் அணியும் கோவணமும் அந்த இறைவன்மீது கொண்ட அன்பில் குறைபடாத அமர்நீதியாரின் திருத்தொண்டும் பெருமையில் ஒப்புடையனவாதலால், தராசுத் தட்டில் அமர்நீதியார் தம் மனைவியோடும் மைந்தனோடும் ஏறியதுமே தட்டுகள் இரண்டும் சரிசமமாக நின்றன.

அதைக் கண்டு மண்ணுலகோர் வியந்து அமர்நீதியாரின் பெருமையை வாழ்த்தி வணங்கினார்கள். விண்ணுலகத் தேவர்கள் வானத்துக் கதிரவனும் மறையும்படி மகிழ்ச்சியோடு மலர்மாரி பொழிந்தார்கள். அந்தக் கற்பக மலர் மழையில் பிரம்மச்சாரி வடிவம் கொண்ட சிவபிரான் மறைந்து திருநல்லூர் கோவிலிலே குடிகொண்டிருக்கும் கோலத்தோடும் உமாதேவியாரோடும் வானவெளியிலே தோன்றி அமர்நீதியாருக்குக் காட்சியளித்தார். அமர்நீதியாரும், அவரது மனைவியும் மகனும் தராசுத் தட்டில் நின்றபடியே, சிவபிரானை வாழ்த்தி வணங்கினார்கள். இன்னருள் பெற்று என்றென்றும் தொழுது வழிபடும்படியான வான் பதநிலையை இறைவன் அவர்களுக்குத் தந்தருளி மறைந்தார்.

திருவருளினால் அம்மூவரும் ஏறியிருக்கும் அந்தத் தராசே தெய்வ விமானமாகி வான வீதியில் எழும்பி சிவலோகத்தை நோக்கி மேலே மேலே பறந்து சென்றது. இவ்வாறு அமர்நீதி நாயனார் தம் மனைவியோடும் மைந்தனோடும் சிவபுரியை அடைந்து பேரின்பத்தில் சுகித்திருந்தார்.

''அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்''

– சுந்தரர்.

13. எறிபத்த நாயனார்

இமய மலையில் புலிக்கொடி நாட்டி புதுவழி அமைத்த கரிகாற்சோழன் முதல் அநபாயச் சோழன் வரை முடிசூட்டும் மரபிற்குரிய தலைநகரங்களில் கருவூரும் ஒன்றாகும். அது கொங்கு நாட்டிலுள்ள மிகப் பழமையான நகர்.

கருவூர் நகரத்தின் கோட்டை மதில்கள்மீது மேகக் கூட்டங்கள் தவழ்ந்து விளையாடும்; மாடமாளிகை வரிசைகள் வானத்தை முட்டி விளையாடும்; வீடுகளின் வாயில்களில் மணிமாலைகள் சூழ்ந்து விளையாடும்! பூஞ்சோலைகளில் புதுப்புது வாசனைகள் பொங்கி விளையாடும்; மங்கையரின் கூந்தல்களில் மதுமலர்கள் மகிழ்ந்து விளையாடும்; தெருக்களில் பெண்களின் வெண்ணிலா முகங்கள் நகர்ந்து விளையாடும். அமரர்கள் அகம் மகிழ்ந்து விளையாடும் அமராவதி நகரும் கருவூரின் அழகுக்கு ஈடாகாது.

நீர்த் துறைகளில் மதயானைகள் கூத்தாடும் முல்லை நிலங்களில் தோகை மயில்கள் களித்தாடும். அரங்குகளில் மணிகள் அடர்ந்தாடும். பூங்கோதையரின் கூந்தல்களில் கருவண்டுகள் குதித்தாடும். தெருக்களில் படரொளி விரிந்தாடும். பைங்கொடிகள் கதிர்மீது படர்ந்தாடும். இவ்வாறு இயற்கை வளமையை வாரி வழங்கித் தனி நகராகக் கருவூர் திகழ்வதால் அதை உலகம் முழுவதும் போற்றிக் கொண்டாடும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த கருவூரில் திருஆனிலை என்னும் சிவபிரானின் திருக்கோயில் ஒன்று உண்டு. அங்குள்ள இறைவனை வழிபடுவதையே தொழிலாகக் கொண்டு இறைவனுக்கே உரிமை பூண்டு வாழ்வார்கள் சிவனடியார்கள். அத்தகைய அடியார்களுக்கு அருட்பெருந்

தொண்டு செய்வதில் எறிபத்த நாயனார் என்னும் அன்பர் ஒருவர் ஈடுபட்டிருந்தார். உலகில் சைவ சமயம் தழைத்தோங்கவும், சிவனடியார்களுக்கு அடாதன வந்துற்றபோது, சிங்கமெனச் சீறியெழுந்து தீவினையகலும்படி எறிந்து வீழ்த்தவும், பரமசிவனின் மழுவாயுதத்தைப் போன்ற ஒரு பரசுவைத் தம் கையில் எறிபத்த நாயனார் எப்போதும் வைத்திருப்பார்.

இவ்வாறு அவர் திருத்தொண்டு நிகழ்த்தி வரும் நாட்களில் கருவூரில் சிவகாமியாண்டார் என்னும் முதிய அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ★திருஅனிலை கோயிலில் உள்ள சிவபிரானிடத்தில் உறுதியான அன்பு கொண்டவர்; புண்ணிய முனிவர். அவர் நந்தவனங்களிலிருந்து பூப்பறித்து வந்து ஆனிலைச் சிவபெருமானுக்கு மாலை சாத்தி மனம் நிறைந்த காதலோடு பூத்தொண்டு புரிந்து வந்தார். அவர் வைகறைப் பொழுதில் துயிலெழுவார். ஆற்றுக்குச் சென்று நீராடி, தம் வாயை ஓர் ஆடையால் கட்டிக் கொள்வார். மலர்கள் நிறைந்து நறுமணங் கமழும் நந்தவனத்திற்குச் செல்வார். அங்கு மலரும் நிலையிலுள்ள புத்தம் புதிய நறுமண அரும்புகளையும் தம் கையினால் ஆராய்ந்து பறிப்பார். தெய்வ நாயகருக்குச் சாத்துவதற்கும் சிவபூஜைக்கும் உரிய ★திருப்பள்ளித் தாமங்களையும் தேர்ந்து கொய்து, தம்முடைய அழகான பூக்குடலை நிறைய நிரப்பிக் கொள்வார். பிறகு அந்தப் பூக்கூடையை ஒரு தண்டிலே தொங்கவிட்டுக் கொண்டு, நெஞ்சிலே மாசற்ற சிவநேசமும் கொண்டு தேவாலயத்தை நோக்கிச் செல்வார். மலர்களை மாலையாகத் தொடுத்து ஆனிலை அண்ணலுக்குச் சூட்டி மகிழ்வார்.

இவ்வாறு சிவகாமியாண்டார் திருத்தொண்டு புரிந்து வரும் காலத்தில், ஒருநாள் அவர் வழக்கம்போல் பூக்கொய்து குறித்த வேளைக்குள் கோயிலுக்குப் போய்ச் சேரவேண்டுமே என்பதற்காக வெகுவேகமாக வந்துகொண்டிருந்தார். அது மகாநவமி தினத்திற்கு முன்னாளாகும். அன்றையத் தினம் வளமை மிக்க கருவூரின் மற்றொருபுறம் புகழ்ச்சோழ மன்னரின்

★ சோழர் தலைநகரங்கள் : காவிரிப்பூம்பட்டினம், திருவாரூர்,உறையூர், சேய்ஞலூர், கருவூர்.

★ திருஅனிலை : காமதேனு பூசித்துப் பேறு பெற்ற சிவஸ்தலம்.

★ திருப்பள்ளத் தாமம் : இறைவனுக்குச் சூடும் பூ, இலை, வேர் முதலியன.

பட்டவர்த்தனம் என்னும் முரட்டு யானையானது, ஆம்பிராவதி ஆற்றில் நீராடி, மங்கல அலங்காரங்கள் செய்யப்பட்டு, வீதி வழியாக வந்து கொண்டிருந்தது. அது போர் முனைகளில் பகைவர்களை முட்டிச் சாய்க்கும் வல்லமை பொருந்திய பயங்கர யானையாகும். அது நீராடிப் பொங்கிய களிப்போடு மதம் பொழிய மலைபோல் தோன்றி மத நடை நடந்து வந்தது. ஆங்காங்கே நின்றவர்கள் எல்லாம் அந்த யானைக்குப் பயந்து வழிவிட்டு விலகி ஓடினார்கள். அதை அடக்கி வழி நடத்த அதன்மீது யானைப்பாகர் இருந்தும் அதன் முன்னால் பாதுகாவலராக ஈட்டி ஏந்திய பரிக்காரர் ஓடி வந்தும் அந்த யானை அடக்க முடியாத வெற்றி யதப்போடும், தன் மீதுள்ள பாகரோடும் விரைந்தோடி ஒரு தெருவில் முட்டிப் பாய்ந்தது.

அந்தச் சமயத்தில் சிவகாமியாண்டார், பூக்குடலையைத் தம் கையில் இருந்த தண்டில் தொங்கவிட்டுக் கொண்டு, அந்த வீதியின் வழியாகத் திருக்கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் மதயானை அவரைப் பின்தொடர்ந்து ஓடி, அவருடைய கைத்தண்டில் தொங்கும் பூக்குடலையைத் தும்பிக்கையால் பறித்து இழுத்து, அதிலுள்ள மலர்களையெல்லாம் சிதறடித்துச் சிந்தியது. வேகம் கொண்ட அந்த யானைமீது அமர்ந்திருந்த யானைப்பாகர் சண்டமாருதத்தைக் கட்டிச் செலுத்துபவர்கள்போல் அதை வேகமாக ஓட்டிக் கொண்டே அகன்று போகலானார்கள். அதைப் பார்த்து சிவகாமியாண்டார் பொங்கிப் பதைபதைத்துச் சினம் மிகக் கொண்டு அந்த மதம் பிடித்த யானையைத் தன்



கைத்தண்டினால் அடிக்க, அதன் பின்னால் ஓடிவந்தார். கொடிய யானை விரைந்தோடி அகன்று போய் விட்டது. வயோதிகரான சிவகாமியாண்டாரினால் அந்த யானையைப் பின்தொடர்ந்து விரைந்து செல்ல முடியவில்லை. கால் தவறிக் கீழே விழுந்தார். விழுந்தவர் தரையிலே கைகளால் அடித்து எழுந்து நின்று சொல்ல முடியாத துயரப் பெருக்கால் மிகவும் கோபித்து, ''சிவதா! சிவதா!'' என்று புலம்பலானார். ''மதயானையின் தோலுரித்துப் போர்த்திய பெருமானே, சிவதா! எளியவர்க்கு வலிமையாம் இறைவனே! சிவதா! அன்புடை அடியார்களுக்கு அறிவே, சிவதா! சிந்தை தெளிந்தவர்களுக்குப் பேரமுதே, சிவதா! கங்கையும் பிறையும் அணியும் உன் சடைமீது ஏறி அமரவேண்டிய நறுமண மலர்களை இந்த யானை பறித்துத் தரையிலே சிந்தலாமா? சிவதா! மாறுபட நினைத்தவரின் திரிபுரம் வெந்தவிய சீறும் சிலையாய் நின்றவனே, சிவதா! தஞ்சமெனச் சரண்புகுந்த மார்க்கண்டேயரின் நெஞ்சுத்துயர் நீங்கிட எமனையும் எட்டி உதைத்த செஞ்சேவடியோனே, சிவதா! சிவதா! திருமாலும் அறியாத திருவடிகளைச் சேவித்துத் திருப்பணி புரியும் தொண்டர்களில் நானும் ஒருவன் இல்லையோ?'' என்று ஓலமிட்டு அழுதார்.

இவ்விதமாகச் சிவகாமியாண்டார் ஓலமிடும் வார்த்தைகளை எதிரில் வந்து கொண்டிருந்த எறிபத்த நாயனார் கேட்டார். உடனே மூளும் நெருப்பைப்போல் பெருமூச்சு விட்டு அழன்று பொங்கிப் பெரும் சீற்றம்கொண்டு, ''அம்பலக் கூத்தனின் அடியாருக்கு என்றும் வழிப்பகை யானை அன்றோ? ஆகையால் அடியார் மனம் நோக மலர்களைச் சிந்திய அந்த மதயானையைக் கொன்று வீழ்த்துவேன்!'' என்று கூவித் தம்முடைய மழுவாயுதத்தை எடுத்துக்கொண்டு வந்தார். வந்தவர் சிவகாமியாண்டாரை வணங்கி, ''உமக்கு இந்தக் கொடும் துன்பம் இழைத்த அந்த யானை எங்கே சென்றது?'' என்று கேட்டார்.

அதற்கு சிவகாமியாண்டார் விம்மியபடி, ''எம் இறைவனுக்குச் சாத்தும் பூவை என் கையிலிருந்து பறித்து மண்மீது சிந்திவிட்டு அந்த யானை உயிர் தப்பி இந்தத் தெருவின் வழியாகத்தான் போயிற்று!'' என்றார்.


''இனிமேல் அது உயிர் தப்பிப் பிழைப்பதெங்கே?'' என்று எறிபத்தர் சினந்து, தம் கையிலுள்ள மழுவாயுதம் நெருப்பு எனவும், அவர் காற்று எனவும் பொங்கி வீச, விரைந்தோடினார். பொங்கும் சினத்தையுடைய ஒரு சிங்கம் சிவந்த கண்களுடன் பாய்ந்து யானையைப் பின்தொடர்ந்து செல்வதைப் போலவே எறிபத்தர் பாய்ந்து சென்று

மதயானையை நெருங்கினார். ''இந்த யானை முன்பு, நமது சிவபிரானால் தோலுரிக்கப்பட்ட அதே மதக்களிறு போலும்! இனி வானகத்து தேவர்களும் மண்ணகத்து மாந்தர்களும் ஒருங்கே திரண்டு வந்து தடுத்தாலும் பொருட்படுத்தாமல் அதைத் துண்டித்துக் கொல்லாமல் விடேன்!'' என்று தம்முடைய மழுப்படையை பலமாக வீசிக்கொண்டே, அந்த யானை குலுங்க அதன்மீது பாய்ந்தார். பாகர்களைத் தன்மீது சுமந்து கொண்டிருந்த அந்த யானை கோபங்கொண்டு, கண்களிலே தீக்கனல் உமிழச் சீறிச் சீறி எறிபத்த நாயனார் மீது திரும்பிப் பாய்ந்து எதிர்க்கலாயிற்று. அதைக் கண்டு எறிபத்த நாயனார் சிறிதும் அஞ்சவில்லை. தாயின் தலையன்பைப்போல் பரசிவப் பேரன்பு பொங்கி நிற்கும்போது அதன் முன்னர் அச்சமும் நிற்குமோ? திருத்தொண்டர் அஞ்சாமல் யானையை மறித்தார். தரையிலே தோயும் அதன் தனிப் பெரும் துதிக்கையைத் தம்முடைய மழுவாயுதத்தால் வெட்டித் தள்ளினார். யானை தன் தும்பிக்கை துண்டிக்கப் பட்டபோது கடல் முழங்குவதைப் போலக் கதறி விழுந்து, கருமலைபோல் தரையிலே புரண்டு மடிந்தது.

பிறகு அந்த யானைக்குப் பாதுகாவலாக வந்த குத்துக் கோற்காரர்கள் மூவரையும் யானைப் பாகர் இருவரையும் ஆக ஐவரையும் எறிபத்த நாயனார் எதிர்த்து தம் மழுவாயுதத் தாலேயே வெட்டிக் கொன்றுவிட்டு, மலைகள்போல் தோள்கள் பூரிக்க வெற்றி வீரராய் நிமிர்ந்து நின்றார்.

வெட்டுண்டு மடிந்தவர்களைத் தவிர, மற்றுமுள்ளவர் களெல்லாம் பயந்தோடினார்கள். ஆத்தி மாலை சூடிய புகழ்ச்சோழ மன்னரின் அரண்மனை வாசலை அவர்கள் அடைந்து அங்குள்ள வாயில் காவலரை நோக்கி, ''பட்டவர்த்தனம் என்ற பட்டத்து யானையும் வெட்டப்பட்டு மடிந்தது! பாகரில் சிலரும் கொல்லப்பட்டு மடிந்தார்கள். இந்தச் செய்தியை விரைந்து சென்று அரசருக்குச் சொல்லுங்கள்!'' என்றார்கள்.

அந்தப் புதுமையான செய்தியைக் கேட்டதும் வாயிற் காவலர்கள் உள்ளே ஓடிச் சென்று, புகழ்ச் சோழரை அணுகி, அவருடைய கால்களிலுள்ள வீரக் கழல்களை வணங்கி, ''பகைவர்கள் இல்லாத பேரரசே! தங்கள் பட்டவர்த்தன யானையை யாரோ சிலர் வெட்டிக் கொன்று விட்டார்கள் என்று யானைப்பாகர்கள் சொன்னார்கள்!'' என்று கூறினார்கள். அதைக் கேட்ட போதே புகழ்ச் சோழ மன்னர் பெரும் சினங் கொண்டார். மாற்றலர் இன்றி மண்ணிலம் காக்கும் அம்மாமன்னர், தம் வீரத் தோள்கள் குலுங்க, அத்தோள்களில் அணிந்திருக்கும் மலர் மாலைகள் குலுங்க,



அம்மாலைகளிலுள்ள களி வண்டுகள் கிளர்ந்தெழுந்து பொங்க அளவுகடந்த சீற்றத்துடன் துள்ளியெழுந்தார். ''யானையைக் கொன்றவர் யார்?'' என்று கூடக் கேட்காமல் மணிவாசலை விட்டு ஆண் சிங்கத்தைப் போல் வெளியே பாய்ந்து வந்தார். ராஜதந்திரத் தலைவர்களான மதியமைச்சர்களும் தங்கள் அரசரின் கோபநிலையைக் கண்டு சேனைகள் பலவும் விரைந்து வந்து சேரும்படி போர்ப்பறை கொட்டச் செய்தார்கள்.

போர்ப்பறை கேட்டதும் போர் வீரர்கள் பொங்கியெழுந்து வீரக்கழலும் கச்சையும் வரிந்து கட்டி, வில், வேல், வாள், தண்டம், பிண்டி, பாலம், இருப்புலக்கை, சக்கரம், மழு, சூலம் முதலான பலவித் படைக் கருவிகளையும் ஏந்திப் பிடித்துக் கொண்டு, எங்கெங்கும் திரண்டு நிறைந்து புறப்பட்டார்கள். ஆகாயப் பரப்பு முழுவதையும் துடைப்பது போல் பட்டுக் கொடிகள் வானளாவிப் பறந்துவர, யந்திரத் தேர்களும், குதிரைகளும் இடையிடையே யானைகளுமாக நான்குவிதப் படைகளும் ஒருங்கே திரண்டு வந்தன. சங்கு, தாரை, தம்பட்டம், எக்காளம், முதலியவை பேரொலி செய்தன. பேரிகைகள் முழங்கின. பம்பை, கண்டை, விரி, உடுக்கை, திமிலை, கரடிப்பறை முதலான பொங்கொலிச் சின்னங் களெல்லாம் வானத்து இடியோசைகளும் கூசும்படி போர்ப் படைகளுக்கிடையே பெரும் முழக்கமிட்டுப் பெருகின.

வாத்திய ஒலியும், முட்டும் சுடர்ப்படை ஒலியும், குதிரைகளின் கழுத்திலுள்ள மணிகள் அசையும் ஒலியும்,

யானைகளின் பிளிறல் ஒலியும், தேர்கள் சீறிப் பாயும் ஒலியும், படைவீரர்களின் வீர ஆரவார ஒலியும், எல்லாம் சேர்ந்து ஊழிக்காலத்தில் பொங்கும் பெருங்கடல்களின் ஒலியைப் போல் பொங்கியெழுந்தன. நால்வகைச் சேனைகளும் பரந்தெழுந்து ஊழிக்காற்றுபோல் மேன்மேலும் வந்து குவிந்தன. வெண்கொற்றக்குடை வேந்தனாம் புகழ்ச்சோழன் சேனைகள் பின்தொடர அழகானவொரு குதிரைமீது ஏறி அரசமா வீதி வழியாக விரைந்து சென்றான். பட்டவர்த்தன யானையும் யானைப்பாகர்களும் வெட்டுண்டு மாண்டு கிடந்த படுகளத்தை மன்னர் பெருமான் வந்தடைந்தான். ஆனால் அந்தப் படுகளத்தில் பகைவர் எவரையும் அவன் காணவில்லை! சிவனடியாரான எறிபத்த நாயனார் தான் மழுவாயுதம் ஒன்றை ஏந்தியவண்ணம் வலிமையான போர் யானையைப்போல் இரண்டு கைகளும் தும்பிக்கைகள் போல் தோன்ற நிற்பதைக் கண்டான். செம்பொன் அருவி பொழியும் மாமலைபோல் இரத்தம் சிந்தியவாறு யானைபுரண்டு கிடப்பதையும் அதன் எதிரிலேயே எறிபத்த நாயனார் நிற்பதையும் கண்ட பிறகும் அம்பலக்கூத்தரின் அருள் நேய அடியாரான அவர் யானையைக் கொன்றிருப்பார் என்று மனதால் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை மன்னன்.

அதனால், ''யானையைக் கொன்றவர் யார்?'' என்று இடிமுழக்கம் போன்ற குரலில் புகழ்ச்சோழன் கேட்டான். அங்கிருந்த மற்ற பாகர்கள் அவனருகில் சென்று, ''அரசே! தங்கள் வெற்றியின் சின்னமான பட்டவர்த்தன யானையின் முன்நிற்கக் கூடப் பகைமன்னர் இந்தப் பரந்த உலகில் யார் உண்டு? இதோ கையிலே பரசு ஆயுதம் ஏந்திய வண்ணம் யானையின் முன்னால் நிற்கும் இவர்தான் யானையைக் கொன்றவர்!'' என்று எறிபத்த நாயனாரைச் சுட்டிக் காட்டினார்கள்.

அரசனோ, ''இங்கு நிற்பவர் நற்குணத்தில் சிறந்த சிவனடியார் ஆயிற்றே! யானை ஏதாவது பிழை செய்திருந்தாலன்றி அதை இவர் கொலை செய்திருக்க மாட்டார். ஆகையால் யானைதான் தீங்கு செய்திருக்க வேண்டும்'' என்று தன் மனதினுள் நினைத்துக் கொண்டு, தன்னுடைய யானைப்படை முதலான சேனைகளை எல்லாம் ஒருபுறமாக நிறுத்தி வைத்து விட்டுக் குதிரை மீதிருந்து கீழே இறங்கினான். பிறகு அவன் தன் மனதினுள், ''இந்தச் சிவனடியார் அந்த மாமலை போன்ற மதயானையின் எதிரே சென்றபோது அவருக்கு ஒரு தீங்கும் நேராதிருந்ததே! அது அடியேன் முற்பிறப்பில் செய்த தவமேயாகும்! இந்த

சிவநேசருக்குக் கோபம் உண்டாகும்படியாக, ஐயோ, அந்த யானை என்ன பெரும்பிழை செய்ததோ!'' என்று நினைத்துப் பார்த்தான்.

பிறகு புகழ்ச் சோழர் தம் பரிவாரத்தினரை விட்டு நீங்கி ஏறிபத்த நாயனாரின் எதிரே சென்று அவரை வணங்கி, ''அம்பலவாணரின் அன்பரே! இந்த யானை செய்த பிழையை அடியேன் அறியேன்! நான் அரண்மனையில் கேட்ட செய்தி வேறொன்று! அது ஒருபுறமிருக்கட்டும்! எதிர்த்த இந்த யானையின் குற்றத்திற்காக இதை இதன் பாகரோடு கொன்றதே போதுமோ, கூறியருளும்!'' என்று கேட்டார்.

சிவநேசரான ஏறிபத்த நாயனார் உலக மன்னரை ஏறிட்டு நோக்கி, ''சோழனே! பாம்பை ஆபரணமாக அணியும் சிவபெருமானுக்குச் சாத்தும் பொருட்டுச் சிவகாமியாண்டார் பூக்கொய்து பள்ளித்தாமங்களோடு கொண்டு வந்தார். பூஜைக்குரிய அப்பூக்களையும், பள்ளித்தாமங்களையும் இந்த யானையானது அவரிடமிருந்து பறித்துத் தரையிலே சிந்தியது. ஆகையால் இந்த யானையை நான்தான் வெட்டித் தரையிலே வீழ்த்தினேன்! மலர்களைப் பறித்து யானை இத்தீங்கு செய்தபோது அதைச் செலுத்தும் யானைப் பாகர்களும் அதற்குக் காவலாக வரும் பரிக்காரர்களும் அத்தீமையைத் தடுக்கவில்லை! ஆகையால் அவர்களையும் நான்தான் கொன்றேன்! இதுவே இங்கு நிகழ்ந்தது!'' என்று கூறினார்.

அதைக் கேட்டதும் புகழ்ச் சோழமன்னர் அஞ்சி நடுங்கி, மலை போன்ற தம் வீரத் தோள்கள் குனிய, ஏறிபத்த நாயனாரின் பாதங்களில் தலை கவிழ வணங்கி, ''சிவனடியாருக்குச் செய்த இந்த அபச்சாரத்திற்கு, இங்கு நடந்தது மட்டும் போதாது! யானையையும், பாகர்களையும், பரிக்காரர்களையும் கொன்றதோடு அவர்களை ஆளும் தலைவனான அடியேனையும் கொல்ல வேண்டும்! ஆனால் தங்கள் கையிலுள்ள மங்கலமான மழுவாயுதத்தினால் கொல்லுதல் முறையல்ல! என்னை அடியார் கொல்லுதற்கு இந்த வாளே ஏற்றதாகும்!'' என்று கூறி, தம்முடைய வீரவாளாலேயே தம்மைக் கொல்லும்படி, தம் இடையில் இருந்த உடைவாளைத் தம் கையாலேயே உருவி வீசியெடுத்து ஏறிபத்த நாயனாரிடம் கொடுத்தார்.

அவ்வாறு புகழ்ச் சோழ மன்னர் பிராயச்சித்தம் தேட விரும்பியவராய் தம்முடைய பிரகாசமான வீரவாளை நீட்டி நிற்பதைக் கண்டதும், ஏறிபத்த நாயனார் திகைத்து

மன்னரை ஏறிட்டு நோக்கி, ''ஐயோ, கெட்டேன்! எல்லையில்லாப் புகழுடைய புகழ்ச் சோழனுடைய அன்பிற்கும் ஓர் எல்லையில்லை என்பதை இன்று கண்டேன்!'' என்று நினைத்து உள்ளமெல்லாம் பூரித்தார். வேந்தர் கொடுக்கும் வாளை வாங்காவிட்டால் அவ்வாளாலேயே வேந்தர் தம் உயிரைத் தாமே மாய்த்துக் கொள்வார், என்று சிந்தித்துப் பயந்து தற்கொலையெனும் அத்தீங்கைத் தவிர்ப்பதற்காக எறிபத்த நாயனார் அந்த வாளை வாங்கிக் கொண்டார்.

வாளை வாங்கிய அத்தொண்டரின் முன்னால் புகழ்ச்சோழ மன்னர் தலை வணங்கி நின்று, ''இங்கு என்னை என் வாளினாலேயே கொன்று என் பிழையைத் தீர்த்துப் பேருதவி செய்யும் பேற்றினை இச்சிவனடியாரிடம் பெற்றேன்!'' என்று கூறிமகிழ்ந்தார். அதைக் கண்ட எறிபத்த நாயனார் அதற்காக இன்னும் அஞ்சி உணர்வு கலங்கி, ''மாபெரும் பட்டவர்த்தன யானையும் யானைப் பாகர்களும் மடிந்து கிடக்க, அது போதாதென்று தன் உடைவாளைத் தந்து, 'என் பெரும் பிழையினாலே என்னையும் கொல்லும்' எனக் கூறுகிறாரே, இம்மாமன்னர்? இத்தகைய பேரன்பருக்குத் தீங்கு நினைத்தேனே!'' என்று எண்ணமிட்டு, 'முன்னதாக என்னுயிரை முடிப்பதே இதற்குச் சரியான முடிவாகும்!' என்று தீர்மானித்துக் கொண்டு, அந்த வாளைத் தம் கழுத்திலே வைத்துத் தம்மையே அறுத்துக்கொள்ள முயன்றார். அதைக்கண்ட அரசர் பெருமான், ''இது என்ன? பெரியோர் செய்கை இவ்வாறு இருந்தது என்ன! ஐயோ! கெட்டேன்!'' என்று விரைந்து சென்று தம்முடைய வலிமையான கையால் நாயனாரின் கையையும் வாளையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டார்.

நாயனார் திமிறினார். ஆனால் அவருடைய கையையும் வாளையும் விடாமல் சோழ மன்னர் இறுக்கிப் பற்றிக் கொண்டிருக்கவே, நாயனார் வருந்தலானார். இந்த தர்மசங்கடம் அளவற்ற அன்பினாலே விளைந்ததாகையால் அந்தச் சங்கடத்தை நீக்கும் பொருட்டுச் சிவபெருமானின் திருவருளினால் ஓர் அசரீரிவாக்கு விண்ணில் எழும்பியது. அது பலரும் கேட்குமாறு, ''அன்பிற் சிறந்தவர்களே! உங்களுடைய தொண்டின் பெருமையை உலகத்திற்குக் காட்டுவதற்காகவே சிவபூஜைக்குரிய திருமலர்களையெல்லாம் பெரும் யானை கிளர்ந்து சிந்தியது. இதெல்லாம் தில்லைக் கூத்தரான சிவபெருமானின் திருவருளினாலேயே நிகழ்ந்தது!'' என்று கூறியது.

இறந்து கிடக்கும் யானைப் பாகர்களோடு அந்த யானையும் அதே சமயம் உயிர் பெற்று எழுந்தது. அதைக்

கண்டதும் எறிபத்த நாயனார் தம் கழுத்தை அறுத்துக் கொள்வதற்காகப் பூட்டிய வாளைக் கீழே விட்டெறிந்து விட்டு மன்னர் பெருமானின் பாதங்களில் விழுந்து வணங்கினார். புகழ்ச் சோழமன்னரும் நாயனாரின் பாதங்களைப் போற்றித் தரைமீது விழுந்து வணங்கினார். விண்ணுலகத் தேவர்கள் பனி மலர்களை வாரி வாரி, அடைமாரி போல் அவர்கள்மீது பொழிந்தனர்.

பிறகு எறிபத்த நாயனாரும் புகழ்ச்சோழ மன்னரும் எழுந்து நின்று, வானில் எழுந்த பேரொலியைப் போற்றி வணங்கினார்கள். மண்ணிலே சிந்திய மலர்களும் பள்ளித்தாமமும் முன்போல பூக்குடலையில் நிறைந்திருக்கச் செய்தார் சிவபெருமான். அந்த திருவருட் செயலைக் கண்ட சிவகாமி யாண்டார் பெருமகிழ்ச்சியடைந்தார். மன்னரின் பட்டவர்த்தன யானை, உறங்கியெழுந்ததைப் போல் உள்ளக்களிப்போடு நின்று, கருமேகம் முழக்கமிடுவதுபோல், நானா திசைகளிலும் எதிரொலிக்கும்படி பெரும் முழக்கமிட்டு ஆனந்தத்தால் பொங்கியது. யானைப் பாகர்கள் மகிழ்ச்சியுடன் அந்த யானையை நடத்திக் கொண்டு வந்து அரசர் முன்பு நிறுத்தினார்கள்.

எறிபத்த நாயனார், அரசரை நோக்கிக் கும்பிட்டு, ''அன்பர் பெருமானே! அடியேன் மகிழ நீங்கள் இந்த வலிமையான யானையின் மீதேறித் தங்கள் அரண்மனைக்கு எழுந்தருள வேண்டும்!'' என்று வேண்டினார். குதிரைமீது வந்த மன்னர் இப்போது நாயனாரின் அன்புக் கட்டளையை ஏற்றுக் கொண்டு, யானையின்மீது ஏறி, வெண்கொற்றக் குடைநிழலின் கீழ் அமர்ந்து சென்றார்.

அந்நிலையில், அவருடைய சேனைகளெல்லாம் சப்த சமுத்திரங்களும் ஒன்றாகப் பொங்கி ஒலிப்பது போலப் பெரும் ஆரவாரம் செய்ய, மண்ணெல்லாம் மகிழ்ந்து வாழ்த்த, புகழ்ச் சோழ மன்னர் தம் உள்ளத்தில் நடராஜப் பெருமானின் திருவடிகளைத் தியானித்த வண்ணம் தம் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தார்.

சிவகாமியாண்டார் தம்முடைய தண்டின்மீது பூக்குடலையைத் தொங்கவிட்டுக் கொண்டு, திருத்தொண்டைத் தொடர்ந்து ஆனிலை அண்ணலாரின் திருக்கோயிலுக்குச் சென்றார். எம்பிரான் அன்பரான எறிபத்த நாயனாரும், ''ஆகா! சிவனடியார்களின் திறத்தை யார்தான் அறிவார்!'' என்று வியந்து புகழ்ச் சோழரின் அன்பின்

பெருமையை நினைத்துப் பரவசமுற்றவராக முன்போலத் திருப்பணி புரியச் சென்றார்.


இவ்விதமாக எறிபத்த நாயனார், சிவனடியார்களுக்கு ஆபத்து வந்த காலங்களிலெல்லாம் தாமே முன் சென்று அவற்றைப் போக்கி உதவி, பக்தி வலிமையில் சிறந்தோங்கி, மேன்மேலும் தொண்டு புரிந்து வந்தார். அதனால் சிவபெருமானின் திருக்கயிலையில் சிவகணங்களுக்குத் தலைமை தாங்கும் பெரும் பேறும் பெற்றார்.

திருத்தொண்டரான எறிபத்த நாயனாரின் ஆண்மைச் செயலையும் தம் உடைவாளைத் தம் கையாலேயே கொடுத்துத் தம்மைக் கொல்லும்படி வேண்டிய புகழ்ச்சோழ மன்னரின் பெருமையையும், சிவபெருமானால் அளவிட முடியுமேயன்றி மற்றவர்களால் அளவிட்டுக் கூற முடியுமோ?

கொன்றைப் பூவைச் சூடிய செஞ்சடைப் பெருமானான சிவபிரானிடம் குறைவிலாத காதல் கொண்டுள்ள பேரன்பர்தான் எறிபத்த நாயனார்! அந்த நாயனாரின் திருவடிகளை என் சிந்தையில் சூடிக்கொண்டு, அடுத்ததாக ஏனாதி நாயனார் செய்த திருப்பணியைச் சொல்கிறேன்.

''இலைமலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கு அடியேன்''

– சுந்தரர் திருத்தொண்டத் தொகை.



14. ஏனாதிநாத நாயனார்

பொன்னொளி வீசும் இமயமலையில் புலிக்கொடியை நாட்டி வெற்றி வாகை சூடி, முத்துக் குடையின் குளிர் நிழலிலே உலகைக் காப்பவர்கள் சோழ மன்னர்கள். அவர்களின் வளமை மிக்க சோழ நாட்டில் பூஞ்சோலைகள் சூழ்ந்ததும் செழுமையான வயல்கள் சூழ்ந்ததுமான பழைய ஊர்களில் ★எயினனூர் என்பதும் ஒன்று. அங்கு ★ஈழக் குலச் சான்றார் குலத்தில் ஏனாதிநாதர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார்.



அவர் திருநீற்றுத் தொண்டில் ஈடுபட்டு சிவபெருமானையும் சிவனடியார்களையும் வழிபட்டு வந்தார். அந்நன்மை வழியில்

★எயினனூர் : கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் ஆறு மைல் தொலைவில் அரசலாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. எயில் – மதில். அரண்களைக் காவல் செய்பவனது ஊராகையால் அதற்கு எயினனூர் என்று பெயர். தற்போது ஏனநல்லூர் என்றழைக்கப்படுகிறது.

★ஈழக் குலச் சான்றார் : மலைநாட்டுக் கள் இறக்குவோர். தமிழ் வேந்தர்களின் சேனைத் தலைவர்களுக்கு ஏனாதியர் என்று பெயர். சங்க நூல்களில் அரசர்கள், ஏனாதியருக்கு நெற்றியில் அணியும் தங்கப் பட்டமும் விரலுக்கு ஏனாதி மோதிரமும் அளித்து வருவதை ஒரு மரபாகக் கொண்டிருந்தனர் என்பதைக் காணலாம்.

நிற்கும் நலத்தில் என்றும் குன்றாதவாறு விளங்கி வந்தார். அரச குடும்பத்தினருக்கு வாள் வித்தை பயிற்றுவிப்பது அவருடைய தொழிலாகும். வாள் வித்தையில் தலை சிறந்து விளங்கிய அவர் அத்தொழிலின் மூலம் தமக்குக் கிடைக்கும் பொருளையெல்லாம் நாள்தோறும் பெருகும் விருப்போடு சிவனடியார்களுக்குக் கொடுத்துதவுவதற்கே பயன்படுத்தி வந்தார். பகைவர்களுங் கூட அவரது நல்லொழுக்கத்தையும் திருத்தொண்டையுங் கண்டு அவரைப் போற்றி வந்தார்கள்.

இவ்வாறு ஏளனத்திற்கு இடமில்லாத செயல்களோடு ஏனாதி நாதர் இயல்பாக வாழ்ந்து வரும் காலத்தில் அதிசூரன் என்னும் மற்றொரு வாள் வீரனும் இருந்தான். வாட்பயிற்சி ஆசிரியரான ஏனாதிநாதருக்கு தொழில் உரிமைத் தாயபாகம் பெற்ற பங்காளி மரபினன்தான் அதிசூரன். அவனும் வாட்பயிற்சி ஆசிரியனாக விளங்கி வந்தான். ஆயினும் வாட்படைத் தொழிலில் தன்னை விடக் கற்றவர்கள் யாருமில்லையெனத் தன்னையே உலகில் பெரிதாக மதித்து தற்பெருமையோடு மிகவும் அகம்பாவமுடையவனாக விளங்கி வந்தான். ஆனால் அவன் தொழிலில் கிடைத்து வந்த ஊதியமும் ஜீவனோபாயமும் ஆசிரியத் தன்மையின் செல்வாக்கும் நாளுக்கு நாள் குறையலாயிற்று. ஏனாதிநாதருக்கோ அவனைவிடத் தொழிலில் மேம்பட்டு ஊதியமும் செல்வாக்கும் பெருகி வந்தன. அதனால் ஏனாதிநாதர் மீது அதிசூரன் அளவுகடந்த பொறாமை கொண்டான். அவரிடம் முறையிலாப் பகைமை பாராட்டினான். உதய சூரியன் முன்னால் ஒளி மழுங்கும் அதிகாலைச் சந்திரனைப்போல் மதிப்பை இழந்த அதிசூரன் பொறாமையினால் பொங்கியெழுந்து ஏனாதிநாதரை எதிர்த்து ஊர் மக்களறிய வாட்போர் புரியவும் துணிந்தான்.

ஒருநாள் அவன் தோள் வலிமை மிகுந்த உறவினர்களையும் கொலைத் தொழிலில் வல்லவர்களான போர் மல்லர்களையும் தன் மாணாக்கர்களையும் அழைத்துக் கொண்டு, நெடுநாள் பகையோடு ஏனாதிநாதரின் வீட்டை அடைந்தான். குறுகிய பார்வையுள்ள குள்ள நரியொன்று புலி வாழும் குகைக்குச் சென்று போருக்கு அறை கூவுவதைப் போல் அவன் ஏனாதிநாதரின் வீட்டு வாசலில் நின்று, ''வாள் பயிற்சியளிக்கும் தொழிலில் உரிமைத் தாயபாகத்தைப் போர் செய்வதில் வலிமையுள்ளவரே கொள்ளத் தக்கவர்!'' என்று அறைகூவி, ஏனாதிநாதரைப் போருக்கு அழைத்தான்.

அதைக் கேட்ட ஏனாதிநாதர், ''போருக்கு அழைப்பவன் யார்?'' என்று ஆண் சிங்கத்தைப்போல் கர்ஜித்து எழுந்து கச்சை கட்டி, காலில் வீரக்கழலும் கட்டி, வாளும் கேடயமும்

எடுத்துக் கொண்டு, போர்க்கோலம் பூண்டு வெளியே வந்தார். இடுப்பிலே இறுகக் கட்டிய கச்சையோடும் வீரக்கழல்கள் அணிந்த கால்களோடும் ஒரு கையிலே கேடயமும் மறு கையில் வாளையும் ஏந்தி நிற்கும் அவரைக் கண்டு அனைவரும் திகைத்தார்கள். அவரிடம் வாள் பயிற்சி பெற்ற வீரக் காளையரும் மறப்படைச் சுற்றத்தினரும் அவருடைய போர்க்கோலத்தைக் கேள்விப்பட்டு ஓடோடி வந்து, அப்பெரும் போர் வீரரின் இரண்டு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டார்கள்.

ஆண்புலி போன்ற ஏனாதிநாதரை அதிசூரன் ஏறிட்டு நோக்கி, ''நாம் இருவரும் சமீபத்திலுள்ள மேற்றிசை ★வெளியிடத்தில் நம் படைகளோடு அணிவகுத்து, நமது தாயபாக உரிமைக்காகப் போர் புரிவோம். அந்தப் போரிலே வீழ்ச்சியடையாதவர்கள்தான் வாள் பயிற்றுவிக்கும் தொழில் உரிமைக்கு உரியவர் என்பதை முடிவு செய்வோம்!'' என்று கூறினான்.

''நல்லது! உன் விருப்பம் அதுவானால் நானும் போர்புரியத் தயார்தான்!'' என்று கூறி ஏனாதிநாதர் உள்ளம் மகிழ்ந்து சென்றார். அவருடைய படைவீரர்களும் அதிசூரனின் படை வீரர்களும் அதிசூரன் குறிப்பிட்ட போர்க்களத்தை அடைந்ததும் அணிவகுத்து எதிரெதிரே நின்றார்கள். வாள்கள் எனும் மின்னல்களும் கேடயங்கள் எனும் மேகங்களும், வீரர்கள் எனும் இடியேறுகளும் திரண்டு வந்து எதிரெதிராக நின்று பொருதுவதுபோல இருதரப்பாரின் படைவீரர்களும் கைகலந்தார்கள்.

வாள் வீரர் வாள்வீரரோடும், வேல் வீரர் வேல் வீரரோடும், வில்லாளிகள் வில்லாளர்களோடும் தம் உயிரைத் துச்சமாக மதித்து நாகசர்ப்பங்கள் சீறுவதுபோல் சீறிப் போர் புரிந்தார்கள். இருதரத்து வில் வித்தைக்காரர்களும் செலுத்திய அம்புகள் நெருப்புப் பொறிகளைப்போல், எதிரெதிரே பறந்தன. அவர்களது விழிகள் சினத்தால் சிவந்து கனல் பொறிகளைக் கக்கின. கேடயங்களோடு கேடயங்கள் மோதின. வாள் பிடித்த வீரர்களின் நீண்ட கைகள் வாளோடு அறுபட்டு விழுந்து துடித்தன. வீர மார்புகளிலே வேல்கள் பாய்ந்து, நீராடி மூழ்கின. அம்புகள் தைத்த தோள்கள் அறுப்புண்டு தரையில் விழுந்து

★வெளியிடம் : ஏனநல்லூர் திருக்கோயிலுக்கு மேல்திசை அரைமைல் தொலைவில் சாலைக்கரை என்ற இடத்தில் ஒரு குளமும் அதன் கரையில் ஆலமரம் ஒன்றும் உள்ளன. குளத்திற்குத் தென் கரையிலுள்ள ஒரு பெரிய திடலில்தான் இருவரும் போர் புரிந்தனர்.

புரண்டன. வீரக்கழல்கள் அணிந்த தாள்கள் வெட்டுண்டு விரிந்தன. மாலைகளோடு தலைகள் அறுந்து உருண்டன. அந்தப் போர்க்களத்தில் இரத்த வெள்ளம் பெருகி கிளை நதிகளாகப் பிரிந்து ஓடின. குறையுடல்கள் ஓடி அலைந்தன. குடல்கள் வெளிவந்த உடல்கள் களமெங்கும் நிறைந்தன. மாமிசங்களை உண்ணக் கழுகுகள் வட்டமிட்டன. வார் அறுத்த உடுக்கைகள் புரண்டன. இரு கைகளும் இரு தொடைகளும் வெட்டுண்டு விழும்போதும், தன்னை வென்றவனையும் கொன்றே மடிந்தனர் சிலர். வேலாயுதங்களின் கூர்மையான முனைகளால் எதிரிகளை முட்டி வீழ்த்தினர் சிலர்.

தங்கள் கைகளிலுள்ள கேடயத்தாலேயே எதிரிகளின் மார்புகளை மோதிச் சாய்த்தனர் சிலர். கையிலுள்ள வில்கள் வெட்டுண்ட பிறகு, எதிரிகளிடமிருந்து புற்றுப் பாம்புகளைப் போல் சீறிவரும் அம்பு வரிசைகளையெல்லாம் தங்கள் கைவாள்களாலேயே வீசிச் சாய்த்தனர் சிலர். போர் முகத்தில் மடிந்து விழும் மறவர்களின் முகங்கள் மலர்ந்திருப்பதைக் கண்டு இன்னும் உயிர் இருக்கிறதோ என்று நினைத்துக் காகங்களும் அவர்களை நெருங்க அஞ்சிச் சுற்றிலும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. வீரர்களின் பிணங்கள் விழும் அந்தச் செங்களத்தினிடையே சிலர் தங்கள் குடல்கள் கிழிப்புண்டு சரிந்து விழும்போதுகூட, வானத்தில் கழுகுகளும் பருந்துகளும் பொங்கியெழுந்து வட்டமிடுவதைக் கண்டும் சிறிதும் தைரியத்தை இழக்காமல் எதிர்த்து நின்றனர். வானத்திலே பட்டம் விடும் சிறுவர்களைவிட அவர்கள் ஆவேசத்தோடு போராடினார்கள். அந்தப் போரில் இரு தரப்பிலும் வீரமிக்க படைஞர்கள் கடும் போர் புரிந்து எண்ணிறந்தோர் மடிந்தார்கள்.

இதையெல்லாம் கண்ட ஏனாதிநாதர், மிகவும் கோபம் கொண்டார். போர் முனையில் தம் படைவீரர்களை இறந்தவர்கள் போக, எஞ்சியிருந்தவர்களையெல்லாம் தாண்டிக் கொண்டு ஓங்கிய வாளுடன் முன்னால் பாய்ந்து வந்தார். வெஞ்சின வாள், தீ உமிழ, வீரக் கழல்கள் கலீர் கலீரென ஒலிக்கத் தனியொருவராகவே வாள் வீசி, எதிரிகளின் தலைகளையும், தோள்களையும், மார்புகளையும் வெட்டி வீழ்த்தினார். அவரை எதிர்த்து வர முடியாதவர்கள் எல்லாம் பின் வாங்கினர். மெய்யுணர்வு நிமிர்ந்து நிற்கும்போது ஆசை முதலான குற்றங்களெல்லாம் எதிர் நிற்க முடியாமல் ஓடி மறைவது போல் போர்க்களத்தை விட்டே ஓடி மறைந்தனர்.

அத்தகைய நிலைமையை அறிந்த அதிசூரன் பொங்கியெழுந்து மின்னொளி வாள் வீசி, நேரே எதிர்த்துப்

போரிட்டுக் கடைசியில் வெல்ல முடியாமல், தம் படைகளோடு தப்பிப் புறங்காட்டி ஓடினான்.

அவ்வாறு தோற்றோடிய அதிசூரன் தன் வீட்டை அடைந்ததும் தனக்கு ஏற்பட்ட தோல்வியை நினைத்து வருந்தினான். பாய்கூட விரிக்காமல் வெறும் மண்ணிலே படுத்து கண்ணிமை மூடாமல் புரண்டான். இரவு முழுவதும் உறங்காது சிந்தனையில் அழுந்தினான். ''நான் நேர்மையான போரிலே வெல்ல முடியவில்லை என்றாலும் இழிவு பொருந்திய வஞ்சனைச் செயலைச் செய்தாவது ஏனாதிநாதரை வென்றேயாக வேண்டும்!'' என்று முடிவு செய்தான்.

நீண்ட இராக்காலம் மெல்ல மெல்ல அகன்று மறுநாள் பொழுது விடிந்தது. ''நாட்டாரைக் கொல்லாமல் நாம் இருவர் மட்டுமே தனி வாட்போர் புரிந்து வாட்தொழிலின் உரிமையை நிலைநாட்டுவோம்! அதற்காக போரிடத் தனியே வருக!'' என்று அத்தீயவன் ஓர் ஆள் மூலம் ஏனாதிநாதருக்குச் செய்தி யனுப்பினான்.

அதைக் கேட்டதும் ஏனாதிநாதர் ''அவ்வாறு செய்வது நல்லதுதான்! தனி வாட்போர் புரிய அக்கொடியோன் குறிப்பிட்ட இடத்திற்கு அவன் வாளேந்தி வரட்டும்!'' என்று அதற்கு ஒப்புக் கொண்டார். பிறகு அவர் தம் சுற்றத்தார்க்கும் மாணவர்களுக்கும் தெரிவிக்காமல் யாருமே அறியாதபடி, வாளும் கேடயமும் ஏந்திக் கொண்டு சென்றார்.

நெற்றியில் வெண்திருநீறு (விபூதி) பூசிய சிவனடியார் களுக்கு ஏனாதிநாதர் தீங்கிழைக்க மாட்டார் என்பதை அதிசூரன் அறிந்திருந்தான். எனவே, இதற்கு முன்பு என்றுமே திருநீறு அணிந்து பழக்கப்படாத அதிசூரன், தன் நெற்றியிலும், உடம்பிலும் திருவெண்ணீற்றை அள்ளி நிறையப் பூசிக் கொண்டான். உள்நெஞ்சிலோ வஞ்சனையெனும் கறுப்பைப் பூசிக் கொண்டான். பிறகு அவன் வாளேந்தி கேடயம் தரித்துக் கொண்டு புண்ணியப் போர் வீரருக்குக் குறிப்பிட்டுச் சொன்ன போர்க்களத்திற்கு வந்தான். அங்கே தன் இரைக்குத் தக்கதொரு பிராணி கிடைக்கும் வரை காத்திருக்கும் சிங்கத்தைப்போல் ஏனாதிநாதர் காத்திருந்தார்.

நெற்றியில் வெண்திருநீறு பூசிய வஞ்சக அதிசூரன் தன் நெற்றியையும் கைக் கேடயத்தால் மறைத்துக் கொண்டு, நாயனாருக்கு எதிரே சென்று வாட்போர் புரியலானான்.

ஏனாதிநாதர் பாய்ந்து செல்லும் காளையைப்போல் அவனை நெருங்கிச் சென்று, அவனைக் கொல்லும் வகை தெரிந்து, அவனைத் தாக்குவதற்கு முனைந்தார். அப்போது

சுத்த வீரனான ஏனாதிநாதரின் வாளானது தன்னைக் கொல்ல வருவதைக் கண்ட அதிசூரன், தன் நெற்றியை மறைத்துக் கொண்டிருந்த கேடயத்தைச் சட்டென்று விலக்கிக் கொண்டான். அக்கயவனின் நெற்றியிலே சிவனடியார்களின் சின்னமான திருவெண்ணீறு (விபூதி) பூசப்பட்டிருப்பதை ஏனாதிநாதர் கண்டார். கண்டதுமே அவர், ''ஆ, கெட்டேன்! இதற்கு முன் இவர் நெற்றியிலே காணாத வெண்திருநீற்றின் பொலிவை இன்று கண்டேன்! இனிமேல் வேறென்ன உண்டு? இவர் என் சிவபிரானின் சீரடியார் ஆகிவிட்டார். இவர் என்னைக் கொல்ல விரும்பியே வந்தார் என்றால் இவர் கொள்கை நிறைவேறும் வழியிலே நிற்பேன்!'' என்று தீர்மானித்து தமது வாளையும் கேடயத்தையும் விட்டெறியக் கருதினார்.

ஆனால், ''நிராயுதபாணியான என்னைக் கொன்றார் என்ற பழிச்சொல் நெற்றியில் திருநீறு பூசிய அச்சிவனடியாருக்கு வராதிருக்க வேண்டுமே!'' என்று எண்ணமிட்டு, வாளையும் கேடயத்தையும் தாங்கி, அதிசூரனின் முன்னால் போர் செய்பவரைப் போல் நடித்தவாறு நின்றார். உடனே அவர் முன் நின்ற அந்தப் பாதகன் அவரைத் தன் வாளால் குத்திச் சாய்த்துத் தன் கருத்தை நிறைவேற்றிக் கொண்டான்.

வெண் திருநீறு அணிந்த சிவனடியார்களிடம் ஏனாதி நாத நாயனார் கொண்டிருந்த பேரன்பைக் கண்ட சிவபெருமான், செஞ்சடை மின்னலிட வெளிப்பட்டு, ஏனாதி நாதருக்குக் காட்சியளித்தார். பற்றிலாப் பகைவனின் கை வாளால் தம்முடைய உலகப் பாசத்தைப் பற்றற அறுத்துக் கொண்ட ஏனாதி நாத நாயனார் இறைவனின் திருவருளைப் பெற்றுவிட்டார்.

அவரை சிவபெருமான் நோக்கி, ''நீ நம்மைவிட்டு என்றென்றும் பிரியாத பெரு வாழ்வைப் பெறுவாயாக!'' என்று கூறியருளி விட்டு, பொன்னம்பலத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

சிவபெருமான் சாத்தும் திருநீற்றுச் சார்புடைய எம்பெருமான் ஏனாதிநாத நாயனாரின் வீரக்கழல்களை வணங்கி விட்டு, அடுத்ததாக கண்ணப்ப நாயனாரின் திருத்தொண்டைச் சொல்லுகிறேன்.

''ஏனாதிநாதன் தன் அடியார்க்கும் அடியேன்''

— சுந்தரர்.

15. கண்ணப்ப நாயனார்

திருக்காளத்திக் கண்ணப்பரின் திருநாடு எனப் பொத்தப்பி நாட்டைக் கூறுவார்கள்.

★பொத்தப்பி நாடு வேடர்கள் நிறைந்த ஒரு மலை நாடாகும். பூக்கள் நிறைந்த வாவிகளும் பூஞ்சோலைகளும் புலவர்கள் போற்றும் நூல் வளமும் நிறைந்த அந்த நாட்டில் ★உடுப்பூர் என்னும் பழமையான ஊர் ஒன்றுண்டு. அருவிச் சாரல்கள் உள்ள மலைப் பக்கங்களில் யானைத் தந்தங்களையே வேலியாகவும் பெரியமதில்களை அரண்களாகவும் கொண்டது அந்த ஊர்! அங்கு வாழ்பவர்கள் குறவர்கள். அவர்கள் வேட்டை நாய்களை அங்குள்ள விளா மரங்களில் கட்டி வைத்திருப்பார்கள். மிருகங்களைப் பிடிப்பதற்குப் பயன்படும் வலைகளை மரக் கொம்புகளில் தொங்கவிட்டிருப்பார்கள்.

அங்கு காட்டுப் பன்றி, புலி, கரடி, காட்டெருமை, மான் முதலான மிருகங்களும் அம்மிருகங்களைப் பிடிப்பதற்காகச் செய்யப்படும் செயற்கை மிருகங்களும் ஏராளமாகத் தென்படும். வேட்டுவரின் வீடுகளுக்கு எதிரில் உள்ள பாறைகளில் மலைநெல் உலர்ந்து கொண்டிருக்கும். ஊர்ப்புறங்களில் வேட்டுவச் சிறுவர்கள் புலிக்குட்டிகளோடும், யானைக்குட்டிகளோடும் விளையாடிக் கொண்டிருப்பார்கள். வேடுவச் சிறுமிகள் பெண் மான்களை ஆசை தீரக் கட்டித் தழுவி விளையாடுவார்கள். வெற்றி வலிமையும் வெஞ்சொற்களும் வாய்ந்த வேடர்கள் கூடியிருக்கும் இடங்களில், ''அடி! குத்து! கொல்லு! எறி! வெட்டு!'' என்ற கூச்சல்கள் அடிக்கடி கேட்கும். அவ்வோசைகள் மட்டுமல்லாமல், உடுக்கை, கொம்பு, பறை முதலான ஒலிகளும் கல்லென்று கிளம்பும். அவற்றிற்கு மேலாக அருவி ஓசைகளும் முழங்கும்! வழிப்பறி செய்து வாழும் வேடர்கள் வெளிநாடுகளிலிருந்து கொள்ளையடித்து வந்த பலவகை

★பொத்தப்பி நாடு : இது கடப்பை மாவட்டத்தில் புல்லம்பேட்டை தாலுக்காவிலுள்ள ஒரு சிற்றூராகும்.

★உடுப்பூர் : இவ்வூர் குண்டக்கல் அரக்கோணம் ரயில் பாதையில் உள்ள இராசம்பேட்டைக்கு அருகில் உள்ளது. உடுக்கூர் என இன்று வழங்கப்படுகிறது.

மிருகங்களும் பலநிறப் பசுமாடுகளும் ஆங்காங்கே மேய்ந்து கொண்டிருக்கும். யானைகளின் கூட்டங்களும் ஆங்காங்கே மலிந்திருக்கும். அவை மேகங்கள் முழக்கும் இடியொலியை விட மாறுபட்டுப் பிளிறிக் கொண்டிருக்கும்.

அங்கு வாழ்கின்ற வேடர்கள் மைக் குழம்பு பூசியது போன்ற கரிய நிறமும் வலிமையான உடற்கட்டும் வாய்ந்தவர்கள். தம்மிடம் பயமும் பிறரிடம் கருணையும் என்றுமே இல்லாதவர்கள். மிருகங்களின் தோல்களையே ஆடையாக அணிபவர்கள். மலைத்தேனையும் கள்ளையும் குடிப்பவர்கள். மாமிசம் கலந்த ஊன்சோற்றைத் தின்பவர்கள். விஷத்தில் தோய்த்த அம்புகள் வைத்திருப்பவர்கள்.

அத்தகைய வேடருக்குத் தலைவனாக நாகன் என்பவன் விளங்கி வந்தான். அவன் முற்பிறப்பில் தவம் செய்தவனாயினும் இப்பிறப்பில் வேடுவர் குலத்தின் சார்பால் குற்றஞ் செய்வதையே குணமாகக் கொண்டு வாழ்பவன். கொடுமையே தலைமையாகக் கொண்டு நிற்பவன். வில் வித்தையிலும் தலைசிறந்தவன். வெகுண்டெழும் ஆண் சிங்கம் போன்றவன். அவன் தத்தை என்பவளை மனைவியாகக் கொண்டு இல்வாழ்க்கை நடத்தி வந்தான். அவன் மனைவி தத்தை வேடர் குலத்தில் பழமையான பெரும் குடும்பத்திலே பிறந்தவள். இளந் தழைகளுடன் மயிற் பீலியைக் கொண்ட மலர் மாலையைத் தலையில் அணிந்திருப்பாள். சங்குகளும் மணிகளும் கோர்த்த புலிப்பல் தாலியைக் கழுத்தின் புறம் அலையப் பூண்டிருப்பாள். அச்சமூட்டும் பெண் சிங்கத்தைப் போல் தோற்றமளிப்பாள்.

இவ்விதமான பலவிதச் சிறப்புகளோடு நாகனும் தத்தையும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு நீண்ட நெடுங்காலமாகப் பிள்ளைப் பேறில்லாமலிருந்தது. இனிமேல் அவர்களுக்குப் பிள்ளையே பிறக்காது என்று பலருங் கூறினார்கள். அதனால் அவர்கள் இருவரும் மனவியாகூலமடைந்து அந்தக்குறை தீர முருகப்பெருமான் சந்நிதியை அடைந்து மகப்பேறு வேண்டி, நாள்தோறும் வழிபட்டு வந்தார்கள். முருகனின் திருக்கோயிலுக்கு புள்ளி மயில்களையும் சேவற் கோழிகளையும் காணிக்கையாக வளர விட்டார்கள். முருகப்பெருமானுக்குத் திருவிழா நடத்துவதற்காக மணிகளையும் தோரணங்களையும் தொங்கவிட்டார்கள். வண்டுகள் மொய்க்கும் கடப்ப மாலைகளையும் வரிசைப் படுத்தினார்கள். நீண்ட நெடுவேல் ஏந்திய முருகன் புகழைப் பாடிக் குரவைக் கூத்து ஆடினார்கள். வேதாட்டியை அழைத்து, வெறியாட்டி அயர்வித்து, பெரிய திருவிழா நடத்தினார்கள். நெருங்கிய தழும்புகளையுடைய வேடர் தலைவனான நாகனின்

வேண்டுதலுக்கு முருகப்பெருமான் இணங்கி, அவர்களுக்கு அருள்புரிந்தார்.

குமரக் கடவுளின் திருவருளினால் வேடர் குலம் விளங்கும் வண்ணம், தத்தையின் வயிற்றிலே கருப்பம் தரித்தது. மாதந் தவறாமல், பலிகளைக் கொடுத்து வெறியாட்டு இயற்றினார்கள். உரிய மாதங்கள் நிரம்பின. உவர்க் கடல் பூரண சந்திரனைப் பெற்றதுபோல், தத்தை ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அதையறிந்த வேடர்கள் பெருமகிழ்ச்சி கொண்டார்கள். யானைகளின் பருத்த தந்தங்களில் உண்டாகும் முத்துக்களையும், செந்நெல், மூங்கில் முதலியவற்றில் தோன்றும் முத்துக்களையும் மணிகளையும் வாரியிறைத்து மங்கல வாத்தியக் கருவிகளை முழக்கினார்கள். வானவர்களும் மலர் மழை பொழிந்தார்கள். தேவதுந்துபிகள் ஆர்த்தன. இவ்வாறு மலைக் குறவர்கள் தங்கள் சிற்றூரில், இளவரசு பிறந்ததற்காகப் பெருவிழா நடத்திப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். கரிய மலை ஒன்று கருமுகிலைத் தாங்கியதுபோல், தந்தையாகிய நாகன் தன் மகனைத் தழுவி மகிழ்ந்தான். கன்னங்கரிய கதிர் ஒளியை வீசும் அந்தக் குழந்தை புலிக்குட்டியைப் போலப் பொலிவுடன் வளர்ந்தது. வேட்டுவக் குடிக்கு மட்டுமின்றி உலகமெலாம் அளத்தற்கரிய பெருமையைக் காட்டும் குறிகளும் அக்குழந்தையிடம் தென்பட்டன.

அந்தக் குழந்தையை நாகன் தன் கைகளில் தூக்கியபோது திண்மையாக இருந்ததால் அந்தக் குழந்தைக்கு திண்ணன் என்று பெயர் சூட்டினான். வேடர்கள் அப்பெயரைக் கேட்டு ஆனந்த ஆரவாரஞ் செய்தார்கள். புண்ணியத்தின் வடிவமான அக்குழந்தையைத் தங்கள் மரபிற்குரிய பலவகை அணிகளாலும் அலங்காரஞ் செய்து அழகு பார்த்தார்கள். மறக்குடி மக்களின் மரபுக்கேற்றவாறு மலைவாழ் தெய்வமான முருகனை அக்குழந்தைக்குக் காவலிட்டு வழிபட்டார்கள். குழந்தைக்கு வாசனையுடைய இளந்தளிர்களைச் சூட்டி, வேப்பங் கோலைத் துண்டு துண்டாகத் தரித்து இழைத்துப் பல கறைகளையும் கோர்த்து மணிக்கவடியை இடுப்பில் கட்டினார்கள். இவ்வாறு குழந்தை திண்ணனை வளர்க்கும் நாளில், சப்பாணி முதலான பிள்ளைப் பருவங்கள் தோறும் நாகன், மலைவாழ் தெய்வங்களுக்குப் பொங்கல் இட்டுப் பெருமடைகள் கொடுத்து வழிபட்டு, மங்கல ஒலிகள் முழங்க வேடர்க்கெல்லாம் பெரும் மகிழ்வூட்டி அருமையாகப் புதல்வனைப் பெற்ற ஆர்வத்தை வெளிப்படுத்தினான்.

குழந்தை திண்ணனுக்கு ஓராண்டு நிறைந்தது. தளர் நடையும் நீங்கியது. குழந்தையின் மெல்லிய தலைமயிரிலே

புலிநகச் சுட்டியைச் சாத்தினார்கள். முள்ளம் பன்றி முள்ளை அரிந்து, புலிப்பல்லோடு கோர்த்த மாலையை மாா்பிலே தொங்க விட்டார்கள். பசுமை ஒளி வீசும் நீல மணிகளோடு கோர்த்த பன்மணிச் சதங்கை கலீர் கலீரென ஒலிக்கும்படிக் கட்டினார்கள். செப்புக் காசுகளோடு தாயித்துக் கூடுகள் புனைந்த அரை ஞாணும் கட்டினார்கள். யானைத் தந்தங்களால் செய்யப்பட்ட தண்டைகள் கால்களிலே ஒலித்தன. மணிகளால் இழைத்த குதம்பைகள் காதுகளிலே மின்னின. இத்தகைய மாசுமருவற்ற அழகான திருக்கோலம் காட்டி திண்ணன் தெருவிலே விளையாடுவான். தன் தாயும் தந்தையும் மனம் மகிழுமாறு, கங்கை நீரை விடப் புனிதமான எச்சில் வழிய பவளச் செவ்வாயைக் குதப்பி மழலைச் சொற்களைப் பேசுவான். பார்வை மிருகமான பொய்ப்புலியின் சிறு குகை போல் திறந்த வாயிலே கைவிட்டு விளையாடுவான். அதைக்காணும் தந்தை நாகன், தன் பிள்ளையின் துடுக்கடக்கப் பசுந்தழை கொண்டு திண்ணனை விரட்டுவான். திண்ணன் கண்ணீர்விட்ட வண்ணம் தன் தாயிடம் ஓடுவான். தாயே அவனை முத்தமிட்டுக் கண்ணீர் முத்துக்களைத் துடைப்பாள்!

உடுக்கை வடிவமான மரவுரலை வீதியிலே திண்ணன் உருட்டிக் கொண்டு ஓடுவான். வேட்டை நாய்களைக் கட்டி இருக்கும் கயிறுகளைப் பிடித்து இழுத்து அறுத்து விடுவான். வேட்டுவச் சிறுமிகள் கட்டியிருக்கும் விளையாட்டு வீடுகளை தன் சின்னஞ்சிறு கால்களால் சிதைத்தெறிந்து விரைந்தோடி மற்ற சிறுவர்களோடு சேர்ந்து சிரிப்பான். இவ்வாறு வேட்டுவக் குடிசைகள் எங்கும் திண்ணன் பலவகைச் சிறு குறும்புகளைச் செய்வான்.

திண்ணனுக்கு ஐந்து வயது நிரம்பியதும் அவன் மற்ற வேட்டுவச் சிறுவர்களோடு சேர்ந்து கொண்டு உடுப்பூரை யடுத்துள்ள காடுகளிலும் சோலைகளிலும் விளையாடுவான். முயற் குட்டிகளையும், காட்டுப் பன்றிகளின் குட்டிகளையும், புலிக் குட்டிகளையும், செந்நாய்க் குட்டிகளையும் அவற்றிற்கு இணையாக விரைந்தோடிப் பிடித்து வந்து மரங்களில் கட்டி வளர்ப்பான். இவ்விதமாகப் பகலெல்லாம் விளையாடி வரும் திண்ணனுக்கு அந்தி மாலை நேரத்தில் செவிலித் தாய்மார்கள் வெண்கடுகுப் புகையால் சுற்றித் திருஷ்டி கழித்து, அமுதூட்டித் தூங்கச் செய்வார்கள். மறுநாள் பொழுது புலர்ந்ததும் இறைச்சியுணவு ஊட்டி விளையாட விடுவார்கள். இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்ததும் திண்ணன் வில், வாள், முதலிய படைகளைப் பயிலும் பருவத்தை அடைந்தான்.

தந்தை நாகன் தன் மைந்தனை நோக்கித் தன் தடித்த தோள்களால் தழுவி சிந்தை மகிழ்ந்து, திண்ணனுக்கு வில்

வித்தை கற்பிக்க விரும்பினான். அதற்காக வில் வித்தையில் சிறந்தவர்களை அழைத்து வரச் செய்து வித்தை துவக்குவதற்கு ஒரு நல்ல நாளையும் குறித்து, அச்செய்தியை வீர மறவர்களுக்கெல்லாம் சொல்லியனுப்பினான். ''வேடர் தலைவன் நாகன் வேல்முருகன் அருளால் பெற்ற வீரச்செல்வன் திண்ணன் வில் ஏந்துகிறான்!'' என்பதை பறையறைந்து தெரிவிக்கச் செய்தான். அந்தப் பேரோசையைக் கேட்ட மலைவாழ் மறக்குலத் தலைவரெல்லாம் அந்த விற்பயிற்சி விழாவுக்கு வந்தார்கள். வருகிறவர்கள் யாவரும் மலையில் விளையும் மணி, பொன், முத்து, புலித்தோல், யானைத் தந்தங்கள், மயிற்பீலிகள், மலைத்தேன், கள், இறைச்சி, பழங்கள், கிழங்குகள் முதலானவற்றைப் பல திசைகளில் இருந்தும் சுமந்து கொண்டு வந்து நிறைத்தார்கள். அந்தச் சிற்றூரின் எல்லைக்குள் அடங்காத அளவுக்கு வேடர்கள் வந்து குவிந்து விட்டார்கள். நாகன் தன் உறவினர்களோடு தெய்வ வழிபாடுகள் பலவற்றையும் முறையாக நடத்தி, ''வில் விழா எடுப்போம்!'' என்று விளம்பினான். விழாவிற்குரிய படைக்கலப் பொருட்களை வீரர்கள் ஏந்தி நின்றனர்.

சிவபெருமானுக்கே உரியதான வில் என்று சொல்லத்தக்க ஒரு பெரிய வில்லுக்கு வேடர்கள் காப்புக் கட்டினர். வலிமையான புலி நரம்பாலான காப்பு நாணை, நல்ல நேரம் பார்த்து திண்ணனின் கையிலே கட்டி, நல் வாழ்த்துக்கள் கூறினர். பிறகு மலை நெல், புல்லரிசி, தினை, மூங்கிலரிசி முதலானவற்றைத் தனித் தனியாகச் சமைத்த சோறு வகைகளையும் கைதேர்ந்தவர்கள் பக்குவப்படுத்திய இறைச்சியையும், கிழங்கு வகைகளையும் செய்குன்று போல் குவித்து வைத்துக் கொண்டு ஒவ்வொன்றையும் கலந்து அனைவரும் உண்டனர். சிலர் தேனையும் தினை மாவையும் கலந்து உண்டனர். சிலர் வெந்த இறைச்சியைத் தேனில் தோய்த்துத் தின்றனர். வறுத்த ஈசல்களை சிலர் விருப்பத்துடன் புசித்தனர். தேனிற் பிசைந்த விளாம்பழக் கவளங்களைச் சிலர் உண்டனர். இவ்விதமாக அயலூரிலிருந்து வந்தவர்களும் உள்ளூரில் இருப்பவர்களுமான வேடர்கள் வேடிச்சிகள் அனைவரும் நடுப்பகல் கழியும் வரையில் பலவகை உணவுகளையும் மது வகைகளையும் உண்டு கள் மயக்கத்தின் மையல் பெருக மகிழ்ந்திருந்து வில் விழா நடத்த முனைந்தார்கள்.

எல்லோரும் பசுமையான பச்சிலை மாலைகளையும் பன்மலர் மாலைகளையும் அணிந்துகொண்டு, மணிகள் கோர்த்த தோல்வடத்தை இடையில் கட்டிக் கொண்டு உடலில் பல கறைகளாகிய அணிகளை அணிந்து கொண்டு, வெட்சி முதலான மாலைகளை சூடிக் கொண்டு வந்து,

வில்லாசிரியன் வைத்திருக்கும் வலிமையான வில்லைச் சூழ்ந்து கொண்டார்கள். தொண்டகம் என்னும் குறிஞ்சிப் பறை, கொம்பு, உடுக்கை, புல்லாங்குழல் முதலானவற்றை முழக்கி எட்டுத் திசையும் நிறைந்து விம்மப் பேரொலி கிளப்பி, ஊரை வலம் வந்தார்கள். அவர்கள் செய்த ஆரவாரம் வானத்தை அதிர வைத்தது. சில வேடர்கள் குறிஞ்சிப் பண்ணைப் பாடி ஆடினார்கள். வேட்டுவ மங்கையர் துணங்கைக் கூத்து ஆடினார்கள். அவ்வாடல் பாடல்களைப் பார்த்து தெய்வ மகளிருங்கூடக் களித்தாடினார்கள். இவ்விதமாக அந்த வில் விழா ஆறு நாட்கள் நடைபெற்றன. ஏழாம் நாளன்று, முந்தைய நாட்களை விட இரட்டிப்பாக விழாக் கொண்டாடினார்கள்.

அன்று, கதிரவன் உச்சிவானத்தை அடைந்தான். அப்போது மங்கல வாழ்த்துக்களும் இசைக் கருவிகளும் முழங்க வேடர்கள் வில்லாசிரியனைக் கொண்டு திண்ணனின் கையிலே வில்லினைப் பிடிக்கச் செய்தார்கள். அன்று முதல் திண்ணன் தன் வில்லாசிரியனை நாள்தோறும் வணங்கிப் பயின்று, ஆண்மைமுற்ற வில் வித்தையில் வல்லவனானான். வில் வித்தையைத் தவிர, வாள், வேல், ஈட்டி முதலிய பல படைக்கலப் பயிற்சிகளிலும் திண்ணன் தேர்ச்சியடைந்தான். கண்கொள்ளாப் பேரழகு பொங்க வளர்பிறைபோல் வளர்ந்து, பதினாறு வயதை அடைந்தான். அளவற்ற புண்ணியங்களே ஓர் உருவமாகத் திரண்டு எழுந்ததுபோல், திண்ணன் தோற்றமளித்தான்.

இந்நிலையில், தந்தை நாகனுக்கு வயது முதிர்ந்தது. உடல் தளர்ந்தது. அதனால் முன்போல வில்லேந்தி, வேட்டையாடவோ, பகைவரின் பசுக்கூட்டங்களைக் கவரவோ, நாட்டைக் காவல் புரியவோ முடியாதவனாகி விட்டான்.

ஒருநாள் வேடர்கள், ஒன்றுதிரண்டு நாகனிடம் வந்து ‘‘அரசே! மாதந்தோறும் வேட்டையாடுதல் தவறியபடியால் காட்டுப்பன்றி, காட்டெருமை, மரை, மான் முதலான விலங்குகள் பெருகிப் புனங்களை அழிக்கின்றன!’’ என்று முறையிட்டார்கள். அதைக் கேட்ட நாகன் ‘‘எனக்கு வயது முதிர்ந்து விட்டதால், என்னால் முன்போல வேட்டையாட இயலாது. ஆகையால் என் குமாரனாகிய திண்ணனை நீங்கள் தலைவனாக ஏற்றுக் கொள்ளுங்கள்!’’ என்றான்.

அவனுக்காக வேடர்கள் வருந்திப் பிறகு மனம் மகிழ்ந்து அவனை அடி வணங்கி, ‘‘தலைவரே! தங்கள் வில்லாட்சியின் கீழ் இத்தனை காலமும் நாங்கள் இனிதுண்டு தீங்கின்றி வாழ்ந்து வந்தோம். இன்றும் உங்கள் அருள் வழி நிற்பதல்லாமல் எங்களுக்கு வேறு வழியும் உண்டோ? மேலும் வீரம் மிக்க

திண்ணனையும் நம் மரபு மேம்படப் பெற்றளித்திருக்கிறீர்கள்! அம் மைந்தனை வரவழைத்து உங்கள் மலையாட்சியை அவனிடம் கொடுத்தருளுங்கள்!'' என்றார்.

அதற்கு நாகன் இணங்கி, திண்ணனைக் கொண்டுவரும்படி சொல்லிவிட்டு, ''நம் மலைச்சாரலை அடுத்துள்ள நெடுங்கானகத்தில் என் மகன் திண்ணன் முதன் முதலாகக் கன்னி வேட்டையாடுவதற்கு, வன தேவதைகளுக்குப் பலி கொடுத்து மகிழ்வூட்ட வேண்டும்! அதற்காக நம் தலைமரபின் வழிவந்த தேவராட்டியை அழைத்து வாருங்கள்!'' என்றான்.

தலை நரைத்த மூதாட்டியான தேவராட்டி பெருவிருப்போடு விரைந்து வந்தாள். தலையிலே காட்டுத் தளிர்கள் நிறைந்த கொண்டை மாலையும், காதுகளிலே கலைமான் கொம்பினால் செய்த குண்டலங்களும், கழுத்திலே சுக்கு மணி வடமும், மரவுரிமீது தழையும் மயில் தோகையும் தரித்து சரிந்த தனங்களோடு அம்மூதாட்டி வந்து, பூக்களையும் அரிசி அட்சதைகளையும் தூவி வேடர் கோமானைப் போற்றி நின்றாள். அந்தத் தெய்வ வடிவத்தாளை நாகன் ஏறிட்டு நோக்கி, ''அன்னையே! நீ வறுமை நீங்கி, நன்றாக இனிதிருந்தனையோ?'' என்று விசாரித்தான். அவனை நலம் பெறும்படி தேவராட்டி வாழ்த்திவிட்டு ''நல்ல இறைச்சியும், ஈசலும் 'தேனும் மலையில் விளைவனவுமான வேண்டிய உணவெல்லாம் உண்டு'. அன்று நீ வைத்தபடியே அனைத்தையும் நான் பெற்று இனிதே வாழ்கிறேன்! என்னை நீ இங்கு அழைத்த பணி என்ன?'' என்று கேட்டாள்.

''என் குல மைந்தன் திண்ணனுக்கு எங்கள் குலத் தலைமையை நான் கொடுத்திருக்கிறேன்! வேடர் தம்மைக் காக்கும் பொறுப்பாட்சியின் உரிமையில் அவன் தலைப்படப் போகிறான்! அவனுக்கு என்றென்றும் வேட்டைச் செயல்கள் எனக்கு மேலாக வாய்க்கும்படியும் வேறுபல வெற்றிகள் கிடைக்கும்படியும் வனத்தில் வாழும் தெய்வங்கள் மகிழப் பலி யூட்டுக!'' என்றான் நாகன்.

அதைக் கேட்டதும் தேவராட்டி, ''நான் மனம் மகிழ்ந்து இங்கு வரும்போது என்றும் நிகழாத நல்ல குறிகள் தோன்றின. ஆதலால் உன் மகன் திண்ணன் உன்னளவிலன்றி இன்னும் மேம்பட்டுத் திகழ்வான்!'' என்றுகூறி வாழ்த்திவிட்டு, வனத் தெய்வங்களுக்குப் பலியூட்டக் குறைவிலாப் பொருள்களைக் கொண்டு போனாள்.

அதன்பிறகு தலைக்கூந்தலில் மலர்மாலை நறுமணம் வீச, நீலமணி மலையொன்று நகர்ந்து வருவதுபோல் திண்ணன்

நடந்துவந்தான். அன்பு சொரியும் தன் தந்தையை அடிவணங்கி நின்றான். அவனை நாகன் தன் இரு கைகளாலும் இறுகக் கட்டியணைத்து புலித்தோல் ஆசனத்தில் அமரவைத்தான். பிறகு அவன் தன் மைந்தன் முகம் நோக்கி, ''திண்ணா! மூப்பு வந்தென்னை முட்டித் தடுப்பதால் முன்போல் வேட்டையாடுவதில் என் கருத்துச் செல்லவில்லை! ஆதலால் நம் குலத்திற்கு நீயே காவல்பூண்டு பகைவென்று வேட்டையாடி என்றும் என்னுடைய மரபை ஆளும் உரிமையைத் தாங்குவாயாக!'' என்று கூறி தன்னுடைய உடைவாளையும் கேடயத்தையும் கொடுத்தான். அவற்றை வாங்கிக் கொண்டு திண்ணன் தன் தந்தையை வணங்கினான். அவனை நோக்கி நாகன், முகம் மலர்ந்து, ''நம் குல மறவர்களையும் சுற்றத்தார்களையும் நான் காத்ததற்கு மேலாக நலம்செய்து காப்பாய்! பகை முனையில் அயல் ஊர்களைக் கவர்ந்து வளம் பெருக்கிச் சிறப்போடு வாழ்வாய்! நல்ல வேட்டைகளும் உனக்கு வாய்க்கும். காலம் தாழ்த்தாதே! உடனே வேட்டையாட வேடர்களோடு எழுந்து செல்வாயாக!'' என்று விடை கொடுத்தான். சிங்க ஏறு போல் ஆண்மை வாய்ந்த திண்ணன் தன் தந்தையின் வீரக்கால்களை வணங்கி விடைபெற்றுக் கொண்டு வெளியே சென்றான்.

மறுநாள் பொழுது புலரும்போது திண்ணன் மற்ற வேடர்களோடு சென்று, மங்கலச் சுனையில் நீராடி, வீட்டுக்கு வந்து வேட்டைக்கோலம் பூணத் தொடங்கினான். அலங்கரிக்கும் தொழிலில் வல்லவர்கள் அவனுக்கு உதவி புரிந்தார்கள். திண்ணனின் சுருண்டு கிடந்த குடுமியை நிமிர்த்தி நேர் செய்தார்கள். பசுமையான கொண்டைமாலைமீது மயிற்பீலியைச் சொருகினார்கள். முல்லைமாலைமீது குறிஞ்சிப் பூவும் வெட்சிப் பூக்களும் சேர்ந்து வாசனை வீசின. மயிலி றகுகளின் இடையிடையே குன்றி மணிகளைச் சேர்த்துக் கட்டிய மயிலாரக் கற்றை நெற்றியிலே மிளிர்ந்தது. சங்கினால் செய்த வெண்தோடுகள் காதுகளில் இரு சந்திரர்களைப்போல மின்னலிட்டன. சங்கு மணிகளும் பன்றிக் கொம்புகளும் கோர்த்த மாலையையும் புலித்தோலினால் செய்யப்பட்ட தட்டை வடிவமான வெற்றி மாலையையும் திண்ணன் தன் கழுத்தில் அணிந்து கொண்டான். மார்பில் மணித்திரள் மாலைகள் புரள, மலை போன்ற தோள்களில் தோள் வளையங்கள் தழைத்து மின்ன, முன்னங்கையில் கங்கணங்கட்டி, அம்பெய்வதற்கேற்ற கையுறையும் அணிந்துகொண்டான். இடையில் தரித்திருக்கும் புலித்தோல் ஆடையின்மீது உடைவாளை ஒரு வாரினால் இழுத்துக் கட்டிக்கொண்டான். கால்களில் வீரக்கழல்கள் பூண்டு, பாதங்களில் செருப்பையும் அணிந்து கொண்டான்.

இத்தகைய வேட்டைக் கோலம் பூண்ட திண்ணன் வில்லினை வலம்வந்து வணங்கினான். வில்லின் குதையை காலில் வைத்து வளைத்து நாணேற்றினான்! பிறகு தன் அழகான கைகளால் மேகமுழக்கம்போல் நாணொலி செய்து மகிழ்ந்தான். சிறந்த அம்புகளைத் தேர்ந்தெடுத்தான். வேடர்களைத் தன்னோடு வரும்படி கட்டளையிட்டான். வேடர்கள் கூட்டமாக உடுக்கை ஒலி முழங்கும் முற்றத்தில் கூடி நின்றார்கள். திசையெங்கும் வாழ்த்தொலிகள் கிளம்பின. அப்போது தேவராட்டிவந்து திண்ணனின் நெற்றியில் தன் கையால் அட்சதையிட்டு, ''உன் தந்தைக்குத் தந்தையான பாட்டனுக்குக்கூட இதுபோன்ற நல்ல சகுனங்கள் உண்டாகவில்லை. உன் வலிமையும் வருங்காலமும் மிகப் பெரியது. அதை என்னால் அளவிட இயலாது. ஆகையால் நீ சிறப்பாக வாழ்வாய்!'' என்று வாழ்த்தினாள். அதனால் புண்ணியமூர்த்தியாகிவிட்ட திண்ணனார் அவளுக்குப் பல சிறப்புகளைச் செய்து அனுப்பிவிட்டு, வேட்டைக்குப் புறப்பட்டார்.

அவருக்கும் முன்னதாக வில்லேந்திய வேடர் கூட்டம் யமவெள்ளம் போல் பொங்கியெழுந்து சென்றது. கணக்கற்ற வேட்டை நாய்கள் பக்கங்களில் விரைந்தோடி வந்தன. திண்ணனார் தம்மையறியாமலேயே பாசவலை அறுக்க விரைந்து செல்லும்போது, வேடர்கள் பலவிதமான வலைகளையும் சுமந்துவந்து, மேகங்கள் மூடியிருக்கும் மலைகளிலும் காடுகளிலும் உள்ள மிருகங்களை வளைத்துப் பிடிப்பதற்காக ஆங்காங்கே வலைகளை முறைப்படி கட்டினார்கள்; கொம்பு, சிறுபறை, பம்பை முதலிய தோற்கருவிகளை முழக்கிக் கொண்டும் கைகளைத் தட்டிப் பேரொலி செய்துகொண்டும் வேடர்கள் விரைந்து சென்று, கடலில் பாயும் காளிந்தி நதியைப்போல் காட்டில் நுழைந்து நாலா பக்கங்களிலும் ஓடினார்கள். காட்டுப் பன்றிகளும் மான்மரைக் கூட்டங்களும் நெருங்கிக்கூடி நிற்கும் இடங்களை, அவற்றின் அடிச்சுவடு கொண்டு வேவுகாரர்கள் அறிந்து சொன்னதும் வேட்டை வேடர்கள் பலபுறமும் பாய்ந்து ஓடினார்கள். மரங்களை வெட்டிச் சாய்த்து வழி உண்டாக்கி வார்வலைகளைக் கட்டி நாலாபுறமும் வலைகளை விரித்துக் காவல் வைத்து, அவர்கள் திண்ணனார் முன்பு மறுபடியும் வந்து சேர்ந்தார்கள்.

திண்ணனார் மற்ற வில் வேடர்களோடு கூடி, வேட்டையாட முற்பட்டார். மேகங்கள் அலையும் மலை வழியில் மிருகங்களைக் கவ்விப் பிடிப்பதற்காக வேட்டை நாய்களை எட்டுத் திசைகளிலும் ஓடவிட்டார்கள். பிறகு வில்களோடு வேடர்கள் சூழ்ந்துகொண்டு காவல் புரியும் கானகப் பிரதேசத்தினுள் திண்ணனார் நுழைந்தார். துடி, பம்பை

முதலிய வாத்திய ஒலிகளை வேடர்கள் முழக்கியும் கைகளைப் பலமாகத் தட்டியும் பதுங்கியிருந்த மிருகங்களை எழுப்பினார்கள். அப்போது காட்டுப் பன்றிகள், கரடிகள், கலைமான் கூட்டங்கள், காட்டெருமைகள், யானைகள், கொடும் புலிகள், மரைகள் முதலான பல மிருகங்கள் வெகுண்டு எழுந்து பாயவே அவற்றை வேடர்கள் எதிர்த்துத் தள்ளி, வில்லம்புகளினால் கொன்றொழித்தார்கள். கால்களோ, இடைகளோ தலைகளோ வெட்டுண்டு பல கலைமான்கள் உருண்டு விழுந்தன. அம்புகள் பாய்ந்து குடல்கள் கிழிந்து காட்டு மரைகள் பல மடிந்து விழுந்தன. சரமாரியான அம்புகள் உடலை ஊடுருவிடப் பல மதயானைகள் நிமிர்ந்து சாய்ந்தன.

வலிமையான அம்புகளால் குத்துண்டு பலவித மான்கள் உடல் துள்ளி விழுந்தன. சில காட்டுப் பன்றிகள் வெங்கணைப்பட்டு பிடர் கிழிபட்டு, அம்புகள் ஊடுருவிய பெரிய வாய்கள் செந்தி உமிழ, உதிர வெள்ளத்தில் கருமலையெனப் புரண்டன. அவற்றைச் சில புலிகள் கவர்ந்து செல்லும்போது, அவற்றின் அம்புகள் புலியின் பற்களுக்கிடையிலும் ஊடுருவிப் பெரும் சினம் மூட்டின. வேடர்கள் விட்ட சில அம்புகள் மான்களைப் பின்தொடர்ந்து பாய்ந்து ஊடுருவிச் சென்று நெற்றியைக் கிழித்துக்கொண்டுபோய் முன்னே ஓடிவரும் மான்களையும் முட்டிக் கொன்றன. அம்பின் ஒரு பகுதி ஒரு யானையிலும் மற்றொரு பகுதி ஒரு சிங்கத்திலும் தைத்து நிற்கும் காட்சிகளும் தென்பட்டன. பல பக்கங்களிலும் கட்டியிருந்த வலைகள் அறும்படியாக ஓடிவரும் மிருகங்களை வேட்டை நாய்கள் எதிர்த்துத் தடுத்தன. அந்தக் காட்சியானது பிறப்பு இறப்புகளுக்கு உட்படுத்தும் நல்வினை தீவினையாகிய வலையிடை அகப்பட்டுச் சுழன்று நிற்பவர்கள், நன்னெறியில் சேரமுயலும் மனதை அவ்வாறு செல்லாது தடுத்துத் தம் வசப்படுத்தும் ஐம்பொறிகளின் நிலையை ஒத்திருந்தது. எதிர்த்து வரும் கொடிய மிருகங்களையும் கொன்றொழிக்கும் கொடிய வேடர்கள்தான் என்றாலும் அவர்கள் வேட்டையாடும்போது யானைக் குட்டிகளையும் கருவுற்றிருந்த பெட்டை விலங்குகளையும் மட்டும் கொல்லாமல் விட்டுவிட்டார்கள். அது அவர்களுடைய வேட்டை தர்மமாகும்.

இவ்விதமாக வனத்தில் அவர்கள் வேட்டையாடி வரும் போது கரிய மேகம் போன்ற நிறத்தையும், மதயானையும் அஞ்சத்தக்க இடிமுழக்கம் போன்ற குரலையும் கொண்ட ஒரு காட்டுப்பன்றி தன் கண்களிலே கனல் கக்க, வலைகளை அறுத்துக்கொண்டு, விருட்டெனக் கிளம்பி வேகமாக ஓடியது. திண்ணனார் அந்தப் பன்றியைப் பின் தொடர்ந்து அது சென்ற வழியிலேயே அதைத் துரத்திக்கொண்டு தனியாக ஓடினார். திண்ணனாரின் மெய்க்காப்பாளராகிய நாணன், காடன் என்ற

இரு விடலைப் பிள்ளைகள் கொலைவில் ஏந்தியபடி அவரைப் பின்தொடர்ந்து ஓடிவந்து திண்ணனாரோடு சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் எய்த அம்புகளுக்கும், வேட்டை நாய்களுக்கும் தப்பியவாறு அந்தக் காட்டுப் பன்றியானது நெடுந்தூரம் ஓடி, நீண்ட மலைச்சாரலின் வழியே மர நிழல்களில் புகுந்து சென்றது. பிறகு அந்த மலைச்சாரலில் உள்ள ஒரு சோலையை அடைந்து அங்கு மரங்களின் செறிவில் விழி சுழன்று அதற்குமேல் ஓட முடியாமல், வலி மையிழந்து சோர்வுற்று நின்றது. திண்ணனார் அந்தப் பன்றியின்மீது இனி அம்புகளை எய்ய விரும்பாமல், தன் உடைவாளை உருவிப் பிடித்து ஓங்கிக்கொண்டு அந்தக் காட்டுப் பன்றியை நெருங்கிச் சென்று ஒரே குத்தாகத் குத்தி வெட்டினார். உடனே அந்தப் பன்றி உடல் முறிந்து கீழே விழுந்தது. திண்ணனாரின் கத்திக் குத்தினால் இரு துண்டாக விழுந்த அந்த வராகத்தைக் கண்ட நாணன், தன் தோழனைப் பார்த்து, ''காடனே! எவ்வளவோ வேட்டைப் பயிற்சிபெற்ற நாம் இன்று நெடுங்காத தூரம் ஓடி வந்தும் ஒரு பயனுமின்றி இளைத்தோம்! முதன் முதலாகக் கன்னி வேட்டையாட வந்த நம் திண்ணனார்தானே இந்தப் பன்றியைக் கொன்றார். அச்சோ!'' என்று வியந்தான்.

பிறகு அவர்கள் இருவரும் திண்ணனாரின் வீரச் செயலைப் பாராட்டிவிட்டு, ''வெகுதூரம் நாம் ஓடிவந்ததால் மிகுந்த பசியுண்டாகிவிட்டது! தாகமும் எடுக்கிறது! அதைப் போக்கிக் கொள்ள இந்தப் பன்றியை நெருப்பிலிட்டு வாட்டி வதக்கி தின்போம். பிறகு பசி தணிந்து தண்ணீரும் குடித்துவிட்டு மெல்ல வேட்டைக் காட்டிற்குத் திரும்பிச் செல்வோம்!'' என்று கூறினார்கள்.

திண்ணனார் அவர்களுடைய விருப்பத்திற்கு இசைந்து ''இங்கே நல்ல தண்ணீர் எங்கே உள்ளது?'' என்று கேட்டார். அதற்கு நாணன், ''அதோ தெரியும் தேக்கு மரத்திற்கு, அப்பால் சென்றால் நீண்ட குன்று ஒன்று இருக்கிறது. அந்த உயர்ந்த மலைக்குப் பக்கத்தில் 'பொன்முகலி' என்னும் ஆறு ஓடுகிறது. அதன் தண்ணீர் ஜில்லென்று குளிர்ச்சியாக இருக்கும்!'' என்று கூறினான்.

திண்ணனார் தம் இரு தோழரையும் நோக்கி, ''நாம் அங்கேயே போகலாம். நீங்கள் இந்தப் பன்றியை எடுத்துக் கொண்டு வாருங்கள்,'' என்று சொல்லிவிட்டு அந்த ஆற்றை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். அரைக்காத தூரம் சென்றதும் சிவபிரான் எழுந்தருளியிருக்கும் திருக்காளத்தி மலையின் சாரலிலுள்ள சோலையைக் கண்டார். உடனே அவர் தம்

அருகில் வரும் நாணனைப் பார்த்து, ''நாணனே! நமக்கு முன் தோன்றும் அந்தக் குன்றுக்குப் போவோம்!'' என்றார். அதற்கு நாணன், ''அந்தக் குன்றை நீர் பார்வையிடப் போனால் அங்கே நல்ல காட்சியைக் காணலாம். ஆகாயத்தைத் தொடும் அந்தத் திருக்காளத்தி மலைமீது ''குடுமித் தேவர்'' இருப்பார். அவரை நாம் கும்பிடலாம்!'' என்றான்.

மூவரும் மலையை நோக்கிச் சென்றார்கள். ''என்ன நாணா! மலையை நெருங்க நெருங்க என்மீதுள்ள ஏதோ ஒரு சுமை குறைவது போல் தோன்றுகிறதே! ஏதோ ஒரு புதுவிதமான ஆசை மேன்மேலும் பொங்கி எழுகிறது; உள்ளமும் வேறொரு விருப்பம் கொண்டு விரைந்து செல்கிறது. குடுமித்தேவர் இருக்கும் இடம் எங்கே? சீக்கிரம் போ!'' என்றார்.

மூவரும் வேகமாக நடந்து பொன்முகலியாற்றை அடைந்தார்கள். மூங்கிலின் முத்துக்களையும், அகிற் துண்டுகளையும், சந்தனக் கட்டைகளையும், மலையில் விளையும் நவமணிகளையும் தன் அலைக்கரங்களில் திரட்டிவந்து மணற் குன்றுதோறும் தேக்கி வைக்கும் அந்த நதி அவர்களைப் பார்த்துச் சிரித்தது. அதன் கரையின் ஒருபுறமுள்ள ஒரு மரத்தின் நிழலில் பன்றியின் உடலைக் கொண்டு போய்ப் போட்டார்கள். திண்ணனார் காடனைப் பார்த்து, ''நாங்கள் மலையேறிச் சென்று குடுமித் தேவரை தரிசித்துவிட்டு வருகிறோம். நீ இங்கிருந்து தீக்கடைக் கோலால் தீயை உண்டாக்கு!'' என்று சொல்லிவிட்டு நாகனுடன் மலைநோக்கிப் புறப்பட்டார்.

சிந்தை தெளிவுறும் திண்ணனார் பொன்முகலி ஆற்றின் தெளிநீரில் இறங்கி அதனூடே சென்று, அவ்வாற்றைக் கடந்து திருக்காளத்தி மலையின் அடிவாரத்தை அடைந்தார். இன்னதெனத் தெரியாத ஒரு களிப்பினால் பெருமகிழ்வு பொங்கிட அம்மலையைக் கண்டார். அப்போது கதிரவன் உச்சி வானத்தை அடைந்தான். காளத்தி மலையுச்சியில், காண்போரைக் கவர்ந்திழுக்கும் தெய்வ மயக்கு போல் ஓர் உணர்வு தோன்றியது. அம்மலையுச்சியில் கடலலைபோல் முழங்கும் பஞ்சதேவ துந்துபி ஒலியும் கேட்டது. உடனே திண்ணனார், ''நாணா! இந்த ஓசை எங்கிருந்து வருகிறது?'' என்று கேட்டார்.

அதற்கு நாணன், ''அந்த ஓசை இந்த மலையில் நிறைந்திருக்கும் பெரிய தேன் அடைகளைச் சூழ்ந்து மொய்க்கும் மலைத் தேனீக்களின் ரீங்காரம்!'' என்றான்.

கொலைத் தொழில் புரியும் கொடுமையான வேட்டுவர் குலத்தில் திண்ணனார் பிறந்தவர் என்றாலும் முற்பிறப்பில் அவர் செய்த தவப்பேறு முடிவற்ற இன்பமயமான ஓர் அன்பு வழியை எடுத்துக் காட்டியது. அந்த அன்பு வழியிலே அளவிலாத ஆர்வம் பொங்கியெழுந்து பெரும் காதல் கனிந்து பெருக, நெஞ்சு உருகி, எலும்புகளும் உள் உருக, பெருவிருப்பம் உந்தித் தள்ளத் திண்ணனார் குளுமையான அத்திருமலையை நோக்கிச் சென்றார். நாணனும் அன்பும் முன்னே வழிகாட்டிச் செல்லத் திண்ணனார் பின்தொடர்ந்து மலைப்படிகளில் ஏறிச் சென்றார். ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல் முதலியவற்றின் வளர்ச்சிக்குக் கருவியாக உள்ள முப்பத்தாறு தத்துவங்கள் என்னும் மலைப்படிகளின் வழியாக, சக்தியே வடிவமான சிவத்தை அடையும் சிவயோகியைப் போலத் திண்ணனார் அந்த உயர்ந்த மலைமீது ஏறிச் சென்றார்.

அந்த மலைமீது சூழ்ந்திருக்கும் சிவபெருமானைத் திண்ணனார் காண்பதற்கும் முன்னதாக சிவபெருமானே அவரைத் திருக் கண்ணோக்கஞ் செய்தார். அத்திருவருள் ஒளி நிழலின் கீழ், வேடர் கோமான் ஒளிமயமான அன்பு உருவம் பெற்றார். அவர் பிறப்பில் தங்கிய முன்னைச் சார்புகள் யாவும் அவரை விட்டு அகன்றன.

அந்நிலையில் காளத்தி மலையின் தனி முதல்வராகிய குடுமித் தேவரைக் கண்டார். கண்டதும் பேருவகை பேரன்பாகப் பொங்கியெழுந்தது. அந்த அன்பின் வேகத்தால் உந்தித் தள்ளப்பட்டு, மோகத்தோடு ஓடிச் சென்று, காளத்தி நாதரைக் கட்டித் தழுவினார். உச்சி மோந்து நின்றார். நீண்ட நேரம் பெருமூச்செறிந்தார். மெய்சிலிர்த்து உடல் முழுவதும் புளகாங்கிதம் பொங்கியது. கண்கள் விரிந்து மலர்ந்து ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பாய்ந்தது. இவர் அடியேனுக்கு இங்கே அகப்பட்டார்! அச்சோ! என்று தாமே உளமகிழ்ந்து கூறி, ஆனந்தக் கூத்தாடினார்.

அன்பே வடிவமான திண்ணனார், சிவலிங்கத்தைப் பார்த்து, ''ஐயோ! யானை, கரடி, வேங்கை, சிங்கம் முதலான கொடிய விலங்குகள் திரியும் கானகமாயிற்றே இது? இந்த வனாந்திர மலையிலே வேட்டுவச் சாதியினரைப்போல ஒரு துணையுமின்றி நீர் மட்டும் தனித்திருப்பது தகுமோ?'' என்று நைந்து நைந்து மனம் உருகினார். அவர் கையிலிருந்த வில்லும் கீழே விழுந்து விட்டது. அதைக் கூடக் கவனியாமல், சிவ லிங்கத்தின் மீதிருந்த அடையாளங்களைக் கண்டு, ''இவருக்கு இந்தப் பச்சிலையோடு பூவுமிட்டு நீர் வார்த்து இந்த அனுசிதம் செய்தவர் யாரோ?'' என்றார். அப்போது அருகில் நின்ற நாணன், ''இது எனக்குத் தெரியும்! முன்பு ஒருநாள், உம்

தந்தையாரோடு வேட்டையாட வந்தபோது, இந்தக் குன்றுக்கு வந்தோம்! அப்பொழுது ஒரு பிராமணன் இவர் மீது நீரை வார்த்துக் குளிப்பாட்டி, பச்சிலைகளையும் மலர்களையும் சூட்டி, உணவையூட்டி, ஏதோ சில மொழிகளை (மந்திரங்களைச்) சொல்லி இந்தக் காரியத்தை அன்று செய்தான். இன்றும் அவன்தான் இதைச் செய்திருக்க வேண்டும்!'' என்றான்.

அதைக் கேட்ட திண்ணனார், 'இவைகள்தாம் திருக்காளத்தி இறைவருக்கு இனியவை போலும்!' என்று நினைத்து அவற்றைக் கடைப்பிடித்துக் கொண்டு அவ்வாறே செய்ய உறுதி கொண்டார். அண்ணலைப் பிரியமாட்டாத அளவில் அன்பு நீண்டு பெருகியது. 'இவர் தன்னந்தனியராய் இருக்கிறார். இவர் உண்பதற்கு இறைச்சியைக் கொண்டு வந்து ஊட்டுபவரும் யாருமில்லை! இவரைப் பிரிந்து செல்லவும் என்னால் முடியவில்லை! என்ன செய்வேன்? பிரிந்து சென்றால்தானே, இவர் உண்ணுவதற்கு இனிமையான நல்ல இறைச்சியை நான் தேடிக் கொண்டுவர முடியும்?' என்று எண்ணினார். பிறகு, சிவபிரானுக்கு இறைச்சியைக் கொண்டு வருவதற்காகச் சிறிது தூரம் போவார். சிறிதும் பிரிய மனமின்றி மீண்டும் வருவார். சிவலிங்கத்தைக் கட்டித் தழுவுவார். ''சீக்கிரம் இறைச்சி கொண்டு வருகிறேன்!'' என்று திரும்பச் செல்வார். சிறிது தூரம் சென்றதும் அப்படியே நின்று பேரன்போடு திரும்பிப் பார்ப்பார். இளங்கன்றைவிட்டு அகலும் தாய்ப் பசுவைப்போலத் தத்தளிப்பார். ''நாதனே! நீர் உண்பதற்கு நானே சென்று மிருதுவான நல்ல இறைச்சியைத் தேடித் தெரிந்து அதை இங்கே கொண்டு வருவேன்!'' என்பார். ''ஆனால் நான் போனபிறகு யாரை உறவாகக் கொண்டு நீர் இங்கு இருப்பீர்? தன்னந்தனியாக இருப்பீரே! உம்மைப் பிரிந்து போக மாட்டேன்! ஆனால்...நீர் பசியோடு இருக்கிறீரே! அதைப் பார்த்துக் கொண்டு என்னால் இங்கே நிற்கவும் முடியவில்லையே?'' என்று கண்ணீர் பெருக்கினார். பிறகு ஒருவாறு போய்வரத் துணிந்தும் புறப்பட்டார். வில்லையும் அம்புகளையும் கையில் எடுத்துக்கொண்டு குடுமித் தேவரை கைகூப்பி வணங்கி விட்டு இறைச்சி கொண்டுவர வேகமாகச் சென்றார்.

மலையை விட்டுக் கிளம்பிய திண்ணனார், நாணன் பின் தொடர, அன்பின் வழியே இறங்கிச் சென்று பொன்முகலி யாற்றங் கரையை அடைந்து அங்குள்ள மலர்ச் சோலையினுள் புகுந்தார். அங்கு காடன் அவரை எதிர்கொண்டழைத்து, ''ஐயா! உம் குறிப்புப்படியே நான் தீக்கடைந்து வைத்திருக்கிறேன்! கொம்புப் பன்றியின் உறுப்புகளையெல்லாம் உமது அடையாளத்தின்படி சரிபார்த்துக் கொள்ளும்! நாம்

சீக்கிரம் திரும்பிப் போகவேண்டுமே? இன்று நீர் இவ்வளவு நேரம் கடந்து வந்தது ஏன்?'' என்று கேட்டான்.

அவனைப் பார்த்து நாணன், ''காடா! இங்கே மலைமீதிருக்கும் குடுமித் தேவரை நம் திண்ணன் பார்த்தான். பார்த்தவுடனே அவரைக் கட்டியணைத்துக் கொண்டான். மரப் பொந்தைப் பற்றிக் கொண்டு விடாத வலிய உடும்பைப்போல் அவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டே, அவரை விட்டு நீங்க முடியாமல் தத்தளித்தான். இப்போது அவருக்கு இறைச்சி கொண்டு செல்வதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறான். இவன் நம் குலத் தலைமையை விட்டு விட்டான். அந்தத் தேவரின் நலத்திற்கே அடிமையாகி விட்டான்!'' என்று கூறினான்.

''திண்ணா! நீ என்ன காரியம் செய்தாய்? உனக்குத்தான் இது என்ன மயக்கம்? நீ எங்கள் குலத்தலைவன் இல்லையோ?'' என்று காடன் கேட்டான்.

திண்ணனாரோ அவன் முகத்தையும் பாராமல் அவன் பேச்சையும் கேளாமல், மாபெரும் பன்றியின் இறைச்சியை நெருப்பில் வாட்டி வதக்கினுர். அப்பன்றியின் நல்ல தசைப் பகுதிகளைத் தனித்தனியாக அம்பினால் அரிந்து, கோலிலே கோர்த்துத் தீயிலே காய்ச்சிப் பக்குவமாக வேக வைத்தார். அவற்றில் நல்ல சுவையுள்ளவற்றை மட்டும் தேர்ந்தெடுப்பதற்காக இறைச்சித் துண்டுகளையெல்லாம் தம் வாயில் போட்டு, அதுக்கிச் சுவைத்து ருசி பார்த்தார். சுவையுள்ளவற்றைத் தமது வாயில் இருந்து எடுத்து சருகிலைகளால் தைக்கப்பட்ட இலைக்கலத்தின் மீது ஒவ்வொன்றாக அடுக்கி வைக்கலானார். அருகில் நின்ற அவருடைய தோழர்களான நாணனும் காடனும் அவரையும் அவருடைய செயல்களையும் விசித்திரமாகப் பாவித்துக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இருவரும், ''இவன் குடுமித் தேவரைக் கண்டபோது கொண்ட மயக்கத்தை விட இப்போது அதிக மயக்கம் கொண்டிருக்கிறானே! இவனுக்குப் பித்த மயக்கம் முதிர்ந்து விட்டதா என்ன? நெருப்பில் வெந்த அருமையான இறைச்சியை அவன் பசியோடு இருந்தும் தன் வாயில் போட்டு விழுங்காமல், வெறுமனே சுவைத்துப் பார்த்துவிட்டு, உமிழ்ந்து அடுக்கி வைக்கிறானே? தன் பசியைக் குறித்து இவன் நம்மிடம் ஒன்றுமே பேசவும் இல்லை! பசியோடு இருக்கும் நமக்கும் இறைச்சியில் ஒரு பங்கு தர வேண்டும் என்பதையும் இவன் உணரவில்லை! சுவைப்படாத மற்ற இறைச்சியை புறத்தே எறிகிறான். இவன் தெய்வமருள்தான் கொண்டிருக்கிறான். தெய்வப்பித்து இவன் தலைக்கு

ஏறியிருக்கிறது. அதைத் தீர்ப்பதற்கு ஒரு வழியையும் நாம் அறியோம். நாம் ஊருக்குப்போய் நாகனிடம் தெரிவித்து தேவராட்டியை அழைத்துக் கொண்டு வருவோம்! தேவராட்டி வந்துதான் இவனது இந்தத் தெய்வ மயக்கத்தைத் தீர்க்க வேண்டும். ஆகவே, நாம் வேட்டைக் காட்டிற்குத் திரும்பிச் சென்று அங்குள்ள வேட்டையாட்களையும் அழைத்துக் கொண்டு போவோம்!'' என்று தமக்குள் முடிவு செய்து கொண்டு அங்கிருந்து போய் விட்டார்கள்.

அவர்கள் இருவரும் தம்மை விட்டுப் பிரிந்துசென்றதைக் கூடத் திண்ணனார் கவனிக்கவில்லை. அவர் அவசர அவசரமாக எம்பெருமானுக்கு அமுதூட்டுவதற்காக இறைச்சியை இலைக்கலத்தில் அடுக்கிக் கொண்டார். திருமஞ்சனமாட்டுவதற்காக பொன்முகலி ஆற்றின் நன்னீரைத் தம் வாயில் முகந்து கொண்டார். இறைவனுக்குச் சூடுவதற்காகத் தூய்மையான மலர்களையும் இலைகளையும் பறித்துத் தமது குடுமியினுள் நெருக்கி வைத்துக் கொண்டார். ஒரு கையில் வில்லையும் அம்புகளையும் மற்றொரு கையில் ஊனமுதுள்ள இலைக்கலத்தையும் எடுத்துக் கொண்டார். ''இனிமையான எம் இறைவர் மிகவும் பசித்திருப்பாரே!'' என்று அவர் இரங்கி மிகவும் ஏக்கமுற்றுத் திருக்காளத்தியப்பரின் திருமலைமீது வெகு விரைவாக ஏறிச் சென்றார்.

அங்கு சிவனார் திருமுடிமீதிருந்த பழைய மலர்களை திண்ணனார் தம் கால் செருப்பினால் அகற்றினார். தம் வாயினுள் அடக்கிக்கொண்டு வந்திருக்கும் மஞ்சன நீரைப் பேரன்போடு உமிழ்வதுபோலச் சிவனாரின் திருமுடிமீது தெளித்தார். தம் குடுமியில் சுமந்து வந்த பள்ளித் தாமத்தை ஆண்டவனுக்கு வணங்கிச் சாத்தினார். ஊனமுதை இறைவனுக்கு முன்னே இலையில் பரிமாறி வைத்து, ''ஆண்டவனே! இறைச்சியின் கடுமையான தசைகளை நானே பொறுக்கியெடுத்துக் கோலில் கோர்த்துத் தீயில் வேகவைத்து நன்றாகப் பதப்படுத்தினேன். அது மட்டுமல்ல, என் பல்லி னாலேயே அவற்றை அதுக்கி, என் நாவின் பழக்கத்தாலே இனிமையான ருசி பார்த்துக்கொண்டு வந்தேன்! அந்த இறைச்சிகளை இதோ இலையில் பரிமாறி உம் திருமுன்னர் படைத்திருக்கிறேன். இவை மிகவும் சுவையாக இருக்கும்! இதை உண்டு அமுது செய்தருளும்!'' என்று இனிமையாகச் சொல்லி ஆண்டவனுக்கு அமுது செய்வித்தார். அப்போது, திருகாளத்தி மலையினாருக்கு இனிய நல்லிறைச்சி இன்னமும் வேண்டும்! என்று பகலவனான சூரியன் பன்னெடும் கரங்கள் கூப்பி வணங்கி அஸ்தமனமானான். அந்த மாலைப் பொழுது அணைந்ததும் திண்ணனார் திகைத்து, ''இரவு வந்து சேர்ந்தது! இனிக் கொடிய மிருகங்கள் இங்கு வந்து திரியுமே,

அவை ஐயனுக்குத் தீங்கு புரியாமல் காக்க வேண்டும்!'' என்று பயந்தார். அதனால் கையிலே வில்லேந்தி, நெஞ்சிலே தூய அன்பும் ஏந்தி, தூக்கம் கொள்ளாமலும் சிவனாரை விட்டு நீங்காமலும் அருகிலே நின்று இரவு முழுவதும் காவல் புரியலானார். தவமுனிவர்களுக்கும் தேவர்களுக்கும் காண்பதற் கரியவரான சிவபெருமானை ஆர்வம் பெரு திண்ணனார் ஆறாத அன்போடு நேரில் தன் கண்களால் பார்த்துக் கொண்டு நீண்ட இராப்பொழுது நீங்கும் வரை தூங்காமல் நின்றார்.

அந்த இரவில் மூங்கில் சொரியும் முத்துக்களின் பசுமையான நிலவொளி ஒருபுறம் பொங்கி நின்றது. பாம்புகள் உமிழும் சிவந்த மாணிக்கங்களின் வெப்ப ஒளி ஒருபுறம் மொய்த்திருந்தது. ஆங்காங்கேயுள்ள குகைகளில் இருள் ஒதுங்கி ஒடுங்கியது. ஜோதி மரங்கள் தீப மரங்கள் போல் செந்தழல் ஒளி வீசின. ஐம்புலன்களை அடக்கிய முனிவர்களின் அருட்பெரும் ஜோதியும் வீசியது. இவ்வொளிகளினால் அத்திருக் காளத்தி மலையில் இருளே தெரியாமல், அங்கே இரவு என்றே ஒன்றில்லையென்று தோன்றியது. நடுச்சாமம் கழிந்து பொழுது புலரும் நேரமுமாயிற்று. பறவைகள் கிளம்பும் பேரொலிகளும் கேட்டன. இரவு முழுவதும் கண்ணுறங்காமல் காவல் புரிந்த திண்ணனார் இனி ஆண்டவனுக்கு இறைச்சியுணவு கொண்டுவர விரும்பினார்.

அதற்காகப் பன்றி, மான் முதலான மிருகங்களை அதிவிரைவில் சாமர்த்தியமாக வேட்டையாடி வரலாமென்று அவர் தீர்மானித்து, கையில் வில்லை எடுத்துக்கொண்டு வள்ளலைத் தொழுதுவிட்டுப் புறப்பட்டார். அது சரியாக உருவம் தெரியாத விடியற்சாம நேரம்! மொய்த்திருக்கும் இருளை வாங்கி ஒளி முகம் காட்டும் கதிரவன் அன்று திண்ணனார் செல்லும் காட்டில் விலங்கு வேட்டைக்கு வழி காட்டுவான்போல் கதிர்க்கை காட்டி உதய வானத்தில் எழுந்தான்.

அப்பொழுது மலைக் கொழுந்தான திருக்காளத்தி சிவபெருமானை வழிபடுவதற்காக சிவகோசரியார் என்னும் தவமுனிவர் அத்திருமலைக்கு வந்தார். அவர்தான் தினந்தோறும் திருக்காளத்தி நாதருக்கு ஆகம விதிப்படி அருச்சனை செய்பவர். அவர் வழக்கம்போல் பூஜை செய்யப் புதுப் பூவும் நீரும் பிறவும் கொண்டுவந்தார். அவர் ஆதிசைவ மரபினர். இறைச்சி யுணவுகளை அருவெறுப்பவர்! சிந்தையில் நியமத்தோடு வந்த அவர் இறைவனின் முன்னால் வெந்த இறைச்சிகளும் எலும்புத் துண்டுகளும் இறைந்து கிடப்பதைக் கண்டார். உடனே அவற்றை மிதியாது, தாண்டிக் குதித்து

ஓடினார். ''ஓ, கெட்டேன்! இந்த அனுசிதத்தை இறைவனின் சந்நிதியில் செய்தவர் யார்?'' என்று மனம் வருந்தலானார். ''இப்படி இறைவன் சந்நிதியின் முன் இறைச்சியுண்பதற்கு வேடர்கள்தான் சிறிதும் அஞ்சமாட்டார்கள். அதற்காக மனம் கூசவோ நோகவோ மாட்டார்கள். ஆகவே அவ்வேடப் புலையர்கள்தான் இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும். தேவதேவரே! உமது திருமுன்பு இந்த அனுசிதத்தை அவர்கள் செய்துவிட்டுப் போகலாமா? இவ்வாறு நிகழும்படி தேவரீர் திருவுள்ளம் கொள்ளலாமா?'' என்று பதறினார். கண்ணீர் விட்டு அழுதார். கீழே விழுந்து கலங்கினார்.

பிறகு, ''திருமலைப் பெருமானுக்குப் பூஜை செய்யாமல் இனியும் நான் இருக்கலாமோ?'' என்று நினைத்து இறைந்து கிடந்த இறைச்சித் துண்டங்களையும் எலும்புகளையும் தேக்கிலைக் கல்லையும் கோயிலின் விளக்கு மாற்றால் கூட்டித் தள்ளி அப்புறப்படுத்தினார். அங்கே காணப்பட்ட செருப்படிச் சுவடுகளையும் நாயின் அடிச் சுவடுகளையும் திருவலகைக் கொண்டு தூய்மைப்படுத்தினார்.

பிறகு, அவர் பொன்முகலியாற்றுக்குச் சென்று நீராடி விட்டு வேகமாகத் திரும்பி வந்தார். இறைவன் சந்நிதியில் நடந்த அபச்சாரத்தைப் போக்கப் பிராயச்சித்தம் செய்து, இறைவருக்குப் பூசனை தொடங்கினார். திருமஞ்சன நீராட்டுதல், பூக்களால் அருச்சித்தல் முதலான பூஜை முழுவதையும் சிவகோசரியார் முறைப்படித் தம் வழக்கம்போல் செய்து முடித்து முழுமுதற் பெருமானின் திருவடிகளை வணங்கினார். குடுமிநாதரை அவர் கும்பிட்டெழுந்து, 'தனி முதலான சிவபெருமானே!' என்று பன்முறை போற்றி, வேத முறைப்படி மந்திரங்கள் ஓதித் துதித்து பிறை சூடிய பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு, தணிந்த மனத்தோடு அத்தவ முனிவர் தம்முடைய தபோவனத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

அத்திருமலையின் பக்கத்திலுள்ள காட்டிலே இறைச்சி தேடச் சென்ற திண்ணனாரோ, அங்குள்ள பெருமலைகளின் இடைச்சரிவில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு பெரிய பன்றியை வேட்டையாடிக் கொன்றார். பிறகு அவர் ஒருபுறம் ஒளிந்து நின்று மிருகங்களைப்போல் கூப்பிடும் பயிலோசையைக் கொண்டு கலைமான்களை அழைத்து அவற்றின்மேல் அம்புகளை எய்து கொன்றார். மரை முதலான விலங்குகளின் காலடிச் சுவடுகளைப் பின்பற்றிச் சென்று அவற்றையும் அம்பெய்து கொன்றார். வெய்யில் ஏறி வெங்கதிர் முற்றி நடுப்பகலுமாயிற்று. திண்ணனார் தம் வேட்டைத் தொழிலை

முடித்து, கொன்ற மிருகங்களையெல்லாம் ஒரு மரத்து நிழலில் கொண்டு போய்ச் சேர்த்தார்.

அதன் பிறகு திண்ணனார், தம்முடைய பெரிய உடைவாளை உருவித் தீக்கடைக் கோலை வெட்டினார். கொம்புத் தேனை எடுத்து ஒரு கல்லையில் நிறையக் கொண்டு வந்தார். விறகுகளை முறித்து அடுக்கி, நெருப்புக் கடையும் அரணியால் தீ மூட்டினார். தாம் கொண்டுவந்த மிருகங்களைக் கூர்மையான அம்பின் நுனியால் குத்தியும் கொத்தியும் கொழுப்பு மிகுந்த பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, கொழுந்து விட்டெரியும் தீயில் இட்டுப் பக்குவமாக வதக்கினார். அம்பின் நுனியினாலேயே அவற்றைச் சிறு துண்டுகளாக்கியும் கீறியும் அரிந்தெடுத்தும் ஒரு நீண்ட கோலில் கோர்த்து நெருப்பில் நன்றாகக் காய்ச்சினார். அவற்றைத் தூய திருவமுதாக்க விரும்பி, ஒவ்வொன்றாக எடுத்துத் தம் வாயிலே போட்டுச் சுவைத்துப் பார்த்து, எம்பெருமானுக்கென்று தேர்ந்தவற்றைத் தனியாக எடுத்துக் கல்லையில் வைத்தார். அவற்றின்மீது தேன் பிழிந்து கலந்தார். இவ்வாறு ஊனமுது ஆக்கியதும் பூசனைக்குரிய மலர்களைத் தன் குடுமியிலும் புனல் நீரைத் தன் வாயிலும் முன்போலத் தாங்கிக் கொண்டு, விரைவாக இறைவனின் சந்நிதியை அடைந்தார்.

அங்கு அவருக்கு முன்னால் சிவகோசரியார் பூசித்துச் சென்ற மலர்களை இறைவரின் திருமுடியிலிருந்து திண்ணனார் முன்போலவே தமது செருப்புக் காலால் அகற்றினார். பிறகு முன்போலவே தம்முடைய முறைப்படி பூஜை செய்து முடித்து இறைச்சியாகிய அமுதைக் கல்லையுடன் எம்பெருமானின் முன்பு வைத்து, ''இது நான் நேற்று கொண்டுவந்த ஊனமுதத்தைக் காட்டிலும் மிகவும் நன்றாக இருக்கும்! பன்றியின் இறைச்சியோடு இன்று மான், கலை, மரை, காட்டெருமை என்பனவற்றின் இறைச்சியும் கலந்திருக்கிறது. நானே சுவைபார்த்துச் சுவையானவற்றை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்தேன். இதில் தேனும் கலந்திருப்பதால் இது தித்திப்பாகவும் இருக்கும்!'' என்று கூறி அன்போடு காளத்தியப்பருக்குத் திருவமுது செய்வித்தார். இவ்வாறு திண்ணனார் தம்முடைய முறைப்படியே திருக்காளத்தி நாதருக்குத் தினந்தோறும் ஒப்பரும் பூஜை செய்து வந்தார். இரவு முழுவதும் இறைவரின் திருமுன் துயிலாது காவல் நின்று கொண்டிருப்பார். பகற்பொழுதில் இறைவருக்கு இறைச்சியுணவு படைப்பதற்காகவே, வேட்டையாடி வருவார். அந்தணரான சிவகோசரியாரும் வழக்கம்போல, தினந்தோறும் அதிகாலையில் அங்கு வருவார். அங்கு வனவேடர் செய்துவிட்டுப் போயிருக்கும் பூஜை முறைகளைக் கண்டு மிகவும் மனம் வருந்துவார். பிறகு

அவற்றைத் தீமையென அருவெறுத்து அப்புறப்படுத்தி விட்டுத் தூய்மைப்படுத்தி, சிவாகம முறைப்படி அர்ச்சித்து பூஜை முடித்துச் செல்வார்.

இது இவ்விதமிருக்க, திண்ணனாரின் தோழர்களான நாணனும், காடனும் தங்கள் நாட்டிற்குச் சென்று வன வேட்டையின் போது நிகழ்ந்தனவற்றை திண்ணனாரின் தந்தையான நாகனிடம் கூறிவிட்டார்கள். திண்ணனாரின் செயலைக் குறித்து நாகன் மிகவும் மனம் வருந்தினான். ஊனும் உறக்கமும் இல்லாமல் மனம் அலைந்து தேவராட்டியையும் அழைத்துக் கொண்டு, திண்ணனார் இருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தான். அவர்கள் திண்ணனாரின் மனத்தைப் பற்பலத் திறத்தினாலும் பேதித்துப் பார்த்தும் திண்ணனாரைத் தங்கள் வழிக்குக் கொண்டுவர முடியாமல் கைவிட்டுச் சென்றனர். இரசகுளிகையினால் இரும்பு பொன் ஆகியதைப் போல், திருக்காளத்தி முதல்வரது நோக்கத்தினால் உடற்பற்றும் இருவினையும் மும்மலமும் நீங்கி அன்புருவப் பிழம்பாகத் திரியும் திண்ணனார் உலகியல் வேடர்களின் கருத்துக்குக் கட்டுப்படுவாரோ?

இவ்வாறு திருக்காளத்திக் குடுமித் தேவருக்கு வனவேடரின் சொந்தமுறை வழிபாடும் சிவகோசரியாரின் ஆகமமுறை வழிபாடும் கலந்து நிகழ்ந்து கொண்டே வந்தன. ஐந்தாம் நாளன்று சிவபிரானை வழிபடுவதற்கு சிவகோசரியார் வந்தார். இறைவன்முன் கிடக்கும் இறைச்சியுணவுகளை அப்புறப்படுத்தி விட்டு, அவர் வழக்கம்போல் ஆகம முறைப்படி பூசித்தார். பிறகு அவர், ‘‘எம்பிரானே! இங்கு இவ்வித அனுசிதங்களைச் செய்து வருவாரை இன்னாரென்று இதுவரை நான் அறியேன்! ஆகவே உம்முடைய திருவருளினால்தான் இந்தத் துர்ச்செயலை ஒழித்தருளவேண்டும்!’’ என்று பிரார்த்தித்து விட்டு தமதிருப்பிடம் சென்றார். அன்றிரவு சிவபிரான் அவரது கனவில் தோன்றி, ‘‘அனுசிதம் செய்யும் அவனை வன்செயல் வேடுவன் என்று நீ நினைக்கவேண்டாம்! அவன் நல்லவன். அவனுடைய செயலை நான் சொல்கிறேன் கேள்! அவனுடைய வடிவமெல்லாம் நம்மீதுள்ள அன்பே ஆகும்! அவனுடைய அறிவெல்லாம் நம்மை அறியும் அறிவேயாகும்! அவனுடைய செயல்கள் யாவும் நமக்கு இனிய செயல்களே ஆகும்! அவனுடைய நிலை இத்தகையதுதான்! நீ அன்புடன் என் முடிமீது சாத்திய அரும்பு மலர்களை அவன் அன்போடுதன் செருப்புக் காலால் நீக்குவது என் மைந்தன் முருகவேளின் மலரடி படுவதைவிட மிகவும் சிறப்புடையதாகும்! உருகிய அன்புடன் அவன் வாயிலிருந்து உமிழும் நீரானது சந்துமுனிவன் தன் காதினால் துப்பிய கங்கை நீரைவிட எனக்குத் தூய்மையான தீர்த்தமாகும்! அவன் இம்மலைக்கு

வந்து மெய்மலர உண்மையான அன்போடு என்மீது ஏதேதோ மலர்களையெல்லாம் சொரிகிறான்.

ஆகவே திருமால் பிரம்மா முதலியவர்கள் சாத்தும் தெய்வீக மலர்கள்கூட அவன் தன் தலையால் எனக்கு சாத்தும் மலர்களுக்கு ஈடாகா! எனக்குச் சுவையான உணவு ஊட்டவேண்டுமென அவன் ஆசைப்பட்டு, நன்றாக இறைச்சி வெந்திருக்கிறதோவென்று பதம் பார்ப்பதற்காக அவன் அதைத் தன் வாயில் மென்று சுவைப்பார்த்துப் படைக்கும் இறைச்சியமுதானது, வேத விதிப்படி வேள்விகளில் வேதியர்கள் முதலில் கொடுக்கும் அவிர்ப்பாகத்தைவிட எமக்கு இனிமையாக இருக்கிறது. மண்ணிலம் போற்றும் மாமுனிவர்கள் மகிழ்ந்து கூறும் மறைவழிபாடுகள் மந்திரங்கள் அனைத்தையும் விட, அவ்வேடன் அன்புடன் முகம் மலர்ந்து அகம் நெகிழ்ந்து என்னையல்லாமல் வேறு ஓர் அறிவின்றிக் கூறும் வார்த்தைகளே எனக்கு இதமானவையாகும்! அவன் எம்மிடம் செலுத்தும் அன்பின் திறத்தை நாளைக்குக் காட்டுவோம்! நாளை நீ ஒளிந்திருந்து காண்பாயாக! மனக்கவலை ஒழிக!'' என்று கூறியருளி மறைந்தார்.

கனவு நீங்கிக் கண்விழித்த சிவகோசரியார் பொழுது புலரும் வரை கண்துயிலாமல் புரண்டார். மனதில் ஓர்அற்புத உணர்ச்சியும் அதேசமயம் ஒருவிதப் பயமும் தோன்றிக் கொண்டேயிருந்தது. மறுநாள் அவர் எழுந்து முந்திய நாளைப் போலப் பொன்முகலியாற்றை அடைந்து நீராடினார். திருக்காளத்தி நாதரை வழக்கம்போலப் பூசித்து வழிபட்டார். பிறகு சிவபெருமான் அவருடைய கனவில் அருளியதற்கிணங்க சிவலிங்கத்தின் பின்புறமாக ஓரிடத்தில் ஒளிந்திருந்தார்.

அன்று ஆறாம் நாள், திருக்காளத்தி மலைக்கு சிவகோசரியார் வருவதற்கு முன்னதாகவே, திண்ணனார் கிளம்பிக் காட்டுக்குச் சென்று முன்போல வேட்டையாடினார். குற்றமற்ற இறைச்சியுணவைத் தம் கையிலும், தூய்மையான திருமஞ்சன நீரைத் தம் வாயினுள்ளும், இறைவனின் திருவடியில் சாத்த வேண்டிய மலர்களைத் தம்முடைய குடுமியிலும் எடுத்துக் கொண்டு திருக்காளத்தி நாதரை நோக்கி விரைந்தார். ''இவ்வளவு நேரம் தாழ்த்தி விட்டேனே!'' என்று அவர் எண்ணமிட்டு மிகவும் வேகமாக மலையை நோக்கி வந்துகொண்டிருந்தார். அப்போது அவருக்குப் பல தீய சகுனங்கள் தென்பட்டன. 'இந்தத் தீய சகுனங்கள் இரத்தக் குறிப்பைக் காட்டுகின்றனவே! ஓ! கெட்டேன்! எம்பெருமானுக்கு நான் இல்லாத சமயத்தில் என்ன தீங்கு சம்பவித்ததோ?' என்று எண்ணிக்கொண்டே அவர் ஓடி வந்தார்.

திண்ணனாரின் அன்பு முழுவதையும் சிவகோசரியாருக்குக் காட்டுவதற்குச் சிவபிரான் திருவுளங்கொண்டார். தமது சிவ லிங்கத் திருமேனியில் முகம் ஒன்றும் அதில் கண்கள் மூன்றும் காட்டி, அந்தக் கண்களுள் வலது கண்ணிலிருந்து இரத்தம் வடியும்படி காட்டிக் கொண்டிருந்தார். அதைத் தொலைவிலிருந்தே கண்டுவிட்ட திண்ணனார் மிகவும் விரைந்து ஓடிவந்தார். சிவனாரின் கண்ணிலிருந்து வழிந்து கொண்டிருந்த இரத்தத்தைக் கண்டு மதிமயங்கினார். அவர் பொன்முகலியாற்றிலிருந்து தம் வாயினுள் கொண்டு வந்திருந்த நல்ல நீர் சிந்தியது. கையில் இருந்த இறைச்சியும் வில்லும் சிதறிக் கீழே விழுந்தன. பூஜிப்பதற்காகக் கொண்டுவந்த பள்ளித் தாமங்கள் அவருடைய தலைக் குடுமியிலிருந்து கீழே கொட்டின. சிந்தனையிலே திண்ணனார் பதைபதைத்துத் தரையிலே விழுந்தார். பிறகு கீழே விழுந்தவர் எழுந்து நின்றார். எம்பிரான் கண்ணிலிருந்து வடியும் இரத்தத்தை நிறுத்தக் கருதினார். தம் கையை வைத்துத் துடைத்தார், அப்படித் துடைத்தும் இரத்தம் வடிவது நிற்கவில்லை. யாது செய்வது என்பதையறியாமல் திண்ணனார் திகைத்தார். சிறிது தூரம் சென்றார். மயங்கிக் கீழே விழுந்தார்.

பிறகு மயக்கம் தெளிந்து, ''எம்பிரானுக்கு இத்தகைய துன்பம் செய்தவர் யார்?'' என்று எழுந்தார். திசைகள் எங்கும் பார்த்தார். வில்லை எடுத்தார்; ஏற்ற அம்புகளைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு ''இந்த மலையில் எனக்கு மாறாகக் கொடிய வேடர்கள் யாராவது இத்தகைய தீங்கைச் செய்தனரோ? சிங்கம் முதலான விலங்குகள் செய்தனவோ?'' என்று எண்ணி அந்த மலைச்சாரலில் நெடுந்தூரம் சென்று பார்த்தார், அவர் தேடிய இடங்களிலெல்லாம் வேடர்களையோ, மிருகங்களையோ காணாமல் திரும்பி வந்தார். எம்பெருமானின் திருவடிகளைத் தொழுது அத்திருவடிகளைக் கட்டித் தழுவி கண்ணீர் வடித்தார். கதறி அழுதார். ''இந்தப் பரமனாருக்குப் பாவியாகிய நான் கண்டபடி நேர்ந்திருப்பது என்ன? உயிரினும் இனியவரான எங்கள் அத்தனாருக்கு இந்தத் துன்பம் நேர்ந்தது என்ன? விரும்பி வந்தவர் பிரியமாட்டாத விமலனாருக்கு நேர்ந்தது என்ன? இதனைத் தீர்க்கவல்ல வழியையும் அறியேன்! என்செய்வேன்?'' என்று கதறிக் கதறி அழுதார்.

''எம்பிரானுக்கு ஏற்பட்ட இத்தீங்கு என்ன செய்தால்தான் தீருமோ? தீங்கு செய்தாரையும் காணேன்! அம்பினால் ஏற்படும் புண்களுக்கு வனவேடர் வழக்கமாக வைத்துக் கட்டும் மூலிகைகளை மலையடிவாரத்தில் தேடிக்கொண்டு வருவேன்!'' என்று கூறிச் சென்றார். பச்சிலைகளை வனங்களெங்கும் தேடிப் பறித்துக் கொண்டு மனவேகத்தைவிட வேகமாக மாமலைக்குத் திரும்பி வந்தார்.



உதிரம் பெருகும் இறைவரின் திருக்கண்மீது பச்சிலைகளைப் பிழிந்து சாற்றை வடித்தார். அப்படிப் பிழிந்தும் கண்ணில் பெருகியூற்றும் புண்ணின் இரத்தம் நிற்கவில்லை. ''இந்த நிலைமைக்கு என்ன செய்வது?'' என்று திண்ணனார் யோசித்தார். ''ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்க்கும்'' என்ற

பழமொழி அவருக்கு நினைவில் வந்தது. ''எம்பிரானுடைய கண்ணுக்கு ஏற்பட்ட நோயைத் தீர்க்க, வேண்டுமானால் இனி என்னுடைய கண்ணையே அம்பினால் தோண்டியெடுத்து எம்பிரானின் உதிரம் விழும் கண்ணில் அப்பினால் அந்தப் புண்ணின் இரத்தம் நின்று விடும்!'' என்று கருதினார். உடனே மதர்த்தெழும் உள்ளத்தோடு மிகவும் மகிழ்ந்து, தம்முடைய முதன்மையான வலது கண்ணைக் கூரிய அம்பினால் தோண்டியெடுத்துக் காளத்தி நாதரின் புண்பட்ட கண்ணில் அப்பினார். உடனே அந்தக் கண்ணில் வழிந்து கொண்டிருந்த இரத்தம் நின்றது.

அதைத் திண்ணனார் கண்டார். மகிழ்ச்சிப் பெருக்கினால் தரையிலிருந்து தவ்விப் பாய்ந்தார். மலை போன்ற தம் தோள்களைத் தட்டிக்கொண்டார். ஆனந்தக் கூத்தும் ஆடினார். ''நான் செய்த இந்தப் புத்திசாலித்தனம் மிகவும் நன்று! நன்று!'' என்று சிரிப்புத் தோன்ற அகமகிழ்ந்து, ஒன்றிய பெருங்களிப்பினாலே உன்மத்தரைப் போலானார்.

காளத்திநாதர் தம் மெய்யன்பரான திண்ணனாரின் பேரன்பை அதற்கு மேலும் எடுத்துக் காட்டுவதற்குத் திருவுளங்கொண்டு, தமது மற்றொரு கண்ணான இடது கண்ணிலிருந்தும் வற்றாத இரத்தம் பெருகி ஒழுகும்படி செய்தார்.

அதைக் கண்டதும் தேவரைவிட மேலானவரான திண்ணனார். ''ஓ! கெட்டேன்! எமது காளத்தி நாதரின் ஒரு கண்ணிலே புண் இரத்தம் நின்றுவிட்டதென்றாலும் மறுகண்ணிலும் இரத்தம் பொங்கி எழுகிறதே! ஆனால் இதைக் கண்ட நானா மருள்வேன்? இதைத்தீர்க்கும் மருந்துதான் என் வசம் இருப்பதைக் கண்டு கொண்டேனே? ஒரு கண் போனால் இன்னுமொரு கண்ணும் என்னிடம் இருக்கிறது! அதையும் தோண்டியெடுத்து இறைவரின் கண்களிலே அப்பி, இந்தப் புண் ஒழுக்கை நிறுத்தி விடுவேன்!'' என்று மனந்துணிந்தார். தம்முடைய இடது கண்ணையும் தோண்டி எம்பெருமானின் உதிரம் பெருகும் கண்ணிலே அப்புவதற்காக முயன்றார். அந்தக் கண்ணையும் எடுத்துவிட்டால் அவரால் எதையுமே பார்க்க முடியாதல்லவா? அதனால் இறைவரின் புண்பட்ட கண் எதுவென அடையாளம் கண்டு பிடித்துத் தம் கண்ணை அதில் பதிப்பதற்காக இறைவரின் இரத்தம் ஒழுகும் கண்ணின்மீது தமது காலை ஊன்றிக் கொண்டார். பிறகு திண்ணனார் உள்ளம் நிறைந்த விருப்பத்தோடு ஓர் அம்பைக் கையில் எடுத்துக்கொண்டு தமது இடது கண்ணைத்

தோண்டுவதற்காக முயன்றார். அதைக் கண்டதும் மகாதேவராகிய காளத்தி நாதருக்கு மனம் பொறுக்கவில்லை.

வெள்ளெருது வாகனரும், அருள் வள்ளலாருமான திருக்காளத்தியப்பர் தமது திருக்கையை வெளியே நீட்டி, அன்பினால் இடது கண்ணையும் தோண்ட முயலும் திண்ணனாரின் கைகளைத் தடுத்துப் பிடித்துக்கொண்டு, ''நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப!'' என்று மும்முறை தம் அமுதம் போன்ற திருவாக்கால் கூறி அருள் புரிந்தார்.

வேடர் தலைவராகிய கண்ணப்பர், தமது கண்ணைத் தோண்டி அப்பியபோதும் அவருடைய இறைச்சியமுதை விரும்பிப் புசித்த இறைவர் அவருடைய கையை தடுத்துப் பிடித்தபோதும் பெருந்தவ முனிவரான சிவகோசரியார் பார்த்துக் கொண்டிருந்தாராகையால் கண்ணப்பரின் பக்தி நிலையைக் கண்டு வியந்தார். காளத்தி நாதரை வணங்கினார்.

நான்மறைகள் முழங்கின. நான்முகன் முதலான தேவர்களும் பூமாரி பொழிந்தார்கள். அன்றுமுதல் திண்ணனாருக்குக் கண்ணப்பர் என்ற பெயர் வழங்கலாயிற்று. அருந்தவஞ் செய்யும் முனிவர்க்கும் கிட்டாத பரம்பொருளான சிவபெருமான் ஆறே நாளுக்குள் அன்பரான கண்ணப்பருக்குக் காட்சியளித்தார். அவரது திருக்கண்ணில் ஒழுகிய இரத்தத்தைக் கண்டு அன்பின் திறத்தால் தமது இடது கண்ணையும் தோண்டி அப்ப முயன்ற கண்ணப்பரின் கையை முக்கண்ணனார் பிடித்துக்கொண்டு, ''ஒப்புயர்வற்ற கண்ணப்பா! நீ எமது வலப் பக்கத்திலே எப்போதும் நிற்பாயாக!'' என்று திருவருள் புரிந்தார். அதைக்காட்டிலும் அடையத்தக்க பேறு வேறு என்னதான் உண்டு?

அத்தகையவரான கண்ணப்பரை வாழ்த்தி வணங்கிவிட்டு அடுத்ததாக குங்குலியக்கலய நாயனாரின் திருத்தொண்டைக் கூறுகிறேன்.

''கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்(கு) அடியேன்''

– சுந்தரர்.

ஓம் நமசிவாய

16. குங்குலியக் கலய நாயனார்

காவிரி நதியால் வளம் பெருகும் சோழ நாட்டில், காலனைக் காலால் உதைத்த கங்காதரக் கடவுள் கோயில் கொண்டிருக்கும் ஊர் திருக்கடவூர் ஆகும். அங்கு சிறப்புடைய வேதியர்கள் பலர் வாழ்கிறார்கள். அங்குள்ள



வயல்களிலெல்லாம் செந்நெற் பயிர்கள் செழிப்பாக நிறைந்திருக்கும். வரப்புகளிலெல்லாம் சங்கு முத்துகள் நிறைந்திருக்கும். நீர்நிலைகளிலெல்லாம் கழுநீர் மலர்க் கூட்டங்கள் மகிழ்ந்தாடும். கமுகச் சோலைகளிலெல்லாம் மேகங்கள் முட்டி நிற்கும். நன்னெறிச் செயல்களெல்லாம் அங்கு தொழில்களாகும். மருதப் பண்ணைகள் தோறும் பள்ளிப் பெண்கள் விசாலமான கண்களுடன் கூடி நின்று ஆடிப்பாடும் இனிய ஓசை நெஞ்சை அள்ளும். வேதச் சடங்குகள் நிகழும் இடங்களிலெல்லாம் அந்தண வேதியர்களின் சாமவேத கானம் கேட்கும். தடாகங்களில் எருமைகள் படிந்து தம் மடியிலுள்ள பாலைச் சொரிவதால், தடாகத்து கயல் மீன்கள் அங்கும் இங்குமாகப் பாய்ந்து தாமரைப் பூக்களும் பால் மணம் வீசி, அசைந்து ஆடிக்கொண்டிருக்கும்! வானோங்கிய வேள்விச்

சாலைகளின் பக்கமாக ஒதுங்கும் மேகங்களும் அவை பொழியும் நீரும் யாகசாலையிலிருந்து எழும்பும் புகையால் மணங்கமழும்.

இத்தகைய வளமைமிக்க திருக்கடவூரிலே, குங்குலியக்கலய நாயனார் என்று ஒருவர் இருந்தார். அவர் மார்பில் முந்நூல் அணிந்த ஓர் அந்தணர். செஞ்சடைச் சிவபெருமானின் திருவடிகளை நாள்தோறும் வணங்குபவர். சிந்தையிலே சிவனையே வைத்து நெஞ்சு உருகி அன்பு பெருகி நிற்கும் சிவனடியார். நல்லொழுக்கம் நிறைந்த உத்தமர், மார்க்கண்டேய முனிவருக்காக எமனைத் தமது திருக்காலால் உதைத்தருளிய அமிர்தகடேசராகிய சிவபிரானுக்கு திருக்கோயிலிலே நாள்தோறும் நறுமணம்மிக்க குங்குலியத்தூபம் இடுவதுதான் அவருடைய திருத்தொண்டு ஆகும்! அதனால் அவரை குங்குலியக்கலயர் என்றே எல்லோரும் அழைத்துவந்தனர்.

இத்தகைய திருத்தொண்டைக் கலயனார் செய்து வரும்போது ஆண்டவனின் திருவருள் சோதனையால் அவருக்கு வறுமை வந்து சேர்ந்தது. ஆயினும் அவர் முன்போலவே ஆண்டவனுக்கு குங்குலியத் தூபமிடும் திருத்தொண்டைத் தவறாமல் நடத்தி வந்தார். அவருடைய வறுமை மேலும் மேலும் அதிகரித்தது. அவர் தம்முடைய நஞ்சை நிலங்களை விற்றார், பொருட்களையெல்லாம் விற்றார். அவருடைய செல்வம் செல்வாக்கு அனைத்துமே அழிந்துவிட்டன. அவருக்கு நேர்ந்த வறுமையின் கொடுமைக்கு ஓர் அளவுமில்லை. உண்ண ஒரு கவள உணவிற்குக் கூட வழியில்லாமல் குங்குலியக் கலயனாரும் அவர் மனைவி மக்களும் உற்றாரும் இரண்டு நாட்கள் முழுப்பட்டினி கிடக்க நேரிட்டது. பசியால் கிறங்கி பரிதவிக்கும் மைந்தரையும், பெருகி நிற்கும் சுற்றத்தாரையும் பார்த்துப் பார்த்து அவரது அன்பு மனைவி மனம் நைந்து கலயனாரை அழைத்து, மங்கலம் பொருந்திய தன் தாலியையே கழற்றி, அவர் கையில் கொடுத்து, ''தாலியை விற்று நெல்வாங்கி வாரும்!'' என்று கூறினாள். கலயனார் அந்தத் தாலியை எடுத்துக்கொண்டு நெல் வாங்குவதற்காகக் கடைத்தெரு வழியாகச் சென்றார்.

அப்போது வணிகன் ஒருவன் குங்குலியப் பொதியொன்றைச் சுமந்துகொண்டு, அவருக்கு எதிரே வந்தான். அதைப் பார்த்த கலயனார், ''இது என்ன பொதி?'' என்று கேட்டார். அதற்கு அந்த வணிகன் ''குங்குலியப் பொதி!'' என்றான். உடனே கலயனாரின் முகம் மலர்ந்தது. ''செஞ்சடைப் பெருமான் பூசைக்கேற்ற நறுமணம் பொருந்திய குங்குலியம் இது என்றால், நான் பெரும் பேற்றை இன்றே பெற்றேன்.

இதை வாங்கிச் செல்வதைவிட நல்ல பேறு வேறு உண்டோ?'' என்று பொங்கியெழும் விருப்பம் மிகக்கொண்டு, ''ஐயா! நான் உமக்குப் பொன் தருகிறேன். நீர் அந்தக் குங்குலியப் பொதியை எனக்குக் கொடும்!'' என்றார்.

''நீர் எனக்கு எவ்வளவு பொன் கொடுப்பீர்!'' என்று வணிகன் கேட்டான். உடனே கலயனார் தம் கையிலிருந்த பொன் தாலியை வணிகனிடம் கொடுத்தார். அவன் அதை ஏற்றுக் கொண்டு குங்குலியப் பொதியை அவரிடம் கொடுத்தான். அதனால் கலயனார் மனமெல்லாம் நிறைந்த மகிழ்ச்சி கொண்டு ஒரு கணமும் தாமதித்து நில்லாமல் விரைந்து சென்று வீரட்டானத் திருக்கோயிலை அடைந்தார். அங்கு எம்பெருமானுடைய வழிபாட்டிற்கு உரிய பொருள்களை வைத்திருக்கும் பண்டக சாலையிலேயே எல்லாக் குங்குலியத்தையும் சேமித்து வைத்தார். பிறகு தம் மனைவி மக்களின் பசி, தம் வறுமைத் துன்பம் எல்லாவற்றையும் அவர் மறந்து சிவத்தொண்டில் பேரன்பு பொங்க சிவபிரானின் திருவடிகளைப் போற்றித் தொழுதுகொண்டு குங்குலியப் பணிபுரிந்து சிவசிந்தையுடன் சிவனாரின் திருக்கோயிலிலேயே தங்கியிருந்தார்.

அன்றிரவு கலயனாரின் வீட்டில் அவருடைய மனைவியாரும் மக்களும் சுற்றத்தாரும் பசியின் மிகுதியால் வருந்தி மிகவும் வாடிக் களைத்து அயர்ந்து தூங்கிவிட்டார்கள். அப்போது இறைவனின் திருவருளால், குபேரன் தன் பெருஞ் செல்வத்தைப் பூமியில் கொண்டுவந்து நிறைத்து கலயனாரின் வீடு முழுவதும் பொற்குவியலும் நெற்குவியலும் பிற வளங்களுமாக ஏராளமான செல்வத்தை நிரப்பி வைத்தான். கலயனாரின் மனைவியாரது கனவில் சிவபெருமான் தோன்றி, வீட்டில் செல்வம் நிறைந்துள்ளதை உணர்த்தியருளினார். உடனே அந்த அம்மையார் உறக்கம் நீங்கி விரைந்தெழுந்து தன் கனவில் கண்ட பலவகைச் செல்வங்கள் உண்மையிலேயே தம் வீட்டில் குவிந்திருப்பதைக் கண்டு சிந்தனை செய்யலானார். வீடு முழுவதும் பொன்னும் நெல்லும் அரிசியும் நிறைந்திருப்பது சிவபெருமானின் திருவருளினால்தான் என்று அந்த அம்மையார் நினைத்து இரு கரம் கூப்பி இறைவனை வணங்கித் துதித்து தம் கணவருக்கு உணவு சமைப்பதற்காகச் சமையலறைக்குச் சென்றார்.

குங்குலியக் கலயனாரோ இறைவனின் திருக்கோயிலிலே திருத்தொண்டு செய்துகொண்டேயிருந்தார். சிந்தையெல்லாம் சிவமயமாக நெகிழும் அன்புடனே அவர் வீற்றிருந்தார். காலனைக் காலால் உதைத்த காலனார் அக் கலயனாருக்குத் தம் திருவருளை உணர்த்த விரும்பினார். அதனால் கலயனார்

அறியும் படியாக ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. ''கலயா! நீ மிகவும் பசித்திருக்கிறாய்! உன்னுடைய வீட்டுக்குச் சென்று பாலுடன் கலந்த இனிய சோற்றை உண்டு, பசித் துன்பத்தை ஒழிப்பாயாக!'' என்று இறைவனே, அசரீரி வாக்கால் உணர்த்தினார்.



அந்த அருள் வாக்கை கலயனார் கேட்டார். இறைவனின் திருவருட் கட்டளையை மறுத்து வீட்டுக்குப் போகாமல் கோயிலிலேயே தங்கியிருக்க அஞ்சினார். அதனால் அவர் தம் தலைமீது இரு கை வைத்துக் கூப்பிக் கும்பிட்டபடியே சங்கரனாரின் கோயிலைவிட்டுப் புறப்பட்டு மாட வீதியருகிலுள்ள தம் மனையை அடைந்தார். வீட்டினுள் புகுந்தார். அங்கே பெரிய நிதிக் குவியல்களோடு மற்றைய செல்வங்கள் எல்லாம் நிறைந்திருப்பதைக் கண்டார். உடனே அவர் வியப்புற்று வில்போன்ற நெற்றியுள்ள தம் மனைவியை நோக்கி, ''இந்தச் செல்வங்களெல்லாம் எவ்வாறு உண்டாயின?'' என்று கேட்டார்.

''நீலகண்டரான சிவபெருமான் திருவருட் செல்வம் இவையெல்லாம்!'' என்று கட்டிளம் மனைவியார் கூறினார். ''அங்கு குவிந்திருக்கும் பெருஞ்செல்வத்தின் வளமைச் சிறப்பையெல்லாம் குங்குலியக் கலயனார் பார்த்துப் பார்த்து, என்னையும் ஆட்கொள்ள எந்தை எம்பெருமான் திருவருள் இருந்த வண்ணம்தான் என்ன?'' என்று வியந்து போற்றி இறைவனைக் கைகூப்பித் தொழுதார்.

மகாலட்சுமி போன்ற அவருடைய மனைவியார் தம் கணவருக்கு அமுது படைக்கப் பரிகலத்தைச் சுத்தம் செய்தார். தம் கணவரை மற்ற சிவனடியார்களுடன் இருத்தி விதிப்படி தூப தீபம் ஏற்றிப் பூசித்து இனிமையான அன்னம் பரிமாறி அவர்களுக்குத் திருவமுது செய்வித்தார். அதை அருந்தி அந்தண வேதியரான கலயனார் அளவில்லாத இன்பத்தில் ஆழ்ந்தார். ஊர்தோறும் பிச்சையெடுத்து வாழும் பிக்ஷாடரான சிவபிரானின் திருவருளினால் உலகில் நிறைந்த செல்வத்தை குங்குலியக் கலயனார் பெற்று மகிழ்ந்தார். நல்ல அன்னம், செழுமையான காய்கறிகள், தயிர், நெய், பால் முதலானவற்றோடு பேரன்போடும் சிவனடியார்களுக்கு விருந்திட்டு உதவி புரிந்து, குணத்தில் மேம்பட்டு குங்குலியக் கலயனார் வழக்கம்போல் தம் திருத்தொண்டைக் குறைவறச் செய்து வந்தார்.

குங்குலியக் கலயனார் இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் ★திருப்பனந்தாள் என்னும் ஊரில் ஒரு பெண்மணியின் பூஜையை முன்னிட்டு சிவபெருமான் தம் திருமேனியைச் சிறிது சாய்த்ததால் சிவலிங்கத் திருவுருவம் சிறிது சாய்ந்திருந்தது. சோழ மன்னன் அந்தச் சாய்வைப் போக்கி, சிவலிங்கத்தை நேராக நிறுத்தி வைத்துக் கும் பிடவேண்டும் என்று ஆர்வம் பொங்கப் பெரிதும் விரும்பினான். அதற்காக அவன் தன் யானைகளையும் சேனைகளையும் பூட்டி சிவலிங்கத்தை இழுப்பித்து, எம்பிரானின் திருவுருவத்தை நிமிர்த்துவதற்கு முயற்சி செய்தான். சிவலிங்கத்தை சேனைகளும் யானைகளும் இழுத்து இளைத்து விழுந்தனவே தவிர சிவலிங்கத் திருவுருவம் சிறிதும் நிமிராமல் முன்போலவே சாய்ந்து நின்றது. இதனால் சோழமன்னன் நீங்காத

★திருப்பனந்தாள் : இது கும்பகோணத்துக்கு வடகிழக்கில், சென்னைப் பெருவழியில் பத்தாவது மைலிலும் ஆடுதுறைக்கு நேர் வடக்கில் ஐந்தாவது மைலிலும் இருக்கும் சிவத்தலம். தேவாரப் பாடல் பெற்றது. இக்கோயிலின் தலவிருக்ஷம் பனையின் அடியில் இறைவன் எழுந்தருளியிருப்பதால், திருப்பனந்தாள் என்ற பெயர் வழங்குகிறது.

தாடகை என்ற ஆதி சைவப் பெண்ணொருத்தி ஒரு நாள், இறைவனுக்கு மாலை சாத்தும்போது, அவளது ஆடை நெகிழ்ந்தது. அதைத் தன் முழங்கைகளினால் அழுத்திப் பற்றிக்கொண்டு, இரு கைகளிலும் பிடித்திருந்த மாலையை சிவலிங்கத்திற்கு அப்பெண் சூட்ட முயன்றாள். அப்போது இறைவன் அந்தப் பெண்ணுக்கு மனமிரங்கித் தமது முடி சாய்த்து பூவையின் பூமாலையை ஏற்றருளினார். அன்று முதல் இறைவனின் திருவடிவம் சாய்ந்ததாம்.

கவலையுடன் இரவும் பகலுமாக மனம் வருந்திக் கொண்டிருந்தான்.

சோழ மன்னரின் கவலையைப் பற்றிக் குங்குலியக் கலயனார் கேள்விப்பட்டார். சிவலிங்கத்தை நேராக நிமிர்த்தி வழிபட விரும்பும் திருப்பணியில் சோழ மன்னன் ஈடுபட்டதைக் கேள்விப்பட்டதும் கலயனாரும் அம் மன்னன் மீது விருப்பமுற்று, சடையப்பரைத் தரிசிக்கவும் விரும்பித் திருக்கடவூர் பெருமானை வணங்கி விட்டு, முத்தி வளர்க்கும் அந்தணர் வாழும் திருப்பனந்தாளை வந்தடைந்தார். சோழ மன்னன் வருத்தமடைந்திருப்பதையும் யானை சேனைகள் கூடி இழுத்தும் சிவலிங்கத்தை நேரே நிமிர்த்த முடியாமல் இளைத்துக் கீழே விழுந்து எழுந்திருக்க மாட்டாமல் கிடக்கும் நிலைமையையும் கலயனார் பார்த்து அவரும் மனதில் வருத்தம் கொண்டார். ''சிவலிங்கத்தை நிமிர்த்த முயலும் இத்திருப் பணியில் நானும் ஈடுபட்டு, யானை சேனைகள் போல் நானும் இளைத்து எய்க்கும் பேறு பெற வேண்டும்!'' என்று கலயனார் தீர்மானித்தார். பிறகு சிவபெருமானின் திருமேனியில் பூங்கச்சோடு பிணைத்த வலிமையான கயிற்றைத் தம் கழுத்தில் கட்டிக்கொண்டு கலயனார் இழுத்தார். இறைவனோடு ஒன்றிய அவரது அன்புக் கயிற்றுக்கும் சிவ லிங்கம் அசையாது நிற்குமோ?

கலயனாரின் மனதில் எழுந்த அன்பின் ஒருமைப்பாட்டைக் கண்ட திருப்பனந்தாள் அண்ணலார் தம் சாய்வு நீங்கி, நிமிர்ந்தார்.

சிவலிங்கம் நிமிர்ந்து விட்டது! அதைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து துதித்து ஆரவாரத்துடன் மலர்மாரி பொழிந்தனர். வாடி வறண்ட கானகம் மழை பொழியப் பெற்று களிப்பதுபோல் சேனைகளும் யானைகளும் மகிழ்ச்சியடைந்து எழுந்தன.

சோழ மன்னன் கை கூப்பிக் கும்பிட்டு குங்குலியக் கலயனாரின் திருவடிகளில் தலைவைத்து வணங்கி, ''நாயனாரே! சிவலிங்கத்தை நேராக நிமிர வைத்து எம்பெருமானாகிய சடையப்பரின் செந்நிலையை நான் தரிசிக்கும்படிச் செய்தீர்! திருமாலும் அறியாத எம்பெருமானின் திருவடி மலர்களை நேரில் காணவல்லவர்கள் சிவனடியார்களேயன்றி வேறு யார்தான் உண்டு?'' என்று மெய்த் தொண்டரைப் புகழ்ந்து துதித்தான். பிறகு அத்திருக்கோயிலில் திருப்பணிகள் முதலான பலவற்றையும்

செய்து முடித்துவிட்டு வெண்கொற்றக் குடை மன்னன் தன் நகருக்குப் போய்ச் சேர்ந்தான்.


அரசன் சென்ற பிறகு கலயனார் சில நாள் அத்தலத்திலே தங்கியிருந்து அம்பலத்தில் ஆடும் ஆண்டவனின் மலரடிகளை வணங்கி வழிபட்டுவிட்டு, பிறகு தம்முடைய திருக்கடவூருக்கு வந்து சேர்ந்தார். வழக்கம்போலத் தமது திருத்தொண்டையும் குங்குலியத் திருப்பணியையும் செய்து வந்தார்.

அந்தக் காலத்தில், திருஞானசம்பந்த சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் திருக்கடவூருக்கு எழுந்தருளினார்கள். குங்குலியக்கலய நாயனார், அவர்களை எதிர்கொண்டு வரவேற்று வணங்கித் தம் மனைக்கு அழைத்துச் சென்றார். எல்லையற்ற அன்பில் சிறந்தவர்களாகிய அவர்களுக்கு ஏற்றவாறு கலயனார் தம் மனையில் அறுசுவை விருந்து படைத்தார். சமயக் குரவர்களான அவர்களது அன்பையும், கொன்றை மலர் மாலையணிந்த சிவபெருமானது திருவருளையும் பெற்றார். இவ்வாறு குங்குலியக் கலயநாயனார் சிவனாருக்கும் சிவனடியார்களுக்கும் பற்பல திருப்பணிகளை மேன்மேலும் பெரு வேட்கையோடு செய்து மனம் ஒருமுகப்பட்டு சிவபிரானின் திருவடி நிழலை அடைந்தார்.

அரிசி வாங்குவதற்காக மனைவி கொடுத்த மங்கலத் தாலியையும் விற்று குங்குலியப் பொதி வாங்கித் திருத்தொண்டு புரிந்த இந்த நாயனாரை வாழ்த்தி வணங்கி விட்டு அடுத்ததாக மானக்கஞ்சாற நாயனாரின் அரும்பெரும் தொண்டைச் சொல்கிறேன்.

''கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்.



17. மானக்கஞ்சாற நாயனார்

சோழவள நாட்டில், ★**கஞ்சாறூர்** என்னும் ஓர் ஊர் உண்டு. அங்கு கொம்புத் தேனும் கொழுங்கனிச் சாறும் வடிந்து வாய்க்கால்கள் வழியாகப் பாய்ந்தோடி வயல்களிலுள்ள கருப்பஞ் சாற்றோடு கலந்து மணம் வீசும். ஆறுவகை ஆகம நூல்களையும் நன்குணர்ந்த பெரியார்களால் புகழ்ந்து பாடப்படும் பெருமையை உடையது அவ்வூர்.

அவ்வூரின் பக்கங்களில் உள்ள வயல்களில் மண்வளம் மணம் கமழும். கட்டிளம் கடைச்சியர்கள் அவ்வயல்களில் களை பிடுங்குவார்கள். அவர்கள் தங்கள் நாயகரோடு மனம் ஒன்றிக் கூடி மகிழும். கையால் அவர்களுடைய கருங்குவளைக் கண்கள் சிவக்கும்! அவர்கள் களை பிடுங்கும்போது தப்பி ஒதுங்கும் கருங்குவளைப் பூக்கள் கூட உள் நீரின் தன்மை அதிகப்பட்டு கண்ணிதழ்கள் சிவக்கும்! குளிர்ச்சியும் மென்மையும் வாய்ந்த செங்கழுநீர் மலர் என்னும் நாயகியின் மீது நெற்கதிர் என்னும் நாயகன் தலை சாய்த்து வணங்கும்! அத்தகைய வயல்களில் நடந்து செல்லும் பள்ளப் பெண்கள் தங்கள் பின்புறக் கூந்தலில் கருமேகத்தைக் காட்டி, அதிலே தோகை மயிலின் சாயலையும் காட்டி, இடை துவளத் துவள நடந்து தங்கள் இனத்தையும் காட்டி, முழு நிலாவைத் தோற்கடிக்கும்படியான தங்கள் முகத்தையும் காட்டி, அம்முகத்திலுள்ள கண்களில் கயல் மீன்களையும் காட்டி, தங்கள் காலடித் தடங்களில் நெற் கதிர்களையும் காட்டிச் செல்வார்கள்.

பல மணிகளின் ஒளிவீசும் மாடங்களும் மதில்களும் அவ்வூரில் நிறைந்திருக்கும். சபைகளில் துணிக் கொடிகளும் பெண் கொடிகளும் நிறைந்திருக்கும்! மன்மதன் புஷ்ப பாணங்களை எய்து மனிதர்களைச் சுழல வைக்கும் சிற்சில வீதிகளில் கூடத் தோரணங்களும் பூரண கும்பங்களும் நிறைந்திருக்கும். வீதிகளில் மயிலனைய மங்கையர் நடம்புரிய, முழவுகள் ஒலிக்கத் திருவிழாக்கள் ஓயாமல் நடந்து கொண்டிருக்கும். அத்திரு வீதிகளில் இல்லறத்தின் வழியே பெருகிய வளங்களும், உழவுத் தொழிலால் வந்த செல்வமும்

★கஞ்சாறூர் : இந்த ஊர், ஆனதாண்டவபுரம் என்னும் ஊராகும். ஆனந்த தாண்டவபுரம் என்ற பெயர், சொல் வழக்கில் ஆனதாண்டவபுரம் ஆகிவிட்டது போலும்!

பொருந்திய குடிமக்கள் நெருங்கி வாழும் வீடுகள் நிறைந்திருக்கும்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய கஞ்சாறூரில், வேளாளர் குலத்திற்குச் சேமநிதி போல் மானக்கஞ்சாறனார் என்ற பெரியார் ஒருவர் அவதரித்தார். அவ்வேளாளர் தலைவர் அரசருக்குப் பரம்பரையாக படைத் தலைமை வகித்து வரும் சேனாதிபதிகளின் குடும்பத்தில் பிறந்தவர். சிவபெருமானிடம் பேரன்பு கொண்டவர். சிவனடியார்களையெல்லாம் சிவபெருமானே யெனக் கருதி, சிவனடியார்களுக்குத் தொண்டு புரிவதையே, தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர். அகத்தில் அன்பும், வடிவத்தில் அடக்கமும், வாய் மொழிகளில் பணிவும், மனதில் அமைதியும் நிறைந்தவர். அவருடைய செல்வம் நாளுக்கு நாள் பல்கிப் பெருகலாயிற்று.அச்செல்வங்களெல்லாம் சிவனடியார்களுக்கே உடைமையெனக் கருதும் பெரும் நிலையிலும் அவர் நின்றார். சிவனடியார்கள் விரும்புவனவற்றை அவர்கள் கேட்பதற்கு முன்னதாகவே குறிப்பறிந்து கொடுத்து வந்தார்.

அத்தகைய பெரியாரான மானக்கஞ்சாற நாயனாருக்கு நீண்ட காலமாகப் பிள்ளைப்பேறு வாய்க்காமலிருந்தது. அதனால் அவர் சிவபெருமானின் மலரடிகளைத் தியானித்துத் தமக்கு மகப்பேறு அருளுமாறு வேண்டினார். அவருக்கு நடராஜப் பெருமான் திருவருள் புரிந்தார். அத்திருவருளினால் மானக்கஞ்சாற நாயனாரின் மனைவியாருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. நாயனார் பெருமகிழ்ச்சியடைந்தார். மங்கல இசைக் கருவிகள் முழங்க, ஊரே களிப்புறும்படி அதை ஒரு விழாவாகக் கொண்டாடினார். அளவற்ற செல்வங்களை அறவழியில் நிற்கும் சிவனடியார்களுக்கு வாரி வழங்கினார். தாதிகள் போற்றியிசைக்க அப்பெண் குழந்தையை வளர்பிறைச் சந்திரனைப் போல் வளர்த்து வந்தார். அப்பெண் குழந்தை காப்பணியும் இளங்குழவிப் பருவத்தைக் கடந்து, நடக்கும் பருவத்தை அடைந்தது. சுருள் சுருளான கூந்தலில் பூமணம் கமழ காதுகளில் பொற்குண்டலங்கள் தொங்கிக் குலுங்க, மேகலையின் சிறுமணிகள் சலசலக்கச் சிற்றாடை கட்டி, கிண்கிணி ஓசையுடன் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து சிறுநடை நடந்தது. வீட்டின் முற்றத்தில் தாதியர்களின் நடுவே மணியால் சிறு வீடுகட்டி விளையாடியது. பாதச் சிலம்புகளில் பால் மணிகள் ஒலிக்க கழங்கு ஆடுதல் முதலிய சிறுமியர் விளையாட்டுக்களையெல்லாம் பயின்று, மார்பகத்தில் பெண்மை அரும்பும் பேதைப் பருவத்தை அடைந்தது அப்பெண் அமுதம்!



நாளடைவில் அவளுக்கு இளமை வந்து புதுக்கோலம் பூசியது. அவளுடைய உடலெங்கும் பேரழகு மிகுந்து புதுக் கவர்ச்சி பொலிவூட்டியது. ஒளிவீசும் அவளுடைய இடை, மார்பகத்துத் தனங்களின் சுமையைத் தாங்காமல் துவண்டது. வெளியே தெரியும்படி மலராத அவளுடைய புன்சிரிப்பு அவளுடைய முத்துப் பற்களுக்குள்ளேயே அடங்கி அரும்புச் சிரிப்பாக விளையாடியது. பின்னிக்கொள்ளும் மெல்லிய பூங்கொடி போல் அவளுடைய மெல்லிய இடை மின்னியது. அவளுடைய அழகான கூந்தலில் ஒருவிதக் குளுமை நிறைந்திருந்தது. அவளுடைய சிவந்த கைகளில் ஒருவிதப் பசுந்தளிரின் மென்மை மெருகேறியிருந்தது. அத்தகைய குற்றமற்ற பெண்குலக் கொழுந்துக்கு மணப் பருவமும் வந்தணைந்தது. மகாலட்சுமிக்கும் மேலான செம்மணித் தீபமென விளங்கும் அம்மகளுக்குத் திருமணம் செய்ய மானக்கஞ்சாற நாயனார் விரும்பினார்.

அப்போது, ஒத்த மரபில் வந்தவரும் சிவபெருமானுக்கு அன்பருமாகிய ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்பவருக்கு அப்பெண்ணை திருமணம் செய்விப்பது பற்றிப் பேசுவதற்காகப் பெரியோர்கள் பலர் முன்வந்தார்கள். அவர்களை மானக்கஞ்சாறனார் மகிழ்ச்சியுடன் வரவேற்று பழைய சம்பிரதாயப்படி உபசரித்து, அவர்கள் கூறிய திருமணத்திறப் பேச்சுகளைக் கேட்டு, ''எங்கள் மரபிற்கு இது மிகவும்



பொருந்தும்!'' என்று தமது புதல்வியை ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குத் திருமணஞ் செய்துகொடுக்க இசைந்தார். அவர்கள் மானக்கஞ்சாற நாயனாரின் இசைவை ஏயர்கோன் கலிக்காம நாயனாரிடம் சென்று பெருவிருப்புடன் தெரிவித்தார்கள். அதைக் கேட்டு கலிக்காமர் மிகவும் மகிழ்ந்தார்.

அதன்பிறகு இருதரப்பினரும் சம்மதிக்கும்படி திருமணத்திற்குரிய ஒரு நல்ல நாளைச் சோதிடர்களைக் கொண்டு நிச்சயித்தார்கள்! மானக்கஞ்சாற நாயனாரின் உறவினர்களெல்லாம் பெருமகிழ்ச்சியோடு உரிய காலத்தில் வந்து சேர்ந்தார்கள். பொற்கலத்தில் பாலிகைகளை நிறைத்து அவற்றில் வெண்முளை சாத்தி, திருமணம் நிகழும் இடத்தை அலங்கரித்தார்கள். திருமணத்திற்கு முன்தினம், மணமகனாரான கலிக்காம நாயனார் தமது அமைதியான உறவினர்கள் புடைசூழ, மணமுரசுகள் முழங்கப் புறப்பட்டு கஞ்சாறூருக்கு அருகில் வந்து தங்கினார்.

அவர் வருவதற்கு முன்னதாகவே, மானக்கஞ்சாற நாயனாரின் மனநிலைப் பொருளான சிவபிரான் ஒரு மாவிரத முனிவர் வேடம் தாங்கி நாயனாரின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அவர் நெற்றி நிறையத் திருநீறு! க்ஷவரம் செய்த தலையிலுள்ள உச்சிக் குடுமிமீது எலும்பு மணிகள் கோர்த்த மாலை!

காதுகளில் வெள்ளெலும்பாலான குண்டலங்கள்! பிரகாசமான எலும்பு மணித்தாழ்வடம்! தோளில் யோகப் பட்டிகை, மார்பில் கரு மயிர்க் கயிற்றின் பூணூல், சாம்பல் மூடிய நெருப்புப்போன்ற இடையில் துணிக் கோவணம்! திருமேனியில் திருநீற்றின் பரப்பு! ஒரு கையில் விபூதிப் பை, மறுகையில் ஓர் எலும்பு மணி இணைத்த சூத்திரம், பூமியில் தோயும் திருவடியில் பதுமம், சங்கம், மகரம், சக்கரம், தண்டம் என்ற பஞ்சமுத்திரைகள்! இத்தகைய ★மாவிரத முனிவர் வேடத்தில் சிவபெருமான் கிளம்பிவந்து மானக்கஞ்சாற நாயனாரின் வீட்டை அடைந்தார்.

அந்த மாவிரத முனிவரைக் கண்டதும் மானக்கஞ்சாற நாயனார் விரைந்தெழுந்து அவரை எதிர்கொண்டு வரவேற்று சிந்தையெல்லாம் குளிர மகிழ்ந்து எம்பெருமானை நோக்கி, ‘‘தவம்புரியும் முனிவரான தாங்கள் என் மனைக்கு எழுந்தருளியதால் அடியேன் கடைத்தேறினேன்!’’ என்று மனம் உருகி அன்போடு கும்பிட்டார்.

அம்மெய்யன்பரை நோக்கி, ‘‘இங்கே என்ன மங்கலச் செயல் நடக்கவிருக்கிறது!’’ என்று மாவிரத முனிவர் கேட்டார்.

அதற்கு மானக்கஞ்சாற நாயனார், ‘‘அடியேன் பெற்ற ஒரே பெண் கொடிக்குத் திருமணம் நடக்கப் போகிறது!’’ என்று பணிவுடன் கூறினார்.

அவரை மாவிரதர் நோக்கி, ‘‘உமக்கு சுபம் உண்டாகுக!’’ என்று வாழ்த்தினார்.

அவருடைய திருவடிகளில் நாயனார் விழுந்து வணங்கி விட்டு, உவகையுடன் உள்ளே சென்றார். மணக்கோலம் பூண்டு, மணங்கமழும் மலர்களை அணிந்த கூந்தலுடன் நிற்கும் தம் புதல்வியை நாயனார் அழைத்து வந்து மாவிரதரை வணங்கும் படிச் செய்தார்.

தம்மை வணங்கி எழுந்த பூங்கொடியான மணப் பெண்ணின் நீண்டு வளர்ந்த அழகான கருமேகக் கூந்தலை மாவிரத முனிவர் உற்று நோக்கினார்.

பிறகு அவர் தம்மைக் கும்பிட்டபடி நிற்கும் நாயனாரைப் பார்த்து, ‘‘இந்தப் பெண்ணுடைய தலைமயிர் எம் மார்பிலே

★மாவிரத முனிவர் : அகப்புறச் சமயக் கொள்கைப்படி ஒழுகும் வேடமுடையவர்.

அணியக்கூடிய பஞ்சவடி என்னும் மயிர்கற்றைப் பூணூலுக்கு ஆகும்!'' என்று கூறினார்.

அதைக் கேட்டதும் நாயனார் உடனே தம் வலிமையான உடைவாளை உருவி ''இதுவும் நமக்கு ஒரு பேறுதான்!'' என்று நினைத்துக்கொண்டு பூங்கொடியான புதல்வியின் நீண்ட கருங்கூந்தலையெல்லாம் அடியோடு அரிந்து எதிரே நிற்கும் மாவிரத முனிவரின் மலர்க்கரத்தில் கொடுத்தார்!

அதை வாங்குவதுபோல் நின்ற மறையவர் மறைந்து, உமாதேவியாரோடு ரிஷப வாகனத்தில் ஏறி, ஆகாயத்திலிருந்து இறங்கிக் காட்சியளித்தார். அதைத் தொடர்ந்து தேவர்கள் கற்பக மலர்மழை பொழிந்தார்கள். மானக்கஞ்சாற நாயனார் தம் கைகளைத் தலைமேல் தூக்கியவண்ணம் பூமியில் விழுந்து வணங்கினார்.

இவ்விதமாக பக்திப் பரவசத்திலிருந்த மானக்கஞ்சாற நாயனாரை கங்காதரரான கூத்தனார் நோக்கி, ''நீ நம்பால் கொண்டிருக்கும் அன்பின் தன்மையை உலகம் முழுவதும் பரவும்படி செய்தோம்!'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

நாயனார் ஒருமைப்பட்ட நெஞ்சோடு கரங்களை உச்சியின் மேல் குவித்து ஆண்டவனின் அருட்பெருந் திறத்தைப் போற்றும் பேறு பெற்றார். கணநாதர்கள் ''போற்றி! போற்றி!'' என்று போற்றிசைக்க, வானவர்கள் சூழ்ந்து துதிசெய்ய சடைமுடிப் பெருமான் மறைந்து சென்றார்.

அப்போது நாயனாரின் திருநிறைச் செல்வியை கைப்பிடிக்க மாப்பிள்ளையான ஏயர்கோன் கலிக்காமர் மணக்கோலம் பூண்டு, கண்டவரெல்லாம் களிப்புற வந்து சேர்ந்தார். அங்கே நிகழ்ந்த மனத்தாலும் நினைத்தற்கரிய அற்புதச் செயலை அங்கு கூடியிருந்தவர்களிடமிருந்து கேட்டு கலிக்காமர் பெருமகிழ்ச்சி அடைந்தார். சிவபிரானின் திருவருளை நினைத்துத் துதித்தார். முன்னமே வரவில்லையே என்று சிந்தை வாடினார். தாம் மணக்கப்போகும் மணப்பெண் மங்களமான நேரத்திலே கூந்தலை இழந்து தலை முண்டிதமாக இருப்பதைக் கண்டு மனந் தளர்ந்தார். அப்போது இறைவன், ''கலிக்காமா! நீ மனம் தளர வேண்டாம்! இந்த மணப்பெண்ணிற்குக் கூந்தலை மீளக் கொடுத்து உனக்கும் திருவருள் செய்வோம்! அவளைத் திருமணம் செய்துகொள்!'' என்று கூறிய திருவாக்கின் திறங்கேட்டு கலிக்காமனார் மனத்தளர்வு நீங்கினார். இறைவனின் திருவருளால் மணப்பெண்ணின் கூந்தல் முன்போல வளர்ந்து மலர்மணம்

பெற்றது. ஏயர்கோன் கலிக்காமனார் அப்பூங்கொடியாளைத் திருமணம் செய்துகொண்டு, இனத்தவரெல்லாம் மகிழ்ந்து பெருகும்படி திருப்பெருமங்கலம் என்னும் தமது நகருக்கு புத்திளம் மனைவியை அழைத்துச் சென்றார்.

ஒரே மகளின் கூந்தலையும் திருமணத்தன்று அரிந்து ஒருவருக்கு ஈந்த மானக்கஞ்சாற நாயனாரின் பெருமையே பெருமை! அவரைப் போற்றிவிட்டு அடுத்ததாக அரிவாட்டாய நாயனாரின் அரும்பெரும் தொண்டைச் சொல்கிறேன்!

''மலைமலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாறன்... அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்.

18. அரிவாட்டாய நாயனார்

காவிரிநதி பாயும் பொன்னி வளநாட்டில் ★**கணமங்கலம்** என்னும் ஓர் ஊர் உண்டு.

அங்கு கரும்புத் தோட்டங்கள் தேன் பொழியும். ஆண் வண்டுகளும் பெண் வண்டுகளும் கலந்து ரீங்காரமிடும். செந்நெல் விளையும் வயல்களில் செந்தாமரை மலர்கள் மலர்ந்து களைகொட்டும்! சங்குகள் உமிழும் முத்துக்கள் அம்மலர்களிலே பிரகாசிக்கும். உழவர்கள் அம்மலர்களைப் பறித்துத் தம் கைகளிலே வைத்துக்கொண்டு பதுமநிதி பெற்றவர்கள்போல் மகிழ்வார்கள். கூந்தல் அழகிகளின் நீலவிழிகள் துள்ளிச் சிரிக்கும்.

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த அந்த ஊரிலே, வேளாளர் குலத்தில் ★**தாயனார்** என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் செல்வம் மிகுந்தவர். வேளாளர் குலத்திற்கே தலைவர். அறநெறியோடு இல்லற வாழ்க்கையில்

★**அரிவாட்டாயர்** : அரிவாள் + தாயன். அரிவாள் – நெல் அறுக்கும் அரிவாள்.

★ **கணமங்கலம்** : இது திருத்துறைப்பூண்டி புகைவண்டி நிலையத்துக்கு வடக்கு திசையில் சுமார் இரண்டரை மைல் தொலைவில் இருக்கிறது. இப்போது கணமங்கலத் திடல் என்று அழைக்கப்படுகிறது.

ஈடுபட்டிருப்பவர். சிவபக்தியில் நெடுங்காலமாய் ஈடுபாடு உள்ளவர். சிவபெருமானுக்குச் செந்நெல் அரிசி அமுதமும் (சம்பா அரிசிச் சாதமும்) செங்கீரையும், மாவடுவும் நியதியாய் கொண்டு வந்து கோயிலில் கொடுத்து தினந்தோறும் தவறாமல் திருவமுது செய்வித்து வருவார். அதுதான் அவருடைய திருத்தொண்டு.

இத் திருத்தொண்டை வறுமைத் துன்பம் வந்துற்ற போதிலும் சிந்தை தளராமல் தாயனார் செய்து வருவார் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்ட சிவபெருமான் விரும்பினார். ஆகவே சிவனாரின் சோதனையால் தாயனாரின் வழிவழி வந்த செல்வங்கள் யாவும் குறையலாயின. யானை உண்ட விளாங் கனியைப்போல அச்செல்வமெல்லாம் அழிந்து போயின. ஆயினும் தாயனார் மனந்தளராமல் முன்போலவே, தமது திருத்தொண்டைத் தவறாமலும் குறையாமலும் செய்துவந்தார்.

இந்நிலையில் தாயனாருக்கு வறுமைத் துன்பம் மேலிட்டு வயிற்று உணவிற்கே திண்டாட்டமாயிற்று. அதனால் அவர் கூலிக்கு நெல்லறுக்கச் சென்றார். தமக்குக் கூலி யாகப் பெறும் செந்நெல் முழுவதையும் சிவபெருமானுக்கு திருவமுதாக்கிப் படைத்துவிடுவார். கார் நெல் வறுத்து அதற்குக் கூலியாகக் கிடைக்கும் கார்நெல்லை மட்டும் தம் உணவாக ஆக்கிக் கொள்வார். இதுபோல நிகழ்ந்து வரும்போது இந்த நிலையையும் இறைவனார் மாற்ற விரும்பினார். அவ்வூர் வயல்களில் விளையும் நெல்லெல்லாம் செந்நெல்லாகவே விளையும்படி செய்தார். அதனால் தாயனாரின் உணவிற்கு கார் நெல் கிடைக்காமல் கிடைத்த கூலி நெல் யாவும் செந்நெல்லாகவே கிடைத்தது. தாயனார் அதற்காக மனம் வருந்தவில்லை. அவர் முன்பைவிட மகிழ்ச்சியடைந்து, ''இது அடியேன் செய்த புண்ணியம்!'' என்று கருதி தமக்குக் கூலி யாகக் கிடைக்கும் செந்நெல் முழுவதையும் சிவபெருமானுக்கே திருவமுதாக்கிவிட்டுத் தாம் மட்டும் உணவின்றிப் பட்டினி கிடந்தார்.

இதுபோல நாள்தோறும் உணவிற்கு கார் நெல் இல்லாமல் உண்பதற்கு வழியற்றுப் போனதால் தாயனாரின் மனைவி சிறிதும் வருந்தவில்லை. குறையாத அன்புடன் அவ்வாழ்க்கைத் துணைவியார் தம் வீட்டின் புறக்கடைத் தோட்டத்திற்குள் புகுந்து அங்கு முளைத்திருக்கும் கீரைகளையும் இலைக்கறிகளையும் பறித்துவந்து சமைத்துவைப்பார். அந்த இலைக்கறி உணவை மட்டும் தாயனார் தம் மனைவியாரோடு உண்டு திருப்தியடைந்து, தமது திருத்தொண்டைக் குறைவறச் செய்து வந்தார்.

சிவபெருமான் அவரை மேலும் சோதிக்க விரும்பி, அவருடைய வீட்டுக் கொல்லையில் அற்ப இலைக் கீரைகள் கிடைக்காதபடி அற்றுப் போகச் செய்தார். அதன்பிறகு அருந்ததி போன்ற அருமை மனைவியார் தம் கணவரின் பசிக்குத் தண்ணீரையே திருவமுதாக வார்த்து தாமும் அதை அருந்தி மகிழ்ந்தார். அந்த நீர் உணவோடு மட்டும் மெய்யன்பர் திருப்தி யடைந்து, சிவபிரானுக்கு செந்நெல் முதலியன கொண்டு போகும் திருத்தொண்டைத் தொடர்ந்து செய்து வரலானார்.

ஒருநாள், தாயனார் வழக்கம்போல ஆண்டவனுக்கு அமுதூட்டச் செந்நெல் அரிசியையும் செங்கீரையையும் மாவடுவையும் கூடையில் வைத்துச் சுமந்துகொண்டு சென்றார். அவருக்குப் பின்னால் அவரது மனைவியார் பசுவின் பஞ்சகவ்யத்தை ஒரு மண்கலத்தில் ஏந்திச் சென்றார்.

சரியான உணவில்லாமல் பசியால் மெலிவுற்றிருந்த தாயனார் அவ்வாறு நடந்து போகும்போது கால் தளர்ந்து தவறி விழுந்தார். உடனே, அவரது மனைவியார் பஞ்சகவ்ய கலசத்தை மூடியிருந்த கையால் தம் நாயகரை அன்போடு அணைக்க முயன்றார். அதற்குள் தாயனாரிடமிருந்த கூடை கீழே விழுந்தது. அதனுள் இருந்த செந்நெல், செங்கீரை, மாவடு முதலான பொருள்கள் யாவும் ஒரு கமரில் (நிலவெடிப்பில்) சிந்தின!

அதைக் கண்ட தாயனார், ''இனிமேல் நான் திருக்கோவிலுக்கு ஏன் போகவேண்டும்?'' என்று வருந்தினார். ''இங்கே சிந்திய நல்ல செந்நெல்லரிசியையும், செங்கீரையையும் தூய மாவடுவையும் சிவபெருமான் திருவமுது செய்யும் பேறு பெற்றேனில்லையே? அவற்றைக் கீழே கொட்டிய தீவினையாளனாகிய நான் இனி உயிருடன் இருந்துதான் என்ன பயன்?'' என்று எண்ணி, அவர் சட்டென்று தம் கையில் அரிவாளை எடுத்துத் தம் கழுத்தில் அரிவாளை வைத்து தமது ஊட்டியை அறுக்கவும் முனைந்தார். ''ஆட்கொள்ளும் ஐயனார் இங்கே திருவமுது அருந்தவில்லையே?'' என்று அவர் பேரன்போடு தம் கழுத்தையும் அறுத்துக்கொள்ள முனைந்தது, பிறவித் துன்பமாகிய வேரையே அறுப்பது போலிருந்தது!

அம்பலத்தில் ஆடும் கூத்தப்பெருமான் மாசில்லாத அம்மெய்யன்பரை அந்த நிலையிலே தடுத்தாட்கொள்ள விரும்பித் தம் திருக்கையை வீசினார்.

உடனே எங்கும் நிறைந்துள்ள இறைவனாரின் கையானது நிலவெடிப்பிலிருந்து தோன்றியெழுந்து அரிவாளைப் பற்றியிருக்கும் நாயனாரின் கையைப் பிடித்துத் தடுத்தது. இறைவர் கைவீசிப் பிடித்த ஒசையோடு, மாவடுவைக் கடித்துச்



சாப்பிடும், ''விடேல்! விடேல்!'' என்ற ஓசையையும் நிலவெடிப்பிலிருந்து ஒருங்கே எழுந்தது.

தாயனாரின் கழுத்தை அறுக்கும் கையைச் சிவபெருமானின் அருட்கரம் பிடித்துக்கொள்ளவே, தாயனார் தம் செயலை நிறுத்தினார். அப்பொழுது அரிவாளினால் அவருடைய கழுத்தில் அரிந்திருந்த புண்ணும் உடனே ஆறி மறைந்தது. ஆண்டவனின் அருட்பெருங் கருணையைக் கண்டு தாயனார் வியந்து பெருமகிழ்ச்சி பொங்க கைகூப்பி நின்றார். ''எம்பெருமானே! அடியேனின் அறிவிலாமை கண்டும் என்னை ஆட்கொள்வதற்காகப் பூமிமீது நிலவெடிப்பினுள் வந்து திருவமுது செய்த சிவபெருமானே போற்றி! உமையொரு பாகமான தூய பரஞ்சோதியே போற்றி! வெண்ணீறு அணிந்த பவளச் செம்மேனியனே போற்றி! புரிசடைப் புராணா போற்றி! போற்றி!'' என்று துதிசெய்தார்.

சிவபெருமான் உமாதேவியாரோடு விடைமேலேறி வந்து அவருக்குக் காட்சியளித்து, ''நீ செய்த தொண்டு நன்று! உனது மனைவியோடு நீ நமது உலகத்துக்கு வந்து என்றும் எம்முடன் வாழ்வாயாக!'' என்று கூறினார். தாயனார் தம் மனைவியாருடன் சிவலோகமடைந்து இன்புற்றார்.

தாயனார் தமது ஊட்டியை அறுக்க அரிவாளைத் தம் கழுத்தில் பூட்டினமையால் அவர் அரிவாட்டாயர் என்று நற்பெயர் பெற்றார். அவரைத் தொழுது வாழ்த்திவிட்டு அடுத்ததாக ஆனாய நாயனாரின் அருந்தொண்டைச் சொல்கிறேன்.

''எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்''

— சுந்தரர்.

19. ஆனாய நாயனார்

சோழ நாட்டின் உட்பகுதியாகிய ★**மேன்மழநாடு** என்பது நீர்வளம் மிகுந்த நாடாகும்.

அந்நாட்டிலுள்ள வாசனைப் பூஞ்சோலைகள்மீது வானத்து நிலா தவழ்ந்து ஏறும். நெல்லரிகள் படர்ந்த வயல் வரப்புகள் மீது வண்டுகள் வந்தமரும். குவித்து வைத்திருக்கும் நெற்போர்கள்மீது மேகங்கள் தங்கி இளைப்பாறும். அந்நாட்டு உழத்தியர்கள் கொய்சகம் வைத்து அழகாகப் புடவை கட்டுவார்கள். அவர்களுடைய தைலக் கூந்தலில் சிறைவண்டுகள் சிரித்துத் தூங்கும். வாசனை வீசும் தாமரை மலர்களில் கயல்மீன்கள் தூங்கும். தித்திக்கும் மாமரச் சோலைகளின் நிழலில் கரிய எருமைகள் தூங்கும். வயல்களில் கருப்பஞ்சாறு காய்ச்சுவதனால் எழுகிற புகையானது மேகத்தைப் போலவும், ஆலைகளைப் பள்ளர்கள் அழுத்திச் சுற்றும்போது எழுகிற ஒலியானது இடிமுழக்கத்தைப் போலவும் கேட்டுக் கொண்டிருக்கும்! ஆற்று வெள்ளத்தின் அலைகளால் ஒதுக்கித் தள்ளப்படும் சங்குகள் வாழை மரங்களின்மீது தாவி விழும்! பிறகு கொடிகள் வழியாக கமுகு மரத்தில் தவழ்ந்து ஏறும்! அப்போது பாளைகள் பூக்களைச் சொரிவதைப்போல், முத்துக்களைச் சொரியும். வயல்புறங்களில் திரியும் புத்திளம் கன்றுக்குட்டிகள் கொல்லைப்புறத்து மான்குட்டிகளோடு குதித்தோடும்! முல்லை அரும்புகளில் தங்கியிருக்கும் வண்டுகள், தேன் குடிப்பதற்காக நீலோத்பல மலர்களுக்குத் தாவிப் பாயும். மரக்கிளைகளில் தங்கியிருக்கும் நாரைகள், வயல்களிலுள்ள கெண்டை மீன்கள்மீது தாவிப் பாயும். சோலைகள் சூரிய வெப்பத்தைத் தாங்கித் தடுத்துக் கொள்ளும். இத்தகைய சிறப்புகளுடன் பூமிக்கு ஓர் ஆபரணம்போல் விளங்கும் மேன்மழ நாட்டில், மங்கலத் திலகம்போல் ★**திருமங்கலம்** என்னும் மூதூர் ஒன்று உண்டு.

★**மழநாடு :** இது திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே, கொள்ளிடத்துக்கு வடபாகமும் வடகிழக்கு பாகமுமாகும். இந்த நாடு மேல் மழநாடு, கீழ் மழநாடு என்று இருவகைப்படும். மேல் மழ நாட்டுக்கு லால்குடி (திருத்தலத்துறை) தலைநகர். கீழ் மழநாட்டிற்கு திருமழபாடி தலைநகர். இவை கல்வெட்டுக் குறிப்புகள்.

★**திருமங்கலம் :** இது லால்குடிக்கு வடமேற்கில் பூவாளூர் அருகே உள்ளது.

★**மழவர் :** உழவர். மழு – ஒருவகை ஆயுதம்.

திருமங்கலத்துப் பெருங்குடிகளில் ஒன்றாகிய ஆயர் (இடையர்) குலத்தில் ஆனாயர் என்ற பெரியார் ஒருவர் வந்து அதன் குலவிளக்குபோல் தோன்றினார். அவர் தூய ஒளி பொருந்திய திருநீற்றினை விரும்பும் திருத்தொண்டு புரிந்து வந்தார். மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களாலும் சிவபெருமானின் திருவடிகளைத் தவிர, வேறொன்றையும் அவர் விரும்பமாட்டார். குலத் தொழிலாகிய பசு மந்தைகளைப் பசும் புல்வெளிகளுக்கும் விசாலமான காடுகளுக்கும் ஓட்டிச் சென்று மேய்ப்பார். வனங்களில் வசிக்கும் புலி முதலிய கொடிய மிருகங்களாலும் நோய்களாலும் பசுக்களுக்கு எந்தவிதத் துன்பமும் ஏற்படாமல் பாதுகாப்பார். பசுக்கள் விரும்பும் நல்ல புல்லையும் தூய நீரையும் ஊட்டி பசு இனங்கள் அளவில்லாமல் பெருகும்படி தொழில் புரிந்து வருவார். கன்றுகளும், கறவைப் பசுக்களும், பால்மறந்த கிடாரிகளும், சினை மாடுகளும், புதிதாகக் கன்றுபோட்ட பசுக்களும், காளைகளும், எருமைக் கூட்டங்களும் நிறைந்திருக்கும் பல தொழுவங்கள் திருமங்கலத்தில் இருக்கும்.

ஆயர் குலத்தைப் பேணி மாடுகளையெல்லாம் மேய்ப்பதோடு ஆண்டவனிடம் அன்பைப் பெருகும்படி புல்லாங்குழல் வாசிப்பதிலும் ஆனாயர் சிறந்து விளங்கினார். இசை நூல்கள் கூறியுள்ளபடி அமைக்கப்பட்ட தமது வேய்ங்குழலில் எம்பெருமானின் ஐந்தெழுத்தையும் உள்ளுறையாக வைத்து ஏழிசையில் சுருதி பெற வாசித்து, உள்ளமெல்லாம் உருகிப் பெருகும்படி எங்கும் இசையமுதைப் பரப்பிச் செல்வார். அவருடைய புல்லாங்குழல் இசையில் சகல சராசரங்களும் வசமிழந்து உருகி நிற்கும்.

ஒருநாள் ஆனாயர் தமது தலையில் குடுமியை உயர அள்ளி முடித்து, அக்கொண்டையிலே மலர் மாலையைச் சூடிக் கொண்டார். பச்சை இலைகளுடைய கொடி வடத்தில் நறுவிளப் பூவைப் புனைந்து செங்காந்தள் பூவைக் காதுகளில் அணிந்து, அழகான நெற்றியிலும் வலிவான உடம்பிலும் ஒளிவீசும்படி திருநீற்றை நிறையப் பூசிக்கொண்டார். வெண்ணீறு விளங்கும் மார்பிலே மலர்மாலை தரித்து, இடையிலே மரவுரியும் அதன் மேல் பூம்பட்டும் கட்டி, பாதங்களில் செருப்பணிந்து, கையிலே வெண்கோலும் வேய்ங்குழலும் எடுத்துக் கொண்டு, இடையர்களும் பசுக்கூட்டங்களும் புடைசூழக் காடு நோக்கி ஆனாயர் புறப்பட்டுச் சென்றார்.

அப்பொழுது கார் காலமாகையால், ஆனாயர் செல்லும் வழியில் ஒரு கொன்றை மரத்தையும், அம்மரத்தில் பூங்கொத்துகள் பூத்து வாசனை மாலைபோல் குலுங்கிக்

கொண்டிருப்பதையும் கண்டார். அந்தக் கொன்றை மரமானது சடையில் கொன்றைமாலை அணிந்த சிவபிரானைப் போலக் காட்சியளித்தது. (இயற்கையை இறைவனாகவும் எல்லாவற்றையும் சிவமாகவும் பார்க்கும் ஆத்ம பரிபக்குவ நிலையை ஆனாயர் அடைந்தவரானதால்தான் கொன்றை மரமும் அவருக்கு சிவபெருமானாகத் தோற்றமளித்தது.) அதைப் பார்த்த ஆனாயரின் மனதில் அன்பு கரைபுரண்டு ஓடியது. சிந்தையெல்லாம் சிவனிடம் ஒன்றியது. அந்த ஆனந்தப் பெருக்கினால் கேட்போர் எலும்பெல்லாம் உருகும் வண்ணம் சிவபெருமானது திருவைந்தெழுத்தினையும் உள்ளூறையாக வைத்துப் புல்லாங்குழலை எடுத்து ஆனாயர் இசைமாரி பொழியலானார்.

முதலாவதாக, குறிஞ்சிப் பண்ணை வாசித்தார். பிறகு முல்லைப் பண்ணை அமைத்து வாசித்தார். பிறகு கோடிப் பாலைப் பண்ணிற்கு உரிய உச்ச இசை, மத்திம இசை என்னும் இரண்டு ஸ்தானங்களிலும் நமச்சிவாயமெனும் ஐந்தெழுத்தை வைத்து இசைத்தார். ஆயத்தம், எடுப்பு, உக்கிரம், சஞ்சாரம், இடாயம் என்ற ஐவகைத் துறைகளில் முறையாகப் புல்லாங்குழல் ஊதினார். மத்தரம், மத்திமம், தாரம் என்னும் மூவகைச் சுருதிகளில் முறைப்படி அளவு குறையாமலும் இசை நூல்களில் கூறிய இலக்கண முறை வழுவாமலும் அளவுபடுத்தி விரல்களை அசைத்து இயக்கி, குழல் வாயும் தன் வாயும் இணைந்தொழுக இசை வடித்தார். பெருவண்ணம், இடை வண்ணம், வனப்பு வண்ணம் என்னும் வண்ண இசை வகைகளையெல்லாம் மதுரமான நாதத்தோடும், பாணி, தாளம், இசை, தூக்கு, நடை, முதலானவற்றோடும் வாசித்து இன்னிசை வெள்ளத்தை எங்கும் பரப்பினார். அந்த இசை வெள்ளம் வானவர்களின் தேவாமிர்தத்தோடு கலந்து செவியில் வார்ப்பது போலிருந்தது!

அவரது இனிய குழலிசையைக் கேட்ட பசுக்கூட்டங்கள் உள்ளமுருகி அறுகம்புல்லை மேய்வதையும் மறந்து ஆனாயரைச் சூழ்ந்து நின்றன. கன்றுக்குட்டிகள் தாய் மடியைப் பற்றிப் பால் பருகுவதையும் மறந்துவிட்டு பால் நுரை வழியும் வாயோடு, ஆயனாரின் குழலிசையில் கட்டுண்டு நின்றன. எருதுக் கூட்டங்களும், மான் கூட்டங்களும், வன விலங்குகளும்கூட மயிர்சிலிர்த்து மனமுருகி வந்து நின்றன! ஆடும் மயில்கள் அப்படியே ஆடுவதை மறந்து இசையில் மயங்கி அயர்ந்தன. பறவை இனங்களும் இசை நிறைந்த உள்ளத்தோடு வந்து மயங்கி மயங்கி ஆனாயரை நெருங்கின. ஆங்காங்கே மாடு மேய்த்துக் கொண்டிருந்த இடையர்கள் அப்படியப்படியே அரை



குறையான செயல்களோடு அசைவற்று நின்றார்கள். நாகலோகங்களில் வசிப்பவர்களும், மலையில் வாழும் தெய்வ மகளிரும், ஆயனாரின் இன்னிசையால் இழுபட்டு இழுபட்டு மயங்கி வந்து சேர்ந்தார்கள்.

விஞ்சையரும், சாரணரும், கின்னரரும், தேவர்களும், வானத்திலிருந்து விமானங்களில் இறங்கி வந்தார்கள். விண்ணுலகத்துக் கற்பகச் சோலையில் கிளிகளுக்கு அமுதூட்டிக் கொண்டிருந்த தெய்வப் பெண்களும், ஆனாயரின் புல்லாங்குழல் இசையால் இழுபட்டு விமானங்களில் விரைந்தேறி வந்தார்கள்.

ஆனாயரின் புல்லாங்குழலிலிருந்து எங்கும் பொங்கிப் பரவும் ஏழிசை அமுத வெள்ளத்தை அவர்கள் அள்ளி அள்ளிப் பருகினார்கள். வலியாரும், மெலியாரும், வருத்துவோரும், வருந்துவோரும் அந்த இசையில் உணர்வு ஒன்றி ஒருமைப்பட்டு நயந்தார்கள். இன்னிசையால் கட்டுண்ட பாம்புகளோ மயில்கள்மீது மருண்டு விழுந்தன. சிங்கங்களும், யானைகளும் சேர்ந்து நின்றன. புலிகளின் வாயருகே மான்கள் நெருங்கி நின்றன.

காற்றுக்கூட வேகமாக அசையவில்லை. மரக்கிளைகள் ஆடவில்லை. மலையிலிருந்து விழும் அருவிகளும்,

காட்டாறுகளுங்கூட ஓடாமல் அப்படியே நின்று தம் ஓசைகளை மறந்தன. பெரு மேகக் கூட்டங்கள் இடம் விட்டுப் பெயராமல் அப்படியே அசைவற்று இருந்தன. இடி முழங்கவில்லை. மழை பொழியவில்லை. கடல்களும் அலை வீசுவதை அடக்கிக் கொண்டு நிசப்தமாக இருந்தன.

இவ்விதமாக அசையும் பொருள்களும், அசையாப் பொருள்களும் ஆனாயரின் இன்னிசையில் ஈடுபட்டு அவையும் இசைமயமாக மாறிப் புலனும் கரணமும் ஒன்றாகி நின்றன. ஆனாயரின் குழலிசை அனைத்தையும் உருக்கியது. மெய்யன்பரின் அன்புள்ளத்தில் விளையும் அந்தக் குழலோசை வையத்தை யெல்லாம் நிறைவித்தது. வானத்தையெல்லாம் தன் வசப்படுத்தியது.

இவ்வாறு யாவற்றையும் இசைமயமாக்கிய ஆனாயரின் குழலிசை பொதுவில் நடம்புரியும் சிவபெருமானின் திருச்செவியிலும் பெருகி நின்றது. இசைகளுக்கெல்லாம் மூலகாரணமாகிய சிவபெருமான் தமது அருள் வடிவமான உமாதேவியாரோடு ரிஷப வாகனத்தில் ஏறி வானவெளியில் வந்து ஆனாயரின் முன் எதிர் நின்று காட்சியளித்தார். இசை விரும்பும் அக்கூத்தனார் புன்முறுவலுடன் ஆனாயரின் குழலோசையைக் கேட்டபடியே நின்று, ''நம்மீது அன்புகொண்ட அடியார்கள் எப்பொழுதுமே உன்னுடைய குழலிசையைக் கேட்கும் பொருட்டு இங்கிருந்த வண்ணமே நம்மிடம் வந்து சேர்வாயாக!'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்விதமே ஆனாய நாயனார் குழல் ஊதிய வண்ணம் அம்பலக் கூத்தரைப் பின் தொடர்ந்து பேரின்பம் பெறச் சென்றார்.

தேவர்கள் கற்பக மலர்மாரி பொழிந்தனர். முனிவர்கள் மறை மொழிகளைக் கொண்டு துதித்தனர். ஆனாயர் தமது குழலை வாசித்த வண்ணம் உடன் செல்ல, சிவபெருமான் பொன்னம்பலத்தில் புகுந்து அருளினார்;

''அலைமலிந்த புனல் மங்கை ஆனாயர்க்கு அடியேன்''

— சுந்தரர்.

20. மூர்த்தி நாயனார்

பாண்டிய நாடு மிகப் பழமையானது. பழம்பெரும் புகழ் பூண்டது. நிலையான செல்வக் குடிமக்கள் நிறைந்தது. நல்ல மனம் படைத்த அன்பர்களாலும் பல துறை மாந்தர்களாலும் போற்றப்படுவது. மேகங்கள் தங்கும் உயர்ந்த மணிமாடங்களை உடையது.



அந்நாடு முத்துக்களுக்குப் பிரசித்தி பெற்றது. தாமிர வருணியாறு பாய்ந்தோடி கடலில் சங்கமமாகும் இடத்தில் நீர் முத்துக்கள் விளையும். அதுமட்டுமல்ல; பூங்கொடிபோல் துவளும் பெண்களின் இடையிலும், நீண்ட நெடுங்கண்களிலும், மூங்கில் போன்ற தோள்களிலும் முத்துக்கள் பொலிவுறும். அப்பெண்களின் பண்ணிசை வாயிலும் முத்தங்கள் பிறக்கும். அந்நாட்டில் சந்தன மரங்கள் நிறைந்த பொதிய மலை இருக்கிறது. அந்த மலையிலிருந்து உலாவி வரும் தென்றல் காற்றோடு தெய்வீகமான தமிழ மணமும் ஒன்றாகக் கலந்து குளிர்மை வீசும். இத்தகைய பாண்டியவள நாட்டிற்குத் தலைநகராகத் திகழ்வது மதுரை மாநகரமாகும். அந்நகரத்துப்

பெண்கள் மகாலட்சுமி போல் தோற்றமளிப்பார்கள். அப்பெண்களின் வாய்ச் சொல்லில் இன்னிசையும், மலர்க் கூந்தலில் வண்டுகளும் இறுமாந்து வாழும்!

மதுரை அமைதியாக முத்தமிழ் வளர்த்த மூதூர்! தமிழ் பயின்ற பல புலவர்களைக் கொண்ட தமிழ்ச் சங்கங்கள் அங்கு விளங்கி வந்தன. சங்கப் புலவர்களில் இறைவரே தாமும் ஒருவராக இருந்து தமிழாராய்ந்த பெருமையும் அவ்வூருக்கு உண்டு. மீனாட்சியம்மையுடன் சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளியுள்ள திருவாலவாய் என்ற திருக்கோயிலும் அந்நகரில் அமைந்துள்ளது.

இத்தகைய மதுரைத் திருநகரில், வணிகர் குலத்தில் சீரும் செல்வமும் உடைய பழங்குடியினர் செய்த அருந்தவத்தின் பயனாக மூர்த்தியார் என்பவர் தோன்றினார். அவர் சிவபக்தியில் சிறந்தவர். எப்பற்றுமற்ற சிவபெருமான் திருவடிகளே மெய்ப் பற்றெனப் பற்றிக் கொண்டு அதிலேயே விடாத விருப்ப முடையவராக அவர் விளங்கினார். கண்ணுதல் பெருமானின் மீதே பெருங்காதல் கொண்டு நாள்தோறும் பெருகும் சிவநேச வேட்கையாலே மனம் உருகுவார். தமக்கு சொந்த பந்தங்களோ, நிலையான பேறுகளோ, ஆளும் பெருமானின் திருவடித் தாமரைகளைத் தவிர, வேறு எதுவும் இல்லையெனக் கருதுவார். மூண்டெழும் அப்பேரன்பின் வடிவமாகவே அவர் திகழ்வார்!

அவர் நாள்தோறும் திருவாலவாயிலில் எழுந்தருளி இருக்கும் சோமசுந்தரப் பெருமானுக்குச் சந்தனக் காப்பு அணிவித்து மகிழ்வுறும் திருத்தொண்டு செய்துவந்தார். எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தத் திருப்பணிக்குத் தட்டுப்பாடு வராது. அடியார் உவக்கப் பணியாற்றுவதில் கண்ணுங்கருத்துமாய் மூர்த்தியார் இருந்து வந்தார்.

அந்தக் காலத்தில், கருநாடக தேசத்து வடுகச் சாதியைச் சேர்ந்த மன்னன் ஒருவன் தன் வலிமையால் மண்ணாசை கொண்டு, யானைப்படை, குதிரைப்படை, கருவிப்படை, வீரப்படை முதலானவற்றையெல்லாம் ஒருங்கே திரட்டிக் கொண்டு தென்னாடு நோக்கிப் படையெடுத்து வந்தான். பாண்டிய நாட்டின் மண் புதையும்படியான அளவிற்குப் பெரும்படையைப் பரப்பினான். செந்தமிழ்நாட்டுப் பாண்டிய மன்னனது வீரம் போர்க்களத்திலே சிந்திமாளும்படி அவன் முரட்டுப் போர்புரிந்து வாகை சூடி, வெற்றி வீரனாக பாண்டிய நாட்டின் ஆட்சியைக் கவர்ந்து கொண்டான். பிறகு, மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு அக்கருநாடக மன்னனே பாண்டிய நாட்டைக் காவல்புரிந்து வந்தான்.

அந்த வடுக வேந்தன் திருநீற்றுச் சார்புடைய சைவன் அல்லன். சிவமதத்தில் சிந்தை செலுத்தாமல் சமண மதத்தைப் பின்பற்றிச் சிந்தை தாழ்ந்தவன். அது மட்டுமல்ல! தன் முன்வினைப்பயனால் அக்கொடியவன் சிவனடியார்களைத் துன்புறுத்தியும் வந்தான். திருவாலவாய் திருக்கோயிலிலே சொக்கலிங்கப் பெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்துவரும் மூர்த்தியாரையும் அக் கல்நெஞ்சக் கயவன் ஏளனம் செய்திட விரும்பி எண்ணிலாத கொடுமைகள் பல செய்தான். அவ்விடையூறுகளையெல்லாம் மூர்த்தியார் பொருட்படுத்த வில்லை; கோயிலிலே சிவபெருமானுக்குச் சந்தனக் காப்பு இடும் திருப்பணியை வழுவாமல் செய்துவந்தார். அதுகண்டு பொறாத கொடுங்கோல் வேந்தன் அதன் பிறகு மூர்த்தியாருக்குச் சந்தனக் கட்டைகள் கிடைக்காதவாறு எல்லாவிதத் தடைகளையும் செய்துவிட்டான். மூர்த்தி நாயனார் மனம் வருந்தினார். வருத்த மேலீட்டால், ''இக்கொடுங்கோல் புரியும் மாபாதகன் எப்போது மாய்ந்திடுவான்? திருநீற்றின் சைவ நெறியைத் தாங்கும் நல்ல அரசனை இந்த நாடு எப்போது பெறுவது?'' என்று மூர்த்தி நாயனார் எண்ணி எண்ணி ஏங்கினார். அந்த ஏக்கத்தோடு சந்தனக் கட்டைக்காகப் பகல் முழுவதும் தேடித் திரிந்தார். நல்ல சந்தனக் கட்டை எங்குமே கிடைக்கவில்லை!

மூர்த்தியார் என்ன செய்வார்? சிந்தை சரிந்திடத் தலை குனிந்தபடியே அவர் திருவாலவாய்த் திருக்கோயிலுக்குத் திரும்பிவந்து, சொக்கலிங்கப் பெருமானைத் துதித்தார். ''இன்று இறைவரது மெய்ப்பூச்சுக்குத் தேய்த்துக் கொடுக்கச் சந்தனக் கட்டைக்கு முட்டு நேர்ந்தால் என்ன? அதைத் தேய்க்கும் என் கைக்கு ஒரு முட்டும் நேரவில்லையே?'' என்று கருதி சந்தனம் உறைக்கும் ஒரு வட்டமான கருங்கல்லில் தமது முழங்கையை வைத்துத் தேய்த்தார். முழங்கை தேய்ந்து தேய்ந்து இரத்தம் சொரிந்து வெள்ளம்போலப் பாய்ந்தது. தோலும் தசையும் எலும்பும் தேய்ந்து வெளிப்பட்டன. கடைசியில் எலும்புத் துவாரங்களும் திறந்து மூளை ஒழுகி வெளியே வந்தது. அதைக் கண்டதும் சொக்கநாதப் பெருமானுக்குப் பொறுக்கவில்லை!

''ஐயனே! மெய்யன்பின் துணிவால் இந்தச் செயலைச் செய்யாதே! உனக்குக் கொடும் தீங்கு விளைவித்த கொடுங்கோலனின் அரசு முழுமையும் நீயே நாளை கைக்கொண்டு முன்பு அவனால் விளைந்த தீமைகளை யெல்லாம் நீக்கி, உலகத்தைக் காத்து உனது திருப்பணியாகிய சந்தனக் காப்பணி செய்து, முடிவில் நமது சிவலோகத்தை அடைவாயாக!'' என்று திருவாக்கு அசரீரியாக எழுந்தது.

அதைக் கேட்டதும் மூர்த்தியார் அஞ்சியெழுந்து, தமது கையைத் தேய்ப்பதை நிறுத்திக்கொண்டார். தேய்த்ததால் புண்பட்டு ஊறுபாடடைந்த அவரது கையும் ஊறு நீங்கி, இரத்த நாற்றம் நீங்கி, முன்போல் மாறி அழகொளி வீசியது. மூர்த்தியார், சிவமணங் கமழும் திருமேனியுடன் திகழ்ந்தார்.

அன்றிரவு, சமணமதச் சார்புடையவனாகப் போர்வெறி பிடித்த வடுகக் கருநாடக மன்னன் திடீரென இறந்து கொடு நரகத்தில் போய் விழுந்தான். தீமையே புரியும் அம்மூர்க்கன் மடிந்தொழிந்ததும் அவனது மனைவிகளும் சுற்றத்தினரும் அழுது புலம்பி வாட்டமுற்றனர்.

அக் கொடியவனைப் போன்ற இருட்பொழுதும் நீங்கிப் பொழுது புலர்ந்தது. கதிரவன் கீழ்த்திசையில் எழுந்தான். அப்பொழுது அமைச்சர் முதலியோர், இறந்த அரசனுக்குரிய ஈமக்கிரியைகளைச் செய்தார்கள். மாண்டுபோன மன்னனுக்கு மக்கட்பேறு ஏதும் இல்லாததால், ''இனி நாட்டை யாரைக் கொண்டு அரசாள்வது?'' என்று அவர்கள் ஆலோசனைகள் நடத்தினார்கள். ''உணவுப் பொருட்களும் நல்ல குடிமக்களும் இருந்தாலும் வேந்தனின் காவல் இல்லாமல் வையகம் வாழாது, பலவிதமான உயிர்களையும் காத்து அரசாளும் மன்னன் இல்லாத மண்ணுலகம் இன்னுயிர் இல்லாத வெறும் உடல் கூட்டுக்கு இணையாகும்! ஆகவே காலதாமதமின்றி நாட்டுக்கொரு காவலனைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும்!'' என்று கூறினார்கள். முடிவில் ஒரு யானையைக் கண்கட்டிவிடுதல் வேண்டும் என்றும் அந்த யானை எவரை எடுத்துக் கொண்டு வருகிறதோ, அவரே அரசராதல் வேண்டும் என்றும் அமைச்சர்கள் தீர்மானித்தார்கள். அங்ஙனமே பட்டத்து யானைக்கு முறைப்படி பூஜைக் கிரியைகள் நடத்தி, ''நீ இந்த நாட்டை ஆளுவதற்குவல்ல ஓர் ஏந்தலை எடுத்துக்கொண்டு வருக!'' என்று அவர்கள் சொல்லி, யானையின் கண்களை ஒரு வஸ்திரத்தினால் கட்டி வெளியே அனுப்பினார்கள்.

மதுரை மாநகரத்து வீதிகளில் புழுதிகள் மேலே பறக்க அந்தப் பட்டத்து யானை சுற்றித் திரிந்துவிட்டு திருவாலவாயின் திருக்கோபுரத்திற்கு முன்னே விரைந்து போயிற்று. முதல் நாளிரவில் நிகழ்ந்த செய்தியை அறிந்த மூர்த்தியார், ''எம்பெருமானின் திருவருள் இதுவெனில் அடியேன் வையம் தாங்கி இந்நாட்டை ஆளும் செயல் பூண்பேன்!'' என்று நினைத்துக் கொண்டு, உள்ளத் தளர்வு நீங்கி சிவபெருமானின் திருக்கோயிலின் ஒருபுறத்தில் நின்று கொண்டிருந்தார்.

பட்டத்து யானை விரைந்து நடந்து சென்று, உலகத்தார் செய்த தவப்பயனால் மூர்த்தி வள்ளலார் இருந்த இடத்தை அடைந்து, அவர்முன் தாழ்ந்து, அவரைத் தமது துதிக்கையால் தூக்கியெடுத்துத் தன் பிடரியின்மீது வைத்துக் கொண்டது. அதைக் கண்ட அமைச்சர்கள் அனைவரும் வியப்புற்று, ''உலகத் துன்பங்கள் கெட ஒரு சிவனடியாரே அரசராகக் கிடைத்தார்!'' என்று உவகையுற்று மூர்த்தியாரின் திருவடிகளில் வணங்கியெழுந்தார்கள். அப்போது ஊர்மக்கள் அனைவரும் கடலலைபோல் ஆரவாரஞ் செய்தனர். பேரிகைகள் அதிர்ந்தன. தாரைகள் ஒலித்தன. சங்குகள் முழங்கின. எங்கெங்கும் பல்லியங்கள் இயம்பின. வாழ்த்தொலி கள் பொங்கின. மூர்த்தி நாயனாரை பட்டத்து யானை சுமந்து கொண்டு சென்று அலங்கரிக்கப்பட்ட முடிசூட்டும் மண்டபத்தில் சேர்த்தது.

மலர் மாலைகளும் மணிமாலைகளும் சூழ்ந்த மண்டபத்தில் யானைமீதிருந்த மூர்த்தி நாயனாரை அமைச்சர்கள் கீழே இறக்கி, நாயனாரையே அரசராகக் கொண்டு சிங்காதனத்தில் வீற்றிருக்கச் செய்தார்கள். மூர்த்தியார் இருந்த திசையில் ஓமக் குண்டமிட்டு அதில் நெருப்பை வளர்த்தார்கள். மங்கல நூல் சுற்றிய பொற் கலசங்களிலும் குடங்களிலும் நன்னீர் நிரப்பினார்கள். இவ்வாறு முடிசூட்டு விழாவிற்கு உரிய மங்கலக் கிரியைகள் நிகழ்த்தலானார்கள். அப்போது சிந்தையெல்லாம் சிவமயமான மூர்த்தி நாயனார் அமைச்சர்களை நோக்கி, ''முந்திய சமணம் மறைந்து, சைவம் ஓங்கினால்தான் நான் இந்த அரசாட்சியை ஏற்று நாடாள்வேன்!'' என்றார்.

அதைக் கேட்ட அமைச்சர்களும் வேதாகமங்களைக் கற்றறிந்த பெரியோர்களும் அவரை வணங்கி, ''எவ்விதமாக நீர் கட்டளையிடுகிறீரோ அவ்விதமே நாங்கள் செய்கிறோம்!'' என்றார்கள்.

அதன் பிறகும் மூர்த்தி நாயனார், ''நான் இந்த அரசாட்சியை ஏற்பேனாகில் எனக்கு விபூதியே அபிஷேகப் பொருளாகவும் சிவனடியார்களின் அடையாளமாகிய உருத்திராட்சமே எனக்கு அரசியல் ஆபரணமாகவும், ஜடை முடியே கிரீடமாகவும் இருத்தல் வேண்டும்!'' என்றார்.

கல்வியிற் சிறந்த பெரியோர்களும் அமைச்சர்களும், ''நல்லது வேந்தே! நாட்டைக் காத்தருளும்!'' என்று அவர் சொற்களுக்கு உடன்பட்டார்கள். மங்கலவோசையும் மறை முழக்கமும் வாழ்த்தொலிகளும் முழங்க மூர்த்தி நாயனார் அரசராக முடிசூட்டப் பெற்றார்.

பிறகு முடிசூட்டிய மண்டபத்திலிருந்து மூர்த்தி நாயனார் புறப்பட்டு திருவாலவாய்த் திருக்கோயிலுக்குச் சென்று சொக்கலிங்கப் பெருமானை வாழ்த்தி வணங்கினார். அதன் பிறகு அவர் பட்டத்து யானை மீதேறி வீதிகளின் வழியாக மதுரை மாநகரை வலம்வந்தார். பிறகு அவர் அரண்மனையை அடைந்து யானையிலிருந்து கீழே இறங்கிச்சென்று பிரகாசமான ஆட்சி மன்றத்தினுள் புகுந்தார். அங்குள்ள பொன் சிம்மாசனத்தில் ஏறி, வெண்சாமரங்களால் காற்று வீசப்படும் வெண்கொற்றக் குடையின்கீழ் அமர்ந்து அரச கொலுவீற்றிருந்தார்.

நீதி அமைச்சர்களெல்லாம் மூர்த்தியாரின் குறிப்பறிந்து நடந்தார்கள். நாட்டில் கலகம் செய்து கொண்டிருந்த சமணர்களின் கட்டுப்பாடுகள் நீங்கின. திருவெண்ணீறு அணியும் நல்லொழுக்கம் நாட்டில் பரவியது. சைவ சமயம் நிலைபெற்றுச் செழித்து உலகெங்கும் நிரம்பி உயர்ந்தது. பாவங்கள் மாறி பிறவித் துன்பத்தை நீக்கவல்ல திருநீறு, உருத்திராட்சம், சடைமுடி என்னும் மும்மையினால் மூர்த்தி நாயனார் உலகாண்டார்.

மூர்த்தி நாயனார் புலனடக்கத்தில் உறுதிகொண்டு, பெண்ணிடம் ஈடுபடுதலை என்றென்றும் நீத்து பிரும்மச்சாரியாக விளங்கினார். ஐம்புலப் பகையாகிய உட்பகையையும், சமணர் வேற்றரசர் என்ற புறப்பகையையும் அவர் வென்றொழித்தார். உயிர்களுக்கு இடரானவற்றையும் நீக்கி உலகத்தை நெடுங்காலம் காத்து ஆஞ்ஞா சக்கரத்தை நல்வழியில் நடத்தினார். வேற்றரசர்கள் பாதம் போற்ற, உலகத் துன்பங்கள் நீங்க, மூர்த்தியார் அரசாண்டார். அவர் பேரரசராகத் திகழ்ந்த போதிலும், தம் திருத்தொண்டில் மாறுதல் இல்லாமல் சிவபெருமானுக்குரிய திருப்பணிகளைச் செய்து கொண்டிருந்து, இறுதியில் இறைவனது திருவடி நிழலை அடைந்தார்.

எம்பெருமானுக்காக அன்று முழங்கையைத் தேய்த்து, அதன்பின்னர் யானைமீது மன்னராக ஏறிச்சென்ற மூர்த்தி நாயனாரைப் போற்றுகிறேன்! அடுத்ததாக முருக நாயனாரின் அருந்தொண்டைச் சொல்கிறேன்!

“மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்”

— சுந்தரர்.

ஓம் நமசிவாய

21. முருக நாயனார்

கூந்தலில் மலர் சூடி மலைமகளான உமாதேவியார் தன் தளிர்க்கையால் சிவபெருமானின் திருமேனியைத் தழுவியிருப்பாள். அப்பெருமானின் தலைமீது கற்றைச் சடையில் கங்கை தங்கியிருப்பாள். அந்நிலையில் சிவபெருமான் விரும்பும் திருத்தலம் ★திருப்புகலூராகும்.

அந்த ஊர் மணிமுடிச் சோழர்களின் காவிரி வளநாட்டில் அமைந்துள்ளது. அவ்வூரைச் சுற்றிப் பூஞ்சோலைகளும் தடாகங்களும் நிறைந்திருக்கும். அங்கு உடம்பில் வெண்ணிலவைப்போல் அணிந்திருக்கும் திருநீற்றுப்பூச்சின் வெள்ளிய ஒளி, நள்ளிரவின் கனத்த இருளையும் நீக்குவதுபோல் பிரகாசிக்கும். வாசனைப் பூக்களில் இனிய தேனை உண்ணும் கருவண்டுகளுங்கூட விபூதியின் பிரகாசத்தினால் தங்கள் கருமை நிறத்தைக் காட்டாமல் வெண்ணிறத்துடன் விளங்கும். பாடும் வண்டுகளால் மரக்கிளைகளில் உள்ள அரும்பு மலர்கள் அசைப்புண்டு வண்ண மதுரத் தேன் பொழியும். அது மட்டுமல்ல, அழகான மெல்லிய நாகணவாய்ப் பறவைகள்; இன்மொழிப் பேசும் தங்கள் வாயால் பண்ணமைந்த திருப்பதிகங்களைப்போல் செழுந்தேனைப் பொழியும். அந்த இசையமுதால் தடாகங்களிலுள்ள தாமரைகள் மொட்டு விரித்து மலர்ந்து, அகம் உருகிக் கண்ணீர் சொரிவது போல் தேன்நீர் சொரியும். சிவபெருமானைத் துதிக்கும் திருப்பதிகங்களைத் தொண்டர்கள் தங்கள் செவிகளால் அருந்தி, அவர்களது முகத் தாமரைகளும் மலர்ந்து, அகம் உருகி ஆனந்தக் கண்ணீர் அரும்பும்!

இத்தகைய பெருமை வாய்ந்த திருப்புகலூரில் மேன்மையான அந்தணர் குலத்தில் முருகனார் என்னும் ஒருவர் தோன்றினார். அவர் நான்மறைகளை நன்குணர்ந்தவர்; ஞானமார்க்கத்தின் முடிவான எல்லையைக் கண்டவர்; சிவபிரானது திருவடியில் நிறைந்த அன்பினால் உருகும்

★ திருப்புகலூர் : இது நன்னிலம் புகைவண்டி நிலையத்திற்கு நேர் கிழக்கில் நாகை செல்லும் பாதையில் இரண்டாவது மைலில் உள்ள 201202ஏனாதிநாத நாயனார்ஏனாதிநாத நாயனார்201202ஏனாதிநாத நாயனார்ஏனாதிநாத நாயனார்சிவத்தலமாகும். உயிர்கள் பிறவிக்கஞ்சாமல் புகலடைய தக்க தாதலின் புகலூர் என்னும் பெயரைப் பெற்றது. இந்தவூர்த் திருக்கோயில், நீரால் சூழப்பட்டுள்ளது.



மனமுடையவர். அவர் முந்தைய மெய்தவப் பயனால் சிவபெருமானின் விரிசடையில் அணிவிப்பதற்குத் திருப்பள்ளித் தாமம் பறித்துவந்து சாத்துவதைத் தம் திருத்தொண்டாகக் கொண்டிருந்தார்.

அவர் நாள்தோறும் பொழுது புலரும்முன் வைகறையில் துயில் எழுவார். தூய நீராடுவார். திருநந்தவனம் புகுவார். ஆகாச கங்கையும் வெண்ணிலவும் சூடிய சிவபெருமானின் விரிசடையில் பூக்களை அணிவித்து வாசனை வீசச் செய்ய வேண்டும் என்பதற்காக மலரும் பருவத்திலுள்ள விதவிதமான பூக்களையெல்லாம் முருகனார் பறிப்பார். கோட்டுப் பூ, கொடிப் பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்ற நால்வகை மலர்களில் சிவ பூஜைக்குரிய மலர்களை நிறையப் பறித்து, வெவ்வேறாகப் பூக்கூடைகளில் சேர்ப்பார். பிறகு அவற்றைத் தூக்கிக் கொண்டு சென்று ஒரு தனியிடத்தில் அமர்ந்துகொள்வார். கோவை மாலை, இண்டை மாலை, பத்தி மாலை, கொண்டை மாலை, சரமாலை, தொங்கல் மாலை முதலிய பல்வேறு மாலைகளை அவ்வக் காலத்திற்கு ஏற்றபடி தொடுத்துக் கட்டுவார். அப்பூமாலைகளை உரிய பூஜாக் காலங்களில் அவர் எடுத்துக்கொண்டுபோய் வர்த்தமானேச்சுரம் என்னும் அவ்வூர்ச் சிவாலயத்தை அடைந்து அங்குள்ள சிவபிரானுக்குப் பேரன்போடு சாத்துவார். நெஞ்சு உருகி உருகி பேரின்பப் பாக்கள் தொடுப்பார். திருவைந்தெழுத்தை உள்ளன்போடு இடைவிடாமல் ஓதுவார்.

இம்முறையில் திருத்தொண்டு புரிந்துவந்த முருக நாயனார் ஒருசமயம் உமையம்பிகையிடம் ஞானப்பால் அருந்திய திருஞான சம்பந்த சுவாமிகளுக்கு நண்பராகிப் பெருமை பெற்றார். அச்சுவாமிகளின் திருமணச் சிறப்பில் முருகனார் கலந்துகொண்டு சிவபெருமானின் திருவருளால் எம் பெருமானின் திருவடி நிழலை அடைந்தார்.

அரவம் அணிந்த அண்ணலாரை அருச்சித்து அவருடைய திருவடி நிழலை அடைந்த முருக நாயனாரின் மெய்த்தொண்டைப் போற்றிவிட்டு, அடுத்ததாக உருத்திர பசுபதி நாயனாரின் பெருமையைச் சொல்கிறேன்.

‘‘முருகனுக்கும்... அடியேன்!’’

– சுந்தரர்.


22. உருத்திர பசுபதி நாயனார்

காவிரி நதி பாயும் சோழவள நாட்டில், குலத்தில் உயர்ந்த குடிகளையுடையது ★திருத்தலையூர் என்னும் ஊராகும்.

அங்கு வாழும் அந்தணர்கள் வளர்க்கும் வேள்வித் தீயின் பயனால் பருவம் தவறாமல் மழை பெய்யும். நறுமலர்கள் நிறைந்த சோலைகள் தேனைச் சொரியும். பசுக் கூட்டங்கள் பஞ்சகவ்யத்தைப் பொழியும். அவ்வூரே தருமத்தையும் நீதியையும் அமைதியையும் பெருக்கும்.

அவ்வூரில் அந்தணர்கள் குலத்தில் பசுபதியார் என்னும் பெயருடைய ஒருவர் வாழ்ந்துவந்தார். உமையொரு பாங்கரான சிவபெருமானிடம் அவர் பேரன்பு கொண்டு திருத்தொண்டு புரிவதில் அவர் விருப்பமுடையவராக விளங்கினார். வேதத்தில் விளங்கும் உருத்திர மந்திரத்தினை உள்ளன்போடு ஓதிக்கொண்டு இறைவன் திருவடிகளை அவர் தியானித்து வருவார். அதையே அவர் தம் தொழிலாகவும் தொண்டாகவும் கொண்டு சிவநேசத்திலே நெஞ்சு ஒன்றி நின்றார்.

★ திருத்தலையூர் : இது மாயவரம் – பேரளம் வழியில் கொல்லுமாங்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே இரண்டு மைலில், காட்டு வாய்க்காலின் தென்கரையிலுள்ள சிவத்தலமாகும்..



அவ்வூரில் அழகான ஒரு தாமரைத் தடாகம் உண்டு. சங்குகள் அலையும் அதன் கரைகளிலே பறவைகளும் வண்டுகளும் இன்னொலிகள் எழுப்பும். குளத்தினுள் வரால் மீன்கள் பிறழ, கயல் மீன்கள் நீரில் பாயும்! அந்நீரிடையே நெருப்பு எழுவதுபோல் வாசனை நெகிழும். தாமரை மலர்கள் பூத்து எழும்பி நிற்கும். அத்தாமரைத் தடாகத்தில் பசுபதியார் இறங்கிக் கழுத்தளவு உள்ள குளிர்ந்த நீரினுள் நின்றுகொண்டு, தம் இரு கைகளையும் தலைமீது குவித்துக்கொண்டு உள்ளன்போடு மனமுருகி சிவபிரானின் திருவடிகளையே குறிவைத்து அருமறைப் பயனாகிய உருத்திர மந்திரத்தை ஓதுவார். அந்த உருத்திர மந்திரத்தையே முறைப்படி இரவும் பகலும் இடைவிடாமல், ஒருமை மனத்துடன் ஓதிவந்தார். அதனால் அவர் தாமரை மலரை இருப்பிடமாகக் கொண்ட

நான்முகனைப் போல் விளங்கினார். ☆உருத்திர மந்திரத்தை ஓதுவதையே தம் திருத்தொண்டாக அவர் சில காலம் நடத்திவந்தார்.

இவ்வாறு மெய்யன்பரான பசுபதியார் செய்துவந்த தவத்தின் பெருமையையும், உருத்திர மந்திர நியதியின் அளவு மிகுந்து நிற்றலையும் கண்டு சிவ பெருமான் திருவுள்ளம் மகிழ்ந்து, அவருக்குத் திருவருள் புரிந்தார். அதன் விளைவாக பசுபதியார் தீதில்லாத நிலையுள்ள சிவபுரி எல்லையில் சேர்ந்து இறைவரது நிழலில் இனிதமர்ந்தார்.

பெரும் அன்பால் உருத்திர மந்திரத்தை இடைவிடாமல் ஓதி சிவபெருமானின் திருவடிகளை அடைந்ததால் அவருக்கு உருத்திர பசுபதி நாயனார் என்னும் பெயர் இவ்வையகத்தில் வழங்கலாயிற்று.

சிவபெருமானின் அருகடைந்த உருத்திர பசுபதி நாயனாரைப் போற்றுகிறேன்! அடுத்ததாக, தில்லைநகர் திருநாளைப் போவார் நாயனாரின் அருந்தொண்டைச் சொல்கிறேன்.

''உருத்திர பசுபதிக்கும் அடியேன்''

– சுந்தரர்.

☆உருத்திர மந்திரம் : இது இருக்கு, யஜுர், சாமம் என்ற வேதத்தின் நடுவதாகிய யஜுர் வேதத்தின் ஏழு காண்டத்துள் நான்காவதனுள் நடுவனதாகிய பதினாறாவது அனுவாகதத்தின் நடுவதாகிய ஆறாவது சூக்தத்தில் விளங்குவதாகும். வேத புருடனுக்கு ஸ்ரீ ருத்திரம் என்பது கண்ணும், அதனுள் இருக்கும் பஞ்சாட்சரம் என்பது கண்மணியுமாகும். வேதங்கள் நான்கும், வேதாங்கம் ஆறும், நியாயம், மீமாம்சை, ஸ்மிருதி, புராணம் என்ற உபாங்கம் நான்கும் ஆகிய பதினான்கு வித்தைகளிலும் வேதமே மேலானது. வேதத்துள் ஸ்ரீருத்திரமே மேன்மையுடையது. அதனுள் பஞ்சாட்சரமே மாண்புடையது. அதனுள்ளும் 'சிவ' என்னும் இரண்டு எழுத்துக்களே மேன்மை யானவை. இதனைத் திருமூலர் ''சிவ சிவ வென்றிடத் தீவினை மாளும்'' என்று தமது திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

ருத்திரன் : (ருத் = துன்பம், திரன் = தீர்ப்பவன்.)

23. திருநாளைப் போவார் நாயனார்

சோழ வளநாட்டின் ஒரு பகுதியில் கொள்ளிட நதி பாய்ந்து செல்கிறது. அந்நதி தன் அலைக்கரங்களால் செழுமணிகளை அள்ளி அள்ளித் தரும். அவற்றைக் கரையின் இருமருங்கும் தாமரை மலர்கள் கைநீட்டி வாங்கும். அந்தப் பகுதி மேற்கானாடு என வழங்கப்படுகிறது.

அந்த நாட்டில் ஆதனூர் என்னும் ஒரு சிற்றூர் உண்டு. அவ்வூரில் உழவர்கள் எருதுகள் பூட்டி வயலை உழுவார்கள். அப்போது சேற்றிலுள்ள சினை நண்டுகள் படைச்சாலுக்குத் தப்பித் தாமரை மலரில் தாவி ஏறிக் கரு ஈனும். தாமரை மலர்களோ தேன் சொரியும். மரங்கள் செழுப்பமாக உயர்ந்து வளர்ந்து தங்கள் மலர்க்கரங்களை நீட்டிச் சூரிய மண்டலத்தைத் தடவும்! சோலைகள்மீது மேகங்களும் வண்டுகளும் புடைசூழ்ந்து நீர் மழையோ தேன் மழையோ பூஞ்சோலைகளெங்கும் பொழியும்! தடாகக் கரைகளில் உள்ள தென்னை மரங்களின் அடிப்புறம் அதிரும்படி, வாளை மீன்கள் அவற்றின்மீது எழும்பிப் பாயும். தென்னைகளோ அம்மீன்கள் குளத்திற்குள் புதைந்து போகும்படி அவற்றின்மீது நெற்றுகளைச் சொரியும். அருகில் உள்ள பலாமரங்களில் முதிர்ந்த பழங்கள் வெடித்து தேன் வெள்ளத்தைப் பொழியும். அந்தப் பொழிவிலும் வாளை மீன்கள் எவ்விப் பாயும்!

இத்தகைய வளமைமிக்க ஆதனூரில் வயல் பக்கங்களில் சிறு குடிசைகள் நிறைந்த புலைப்பாடி ஒன்று இருந்தது. அங்கு உழவுத் தொழிலை உரிமையாகக் கொண்ட மக்கள் பலர் கூட்டமாக வாழ்ந்து வந்தார்கள். புல்லால் வேயப்பெற்ற அவர்களுடைய சின்னஞ் சிறிய வீடுகளின்மீது பழைய கூரைகள் தென்படும். அக்கூரைகள்மீது பசிய சுரைக் கொடிகள் படர்ந்திருக்கும். அந்தப் புலைச்சேரியில் பெட்டைக் கோழிகளும் அவற்றின் குஞ்சுகளும் சுற்றிக் கொண்டிருக்கும். முற்றத்தில் நாய்க்குட்டிகள் படுத்திருக்கும். கைகளில் இரும்புக் காப்பணிந்த சிறுவர்கள் அந்நாய்க் குட்டிகளைத் தூக்கிக் கொண்டு ஓடுவார்கள். அப்போது நாய்க்குட்டிகள் குலைக்கும். சிறுவர்களின் இடையிலுள்ள இரும்புமணிச் சதங்கை ஒலி கள் கிளம்பி, அந்த மெல்லிய குலைப்பை அடக்கும்! ஆங்காங்கேயுள்ள மருத மரங்களின் நிழலில் பள்ளப் பெண்கள் தங்கள் குழந்தையை வலிய சிறிய தோளின்மீது படுக்கவைத்துத் தூங்கச் செய்வார்கள். வஞ்சி மரத்தின் அடியில் கோழிகள் முட்டையிட்டு அடைகாக்கும் பானைகளைப்



புதைத்து வைத்திருப்பார்கள். மாமரங்களின் கிளைகளில் பறைகள் தொங்கும். தென்னை மரங்களின் அடிப் பொந்துகளில் குட்டி போட்ட நாய்கள் படுத்திருக்கும். காஞ்சி மரத்தின் வாசனைக் கிளைகளில், உழவர்களை விடியற்காலையில் எழுப்பும் சேவல்கள் குடியிருக்கும். அம்மர நிழல்களில் புலைமகளிர் நெல் குற்றும் பாட்டுகளின் ஒலி எங்கும் பரவிக் கேட்டுக் கொண்டிருக்கும். குவளை மலர்களையும் நெற்கதிர்களையும் கூந்தலில் அணிந்த புலைச்சியர்கள் கள்ளுண்டு, கூந்தல் கட்டவிழ நடை தள்ளாடி நிற்பார்கள். அவர்கள் களித்துக் கூத்தாட பறைகள் கொட்டும். அப்பறைக் கொட்டின் தாளத்திற்கு ஏற்ப அவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்திருப்பார்கள்.

இத்தகைய புலையர் சேரியில் ஆதித்திராவிடர் மரபில், நந்தனார் என்னும் பெயருடைய ஒருவர் தோன்றி வாழ்ந்து வந்தார். அவருக்கு இயற்கையுணர்வால் சிவபெருமானிடம் மெய்யன்பு மிகுந்திருந்தது. அவ்வூரில் அவர் புலைமைத் தொழில் புரிந்து வந்தார். ஊரிலே பறையடிக்கும் தொழிலுக்கென விடப்பட்டுள்ள தோட்டம் முதலான மானிய நிலங்கள் நந்தனாருக்கு இருந்தன. அவற்றிலிருந்து கிடைக்கும்

வருவாயும் உணவும் அவருடைய வாழ்வுக்குப் பயன்பட்டன. அவர் பிறந்து உணர்வு தொடங்கியவுடனேயே, பிறைசூடிய பெருமானிடம் பேரன்பு கொண்டுவிட்டார். சிந்தையில் சிவத்தையன்றி வேறு எதையும் நினைக்கமாட்டார். அவர் புலையராகப் பிறந்திருந்ததால், அக்குலத் தொழிலின் வழியே, சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிய வேண்டுமென்று கருதி, அந்நெறியிலே நின்றார். அவர் மற்றவரைப் போலவே புலைத் தொழில் புரிந்து வந்தாலும் சிவத்தொண்டில் தலைசிறந்தே விளங்கினார். சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள்தோறும் பேரிகை, மத்தளம் முதலான கருவிகளுக்குப் போர்வைத் தோலும் இறுகக் கட்டும் வார்களும் நந்தனார் செய்து கொடுப்பார். வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், சிவார்ச்சனைக்கு கோரோசனையும் வழங்குவார். சிவன் கோயில்களின் வாயிற் புறத்திலே நின்று ஆண்டவனைத் தொழுது, உள்ளூரப் பொங்கி யெழுந்து, பக்தியின் மிகுதியால் ஆனந்தக் கூத்தாடியும் பாடியும் மகிழ்வார்.

ஒருசமயம் நந்தனார் திருப்புன்கூரில் கோயில் கொண்டிருக்கும் சிவலோக நாதருக்குத் திருப்பணி செய்ய விரும்பினார். அந்த விருப்பத்திலே அவர் மனம் ஒன்றியவராய் சிவலோகநாதனை எப்போது காண்போம் என்று ஏங்கும் பெரும் காதல் கொண்டு ஆதனூரைவிட்டுக் கிளம்பி, திருப்புன்கூருக்கு வந்து சேர்ந்தார். அங்கு சிவன்கோயில் திருவாசல் முன் நந்தனார் இசைபாடிய வண்ணம் நின்றார். அவர் பறையராதலின் கோயிலினுள் நுழைய முடியவில்லை. ஆனால் அன்பர்கள் விரும்பும் வண்ணம் அருள் புரியும் சிவபெருமானை நேராகவே கண்டு கும்பிட வேண்டும் என்று நந்தனார் பெருங்காதல் கொண்டார். அவருக்கு அருள்செய்ய விரும்பிய சிவபிரான் தம்முன்பு சந்நிதியை மறைத்துக் கொண்டிருந்த இடபதேவரான நந்தியைச் சற்று விலகியிருக்கச் செய்து நந்தனாருக்குக் காட்சி தந்தருளினார். அதைக்கண்ட நந்தனார் ஆனந்தமுற்றார். ஆண்டவனின் திருவாயில் முன் நின்றபடியே அவர் தம் தோற்கருவியைக் கீழே வைத்துவிட்டுக் கீழே விழுந்து கும்பிட்டு எழுந்தார்.

பிறகு அங்கிருந்து அவர் திரும்பிச் செல்லும்போது திருக்கோயின் ஒருபுறத்தில் ஒரு நிலம் பள்ளமாக இருப்பதைக் கண்டு அந்தப் பள்ளத்தை ஒரு பெரிய திருக்குளமாக வெட்டி வைத்தார். பிறகு கோயில்புறத்தை வலம்வந்து கீழே விழுந்து கும்பிட்டு எழுந்து ஆனந்தக் கூத்தாடிவிட்டு, மீண்டும் திருப்புன்கூர் சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தம்முடைய சொந்த ஊரான ஆதனூருக்கு வந்து சேர்ந்தார்.

அதன் பிறகு நந்தனார் அருகாமையிலுள்ள பல சிவஸ்தலங்களுக்குச் சென்று வணங்கித் தமது திருப்பணிகளை மன ஒருமையோடு செய்து வந்தார். ஒருநாள் அவர் தில்லைப் பொன்னம்பல நாதரைத் தரிசிக்க பெருவிருப்பம் கொண்டார். அதற்காக சிதம்பர நகருக்குப் போக வேண்டும் என்ற பெரும் ஏக்கவுணர்ச்சி அவரை ஓயாமல் பற்றிக் கொண்டிருந்தது. அன்றிரவு முழுவதும் தில்லைக்குப் போக வேண்டும் என்ற நினைவால் கண்ணுறங்காமல் விழித்திருந்தார்.

பொழுது புலர்ந்தது. சிதம்பரப் பித்து நந்தனாரைவிட்டு அகலவில்லை. தில்லையை நினைத்து நினைத்து நந்தனார் ஓயாமல் மனமுருகி, ‘‘அந்தோ! நான் தில்லைக்குச் சென்றாலும் திருக்கோயிலுக்குள்ளே சென்று சிதம்பரநாதரின் ஆனந்தக் கூத்தைக் காணும்பேறு என் குலத்துக்கு இல்லையே?‘‘ என்றும் ‘‘இதுவும் எம்பெருமானின் திருவருள்தானோ!’’ என்றும் நினைத்து அங்கு செல்லும் முயற்சியைக் கைவிட்டார். ஆனாலும் தில்லை நகருக்குச் சென்று சிதம்பர நாதரைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் மேன்மேலும் அதிகரித்து வந்ததால், ‘‘நாளைப் போவேன்!’’ ‘‘நாளைப் போவேன்!’’ என்று முடிவு செய்வார். இவ்வாறு ஒவ்வொரு நாளும் ‘‘நாளைக்குப் போவேன்!’’ ‘‘நாளைக்குப் போவேன்!’’ என்று எண்ணிப் பல நாட்களைக் கழித்தார். அதனால் அவரை எல்லோரும் ‘‘திருநாளைப் போவார்’’ என்று அழைக்கலானார்கள்.

இவ்வாறு பல நாட்கள் கழிந்தன. ஒருநாள் திருநாளைப் போவார் உறுதிகொண்டு, ஆதனூரை விட்டுப் புறப்பட்டு, தில்லை நோக்கிச் சென்று, அதன் எல்லையை அடைந்தார். சிதம்பர நகரின் எல்லையைக் கண்டதும் அவர் கீழே விழுந்து வணங்கினார்.அங்கே யாகசாலைகளில் அந்தணர்கள் வளர்க்கும் ஓமப் புகை பெருகி வருவதையும், வேதம் ஓதும் இடங்களும் மடங்களும் நெருங்கியிருப்பதையும் பிறவற்றையும் கண்டார். தமது பறைக்குலத்தின் குறைபாடு கருதி, கோயிலினுள் நுழைய முடியாதே என்று அவர் மனம் அதிர்ந்து நகருக்குள் நுழைவதற்கே அஞ்சி அஞ்சித் திருவெல்லையிலே நின்று விட்டார்! நின்றவர் அந்நகருக்குள் நுழைவதற்கு அரிதான பெருமையைப் பற்றி நினைக்கலானார். ‘‘இந்த எல்லையிலுள்ள யாகசாலைகள், வேத பாடசாலைகள், திருமடங்கள் எல்லாவற்றையும் கடந்து சென்றால், ஊரைச் சுற்றி மதில் சூழ்ந்திருக்கும் ஒரு கோட்டை தென்படுமாம்! அக்கோட்டையின் திருவாசலுக்குள் புகுந்தால் குன்றுகள்போல் பெரும் பெரும் மாளிகைகள் இருக்குமாம்! அங்கெல்லாம் ஆகுதிகள் பொருந்திய மூவாயிரம் வேதிகைகள் இருக்குமாம்!



இவ்வாறெல்லாம் சொல்கிறார்களே! அப்படி இருக்கும்போது புலையேன் நான் எப்படி அத்திருநகருக்குள் புகுவேன்?'' என்று நந்தனார் அஞ்சி அத்திருநகரின் மதிற் புறத்தின் மீதே ஆராத பேரன்பு வளர்ந்தோங்க உள்ளுருகி கையெடுத்துக் கும்பிட்டு, திருவெல்லையை இரவு பகலாக வலம் செய்து சுற்றிக் கொண்டிருந்தார். உள்நுழைய இயலாமை நினைத்து நந்தனார் அயர்வடைந்து, ''உள்ளே நுழைவதற்கு என் பிறவியே பெருந் தடையாக இருக்கிறதே! தில்லைப் பொன்னம்பலத்தினுள் ஆனந்தக் கூத்தாடும் நடராஜப் பெருமானை நான் எப்படிக் கும்பிடுவது? எனக்கும் சிதம்பர தரிசனம் கிடைக்குமோ?'' என்று நினைந்து நினைந்து மனம் நொந்து அப்படியே உறங்கிவிட்டார்.

அன்பர் உள்ளத்தையே கோயிலாகக் கொண்ட தில்லை அம்பலவாணர் தம்முடைய மெய்யடியாரான நந்தனாரின் பேராவலையும் இன்னல் தரும் இழி பிறவி இதுவே தடை. என நினைத்து நந்தனார் துயிலும் நிலைமையும் அறிந்து அத்திருத் தொண்டரின் வருத்தமெல்லாம் தீர்க்க விரும்பினார். அதற்காக சிவபெருமான் நந்தனாரின் கனவில் தோன்றிப் புன்முறுவல் செய்து, ''இந்தப் பிறவி ஒழிய நீ தீயினில் மூழ்கி தில்லைவாழ் அந்தண வேதியர்களுடன் நம்மை வந்தடைவாயாக!'' என்று உணர்த்தியருளினார். அது போலவே தில்லைவாழ் அந்தணர்கள் கனவிலும் சிவபெருமான் தனித்தனியாகத் தோன்றி தீயமைத்துக் கொடுக்குமாறு கூறிவிட்டுத் திருவம்பலத்தை அடைந்தார்.

தில்லை நடராஜப் பெருமானின் கட்டளையை கேட்ட தில்லைவாழ் அந்தணர்கள் யாவரும், அம்பலவாணரின் திருவாயிலில் அச்சத்துடன் வந்துகூடி, ''எமது பெருமான் திருவருள் புரிந்த பணியினைச் செய்வோம்'', என்று துதித்தார்கள்.

பிறகு அவர்கள் அனைவரும் பரிவு பெருக திருநாளைப் போவாரிடம் சென்று, ''ஐயரே! அம்பலத்தில் ஆடும் ஆண்டவன் கட்டளைப்படி இங்கே வந்தோம்! உமக்காக நெருப்புமூட்டி எரிதழல் அமைத்துத் தரப்போகிறோம்!'' என்று விளம்பினார்கள்.

அதைக் கேட்ட நந்தனார், ''அடியேன் உய்ந்தேன்!'' என்று கூறி அவர்களைத் தொழுதார். மறையவர்களும் தீ மூட்டினார்கள்.

தீ வளர்ந்திருக்கும் தெற்கு மதிற்புறத்துத் திருவாயிலை திருநாளைப் போவார் அடைந்தார். தீக்குழியை அணுகியதும் இறைவனின் திருவடிகளையே தம் மனத்தில் இருத்திக் கொண்டு அந்நெருப்பை வலம்வந்தார். பிறகு அவர் தம் இரு கைகளையும் உயரத் தூக்கித் தொழுது கொண்டே, அருட்கூத்தாடும் ஆனந்தத் தாண்டவரின் திருவடிகளை நினைத்தவண்ணம் தீயிலே மூழ்கினார். அப்பொழுது சாதிப் பொய்மையோடு அவருடைய மாயப் பொய்யுடலின் திருவுருவமும் ஒழிந்தது.

மார்பில் பூணூலும் சடை முடியும் உள்ள புண்ணிய முனிவர் பெருமானாக நந்தனார் புது வடிவம் கொண்டு சிவ ஒளியுடன் தீயினின்றும் எழுந்தார்.

அவர் அவ்விதம் எழுந்தபோது, செந்தாமரை மலரில் வந்து தோன்றிய அந்தணப் பிருமனைப் போலவே தோற்றமளித்தார். ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழங்கின. வானத்தில் தேவர்கள் மகிழ்ந்து ஆரவாரம் செய்து கற்பக மரத்தின் தெய்வீக மலர்களைப் பனி மழை போல் பொழிந்தார்கள். அப்பேறு பெற்ற திருநாளைப் போவாரான நந்தனாரைத் தில்லை வாழ் அந்தணர் மூவாயிரவரும் கை கூப்பித் தொழுதார்கள். சிவனடியார்களும் பணிந்து மனதில் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

தில்லைவாழ் அந்தணர்கள் உடன்வர, திருநாளைப்போவார் தெற்குத் திருக்கோபுரத்தைக் கண்டு தொழுது இறைஞ்சிய வண்ணம் விரைந்து சென்று பொன்னம்பலத்தினுள் புகுந்து கூத்தப் பெருமானின் எல்லையை அடைந்தார். அதன்பிறகு அவரை யாரும் காணவில்லை!

தில்லைவாழந்தணர்கள் அதிசயித்தனர்; அரும்பெரும் முனிவர்கள் துதித்தனர். ஆனந்த மயமான நடராஜப் பெருமான் தம்மை வந்தடைந்த திருநாளைப் போவாரின் வினைமாசினை அறுத்து தமது மலரடிகளைத் தொழுது கொண்டிருக்கும்படி பேரின்ப நிலையை அவருக்குத் தந்தருளினார்.

இவ்வாறு மாய உடம்பு நீங்கும்படி தீயில் குளித்தெழுந்து அருமறை முனிவராகி அம்பலவாணரின் திருவடிகளை அடைந்த திருநாளைப் போவாரை வாழ்த்துகிறேன்! அடுத்ததாக திருக்குறிப்புத் தொண்ட நாயனாரின் திருத்தொண்டைச் சொல்கிறேன்.

''செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்''

– சுந்தரர்.

24. திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

உலகத்திலுள்ள சகல உயிர்களுக்கும் கருணைத் தாயாக விளங்கும் உமாதேவியார், தனிப்பெரும் தலைவரான சிவபிரானைத் தழுவும்பொருட்டுச் சிவாகம முறைப்படி அரிய தவஞ் செய்த தூய்மையான நாடு, தொண்டை நாடாகும்! அது மதில்கள் சூழ்ந்த வளமான பல நகரங்களைத் தன்னகத்தே கொண்ட மிகப் பழமையான நாடு. ★பழையனூர் வேளாளர்கள் எழுபதின்மர் (நீலியின் நிமித்தம்) ஒரு வணிகனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு தீப்புகுந்த மாண்புடையது. ★★சேரநாட்டுவீரர்கள் மைத்துனர் முறை கொண்டாடி நட்புக் கொள்ளும் வரலாற்றுத் தொடர்பும் உடையது அத்தொண்டை நாடு! சிவபெருமான்மீது கொண்ட காதலினால் உமாதேவியார் முப்பத்திரண்டு வகை அறங்களையும் முறைப்படி செய்து சிவபிரானை வழிபட்ட திருஸ்தலமான காஞ்சிபுரம் அமைந்திருப்பதும் அந்தத் தொண்டை நாட்டில்தான்! அது உலகோர் போற்றும் சிறப்புடைய நாடாகும்;

அந்நாட்டின் மலைச்சாரல்களிலிருந்து மாணிக்கங்களைச் சுமந்துகொண்டு அருவிகள் இறங்கி ஓடிவரும். அங்குள்ள முல்லை நிலங்களில் மலர்களின் புத்தம் புதிய தேனை வண்டுகள் உண்டு மகிழ்ந்திருக்கும். மருத நிலத்து தடாகத்திலுள்ள கெண்டை மீன்கள், வயல்கள்மீது பாய்ந்து வரப்புகளை இற்று விழச் செய்யும். நெய்தல் நிலத்து

★பழையனூர் நீலியின் கதை : ஓர் ஆடவன் பரத்தையரிடம் இச்சை கொண்டான். அவனைத் திருத்த அவன் மனைவி எவ்வளவோ முயன்றாள். ஒருநாள் அவன் ஒரு சிறப்புக்குச் சென்ற வழியில் தன்னுடன் வந்த மனைவியைக் கொன்றான்! கொலையுண்ட மனைவி நீலி என்னும் பேயானாள். அவளைக் கொலை செய்த கணவன் மாண்ட பிறகு மறுபிறவியில் ஒரு வணிகனாகப் பிறந்தான்; அவனுக்கு ஒருவிதப் பழி உள்ளதென்று ஒரு பெரியார் அவனிடம் கூறி, அவனிடம் ஒரு வாளைக் கொடுத்தார். அந்த வாள் அவன் கையில் உள்ளவரை அப்பழியால் அவனுக்குத் தீங்கு நேராது என்று அவர் சொல்லிப் போய்விட்டார். ஒருநாள் அந்த வணிகன் வியாபார நிமித்தம் பிரயாணப்பட்டபோது, பேயான நீலி ஒரு மாயக் குழந்தையுடன் அவனைப் பின்தொடர்ந்தாள். இருவரும் பழையனூர் வேளாளர்களான எழுபதின்மரிடம் வந்தடைந்தார்கள். நீலி என்னும் மங்கையுருவில் இருந்த அந்தப் பேய் ''இவன் என் கணவன்!'' என்னை



பரத்தியர்கள் முத்துக்களைக் கழுவி நிலத்தில் உலர்த்துவார்கள். குறிஞ்சி நிலக் குறவர்கள் தானியங்களைத் தேர்ந்தெடுத்து நிலத்தில் விதைப்பார்கள். முல்லை நிலத்துக் கறவைப் பசுக்கள் மானினங்களோடு சேர்ந்து நடை பயிலும். மருத நிலப் பறவைகள் தாமரை மலரில் இருந்து கொண்டு, இறால் மீன்களைக் கவ்வி உண்ணும். நெய்தல் நில மக்கள் சுறா மீன்களின் முட்களுடைய கொம்புகளைத் தெய்வ உருவாக வைத்து விழாக் கொண்டாடுவார்கள்.

வெறுத்துப் பரத்தையர் வயப்பட்டிருக்கிறான்'' என்றாள். வணிகனோ ''இவள் பேய்!'' என்றான். அவளோ குல முறைகளை ஒழுங்காகச் சொல்லி மாயக் குழந்தையை கீழே விட்டாள். அக் குழந்தை செட்டி மீது தாவி விளையாடியது. அதைக்கண்ட வேளாளர்கள் அவர்கள் இருவரையும் கலந்து பேசுமாறு, அங்கிருந்த ஒரு மண்டபத்திற்குப் போகும்படிச் சொன்னார்கள். நீலியோ, ''இவன் கையில் வாள் இருக்கிறது. அந்த வாளால் இவன் என்னைக் கொன்று விடுவான்!'' என்று பயத்துடன் கூறினாள். வணிகனோ, ''இவள் பேய்! என் கையில் வாள் கட்டாயம் இருக்கவேண்டும்!'' என்றான். அதைக் கேட்ட வேளாளர்கள் ''உன் உயிருக்கு எங்கள் உயிரைக் கொடுப்போம்! வாளை எறிந்துவிட்டு அவளுடன் செல்வாயாக!'' என்று வாக்குறுதி கொடுத்தார்கள். வணிகன் நீலியுடன் மண்டபத்திற்குள்ளே நுழைந்தான். நீலி என்னும் பேய் மங்கை அவனைக் கிழித்துக் கொன்றாள். மீண்டும் அந்த நீலி, செட்டியின் தாயைப்போல் வேறுவடிவங்கொண்டு, வேளாளரை அடைந்து, ''என் மகனைக் காணோம்! அவன் இங்கே வந்தான்

கருமேகங்கள் மலைகளின்மீது மழைத் துளிகள் எனும் நீர் முத்துக்களைச் சொரியும். முல்லை நிலத்தின் குளிர்ச்சியான கொன்றை மரங்கள் பொன் மலர்களைச் சொரியும். வயலில் வாய்க்கால்களோ சிறுமியர் விளையாடிய முத்துக்களைச் சொரியும். தாழைகள் நிறைந்த கடற்கரைத் துறைமுகங்களில் கப்பல்கள் யாளைகளைக் கொண்டுவந்து சொரியும்.

குறிஞ்சி நிலச் சிறுவர்கள், தேன் கலந்த தினைமாவை உண்பார்கள்.

முல்லை நிலத்திற்குரிய பெரிய பாடிகளில் பால் சேர்த்துச் சமைக்கும் சோறு நிறைந்திருக்கும். மருத நிலத்திற்குரிய ஊர்களோ, நெல்லரிசிச் சோறு, நெய், கருப்பஞ்சாறு, இனிய பழங்கள் முதலியவற்றை உடையனவாக விளங்கும்! நெய்தல் நிலத்திற்குரிய ஊர்களோ, மீன் கலந்த பேருணவை உடையனவாக விளங்கும்.

குறிஞ்சி நிலப் பெண்களின் கூந்தலில் வண்டுகள் மொய்த்துக் குறிஞ்சிப் பண்ணைப் பாடும். முல்லை நிலத்து முழவுகள் ஒலிக்க, முல்லை மொட்டுகளெல்லாம் மலரும்! மருத நிலத்துக் கிளிகளும், பெண்களும் மெல்ல மழலை மொழி பேசி இன்பச் சேர்க்கையில் அமர்ந்திருப்பார்கள்! நெய்தல் நிலத்தாழைகளில், நெய்தல் மலர்கள் மலர்ந்திருக்கும். கழிகள் மிகுந்திருக்கும்.

திருமாலையே இடபமாகக் கொண்ட சிவபிரான் உறைவது திருக்காளத்தி மலையாகும்! வேறு பேறுகளை விரும்பித் தேவர்களும் தெய்வ மாதர்களும் வேடர்களாகப்

என்று கேள்விப்பட்டு வந்தேன்!'' என்று முறையிட்டாள். வேளாளர்கள் மண்டபத்துக் கதவைத் திறந்தார்கள். அங்கே வணிகன் மாண்டு கிடந்ததைக் கண்டார்கள். பிறகு பழையனூர் வேளாளர்கள் எழுபதின்மரும் தாங்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற தீ வளர்த்து அதில் மூழ்கி உயிர் துறந்தனர்.

★★சேரர் மைத்துனர் முறைமை: சேர நாட்டில் ஒருசமயம் உள்நாட்டுக் கலகம் நிகழ்ந்தது. அவ்வேளையில் சேரர்கள் நாலா புறங்களிலும் ஓடினார்கள். அவர்களில் ஒரு பெண் தொண்டை நாட்டு வேளாளரிடத்தில் வளர்ந்து வந்தாள்! கலகம் அடங்கிய பிறகு எல்லோரும் தத்தமது ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஒரூரில் ஒரு பெண் மட்டுமே எண்ணிக்கையில் குறைந்தாள். அவள் சுற்றத்தார் அவளைத் தேடி தொண்டை நாட்டில் கண்டார்கள். அவளை வளர்த்த வேளாளர்கள், ''இவளை எங்கள் புதல்வியாகவே வளர்த்தோம்!'' என்று வரிசை கொடுத்தனுப்பி மாமன் மைத்துனர் உறவைக் கொண்டனர்.

பிறந்து அண்ணலாரை வணங்குவது திருவிடைச்சுரம் என்னும் சிவத்தலமாகும். வேடுவப் பெண்களோடு தெய்வப் பெண்களும் சேர்ந்து நீராடும் சுனையையுடையது சிவபெருமானின் திருக்கழுக்குன்றமாகும். இம்மூன்று திருத்தலங்களையும் தொண்டை நாட்டுக் குறிஞ்சி நிலம் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

முல்லை நிலத்திற்கும் குறிஞ்சி நிலத்திற்கும் இடைப்பட்ட பாலை நிலத்தில் துர்க்கையின் கோயில்கள் நிரம்பியுள்ளன. முல்லைக் கொடி புதர்கள் நிறைந்து சிவனார் மகிழ்ந்திருக்கும் திருமுல்லைவாயில் என்னும் திருத்தலமும், சிவபெருமானின் திருமஞ்சனத்திற்காக எப்பொழுதும் நீர் சுரந்துவரும் திருவூறல் என்னும் திருத்தலமும் முல்லை நிலத்தில் உள்ளன.

முல்லையை அடுத்த மருத நிலத்தில் வசிஷ்ட முனிவரின் காமதேனு சுரக்கும் தெய்வீகப் பாலானது, நந்தி மலையிலிருந்து கீழே இறங்கிப் பாலாறு என்னும் ஆறாக ஓடி வருகிறது. அதில் முத்துக்களும் அகில் துண்டுகளும் சந்தனக் கட்டைகளும் மிதந்துவந்து தாமரைத் தடாகங்களில் நிரம்பி நிற்கும்! குழந்தைகள் தங்கள் சின்னஞ்சிறு கைகளால் தட்டத் தடவப் பாலைச் சொரியும் தாயின் தனங்களைப் போல், வேனிற் காலத்தில் பாலாற்றின் மணலை மன்னர்கள் தோண்டினால் நீர் ஊற்றுக்கள் கிளம்பி வாய்க்கால்களின் வழியே பெருகி ஓடும். இவ்விதம் பெருகிய நீர் வெள்ளமாகிப் பள்ளங்கள் நிறைந்த வயல்களிலும் பெரிய தடாகங்களிலும் பேரிரைச்சலுடன் பாய்ந்து தடாகக் கரைகளை உடைத்து ஓடும். அதைக் கண்டு உழவர்கள் அகமகிழ்ந்து ஆரவாரஞ் செய்வார்கள்.

எருமைக் கடாக்களைப் பூட்டி ஏரோட்டி வயல்களில் சேறு செய்பவர்களின் பேரொலிகளும், விதை விதைப்போரின் ஓசைகளும், நாற்று நடுவோரின் கூச்சல்களும், ஒன்றாகக் கலந்து ஒலிக்கும். கால்வாய்களின் குறுக்கே வாளை மீன்கள் படுத்து நீர் ஓட்டத்தைத் தடுக்கும். சில வரால் மீன்கள் மதகுகளினுள்ளே புகுந்து நீர் வழியை அடைக்கும். பள்ளமான வயல்களில் கெண்டை மீன்கள் ஒன்றின்மேல் ஒன்றாகப் படுத்துக் கரைபோல உயர்ந்திருக்கும். செந்நெற் பயிர்களின் அருகே கரும்புகளும், கரும்புகளின் அருகில் கமுக மரங்களும், கமுக மரங்களின் அருகில் வாழை, தென்னை, மா, பலா முதலான மரங்களும் செழிப்பாக வளர்ந்திருக்கும்.

இத்தகைய வளமான ஊர்கள் தொண்டை நாட்டில் பல உண்டு. அவ்வூரில் விருந்தினர்களை எதிர்கொள்ளும் சிறந்த பெருங்குடி மக்களும், இல்லறம் புரிந்து வேள்விகள் செய்யும்

செல்வ மறையோரும் மாட மாளிகைகளில் நிறைந்து வாழும் வீதிகள் பல இருக்கின்றன.

தீக்காலி என்ற அரசனுக்கு பிள்ளைக்கனி தீர்ந்திடும்படி சிவபெருமான் அருள் புரிந்து கோயில் கொண்டிருக்கும் திருவல்லம் என்னும் சிவத்தலமும் பாலாற்றின் கரையில் திருமாற்பேறு என்னும் சிவத்தலமும், கயாசூரன் என்னும் யானையைத் தோலுரித்து சிவபெருமான் எழுந்தருளிய திருப்பாசூர் என்னும் சிவத்தலமும் அந்நாட்டின் மருத நிலங்களில் அமைந்துள்ளன.

வயல்கள் நிறைந்த மருத நிலத்திற்குப் புறத்தில் உப்பங்கழிகள் நிறைந்த நெய்தல் நிலம் இருக்கும். அங்கு கடற்கரையிலுள்ள வெண்மணல் வெளிகளில் பரதவர்கள் மீன் வலைகளைப் பின்னிக் கொண்டிருப்பார்கள்! சிவந்த விழிப் பரத்தியர்களோ செருந்திப் பூக்களைப் பின்னிக் கொண்டிருப்பார்கள். ஒருபுறம் அளவர்கள் உப்பைக் குவியலாக்கிக் கொண்டிருப்பார்கள். மெல்லிய இடை அளத்தியர்களோ ஒருபக்கம் முத்துக்களை அளந்து முட்டுமுட்டாகக் கொட்டிக் கொண்டிருப்பார்கள். ஒருபுறம் நுளையர்கள் தொழு மீன்களையும், நுளைச்சியர் பவளங்களையும் விற்றுக் கொண்டிருப்பார்கள். துறையவர்கள் சங்குகள் எடுக்க கடலில் மூழ்கிக் கொண்டிருப்பார்கள். அவரினப் பெண்களோ மணற் கேணிகளில் குளித்துக் கொண்டிருப்பார்கள். ஆங்காங்கே புன்னை மரங்களிலிருந்து பொன்னகைபோல் உதிரும் பொன் மலர்கள், கடல் நீருக்கு அழகு ஒப்பனை செய்யும்! நெய்தல் மலர் வண்டுகள் சுவைத்து உண்ணும்படி மகரந்தப் பொடியெனும் கட்டுச் சோற்றை தாழைகள் அவிழ்த்துக் கொட்டும். அன்னங்கள் விளையாடும் தடாகங்களுடன் நெய்தல் நிலத்து ஞாழற் பூக்கள் கடற்கரை மணலின் வெண்மையை மறைக்கும் கயல்விழி துளைச்சியர்கள் களித்துப் பேசும் மழலைச் சொற்களின் இனிமையை அந்நிலத்திற்குரிய செவ்வழியாழ் பெற்றிருக்கும். சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் திருவொற்றியூர், திருமயிலாப்பூர், திருவான்மியூர் முதலான சிவத்தலங்கள் பல இங்கு அமைந்திருப்பது இந்த நெய்தல் நிலம் செய்த தவமேயாகும்!

திரை கடலில் விளையும் பவளக் கொடியின் மென் கொழுந்து, பக்க மலைகளிலுள்ள சந்தன மரக்கிளைகளில் விழுந்து படரும். இவ்விதமாக நெய்தலும் குறிஞ்சியும் கூடித் திணை மயக்கும் புனா நிலங்கள் பலவாகும். அத்தகைய பகுதியொன்றில் மாமல்லை என்னும் மகாபலிபுரமும் அமைந்திருக்கிறது.

வயல் மீன்கள் மலைப்பாறைகளில் புரள்வதாலும் வயல்களில் கலைமான்களின் கூட்டங்கள் குதித்துச் செல்வதாலும் மருதமும் குறிஞ்சியும் கூடித் திணை மயக்கும் புனர் நிலமாக விளங்கும்.

முல்லை நிலத்துக் குறுமுயல்கள் மலையுச்சிக்குத் தாவிச் சென்று வானத்து நிலாவோடு விளையாட முயலும். வரகுப் போர்கள் மலைபோலக் குவிந்திருப்பதால் கருமேகங்கள் அவற்றை மலையெனக் கருதிக் கட்டித் தழுவும். இவற்றால் முல்லையும் குறிஞ்சியும் கூடித் திணை மயங்கும் புனர் நிலமாகத் திகழும்.

பரதவர்கள் கடலில் பிடிக்கும் மீன் குவியல்களைக் கானகத்து வேடர்களிடம் கொடுத்து அதற்குப் பதிலாக கௌதாரியும் சேவல்களும் வாங்குவார்கள். பரதவப் பெண்களோ கடலில் விளையும் முத்து, பவளம் முதலானவற்றை அளந்து கொடுத்து அதற்குப் பதிலாக சானப் பெண்களிடமிருந்து தினைகள் வாங்குவார்கள். இவ்வாறு பண்ட மாற்றுதல் நிகழ்வதால் நெய்தலும் முல்லையும் கூடிய திணை மயக்கம் உண்டாகும்.

முல்லை நிலத்து இடைச்சியர்களின் அழகான நடையை அன்னங்களும் மருத நிலத்து உழத்தியரின் சாயலை மயில்களும் விரும்பிப் பல இடங்களில் சேர்ந்து நடை பயில்வதால் மருதமும் முல்லையும் கூடிய திணை மயக்கம் உண்டாகும்.

இவ்வாறு முல்லை, மருதம், நெய்தல், குறிஞ்சி என்னும் நால்வகை நிலங்களும் தத்தமக்குரிய தொழிலில் அமைதியாக ஈடுபட்டிருப்பதால், பல குலங்களில் தோன்றிய தூய குடிமக்கள் தீமையைக் கனவிலும் நினையாத சிந்தனையுடையவர்களாக வாழ்வார்கள். அத்தகைய சிறப்புடையது தொண்டை நாடாகும்!

இத்தகைய வளமான திருநாட்டில் காஞ்சிமா நகரம் என்னும் வரலாற்றுப் புகழுடைய நகரம் ஒன்று உள்ளது. அந்தப் பழம் பெரும் நகரில் உமா அம்பிகை அநேக தவம் புரிந்து சிவபெருமானை வழிபட்ட பெருமையை இனிச் சொல்கிறேன்.

ஒரு சமயம் திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமானிடம் உமாதேவி ஆகமங்களின் திறங்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்போது சிவபிரான், ‘‘நாம் விரும்பும் உண்மையாவது பூசனையே!’’ என்று கூறினார். அதனால் உமாதேவி சிவபெருமானைப் பூசித்துத் தவம் புரிய பேராவல் கொண்டார்.



தன் நாயகியின் உள்ளத்தில் நிறைந்திருக்கும் ஆவலை சிவபெருமான் அறிந்துகொண்டு, புன்முறுவலுடன் உமாதேவியாரை நோக்கி, ''உன் உள்ளத்தில் அடுத்ததாக நீ விரும்புவது என்ன?'' என்று கேட்டார். அதற்கு தேவி, ''நாதரே, நீங்கள் மொழிந்தருளிய ஆகம முறைப்படி உம்மைப் பூஜிக்க வேண்டும் என்ற ஆசை என்னுள் பொங்குகிறது!'' என்றாள். உடனே சிவபெருமான், ''நல்லது! தென்னாடு செய்த திருத் தவத்தால் அத் தென் திசையில் காஞ்சிபுரம் என்னும் நிலையான நகரம் ஒன்று இருக்கிறது. அங்குள்ள மாமரத்து நிழலில் இருக்கும் நம்முடைய கோயிலை அடைந்து உன் விருப்பப்படி பூஜை செய்து மகிழ்வாயாக!'' என்றார். அதற்கிணங்கி உமாதேவியும் அவரிடம் பிரியா விடை பெற்றுக் கொண்டு, சைவ ஆகம முறைப்படி சிவனாரை வழிபட அங்கிருந்து புறப்பட்டு தேவர்களும் பரிசனங்களும் புடைசூழ காஞ்சிபுரத்தை அடைந்தாள்.

அப்போது பதுமன் என்ற நாகம் உமாதேவியை அணுகி, தேவியின் திருவடிகளை வணங்கி, ''எல்லா உலகங்களையும் ஈன்றருளிய தாயே! அடியேன் வாழும் பிலத்தின் இடையில் அன்னையே, நீ அமர்ந்து திருக்கோயில் கொண்டருள வேண்டும்!'' என்று விண்ணப்பித்தது. உமையம்மையும் அவ்வாறே அருள் புரிந்தாள். அங்கு அளவிலாத இன்பத்தின் அருள் வடிவமான சிவலிங்கத்தை இருத்தி உமாதேவி இறைவனைப் பூஜை செய்ய விரும்பி இறைவனின் திருவுருவை எங்கும் தேடினாள். ஆனால் இறைவனின் திருவிளையாட்டால் எங்கும் சிவமாக நிறைந்திருந்ததே தவிர,

ஓர் உருவமும் எதிர்ப்படவில்லை. அதனால் பார்வதி தேவி பெரும் தவம் செய்தே ஈசனைக் காண விரும்பி எப்பொழுதும் திருவைந்தெழுத்தைத் தியானித்துக் கைகூப்பிய வண்ணம் அருந்தவஞ் செய்தாள். அதனால் அவளது தனிப்பெருங் கணவரான சிவபெருமான் அவள் காணும்படி மாமரத்தினடியில் வந்து சிவலிங்கத் திருமேனியாகத் தோன்றியருளினார். தான் செய்த பெருந்தவப் பயனால் ஏகம்பத்தில் எழுந்தருளிய ஏகாம்பரநாதரை உமாதேவி கண்டதும், தன் கூந்தல் கற்றை தலைவனின் திருவடிகளில் தாழ்ந்து தோயும்படி வணங்கி எழுந்தாள். நாதர் மீதுள்ள ஆசை தேவிக்கு உள்ளூரப் பொங்கியது. ஆயினும் அவரே உரைத்த ஆகம முறைப்படி அவரைப் பூஜை செய்ய வேண்டும் என்ற கொள்கைமீது விருப்பம் அளவின்றிப் பெருகியதால் உமாதேவி அவ்வாறே பூஜை செய்யத் தொடங்கினாள். தன் சேடியர்களான கமலி னியும், அனிந்ததையும் பூக்கூடைகளை ஏந்திக் கொண்டு தன்னுடன் வர உமாதேவி மென் தளிர் அடியெடுத்து வைத்து அம்பிகாவனம் என்னும் நந்தவனத்துக்குச் சென்று சிவபெருமானுக்கு ஏற்ற தூய புதுமலர்கள் கொய்தாள். பிறகு மணமுள்ள அம்மலர்களுடன் காப்பிடச் சந்தனம், மற்றும் தூப தீபங்கள் முதலான பூஜா சாதனங்களைக் கொண்டு வந்து தேவி விரும்பும் போதெல்லாம் சேடியர்கள் எடுத்து ஏந்த, ஆகம விதிகள் வழுவாது மெய்யன்போடு உலக மாதாவான எம்பிராட்டி பூஜை செய்து வந்தாள்.

‘‘இந்தப் பூசை கைமேல் பலன் தரும்!’’ என்பதை உமாதேவி உணர்ந்து உள்ளத்தில் ஏகாம்பரநாதர்மீது பெருங்காதல் கொண்டு, நன்மைகள் பெருகப் பேரன்பு மலர்ந்து, சிவலிங்கத்தின்முன் சிரம்பணிந்து எழுந்து நாள்தோறும் தவறாமல் பெரும் பூஜை செய்து வந்தாள். அதைக் கண்டு ஏகாம்பரநாதர் திருவுள்ளம் மகிழ்ந்தார். உமாதேவிக்குத் திருவருள் புரிய விரும்பினார். ஆயினும் காதல் மிகுதியினால் ஒரு திருவிளையாடல் செய்யக் கருதினார். அதற்காக ஏழு கடல்களும் ஒன்றாகத் திரண்டு வானம் முட்ட வருவது போலக் கம்பாநதியில் வெள்ளம் பெருகி வருமாறு செய்தார். அந்தப் பெருவெள்ளம் பொங்கிப் பாய்ந்து மேலெழுந்து ஓடி வருவதைக் கண்டதும் உமையவள் பதறினாள். அந்தப் பெருவெள்ளம் அவள் வழிபடும் சிவ லிங்கத்தின்மீது வந்து விழுமே என்று பயந்து சட்டென்று தன் கையால் அந்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த முயன்றாள். அப்படியும் அந்த வெள்ளம் நிற்காமல் முன்னே பாய்ந்து வந்தது. அதனால் உமாதேவி மிகவும் பயந்து அன்பு மிகுதியினால் மாமரத்தின் அடியில் சிவலிங்கமாக அமர்ந்திருக்கும் தன் நாயகரைக் கட்டித் தழுவிக் கொண்டாள். மலைச் சிகரங்கள் போன்ற தன் இரு

முலைகளும் சிவனாரின் மார்பில் பதிய, தன் வளைக்கரங்கள் இரண்டிலும் சிவனாரை வளைத்து நெருக்கி, காதல் பெருக்கோடு மிகவும் இறுக்கியே அணைத்துக் கொண்டாள்! அதைக் கண்டு சிவபெருமான் உள்ளூர உவந்து காதலன்பினால் கனிந்தார். தம் தேவியின் கொங்கைகளுக்கும் தளிர்க் கைகளுக்கும் மெத்தென்று குழையும்படி தம் வலிமையான திருமேனியையும் குழைந்து காட்டினார்.

ஏகாம்பரநாதர் தம் காதலி கட்டியணைக்கத் திருமேனி குழைந்ததைக் கண்ட சராசரங்களும் உருகி, ''எம்பிராட்டிக்கு மெல்லியரானார் ஏகாம்பரர்!'' என்று போற்றித் துதித்தன. தேவர்கள் கற்பக மலர்மாரி பொழிந்தனர். கம்பையாற்றில் எழுந்த பெருவெள்ளம் உமையம்மையின் திருமுன் வந்து வணங்கி அடங்கியது. தம் தேவி தழுவியதால் மெய்ப்பயனைப் பெற்ற சிவலிங்கப் பெருமான் தமது திருமேனியில் கைவளைத் தழும்பும் முலைச்சுவடும் அணிந்துகொண்டார்.

அன்பின் அமுது போன்ற உமாதேவியின் திருமுலைக்குக் குழைந்த தமது அழகான மணவாளத் திருக்கோலத்தை சிவபெருமான் தன் தேவி வாழும்படி காட்டி, அவள் முன்னால் நின்று, ''நீ வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள்வாயாக!'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

உடனே உமையம்பிகை கைகூப்பி திருவேகம்பரநாதரை வணங்கி, ''இன்று அடியாள் செய்யத் துவங்கிய பூஜை இன்னும் குறை நிரம்பி நிறைவேற்றிட அருள்புரிய வேண்டும்!'' என்று வேண்டினாள்.

அவளது தாமரை முகத்தை சிவபெருமான் புன்முறுவலுடன் நோக்கி, ''நம்பால் நின்பூசனை என்றுமே முடிவதில்லையே!'' என்று மொழிந்தார்.

''எம்பிரானே! என்னுடைய பூஜை எந்நாளும் நிலைபெறும்படி மகிழ்ந்தருள வேண்டும்! எக்காலத்திலும் அழியாத இந்த காஞ்சியம்பதியில் நான் முப்பத்திரண்டு அறங்களையும் செய்யும்படி கருணை புரியவேண்டும். இந்நகரத்தில் உள்ளவர்கள் திருவடி பிழைத்தலாகிய சிவாபராதம் ஒன்றொழிய வேறு எத்தகைய பிழைகளைச் செய்தாலும் அவர்களுக்கு மாதவப் பயனையே கொடுத்தருள வேண்டும்!'' என்று உமாதேவி பல வரங்களை வேண்டினாள்.

உமாதேவி விரும்பிய வண்ணம், சிவபெருமான் அவளது பூஜையை ஏற்றுக்கொண்டார். தேவியின் திருக்கையில் எக்காலத்திலும் அறங்களை இடைவிடாமல் வளர்க்கும் வித்தாக இகத்துக்கும் பரத்துக்கும் உரிய இருநாழி நெல்லைக்

கொடுத்தார். காஞ்சிமா நகரத்தில் வாழும் மக்கள் உயர்ந்தோராயினும் கடையராயினும் அவர்கள் செய்யும் தீவினைகளும் தடையின்றி மெய்நெறியினை அடைவதற்கு அவற்றையே மாதவங்களாக மாறும்படியும் வரங்கொடுத்தார்.

அதன் பிறகு உமாதேவி அக்காஞ்சிமாநகரில் காமாட்சி யம்மை என்ற திருப்பெயருடன் சிவபிரான் மகிழும் வண்ணம் நித்திய பூஜை செய்துகொண்டு, உயிர்களிடம் இல்லற தர்மம் பெருக்கும் கருணையினால் புண்ணியத் திருக்காமக் கோட்டத்தில் பொலிவுற வீற்றிருந்து முப்பத்திரண்டு அறங்களையும் முறைப்படி வளர்த்து வரலானாள்.


அறப்பெருஞ் செல்வியாகிய காமாட்சியம்பிகை மண்ணுலக மனைக்கு முத்தீபம் இடுவதை அறிவிக்கும் பொருட்டு, காம கோட்டத்தில் ஒரு நாளில் ஆண்டுக்கு ஒரு முறை முச்சுடர் போல மூன்று நீல மலர்கள் மலரும் அற்புதம் நிகழலாயிற்று. ஏகாம்பர நாதரைக் காமாட்சியம்பிகை வழிபட்ட காஞ்சிக் காமகோட்டத்துக்கு அண்மையில் உலகாணித் தீர்த்தம் என்னும் தீர்த்தம் ஒன்றுள்ளது. அது தன்னிடம் மூழ்குபவர்களின் பாவங்களைப் போக்கும் பெருமையுடையது. மண்ணுலகத்திலிருந்து மாபெரும் மோட்சத்துக்குச் செல்வதற்காக அமைக்கப்பட்ட ஏணிபோல் அத்தீர்த்தம் விளங்குகிறது. அறம் புரிந்து உலகம் காக்கும் அன்னையின் காம கோட்டத்தின்மீது சந்திரனும் சூரியனும் தத்தமது நேர் வழியில் செல்லாமல் பக்கங்களிலேயே சாய்ந்து செல்வதால் உண்டாகும் திசை மயக்கத்தை இன்றும் அங்கே காணலாம்!

கன்னி காமாட்சியால் காக்கப்படும் காஞ்சி என்னும் பெயரையுடைய நதிக்கரையில் 'திருப்பெரும் பெயர் இருக்கை' என்னும் ஆலயம் ஒன்று இருக்கிறது. அங்கு சூரியன் உதயமாகி எழுந்து தோன்றும் போதும் மேல் திசையில் விழுந்து மறையும் போதும் தன் நிழல் பிரியாது அடியிலேயே அடங்கும் காஞ்சித்தானம் என்னும் இடம் ஒன்றுள்ளது.

யானையை முயல் துரத்தும் தானமும், இறந்தோர் உடலை மீள உயிர் பெற்றெழச் செய்யும் தானமும், கண்டாலே இறவாத் தன்மையளிக்கும் இறவாத் தானமும், காஞ்சிபுரத்தில்

தொல்லை மறைதேர் துணைவர்பால் யாண்டுவரை,
எல்லை இருநாழிநெற் கொண்டோர் மெல்லியளால்!
ஒங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலி நீர்க்காஞ்சியிடை......

— தண்டியலங்காரம்,



இருக்கின்றன. இன்பம் தரும் புண்ணிய தீர்த்தம், இஷ்டசித்தி தீர்த்தம், மங்கல தீர்த்தம், காப்புடைத் தீர்த்தம், சாருவ தீர்த்தம் என்னும் பல தீர்த்தங்களும் இருக்கின்றன. அவற்றில் தேவலோகத்தவர்களும் நீராடுவார்கள். ஒரு நாளில் மூன்று மலர்கள் மலரும் பொற்றாமரைத் தடாகமும், மேற்கு திசையில் ஓடிப் பின் மறையும் ஒரு புனலும், பகலில் மலரும் செங்குவளையும், இரவில் மலரும் தாமரையும், நடுப்பகலில் மலரும் பாதிரியும், இரவில் உறங்காத காயாப்புளிய மரமும் திருக்காமக் கோட்டத்து வட்டாரத்தில் உள்ளன. தன்னைப் பார்த்தவர்களின் சாயை அவர்களுக்குப் புலப்படாமல் தன்னுள்ளே அடக்கிக் கொள்ளும் ஒரு கிணறும், சிறிது குடித்தாலும் விஷமாகக் கொல்லும் ஒரு தடாகமும், உள்ளே புகுந்தவர்களைக் குரங்குருவமாக்கும் ஒரு பிலத்துவாரமும், அக்குரங்கின் வடிவம் நீங்கும்படி குளிப்பதற்கான ஒரு பொய்கையும், விண்ணகத் தேவர்களோடு கலத்தலாகிய இன்பம் தரும் ஒரு பிலமும் இன்னும் பல அதிசயங்களும் அந்நகரில் அமைந்திருக்கின்றன.

அங்கு தவமுனிவர்களும் சித்த யோகிகளும் சேர்ந்திருக்கும் யோக பீடமும், காமாட்சி தேவியார் எழுந்தருளிய போக பீடமும் இருக்கின்றன.

இரவுக் காலத்தின் இருளை மாற்றும் வண்ணம் தேவர்கள் வந்து சூழ்ந்திருக்கும் உருத்திர சோலை என்னும்

ஒரு பூங்காவனமும், மெய்நெறியில் நிற்பவர்கள் விரும்பித் தொட்டால் எதையுமே செம்பொன்னாக மாற்றக் கூடிய ஒரு சிலையும் அங்கு உள்ளன.

எக்காலத்தும் அழியாது விளங்கும் காஞ்சிபுரத்தின் வளமையைக் கலியுகத்தில் சிந்தமேதன் என்ற ஒரு வேடன் கண்டு கரிகாற்பெருவளத்தான் என்ற சோழ மன்னனிடம் அதைப்பற்றி எடுத்துரைத்தான். உடனே கரிகாற்சோழன் அங்கு வந்து, காடெறிந்து நாட்டைத் திருத்தம் செய்து, மதில் எழுப்பி, நான்கு காத தூரம் சுற்றெல்லை உடைய ஒரு நகரமாக அதை வகுத்தான். அங்கு மக்களையும் குடியேற்றினான்.

மாட மாளிகைகள் கூடகோபுரங்கள் உள்ள நீண்ட தெருக்களும், கடைவீதிகளும், அவ்வீதிகளில் நடை பயிலும் பெண்கள் கூட்டமும், அன்புருகி ஆனந்தக் கண்ணீர் சொரியும் சிவனடியார் கூட்டமும், அந்நகரில் நிறைந்திருக்கும் மாளிகை முற்றங்களில் விற்புருவ மங்கையர் பூப்பந்தும் பூங்கழங்கும் வீசி விளையாடும் போது அவர்கள் அணிந்திருக்கும் ஆபரணங்கள் சிதறி விழும்! பஞ்சணைக் கூடங்களில் தங்கள் நாயகரோடு பொருந்தி நாயகிகள் அன்பு முதிரக் கூடி மருவும்போது அவர்கள் உடம்பிலிருந்தும் அணிமணிகள் சிதறி விழும்! அதனால் காஞ்சிமாநகரில் நீர் மழையோடு நவமணி மழையும் பொழிவதுபோல் தோன்றும்!

அங்கு அருமறை வல்ல அந்தணர்கள் வாழும் இருக்கைகளும், அரச மரபினர் வாழும் பெரிய வீதிகளும், வணிகர் வீதிகளும், வேளாளர் வீதிகளும் சிறந்து விளங்குகின்றன. அங்கு உமாதேவிக்கு இறைவன் கொடுத்த இரு நாழி நெல்லின் மூலம் வளரும் நெல் செல்வத்தை வேளாளர்கள் பெற்றுக்கொண்டு உழவுத் தொழில் செய்து எக்காலத்தும் அறம் பல புரிந்து செழிப்புடன் விளங்குகிறார்கள். வீதிகளில் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு திருவிழா நடந்து கொண்டே இருக்கும்! வாயில் எங்கும் தோரணம் தொங்கும்!

காஞ்சிபுரத்தில் வாழ்பவர்களிடையே தீயன, பிணியன அசைவு, திகைப்பு, பயம் முதலியன கிடையாது. அந்நகரில் தீயன, வேத வேதியர்களின் வேள்வியே தீயை உடையன! மங்கையரின் கூந்தலில் உள்ள மலர்களே, பிணியன! அங்கு தளர்வன, பெண்களின் இடைகளே! அசைவன, உப்பரிகைகளிலுள்ள கொடிகளே! திகைப்பன, நெற்றிப் பட்டத்தையுடைய யானைகளே! பயத்தை (பழத்தை) உடையன சோலைகளிலுள்ள மரங்களே!

இத்தகைய திருநகரான காஞ்சிபுரத்தில் ஏகாலியர் (வண்ணார்) குலத்தில் பிறந்த மெய்யன்பர் ஒருவர் இருந்தார். அவர் இவ்வுலகப் பிறப்பினால் வண்ணாராகத் தொழில் புரிந்து வந்தார் என்றாலும், ஒழுக்க நெறியில் நின்று, சிவபெருமானின் திருவடிகளை வணங்கும் வழித் தொண்டராக விளங்கினார். இம் மண்ணுலகில் அவர் வண்ணாராகத் தோன்றிய பிறகு தம்முடைய மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினையும் சிவபெருமானின் சேவடிக்கே சார்பாக வைத்தார். புண்ணிய மெய்த் தொண்டர்களான சிவனடியார்களின் திருவுள்ளக் குறிப்பை அறிந்து போற்றும் இயல்புடையவராக இருந்ததால் அவருக்குத் திருக்குறிப்புத் தொண்டர் என்ற சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று. அவர் சிவனடியார்களுக்கு வஸ்திரம் வெளுத்துக் கொடுக்கும் திருத்தொண்டு செய்து வந்தார். அடியார்கள் உடுத்திய ஆடைத் துணிகளின் அழுக்கைப் போக்குவதைப் போலவே தமது பழவினை பற்றி வரும் மும்மல அழுக்கையும் பிறவிப் பெரு அழுக்கையும் போக்கும் பணியில் ஈடுபட்டு வந்தார்.

அவ்வாறு அப்பெரு வண்ணார் திருத்தொண்டு புரிந்து வரும்போது, சிவபெருமான் அவருடைய தொண்டின் நிலைமையைக் கண்டு அருள் புரிய விரும்பினார். அதற்காகக் குளிர் காலத்தில் ஒருநாள், சிவபெருமான் ஒரு சிவனடியாரைப் போல் வேடம் தாங்கி திருநீறு பூசி, மிகவும் அழுக்கேறிய கந்தையை உடுத்திக் கொண்டு மெலிந்த மேனியராகவும் வறியவராகவும் குறுநடை நடந்து, திருக்குறிப்புத் தொண்டனாரிடம் சேர்ந்தார். அவருடைய திருமேனியெங்கும் திருவெண்ணீறு வெண்மையாக விளங்கினாலும் அவர் உடுத்தியிருந்த ஆடையோ கருமேகம் போல் அழுக்கின் கறுப்பேறிக் கந்தலாகக் கண்ணை உறுத்தியது.

அவரைக் கண்டதும் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் மகிழ்ந்து எதிர்கொண்டு வரவேற்று, உடம்பெல்லாம் மயிர்க்கூச்சு எழும்ப அவரைப் பணிந்து எழுந்தார். பிறகு தம்மிடம் வந்த அருந்தவத்தாரின் உள்ளக்குறிப்பை அறிந்து நாயனார் இன்மொழி பல மொழிந்து, ''தவசியாரே! தங்கள் திருமேனி இளைத்திருப்பதென்ன?'' என்று கேட்டுக் கைதொழுது, ''தவப் பெரியோரே! தாங்கள் அணிந்துள்ள கந்தையைத் தந்தருளும். அதன் அழுக்கைப் போக்கும்படி நன்றாக வெளுத்துத் தருகிறேன்!'' என்றார்.

அதைக் கேட்டதும் சிவனடியார் வேடத்திலிருந்த சிவபெருமானோ, ''நான் அணிந்திருக்கும் இந்தக் கந்தை அழுக்கேறியதுதான்! இனிமேல் தாங்குவதற்கும் இது தகுதியற்றதுதான்! என்றாலும் உடலை நடுக்குறச் செய்யும்

இராக் குளிருக்குப் பயந்து இந்தக் கந்தலாடையைக் கைவிடமாட்டேன்! ஆயினும் சூரியன் மேற்குக் கடலில் மறைவதற்கு முன்னதாக இந்தக் கந்தையை நீர் நன்றாக வெளுத்து உலர்த்திக் கொடுப்பீராகில் இதை வாங்கிக் கொண்டு போய் சீக்கிரம் வெளுத்துக் கொண்டு வாரும்!'' என்று கூறினார்.

உடனே நாயனார், ''அடியேன் காலந் தாழ்த்தாமல் உமது கந்தையை வெளுத்து அந்திப் பொழுது சாய்வதற்குள் கொண்டு வந்து உம்மிடம் கொடுக்கிறேன்!'' என்று வேண்டினார்.

சிவனடியாராக வந்த சிவபெருமான், ''இந்தக் கந்தையைப் பொழுது போவதற்குள் அதி விரைவாக வெளுத்து உலர்த்திக் கொடுத்துவிட வேண்டும். அவ்வாறு நீர் திருப்பித் தரவில்லை யென்றால் இவ்வுடலுக்குத் துன்பம் செய்தவராவீர்!'' என்று கூறிக் கந்தையைக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

அவருடைய கந்தையைக் குறித்த பொழுதிற்குள் வெளுத்துக் கொடுப்பதற்காக நாயனார் அதை எடுத்துக்கொண்டு நீர்த் துறைக்குச் சென்றார். வண்ணார்கள் துணி வெளுக்கும் நீர்த் துறையில் நாயனார் உவர் மண் முதலியன ஊட்டி, வெள்ளாவி வைத்து கந்தையை வெளுக்கப் புகுந்தார். அப்போது சிவபெருமானின் திருவருட் சோதனையால், பெரும் பகற்பொழுது கழிந்து பின்பகலாக மாறி கருமேகங்கள் திரண்டெழுந்து மழை பொழியத் தொடங்கியது. அது பெரும் அடைமழையாகி திசை தெரியாதபடியும், கண்பார்வை நுழைய முடியாதபடியும் பெரும் மழைத் துளிகளைச் சரமாரியாகக் கொட்டுக் கொட்டென்று கொட்டியது. அம்மழையினூடே திருக்குறிப்புத் தொண்ட நாயனாரால் அக்கந்தையை வெளுத்துக் காயவைக்க முடியவில்லை. அதைக் கண்ட மெய்யன்பரின் மனம் சஞ்சலமடைந்தது. அறிவு குழம்பியது. பொழுது போவதற்குள் கந்தலாடையை வெளுத்துத் தருவதாக தவசியாருக்குக் கொடுத்த வாக்குறுதியை நினைத்து நாயனார் மிகவும் மனம் வருந்தி, ''இனி நான் என்ன செய்வேன்?'' என்று திகைத்தார். ''ஓயாமல் பொழியும் இந்தப் பெருமழை ஒருவேளை இன்னும் சிறிது நேரத்தில் நின்றொழியலாம்!'' என்று நாயனார் எதிர்பார்த்து ஒருபுறம் தனியே ஏங்கி நின்றார். மழையோ விடக் காணோம்! பொழுதோ இருட்டிக் கொண்டு பகைவரைப்போல இரவும் வரத் தொடங்கியது.

''ஆ! ஆ! உடல் குளிரும் அத்தவசியாரிடம் என் குற்றேவல் தவறிவிட்டதே!'' என்று நாயனார் மெய் சோர்ந்து விழுந்தார்.

‘‘மழையோ விடாது பெய்கிறது! தவசியார் குறிப்பிட்டுச் சொன்ன பொழுதும் கழிந்து இராப்பொழுதும் வந்து விட்டதே! அம்முனிவரின் ஆடையை முன்பே வீட்டில் வெளுத்துக் காற்றில் உலர்த்தாமற் போனேனே! என்னுடைய அறிவுக்கு இது எட்டவில்லை! என் செய்வேன்? தவம் மிக்கப் பெரியாரின் திருமேனி இந்த இராக் குளிரால் ஜில்லிட்டுத் தவிக்குமாறு தீவினை இழைத்து விட்டேனே!’’ என்று திருக்குறிப்புத் தொண்டர் பலவாறாகவும் வருந்தினார்.

முடிவில் தொண்டனார், ‘‘அத்தகைய தீவினை புரிந்த எனக்கு இனிமேல் செய்யவேண்டியது இதுதான்!’’ என்று துணிந்தெழுந்து, ‘‘கந்தைகளை அடித்துத் துவைக்கும் கற்பாறையின் மீது என் தலையையே மோதியுடைத்துச் சிதறடிப்பேன்!’’ என்று கூறி விட்டு, கற்பாறை மீது தம் தலையை மோதி உடைக்கலானார்.

அப்போது கற்பாறையின் அருகிலிருந்து வளைத்தழும்புடன் கூடிய ஏகாம்பரநாதரின் மலர்ச் செங்கை தோன்றியெழுந்து, திருக்குறிப்புத் தொண்ட நாயனாரின் தலையைப் பிடித்து நிறுத்தியது. உடனே, விடாமல் பெய்து கொண்டிருந்த பெரு மழையும் நின்று, இருமருங்கும் மலர் மழை பொழிந்தது. கொன்றை மாலை அணிந்த சிவபிரான், உமையம்மையுடன் விடைமேல் தோன்றிக் காட்சி தந்தருளினார்.

திருக்குறிப்புத் தொண்டர் பேரன்பினால் உள்ளமெல்லாம் உருகி, கைகூப்பி எம்பெருமானைத் தொழுது நின்றார். அவரை முக்கண் பெருமான் நேரிடையாக நோக்கி, ‘‘உனது நிலையை மூவுலகும் அறியும்படிச் செய்தோம்! நீ நமது உலகை அடைந்து நம்மைப் பிரியாது வாழ்ந்திருப்பாயாக!’’ என்று அருள் சுரந்து ஏகாம்பரமாம் திருக்கோயிலினுள் மறைந்தருளினார். அடியாரும் அரனாரின் திருவடிகளை அடைந்தார்.

இத்தகைய திருக்குறிப்புத் தொண்டரின் திருத் தொழிலைப் போற்றி விட்டு, அடுத்ததாகத் தந்தையின் கால்களையே வெட்டியெறிந்த சண்டேசுர நாயனாரின் திருத்தொண்டைச் சொல்கிறேன்.

‘‘திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்’’

— சுந்தரர்.

25. சண்டேசுர நாயனார்

சோழ நாட்டில், சேய்ஞலூர் என்னும் ஒரு மூதூர் இருக்கிறது. அது மண்ணியாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது.

முன்னாளில் கிரவுஞ்ச கிரியைப் பிளந்து தன் வேலாயுதத்தின் தன்மையைக் காட்டி சூரபதுமன் முதலான அசுரர்களை வென்ற முருகப் பெருமானால் விரும்பப்பட்டதால் ★**சேய்ஞலூர்** என்ற பெயருடன் திகழ்கிறது. சிவநெறியின் திருநீற்றில் ஒருமை அன்பு கொண்டவர்களும், முத்தீ வளர்ப்பவர்களும், நான்கு மறைகளையும் நன்கு ஓதியுணர்ந்தவர்களும், ஐம்புலச் சேட்டைகளை அடக்கியாள்பவருமாகிய மறையவர்கள் அவ்வூரில் சிறந்து விளங்குகிறார்கள். மார்பில் பூணூலும், தலையில் குடுமியும் உள்ள மாணவச் சிறுவர்கள் வேதபாடசாலைகளில் வேதம் ஓதுவார்கள். அவர்களுக்கு ஆசான்கள் வேதம் ஓதுவிப்பார்கள். அந்தக் காட்சி நட்சத்திரங்களும் சந்திரனும் வேத பாடசாலைகளில் பொருந்தியிருப்பதுபோல் தோன்றும். மேகங்கள் ஒதுங்க மடங்களில் வேத ஒலிகள் முழங்கிக் கொண்டிருக்கும். வேள்விச் சாலைகளில் வேள்விகள் நிகழ்ந்து ஓயாமல் ஓமப்புகை எழும்பிக் கொண்டிருக்கும். வீதிகளில் பால் ஒழுகப் பசுக்கள் பொழுதெல்லாம் போய்க் கொண்டிருக்கும். சாமகானம் பாடிய வேதியர்கள் அதைப் பற்றிச் சிந்தித்த வண்ணமே சமித்துகளுடன் அத்தெருக்களில் வருவார்கள். அந்தணப் பெண்கள் பசுமையான தடாகங்களில் குளித்துவிட்டு, அத்தெருக்களில் நுழைவார்கள். இதுபோன்ற அழகான தெருக்கள் அவ்வூரில் பல உண்டு. ஊரின் அருகே ஓடும் மண்ணியாற்றின் அலைகள், வயல் வரப்பின் சரிவில் நீர் முத்துக்களைச் சொரியும். அதன் கரைகளில் பெரிய யாகசாலைகள் அமைந்திருக்கும்! ஆங்காங்கே வேள்வியை முடித்துச் செல்லும் தலைவர்களின் பெருந்தேர்களும், அவிர்ப்பாகம் உண்டு செல்லும் தேவர்களின் விமானங்களும் நெருங்கித் தோன்றும்.

★சேந்தன் : முருகன்.

''சேயடைந்த சேய்ஞலூர்'' – சம்பந்தர் தேவாரம்.

இந்தத் தலம், கும்பகோணத்திலிருந்து சென்னை செல்லும் நெடுஞ்சாலையில் சுமார் ஒன்பதாவது மைலில் இருக்கிறது.



தில்லையில் பொன்னம்பலம் வேய்ந்து புகழ் பெற்றவன் அபய குலோத்துங்கன். அவனது வழித்தோன்றலான அநபாய சோழரின் முன்னோர்கள் முடிசூட்டிக்கொள்ளும் ஐந்து தலை நகரங்களில் இந்த சேய்ஞலூரும் ஒன்றாக விளங்கியது. பண்ணுக்கு இசையும், கண்ணுக்கு ஒளியும், பாலுக்குச் சுவையும், கருத்துக்குத் திருவைந்தெழுத்தும், விண்ணுக்கு மழையும், வேதத்துக்குச் சைவமும் பயனாவதைப் போல மண்ணுலகத்திற்குப் பயனாவது, சேய்ஞலூராகும்!

இத்தகைய பெருமை வாய்ந்த சேய்ஞலூரில், இல்லற தர்மத்தைக் கடைபிடிக்கும் அந்தணர் மரபில் காசிபர் கோத்திரத்தில் எச்சதத்தன் என்ற ஒருவன் தோன்றி வாழ்ந்து வந்தான். பாம்பிடம் நல்ல மணியும் தீய நஞ்சும் ஒருங்கே இருப்பது போல், நல்வினை, தீவினை இரண்டுக்கும் எச்சதத்தன் ஒரே வடிவமாக விளங்கினான். அவன் பவித்திரை என்பவளை மனைவியாகப் பெற்று இல்வாழ்க்கை நடத்திவந்தான். பவித்திரை நற்குடியில் பிறந்தவள். சுற்றத்தார்களைப் பேணும் இல்வாழ்க்கைத் தொழிலுடையவள். புத்திரனைப் பெற்றுப் பெருமையடையும்படியான தவம் செய்தவள். சிவப்பற்று விளங்கவும், அந்தணர் குலம் ஓங்கவும், ஏழுலகம் உய்யவும், சைவ உண்மைத் திறன் விளங்கவும் விசாரசர்மர் என்பவர் வந்து பிறந்தார்.

விசாரசர்மருக்கு முற்பிறவி உணர்ச்சி உண்டு! அதனால் அவருக்கு வயது ஐந்து ஆண்டுகள் நிரம்பியவுடனே அறிவு

மலரத் தொடங்கியது. அரும்பில் மறைந்துள்ள நறுமணமானது மலராக மலர்ந்தவுடன் வெளிப்படுவதுபோல், அவர் முந்திய பிறவியில் பெற்றிருந்த வேத ஆகமங்களின் அறிவெல்லாம் சிவஞானமாக மலர்ந்து வளரலாயிற்று!

அவருக்கு வயது ஏழாண்டுகள் நிரம்பியதும் அவருடைய பெற்றோர்கள், அந்தண குல வழக்கப்படி அவருக்கு உபநயனச் சடங்கு செய்து முடித்து அவருக்கு வேத பாடசாலையில் வேதங்களை ஓதுவிக்கும்படியும் செய்தார்கள். வேதங்கள் முதலான பல கலைகளையும் அவருக்குப் போதிப்பதற்கு முன்னரே, அவருக்கு இயற்கையாக அமைந்துள்ள அறிவாற்றல்களைக் கண்டு அவரது ஆசிரியர்களே வியந்தார்கள். ''அளவற்ற கலைகளின் பொருள்களுக்கெல்லாம் முடிவான பொருள் தில்லையில் அருட்பெருங் கூத்தாடும் திருவடியே!'' என்பதை அந்தச் சின்னஞ் சிறு பெரியார் தெளிவாக உணர்ந்து அந்த மார்க்கத்திலேயே தம் சிந்தையைச் செலுத்தினார். ''ஆனந்தத் தாண்டவமாடும் ஆண்டவரே நம்மை உடையவர்'' என்னும் மெய்யுணர்வு எப்போதும் அவருடைய சிந்தையில் வளர்ந்து கொண்டிருந்தது. அதனால் உள்ளூர ஊறிவரும் அன்பிலே சிவநேசம் முதிர்ந்து பெரும் காதலாகப் பொங்கியெழுந்தது. மேன்மேலும் எழும் அந்தக் கருத்திலே அவரது நெஞ்சு திடப்பட்டு நின்று செம்மலராகத் திகழ்ந்தது.

ஒருநாள் வேதமோதும் அந்தணச் சிறுவர்களுடன் பாலகரான விசாரசருமர் புறப்பட்டுத் தெருவழியே சென்று கொண்டிருந்தார். ஊரிலுள்ள பசுக்களும் அவருடன் அந்தத் தெரு வழியே சென்று கொண்டிருந்தன. அப்போது கன்றை ஈன்ற பசுவொன்று தன்னை மேய்க்கும் இடையனைத் தன் கொம்பினால் முட்டப் போயிற்று. உடனே இடையன் சிறிதும் கூசாமல் தன் கையில் கம்பை எடுத்து அந்தப் பசுவை நையப் புடைக்கலானான். அதைக் கண்டதும் விசாரசருமர் அந்தப் பசுவின் மீது மிகவும் இரக்கங்கொண்டு, அந்த இரக்கத்தினாலேயே வெகுண்டு விரைந்து சென்று அவன் அப்பசுவை மேலும் அடியாதபடி அவனை விலக்கித் தடுத்தார். அருமறைகள் முதலான நூல்கள் மூலமாக உலகிலுள்ள அனைத்தையும் விசாரசருமர் அறிந்து தெளிந்தவராதலின் மெய்யுணர்வோடு பசுக்களின் பெருமையை அந்த ஆயனுக்கு எடுத்துரைக்கலானார்.

''பசுக்கள் நல்லவை! உலகத்திலுள்ள உயிர்கள் எல்லா வற்றையும்விடப் பெருந்தன்மை உடையன. தூய தீர்த்தங்களெல்லாம் என்றும் பசுவிடம் பொருந்தியுள்ளன. தேவர் முனிவர் கூட்டங்கள் சூழ்ந்து பிரியாத அம்சங்களைக்

கொண்டவையன்றோ பசுக்கள்? ஆனந்தக் கூத்தாடும் சிவபெருமானின் திருமுடியில் அபிஷேகம் செய்வதற்கு பஞ்சகவ்யம் தரும் உரிமையும் சிறப்பும் பசுக்களுக்குத்தான் வாய்ந்திருக்கின்றன. சிவபெருமானின் திருமேனியில் பூசத்தக்க திருநீற்றுக்கு மூலமான கோமயத்தையும் (சாணத்தை) பசுக்கள்தாம் தருகின்றன. சிவனாரும் உமாதேவியாரும் அமர்ந்தருளும் ரிஷப தேவரின் குலத்தைச் சேர்ந்தவையன்றோ இப்பசுக் கூட்டம்?'' என்று இன்னபலவும் அந்த இடையனுக்குக் கூறினார். ''இத்தகைய பெருமை வாய்ந்த பசுக்களின் பிரியப்படி அவற்றைக் காத்து வருவதே சிறந்த கடமை! கன்றோடு கூடிய பசுக்காத்தலைவிடச் சிறந்த் சிவ வழிபாடும் உண்டோ? அம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடும் சிவபெருமானின் திருவடியை வழிபடுவதற்கு இந்தப் பசுக்காத்தலே நமக்கு நெறியாகும்!'' என்று சிறுவர் விசார சர்மர் துணிந்து அந்த ஆயனை நோக்கி, ''நீ இப்பசுக்களை மேய்க்கும் தொழிலை விட்டுவிடு! இனிமேல் நானே இவற்றை மேய்த்து வருகிறேன்!'' என்று கூறினார்.

இடையன் பயந்து நடுநடுங்கி, அவரை நோக்கி கை கூப்பிக் கும்பிட்டுவிட்டு மேய்த்தல் தொழிலையே விட்டுவிட்டு ஓடிப் போய்விட்டான். அதன்பிறகு வேதியச் சிறுவரான விசார சருமர் அந்தணர்களின் இசைவைப் பெற்று, அன்று முதல் பெரும் பசுக் கூட்டத்தை மேய்க்கும் திருத்தொண்டு புரிந்துவந்தார்.

அந்த மறையவர் குலச் சிறுவர் மாடு மேய்க்கும்போது அவரது தலையிலுள்ள குடுமி அலையும்; மான் தோலும் பூணூலும் சிறு மார்பிலே துவளும். அரைக் கோவணம் ஒளி வீசும். அவர் கோலுங் கயிறுங் கொண்டு பசுக்களைப் புற்கள் நிறைந்த மேய்ச்சல் நிலங்களில் தாமே ஓட்டிச் சென்று அவை விரும்புமளவு புற்களை மேயவிடுவார். அவை மேயமுடியாத இடங்களில் புற்களைத் தாமே பறித்துவந்து பசுக்களுக்கு ஊட்டுவார். அவற்றின் துன்பங்களை அகற்றுவார். நல்ல தண்ணீர்த் துறைகளுக்கு அவற்றை ஓட்டிச் சென்று தூய நீரை இதமாக அருந்தச் செய்வார். அவற்றின் அச்சத்தை அவரே முன்னின்று அகற்றுவார். வெய்யில் நேரங்களில் நிழற்பாங்கான இடங்களுக்கு ஓட்டிச் சென்று அமர்விப்பார். பால் கறக்கும் வேளைகளில் தவறாமல் அப்பசுக்களை அவரவர் வீடுகளுக்கு ஓட்டிச் சென்று விட்டுவருவார். மண்ணியாற்றங் கரையிலுள்ள முல்லை நிலங்களிலும் பள்ளங்களிலும் குளிர் நீர் பாயும் மருத நிலத்துச் சோலைப் புறங்களிலும் ஏராளமான பசுக்களை அவர் மேய்த்துப் பொழுது இருட்டுமுன் திரும்பி வருவார். அவருடைய மேற்பார்வையில் பசுக்களெல்லாம் மிகப் பெருகி மிக அழகோடு செழுமையாக விளங்கின. இனிய

புல்லுணவும் நன்னீரும் அருந்துவதால் அவை பெரிதும் மகிழ்வுற்று இரவும் பகலும் பால் மடி பெருகி முன்னைவிடப் பன்மடங்கு பாலைச் சொரிந்தன. வேள்விக்குப் பால் தரும் பசுக்கள் அதிகப் பொலிவுடன் முன்பைவிட அநேகமடங்கு பால் கறப்பதைக் கண்ட வேதியர்களெல்லாம் அகம் மகிழ்ந்து, ''இப்பிரமசாரிச் சிறுவன் அன்போடு பேணி மேய்த்ததால் பசுக்கள் மிகவும் செழிப்படைந்திருக்கின்றன!'' என்றார்கள்.

பசுக்கள் எல்லாவகையிலும் அளவற்ற மகிழ்ச்சியடைந்தன. வீடுகளில் பசுக்கள் தங்கள் கன்றுகளைப் பிரிந்தாலும் மனந்தளரா! வேதக் கன்றான விசாரசருமரைப் பிரிந்தால்தான் அவை மனம் தளரும். அதனால் அவ்வேதியச் சிறுவரைக் கண்டதும் அப்பசுக்கள் அவரருகே அன்போடு வந்து மனமுருகி நிற்கும்! அவரைத் தம் கன்றாகப் பாவித்து உருகி உருகித் தாய் போல் குரல் எழுப்பிக் கனைத்து, பால் மடிசுரந்து, கறவாமலேயே அவை பாலைப் பொழியும்! பசுக்கள் அன்பால் சொரியும் பாலைக் காணும்தோறும் காணும்தோறும் விசாரசருமருக்கு சிவபெருமானுக்குப் பாலாபிஷேகம் செய்யும் திருமஞ்சன நினைவு தோன்றும். அதனால் சிவபூஜை செய்ய வேண்டும் என்ற வேட்கை அவருக்கு விரைந்தெழும்! முற்பிறவியில் அவர் சிவபூஜை செய்த உணர்வின் தொடர்ச்சியால், இப்போது அச்சிறுவர் விளையாட்டாகப் பொங்கும் அன்போடு சிவபூஜை செய்ய முனைவார். மண்ணியாற்றங் கரையிலுள்ள ஒரு மணல்திட்டில், ஆத்தி மரத்தின் கீழே, சிவனாரின் உருவமாகிய இலிங்க வடிவை மணலால் உருவாக்கி வைப்பார்.

அதற்கு மணலாலே சின்னஞ்சிறு சிவாலயமும் கட்டுவார். மணலாலேயே திருமதில்களும், கோபுரங்களும், பிரகாரங்களும் வகுத்தமைப்பார். வழிபாட்டுக்குப் பூப்பறித்து வர இலைகளாலேயே ஒரு பூக்கூடை கோப்பார். அத்தி மலர், செழுந்தளிர், அருகில் வளரும் முல்லை நிலத்துக் காட்டுப் பூக்கள் முதலானவற்றையும், இறைவரின் திருமுடி மீது சாத்துவதற்கு திருப்பள்ளித் தாமங்கள் பலவற்றையும் அவர் கொய்து அப்பூக் கூடையில் கொண்டு வருவார். நாணற் பூங்கொல்லை, ஆற்றிடைக் குறை மறைவு முதலான இடங்களில் மேயும் பசுக்களிடம் அவர் சென்று, கறவைப் பசுக்கள் ஒன்றுக்கு ஒரு காம்பாக மடியைத் தொடுவார். உடனே ஒவ்வொரு பசுவும் கனைத்துப் பால் சொரியும்! அப்பாலையெல்லாம் அவர் ஒரு குடம் நிறைய நிரப்பிக்கொண்டு வெண்மணல் ஆலயத்தின் முன்னுல் வைப்பார். முற்பிறப்பின் உணர்விஞல் திருப்பள்ளித் தாமங்களைக் கொண்டு

சிவலிங்கத்துக்கு அர்ச்சித்துக் கறவைப் பாலினால் திருமஞ்சனமாட்டுவார். பூசைக்குக் கிட்டாத பொருள்களை மனதினால் பாவித்து நிரப்புவார்.

அவருடைய மனோபாவனையால் உருவாக்கிய சின்னஞ்சிறு மணல் லிங்கத்தினுள் சிவபெருமான் கலந்து நின்று அத்தகைய அன்புப் பூஜையை விருப்போடு ஏற்றருள்வார். வேதியச் சிறுவர் விசாரசர்மர் அவ்வாறு உள்ளன்போடு இறைவருக்குப் பாலாபிஷேகமும், பூவார்ச்சனைகளையும் செய்து மனம் மகிழ்ந்து வருவார். அவருடைய சிவபூஜைக்கு கறவைப் பசுக்கள் குடம் நிறையப் பால் சொரிந்தும் உதவியும் கூட உரியவர்களான மறையவர்களின் வீடுகளிலும் உரிய பாலைச் சிறிதும் குறையாதபடி வழங்கி வந்தன.

இவ்விதம் சேய்ஞலூர்ப் பிள்ளையான விசாரசருமர் விளையாட்டாக மணல் லிங்கத்திற்குப் பாலாபிஷேகத்தோடு பூஜை செய்து வரும் நாட்களில் ஒரு நாள், அயலான் ஒருவன் சேய்ஞலூர்ப் பிள்ளையின் அச்செய்கையைக் கண்டான். விளையாட்டுப் பூஜையின் உண்மைத் திறத்தை அவன் உணராதவனாய், அவ்வூர் அந்தணர்களிடம் சென்று, பால் வீணாவதாகக் கூறி விசாரசருமரின் செய்கையை அறிவித்தான். அதைக் கேட்ட அந்தணர்கள் ''இடையனுக்கு மாடு மேய்க்கத் தெரியவில்லையென்று சொல்லி அந்தப் பிராமணச் சிறுவன் நம்முடைய பசுக்களின் குணமறிந்து அவனே மேய்ப்பதாகக் கூறினான். ஆனால் அவன் நம்மை எல்லாம் வஞ்சித்து நம்முடைய பசுக்களிடம் பாலைக் கறந்து கொண்டு பொய் வேடம் போட்டு நடிக்கிறான். அவனுடைய பொல்லாங்கைச் சொல்வதற்கு அவன் தந்தை எச்சதத்தனை, அழைத்து வாருங்கள்!'' என்று கூறினார்கள். உடனே அருகில் நின்றவர்கள் எச்சதத்தனின் வீட்டிற்குச் சென்று அவனை அழைத்துக் கொண்டு வந்து அந்தணர்களின் சபையில் நிறுத்தினார்கள்.

சபையிலுள்ள அந்தணர்கள் எச்சதத்தனைப் பார்த்து ''மறையவனே! மாடு மேய்த்த உன் மகனின் தீங்குச் செயலைக் கேள்!'' என்று அது நிகழ்ந்த விதத்தைக் கூறலானார்கள். ''அந்தண வேதியர்களின் ஆகுதிக்குப் பால் கறக்கும் பசுக்களை யெல்லாம் உன் சிறுவன் அன்போடு மேய்ப்பவன்போல் நடித்து அவற்றை மண்ணியாற்றங் கரைக்குத் திரளாக ஓட்டிச் சென்று, பாலைக் கறந்து அவன் மனம் போனபடியெல்லாம் மணலில் கொட்டி விளையாடி வீணாக்குகிறானாம்! இதை ஒருவன் வந்து சொன்னான்!'' என்று புகார் தொடுத்தார்கள்.

அம்மறையவர்களின் சொற்களைக் கேட்ட எச்சதத்தன் மிகவும் பயந்து நடுங்கி, ''பெருமை நிறைந்த பிராமணோத்தமர்களே! என் சிறுபயல் செய்த பிழை இது! இதுபற்றி எனக்குச் சிறிதும் தெரியாது! இதற்கு முன் நடந்ததை நீங்கள் பொறுத்தருள வேண்டும். இனிமேலும் அது போல் பிழை நிகழுமானால் அக்குற்றம் என்னுடையதேயாகும்!'' என்று சொல்லிவிட்டு அவர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு போய், சந்தியாவந்தனம் செய்துவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான். தன் மகனால் தனக்கு இப்படியொரு பழி வந்ததே என்று நினைத்து அவன் வருந்தினான். ஆனால் அதைத் தன் மகனிடம் வாய்விட்டுச் சொல்லாமல், ''இந்த நிலைமையை நானே நேரில் கண்டறிவேன்!'' என்று முடிவு செய்தான்.

அன்றிரவு கழிந்தது!

மறுநாள் காலையில் எச்சதத்தனின் சிறு மகனாரான விசாரசருமர் வழக்கம்போல் மறையவர்களின் பசுக்களை மேய்ப்பதற்காக ஓட்டிச் சென்றார். அவருடைய தந்தை எச்சதத்தன் அவருக்குத் தெரியாமல் அவர் பின்னாலேயே மறைந்து சென்றான். ஊரிலுள்ள பசுக் கூட்டங்களை எல்லாம் விசாரசருமர் ஓட்டிச் சென்று மண்ணியாற்றங்கரையில் அவற்றை மேயவிட்டார். அப்போது அவரது தந்தை எச்சதத்தன் அங்கு மணல் திட்டின் அருகேயுள்ள ஒரு குராமரத்தில் ஏறிக்கொண்டு, நிகழ்வதை அறிந்து கொள்வதற்காக ஒளிந்திருந்தான்.

விசாரசருமர் வழக்கம்போல் அன்புப் பூஜை புரிவதற்காக மண்ணியாற்றில் நீராடினார். முன்போலவே மணலில் சிவலிங்கம் செய்து, அப்பெருமானுக்கு மணற்கோயில் முதலியன எழுப்பினார். அன்றலர்ந்த மெல்லிய மலர்களையும் அரும்புகளையும் கொய்து வந்தார். குடங்கள் நிறைய பசுக்கள் சொரிந்த பாலை அன்போடு கொண்டுவந்து ஒருபுறம் பத்திரமாக வைத்தார். பிறகு சிவபூஜைக்கு வேண்டிய பலவற்றையும் எடுத்துத் தம் அருகில் வைத்துக் கொண்டார்.

பிறகு விதியின் விளையாட்டால் ஆகம விதிப்படி மனம் ஒன்றிய அன்புப் பூஜை செய்யத் தொடங்கினார். சின்னஞ்சிறு சிவலிங்கத்தின்மீது நறுமணம் நிறைந்த திருப்பள்ளித் தாமங்களைச் சாத்தினார். இனிய பாற்குடங்களை எடுத்து, ஆவலோடு ஊற்றி அபிஷேகம் செய்தார். துதித்தார். மேன்மேலும் தோத்திரம் செய்யச் செய்ய அவருக்கு சிவபெருமானிடம் பேரன்பு பொங்கியது. பழம் பிறவியின்

வாசனையால் பண்பு மிகுந்துவந்து பொருந்தியது. அவருடைய பெருமையை சிவபெருமான் வெளிப்படுத்த விரும்பினார்.

அதனால் குரா மரத்தின் மீதிருந்த எச்சதத்தன் தன் சிறுமகனின் செயலைக் கண்டு அறிவிழந்து மிகவும் கோபம் கொண்டு, மரத்திலிருந்து இறங்கி ஓடிவந்தான். கையில் வைத்திருந்த கோலினால் விசாரசருமரின் சின்னஞ்சிறு முதுகில் அடித்தான். கொடிய மொழிகளால் வைதான். ஆனால் சின்னஞ்சிறு பெரியவரான விசாரசருமரின் உள்ளமும் உடலும் மாபெரும் பக்தியோடு சிவபூஜை செய்வதிலேயே இரண்டறக் கலந்து லயித்திருந்ததால் அவர் சிறிதும் அசையவில்லை! தம் தகப்பன் தம்மை அடிப்பதையும் உணரவில்லை! அதனால் எச்சதத்தன் மேலும் மேலும் சீறிச்சீறி மிகுந்த ஆத்திரத்தோடு விசாரசருமரை நையப்புடைத்தான். விசாரசருமர் அவ்வளவு அடிகளையும் பொருட்படுத்தாமல், மணல் லிங்கத்திற்குப் பால் அபிஷேகம் செய்வதிலேயே சலியாது ஈடுபட்டிருந்தார்.

அதனால் எச்சதத்தன் மதிமயங்கி, ஆத்திரப் பெருமூச்சிழுத்து, விசார சருமர் வைத்திருக்கும் பால் குடங்களைத் தன் காலால் எட்டி உதைத்துப் பாலையெல்லாம் சிதறடித்தான். சிவபூஜையைக் கெடுக்கும் பெரும் பாவத்தையும் புரிந்தான். அவன் பால் குடங்களை உதைத்துப் பாலைக் கொட்டியதைச் சிறுவர் விசாரசருமர் ஏறிட்டுப் பார்த்தார். அந்த பாதகம் புரிந்த தீயவன் தம் தந்தைதான் என்பதையும் சட்டென்று உணர்ந்தார். ஆயினும் தன் தந்தையென்றும் பாராமல் பாதகம் புரிந்த தந்தையின் பாதங்களை வெட்டியெறிவதே முறையென்று கருதினார். உடனே அவர் தம் அருகில் கிடந்தகோல் ஒன்றை எடுத்தார். அக்கோலையே மழுவாயுதமாகக் கொண்டு அவர் தம் தந்தையின் கால்களை நோக்கி, வீசியெறிந்தார். எச்சதத்தன் இரு கால்களும் வெட்டுண்டு மண்மேல் விழுந்தான். இவ்வாறு கோலையே மழுவாயுதமாகவும், பூஜையில் இடையூறு அகற்றும் படையாகவும் கொண்டு, தம் தந்தையின் இரு கால்களையும் வெட்டியெறிந்துவிட்டு சிறுவர் விசாரசருமர் முன்போல் சிவ அர்ச்சனை புரியப் புகுந்தார்.

அதனால் சிவபெருமான் மகிழ்ந்து உமாதேவியாரோடு காட்சியளித்தார். பூதகணங்கள் புடைசூழ புராண முனிவர்களும், புத்துலகத் தேவர்களும் புகழ்ந்து போற்ற சிவபெருமான் அன்போடு வெளிப்பட்டதைக் கண்டு, பக்தி முதிர்ந்த பாலகனார் கைகூப்பிக் கும்பிட்டார். அகமெங்கும் ஆனந்தம் பொங்கச் சிவபெருமானின் திருவடி மலர்களில் விழுந்து விழுந்து வணங்கினார். அப்பாலகரை சிவபெருமான் தம்மிரு கரங்களாலும் எடுத்து, ''நம் பொருட்டு உன்னைப்

பெற்ற தந்தையின் கால்களையும் வெட்டி எறிந்து அவனை வீழ்த்தினாய்! ஆகையால் இனி நாமே உனக்கு அடுத்த தந்தை!'' என்று கூறியருளி, தம் மார்போடு அணைத்துத் தழுவி, உச்சிமோந்து மகிழ்ந்தார். சிவபெருமானின் திருமலர்க் கரங்களால் தீண்டப்பெற்ற சிறுவனாரின் மாய உடல் சிவமயமாய் பொங்கியெழுந்து திருவருளில் குளித்துப் பேரொளி வீசியது. வானத்து தேவர்களெல்லாம் போற்றித் துதிக்க, சிறுவர் விசாரசருமர் தம்மைச் சூழ்ந்து விளங்கும் சிவப்பிரகாசத்தினுள்ளே தோன்றி விளங்கினார்.

சிவபெருமான் அவரைத் தமது திருத்தொண்டர்களுக்கு எல்லாம் தலைவராக்கி, ''நாம் உண்பன, உடுப்பன, ஆடுவன அனைத்தும் உனக்கே ஆகுக! அதன் பொருட்டு சண்டீசன் ஆகும் பதவியை உனக்குத் தந்தோம்!'' என்று கூறித் தம் சடைமுடி மீதிருந்த கொன்றை மலர் மாலையை எடுத்து சிறுவனாரின் தலையில் சூட்டினார்.

அதைக் கண்டு சகல உலகங்களில் உள்ளவர்கள் எல்லாம் ''ஹரஹர'' என்று ஆரவாரம் செய்தார்கள். விண்ணகத் தேவர்கள் மலர் மாரி பொழிந்தார்கள்! சிவகணநாதர்கள் ஆடிப் பாடினார்கள். மறைகள் துதித்தன. பலவகை வாத்தியங்களும் முழங்கின. சைவ சமயம் நிலைபெற்று ஓங்கும் வண்ணம் விசாரசருமர் சகல கணங்களுக்கும் நாயகமாக சண்டேசுர நாயனாராகிச் சிவபெருமானைத் தொழுது தமது சண்டீசப் பதம் அடைந்தார்.

அவருடைய திருக்கையால் எடுத்த கோல் மழுவால் கால்கள் வெட்டப்பட்டு வீழ்ந்த எச்சதத்தன், உலகறிய சிவாபராதம் செய்தும் சிவனார் திருவருளால் அந்தக் குற்றம் நீங்கி, தன் சுற்றத்தாருடன் சிவலோகம் சேர்ந்தான். பிழை புரிந்த தந்தையின் கால்களை மழுவால் துண்டித்த வேதியச் சிறுவன் மானிட உடலோடு சிவபெருமானின் திருமகனாராக ஆனார். சிவபிரான் மீது அன்பு கொண்டு அடியார்கள் செய்யும் எதுவுமே அருந்தவமாகும் அன்றோ?

''மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்''

— சுந்தரர்.

26. திருநாவுக்கரசு சுவாமிகள்

மண்ணின் துகள்களான புழுதியைத் தவிர, வேறு துகளான குற்றம் ஏதும் இல்லாத ஒரு நாடு உண்டு. அது திருமுனைப்பாடி வளநாடாகும்.



நன்மை நிலை அறிந்து ஒழுக்கத்தில் நலம் சிறந்து விளங்கும் குடிமக்கள் அந் நாட்டில் நிறைந்திருப்பார்கள். வெண்ணிலா தவழ்ந்து வளரும் மணிமாடங்களும் அந்நாட்டில் நிறைந்திருக்கும். மூங்கில் முத்துகளையும் மணமுடைய புது மலர்களையும் வாரிக்கொண்டு வரும் பெண்ணையாற்றுப் பாசனத்தால் எங்கும் வளம் கொழித்து அழகொளி வீசும். கால்வாய்களெல்லாம் வரால் மீன்களாகக் காட்சியளிக்கும். கரும்புக் காடெல்லாம் தேன் சொட்டும், வயலெல்லாம் நெற்கதிர்களின் பரப்பாகத் தென்படும். சோலையெல்லாம் கமுக மரங்களாகச் சொக்க வைக்கும். தடாகமெல்லாம் செங்கழுநீர் மலர்களாகத் தலைகாட்டும். மேலெல்லாம் அகில் தூபம் மின்னலிடும். விருந்தெல்லாம் திருந்திய வீடுகளாக விளங்கும்!

அந்நாட்டில், வாழை மரங்களின் பெருங்குலைகள் யானைகளின் நீண்ட துதிக்கை முகங்கள் போல் தோற்றமளிக்கும். நெற்கதிர்களோ, வெற்றிக் குதிரைகளின் முகங்கள் போல் விளங்கும். வண்டிகளோ பெரிய ரதங்கள் போல் தென்படும். எங்கு பார்த்தாலும், உழவர்களின் பேரொலி, நாற்படை வீரரின் ஆரவார ஒலிபோலக் கேட்கும். இத்தகைய மருதநிலக் காட்சிகள், நால்வகைச் சேனைகள் நிறைந்திருப்பது போலவே தோற்றமளிக்கும்.

ஆடையாபரணங்களின் சுமையையும் கூந்தலின் பாரத்தையும் தாங்க மாட்டாமல் இடை வருந்தும் பெண்களைப் போல், பூவுங்காயும் பழமும் கொண்ட குலைகளைத் தாங்க

மாட்டாமல் பாக்கு மரங்கள் அசைந்து பெண்ணையாற்றின் மேல் சாய்ந்திருக்கும்.

தடாகங்களில் கருங்குன்றுகள் போல் புரளும் எருமைகளின் மடியில் வரால் மீன்கள் முட்டிப் பாலைச் சொரியச் செய்யும். நிலமங்கை தன் கைகளில் நீலமணி வளையல்களை அணிந்திருப்பதுபோல், வண்டுகளின் ஒலி களோடு நீல மலர்கள் குலுங்கும். அவளுடைய செழுமையான விரல்களைப் போல் சிவந்த தளிர்களும், அவளுடைய நகங்களைப்போல் அரும்புகளும் சிறந்து விளங்கும். அந்த நிலமகள் தன் கைகளால் வெண்ணிலாவைக் கட்டித் தழுவுவதுபோல் மலர்ச் சோலைகள் உயர்ந்து தோன்றும். வயல்களில் உள்ள நெற்கூடுகளின் மீதும் மாளிகை மதில்கள் மீதும், பெண்கள் நிறைந்திருக்கும் மாடங்கள் மீதும், மேகங்களும் மயில்களும் மாறி மாறி ஆடும். உலகமெங்கும் தீய நெறியைப் போக்கி, சிவனாரின் சத்திய நெறியை நிலைநிறுத்திய திருநாவுக்கரசு சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருவவதாரம் செய்யப் பெற்ற நாடாகையால் அந்த திருமுனைப்பாடி நாட்டின் சிறப்பு நம் வர்ணனைக்கு அடங்குமோ?

இத்தகைய வளம் நிறைந்த திருநாட்டில், பல ஊர்கள் உண்டு என்றாலும், அவற்றினிடையே திருவாமூர் என்னும் ஊர் தலைசிறந்து விளங்குகிறது. அது இலக்குமி வாழும் திருத்தலமாகும். அவ்வூரில் வேளாளர் மரபில் குறுக்கையர் குடியில் புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனையறம் புரிந்து விருந்தளித்து மேன்மையோடு விளங்கியவர். அவர் மாதினியார் என்ற மங்கை நல்லாளை மணந்து இல்லறம் நடத்தி வந்தார். மாதினியாரின் மணிவயிற்றில், திருமகளைப் போல் திலகவதியார் என்னும் புதல்வியார் பிறந்தார். திலகவதியார் தோன்றிய சில ஆண்டுகளுக்குப் பிறகு, மருள் நீக்கியார் என்ற மகனார் பிறந்தார். அலகிலாத கலைத்துறை தழைத்தோங்கவும், அருந்தவத்தாரின் செந்நெறி சிறந்து வாழவும், உலகத்தின் பொய்மையிருள் அகன்றோடவும், செங்கதிர்ச் செல்வனைப் போலவே மருள் நீக்கியார் அவதரித்தார். அன்பிலே உதித்த அக்குழந்தையை புகழனார், அன்போடு பாராட்டிச் சீராட்டி வளர்த்தார். சுற்றத்தார் பலரும் போற்றிப் புகழ மருள் நீக்கியாரும் குழந்தைப் பருவத்தைக் கடந்தார். அவருக்குத் தலைமயிர் நீக்கும் மங்களச் சடங்கு செய்த பிறகு புகழனார் தானங்கள் பல செய்து, தன் மகனாரின் அறிவை மலர்விக்க கலைகளைப் பயிற்றுவித்தார். மருணீக்கியார் தம் தாய் தந்தையார் மகிழ்ந்து போற்றும்படி சிறந்து விளங்கினார். சகல கலைகளையும் கற்றுணர்ந்து களங்கமில்லா இளம் பிறையைப்போல் வளர்ந்து வரலானார்.

அந்நாளில் அவருடைய தமக்கையான திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயதாயிற்று. அதனால் அந்நாளில் தந்தை புகழனார் தம் புதல்விக்கு திருமணம் செய்யக் கருதினார்.

அப்போது அவருக்குச் சமமான குடும்பச் சிறப்போடு கலிப்பகையார் என்னும் ஒருவர் வேளாளர் தலைவராகச் சிறந்து விளங்கினார். அவர் சிவபெருமானுக்கு மெய்யடிமைத் தொண்டு புரியும் விருப்பமுடையவர். அரசரிடம் அன்பு கொண்டவர். போர் புரிவதில் ஆண்சிங்கத்தைப் போன்றவர். கண்கொள்ளாப் பேரழகு வாய்ந்தவர். இத்தகைய கலிப்பகையாரும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென எண்ணங் கொண்டார். கொடையறம் பூண்ட புகழனாரின் ஒப்பற்ற திருப்புதல்வியான திலகவதியாரையே திருமணம் செய்து கொள்ள வேண்டுமெனப் பெருங் காதல் கொண்டு அதற்கான மணம் பேசி வரும்படி பெரியோர்கள் சிலரை புகழனாரிடம் அனுப்பி வைத்தார்.

கலிப்பகையாரின் குணங்களையும் குலமுறைகளையும் புகழனார் நன்றாக விசாரித்து அறிந்த பிறகு தம் மகள் திலகவதியை கலிப்பகையாருக்குத் திருமணஞ் செய்து கொடுக்க இசைந்தார். அவரிடம் பெண் கேட்க வந்த பெரியோர்கள் அவருடைய இசைவை கலிப்பகையாரிடம் சென்று தெரிவித்தார்கள்.

ஆனால் கலிப்பகையாருக்கும் திலகவதியாருக்கும் திருமணம் முடிவதற்கு முன்னால் வடபுலத்தில் போர் மூண்டது. அந்தப் போர் முனைக்கு சேனாதிபதியான கலிப்பகையார் அவருடைய வேந்தரால் அனுப்பப்பட்டார். பகைவரால் தம் வேந்தருக்கு ஆபத்து என்றதுமே போர்த் தொழிலை மேற்கொண்டு கொடும் போருக்கு விடைபெற்றுப் பெரும் படைகளுடன் விரைந்து சென்ற கலிப்பகையார், அங்கு பகையலைகளை எதிர்த்துப் போர்க் கடலை நீந்துவதுபோல் நீண்ட நெடுநாள் போர் புரிந்தார். அவர் அவ்வாறு வடபுலத்துப் போரில் ஈடுபட்டிருந்தபோது திலகவதியாரின் தந்தையான புகழனார் விதிவசத்தால் ஒரு கொடிய வியாதிக்கு ஆளாகி வருந்தி விண்ணுலகை எய்தினார். அவர்தம் மனைவியராகிய மாதினியாரும் தம் மக்களையும் சுற்றத்தாரையும் நீத்து தம் கணவரை என்றென்றும் பிரியாத பெருங் காதலின் கற்பு நெறியோடு உயிர் துறந்து விட்டார். தாயும் தந்தையும் இறந்த பிறகு திலகவதியாரும் மருள்நீக்கியாரும் சுற்றத்தாரோடு கூடித் துயர்க்கடலில் அழுந்தினார்கள். பிறகு சுற்றத்தார் தேற்ற ஒருவாறு துயரொழிந்து தம் பெற்றோருக்கு ஈமக்கடன்கள் செய்தார்கள். முன்னர் அரசனுடைய ஆணையை ஏற்றுப் போருக்குச் சென்ற கலிப்பகையாரும் போர்க்களத்தில் தம்

மன்னருக்காக உயிர் கொடுத்து, தம் பூதவுடலை நீத்துப் புகழுடம்பை எய்தினார்.

போர் முனைக்குச் சென்ற கலிப்பகையார் அங்கு பகைவரை அழித்து தம் உயிரையும் நீத்து விண்ணுலகம் ஆளப்போய் விட்டார் என்பதை ஊர் மக்கள் சொல்லக் கேட்ட திலகவதியார் உள்ளம் உருகினார். ''என் தந்தையும் தாயும் என்னை அவருக்கு மணம் முடித்துக் கொடுக்க இசைந்தார்கள். அந்த முறையால் நான் அவருக்கே உரியவள்! ஆகையால் என் உயிரை அவருடைய உயிருடன் சேர்விப்பேன்!'' என்று முடிவு செய்தார்.

அதையறிந்த மருணீக்கியார் தம் தமக்கையாரின் காலடிகளில் விழுந்து, மிகவும் அழுது புலம்பி, ''என் தாயும் தந்தையும் உயிர் நீத்த பிறகும் நான் உயிர் தரித்திருக்கிறேன் என்றால் என் தமக்கையாரான உம்மையே பெற்றோராக எண்ணி வணங்கப் பெற்றதனாலேயே நான் இன்னும் உயிர் தரித்திருக்கிறேன். இனிமேல் நீரும் என்னைத் தனியேவிட்டுச் செல்வீராகில், நான் உமக்கு முன்னே என் உயிரை நீத்து விடுவேன்!'' என்று கூறித் துயரத்தில் அழுந்தினார்.

அவரது பேச்சைக் கேட்ட திலகவதியாரின் மனம் இளகியது. தம்பியார்மீது திலகவதியாருக்குப் பேரன்பு பெருகியது. தம் தம்பி வாழ்வதற்காகவே தாமும் உயிர் தாங்கி வாழத்தான் வேண்டும் என்று அவர் உறுதிகொண்டார். தமக்கு மண மகனென நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையார் வீர சொர்க்கத்தை அடைந்த பிறகு தாமும் அச் சொர்க்கத்திற்குப் போக வேண்டு மென்று முன்பு நினைத்த கருத்தையும் கைவிட்டார். ஆனால் திருமங்கலியச் சூத்திரமோ அழகான பொன்மணி ஆபரணங்களோ பூணாமல், திலகவதியார் அவற்றையெல்லாம் புறக்கணித்து விட்டு, எல்லா உயிர்களிடமும் அன்பருள் மட்டும் பூண்டு, இம்மண்ணுலகத்தில் மனையில் இருந்தே மாதவம் புரிந்து வந்தார்.

தம்பி மருணீக்கியார் தமது துயரத்தை ஒழித்து மகிழ்ச்சியுடன் வளர்ந்து வந்தார். உற்ற வயதடைந்ததும் உலகியலின் நிலையாமையை அறிந்து அவர் நல்லறங்கள் செய்ய எண்ணினார். அவர் சிவவுலகில் புகழ் நிலைபெற்று விளங்கும்படி அளவற்ற செல்வங்களைக் கொடுத்து, கருணையோடு அறச்சாலைகளையும் தண்ணீர்ப் பந்தல்களையும் அமைத்தார். சோலைகளை வளர்த்துக் குளங்களை வெட்டினார். நேர்மை தவறாமல் தம்மிடம் வந்தவர்களுக்கெல்லாம் அவர்கள் வேண்டுவனவற்றை மகிழ்ந்தளித்தார். அன்புடன் விருந்திட்டு விருந்தினர்களைப்

பேணினார். புலவர்களைப் போற்றி, நாவலருக்கு வளம் பெருக நன்கொடை வழங்கினார். இவ்வுலகத்தில் உள்ள அனைவருக்கும் தளராமல் கொடை வழங்கி ஈகைத் துறையில் நின்றார். நிலையில்லாத உலகியலைக் கண்டு அவர், ''நான் நிலையில்லா வாழ்க்கைக்கு உரியேன் அல்லன்!'' என்று பற்றை அறுத்து துறவு பூண்டு நன்மார்க்கத்தைத் தெரிந்துணர்வதற்காக சமய ஆராய்ச்சியில் ஈடுபடலானார். ''சமயங்களில் சிறந்த சமயம் எது?'' என்பதை நம் சிவபெருமான் அப்போது அவருக்கு உணர்த்தியருளினார் இல்லை. எனவே, கொல்லாமை நோன்பு என்னும் தத்துவப் போர்வைக்குள் ஒளிந்து வாழும் சமண சமயமே சிறந்த சமயம் என்று கருதி மருணீக்கியார் அந்தச் சமய சார்புடையவரானார்.

மருணீக்கியார், தமக்கு அண்மையில் இருந்த ★**பாடலி புத்திரம்** என்ற நகரத்துக்குச் சென்று அங்குள்ள சமணப் பள்ளியை அடைந்து சமணக் குருமார்களைச் சார்ந்தார். அவர்கள் ''வீடு பேற்றை அடைவதற்குரிய சமய நெறி இதுவே!'' என்று கூறினார்கள். மருள் நீக்கியாரைத் தம்மோடு சேர்த்துக் கொள்வதற்காக, சமண சமயக் கருத்துகள் பலவற்றைப் போதித்தார்கள். மருள் நீக்கியாரும் பொங்கியெழும் உணர்ச்சியோடு சமண சமய நூல்களையெல்லாம் நன்கு பயின்றார். அச்சமண சமய நெறியில் அவர் புலமையுடன் சிறந்து விளங்கியதால், சமணர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, மகிழ்ந்து அவரைத் தங்கள் தலைவராக்கிக் கொண்டு, அவருக்கு தருமசேனர் என்ற மேலான பெயரையும் சூட்டினார்கள்.

தருமசேனர் தாம் பெற்ற சமண நூற் புலமையினால், உலகில் சித்தர் நிலை அறியாத பௌத்தர்களை வாதில் வென்று உலகத்திற்கே வித்தகராய் விளங்கி சமண சமயத்திற்குத் தலைவராகத் திகழ்ந்து வந்தார்.

★பாடலிபுத்திரம் : என்பது இன்றைய திருப்பாதிரிப் புலியூர் என்னும் சிவஸ்தலத்தின் அருகில் இருந்தது. பௌத்த மன்னரான சாம்ராட் அசோகர் பாடலிபுரம் என்ற நகரில் இருந்து ஆட்சி செய்து வந்தான். அந்தப் பெயராலேயே சமணர்கள் தமிழ் நாட்டிலும் இங்கு ஒரு நகரத்தை அமைத்தார்கள். முன்னாளில் சமணச்சார்புடைய அரசனது தலைநகராக விளங்கிய பாடலிபுரத்தில் சமணப்பள்ளி பாழி முதலானவை சிறப்பாக இருந்தன. பின்னர் திருநாவுக்கரசு நாயனாரால் சைவ சமய மேன்மையை அறிந்த மகேந்திர பல்லவன் அவற்றை இடித்துக் கொணர்ந்து குணபரவீசுவரம் என்னும் சிவனாரின் திருக்கோயிலைக் கட்டினான்.

அவ்வாறு மருணீக்கியார், சமண சமய நெறியில் சிறந்து விளங்கி வருங்காலத்தில் தவச் செல்விபோல் அமைதியாக வாழும் அவருடைய தமக்கையான திலகவதியாரோ தூய சிவ நன்னெறி சேரவேண்டுமெனப் பெரும் விருப்பமுற்று அதற்காகச் சிவபெருமானின் திருவருளைப் பெறப் பேராவல் கொண்டார். எனவே திலகவதியார் தம் உறவினரை விட்டுப் பிரிந்து, திருக் கெடில நதியின் வடகரையில் திருவதிகை என்னும் ஊரிலுள்ள திருவீரட்டானம் திருக்கோயிலை அடைந்தார். அங்கு செம்பவளக் குன்றுபோல் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருவடிகளைத் திலகவதியார் வணங்கினார். அன்று முதல் சிவச் சின்னங்களை அணிந்து அன்பு பெருக, எம் பெருமானுக்குப் பலவிதமான திருப்பணிகளையும் திலகவதியார் தம் கையாலேயே ஆர்வத்தோடு செய்யத் தொடங்கினார். திலகவதியார் தினந்தோறும் பொழுது விடிவதற்கு முன்பே எழுந்து சென்று திருக்கோயிலின் முன்றிலிலே திருவலகுத் தொண்டு புரியத் தொடங்கி சுத்தமாகக் கூட்டிப் பெருக்குவார். நற்பசுவின் சாணத்தால் நன்றாக மெழுகிக் கோலமிடுவார். மலர்களைக் கொய்து வந்து மாலைகளைத் தொடுப்பார். இவ்விதமாகப் பலரும் புகழும் பண்போடு பலவகைத் திருப்பணிகளையும் செய்துவந்த திலகவதியாருக்கு ஒரு கவலை தோன்றியது. உறவினர்களிடம் மிகுந்த அன்பு கொள்ளும் பெண்மையின் பண்பினாலேயே திலகவதியாருக்கு அந்தக் கவலை தோன்றியது.

தமக்குப் பின் பிறந்த தம்பியான மருள் நீக்கியார் தீவினைப் பயனால் தம்முடைய சிவமத நெறியை விட்டு, பரசமயமான சமண சமயத்தை சார்ந்திருக்கிறாரே என்ற கவலைதான் அது! அந்தத் துயரம் திலகவதியாரை மிகவும் வாட்டி வதைத்தது. அதனால் தவ விளக்கு போன்ற திலகவதியார் தமக்குச் சுடரொளி போன்ற திருவதிகைச் சிவபிரானைத் தொழுது, ‘‘எம்பெருமானே! என்னை ஆண்டருள்பவர் நீரே என்றால், பரசமயமான சமணப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் என் தம்பியையும் நீர்தான் அதிலிருந்து எடுத்தாள வேண்டும்!’’ என்று பலமுறையும் விண்ணப்பம் செய்துவந்தார். ‘‘தவமென்று கருதிப் பாயை உடுத்தியும், தலைமயிரைப் பறித்தும், நின்றபடியே உணவு அருந்தியும், வீணாகச் சமண சமயத்தில் விழுந்து உழல்கிற என் தம்பியை அவ்வாறு விழாமற் காத்தருளும்!’’ என்று திலகவதியார் வேண்டினார்.

வினைப்பயன் அறுக்கும் சிவபெருமான் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றத் திருவுளம் கொண்டார்.



அதனால் திலகவதியின் கனவில் சிவபெருமான் தோன்றி, ''உன் மனக் கவலையை ஒழிப்பாயாக! உன் உடன் பிறந்தவனாகிய தம்பி, முற்பிறவியில் ஒரு முனிவனாக இருந்து எம்மை அடைவதற்காக தவம் செய்துள்ளான். இனி அவனுக்குச் சூலை நோயைத் தந்து, அதன்மூலம் அவனைத் தடுத்தாட்கொள்வோம்?'' என்று கூறி மறைந்தார்.

முன் செய்த நல்ல தவத்தில் சிறிது தவறிய தொண்டரை கண்ணுதல் பெருமான் தடுத்தாளத் தொடங்கிச் சூலை நோயைக் கொடுத்தருளினார். பெரும் நெருப்பு போல் துன்புறுத்தும் கொடிய சூலை நோய் தருமசேனரின் வயிற்றில் புகுந்தது. வடவைத் தீ, ஆலகாலம் என்னும் கொடும் நஞ்சு, வஜ்ராயுதம் முதலான கொடிய பொருள்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து உறுத்துகிறதோ என்னும் படியாகச் சூலைநோய், தருமசேனரின் குடலினுள்ளே புகுந்து புகுந்து குடைந்தது.

அந்த நோய்த் துன்பத்தை சகிக்க முடியாமல் தருமசேனர் தள்ளாடிச் சுழன்று, சமணர்களின் பாழியிலுள்ள ஒரு தனி யறையில் சுருண்டு விழுந்தார். முன்பு அவர் சமண மதத்தில் அதிகம் கற்றிருந்த மணி மந்திர ஔஷாதி வித்தைகளால் அச்சூலை நோயைத் தடுக்க முயன்றார். ஆனால் நோய் முன்னைவிட மேன் மேலும் அதிகரித்து குடலைக் குடைந்தது. அவ் வேதனை நோய் உச்சமாக ஓங்கி எழவே, பாம்பின் கொடிய விஷம் தலைக் கேறியதைப்போல் தரும சேனர் மயங்கித் துன்புற்றார்.

அவர் நிலைமையைக் கண்டதும் சமணர்கள் பலர் ஒன்றுகூடி இச்சூலை நோய் மிகவும் கொடுமையாய்

இருக்கிறது. இது நஞ்சுபோல் கவருகிறது. இதைப் போன்றதொரு கொடிய நோயை நாம் கண்டதுமில்லை; கேட்டதும் இல்லை. இத்தகையதொரு நோய் நம் தரும சேனருக்கு வந்திருக்கிறதே! இனி என்ன செய்வது? என்று வருந்தினார்கள். பிறகு அவர்கள் மிகவும் வாட்டமுற்று செய்வதறியாது தங்கள் கமண்டலத்து நீரை மந்திரித்து தருமசேனரைக் குடிக்கச் செய்தார்கள். அப்போதும் நோய் தணியவில்லை! பிறகு அவர்கள் மயிற்பீலிகொண்டு உச்சிமுதல் உள்ளங்கால் வரை உடல் முழுவதும் தடவினார்கள். அப்போதும் சூலை நோய் தணியாமல் முன்னைவிட அதிகமாகத் துன்புறுத்தியது. அதனால் சமணர்கள் மிகவும் அவமானம் அடைந்து வேறு பல வழிகளாலும் அச்சூலை நோயை நீக்க முயன்றார்கள். முடிவில் அந்நோய் ஒழியாது என்பதை உணர்ந்தவர்களாய் ''ஆ! ஆ! நாம் என்ன செய்வோம்?'' என்று மனம் தளர்ந்து ''இது நம்மால் போக்குவதற்கு அரிதாகும்!'' என்று சொல்லிக் கைவிட்டார்கள்.

அதன் பிறகு தருமசேனர் என்ன செய்வார் பாவம்! கொடிய சூலை நோய் மேன்மேலும் குடலைக் குடைவதால் மதிமயங்கிக் குழம்பினார்! பழைய உறவையெல்லாம் நினைத்துப் பார்த்தார். தமக்கு திலகவதியார் என்னும் தமக்கை இருப்பதை உணர்ந்தார். உடனே தம் நிலையை தம் தமக்கையாருக்குத் தெரிவிப்பதற்காகத் தம் சமையற்காரனை அனுப்பினார்.

அந்த சமையற்காரன் விரைந்து சென்று திருவதிகையை அடைந்தான். அங்கு அருந்தவக் கொழுந்தான திலகவதியாரைத் திருக்கோயில் நந்தவனத்தின் அருகில் கண்டு, கையெடுத்துக் கும்பிட்டு, ''உமக்கு இளையவர் ஏவலி னால் இங்கு வந்தேன்'' என்றான்.

உடனே திலகவதியார், ''என்ன, அவருக்கு ஏதாகிலும் தீங்கு உண்டோ?'' என்று கேட்டார்.

''ஆம், உண்டு! கொல்லாமற் கொல்லும் சூலைநோய் தருமசேனரின் குடலை முடக்கித் தீராத நோயாகத் துன்புறுத்துகிறது. அந்நோயைத் தீர்க்க முடியாமல் எல்லோரும் கைவிட்டுவிட்டார்கள். ''நல்லவரான என் தமக்கையிடம் இந்நிலையைச் சொல்லி, நான் உய்யும் வழியைக் கேட்டுக் கொண்டு இன்று இராப் பொழுதிற்குள் திரும்பிவா'' என்று அவர் கூறி என்னை உங்களிடம் அனுப்பிவைத்தார்!'' என்று சமையற்காரன் அறிவித்தான்.

அதைக் கேட்டதும் திலகவதியார் துணுக்குற்று, ''நான் உன்னோடு வந்து அங்கே நன்னெறி அறியாத சமணர்

பள்ளியில் அடியெடுத்து வைக்க மாட்டேன்! நீ போய் இந்தப் பதிலை என் தம்பிக்குத் தெரியப்படுத்து!'' என்று கூறினார்.

அதைக் கேட்டுக் கொண்டு சமையற்காரன் திரும்பிச் சென்று தருமசேனரிடம் நடந்ததை எடுத்துரைத்தான்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதும் தருமசேனர் அயர்வடைந்தார். நோயால் வருந்திக் கொண்டிருந்த அவர், ''ஆ! இந்நிலைக்கு இனி என் செய்வேன்?'' என்று மயங்கினார். அப்போது சிவபெருமானின் திருவருள் கூடியதால் அவர் சிந்தித்து, ''எனக்கு ஒவ்வாத இப்புன்னெறி மதத்தால் என் நோய் ஒழியவில்லை. இச்சூலை நோயின் துன்பம் ஒழிய வேண்டுமென்றால் இப்புன்னெறியை நான் தீர்த்துச் சென்று, நன்னெறியில் நிற்கும் திலகவதியாரின் திருவடியில் சேர்வேன்!'' என்று முடிவு கட்டினார். அப்பொழுதே சூலை நோய்க் கொடுமை சற்றுக் குறைவதையும் உணர்ந்தார். உடுத்தியுழலும் பாய், உறியில் தூக்கிய கமண்டலம், மயிற்பீலி முதலான சமணக் கோலங்களையெல்லாம் அவர் உதறியெறிந்து விட்டுத் திருவதிகைக்குப் புறப்படத் துணிந்தெழுந்தார். சமணர்களின் இடத்தைவிட்டு அகன்று சென்றார். தூய வெண்ணிற ஆடையை உடம்பில் அணிந்துகொண்டு, சூலை நோயின் காரணமாக அவர் சிலரைக் கைத்தாங்கலாகப் பற்றிக்கொண்டு மாதவர் வாழும் திருவதிகை நகருக்கு, அந்த இரவு நேரத்திலேயே விரைந்து சென்றார். ஒருபுறம் சூலைநோய் அவர் வயிற்றினுள்ளே நெருப்பென சுழற்றிச் சுழற்றி எரிய இன்னொருபுறம் பெரும் விருப்பம் பொங்கியெழ ஜோதி மயமான திருவதிகைக்கு வந்து சேர்ந்தார்.

அங்கு திலகவதியார் வசிக்கும் திருமடத்தை மருள் நீக்கியார் அடைந்து தமது தமக்கையாரின் திருவடிகளில் விழுந்து வணங்கி, ''நம் குலம் செய்த நற்றவப் பயனே! என் உடலை வருத்தும் இந்த சூலை நோயால் நான் பெரிதும் வருந்துகிறேன்! என்னால் பொறுக்க முடியவில்லை! இனியும் நான் மயங்கித் தடுமாறாமல் உய்யும் வழியையும் கரையேறும் நெறியையும் உணர்த்தியருள்க!'' என்று வேண்டினார்.

திலகவதியார் தம் கால்களில் விழுந்து அயரும் தம்பியாரை நோக்கினார். ஆளுடைப் பெருமானான சிவனாரின் திருவருளை நினைத்துக் கைகூப்பித் தொழுதார்.

பிறகு அவர் தம் தம்பியாரிடம், ''நீர் பரசமயப் படுகுழியில் விழுந்தீர்! அதனால் அறியாது மூளும் அருந்துயரில் கிடந்து உழன்றீர்! இப்போது எழுந்திரும்!'' என்று மொழிந்தார்.



அவ்வார்த்தையைக் கேட்டதும் மருணீக்கியார் சூலை நோயுடன் உடல் நடுங்கிய வண்ணம் எழுந்து தம் தமக்கை யாரை வணங்கி நின்றார்.

திருநிறைச் செல்வியான திலகவதியார் அவரை நோக்கி, ''உமக்கு இவ்வாறு நிகழ்ந்தது சிவபெருமானின் திருவருளே காணும்! தம் திருவடிகளை அடைந்தவர்களுக்குப் பற்றையறுக்கும் பேரருளாளர் அவரேயாவார்! அவரைப் பணிந்து அவருக்கே நீர் தொண்டு செய்வீராக!'' என்று கட்டளையிட்டார். பிறகு அவர் தம் தம்பியார் சிவனருளை நினைத்து திருக்கோயிலினுள் நுழையும் தகுதி பெறுவதற்காக திருவைந்தெழுத்தை ஓதி திருவெண்ணீற்றை அள்ளிக் கொடுத்தார்.

''பெரு வாழ்வு வந்தது!'' என்று மருணீக்கியார் கும்பிட்டு அத் திருநீற்றை வாங்கித் தம் உடல் முழுவதும் பூசிக் கொண்டார். தமக்கு ஆபத்து நேர்ந்தபோது உய்யும் வழிகாட்டும் தம் தமக்கையார் முன்னே செல்ல, மருள்நீக்கியார் பின் தொடர்ந்து திருக்கோயிலை நோக்கிச் சென்றார். வெண்ணீறு அணிந்த அவருடைய இதயத்தின் இருளும் இரவின் வெளியினாலும் ஒருங்கே அகலும்படி பொழுது விடியத் தொடங்கியது.

வழக்கம்போல் திலகவதியார், அந்த திருப்பள்ளி எழுச்சிக் காலத்தில் தொண்டு புரிவதற்காக திருவலகும்,

திருமெழுக்கும், (விளக்குமாறும் சாணமும்) தோண்டியும் எடுத்துக் கொண்டு தம் தம்பியாரையும் அழைத்துக் கொண்டு, திரு வீரட்டானத் திருக்கோயிலுக்குச் சென்றார்.

சிவபெருமான் வீற்றிருக்கும் அத்திருக்கோயிலை மருணீக்கியார் தொழுது வலம்வந்து தரைமீது விழுந்து வணங்கினார். அப்போது தம்பிரான் திருவருளினால் தமிழ்ப் பாமாலை சாத்தும் மெய்யுணர்வு அவருக்குத் தோன்றியது. அதை உள்ளுணர்ந்து அவர் பாமாலை பாட முனைந்தார்; வெண்ணீற்றால் அவர் மேனியெல்லாம் நிறைந்து விளங்கியது. அன்பின் நிறைவான அவருடைய சிந்தையில் சிவநேசம் பொங்கியெழுந்தது. தம் சூலை நோயையும் மாயையும் அறுத்தெறிவதற்காகவும் ஏழுலகின் துயரையெல்லாம் போக்குவதற்காகவும் அவர் இறைவன் எதிரே சந்நிதியில் நின்று, ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடலானார்.

''கூற்றாயினவாறு விலக்ககிலீர்!
கொடுமை பலசெய்தகை நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றா தென் வயிற்றின் அகம்படியே
குடரோடு தொடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்! அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே!''

இவ்வாறு துவங்கும் தேவாரத் திருப்பதிகத்தை மருணீக்கியார் பாடி முடித்ததும் அக்கணமே அவருடைய வயிற்றிலுள்ள கொடிய சூலை நோயும் நீங்கியது. ''அடியேன் உயிரோடு அருள் தந்தது!'' என்று மருள் நீக்கியார் மனம் பூரித்தார். பரம்பொருளின் திருவருளை பெற்ற அவர் ஞான மயக்கத்தினால் முதல்வனின் கருணைக் கடலில் மூழ்கினார். அந்த உணர்ச்சிப் பெருக்கினால் அவருக்கு அங்கங்கள் எல்லாம் சிலிர்த்தன. ரோமங்களெல்லாம் ஒருங்கே புளகம் கொண்டன. கண்களிலே புது வெள்ளம்போல் நீர் பொங்கிப் பொழிந்தது. அவர் அப்படியே தரைமீது விழுந்து புரண்டு புரண்டு எழுந்தார்.

''எம்பெருமானே! என் பிழையால் உன் கருணைப் பெரும் வெள்ளத்தை அடையும்பேறு பெற்றேன்! பொய்மையான புறச் சமயப் படுகுழியில் விழுந்து கிடந்த நான், உன் திருவடிகளை வந்தடையும் பொருட்டு சூலை நோயைத் தந்தாய்! எனக்கு இப்பெரு வாழ்வு தந்த சூலை நோய்க்கு என்ன கைம்மாறு செய்வேன்?'' என்று மனமுருகினார்.

அப்பொழுது வானவெளியில் திருவீரட்டானத்து சிவபெருமான் திருவருளால் ஒரு குரல் எழுந்தது. "நீ மொழிக்கு மொழி தித்திக்கும் தீந்தமிழ்த் திருப்பதிகப் பாமாலையைப் பாடினாய்! அதனால் நாவுக்கரசு என்ற பெயர் உனக்கு ஏழுலகங்களிலும் நயப்புற வழங்குவதாக!" என்று யாவரும் வியக்க அசரீரி வாக்கு ஒலித்தது.

அதைக் கேட்ட திருநாவுக்கரசர், "ஆ! நெடுநாளாகத் தீவினையில் உழன்ற அடியேன் பெறத்தக்க பெரும் பேறு இதுவோ?" என்று மனம் குழம்பினார். பிறகு அவரைப் போலவே அறியாமல் பிழை செய்த இராவணனுக்குச் சிவபெருமான் திருவருள் புரிந்த கருணைத் திறத்தின் உண்மையை உணர்ந்தார். அதைப் போற்றித் துதிப்பதை மேற்கொண்டு மெய்யுற விழுந்து வணங்கினார். அவரைச் சூழ்ந்துள்ள சிவனடியார்கள் அனைவரும் ஆரவாரஞ் செய்தனர். முரசுகள் முழங்கின. படகம், உடுக்கை, மத்தளம், முழவம், வீணை, துந்துபி, கண்டாமணி, முதலானவை யெல்லாம் முழங்கிச் சங்கநாதத்தோடு நிறைந்து பொங்கும் கடலென ஒலித்தன.

அன்று முதல் மருணீக்கியார், திருநாவுக்கரசரானார். மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களாலும் அவர் திருத்தொண்டு செய்ய முனைந்தார். விபூதி, உருத்திராட்சம், முதலான சிவச்சின்னங்கள் அவர் மேனியில் சிறந்து விளங்கின. மனதிலே சிவத்தியானம், வாயிலே திருப்பதிகப் பாடல், கையிலே உழவாரப்படை இவற்றைக் கொண்டு அவர் முக்கரணங்களாலும் சிவத்தொண்டு புரியலானார்.

அதைக் கண்டு அவருடைய தமக்கை திலகவதியார் மனமுருகினார். "என் தம்பியார் புறச்சமயப் பிணியை விட்டதும் அவருக்கு சிவபெருமான் சூலை நோயை விட்டருளினார்! இவ்வாறு எம்மை ஒரு பொருளாக மதித்துத் தம் திருப்பணிக்கு ஆண்டருளிய சிவபெருமானின் கருணைத்திறத்தை இங்கே வேறு யார்தான் பெற்றார்?" என்று வியந்து வியந்து ஆண்டவனைப் போற்றினார்.

திருநாவுக்கரசர் இவ்வாறு சிவநெறி அடைந்து சிவனருளால் சூலைநோயின் துன்பம் நீங்கப் பெற்ற செய்தி பாடலிபுரத்திலும் பரவியது. அதைக் கேள்விப்பட்டதும் சமணர்களுக்கு மனம் பொறுக்கவில்லை "தருமசேனருக்கு வந்த சூலை நோயை இங்கே நம் ஒருவராலும் தீர்க்க முடியாமல் போயிற்று. அதனால் அவர் நம்மைப் பிரிந்துபோய், சைவராக மாறி தம் சூலை நோயை நீக்கிக்கொண்டு புதுவாழ்வு பெற்றார். அதனால் நம்முடைய பெரும் சமண மதம்

வீழ்ந்துவிட்டது!'' என்று சமணர்கள் மருண்டார்கள். ''மாறுபட்ட பல மதங்களோடு வாதப் போரிட்டு வென்று அவரால் நிலைக்கப்பெற்ற இந்தச்சமண நெறி இனி அழிந்து போயிற்று!'' என்று மனம் புழுங்கினார்கள். தலையும், கையிலுள்ள மயிற்பீலியும், அவமானத்தால் தாழ்ந்து தொங்க ஓரிடத்தில் வந்து கூடினார்கள். ''இதன் உண்மையை வேந்தன் அறிந்தால் வெகுண்டு அவனும் சைவனாகிவிடுவான். அதன் பிறகு நம் விருத்தியும் கெடும்! இதற்கு இனி நாம் என்ன செய்யலாம்?'' என்று சமணர்கள் அனைவரும் யோசித்து வஞ்சனையாலேயே காரியத்தைச் சாதிக்க வேண்டுமெனத் தீர்மானித்து ஒரு சூழ்ச்சி வகுக்கலானார்கள்.

''தருமசேனரின் தமக்கை சைவநெறியில் நிற்பவராகையால் தருமசேனர் கபட எண்ணத்தோடு நம் சமண சமயத்திற்கு வந்து, தாம் பொய்யாக உண்டாக்கிக் கொண்ட சூலை நோய் நமது மந்திரங்களால் தீரவில்லை என்று சொல்லிக் கொண்டுபோய் சைவ சமயத்தில் சேர்ந்து நமது சமய வரம்பைக் கடந்தார்; நம் தெய்வத்தையும் நிந்தனை செய்தார் என்று திரித்துக் கூறுவோம்!'' என்று முடிவு செய்தார்கள்.

அவ்வாறே அத்துர்ப்புத்தியாளர்கள் செய்யவும் துணிந்து ''இதை அரசன் கேள்விப்படுவதற்குமுன் நாமே போய் முறையிடுவோம்!'' என்று விரைந்தெழுந்தார்கள். இருள் கூட்டம் திரண்டு செல்வதுபோல் அவர்கள் பல்லவ மன்னனின் தலைநகருக்கு வந்து சேர்ந்தார்கள். உடம்பில் ஆடையின்றித் திகம்பரர்களாகத் திரியும் அச்சமணர்கள் விரைந்துசென்று அரண்மனை வாசலை அடைந்து அங்குள்ள காவலரிடம் ''நாங்கள் வந்திருப்பதை அரசனுக்குத் தெரியப்படுத்துங்கள்!'' என்று கூறினார்கள். அதனபடியே வாயில் காவலர் உள்ளே சென்று, ''மன்னர் பெருமானே! சமண சமயக் குருமார்கள் எல்லோரும் மிகவும் வியாகூலத்தோடு மனமிடிந்துவந்து நம் கொடி வாசலின் பக்கம் காத்திருக்கிறார்கள்!'' என்று அறிவித்தார்கள்.

★**பல்லவ மன்னனும்** சமணச் சமய சார்புடையவனாதலால் சமண அடிகளாரை விரைவில் வரவழைக்க வேண்டுமென நினைத்து, ''அவர்களுக்கு என்ன நேர்ந்தது?'' என்று வெகுண்டுரைத்தான். அதன் பிறகு அரசன் ஆணையின்

★பல்லவ மன்னன் : காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த முதலாம் மகேந்திரவர்மனாவான். இவனுக்கு குணபரன் அல்லது குணதரன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இவன் காலம் (கி.பி. 610–630)

பேரில் சமண அடிகள்மார்கள் அரண்மனையினுள்ளே நுழைந்தார்கள். வாயில் காவலர் வழிவிட அரசனிடம் நடைப்பிணங்கள் போல் வந்து நின்றார்கள். முன்பு அவர்கள் சூழ்ச்சியாகச் சித்தரித்த பொய்ம்மையை அரசன் நம்பும்படி கூறத் தொடங்கி, ''நம் சமண சமயத்திற்கு முதன்மையாளராக விளங்கிய தருமசேனர் சூலைநோய் கண்டவர் போல் பொய்யாக நடித்து சைவசமயத்தில் சேர்ந்து விரிசடையனுக்கு ஆளாய் நின்றார். அதன் மூலம் சமண சமயத்தையும் இகழ்ந்தொழித்தார்!'' என்று கூறித் தூண்டிவிட்டார்கள்.

அதைக் கேட்ட பல்லவ மன்னன் கோபங்கொண்டு துள்ளியெழுந்து, ''அந்த தருமசேனன் குற்றமுள்ள நெஞ்சோடு வேறு மதத்தில் போய் சேர்வதற்காகப் பொய் நோய் கொண்டு நடித்து நம் புகழ் பெற்ற சமண சமயத்தை இகழ்ந்தொழித்துச் சொல்வது தகுமா? அளவில்லாத தவமுள்ள முனிவர்களே! இதற்கு என்ன செய்யவேண்டும்?'' என்று குமுறினான்.

''தலைமை நெறியான நம் சமண சமயத்தைக் கெடுத்த அந்த அறிவிலியைத் துன்புறுத்தல் வேண்டும்!'' என்று அச்சமணர்கள் சிறிதும் வாய் அஞ்சாமல் கூறினார்கள். கொல்லா நோன்பு என்பதைக் கொள்கையளவில் மட்டும் கொண்டு, அதற்கு நேர்மாறாகப் பொய்யொழுக்கம் புரியும் அக்கொடியவர்கள் எதற்கும் கூசவில்லை!

அதனால் பல்லவ மன்னன் அருளுணர்வு சிறிதுமில்லாமல், நெறி தவறி அதுவே அறிவெனக்கொண்டு தம் மந்திரிகளை நோக்கி, ''இம் முனிவர்கள் குறிப்பிட்ட தீயோனைத் தண்டிப்பதற்காக உடனே அவனைப் பிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள்! எதைக் கொண்டும் அவனை விட்டு விடாதீர்கள்!'' என்று கட்டளையிட்டான்.

அமைச்சர்கள் அவ்வாறே அரசனின் கட்டளையை தலைமீது ஏற்று முரசடித்துப் படைகள் சூழ திருவதிகை நகரை அடைந்தார்கள். திருநாவுக்கரசரைச் சந்தித்து அவரைச் சூழ்ந்துகொண்டு, ''உம்மை இன்று அழைத்து வருமாறு பல்லவ மன்னர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஆகையால், இப்போதே எம்முடன் வாரும்!'' என்று அறிவித்தார்கள்.

சிவநேசச் செல்வரான திருநாவுக்கரசரோ அவ்வதிகாரிகளை ஏறிட்டு நோக்கி, பதில் சொல்வது போல், ''நாமார்க்கும் குடியல்லோம்!'' என்று ஒரு திருப்பதிகம் பாடலானார்.

''நாம் ஆர்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை யில்லோம்;
ஏமாப்போம்; பிணியறியோம்; பணிவோ மல்லோம்;
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை;
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமார்க்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர் சே வடியிணையே குறுகி னோமே!''

இவ்வாறு தொடங்கும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தை திருநாவுக்கரசர் பாடி, ''நீங்கள் அழைக்கும் முறையில் நாம் இல்லை!'' என்று கூறி அரசனின் கட்டளையை ஏற்க மறுத்தார்.

அமைச்சர்கள் திருநாவுக்கரசரின் திருவடிகளில் பன்முறை விழுந்து வணங்கி தங்களோடு வருமாறு மிகவும் வேண்டினார்கள். திருநாவுக்கரசர் அதற்கு இசைந்து, ''இனி வரும் எல்லா வினைகளுக்கும் எம்பிரான் இருக்கிறார்!'' என்று நினைத்து, அமைச்சர்களுடன் சென்று பல்லவ மன்னனின் சபையை அடைந்தார். கோபம் மூண்டுள்ள பல்லவ மன்னனுக்கு அதை அமைச்சர்கள் அறிவித்தார்கள்.

பல்லவ மன்னன், தன் அருகில் பொறாமையோடு அமர்ந்திருக்கும் சமண அடிகள்மார்களை நோக்கி ''இவனை இனி என்ன செய்வதெனச் சொல்லுங்கள்!'' என்று கேட்டான். சிற்றறிவும் அழுக்காறும் உடைய சமணர்கள் சிறிதும் அஞ்சாமல், ''இவனை நீற்றறையில் (சுண்ணாம்புக் காளவாயில்) போடுக!'' என்று சொன்னார்கள்.

உடனே பெருஞ்சினக் கொடுங்கோலன் தன் அருகில் வந்தவர்களை நோக்கி, ''அவ்வாறே செய்க!'' என்று ஆணையிட்டான்.

அதன் பிரகாரம் ஏவலாளர்கள் திருநாவுக்கரசரைப் பிடித்துச் சென்று, பெருந் தீக்கனலையொத்த நீற்றறைக்குள் அவரை இருக்கவைத்து வெளிக்கதவை அடைத்து இருப்புத் தாளிட்டுப் பாதுகாப்புகள் பலவும் அமைத்தார்கள்.

கொடும் நீற்றறைக்குள் திருநாவுக்கரசர் அடைபட்டதும், தில்லையம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் புரியும் சிவமூர்த்தியின் திருப்பாத நிழலைத் தம் தலைமீது கொண்டு, ''ஈசனடியார்க்கு ஈண்டு வருந்துபரும் உண்டோ?'' என்று நினைத்துக் கிளர்ந்தெழும் மன நிறைவோடு முக்கண்

முதல்வனைத் தொழுதபடியே வீற்றிருந்தார். கொடும் வெப்பம் நிறைந்த அந்த நீற்றறை இறைவனருளால் இளவேனிற் பருவமாக வீசும் மென்தென்றலாக குளிர்ச்சியான கழுநீர் மலர்ப் பொய்கையாக, மொய்க்கும் வெண்ணிலாவாக, மீட்டும் யாழ் ஒலியாகத் தோன்றி இறைவன் திருவடி நிழல் எனக் குளிர்ந்தது. இவ்வாறு எம்பிரான் திருவடி நிழலில் திளைத்திருந்த திருநாவுக்கரசர் மனமுருகி இறைவனை நினைத்துப் பாடினார்.

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டுறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே!''


– நாவுக்கரசர் தேவாரம்.

''பிறை நிலாவையும், கங்கை வெள்ளத்தையும் விரிசடையில் சுமக்கும் சென்னியனே! பேச இனியவனே! உலகை ஆளும் பித்தனே ஈசனே! எம்பெருமானே! எவ்வுயிரும் தருபவனே! ஆசையில் ஆராமுதே!'' என்று எப்போதும் இறைவனையே நினைத்து திருநாவுக்கரசர் அடிவணங்கி அந்த நீற்றறைக் குள்ளேயே இன்புற்றிருந்தார்.

இவ்விதமாக ஏழு நாட்கள் கழிந்தன. அதன் பிறகு பல்லவ மன்னன் உணர்ச்சியற்ற சமணர்களை வரவழைத்து, ''இனி நீற்றறையைத் திறந்து பாருங்கள்!'' என்று கூறினான். உடனே இருள் கூட்டம் போன்ற சமணர்கள் அந்த நீற்றறையைத் திறந்து பார்த்தார்கள்! அங்கே நீற்றறைக்குள் சிவானந்த வெள்ளத்தில் மூழ்கி, அம்பலவாணரின் தேன் சிந்தும் மலர்ப்பாதத்தின் அமுதத்தை உண்டு, தெளிந்த சிந்தையோடு, எவ்வகை ஊனமும் இல்லாமல், உவகையோடு திருநாவுக்கரசர் வீற்றிருந்தார்.

அவர் நிலையைக் கண்டதும், ''ஓர் ஊனமும் ஏற்படவில்லையே! இது என்ன அதிசயம்!'' என்று சமணர்கள் உள்ளூர வியந்தார்கள்.

பிறகு அச்சமணர்கள் பல்லவ மன்னனை நோக்கி, ''அதிசயம் ஒன்றுமில்லை! முன்பு இவன் நமது சமண சமய மந்திரங்களை நன்கு கற்றறிந்தவன்! அந்த மந்திர சாதகத்தால் இவன் சாகாமல் பிழைத்திருக்கிறான்!'' என்று திரித்துக் கூறிவிட்டு, ''இனி அறிவோடு செய்யத்தக்கது, இவனுக்கு கொடிய விஷத்தை ஊட்டுவதே ஆகும்!'' என்று தம்முடைய வாயால் சிறிதும் கூசாமல் கூறினார்கள்.



அவர்களின் சமணச் சமய சார்பால் பல்லவ மன்னனும் மதிமயங்கி, ''ம்! அவ்வாறே இவனுக்கு நஞ்சு ஊட்டுக!'' என்று கட்டளையிட்டான்.

உடனே கொலை செய்வதற்கும் அஞ்சாத அக்கொடியவர்கள் கொடும் விஷம் கலந்த பால் சோற்றை திருநாவுக்கரசர் உண்ணும்படிச் செய்தார்கள்.

''நஞ்சும் அமுதாகும் எங்கள் நாதன் அடியார்க்கே!'' என்று திருநாவுக்கரசர் சிரித்துவிட்டு 'நஞ்சு' கலந்த அந்தப் பாலன்னத்தை உண்டார்.

கொடும் விஷங் கலந்த பால் சோற்றை உண்ட பிறகும் திருநாவுக்கரசர் எந்தவிதத் தீங்கும் அடையவில்லை. முன்பொரு காலத்தில் பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷம் சிவபெருமானுக்கு அமுதமாயிற்று என்றால், அவர் தம் அடியார்க்கு இச்சிறு நஞ்சும் அமுதமாகியதில் வியப் பொன்றுமில்லை!

துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்(து) இராதே
அஞ்செழுத்தோதில் நாளும் அரனடிக்(கு)அன்பு அதாகும்
வஞ்சனைப் பாற்சோ(று) ஆக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி அடிகளாரே!

– அப்பர் தேவாரம்.



நஞ்சு கலந்த உணவை திருநாவுக்கரசர் உண்டும் உயிர் பிழைத்திருப்பதைக் கண்ட சமணர்கள் திடுக்கிட்டு, ''இவனுக்கு நஞ்சும் அமுதமாயிற்று. இவ்விடத்தில் இனியும் இவன் உயிர் பிழைத்திருந்தால் நமக்கெல்லாம் ஒரு முடிவே நேர்ந்துவிடும்!'' என்று பயந்தார்கள். அதனால் முறை தவறிச் செயல் புரியும் அரசனிடம் அவர்கள் சென்று, ''நாம் நஞ்சு கலந்த உணவை அவனுக்கு ஊட்டியும் அவன் சாகவில்லை! நமது சமண சமயத்தில் விஷம் தீர்ப்பதற்கு எளிதான ஒரு மந்திர சாதனை உண்டு! அதை அவன் நன்கு கற்றிருப்பதால் விஷத்தால் சாவு நேராதபடி தடுத்துக் கொண்டான். அவனை ஒழிக்கும் வகை இனி நம்மிடம் ஒன்றுமில்லையென்றால் எங்கள் உயிரும் உம் அரசாட்சியும் ஒழிந்து விடுவது திண்ணம்!'' என்று சூழ்ச்சியோடு கூறினார்கள்.

அவர்களுடைய சொல்லைக் கேட்டு மதிகெட்ட மன்னனும் ''நம மதத்தைக் கெடுத்த அப்பகைவனை இனி தண்டித்து ஒழிக்கும் வகை என்ன?'' என்று கேட்டான்.

''மன்னா! அவனது மந்திர சாதனையை ஒழித்திட வேண்டு மென்றால், உமது பட்டத்து யானையை அவனெதிரே விட்டு அவனைக் கொல்லும்படி ஏவுக!'' என்று கூறினார்கள்.

அரசன், ''அப்படியே நம் மதயானையை ஏவி விடுக!'' என்று ஆணையிட்டான். அவன் பூபாலனாகக் கொலு வீற்றிருந்தும் அரசியல் நெறி தவறியதால் கொலைத் தொழில் புரியும் புலையனாகவும் மாறிவிட்டான்.

அரசனின் ஆணை பிறந்ததும் கோபாதிசயம் என்னும் மதயானை ஒரு கருங்குன்று போல் புறப்பட்டு தன் கூடாரத்தைக் குத்திப் பிளந்துகொண்டு வெளிப்பாய்ந்தது. மாடங்களை இடித்து, மண்டபங்களை எடுத்தெறிந்தது. குத்துக்கோல் வீச்சுக்காரர்களின் தலைகளைக் கால்வீச்சில் இடறியது. யானை வேடமெடுத்துவரும் யமனைவிட வலிமையாகத் தோன்றியது. அது தன் கழுத்தில் கட்டிய கயிற்றையும், காலில் பூட்டிய சங்கிலியையும் அறுத்தது. இடிபோலப் பிளிறியது. வானத்துப் பறவைக் கூட்டம் வெகுண்டு மிரள, அந்த யானை தன் தும்பிக்கையைத் தூக்கிச் சுழற்றியது. மதநீர் பொழிய வெறி கொண்டு எதிரே பாய்ந்தது. அதன் காலடிகளை தாங்காமல் நிலம் நெளிய காற்றினும் கடிதென ஓடி, ஊழித் தீயைப்போல் பாய்ந்து சென்றது. வழியில் குதிரைக் கூட்டங்கள் குலைந்து மறியும்படி அந்த மதயானை மிகவும் மூர்க்கமாகப் பாய்ந்தோடியது. தன் வலிய கொம்புகளால் மதில்களையும் திண்ணைகளையும் முறித்தது. ஆங்காங்கேயுள்ள அலங்காரச் சின்னங்களையெல்லாம் அழித்தெறிந்தது. இவ்வாறு விளையாடியவாறு அந்த யானை ஒரு விசாலமான வெளியிடத்தில் வந்து சேர்ந்தது.

வஞ்சனையால் திருநாவுக்கரசரைக் கொல்ல வேண்டும் என்று கருத்துள்ள கொடியவர்கள் அந்த மதயானையை நாவுக்கரசரின் எதிரே செலுத்தி அவரைக் கொல்லும்படி ஏவினார்கள். அதைக் கண்டு நாவுக்கரசர் திடுக்கிட்டு நடுங்கவில்லை! விடைமீது ஏறும் சிவபெருமானைத் தியானித்தபடி நின்று, ஒரு திருப்பதிகம் பாடலானார்.

''சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்த்திங்கள் சூளாமணியும்
வண்ணவுரிவை உடையும்
வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முரணேறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றும் இல்லை,
அஞ்ச வருவதும் இல்லை''

— தேவாரம்.

இவ்வாறு தொடங்கும் திருப்பதிகத்தை உலகத்தோர் உய்யும்படி எடுத்து திருநாவுக்கரசர் மகிழ்ச்சியோடு பாடினார். வஞ்சகம் ஏவிய மதயானையை அவர் ஏறிட்டு நோக்கியபடியே எதிர் நின்று, ''வெஞ்சுடர் மூவிலைச் சூலவிரட்டர் தம் அடியோம் நாம்! அஞ்சுவதில்லை!'' என்றே அழுத்தி அழுத்திக் கூறி அருந்தமிழில் இனிய பதிகம் பாடியவாறு இறையன்பிலே உறைந்து நின்றார்.

அவருடைய அன்பு நிலையைக் கண்டதும் மதயானை அவரை வலம் வந்தது. எத்திசையோரும் காணும்படி தாழ்ந்து, தரையில் பணிந்து வணங்கி எழுந்து அப்புறம் சென்றது. ஆனால் அதன் மீதிருந்த பாகர்கள் அதைக் கட்டுப்படுத்தித் திருப்பி நாவுக்கரசரைக் கொல்லென்று காட்டி மீண்டும் அதை ஏவினார்கள். ஆனால் யானையோ அவர்களையே கீழே தள்ளிக் கொன்றது! பிறகு சமணர்கள் மேலே பாய்ந்து கொல்ல ஓடிற்று. ஆங்காங்கே நின்ற சமணர்களைத் தேடி ஓடி அவர்களைக் கதிகலங்கச் செய்தது. அவர்களில் சிலரை மிதித்தும் கிழித்தும் கொன்றது. இவ்வாறு நகர் முழுவதையும் கலக்கி அந்த யானை பலவாறாகவும் சுழன்று திரிந்தது. அதனால் அரசன் துயரக் கடலில் மூழ்கினான்.

அந்த மதயானைக்குத் தப்பிப் பிழைத்த சமணர்களெல்லாம் ஒன்று கூடினார்கள். மானம் இழந்து மதிமயங்கி, மனம் வருந்தியவர்களாய் அவர்கள் பல்லவ மன்னனிடம் விரைந்து சென்று, அவனது காலில் தனித்தனியே விழுந்து புலம்பினார்கள்.

மேன்மை நெறி இழந்த மன்னன் வெகுண்டு, அவர்களை நோக்கி, ''இனிச் செய்வது என்ன?'' என்று சீறினான்.

அதற்கு அச்சமணர்கள், ''நம்முடைய சமய நூல்களிலிருந்தே தருமசேனன் கற்றுக்கொண்ட மந்திர வலிமையினால் நாம் ஏவிய யானையைக் கொண்டே எதிர்த்தேவி எங்கள் பெருமையை அழித்தான்; உம் ஆட்சி முறையையும் சிதைத்து அவமானப் படுத்தினான்! அவன் அழிந்து போனால்தான் உமக்கு ஏற்பட்ட அவமானமும் தீர்ந்து போகும்!

. மலையே வந்து வீழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறுதிரே
தலைவனாகிய ஈசன் தமர்களை
கொலை செய் யானைதான் கொன்றிடு கிற்குமே.

- திருக்குறுந்தொகை,



பொங்கும் நெருப்பு அழிந்து போனால் அதன்பின் புகையும் அகன்று போய்விடுமல்லவா?'' என்றார்கள்.

அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு வேந்தன் பெரும் பாவத்தை இன்னும் பின்தொடர முனைந்து ''நம் பழம் பெரும் சமண சமயத்தைக் கெடுத்து நமக்கெல்லாம் துயரம் விளைவித்த அச்சிவனடியானை இனி என்ன செய்வது? அதைச் சொல்லுங்கள்?'' என்று படபடத்தான்.

''அவனைக் கல்லோடு கயிற்றால் சேர்த்துக் கட்டிக் கடலில் தள்ளவேண்டும்'' என்றார்கள் வன்னெஞ்சர்கள்.

உடனே வேந்தன் தன் கொலைஞர்களை வரவழைத்து, ''நம் சமண சமயத்திற்குத் தீங்கு புரிந்த தருமசேனனைக் காவலோடு கடலருகே கொண்டுபோய், அவனை ஒரு கல்லோடு சேர்த்துக் கயிற்றினால் கட்டி, ஒரு படகில் ஏற்றிக் கொண்டு போய்க் கடலிலே அவனைத் தூக்கியெறிந்து வீழ்த்துங்கள்!'' என்று கட்டளையிட்டான்.

அத்தீவினை புரிந்திட கொலையாளிகள் விரைந்து சென்றார்கள். அவர்களோடு மத விரோதிகளும் சென்றார்கள். திருநாவுக்கரசரும் சித்தத்தைச் சிவன்மீது வைத்து திருவுள்ளம் இன்புறச் சென்றார். கடலை அடைந்ததும் மன்னவன் சொன்னபடியே கொடுமைப் பாவிகள், திருநாவுக்கரசரைத்

தூக்கி கடலிடை வீசியெறிந்து தங்கள் காரியத்தை முடித்துச் சென்றார்கள்.

ஆழ்கடலில் விழுந்த திருநாவுக்கரசரோ, ''எப்பரிசாயினும் ஆகுக, எந்தையே ஏற்றிப் புகழவேன்!'' என்று சொல்லிவிட்டு ''நமசிவாய'' என்னும் அஞ்செழுத்தையும் துதித்து வண்தமிழில் பண்ணிசைத்து அன்பில் ஊறும் உணர்வுப் பெருக்கோடு திருப்பதிகம் பாடலானார்.

''சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமசிவாயவே!''

— தேவாரம்.

இவ்வாறு தொடங்கும் நமசிவாயப் பதிகப் பாடல்களால் திருநாவுக்கரசர் ஐந்தெழுத்துப் பெருமையைத் துதித்து அருளினார். உடனே அவரைக் கட்டியிருந்த கல்லானது கடலினுள் அழுந்தி மூழ்காமல் இயற்கைக்கு மாறாக இறைவனருளால் கடல்மீது தெப்பம்போல் மிதந்தது. அந்தக் கல்லோடு அவர் உடலைப் பிணைத்திருந்த கயிறும் அறுந்தது. அந்தக் கல்லின் மீது மெய்ப்பெருந் தொண்டனார் வீற்றிருந்து மிகப் பிரகாசமாய்த் தோன்றினார். நல்வினை தீவினை என்று பின்னிய கயிறானது ஆணவமலம் என்னும் கல்லோடு ஜீவாத்மாவை இறுகப் பிணித்துப் பிறவியெனும் பெருங்கடலினுள் தள்ளும். அத்தகைய பிறவிப் பெருங்கடலில் வீழும் எல்லா மக்களையும் அங்கிருந்து கரையேறும்படி திருவருள் புரியக்கூடியது திருவைந்தெழுத்தாகும். அதன் சக்தி அத்தகையதாக இருக்கும் போது கடலினுள் மூழ்காமல் ஒரு சிறு கல்லானது திருநாவுக்கரசரைத் தன்மீது ஏற்றிக் கொண்டது வியப்பன்று!

கடலில் ஆழ்த்திய கருங்கல்லே சிவிகையாகி அதன்மீது வீற்றிருக்கும் திருநாவுக்கரசரை வருணதேவன் தன் அலைக்கரங்களால் ஏந்திச் சென்று ★திருப்பாதிரிப்புலியூர் என்னும் தலத்தின் பக்கத்தில் கொண்டு சேர்த்தான்.

கல்லினோடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்க என் வாக்கினால்
நெல்லு நீள் வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றியுய்ந் தே(ன்) அன்றே!

— அப்பர் தேவாரம்

★திருப்பாதிரிப் புலியூர் : இவ்விடம் இப்போது 'கரையேறவிட்ட குப்பம்' என்று வழங்கப்படுகிறது.



திருநாவுக்கரசர் கடலிலிருந்து கரையேறி திருப்பாதிரிப் புலியூரில் புகுந்ததும் சிவனடியார்கள் மகிழ்ச்சியினால் ''ஹர! ஹர!'' என்ற ஒலியை முழக்கினார்கள்.

எத்திசையிலும் ''ஹர ஹரா!'' என்னும் ஓசையை எதிரொலிப்பதுபோல் பெருங்கடலும் அலைவீசி ஆரவாரம் செய்தது. திருத்தொண்டர்களும் ஊர் மக்களும் புடைசூழ திருநாவுக்கரசர் விரைந்து அவ்வூர் சிவன் கோயிலினுள் புகுந்து விரிசடைச் சிவபெருமானைக் கும்பிட்டார். அன்புற விழுந்து வணங்கிப் பின் எழுந்து நின்று அருள் நெறி விளங்கத் திருப்பதிகம் பாடலானார்.

''ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்'' என்று அடியெடுத்து ''தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடியோங்களுக்கே'' என்று முடிக்கும் பாட்டு முதலாக தமிழ்ப் பாமாலைகள் பலவற்றை இறைவனுக்குச் சாத்தினார்.

அவ்வாறு பல பாமாலைகளும் பாடியவண்ணம் அவர் அங்கேயே சில நாட்கள் தங்கியிருந்தார்.

அருகக் கடல் கடந்தேறிய திருநாவுக்கரசருக்கு திருவதிகை வீரட்டானப் பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்னும் பெருங்காதல் முதிர்ந்தெழுந்தது. அதனால் அவர் திருப்பாதிரிப் புலியூரை விட்டுக் கிளம்பிச் சென்றார். வழியிலுள்ள திருமாணிக்குழி திருத்தினை நகர் என்னும்

சிவத்தலங்களையும் வணங்கி விட்டு அவர் திருவதிகை வீரட்டானத்தை அடைந்தார்.

சமணர்கள் இழைத்த தீவினைத் துன்பங்களெல்லாம் ஒழியும்படி அவர்களை வென்று வந்தவரல்லவா திருநாவுக்கரசர்? அவரை வாக்கீசர், பைந்தமிழ்ப் பாவலர், மொழியின் காவலர் என்றெல்லாம் போற்றி வரவேற்க ஊர் மக்கள் அனைவரும் ஒருங்கே உற்சாகம் கொண்டார்கள். அந்த வரவேற்பை ஒரு மாபெரும் விழாவாகவே கொண்டாடினார்கள்.

அவ்வூரில் திருநாவுக்கரசர் எழுந்தருளியதும் ஊர் மக்கள் பேரொலி செய்து மங்கள வாத்தியங்களையெல்லாம் முழக்கினார்கள். வீடுகள் தோறும் தோரணங்களையும் கமுக மரங்களையும், வாழை மரங்களையும் வரிசையாகக் கட்டி வைத்தார்கள். எழு நிலைக் கோபுரங்கள், தெருத் திண்ணைகள் எங்கும் நறுமண மலர்கள் சாத்தினார்கள். நிலத்தைச் சந்தனக் குழம்பால் மெழுகினார்கள். இயற்கையிலே அழகான அந்நகருக்கு அழகின்மேல் அழகு செய்வதுபோல் அலங்கரித்தார்கள். அவ்வூர்ப் பெண்மணிகளின் இனிய நாதமும் ஏழிசை ஓசையும் எங்கும் பொங்கியெழுந்தது. பொன்னியல் சுண்ணங்களையும், மலர்களையும் பொரிகளையும் கலந்து தூவினார்கள். நாவுக்கரசரை நகரின் புறத்தே வந்து எதிர் கொண்டழைத்தார்கள்.

திருநாவுக்கரசரின் பொன்மேனியெங்கும் தூய வெண்ணீறு! அதிலே ஒரு தாழ்வடம்! சிந்தையெல்லாம் சிவநாதனின் திருவடித்தியானம்! நைந்துருகிப் பாய்வதுபோல் கண்களிலே பொழியும் அன்பு நீர்! செவ்வாயெல்லாம் செந்தமிழ்ப் பதிகம்! இக்கோலத்தோடு திருநாவுக்கரசர் அந்நகரின் வீதியில் புகுந்தார்.

அவரைக் கண்டவரெல்லாம் தலைமீது கைகூப்பிக் கும்பிட்டு, ''இந்தக் கருணை வடிவத்தைக் கண்டும் இவருக்குத் தீங்கு செய்யும்படி சமணர்களுக்கு எப்படித்தான் பகை உண்டாயிற்றோ?'' என்று வியந்தார்கள். பிறகு திருநாவுக்கரசரைத் தம் தொண்டராக ஆட்கொண்ட சிவபெருமானைத் தொழுதார்கள். இவ்வாறு பலரும் பேசிப் போற்றினார்கள்.

திருநாவுக்கரசர் அவர்களுடன் திருக்கோயிலுக்குள் புகுந்து சிவபெருமானை வணங்கி, ''வெறிவிரவு கூவிள நற்றொங்கலானை'' என்னும் பல்லவி அமைத்து ஏழைத் திருத்தாண்டகத் திருப்பதிகத்தைப் பாடினார். அங்கேயே சிலகாலம் உழவாரத் திருப்பணியைச் செய்து கொண்டிருந்தார்.

சமணர்களின் தூண்டுதலால் திருநாவுக்கரசருக்குத் தீமையே செய்து வந்த பல்லவ மன்னன் பழைய வினைப் பாசம் அறுந்ததால் நல்லறிவு பெற்றான். அவன் உண்மை தெளிந்து, சமண சமயச் சார்பை உதறியெறிந்து விட்டுத் திருவதிகை நகரை அடைந்து, திருநாவுக்கரசரைப் பணிந்து, சிவனடியானானான். அதன்பிறகு அவன் பாடலிபுத்திரத்தில் இருந்த சமணர் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துக் கொண்டு வந்து, திருவதிகையில் சிவபெருமான் எழுந்தருளக் குணபரவீச்சுரம் என்னும் திருக்கோவிலைக் கட்டுவித்துச் சைவனாக விளங்கினான்.

திருநாவுக்கரசர் பல சிவஸ்தலங்களுக்குச் சென்று தமிழ்ப் பாமாலைகள் பாடி எம்பெருமானைப் பணிந்து திருத்தொண்டு செய்ய விரும்பினார். திருவதிகைக்கு அருகிலுள்ள திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர் திருக்கோவலூர் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிப் பதிகம் பாடிக்கொண்டே, நான்மறையாளர் வாழும் திருப்பெண்ணாகடம் என்னும் ஊரையடைந்தார். அங்குள்ள திருத்தூங்கானை மாடம் என்னும் திருக்கோயிலுக்குச் சென்று, ஆண்டவனைத் தொழுது ''சமண சமயத்தின் தொடக்கிற்பட்ட இந்த உடலோடு இனியும் நான் உயிர் வாழமாட்டேன்! இந்தவுடலைத் தரித்து வாழும் பொருட்டு, என் தலைவரே, உனது முத்திரையை இட்டருள வேண்டும்!'' என்று வேண்டினார். ''பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்'' என்று தொடங்கும் திருவிருத்தம் பாடி மனமுருகி விண்ணப்பித்தார். ஆண்டவன் அருளினால், ஒரு சிவபூதம் வேறொருவரும் அறியாதவாறு வந்து, திருநாவுக்கரசரின் திருத்தோளில் சூலக் குறியையும் இடபக் குறியையும் பொறித்தது. திருநாவுக்கரசர் அதைக் கண்டு மனங்களித்துத் தம் பெருமானின் அருளை நினைத்து ஆனந்தக் கண்ணீர் பொழிந்தார். கீழே விழுந்து, கும்பிட்டு ''உய்ந்தொழிந்தேன்'' என்று எழுந்தார்.

அதன்பிறகு திருநாவுக்கரசர், திருப்பெண்ணாகடத்தில் இருந்து திருத்தொண்டு புரிந்துகொண்டே, திருவரத்துறை, திருமுது குன்றம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று ஆண்டவனைத் தொழுது தமிழ்ப் பாமாலை சாத்தி வணங்கினார். பிறகு அவர் கீழ்த்திசையில் சென்று நிவாநதிக்கரை வழியாக நடந்தார். தில்லையம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடும் நடராஜப் பெருமானை அடி வணங்கி, 'ஊனாலும் உயிராலும் உள்ள பயன் கொள்ள' நினைத்தார். தில்லை எனவும் திருப்புலியூர் எனவும் வழங்கப்படும் சிதம்பர நகரின் பக்கம் வந்து சேர்ந்தார். அந்நகரை நோக்கி கீழே விழுந்து கும்பிட்டு எழுந்தார். அத்தொண்டரைக் கண்டு

வயல்களும், மயில்களும், கரும்புகளும், குயில்களும், மலர்களும், கிளிகளும் மனமுருகி வரவேற்றன.

சிவனடியார்கள் வந்து அவரை வணங்கி எதிர்கொண்டு அழைத்துச் சென்றார்கள். தில்லை மூவாயிரவர் வாழும் அலங்காரமான திருவீதி வழியே அவர் நடந்து சென்றார்; திருக்கோயிலை வலம் வந்து, உடலெங்கும் ஆனந்தத்தால் மயிர் கூச்செறிய கனக சபையை நேர்நின்று தரிசித்தார்.

பிறகு அம்பலத்தில் நடனக் கோலம் பூண்டு நிற்கும் கூத்தப் பெருமானைக் கண்டு அவர் கைகூப்பித் தொழுதார். அவருடைய கண்கள் ஆனந்தக் கண்ணீர் பொழிந்தன. அந்தக் கரணங்களெல்லாம் உள்ளுருகி இன்புற்றன. அவர் பலமுறையும் கீழே விழுந்து விழுந்து நடராஜப் பெருமானைத் தொழுது எழுந்து கொண்டேயிருந்தார். அவரை நோக்கி எம்பெருமான் ''என்று வந்தாய்?'' என்று புன்முறுவலுடன் கேட்பதுபோல், ஒரு திருக்குறிப்பு அவருடைய நடனக் கோலத்தில் தோன்றியது. அதை உணர்ந்த நாவுக்கரசர், ''அத்தா! உன் ஆடல் காண அடியேன் வந்தேன்!'' என்று போற்றி, ''பக்தனாய்ப் பாடமாட்டேன்'' என்னும் திருநேரிசை பாடிப் பணிந்தார். அங்கேயே சிலகாலம் தங்கியிருந்து, திருமுற்றம் தேரோடும் திருவீதி முதலானவற்றில் உழவாரப் பணிசெய்து, 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' என்னும் திருக்குறுந் தொகையினையும் பாடினார். அதன்பிறகு, திருநாவுக்கரசர், திருவேட்களம், திருச்சுழிப்பாலை முதலான சிவத்தலங்களைத் தரிசித்து, திருப்பதிகங்களைப் பாடிச் சில நாட்கள் தங்கி யிருந்தார். தில்லை நடராஜப் பெருமானின் நினைவு கவர்ந்திழுக்கவே அவர் மீண்டும் தில்லையை நோக்கிப் புறப்பட்டு வந்தார். நினைப்பவர் மனத்தையே கோயிலாகக் கொள்ளும் சிவபெருமானை நினைத்து அவர் உள்ளங்கசிந்து பாடினார்.

> ''பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
> நினைப்பவர் மனங் கோயிலாகக் கொண்டவன்
> அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
> தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ''

– தேவாரம்.

இந்த திருக்குறுந் தொகையைப் பாடிக் கொண்டே அவர் திருச்சிற்றம்பலத்தையடைந்தார். அங்கே அடியவர் பெருமான், ''அரியானை'' என்னும் பாடலடி எடுத்து, அடியவருக்கு எளியவனான ஆண்டவனைப் போற்றி, பெரிய திருத் தொண்டகத்தைப் பாடியருளினார். மேலுந் தொடர்ந்து,



''செஞ்சடைக் கற்றை'' என்னும் திருநேரிசை பாடித் திருப்பணி செய்து வந்தார்.

அந்நாளில் சீர்காழிப்பதியில் திருஞானசம்பந்தர் சிறந்து விளங்கினார். அவர் சிறு பிள்ளையாக இருந்தபோது சிவ பெருமானின் தேவியான உமையம்மையே தன் திருமுலைப் பாலோடு சிவஞானத்தையும் அவருக்கு குழைத்தூட்டினாள். அதை உண்டதுமே பிள்ளையான ஞானசம்பந்தர் ''இவன் எம்மான்'' என்று ஆண்டவனைச் சுட்டிக்காட்டி ஏழிசையோடு கூடிய தமிழ்ப் பாமாலை பாடினார். அத்தகைய திருஞான சம்பந்தரின் சிறப்பினைச் சிவனடியார்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டதும் திருநாவுக்கரசருக்கு அதிசயமான அன்பு பொங்கியெழுந்து திருஞானசம்பந்தரின் திருவடிகளை வணங்க வேண்டும் என்ற பேராவல் பற்றிக்கொண்டது. அவர் நடராசப் பெருமானைத் தொழுது விடைபெற்றுக் கொண்டு, பிறவிப் பிணியறுக்கும் திருவீதியிலே புரண்டு புரண்டு சென்று தில்லையின் எல்லையைக் கும்பிட்டு அதைக் கடந்து போனார். வழியில் திருநாரையூர் என்னும் சிவத்தலத்தைப் பணிந்து பாடி, தொண்டர் குழாம் புடைசூழ சீர்காழி நகரை அடைந்தார்.

திருநாவுக்கரசரின் வருகையைக் கேள்வியுற்ற திருஞான சம்பந்தரும் அவரைக் காண வேண்டுமென்று பெரும் விருப்புற்று சிவனடியார் குழாத்துடன், வந்து அவரை எதிர்கொண்டு வரவேற்றார். திருநாவுக்கரசர் அன்பு பெருக திருக்கூட்டத்தின் நடுவே சென்று திருஞான சம்பந்தரின்

திருவடிகளில் விழுந்து வணங்கினார். திருஞானசம்பந்தர் தம்முடைய மலர்க் கைகளால் திருநாவுக்கரசரின் கால்களைப் பற்றியெடுத்து தாமும் வணங்கி, தம்மைவிட வயதில் முதிர்ந்தவரான நாவுக்கரசரைத் தம் தந்தையாக மதித்து, ''அப்பரே'' என்று அழைத்தார். நாவுக்கரசரும் ''அடியேன்'' என்றார். அன்று முதல் திருநாவுக்கரசருக்கு அப்பர் என்ற பெயரும் வழங்கலாயிற்று. அப்பரும் ஆளுடைப் பிள்ளையும் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டார்கள். ''பிள்ளையாரின் திருவடிகளை வணங்கப் பெற்றேன்!'' என்று அப்பர் உவந்தார். வாக்கீசரான அவரை வணங்கினேன் என்று ஞான சம்பந்தரும் மகிழ்ச்சிப் பொங்கித் துள்ளினார். இருவரும் உள்ளம் நிறைந்த அன்பினால் ஒருவரில் ஒருவர் இரண்டறக் கலந்து ஒரே திருவருளின் உண்மைச் சொரூபமாக விளங்கினார்கள். அது சிவமும் சக்தியும் ஒன்றாகக் கூடித் தோற்றமளிப்பது போலிருந்தது. இரண்டு பெரியவர்களின் அடியார் கூட்டங்களும் கடலைப் போல ஒன்றோடொன்று கலந்து, ஆரவாரித்தன. பின்னர் அப்பரும் பிள்ளையும் திருத்தோணியப்பர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலை அடைந்தார்கள். கோபுரத்தைக் கும்பிட்டு எழுந்து இருவரும் திருக்கோயிலுக்குள் புகுந்தார்கள். தோணியப்பர் தம் தேவியான பெரியநாயகியோடு வீற்றிருக்கும் கோலத்தைக் கண்டார்கள். அங்கு திருநாவுக்கரசரை நோக்கித் திருஞானசம்பந்தர், ''அப்பரே, உம் தம்பிரானாரைப் பாடும்!'' என்றார்.

உடனே அப்பர் சுவாமிகள், இறைவனின் சந்நிதியில் நின்று, ஆனந்தக் கண்ணீர் பெருக, ''பார் கொண்டு மூடி'' என்று தொடங்கும் திருப்பதிகத்தை மனங்கசிந்து பாடி இறைவனைப் பணிந்தார். அதன்பிறகு அவர், திருஞானசம்பந்தரின் திருமடத்திற்குச் சென்று, அமுதுண்டு சம்பந்தரோடு அளவளாவி மகிழ்ந்து கொண்டும், பின் அன்பு வளர்ந்தோங்கும் நிலையில் அந்த மடத்திலேயே சில காலம் தங்கியிருந்தார். ஒருநாள், திருநாவுக்கரசரான அப்பர் சுவாமிகள், சோழ நாட்டு திருப்பதிகளையெல்லாம் தரிசிக்க வேண்டும் என்று விரும்பினார். அந்த ஆவலைத் திருஞானசம்பந்தரிடம் கூறினார். ஞானசம்பந்தர், அதற்கு இணங்கி, அப்பரோடு சீர்காழியிலிருந்து புறப்பட்டுத் திருக்கோலக்கா ஊர் வரையில் கூடவே சென்று அன்போடு ஆண்டவனை வணங்கிவிட்டு விடையளித்து சீர்காழிக்குத் திரும்பினார்.

திருஞானசம்பந்தரிடம் விடை பெற்றுக் கொண்டதும் அப்பர் அங்கிருந்து புறப்பட்டு சிவபிரான் எழுந்தருளியிருக்கும், திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை வீரட்டம், திருநின்றியூர், திருநனிபள்ளி முதலிய

ஸ்தலங்களுக்குச் சென்று பணிந்தார். பாமாலை பாடிச் சாத்திப் பரமனை வணங்கினார். பிறகு காவிரியாற்றின் இருகரையிலுமுள்ள திருச்செம்பொன்பள்ளி,திருமயிலாடுதுறை, திருத்துருத்தி, திருவேள்விக்குடி, திருஎதிர்கொள்பாடி, திருக்கோடிகா என்னும் சிவத்தலங்களையெல்லாம் அவர் வணங்கிப் பரமனை பாடி மகிழ்ந்து திருவாவடுதுறை என்னும் தலத்தை அடைந்தார். அங்கு அவர் ''ஆவடுதண் துறையாரை அடைந்துய்ந்தேன்'' என்ற கருத்துடைய திருத்தாண்டகம் பாடி மற்றும் திருக்குறுந்தொகை, திருநேரிசை, திருச்சந்த விருத்தம் முதலான செந்தமிழ்ப் பக்திப் பாமாலைகளையும் சூட்டி பரமசிவனாரை வழிபட்டார். அங்கும் அவர் பலநாள் தங்கி உலகத்தோர் உய்ய உள்ளன்போடு உழவாரப் பணிசெய்தார். பிறகு திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், திருப்பழையாறை முதலான சிவத்தலங்களுக்கு அவர் சென்று தமிழ்ப் பாமாலைகளைச் சூட்டி மகிழ்ந்தார்.

அதன்பிறகு அவர், திருசத்தி முற்றத்துத் திருக்கோயிலை யடைந்து, சிவக்கொழுந்தீசரையும் உமாதேவியாரையும் தரிசித்து வணங்கி, ''கோவாய்முடுகி'' என்று பாடலடி எடுத்து, ''கூற்றம் வந்து குமைப்பதன் முன் பூவாரடிகள் என் தலை மேல் பொறித்து வைப்பாய்'' எனப் புகன்று திருப்பதிகம் பாடி முறையிட்டார். அப்போது சிவக்கொழுந்தீசர் ''திருநல்லூருக்கு வா, வா!'' என்று குரல் கொடுத்தருளினார். அப்பர், அரனாரை வணங்கி விட்டு மகிழ்ச்சியோடு 'திருநல்லூரை' அடைந்தார். அங்குள்ள சிவன் கோயிலுக்குச் சென்று அவர் இறைவனை வணங்கி எழுந்தார். அவர் எழுதும்போது ''உன்னுடைய நினைப்பை முடிக்கின்றோம்'' என்று சிவபெருமான் தமது பாதமலரை, அப்பரின் தலைமீது சூட்டியருளினார். அப்பர் மனமுருகி, ஆண்டவனின் அருளை நினைத்து ''நனைந்தனைய திருவடி என்தலை மேல் வைத்தார் நல்லூர் எம்பெருமாணார் நல்லவாறே!'' என்று போற்றிப் பாடி திருத்தாண்டகம் புனைந்தார். தீராத பெரும் செல்வத்தைப் பெற்று வந்த வறியனைப் போல் அவர் மனந்தழைக்க மேலும் பல பாமாலைகள் பாடினார். அவ்வூரிலே திருப்பணிகள் பலசெய்து, அவர் தங்கியிருந்த வண்ணம் திருக்குருக்காவூர், திருவாவூர், திருப்பாலைத்துறை முதலான பல க்ஷேத்திரங்களுக்கும் சென்று, ஆண்டவனை வணங்கி வந்தார்.

பிறகு, திருநாவுக்கரசர் இறைவனின் திருவருள் பெற்று திருநல்லூரை விட்டுப் புறப்பட்டுத் திருப்பழனம் என்னும் ஊருக்குச் சென்று அங்கு நீளரவில் ஆடும் பெருமானை வணங்கினார். அத்தலத்தின் அருகிலுள்ள திருப்பதிகளையும் அவர் தரிசித்த பின்னர் திங்களூரை அடைந்தார். அவ்வூரில்

வாழ்ந்து வந்த அந்தணர்களில் அப்பூதியடிகள் என்னும் ஒருவர் சிறந்து விளங்கினார். அவர் தம் உள்ளத்தில் திருநாவுக்கரசரைத் தம் குருவாகக் கொண்டவர். அந்தப் பேரன்பினால் அவர் தம் புதல்வர்களுக்கும், அறச்சாலை, கிணறு, குளம், நிழல் தரும் மரங்கள், தண்ணீர் பந்தல் முதலான பலவற்றிற்கும் திருநாவுக்கரசரின் பெயரையேச் சூட்டி, திருநாவுக்கரசரின் பெயராலேயே பல தரும காரியங்களையும் செய்து வந்தார். அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு திருநாவுக்கரசர் உடனே அப்பூதி அடிகளாரின் வீட்டிற்குச் சென்றார்.

திருநாவுக்கரசர் தம் வீடு தேடி வருவதை அறிந்த அப்பூதியடிகள் உடனே தம்மனைவி, மைந்தர், பெருஞ்சுற்றத்தாரோடு கூடி தம் குருநாதரான அப்பரைப் பெருமகிழ்ச்சியோடு வரவேற்று வணங்கியெழுந்து, தமது திருமனையில் அமுது செய்தருளும்படி வேண்டினார். திருநாவுக்கரசரும் அவரது வேண்டுகோளுக்கு இசைந்தார்.

அப்பரிடம் ஆத்மநேயம் பூண்டிருந்த அப்பூதிஅடிகள் பெரும் உற்சாகம் கொண்டு, அவருக்கு விதம் விதமான கறிகளுடன் அறுசுவை உணவளிக்க விரும்பினார். அவ்வாறே விதம் விதமான கறிகளுடன் திருவமுதும் ஆக்கப்பட்டது. அதன் பிறகு அவர் அருமையாக திருநாவுக்கரசு எனப் பெயர் சூட்டியுள்ள புதல்வனைக் கூப்பிட்டார். அப்பர் சுவாமிகளுக்கு திருவமுது படைக்கத் தமது புழக்கடைத் தோட்டத்திலிருந்து ஒரு நல்ல வாழைக் குருத்தை அறுத்து வருமாறு அப்புதல்வனைத் தனியே அப்பூதியடிகள் அனுப்பி வைத்தார். புதல்வன் திருநாவுக்கரசும் விரைந்தோடி வாழைத் தோட்டத்துக்குள் புகுந்து அங்கு காலந் தாழ்த்தாமல், ஒரு வாழைக் குருத்தை அரிந்தான். அப்போது ஒரு பாம்பு அவனைத் தீண்டியது. ஆனால் அதை அப்பையன் பொருட்படுத்தாமல், அப்பருக்கு திருவமுது செய்விக்க நேரமாகிறதேயென்று நினைத்து வாழைக் குருத்தை எடுத்துக் கொண்டு வேகமாகத் திரும்பி வந்தான். பாம்பின் விஷம் தலைக்கேறியதால் அவன் தலைச் சுற்றியபடியே வந்து, வாழைக் குருத்தைத் தாயாரின் கைகளில் நீட்டிக் கொடுத்து விட்டுத் தளர்ந்தான். தன்னை அரவம் தீண்டிய விதத்தை அவன் ஒருவரிடமும் கூறவில்லை. விஷம் தலைக்கேறியதால் அவன் மயங்கிக் கீழே விழுந்தான். உயிர் நீத்துப் பிணமாகவும் விறைத்துக் கிடந்தான்.

''ஐயையோ! கெட்டழிந்தோம்! பெரியவர் திருவமுது செய்யும் நேரத்தில் இத்தகைய இடையூறு நேர்ந்ததே! இதை அறிந்தால் அவர் இங்கே அமுதுண்ணத் தொடங்க மாட்டார்!''

என்று பதறி, ‘‘அப்பூதியடிகளும் அவருடைய மனைவியாரும் மனம் வருந்தி, மகனின் சவத்தை மறைத்து வைத்தார்கள். பிறகு ஒன்றும் நிகழாதது போல் ஒரு தடுமாற்றமும் இன்றி, வந்து ‘‘எம்பெருமானே! அமுது செய்ய வேண்டும்!’’ என்று அப்பூதியடிகள் வேண்டினார். அப்போது திருநாவுக்கரசரின் உள்ளத்தில் ஒருவிதத் தடுமாற்றம் ஏற்பட்டது. இறைவன் அருளால் அங்கு நிகழ்ந்த உண்மையை இன்னதென்று திருநாவுக்கரசர் அறிந்துகொண்டு அத்துன்பத்தைத் தீர்க்க விரும்பினார். தாம் திருவமுது செய்வதற்காக மைந்தனின் சவத்தையும் மறைத்து வைத்த அன்பை நினைத்து அளவுகடந்த கருணை கொண்டார். பிறகு அவர் அப்பூதியடிகளை அழைத்து, அவரது மகனின் சவத்தைச் சிவபெருமானின் திருக்கோயில் முன் கொண்டுவரச் செய்தார். அங்கு அவர் ‘‘ஒன்று கொலாம்’’ என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே அப்பூதியடிகளின் அருமைப் புதல்வனுக்கு தலைக்கேறிய விஷம் நீங்கியது. சவமாய்க் கிடந்த அந்தப் புதல்வன் உயிர்பெற்று, உணர்வும் பெற்று எழுந்தான். ஆனால் அப்போதும் அப்பர் இன்னும் திருவமுது செய்யவில்லையே என்றுதான் அப்பூதியடிகள் மனம் வருந்தினார். அதனால் அவர் வீட்டுக்குத் திருநாவுக்கரசர் சென்று திருவமுது செய்து, அங்கேயே சிலகாலம் தங்கியிருந்தார்.

பிறகு அவர் திங்களூரிலிருந்து புறப்பட்டு அப்பூதியடி களுடன் திருப்பழனத் தலத்தை அடைந்து, ஆங்குள்ள சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, ‘‘சொல் மாலை பயில்கின்ற’’ என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். அதில் அப்பூதியடிகளாரையும் அவர் சிறப்பித்துப் போற்றினார். அவ்வூரில் அவர் தங்கியிருந்த காலத்தில் ‘‘திருச்சோற்றுத்துறை’’ முதலான பல சிவத்தலங்களுக்குச் சென்று, இறைவனை வணங்கி, பாமாலைகள் பல பாடித் திருக்கோயிலில் திருத்தொண்டும் புரிந்து வந்தார்.

இவ்விதமாகத் திருப்பழனத்தில் திருநாவுக்கரசர் பல நாட்கள் தங்கியிருந்த பிறகு தம் தலைமீது இறைவன் திருவடி வைத்த திருநல்லூரின் நினைவு அவரைக் கவர்ந்திழுத்தது. அதனால் அவர் திருநல்லூரை அடைந்தார். அங்கு அவர் சிவபிரானின் திருவடிகளை வணங்கி ஆறாது பொங்கும் பேரன்பிலே திளைத்து இறைவனைப் போற்றிசைத்துத் திருப்பணிகள் செய்து கொண்டு, சிலகாலம் தங்கியிருந்தார். ஒரு நாள் திருவாரூரை தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் பிறந்தது. அதனால் அவர் திருநல்லூர் இறைவனாரிடம் விடை பெற்றுக் கொண்டு, திருப்பழையாறை, திருவலஞ்சுழி, திருக்குடமூக்கு எனப்படும் கும்பகோணம், திருச்சேறை வாயில்,

திருநாரையூர், வாஞ்சியம், பெருவேளூர், திருவிளமர் முதலிய சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாரூரை வந்தடைந்தார்.

ஆண்டவன் அருள் பெற்ற நாவுக்கரசர் எழுந்தருள்கிறார் என்றதுமே திருவாரூர் அன்பர்கள் தங்கள் நகரின் மாளிகை மாடங்களையெல்லாம் அலங்கரித்து, வீதிகளும் அழகு பொழிய திருமலிமங்கலம் செய்தார்கள். சமணர்களின் மாயை கடந்து மறிகடலில் கல்லையே தெப்பமாகக் கொண்டு மிதந்து வந்தவர் என்னும் பெருங்களிப்பு கொண்டார்கள். ஊரின் எல்லையிலுள்ள நகர் வாசலுக்கே சென்று நாவுக்கரசரை எதிர்கொண்டு வரவேற்றார்கள். அவர்களை நாவுக்கரசர் வணங்கி, ''சமணர்களால் உற்ற மாயப்பிணி ஒழிந்து உய்யப் போந்தேன்! இனி நான் பெறலாவது ஒன்றே! அது புற்றிடம் கொண்ட பெருமானின் தொண்டருக்குத் தொண்டராகும் புண்ணியமே!'' என்று உணர்ந்து ஒரு திருப்பதிகம் பாடிக் கொண்டே திருவீதியில் நடந்து, தோரணவாயிலைக் கடந்து, தேவாசிரிய மண்டபத்தைக் கும்பிட்டு, திருக்கோயிலுக்குள் சென்று தியாகேசரை வணங்கினார். ''போற்றித் திருத்தாண்டகத்தினை''யும் பாடிப் பரவசமடைந்தார். ''காண்டலே கருத்தாய் நினைத்திருந்தேன்'' என்று துவங்கும் கலைப் பதிகத்தை ஓதி உருகினார்; மணிக் கோயிலினை வலம்வந்து கும்பிட்டு அன்புள்ளத்தோடு தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார்.



அங்கு அவர் பாடத் தொடங்கி, ''கொய்யுலா மலர் சோலைக்குயில் கூவ மயிலாலும் ஆரூரரைக் கையினால் தொழா தொழிந்து கனியிருக்க காய்கவர்ந்த கள்வனேன்'' என்னும் திருப்பதிகம் (பழமொழி) பாடினார். அன்புருகி ஆனந்தக் கண்ணீர் பெருக்கி பதிகப் பாமாலைகளைப் பாடிக் கொண்டும், திருவீதி முதலானவற்றில் உழவாரத்

திருப்பணி செய்து கொண்டுமிருந்தார். புற்றிடங் கொண்ட பெருமானைக் காலங்கள் தோறும் தவறாது சென்று அவர் அன்போடு வணங்கித் தொழுது, ''பாடினம் பூதத்தினும்'' என்னும் பதிகம் முதலானவும் பாடியருளினார். ஒரு திருப்பதிகத்தில் நமிநந்தியடிகளின் திருத்தொண்டைச் சிறப்பித்தார்; அங்குள்ள அரநெறி என்ற திருக்கோயிலையும் வணங்கித் திருப்பதிகம் பாடினார்.

இவ்வாறு திருநாவுக்கரசர் திருவாரூரில் இருந்து கொண்டே திருவலிவலம், கீழ்வேளூர், கன்றாப்பூர் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று வணங்கி வந்தார். அப்போது திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா நடைபெற்றது. அத்திருவிழாவை அப்பர் சுவாமிகள் ஆனந்தமாகக் கண்டு அகமகிழப் போற்றினார். பிறகு திருப்புகலூரில் அமர்ந்திருக்கும் சிவபெருமானை தரிசிக்க வேண்டுமென்று பெருங்காதல் கொண்டு ஒருவாறு திருவாரூரை விட்டுப் பிரிந்து, வழியில் பல சிவத்தலங்களையும் கண்டு வணங்கிப் பின்னர் திருப்புகலூரை அடைந்தார். அந்நகரில் சீர்காழியிலிருந்து புறப்பட்ட திருஞானசம்பந்த சுவாமிகள் பல சிவத் தலங்களையும் தரிசனம் செய்துகொண்டு திருவாரூரை அடைந்து அங்குள்ள முருகநாயனார் திருமடத்தில் வந்து தங்கியிருந்தார். திருப்புகலூருக்கு திருநாவுக்கரசர் வருவதை அவர் அறிந்ததும் தம் அடியார்கள் புடைசூழச் சென்று எதிர் கொண்டழைத்தார். அவரைத் திருநாவுக்கரசரும் பெருங்காதலோடு வணங்கினார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரை வணங்கி, ''அப்பரே! நீர் வரும் நாளில் திருவாரூரில் நிகழ்ந்த பெருமையினை வலித்துச் சொல்லும்!'' என்று கூறினார். அப்பெருமையை அப்பர், ''முத்துவிதான மணிப்பொற்கவரி'' என தொடங்கும் திருப்பதிகம் பாடி திருவாதிரைத் திருநாளின் சிறப்பை எடுத்துரைத்தார். அதைக்கேட்ட திருஞானசம்பந்தர், ''திருவாரூர் போய் வருகிறேன்! திரும்பி வந்து இங்கு உம்முடன் அமர்கிறேன்!'' என்று சொல்லித் திருவாரூருக்குச் சென்றார். திருநாவுக்கரசரோ, திருப்புகலூரில் ஆண்டவனைத் தொழுது, திருப்பதிகங்களைப் பாடித் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தார்!

அதன் பிறகு அவர் திருப்புகலூரிலிருந்து புறப்பட்டு திருச்செங்காட்டாங்குடி, திருநள்ளாறு, சாத்தமங்கை, அயவந்தி, திருமருகல் முதலிய சிவத்தலங்களுக்குச் சென்று சிவபெருமானை வணங்கிவிட்டு—மீண்டும் திருப்புகலூரை அடைந்தார். அதற்குள் திருவாரூர் சென்ற திருஞானசம்பந்தரும் திரும்பிவந்து திருப்புகலூரை அடைந்தார். அப்போது ஈகையில் சிறந்த சிறுத்தொண்ட நாயனாரும் புகழ்பெற்ற

திருநீலநக்கநாயனாரும் அங்கு வந்தார்கள். அவர்களோடு மற்ற சிவனடியார்கள் அனைவரும் முருகநாயனார் திருமடத்தில் உடன்பயில் நட்போடு தங்கியிருந்தார்கள். சிவநேசத் தொண்டர்களின் பெருமைகளை யெல்லாம் விரித்துரைத்து அவர்கள் ஒருமனப்பட்ட சிந்தையினர்களாக விளங்கினார்கள்.

இவ்வாறு சிவனடியார்களுடன் சில நாட்கள் கூடிக் களித்துப் பிறகு அப்பரும் பிள்ளையும் (திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும்) புகலூரை விட்டுப் புறப்பட்டு வேறு பல திருப்பதிகளை வணங்கிச் செல்ல விரும்பினார்கள். அதனால் திருநீலநக்க நாயனாரும், சிறுத்தொண்ட நாயனாரும் முருக நாயனாரும் மற்ற சிவனடியார்களும் அவர்களிடம் விடைபெற்றுத் தத்தமது இடங்களுக்குச் சென்றார்கள்.

அதன் பிறகு மனதில் ஒருமைத் தன்மையுள்ள அப்பரும் ஞானசம்பந்தரும் திருவம்பர் திருப்பதியை அடைந்து செஞ்சடைப் பெருமானை வணங்கினார்கள். பிறகு அவ்விருவரும் திருக்கடவூருக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு அங்கு குங்குலியக் கலய நாயனாரின் திருமடத்தில் அவருடைய விருந்தினர்களாகத் தங்கி மற்ற சிவனடியார்களுடன் திருவமுது செய்தார்கள். பிறகு இருவரும் திருக்கடவூர் மயானம் என்ற ஸ்தலத்தைத் தரிசித்துப் பதிகம் பாடி வணங்கிக் கொண்டு திருவாக்கூர் தான்தோன்றி மாடக்கோயில் முதலான பல பதிகளையும் தரிசித்துப் பதிகம் பல பாடிக்கொண்டு திருவீழிமிழலை என்னும் சிவஸ்தலத்தை அடைந்தார்கள்.

அங்குள்ள அந்தணர்களும் அடியார்களும் பூரண கலசமேந்தி அத்தொண்டர்களை வரவேற்றனர். மாடவீதி அலங்கரித்து, மறையோர் வாசலில் மணி விளக்கு வாழை கமுகு முதலானவற்றை நிரைத்து மங்கல ஒலிகளுடன் அழைத்துச் சென்றனர். சிவனடியார்கள் புடைசூழ, பெரியோர் இருவரும் திருக்கோயிலை அடைந்தார்கள். திருநாவுக்கரசர் சிவபெருமானை வலம்வந்து இரு கைகளையும் சிரமேற் குவித்துக் கொண்டு, கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகி, மார்பில் வழியப் பக்திப் பரவசராக நின்றார். ''திருவீழிமிழலையானைச் சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே!'' என்னும் ஈற்றடியினைக் கொண்ட திருத்தாண்டகத்தை அவர் பாடி இறைவனைப் போற்றி வணங்கினார். அந்த ஊரிலேயே அவரும் ஞானசம்பந்தரும் இறைவனைக் கும்பிட்டவர்களாய் பல நாட்கள் தங்கியிருந்தார்கள்.

அத்திருத்தொண்டர்கள் இருவரும் அவ்வூரில் தங்கியிருந்து சில நாட்களானதும் பருவமழை தவறியது. காவிரியாறும் வறண்டது. நாட்டில் விளைவு குன்றியது. அவ்வூர் மக்கள் கொடும் வறுமையால் வாடினார்கள். பசி மிகுந்தது. பஞ்சம் பெருகியது. பஞ்சத்தால் பல உயிர்கள் வருந்தி அலைகின்றபோது, அப்பர், சம்பந்தர் ஆகிய இருவரது கனவிலும் சிவபெருமான் தோன்றி ''பஞ்சகாலமாகிய காலபேதத்தால் உங்கள் கருத்தில் வாட்டம் அடையமாட்டீர்கள். ஆனாலும் உங்களை வழிபடும் அடியார்களுக்கு வழங்குவதற்காக நாம் உங்களுக்குப் ★''படிக்காசு அளிக்கின்றோம்'' என்று உணர்த்தியருளினார். அதன்படியே திருக்கோயிலின் கிழக்கே உள்ள பீடத்திலும் மேற்கேயுள்ள பீடத்திலும் திருஞானசம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் படிக்காசுகளை நாள்தோறும் நம்பிரான் வைத்தருளினார். அவற்றைக் கொண்டு அடியார்கள் பண்டம் வாங்கி, அமுது ஆக்கி, ''சிவனடியார்கள் எல்லோரும் வந்து அமுதுண்க'' என்று நாள்தோறும் இருவேளைகளிலும் பறைசாற்றித் தெரிவித்து இருவர் திருமடங்களிலும் அன்னமிட்டு மக்களின் பசிப்பிணியைப் போக்கலானார்கள்.

திருஞானசம்பந்தர் உமையம்மையிடம் முலைப்பால் அருந்திய சிவகுமாரராதலால் வட்டக்காசு பெற்றார்; திருநாவுக்கரசர் கைத்தொண்டு செய்ததால் வட்டமில்லாத காசு பெற்றுவந்தார். பிறகு, இறைவனருளால், மேகங்கள் குவிந்து நிலங்குளிர மழை பொழிந்தன. நாட்டில் மீண்டும் வளம் பெருகியது.

பிறகு அன்பர்கள் இருவரும் தலயாத்திரை செய்ய விரும்பி, திருவீழிமிழலையிலிருந்து புறப்பட்டு திருவாஞ்சியம்

★ படிக்காசு பெற்றமைக்குச் சான்றுகள் :

''பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வட்டம் தவிர்ப்பார் அவரைப் போல்''

– அப்பர் தேவாரம் 5–ஆம் திருமுறை திருவாய்மூர் திருக்குறுந் தொகை

''இருந்து நீர் தமிழோடு இசை கேட்கும்
இச்சையால் காசு நித்தல் நல்கினீர்''

– சுந்தரர் – திருவீழிமிழலை

''பாடலங்காரப் பரிசில் காசருளிப்
பழுத்த செந்தமிழ் மலர் சூடி''

– சேந்தனார் திருவிசைப்பா

முதலிய திருப்பதிகளுக்குச் சென்று இறைவனை வணங்கி இசைத் தமிழால் போற்றிவிட்டுத் திருமறைக்காட்டுக்குச் சென்றார்கள். அங்கிருந்த சிவனடியார்களுடன் திருக்கோயிலுக்குச் சென்றார்கள். வேதாரணியம் எனப்படும் அத்திருமறைக்காட்டிலுள்ள சிவன் கோயிலின் மணி வாசற்கதவு வெகு காலத்திற்கு முன்பு வேதங்களால் பூசிக்கப் பெற்று அடைக்கப் பட்டிருந்தது. அப்பெருங்கதவு திருக்காப்பிடப்பட்ட நிலையிலேயே அந்நாள் முதல் திறக்கப்படாமலேயே இருந்து வந்தது. அதைத் திறக்கவல்ல அன்பர்கள் ஒருவரும் வரவுமில்லை. சிவபெருமானுக்கு பூஜை செய்பவர்களும் பிறரும் அதன் பக்கத்திலேயே ஒரு வாயில் செய்து, அதன் வழியே சென்று இறைவனை அருச்சிப்பதும் தொழுவதும் வழக்கமாக இருந்தது. அதுபற்றிய செய்தியை அன்பர் இருவரும் கேட்டறிந்தார்கள். திருஞானசம்பந்தர் புன்முறுவலுடன் நாவுக்கரசரை நோக்கி, ''அப்பரே! நாம் இருவரும் நேர் வாயில் வழியாகச் சென்றே, நம்பெருமானை தரிசித்து வணங்க வேண்டும். ஆகையால், திருமுன்புள்ள இக்கதவின் திருக்காப்பு நீங்கவும் கதவு திறக்கவும் நீர் பாடும்!'' என்றார். அதனால் திருநாவுக்கரசர் ''பண்ணினேர் மொழியாள்'' என்ற பாடலடியெடுத்து திருக்கதவுத் திருக்காப்பு நீங்குமாறு திருப்பதிகம் பாடலானார்.

பண்ணினேர் மொழியாள் உமை பங்கரோ!
மண்ணினார் வலஞ் செய்ம்மறைக் காடரோ!
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே!

– அப்பர் தேவாரம்

ஆனால், திருக்காப்பை நீக்க சிவபெருமான் காலந் தாழ்த்தினார். அதைக் கண்டதும் நாவுக்கரசர் விடாமல் ''இரக்கமொன்றிலீர்'' என்று திருக்கடைக் காப்பிலே பாடி வணங்கினார்.

அரக்கனைவிர லால்அடர்த் திட்டநீர்,
இரக்க மொன்றிலீர் எம்பெருமானரே!
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரே!
சரக்க இக்கதவம் திறப் பிம்மினே!

– அப்பர் தேவாரம்

உடனே மறைக்காட்டு இறைவனின் திருவருளால், திருக்காப்பு நீங்கி மணிக்கதவும் திறந்தது.

அதைக் கண்டு ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் ஆனந்தத்தால் மெய்சிலிர்க்க பூமியில் விழுந்து வணங்கினார்கள். வேத ஒலிகளும் விண்ணவரின் ஆரவாரமும் கடலோசையை விடப் பொங்கியெழுந்தன. சிவனடியார்கள் மகிழ, அன்பர்கள் இருவரும் ஆலயத்துள்ளே சென்று, சிவபெருமானை பணிந்து போற்றித் தமிழ்ப் பாமாலைகள் பல சாத்தி, என்புகரைய உள்ளுருகிக் கும்பிட்டு வெளியே வந்தார்கள். அப்போது நாவுக்கரசர், திருஞான சம்பந்தரை நோக்கி, ''திறந்த கதவு அடைக்கும் வகை நீர் பாடியருளும்!'' என்றார். உடனே, திருஞானசம்பந்தரும் அப்பரின் வேண்டுகோளுக்கு இணங்க, ''சதுர்மறைதான்'' என்று தொடங்கும் ஒரு திருப்பதிகம் பாடினார். முதற் பாட்டினைப் பாடியதுமே இறைவனருளால் திண்ணிய பொற்கதவும் விரைந்து மூடிக் கொண்டது. அதைக் கண்ட நாயன்மார் இருவரும் மகிழ்ந்து, ''இது நம்பெருமான் அருள் செய்யப் பெற்றோம்!'' என்று வணங்கினார்கள். அன்று முதல் இறைவரது திருமுன்புக்கு நேராகவுள்ள அத் திருவாயில் கதவு, திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் வரும் வழக்கம் ஏற்பட்டது.

அங்கு நிகழ்ந்த அற்புதச் செயல்களைக் கண்டு அடியார் கூட்டமெல்லாம் அதிசயித்து, புளகாங்கிதம் அடைந்து, பக்திப் பரவசத்தில் ஆனந்தக் கண்ணீர் பொழிந்து இணையற்ற இரு நாயன்மாரின் பாதங்களைத் தொழுதனர். நாயன்மார் இருவரும் திருமடத்திற்குச் சென்று அங்கே தங்கியிருந்தார்கள். அன்று இரவு, திருநாவுக்கரசருக்கு ஒருவித ஏக்கம் உண்டாயிற்று. ''என்ன! என் பாட்டிற்கு கதவு அரிதில் திறக்கப்பட்டது. அவர் பாட்டுக்கு எளிதாக மூடிக்கொண்டதே! எம்பிரான் திருவுள்ளம் அறியாது அயர்ந்தேன்!'' என்று எண்ணிக் கவலையுற்று பெரிதும் அஞ்சியவராய்த் திருமடத்தின் ஒரு பக்கத்தில் ஆண்டவனை நினைத்து உறங்கினார். அப்பொழுது உமையொரு பாகனான சிவபெருமான் தம் பொன்மேனியில் வெண்ணீறு புனைந்த கோலத்தோடு நாவுக்கரசரின் கனவில் தோன்றி ''நாம் ★திருவாய்மூரில் இருப்போம்! அங்கு எம்மைத் தொடர்ந்து வா!'' என்று உணர்த்தியருளினார். அப்பர் கண்விழித்துப் பார்த்தார். ''அறிவு விளங்க என்னை

★ திருவாய்மூர் : சூரியன் பூஜித்த ஸ்தலம். இது வேதாரணியத்தில் இருந்து வடக்கே சுமார் 15 மைல் தொலைவிலுள்ளது.

இது சப்த லிங்கஸ்தலங்களில் ஒன்று.

வாவென்று சொல்லிப் போனாரோ!'' இது எம்பெருமான் அருளாகில் நானும் போவேன்!'' என்று நினைத்து அவர் ஒரு பதிகம் பாடலானார்.

''எங்கே என்னை இருந்திடத் தேடிக்கொண்டு
அங்கே வந்து அடை யாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வா என்று போனார் அது என்கொலோ!''

இவ்வாறு அவர் பாடிக்கொண்டே எழுந்தார். திருமறைக்காட்டை விட்டு விரைந்து புறப்பட்டார். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் கனவில் தோன்றிய அதே வடிவின் வேடத்தோடு முன்னே வழிகாட்டிச் செல்ல, அவரைப் பின் தொடர்ந்து திருநாவுக்கரசரும் சென்றார். சிவபெருமானை அவர் வேகமாகப் பின் தொடர்ந்தும் பெருமானை எட்டி அணையவோ, நேரில் காணவோ முடியாமல் தத்தளித்தார். அவருக்குச் சமீபத்தில் காட்சி கொடுக்க விரும்புபவர் போல் சிவபெருமான் தம் எதிரே பொற்கோயில் ஒன்றைக் காட்டி அதனுள்ளே புகுந்து மறைந்தார். திருநாவுக்கரசரும் அவரைப் பின்தொடர்ந்து அங்கே விரைந்து சென்றார். இதற்கிடையில் திருவாய்மூருக்கு அவர் செல்கிறார் என்பதைக் கேள்விப்பட்டு ஞானசம்பந்தரும் அங்குவந்து சேர்ந்தார்.

திருநாவுக்கரசரோ மனங் குழம்பி, ''என்னை எம்பெருமான் அழைத்துக்கொண்டு வந்து, எனக்குச் சமீபிப்பவர் போலவும் காட்டிவிட்டு, இப்போது மறைந்துவிட்டார்'' என்று அயர்ந்தார்.

''எம்பெருமானின் திருக்குறிப்பை அறியாமல் மணிக்கதவைத் திறக்கப் பாடிப் பிழை செய்தேன். அதனால் அடியேனுக்கு அவர் தம் திருவுருவை மறைக்கலாம்! ஆனால் என்னைவிடச் செந்தமிழில் உறைக்கப் பாடிக் கதவை அடைப்பித்த அருள்மொழி அன்பரும் இங்கு வந்திருக்கிறார். அவருக்கும் எம்பெருமான் எப்படித் தம் திருவுருவை மறைக்கலாம்?'' என்று விண்ணப்பித்தார். அரியும் அயனும் காணவொண்ணாத சிவபெருமான் ஞானசம்பந்தரின் கண்களுக்கு நேரே காட்சி தந்தருளினார். அக்காட்சியைக் கண்ட அவர், பணிந்து வழிபட்டு, திருநாவுக்கரசருக்கும் அதைக் காட்டினார். திருநாவுக்கரசர் அதைக் கண்டு, மகிழ்ந்து, பாட அடியார் பரவக் கண்டேன்; ''பத்தர் கணங்கண்டேன்'' என்று துவங்கும் திருத்தாண்டகத்தைப் பாடினார். சிவபெருமான் பாமாலைகளை ஏற்றுக் கொண்டு திருவுருவம் மறைந்தார். அப்பர் திருவாய்மூரை அடைந்து கோயிலை வலம் வந்து பிறைசூடிப் பெருமானை தொழுது

போற்றி சிலகாலம் தங்கியிருந்தார். அதன் பிறகு அவர் திருமறைக் காட்டுக்கு ஞானசம்பந்தரோடு திரும்பியும் வந்து சேர்ந்தார்.

அந்நாளில், பாண்டியன் தேவியான மங்கையர்க்கரசியாரின் ஏவுதலினால் மந்திரியாராகிய குலச்சிறை நாயனார் அனுப்பிய சில ஒற்றர்கள் திருஞான சம்பந்தரைக் காணவந்தார்கள். அவர்கள் திருமறைக்காடு திருஞான சம்பந்த ஸ்வாமிகளைச் சந்தித்து வணங்கினார்கள்.

ஞானசம்பந்தர் சிந்தை மகிழ்ந்து ‘‘தீது ஏதும் இல்லையே?’’ என்று விசாரித்தார். ‘‘ஐயனே! உலகம் உய்ய வந்தீர்! உம் திருவடிகளை நினைப்பவர்களுக்குத் தீங்கும் நிலைத்திருக்குமோ?’’ என்று சேவகர்கள் கூறி, ‘‘பாண்டி நன்னாட்டில் பழமையான சைவ நன்னெறி இருக்க அதைத் தொலைப்பதற்காக பொய்மையில் வல்ல சமணர்கள் முயல்கிறார்கள். அச்சழக்கரின் செயல்களை எங்களால் பொறுக்க முடியவில்லை!’’ என்றார்கள்.

அச்சமணர்களின் வன் செயல்களை வீழ்த்திச் சைவ நெறியை வளர்ப்பதற்காக ஞானசம்பந்தர் தெய்வத் திருநீற்றை நினைத்துப் புறப்பட்டார். அப்பொழுது திருநாவுக்கரசர், ‘‘சமணர்கள் மிகவும் பொல்லாதவர்கள்; உடல் என்னும் அழுக்கைப் பெருக்கிக்கொண்டே, உழல்பவர்கள். மூதேவிகளான அமணர்கள் மாயாஜால வஞ்சனைகளில் மிகவும் வல்லவர்கள். அவர்கள் முன்னாளில் எனக்குச் செய்த தீவினைக் கொடுமைகளும் பலப்பல; அவர்களால் நான் மிகவும் துன்பப்பட்டேன்! ஆதலால் தாங்கள் அங்கு செல்ல அடியேன் இசைய மாட்டேன்!’’ என்று கூறினார். அதைத் திருஞான சம்பந்தர் மறுத்து ‘‘நம் திருநீற்று நெறியைப் பாண்டிமா தேவியான மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் பெரிதும் போற்றி வருபவர்கள்! அவ்விருவரையும் நான் அங்கு சென்று காணவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறேன்; அங்கே பாண்டிய நாட்டில் தீமைகள் புரியும் சமணர்களின் ஆதிக்க நிலைமையை அழித்து நம் சைவ நெறியை அங்கே பரப்பி வளர்ப்பேன். இனி நான் அவற்றையன்றி வேறொன்றையுஞ் செய்யமாட்டேன்; உமது ஆணை!’’ என்றார். அதற்குத் திருநாவுக்கரசர், ‘‘நீர் அங்கு போக வேண்டுமென்று துணிந்து விட்டீர்! ஆனால் நீர் போதல் கூடாது என்பதே என் கருத்து! நானே போய் அவ்வமணர்களின் தீய மாயைகளைச் சிதைத்து வருகிறேன்!’’ என்று பலவாறாகவும் முறையிட்டு ஞானசம்பந்தரைத் தடுக்க முயன்றார். ஆனால் அந்த முயற்சி பயன்படாததால் வேறு எதுவும் சொல்லி மறுக்க முடியாமல் அவர் வகையற்று நின்றார்.

அவரிடம் ஞானசம்பந்தர் விடைபெற்று திருமறைக் காட்டுப் பெருமானைத் தொழுதுவிட்டுப் பாண்டிய நாட்டுக்குச் சென்றார்.

அவர் போன பிறகு திருநாவுக்கரசர், வேதாரணியத்தில் சிவபெருமானைப் போற்றிப்பாடி சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு திருவீழிமிழலைப் பெருமானை மீண்டும் தரிசிக்க விரும்பிப் புறப்பட்டுச் சென்றார். வழியில் ★**திருநாகைக் காரோணம்** (நாகைப்பட்டினம்) முதலிய திருப்பதிகளுக்கும் அவர் சென்று இறைவனைப் பணிந்து, பாமாலைகள் பாடியருளி, திருவீழி மிழலையை அடைந்தார். திருமாலினால் விண்ணுலகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட விமானக் கோயிலில் வீற்றிருக்கும் திருவீழிமிழலைப் பெருமானை அவர் போற்றிசைத்தார். அதன் பிறகு இன்னும் பல சிவத்தலங்களைக் காணவேண்டும் என்ற ஆவலோடு காவிரிக் கரை வழியாக நாவுக்கரசர் சென்றார். வழியில் திருவாவடுதுறை தலத்தை அடைந்தார். அழகான பசுவின் உருவத்துடன் விளங்கிய உமையம்மையாருக்கு சிவபெருமான் அருள்புரிந்த தலமாகும். அங்கு திருவாவடுதுறைச் சிவபிரானின் திருவடிகளை நாவுக்கரசர் வணங்கினார். திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகத்துக்காக ஆண்டவன் ஆயிரம் பொன் அளித்தருளிய திறத்தை ''மாயிரு ஞாலமெல்லாம்'' என்னும் திருப்பதிகத்தில் வைத்துப் புகழ்ந்து பாடினார்.

பின்னர் அவர் பல தலங்களையும் வணங்கிவிட்டு, திருப்பழையாறை என்னும் தலத்தை அடைந்தார். அங்கு வடதளி என்னும் சிவன் கோயிலில் உள்ள சிவலிங்கப் பெருமானை சமணர்கள் மூடியிருந்தார்கள். அதை நாவுக்கரசர் தொழுதார். அப்போது அங்கிருந்தவர்கள், ''இது சமணர்கள் கொண்டாடும் பொய்த் தெய்வத்தின் விமானமாகும்'' என்று

★ திருநாகைக்காரோணம் : ஆதிசேஷன் பூஜித்ததால் நாகை எனவும் புண்டரீக மகா முனிவரை இறைவர் தமது திருமேனியினுள் ஏற்றுக் கொண்டருளியதால் காயாரோகனம் (காயம் – உடம்பு; ஆரோகனம் – ஏற்றுக்கொள்ளுதல்) இது சொல் வழக்கில் நாகைக் காரோணம் என மருவியது. இது சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று.

1. தன் தவம் பெரிய சலந்திரன் உடலம் தடிந்த
சக்கரமெனக்(கு) அருள் என்று)
அன்றரி வழிபட்(டு) இழிச்சிய விமானத்து இறைவ....

– சம்பந்தர் தேவாரம்

சொன்னார்கள். அதைக்கேட்டு மனம் புழுங்கிய திருநாவுக்கரசர் ஓரிடத்தில் ஒதுங்கிச் சிவபிரானைத் தியானித்தார். தம்பிரானை வஞ்சனையால் சமணர்கள் மறைத்த வஞ்சம் ஒழித்தருள வேண்டுமென்று நினைத்தார். ''ஐயனே! சமணர்களின் வஞ்சம் ஒழிதல் வேண்டும். அவர்களின் திறத்தை அழியும்! உம் திருவுருவைக் கண்டு வணங்கினாலன்றி நான் போகமாட்டேன்'' என்று உறுதிகொண்டு நாவுக்கரசர் உண்ணாவிரதம் இருந்தார். உடனே, அடியவர்க்கு எளியராய் அருளுகின்ற அம்பலவாணர் மன்னன் கனவிலே தோன்றி, ''நம்மை அமணர்கள் மறைக்க நாம் இருந்தோம்!'' என்று நிலைமையை மன்னனுக்கு உணர்த்தி தாம் மறைந்திருக்கும் இடத்தின் அடையாளத்தையுங் குறிப்பிட்டு, ''நம்மை திருநாவுக்கரசு கும்பிடுவதற்காக நெறியற்ற அமணர்களை அழித்து நீக்கி, குறைபோக்கு!'' என்று கூறினார். மன்னன் கண் விழித்து நனவு உணர்வு பெற்று எழுந்ததும் தன் தலைமீது கைகூப்பிக் கும்பிட்டான்; தன் கனவில் கண்ட அதிசயத்தைத் தன் அமைச்சர்களிடம் இயம்பினான். பிறகு அவன் தன் அமைச்சர்களை அழைத்துக் கொண்டு கனவில் இறைவன் காட்டிய அடையாள வழியே சென்று, சமணர்கள் மறைத்து வைத்திருந்த சிவவுருவத்தைக்கண்டு, சமணர்கள் செய்த வஞ்சனையை உணர்ந்து, திருநாவுக்கரசரை வணங்கினான்.

பின்னர், அங்கிருந்து சமணர்களை [illegible] யானைகளை ஏவி சமணர்களைத் துவைக்கும்படி செய்தான். அங்கு இருந்த ஆயிரம் சமண குருமார்கள் மடிந்தொழிந்தனர். சோழ மன்னன், சிவபெருமானுக்கு வடதளியில் விமானம் அமைத்து, திருப்பணி புரிந்து, வழிபாட்டுக்கு வேண்டிய நிபந்தனைகளை யெல்லாம் அமைத்தான். அதன் பிறகு, திருநாவுக்கரசர் அந்த ஆலயத்தினுள்ளே சென்று, சிவலிங்கப் பெருமானைக்கண்டு, தொழுது, அங்கு நிகழ்ந்த செயல்களைப் பொறித்துத் ''தலையெலாம்'' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். பழையாறையிலே அவர் சில காலம் தங்கி, விழவளத்

---

2. ''காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமலை ஆரர்க்(கு) அம்பொன்
ஆயிரம் கொடுப்பவர் போலும்
ஆவடு துறையனாரே.''

– அப்பர் தேவாரம்

திருப்பணி செய்து வந்தார். பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டு திருவானைக்கா, [1]திருவெறும்பியூர். திருச்சிராப்பள்ளி. [2]திருக்கற்குடி முதலிய சிவத் தலங்களுக்குச் சென்று, சிவபிரானைத் தொழுது திருப்பதிகங்கள் பாடிவிட்டுத் [3]திருப்பராய்த்துறை அடைந்து, அங்கும் திருப்பதிகம் பாடியருளினார். அதன் பின்னர், அங்கிருந்து காவிரியாற்றைக் கடந்து சென்று [4]திருப்பைஞ்ஞீலியை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்பொழுது திருநாவுக்கரசர் பசியாலும் தாகத்தாலும் மிகவும் தவித்து இளைத்துக் களைத்தார். ஆயினும் சித்தம் தளராமலே நடந்து சென்று கொண்டிருந்தார். அருட்கடலாகிய சிவபெருமான், தமது தொண்டரின் வருத்தத்தைப் போக்கியருளத் திருவுளங் கொண்டார். அதற்காக நாவுக்கரசர் வரும் வழியில் சிவபெருமான் ஒரு சோலையையும் குளத்தையும் உண்டாக்கி திருநீறு அணிந்த அந்தணர் வேடம் புனைந்து நாவுக்கரசருக்கு வழிகாட்டிப்போகும் கருத்துடன், பொதி சோறு வைத்துக் கொண்டிருந்தார். தம் அருகே நாவரசர் வந்தபோது, அந்தணர் அவரை அழைத்து, ‘‘நீர் மிகவும் வழி நடந்து இளைத்திருக்கிறீர்! இங்கு என்னிடம் பொதி சோறு இருக்கிறது. அதை உண்டு, இந்தக் குளத்தில் தண்ணீரும் அருந்தி இளைப்பாறிச் செல்லும்!’’ என்றார். அதற்கு நாவுக்கரசர் நம்பர் அருள் என்று இசைந்து வேதியர் தந்த சோற்றை [illegible] அருந்தினர். பிறகு, அந்தணர், அப்பரை நோக்கி, நீர் எவ்விடம் போகிறீர்?’’ என்று கேட்டார்.

‘‘நான் பைஞ்ஞீலிக்குப் போகிறேன்’’ என்றார் அப்பர். ‘‘நானும் அங்குதான் போகிறேன்’’ என்று அந்தணர் கூறி அவருடன் புறப்பட்டார். இருவரும் பைஞ்ஞீலியை நோக்கி நடந்து சென்றனர். திருக்கோயிலை அடைந்ததும் அந்தணர் மறைந்தருளினார். அப்போதுதான் அவர் சிவபெருமான் என்பதை உணர்ந்து, ‘‘ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளார்

---

[1]திருவெறும்பியூர் : தேவர்கள் எறும்பு வடிவங்கொண்டு பூசித்த காரணத்தால் பெற்ற பெயர் – மலைக்கோயில்.

[2]திருக்கற்குடி : உய்யக் கொண்டான் மலைக்கோயில்.

[3]திருப்பராய்த்துறை : அகன்ற காவிரித்துறை. பராய் – ஒரு வகை மரம்.

[4]திருப்பைஞ்ஞீலி : ஞீலி – ஒருவகை வாழை. இக்கோயிலின் ஸ்தல விருட்சம் ஞீலி வாழை.

அளித்த கருணை''யென்று இறைவனாரின் திருவருளை வியந்து திருப்பதிகம் பாடி அவ்வூரிலேயே சிலகாலம் உழவாரப் பணிசெய்து தங்கியிருந்தார்.

அதன் பிறகு அவர் அங்கிருந்து தலயாத்திரை புறப்பட்டு வடதிசை நோக்கிச் சென்று [1]**திருவண்ணாமலையை** அடைந்தார். அங்குள்ள திருக்கோயிலை அவர் வணங்கி வலம் வந்தார். ஆலயத்துள்ளே சென்று, அடியார்களின் அடிமைத் திறத்துக்கு மகிழ்ந்து அருள்புரியும் சிவபெருமானைத் தொழுது ஆனந்தித்தார். பிறகு திருவண்ணாமலையில் விளங்கும் [2]**அணியண்ணாமலையினைக்** கும்பிட்டு மனமுருகி, இசை பொருந்திய திருப்பதிகம் பாடியவண்ணம், அங்கே சிலகாலம் திருத்தொண்டு செய்து வந்தார்.

பிறகு அவர் தொண்டை நாட்டிலுள்ள சிவத் தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்க விரும்பினார். மலைகள், காடுகள், காட்டாறுகள் இவற்றையெல்லாம் அவர் கடந்து தொண்டை நன்னாட்டில், குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த ★ திருவோத்தூரை முதலாவதாகச் சென்றடைந்தார். அங்கு கோயில் கொண்டுள்ள இறைவனை வணங்கி, திருத்தாண்டகங்கள் பாடித் துதித்து, உழவாரப் பணிபுரிந்தார். அதன் பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டு மதில்கள் சூழ்ந்த காஞ்சிபுரத்தை அடைந்தார்.

காஞ்சீபுரத்து மக்கள் திருநாவுக்கரசரை அமோகமா வரவேற்றனர். காஞ்சி ந... தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டன. வாழை, கமுகு முதலியவற்றை வரிசையாகக் கட்டி, நிறைகுடமும், தீபங்களும், மலர்மாலைகளும், பந்தல்களும், இடபக் கொடிகளுமாக எங்கு பார்த்தாலும் குதூகலமாகத் திகழ்ந்தன. சிவனடியார்

---

[1]திருவண்ணாமலை : அருணகிரி, சோணாசலம், அண்ணாமலை என்ற பெயர்களில் வழங்கப்படுகிறது.அண்ணாமலை – அணுக முடியாத மலை. இங்கு பிரமனும் விஷ்ணுவும் ஆண்டவரின் முடியும் அடியும் தேடி அறிய முடியாமற் திகைத்தான்.

[2]அணிய(ண்)ணாமலை : தொண்டருக்கு அணிமையில் உள்ளவராகவும் தொண்டு செய்யாதவர்களுக்கு அண்ணாத (அகப்படாத) வராகவும் விளங்கும் மலைவடிவானவர் என்பதாகும். இது திருவண்ணாமலையின் மேற்கில் உள்ள ஸ்தலம்.

★ திருவோத்தூர் : தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் சிவபிரான் வேதங்களை ஓதுவித்த சிவஸ்தலம்.

திருக்கூட்டத்துடன் நாவுக்கரசர் நடந்து சென்றார். உமையவள் தழுவக் குழைந்த திருவேகம்பர நாதரின் செம்பொற்கோயிலை வந்தடைந்தார். அத்திருக் கோயிலை அவர் வலம் வந்து வணங்கி உள்நுழைந்து, திருவேகம்பரரைப் பேரன்புடன் வணங்கித் தொழுது, ''கரவாடும் வன்னெஞ்சர்க்(கு) அரியானை'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். அங்கு அவர் சிலகாலம் கையாரத் திருத்தொண்டு புரிந்திருந்து திருக்கச்சி மயானம், திருமேற்றளி, திருமாற்பேறு முதலிய திருக்கோயில்களைத் தரிசித்து, மீண்டும் காஞ்சி நகருக்கு வந்து அங்கு ஏகம்ப நாதரை வழிபட்டு, ''கச்சி ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே!'' எனப்போற்றித் திருப்பாடல் பாடி மகிழ்ந்தார்.

பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டு, திருக்கழுக்குன்றத்தை அடைந்து அங்குள்ள நிருத்தனாரை வணங்கித் திருப்பதிகம் பாடிவிட்டு பலத் தலங்களுக்கும் சென்றவாறு கடற்கரையிலுள்ள திருவான்மியூர் என்னும் சிவத்தலத்துக்கு வந்து இறைவனுக்கு தமிழ்ப்பாமாலை சூட்டி வழிபட்டு வணங்கினார். அருகிலுள்ள பல ஸ்தலங்களையும் அவர் வணங்கிச் சென்று, மலர்ச்சோலைகள் சூழ்ந்த திருமயிலாப்பூரை வந்தடைந்து அங்குள்ள கபாலீச்சுரக் கடவுளை வணங்கிப் பாமாலைகள் பலச் சூட்டி மகிழ்ந்தார். பிறகு அலைமோதும் கடற்கரை ஓரமாகவே அவர் சென்று ★ திருவொற்றியூரை [illegible] அழைத்துச் சென்றனர். அத்திருத் தொண்டர்களுடன் நாவுக்கரசர் நடந்து கோயிலுக்குள் புகுந்து வலம் வந்து, எழுத்தறியும் பெருமானை வணங்கிப் பரவசத்தால் கண்ணீர் சொரிய வழிபட்டு, ''வண்டோங்கு செங்கமலம்'' எனப்பாடலடி எடுத்து திருத்தாண்டகம் பாடினார். திருமுன்றில் அவர் உழவாரப்பணி செய்தும் திருவிருத்தங்கள் திருக்குறுந் தொகைகள் திருநேரிசைகள் முதலான பலவற்றைப் பாடியும் அங்கேயே சிலநாட்கள் தங்கியிருந்தார்.

பிறகு நாவுக்கரசர், [1]திருப்பாசூர் என்னும் சிவத் தலத்தை அடைந்து, அங்குள்ள பெருமானை வணங்கி வழிபட்டு,

---

★ திருவொற்றியூர் : இது, பிரமதேவரின் தவயோகத்தின் நடுவுள்ளே, கடவுள் தோன்றி, அத்தீயையே திருக்கோயிலாகக் கொண்டு, எழுந்தருளி, ஊழிப் பெருவெள்ளத்தை மேல் வராமல் தடுத்த காரணத்தால் பெற்ற திருப்பெயராகும்.

[1]திருப்பாசூர் : இக்கோயில் ஸ்தல விருட்சம் மூங்கில் பாசு... மூங்கில்

''முந்திமூவெயில் எய்த முதல்வனார்'' என்று பாடலடியெடுத்து, சிந்தை கரைந்துருகி, திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம், திருநேரிசை முதலான தமிழ் மாலைகள் பாடிச் சிவபெருமானின் திருவருளைப் பெற்றார். பிறகு, அவர் அங்கிருந்து புறப்பட்டு பழையனூர் திருவாலங்காட்டை அடைந்து, அங்குள்ள இறைவனை வணங்கி, ''திருவாலங்காடுறையும் செல்வர் தாமே!'' என்ற பெருந் திருத்தாண்டகம் பாடித் தொழுது, வழிபட்டு வந்தார். பின்னர், வடதிசையிலுள்ள திருத்தலங்களைத் தரிசிக்க அவர் விருப்புற்றவராய், பல நெடிய மலைகளையும் காடுகளையும் கடந்து, [2]திருக்காரி கரையை அடைந்து அங்குள்ள இறைவரைப் பணிந்து சென்று, திருக்காளத்தி தலத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு அவர் பொன்முகலி ஆற்றில் தீர்த்தமாடி தலை வணங்கித் திருக்காளத்தித் தொடர்மலையில் ஏறி திருக்காளத்தி நாதரை வலம் வந்து தரிசித்து மனங்களிக்கக் கண்களிக்கப் பரவச மடைந்து, ''என் கண்ணுளான்'' என்னும் திருத்தாண்டகத்தைப் பாடி மகிழ்ந்தார்.

திருக்காளத்தி நாதரின் மருங்குற முன்னே சிலை வடிவமாக நிற்கும் வில்வேடர் கண்ணப்ப நாயனாரின் திருவடிகளையும் அவர் சேர்ந்து வணங்கி கண்ணருவி பொழிய, தலைமீது கைகுவித்துக் கும்பிட்டபடியே வெளியே வந்து அந்தத் திருமலையில் திருப்பணிகளைச் செய்துகொண்டு தங்கியிருந்தார்.

அப்போது, [illegible] அவருக்கு வடகயிலையை நினைவூட்டியது. அ[illegible] வடகயிலையைக் காண வேண்டும் என்று அவர் பெரும் வேட்கையும் உறுதியும் கொண்டு வடதிசை நோக்கி யாத்திரை புறப்பட்டு மலைகளையும் காட்டாறுகளையும் கடந்து சென்று, ★திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) என்னும் சிவத் தலத்தை அடைந்தார். அங்குள்ள இறைவனை அவர் தமிழ்ப்பதிகம் பாடித் துதித்தார். சிவபெருமான் வீற்றிருக்கும்

---

[2]திருக்காரிகரை : இது அரக்கோணம் – ரேணிகுண்டா வழியில் புத்தூர் ரயில் நிலையத்துக்குக் கிழக்கே ஊர்த்துவகோட்டை செல்லும் வழியில் சுமார் ஐந்து மைல் தொலைவில் உள்ள சிவஸ்தலம்.

''கடங்களூர் திருக்காரிகரை கயிலாயம்''

– சுந்தரர் தேவாரம்

★ திருப்பருப்பதம் : (ஸ்ரீசைலம்), திருநந்தி தேவர் தவஞ்செய்து இந்த மலை வடிவாக இருந்து இறைவனைத் தாங்குகிறார் என்பது ஐதீகம்.

திருக்கயிலாயத்தைக் காணவேண்டும் என்ற பேராவல் உந்தித்தள்ளவே நாவுக்கரசு விரைந்து சிவனடியார்கள் புடைசூழ காடுகள், மலைகள், ஆறுகள், முதலானவற்றை யெல்லாம் தாண்டி, மாளவ தேசத்தையும், ★இலாட தேசத்தையும், மத்தியப் பிரதேசத்தையும் கடந்து, கங்கை நதி வலஞ் செல்லும் ★வாரணாசியை (ஸ்ரீகாசியை) அடைந்து, காசி விசுவநாதரை தரிசித்து வணங்கினார். பிறகு அவர் தம்முடன் வந்த அடியார்களை, அங்கேயே நிறுத்திவிட்டு, கங்கை நதிக் கரையைச் சூழ்ந்திருக்கும் பகுதிகளைக் கடந்து கற்பாறைகள் நிரம்பிய மலைக் கானல்களை அடைந்தார்.

மனிதர்களால் நடக்கக்கூடிய வழியில்லாத கற்கள் நிறைந்த கானகங்களின் வழியாக, அவர் நடந்தார். அதுமட்டுமின்றி திருக்கயிலையை விரைவில் காணவேண்டும் என்ற பெருங் காதலினால், காய், கனி, கிழங்கு முதலி யவற்றை உண்பதையும் விடுத்துத் தன்னந்தனியராக விரைந்து சென்றார். இரவு பகல் என்றுகூடப் பாராமல் ஓயாமல் நடந்து கொண்டேயிருந்தார். அவ்வாறு அந்த அன்பர் இரவிலும் பக்தி சிரத்தையோடு நடந்து செல்லும்போது கொடிய காட்டு மிருகங்கள் அவரை நெருங்கித் தீமை புரியவும் அஞ்சி விலகும். விஷம் உமிழும் பாம்புகளோ தங்கள் படங்களில் நாகமணிகளை விரித்துக்காட்டி விளக்கேந்தி வழி காட்டும்! பகற்பொழுதில் வெயில் கொளுத்தும்போதோ, கானகத்து நடை வழியெல்லாம் பாதங்களைச் சுட்டெரிக்கும். ஆயினும் [illegible] செல்லவேண்டும் என்ற பெருங்காதல் ஒன்றே குறியாக இரவிலும் பகலிலும் சிறிதும் அயராமல் அருஞ்சுரத்தில் நடந்து போய்க் கொண்டேயிருந்தார். நடந்து நடந்து தாமரை மலரைப் போன்ற அவருடைய பாதங்கள் தேய்ந்து, கணுக்கால் அளவு சதையும் பிய்ந்துவிட்டது! ஆயினும் உமையொரு பாங்கர் வீற்றிருக்கும் திருக்கயிலையைக் காணவேண்டுமென்ற சிந்தையை நாவுக்கரசர் மறப்பாரோ? கால்கள் போனாலென்ன, கைகள் இருக்கின்றனவே என்று நினைத்து அவர் தம் இரு கைகளாலும் தாவித் தாவிச் சென்றார். கைகளும் தேய்ந்து மணிக்கட்டுவரைக் கரைந்து சிதைந்தது.


★இலாட தேசம் : இது வங்காள தேசத்தில் ஒரு பகுதி.

★வாரணாசி : வாரணை–அசி என்ற இரு நதிகள் இந்த ஸ்தலத்தை தெற்கும் வடக்குமாக சூழ்ந்திருப்பதனால் இப்பெயர் பெற்றது. இங்கு குமரகுருபரர் ஸ்தாபித்த குமாரசாமி மடம் சிறப்புடன் தொண்டாற்றி வருகிறது.

அதன் பிறகு பருக்கைக் கற்கள் அனற்புகை வீசும் வழியில் அன்பர் தம் மார்பினாலே ஊர்ந்து சென்றார். மார்பும் நைந்து, தேய்ந்தது. அறன் இட்டு எலும்புகளும் முறிந்தன. சதை பிய்ந்து இனிக் கயிலைக்குச் செல்ல முடியாது என்ற அறிகுறி தோன்றினாலும், சிந்தையில் சிவநேசம் உந்தித் தள்ளியதால் கயிலை வாசலைக் காணவேண்டும் என்ற ஒரே ஆர்வத்தோடு அவர் புரண்டு புரண்டு நகர்ந்தார். உடம்பிலுள்ள ஊன் அனைத்தும் கரைந்தொழிந்தது. அப்புறம் புரள்கிற அங்கமெல்லாம் கரைந்து தேய்ந்திடவே தம் சிந்தையாவது கைலைக்குச் செல்லட்டும் என்ற ஆவலோடு அவர் தம் உடம்பிலுள்ள உறுப்புகள் அனைத்தும் அழிந்த பிறகும் அவர் மெல்ல மெல்லத் தம்மை உந்தித் தள்ளி நகர முயன்றார். அதற்குமேல் அவர் செயலற்று விட்டார். அந்நிலையில் அவர் மூலமாக இன்னும் பல தீந்தமிழ்ப் பாடல்கள் வெளிவருதல் வேண்டும் என்று திருவுளங் கொண்ட சிவபெருமான், தம் அடியார் திருக்கயிலையை அடைவதற்கு அருள் புரியாமல், அவர் செயலற்றுக் கிடந்த இடத்தின் அருகே, ஒரு தடாகத்தைத் தோற்றுவித்தார். பிறகு அவர் ஒரு முனிவர்போல் வடிவமெடுத்து அப்பர் முன்வந்து உற்றுப்பார்த்து, ‘‘உம் உறுப்புக்கள் எல்லாம் சிதைந்து அழியும்படி நீர் இந்தக் கொடிய காட்டில் வந்ததன் நோக்கம் என்ன?’’ என்று கேட்டார். இடையில் மரவுரி ஆடையும், மார்பில் பூணூலும், தலையில் சடைமுடியும், உடலில் திருநீறும் அணிந்த அம்முனிவரைப் பார்த்தவுடன், அப்பர் சுவாமிகளுக்குப் பேசும் ஆற்றல் வந்தது. ‘‘ஐயனே! வடகயிலையில் சிவபெருமான் மலைமகளுடன் வீற்றிருக்கும் திருக்கோலத்தை அடியேன் [illegible] வேண்டும் என்ற பெருங்காதலால் இங்கு வந்தேன். முனிவரே! இதுதான் நான் கொண்ட குறிப்பு!’’ என்றார்.

அது கேட்ட அந்த முனிவர், ‘‘கயிலைக் காட்சியா? அது தேவர்க்கும் கிட்டுவது அரிதாயிற்றே! அப்படியிருக்கப் பூவுலகத்து மானிடருக்கு அது எளிதில் கிட்டுமோ? அடடா! இந்தக் கொடும்காட்டு வழியாக வந்து என்ன காரியம் செய்து விட்டீர்! இனி இம்மட்டோடு நீர் திரும்புவதே நல்லது’’ என்றார். ஆனால் திருநாவுக்கரசரோ, ‘‘இவ்வுடல் மாளுந்தகையது; கயிலைக் காட்சியை நான் கண்டால் தவிர இந்த உடலோடு திரும்பிப் போகமாட்டேன்!’’ என்றார். உடனே சிவபிரானாகிய முனிவர், மறைந்து வானவெளியிலிருந்து குரல் கொடுத்தார்.

‘‘ஓங்கும் நாவினுக்கு அரசனே! எழுந்திரு’’ என்று சிவ பெருமான் அசரீரியாகக் கூறியருளினார். உடனே திருநாவுக்கரசர், ஊறுபாடுகள் முற்றும் நீங்கி, பழைய ஒளி திகழ் மேனியுடன் எழுந்திருந்தார். ‘‘அண்ணலே! என்னை ஆண்டு கொண்டருளிய அமுதே! விண்ணிலே மறைந்து



திருவையாற்றில் அப்பருக்கு இறைவன் காட்சி வடிங்கிய இடம்

அருள் புரியும் வேத நாயகனே! என் கண்ணினால் திருக்கயிலாயத்தில் வீற்றிருக்கும் உம் திருக்கோலத்தைக் கண்டு தொழும்படி எனக்கு நயந்து அருள் புரியும்!'' என்று பணிந்தார். அடியார்கள் வேண்டுவதை, வேண்டியவாறே பொய்கையில் மூழ்கி, திருவையாற்றை அடைந்து, திருக்கயிலையில் வீற்றிருக்கும் காட்சியை அங்கே திருவையாற்றில் காண்பாயாக!'' என்று வானொலியாகக் கூறியருளினார். அந்த அருள்வாக்கை நாவுக்கரசர் தம் தலைமீது தாங்கிக் கைகூப்பிக் கும்பிட்டு ''நமச்சிவாய'' என்னும் ஐந்தெழுத்தை ஓதி, பால் போன்ற நீர்ப் பொய்கையிலே மூழ்கினார். உடனே திருவையாற்றிலே ஒரு தாமரைத் தடாகத்தில் தோன்றிக் கரை சேர்ந்தார். திருவருளின் மாண்பை அனுபூதியால் உணர்ந்த அவர், ''எம்பிரான் தரும் கருணையன்றோ இது'' என்று இரு கண்களாலும் ஆனந்தக் கணணீர் சொரிந்து அதிலே குளித்தெழுந்தார். பிறகு கொடி வீதிகள் வழியாக நடந்துசென்றார். திருவையாற்றிலுள்ள

''மாதர் பிறைக் கண்ணியானை – யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்றபோது,''

இந்தத் தடாகம் திருவையாற்றுக் கோவிலுக்கு வடமேற்குத் திசையில் உள்ளது. இங்கு ஆடி அமாவாசை நாளில் ''அப்பர் காட்சி விழா'' நடைபெற்று வருகிறது.

சராசரங்கள் எல்லாம் சக்தி சிவமாகப் பொலிந்தன. அந்தப் பொலிவைக் கண்டு அப்பர் உள்ளம் கனிந்தவாறு, திருக்கோயிலுக்குச் சென்றார். திருவையாற்றுத் திருக்கோயிலும் கைலாச மலையாகத் தோன்றி விளங்கியது.


திருமால், பிரம்மா, இந்திரன் முதலான தேவர்களெல்லாம் பேரன்போடு போற்றிசைக்கும் ஒலிகள் ஒருபுறம் பொங்கியெழுந்தன. மாமறைகள் யாவும் தனித்தனியாக முழங்கின. தேவர், தானவர், சித்தர், விச்சாதரர், இயக்கர், மாதவர், முனிவர்கள் முதலானவர்களெல்லாம் பக்கங்களில் நெருங்கிக் குழுமியிருந்தார்கள். காவிய விழி அரம்பையர்கள் ஒருபுறம் நடனமாட கானமும் மத்தளமும் முழங்கின. ஏழ்கடல்களும் ஒருங்கே முழங்குவதைவிட எங்கும் பேரொலிகள் பொங்கின. கங்கை முதலான தெய்வ மாநதிகள் மங்கலத் தடாகங்களோடு தலைவணங்க, எங்கும் பெருங் கணநாதர்கள் இறைஞ்சி நிற்க, பூத வேதாளங்கள் வாத்தியங்களால் போற்றியிசைக்க, நந்தியெம் பெருமான் நடுவிடை ஆடி முன்னே நணுக, வெள்ளி மலைமீது பச்சிளங் கொடியான உமாதேவியோடு பவளமலைபோல் சிவபெருமான் வீற்றிருந்தார். அதைக் கண்ட நாவுக்கரசர் தம் கண்களாலேயே அந்த ஆனந்தக் கடலை அள்ளி அள்ளிப் பருகிக் கீழே விழுந்து கும்பிட்டெழுந்து இறைவன் முன் நின்று ஆடினார்; பாடினார்; அழுதார், போற்றினார்; போற்றித் திருத் தாண்டகமும் பாடினார். அவருக்கு அத்தகைய கயிலைக் காட்சியைக் காட்டிவிட்டு, சிவபெருமான் அதை மறைத்து தாமும் மறைந்தார். இப்போது திருவையாறு மட்டுமே [illegible] ''இது இறைவன் அருள்'' எனத் தெளிந்தார். பிறகு தாம் கண்ட காட்சி குறித்து திருக்குறுந்தொகை, திருநேரிசை, திருவிருத்தம் முதலிய பல பதிகங்களைப் பாடி இறைவனை வணங்கி, திருவையாற்றிலேயே பல காலம் தங்கி, உழவாரத் திருப்பணியும் செய்து கொண்டிருந்தார்.

அதன் பிறகு அவர் திருவையாற்றிலிருந்து புறப்பட்டு, திருநெய்த்தானம், திருமழபாடி முதலிய ஸ்தலங்களை அடைந்து பதிகங்கள் பாடிக் கைத்தொண்டும் செய்துவிட்டு திருப்பூந்துருத்திக்குச் சென்று, அங்கு கோயில் கொண்டுள்ள பொய்யிலியாகிய சிவபிரானை வணங்கி ஆனந்தப் பரவசராகி, ''பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே'' என்று முடியும் திருத்தாண்டகம் பாடினார். ''இருப்போம் திருவடிக்கீழ் நாம்'' என்னும் குறுந்தொகையும் பாடினார். அங்கு பலநாள் தங்கியிருந்து, திருத்தொண்டு செய்ய விரும்பி, உயர்ந்ததொரு திருமடம் கட்டினார். பலவகைத் திருத்தாண்டகங்களும், திருவங்கமாலை முதலிய தொகைத் திருப்பதிகங்களும் பாடினார்.

அவ்வேளையில் திருஞான சம்பந்த சுவாமிகள், பாண்டிய நாட்டை விட்டுச் சோழ நாட்டை அடைந்திருந்தார். அவர் பாண்டிய நாட்டில் சமணர்களை வாதில் வென்று அவர்களின் பொய்க்கட்டுக்களைக் குலைத்தார். பாண்டிய மன்னனின் கூன் முதுகை நிமிர்த்தினார். அம்மன்னனுக்கு அவர் ஞானோபதேசம் செய்து, அந்த நாட்டில் சைவ சமயத்தை நிலைபெறச் செய்துவிட்டு வந்திருந்தார். திருப்பூந்துருத்தியில் அப்பர் தங்கியிருப்பதை ஞானசம்பந்தர் கேள்விப்பட்டார். ''விரைவாய் அவரிடம் சென்று சேர்வேன்'' என்று ஞானசம்பந்தர் ஆவலோடு புறப்பட்டு பூந்துருத்தியின் எல்லைக்கு வந்து சேர்ந்தார். அதே சமயத்தில் அவர் வருகையைக் கேள்விப்பட்ட திருநாவுக்கரசர் அவரை எதிர்கொள்ள நினைத்தார். உடனே அவர் புறப்பட்டு விட்டார். திருப்பூந்துருத்தியை நோக்கி, ஞானசம்பந்தர் வந்துகொண்டிருக்கும் போது நாவுக்கரசர் தம்மை ஒருவருங் கண்டுகொள்ளாதவாறு அடியார்களின் கூட்டத்தினுள்ளே நுழைந்து, ''எம்பிரானின் பேரன்பரைத் தாங்கும் முத்துச் சிவிகையை என் தாழும் உடலால் தாங்கிச் செல்வேன் நான்!'' என்று பேரன்போடு நினைத்து ஞானசம்பந்தரின் முத்துச் சிவிகையை சுமப்பவர்களோடு தாமும் ஒருவராகச் சிந்தை களிப்புற தாங்கி வரலானார். முத்துச் சிவிகை திருப்பூந்துருத்தியில் ''நாவுக்கரசரின் இருக்கை''யை நெருங்கியபோது, திருஞானசம்பந்தர் சிவிகையில் இருந்தபடியே ''அப்பர் எங்குற்றார்!'' என்று கேட்டார்.

[illegible] அப்பர் [illegible] தாங்கிவரும் 'பெரும் [illegible] அடியேன், இங்குற்றேன்!'' என்று சிவிகையைச் சுமந்தபடியே கூறினார். அதைக் கேட்டதும் திருஞானசம்பந்தர், பதைபதைத்து சிவிகையிலிருந்து விரைவாகக் கீழேயிறங்கித் திருநாவுக்கரசரை வணங்க வந்தார். அவர் வணங்குவதற்கு முன்பே நாவுக்கரசர் விரைந்து சென்று அவரை வணங்கினார். அதைக் கண்ட சிவனடியார்கள் எல்லோரும் ''ஹர ஹர'' என்று ஆரவாரஞ் செய்தனர்.

அதன் பிறகு நாயன்மார் இருவரும் திருப்பூந்துருத்தித் திருக்கோவிலுக்குச் சென்று சிவபெருமானின் திருவடிகளை வணங்கித் தொழுதார்கள். திருஞானசம்பந்தர், பாண்டிய நாட்டில் நிகழ்ந்தவைகளை நாவுக்கரசருக்குக் கூறினார். பண்புள்ள பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியாரின் அன்பின் திறத்தையும் குலச் சிறை நாயனாரின் பெருமையையும் சிறப்பாக ஞான சம்பந்தர் விரித்து உரைத்தார். அதை எல்லாம் கேட்ட திருநாவுக்கரசருக்குப் பாண்டிய நாட்டைக் காண வேண்டும் என்னும் பேராவல் எழுந்தது.



அதனால் அவர் ஞான சம்பந்தரிடம் விடை பெற்றுக் கொள்ள விரும்பியவராய் தொண்டைநாட்டுச் சிவத்தலங்கள் பலவற்றையும் தரிசித்துத் திருப்பதிகங்கள் பாடுமாறு ஞானசம்பந்தரிடம் கூறி விடைபெற்றுக் கொண்டு தென் திசையில் பாண்டிய நாடு நோக்கிப் புறப்பட்டார்.

திருநாவுக்கரசர் பாண்டியநாடு புகுந்து திருப்பத்தூரைப் அந்நகரின் கோட்டை மதிலம்துள்ள பட்டுக் கொடி [illegible] செங்கதிரவனையும் வெண்ணிலவையும் தொட்டு விளையாடுவதுபோல் வானளாவிப் பறந்து கொண்டிருந்தது. அங்கேயுள்ள ஆலவாய்ப் பெருமானின் திருக்கோயிலை நோக்கி நாவுக்கரசர் சென்றார். முத்தமிழ் வளர்க்கும் மதுரைச் சங்கத்துள் ஒருவராக இருந்து தமிழாராய்ந்த சிவபெருமானின் கோயிலை அவர் வலம் வந்து உள்ளே புகுந்து சொக்கநாதரை வணங்கிப் பேரானந்த வெள்ளத்தில் அழுந்தி, ''முளைத்தானை!'' என்று தொடங்கும் திருத் தாண்டகத்தைப் பாடிப் போற்றினார். மதுரை சொக்கநாதர் கோயிலுக்குத் திருநாவுக்கரசர் வந்திருப்பதையறிந்த பாண்டிய தேவி மங்கையர்க்கரசி யாரும், திருநீற்றின் சார்பினால் கூன் நிமிர்ந்த பாண்டியனும், அமைச்சர் குலச்சிறை நாயனாரும் பேரன்போடு திருநாவுக்கரசரை வணங்கி வரவேற்றனர்.

ஆலவாயில் அமர்ந்த செஞ்சுடரை, அகப் பொருள் நூலைத் தந்தருளிய பெருமானை, அப்பர் சுவாமிகள் வணங்கித் திருநேரிசை, திருத்தாண்டகம் முதலிய செந்தமிழ்ப்

பதிகங்களால் போற்றித் திருப்பணிகளும் செய்துகொண்டு சிலகாலம் மதுரை நகரிலேயே தங்கியிருந்தார்.

பிறகு அவர் மதுரையிலிருந்து புறப்பட்டுத் திருப்பூவணம், இராமேச்சுரம், திருநெல்வேலி, திருக்கானப்பேர் (காளையார் கோவில்) முதலிய திருப்பதிகளைக் கண்டு வணங்கி, ஆங்காங்கே திருப்பதிகங்களைப் பாடித் தந்து பாண்டிய நாட்டை விட்டுச் சோழ நாட்டை அடைந்து, திருப்புகலூருக்கு வந்து சேர்ந்தார். அங்குள்ள இறைவனை அவர் வாயினால் போற்றி கையினால் உழவாரத் தொண்டும் செய்து, அங்கேயே தங்கியிருந்து நின்ற திருத்தாண்டகம், தனித்திருத் தாண்டகம், க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம், குறைந்த திருநேரிசை, தனித்திரு நேரிசை, ஆருயிர்த் திருவிருத்தம், தசபுராணத்தடைவு, பாவநாசப் பதிகம், சர்க்கறைத் திருவிருத்தம் முதலிய திருப்பதிகங்களைப் பாடிய வண்ணம் வழிபாடு செய்து வந்தார்.

அவருடைய, பற்றற்ற நிலையினை உலகத்துக்கு எடுத்துக்காட்ட சிவபெருமான் விரும்பினார். அதனால் திருநாவுக்கரசர் உழவாரத் திருப்பணி செய்யும் இடங்களில், அவர் புல் செதுக்கும்போது உழவாரப் படை நுழைந்த இடங்களிலெல்லாம் பரற்கற்களோடு செம்பொன்னும் நவமணிகளும் தோன்றி விளங்கும்படி சிவபெருமான் அருள் செய்தார். அப்பர் அவற்றையெல்லாம் பருக்கைக் கற்களோடு சேர்த்துக் கூட்டி உழவாரக்கில் ஏந்திக் தடாகத்தில் மணிக்கும் சொல்லைத் தவிர எவ்வித வேறுபாடும் இல்லை என்னும் பற்றற்ற நிலையில் அவர் இருந்தார்.

திருநாவுக்கரசரின் இத்தகைய தூய துறவு நிலையை மேன் மேலும் விளங்கச் செய்யப் பூம்புகலூர்ப் புண்ணியனார் விரும்பினார். அவருடைய திருவருளினால் விண்ணுலகத்து தேவதாசிகள் வானத்திலிருந்து இறங்கும் மின்னல் கொடிகள்போல் மண்ணுலகத்திற்கு வந்தார்கள். அவர்கள் நாவுக்கரசரின் முன் அலங்காரமாக வந்து நின்றார்கள். வில்போன்ற நெற்றி வளைத்திழுக்க, கான அமுதம் பொங்கும் கொவ்வைக் கனிவாய் ஒளிவீச, கவர்ச்சிக் கண்கள் மின்னலிட அப்பெண்கள் இன்னிசை பாடினார்கள். கற்பகப் பூந்தளிர் போன்ற காலடிகளால் மோக நடிப்புடன் அவர்கள் நடனமாடவும் தொடங்கினார்கள். செங்காந்தள் பூப்போன்ற மெல்லிய விரல்களால் அபிநயம் பிடித்து கைவீசி, அக்கைகளின் வழியே கயல் விழிகள் கடைபுரள, அற்புதப் பொற்கொடி போன்ற இடை அசைந்தாட அவர்கள் நடனமாடினார்கள். இவ்வாறு அப்சரஸ்கள் அப்பரின் முன் ஆடினார்கள்;

பாடினார்கள்; பூமாரியை அவர்மீது அள்ளிப் பொழிந்தார்கள், கட்டியணைத்துக் கூடுவதுபோல் அவரருகே நெருங்கி அணைவார்கள். கூந்தல் அவிழ, இடை நுடங்க ஓடுவார்கள்; பிறகு காமமயக்கத்துடன் மீண்டு வருவார்கள். ஒளிபெருக நீடுவார்கள். துகில் அசைய நிற்பார்கள். இவ்விதமாக அரம்பையர்கள் பலவிதத்தாலும் அப்பரின் மனோ நிலையைக் கவர்ந்திழுத்துக் குலைக்க முயன்றார்கள். ஆனால் சிவபெருமானின் திருவடிகளில் சிறிதும் அகலாத அன்பு செலுத்தும் பெருந் துறவியாரான திருநாவுக்கரசரோ அந்தப் பேரன்பிலே நினைவெல்லாம் லயித்திருக்கத் தமது சித்த நிலை சிறிதும் மாறுபடாமல் தம் திருத்தொண்டிலே நிலையாக நின்றார். இம் மாயப் பிறவியை காட்டுவிக்கும் இருவினைகளை நோக்கி, ''உம்மால் இங்கு என்ன குறையுடையேன் யான்! திருவாரூர் அம்மானுக்கு ஆளானேன்; அலையேன் மின் நீர்!'' என்று அவர் கூறி, ''பொய்ம் மாயப் பெருங்கடலுள்'' என்னும் திருத்தாண்டகம் பாடியருளினார். அவருக்குத் தேவதாசிகளும் சிவமாகவே தென்பட்டார்கள். அவரைக் கட்டியணைக்க வந்த பெண்களோ, மதன மோக வித்தைகள் காட்டி காதல் பரவசத்துடன் அவரைக் கவர்ந்திழுக்க எவ்வளவோ வஞ்சனைகள் புரிந்தும், அப் பெரியாரை அவருடைய உறுதி நிலையிலிருந்து பெயர்க்க முடியாமற் போனதால் அவரைக் கும்பிட்டு விட்டு வந்த வழியே சென்று விட்டார்கள்!
வாழ்த்தின.

அன்பு வடிவாய் விளங்கிய திருநாவுக்கரசர், சிவ பெருமானது மெய்யருளை அடையுங்காலம் சமீபித்ததால் சிலநாள் பூம்புகலூரிலேயே தங்கியிருந்தார். தமது ''புகலாதிய என்னைப் புகலூர் பெருமான், இனி சேவடியின்கீழ் இருக்கச் செய்வார்!'' என்று உள்ளூற எழும் முன் உணர்வின் தீர்க்க தரிசனத்தால் திருவிருத்தங்கள் பலவற்றை இவர் பாடினார்.

ஒருநாள் சித்திரையில் சதயம் கூடிய திருநாளில், ''எண்ணுகேன்!'' என்னுந் திருத்தாண்டகத்தின் பாடலடி எடுத்து, ''புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'' என்று திருநாவுக்கரசர் ஓதி, சிவானந்த ஞானவடிவைப் பெற்று, சிவபெருமானின் திருச்சேவடியில் மீளாது அமர்ந்தார்.

அப்போது வானவர் மண்ணிறைய மலர்மாரி பொழிந்தனர். விண்ணிலே ஐவகைத் துந்துபிகளும் முழங்கின.

பிருமன் முதலான எல்லா உயிர்களும் உள் நிறைந்து பெருமகிழ்ச்சி அடைந்தன.

திருநாவுக்கரசரின் சரிதத்தை நான் அறிந்தபடி பேரார் வத்தோடு சொன்னேன். அந்தப் பரம முனிவரின் திருவடி மலர்களை என் கைகளால் வணங்கி வாழ்த்திவிட்டு, அடுத்ததாக குலச்சிறையாரின் திருத்தொண்டை மொழிகிறேன்;

''திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்.

27. குலச்சிறை நாயனார்

நீண்ட நெடுங்காலமாகப் புகழ்பெற்று விளங்கும் பாண்டிய நாட்டிலே மணமேற்குடி என்னும் ஓர் ஊர் உண்டு. அது நெற்பயிர்கள் நிறைந்த வயல்களையும் கரும்புப் பயிர்களின் அருகே கமுக மரங்கள் நிறைந்த புறம்புகளையும் கொண்ட வளமை மிகுந்த ஊராகும். ஆங்கு குலச்சிறையார் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டத் தொகையில், ''பெருநம்பி'' என்று பாராட்டப் பெற்றவர். அவர் சிவபெருமானிடம் திடமான பக்திகொண்டு சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு செய்வதில் சிறந்தவர். தம்மை வந்தடையும் சிவனடியார்கள், நால்வகைக் குலத்தில், எக்குலத்தவராயினும் அக்குலத்தினின்று நீங்கிய வராயினும் நலங்களையுடையவராயினும் தீமைகள் மிகச் செய்பவராயினும் அவர்கள் சிவபெருமானிடத்து அன்பு கொண்டவராயிருந்தால் அவர்களை வணங்கிப் போற்றும் இயல்பை உடையவராகக் குலச்சிறையார் விளங்கினார். அவரிடம் உணவருந்த விரும்பி அடியார்கள் பலராக வந்தாலும் ஒருவராக வந்தாலும் குலச்சிறையார் அளவு கடந்த அன்போடு அவர்களை எதிர்கொண்டு வரவேற்று நட்புறவாடி இன்னமுது அளிப்பார்.

விபூதி, உருத்திராட்சம், கோவணம் முதலான சின்னங்கள் தரித்து ''நமசிவாய!'' என்று திருவைந் தெழுத்தை ஓதி நாவால் நம்பிரான் வணங்கும் சிவனடியார்களிடம் அவர் ஒவ்வொரு நாளும் அன்பு பாராட்டி



வந்தார். ★ பாண்டிய மன்னனான நின்றசீர் நெடுமாறனுக்கு அவர் முதல் அமைச்சராக விளங்கி வந்தார். அவர் பகைவர்களை அழித்து, அரச காரியங்களைச் செவ்வனே நடத்தியவர். தமது குறிக்கோளிலிருந்து சிறிதளவும் விலகாது நின்றவர். பாண்டியனின் மனைவியாராகிய மங்[illegible] தொண்டராக இருந்தவர். ச[illegible] ஒழியவும் தென்னாட்டில் சைவம் தழைத்தோங்கவும் திருஞான சம்பந்த சுவாமிகளின் பொன்னடியை அவர் போற்றி மகிழ்ந்து சிறப்படைந்தார். திருஞானசம்பந்தரிடம் வாதிலே ★தோல்வியுற்ற சமணர்களை அவர் வன்கழுவில் ஏற்றுவித்தார். அவருடைய ஆற்றலைப் போற்றிவிட்டு அடுத்ததாக மிழலைக் குறும்பரின் திருத்தொண்டைக் கூறுகிறேன்.

''பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்.

★ பான்பாண்டியன் : சைவத்துக்கு வருமுன் கூன்பாண்டியன் என்ற பெயரைப் பெற்றவன். இவனது இயற்பெயர் மாறவர்மன் அரிகேசரி. இவன் காலம் கி.பி. 640...670.

★ தோல்வியுற்ற சமணர்கள் : சுரவாதம், அனல்வாதம், புனல்வாதம் என்பனவற்றில் புனல் வாதத்தில், ''இப்புனல் வாதத்திலும் தோல்வியுற்றோமானால் இவ்வேந்தனே எங்களை வெங்கழுவேற்றுவான்'' என்று வாது கூறித் தோற்றார்கள். அதில் தோல்வியுற்றுக் கழுவேறிய சமண குருமார் தொகை எண்ணாயிரமாகும்.

28. பெருமிழலைக் குறும்ப நாயனார்

★மிழலை நாட்டிலுள்ள ★பெருமிழலை என்னும் தலை நகரமானது மாமரம், பலா, தென்னை, வாழை முதலான பலவகைச் சோலைகளைக் கொண்டு வளம் மிகுந்த பழம் பெரும்பதியாகத் திகழ்ந்தது. அவ்வூரின் வீதி தோறும் விபூதியின் ஒளி விரிந்து செல்லும். நீதி வழுவா நெறியினர் ஆன குடிமக்கள் அங்கு நிறைந்திருப்பார்கள். அவ்வூருக்கு அதிபராகப் பெருமிழலைக் குறும்பனார் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் குறும்பர் மரபிலே வந்தவர். சிவன் அடியார்களுக்கு



வேண்டிய பணிகளை அவர்கள் சொல்லும் முன்னரே குறிப்பறிந்து செய்வதில் அவர் பேர் பெற்று விளங்கினார். தொண்டர் பலர் திரண்டு வந்தாலும் அவர்களுக்கு அயராமல் பெருஞ் செல்வங்களையும் அள்ளிக் கொடுப்பார். அமுதூட்டி அவர்களின் கையோடு கொண்டு போவதற்கும் ஏதேனும் விடுபட்டுள்ளதால் அப்படி அவர் அள்ளிக் கொடுத்தும் அவ் வடியார்கள் முன் தம்மை மிகச் சிறியவராகக் காட்டிக் கொண்டு தாழ்மையாக நடந்து கொள்வார். உமையொரு

★ பெருமிழலை : புதுக்கோட்டைக்கு வடக்கே சுமார் நான்கு மைலில் வெள்ளாற்றின் தென்கரையில் உள்ளது.

★ மிழலை : இது பாண்டிய நாட்டின் ஓர் உள்நாடு. பெருமிழலை இதன் தலைநகர்.

பாங்கனின் செம்மலர்ப் பாதங்களைத் தம் இருதயத் தாமரையில் வைத்துப் போற்றுவதே தமக்கு ஓர் அழகெனப் பெரிதும் இன்புறுவார்.

திருத்தொண்டின் உண்மை நிலையை உலகத்தார் அறிந்து உய்யும் பொருட்டு திருத்தொண்டத் திருப்பதிகத்தைப் பாடியருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் இவருக்கு அளவு கடந்த அன்பு உண்டு. மைவிழிப் பரவையாரின் மணவாளராகிய சுந்தரமூர்த்தி நாயனாரின் மலரடிகளைத் திரிகரணங்களாலும் சிந்தித்து துதித்து, தினந்தோறும் நியமமாக வணங்குவதே இறைவனின் திருவடிகளை அடைவதற்கு ஏற்ற நெறி என்ற கருத்தோடு இவர் பக்தி செலுத்தி வந்தார். இவ் விதமாக நாள்தோறும் நம்பியாரூரரான சுந்தர மூர்த்தியாரின் திருப்பெயரை இவர் நவின்றுவந்த நயத்தால் ★அணிமா. மகிமா. இலகிமா. கரிமா. பிராத்தி. பிராகாமியம். ஈசத்துவம். வசித்துவம் என்னும் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றிருந்தார்; அதன்பிறகு சிவபெருமானின் நாமமான ''நமசிவாய'' என்னும் ஐந்தெழுத்தைப் பேரன்புடன் ஓதுவதே தமக்கு உரிய பற்றுக் கோடாகவும் உணவாகவும் உறவாகவும் கொண்டு அதையே ஓயாமல் செபித்து, யோகப் பயிற்சியில் முதிர்ச்சியடைந்தார்.

இவ்விதம் மிழலைக் குறும்ப நாயனார் இங்கிருக்கும்போது ஒருநாள் சுந்தரமூர்த்தி நாயனார், திருவஞ்சைக் களத்திலுள்ள நஞ்சுண்ட அமுதப் பெருமானைப் பணிந்து தமிழ் பாடிய சமயத்தில், அவருக்கு வடகயிலை வாழ்வை அளிக்கச் சிவபெருமான் திருவுளம் கொண்டார்.

இந்தச் செய்தியினை பெருமிழலைக் குறும்பனார் தம் நெஞ்சிலே தெரிந்து கொண்டார். அத்தகைய உணர்வு அவருக்கு அவருடைய யோகசித்தியால் கிட்டியது. உடனே அவர், ''என் கண்களின் கருமணியான திருநாவலூர் வன்றொண்டர், நாளைத் திருக்கயிலாயம் அடையப் போகிறார்! கண்ணின் கருமணியைப் பிரிந்து வாழ்வாரைப்போல, நான்

★ அணிமா – ஆன்மாவைப் போல அணுவாதல், மகிமா – சிறிது மிகப் பெரிதாதல், இலகிமா – மிகக் கனத்தது மிக இலகுவாதல், கரிமா – மிக இலகுவானது மிகவும் கனத்ததாதல், பிராத்தி – வேண்டுவன அடைதல், பிராகாமியம் – விரும்பியதை நுகர்தல், ஈசத்துவம் ஆட்சியுளனாதல், வசித்துவம் – எல்லாம் தன் வசமாக வல்லவனாதல். இவற்றில் முதல் மூன்றும் உடலாலும், ஏனையன மனம் முதலிய கருவிகளாலும் பெறுவன. இவற்றின் பிரிவைத் திருவிளையாடல் புராணம் அட்டமாசித்தி உபதேசித்த படலத்தில் காணலாம்.

அவரைப் பிரிந்து தனித்து வாழமாட்டேன்!'' என்று நினைத்து, ''இன்றே யோக நெறியின் மூலம் சிவபெருமானின் திருவடியைச் சேர்வேன்!'' என்று துணிந்தார். மனம், புத்தி, சித்தி, அகங்காரம் என்னும் நான்கு கரணங்களும் ஒன்றி மெய்யறிவு மேலிட யோக முயற்சியில் ஈடுபட்டார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக் கயிலையை அடைவதற்கு முன்னாளிலேயே இவர் தம் யோக முயற்சியினால் ★**பிரமாந்திர வாயிலைத் திறக்க**, அந்த வழியின் மூலம் உடலினின்றும் பிரிந்து, கயிலையை அடைந்து, சிவனாரின் திருவடி நிழலில் அமர்ந்திருந்தார். அவருடைய திருவடிகளை வணங்கிவிட்டு அடுத்ததாக, காரைக்கால் அம்மையாரின் பெருமையைக் கூறுகிறேன்.

''பெருமிழலைக் குறும்பர்க்கும் அடியேன்''

— சுந்தரர்.

29. காரைக்காலம்மையார்

சோழ நாட்டின் கடற்கரையில், கடற் சங்குகளால் வளம்பெற்றுத் திகழ்வது ★**காரைக்கால் நகரம்.** அந்நகரில் அறநெறி தவறாத வாய்மையிற் சிறந்த பெரும் பெரும் வணிகர் குடிகள் நிறைந்திருக்கும். தனதத்தனார் என்பவர் அவ்வணிகர் குலத்தலைவராக விளங்கி வந்தார். அவர் செய்த தவத்தின் பயனாக, திருமகளைப் போன்ற பேரழகுடைய பெண்குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு ★**புனிதவதி** என்று பெரியோர்கள் பெயர் சூட்டினர்.

புனிதவதி அழகு பொங்கத் தளிர் நடை பயிலும் குழந்தைப் பருவத்திலிருந்தே சிவபெருமானின் திருவடிகளை வணங்கும் இயல்புடையவராக விளங்கி வந்தார். மனதில்

★ பிரமாந்திர வாயிலைத் திறத்தல். கபால மோட்சமடைதல்

★ திருகாரைக்கால் : இது சாகம்பரி தேவியின் ஸ்தலம். சுவாமியின் பெயர் கைலாசநாதர்.

★ புனிதவதி : இவர் பெயர் பூதவதி என்றும் தாய் பெயர் தருமவதி என்றும் வடநூலார் கூறுவர்.



பெரும் சிவநேசம் ததும்ப மொழிகளும் பயின்றாள். பருவங்கள் தோறும் புனிதவதிக்குச் செய்யவேண்டிய சிறப்புக்கள் எல்லாவற்றையும் தந்தை தனதத்தனார் தம் சுற்றத்தார் மகிழச் சிறப்பாகச் செய்து வந்தார். இவ்வாறு அருமையாகச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கப் பெற்ற புனிதவதி இயற்கையாகவே சிவபெருமானிடம் கொண்ட பேரன்புடன் அழகின் கொழுந்தென செழித்து வளரலானார். சிறுமியருடன் விளையாடும் போதெல்லாம் சிவபிரானைப் பற்றிய மொழிகளையே புனிதவதியார், பேசுவார். சிவனடியார் வந்தால், அவர்களை வணங்கி உபசரித்து மகிழ்வார். இவ்வாறிருக்கும் போது, பருவக் கொழுமையுடன் அழகு ஒளிவிடுவதுபோல புனிதவதி வளர்ந்து, திருமணப் பருவத்தை அடைந்தார். பெண்களின் அழகுச் சிறப்பை வரையறுத்துக் கூறும் சாமுத்திரிகா இலக்கண நூற்படிச் சகலவிதமான லட்சணங்களும் பொருந்தி உடல் வனப்பு மிகுந்து குலுங்கப் பேரழகுடன் புனிதவதியார் திகழ்ந்தார்.

வணிகர் மரபுக் கேற்ற பழங்குடியில் நாகப்பட்டினத்தில் நிதிபதி என்ற வணிகர் தலைவன் ஒருவன் பெரும் செல்வத்தோடும் செல்வாக்கோடும் வாழ்ந்து வந்தான். அவன் தன் மகன் பரமதத்தன் என்பவனுக்கு புனிதவதியாரை மணம்பேசுவதற்காகத் திறமை வாய்ந்த மூதறிஞர்களை காரைக்காலுக்கு அனுப்பி வைத்தான். அம் முதியவர்கள் காரைக்காலுக்கு வந்து தனதத்தனைச் சந்தித்து, ‘‘நீ பெற்ற பைங்கொடியான புனிதவதியை நாகப்பட்டினத்து நிதிபதியின் மைந்தனான பரமதத்தனுக்கு முந்தை மரபினுக்கு ஏற்படும் முறையில் திருமணம் செய்து கொடு!’’ என்றார்கள். அதற்கு தனதத்தனும் இசைந்தான். அதை முதியவர்கள் நாகப் பட்டினத்துக்குச் சென்று நிதிபதியிடம் தெரிவித்தார்கள். அதைக் கேட்டதும் நிதிபதி உயர்சிறப்புப் பெற்றவன்போல் உள்ளம் உவந்தான். செல்வம் மிகுந்த சுற்றத்தாரோடு சேர்ந்து தன் மைந்தனுக்குரிய மணவினைத் தொழில் பூண்டான். திருமண ஓலை, அனுப்பி மைந்தனை மணக்கோல ஆடையாபரணங்களால் அலங்கரித்து காரைக்காலுக்கு அழைத்துச் சென்று தனதத்தனின் மாளிகையை அடைந்தான். அங்கு கல்யாணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மெல்ல அடியெடுத்து வைத்து மென்னகை புரியும் *மயில் போன்ற புனிதவதியை ☆ காளை போன்ற பரமதத்தனுக்குச் சுற்றத்தார் போற்றும்படி திருமணம் செய்வித்தனர்.

தனதத்தனுக்கு புனிதவதி ஒரே மகளாக இருந்ததால் திருமணம் முடிந்த பிறகு மகளையும் மருமகனையும் நாகப்பட்டினத்திற்கு அனுப்ப அவன் விரும்பவில்லை. கணவனுடன் தன் மகள் தன் அருகிலேயே இனிதிருக்க வேண்டும் என்பதற்காக அவன் தன் வீட்டுக்கருகே, ஒரு புது வீடு கட்டி, அவர்கள் இருவரையும் அதில் இன்பமாக குடும்பம் நடத்தும்படி வைத்து அவர்களுக்குப் பெரும் பொருளும் கொடுத்து உதவினான். மாப்பிள்ளை பரமதத்தன் தங்கு தடையில்லாத பெருங்காதலோடு தன் மனைவளத்தைப் பெருக்க விரும்பி தன் வாணிபத்துறையில் மேம்பட்டு விளங்குவதில் முனைந்தான். அவனுடைய இல்வாழ்க்கைக்குப் புனிதவதியார் அருந் துணைவியாகி இல்லறத்தை இனிதாக நடத்தி வாழ்ந்து வந்தாள். புனிதவதியாரிடம் சிறுவயதிலி ருந்தே இயல்பாக இருந்த சிவநேயம், நாளுக்கு நாள் மிகப் பெருகி வளரலாயிற்று. அவர் தம் வீட்டுக்கு வரும் சிவனடியார்களுக்கு அன்போடு உணவளித்தும், பொன்னும்

☆ மயிலும் காளையும் பொருந்தாத உயிர்ச்சாதிகள் என்று சோதிட நூல்கள் கூறும்.

பொருளும் புத்தாடையும் கொடுத்தும், மற்றும் அவர்களுக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் பரிவோடு கொடுத்தும் பரமசிவனின் திருவடிகளை நினைத்துப் போற்றும் பேரன்பின் உணர்விலே பெரிதும் நிறைந்து வந்தார்.

இவ்விதமாக இல்லறம் நடத்தி வரும்போது ஒருநாள், பரமதத்தனை வாணிபத் தொழில் நிமித்தமாகக் காணவந்த சிலர், அவனுக்கு இரண்டு மாங்கனிகளைக் கொடுத்தார்கள். பரமதத்தன் அவற்றை வாங்கிக்கொண்டு, அவர்கள் வேண்டிய காரியங்களை முடித்துக் கொடுத்து, ''இம் மாம்பழங்கள் இரண்டையும் வீட்டில் கொண்டு போய்க் கொடுங்கள்!'' என்று கூறினான்.

கணவன் அனுப்பிய அவ்விரண்டு மாங்கனிகளையும் புனிதவதியார் வாங்கித் தம் வீட்டினுள் ஒருபுறம் வைத்தார். அப்பொழுது பசி மிகுந்த சிவனடியார் ஒருவர் உணவுண்பதற்காக புனிதவதியாரின் வீட்டிற்கு வந்தார். அவ்வடியாரின் பசி நிலையைக் கண்டு புனிதவதியார் மிகவும் பரிவு கொண்டு ''இவ்வடியாரின் பசியை அமுதளித்துத் தீர்ப்பேன்'' என்று நினைத்து அடியார் கால் கழுவநீர் கொடுத்தார். பிறகு அடியாரைப் பீடத்தில் அமரச் செய்து பரிகலம் வைத்து இன்னமுதான அன்னம் பரிமாறத் தொடங்கினார். அப்பொழுது காய்கறிகள் எதுவும் சமைக்கப்படாமல் சோறு மட்டுமே சமைக்கப்பட்டிருந்தது. அதனால் புனிதவதியார் ''என் சிவபெருமானின் அடியாரே என் வீட்டிற்கு விருந்தினராக வந்திருக்கிறார். இப்பேற்றினை விடச் சிறந்ததொன்றில்லை! அவருக்குத் திருவமுது செய்விப்பேன்!'' என்று நினைத்தார். தன் வீட்டில் வைத்திருக்கும்படி தன் கணவன் அனுப்பிய இரண்டு மாங்கனிகளில் ஒன்றை வேகமாக எடுத்து வந்து அதையே சோற்றுக்குக் கறியாகப் பரிமாறி மகிழ்ந்தார். மூப்பினால் தளர்ந்து பசியினால் வாடி இளைத்திருந்த சிவனடியாரோ தமக்கு அம்மையார் அன்புடன் அளித்த அமுதினை மாங்கனியோடு சுவைத்துண்டு மனமுவந்து புனிதவதியாரின் செயலைப் பாராட்டிச் சென்றார்.

அதன் பிறகு புனிதவதியாரின் கணவனான பரமதத்தன் நடுப்பகலில் தன் வீட்டுக்கு வந்து வழக்கம்போல் நீராடியபின், உணவருந்துவதற்கு அமர்ந்தான். அவனுக்கு திருவமுது கனியமுது முதலியவற்றை முறைப்படி புனிதவதியார் பரிமாறினார். பிறகு, தன் கணவன் கொடுத்தனுப்பிய மாங்கனிகள் இரண்டில் மிஞ்சியிருந்த ஒன்றைக் கொண்டு வந்து, கணவனின் பரிகலத்தில் இட்டாள். மனைவியார் படைத்த அந்த மாங்கனியை பரமதத்தன் சுவைத்துச்

சாப்பிட்டதும் அது மிகவும் மதுரமாக இருந்ததால், ''இன்னொரு பழமும் இருக்குமே! அதை எடுத்து வந்து இடுக!'' என்றான். உடனே, புனிதவதியார் மற்றொரு மாங்கனியையும் கொண்டு வருவதுபோல் அங்கிருந்து நீங்கி உள்ளே வந்தார். ஒரு பக்கமாய் நின்று மனம் தளர்ந்தார். இல்லாத அருங்கனிக்கு என்ன செய்வார்! பாவம் ஒருகணம் புனிதவதியார் மெய்மறந்து நின்றார். பிறகு ''உற்றவிடத்து உதவும் பெருமானே!'' என்று அவர் சிவபெருமானைத் தியானித்தார். உடனே, இறைவன் திருவருளில் புனிதவதியாரின் கையில் அதிமதுர மாம்பழம் ஒன்று வந்து அமர்ந்தது. அந்தக் கனியை புனிதவதியார் கொண்டு வந்து மகிழ்ச்சியோடு கணவனின் பரிகலத்தில் இட்டார். பரமதத்தன் அதை உண்டான். அதன் சுவை தேவ அமுதத்தினும் மேம்பட்டு விளங்குவதைக் கண்டு அவன் திகைத்து, ''இது நான் முன்பு கொடுத்தனுப்பிய மாங்கனியன்று! இது மூவுலகிலும் பெறுதற்கு அரியது; இதனை நீ எங்கிருந்து பெற்றாய்?'' என்று தன் மனைவியிடம் கேட்டான்.

அதைக் கேட்டதும் கற்புக்கரசியாராகிய புனிதவதியார் கலக்கமுற்றார். இருதலைக் கொள்ளி எறும்பு போலானார். சிவபெருமானின் திருவருள் உதவிய திறத்தை எப்படி வெளியிடுவது என்று குழம்பினார். தன் கற்பொழுக்கத்தை நினைக்கும்போது தன் கணவனுக்கு உண்மையை உரைக்காமல் இருப்பது தவறன்றோ என்றும் எண்ணிக் குழம்பினார். உண்மையைச் சொல்லவும் முடியாமல் சொல்லாமலிருக்கவும் முடியாமல் இரண்டு எண்ணங்களுக்குமிடையே அகப்பட்டுத் தத்தளித்து உடம்பெல்லாம் நடுங்கினார். முடிவில் நிகழ்ந்தபடி கூறுவதே தம் கடமை என்று தெளிவுற்று இறைவனின் திருவடிகளைத் தன் மனதால் வணங்கிவிட்டு கணவனிடம் கூறினார்.

''ஈசன் அருளா?'' என்ற பரமதத்தன் திகைத்தான். அவன் திருவருள் நெறியில் நில்லாதவனாகையால் அவனுக்கு உண்மை விளங்கவில்லை. அவன் மலர்மகள் போன்ற புனிதவதியாரைப் பார்த்து, ''சிவன் அருளா! இது செஞ்சடைப் பெருமான் திருவருளால் விளைந்தது என்றால், அவனருளால் இன்னுமொரு கனியை வரவழைத்துக் கொடு; பார்ப்போம்!'' என்று மொழிந்தான். கற்பரசியார் அங்கிருந்து நீங்கி அடியார்க்கு எளியனாகிய ஆண்டவனைச் சிந்தித்து, ''எம்பெருமானே! இங்கு இன்னுமொரு மாங்கனியை நீர் தந்தருளவில்லையெனில் என் சொல் பொய்யாகிவிடும்!'' என்று வேண்டினார். எங்குமுள்ள சங்கரன் திருவருளால் மாங்கனியொன்று புனிதவதியாரின் கையில் வந்து சேர்ந்தது. அதை அவர் கொண்டு வந்து, தம் கணவன் கையில் கொடுத்தார்.

பரமதத்தன் அதிசயித்து அதை வாங்கினான். அதைக் கையில் வாங்கியவுடனே அது அவ்வணிகனின் கையைவிட்டு மாயமாய் மறைந்தது. இதைக்கண்டு பரமதத்தன் பயந்து மனந்தடுமாறினான். அழகான கூந்தலுடன் நிற்கும் தன் மனைவியைப் பார்த்தான். பார்த்துப் பார்த்து "இவள் சாதாரணப் பெண் அல்ல! இவள் தெய்வம்!" என்று கருதினான். இனிமேல் புனிதவதியை தன் மனைவியெனப் பாவிக்கவும் அவனால் முடியவில்லை! தெய்வத்தை மனைவியெனக் கொண்டு உறவு கொள்ளவும் அவன் மனங்கூசியது. அதனால் புனிதவதியைவிட்டு நீங்கிவிட வேண்டுமென்றே கருதினான். ஆனாலும் அவன் தன் கருத்தை வெளியிடாமலும், எவரிடமும் தன் மனோநிலைமையைச் சொல்லாமலும் வாழ்ந்து வந்தான்.

புனிதவதியைவிட்டு நீங்குவதே எண்ணமாகக் கொண்டிருந்த பரமதத்தன், "நான் கடல்மேல் கப்பலில் சென்று பெருஞ்செல்வம் கொண்டு வருவேன்" என்று சொல்லிக் கொண்டு கிளம்பினான். அவனுடைய உறவினர்களும் மற்ற வணிகர்களும் சேர்ந்து கடல் பயணத்திற்காக மரக்கலம் ஒன்றை அமைத்துத் தந்தார்கள். அந்த மரக்கலத்தில் பரமதத்தன் பண்டங்களை நிரம்ப ஏற்றிக் கடல் கடவுளான வருணதேவனை வணங்கி ஒரு நல்ல நாளில் கடற்பயணம் புறப்பட்டான்.

அவன் வாணிபஞ் செய்து அளவற்ற பெரும் பொருளைச் சம்பாதித்து தான் விரும்பிய தேசத்தில் சிலகாலம் தங்கியிருந்தான். பிறகு அவன் அதே கப்பலில் ஏறிப் புறப்பட்டு பாண்டிய நாட்டிலுள்ள ஒரு துறைமுகப் பட்டினத்தில் இறங்கினான். அந்நகரத்தில் அவன் பெருஞ்செல்வங்களைச் சம்பாதித்துக் குவித்து அங்கு பிரபலமான ஒரு வணிகன் பெற்ற பெண்ணையும் திருமணஞ் செய்துகொண்டான்.

பெறுவதற்கு அருமையான மகாலக்ஷ்மி போன்ற புனிதவதியை அவன் முன்பு திருமணம் செய்து கைவிட்டு வந்த வஞ்சனையை அவன் வெளியே ஒருவருக்கும் சொல்ல வில்லை. தன் மனதிற்குள்ளேயே மூடி மறைத்து வைத்துக் கொண்டு புது மனைவியோடு இல்லறத்தில் ஈடுபட்டு முகமலர்ச்சியுடனே குடும்ப வாழ்க்கை நடத்தி வந்தான். வாணிபத் துறையில் அவன் பெரும் பொருளீட்டிக் குபேரனுக்குச் சமமான செல்வந்தனாக உயர்ந்து அலைகடலி லே கப்பல்கள் விடும் வணிகனென்று பேரும் புகழும் அடைந்தான். அவனுக்கு இரண்டாவது மனைவியின்மூலம் பெருகொளி விளக்குப் போன்ற பெண் குழந்தையொன்று மிக அருமையாகப் பிறந்தது. அக்குழந்தைக்குப் பரமதத்தன் மங்கல

காரியங்களையெல்லாம் செய்தான். முன்பு முதல் மனைவியான புனிதவதியாரோடு அவன் வாழாமல் வஞ்சித்து நீத்து, அவரைக் கட்டிய மனைவியென்று கருதாமல் கைதொழும் தெய்வம் என்றே கருதி மனைவியென்ற தொடர்பும் அறும்படி மனதால் நினைத்து அவரைவிட்டு விலகி வந்தவனல்லவா? அந்த முதல் மனைவியின் பெயரான புனிதவதி என்பதையே தன் அன்புக் குழந்தைக்கும் பெயராக இட்டான்.

இந்நிலையில் இவன் பாண்டிய நாட்டில் இருந்துவரும்போது காரைக்காலில் தனதத்தனின் செல்வியான புனிதவதியார் கற்பின் நெறியோடு மனையறம் காத்து வந்தார்.

''பொருள் வளம் பெருக்கக் கடல்மீது சென்ற பரமதத்தன் இப்போது பாண்டிய நாட்டில் ஒரு பெரிய நகரத்தில் அளவில்லாத பெரும் செல்வம் குவித்து அங்கேயே ஆனந்தமாகக் குடியிருக்கிறான்!'' என்று புனிதவதியாரின் சுற்றத்தார் கேள்விப் பட்டார்கள். உடனே அவர்கள் நெருங்கிய உறவினர்கள் சிலரை அனுப்பி பரமதத்தனின் நிலையை விசாரித்துத் தெரிந்து கொண்டு மனங்கலங்கிக் குழம்பினார்கள். பிறகு, ''கட்டிளம் மனைவியான புனிதவதியை அவளுடைய கணவன் இருக்கும் இடத்திற்கே கொண்டுபோய் விடுவதுதான் முறையாகும்!'' என்று தீர்மானித்தார்கள். ஒரு மாமணிச் சிவிகையில் மென்னடை அன்னமான புனிதவதியாரை அமரச் செய்து, சிவிகையின் திரைச்சீலையை அவிழ்த்து மூடினார்கள். தாமரைப் பீடத்தில் இருக்கும் மகாலக்ஷ்மிபோல் அச்சிவிகையில் புனிதவதியாரை வைத்துக்கொண்டு அன்புள்ள சுற்றத்தாரும் பெண்மணிகளும் சென்றார்கள். சில நாட்கள் பயணம் சென்றதும் நெடுந்தூரம் கடந்து செந்தமிழ்த் திரு நாடான பாண்டிய நாட்டை அடைந்தார்கள். பரமதத்தன் வசிக்கும் மாநகருக்கும் வந்து சேர்ந்தார்கள். குலமுதல் மனைவியாரை அழைத்துக் கொண்டு வந்திருக்கும் தகவலை அவர்கள் சில ஆட்கள் மூலம் தொலைவிலுள்ள கணவனுக்குச் சொல்லியனுப்பினார்கள்.

அதைக் கேட்டதும் பரமதத்தன் தன் சிந்தையில் பயங்கொண்டு, ''இனி என்ன செய்வது? இரண்டாவதாக மணம் புரிந்துகொண்ட இளம் மனைவியையும், அவள் பெற்ற பெண் மகவையும் அழைத்துக்கொண்டு முந்துறப் போவேன்!'' என்று அவன் தீர்மானித்துக் கொண்டு புனிதவதியாரிடம் விரைந்து வந்தான். பெண்மான் போல் நிற்கும் முதல் மனைவியான புனிதவதியாரின் காலடியில் அவன் தன் இரண்டாவது மனைவியோடும் பெண்குழந்தையோடும் விழுந்து வணங்கி, ''உமது அருளால் நான் வாழ்கிறேன். இந்தப் பெண் குழந்தைக்கும் உம் திருப் பெயரையே சூட்டி இருக்கிறேன்!''

என்று கூறிக் கும்பிட்டு மறுபடியும் புனிதவதியாரின் காலடியில் விழுந்து வணங்கினான். தன் கணவன் தன்னை வணங்குவதைக் கண்ட புனிதவதியார் அஞ்சிப் பயந்து பூங்கொடி போல் தத்தளித்தார். சுற்றத்தாரின் பக்கம் ஒதுங்கி நின்றார்.



பரமதத்தனின் செய்கையைக் கண்ட சுற்றத்தார்கள் வெட்கமடைந்து ''பரமதத்தா! இது என்ன? உன் மனைவியை நீ வணங்குவது ஏன்?'' என்று கேட்டார்கள். பரமதத்தன் அவர்களை நோக்கி, ''இவர் மானிடப் பிறவியல்ல! நற்பெருந் தெய்வமேயாகும்! அதை நான் அறிந்து கொண்டுதான் இவரை விட்டு நீங்கி வந்தேன்!



பிறகு நான் பெற்ற இந்தப் பெண் குழந்தைக்கும் அத்தெய்வத்தின் பெயரையே வைத்திருக்கிறேன்! ஆகையால் அவரது பொற்பாதங்களை வணங்கினேன். அதுபோலவே நீங்களும் அவரை வணங்கிப் போற்றுங்கள்!'' என்று சொன்னான். அதைக் கேட்டதும் ''இதென்ன மாயம்?'' என்று சுற்றத்தார் திகைத்து நின்றார்கள்.

வாசனை கமழும் கூந்தலுடன் நிற்கும் புனிதவதியாரோ தன்கணவன் சொன்ன மாற்றங் கேட்டதும், சிவபெருமானின் திருவடிகளைத் தியானித்து, அதிலேயே சிந்தை ஒன்றி மிகவும் உணர்வு கொண்டு, ''ஈசனே! என் கணவர் குறித்த கொள்கை இது! இவருக்காகவே நான் உடல் வனப்பைத் தாங்கியிருந்தேன்! தசைப் பொதியைக் கழித்து, அங்கே உம் திருவடிகளைப் போற்றும் பூதகணங்களைப் போல் எனக்கும் பேய்வடிவே வந்தருள வேண்டும்'' என்று மெய் நெறியின் உணர்வு பொங்க இறைஞ்சினார். அம்பலவாணரின் திருவருளினால் அவ்வாறே ஆயிற்று. உடம்பில் பெண்மையின் அழகிற்கு இடமான ஊன் சதைவனப்பையெல்லாம் உதறியெறிந்துவிட்டு வெறும் எலும்பு உடம்பாக நின்றார். அந்த எலும்புக் கூட்டோடு விண்ணவரும் மண்ணவரும் வணங்கத்தக்க பேய் வடிவம் பெற்றார். உடனே வானத்தில் இருந்து மலர்மாரி பொழிந்தது! எங்கும் தேவதுந்துபிகள் முழங்கின. உலகெலாம் பேரொலி நிறைந்து விம்மியது. தேவர்களும் முனிவர்களும் ஆரவாரம் செய்தார்கள். சிவ கணங்களெல்லாம் கூத்தாடின. சுற்றத்தார்கள் அச்சமுற்று புனிதவதியாரை வணங்கிப் போய் விட்டார்கள்.

அப்பொழுது புனிதவதியார் தமக்குண்டான ஒருமை ஞானத்தினால் உமையொருபாங்கனைத் துதித்து, ''உம்முடைய அழகான திருவடிகளைப் போற்றும் நல்ல சிவபூத கணங்களில் நானும் ஒன்றானேன்!'' என்று உள்ளுருகி ★ **(அற்புதத் திருவந்தாதியையும் இரட்டை மணிமாலையையும்)** பாடியருளினார்.

அதன் பிறகு, காரைக்காலம்மையாருக்குப் பேருணர்வு மேன்மேலும் பொங்கியெழுந்தது. ''சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கயிலாயத்தைக் காண வேண்டும்'' என்ற பேராவலுடன் திருவருள் வழியிலேயே அம்மையார் விரைந்து நடந்தார். அவர் விரும்பிப் பெற்ற பேய்த் தோற்றத்தைக் கண்டவர்களெல்லாம் பயந்து அந்த இடத்தைவிட்டே அகன்றோடலானார்கள். தான் கொண்ட பேய் வடிவத்தைப் பற்றி உள்ளவாறே பிறர் கூறுவதைக் கேட்ட அம்மையார், ''என் அண்டர் நாயகரான இறைவர் என்னை அறிவாராகில் அதுவே எனக்குப் போதும்! உண்மை அறியாதவர்களான உலக மக்களுக்கு நான் எவ்வுருவமாய்க் காணப்பட்டாலும் அதனால் ஆவது என்ன, ஒன்றுமில்லை!'' என்று கூறினார்.

கைலாசத்தை நோக்கிப் புறப்பட்ட காரைக்காலம்மையார் வடதிசையிலுள்ள தேசங்களையெல்லாம் மனோ வேகத்தைவிட வேகமாகக் கடந்து சென்று திருக்கயிலை மலையை நெருங்கினார். அதன் பிறகு அவர் காலால் நடப்பதைத் தவிர்த்தார். தம் தலையாலே நடந்தார். அவ்வாறு தலையால் நடந்தபடியே வெள்ளிமலை மீதேறினார். அப்பொழுது சிவபெருமான் ஒரு பக்கமிருந்த இமயவல்லியான உமாதேவியார் அதிசயித்து, உள்ளத்தில் அன்பு பொங்கத் தம் சிவபிரானை நோக்கி, ''எம்பெருமானே! இங்கு தலையால் நடந்து மலையேறும் என்புடலின் அன்புதான் என்னே!'' என்றார். அதற்கு சிவபிரான்! ''உமையே! இங்கே வரும் இவள் நம்மைப் பேணிப் போற்றும் அம்மையாகும், காண்! இந்தப் பெருமை வாய்ந்த வடிவத்தையும் நம்மை வேண்டிப் பெற்றாள்'' என்று கூறினார். பிறகு பேய் வடிவமான காரைக்காலம்மையார் தம்மை நெருங்கி வந்ததும், ''அம்மையே!'' என்றார் சிவபெருமான். அது கேட்ட காரைக்காலம்மையார், ''அப்பா!'' என்று கூவி இறைவனின் தாமரைத் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்தார். அவரைச் சிவபெருமான் எதிர்நோக்கி, ''இங்கு நம்மிடம் நீ வேண்டுவது என்ன?'' என்று கேட்டார்.

★ இவ்விரண்டு நூல்களும் பதினோராம் திருமுறையைச் சேர்ந்தவை.



அவரை அம்மையார் கும்பிட்டு, ''இறைவரே! என்றென்றும் இறவாத இன்ப அன்பு வேண்டும்! உலகில் இனி நான் பிறவாமை வேண்டும். மீண்டும் எனக்கு பிறப்பு உண்டென்றாலும் உன்னை என்றும் நான் மறவாதிருக்க வேண்டும்! இன்னும் ஒன்றும் வேண்டும். தர்ம வடிவமே! நீர் ஆனந்த நடனம் ஆடும்போது அடியேன் மகிழ்ந்து பாடிய வண்ணம், நின் திருவடியின் கீழ் இருக்க வேண்டும், ஐயனே!'' என்று விண்ணப்பித்தார். அவருக்கு சிவபெருமான் திருவருள் பாலித்து, ''அம்மையே! தென் திசையில் பழையனூர் திருவாலங் காட்டில் நாம் நடன மாடுவோம்! அந்தப் பெரு நடனத்தை நீ கண்டு ஆனந்தப்பட்டு எப்போதும் நம்மைப் பாடிக் கொண்டு இருப்பாயாக!'' என்றார்.

அப்பரிசு அருளப் பெற்ற அம்மையார் சிவ பெருமானைப் பணிந்து விடை பெற்றுக் கொண்டு பேரன்போடு போய், திருவாலங்காடு என்னும் தலத்தை தம் தலையாலே நடந்து அன்றே வந்தடைந்தார். ஆலங்காட்டு ஆலயத்தினுள்ளே அவர்

சென்று, அங்கு அண்டமுற நிமிர்ந்தாடும் ஆண்டவனின் நடனக் கோலத்தைக் கண்டு தொழுதார்; ''கொங்கை திரங்கி'' என்று தொடங்கும் முத்திருப்பதிகத்தையும் பாடினார்.

''கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகள் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி அலறி உலகுக்கு நாட்டில்
தாழ்சடை எட்டுத் திசைகள் வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங்காடே.


– மூத்த திருப்பதிகம்

சிவபெருமானின் ஆனந்தக் கூத்தை முன் வணங்கும் பெருங்காதல் எழுந்தோங்க அம்மையார் பெரிதும் வியப்பெய்தி 'எட்டி இலவம்மீகை' என்ற பாடலடியெடுத்து ''கொட்ட முழவம், கூளிபாடக் குழகன் ஆடுமே!'' என்னும் முடிபினையுடைய திருப்பதிகத்தையும் பாடிப் பணிந்தார்.

சிவபெருமானாலேயே, ''அம்மையே, என்று அழைக்கப் பெற்றவரும், சிவபெருமான் ஆடும் திருக்கூத்தை சேவடிக்கீழ் என்றும் நீங்காது அமர்ந்து பாடும் வரம் பெற்றவருமான காரைக்காலம்மையாரின் புகழை யாரால் கூற இயலும்! இது மிக அற்புதமாயிற்றே! அவ்வம்மையாரின் மலர்ப் பாதங்களைப் போற்றிவிட்டு அடுத்ததாக அப்பூதியடிகளின் திருத்தொண்டைப் புகல்கிறேன்.

''....பேயார்க்கும் அடியேன்''

– சுந்தரர்.



30. அப்பூதியடிகள்

சோழ வளநாட்டில், *திங்களூரில், அந்தணர் குலத்தில் அப்பூதியடிகள் என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர், ஆனந்தத் தாண்டவம்புரியும் சிவபெருமானுக்கு அன்பர். அளவற்ற தவத்தினர். திருநாவுக்கரசு சுவாமிகளைத் தாம் கண்டறியா முன்னமே, அவருடைய திருத்தொண்டின் பெருமையையும், அதற்கு இறைவன் அருளிய திருவருட் பண்பையும் பற்றிக் கேள்விப்பட்டு, நாவுக்கரசர் மீது மானசீகமாகப் பேரன்பு கொண்டவர். பொய், களவு, கோபம், காமம் முதலிய குற்றங்களை வெறுத்தொழித்தவர். மனைவி மக்களோடு இல்லற வாழ்க்கையில் நின்றவர். தமது வீட்டிலுள்ள அளவுக் கருவிகளுக்கும் மக்களுக்கும் பசுக்களுக்கும் எருமைகளுக்கும் மற்றைய பொருள்கள் எல்லாவற்றுக்கும், ''திருநாவுக்கரசு'' என்ற திருப்பெயரை வைத்து அன்புடன் அழைத்து வந்தார். இவை தவிர, தாம் அமைத்த திருமடம், தண்ணீர்ப் பந்தல் முதலியவற்றிற்கும் திருநாவுக்கரசர் பெயரையே வைத்து வழங்கி அளவிலா அறச் செயல்கள் புரிந்து வந்தார்.

அவ்வாறு அப்பூதியடிகள் தர்மங்கள் புரிந்து வாழ்ந்து வரும் காலத்தில், திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பழனம் என்ற சிவஸ்தலத்தினைப் பணிந்து, பணி செய்து, மற்றும் பல சிவஸ்தலங்களை தரிசிக்க வேண்டித் ★திங்களூர் வழியாக வந்தார். அங்கு ஒரு தண்ணீர்ப் பந்தலைக் கண்டார்.

அளவில்லாத மக்கள் திரள் திரளாகச் செல்கின்ற நல்ல வழிக்கரையில் அந்தத் தண்ணீர்ப் பந்தல் அமைந்து, அருளுடையாரின் உள்ளத்தைப் போலக் குளிர்ந்த தன்மை யுடையதாகவும் வேனிலின் வெம்மைத் துன்பத்தைப் போக்கும் தண்ணீர்த் தடாகத்தைப் போல் குளிர்ச்சியும் நிழலும் தந்து கொண்டிருந்தது. அதைக் கண்டு திருநாவுக்கரசர் வியந்தார். அந்தத் தண்ணீர்ப் பந்தலில் எங்கும் அழகுபட, ''திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல்'' என்ற பெயர் எழுதப்பட்டிருப்பதையும் கண்டார். உடனே அவர் அதிக வியப்புற்று, அங்கிருந்தவர்களை நோக்கி, 'இப்பந்தரை இந்தப் பெயரிட்டு அமைத்தவர் யார்!' என்று கேட்டார்.

★ திங்களூர் : இது திருவையாற்றுக்குக் கிழக்கே உள்ள திருப்பழனம் என்ற ஸ்தலத்துக்கு வடக்கில் சுமார் 3 மைல் தொலைவில் உள்ளது.




அதை நன்கறிந்தவர்கள் "அப்பூதியடிகள்" என்று சொல்லி, "அவரால் அமைக்கப்பட்டுள்ள வேறுபல அறச்சாலைகளுக்கும் 'திருநாவுக்கரசு' என்ற பெயரையே அவர் சூட்டியுள்ளார். அப்படிச் செய்வதுதான், அவருடைய வழக்கம்!" என்று கூறினார்கள்.

"அந்த அப்பூதியடிகள் இப்படிச் செய்வதற்குக் கருத்தென்னவோ?" என்று திருநாவுக்கரசர் எண்ணமிட்டு, "அவர் எவ்விடத்தில் உள்ளவர்!" என்று கேட்டார்.

"அப்பூதியடிகள் இந்த ஊரைச் சேர்ந்தவர்தான். இப்பொழுதுதான் வீட்டுக்குப் போனார்; அவர் வீடும் தூரத்திலில்லை! அது மிகவும் சமீபத்திலேயே இருக்கிறது!" என்று அவர்கள் சொன்னார்கள்.

உடனே, திருநாவுக்கரசர் அங்கிருந்து புறப்பட்டு, அப்பூதியடிகளாரின் வீட்டுவாசலை அடைந்தார். "சிவனடியார் ஒருவர், தமது தலைவாசலில் வந்துள்ளனர்" என்று சொல்லக் கேட்டதும் அப்பூதி அடிகள் தம் வீட்டுக்குள்ளிருந்து வெளியே விரைந்து வந்தார். திருநாவுக்கரசருடைய திருவடிகளை அப்பூதியார் வணங்க முயன்றார். அதற்கும் முன்னதாகத் திரு நாவுக்கரசர் அவரை வணங்கினார். அப்போது, அப்பூதியடிகள் "கருணை வடிவுடையீர்! தாங்கள் என் வீட்டிற்கு வந்தருளினீர்கள். அது யான் செய்த தவம்!" என்றார்.

அப்பொழுது கோதில் மொழிக் கொற்றவராகிய திருநாவுக்கரசர், "யாம் திருப்புனத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரானை வணங்கிவிட்டு வருகிறோம். வழியில் நீர் வைத்துள்ள நிழல் நிறைந்த தண்ணீர் பந்தரைக் கண்டோம். அவ்வாறே நீர் செய்துவரும் மற்ற அறங்களைப் பற்றியும்



கேட்டோம்!'' அதனால் உம்மைக் காண விரும்பி, இங்கு வந்தோம்! என்று கூறினார். பிறகு அவர் தொடர்ந்து, ''அப்பூதியடிகளே! நீர் சிவனடியார்கள் பொருட்டு வைத்திருக்கும் தண்ணீர்ப் பந்தருக்கு உம் பெயரை எழுதாமல் வேறொரு பெயரை எழுத வேண்டிய காரணம் என்னவோ அதைக் கூறும்!'' என்று கேட்டார்.

அதைக் கேட்ட அப்பூதியடிகள், நிலையழிந்த சிந்தையானார். ''சிவனடியாரே! நீர் நல்லதைச் சொல்லவில்லை! சமணர்களுடன் சேர்ந்து கொண்டு பல்லவ மன்னன் இழைத்த சூழ்ச்சிகளை யெல்லாம் திருநாவுக்கரசர் தமது திருத்தொண்டின் வலிமையினாலே வென்றார்! அத்தகையவரின் திருப்பெயரையோ வேறொரு பெயர் என்று நீர் சொன்னீர்?'' என்று அப்பூதியடிகள் வெகுண்டு மேலும் தொடர்ந்து கூறலானார். சிவபெருமானின் திருவடியின் கீழ்,

அன்புடன் செய்யும் திருத்தொண்டினாலே, இப்பிறவியிலும் நாம் பிழைக்கலாம் என்பதை என்னைப் போன்றவர்களும் அறியும் வண்ணம் செம்மை புரிபவர் திருநாவுக்கரசர்! அத்தகைய பெரியாரின் பெயரையே நான் எழுதினேன். அப்படியிருக்க, அது யாரோ ஒருவர் பெயரென என் காதுபடவே நீர் வெம்மைமொழி விளம்பினீர். கடலில் கட்டிப்போட்ட கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலைக் கடந்து கரையேறியவர் திருநாவுக்கரசர்! அப்பெரியாரின் பெருமையை அறியாதார் இந்தப் புவனத்தில் யார்தான் உண்டு? மங்கலமான சிவனடியார் வேடத்துடன் இருந்தும் நீர் இவ்விதமாக வெம்மை மொழி பேசிவிட்டீர்! நீர் எங்கே வசிப்பவர்? நீர்தாம் யார்? சொல்லும்!'' என்று சினந்து கேட்டார்.

அவருடைய அன்பின் பெருமையை திருநாவுக்கரசர் உணர்ந்து, ''புறச்சமயமான சமணத் துறையினின்றும் கரையேறும் பொருட்டு, சிவபெருமானால் பெருஞ் சூலைநோய் தரப்பட்டு அவரருளால் ஆட்கொள்ளப்பட்டு உயர்ந்தவன் நான்! அத்தகைய தெளிவுணர்வில்லாத சிறியேன்தான் நான்!'' என்றார்.

அவருடைய வார்த்தைகளைக் கேட்டதும் அவர்தான் திருநாவுக்கரசர் என்பதை அப்பூதியடிகள் அறிந்துகொண்டு தம் இரு கைகளையும் தலைமேல் குவித்து, ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பெருகி வழிய, வாய் குழற, உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிய தரையில் அப்படியே விழுந்து, திருநாவுக்கரசரின் திருவடித் தாமரைகளைத் தலைமீது பூண்டார். திருநாவுக்கரசர் தாமும் எதிர் வணங்கி, அப்பூதியடிகளைத் தம்மிரு கைகளாலும் எடுத்தருளினார். பொருள் அற்றவர்கள் அபூர்வமான செல்வத்தைப் பெற்றதைப்போல் அப்பூதியடிகள் அகமிக மகிழ்ந்தார். திருநாவுக்கரசரை நேரில் கண்ட மகிழ்ச்சியால் முன்னின்று கூத்தாடினார். ஆனந்தம் பொங்க ஓடினார். ஆடினார்; பாடினார். மேன்மேலும் மூண்டெழும் பெரு மகிழ்ச்சியால் யாது செய்வதென்று அறியாது திகைத்தார். பிறகு அவர் தம் வீட்டுக்குள் விரைந்து சென்று ''திருநாவுக்கரசர் வந்திருக்கிறார்'' என்று மனைவி மக்களுக்கு உவகையோடு சொல்லி, மனைவி மக்களையும் மற்றுமுள்ள சுற்றத்தார் அனைவரையும் அழைத்துக்கொண்டு ஆர்வம் பொங்க வந்து திருநாவுக்கரசரை வணங்கச் செய்தார்.

அதன் பிறகு அப்பூதியடிகள், திருநாவுக்கரசரைத் தம் வீட்டுக்குள் அழைத்துச் சென்று, அவர் தம் திருவடிகளைத் தமது மனைவி மக்களுடன் நீரால் சுத்தம் செய்தார். அந்நீரை அவர்கள் எல்லோரும் தங்கள் தலைமீது தெளித்துக்கொண்டு

புரோஷணம் செய்து மகிழ்ந்தார்கள். பிறகு திருநாவுக்கரசு சுவாமிகளை ஒருபீடத்தில் அமரச்செய்து, ''திருவமுது செய்தருளல் வேண்டும்'' என்று அப்பூதி அடிகள் வேண்டினார். அதற்கு நாவுக்கரசர் உடன்பட்டார்.

அப்பூதியடிகள் தம் மனைவியாரைப் பார்த்து, ''ஆண்டவன் அருளால் பெறுதற்கரிய பெரும்பேறு பெற்றோம்'' என்று சொல்லிப் பேருவகையுடன் திருவமுது சமைக்கப் புகுந்தார். அறுசுவைக் கறிகளாக்கி, இனிய அன்னம் வடித்து, அமுதும் ஆக்கினார்; உணவு பரிமாற இலை விரிப்பதற்காகத் தம் பிள்ளைகளில் மூத்த திருநாவுக்கரசரைக் கூப்பிட்டு, ''வாழையில் நல்லதொரு குருத்து அரிந்து கொண்டு ஓடிவா!'' என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

பெற்றோர் சொற்படி மூத்த திருநாவுக்கரசு தங்கள் வீட்டின் கொல்லைப்புற தோட்டத்துக்கு விரைந்து ஓடி வளப்பமான ஒரு பெரிய வாழைக் குருத்தை அறுத்தான். அப்பொழுது ஒரு பாம்பு, அவன் கையைத் தீண்டிச் சுற்றிக்கொண்டு, கண்ணில் கனல் எரிய படமெடுத்தபடியே இருந்தது. பிள்ளை அப்பாம்பை உதறிக் கீழே வீழ்த்திவிட்டும் பதைபதைத்தான். ''விஷவேகம் என் தலைக்கேறி என்னைச் சாய்த்துவிடுமே! அதற்குள்ளாக நான் கொய்த இந்த வாழைக் குருத்தை வேகமாகக் கொண்டுபோய் கொடுப்பேன்! நிகழ்ந்ததை ஒருவரிடமும் சொல்லேன், பெரியவர் திருவமுது செய்தருளல் வேண்டும்'' என்று நினைத்து, விஷவேகத்தால் துன்புறும் நிலையிலும் வாயை மூடிக்கொண்டு, வெகு வேகமாக ஓடிச்சென்று, வீட்டினுள் புகுந்து தன் தாயாரிடம் வாழைக் குருத்தைக் கொடுத்தான். அப்போது பாம்பின் அழிக்கும் விஷமானது முறையே மேல் ஏறி ★ஏழாம் வேகம் தலைக்கொண்டு, அவனது பற்களும், கண்களும் மேனியும் கறுத்து, தீந்து, வாய்குழறி, ஆவி நீங்கிடும் நிலையில் அப்படியே மயங்கிச் சுருண்டு தரையில் விழுந்தான். அவ்வாறு தளர்ந்து வீழ்ந்த மூத்தமகனைத் தாய் தந்தையர் கண்டார்கள். உள்ளம் பதைத்து உற்று நோக்கினார்கள். மகனின் கையில் உதிரம்

★ ஏழாம் வேகம் : பாம்பு கடித்த இடத்திலிருந்து, விஷம் கலந்த இரத்தம், இரத்தக் குழாய்கள் மூலமாக இதயத்திற்குச் சென்று அங்கிருந்து திரும்பி உடலில் பரவுவது ஒரு வேகமாகும். இவ்வாறு, ஒரு வேகம் முடிந்தால், உடலிலுள்ள உமிழ் நீர், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்னும் ஏழுவகை தாதுக்களில் ஒன்றின் வலிமை கெடும். இப்படி ஏழுமுறை ஓடிவந்தால் ஏழு தாதுக்களும் கெடும். இதனை 'ஏழாம் வேகம்' என்பர் தமிழ் வைத்தியர்.

வடிவதையும் உடலின் குறிகளையும் கண்டு, ''விஷம் தீண்டியதால் மாண்டு விழுந்தான்.'' என்று உணர்ந்து கொண்டார்கள். ஆனாலும் அவர்கள் சிறிதும் மனம் கலங்காமல், திருநாவுக்கரசர் திருவமுது செய்வதற்குரிய உபாயம் ஒன்றிலேயே தங்கள் கருத்தைச் செலுத்தினார்கள். அருமைப் புதல்வனின் சவத்தை ஒரு பாயிலே வைத்துச் சுற்றி மூடி, வீட்டின் ஒரு புறத்தில் மறைத்து வைத்தார்கள். ''பெரியவர்க்கு இது சிறிதும் தெரியாத வண்ணம் அமுது செய்விப்போம்!'' என்று அவர்கள் நினைத்துக் கொண்டு, விருப்போடு விரைந்து வந்து, ''பெரியவர் அமுது செய்ய காலதாமதம் ஆகிறதே!'' என்ற பரபரப்போடு, இலைவிரித்து, சோறு காய் கறிகளையெல்லாம் அழகுற வைத்துவிட்டு திருநாவுக்கரசு சுவாமிகளிடம் வந்து வணங்கி யெழுந்து, ''எங்கள் குடி முழுதும் உய்யுமாறு திருவமுது செய்ய எழுந்தருள வேண்டும்'' என்று வேண்டினார்கள்.

திருநாவுக்கரசர் எழுந்து, கை கால்களைக் கழுவி, வேறோர் ஆசனத்தில் அமர்ந்து, இலையில் திருவமுது அருந்தும் முன்னர் வெண் திருநீறு பூசிக்கொண்டார். பிறகு அவர் அப்பூதி யடிகளுக்கும் அவரது மனைவியாருக்கும் திருநீறு வழங்கினார். பிறகு அவர் புதல்வர்களுக்கும் திருநீறு கொடுக்கும்போது, ''உங்கள் மூத்தமகனையும் அழையுங்கள். விபூதி சாத்தவேண்டும்!'' என்றார். அதைக் கேட்டதும் அப்பூதியடிகள் நிகழ்ந்த செயல்கள் ஒன்றையும் சொல்லாமல், ''இப்போது இங்கு அவன் உதவ மாட்டான்!'' என்றார். அதைக் கேட்டதும் அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் திருவருளால் ஒருவிதத் தடுமாற்றம் உண்டாயிற்று. அவர் அப்பூதியடிகளைப் பார்த்து, ''இவ்வார்த்தையை என் உள்ளம் தாங்காது. அவன் என்ன செய்தான்? இதற்கொன்றுண்டு; நீர் உண்மையைச் சொல்லும்'' என்றார். உடனே அப்பூதியடிகள் உடல் நடுங்கிப் பயந்து, உண்மையைச் சொன்னால் பெரியவர் அமுது செய்வதற்கு இடையூறு நேரிட்டு அப்பாக்கியத்தை இழக்க நேரிடும்! ஆனால் மாதவர் கேட்கும் போது உண்மையை மறைக்காமல் சொல்லவும் வேண்டி யிருக்கிறதே! என்று சிந்தை நொந்து சுவாமிகளைப் பரிவோடு வணங்கித் தன் மைந்தனுக்கு நிகழ்ந்ததைக் கூறினார். அதைக் கேட்டதும் திருநாவுக்கரசு சுவாமிகள், ''நீர் செய்தது நன்றாய் இருக்கிறது. யார்தான் இப்படிச் செய்வார்?'' என்று சொல்லி எழுந்தார்; ஆவி நீங்கிய பிள்ளையின் சவத்தைப் பார்த்தார்; இறைவன் திருவருள் புரியும் வண்ணம் ''ஒன்று கொலாம்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடிப் பாம்பின் விஷத்தைப் போக்கலானார். தீய விஷம் நீங்கியது. மூத்த புதல்வனான திருநாவுக்கரசு துயில் நீங்கி விரைந்தெழுபவனைப்போல், உயிர் பெற்றெழுந்தான். திருநாவுக்கரசு சுவாமிகளின் சிவந்த

மலரடிகளை வணங்கினான். அவனுக்கு அவர் தூய வெண்ணீறு (விபூதி) அளித்தார். அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும் ''சுவாமிகள் அமுது செய்தருள்வதற்கு இவன் சிறிது இடையூறு செய்தான்!'' என்று மனம் வருந்தினார்கள்.

அவர்களின் வாட்டத்தை உணர்ந்து திருநாவுக்கரசர் அவர்களின் வீட்டுக்குள் நுழைந்தார். அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும் பெரு மகிழ்ச்சியோடு அவருக்குத் திருவமுது படைக்க முனைந்தார்கள். கோமயத்து நீரால் தரையைப் பொலி யுறுமெழுகி, வெண் சுண்ணத்தால் கோலமிட்டு, மங்கலத் தீபம் ஏற்றி, வாழை இலையை விரித்து, நன்னீரால் கழுவி, சம்பிரதாயப்படி வலது பக்கம் வைத்தார்கள். பிறகு கைகழுவி வாசனைத் தண்ணீர் கொடுத்தார்கள். திருநாவுக்கரசர் கைகழுவ, அப்பூதியடிகளையும், அவர் தம் பிள்ளைகளையும் ஒருங்கே நோக்கி, ''உம் புதல்வர்களோடு நீரும் என்னுடன் இருந்து அமுது உண்பீராக!'' என்றார். அதைக் கட்டளையாக ஏற்று விரும்பி அப்பூதியடிகள் தம் புதல்வர்களோடு திருநாவுக்கரசரின் அருகில் அமர்ந்து அமுதுண்ணத் தலைப்பட்டார். அப்பூதியடிகளின் மனைவியார், திருவமுது படைக்க, மற்றவர்களுடன் திருநாவுக்கரசர் அங்குத் திருவமுது செய்தருளினார். இவ்வாறு செய்த பிறகு அவர் அப்பூதியடிகளிடம் நட்புப் பெருகியவராய், அங்கு பலகாலம் மனங்கலந்த ஒருமையோடு தங்கியிருந்தார்.

பிறகு, திருநாவுக்கரசர், திருப்பழனம் என்னும் சிவத்தலத்துக்குச் சென்று, சிவபிரானை வணங்கிப் பாமாலை பாடினார். 'சொன்மாலை' என்ற திருப்பதிகத்தின் கடைக்காப்பில், அப்பூதியடிகளின் திருத்தொண்டின் பெருமையைச் சிறப்பித்துப் பாடினார். இத்தகைய பாக்கியத்தைப் பெற்ற நல்லவராகிய அப்பூதியடிகள், திருநாவுக்கரசரின் திருவடிகளே உறுதிப் பொருள் என்று கருதிக்கொண்டு எந்நாளும் எப்பொழுதும் அவற்றையே துதித்து, நாவுக்கரசரின் பெயராலேயே அறச் செயல்கள் பல புரிந்து சிலகாலம் வாழ்ந்தார். பின்னர், தில்லையம்பலத்துள் ஆடும் நடராஜப் பெருமானின் திருவடி நிழலை அடைந்து பெருநிலை பெற்றார்.

''அப்பூதியடிகளான அந்த வேதியரை வணங்கிப் போற்றி விட்டு அடுத்ததாக திருநீலநக்கரின் திருத்தொழிலைச் சொல்கிறேன்''

''ஒரு நம்பி அப்பூதியடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்.

31. திருநீலநக்க நாயனார்

காவிரி வள நாட்டில் சாத்தமங்கை என்னும் ஓர் அழகான ஊர் உண்டு. அது மங்கல மறையவர் நிறைந்திருக்கும் மூதூர். அங்கு குளங்களில் இளம் பெண்கள் நீராடும்போது அவர்களோடு அன்னங்களும் கலந்து விளையாடும். வேத பாடசாலைகளில் மறையோர் வேதம் பயிலும்போது நாகணவாய்ப் பறவைகளும் கலந்து சாமவேதம் பாடும். பிறவிக் கடலை நீந்துவதற்காக அந்தணர்கள் முத்தீ வளர்க்கும்போது மங்கையர் தங்கள் கற்புத்தீயையும் சேர்த்து வளர்ப்பார்கள். நான்மறைப் பொருளை விளக்கும் நல்லோர் நிறைந்த அந்த ஊரில், அந்தணர் குலத்தில் திருநீலநக்கர் என்னும் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஆலம் உண்ட சிவபெருமானுக்கு அவர் அன்புள்ள தொண்டர். ''சிவபெருமானையும், சிவனடியார்களையும் விரும்பி வணங்கிப் பாத அர்ச்சனை புரிவதே வேதத்தின் உட்பொருள் ஆகும்!'' என்ற கொள்கையுள்ளவர் திருநீலநக்கர். அக் கொள்கைப்படியே அவர் பெருவிருப்போடு நாள்தோறும் தவறாமல் சிவாகம விதிப்படி சிவபெருமானைப் பூசித்து, சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல் முதலான திருப்பணிகளையெல்லாம் செய்து வந்தார்.

ஒரு நாள் திருவாதிரையன்று, திருநீலநக்கர் சிவபூஜைகளை முடித்துக் கொண்டு, அயவந்தி என்னும் அவ்வூர்க் கோவிலிலுள்ள சிவபெருமானையும் அர்ச்சிக்க விரும்பித் தம் வீட்டிலிருந்து கிளம்பினார். வழிபாட்டுக்குரிய பொருள்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அவர் தம் மனைவியாருடன் சென்று ஒருமையுணர்வோடு ஆலயத்தை அடைந்தார். அங்கு அவர் ஈசுவரனின் திருவடிகளை வணங்கிப் பூஜை செய்யத் தொடங்கினார். அருகில் அவருடைய மனைவி நின்று அவருக்கு வேண்டுவனவெல்லாம் எடுத்துக் கொடுக்க அவர் உணர்ச்சி மிகுதியோடு அர்ச்சனைகள் செய்தார். பூஜை முடிந்தது. ஆயினும்

★ உற்றான் அவன்தவம்; தீயினின் ருனலன்; ஊண்புனலா
அற்றான் அவன்நுகர் வுந் திருநாவுக்கரசெனுமோர்
சொற்றான் எழுதியும் கூறியுமே யென்றுந் துன்பில்பதம்
பெற்றான் ஒரு நம்பி அப்பூதி யென்னும் பெருந்தகையே.

— நால்வர் நான்மணி மாலை.



அன்பினால் அவர் மனம் நிறையவில்லை. அதனால் சிவபெருமான் வீற்றிருக்கும் உட்பிரகாரத்தை வலம் வந்து பணிந்து எழுந்து இறைவன் திருமுன்பு இருந்து கொண்டு, சிவபெருமானைத் தெளிவுற நோக்கியபடி மெய்மறந்து திருவைந்தெழுத்தைச் செபித்துக் கொண்டேயிருந்தார்.

அப்பொழுது சுதைச் சிலந்தி ஒன்று, தான் நின்ற நிலையினின்றும் வழுவிச் சிவலிங்கத் திருமேனியின்மீது விழுந்தது. அதை அருகில் நின்ற நீலநக்கரின் மனைவியார் கண்டார். உடனே அந்த அம்மையார் அச்சத்தோடு விரைந்து

சென்று ஒரு பச்சிளங்குழந்தையின் மீது சிலந்தி விழுந்தால் அதை விஷம் சிந்தாதவாறு நீக்குவதற்காக ஒரு தாய் எப்படித் தன் வாயால் ஊதி உமிழ்வாளோ அதுபோலவே சிவலிங்கத் திருமேனியின்மீது விழுந்திருக்கும் சிலந்தியை அன்போடு அந்த அம்மையாரும் தன் வாயால் ஊதினார். உமிழ்ந்தார். அப்போது அவர் வாயிலிருந்த உமிழ்நீரும் சிவலிங்கத்தின்மீது பட்டது. அதைக் கண்ட திருநீலநக்கர் மனம் பொறாமல், அப்படியே தம் இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டு, ''அறிவற்றவளே! இச் செயலை நீ ஏன் செய்தாய்?'' என்று கேட்டார். அதற்கு மனைவியார், ''சுதைச் சிலந்தி ஒன்று சிவலிங்கத்தின் மேல் விழுந்ததால் அதை நான் ஊதிப் போக்கினேன்'' என்று கூறினார்.

சிவலிங்கத்தின் மீதுள்ள அன்பினாலேயே தம் மனைவி அப்படிச் செய்ததாக திருநீல நக்கர் தம் மனதில் கொள்ள வில்லை. தாம் செய்த பூஜையில் இவ்வாறு தம் மனைவியாலேயே அநுசிதம் நிகழ்ந்து விட்டதாகத்தான் அவர் கருதினார். அதனால் அவர் தம் மனைவியை நீக்கிவிடவும் நினைத்தார். தம் மனைவியைப் பார்த்து, ''இறைவன் திருமேனியின்மேல் விழுந்த சிலந்தியை நீ வேறுவகையில் நீக்கியிருக்கலாம்! அவ்வாறு நீ செய்யத் தவறி உன் உமிழ்நீர் எச்சில் படும்படி உன் வாயால் அனுசிதம் புரிந்த உன்னை இங்கே இந்தக் கணம் முதல் நான் துறந்தேன்! என்னை விட்டுப்போ!'' என்று சினந்து கூறினார்.

அப்போது சூரியன் மேலைத் திசையில் மறைந்தான். அந்தி இருட்டுப் பொழுதும் வந்தது. நாயனார் கட்டளைப்படி திருநீலநக்கரின் மனைவியார் ஒரு வழியாக நீங்கிச் சென்றார். நீலநக்க நாயனார் பழுது தீரும்படி தமது பூஜையை முடித்து விட்டுத் தம் வீட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார். ஆனால் அவருடைய மனைவியாரோ, அஞ்சிய உள்ளத்தோடு தம் வீட்டிற்கு வரமுடியாமல் திருக்கோயிலிலேயே அன்றிரவு முழுதும் தங்கியிருக்கலானார்.

அன்றிரவு, வேதியர் திருநீலநக்கர் தம் வீட்டில் பஞ்சின் மெல்லணையில் படுத்துத் தூங்கும்போது, அடியவர்க்கு எளியவராகிய அயவந்திநாதர், திருநீல நக்கனாரின் கனவிலே விரிசடையோடு தோன்றி நின்று, தமது திருமேனியைக் காட்டி ''உன் மனைவி உள்ளன்போடு எம்மை ஊதி உமிழ்ந்த இடம் தவிரப் பிற இடங்களிலெல்லாம் சிலந்தியின் கொப்புளங்கள் கிளம்பியுள்ளன; அவற்றைப் பார்!'' என்று கூறியருளினார். நாயனார் தாம் கண்ட பெருங் கனவினை நனவாகவே கருதி அச்சத்தோடு அஞ்சலி குவித்து உடனே கண்விழித்து எழுந்தார். எழுந்ததும் இறைவனைத் தொழுதார்; ஆடினார்;

பாடினார்; துதித்தார். சிவபெருமானின் பெருங்கருணைத் திறத்தைப் போற்றி நின்று, கண்ணீர்சிந்தி அழுதார். இராக்காலம் கழிந்து பொழுது புலர்ந்தவுடன் அவர் கோயிலுக்கு விரைந்து சென்று இறைவனைப் பணிந்து வீழ்ந்து கும்பிட்டெழுந்து தமது மனைவியாரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு தம் இல்லத்திற்குத் திரும்பி வந்து சேர்ந்தார். பிறகு அவர் முன்னைவிடப் பெருமகிழ்ச்சியோடு, சிவபெருமானுக்கு எல்லையில்லாத பூஜைகள் செய்து சிவனடியார்களுக்கு முன்போலவே, வேண்டுவனவற்றை எல்லாம் விருப்பத்தோடு அளித்து, இல்லறத்தில் இனிதமர்ந்து வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு திருநீலநக்க நாயனார் திருத்தொண்டு புரிந்து இனிமையாக வாழ்ந்து வரும் காலத்தில், சீர்காழியில் பிறந்த பிள்ளையான திருஞான சம்பந்தரின் பெருமைகளை சொல்லிப் பலவாறும் உலகத்தார் போற்றிடக் கேட்டார். ஞானப்பால் உண்ட அப்பிள்ளையாரைக் கண்டு வணங்க நீலநக்கர் பேராவல் கொண்டார். அச்சமயத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும், அவர் மனைவியான மதங்க சூளாமணியும் உடன் வர, சிவனடியார் பெருங்கூட்டத்துடன், திருஞானசம்பந்தர் பல சிவத்தலங்களையும் தரிசித்துத் தொழுது கொண்டு சாத்தமங்கை ஊர் அருகில் வந்தார். அதை அறிந்த நீலநக்கனார் பெரிதும் மகிழ்ந்தார். உடனே, அவர் மலர்மாலைகளும் கொடிகளும் கட்டி தோரணங்களும் நாட்டி, நீண்ட தூரத்திற்கு நடைப்பந்தர் வேய்ந்தார். பிறகு அவர் உற்றார் உறவினரோடு கூட்டமாகச் சென்று, திருஞான சம்பந்தரைத் திருக்கூட்டத்துடன் சிறப்பாக எதிர்கொண்டு அதிலேயே ஆடியும் மனம் ஒன்றிப் பாடியும் பலவாறாகவும் தொழுதெழுந்து வரவேற்கத் தமது திருமனைக்கு அவர்களை யெல்லாம் அழைத்து வந்தார். திருஞான சம்பந்தரின் பெருமைக்கேற்பச் சிவனடியார்கள் பெரும் வெள்ளமாகத் திரண்டு வந்தார்கள். அவ்வடியார்களுக்கும் திருஞான சம்பந்தருக்கும் நீலநக்கனார் பேருவகை பொங்கத் தம் இல்லத்தில் திருவமுது செய்வித்தார். பகல் சூரியன் மேற்கடலில் போய் மறைந்து குமுதத் தடாகத்தில் குளிர் நிலா பொங்கி எழுந்தது.

அன்றிரவும் திருஞான சம்பந்தர், அவர் இல்லத்தில் தங்கி விருந்துண்டார். எல்லோரும் அமுதுண்ட பின்னர், திருஞான சம்பந்தர் அழைத்திட திருநீல நக்கனார் விரைந்து வந்து வணங்கி நின்றார். அவரை நோக்கி ஞானசம்பந்தர், ''நம் திருநீலகண்ட பெரும்பாணர் இன்று இரவு இங்கு தங்குவதற்கு ஓர் இடம் கொடுத்தருளும்!'' என்றார். ஒருவேளை நீலநக்கர் அந்தணராதலின் திருநீலகண்ட

யாழ்ப்பாணரிடம் தீண்டாமை பாராட்டுவாரோ என்று ஞானசம்பந்தர் நினைத்தார் போலும்! ஆனால் திருநீல நக்கனாரோ பெருமகிழ்வெய்து தம் நடுமனையில் வேதிகையின் பூஜை மேடையின் பக்கத்தில் யாழ்ப்பாணருக்கு இடமளித்தார். அங்கே ஓமகுண்டத்திலுள்ள நித்தியாக்கினி முன்னைவிட அதிகமாக எழுந்து ஓங்கி நாவிட்டுச் சுழன்று அதிபிரகாசமாய் எரியலாயிற்று. திருநீலநக்க நாயனார் மகிழ்வுற்றார். பெரும்பாணர் தம் துணைவியான விறலியாரோடு அங்கு பள்ளி கொண்டார்.

திருஞானசம்பந்தர் அன்றிரவு திருநீல நக்கனாரின் வீட்டில் படுத்துறங்கி மறுநாள் எழுந்ததும் அங்கிருந்து புறப்பட்டு அயவந்தி நாதரை வணங்கிப் போற்றும்போது திருநீல நக்கனாரின் பெருமையையும் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினார். பிறைசூடிப் பெருமானின் திருவடிகளை அவர் போற்றிப் புதிய செந்தமிழில் பழைய மறையை பொழிந்து விட்டு திருநீலநக்க நாயனாருக்கும் அதிக நட்பினை நல்கிவிட்டு மேலும் பல சிவஸ்தலங்களைத் தரிசிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்றார். திருஞான சம்பந்தரைப் பிரிந்திருக்க திருநீலநக்க நாயனாருக்கு மனம் இல்லை. உள்ளன்பும் நட்பும் அவரை உந்தித் தள்ளின. ஆயினும் சுவாமிகளின் கட்டளையை மீறமுடியாமல் சாத்த மங்கைவூரிலேயே திருநீலநக்கர் தங்கியிருந்தார். அவரது மனம் மட்டும் திருஞான சம்பந்த சுவாமிகளிடமே போய் லயித்திருந்தது. சில நாள் கழித்து இடையிடையே நாயனார் நட்பின் பெருக்கோடு திருஞானசம்பந்தர் போகும் திருத்தலங்களுக்குத் தாமும் போய் அவரைக் கண்டு தொழுது அவரோடு பழகிவிட்டுத் திரும்பி வருவார்.

பின்னர், திருநல்லூர்ப் பெருமணத்தில் நிகழ்ந்த திருஞான சம்பந்தரின் திருக்கல்யாணத்தில் திருமணத் திறத்தை தாமே செய்வித்து திருநீலநக்க நாயனார் சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்து பேரின்ப நிலை பெற்றார். அம்மறையவரின் தாள் வணங்கி, அடுத்ததாக இடபக்கொடி ஏந்தும் சிவபெருமானிடம் ஒருமை அன்பு செலுத்திய நமிநந்தி அடிகளின் அருந்தொண்டை உரைப்போம்.

''ஒலிபுனல் சூழ்சாத்தமங்கை நீலநக்கர்க்கு அடியேன்''

— சுந்தரர்.

32. நமிநந்தியடிகள்

வையம் காக்கும் செங்கோல் வேந்தர்களான சோழர்களின் பொன்னி வள நாட்டில் ★ ஏமப்பேறூர், என்னும் புகழ் மிகுந்த ஊர் ஒன்றுள்ளது.



அவ்வூர், விசாலமான வயல்களையும் செழுமையான நீர்த்தடங்களையும் எந்தப் பக்கங்களிலும் கொண்டிருக்கும்.

அழகான வீதிகளில் தோரணங்களோடு மாலைகள் குலுங்கிச் சிரிக்கும். மாடமாளிகைகளில் கடல் நீர் குடிக்கும் கருமேகங்கள் தவழ்ந்து சிரிக்கும். அடர்த்தியான சோலைகளில் குளுமையான இருள் குலாவிச் சிரிக்கும். அருமையான கமுக மரங்களில் கருவண்டுகள் பாடிச் சிரிக்கும். விடியற் காலையில் வேத ஒலிகள் விரிந்து சிரிக்கும். செழுமையான வயல்களில் செங்கழுநீர்ப் பூக்கள் சிவந்து சிரிக்கும்!

வயல்களில் விளைந்த வெண்நெல் பரப்பின்மீது, செந்தாமரை மலர்கள் இடையிடையே பிரகாசமாக எழுந்து

★ ஏமப்பேறூர் : தற்போது திருமப்பற்று என்றும் திருநெய்ப்பேறு என்றும் வழங்குகிறது. இது திருவாரூருக்குத் தென்திசையில் திருத்துறைப் பூண்டிக்குச் செல்லும் வழியில் சுமார் ஆறு மைல் தொலைவில் அமைந்துள்ளது.

தோன்றும். அது வெண்பூணூல் வேதியர்கள் தங்கள் வெளித் திண்ணையில், வெண்மணற் பரப்பின்மீது இடையிடையே வளர்க்கும் செந்தீயைப் போலத் தோற்றமளிக்கும்!

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஏமப்பேறூரில் திருநீற்று நெறியில் வாழும் அந்தணர் குலத்தில், நமி நந்தியடிகள் என்னும் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமான் திருவடிகளையே வணங்கும் பேறு பெற்ற தவசீலர். வாய்மை மறைநூல் சீலத்தால் சிவந்த வேள்வித் தீயைப் போன்றவர். திருநீற்றின் சேர்க்கையே மெய்ப்பொருள் என்று அறியும் துணிவுடையவர். இரவும் பகலும் நடுயாமத்திலுங்கூட சிவபெருமானின் திருவடிகளையே எண்ணி ஓயாமல் இன்பம் அடைபவர். அவர் தினந்தோறும் தமது ஊரிலிருந்து திருவாரூருக்குச் சென்று, இறைவனை வணங்கி வருவார்.

ஒருநாள் அவர், புற்றிடங்கொண்ட புனிதரைப் பணிந்துவிட்டு அருகிலுள்ள அறநெறி என்னும் கோயிலை அடைந்து இறைவனை வணங்கிப் பெருங்காதலோடு திருத்தொண்டுகள் செய்தார். அங்கே எண்ணிலா விளக்குகள் ஏற்றித் தீபத்தொண்டு செய்ய வேண்டும் என்று அவர் விருப்பங் கொண்டார். அப்போது பகற்பொழுது இறங்கி அந்திமாலை நேரமாகிவிட்டதால், விளக்கு ஏற்றும் நெய்க்காக அதிகதூரம் சென்றால் பொழுது இருட்டிவிடும் என்று அவர் நினைத்தார். அதனால் அருகேயிருந்த ஒரு வீட்டுக்குள்ளே சென்று, ''திருவிளக்கேற்ற நெய் வேண்டும்!'' என்று கேட்டார்.

அந்த வீட்டில் இருந்தவர்கள் சமணர்கள். சைவ நெறிக்கு விரோதிகள். அதனால் நமிநந்தியடிகளை நோக்கி ஏளனமாக நகைத்து, ''கையிலே கனலை ஏந்திய உங்கள் பெருமானுக்கு விளக்கு எதற்கு? இங்கு நெய்யில்லை! நீர் விளக்கெரிக்க வேண்டுமானால் தண்ணீரையே முகந்து எரித்தல் செய்யும்!'' என்று கூறி விட்டார்கள்.

அதைக் கேட்ட நாயனார் பெரிதும் மனம் வருந்தினார். அவர் மனவேதனையோடு சிவபெருமானின் திருக்கோயிலுக்கே திரும்பி வந்து இறைவன் திருமுன்பு மனமுருகிக் கீழே விழுந்து வணங்கினார்.

அப்பொழுது ஆகாயத்திலே ஒரு வாக்கு எழுந்தது. ''நமிநந்தியே! உன் மனக்கவலையை ஒழித்துவிடுக. இங்கு அருகிலுள்ள குளத்து நீரையே முகந்து கொண்டு வந்து ஊற்றி இடையறாது திருவிளக்கு ஏற்றுக!'' என்று அந்த வானொலி கூறியது.

அதைக் கேட்டதும் நமிநந்தியடிகள் மனமகிழ்ந்து திகைத்தார். பிறகு சிவபெருமானின் திருவருளை வியந்தபடியே எழுந்து சென்று, அருகிலிருந்த திருக்குளத்தில் இறங்கி இறைவனின் திருநாமத்தை உச்சரித்து, குளத்து நீரை முகந்து கொண்டு, அறநெறியப்பரின் திருக்கோயிலுக்கு திரும்பி வந்து, அகலிலே முறுக்கியிடப்பட்ட திரியின்மேல் அந்நீரை வார்த்து விளக்கேற்றினார். அது சுடர் விட்டு மேல் நோக்கி எரிந்தது. அதைக்கண்ட நமிநந்தியடிகள் அறநெறியப்பரின் திருக்கோயில் முழுவதும் குளத்து நீராலேயே திருவிளக்கு ஏற்றினார்! குற்றமே நினைந்து குறைகூறிய சமணர்கள் அதை அறிந்து வெட்கப்படும்படியும், இறைவனின் திருவருளால் நாடெல்லாம் அறிந்து அதிசயித்துப் போற்றும்படியும் தண்ணீரையே நெய்யாக வார்த்து ஆலயத்து விளக்குகள் அத்தனையையும் நமிநந்தியடிகள் ஏற்றிவைத்தார். பொழுதுவிடியும் வரையிலும் திருவிளக்குகள் நின்று எரிவதற்காக, குறையும் அகல்களுக்கெல்லாம் நீரையே நெய்யாக வார்த்தார்.

இவ்வாறு தண்ணீராலேயே தீபத்தொண்டு புரியத் தொடங்கிய அவர், தமது வீட்டில் நடத்தும் பூஜை தவறாமல் இருக்கும் பொருட்டு, அந்த இரவிலேயே திருவாரூரிலிருந்து புறப்பட்டுத் தமது ஊருக்குச் சென்று தினமும் செய்வது போலச் சிவபூஜையை செய்து முடித்துத் திருவமுது செய்து, துயில்வார். மறுபடியும் விடியற்காலையில் எழுந்து தமது பூஜையை முடித்துக்கொண்டு திருவாரூருக்கு மீண்டும் வருவார். புற்றிடப் பெருமானை வணங்கிச் சென்று அறநெறியப்பரின் திருக்கோயிலை வலம் வந்து கும்பிட்டு அதன் உள்ளும் புறமும் பகற்காலம் முழுமையும் திருத்தொண்டு செய்வார். மாலைப் பொழுது சாய்ந்ததும் ஆலயத்தில் எங்கும் திருவிளக்குகளை தண்ணீராலேயே ஏற்றி வைத்துச் சிவபிரானின் அடிபணிந்து செல்வார். இதுபோல நாட்கள் பல கடந்தன.

நமிநந்தியடிகள் இவ்வாறு தொண்டு புரிந்து வருங்காலத்தில் தண்டியடிகள் என்ற ஒரு பெரியாரால் சமணர்களிடையில் கலகம் விளைந்து அவர்கள் அழிந்து ஒழியவே, திருவாரூரில் சிவனடியார்களின் பெருமை பெருகி திருவாரூர் முழுதும் சிவமயமாயிற்று! நமிநந்தியடிகளின் திருத்தொண்டைக் கண்டு சோழமன்னன் மகிழ்ந்து புற்றிடங் கொண்ட புனிதருக்கு தினப்படி நிவேதனப் பொருள்களுக்கு வேண்டிய நிபந்தங்கள் பலவற்றை அமைத்தான். அவற்றைச் சைவாகம விதிப்படி நடத்த, நமிநந்தியடிகளையே தலைவராக நியமித்தான். திருவாரூர் வீதி விடங்கப் பெருமானின்

திருவிளையாடல் விழாக்களையும் சிறப்பான பங்குனி உத்திரத் திருவிழாவையும் நடத்த வேண்டுமென நமிநந்தியடிகள் விரும்பி, அப்பெருமானின் திருவடிகளை நோக்கி முறையிட்டார். அவருடைய விண்ணப்பப்படியே தியாகேசப் பெருமானின் பங்குனி உத்திர விழாக்கள் சிறப்பாக நடந்தன.

விழாவில் ஒருநாள், தியாகேசரின் திருவுருவம் ★ திருமணலிக்கு எழுந்தருளியது. அந்த விழாவில் எல்லாக் குலத்தினரும் வேற்றுமை மனப்பான்மையின்றி, ஒருங்கு சேர்ந்து ஒன்றாக நின்று சுவாமி தரிசனம் செய்து வழிபட்டார்கள். அவர்களோடு அந்தணக் குலத்தினரான நமிநந்தியடிகளும் சென்று ஆண்டவன் திருவோலக்கத்தைக் கண்டு ஆனந்தமடைந்தார். பொழுது போயிற்று. சுவாமி ஊர்வலம் திருமணலியிலிருந்து திருவாரூருக்குத் திரும்பியது. நமிநந்தியடிகள் சிவபெருமானை வணங்கிவிட்டுத் தம்மூருக்குச் சென்றார். சென்றவுடன் தம் வீட்டு வாசல் வழியாக வீட்டுக்குள் நுழையாமல், நேரே புறக்கடைக்குச் சென்றார். அந்த இரவின் கனத்த இருளில் புறக்கடையிலே அவர் படுத்து உறங்கலானார்.

அவர் மனைவியார் வந்து நாயனாரைப் பார்த்து, ''சிவபூஜைகள் செய்து அக்கினி காரியம் செய்து முடித்து அமுதுண்டு உள்ளேயே படுத்துத் தூங்குங்கள்!'' என்றார். அதற்கு நமிநந்தியடிகள், ''இன்று தியாகேசர் திருமணலிக்கு எழுந்தருளி யிருந்தார். சுவாமி தரிசனத்திற்காக எல்லா ஜாதியாருடனும் நானும் போனேன். தீட்டுப் பட்டு விட்டது. ஆகையால் பிராயச்சித்தஞ் செய்து நீராடி விட்டுத்தான், நம் வீட்டுக்குள் நுழைந்து பூஜை செய்யவேண்டும்! ஆகவே தண்ணீர் முதலானவற்றை இங்கே கொண்டுவா!'' என்றார். அவற்றைக் கொண்டு வருவதற்காக காதல் மனைவியாரும் வீட்டிற்குள் சென்றார்.

மனைவியார் திரும்பி வருவதற்குள் சிவபிரானின் அருளாலோ அல்லது நடந்த களைப்பாலோ நமிநந்தியடிகள் சட்டெனத் தூங்கிவிட்டார். அவரது கனவிலே சிவபெருமான் தோன்றி, ''ஞானவேதியனே! திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லோருமே நமது கணங்கள்! அத்தன்மை நீ காண்பாய்!'' என்று கூறி மறைந்தார். உடனே நாயனார் துயில் நீங்கி எழுந்தார். உண்மையை உணர்ந்தார். ''ஆ! இரவில்

★ திருமணலி : இந்த ஊர் திருவாரூருக்குத் தென்மேற்கில் சுமார் நான்கு மைலில் உள்ளது.

வழக்கம்போல் சிவபூஜை செய்தேனில்லையே! நான் நினைத்தது குற்றம்!'' என்று அஞ்சி எழுந்தபடியே, சிவ வழிபாடு செய்தார். நிகழ்ந்ததை தன் மனைவியாரிடமும் சொன்னார்.

பிறகு பொழுது விடிந்ததும் அவர் திருவாரூருக்கு விரைந்து சென்றார். திருவாரூரில் பிறந்து வாழும் எல்லோருமே சிவ வடிவமாகவே மாறி பிரகாசமான திருமேனிகளோடு சிவகணங்களாகத் தோன்றக் கண்டார். கண்டதும் அவர் தம் தலைமீது கை கூப்பிய வண்ணம் பயபக்தியோடு தரையில் விழுந்து வணங்கிப் பெருமகிழ்ச்சி யுற்றார். உடனே சிவகணங்கள் போலக் காட்சியளித்தவர்கள் எல்லாம் முன் போலவே பழைய வடிவத்தைப் பெற்றனர்.

நமிநந்தியடிகள் இறைவனை வணங்கி, ''அடியேன் செய்த பெரும் பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று வேண்டினார். பிறகு சிவபெருமானின் அருளால் அவர் தம் ஊரைவிட்டு திருவாரூரிலேயே குடி புகுந்தார். அங்கு நெடுங்காலம் முன்போலத் தமது திருத்தொண்டுகளைச் செய்து வரலானார். இவர், சிவனடியார்களுக்கு வேண்டியவற்றைத் தனித் தனியாகச் செய்து வந்ததால், ''தொண்டர்களுக்கு ஆணிப்பொன்'' என்று இவரை அப்பர் சுவாமிகள் தேவாரப் பதிகத்தில் புகழ்ந்து பாடும் பெரும் புகழைப் பெற்றார்.

நமிநந்தியடிகள் முறைப்படித் திருத்தொண்டுகள் செய்து, கால முடிவில், திருவாரூர் தியாகேசப் பெருமானின் திருவடி நிழலில் வளரும் செம்பொற் சோதியில் கலந்தார்.

''அருநம்பி நமிநந்தியடியார்க்கும் அடியேன்''

– சுந்தரார்.



33. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

பிறை சூடிய சிவ பெருமானின் சேவடியை வணங்கிச் சைவச் சமயத் துறையில் சோழர்களால் வழி வழியாக ஆளப்பட்டு வருவது சோழநாடு. காவிரி நதி பாய்ந்து வளம் பெருகும் அச் சோழ நாட்டை அழகு செய்வது திருக்கழுமலம் என்ற சீர்காழியாகும். அது ஊழிக் காலத்திலும் தோணிபோல் மிதக்கும் பெருமை வாய்ந்தது.



கடலில் ஒரு சூரியன் மலர்வது போல் அவ்வூரின் குளங்களில் பல சூரியர்களைப் போல் பூக்கள் மலரும்.

அங்கு வேதியர்கள் ஓமங்களிலிருந்து எழும் புகைப் படலமானது இரவைப் போலவும் அங்குள்ளோர் அணியும் திருநீற்றின் ஒளி நண்பகலைப் போலவும் விளங்கும். ஆகையால் இயற்கையான இரவும் பகலும் அவ்வூரில் வேண்டாதனவாகத் தோன்றும். செந்தாமரை மலர்கள்மீது மாமரத்தின் கனிச் சாறு இலை நுனி வழியாக ஒழுகிவிழும். அது நெருப்பின் மீது நெய் வார்ப்பது போல் தோன்றி அவ்வூரில் வேதியர்களுக்கு இணையாக மரங்களும் வேள்வித் தீயில் ஆகுதி செய்வது போல் தோற்றமளிக்கும். வீதிகளில் வெண்சாந்து பூசிய மாளிகைகள் வானத்துக் கருமேகங்களைத் தொடுவது போல் எழும்பி நிற்கும். மாளிகை மாடங்களில் வசிக்கும் குலப் பெண்கள் அருந்ததிபோல் அழகொளியும் கள்ளின் ஒளியும் வீசுவார்கள். காதுகளிலே பொன் குண்டலங்கள் அசைய அப்பெண்கள் தங்கள் முந்தானைகளைப் பின்னே தள்ளி, ஓமவேதிகையின் முழுக்கில் படியும்படி, வெண் சுண்ணத்தால் அழகாகக் கோலமிடுவார்கள். வேதியச் சிறுவர்கள் காற்சதங்கைகள் கிண்கிணியென ஒலிக்க வேள்விச் சடங்குகளை விளையாட்டாக அமையச் செய்து, தெருக்களில் சிறுதேர்

உருட்டிப் பெரும் புழுதி எழுப்புவார்கள். நீர் மடைகள் எங்கும் முத்து மணிக்குவியல்களும், வயலெங்கும் மீன் வெள்ளமும், அதன் பக்கமெங்கும் மலர்க் குவியல்களும், நகர்ப்புறம் எங்கும் யாகங்களின் பொலிவும் வேதம் ஓதுவிக்கும் பள்ளிகள் எங்கும் கலைகள் பயிலும் ஒலியும், சோலைகளெங்கும் வண்டுகளின் ரீங்காரமும் இடையிடங்கள் எங்கும் மறை முனிவர்களின் கூட்டமும் மதிலெங்கும் மேகக் கூட்டங்களும் நிறைந்திருக்கும்.

இந்நகருக்கு பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பைநகர், காழி, கொச்சைவயம், திருக்கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயர்களும் உண்டு.

இத்தகைய வளங்கள் நிறைந்த சீர்காழிப்பதியில், அந்தணர் குலத்தில், கவுணியர் கோத்திரத்தில் சிவபாத விருதயர் என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியாரின் பெயர் பகவதி. அந்த மனைவியார் அழகு மிகுந்தவர். சிறந்த வேதியர் குடியிலே பிறந்தவர். கற்பில் சிறந்தவர்; கணவனாரின் கருத்திற்கு இசைய நடந்துகொள்பவர். அவர்கள் இருவரும் சைவ நெறியில் வழி வழி வந்த கேண்மையினர். அதனால் சிவபெருமானின் திருவடிகளைத் தவிர வேறு அறியாதவர்களாய் சைவ நெறியில் அன்பு பாவித்து தம்பதி இருவரும் ஒருமனதாய் மனமொத்து இல்லற வாழ்க்கையை இனிமையாக நடத்தி வந்தார்கள்.

அக்காலத்தில் சமணர்கள் பௌத்தர்களின் சமய நெறிகள் மிகுந்து பெருகின. அதனால் சைவத்தின் வேத நெறி குன்றியது. சிவனடியார்களிடம் விபூதி சாதன விளக்கம் போற்றுதலின்றி நலிந்தது. அந்த நிலையைக் கண்டு சிவபாத விருதயர் மிகவும் மனம் வருந்தினார். அதனால் அவர் சிவபெருமானின் திருவடிகளை நினைத்துப் புறச் சமயங்களின் தீமைகளைப் போக்கித் திருநீற்றின் ஆக்கத்தை மிகுதிப்படுத்தும் ஒரு புதல்வனைப் பெறும் பொருட்டுத் தவஞ் செய்தார். சீர்காழியில் பெரிய நாச்சியாரான உமாதேவியே வீற்றிருக்கும் திருத்தோணியப்பரின் திருவடிகள் கீழ் அவர் இருந்து வழிபட்டு வந்தார். அதன் பயனாக அவரது மனைவியாரின் மணிவயிற்றில் கரு உருவாயிற்று. சிவபாத விருதயர் அதை அறிந்ததும் சிவபெருமானின் திருவருளைத் துதித்தார். மனைவி கருவுற்ற பத்து மாதங்களில் வேத விதிப்படி செய்ய வேண்டிய சடங்குகளையெல்லாம் சுற்றத்தாரோடு அவர் சிறப்பாகச் செய்து மிகவும் மகிழ்ந்திருந்தார். பத்தாவது மாத முடிவில், சூரியன் முதலான கிரகங்களெல்லாம் உச்ச நிலையிலே வலிமை பெற்று நிற்கும். நல்ல ஓரை யெழ, சிவபெருமானுக்கு உகந்த திருவாதிரைத்

திருநாளில் தென்னாடு சிறக்கவும், செந்தமிழ் ஆக்கம் பெறவும் செழுமை பொருந்திய தமிழ் மொழி பிறமொழிகளை வெல்லவும், இசைத்தமிழ் நிலைபெறவும், சைவ நெறி தழைத்தோங்கவும், எதிர்காலம் நலம் பெறவும், தோணியப்பர் அருளினால் சிவபாத விருதயருக்கு ஒரு பிள்ளையார் பிறந்தார்.


அப்பொழுது சீர்காழியிலுள்ளவர்கள் யாவரும் சிவனருளெனச் சித்தம் மகிழ்ந்தனர். எங்கும் வேத ஒலி எழுந்தது. மரங்களும் கொடிகளும் செழிப்படைந்து, தத்தம் பயன்களைத் தந்தன. வானம் மாசற்று விளங்கியது. பறவைகள் மங்கல ஓசைகளை ஒலித்தன.

இவ்விதமாக சீர்காழி முழுவதும் மகிழ்ச்சியிலாழ்ந்திருக்க சிவபாத விருதயர், தமது திருமனை முன்றிலை அழகுபடுத்தி, மேலே பூசப்படும் நெய்யாட்டு விழாச் செய்து மகிழ்ந்தார். பிறகு ஜாதகர்மம் முதலிய பல சடங்குகளைச் செய்தார். வேதியர் குலமாதர்கள், மனமகிழ்ச்சியுடன் தீபங்களையேற்றிப் பொற்சுண்ணங்களையும், மலர்த் தாதுகளையும் தூவி, எங்கும் பிள்ளையார் பிறந்ததை வாழ்த்தினர். முளைப்பாலிகைகளை வேதிகைகள் தோறும் வைத்தனர். புண்ணியப் புது நீரை, பொற்குடங்களில் நிறைத்தனர்; சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தனர். நறுமண மலர்களை மாலைகளாகத் தொடுத்தனர். வேப்பிலைகளை இடையிடையே வைத்துத் தொடுத்துத் தொங்க விட்டனர்.

வெண் கடுகுப் புகையாலும், அகிற் புகையாலும் ஆகுதிப் புகையாலும் தெய்வ மணங்கமழச் செய்தனர். இவ்விதமாகப் பற்பல மங்கலச் செயல்களை வேதங்களிலும் கற்பசூத்திரம் முதலிய நூல்களிலும் கூறிய விதிப்படிப் பிள்ளையார் பிறந்த நாள் முதலாகப் பத்து நாட்களும் செய்தார்கள்.

பிள்ளையார் வளர்பிறையென வளர்ந்தார்; செங்கீரை யாடினார், சப்பாணி கொட்டினார்; தவழ்ந்தார்; தம்மை ''வா வா'' எனக் கூப்பிடுவோரைத் தம் கையால் தடவி முகங்களை மலர்வித்தும், காலால் உதைத்தும் உடனே மனமுருகிக் கரைந்தலையக் கட்டித் தழுவியும் பெருமகிழ்ச்சி தந்தார்.

ஓராண்டு ஆவதற்கு முன்னர் கால்களில் சதங்கை மணிகள் ஒலியிடத் தாதியர் தம் கைப்பற்றி தளர்நடை பயின்றார். ஓராண்டு வயது ஆனதும் விளையாடத் தொடங்கினார். சிறுமணித் தேர் உருட்டினார்; சிறு மணலால் வீடு கட்டி விளையாடும் சிறுமிகளிடத்து நடந்தும் ஓடியும் சென்று, அம்மணல் வீடுகளை காலால் அழித்தும்



சீர்காழியில் உள்ள கோவிலும் திருக்குளமும்

விளையாடினார்; அவருக்கு மூன்று வயது நிரம்பியது. அந்நிலையில் அவருக்குப் பண்டைய உணர்வு, சிற்சில சமயங்களில் தோன்றலாயிற்று. தாம், சிவபிரானை விட்டுப் பிரிந்த உணர்வு, தமக்குள் எழும்பொழுதெல்லாம் அவர் வெருக்கொண்டது போல் அழுவார்.

ஒருநாள், அவருடைய தந்தையான சிவபாத விருதயர் வழக்கம் போல் நீராடச் சென்றார். பிள்ளையார் அழுது கொண்டே அவரைப் பின்தொடர்ந்து வீட்டின் வாசலில் சென்றார். இதைச் சிவபாத விருதயர் திரும்பிப் பார்த்துக் கோபம் கொள்வார் போல பிள்ளையாரை விலக்கினார். பிள்ளையாரோ வீட்டுக்குள் திரும்பவில்லை. ஒலி வீசும் கிண்கிணி அணிந்த கால்களைக் கொட்டிக் கொண்டு திரும்பிப் போகாமல் தாமும் உடன் வருவதாக முரண்டு பிடித்து நின்றார். சிவபாதவிருதயர் தம் குழந்தையாரையும் அழைத்துக் கொண்டு பிரம்ம தீர்த்தக் கரையை அடைந்தார். பிள்ளையாரைக் கரையிலேயே வைத்து விட்டு தம் குழந்தையைக் காக்க வேண்டும் என்பது போல் தோணியப்பரையும் பெரியநாயகி தேவியாரையும் மனதில் நினைத்துத் திருக்கோயிலை வணங்கிவிட்டு, திருக்குளத்தினுள் இறங்கி அவர் மட்டும் தீர்த்தத்திலே மூழ்கினார். மூழ்கி, தர்ப்பணம் செய்து அகமருடன் ஸ்நானம் செய்யும் பொருட்டு அடிபெயர்க்காமல் நீரில் மறுபடியும் முற்றும்

மூழ்கினார். அதனால் குளத்தங்கரையில் இருந்த பிள்ளையாரோ தாமும் தந்தையாரைக் கண்ணெதிரில் காணாததால் தத்தளித்தார். கண்ணீர் ததும்பும்படி கைம் மலர்களால் கண்களைக் கசக்கிக் கொண்டே சிவந்த கனிவாயுதடுகள் துடிக்க, மறைகளின் ஒலி பெருகவும், சிவபெருமானின் திருவடிகளை இடை விடாது நினைத்திருந்த முன்னை உணர்வு மூண்டு எழவும் அழத் தொடங்கிப் பொருமிப் பொருமி அழுதார். சுற்று முற்றும் பார்த்தார். மேலைச் சார்பை உணர்ந்ததாலோ அல்லது பிள்ளைத் தன்மையினாலோ திருத்தோணியப்பரின் கோவில் சிகரத்தை நோக்கி ''அம்மே அப்பா!'' என்று கூவி அழைத்தபடியே அழுதார்.

கருணைக் கடவுளாகிய சிவபெருமான், பிள்ளையாரது பழந்தொண்டைக் கருதி அவருக்குத் திருவருள் புரிய திருவுள்ளம் கொண்டார். உமாதேவியாரும் தாமுமாக மழவிடை மேல் ஏறி, பொய்கைக் கரையின் அருகே வந்தார். அழுகின்ற பிள்ளை மீது அவர் அன்பு கொண்டு, ஞானத்தை ஊட்டியருள்வதற்காகத் தம் தேவியான பெரியநாயகி



அம்மையாரை நோக்கி, ''உன் முலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து இவனுக்குப் பாலமுது ஊட்டு'' என்று கூறினார். உமையம்மையார் அவரருளிய வண்ணம் பிள்ளையின் அருகில் சென்று அவரைக் கையால் அணைத்தெடுத்துத் தமது திருமுலைப் பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து, சிவஞானமாகிய இன்னமுதத்தையும் பாலுடனேயே குழைத்து, தம் முகம் பார்த்தழுத பிள்ளையின் கண்ணீரைத் துடைத்துக் கையில் பொற்கிண்ணத்தைக் கொடுத்து, ''இந்தப் பால் அமுதத்தை உண்பாயாக!'' என்று ஊட்டவே, பிள்ளையார் அழுகையை நிறுத்தினார். சகல உயிர்களுக்கும் தாய் தந்தையராக விளங்கும் உமாதேவியாராலும் சிவபெருமானாராலும் ஆட்கொள்ளப் பெற்றதால் அப்பிள்ளையார் அன்று முதல் ஆளுடைய பிள்ளையார் ஆயினார். சிவஞானப் பாலமுதை உண்டதால் சிவஞானசம்பந்தரும் ஆயினார். அந்த ஞானத்தால், ''எப்பொருளும் ஆதிமூலரான ஈசனே!'' என்ற உணர்வும், ''அப்பொருள் ஆள்வோர்தாம் அடியார்கள்'' என்ற அறிவும் பெற்று இதற்கு மாறான கருத்துடையவர்களின் அனுபவமற்ற முடிவுகளையெல்லாம் உடைத்தெறிபவர் போல அந்த ஞானப் பிள்ளையார் துள்ளியெழுந்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சிவபாத விருதயர் தம் கடமைகளை முடித்துக் கரையேறி வந்தார். கரைமீது பேருணர்வோடு விளங்குகின்ற பிள்ளையாரைப் பார்த்தார். உடனே பிள்ளையாரை நோக்கி, ''நீ யார் தந்த பால் அமுதத்தை உண்டாய்?'' என்று வெகுண்டார். ''எச்சில் கலந்திட உனக்கு இப்பாலைக் கொடுத்தவர் யார், காட்டு!'' என்று ஒரு சிறிய கோலைக் கொண்டு ஓச்சினார்.

திருஞானசம்பந்த வள்ளலார் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய, தமது திருக்கை விரலினாலே தம்முன் காட்சியருளும் தோணியப்பரைச் சுட்டிக் காட்டி, ''தோடுடைய செவியன்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடி எம்மை இது செய்த பிரான் இவனன்றோ என்று இசை மழை பொழிந்தார். அந்தத் திருப்பதிகத்தில், எப்பிழை செய்தவர்களாயினும் அவர்கள் தம்மைச் சரணடைந்தால் சிவபெருமான் அவர்களுக்குக் கருணை செய்யும் இயல்பையுடையவர் என்ற உண்மையை விளக்கினார். கைலாசத்தையே இராவணன் பெயர்க்க முயன்று பிறகு இசை பாடியதும் அவனுக்கு கைலாச நாதர் அருள் புரிந்ததை எடுத்துக் காட்டினார்.

அப்பெருமான் அகம்பாவக்காரர்களுக்கும் அருளும் தன்மையுடையவர் என்பதும் விளங்க பிரமனும், திருமாலும், இறைவனின் அடி முடியைத் தேடி அயர்ந்து போய் துதித்தும்

அவர்களுக்கு சிவபெருமான் அருளியதையும் அக்காலச் சமண பௌத்த பொய் வழிகளையும் முறையே ஒன்பதாவது, பத்தாவது பாடல்களில் அமைத்துப் பாடினார். இவ்வாறு ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகத்தினைப் பாடிப் பதிகத்தின் இறுதியில் திருக்கடைக் காப்புச் சாத்திச் சிவபெருமானை வழிபட்டார். சிவபெருமான் உமையம்மையாரோடு திருத்தோணி ஆலயத்தினுள் போய் அமர்ந்தார். அன்பே உருவாக விளங்கிய ஆளுடைய பிள்ளையாரும் கும்பிட்டு சிவபெருமானைத் தொடர்ந்து கோயிலுக்குள்ளே புகுந்தார். சிவபாத விருதயர் தம் பிள்ளையை அடிக்க ஓங்கிய கம்பை நழுவ விட்டுவிட்டு வெகுண்டார். வியந்தார். பிறகு பெருவிருப்பும் கொண்டார். தம் பிள்ளையாரை அருளிய திருநெறித் தமிழின் பொருளைச் சிந்தித்தார். தோணிபுரத்து இறைவரைத் தீனியே கண்டு தொடர்ந்த ஞானசம்பந்தரைப் போலத் தாமும் தம் கண்களால் காணப்பெறவில்லை யென்றாலும், தமது மகன் பாலுண்ட அடையாளங்களையும், அவன் பாடிய திருப்பாட்டும் சுட்டிக் காட்டிய வகையையும் கண்டு, ''இது தோணியப்பரின் திருவருள்!'' என்று துணிந்து முன் சென்ற மகனைப் பின்தொடர்ந்து அவரும் கோயிலினுள் சென்றார்.

இந்த நிகழ்ச்சிகளைக் கண்டோரும், காணாது கேட்டோரும் மறையவர்களும், ''ஆகா! இத்தகைய அற்புதச் செயல் வேறு எங்கே நிகழ்ந்தது?'' என்று வியந்து திருக்கோயிலின் முன் வாசலில் வந்து சூழ்ந்தார்கள்.

ஆலயத்தினுள் திருஞானசம்பந்தர் ஆண்டவனின் எதிர் நின்று, ''இங்கு எனை ஆளுடையான் உமையோடு இருந்தான்!'' என்று தொழுது பால்மணம் கமழும் பச்சிளம் வாயால் செந்தமிழில் திருப்பதிகம் பாடி, திருக்கோயிலில் இருந்து புறப்பட்டார். சிவபாத விருதயர், பிள்ளையாரை எடுத்துத் தமது தோள்மீது வைத்துக்கொண்டார்.

அப்பொழுது அந்தணர் கூட்டத்தோடு மற்றையத் திருத்தொண்டர்களும் கூட்டமாகக் கோயில் வாசலில் சேர்ந்து நின்று ஞானப் பிள்ளையாரை எதிர்கொண்டு பலவாறாகவும் போற்றிப் புகழ்ந்து துதித்தார்கள். பிள்ளையாரைத் தந்தையார் தூக்கிச் செல்லும்போது பலர் தங்கள் மேலாடைகளையும் பீதாம்பரங்களையும் ஆகாயத்தில் வீசி, ஆரவாரம் செய்தனர். வேதியர் திருமறைகளை முழங்கினர். பெண்மணிகள் தங்கள் மாளிகைகளிலிருந்து வாழ்த்தி, நறுமலர்களையும், சுண்ணப் பொடிகளையும் கலந்து தூவினார்கள். இவ்வாறு மக்கள் மகிழ்ந்து போற்ற மங்கல வாத்தியங்கள் முழங்க, சிவபாத விருதயர் தம் ஞானப்பிள்ளையைத் தம் தோள்மீது சுமந்து திருவீதி வலம் வந்து, தமது இல்லம் சேர்ந்தார். பால் மணம்

மாறாப் பவளவாய்ப் பிள்ளையார் அன்றிரவு தோணியப்பரை நினைத்த வண்ணமே பெருகும் அன்போடு துயின்றார். மறுநாள் சூரியன் உதயமானதும் அவர் துள்ளி யெழுந்து திருக்கோயிலுக்குச் சென்றார். பேரன்புத் தந்தையான தோணியப்பரையும் தமக்கு ஞானப்பால் சுரந்தருளிய பெரியநாயகி அம்மையையும் முன்னே வணங்கித் துதித்துத் தொழுதார். பிறகு, ★ திருக்கோலக்கா என்னும் சிவ ஸ்தலத்தைத் தரிசிக்க விரும்பி விரைந்து சென்றார்.

மலர்களைச் சூழ்ந்து வரி வண்டுகள் பறந்து செல்ல, பெண்கள் குடைந்தாடும் வாவிகள் நிரம்பிய *திருக்கோலக்கா என்னும் பதியினைத் திருஞானசம்பந்தர் தம் தந்தையாரோடும், சிவனடியார்களோடும் சென்றடைந்து, திருக்கோயிலினை வலம் வந்தார்.



பிறகு ஞானப் பிள்ளையார் அக்கோயில் மூர்த்தியைத் தொழுது, ''மடையில் வாளைபாய'' என்று தொடங்கும் இசைபொருந்திய திருப்பதிகத்தைப் பண்ணிற்கேற்ற வண்ணம்

★ திருக்கோலக்கா : இந்த ஸ்தலம் சீர்காழிக்குத் தென்மேற்கில் முக்கால் மைல் தொலைவிலுள்ளது. திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்றாளம் அளித்ததால் அந்தக் கோயில் இன்றும் திருத்தாளமுடையார் கோயில் என்று வழங்கப்படுகிறது.

தம் பச்சிளங் கைகளாலே தாளம் போடத்தொடங்கி கால வரையறையோடு தாளவொத்து அறுதியிட்டுப் பாடினார். அப்பொழுது இறைவன் திருவருளால் ஐந்தெழுத்துப் பொறிக்கப் பெற்று செம்பொன்னால் செய்யப்பட்ட தாளங்கள் திருஞான சம்பந்தரின் திருக்கரங்களில் வந்திறங்கின. அதைக் கண்டு பிள்ளையார் அத்திருத்தாளத்தைத் தம் முடிமேல் வைத்து மனம் மகிழத்தொழுது ஏழிசையும் தழைக்கும் வண்ணம் இன்னிசையோடு தமிழ்ப் பதிகத்தைப் பாடி மகிழ்ந்தார். அவர் பாடிய இசைத் தமிழைக் கேட்டு விண்ணுலகத்தில் இசைத் துறையில் வல்லவர்களான தும்புரு, நாரதர் போன்றவர்கள் மலர்மாரி பொழிந்தனர். மறை வாழ வந்தருளும் மதலையாரும் சிவனாரின் திருவருளைப் போற்றிப் பணிந்து, கையிலே திருத் தாளத்துடன் சீர்காழி நோக்கி நடந்தார். மெல்லிய மலர்க் கைகளில் தாளங்களை வேறு சுமந்து கொண்டு இப்பச்சிளம் பாலகர் திருப்பாதம் நோக நடப்பதைக் கண்ட சிவபாத விருதயர், தம் பிள்ளையாரைத் தம் தோள்மீது ஏற்றிக்கொண்டார். பிள்ளையார், திருத்தோணிபுரத்தை அடைந்து ''பூவார் கொன்றை'' என்னும் திருப்பதிகத்தைப் பாடி வீடு சென்றார். அங்கே, அவர் சீர்காழி மக்களுக்குத் தமது புத்திளமைக் காட்சியை வழங்கி இன்பூட்டி வந்தார்.

இவ்வாறு இருக்கும்பொழுது, ஆளுடைய பிள்ளையாருக்கு ஞானப்பாலூட்டிய பகவதியார் முன்னொரு சமயம் தோன்றிய திருப்பதியாகிய ★திருநனி பள்ளியிலும் மற்ற பதிகளிலும் உள்ள அன்பர்கள் பிள்ளையாரின் பெருமையைக் கேள்விப்பட்டுக் கூட்டம் கூட்டமாகச் சீர்காழியை அடைந்து, பிள்ளையாரைப் பணிந்து போற்றினார்கள். அப்பொழுது சிவனடியார்களின் அருட்பெரும் கூட்டத்தால் சீர்காழி நகரம் சிவலோகம் போல் விளங்கியது!

இவ்வாறு நிகழ்ந்து வரும்பொழுது, திருநனி பள்ளி யிலிருந்து வந்த அடியார்கள் பிள்ளையாரைத் தொழுது ''எங்கள் ஸ்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்க, எங்களூருக்கு எழுந்தருள வேண்டும்!'' என்று விண்ணப்பித்தார்கள். திருஞான சம்பந்தர், அதற்கிசைந்து தோணியப்பரைத் தொழுது விடை பெற்றுப் புறப்பட்டார். பச்சிளம் பாலகரான பிள்ளையாரின் மெல்லிய மலரடிகள், தரைமீது நடப்பதை சிவபாத விருதயர் கண்டார். அத்திருவடிகளைப் பிறர் தாங்கவும் அவர் மனம் கொள்ளவில்லை. ஆகையால் அன்போடு அவரே தம்

★ திருநனிபள்ளி : இது 'புஞ்சை' என வழங்கப்படுகிறது.

பிள்ளையாரை எடுத்து தம் தோள்மீது வைத்துக்கொண்டு நடந்தார். திருநனி பள்ளி சமீபித்தபோது, பிள்ளையார் ‘‘அதோ! வானளாவிய மலர்ச்சோலை தோன்றுகிறது! அந்தப் பதி யாது?’’ என்று கேட்டார். அதற்குத் தந்தையார் ‘‘அதுதான் திருநனி பள்ளி!’’ என்றார். அதைக் கேட்டதும் ஆளுடைய பிள்ளையார், தந்தையாரின் தோள்மீது இருந்தபடியே தொழுது ‘‘காரைகள் கூகை முல்லை’’ என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி அதன் திருக்கடைக் காப்பில் ‘‘எந்தை மேவும் திருநனி பள்ளியை நினைப்பவர்தம் வினைகள் கெடுவதற்கு ஆணை நமதே’’ என்று சிறப்பித்தருளினார். பிறகு பிள்ளையார் அந்த ஊரிலேயே சில நாட்கள் தங்கியிருந்தார்.

அப்பொழுது திருத்தலைச் சங்காட்டு அன்பர்களும், தொண்டர்களும் வந்து ஞானசம்பந்தரை வணங்கி, தங்கள் ஊருக்கு எழுந்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் பெரு மகிழ்ச்சியோடு எங்கும் நடைப்பந்தர்கள் இட்டு வாழைமரங்கள் நாட்டி மலர் மாலைகளைத் தொங்கவிட்டு பூரண கும்பங்களைத் தாங்கி ஆவண வீதிகளை அலங்கரித்துப் பிள்ளையாரை வரவேற்றுத் தங்கள் தலத்திற்கு அழைத்துச் சென்றார்கள். பிள்ளையார் பெருகும் காதலோடு ஆண்டவனைத் தொழுது, பெருந் திருமாடக் கோயிலையடைந்து, மறைப் பொருளான சிவபெருமானை வணங்கினார். அந்தக் கோயில் வலம்புரிச் சங்கின் வடிவமாக அமைந்திருப்பதைத் தமது திருப்பதிகத்தில் போற்றிசைத்தார். பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டு திருவலம்புரம், திருப்பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, தென்திருமுல்லைவாயில் முதலிய சிவ ஸ்தலங்களுக்குச் சென்று ஆங்காங்கே அடியார் கூட்டங்கள் வரவேற்றுப் பொங்கி மகிழ, தேவாரம் திருப்பதிகங்களைப் பாடிப் பரவசமடைந்து தம் சீர்காழிக்குத் திரும்பினார். இவ்வாறு சீர்காழியில் ஞானப் பிள்ளையார் தங்கியிருக்கும் போது, அதற்கு வடகிழக்கேயுள்ள திருமகேந்திரப் பள்ளியையும், திருக்குருகாவூரையும், வணங்கித் துதித்து, தமிழ்ப் பாமாலைகள் பாடிவிட்டு மறுபடியும் சீர்காழியை வந்தடைந்தார்.

திருஞானசம்பந்தர், சீர்காழியில் தங்கியிருக்கும்போது திருநீலகண்டப் பெரும்பாணர் எனும் சிவனடியாரும் இசைப்பாட்டில் வல்லவரும் அவருடைய மனைவியாருமான மதங்கசூளாமணியாரும் ஞானப் பிள்ளையாரின் பெருமையைக் கேட்டு, அவரைப் பார்த்து வணங்குவதற்காக யாழேந்திய கையுடன் சீர்காழிக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வருவதைக் கேள்விப்பட்ட திருஞான சம்பந்தர், அவர்களை எதிர்கொண்டு அழைத்தார். யாழ்ப்பாணரும், அவர் தம் அருமை

மனைவியாரும் திருஞான சம்பந்தரின் மலரடிகளில் விழுந்து வணங்கி அளவிலாத மகிழ்ச்சியோடு எழுந்து நின்றார்கள். அவர்களிருவரையும் ஞானப்பிள்ளையார் அன்புடன் நோக்கி, ''ஐயரே! நீங்கள் உள்ளம் மகிழ இங்கு வந்ததாலாகிய உறுதிப் பொருளையுடையோமாகினோம்!'' என்று புன்முறுவலுடன் கூறினார். பிறகு அவர்களைத் தம்மோடு அழைத்துக் கொண்டு, தோணியப்பரின் கோயிலுக்குச் சென்றார். பாணரும் அவருடைய மனைவியாரும் அந்நாளையச் சாதித் தீட்டை முன்னிட்டு கோயிலுக்குள் நுழையாமல் வெளி வாசலிலே நின்று கும்பிட்டார்கள்.

''பாணரே! உங்கள் பெருமானுக்கு இங்கே யாழினை வாசியும்'' என்றார், ஞானப் பிள்ளையார். திருநீலகண்ட யாழ்ப்பாணர், பிள்ளையாரை வணங்கிவிட்டு, தம்முடைய இன்னிசை யாழை எடுத்து மீட்டலானார். ஸ்வர ஸ்தானங்களை அமைவுச் செய்து, யாழொலியின் ஏற்றத் தாழ்வு வகையால் இசையைத் தெரிந்து, சிவபெருமானது திருப்பாட்டினைத் தம் மனைவியாருடன் ஒன்றித்துப் பாடி யாழ் வாசித்தார். அதைக் கேட்ட ஞானசம்பந்தர் மகிழ்ச்சியடைந்தார். மறையவர்கள் வியந்தனர். யாழிசையோடு இருவருடைய கண்டத்திலிருந்து எழுந்த இசையும் ஒன்றித் தோணியப்பரின் செவிகளையடையும் பெருமை பெற்றன. அந்த இசை வெள்ளத்தில் ஆணும் பெண்ணுமான கின்னரப் பறவைகளும் லயித்தன. ஏழிசையில் வல்ல கந்தருவர்களும் விஞ்சையரும் அதை எடுத்திசைத்தார்கள். அந்த யாழிசை முடிந்ததும் யாழ்ப்பாணரையும் அவரது மனைவியாரையும் ஞானப் பிள்ளையார் அழைத்துச் சென்று, அவர்களுக்குத் தங்க நல்ல இடம் தந்து நல்ல விருந்துமளித்தார்.

அவர் சிவபெருமான்மீது பாடிய திருப்பதிகங்களை யாழ்ப்பாணர் கேட்டு, தேவ அமுதை அருந்தினவர்போல் சிந்தைக் களிப்புற்று அப்பதிகங்களின் இசைக்கேற்ப பண்முறைப் படுத்தி யாழ் வாசித்து அனைவரையும் மகிழ்வித்தார். மேலும் அவர் பிள்ளையாரை நோக்கி, ''அடிகளே! எனக்கொரு வரந் தரவேண்டும். நான் எப்போதும் அடிகளைப் பிரியாது அடிகள் அருளும் பதிகங்களின் இசையை யாழில் வாசித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இப்பெரு வாழ்வை அடியேனுக்கு அளித்தருள்க!'' என்று வேண்டினார்.

ஞானசம்பந்தர், பெரும்பாணரின் வேண்டுகோளுக் கிசைந்தார். அன்று முதல் திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஞான சம்பந்தர் இயற்றும் திருப்பதிகங்களின் இசைகளை யாழிலே வாசித்துக்கொண்டு என்றும் இணைபிரியாத நட்புடன் மகிழ்ந்திருந்தார். திருஞான சம்பந்தருக்கு திருத்தில்லை



நடராஜப் பெருமானைத் தரிசிக்க வேண்டுமெனச் சிந்தை சென்றது. அதனால் அவர் தம் தந்தையாரோடும், திருநீலகண்ட யாழ்ப்பாணரோடும் திருத்தொண்டர்கள் புடைசூழப் புறப்பட்டார். தில்லைப் பதியைக் கண்டவுடன் அதன் எல்லையைத் தொழுது, திருவீதியை வணங்கி, திருக்கோபுரத்தைக் கும்பிட்டு தில்லையைச் சூழ்ந்துள்ள மதிலின் தென்திசை வாயிலை அடைந்தார்.

அவரது வருகையை அறிந்த தில்லைவாழ் அந்தணர்களும் அடியார்களும் பேராவலோடு ஒன்று கூடி, நகரை அலங்கரித்து மறை ஒலிகளும் மங்கல வாழ்த்தொலி களும் எழுப்பிஅழைத்துச் சென்றனர். அவர் எழுநிலைக் கோபுரத்தை வணங்கி எழுந்து உள்ளே சென்றார். பிறகு பேரம்பலத்தை வணங்கிக் கொண்டு திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார். தில்லைக்கூத்தப் பெருமானுக்குத் திருத்தொண்டு புரிவதையே உரிமையாகக் கொண்டிருந்த தில்லைமார் அந்தணர்களை முதலில் வைத்துச் சிறப்பித்து ‘‘கற்றாங்கெரியோம்பி’’ என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். திருப்பதிகத்திற்குத் திருக்கடைக் காப்புச் சாத்திப் போற்றி, ஊனையும் உயிரையும் உருக்கும் நடராசப் பெருமானின் ஆனந்த நடனமாகிய திருவமுதைக் கண்களால் அருந்தி அருந்தி ஆனந்தப் பரவசமடைந்தார்.

முன்பு அரியும் அயனும் அறியாத மூர்த்தியாரின் முன்னின்று சொல் மாலையாகிய திருப்பதிகங்களால் எல்லாக் காலங்களிலும் துதித்து இறைஞ்சினார்; வேதங்கள் சூழ்ந்து துதிக்கும் பொன்னம்பலத்தை வலமாக வந்து புறம் போந்தருளித் திருமுற்றத்தையும் திருவாயிலையும் வீழ்ந்து வணங்கியெழுந்து, நான்கு திருவீதிகளையும் தொழுது, அங்கு தங்குவதற்கு அஞ்சித் திருவேட்களத்திற்குப் புறப்பட்டார்.

அங்கே சிவபெருமானை வழிபட்டுப் பதிகம் பாடித் தங்கியிருந்தார். இதனிடையில் திருக்கழிப்பாலை சென்று திரும்பினார். ஒருநாள் பிள்ளையார், திருவேட்களத்திலிருந்து வழக்கம்போலச் சிற்றம்பலம் நோக்கியபோது, தில்லை மூவாயிரவரும் சிவகண நாதராய் தோற்றமளிப்பதைக் கண்டார். அந்தக் காட்சியை அவர் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும் காட்டினார். பிறகு அவ்வந்தணர்கள் வந்து தம்மை வணங்குவதற்கு முன்னதாகவே அவர் அந்தணர்களை வணங்கினார். பிறகு அவர் திருக்கோயிலுக்குள்ளே சிந்தை உருகி, 'ஆடினாய் நறுநெய்யொடு' என்னும் திருப்பதிகத்தை ஓதி, அதில் தாம் அந்தணர்களைக் கண்ட விதத்தை அமைத்துப் பாடினார். தில்லைக்கூத்தரைத் தொழுது வெளியே வந்தார்.

அப்போது, திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிள்ளையாரை வணங்கி, ''அடிகளே! அடியேன் பிறந்த ஊரான திருவெருக்கத்தம் புலியூரையும் நீவா நதிக்கரையிலுள்ள பல திருப்பதிகளையும் தாங்கள் கண்டு வணங்க வேண்டும்'' என்று வேண்டினார். ஆளுடைய பிள்ளையார், அவ் வேண்டுதலுக்கு இசைந்து தம் தந்தையாரோடும் அடியார்களோடும் திருவெருக் கத்தம்புலியூரை அடைந்து, ஆண்டவனைத் தொழுதார். பிறகு அவர் தம் அடியார்களின் கூட்டத்தோடு, திருமுதுகுன்றஞ் சென்று, திருப்பெண்ணகடம் சென்று இறைவனை வணங்கி இன்னிசைப் பதிகங்கள் பாடிச் சென்று திருத்தூங்கானை மாடக் கோயிலையும் வந்து வணங்கினார். அங்குள்ள சுடர்க் கொழுந்தீசரை வணங்கி, ''தீங்கு நீங்குவீர் தூங்கானை மாடம் தொழுமின்களே!'' என்ற கருத்துடைய இசைப் பதிகம் பாடியருளினார்.

பிறகு ஞானசம்பந்தர் தம் தந்தையாரோடு ★ திருவரத் துறைக்குப் புறப்பட்டுச் சென்றார். அவ்வாறு அவர் செல்லும் போது தந்தையாரின் தோள்மீது அமர்ந்து செல்வதைத் தவிர்த்து தம் பச்சிளம் கால்களால் நடந்தே சென்றார். அந்தணர்களும் தந்தையாரும் அருகே வரப் பெரு விருப்போடு, திருவரத்துறையினை நோக்கி விரைந்தார். அவர் முன்னே நடந்து செல்வதைக் கண்ட அவரது தந்தையாரும் பிறரும் வருந்த, ஞானசம்பந்தரது பாதத் தாமரைகள் பையப்பைய நொந்தன. வேதங்கள் யாவும் ஒரு வடிவுகொண்டு வந்தது போலவும், நிறைமதி நிலவுக்கு வந்தது போலவும் பிள்ளையார்

★ திருவரத்துறை : இது, ''திருநெல்வாயில் அரத்துரை'' எனவும் பெயர் பெறும். இது பெண்ணாகடத்துக்கு மேற்கே சுமார் 5 மைல் தொலைவில் உள்ளது.

திருஅரத்துறை நாதரை வணங்க விரைந்து சென்றார். அவர் சிறிதும் பாசம் இல்லாதவராயிருந்தும் சிவபெருமான்மீது பாசம் மிக்கவராய், அவரைத் தொழுது கொண்டே மேற்சென்றார். மாறன்பாடி என்னும் தலத்தை அடையும்போது, வழிநடந்து வந்த கால்வலியினால் தம்முடன் வந்தவர்கள் இளைப்படைவதைக் கண்டு ஞானப்பிள்ளையார் திருவைந்தெழுத்தை ஓதி, அங்கேயே தங்கியிருந்தார். பிள்ளையாரோடு வழிநடந்து வந்தவர்களுக்கு வெப்பத்தினால் நேர்ந்த இளைப்பைக் கண்டு அஞ்சியவனைப் போல் சூரியனும் தன் கதிர்களாகிய ஆயிரம் கைகளையும் சுருக்கிக் கொண்டு மேலைக் கடலில் போய் மறைந்தான். அன்றிரவு, பிள்ளையார் தம்மைச் சூழ்ந்திருந்த தொண்டர்கள் போற்ற, அந்தணர்களுடன் மாறன்பாடியிலேயே தங்கியிருந்தார்.

திருநெல்வாயில் அரத்துறையில் மூர்த்தியாக வீற்றிருக்கும் சிவபெருமான் புன்முறுவல் பூத்தார். பிள்ளையார் தம் காலால் நடந்து வந்த வருத்தத்தை திருவுள்ளத்தில் கொண்டார். அவரால் சிவபெருமான் அன்றிரவு அவ்வூரிலுள்ள ஒவ்வோர் அந்தணர் கனவிலும் தோன்றி, ‘‘ஞானசம்பந்தன் நம்மிடம் வருகிறான். முத்துச் சிவிகையும், முத்துச் சின்னமும், முத்துமணிக் குடையும் நம்மிடமிருந்து எடுத்துச் சென்று அவனுக்குக் கொடுங்கள்'' என்று கூறி மறைந்தார். வேதியர்கள் எல்லோரும் வியப்போடு விழித்தெழுந்தனர். அவ்வூரில் உள்ள சந்திரசேகரப் பெருமானின் ஆலயத்திற்கு எல்லோரும் திரண்டு சென்றனர். ஆலயத்துள் இருந்தவரும் அக்கனவு கண்டு எழுந்தனர். இருசாராரும் ஒருங்கே சேர்ந்து ஆச்சரியமுற்றனர். திருப்பள்ளி எழுச்சிக் காலம் வந்தது. அன்பர்கள் திருக்காப்பு நீக்கினார்கள். அங்கே சந்திரசேகரப் பெருமானின் முன்னிலையில் சந்திரனைப் போன்ற பிரகாசமான ஒரு முத்துச் சிவிகையும், ஒரு வெண்குடையும், ஊதும் முத்துச் சின்னமும் காணப்பட்டன. எல்லோரும் அளவில்லா ஆனந்தம் கொண்டு தலைமீது கைகுவித்துக் கும்பிட்டு ஆரவாரம் செய்தார்கள். வேதியர்கள் வேதகோஷம் செய்து, சங்கு துந்துபி தாரை முதலான பல வாத்திய ஒலி களோடு முத்துச் சிவிகை முதலியவற்றை எடுத்துக் கொண்டு பொங்கும் அன்போடு மாறன்பாடிக்குப் புறப்பட்டார்கள்.

அங்கு திருஞான சம்பந்தருக்கும் அன்றிரவே கனவில் சிவபெருமான் தோன்றி, ‘‘நாம் உனக்குக் கொடுத்துள்ள முத்துச்சிவிகை முதலானவற்றை ஏற்றுக்கொண்டு சிவிகையில் ஏறி எம்மிடம் வருவாயாக!'' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். ஞானசம்பந்தர் துயில் நீங்கி எழுந்து, தாம் கனவில் கண்டதைத் தம் தந்தையாரிடமும் அருகேயிருந்த சிவனடியார்களிடமும் கூறிவிட்டுப் பொழுது புலரும் சமயத்தில்

நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்து திருவெண்ணீற்றினை அணிந்து, கைம்மலர்களைச் சிரமேற் குவித்த வண்ணம் திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டு எழுந்தார். அப்பொழுது திருஞானசம்பந்தரை முத்துச் சிவிகையின் மேலே ஏற்றிடக் கண்டு உயர்த்திக் கும்பிடுவதற்காக அன்பு கொண்டவனைப் போல் வானத்திலே கதிரவனும் கீழைக் கடலிலிருந்து எழுந்தான்.

அதே சமயத்தில் 'ஹரஹர' என்ற ஒலி முழக்கம் கேட்டது. முத்துச் சிவிகையையும், முத்து வெண்குடையையும் முத்துச் சின்னங்களையும் தூக்கிக் கொண்டு மெய்யன்பர் கூட்டத்தோடு அந்தணர்கள் திரண்டு ஞானசம்பந்தரை நோக்கி வந்தார்கள். வந்ததும் அவர்கள் ஞானப் பிள்ளையாரை வணங்கி, ''திருவரத்துறை இறைவன் தந்த பேரருள் வடிவமான இப்பொருள்களை ஏற்றுக் கொள்வீர்!'' என்று விண்ணப்பித்து, ஈசர் தங்களுக்கு கனவில் கூறியது முதலானவற்றையெல்லாம் எடுத்துக் கூறி பிள்ளையாரைப் போற்றித் தொழுதார்கள்.

''இவ்வாறு நிகழ்ந்தது அம்பலவாணரின் அருட் செயலேயாகும்!'' என்று ஞானசம்பந்தர் நினைத்து அத்திருவருளை வியந்து வணங்கினார். ''எனக்கு சிவபிரான் முத்துச் சிவிகை முதலானவற்றைக் கொடுத்தருளியது, அடியேனைத் தம் அடியாராக உவந்து ஆட்கொள்ளும் பொருட்டேயாகும்!'' என்று கூறி மகிழ்ந்து, ''எந்தையீசன்'' என்ற பாடலடி எடுத்து திருப்பதிகம் பாடித் துதித்தார். ''திருவரத்துறை இறைவரது திருவருளே இதுவாகும்!'' என்று திருப்பதிகத்தை நிறைவு செய்தார். பிறகு அவர் முத்துச் சிவிகையை வலம் வந்து, கீழே வீழ்ந்து வணங்கித் திருவெண்ணீற்றொளி தோன்ற அதன் ஒளியைத் துதித்து நின்றார். ''இஃது ஆதியார் திருவருள்'' என்று உலகம் உய்யும் வண்ணம் ஐந்தெழுத்தை ஓதி, அச்சிவிகையின் மீது ஏறி அமர்ந்தார்.

அந்நிகழ்ச்சியைக் கண்ட தொண்டர்கள் 'ஹரஹர' என்று முழக்கம் செய்தனர். வேதங்கள் முழங்கின. மேகங்கள் ஆர்த்தன; முழவுகள் முழங்கின; வானம் ஆர்த்து மலர்மாரி பெய்தது; சங்கங்கள் ஆர்த்தன; ஊது கொம்புகள் ஒலித்தன. ஒளி பொருந்திய முத்து மணிக் குடையும் ஒலித்தது. வெண்முத்துச் சிவிகையில் திருவெண்ணீறு பூசிய மேனிப் பொலிவோடு ஞானப் பிள்ளையார் வீற்றிருந்தது பாற்கடல்மீது வெண்ணிலா உதித்ததுபோல் விளங்கியது. அவரைச் சூழ்ந்துகொண்டு அடியார் கூட்டம் ஆரவாரத்தோடு ஆடிப்பாடி ஆனந்தக் கண்ணீர் பெருக்கும் வெள்ளத்தில் பிள்ளையார் குளித்தார். ஊதும் முத்துச் சின்னங்களான எக்காளம்,

திருச்சின்னம், தாரை முதலானவை அவரை வாழ்த்தி ''திருஞானசம்பந்தர் வந்தார். மறைகளையெல்லாம் ஓதாமலே உணர்ந்த உத்தமர் வந்தார். உலகுய்யத் தோன்றிய ஒருவர் வந்தார். பரசமயக் கோளரி வந்தார். அன்னை பகவதியே ஞானப்பால் சுரந்து ஊட்ட பாலறாவாயர் வந்தார்; முத்தமிழ் விரகர் வந்தார்!'' என்றெல்லாம் முழங்கின.

உண்மைக் கலைகள் விளங்கவும், உலகத்திலுள்ளோர் சிந்தையின் இருள் நீங்கவும் தமிழ் மறையைப் பாடியருளும் ஆளுடைய பிள்ளையார் இவ்வாறு முத்துச் சிவிகையில் அமர்ந்து சென்றார். ''போற்றி'' என்று துதிப்பவர்களுக்குப் பொருளையும், போகத்தையும், ஞானத்தையும் அளிக்கவல்ல சிவபெருமான் வீற்றிருக்கும் திருவரத்துறைத் தலத்தை அடைந்து, கோபுரமணி வாயிலுக்கும் சிறிது தூரத்திலேயே முத்துச் சிவிகையினின்றும் இறங்கி வணங்கினார்; சிந்தையில் மகிழ்ச்சியும், ஆர்வமும் பொங்கி முன்னே செல்ல அவர் திருக்கோயிலினுள் சென்று வலம் வந்து, இறைவனின் திருமுன்பு நின்று; கைகளைக் குவித்து வீழ்ந்து வணங்கி அன்பினில் திளைத்து; ''என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு இன்னருள் புரிந்தருளும் பொன்னடித் தலத்தாமரை போற்றி!'' என்று துதித்து எழுந்தார். கரங்களைச் சிரமேற் குவித்தார்; கண்கள் சொரியும் ஆனந்தக் கண்ணீரில் நீராடினார்; திருவரத்துறையில் எழுந்தருளிய பெருமானின் பெருங் கருணையைக் குறித்து ஏழிசையோடு பயிலும் திருப்பதிகம் பாடினார். பின்னர் திருவருள் பெற்று அங்கிருந்து புறத்தே வந்து சிலநாள் திருத்தொண்டர்களோடு திருநெல்வாயில் அரத்துறை ஊரிலேயே தங்கியிருந்தார். இவ்வாறு பிள்ளையார் அமர்ந்திருக்கும் நாளில் ★**திருநெல்வெண்ணெய்** முதலாக உள்ள தலங்களுக்கு அடியார்களுடன் சென்று வணங்கி மீண்டு வந்தார்.

சிலநாள் சென்றபின், திருத்தோணியப்பர், பெரியநாயகி யம்மையாருடன் பிள்ளையாரது உள்ளுணர்வில் வெளிப்படவே பிள்ளையார் மனமுருகிச் சீர்காழிக்குச் செல்ல விருப்பங் கொண்டு திருவரத்துறைப் பெருமானை வணங்கி அருள் விடைபெற்று, முத்துச் சிவிகையின்மேல் ஏறி அமர்ந்தார். முத்துச் சிவிகையிலிருந்து பெருகும் ஒளி, திசையெல்லாம் விளங்கவும், முத்துக் குடையின் ஒளி ஆகாயமெங்கும் நிறையவும், மறையவர்கள்; கைகளைச் சிரமேற் குவித்துக்

★ திருநெல்வெண்ணெய் : இந்த ஸ்தலம் உளுந்தூர்பேட்டைக்கு வடமேற்குத் திசையில் சுமார் 5 மைல் தொலைவிலுள்ளது. இப்பொழுது நெய்வெண்ணெய் என்று வழங்கப்படுகிறது.

குணலையிட்டு ஆரவாரித்து ஆடவும், திருஞானசம்பந்தர் புறப்பட்டார். வேதங்கள் முழங்கின; தமிழ் மறைகள் ஒலித்தன; கொம்புகளும், சங்குகளும், எக்காளங்களும் மெய்க் கீர்த்திகளைக் கூறி ஒலித்தன. பலவகை இசைக் கருவிகளும் முரசங்களும் முழங்கின. ''ஹரஹர!'' என்று சிவனடியார்கள் போற்றி இசைக்கும் ஓசை இவற்றின் மேலாக பெருகி ஒலி த்தது;

திருஞானசம்பந்தர் செல்லும் வழியிலுள்ள ஊர்களில் எல்லாம் அவ்வவ்வூர் அடியார்கள் இருபுறமும் கொடிகளையும், விதானங்களையும், நடைப் பந்தர்களையும், தோரணங்களையும் கட்டி, கமுக மரங்களையும், வாழைமரங்களையும், நாட்டிப் பூமாலைகளையும், நிறை குடங்களையும், விளக்குகளையும் வைத்து அழகு செய்து ஆளுடைய பிள்ளையாரை எதிர் கொண்டழைத்தார்கள். பிள்ளையார் தம்மை எதிர்கொண்டு அழைத்த தலங்களிலுள்ள திருக்கோயில்களுக்குச் சென்று, இறைவனை வணங்கி, திருப்பதிகங்கள் பாடிச் சென்றார். யானையை உரித்த இறைவர் வீற்றிருக்கும் [1]திருப்பழுவூர் என்னும் தலத்தை அடைந்தார். திருக்கோபுரத்தை வணங்கி, உள்ளே சென்று திருக்கோயிலை வலம்வந்து, சிவபெருமானின் திருமுன்பு நின்றார். அங்கு அந்தணர் குலத்தில் வந்த மலையாளர்கள் தொழுது பணிசெய்யும் தன்மையை சிறப்பித்துத் திருப்பதிகம் பாடித் துதித்தார். பிறகு, அங்கிருந்து புறப்பட்டுத் [2]திருவிசய மங்கை என்னும் தலத்தையடைந்து தரிசித்து, அங்கு பசுக்களும், காமதேனுவும் பூசித்த செயலாகிய கோதனத்தைச் சிறப்பித்துப் பாடி வணங்கிவிட்டு [3]திருவைகா [4]திருப்புறம்பயம் முதலிய தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கி வழிபட்டுத் திருப்பதிகங்கள் பாடியருளினார். பிறகு பிற தலங்கலையும் கைதொழுது வணங்கிச் சென்று திருச்சேய்ஞலூர் என்னும் தலத்தின் எல்லையை ஞானசம்பந்தர் வந்தடைந்தார். அவர் வருகையை அறிந்த சேய்ஞலூர் மறையவர்கள், தம் ஊரை

---

[1]திருப்பழுவூர் : இது திருச்சி, விழுப்புரம் ரயில் பாதையிலுள்ள அரியலூருக்குத் தெற்கே சுமார் 5 மைல் தொலைவிலுள்ளது.

[2]திருவிசயமங்கை : அர்ஜுனன் சிவபெருமானை வழிபட்டு வரம் பெற்றதால் இப்பெயர் பெற்றது.

[3]திருவைகா : வைகாவூர் என்று வழங்கப்படுகிறது.

[4]திருப்புறம்பயம் : இது கும்பகோணத்திற்கு அருகிலுள்ளது. இங்கு ஊழிப்பெருவெள்ளம் உள்ளே வராமல் தடைப்பட்டு வெளியே நின்றதால் இப்பெயர் வந்தது. புறம்–வெளியே; பயம்–தண்ணீர்.

அழகு செய்து மறைமுழக்கத்துடன் மங்கல முழவின் ஒலியும் விளங்க ஆளுடைய பிள்ளையாரை எதிர்கொள்ள முற்பட்டுச் சென்றனர்.

''சண்டீச நாயனார் அவதரித்தருளிய திருப்பதி இதுவாம்'' என்று ஞானசம்பந்தர் நினைத்துக்கொண்டு முத்துச் சிவிகையிலிருந்து இறங்கி அத்திருத்தலத்தை எதிர் வணங்கியவாறு வந்தணைந்தார். அப்போது சேய்ஞலூர் மறையவர்கள் தங்கள் சண்டீசப் பிள்ளையாரே மீண்டும் எழுந்தருளி வரக் கண்டதைப் போல், ஞானசம்பந்தரைக் கண்டு மகிழ்ச்சியோடு பணிந்தனர். ஆனந்தக் கூத்தாடி ஆரவாரித்தனர். கமண்டலத்திலுள்ள புண்ணிய நீரைத் தெளித்தனர். மலர்களையும் பொரிகளையும் வீசினர்; ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தனர். ஆளுடைப் பிள்ளையார் திருக்கோயிலை அடைந்து வலம்வந்து கைகளைச் சிரமேற் குவித்துக் கொண்டு உள்ளே புகுந்து, சிவபெருமான் திருமுன்பு நின்று அன்போடு வணங்கினார். தந்தையின் பாதத்தை வெட்டிய சண்டீசப் பாலனார் பாதகப் பயன்பெறும் பரிசினை போற்றித் திருப்பதிகம் பாடினார். அப்பதியினர் விருப்பத்தின்படி, பிள்ளையார் அங்குச் சிலநாள் அமர்ந்திருந்தார்.

பின்பு, பாலகரான ஆளுடைய பிள்ளையார் அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பனந்தாள் என்னும் ஊரை அடைந்து, திருப்பதிகம் பாடி வணங்கிக் கொண்டு, [1]திருப்பந்தணை நல்லூர், திருவோமாம்புலியூர், [2]திருவாழ் கொளபுத்தூர், [3]திருக்கடம்பை. [4]திருநாரையூர், திருக்கருப்பறியலூர், முதலிய பிற தலங்களுக்கும் சென்று பதிகங்கள் பாடி வணங்கினார்.

அதன் பிறகு, திருஞானசம்பந்தர் அங்கிருந்து புறப்பட்டு முரசங்கள் முழங்க, சங்கங்கள் ஒலிக்க, எக்காளங்களும்

---

[1]திருப்பந்தணைநல்லூர் : பார்வதியார் ஆடிய பந்தானது இந்த ஊரை வந்தடைந்ததால் இப்பெயரைப் பெற்றது. இப்பொழுது பந்தநல்லூர் என்று வழங்கப்படுகிறது.

[2]திருவாழ்கொளபுத்தூர்: இது வாழப்புத்தூர் என்றும் வாகுளாளிப்புத்தூர் எனவும் வழங்கப்படுகிறது.

[3]திருக்கடம்பை : இப்போது மேலைக்கடம்பூர் என வழங்கப் படுகிறது.

[4]திருநாரையூர் : ஒரு நாரை பூஜித்துப் பேறு பெற்றதால் இந்த ஊர் இப்பெயரைப் பெற்றது. இங்குள்ள பிள்ளையாரைப் பூஜித்து வரம்பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் என்பவர் தேவாரத் திருமுறைகளைக் கண்டு வெளிப்படுத்தியுள்ளார்.

முத்துச் சின்னங்களும் எங்கும் ஊத, நெல்லும் வாழையும் கமுகும் ஓங்கும் வயல்களையுடைய சீகாழிப் பதிக்கு அருகில் வந்தார்.

அச்செய்தியைக் கேட்டதும் சீகாழி மறையவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டு தோணிபுரத்து உமைபாகரின் திருவடிகளை வணங்கித் திருவீதிகளைக் கொடிகள், மகர தோரணங்கள், வாழை மரங்கள், கமுக மரங்கள், நிறைகுடங்கள், விளக்குகள் முதலியவற்றால் அலங்கரித்து வேத ஒலி பெருகப் பூரண கும்பங்களை ஏந்தி வாசனைச் சுண்ணப் பொடிகளைத் தூவி, எதிர்கொண்டு சென்றார்கள். ஞானசம்பந்தர் அழகிய முத்துச் சிவிகையின் மேல் முத்துக் குடையின்கீழ் அமர்ந்திருப்பதைக் கண்டனர். அப்போது கைகளைச் சிரமேற் கூப்பிக் கொண்டு, வணங்கிச் சூழ்ந்து மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரம் செய்தனர்; பலவாறு துதித்தனர்; மேலாடைகளை விசும்பில் வீசினர்; வண்டமிழ் நாயகராகிய திருஞானசம்பந்தர் தம் முத்துச் சிவிகையிலிருந்து கீழேயிறங்கி, எதிர் சென்று வணங்கி, அவர்களுடன் கூடி மகிழ்ந்து நகரத்தினுள் புகுந்தார். திருவீதிகளில் மறைவழி வந்த கற்பின் மாதர்கள் முழக்கும் மங்கல வாழ்த்துக்கள் இருபுறமும் நிறையத் திருக்கோபுரத்தை வணங்கிக் கோயிலினுள்ளே புகுந்து வலம்வந்து தோணியப்பர் திருமுன்பு பிள்ளையார் வீழ்ந்து வணங்கி நின்று, திருப்பதிகம் பாடித் துதித்தார். கண்களில் ஆனந்த அருவி பொங்கக் கைகளைச் சிரமேற் குவித்துக் கீழே வீழ்ந்து வணங்கி எழுந்து அப்பால் சென்றார்.

அப்போது திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது பின்னே வர, அவரை அவரது திருமனைக்குப் போகும்படி பிள்ளையார் விடை கொடுத்தனுப்பிவிட்டு ஞானப் பிள்ளையார் தம் திருமாளிகைக்கு வந்து சேர்ந்தார். வேதியர்கள் துதிக்கத் தமது தந்தையார் அருகு அணையத் திருமாளிகையினுள் பிள்ளையார் வரும்போது மறைக்குல மகளிர்கள் நிறைகுடம், மணிவிளக்கு இவற்றை ஏந்தி நிற்க, ஈன்ற தாயாகிய பகவதியம்மையார் முன்னேவந்து அவருக்கு நெற்றியில் திருநீற்றுக் காப்பிட்டுப் பாராட்ட, தாயாருக்கு அருள் புரிந்து திருமாளிகையினுள்ளே புகுந்து அமர்ந்திருந்தார்.

உலகங் கடந்த சிவஞானம் உணரப் பெற்ற பிள்ளையார், நாள்தோறும் தோணியப்பரை அடைந்து, பணிந்து, திருப்பதிகங்கள் பலவற்றையும் பாடி மகிழ்ந்திருக்கும் நாளில் அவருக்கு உபநயனப் பருவம் எய்தியது. மறையவர்கள் பழமையாகிய வேதநூற்படி அவருக்கு உபநயனச் சடங்குகளைச் செய்தார்கள். பிள்ளையார் மான் தோலுடன் சேர்ந்த



பூணூலையும் தரித்துக் கொண்டார். ஒரு பிறப்பும் சாராத பிள்ளையாரை உலகியல்பில் கொண்டு உபநயன முறையில் இரு பிறப்பாளர் என்ற நிலைமையில் வைத்து, வேதச் சடங்குகளை காட்டி, ''மறைகள் நான்கினையும் தந்தோம்'' என்று மறையவர்கள் மந்திரங்களை எடுத்து ஓதுவித்தனர். பிள்ளையார் அவர்கள் எதிரே நின்று எண்ணிறந்த புனித வேதங்களையும், அவற்றின் அங்கமாகிய கலைகளையும் ஓதியருளினார். அதைக் கண்டு மறையவர்கள் அதிசயித்துப் பிள்ளையாரை ஆயிரங்கோடி சூரியர்கள் ஒன்றாக உதயமானாற் போலக் கருதித் தோணியப்பரின் திருவருளைப் பெற்ற தன்மையின் மேன்மையை எண்ணி மெய்சிலிர்த்தார்கள். அந்த ஞானப் பிள்ளையாரையே தங்கள் கண் முன் நிற்கும் தியானப் பொருளாகக் கொண்டு வணங்கித் தாம் முன்னே கற்ற மறைகளில் தமக்குள்ள ஐயங்களை, ஞானப் பிள்ளையாரிடமே கேட்டுத் தெளிந்து வாழ்வடைந்தார்கள். பிள்ளையார், மந்திரங்கள் எல்லாவற்றையும் அம்மறையவர்களுக்கு விளக்கிக் கூறி, அதன் பின் வைதீக நூற்சடங்குகளில் வந்த ஐயப்பாடுகளையெல்லாம் தெளியும்படி அருள் புரிந்து, ''எல்லா மந்திரங்களும் தோன்றுவதற்குக் காரணமாயிருப்பது சிவபெருமானது திருவைந் தெழுத்தேயாகும்!'' என்பதைக் கூறி, ''துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்'' என்னும் பஞ்சாட்சரத் திருப்பதிகம் பாடினார். அப்பதிகத்தில் ''வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே'' என்று

கூறினார். அந்தணர்கள் அதைக் கேட்டுப் பெரு மகிழ்ச்சியுற்று, அவருடைய திருவருளைச் சிரமேற்றாங்கித் துதித்து உய்ந்தார்கள். பிள்ளையார் தோணியப்பரையடைந்து வணங்கி, இசைப் பதிகங்கள் பாடித் துதித்து புறம்போந்து அடியார்களுடன் இனிது வீற்றிருக்கலானார்.

ஞானப் பாலமுதினை உண்டருளிய திருஞான சம்பந்தருடைய மகிமையை திருநாவுக்கரசு நாயனார் கேள்விப்பட்டு அவரை வணங்குவதற்காக சீர்காழிப்பதி பகுதிக்கு அருகில் வந்தார். அதை புகலிப் பெருந்தகையார் அறிந்ததும் "ஆக்கிய நல்வினைப் பேறு" என்று மகிழ்ந்து, அன்பர் திருக்கூட்டத்தோடு எதிர்கொண்டு அழைக்கச் சென்றார். அப்போது சிந்தையில் இடையறாது பெருகும் அன்பின் பெருக்கும், வயது முதிர்ச்சி காரணமாக அசையும் திருமேனியும், பற்றற்ற நிலையும், கையிலே உழவாரப் படையும், கண்களிலே பெருகும் ஆனந்தக் கண்ணீரும், திருமேனியில் திருநீற்று விளக்கமும் தாங்கிய திருவேடத்தோடு நாவுக்கரசரும் எதிர் வந்தணைந்தார்.

இத்தகைய திருக்கோலத்தைக் கண்டதும் இளங்கன்றான ஞானப் பிள்ளையார் உள்ளம் மகிழ்ந்து, "உண்மை அன்பின் பெருக்குக்கிடமாகிய தொண்டர் திருவேடம் நேரே வந்து தோன்றியது!" என்று திருநாவுக்கரசரை வணங்கினார். திருநாவுக்கரசரும் எதிரில் வந்து வணங்கினார். பிள்ளையார் ஆசை பெருக அவருக்கு மதுர மொழிகளைக் கூறி வரவேற்றுத் தோணியப்பரின் பொற்கோயிலுக்கு அவரை உடன் அழைத்துப்போய், அவருடன் கூடிக் கும்பிட்டுத் தம்முடைய திருமாளிகைக்குத் திரும்பி வந்தார். திருத்தொண்டர்களுடன் வந்த திருநாவுக்கரசருக்குச் சிறந்த முறையில் திருவமுது ஆக்குவித்து, அன்போடு அமுது செய்வித்தார். இருவரும் அன்பும் நட்பும் பெருகிய காதலுடன் கும்பிட்டு இறைவனை உணர்ச்சியில் கண்டு திருப்பதிகங்களைச் சாத்தி மகிழ்ச்சியுடன் உறைந்திருந்தனர்.

திருநாவுக்கரசர், பிள்ளையாரின் நட்பிலே சில நாட்கள் ஊறியபின், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பிற தலங்களையும் சென்று வணங்கும் பொருட்டுப் புகலிப் பிள்ளையாரின் இசைவுபெற்றுப் பின்னர் வந்து கூடும்படி நினைத்து வணங்கி, என்றும் பிரியாத நண்பரோடு புறப்பட்டுச் சென்றார்.

வாக்கின் தனி மன்னராகிய திருநாவுக்கரசர் சென்ற பிறகு ஞானசம்பந்தப் பிள்ளையார் மாறாத திருவுள்ளத்தோடு சீர்காழிப் பகுதிக்கு மீண்டு வந்து, திருத்தோணிப்புறத்தில்

வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கி வாழ்ந்து வரலானார். அந்நாட்களில் செந்தமிழ் மாலை விகற்பங்களான திருமொழி மாற்று, திருமாலை மாற்று, வழிமொழித் திருவியமகம் திருஏகபாதம், திருவிருக்குக் குறள், திருவெழு கூற்றிருக்கை, திருவீரடி, திருவீரடி மேல் வைப்பு, நாலடி மேல்வைப்பு, திருவிராகம், திருச்சக்கரமாற்று முதலிய திருப்பதிகங்களை, மூல இலக்கியமாக எல்லாப் பொருள்கோடும் முற்றும் காணுமாறு சீர்காழிநாதரைப் பாடியருளினார். இப்பதிகங்கள் எல்லாவற்றையும் திருநீலகண்ட யாழ்ப்பாணனாரும், இன்னிசை ஒரு வடிவு எடுத்தாற் போன்ற யாழ்ப்பாணரின் மனைவியாரான மதங்கசூளாமணியாரும் சேர்ந்து ஏழிசை பற்றி யாழிலும் கண்டத்திலுமாகப் பாடிப் பாடிப் பரவசமடைந்தார்கள். ஞானசம்பந்தரும் திருப்பதிகங்கள் பாடிக் கொண்டு சீர்காழியிலே சிலகாலம் தங்கியிருந்தார்.

ஒருநாள் ஞானசம்பந்தர் ஒரு பேராவல் கொண்டு, ''இந்தத் தமிழ் நாட்டிலுள்ள சிவத் தலங்களுக்கெல்லாம் சென்று கும்பிட்டு அங்கெல்லாம் திருப்பதிகங்களைப் பாடித் துதித்துவிட்டு இங்கு வந்து சேர்வேன்,'' என்று தம் தந்தையாருக்கும் மறையவர்களுக்கும், திருத்தொண்டர்களுக்கும் கூறினார். தந்தை சிவபாதவிருதயர் தம் பிள்ளையாரைப் பார்த்து, ''உன்னை நான் அருமையாகப் பெற்றேன். அதனால் உன்னை நான் பிரிந்திருக்க மாட்டேன். மேலும் இம்மைக்கும், மறுமைக்கும் இன்பமளிக்கும் சில வேள்வியையும் யான் செய்ய வேண்டும்; ஆதலால் இசைவுகொண்டு இன்னும் சிலநாள் உன்னுடனே வருவேன்!'' என்றார். தந்தையாரின் விருப்பத்திற்கு ஞானசம்பந்தர் இசைந்து தோணியப்பரின் திருவடிகளை வணங்கித் திருவருளைப் பெற்றுக் கொண்டு, தந்தையார் தம் பின்னே வர, திருநீலகண்ட யாழ்ப்பாணனார் தம்முடனே வர, சீர்காழிப் பதியினைத் தொழுது கொண்டு நீங்காத அன்புடன் புறப்பட்டார். சீர்காழி நகரத்திலுள்ள உண்மைத் தவசியர் பலரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர்.

சிலர் மனம்பிரியா நிலையில் விடைகொண்டு சீர்காழிக்கு மீண்டனர். பிள்ளையார், முத்துச் சிவிகையின் மேல் ஏறி, முத்துக் குடையின் கீழ் அமர்ந்தார். வெண்முத்துக் குடை முழு வெண்ணிலவைப் போல் கவிந்து நிழல் தந்தது. பல முத்துச் சின்னமும், எக்காளமும், தாரையும், ''சிரபுரத்து ஆண்டகை வந்தார்'' என்று உலகுக்கு விளங்கும்படி பற்பல திருப்பெயர்களை எடுத்து ஊதின. திருமுன் எப்பக்கங்களிலும் முரசு முதலிய இசைக் கருவிகள் முழங்கின; தொண்டர்கள் வணங்கி வாழ்த்தினர்; சங்கநாதங்கள் ஒலித்தன; கொம்புகள்

முழங்கின; மங்கல வாழ்த்து உரைகள் எங்கும் மல்கின; முன்னே மறைகள் இயம்பின.

இத்தகைய சிறப்புகளுடன் புறப்பட்டுச் சென்ற கவுணியர் பெருமான் ★ திருக்கண்ணனார் கோயில் என்னும் தலத்தையடைந்தார். அன்போடு கண்ணாயிரநாதரைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடி வணங்கிக் கொண்டு, அருகிலுள்ள சிவத்தலங்கள் பிறவற்றையும் அடைந்து தொழுது துதித்தார்.

பிறகு திருஞானசம்பந்தர், காவிரி நதியின் வடகரை வழியே, மேற்கு நோக்கி வரலானார்; காதலோடு [1]திருப்புள்ளிருக்குவேளூர் திருக்கோயிலையடைந்து வணங்கினார். சம்பாதி, சடாயு என்ற புள்ளரசர் இருவர் சிவபெருமானை வணங்கி வழிபட்ட பெருமையினைத் தம் திருப்பதிகங்களில் அமைத்துப் பாடினார். அதன் பிறகு திருநின்றியூரையும், திருநீடூரையும், திருப்புன்கூரையும் பிற சிவதலங்களையும் வணங்கிச் சென்று [2]திருப்பழமண்ணிப் படிக்கரை, [3]திருக்குறுக்கைப்பதி [4]திருஅன்னையூர், திருப்பத்தனைநல்லூர், திருமணஞ்சேரி, திருவெதிர்கொள்பாடி ஆகிய சிவத்தலங்களையும் தரிசித்துத் திருப்பதிகம் பாடித் துதித்துத் திருவேள்விக் குடியெனும் தலத்தை அடைந்து தரிசித்தார். இங்குள்ள இறைவர் தமது திருக்கல்யாணக் காட்சியை திருத்துருத்தியில் பகலில் காட்டி, இரவில் திருவேள்விக்குடியில் எழுந்தருளியதைக் குறித்து ஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடினார். பிறகு திருக்கோடிகா

★ திருக்கண்ணனார் கோயில் : இந்த ஸ்தலம் வைத்தீஸ்வரன் கோயிலுக்குத் தென்கிழக்கில் ஒன்றரை மைல் தொலைவிலுள்ளது. தற்போது குறுமாணக்குடி என்று வழங்கப்படுகிறது.

[1]திருப்புள்ளருக்குவேளூர் : தற்போது வைத்தீஸ்வரன் கோயில் என வழங்கப்படுகிறது.

[2]திருப்பழமண்ணிப் படிக்கரை : காவிரி நதியின் கிளை நதியான மண்ணியாற்றுக் கரையிலுள்ள இந்த ஊர், இப்பொழுது இலுப்பைப்பட்டு என்று வழங்கப்படுகிறது.

[3]திருக்குறுக்கைப்பதி : இந்த ஊர் பெருமான் மன்மதனை எரித்ததாக கருதப்படுகிறது.

[4]திருஅன்னையூர் : பொன்னூர் என்று வழங்கப்படுகிறது.

[5]திருக்கஞ்சனூர், [6]திருமாந்துறை, திருமங்கலக்குடி, [7]திருவியலூர், திருந்துதேவன்குடி, திருஇன்னம்பர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, திருநெய்த்தானம், திருமழபாடி, திருக்கானூர், திருஅன்பிலாலந்துறை, வடகரைமான்துறை முதலிய திருப்பதிகளுக்குப் போய் ஆங்காங்கே தேவாரம் பாடிப் பணிந்தார். அதன் பிறகு பழநாட்டில் புகுந்தார்.

திருஞானசம்பந்தர் காவிரி நதியின் வடக்குக்கரை வழியாகச் சென்று, திருப்பாச்சிலாச்சிராமம் எனும் தலத்தை அடைந்தார். அந்நகரில் கொல்லிமழவன் என்றொரு சிற்றரசன் இருந்தான். அவனுக்கு மகள் ஒருத்தி இருந்தாள். அவள் கன்னியிளம் மான் போலவும், அழகின் இளங்கொழுந்து போலவும் விளங்கும் கன்னிப் பெண். அத்தகைய அருமையான மகளுக்கு முயலகன் என்ற ஒருவிதத் தொழுநோய் பீடித்திருந்தது. ★ முயலகன் என்றொரு நோய் பற்றியிருந்தது. தன் மகளின் நோய்த் துன்பத்தைக் கண்டும் தம் பெரும் சுற்றத்தினர் புலம்பி அழுவதையும் கண்டும் கொல்லிமழவன் மிகவும் மனத்தளர்ச்சி அடைந்தான். அவன் சிவபெருமானை வணங்கும் சைவ பரம்பரையைச் சேர்ந்தவன். அவன் மணிமந்திர வைத்திய முயற்சிகள் பலவற்றைச் செய்து தன் புதல்வியின் நோயைக் குணப்படுத்த முயன்றான். எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை, எனவே அந்தக் கன்னிப் பெண்ணை அந்த ஊரிலிருந்த சிவன் கோயிலில் கொண்டு போய் இறைவன் சந்நிதியில் கிடத்தி வைத்தான். அச்சமயத்தில் திருஞானசம்பந்தர் அவ்வூருக்கு அருகாமையில் வந்து கொண்டிருந்தார். எக்காளம் ஒலித்து எடுத்தியம்பும் ஓசையால் அவர் வருகையையறிந்து கொல்லிமழவன்,

உடனே தன்கன்னிப் பெண்ணை விட்டெழுந்து நகரை அலங்கரித்து, திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு அழைக்கச்

---

[5]திருக்கஞ்சனூர் : இது கம்சனது நகரம். அதனால் இப்பெய பெற்றது.

[6]திருமாந்துறை : இது கஞ்சனூருக்கும் திருமங்கலக் குடிக்கு இடையே உள்ளது.

[7]திருவாயிலூர் : இது 'திருவிச நல்லூர்' என்று வழங்குகிறத

★ முயலகன் என்பது கொடிய நோய்களில் ஒன்றாகும். இந் நோய் உணர்வற்றுக் கிடக்கவும் வலிம்புடன் கிடக்கவும் பிறவா நலிவுற்றுக் கிடக்கவும் செய்யும் நோயாகும்.



சென்றான். ''பிள்ளையார் எழுந்தருளப் பெற்றேன்!'' என்று ஆனந்தக் கண்ணீர் பெருக்கி முத்துச் சிவிகையின் முன்னே விழுந்து வணங்கினான். வணங்கியவனை வள்ளலான திருஞானசம்பந்தர் ''எழுக'' என்றார். மழவன் எழுந்து கைகளைச் சிரமேற் கூப்பிய வண்ணம், திருஞானசம்பந்தரைத் தன் ஊருக்குள் அழைத்துச் சென்றான். திருஞானசம்பந்தர் அழகிய வீதிகளைக் கடந்து, திருக்கோயிலை அடைந்தார். பின்னர் முத்துச் சிவிகையில் இருந்து இறங்கி நடந்து கோயிலில் குடிகொண்டிருந்த பெருமானை வணங்கச் சென்றார். அங்கு இறைவனின் சந்நிதியில் கன்னி இளம் பெண்ணொருத்தி சுய உணர்வில்லாமல் நிலத்தில் மயங்கிக் கிடப்பதை பிள்ளையார் கண்டார். ''இது என்ன?'' என்று கேட்டார். உடனே கொல்லிமழவன், திருஞான வள்ளலாரை வணங்கி, ''இவள் அடியேன் பெற்ற பெண், இவளை முயலகன் என்னும் கொடிய நோய் பீடித்திருக்கிறது. இந்த நோய் மணிமந்திர மருந்துகளாலும் குணமடையவில்லை. அதனால் இவளை, இறைவன் திருமுன்பு கொண்டு வந்து கிடத்தியிருக்கிறேன்.

இதுவே நிகழ்ந்த வரலாறு!'' என்று கூறினான். அதைக் கேட்ட திருஞான சம்பந்தர் அவன்மீது பரிவுகொண்டு அவனுடைய அருமைப் பெண்ணின் நோயைத் தீர்க்க அங்குள்ள சிவபெருமானை நோக்கி, ''துணிவளர் திங்கள்'' என்ற திருப்பதிகத்தைத் தொடங்கி ''மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பு?'' என்று இறுதியில் வைத்து பிணிதீர்க்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.

உடனே மழவனுடைய கன்னியிளம் மகளின் நோய் தீர்ந்தது. தரையில் கிடந்த அப்பெண் சட்டென எழுந்து பொற்கொடி போல் அசைந்து நடந்து வந்து தன் தந்தையினருகில் நின்றாள். அதைக்கண்ட மழவன் மிகவும் மகிழ்ந்து, திருஞானசம்பந்தர் திருவடிகளில் தானும் தன் பெண்ணும் சேர்ந்து விழுந்து வணங்கினான். பிள்ளையார் அவர்களுக்கு அருள் செய்து, அங்கேயே சிலகாலம் தங்கியிருந்தார். பிறகு அங்கிருந்து திருப்பைஞ்ஞீலி, ★திருஈய்ங்கோய் மலை, முதலிய திருப்பதிகளை வணங்கி பாமாலைகள் பாடிச் சென்றார். பிறகு கொங்கு நாட்டின் மேற்குப் பகுதியை அடைந்தார்.

அவர் காவிரி நதியின் தென் கரையோரமாகச் சென்றார். கொங்கு நாட்டில் மேகங்கள் தவழும் உயர்ந்த மதிலையுடைய திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்னும் ஸ்தலத்தை வந்தடைந்தார். அந்நகர மக்கள் நகரை அலங்கரித்து அவரை வரவேற்றார்கள். அவர் திருக்கோயிலுக்குச் சென்று, திருப்பதிகம் பாடி அங்கிருந்து மேற்குநோக்கிச் சென்று ★திருநணா என்ற பவானித் திருப்பதிபகுதியையும் வணங்கிக் கொண்டு, திருக்கொடி மாடச் செங்கொன்றூருக்குத் திரும்பி வந்தார்.

அப்போது மழைக்காலம் நீங்கி முன் பனிப் பருவக்காலம் வந்தது. அதனால் வண்டுகள் வெறுத்து அகலும்படி தாமரை மலர்கள் முகம் உலர்ந்து வாடின. பளிங்கு மணியை மரகதக் கொடியில் கோத்ததைப் போல் அருகிலை நுனியில் பனித் துளிகள் பொருந்தியசைந்தன. பனி மிகுந்த வாடைக் காற்று, இரவும் பகலுமாக வீசிக் கொண்டிருந்தது. சூரியனும் தன் கிரணங்களை விரிக்க முடியாதவனைப் போல் சிறிது வெயிலடிப்பதும் மறைவதுமாக இருந்தான். வரிசையாக மாடங்கள்தோறும் ஆண்புறாக்கள் பெண் புறாக்களோடு ஒடுங்கியிருந்தன. மென்கூந்தலில் சண்பகப் பூச்சூடிய பெண்மணிகளின் வெப்பமான மார்பகங்களிலே ஆடவரின் பருத்த தோள்களும் மணிமார்பும் அடங்கி ஒடுங்கின. அங்கும் மஞ்சளையும் குங்குமப் பூவையும் சேர்த்து அரைத்து வைத்தனர். பெரிய அகிற் கட்டைகளால் புகையைப் பரவச்

★திருஈய்ங்கோய் மலை : இப்பொழுது திருலிங்கனாதமலையென வழங்கப்படுகிறது.

★ திருநணா : நண்ணாவூர்; இதனை வழிபடுவோர் எவ்விதத் தீங்கும் நண்ணார். இந்த ஊரில் பவானியாறும், காவிரியும் கூடுவதால் இதனைப் பவானிக்கூடல் என்றும் வழங்குகின்றனர்.

செய்தனர். நெருப்பை வீசும் அகன்ற வாய் உள்ள இரும்பு கனற் சட்டிகளைக் குளிர் காய்வதற்காக எங்கும் வைத்தனர்.

அக்காலத்தில் ஞானசம்பந்தரோடு வந்திருந்த பரிசனங்கள் பலநாளும் அந்தநாட்டிலேயே தங்கியிருந்ததால் அவர்களுக்கு குளிர்ஜுரம் பிடித்தது. அந்நோயின் கொடுமையை அடியவர்கள் ஞானப் பிள்ளையாருக்குத் தெரிவித்தார்கள். அதற்குப் பிள்ளையார், ‘‘இந்தச் சுரநோய் இந்த நிலத்திற்கு இயல்பானது. ஆயினும் அது நம்மை ஒன்றும் செய்யாது!’’ என்று கூறி சிவபெருமானை வணங்கி, ‘‘அவ்வினைக்கு இவ்வினை’’ என்று பாடலடி எடுத்து, ‘‘ஐயர் அமுது செய்த வெவ்விடம் முன் தடுத்து எம் இடர் நீக்கிய வெற்றியினால் எவ்விடத்தும் அடியார் இடர் காப்பது கண்டம்’’ என்று விரித்து ‘‘செய்வினை வந்து எமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்!’’ என்று செப்பி திருநீலகண்டத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அவர் தமது திருப்பதிகத்தின் இறுதியில் ஆண்டவனைத் துதித்து, ஆணையிட்டதனால் அந்தக் குளிர் சுரம் அந்த நகரை மட்டுமின்றி, அந்நாட்டையே விட்டகன்றது. சம்பந்தர், சில நாட்கள் அவ்வூரில் தங்கியிருந்து பிறகு திருப்பாண்டிக் கொடுமுடி, திருவெஞ்சமாக் கூடல், திருக்கருவூர் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று சிவபெருமானை வணங்கிப் பாமாலை சாத்தினார்; அங்கிருந்து சோழநாட்டு எல்லையை வந்தடைந்தார்.

அவர் முன்னதாக சோழநாட்டுக் காவிரித் தென்கரையிலுள்ள மாணிக்க மலை என்னும் திருவாட்போக்கித் தலத்தையும், ஆங்காங்கு கானகங்களிலும் குன்றுகளிலும் இருந்த சிவஸ்தலங்களையும் வணங்கிக் கொண்டு திருப்பராய்த் துறையை அடைந்தார். அங்கு அவர் திருப்பதிகம் பாடிவிட்டு அங்கிருந்து [1]திருவாலந்துறை, திருச்செந்துறை, திருக்கற்குடி மாமலை, [2]திருமூக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, [3]திருத்தவத்துறை, திருப்பாற்துறை, திருவெறும்பியூர், [4]திருநெடுங்களம், திருக்காட்டுப்பள்ளி, திருவாலம் பொழில், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை,

---

[1] திருவாலந்துறை : இத்தலம் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே சுமார் 7 மைல் தொலைவிலுள்ளது.

[2] திருமூக்கீச்சரம் : இது உறையூர் என வழங்கப்படுகிறது.

[3] திருத்தவத்துறை : இதனை ‘லால்குடி’ என அழைக்கின்றனர்.

[4] திருநெடுங்களம் : இதற்கு இன்றைய பெயர் திருநெட்டான் குளம்.

திருவேதிக்குடி, [1]திருவெண்ணி, திருச்சக்கரப்பள்ளி, திருப்புள்ள மங்கை, திருச்சேலூர், திருப்பாலைத்துறை, திருநல்லூர், திருக்கருகாவூர், திருவவளிவணல்லூர், [2]திருப்பரிதிநன்னியமம், திருப்பூவனூர், திருவாவூர் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று திருப்பதிகம் பாடி வணங்கிவிட்டு திருநல்லூருக்கு மீண்டும் போய் திருவலஞ்சுழியை அடைந்தார். பின் திருவலஞ்சுழியை விடுத்துத் திருப்பழயாறை நோக்கினார். திருவாறை மேற்றளி, திருச்சத்தி முற்றம் என்னும் தலங்களுக்குச் சென்று திருப்பட்டீச்சுரத்திற்குப் புறப்பட்டார். அப்பொழுது வெப்பம் அதிகமாயிருந்தது. அதைத் தணிக்க ஒரு சிவபூதம், பிள்ளையார் திருமுடிமீது முத்துப் பந்தரைப் பிடித்தது; பிடித்து ''இது பட்டீசர் திருவருள்'' என்று இயம்பிற்று. அவ்வுரையும் முத்துப் பந்தரும் வானத்திலே தோன்றின. ஞானப் பிள்ளையார் புளகாங்கிதம் கொண்டார்; திருவருளை வியந்தார்; பூமியிலே விழுந்து வணங்கினார். அடியார்கள் பந்தரின் கம்பைத் தாங்கினார்கள். காழிப் பெருமான் திருப்பட்டீச்சுரத்தை அடைந்து சிவபெருமானைத் தொழுது தேவாரம் பாடினார். பிறகு பிள்ளையார் அப்பதியை விட்டுப் புறப்பட்டு திருவாறை, வடதளி, [3]திருவிரும்பூளை, [4]திருவரதைப் பெரும்பாழி, [5]திருச்சேறை, திருநாலூர் மயானம், திருக்குடவாயில், திருநறையூர், [6]தென் திருப்பத்தூர், திருச்சிவபுரம், [7]திருக்குடமூக்கு, [8]திருக்குடந்தைக்

---

[1] திருவெண்ணி : இது கோயில் வெண்ணியெனவும் இச்சுபுரி எனவும் வழங்கப்படுகிறது.

[2] திருப்பருதிநன்னியமம் : இதை பருதியப்பர் கோயில் என்பர்.

[3] திருவிரும்பூளை : இதனை ஆலங்குடி என வழங்குகின்றனர். நீடாமங்கலத்திலிருந்து கும்பகோணம் செல்லும் கற்சாலையில் இருக்கிறது. பூளை என்ற செடி கோயிலின் தல மரமாயிருப்பதால் இப்பெயர் பெற்றது.

[4] திருவரதைப் பெரும்பாழி : இதனை ஹரித்துவாரமங்கலம் என்று வழங்குகின்றார்கள்.

[5] திருச்சேறை : உடையார் கோயில் என்று இதனை வழங்கு கின்றனர்.

[6] தென் திருப்பத்தூர் : இதனை அரிசிற்கரைப்புத்தூர், அழகாற் புத்தூர், செருவிலிப் புத்தூர் என்று வழங்குகின்றனர்.

[7] திருக்குடமூக்கு : இதுதான் கும்பகோணம்.

[8] திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் : இது கும்பகோணத்திலுள்ள நாகேஸ்வர ஸ்வாமி கோயிலைக் குறிக்கும்.

கீழ்க்கோட்டம், [1]திருக்குடந்தைக் காரோணம், திருநாகேச்சரம், திருவிடைமருதூர், [2]திருக்குரங்காடுதுறை முதலிய திருப்பதிகளை வணங்கித் திருப்பதிகங்கள் பாடிச்சென்று திருவாடுதுறையை அடைந்து இறைவனை வணங்கி பாமாலை பாடி அங்கே தங்கலானார்.

ஒருநாள் அவருடைய தந்தையான சிவபாதவிருதயர் தம் பிள்ளையாரை நோக்கி, ''வேள்வி செய்யும் காலம் நெருங்க லாயிற்று. அதற்குப் பொருள் தேவை'' என்றார். திருஞான சம்பந்தர், திருக்கோயிலுட் சென்று, ''நீள் நிதிவேண்டினார்க்கு ஈவது ஒன்றும் அற்றிலேன்! உன்னடி அல்லது ஒன்றும் அறியேன்!'' என்று இறைவனுக்குத் தமிழ்மாலை சாத்தினார். சாத்தினதும் சிவபெருமான் திருவருளால் ஒரு பூதம் விரைந்துவந்து பலிபீடத்தின் உச்சியில் ஆயிரம் பொன் கொண்ட ஒரு கிழியை (ஒருபொன் முடிப்பை) வைத்தது. பிறகு அந்தப் பூதம், பிள்ளையார் திரு முன்னே நின்று ''இது பொற்கிழி! எடுக்க எடுக்கப் பொன்குறையாது! இது உமக்குச் சிவபிரானால் அருளப்பட்டது!'' என்று சொல்லிற்று; உடனே பிள்ளையார் திருவருளை நினைந்து வியந்து, பூமியில் விழுந்து வணங்கினார். பிறகு அப்பொற்கிழியைப் பிள்ளையார் எடுத்து வந்து தம் தந்தையார்க்குத் தந்து, அவரைச் சீர்காழிக்கு அனுப்பினார். பிறகு ஞானப் பிள்ளையார் திருவாவடுதுறையை விடுத்துத் [3]திருக்கோழம்பம், திருவைகமாடக்கோயில், [4]திருநல்லம், [5]திருவழுந்தூர், திருத்துருத்தி, மூவலூர், [6]திருமயிலாடுதுறை, [7]திருச்செம்பொன் பள்ளி, திருவிளநகர்,

---

[1]திருக்குடந்தைக் காரோணம் : இது கும்பகோணத்திலுள்ள காசி விசுவநாதர் கோயிலாகும்.

[2]திருக்குரங்காடுதுறை : இதனை ஆடுதுறை என வழங்கு கின்றனர்.

[3]திருக்கோழம்பம் : இதனை இப்போது குழம்பியம் என்று வழங்குகின்றனர்.

[4]திருநல்லம் : இப்பொழுது 'கோனேரி ராஜபுரம்' என வழங்கப் படுகிறது.

[5]திருவழுந்தூர் : இது கம்பன் பிறந்த ஊர். தேரளந்தூர் என வழங்கப்படுகிறது.

[6]திருமயிலாடுதுறை : இதனை மாயூரம் என்றும் மாயவரம் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

[7]திருச்செம்பொன் பள்ளி : இது செம்பொனார் கோயில் என்று வழங்கப்படுகிறது.

★ திருப்பரியலூர், திருவேட்டக்குடி முதலிய திருப்பதிகளுக்குப் போய் ஆங்காங்கே தமிழ்மறை ஓதித் தருமபுரத்தை அடைந்தார்.

தருமபுரம், திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அன்னையார் பிறந்த திருப்பதி. அத் திருப்பதியிலுள்ள பாணரின் சுற்றத் தாரும் அடியவர்களும் பிள்ளையாரை எதிர்கொண்டார்கள். யாழ்ப்பெரும்பாணர், தம் சுற்றத்தவர்களைப் பார்த்து, ''இப்பெருமான் அருளிச்செய்த திருப்பாக்களின் இசையை யான் யாழிலிட்டு வாசிக்கும் பெரும் பேறுடையேன்'' என்று கூறினார். அதற்குச் சுற்றத்தவர்கள் ''நீங்கள் இப்பேற்றை உடமையால் உலகமெல்லாம் இசை வளர்ந்து ஓங்குக!'' என்றார்கள். அவர்கள் உரை திருநீலகண்டப் பெரும்பாணரை நடுக்குறச் செய்தது. பாணர், ஞான சம்பந்தப் பெருமான் திருவடிகளிலே விழுந்து வணங்கிப் ''பெருமானே! இசைக்கும் அடங்காத தங்கள் திருப்பதிகத்தின் பெருமையை இவர்கள் அறியவேண்டும். உலகமும் உண்மையுணர்தல் வேண்டும்; இசை அளவு படாமுறையில் ஒரு திருப்பதிகம் தாங்கள் பாடியருளவேண்டும்! அதை யான் யாழிலிட்டு வாசித்து இசை அடங்காமையைக் காட்டும் பேறு பெறுதல் வேண்டும்!'' என்று வேண்டினார். அவ்வாறே ஞானசம்பந்தர், ''மாதர் மடப்பிடி'' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்.

அதை வழக்கம்போல் யாழ்ப்பெரும்பாணர் தம் யாழிலே அமைத்து வாசிக்க முயன்றார். ஆனால் அந்தப் பதிகத்தின் இசையானது யாழின் நரம்பில் அடங்கவில்லை . உடனே யாழ்ப்பாணர் மெய்ப் பயமும் பரிவும் மிகுந்தெழ ஞானசம்பந்தரைப் பணிந்து எழுந்து, ''இப்பெரியவர் பாடிய திருப்பதிகத்தின் இசையை என் யாழில் ஏற்பேன், என்று என்னைச் சொல்லச் செய்தது இந்த யாழன்றோ; இதை யான் தீண்டுதலும் கூடாது!'' என்று அதை உடைக்க ஓங்கினார். உடனே காழிவள்ளலார் அவரைத் தடுத்து யாழை வாங்கிக் கொண்டார். ''நீர் எதற்காக இதை உடைக்க முயன்றீர்? உமாதேவியாரோடு சிவபெருமான் அளித்த காட்சி திருவருளின் பெருமை இவ்யாழில் அடங்குமோ? சிந்தையிலும் அளவுபடாத ஒன்று செய்கையில் அளவு படுதல் உண்டோ! இக்கருவியைக் கொண்டே இறைவரின் திருப்பதிக இசையை இயன்றளவு வாசியும்!'' என்று யாழைக் கொடுத்தார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிள்ளையாரைத் தொழுது யாழை தம் தலைமீது வாங்கிக் கொண்டார்.

★ திருப்பரியலூர் வீரட்டம் : இங்கு சிவபெருமான் தக்ஷனை தண்டித்தார். தற்போது பரிசலூர் என்று வழங்கப்படுகிறது.

அதன் பிறகு சம்பந்தர், தருமபுரத்தை விட்டுப் புறப்பட்டு வேறு பல ஸ்தலங்களை வணங்கிக் கொண்டு ★ திருநள்ளாறு என்ற ஸ்தலத்திற்கு யாழ்ப்பாணருடன் சென்றார். அங்கிருந்த திருத்தொண்டர்கள் அவரை எதிர்கொண்டு வணங்கி வரவேற்றனர். ஞானசம்பந்தர் அவர்களையும் அழைத்துக்கொண்டு திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி, 'போகமார்த்தப் பூ முலையாள்' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாணரின் யாழ் நரம்பிலே இசை கூடும்படி கைத்தாளமிட்டுப் பாடிவிட்டு திருச்சாத்தமங்கை என்னும் மூதூருக்குச் சென்றார். அந்த ஊரில் வாழ்ந்து வந்த திருநீலநக்க நாயனார் தம் ஊருக்கு திருஞான சம்பந்தர் வருவதைக் கேள்விப்பட்டு நகரை அழகுபடுத்தி, தோரணங்களை வீதியெங்கும் கட்டி, வாழைக் கமுக மரங்களை நட்டு பூரணக் கலசங்களில் தூப தீபங்களை ஏற்றிவைத்து தம் அடியார்களோடு வந்து முறைப்படி திருஞான சம்பந்தரை எதிர்கொண்டார். பிறகு எல்லோருமாகச் சேர்ந்து அயவந்தி என்னும் திருக்கோயில் சென்று, திருமுன்றிலை வலம் வந்து இறைவன் முன்பு நின்று வணங்கித் துதித்தனர். பிறகு திருஞானசம்பந்தர், திருநீலநக்க நாயனாரின் வீட்டுக்குச் சென்றார். அவருக்கும் யாழ்ப்பாணர் முதலான அடியவர்களுக்கும் வேதியரான திருநீலநக்க நாயனார் அன்போடு விருந்தளித்தார். அங்கு ஞானசம்பந்தர் அடியவர்களோடும் அந்தணர்களோடும் திருவமுது செய்து அன்றிரவு அவ்வேதிய நாயனாரின் இல்லத்திலேயே யாழ்ப்பாணரையும் படுத்துறங்கச் செய்து தாமும் தங்கிப் பள்ளிகொண்டார்.

மறுநாள் அதிகாலையில் ஆளுடைய பிள்ளையார் அயவந்திக்குச் சென்று இறைவன் திருவடிகளை வணங்கி "திருமலர் கொன்றை மாலை" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி அதில் திருநீல நக்கரை சிறப்பித்தார். பிறகு திருநீலநக்க நாயனார் விரும்பியவாறு அவருடைய வீட்டில் ஞானசம்பந்தர் சில நாட்கள் தங்கி நாயனாரின் பெருநட்பில் மகிழ்ந்திருந்து அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். ஆளுடைய பிள்ளையார், பல ஸ்தலங்களையும் வணங்கிக்கொண்டு திருத்தொண்டர் கூட்டம் சூழ்ந்துவர திருநாகைக் காரோணம் சென்று இறைவனைத் துதித்து தமிழ்ப் பாமாலைகள் பாடி அங்கு சிலநாள் தங்கியிருந்தார்.

★ திருநள்ளாறு : இது நளனுக்கு நன்னெறியைக் காட்டியதால் பெற்ற பெயராகும். நல்லாறு என்பது நள்ளாறு என மருவியுள்ளது. அரிசி நெற்றுக்கும், வாஞ்சை நதிக்கும் இடையில் இருக்கும் ஊர்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சிவ ஸ்தலங்கள் பலவற்றையும் தரிசித்து [1]திருக்கீழ் வேளூர் என்னும் சிவத்தலத்தை அடைந்து, வணங்கித் திருப்பதிகம் பாடிப் பிற ஸ்தலங்களையும் தரிசிக்க எழுந்தருளினார். இவ்வாறு திருஞான சம்பந்தர் பல பதிகளை வணங்கித் துதித்து வருகின்ற செய்தியை திருத்தொண்ட நாயனார் கேட்டு, திருச் செங்காட்டான் குடியிலிருந்து பேராசையோடு ஓடிச்சென்று, உள்ளம் உருகி எதிர்கொண்டு வரவேற்று வணங்கி, தமது ஊருக்குச் சிறப்பாக அழைத்துச் சென்றார். எட்டுத் திசைகளிலும் புகழடைந்திருந்த அந்த சிறுத்தொண்ட நாயனாரோடு ஞானசம்பந்தர் திருச்செங்காட்டான் குடிக்கு எழுந்தருளினார். நாயனாரின் நட்பை மிகமிக விரும்பினார். எல்லா போகங்களையும் வெறுத்துத் துறந்து பிச்சையெடுத்துண்டு களிப்புற்றிருக்கும் மெய்யான சிவனடியார்களுடனே கூடிச் சென்று ''கணபதீஸ்வரம்'' என்ற திருக்கோயிலை அடைந்தார்.

அக்கோயிலை வலம் வந்து கோயிலின் உள்ளே நுழைந்து ''பைங்கோட்டு மலர்ப்புன்னை'' என்னும் திருப்பதிகத்தை ஓதி, அதிலே சிறுத்தொண்ட நாயனாரைச் சிறப்பித்தார். அவ்வூரிலேயே சில நாள் தங்கி சிறுத்தொண்டநாயனாரின் வீட்டு விருந்தினராக இருந்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு [2]திருமருகல் என்னும் திருப்பதியை அடைந்து, இறைவனை வழிபட்டு வந்தார்.

திருமருகல் திருக்கோயிலினருகே ஒருமடம் இருந்தது. அந்த மடத்திலே வழிபோக்கனான ஒரு வணிகன் ஒரு கன்னி இளம் பெண்ணையும் தன்னுடன் அழைத்துக் கொண்டுவந்து, தங்கியிருந்தான். அன்றிரவு, அவன் அந்த மடத்தில் தங்கும் சமயத்தில் அவனை ஒரு பாம்பு தீண்டியது. அதனால் விஷம் தலைக்கேறி அந்த வணிகன் சாகக்கிடந்தான். அதைக் கண்டு அங்கிருந்த கன்னிப் பெண், நிலை தளர்ந்து சோர்ந்தாள். கல்யாணமாகாத கன்னிப் பெண்ணாகையால் பாம்பு தீண்டிய காதலனைத் தன் கையால் தீண்டவும் முடியாமல், ஆறுதல் மொழி கொடுப்பார் யாரும் இல்லாமல், அழுதாள். ஆண் சிங்கம் போன்ற வணிகனின் உடலருகே அந்த கட்டிளம் கன்னிகையும் விழுந்து பூங்கொடி போல் கொழுகொம்பின்றி

---

[1] திருக்கீழ்வேளூர் : இது முருகன் சிவபெருமானை வழிபட்ட ஸ்தலம்.

[2] திருமருகல் : இது ஒருவகை வாழை மரத்தைக் குறித்து வந்த பெயர். இது நன்னிலத்திற்குக் கிழக்கே சுமார் ஐந்து மைல் தொலைவிலுள்ளது.

அசைந்து பதறி ஓவெனக் கதறியழுதாள். அப்போது மாந்திரிகர்கள் ஓடிவந்து கருணையும் இடியையும் போல் பாவித்து மணிமந்திர ஔஷதங்கள் மூலம் விஷத்தைத் தீர்க்க முயன்றனர். விஷம் இறங்கவில்லை. அதனால் கூந்தலில் பூச்சூடிய அந்தக் கட்டிளங்கன்னி விடியற்காலை வரையிலும் மிக அயர்ந்து புலம்பலானாள். ‘‘வணிகர் குலமணியே! என் தாயையும் தந்தையையும் பிரிந்து உன்னையே அடைவாகக் கொண்டு உன்னுடன் வந்தேன். நீயோ பாம்பு தீண்டி வீழ்ந்தாய்! என்னை உயிரோடு விட்டகன்றாய்! இனி நான் என்ன செய்வேன்? இந்த இடையூற்றைத் தீர்ப்பதற்கு இங்கு எவரும் இல்லையே! நான் எப்படி உயிரோடு வாழ்வேன்!’’ என்று புலம்பினாள்.

அதற்கு மேல் திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்று அவள் எண்ணம் கொண்டாள். உடனே திருக்கோயிலின் வாசல் இருக்கும் திசையை அவள் நோக்கி, ‘‘ஆண்டவனே! அடியார்களான தேவர்களைக் காப்பதற்காகப் பாற்கடலில் எழுந்த நஞ்சையுண்டாய்! அமுதம் போன்றவனே! திருமாலும் பிருமனும் அறியவொண்ணாத கோலமுடையவனே! பாம்பு அணிந்த சிவபெருமானே! மன்மதனைச் சுட்டெரித்து வெந்த பொடியாக்கினாய்! பிறகு அவன் மனைவி வேண்ட, அவனுக்கு உயிரைக் கொடுத்தாய்! புண்ணியனே! மார்க்கண்டேயனது உயிரைப் பறிக்கச் சீறி வந்த காலனையும் நிலத்தில் விழுந்து உருளும்படி உதைத்தருளினாய்! அத்தகைய திருவடிகளை யுடையவனே! அந்தி மதியுடைய செஞ்சடையோனே! மருகன் பெருமானே! இந்த விஷத்தின் கொடிய வேகம் இவரை விட்டு நீங்கும்படியும் துன்பப் படுகுழியிலிருந்து நான் கரையேறும்படியும் நீதான் அருள வேண்டும்!’’ என்று அக்கன்னிகை சிவபெருமானைச் சிந்தித்து ஏங்கி ஏங்கி அழுதாள். இவ்விதமாக அந்தப்பெண், சிவபெருமானையே நினைத்து, அழுது புலம்புகின்ற ஓசையானது அந்த நேரத்தில் மருகற் பெருமானை வணங்க வந்திருந்த திருஞான சம்பந்தரின் திருச்செவியில் விழுந்தது. உடனே கருணைக் கடலாகிய காழி வள்ளலார்,

அந்தக் கன்னியின் துயர்தீர்க்க அவளிருக்கும் இடத்திற்கு அடியவர்களுடன் சென்றார். அங்கு இளம் அன்னம் போன்ற அந்த இளம் பெண் சிவனருளை நினைத்து சிந்தை நைந்து, பரிதவித்து இளங் கொடிபோல் தத்தளிப்பதைக் கண்டார். உடனே அவர் அப்பெண்ணை நோக்கி, ‘‘நீ சிறிதும் பயப்படாதே! இங்கு நிகழ்ந்ததென்ன?’’ என்று கேட்டார். அந்தப் பெண் தன் தலைமீது கைகளைக் குவித்துக் கண்ணீர் சொரிய

''அடிகளே! வளமை பொருந்திய சோலைகள் நிரம்பிய ★வைப்பூர் என்பது எனது ஊர். அவ்வூர்த் தலைவனான தாமன் என்பவர் என் தகப்பன். இவன் என் தகப்பனுக்கு மருகன், என் தந்தைக்கு பெண் மக்கள் ஏழுபேர். அவர்களில் மூத்தவளை இவனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதாக என்தந்தை உறுதிமொழி கூறினார்; பிறகு வேறொருவனிடம் பெரும் பொருள் பெற்று அவளை அவனுக்குக் கொடுத்தார். பிறகு இரண்டாவது பெண்ணை இவனுக்குக் கொடுப்பதாகச் சொன்னார். ஆனால் அவளையும் அயலானுக்குக் கொடுத்துவிட்டார். இவ்வாறு என் தந்தை இவனை ஏமாற்றி ஏமாற்றி நான்கு புத்திரிகளையும் அயலாருக்கே திருமணம் செய்து கொடுத்து விட்டார். அதனால் மனம் தளர்ந்த இவனுக்காக நான் பரிவும் அன்பும் கொண்டு என் தாய் தந்தையரை விட்டு இவனையே, சார்வாகக் கொண்டு இவனோடு ஓடிவந்தேன். இது என் தாய் தந்தையருக்குத் தெரியாது. இவனோ இங்கே பாம்பினால் கடிக்கப்பட்டு மாண்டு விட்டான்! நானோ நடுக்கடலில் கப்பல் கவிழ்ந்துவிட்டதுபோல் நிற்கிறேன். என் நிலை இதுவாகும்! சுற்றம்போல் நீங்கள் வந்து தோன்றினீர்! என் துயரமெல்லாம் நீங்க அருள் செய்வீர்!'' என்று கூறினாள்.

அதைக் கேட்டதும் திருஞானசம்பந்தர் அக்காரிகைக்குக் கருணை நல்க முனைந்து, திருவருள் செய்யும்படியாகத் திருமருகப் பெருமானை நோக்கி வணிகனைத் தீண்டிய பாம்பின் விஷம் நீங்கும்படி ''சடையாய் எனுமால்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே வணிகன் விஷம் தீர்ந்து எழுந்து நின்றான். பிள்ளையாரைச் சூழ்ந்திருந்த திருத்தொண்டர்கள் ''ஹரஹரா'' என்று மிகவும் ஆரவாரம் செய்தனர். அக்கன்னியும், வணிகனும் உச்சி மீது கை குவித்துக் கும்பிட்டு திருஞான சம்பந்தரின் காலடிகளில் விழுந்து வணங்கினார்கள். நங்கை அவள் நயந்த நம்பியோடு நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம் ஞான சம்பந்தர் அவ்விருவருக்கும் திருமணம் புரியும் பெருவாழ்வு வகுத்துத் தந்தார். பிறகு அவர், அவர்களுக்கு விடை தந்தனுப்பி விட்டு, திருமருகலில் சிலகாலம் தங்கியிருந்தார். அப்படியிருக்கும் போது சிறுத்தொண்ட நாயனார் திருமருகலுக்கு வந்தார். சம்பந்தரை வணங்கி, மீண்டும் தம் ஊரான திருச்செங்காட்டங் குடிக்கு எழுந்தருளுமாறு வேண்டினார். திருஞான சம்பந்தர்

★ வைப்பூர் : இது திருமருகலுக்குத் தென்மேற்கே சுமார் 20 மைல் தொலைவிலுள்ளது. இவ்வூர் செல்ல வேண்டுமானால் புத்தாறு, வரப்பாறுகளைக் கடந்து செல்ல வேண்டும்.

இறைவன் திருவருளைப் பெற நினைந்து சிவனடியார் திருக்கூட்டத்தோடு திருமருகக் கோயிலினுள்ளே சென்று அம்மையப்பரை வணங்கினார். அப்போது சிவபெருமான், சிறுத் தொண்டரின் சொந்த ஊரான திருச்செங்காட்டன்குடியில் மேவும் கணபதீச்சரத்தாரது பெருமை மிக்கத் திருக்கோலத்தை இங்கு காட்டியருளினார். அதைக் கண்ட பிள்ளையார் ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பெருக இரண்டு பதிகளையும் சேர்த்து ''அங்கமும் வேதமும் ஓதுவார்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி திருமருகற் பெருமானை வணங்கிச் சிறுத்தொண்டருடன் திருச்செங்காட்டன்குடிக்குச் சென்று தங்கியிருந்தார். பிறகு அங்கிருந்து வேறு பல திருப்பதிகள் சென்று தொழுது, திருப்புகலூரை அடைந்தார்.


அவ்வூரில் சிவமூர்த்திக்குப் புஷ்பத்தொண்டு செய்து வந்த முருகநாயனார் பெரும் விருப்பத்தோடு ஞானசம்பந்தர் பிள்ளையாரை எதிர் கொண்டழைத்தார். பிள்ளையார் அவருடன் திருக்கோயில் சென்று, இறைவனைத் தொழுது முருக நாயனாரின் திருமடத்திற்குச் சென்று அங்கே நாயனாரின் விருந்தினராய்த் தங்கியிருந்தார்.

ஒருநாள் அவர் வழக்கம்போல் திருக்கோயிலுக்குச் சென்று பெருகி எழும் அன்போடு முருக நாயனாரின் திருத்தொண்டைச் சிறப்பித்து, ''ஈசன் ஏறமர் கடவுள்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். அவ்வேளையில் திருநாவுக்கரசு நாயனார் தம் தொண்டர் கூட்டத்தோடு திருவாரூர் பெருமானை வணங்கி விட்டு திருப்புகலூரை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அவரது வருகையை அறிந்த திருஞானசம்பந்தர், சிந்தையில் அன்பு மேலிட விரைந்து சென்று அவரை எதிர் கொண்டார். இருவரும் ஒருவரையொருவர் தமது அன்பின் முறைமையால் எதிர்வணங்கி, தனித்தனியே நல்வரவு நலம் வினவி மகிழ்ந்தனர்.

ஞானசம்பந்தர் விருப்போடு திருநாவுக்கரசரை நோக்கி, ''அப்பரே! நீர் திருவாரூரை எவ்வகையில் தொழுது உய்ந்தீர்?'' என்று கேட்க திருநாவுக்கரசர் தாம் கண்ட திருவாதிரைத் திருநாள் சிறப்பைச் செந்தமிழ் பாடல் வாயிலாகவே விளக்கிக் காட்டினார். அதைக் கேட்டவுடனேயே திருஞான சம்பந்தருக்குத் திருவாரூரைக் காணவேண்டுமென்று வேட்கை மிகுந்தது. அவர் அப்பர் சுவாமிகளை நோக்கி, ''நான் திருவாரூருக்குச் சென்று இறைவனை போற்றிசைத்துவிட்டு மீண்டும் வந்து உம்மிடம் மகிழ்வேன்!'' என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

திருஞான சம்பந்தர் ★திருவிற்குடிக்குச் சென்றார். அங்குள்ள இறைவனைப் பல ஆயிரம் தொண்டர்களோடும் தொழுதார். அங்கிருந்து ''பாடல நான்மறையன்'' என்ற திருப்பதிகப் பாடலடி எடுத்து ''ஆதிரையன் ஆரூர் அமர்ந்தானே'' என்று பாடிக்கொண்டே போனார். அவர் செல்லும் வழியின் இருமருங்குகளிலும் பூங்கொத்துக்கள் உள்ள சோலைகளும், நீர்த் துறைகளும் கரும்புக் காடுகளும் காட்சியளித்தன. அவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்த பிள்ளையார் தாம் பாடிக்கொண்டு செல்லும் பதிகத்தில் ''அள்ளலகன் கழனிஆரூர் அடைவோமே'' என்று கூறி திருவாரூர் எல்லைப்புறத்தை அடைந்தார். அங்குள்ள அடியார்கள் பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்தார்கள். திருவாரூர் பொன்னுலகம் போல பேரொளியோடு விளங்குவதைக் கண்ட பிள்ளையார் 'பருக்கை யானை' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி திருவாரூரின் எல்லையை அடைந்தார். ஒளி வீசும் முத்துச் சிவிகையிலிருந்து கீழே இறங்கி கை நிறைய மலர்களைக் கொண்டு தூவி அர்ச்சித்து ''திருவிருக்குக் குறள்'' பாடித் துதித்து திருவாரூர்ப் பெருநகரினைப் பணிந்தார்.



அழகாக அலங்கரிக்கப்பட்ட திருவாரூர்ப் பெருநகரில் மங்கல வாழ்த்தொலிகள் வரவேற்கத் தொண்டர்கள் சூழ திருஞான சம்பந்தர் திருக்கோயிலின் திருவாயிலையடைந்து, உள்ளே சென்று எல்லாப் பெருமைகளும் நிறைந்த தேவாசிரிய மண்டபத்தைத் தொழுது எழுந்தார். அதன் பின்பு அவர் நாள்தோறும் தியாகேசப் பெருமானைத் தொழுது, பதிகங்கள் பாடிவந்தார். அவ்வூர் திருமடத்தையடைந்து அங்கு தங்கினார்.

★ திருவிற்குடி : இது ஜலந்திரனை சங்கரித்த ஸ்தலம். மலைமேல் கட்டப்பட்ட கோயில்.

ஆரூர் அறநெறியையும் தரிசித்து வந்தார். இடையில் ★ திருவலிவலம். திருக்கோளிலி முதலிய திருப்பதிகளுக்குச் சென்று இறைவனை வணங்கிப் பாமாலைகள் பாடி மீண்டும் திருவாரூரை அடைந்தார். அப்போது அவருக்கு அப்பர் சுவாமிகளான நாவுக்கரசரின் நினைவு தோன்றியது. உடனே அவர், ''பவனமாய்ச் சோடை யாய்'' என்னும் திருப்பதிகம் பாடி திருவாரூரை விட்டு, திருப்பனையூரைத் தொழுது கடந்து திருப்புகலூரைச் சேர்ந்தார். திருநாவுக்கரசு சுவாமிகளும் முருகநாயனாரும் திருத் தொண்டர்களும், திருஞான சம்பந்தரை எதிர்கொண்டு வணங்கி வரவேற்றார்கள். எல்லோருமாகத் திருக்கோவிலுக்குச் சென்றார்கள். ஞானசம்பந்தப் பிள்ளையார் ஆண்டவனைத் தொழுது பாடினார். பிறகு முருக நாயனாரின் திருமடத்தில் தங்கியிருந்தார். அச்சமயத்தில் திருநீலநக்க நாயனாரும், தொண்ட நாயனாரும் திருப்புகலூருக்கு வந்து சுவாமிகள் இருவருடனும் கலந்து கொண்டார்கள்.

பிறகு திருஞானசம்பந்தர் திருப்புகலூர்ப் பெருமானின் புகழையும், திருப்புகலூரின் பெருமையையும் சிறப்பிக்க ''குறிகலந்த இசை'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் மற்றும் பல திருப்பதிகளைக் காண விரும்பினார்கள். அவர்கள் ஆணைப்படி முருக நாயனார் திருப்புகலூரிலேயே இருக்க இசைந்தார். திருநீலநக்க நாயனாரும், சிறுத்தொண்ட நாயனாரும் தத்தம் ஊர்களுக்குச் செல்லச் சம்மதித்தார்கள். ஞானப் பிள்ளையாரும் அப்பரும் புறப்பட்டார்கள். அப்பொழுது திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரின் பக்கத்தை விட்டு நீங்காமலிருப்பதற்காகத் தம் முத்துச் சிவிகை முன்னேவர வழி நடந்து சென்றார். அப்போது திருநாவுக்கரசர் தம்மோடு நடந்துவரும் ஆளுடைய பிள்ளையாரை நோக்கி ''சிவபெருமான் உமக்கு முத்துச் சிவிகையருளியுள்ளார். அதன்மீது எழுந்தருள்வீர்!'' என்றார். ஆளுடைய பிள்ளையாரோ ''இது திருவருட் குறிப்பு போலும்!'' என்று எண்ணி, ''அப்பரே! உம் தொண்டர்களுடனே நீர் முன்னதாகச் செல்லும். நீர் போய்ச் சேர்வது எந்தத் தலமோ, அங்கு நான் பின் தொடர்ந்து வந்து சேர்வேன்!'' என்று கூறினார். அப்பர் சுவாமிகள் அதற்கிசைந்து அன்று முதல் அவ்விதமே செல்வாராயினர்.

★ திருவலிவலம் : வலியான் என்னும் கரிக்குருவி பூஜித்துப் பேர் பெற்ற ஸ்தலம்.

அப்பர் சுவாமிகள் தம் அடியார்களுடன் நடந்து, ★திருவம்பர் மாகாளம் என்னும் திருத்தலத்தை அடைந்தார். திருஞானசம்பந்தர் முத்துச் சிவிகையேறிப் புறப்பட்டார்.

வழிநெடுக ''அப்பர் எங்கே? எங்கே?'' என்று வினவிக் கொண்டு திருவம்பருக்கு வந்து சேர்ந்தார்.

இருவரும் திருக்கோயிலுக்குச் சென்றனர். அங்கே பிள்ளையார் ''எரிதர வணக்கை'' என்னும் திருப்பதிகம் பாடி, அக்கோயிலைக் கட்டிய கோச் செங்கண் சோழ நாயனாரை அத்திருப்பதிகத்தில் சிறப்பித்தார். பிறகு இருவரும் அடியார்களுடன் திருக்கடவூர் சென்றனர். அங்கே அவர்கள் வருகையை அறிந்த குங்குலியக் கலயநாயனார், தம் சிவனடியார் கூட்டத்தோடு வந்து சுவாமிகள் இருவரையும் வணங்கினார். திருஞானசம்பந்தர், திருக்கடவூர் திருக்கோயிலை வலம் வந்து காலனை உதைத்து உருட்டிய கடவுளைத் தொழுது, ''சடைவுடையான்'' என்று தொடங்கும் இசை பொருந்திய திருப்பதிகம் பாடித் துதித்தார்.

பிறகு நாவுக்கரசரோடு குங்குலியக் கலய நாயனாரின் திருமனையில் அவருடைய விருந்தினராகத் தங்கியிருந்தார். அங்கு குங்குலியக் கலயர் அன்புடனளித்த விருந்தினை மிக விரும்பியுண்டு மகிழ்ந்திருந்தார். பிறகு திருக்கடவூர் மயானத்தையும் பணிந்து கொண்டு அவ்வூரில் சில நாட்கள் தங்கியிருந்தார்.

அதன் பிறகு திருஞான சம்பந்தர், பிற சிவத்தலங்களைத் தரிசிக்க விரும்பினார். அவர் தம்முடன் சிவனடியார்களையும் அழைத்துக் கொண்டு, திருஆக்கூர் என்ற ஊரை அடைந்தார். அங்குள்ள தான்தோன்றிமாடம் என்னும் திருக்கோயிலை அடைந்து, செஞ்சடைக் கடவுளைப் பணிந்து திருப்பதிகம் பாடினார். அங்கிருந்து புறப்பட்டுச் சென்று திருமீயச்சூர் என்னும் தலத்தைப் பணிந்து திருப்பாம்புரம் என்னும் ஊரையும் அடைந்து, வணங்கி இன்னிசை பொருந்திய திருப்பதிகங்கள் பாடியருளினார். அதன் பிறகு அவர் திருவீழி மிழலையை அடைந்தார். அங்கு முன்னதாகவே வந்த திருநாவுக்கரசர் மூலம் திருஞானசம்பந்தர் பிற்பட வருவதை அவ்வூர் மக்கள் அறிந்ததும் முன்னால் வந்தருளிய

★ திருவம்பர் மாகாளம் : அம்பன், அம்பாசுரன் என்ற இரண்டு அரக்கர்களை சங்காரம் செய்த பழிதீர காளிதேவி பூஜித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது. திருவம்பர் – ஊரின் பெயர். மாகாளம் என்பது கோயிலின் பெயர்.

திருநாவுக்கரசரை வரவேற்றதைப் போலவே திருஞான சம்பந்தரையும் வரவேற்க முனைந்தனர். அந்தணர்கள் மிகவும் மகிழ்ந்து பூரண கும்பங்களையும் தூப தீபங்களையும் ஏந்தி, மலர்களையும் பொற்சுண்ணங்களையும் தூவி, வேதவொலி வானத்திலும் போய் எதிரொலிக்கவும், முரசுகள் முழங்கவும், திருஞான சம்பந்தரை எதிர்கொண்டு வணங்கினார்கள். அப்போது திருஞான சம்பந்தரும், முத்துச் சிவிகையிலிருந்து இறங்கி, அம்மறையவர்களோடு கூடி திருநகரினுள்ளே புகுந்து, ''அரையார் விரிகோவண ஆடை'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி, இருகைகளையும் தலைமீது கூப்பியவாறு, நாவுக்கரசரோடு நாதர் கோயிலுக்குள் சென்றார்.

திருமால் வழிபடுவதற்காக, விண்ணிலிருந்து இறங்கிய விமானக் கோயிலைக் கண்டு வியந்து களிப்படைந்தார். கோயிலுக்குள் சென்று, இறைவன் திருமுன்பு நின்று, ''சடையார் புனலுடையான்'' என்று தொடங்கும் திருப் பதிகத்தைப் பாடினார். சிவானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கினார். பாடிப் பரவிய பின் அருட்கூத்து ஆடிய திருவடிகளைத் தியானித்த வண்ணம் ஞானசம்பந்தர் அத்திருக் கோயிலுக்கு வெளியே வந்தார். அங்கு, மதிலின் புறத்தே இருந்த ஒரு பெரிய மடத்தில், சொல் வேந்தராகிய திருநாவுக்கரசர் சிவனடியார்களுடன் தங்கியிருந்தார். திருஞான சம்பந்தர், கிழக்கே இருந்த திருமடத்தில் தங்கியருளினார். அவர் பூஜைக் காலங்கள் தோறும் திருநாவுக்கரசருடன் திருக்கோயிலுக்குச் சென்று இறைவனைப் போற்றிசைத்து வந்தார். இடையில் ★ திருப்பேணு பெருந் துறையையும், ★ திலதைப் பதிமதி முத்தத்தையும் சென்று வணங்கித் திருவீழிமிழலைக்குத் திரும்பினர்.

இவ்வாறு திருவீழிமிழலையில் இருக்கும்போது, சீர்காழி அந்தணர்கள் திருஞான சம்பந்தரைக் காணவேண்டும் என்ற

★ திருப்பேணு பெருந்துறை : இது திருப்பந்துறை என வழங்கப்படுகிறது. மாணிக்கவாசகப் பெருமானுக்கு இறைவன் அருள்புரிந்த திருப்பெருந்துறை வேறு.

★ திலதைப்பதி மதிமுத்தம் : இங்கு ராம லக்ஷ்மணர் தமது தந்தையான தசரதருக்கு திலதர்ப்பணம் செய்ததால் திலதைப்பதி யென்றும், சந்திரன் பூஜித்து மோட்சமடைந்ததால் மதிமுத்தம் என்றும் இத்தலம் பெயர் பெற்றது. திலதைப்பதியென்பது ஊரின் பெயர். மதிமுத்தம் என்பது திருக்கோயிலின் பெயர். இப்பொழுது சிவனைப்பதியென்று மருவி வழங்கி வருகிறது.

பேராவலோடு, திருவீழிமிழலைக்கு வந்தனர். இதையறிந்த திருவீழி மிழலை அந்தணர்கள் சீர்காழி அந்தணர்களை எதிர்கொண்டு வரவேற்றனர். சீர்காழி அந்தணர்கள் எல்லோரும் திருவீழிமிழலைத் திருக்கோயிலுக்குச் சென்று இறைவனைப் பணிந்த பின்னர், திருஞான சம்பந்தர் தங்கியிருந்த திரு மடத்துக்குச் சென்று, அவரை வணங்கி, ''தோணிபுரத்திற்கு எங்களோடு எழுந்தருள வேண்டும்!'' என்று விண்ணப்பித்தார்கள். அதைக் கேட்டதும் திருஞான சம்பந்தர், ''நீங்கள் கூறியது மிகவும் நல்லதுதான்! திருத்தோணியில் எழுந்தருளிய பெருமானின் திருவடிகளை நாம் போய் வணங்குவதற்கு இன்று கழித்து நாளை திருவீழிமிழலை மேவும் இறைவர் அருள் பெற்றுப் போவோம்!'' என்று கூறினார்.

சீர்காழி அந்தணர்களுக்குத் திருவீழிமிழலை அந்தணர்கள் தக்க முறையில் விருந்தளித்தனர். சீர்காழி அந்தணர்கள், திருஞான சம்பந்தர் புறப்படும் காலத்தை எதிர்பார்த்திருந்தனர். அன்றிரவு தோணியப்பர் திருஞான சம்பந்தரின் கனவில் தோன்றி, ''சீர்காழித் திருத்தோணியில் நாம் அங்கிருந்த காட்சியினை இந்தத் திருவீழிமிழலையிலுள்ள விண்ணிழி விமானத்திலே காணும்படிக் காட்டுகிறோம்; அதைக் கண்டு வழிபடும் முறையில் வழிபடுக!'' என்று கூறி மறைந்தருளினார். திருஞானசம்பந்தர் துயில் நீங்கியெழுந்து, கைகளை சிரமேற்கூப்பி வணங்கி, விண்ணிழி விமானக் கோயிலினுள்ளே சென்றார். அங்கே. அவரது கனவில் இறைவன் அருளிய வண்ணம் காட்சியளித்தார்.

அதைக் கண்டு மகிழ்ந்த பிள்ளையார் ''திருத்தோணிபுரத்துத் திருக்கோலம், திருவீழி மிழலை விண்ணிழி விமானத்தில் விளங்க வீற்றிருந்த வண்ணம் இது என்கொல்!'' என்று கேட்பதைப் போல், ''மைம்மரு பூங்குழல்'' என்று தொடங்கி, ''புகலியும் திருவீழிமிழலையும்'' என்ற திருப்பதிகத்தைப் பாடிக் கைகூப்பி வணங்கி, அங்கிருந்து புறப்பட்டார். சீர்காழியிலிருந்து வந்த மாமறையோர்களை அவர் நோக்கி ''பிரமபுரத்திலே அமர்ந்துள்ள முக்கண் பெரியபிரான் தமது பெருமாட்டியோடு ஆங்காங்கே வரவிருக்கும் தலங்கள் எங்கும் நான் சென்று போற்றிவரும் என் காதலை நம் பெருமான் கண்டு, அங்கமர்ந்த திருக்கோலத்தை இங்கே எனக்குக் காட்டியருளினார்! ஆகையால் நீங்கள் சீர்காழிக்குத் திரும்பிச் செல்லுங்கள்'' என்று அவர்களை அனுப்பி வைத்தார். அவர்கள் விடைபெற்றுச் சென்ற பிறகு திருஞான சம்பந்தர் சிவனடியார்கள் சூழ திருவீழிமிழலை யிலுள்ள இறைவனை நாள்தோறும் வணங்கிச் சிறந்த தமிழ்ப் பதிகங்கள் பலவற்றைப் பாடி, திருநாவுக்கரசரோடு நட்புறவில் மகிழ்ந்து தங்கியிருந்தார்.

இவ்வாறு தங்கியிருந்தபோது, வானம் பொய்த்தது; உலகத்தில் மழை குறைந்தது. நதிகளும் தவறி மண் வளம் சுருங்கியது. உணவு தடைப்பட்டு எங்கும் பஞ்சம் பரவலாயிற்று. எல்லா உயிர்களும் வருந்தலாயின; அந்தப் பஞ்சம் சிவனடியார்களையும் தீண்டியது. விண்ணவர்க்கும் பூஜைகள் தப்பும்படி பசிக் கொடுமை எங்கும் விரைந்து பரவியது; இந்த நிலைகண்ட பிள்ளையாரும் அப்பரும் ‘‘நெற்றிக் கண்பெருமானின் திருத்தொண்டர்களுக்கும் இக்கவலை வருமோ’’ என்று கருத்தில் கொண்டார்கள். வானாகி, நிலனாகி, அனலுமாகி, மாருதமாய், இருசுடராய், நீருமாகி, ஊனாகி, உயிராகி, உணர்வுமாகி, உலகங்களனைத்துமாகி, உலகுக்கப்பால் ஆனாத வடிவாகி நின்ற சிவபெருமான் திருவடிகளை தியானித்து அன்றிரவு இருவரும் துயில் கொண்டார்கள். தூங்கும்போது அவர்களுடைய கனவில் திருவீழிமிழலை இறைவர் தோன்றி ‘‘அளவிலாப் புகழ் உடையவர்களே! இந்தக் கொடிய பசி நோய் உலகத்தின் இயல்பால் நிகழ்ந்தது. உங்களை சிறிதும் உகத்தாது. என்றும் உங்களைச் சார்ந்துள்ள அடியார்களின் வாட்டத்தைப் போக்கும் பொருட்டு நாள்தோறும் நம் ஆலயத்தின் கிழக்கு பீடத்திலும் மேற்குப் பீடத்திலும், ஒவ்வொரு பொற்காசு வைத்து உங்களுக்கு வழங்கி வருவோம். பஞ்ச காலம் ஒழிந்தால் காசு வழங்குவதும் நிறுத்தப்படும்!’’ என்று கூறி மறைந்தார்.

திருஞான சம்பந்தர் விழித்தெழுந்தார். திருநாவுக்கரசரும் கண் விழித்தார். இருவரும் திருக்கோயிலை அடைந்தார்கள். அங்கே, ஆண்டவன் கனவில் அருளிய வண்ணம் கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலுமாக பொற்காசு இருந்ததைக் கண்டார்கள். வாக்குத் தவறாத வள்ளலின் வாய்மையை வியந்தனர். அந்த பொற்காசை எடுத்துக் கொண்டு, பெருமகிழ்ச்சி கலந்து பொங்க, ‘‘நம்பிரான் அடியார்கள் நாளும் நாளும் நல்விருந்தாய் உண்பதற்கு வருக! வருக!’’ என்று பறைசாற்றிக் கறி நெய் பால் தயிரோடு சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்து வந்தனர்.


இவ்வாறு இறைவன் படிக்காசு வழங்கி வரும்போது, திருநாவுக்கரசரது திருமடத்தில் அடியார்கள் உச்சிப் பொழுதிற்கு முன் திருவமுது உண்டு வந்தார்கள். திருஞான சம்பந்தர் மடத்திலோ சிறிது நேரம் கழித்துதான் அடியார்கள் திருவமுது உண்ணலானார்கள். அதைக் கண்ட ஞானசம்பந்தர், தமது திருமடத்தில் அமுதாக்குவோரை நோக்கி ‘‘நமது மடத்திற்கு வரும் அடியார்களுக்கு உரிய காலத்தில் நீங்கள் அமுது படைக்க முடியாமைக்குக் காரணம்தான் என்ன? விளம்பும்!’’ என்று கேட்டார். அதற்கு அவர்கள் பிள்ளையாரை வணங்கி ‘‘இதன் தன்மையை நாங்கள் அறிந்திலோம்,

சிவபெருமானிடம் நீர் பெறுகின்ற படிக்காசு ஒன்றைக் கொண்டு திருவமுது சமைக்க வேண்டிய பொருள்களையெல்லாம் வாங்க நாங்கள் கடைக்குச் சென்றால், வணிகர்கள் உம்பொற்காசுக்கு வட்டம் தரவேண்டுமென்று கேட்கிறார்கள்.

அப்பர் சுவாமிகள் தரும் பொற்காசுக்கு அவர்கள் வட்டம் கேட்பதில்லை. உடனே விரும்பி வாங்கிக் கொண்டுவிடுகிறார்கள்! நம் மடத்தில் காலம் தாழ்ப்பதற்குக் காரணம் இதுவே!'' என்றார்கள். அவ்வுரை கேட்ட பிள்ளையார் சிந்தித்து ''அப்பர் கைத்தொண்டு செய்கிறார்; அதனால் அவர் வாசியில்லாத நல்ல காசு பெறுகிறார்! நமக்கு சிவபெருமான் தரும் காசு இனி வரும் நாட்களிலாவது நல்ல காசாக மாறவும் வாசி தீரவும் பாடுவேன்!'' என்று நினைத்து ''வாசி தீரவே காசு நல்குவீர்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்; நல்ல காசு பெற்றார். சமையல் செய்வோர் பொற்காசை கடை வீதிக்குக் கொண்டுபோய்க் காட்டினார்கள். வணிகர்கள் அதைப் பார்த்து ''இது நல்ல காசுதான்!'' என்று சொல்லி சமையல் பொருள்களை விரைந்து கொடுத்தார்கள்; அன்று முதல் ஞானசம்பந்தர் மடத்திலும் அடியார்கள் உரிய காலத்திலே அமுது செய்விக்கப்பட்டார்கள்.

இவ்வாறு நிகழ்ந்து வரும் காலத்தில் மழை பெய்தது. பஞ்சம் ஒழிந்தது. நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் சில நாட்கள் திருவீழிமிழலையில் தங்கியிருந்து, பின்னர் அத்திருப்பதியை விடுத்துத் திருவாஞ்சியம், திருத்தலையாலங்காடு, திருப்பேரு வேளூர், திருச்சாத்தான்குடி, திருக்கரவீரம், திருவிளமர், திருவாரூர், திருக்காருயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம், திருத்தெங்கூர், திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருமலி வெண்டுறை, திருத்தண்டலை, நீணெறி, திருக்களர் முதலிய திருப்பதிகளுக்குப் போய் இறைவனைத் தொழுது, திருப்பதிகங்கள் பாடித் திருமறைக் காட்டை நோக்கிச் சென்றார்கள்.

வழக்கப்படி திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், முன்னும் பின்னுமாக திருமறைக் காட்டைச் சேர்ந்தார்கள். அங்குள்ள அடியவர்கள் இருவரையும் வரவேற்க நகர் முழுவதையும் அலங்கரித்தனர். பூரண கலசங்களையும், தீபங்களையும் ஏந்தி, வார்முரசம் முதலிய மங்கல வாத்தியங்கள் ஒலிக்கத் தொண்டர்கள் புடைசூழ மகிழ்ச்சியோடு எதிர்கொள்ள வந்தனர். முன்னே வந்த திருநாவுக்கரசரை முறையோடு எதிர்கொண்டு பெருமகிழ்ச்சியடைந்தனர். பிறகு திருஞான சம்பந்தரின் வருகையை அறிவிக்கும் பொற்தாளங்களின் ஓசையைக் கேட்டு, இரு கைகளையும் குவித்துக் கொண்டு அவரை எதிர்கொண்டழைத்தனர். திருஞான சம்பந்தர் முத்துச்



சிவிகையிலிருந்து கீழேயிறங்கி, தம்மை எதிர்கொண்டு அழைத்த சிவனடியார்களோடும், திருநாவுக்கரசரோடும் திருமறைக் காட்டின் திருவீதி வழியே சென்றார். அப்போது அவ்வூர் மக்களும், மறையவர்களும், மாதவர்களும், சிவனடியார்களும், ''ஹரஹர!'' என்று ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். பிள்ளையும், திருநாவுக்கரசரும் சிவனடியார்கள் புடைசூழ திருக்கோயிலுக்குச் சென்றார்கள். அங்கே திருக்கதவு மூடப்பட்டிருப்பதை இருவரும் கண்டனர். ''இஃதென்ன?'' என்று அவர்கள் அவ்வூர் மக்களை கேட்டார்கள்.

''இந்தக் கோயில் கதவை வேதங்கள் பூஜித்துத் திருக்காப்பிட்டன; அன்றுதொட்டு இது மூடப்பட்டே இருக்கிறது. உள்ளே செல்ல வேறொரு வாசல் அமைத்து அதன் வழியாகத்தான் தொழுகைக்குச் செல்லுபவர்கள் செல்கிறார்கள்'' என்று ஊர் மக்கள் கூறினார்கள்.

அதைக் கேட்டதும் திருஞானசம்பந்தர், நாவுக்கரசரை நோக்கி, ''அப்பரே! நாம் எப்படியாயினும் திருவாயிலின் நேர் வழியாகச் சென்றே, இந்த வேத வனத்து இறைவனை வழிபடுதல் வேண்டும். ஆகையால் இந்தக் கதவின் காப்பு நீங்க கதவு திறக்க நீரே பாடும்!'' என்றார். ''என்னை இவ்விதம் பாடச் சொல்வீராகில் நான் அவ்விதமே பாடுவேன்!'' என்று திருநாவுக்கரசர் கூறி, ''பண்ணினேர் மொழி'' என்னும்

திருப்பதிகத்தைப் பாடினார். பத்துப் பாடல்கள் பாடியும் திருக்கதவு திறந்து கொள்ளவில்லை. அதைக் கண்ட நாவுக்கரசர் சிந்தை மிகவும் நொந்தார். கடைசியில் திருக்கடைக் காப்பு பாடும்போது இறைவனை அவர் மிகவும் வேண்டிக் கொள்ளத் திருக்கதவும் திறந்தது! அடியார்கள் எல்லோரும் ஆரவாரம் செய்தனர். நாயன்மார் இருவரும் உள்ளே போய், ''தாயினும் இனிய தங்கள் தம்பிரானைக் கண்டு, கண்களிலே பாயும் நீர் அருவியாகச் சொரிய விதிர்ப்புற்று விழுந்து வணங்கி, அதன் பிறகு ஓர் அளவில்லாமல் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி, இறைவனைப் போற்றித் திருப்பதிகங்கள் பாடிவிட்டு வெளியே வந்தார்கள். அப்பொழுது திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரை நோக்கி, ''திருக்கதவு நாள்தோறும் திறக்கவும் அடையவும் வழக்கத்தில் வருவது நல்லது. ஆகவே இத்திருக்கதவை அடைக்க நீர் பாடும்!'' என்றார். உடனே திருஞானசம்பந்தர் ''சதுரம் மறை'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தின் முதற்பாட்டைப் பாடினார். உடனே இரண்டு பாகமாகத் திறந்து நின்ற அக்கதவு மூடிக்கொண்டு திருக்காப்பிட்டுக் கொண்டது. அதைக் கண்டு நாவுக்கரசரும், சம்பந்தரும் வணங்கித் தொழுதார்கள். அடியார்கள் ஆரவாரித்தனர். அன்று முதல் அத்திருக்கதவு திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் வருகிறது. அதன் பிறகு நாயன்மார்கள் இருவரும் ஒருவரையொருவர் வணங்கிக் கொண்டு தத்தமது திருமடங்களுக்குச் சென்றார்கள்.

திருமறைக் காட்டில் வீற்றிருக்கும் சிவமூர்த்தியின் திருவருளைத் தியானித்தவண்ணம் இருந்த திருநாவுக்கரசர், அக்கோயிலின் திருக்கதவைப் பற்றிய நிகழ்ச்சியை சிந்தனை செய்தார். கதவு திறப்பதற்குத் தாம் பத்து பாடல்கள் பாட நேரிட்டதையும் அதே சமயத்தில் அந்தக் கதவு திருஞான சம்பந்தரின் ஒரே பாட்டில் மூடிக் கொண்டதையும் எண்ணினார். ''நான்கு வேதங்களும் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டவை! அவற்றை வெளியிடும் உரிமை திருஞானசம்பந்த சுவாமிகளுக்கே உண்டு! என் போன்றவர்க்கும் அவருக்கும் உள்ள இடையீடு பெரிது!'' என்று எண்ணி அப்பர் துயின்றார். அவ்வாறு அவர் தூங்கும்போது பெருமான் வந்து முன்னே தோன்றி, ''நாம் திருவாய்மூரில் இருப்போம்! அங்கே வா!'' என்று கூறிச் சென்றார். நாவுக்கரசர் உடனே எழுந்து கைகூப்பிய வண்ணம் சிவபெருமானைத் தொடர்ந்து விரைந்து நடந்தார். அவருக்கு சிவபெருமான் அருகிலேயே காட்சி வழங்குவோரைப் போலக் காட்டிக் காட்டி எட்டாத தூரத்திலும் போய்க் கொண்டேயிருந்தார். அப்பர் ஆர்வத்துடன் அவரைப் பின் தொடர்ந்து போனார்.

அவர் போனதும் திருஞானசம்பந்தர் கண்விழித்தார். ''அப்பர் எங்குற்றார்?'' என்று கேட்டார். அடியார்கள் ''அவர் பெரு வேட்கையோடு திருவாய்மூருக்குப் போனார்!'' என்று சொன்னார்கள். உடனே சம்பந்தரும் திருவாய்மூருக்குச் சென்றார். அப்போது சிவபெருமான் அம்பிகையோடு ஆடல் காட்டினார். திருஞானசம்பந்தர் ''தளிர் இளர் வளரென'' என்னும் திருப்பதிகம் பாடிச் சிவபெருமானைத் தொழுதார். பிறகு அவரும் நாவுக்கரசரும் சில நாட்கள் அங்கு தங்கியிருந்து இறைவனை வணங்கித் திருப்பதிகங்கள் பாடிவிட்டு மீண்டும் திருமறைக் காட்டிற்குத் திரும்பினார்கள்.

அந்த நாட்களில் பாண்டி நாட்டில் சமண மதம் பெருகி, சைவ சமயம் குன்றியிருந்தது. பரம்பரை பரம்பரையாகச் சைவநெறியில் நின்ற பாண்டிய மன்னன் முந்தைய பிறவியில் செய்த தீவினையின் பயனால் சைவ சமயத்தை நீக்கி சமண சமய நெறியின் சார்பையே நல்லறம் எனக் கருதியிருந்தான். அதனால் பாண்டிய நாட்டில் சைவ சமய ஒழுக்கம் மாறித் தீய ஒழுக்கம் பரவி அந்நாடு முழுதும் கலங்கியிருந்தது. அந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் மயிர்ப் பீலிகளையும் கமண்டலங்களையும் கையில் பிடித்த சமணர்களே காணப்பட்டனர். பாண்டி நாட்டுப் பதிகளெல்லாம் சமணர் பாழிகளும், பள்ளிகளுமே மிகுந்து விளங்கின. மயிர் பறித்த தலையோடும் இடையில் பாயினையும் தடுக்கினையும் உடுத்தி கையில் கமண்டலத்தோடு முக குடையினையும் கொண்டு சமணக் குருமார்கள் எங்கும் ஈக்களைப்போல் மொய்த்துக் கொண்டு திரிந்தார்கள். அவர்களுடைய சமய நூல்கள் ஆதிக்கச் சார்பு பெற்றதால் சைவ சமய நெறியில் சித்தம் செல்லாமல் பாண்டிய நாடு தத்தளித்தது.

இந்நிலையில் பாண்டிய நாடு செய்த பெருந் தவத்தாலும், பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசியாரும் அமைச்சராகிய குலச்சிறையாரும் மட்டும் சைவச் செந்நெறியில் ஒழுகி வந்தனர். பாண்டிய மன்னன் உய்ந்து கடைத்தேறுவதற்கென வந்ததுபோல் சோழ மன்னரின் மகளான மங்கையர்க்கரசியார் அந்தப் பாண்டிய மன்னனுக்கு மனைவியாக வந்து வாய்த்திருந்தார். பாண்டிமா தேவியும் மதியமைச்சர் குலச்சிறையாரும் தங்கள் பாண்டிய நாட்டிற்கேற்பட்ட தீங்கினை நினைத்து நினைத்து வருந்துவார்கள். இப்படிப்பட்ட சமயத்தில் அவர்களுக்கு திருஞானசம்பந்த சுவாமிகளின் பேரும் புகழும் எட்டின. சைவ நெறியைத் தழைக்கச் செய்யும் திருஞான சம்பந்தர் திருமறைக்காட்டில் தங்கியிருப்பதையும் அவர்கள் அறிந்தார்கள். உடனே அவர்கள் சிந்தையில் மகிழ்ச்சி பொங்க முகம் மலர்ந்து, மனதில் ஞானப் பிள்ளையாரின் திருவடிகளை நினைத்துக்

கும்பிட்டுத் தங்கள் ஒற்றர்களிடம் ''நீங்கள் திருமறைக் காட்டிற்குச் சென்று திருஞானசம்பந்தப் பெருமானின் பாதங்களைப் பணிந்து நமது நாட்டின் நிலைமையை விண்ணப்பம் செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டு அனுப்பினார்கள்.

பாண்டி நாட்டிலிருந்து புறப்பட்ட ஒற்றர்கள், நீர்வளம் பொருந்திய மருத நிலத்தையும், காடுகளையும் ஆறுகளையும் கடந்து தாழைகள் சூழ்ந்த நெய்தல் நிலப் பகுதியாகிய திருமறைக் காட்டை அடைந்தார்கள். திருஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்குச் சென்று அங்கிருந்த வாயிற்காப்போரை நோக்கி தாங்கள் வந்த வரலாற்றைக்கூறி ஞானசம்பந்தப் பிள்ளையாரைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னார்கள். வாயிற்காப்போர் உள்ளே சென்று பாண்டிநாட்டு ஒற்றர்கள் வந்திருப்பதை திருஞானசம்பந்தரிடம் சொன்னார்கள். ஞானசம்பந்தர் முகம் மலர்ந்து அவர்களை உள்ளே அழைத்து வருமாறு காவலர்களிடம் கூறினார். அவர்கள் ஒற்றர்களை உள்ளே அழைத்து வந்தனர். ஒற்றர்கள் திருஞான சம்பந்தரின் திருவடிகளை வணங்கி எழுந்து நின்றார்கள்.

சம்பந்தர், அவர்களை நோக்கி, ''மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் நலமா?'' என்று கேட்டார். ''அவ்விருவரும் நலமே!'' என்று ஒற்றர்கள் கூறிவிட்டு திருஞான சம்பந்தரை வணங்கி ''கன்னி வள நாடான பாண்டிய நாடு சமணர்களாலே கட்டழிந்து இழிநிலை அடைந்துள்ளது. எங்கள் மன்னரும் அச்சமணர்களின் மாயத்தில் மயங்கி அழுந்தினார். அதனால் எங்கள் பாண்டிமா தேவியாரும் மதியமைச்சர் குலச் சிறையாரும் ''இந்த நிலைமையை ஞானசம்பந்தப் பெருமானிடம் சொல்லுங்கள்'' என்றுகூறி எங்களை ஏவியனுப்பினார்கள் என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அப்போது அங்கே சூழ்ந்திருந்த சிவனடியார்கள் அனைவரும் திருஞானசம்பந்தரைத் தொழுது ''நன்று! நம்மை ஆளும் சிவபெருமானின் திருவடிகளைச் சாராத எண்ணற்ற சமணர்களை நீங்கள் வென்று அங்கு வேதநெறியை என்றும் விளங்கச் செய்து சைவத்தின் உண்மையை என்றும் நிலைநாட்டல் வேண்டும். அரசனையும் திருநீற்று நெறியில் நிறுத்தி ஆளுதல் வேண்டும். பாண்டிய நாட்டில் சிவனடியார்களின் சைவ ஒழுக்கம் பெருகும் வண்ணம் திருவுள்ளம் கொண்டருள வேண்டும்!'' என்று விண்ணப்பித்தனர். அவர்களுடைய வேண்டுகோளைத் திருஞானசம்பந்தர் ஏற்றுக் கொண்டார்.

அதன் பிறகு ஞானசம்பந்தர் திருநாவுக்கரசருடனே திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கே இறைவனை வணங்கினார். பிறகு பாண்டி நாட்டு நிலைமை பற்றி, பாண்டிமா தேவியும் மதியமைச்சர் குலச்சிறையாரும் ஒற்றர்கள் வாயிலாகத் தெரிவித்ததை பிள்ளையார் அப்பரிடம் சொன்னார். சொல்லிவிட்டுத் தாம் பாண்டி நாட்டிற்குச் செல்லத் துணிந்திருப்பதையும் கூறினார். அதைக் கேட்டதும் அப்பர் பிள்ளையாரை நோக்கி, ''பிள்ளாய்! பொறும்? அச்சமணர்கள் பொல்லாதவர்கள், அவர்கள் வஞ்சனைகளை எல்லையின்றிச் செய்ய வல்லவர்கள்! ஆகவே நான் சொல்ல வேண்டுவது ஒன்றுண்டு. இப்பொழுது வானத்துக் கோள்களும் தீமை பயப்பனவாயுள்ளன. ஆகையால் இப்போது நீர் பாண்டி நாடு போவது தகாது'' என்று தடுத்தார். அதற்குப் பிள்ளையார் ''நாம் போற்றுவது சிவபெருமான் திருவடிகளே என்றால் நாளும் கோளும் நம்மை என்ன செய்யும்? பரமன் தொண்டில் நமக்குப் பழுது ஒன்றும் வராது!'' என்று கூறிச் சிவபெருமானைத் துதித்து ''வேயுறு தோளி பங்கன்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். அதற்குமேல் அப்பர் சுவாமிகள் அவரைத் தடை செய்யாது உடன்பட்டு அவருக்கு முன்னே தாமும் புறப்படத் துணிந்தார். அதைக் கண்ட திருஞான சம்பந்தப் பெருமான் அப்பரைத் தடுத்து, ''அப்பரே! நீர் இப்புனல் நாட்டில்தானே எழுந்தருளி இருப்பீராக!'' என்று கைகூப்பி வணங்கினார், வேண்டினார். அதற்கு திருநாவுக்கரசர் ஒருவாறு உடன்பட்டார்.

அதன் பிறகு வேத நெறியை வளர்க்கவும் சைவத்தின் உண்மையை விளக்கவும் வேத வனத்து அருமணியான சிவபெருமானின் திருவருளைப் பெற நினைத்து ஞானசம்பந்தர் அத்திருக்கோயிலுக்குள் சென்று இறைவனைப் பாதமுறப் பணிந்தெழுந்து பாடிப் போற்றிவிட்டு விடைபெற்றார். திருநாவுக்கரசரையும் தொழுது அவருக்கும் ஞானசம்பந்தர் விடை கொடுத்தார். பிறகு முத்துச் சிவிகையிலேறி திருவைந்தெழுத்தை ஓதி திருநீறணிந்த இறைவனின் திருமேனியை நெஞ்சில் நினைத்துத் தொழுதார். சிவனடியார்கள் அன்பு மேலீட்டால் ''ஹரஹரா'' என்று முழங்கினர். மங்கல வாத்தியங்கள் முழங்கின. மறைகள் நான்கும் ஒலித்தன. திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டை நோக்கிப் புறப்பட்டார். வழியில் திருவகத்தியான் பள்ளி, திருக்கோடிக் குழகர் கோயில், திருக்கடிக் குளம், திருஇடும்பாவனம், திருஉஷாத்தானம், முதலிய திருப்பதிகளையடைந்து வணங்கி, தமிழ்ப் பாமாலைகளைச் சூட்டிச் சென்று பாண்டி நாடு புகுந்தார். முல்லை மலர்களின் மணம் கமழும் முல்லை நிலத்தையும் மறவர்கள் வாழும் பாலை



நிலத்தையும் தாண்டிச் சென்றார். பெண்கள் நீந்தி விளையாடும் குளங்களும் அந்தணர்கள் ஓதி முழங்கும் யாக சாலைகளும் திருத்தொண்டர்கள் குழுமியுள்ள திருமடங்களும் திருமணங்கள் நிகழும் வீடுகளும் நிறைந்த பலப்பல ஊர்களையும் அவர் கடந்து சென்று தென்பாண்டித் திரு நாட்டை அடைந்தார்.

மணமுள்ள மலர்க் குவியல் களை இரு பக்கங்களிலும் வீசி வரும் பல ஆறுகளையும், புள்ளி மான்கள் துள்ளிப் பாயும் காட்டு வழிகளையும் கடந்து கொன்றை மாலையணிந்த சிவபெருமான் வீற்றிருக்கும் ★ திருக்கொடுங் குன்றம் என்னும் ஸ்தலத்தை அடைந்தார். அங்கு சிவபெருமானை வணங்கிச் செந்தமிழ்ப் பதிகம் பாடித் துதித்து அகன்று போய், பெரிய மலைகளையும் அடர்ந்த காடுகளையும் நீர் வளமுடைய ஊர்களையும் கடந்து சென்றார். வெண்ணிலாத் தவழும் உயர்ந்த மதில்களைக் கொண்ட மதுரை என்னும் பாண்டி நாட்டுத் தலை நகரத்தின் எல்லையை வந்தடைந்தார்.

இவ்வாறு திருஞான சம்பந்தர் மதுரை நகரின் எல்லையை அடைந்தபொழுது ஆனைமலை முதலிய என் பெரும் குன்றங்களில் வாழும் சமணர்கள் தங்களுக்கு அழிவு காலம் வருகிறதை உணர்ந்து பதைபதைக்கும் விதமாகத் தீய கனவுகளைக் கண்டார்கள். துன் நிமித்தங்களும் நிகழ்ந்தன. சமணப் பள்ளிகள் மீதும், பாழிகள் மீதும் சமணக் குருமார்கள் தங்கும் மடங்களின் மீதும், அசோக மரங்களின் உச்சி மீதும் ஆந்தைகளும் கோட்டான்களும் தம்முள் சண்டையிட்டு அழிவை எடுத்தியம்பின. சமணர்கள் கையிலேந்திய மயிர்ப் பீலிகளும் இடையிலுடுத்திய தடுக்கும் பாயும் தாமே நழுவிக் கீழே விழுந்தன. கால்கள் தடுமாறக் கண்கள் இடந்துடித்தன. வரப்போகும் அழிவிற்கு வேறு காரணமும் காணாமல் அறிவு கெட்டு சமணரெல்லாம் மயங்கினர். பெண் துறவிகளான கந்தியர் தம்மில் தாமே கனன்றெழுந்து கலகமிட அதுபோலவே சமணர்களும் தம்முள் மாறுபட்டு ஊறு செய்வதாகவும்; முந்திய

★ திருக்கொடுங்குன்றம் : இது பிரான்மலையாகும்.

நூல்களில் கூறிய பொறுமை முதலான அறவிதிகளை விடுத்துக் கோபம் முதலான தீக்குணங்களையே கொண்டு ஒருவர்க்கொருவர் துன்பம் செய்வதாகவும் கனவு கண்டனர். அத்தகைய துன்நிமித்தங்கள் பலிக்கக்கூடிய தீய கனாக்களை தனித் தனியாகக் கண்டாலும்கூட அவற்றை ஒருவருக்கொருவர் சொல்லும் பொருட்டு மதுரையில் சமணர்களெல்லாம் ஒன்றுகூடி மன்னனுக்கு அறிவிப்பு அனுப்பி மருட்சி கொண்ட மனதுடன் தாம் தாம் கண்ட கனவுகளைக் குறித்துப் பேசிக் கொள்ளலாயினர். ''அசோக மரம் வேரோடு சாய்ந்து, அதன் கீழேயுள்ள நமது தேவர்மீது விழக் கண்டோம்! அதன் பிறகு நம் தேவர் முக்குடையும் தாமும் எழுந்து கைகளை உதறிக் கொண்டு போக ஊர்மக்களும் ஓடக் கண்டோம்! பாயைக் கிழித்து கமண்டலத்தையுடைத்து ஒரு பெண் குரு ஓடக் கண்டோம்! சமணப் பண்டிதர்கள் தங்கள் பாழியிலிருந்து கழுதைகளின் மேலேறிச் செல்வதையும், அவர்கள் பின்னால் தவப் பெண்கள் ஊளையிட்டுப் புலம்பி ஓடுவதையும் கனவில் கண்டோம்!'' என்று சிலர் சொல்லி செயலற்றவர்களாய் கவலைப்பட்டார்கள்.

சுடுகாட்டில் நடனம் செய்யும் நெற்றிக் கண்ணனின் தொண்டர்களெல்லாம் பாண்டியனின் தலைநகரான மதுரையிலே பரவிச் சேர்வதாக கனவு கண்டோம்! பாண்டிய மன்னன் தீயின் உள்ளே மூழ்கவும், அதன் பிறகு தீயிலிருந்து எழுந்திடவும் கண்டோம்! இளமையான ரிஷபக் கன்று ஒன்று பாய்ந்துவந்து நமது கல்விக் கழகத்தை சுழன்று சுழன்று மிதிக்க அதைக் கண்டு அனைவரும் சிதறுண்டு ஓடவும் யாருமே அதைத் தடுக்கவும் பயந்து, ஒளிந்து கொள்ளப் புகலிடம் அல்லாமல் பூமியை விட்டு நிழலில்லாத மரங்களின் மேல் ஏறி நிற்பதையும் கண்டோம்! என்று அவரவர் கண்ட கனவுகளைப் பற்றிப் பலவாறு கூறிக் கொண்டனர். ''இனி ஆவது என்ன பாவிகாள்! இக்கனவுக் குறிகள் நம் சமணஅடிகள்மார்க்கு வரப்போகும் தீங்கை உணர்விப்பனவே ஆகும்!'' சமணர்கள் மனம் வருந்தி உணவும் அருந்தாமல் ''இனி என்ன செய்வது?''என்று துயரத்தில் அழுந்தினார்கள். இவ்வாறு சமணர்கள் வருந்திக் கொண்டிருக்கும் வேளையில் சைவ நல மரபில் வந்த பாண்டிமா தேவியான மங்கையர்க் அரசியாருக்கும், அமைச்சரான குலச்சிறையாருக்கும் நனிமித்தங்கள் தோன்றின. அவற்றைக் கண்டு அவர்கள் மகிழ்ந்தார்கள். அதே சமயத்தில் திருமறைக்காடு சென்று திரும்பிய ஒற்றர்கள் மதுரை மாநகருக்கு திருஞான சம்பந்தர் வருவதை அறிவித்தார்கள். அந்த உற்சாகச் செய்தியைச் சொன்ன ஒற்றர்களுக்கு வேண்டிய பரிசுகளை விரும்புமளவுக்குக் கொடுத்து மகிழ்ந்தார்கள்.

மங்கையர்க்கரசியார் தம்மிடம் வந்து வணங்கி நின்ற குலச்சிறையாரை நோக்கி, ''நம் தம்பிரான் ஞானசம்பந்தரிடம் சென்று, அவர், இங்கு எழுந்தருளி வருவதனால் நாம் உய்யப் பெற்றோம் என்றுகூறி, அவரை எதிர்கொண்டு வரவேற்க ஏற்பாடு செய்யுங்கள்!'' என்றார். அவரை அமைச்சர் குலச்சிறையார் வணங்கி இது அரசருக்கும் உறுதியே என்று கூறி விரைந்து சென்று மாவீதிகளைக் கடந்து மதுரையின் புறத்தே நெடுந்தூரம் சென்று திருஞான சம்பந்தரை வரவேற்று நின்றார். அதே சமயத்தில் செந்தாமரைச் செல்வி போன்ற மங்கையர்க்கரசியாரும் ''திருஆலவாய் பெருமானைக் கும்பிட வேண்டும்!'' என்று அரசனுக்குக் கூறிவிட்டு தம் பரிசனங்கள் சூழ, தனிப் பாதுகாப்போடு சென்று, மதுரைச் சொக்கனாதப் பெருமானை வணங்கி, திருஞான சம்பந்தர் வருகையை எதிர்பார்த்து வரவேற்க அவரும் காத்திருந்தார்.

திருஞானசம்பந்தர், தமது முத்துச் சிவிகையின் மேல் அமர்ந்து, முழுமதி நிலவைப் போல் முத்துக்குடை நிழல் பொழியவும், திருநீற்றுத் தொண்டர்கள் கூட்டமாகப் பெருகிக் கொண்டே வரவும் அருள்பெருக மதுரையை நோக்கி வந்து கொண்டிருந்தார். துந்துபிகள் முழங்க, அந்தணர்கள் வேதம் ஓத, மங்கல வாத்தியங்கள் இசை எழுப்ப, அவர் வந்து கொண்டிருந்தார். அவரை எதிர்கொண்டு வரவேற்றுச் சேவிப்பதற்குச் செந்தமிழ் நாட்டுத் தென்றலும் செந்தமிழ் மயமான இனிமையோடு எம்மருங்கும் வீசியது. பாண்டிய நாட்டில் பரவிய சமணம் என்னும் புற சமயச் சேனை புறங்கெட்டு ஓட, மண்ணுலகமும் விண்ணுலகமும் செய்த புண்ணியத்தின் படையெழுச்சியைப் போலப் பொலிவுற, சமணர்களின் உடலிலும் உள்ளத்திலுமுள்ள அழுக்கைப்போக்க கங்கை நதியே பாண்டிய நாட்டிற்குப் பெருகிவருவதைப் போல், சமணம் என்னும் வலிய இருளானது மாய்வதற்கென ஞானமணி விளக்கு எழுந்து வருவதைப்போல், வெற்றி மதக் களிறுகளால் வளம் பெறும் செந்தமிழ்ப் பாண்டியநாட்டு மண் செய்த தவப்பயனைப்போல், திருஞான சம்பந்தர் வந்தார். சைவநெறி தழைத்து ஓங்கச் சின்னங்கள் எல்லாம் ''பரசமயக் கோளரி வந்தான்'' என்று ஒலித்தன.

அப்போது, பொன்னால் செய்த எக்காளங்களின் ஒலி முழக்கமானது உலகெங்கும் அதிர்ந்து மதியமைச்சரின் செவிகளில் அமுதென நிறைந்து தேங்கியது. உடனே, அவர் நிலத்தின் மேல் விழுந்து வணங்கினார். திருஞான சம்பந்தருக்கு முன்னதாக வந்துகொண்டிருந்த தவக்கடல் போன்ற அடியார்களின் கூட்டங்களைக் கண்டதும், குலச்சிறையார் தம் கைகளைச் சிரம்மீது கூப்பி அஞ்சலி செய்தபடி, விரைந்து சென்று முன்னே நிலத்தின்மேல் விழுந்து

பணிந்து கிடந்தார். தவம் மிகுந்த திருத் தொண்டர்கள் பலரும் முன்புவந்து அவரை எதிர் வணங்கினார்கள். அப்போதும், குலச்சிறையார் தரையிலிருந்து எழாமல் இருந்தார். அதைக் கண்ட அடியார்கள், ''தென்னவன் அமைச்சராம் குலச்சிறையார், இங்குவந்து பந்தம் பணிந்து அணைந்தார்!'' என்று கூறினார்கள். அதைக் கேட்டதும் திருஞான சம்பந்தர் திருமுகத் தாமரை மலர்ந்து, முத்துச் சிவிகையிலிருந்து கீழே இறங்கி, விரைந்து சென்று குலச்சிறையாரைத் தம் கைகளால் அணைத்து கரங்களைப் பற்றித் தூக்கினார். குலச்சிறையார் அவரைக் கைகூப்பித் தொழுதபடி நின்றார்.

திருஞானசம்பந்தர் அவரை நோக்கி மதுரமொழிக் குரலில், ''செம்பியர் பெருமானின் குலமகளாகிய, மங்கையர்க்கரசி அம்மையாருக்கும், உமக்கும் நமது சிவபெருமான் திருவருள் பெருகும் நன்மைதான் சிறந்துள்ளதோ?'' என்று விசாரித்தார்.

குலச்சிறையார் மீண்டும் நிலத்தின்மீது விழுந்து அவரை வணங்கி ''சென்ற காலத்தில் பழுதில்லாத் திறம் பெற்றிருந்தோம்! இனி எதிர்காலத்தின் சிறப்பும் இந்நிகழ் காலத்தில் தேவரீர் எழுந்தருளியதால் பெற்றோம்! இதனால் நாங்கள் என்றும் திருவருளுடையவர்தாம்! நன்றியில்லாத புறசமய நெறியில் அழுந்திய இந்த நாடும், நற்றமிழ் வேந்தனும் உருப்பட்டு உய்வதற்கு வெற்றிகொள்ளும் திருநீற்று ஒளியின் மேன்மையையும் பெற்றோம்! இங்குத் தேவரீர் எழுந்தருளும் பெருமையைக் கேட்டதும் பாண்டிமா தேவியார் பெரும்பேறு பெற்றதுபோல் பெருமகிழ்ச்சியடைந்து ''நமது பெருவாழ்வு எழுந்தருளி வருகின்றது; அங்கு நீர்போய் எதிர்கொண்டு வரவேற்று அடிபணிவீர்!'' என்று கூறி அடியேனை அனுப்பினார்'' என்று விண்ணப்பித்துப் பொங்கும் களிப்பால் மீண்டும் பணிந்து போற்றினார்.

திருஞானசம்பந்தர், குலச்சிறையாரின் அன்பைப் பாராட்டினார். அருள் புரிந்து மேலே சென்று கொண்டிருந்தார். அப்போது தம் எதிரில் தோன்றிய மதுரைத் திருநகரைக் கண்டு, தொண்டர்களை நோக்கி, ''இங்கே நம் சிவபெருமானின் திருஆலவாய் எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார். அவர் முன் அன்பராய் நின்ற அடியார் தம் கைகளால் சுட்டிக்காட்டி, ''இதோ வானளாவிய கோபுரம் தெரிகிறதே! இதுவே நாதர் அமர்ந்தருளும் திருவாலவாய்'' என்றனர். உடனே திருஞான சம்பந்தர் அத்திசையில் கைகூப்பி பூமியில் விழுந்து வணங்கினார்; பின்னர் எழுந்து நின்று, ''மங்கையர்க்கரசி வளவன் கோன்பாவை'' என்று பாடலடி தொடங்கி, ''ஆலவாய் ஆவதும் இதுவே'' என்று இறுதியில்

அமைத்து மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகிய இருவரின் திருத்தொண்டுகளையும் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினார்.

பிறகு அவர் தம் அடியார்களோடும் அமைச்சர் குலச்சிறையாரோடும் ஆலவாய்த் திருக்கோபுரத்தை வணங்கிப் பேராவலுடன் ஆலயத்தை வலம் வந்து, திருக்கோயிலினுள்ளே புகுந்தார். ஆலவாய் அழகரை வணங்கி, அஷ்டாங்கப் பஞ்சாங்க நமஸ்காரங்களைச் செய்தார். உடல் புளகாங்கிதமடைய எழுந்தார். ஆனந்தக் கண்ணீர் பெருக, ''நீலமாமிடற்று ஆலவாயிலான்'' என்று தொடங்கும் திருவிருக்குக்குறள் பதிகத்தைப் பாடினார். முதற் சங்கப் புலவராக எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் திருமுன்பு, குலச்சிறையாருடன் கூடி அன்பினில் திளைத்து அகமகிழ்ந்து திருக்கடைக்காப்புச் சாத்தி வணங்கிக் கொண்டு திருமுன்றிலினை அடைந்தார்.

திருஞானசம்பந்தர் திருக்கோயிலுக்குள்ளே புகுந்தபோது, அவர் இறைவனைத் தொழுவதற்கு ஆவலுடன் செல்வதையறிந்த பாண்டிய மன்னரின் பட்டத்தரசியும் சோழமன்னரின் மகளுமான மங்கையர்க்கரசியார் வந்து அவர் எதிரில் செல்லாமல், ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று, பிள்ளையாரின் திருமுன்பு கூப்பிய கைகளுடன் கண்களில் அன்பின் நீர் துளிர்க்க வணங்கிக் கொண்டிருந்தார். அப்போது அருகேயிருந்த குலச்சிறையார், திருஞான சம்பந்தரை வணங்கி, ''அதோ கரங்களைக் குவித்துவந்து நிற்கும் இவ்வம்மையார்தான் சோழமன்னரின் மகளார்!'' என்று அறிமுகப்படுத்தினார்; திருஞான சம்பந்தர் பெருமகிழ்ச்சியோடு விரைந்து, அவ்வம்மையாரின் எதிரே சென்றார். உடனே தென்னவன் பெருந்தேவியான மங்கையர்க்கரசியார், திருஞானசம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். திருஞான சம்பந்தர் மகிழ்ந்து தமது திருக்கரங்களால் பாண்டிமா தேவியை எடுத்தருளினார். அவரைத் தொழுதபடியே எழுந்த நற்றலத்து நங்கை அரசியார் ''தன் கருத்து முற்றுப் பெற்றது'' என்று நினைத்து கண்களில் நீர் மல்கப் பவளவாய் குழறி, ''யானும் என் பதியும் செய்த மாதவம்தான் என்னே'' என்று யாழிசை போன்ற மென்மொழிகளால் கூறி மீண்டும் வணங்கி நின்றார். அத்தேவியாரை நோக்கி, ''புறச் சமயத்தாரிடையிலே நம் சைவத்திருத்தொண்டை வழுவாமல் செய்து வாழ்வீர்! உம்மைக் காணவந்தோம்!'' என்றார் திருஞானசம்பந்தர். அவருடைய அருள் உரை கேட்டதும் மீண்டும் பாண்டிமாதேவி அவரை வணங்கினார். மதியமைச்சரான குலச்சிறையார் புறச் சமயத்தினரால் விளையும் தீமைகளையும் பாண்டிய நாட்டின் நிலைமையையும் எடுத்துக் கூறினார். பிள்ளையார், அவற்றை எல்லாம் கேட்டுக் கொண்டு பாண்டிமா தேவியாருக்கு

விடைகொடுத்து அனுப்பினார். பாண்டியன் தேவி அன்னமென மெல்ல அடியெடுத்து வைத்து நடந்து அகன்றார்.

பிறகு ஞானசம்பந்தர் தம் தொண்டர்களுடன் வரும்போது ஆலவாய்த் தொண்டர்களும் போந்து, பிள்ளையாரை வணங்கினார்கள்; ''சமணராகிய இருள்கெடத் தேவரீர் எழுந்தருள்வதற்கு எல்லையில்லாத் தவஞ் செய்தோம்!'' என்று அவர்கள் துதித்தார்கள். அவர்களுக்கு ஞானசம்பந்தர் அருள்முகம் தந்தார். அவர் தங்குவதற்கு உரிய ★திருமடத்தை குலச்சிறையார் காட்டப் பிள்ளையார் தம் அடியார்களோடு சென்று, அம்மடத்தில் இனிதமர்ந்தார். பாண்டிமா தேவியார் பேரன்போடு கூறிய வண்ணம் குலச்சிறையார் பெருநட்போடு திருஞான சம்பந்தருக்கும் ஏனைய அடியார்களுக்கும் விருந்தளித்தார். சூரியன் மேற்கடலில் மறைந்தான்.

பாண்டிமா நகருக்கு திருஞானசம்பந்தர் வருகையையும் அடியார்களின் பெரு முழக்கத்தையும் பகலில் கண்டபோதே அவை சமணர்களைக் கலக்கமுறச் செய்து பொறாமையூட்டின. அதனால் அவர்கள் எல்லோரும் அந்த இரவிலே பேய்கள் போல் ஓரிடத்தில் திரண்டு கூடினார்கள். திருஞானசம்பந்தர் தங்கியிருக்கும் திருமடத்திலிருந்து தொண்டர்களிடையே பொங்கிவரும் திருப்பதிக இசையின் பேரொலியை அச்சமணர்களின் செவிகளால் தாங்க முடியவில்லை. அதனால் பாண்டிய மன்னனிடம் சென்று, இப்பெரும் பழியை முறையிடுவோம் என்று ஒரு சூழ்ச்சி செய்தார்கள். அதன் பிறகு அவர்களெல்லாம் திரண்டு அரசனது அரண்மனைக்குச் சென்றார்கள். வாயிற் காப்போரிடம், ''உம் வெற்றிவேந்தருக்கு நாங்கள் வந்த செய்தியை விளம்புவீர்,'' என்றார்கள். வாயிற் காப்போர், மன்னனின் எதிரே சென்று வணங்கி, ''நமது சமண முனிவர்கள் எல்லோரும் கூட்டமாக திரண்டு வந்துள்ளார்கள்!'' என்றனர். ''நம் அடிகள்மார்களா?'' என்று பாண்டியன் பரபரப்புற்று அவர்களை விரைந்து உள்ளே அழைத்து வரச் சொன்னான்; அவன் முன்னே சமணர்கள் பதைபதைப்புடன் புகுந்தார்கள். அவர்களின் மனவாட்டத்தை மன்னன் குறிப்பால் உணர்ந்து ''நீங்கள் யாவரும் இங்ஙனம் திரண்டு வருவதற்குக் காரணம் என்ன'' என்று கேட்டான். அவர்கள், ''தகாத தீங்கு நேர்ந்தது! அது சொல்லத்தகாத செய்தி'' என்றனர் சமணர்கள்.

★ திருமடம் : இந்தத் திருமடம் இப்போதும் மதுரை தெற்கு ஆவணிமூலத் திருவீதியில் திருஞானசம்பந்தர் ஆதீனத் திருமடமாக விளங்குகிறது.



''அது என்னவென்றுதான் சொல்லுங்களேன்!'' என்று பாண்டிய மன்னன் பரிவுடன் கேட்டான்.

''பெருவலிமை படைத்த பாண்டியனே! உன்னுடைய இந்த மதுரைமாநகரிலே இன்று சைவவேதியர்கள்தான் வந்து மேவினார்கள். அவர்களைக் கண்டாலே தீட்டு! அதனால் நாங்கள் கண்டுமுட்டு ஆயினோம்!'' என்றனர் சமணர்கள். உடனே பாண்டியன், ''நானும் இதனைக் கேட்டதீட்டினால், 'கேட்டுமுட்டு' ஆயினேன்!'' என்றான். பிறகு, ''நான் செய்த நல்லறம், மிகவும் நன்று!'' என்று சிரித்து சினந்து ''அச்சிவனடியார்கள் இன்று இம்மாநகருக்கு வரக்காரணம்தான் என்ன? அவர்கள் யார்?'' என்று கேட்டான். சமணர்கள் அவனை நோக்கி, ''சோழநாட்டிலே சீர்காழியிலுள்ள வேதியர் குலச் சிறுவன் ஒருவனாம். சூலபாணியாகிய சிவனிடத்தில் ஞானம் பெற்றவனென்று சொல்லிக்கொண்டு அந்த வேதியச் சிறுவன் தன் அன்பர்களின் கூட்டத்தையும் கூட்டிக் கொண்டு, முத்துச் சிவிகை மீதேறி எங்களை வாதில் வெல்ல வந்திருக்கிறான்!'' என்று தாமறிந்த செய்தியைக் கூறினார்கள். அதைக் கேட்டதும் பாண்டிய மன்னன் சினந்து, ''அந்த வேதியச் சிறுவன் இங்கு வந்தானென்றால் அதற்கு நாம் செய்யக்கூடியது என்ன?'' என்று வெகுண்டு கேட்டான். உடனே அப்பாதகர்கள், ''நம்மிடம் வந்த அந்த வேதியச் சிறுவனை நாம் வலிந்து விரட்டுவது கூடாது; அந்தச் சிறுமறையோன் தங்கியிருக்கும் மடத்தை விஞ்சை

மந்திரத்தால் தீப்பிடித்து எரியச்செய்தால் அவன் தானாகவே இந்நகரில் இராமல் ஓடிவிடுவான்!'' என்றார்கள். அவர்கள் சொன்ன பொய்யை மெய்யெனக் கருதிய பாண்டிய மன்னன், நாம் செய்யக்கூடியது இது ஒன்றுதான் என்றால் இதை விரைவில் செய்யுங்கள்! என்றுகூறி அனுப்பி வைத்தான்.

பிறகு பாண்டியமன்னன், யாரோடும் பேசாமல் கவலை தோய்ந்த மனத்தோடு தன் பள்ளியறைக்குள் புகுந்து மலர்கள் தூவிய தன் மஞ்சத்தையடைந்தான். அப்போது பாண்டியன் தேவியான மங்கையர்க்கரசியாரும் பொங்கும் பேரழகோடு பள்ளியறைக்கு வந்துசேர்ந்தாள். மன்னவன் ஒன்றும் பேசாதிருப்பதைக் கண்டு, ''என்னுயிருக்கு உயிராயிருக்கும் இறைவனே! உமக்கு நேர்ந்தது என்ன? முன்னுள்ள மன மகிழ்ச்சியின்றி நீர் ஏன் முகம் வாடியிருக்கின்றீர்? உம் உள்ளத்தை வாட்டும் வருத்தந்தான் என்ன?'' என்று பாண்டிமா தேவி கேட்டாள். மன்னன் தன் தேவியை நோக்கி, ''கண்ணழகியே கேள்! காவிரி வளநாட்டிலுள்ள சீர்காழிப் பதியைச் சேர்ந்த ஒருவன் சங்கரருடைய அருளைப்பெற்று, இங்குள்ள சமணர்களை வாதில் வெல்வதற்காக வந்திருக்கிறான். அவனோடு வெண் பொடிபூசும் சிவத்தொண்டர்களும் பரவலாக வந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கண்டதனால் தீட்டு அடைந்து அடிகள் மார்கள் ★'கண்டு முட்டு' ஆயினர்! அச் செய்திகளைக் கேட்டதனால் தீட்டுப்பட்டு நானும் ★'கேட்டு முட்டு' ஆயினேன், இதுவே நிகழ்ச்சி! வேறொன்றுமில்லை!'' என்றான்.

பாண்டிமாதேவி தன் கணவனை நோக்கி, ''உங்கள் மனக் கவலை இதுதானே? நீடிய தெய்வத்தன்மையைப் பற்றி அவர்கள் வாது செய்தால் வெற்றியடைபவர் பக்கம் சேர்வதே ஒழுங்கு! மன்னவரே! இதற்காக நீங்கள் வருந்தவேண்டாம்'' என்றாள்.

இவ்விதமாக மங்கையர்க்கரசி கூறிவிட்டுத் தன் மனதிற்குள் ''சீர்காழித் தவச்செல்வர் எம்மையாட்கொள்ள

★ கண்டு முட்டு : சிவவேடத்தாரை சமண சமயத்தவர் பார்ப்பதையே தீட்டாய் எண்ணுவர்.

★ கேட்டு முட்டு : சைவம் பற்றிய வார்த்தைகளைக் கேட்பதையே தீட்டாய் எண்ணுவர் – சமண சமயத்தவர்.

'கண்டு முட்டு', 'கேட்டு முட்டு' : சமண மரபுச் சொற்கள்.

வந்தவிதம்தான் என்னே?'' என்று பெருமகிழ்ச்சியோடு கிளம்பி, தன் கூந்தலில் கொத்து மலர்கள் குலுங்க தன் அந்தப்புர மாளிகைக்குச் சென்றாள். அப்பொழுது குலச்சிறையார் அங்கே வந்தார். பாண்டிமாதேவி நிகழ்ந்தவற்றையெல்லாம் அவருக்குக் கூறினாள். அமைச்சர் குலச்சிறையார் கைகூப்பி நின்று ''திருஞான சம்பந்தர் இங்கே வந்தருளும் பெரும்பேறு நாம் பெற்றோம்! அவரையும் அடியார்களையும் நாம் கண்டு வணங்கவும் பேறு பெற்றோம், ஆனால், இனி இந்தச் சமணர்கள் என்ன வஞ்சனை செய்வார்களோ அறியோம்!'' என்றார்.

அரசியும் பயந்து அமைச்சரைப் பார்த்து, ''வஞ்சகச் சமணர்கள் நாசநீசங்கள் செய்வதில் வல்லவர்கள். அப்படியானால் நாம் என்ன செய்வது? அவர்களது வஞ்சனையால் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு யாதாயினும் தீங்கு நேருமாயின் நாமும் நம் ''உயிரைத் துறந்துவிடுவோம்'' என்று கூறினாள்.

பாண்டியன் மாதேவியும், அமைச்சர் குலச்சிறையாரும் இத்தகைய மன நிலையிலிருக்கும்போது, அரசரிடம் விடை பெற்றுச் சென்ற சமணர்கள், தவ வேடத்தால் தங்களை மறைத்துக் கொண்டு, திருஞானசம்பந்தர் தங்கியிருக்கும் திருமடத்தையடைந்தார்கள்; மந்திரம் ஜெபித்தார்கள்; மந்திரத்தால் மடத்திற்குத் தீமூட்ட முனைந்தார்கள்; ஆனால், அவர்கள் மந்திரம் ஜெபித்தும் தீப்பற்றவில்லை. உடனே அவர்கள் மனம் தளர்ந்து ஒன்றுகூடி அச்சம் பெருகிடக் கலந்தாலோசித்தார்கள். பிறகு ''முடிவேந்தன் இதையறிந்தால், நம் மேன்மையை மதிக்கமாட்டான்; நமது பிழைப்பையும் கெடுப்பான்; நம் மந்திரம் பலிக்கவில்லை; அது பலித்ததாக காட்டவேண்டுமெனில் அதற்கு யுக்தி ஒன்றுதான் உண்டு!'' என்று எண்ணி அவர்கள் தம் கையிலே தீக்கோல் எடுத்துச் சென்று சிவனடியார்களின் மடத்திற்குத் தீயிட்டார்கள். தீப்பற்றியது. மடத்தின் புறத்தில் தீயைக் கண்ட சிவனடியார்கள் மனம் கலங்கி, அதைத் தணித்தார்கள்! ''சமணர்களே இவ்வாறு செய்தனர்'' என்று தெரிந்து திருஞானசம்பந்தரிடம் சென்று, சமணர்கள் செய்த தீங்கை விண்ணப்பம் செய்தார்கள்.

அதைக் கேட்ட திருஞானசம்பந்தர் ''மாதவ அன்பர்கள் துயிலும் திருமடத்திற்கா தீங்கு செய்வது? அடப்பாவிகாள்! இதை அவர்கள் என்பொருட்டுச் செய்த தீங்காயினும் சிவநேசர்களுக்கு எய்துமோ!'' என்று வருந்தி, ''இந்நாட்டைக் காக்கவேண்டிய மன்னன் செங்கோன்மை தவறியதே இதற்குக் காரணம்!'' என்று கருதலானார். கொடும் தீங்கிதைக் கொற்றவன் மீதே ஏற்ற வேண்டுமென்னும் விதிமுறையை உணர்ந்து ''செய்யனே திருவாலவாய்'' என்று தொடங்கும்

திருப்பதிகத்தைப் பாடி, சிவனடியார்கள் வாழும் திருமடத்தில் சமணர்கள் இட்ட தீ, பையவே சென்று பாண்டியனுக்கு ஆகுக!'' என்று கட்டளையிட்டார்.

பாண்டியன் தேவியின் அழகோடு பொலிவுறும் திருமாங்கல்யத்தைப் பாதுகாக்கவும், குலச்சிறை நாயனாரது அன்பை முன்னிட்டும், பாண்டிய மன்னவன்பாலுற்ற பிழையைக் கருதியும், அவன் மீண்டும் சிவனெறியை அடையப்போவதை நினைத்தும், வெப்பு நோய் தீரும்படிஅரசனது திருமேனியைத் தாமே தீண்டி விபூதி சாத்தும் பெரும்பேற்றை உடைமையாலும், அந்தத் தீப்பிணியை ''பையவே செல்க!'' என்று பணித்தார். இவ்வாறு திருஞானசம்பந்த சுவாமிகள், திருஆலவாய்ப் பெருமானை நோக்கித் திருப்பதிகம் பாடியதும், வெந்தழலின் வெம்மையைப் போன்ற வெப்பு நோய் பாண்டியனைப் போய் பற்றியது.

மறுநாள் பொழுது புலர்ந்தது. திருஞானசம்பந்தரின் திருமடத்தில் தீயவர்கள் இட்ட தீப்பற்றிய தீச்செய்தி பாண்டியன் மாதேவியார்க்கும், அமைச்சர் குலச்சிறையாருக்கும் எட்டியது. உடனே அவர்களிருவரும் மனம் மயங்கி, ''சீர்காழிப் பிள்ளையாரை இத் தீயவர் நாட்டில் வரவழைத்த நாம் உயிர் துறத்தல் வேண்டும்!'' என்று பதைபதைத்தார்கள். அந்நிலையில் தீயால் திருமடத்திற்குப் பழுது நேரவில்லை. புறம்பிலே அணைந்து விட்டது!'' என்ற நற்செய்தியையும் அவர்கள் கேட்டார்கள். ''இனி சமணர்கள் செயலால் முடிவில் என்னென்ன விளையுமோ?'' என்று அரசியாரும் அமைச்சரும் கலங்கினார்கள். அப்பொழுது பாண்டிய மன்னரின் மெய்க்காப்பாளர்கள் ஒடி வந்து, ''அரசருக்கு வெப்பு நோய் அடுத்தது'' என்று அறிவித்தார்கள். அதைக் கேட்டதும் பாண்டிய மன்னனின் தனிமனைவியான மங்கையர்க்கரசி பெரும் பரபரப்பும் பயமும் மேலிட மதியமைச்சரோடு விரைந்து சென்று மலைத் தோளுடைய மன்னவன் அருகே அடைந்தார்கள்.

பாண்டியனுடைய உடல் வெப்பு நோயின் கொடுமையால் நடுங்கியது. எரியும் நெருப்பைப் போன்ற அனற்சூடு, கணகணவென்று அவன் உடம்பெல்லாம் பரவியது. மாளிகையின் புறத்தே காவலாக நின்றவர்களையும் வாட்டித் தீய்ப்பதுபோல் பெரும் வெப்பு நோயால் பாண்டிய மன்னனின் உடல் உலர்ந்து சுருங்கியது. உணர்வும் உயிரும் நீங்குவது போல ஒருபுறம் ஒதுங்கின. அரசனருகில் வந்தவர்கள், அவன் உடல் சூட்டின் வெம்மையைத் தாங்கமுடியாமல் தொலைவில் அகன்றனர். அங்கு கொண்டுவரப்பெற்ற வாழையின் இளங் குருத்துகளும், பச்சிலைத் தளிர்களும் அரசனது வெப்பத்தால்

காய்ந்து சுருண்டு பொடிப்பொடியாயின. வைத்தியத் தொழில் வல்லவர்கள் தாங்கள் கற்ற வித்தைகளையும், அனுபவத்தையும் மருந்துகளையும் கொண்டு சகலவிதமான சிகிச்சைகளையும் செய்தனர். ஆனால் அவற்றினாலும் அடங்காமற் மேன்மேலும் உருகியெழுந்த வெப்பு நோய், அரசன் உயிரையும் உருக்குவதாகிவிடவே அவன் பேச்சின்றி, நினைவிழந்து கிடந்தான்.

இவ்வாறு பாண்டியன் தீப்பிணியினால் வருந்துவதைச் சமணர்கள் கேள்விப்பட்டுப் பெருமூச்செறிந்து ''நேற்றிரவில் நாம் செய்த தீச்செயலினால் வந்த விளைவுதானோ இது?'' என்று சந்தேகப்பட்டு அது வெளிப்படாத வகையில் மானமின்றிப் பாண்டியனிடம் வந்து சேர்ந்தார்கள். வந்தவர்கள் பாண்டியனைச் சூழ்ந்து கொண்டு அவன் வாடும் நிலை கண்டு வருந்தி, அவனுக்கு வந்த நோயின் மூலம் அறியாமலேயே தங்கள் கையிலுள்ள மயிற்பீலிக் கற்றைகளால் தங்கள் தெய்வத்தின் பெயரைக் கூறும் மந்திரங்களை தேவநாகரிக மொழியிலே சொல்லி, அரசன் உடலை முன்னும் பின்னுமாகத் தடவினார்கள். உடனே அப்பீலிகள் பிரம்போடு தீய்ந்து தீப்பொறிகளுடன் சிதறி விழுந்தன. அதைக் கண்ட சமணர்கள் அச்சம் மிகுந்து தங்கள் கமண்டலங்களிலிருந்த நீரையெடுத்து மன்னன்மீது தெளித்தார்கள். அந்நீர் எரியும் தீயின் மேல் சொரிந்த நெய்யைப்போல் அதிகமாகப் பற்றியெரிந்தது. நோய்க் கொடுமை தாங்காத பாண்டிய மன்னன் சமணர்களைப் பார்த்து ''நீங்கள் ஒருவரும் இங்கிராமல் அகன்று போங்கள்!'' என்று கூறி உணர்வு சோர்ந்து உடல் வாடி மயக்கமடைந்தான்.

அதைக் கண்ட பாண்டியதேவி பயந்து, அமைச்சர் பாரம் தாங்கிய குலச்சிறையாரை நோக்கி ''நம்மை ஆட்கொள்ள சீர்காழியிலிருந்து வந்த திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு நேற்றிரவு சமணர்கள் செய்த தீங்குதான் இப்படி என் நாதருக்கு வினையாக வந்து மூண்டதோ!'' என்று கேட்டாள். அதற்கு அமைச்சர், ''ஆம் முப்புரம் எரித்த முக்கண் பெருமானின் அன்பருக்கு சமணர்கள் செய்த தீங்கே நம் மன்னவருக்கு வெப்பு நோயாக வந்து விளைந்தது! அந்த வஞ்சகத் தீயவர்கள் இந்நோயைத் தீர்க்கப் புகுந்தால் அது முதிர்ந்தோங்காது என்ன செய்யும்?'' என்றார். உடனே பாண்டிய தேவியும் குலச்சிறையாரும் அரசரை வணங்கி, ''இந்த வெப்பு நோய் உங்களுக்கு எப்படி வந்தது தெரியுமா? சீர்காழியிலிருந்து வந்த திருஞானசம்பந்த வள்ளலார் நம் மதுரைமாநகரை அடைந்ததும் அருகர்கள் அவருக்குச் செய்த தீய அனுசிதம் அதனால் வந்தது. அவர் தங்கியிருந்த திருமடத்தில் நேற்றிரவு அச்சமணர்கள் தீயிட்டார்கள். அந்தத் தீயே வெப்பமாகி

உம்மைப் பற்றிக்கொண்டுள்ளது. ஆகவே சமணர்களின் மாய மந்திரங்களும், பிறவும் உம்முடைய நோயைப் பெருக்குமே தவிரப் போக்குதல் அரிது. குளிர்நிலாச் சூடிய சிவபெருமானிடம் ஞானம் பெற்றவரான திருஞானசம்பந்தப் பெருமான் இங்கே வந்தருளிப் பெருநோக்கம் செய்தால் இந்தத் தீப் பிணியும் தீரும். அதுவுமின்றிப் பிறவிப் பிணியும் தீரும் என்று கூறினார்கள். பாண்டியன் செவிகளில் திருஞானசம்பந்தர் என்ற திருமந்திரம் புகுந்தவுடனேயே அவன் சிறிது அயர்வு நீங்கப்பெற்றான். ''சமணர்களின் தீச்செயலே தன் நோய்க்கு மூலகாரணம்!'' என்று அவன் எண்ணமிட்டுத் தன் அமைச்சரையும் அரசியையும் நோக்கி, ''சைவ நீதியின் மறைச் சிறுவராகிய திருஞானசம்பந்தர் இங்கு வந்தால் அவருடைய அருளினால் இந்நோய் நீங்குமானால் உண்மை நிலையின் நிச்சயத்தை அறிவேன்! எனக்கு நேர்ந்த இப்பிணியைத் தீர்த்து வெல்பவர்கள் எவரோ அவர் பக்கம் சேர்வேன்! ஏதாவது உபாயமிருந்தால் திருஞானசம்பந்தரை இங்கே அழைத்து வாருங்கள்'' என்றான்.

உடனே அமைச்சரும், அரசியும் அணையை உடைத்துச் செல்லும் வெள்ளம்போல் ஆனந்தமும் அன்பும் பொங்கியெழ விரைந்து சென்றார்கள். பிள்ளையாரின திருமடத்திற்குச் சமணர்கள் இழைத்த தீங்கினையெண்ணி வருந்தியவர்களாய்த் திருஞானசம்பந்தர் திருவடிகளைப் பணிந்து அத்துயரம் தீர்க்க முனைந்தார்கள். மணிகளிழைத்த சிவிகையின்மேல் பாண்டிய தேவி ஏறி அமர்ந்து மின்னற்கொடிகள் போன்ற காவற் பெண்கள் சூழ்ந்து வரப் புறப்பட்டுச் சென்றாள். வேற்படை அமைச்சரான குலச்சிறையாரும் குதிரைமீது ஏறிக்கொண்டு மங்கையர்க்கரசியாரின் சிவிகைக்கு முன் சென்றார். இருவரும் திருஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தை அடைந்தார்கள்; அமைச்சர் தாமேறியிருந்த குதிரையினின்றும் கீழே இறங்கி அங்குள்ள பரிசனங்களை நோக்கி ''நாங்கள் வந்துள்ள செய்தியை சீர்காழிப் பிள்ளையாரிடம் சென்று விண்ணப்பம் செய்வீர்களாக!'' என்றார். பரிசனங்கள் அத்திருமடத்திற்குள் சென்று திருஞானசம்பந்தரைக் கண்டு வணங்கி, ''பாண்டிமா தேவியாரும், குலச்சிறையாரும் தங்களைக் காண வந்திருக்கின்றனர்'' என்று விண்ணப்பம் செய்தனர்.

அதைக் கேட்டதும் சம்பந்தர், ''அவர்களை இங்கே அழைத்து வாருங்கள்'' என்று கூறினார். பரிசனங்கள் மீண்டும் வெளியேபோய் அவர்களைத் திருமடத்திற்குள் வரும்படி அழைத்தார்கள். அமைச்சரும் அரசியாரும் பெரு விருப்பத்தோடு உள்ளே புகுந்தனர். அங்கே ஞானத்தின் திருவுருவமாகவும் நான்மறையின் தனித் துணையாகவும் மண்ணில் வளர்க்கும் நிலாக் கொழுந்தாகவும் வீற்றிருக்கும் ஞானசம்பந்தரைக்

கண்களிக்கக் கண்டனர். திருஞானசம்பந்தரின் பாதத் தாமரைகளில் பாண்டிமாதேவியும் அமைச்சரும் விழுந்து வணங்கி, கவலைக் கடலுக்கு ஒரு கரை கண்டதுபோல் கண்ணீர் பெருக்கிக்கொண்டேயிருந்தார்கள். ஞானசம்பந்தர் அவ்விருவரையும் பரிவோடு எடுத்து நிறுத்தி, ''ஏதாயின் தீங்கு உண்டோ?'' என்று கேட்டார். அவ்விருவரும் ''சமணர்கள் செய்த வஞ்சனையைக் கேட்டு வருந்தி மிகவும் அஞ்சினோம். பிறகு அந்தத் தீங்கு, தங்கள் திருமேனியைத் தீண்டாது என்று துணிந்து துயரம் நீங்கினோம். ஆனால் அச்சமணர்கள் செய்த அச்செயல் அரசரிடம் சென்று கொடிய வெப்பு நோயாக மாறி அவரை வருத்துகிறது. அந்த வெப்பு நோய் சமணர்கள் செய்யும் மந்திர மாயங்களால் நீங்கவில்லை. தீப்பிணியால் வருந்தி மயங்கிக் கிடக்கும் மன்னவர் முன்பாக அடிகள் வந்தருளிச் சமணர்களை வென்றருளினால் மன்னரது உயிரும் உய்யும்; எங்கள் உயிரும் உய்யும்!'' என்று விண்ணப்பம் செய்தார்கள்.

''நீங்கள் ஒன்றும் அஞ்சவேண்டாம்! நீங்கள் உவக்கும் படியும் யாவரும் காணும்படியும் உணர்விலா சமணர்களை வாதில் வென்று மீன்கொடி மன்னன் திருநீறு அணியச் செய்வேன்!'' என்றார் திருஞான சம்பந்தர். மற்றவர் முகம் மலர்ந்து ''துன்பக் கடலில் அழுந்திக் கிடந்த எங்களை எடுத்தருள்வதற்காகவே தென்னாடு செய்த தவத்தால் அடிகள் எழுந்தருளும் பேறு பெற்றோம்! இனி என்னதான் பெறமாட்டோம்?'' என்று தொழுதார்கள்.

''ஆவதும், அழிவதும் ஆகிய எல்லாம் சிவபெருமானுடைய செயலேயாகும். அமணர்களாகிய பாவ காரிகளை நோக்க நேரும் தீமை நீங்கவும், அவர்களை வெல்லவும், திருஆலவாய்ப் பெருமானின் திருவுள்ளக் குறிப்பினை அறிந்து வருவேன்'' என்று திருஞான சம்பந்தர் கூறிவிட்டு, வெண்ணீறணிந்த சிவனடியார் கூட்டத்தோடு திருமடத்திலிருந்து புறப்பட்டு ஆலவாய்ப் பெருமானின் திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கே ''சமணர்களுடன் வாது செய்யத் திருஉள்ளமோ?'' என்று ''காட்டுமாவ துரித்துரி'' என்னும் திருப்பதிகத்தைப் பாடி தொடர்ந்து ''வேதவேள்வியை'' என்னும் திருப்பதிகத்தை ஓதினார். ''நான்மறைகளும் துதிக்கின்ற சீலம் பொருந்தியவனே! திருவாலவாயினில் எழுந்தருளிய சிவபெருமானே; விஷத்தையே அமுதாக உண்டு தேவர்களுக்கு அருள் செய்தீர்! மார்க்கண்டேயருக்காக, காலனைக் காலால் உதைத்து உருட்டினீர்; இன்று அடியேனுக்கு இந்த நில உலகம் முழுவதும் உம் புகழேயாகப் பரவுதல் வேண்டும்!'' என்று விண்ணப்பித்து, மானமில்லாத சமணர்களை வாதில் வென்றழிக்கப் பாடினார்.

பிறகு ஆண்டவன் திருஉள்ளக் குறிப்பையும் திருவருளையும் பெற்ற மகிழ்ச்சியோடு சம்பந்தர், ஆலய ஆசார வாயிலை அடைந்து, அங்கிருந்த முத்துச் சிவிகையில் ஏறிக்கொண்டார். உடனே அடியார்கள் ஆரவாரம் செய்தனர். தாரை சங்கு முதலான மங்கல வாத்தியங்கள் முழங்கின; அமைச்சர் குலச்சிறையார் பெருந்தொண்டர் கூட்டத்தோடு முன்னே செல்ல, மங்கையர்க்கரசியார் மற்றொரு சிவிகையில் தம்மைப் பின்தொடர்ந்து வர, காளமும், தாரையும், சங்கும் எங்கும் ஒலிபரப்ப, திருஞான சம்பந்தர் முத்துப் பல்லக்கில் வெண்குடை நிழலோடு மதுரைமாவீதியின் வழியாக பாண்டிய மன்னனின் அரண்மனையை அடைந்தார்.

குலச்சிறையார் விரைந்து சென்று, ஞானசம்பந்தரின் வரவைப் பாண்டிய மன்னனுக்குத் தெரிவித்தார். மன்னன் சிறிது துயரம் நீங்கப் பெற்று, ''என் முடியின் பக்கத்திலே அவருக்குப் பொற்பீடமொன்றைக் கொண்டுவந்து இடுங்கள்.'' என்றான். பிறகு ஞானசம்பந்தர் பிள்ளையாரை எதிர்சென்று அழைத்து வரும்படி மந்திரியை ஏவினான். பாண்டியனின் கட்டளைப்படி அமைச்சர் குலச்சிறையார், திருஞான சம்பந்தர் சுவாமிகளை மீண்டும் எதிர்கொள்ள பெருமகிழ்ச்சியோடு விரைந்து சென்றார்.

இந்நிகழ்ச்சிகளை சமணர்கள் கண்டார்கள். அவர்கள் அரசனை நோக்கி, ''அரசே! நமது தனிப்பெரும் சமண சமயத்தை நீங்கள் நிலைநாட்டும் முறை இதுவோ? நன்று, நன்று! உம் அறநெறியை நீரே காத்தருளவேண்டும்! சைவ வேதியச் சிறுவரை இங்கே வரவழைத்துவிட்டீர்! அவர் வரட்டும்! ஆனால் அவரும் நாங்களும் உம்முடைய வெப்பு நோயை ஒருங்கே தீர்க்கும்படி நீர் சொல்லவேண்டும்! நோய் முழுமையும் அவராலேயே தீர்க்கப்பட்டாலுங்கூட, நாங்களும் தீர்த்தோம் என்றும் நீர் சொல்ல வேண்டும்!'' என்று கூறினார்கள். அதற்கு மன்னன் முன்பு செய்த தவப்பயன் முன் வந்து கூறுவதால் மனம் திடமடைந்து, ''நான் நடுநிலை பிறழ்ந்து வஞ்சகம் பேசமாட்டேன்! நீங்கள் இருவரும் உங்கள் தெய்வ வலிமையால் எனது நோயை முதலில் தீருங்கள்'' என்றான். சமணர்கள் மனம் தளர்ந்தார்கள்.

அப்பொழுது செந்தமிழ்ப்பாண்டிய நாடு முன்பு செய்த தவக்கொழுந்து போன்றவராகிய சம்பந்தர், அரண்மனையின் வாயிலையடைந்து, முத்துச் சிவிகையிலிருந்து கீழேயிறங்கி உள்ளே புகுந்தருளினார். அமைச்சர் குலச் சிறையார் அவருக்கு முன்னே செல்ல, பாண்டியன்தேவி தன் சிவிகையிலிருந்து இறங்கிப் பிள்ளையாருக்குப் பின்னே பணிவன்புடன் சென்றாள்.



வையகத்தின் இருள் வானத்தில் இருந்து இறங்கிவரும் வெண்ணிலாவைப் போல் ஞான சம்பந்தர் வருவதைப் பாண்டிய மன்னன் கண்டான். கண்டதும் பாண்டியன் தன் இரு கைகளையும் கூப்பி வரவேற்று தன் முடியின் பக்கத்திலுள்ள பொற்பீடத்தைக் காட்டினான். திருஞானசம்பந்தர் அந்தப் பீடத்தில் அமர்ந்தார், சமணர்கள் திகிலடைந்தார்கள்.

பாண்டியன் ஞானப் பிள்ளையாரின் திருமேனியைக் கண்டதுமே நோய் சிறிது நீங்கப் பெற்றான். அவன் அவரை நோக்கி, ''தாங்கள் ஊர் யாது?'' என்று விருப்பத்தோடு கேட்டான். அதற்கு திருஞானசம்பந்தர் ''பிரமனூர் வேணுபுரம்'' என்னும் பாடலடி தொடங்கி சீர்காழியின் பன்னிரண்டு திருப் பெயர்களையும் சுட்டிக்காட்டி, ''அத்தகைய பரமனூர் பன்னிரண்டாய் ஒருங்கே விரிந்து நின்ற திருக்கழுமலம் நாம் பரவும் ஊர்!'' என்று கூறி திருச்சக்கரமாற்றுப் பதிகத்தைப் பாடினார். சூழ்ந்து நின்ற சமணர்கள் மனம் பொறாது பொங்கியெழுந்து, தங்கள் அச்சத்தை மறைத்து கோபத்தீயை தங்கள் முகத்தில் வரவழைத்துக் கொண்டு தங்கள் சமய நூல்களில் உள்ளவற்றையெடுத்துச் சொல்லி, குரைத்தார்கள். திருஞானசம்பந்தரோ அவர்களை நோக்கி அமைதியாக, ''உங்கள் கொள்கையிலுள்ள பொருள் முடிவுகளை உள்ளபடி கிரமமாகப் பேசுங்கள்!'' என்றார்.

உடனே ஊத்தை வாய் சமணர்கள் வடவைக் கனலைப் போலச் சீறியெழுந்து வாயில் வந்தவற்றைப் பிதற்றிப் பிள்ளையாரை அனேகராய்ச் சூழ்ந்து நெருங்கினார்கள். அந்தக் காட்சியைக் கண்ட மங்கையர்க்கரசி திடுக்கிட்டு உள்நடுங்கித் தன் கணவனான பாண்டியனைப் பார்த்து, ''இந்த ஞானசம்பந்தப் பிள்ளையார் உருவத்தில் எளியவர்; மேலும் பாலகர், மற்ற சமணர்களோ எண்ணிலாதவர்கள்; திண்ணர்கள்! மன்னவரே! உமது தீப்பிணியின் மயக்கத்தைத் தீர்க்க எங்கள் வள்ளலாரை விடும்; அதன் பிறகு சமணர்கள் வல்லவர்களாயிருந்தால் அவர்கள் வாதம் பேசட்டும்!'' என்று கூறினாள். மன்னன், தன் மனைவியை நோக்கி, ''இதற்காக நீ வருந்த வேண்டாம். இனி வேறென்ன வாதிருக்கிறது?'' என்று சொல்லி, சமணர்களைப் பார்த்து, ''நீங்களும் சிவனடியாரான இப்பிள்ளையாரும் என் நோயைத் தீர்த்து, உங்கள் தெய்வத் தன்மையை நிலை நிறுத்திக் கொள்ளுங்கள்!'' என்று சொன்னான். அதைக் கேட்ட திருஞானசம்பந்தர், தன்னுடைய இளமை நிலை கண்டு அஞ்சிய மங்கையர்க்கரசியாரை நோக்கி, ''மானைப் போல் மருளும் விழிகள் கொண்ட மாதேவியே! என்னைப் பாலகன் என்று கருதி அஞ்சவேண்டாம். திருஆலவாய் அரன் எனக்குத் துணை நிற்க யான் இந்த சமணர்களுக்கு என்றும் எளியேன் அல்லன்!'' என்று கூறும் விதமாக அக்கருத்தினைக் கொண்ட ''மானினேர் விழி மாதராய்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

பாண்டியன் தன்னைச் சூழ்ந்து ஓலமிடும் சமணர்களையும் அருளுடைய ஞானப் பிள்ளையாரையும் நோக்கி, ''எனக்குள்ள அந்த வெப்பு நோயை நீங்கள் தனித் தனியே வெவ்வேறு விதமாக விரைவில் தீருங்கள்! அதைத் தீர்த்தவர்களே, வாதில் வெற்றி பெற்றவராவார்கள்!'' என்று சொன்னான். உடனே சமணர்கள் ''அரசே! நாங்கள் மந்திரித்து எங்கள் தெய்வ வல்லமையால் உம் உடம்பின் இடது பாகத்திலுள்ள நோயைத் தீர்ப்போம்'' என்று சொல்லி அரசனது இடப்பாகத்து நோயை தீர்ப்பதற்காக அவர்கள் மன்னவனருகே தங்கள் நாமத்தை முழக்கி, மயிர்ப் பீலிக் கற்றையினால் அரசனது இடப்பாகத்தைத் தடவினார்கள். அதனால் வெப்பம் முன்னிலும் அதிகமாகக் கொதித்தெழுந்து பாண்டிய மன்னனை வருத்தலாயிற்று. மன்னன் அதைப் பொறுக்க முடியாதவனாகி ஞானசம்பந்தரைப் பார்த்தான்.

ஞானசம்பந்தர் ஆலவாய் சொக்கநாதப் பெருமானை நினைத்து, ''ஆலவாய் அண்ணலே! அரசனின் வலப்பக்கத்து வெப்பு நோயை நீரே மந்திரமாகி மருந்துமாகி தீர்ப்பீர்!'' என்று வேண்டிக் கொண்டு பெருமானை நினைத்து, ''மந்திரமாவது

நீறு!'' என்னும் திருநீற்றுப் பதிகத்தினைப் பாடி, அந்தத்திருநீற்றைக் கொண்டே அரசனது வலப்பக்கத்தில் தடவியருளினார். தடவியதும் வலப்பக்கமிருந்த வெப்பு நோய் முழுதும் நீங்கி, பொய்கை போலக் குளிர்ந்தது. ஆனால் அவ்வலப் பக்க நோய் இடப்பக்கத்தில் புகுந்து முன் நோயோடு சேர்ந்து இருமடங்காகப் பெருகலாயிற்று. சமணர்களின் பீலிகள் அந்த நோயின் வெப்பத்தால் எரிந்து கரிந்தன. வெப்பு அலைபோல வீசியது. உடலின் இடப்பக்கத்து வெப்பம் தங்களையும் தாக்கவே, சமணர்கள் நடுங்கி அதைத் தாங்க முடியாமல் தள்ளிப் போய் ஒதுங்கி நின்றார்கள். திருஞான சம்பந்தர், மன்னனின் வலப்புறத்து வெப்பு நோயைப் போக்கியது கண்டு, அங்கிருந்த பெரியவர்கள் அதிசயித்து சூழ்ந்து கொண்டார்கள்.

உலகில் வெப்பமும் தட்பமும் பொருந்தியிருப்பது போல், அரசன் உடலிலும் ஒரு பக்கம் வெப்பமும், மறுபக்கம் குளிர்ச்சியும் பொருந்தி நின்றது. பாண்டிய மன்னன் அதைக் கண்டு, ''இது என்ன? ஒரே காலத்தில், ஒரே உடலில், கொடிய நரகத் துன்பம் ஒரு பக்கம் உள்ளது! மோக்ஷ இன்பம் மற்றொரு பக்கம் உள்ளது. விஷத்தின் கொடுமை ஒருபக்கம், அமுதத்தின் இனிமை மற்றொரு பக்கம்; என்னுடல் ஒன்றிலேயே இந்த இருவேறு தன்மைகளின் இயல்பையும் அடையப் பெற்றேன் என்னே அதிசயம்; வெப்பமான சமணர்களே; நீங்கள் தோற்றுவிட்டீர்கள்; என்னை விட்டு அகலப் போய்விடுங்கள்!'' என்று கூறிவிட்டுப் பிள்ளையாரை நோக்கி, ''என்னை வாழ்விக்க வந்த மறைக்குல வள்ளலாரே! என் உடலின் இடப் பக்கத்திலுள்ள வெப்பு நோயும் தீர நீரே அருள் செய்யும்!'' என்று வேண்டினான். பிள்ளையார் தமது திருமுகத்திலே கருணை காட்டி, திருக்கையில் வெண்திரு நீறு காட்டி, திருப்பதிகம் நிறைவாக்கித் துதித்து பாண்டிய னுடலில் இடது பக்கம் ஒரு முறைதடவ, அரசனது இடப்பக்கத்து வெப்பம் அகன்று நோய் முழுவதும் நீங்கியது. பாண்டியன் மகிழ்ந்தான். பாண்டிமாதேவியாரும், குலச்சிறையாரும் தீங்கினையழித்த பிள்ளையாரின் திருவடிகளைத் தங்கள் தலைகளால் வணங்கி, ''நாங்கள் பெருமை பெற்றோம். இன்றே உறுதிபெறப் பிறந்தவர்களானோம். பிறவா மேன்மையுற்றார் மன்னர்!'' என்றுகூறி உள்ளம் மகிழ்ந்து உவகை மிகுந்தார்கள். நோயெல்லாம் தீர்ந்தது! பாண்டியன் பேரின்பத்தோடு பொங்கி யெழுந்து கை கூப்பிச் சமணர்களின் முன்னாலேயே ஞானசம்பந்தரின் திருவடிகளில் விழுந்து வணங்கி, ''ஞானசம்பந்தரின் பாதத்தை நண்ணி நான் உய்ந்தேன்!'' என்றான்.

சமணர்கள், தம்முடைய மந்திர வித்தைகள் முழுதும் பிள்ளையாரின் சொல்லாற்றலாலும் இன்னிசைப் பாமாலை வெற்றியாலும் பயந்தொழியக் கண்டு அஞ்சினர். இனிமேல் அந்தச் சைவச் சிறுவனைத் தர்க்க வாதத்தினால் வெற்றி பெறுவது இயலாது! ஆகையால், தீயினாலும், நீரினாலும் நாம் வெற்றி பெறவேண்டும்! என்று தங்களுக்குள் எண்ணினார்கள். அவர்களது மனக் குறிப்பை, முகக் குறிப்பால் அறிந்த ஞானசம்பந்தப் பிள்ளையார், புன்முறுவலுடன் சமணர்களை நோக்கி, ''என்ன சிந்தனை! உங்கள் சமயத்தத்துவத்தைப் பேசுங்கள்!'' என்று கூறினார். அதற்குச் சமணர்கள் ''இனி தர்க்க வாதம் வேண்டியதில்லை; நமது சமய உண்மைகளைச் செயலில் நிறுத்திக்காட்டுவதே சிறப்பான வாதமாகும்!'' என்றார்கள். அப்போது மன்னன், அவர்களைப் பார்த்து, ''என் உடம்புகள் ஒடுங்கும்விதமாக வெப்புநோய் வாட்டியபோது அதை நீக்க நீங்கள் முயன்றீர்கள்! அதிலேயே நீங்கள் வெற்றி பெறவில்லை! இனி உங்களுக்கென்ன வாது?'' என்று கேட்டான். ''என்ன வாது?'' என்பதை சமணர்கள் வேறு வகையாகக் கொண்டார்கள். அவர்கள் அதை இழிவுரையாகக் கருதாமல் ஒரு கேள்வியாகவே எடுத்துக் கொண்டார்கள். உடனே அவர்கள் அரசனுக்கு எதிரில் சென்று, ''அரசே, நாங்கள் இருதரத்தோறும் எங்களெங்கள் சமய உண்மைப் பொருளின் கருத்தை ஏடுகளில் எழுதிப் பெரும் நெருப்பில் இடுவோம்! நெருப்பில் எந்த ஏடு வேகாமலிருக்கிறதோ அந்த ஏட்டினுக்குரியவர் வெற்றி பெற்றவராவர்!'' என்று சொன்னார்கள்.

அவர்களுக்குப் பாண்டிய மன்னன் பதில் சொல்வதற்கு முன் திருஞானசம்பந்தர் குறுக்கிட்டுச் சமணர்களை நோக்கி ''வேந்தன் முன்னிலையில் நீங்கள் சொல்லியவாறே செய்வோம்!'' என்று கூறினார்.

அதனால் பாண்டி மன்னனின் ஆணைப்படி அவன் முன்னிலையிலேயே வேலையாட்களால் விறகுகள் அடுக்கப்பட்டும் தீ மூட்டப்பட்டும் பெரு நெருப்பு கொழுந்து விட்டெரிந்தது! திருஞான சம்பந்தர் தாம் பாடிய இசைப் பதிகங்களின் திருமுறையை எடுத்து ''எங்கள் நாதனே பரம்பொருள்!'' என்று துதித்து, ஏடுகளைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தார். ஏடுகளில் ஒன்றை எடுத்தார். ''போகமார்த்த பூண்முலையாள்'' என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் கிடைத்தது. அத்திருப்பதிகத்தைத் திருக்கரத்தே தாங்கினார். அதற்கு ஆக்கம்தேடத் ''தளிர் இளவளர் ஒளி'' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். ''நள்ளாறர் தம் நாமமே – மிளிர் இள வளர்றெறி இடில் இவை பழுதிலை மெய்ம்மையே'' என்று ஓதி அதை நெருப்பிலிட்டார்.

தீயிடையிட்ட அந்த ஏட்டிலே திருநள்ளாற்றைப் போற்றும் தீந்தமிழ்த் திருப்பதிகம், உமாதேவியாரை ஒரு பாகத்தில் கொண்ட அட்ட மூர்த்தியாகிய சிவபெருமானையே மெய்ப் பொருளாகக் கொண்டமையால், தீயினிடையே வேகாமலும் பச்சைப் பசேலென்றும் விளங்கியது. சமணர்களும் தங்கள் சமய உண்மையை ஏட்டில் எழுதினார்கள். அந்த ஏடு நெருப்பில் உய்யுமோ என்ற கவலையுடன் அதை நெருப்பில் இட்டு நடுங்கியவாறு நின்றார்கள். அவ்வேடு தீயிலே பஞ்சு விழுந்தால் பட்டொழிவது போல், தகிக்கப்பட்டு ஒழிந்தது. திருஞான சம்பந்தரோ, குறித்த நாழிகை கழிந்ததும் நெருப்பிலிருந்து தம் ஏட்டை எடுத்தார். அதில் பசுமையும் புதுமையும் அதிகமாக விளங்கியது. திருஞானசம்பந்தர் அவ்வேட்டைச் சபையார் முன்னே காட்டிவிட்டுத் திருமுறைச் சுவடியிலே முன்னர் வைத்திருந்த முறைப்படியே கோர்த்து வைத்தார். அதைக் கண்டு மன்னன் வியப்படைந்தான். பிறகு அவன் சமணர்களை நோக்கி ''நீங்கள் நெருப்பில் போட்ட உங்கள் ஏட்டை எடுத்துக் காட்டுங்கள்!'' என்றான். சமணர்கள் ஏட்டை எடுக்க நெருப்பை நெருங்கினார்கள். எரி நெருப்பு கொழுந்து விட்டெரிந்தது. மன்னர் தண்ணீர் கொண்டு நெருப்பைத் தணிவித்தான். சமணர்கள் நெருப்பிலிட்ட தங்கள் ஏட்டைத் தடவித் தடவிப் பார்த்தார்கள். அவர்கள் என்ன கண்டார்கள்: சாம்பலையும் கரியையுமே கண்டார்கள்! அவர்களால் வேறு எதைத்தான் காண முடியும்? அவர்கள் மனம் வருந்தித் திகைத்தார்கள்! அத்திகைப்பினால் அவர்கள் செய்வதொன்றும் அறியாமல் சாம்பலைப்பிசைந்து பிசைந்து பார்த்தார்கள்.

அதைக் கண்ட அரசனுக்குச் சிரிப்பு வந்தது. அவன் சிரித்துக் கொண்டே சமணர்களைப் பார்த்து ''இன்னும் நன்றாக அரித்து அரித்துப் பாருங்கள். சாம்பலையும் கரியையும் தவிர இன்னும் ஏதாவது அகப்படுகிறதா பார்ப்போம்!'' என்று ஏளனம் செய்து, ''பொய்யை மெய்யாக்கப் புகுந்தவர்களே! போங்கள்! போங்கள்! முன்னும் தோற்றீர்கள்! இப்பொழுதும் தோற்றீர்கள்! இன்னுமா தோற்கவில்லை?'' என்று கேட்டான். பாண்டியனின் இகழ்ச்சியாகிய புன்னகையைச் சமணர்கள் புரிந்து கொள்ளாமல் ''அரசரே! முன்பு இருமுறைவாது செய்ய முயன்றோம்; இன்னும் ஒரு முறை முயல்வோம். ஒரு முறையாவது வாதில் வெற்றி பெறுவோம்'' என்றார்கள். தோற்றும் ஆசை நீங்கா அத் துணிவிலாரின் வார்த்தையைப் பாண்டியன் ''இன்னும் என்ன வாது?'' என்று மறுத்தான். அதன் பிறகும் ஞானசம்பந்தர் பொறுமையுடன் சமணர்களைப் பார்த்து ''இனி என்ன வாது செய்ய நினைக்கிறீர்கள் நீங்கள்'' என்று கேட்டார். அந்தக்

கேள்வியைச் சமணர்கள் பிடித்துக் கொண்டு, ''நாம் புனல்வாதம் செய்வோம். நாம் அவரவர் சமய உண்மைகளை ஒவ்வோர் ஏட்டில் எழுதி அந்த ஏட்டை ஓடுகின்ற வைகையாற்றிலே நாமும் நீரும் இடுவோம். நீரோட்டத்தோடு செல்லாமல் எதிர்த்து நிற்கும் ஏடே பெருமையுடையது! அதுவே வெற்றி பெற்றதுமாகும்!'' என்றார்கள். திருஞான சம்பந்தரும் ''நன்று! அதனபடியே செய்வோம்!'' என்றார். அப்பொழுது அமைச்சர் குலச்சிறையார் அரசர் அருகில் வந்து ''இனி செய்யப்படும் இவ்வாதிலே தோற்றவர்களை என்ன செய்வது? அதை முடிவு செய்துகொண்ட பிறகே இந்த வாதில் இறங்கவேண்டும்!'' என்றார். அதைக் கேட்டதும், குலச்சிறையார்மீது சமணர்களுக்குப் பொறாமையும், கோபமும் பொங்கி எழுந்தன. அந்த எரிச்சலில் அவர்கள் வாய்தவறி ''நாங்கள் இவ்வாதிலும் தோற்றோமானால், எங்களை இவ்வரசனே கழுவில் ஏற்றுவான்!'' என்று தாமே கூறிவிட்டார்கள். பாண்டியன் அவர்களைப் பார்த்து ''கோபமும் பொறாமையும் உங்களை இப்படிக் கூறச் செய்தன!'' என்று சொன்னான்.

அதன் பிறகு பாண்டிய மன்னன், எல்லோரையும் வைகையாற்றுக்குப் போகுமாறு கட்டளையிட்டுத் தானும் புறப்பட்டான். உடனே, திருஞானசம்பந்தர், பொற்பீடத்திலிருந்து இறங்கிப் போய் முத்துச் சிவிகையிலேறிச் சென்றார். அவர் பின்னே, பாண்டிய மன்னனும், பாண்டிய நாட்டு அமைச்சரும் தத்தமது குதிரையின் மீதேறிச் சென்றனர். சமணர்கள் தம் உணர்வில் மயக்கத்தினை மேற்கொண்டு சென்றனர்.

பாண்டிய மன்னன் வெப்பு நோய் நீங்கப் பெற்று அரண்மனையிலிருந்து புறப்பட்டு, வீதியின் வழியாகப் பிள்ளையாரைப் பின்தொடர்ந்து செல்லும்போது, மதுரை மக்கள் தங்கள் மைந்தரோடு திரண்டு வந்து ஞானசம்பந்தரை வணங்கித் தத்தமக்குத் தோன்றியவாறு பேசிக்கொண்டனர். ''நம் பாண்டிய மன்னருக்கு ஏற்பட்ட வெப்பு நோயைத் தீர்த்த திருஞானசம்பந்தர் இந்த நாயனார்தான்! பார்'' என்பார்கள் சிலர். ''பால்மணம் கமழக் குதலை மொழி பேசும் இந்தப் பவளவாய்ப் பிள்ளையார் நம் பாண்டியரோடு வாழ வந்து சேர்ந்தார்!'' என்பார் சிலர். ''இவர்தான் நமது சமண முனிவர்கள்! அனல்வாதத்தில் தோற்றவர்கள்!'' என்பார் சிலர். ''விரிசடைப் பெருமானின் திருநீறே பொருளெனக் கண்டோம்!'' என்பார். ''முத்துச் சிவிகைமீது பிள்ளையார் தாம் வரும் அழகு என்ன?'' என்பார். ''வாழ்க கண்கள்!'' என்பார். நம்முடைய இந்த சமண அடிகள்மாரால் துன்பந்தான் விளைந்தது!'' என்பார். ''நாதனும் ஆலவாயில் நம்பரனே! காணும்!'' என்பார். ''சிவபெருமானையறிவதே ஞானம்''

என்பார். ''சைவமும் திருநீறும் விரைவில் எங்கும் பரவி விடும்!'' என்பார். ''சமண முனிவர்களின் முகங்களெல்லாம் வாடி விட்டன! பாருங்கள்!'' என்பார். ''அவர்களின் கொடிய வஞ்சனைகளெல்லாம் குலைந்தன போலும்!'' என்பார். வாதத்தில் தோற்ற இவர்கள் வீரர்கள் செய்யும் வாதத்தில் வெற்றி பெறுவார்களோ?'' என்பார். ''இரும்பு நெஞ்சினராயினும் இவர்கள் பிள்ளையாருக்கு எதிரோ?'' என்பார். ''குலச்சிறையார் கூரிய நீண்ட கழு மரங்களைத் தயாராகச் செய்வித்துள்ளார்!'' என்பார். ''வைகை நதியில் ஏடுகளை விடுவதற்கு வந்திருக்கிறார்!'' என்பார். ''ஆற்றிலிடும் ஏடுகள் நீரோடு செல்லாது எதிர்த்து நிற்குமோ?'' என்பார் சிலர். ''நீடிய ஞானம் பெற்றவர் நிறுத்தவும் வல்லவர்!'' என்பார். ''திருநீற்றினால் தென்னவனுடைய நோய் நீங்கிய தன்மையைக் கண்டவர்கள் யாவரும் சைவநெறியைப் போற்றுவார்கள். ஆகையால் யாவரும் சைவ நெறியினையே போற்றுங்கள்!'' என்பார். இப்படியாக வீதிவழியே திருஞான சம்பந்தர் செல்லும்போது இருபுறமும் நெருங்கி நின்ற மாதர்களும் மக்களும் எடுத்துச் சொல்லினர். ''தென்தமிழ் விளங்க திருக்கழுமலத்தான் வந்தான்!'' என்று பன்மணிச் சின்னங்கள் முழங்க முத்துச் சிவிகையில் ஞானசம்பந்தர் வந்தார். முரசங்கள் அதிர அவர் பின்னே அரசனும், பாண்டிமாதேவியும் சேர்ந்து வந்தார்கள்; சமணர்கள் ஒரு கூட்டமாக வேறொரு பக்கத்தில் தனித்து வந்தார்கள். எல்லோரும் வைகை ஆற்றின் கரையை அடைந்தார்கள்.

புகழ் மிக்க வைகையாறானது, கார்காலம் வந்தபோது காமுறும் மகளிரின் உள்ளம் தங்கள் கணவனிடம் விரைந்து செல்வதுபோல், விரைந்து கடல் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. பிள்ளையாரும் பிறரும் ஆற்றில் நீர் வேகமாகச் செல்லும் இடத்தையடைந்ததும் பாண்டிய மன்னன், ''இரு திறத்தாராகிய நீங்கள் இசைந்தபடி நீங்கள் ஏடுகளை ஆற்றில் விடுங்கள்!'' என்று கூறினான். ''முதலில் தோற்றவா, பின்னும் தோல்வியடையார்'' என்று கருதிய சமணர்கள், தம் ஏட்டினை முதலில் ஆற்றில் விடத் துணிந்தார்கள். ஆருகத நூல் கூறுகின்ற பொருளின் தொகுதியினை ''அத்தி நாத்தி'' என்று ஏட்டில் எழுதி வைகை நதியிலே வெள்ளம் வேகமாக ஓடுவதைக் கண்டும் வெறும் ஆசையோடு அந்த ஏட்டை விட்டார்கள். அத்திநாத்தி, (இது சமணர்களின் மூலமந்திரம். அத்தி – உள்ளது. நாத்தி இல்லாதது. எனவே உள்ளதை இல்லது என்று வாதிடுவதற்குச் சாதகமாக இதனை ஏட்டில் வரைந்தனர் போலும்!) அவ்வேடு கடல் நோக்கி ஓடிற்று. ஆற்றுநீர் இழுத்துக்கொண்டு ஓடும் ஏட்டைச் சமணர்கள் பின்தொடர்ந்து,

எதிரே அணைபவர்களைப் போல், ஆற்றின் கரைமீது ஓடிச்சென்றார்கள். அழியும் பொருளை மேற்கொண்ட அவ்வேடு, அவர்கள் கைக்கு எட்டாமல், கீழ்நோக்கி ★ நூறு விற்கிடை அளவுக்கு முன்னே போய்விட்டது. அதன் பிறகு அந்த ஏட்டை கண்ணால் காண்பதற்குக் கூட முடியவில்லை. அவ்வேடு சமணர்களை நட்டாற்றில் கைவிட்டு அகன்று போயிற்று. அமணர்களில் தூரத்தே சென்றவர்களும் அரசனது ஆணைக்கஞ்சித் திரும்பி வந்தார்கள்.

அவர்களுக்கு அச்சமும், பயமும் உள்ளத்தில் தோன்றினாலும் அதை மறைப்பவரைப் போல், அவர்கள் திருஞானசம்பந்தரை நோக்கி, ''உம்முடைய ஏட்டை விடும். அதன் விளைவும் இப்படி ஆவதைப் பார்ப்போம்!'' என்றனர். திருஞானசம்பந்தர். ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' என்னும் திருப்பாசுரத்தை ஏட்டிலே எழுதி, அதை வைகையாற்றிலே விட்டார். அவ்வேடு நீரோட்டத்தை எதிர்த்து எதிர் நீச்சலடித்து நீரைக் கிழித்துக் கொண்டு வந்தது. அத்திருப்பாசுரத்தில் பிள்ளையார் ''வேந்தனும் ஓங்குக!'' என்று அருளினமையால், கூனல் முதுகினனான பாண்டிய மன்னனின் கூன் நிமிர்ந்தது. அனபாய சோழனின் செங்கோலைப் போலவே நிமிர்ந்தது. பாண்டியன் அற்புதம் எய்தினான். நீரில் எதிர்த்துச்செல்லும் ஏட்டை எடுப்பதற்காகக் குலச்சிறையார் குதிரைமீதேறி, விரைந்து சென்றார். அவ்வேடு மேற்செல்லாமல் ஓரிடத்தில் தங்கியிருக்கும் பொருட்டு பிள்ளையார் தம் பவளவாய் திறந்து ''வன்னியுமத்தமும்'' என்று தொடங்கும் திருவேடகத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். திட ஏடகம் என்னும் திருத்தலத்தின் பக்கத்தில் இருக்கின்ற வைகையாற்றின் நீர் நடுவிலே ஏடானது தேங்கி நின்றது. குலச்சிறையார் நடு ஆற்றுக்குச் சென்று ஏட்டினைக் கையிலெடுத்துத் தம் தலைமீது வைத்துக் கொண்டு பெருமகிழ்ச்சி பொங்கக் கரையேறினார். அவர் சிவபெருமானைத் தொழுது ஞானசம்பந்தரிடம் வந்து வணங்கிப் பணிந்தார். பிறகு தாம் எடுத்து வந்த ஏட்டை எல்லோருக்கும் காண்பித்தார். திருத்தொண்டர் எல்லோரும் ''ஹரஹர'' என்று ஆரவாரம் செய்தனர்.

நின்றசீர் நெடுமாறனாகிய பாண்டியன் தன் அமைச்சரான குலச்சிறையாரை நோக்கி, ''வாதில் தாமாகவே ஒட்டித் தோல்வியுற்ற இச்சமணர்கள், முன்னே

★ நூறு விற்கிடை : சிறு பொருள்கள் கண்பார்வையில் மறையும் தூரம்.

பிள்ளையாருக்குப் பெருங்கேடு சூழ்த்தினர். ஆகையால் அவர்களைக் கழுவிலேற்றி, நீதிமுறைப்படி தண்டம் செய்வீராக!'' என்று கட்டளையிட்டான். அரசன் ஆணையிட்டதைக் கேட்ட ஞானசம்பந்தர் அவர்கள்மேல் சிறிதும் பகையிலராயினும், சிவனடியார்கள் வாழும் திருமடத்திலே தீங்கு செய்த சமணர்களின் தகுதியற்ற தன்மையினால், அரசனளித்த தண்டனையைக் குறுக்கிட்டுத் தடுப்பது அரசியல் நெறிக்குப் புறம்பானது என்று நினைத்து அரசனின் ஆணையை விலக்காதிருந்தார். அமைச்சர் குலச்சிறையாரும், உலகத்தார் அறியும்படிக் கூரிய நீண்ட கழு மரங்களை வரிசையாக நாட்டுவித்தார். ஆனைமலை முதலாகிய எண்பெருங் குன்றங்களிலிருந்து வந்த எண்ணாயிரம் சமண குருமார்களும் கழுவில் ஏறினார்கள்.

அக் கழுமரத் தம்பங்கள் அமணர்கள் ஆற்றிடையிட்ட ஏடு அழிந்து போன காரணத்தால் நிறுத்திய தோல்வித் தம்பங்களாகவும், ''சிவபெருமானையன்றி வேறொரு தெய்வமில்லை'' என்ற உண்மையை உலகிற்கு உயர்த்திக் காட்டும் கொடித் தம்பங்களாகவும் திருஞான சம்பந்தரின் புகழை எடுத்துக் காட்டும் வெற்றித் தம்பங்களாகவும் நின்றன.

திருஞானசம்பந்தர், பாண்டிய மன்னனுக்குத் திருநீறு அளித்தார்; அவன் அதை அன்போடு ஏற்றுத் தன் உடல் முழுதும் பூசி நின்றான். அரசன் திருநீறு பூசியதால் மதுரை நகரில் வாழ்ந்த நகர மாந்தர்கள் அனைவரும் தூய திருநீற்றினை அணிந்து கொண்டனர். அரசன் அறநெறியில் ஓங்கினான். உலகில் இன்பம் பெருகியது.

பிறகு திருஞான சம்பந்தர் வைகையாற்றிலிருந்து முத்துச் சிவிகையில் ஏறி சிவனடியார்கள் புடைசூழ ஆலவாய்ப் பெருமான் அமர்ந்திருக்கும் திருக்கோவிலுக்குச் சென்றார். பாண்டிய மன்னன், பாண்டிமாதேவியார், அமைச்சர் குலச்சிறையார் உள்ளிட்ட பலரும் கோயிலுக்குச் சென்றார்கள். திருக்கோயிலையடைந்ததும் திருஞான சம்பந்தர் தம் முத்துச் சிவிகையிலிருந்து கீழே இறங்கி கோயிலினுள் புகுந்து, ''ஐயனே! அடியேன் எனை அஞ்சலென்று அருள வல்ல மெய்யனே!'' என்று ஆலவாய் அண்ணலைப் பணிந்து, ''வீடலாலவாயிலாய்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.

பாண்டிய மன்னனும் பக்திப் பரவசமாகி, ''ஆலவாய் அரசே! நான் சமணர்களின் மாய வஞ்சனைக்குட்பட்டு மயங்கினேன். உனது அருட் பெருமையினை ஒரு சிறிதும்



அறியாதிருந்தேன். என் நோயைத் தீர்த்து, என்னை ஆட்கொள்ளும்படி அருள் நிறைந்த ஆளுடைய பிள்ளையாரை எனக்கு அளித்தருளினாய்!'' என்று துதித்தான்.

திருஞானசம்பந்தர், அடியவர்களுடனே ஆண்டவனை வணங்கித் துதித்து விட்டுத் தமது திருமடத்திற்குச் சென்று தங்கியிருந்தார். பாண்டியனும், பாண்டிமாதேவியும் திருஞான சம்பந்தரிடம் விடைபெற்றுத் தங்கள் மாளிகையை அடைந்தார்கள்.

பிறகு திருஞான சம்பந்தர், மதுரையில் சிலகாலம் விருப்பத்தோடு தங்கியிருந்து, பல திருப்பதிகங்களைப் பாடியருளினார். ''ஆல நீழலுகந்த திருக்கையே!'' என்ற திருவிய மகத் திருப்பதிகத்தில், திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு ஆண்டவன் அருள் செய்த தன்மையை எடுத்துக்கூறித் துதித்தார். அவருடனே அளவளாவி மகிழ்ந்தார். அப்போது மதுரையிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் இருந்த மக்கள், சமண குருமார்கள் தங்கியிருந்த பாழிகளையும் அவர்தம் தெய்வப் பள்ளிகளையும் அடியோடு அகழ்ந்து எறிந்தனர். அந்த இடங்களைத் தூய்மை செய்து, ஆங்காங்கே சிவத்துவமாகிய சின்னங்களை நிறுவினர். பாண்டிய மன்னனும், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் நாள்தோறும் திருஞான சம்பந்தரின் திருவடிகளில் பணிந்து போற்றிக் கொண்டிருந்தனர்.

இது இங்ஙனமிருக்க திருஞான சம்பந்தரின் தந்தையாகிய சிவபாத விருதயர், தாம் பெற்ற அருட்பெருந் திருமகனைக் காண்பதற்கு மிகவும் ஆவல் கொண்டார். சமணர்களை வாதில் வெல்லச் சென்ற தம் புதல்வரின் நிலையைக் கண்டறிவோம் என்று புறப்பட்டார். அவர் பல சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு மதுரை நகரை அடைந்தார். ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானை வணங்கித்

துதித்துவிட்டு, அங்கிருந்த அடியார்களை நோக்கி, ''பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் திருமடம் யாது?'' என்று விசாரித்தார். அவர்கள் திருமடம் இருக்கும் இடத்தைக் காட்ட, அவர் அங்கு சென்றார். பிள்ளையாரைக் கண்டு மகிழ்ந்தார். அவரைக் கண்டதுமே திருஞான சம்பந்தருக்கு சீர்காழி கோயிலில் அமர்ந்துள்ள தோணியப்பரின் நினைவு வந்தது. ''என்னை அறியாப் பருவத்திலே எடுத்தாண்ட பெருந்தகை எம்பெருமாட்டியுடன் இருந்ததே!'' என்று போற்றி ''மண்ணின் நல்ல வண்ணம்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடி மகிழ்ந்தார்.

பிறகு சனகர் முதலியவர்களுக்கு அறம் உரைத்தவரும், தமிழில் அகப்பொருள் இலக்கணத்தைச் சங்கப் புலவர்களுக்கு எடுத்துரைத்தவருமாகிய ஆலவாய்ப் பெருமகனை ஞானசம்பந்தர் வணங்கி விடைபெற்றுக் கொண்டு தலயாத்திரை புறப்பட்டு மதுரை மாநகரின் புறத்தை அடைந்தார். அப்போது பாண்டியனும், மங்கையர்க்கரசியும், குலச்சிறையாரும் திருஞான சம்பந்தரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். பிள்ளையாரைப் பிரிந்திருக்க ஆற்றாது ஊன் உருக, கண்களில் கண்ணீர் பெருக, அவர்கள் உணர்வு மயங்கிக் கீழே விழுவதைக் கண்டதும் பிள்ளையார், அவர்களை நோக்கி, ''நான் உங்களைப் பிரியாதிருக்கும் வண்ணம் நீங்கள் பாண்டி நாட்டிலுள்ள பதிகளை வணங்குவதற்கு என்னுடன் வருவீர்களாக'' என்று கூறினார்கள்.அவர்கள் மூவரும் மற்ற அடியவர்களும் புடைசூழத் திருஞானசம்பந்தர், திருப்பரங்குன்றத்தை அடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானைச் சென்று வணங்கி [1]திருவாப்பனூரினை வழிபட்டுத் திருப்பதிகம் பாடியருளினார். பிறகு திருஞானசம்பந்தர் சிவஸ்தலங்கள் பிறவற்றையும் அடைந்து, திருப்பதிகங்கள் பாடிவணங்கிக் கொண்டு, திருப்புத்தூரை அடைந்து அங்கு சிலகாலம் தங்கியிருந்தார். அதன் பிறகு திருப்பூவனம், திருக்கானப் பேரூர், திருச்சுழியல், [2]திருக்குற்றாலம், [3]திருக்குறும்பலா, திருநெல்வேலி, முதலிய சிவஸ்தலங்களுக்குச் சென்று, பணிந்து திருப்பதிகங்கள்

---

[1] திருவாப்பனூர் : இன்று திருவாப்புடையார் கோயில் என்று வழங்கப்படுகிறது.

[2] திருக்குற்றாலம் : சித்திர சபை உள்ள திருக்கோயில்.

[3] திருக்குறும்பலா : அருவியை அடுத்து வடகரையில் உள்ளது. இந்தக் கோயிலின் ஸ்தல விருக்ஷம் குறும்பலா. இந்தக் குறும்பலாக் கோயில், முன்பு திருமுற்றம் என்ற பெயரில் இருந்த விஷ்ணு ஆலயமாகும். அகஸ்திய முனிவர், நெடுமாலை, 'குறுகு குறுகு குற்றாலா!' என்று ஜெபித்து மூலிகைகளால், சிவலிங்கமாக்கி விட்டார். (கந்தபுராணம் – திருக்குற்றாலப் படலம்.)

பாடினார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு இலங்கையையும் இராவணனையும் அழித்த பாவத்தைப் போக்க இராமபிரான் ஸ்தாபித்துச் சிவபிரானை வழிபட்ட திருவிராமேஸ்வரம் என்னும் திருக்கோயிலை அடைந்தார். அங்கு அரசனோடு மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் பின்பற்றிச் சூழ்ந்துவர, திருக்கோயிலை வலம்வந்து பெரும் வேட்கையோடு திருப்பதிகம் பாடியருளிப் புறம் போந்தார்.

அங்கு சிவனடியார்களுக்கெல்லாம் பாண்டிமா தேவியாரும், அமைச்சரும் வேண்டுவன அளித்து, அந்தக் கடற்கரை நகரில் தங்கியிருந்தனர். அங்கிருந்தவாறே திருஞானசம்பந்தர், ஈழ நாட்டிலுள்ள [1]**திருக்கோணமலை,** [2]**மாதோட்டத் திருக்கேதீஸ்வரம்** என்னும் சிவஸ்தலங்களை நினைத்துப் பணிந்து அத்திசை நோக்கி தமிழ்ப் பாமாலைகள் சாத்தினார். பிறகு இராமேஸ்வரத்தை விட்டு வடதிசையாகப் புறப்பட்டு, சிவஸ்தலங்கள் பலவற்றையும் வணங்கிக் கொண்டு, கடலெல்லை பிற்படக் கடந்து, [3]**திருவாடானை,** [4]**திருப்புனவாயில்** என்னும் திருப்பதிகளுக்குப் போய், அமைச்சர் குலச்சிறையாரின் ஊராகிய 'மணமேற்குடி' என்னும் ஸ்தலத்தை அடைந்து, அங்குச் சிலகாலம் தங்கியிருந்தார். அங்கிருந்தபடியே அருகாமையிலிருந்த சில திருக்கோயில்களுக்குச் சென்று, திருத்தொண்டர்களுடன் மீண்டும் மணமேற்குடிக்கு வந்து சேர்ந்தார்.

அங்கு, பாண்டியனும், பாண்டிமாதேவியும், பாண்டி நாட்டமைச்சரும் ஏவல் செய்து அடிபணிந்து போற்ற ஞான சம்பந்தர் இறைவன் திருவடிகளைப் போற்றி இனிதிருந்தார்.

அதன் பிறகு, திருஞானசம்பந்தர் சோழ நாட்டிற்குச் செல்லத் திருவுள்ளம் கொண்டார். அரசரும், அமைச்சரும்,

---

[1] திருக்கோணமலை : இப்போது திருக்கணாமலை என்று வழங்கப் படுகிறது.

[2] மாதோட்டம் : நகரின் பெயர் கேதீஸ்வரம். கோயிலின் பெயர் மகாதுவட்டாபுரம் – என்பதே மாதோட்டம் என மருவியுள்ளது. துவஷ்டா என்ற முனிவர் வழிபட்டதால், இப்பெயர் வந்தது. இப்போது மண்மேடாயிருக்கிறது.

[3] திருவாடானை : 'ஆட்டுத் தலையும் யானையுடலுமாகுக' என்று துர்வாச முனிவரால் சபிக்கப்பட்ட பிருகு முனிவர் அந்த உருவத்துடன் சிவனை வழிபட்டார்.

[4] திருப்புனவாயில் : இது பழம்பெருங்கோயில். மூலவரும் நந்தியும் மிகப்பெரிய அளவில் உள்ளன.

அரசியாரும் அவரைப் பிரிய மனமில்லாமல் அவருடன் செல்வதற்கு முந்தினர். திருஞானசம்பந்தரோ, அவர்களை நோக்கி, ''சொல்லுக்குச் செவி சாயுங்கள். இந்த நாட்டில் இருந்து கொண்டே ஈசர் சிவநெறியைப் போற்றி இருப்பீர்களாக!'' என்று பணித்து அவர்களது தளர்வு நீங்க அருள் சுரந்தார். அம்மூவரும், திருஞானசம்பந்தரின் ஆணையை மறுப்பதற்கு அஞ்சி, அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அத்திருவடிகளைக் கண்ணீரால் நனைத்தனர். திருஞானசம்பந்தர் அவர்களுக்கு விடை கொடுத்து, பாண்டிநாட்டை விட்டுச் சோழ நாட்டை நோக்கிப் புறப்பட்டார். சிவனடியார்கள் புடைசூழ, சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் தோறும் ஆங்காங்குள்ளவர்கள் எதிர்கொள்ளச் சென்று [1]திருக்களர். திருப்பாதாளீஸ்வரம் முதலிய திருப்பதிகளை முன்னே வழிபட்டு வணங்கித் துதித்து [2]முள்ளவாய்க்கரையை அடைந்தார்.

அப்பொழுது, அங்கே ஆற்றுப் பெருக்கு அதிகமாயிருந்தது. ஓடக்காரர்கள் தங்கள் ஓடங்களைக் கரையிலே நிறுத்தி விட்டுப் போய்விட்டிருந்தார்கள். அப்போது, கரையிலே நின்ற திருஞானசம்பந்தரின் கண் பார்வையில் 'திருக்கொள்ளம் பூதூர்' என்னும் சிவஸ்தலம் எதிரே தோன்றியது. அவர், அங்கும் சென்று, இறைவனை வணங்க விரும்பினார். ஓடக்காரர்கள் இல்லாததால் அவரே ஓர் ஓடத்தின் கட்டை அவிழ்த்தார். திருத்தொண்டர்களை அந்தப் படகில் ஏற்றினார்; அதன் மேல் நின்று ''கொட்டமே கமழும்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். தமது நாவின் வல்லமையையே ஓடக் கோலாகக் கொண்டு, திருப்பதிகத்தைப் பாடவும், அந்த ஓடம் ஆண்டவனருளால் அக்கரையை அடைந்தது. திருஞானசம்பந்தர், சிவனடியார்களுடன் ஓடத்தில் இருந்து இறங்கி, [3]திருக்கொள்ளம் பூதூர் கோயிலுக்குள் சென்றார். அங்கே ஆண்டவனை வழிபட்டுத் திருநள்ளாற்றுக்குச் சென்றார்.

அங்குள்ள இறைவனை வணங்கிப் ''பாடகிமல்லடிபாவை'' என்று தொடங்கும் வினா – உறைத் திருப்பதிகத்தைப்

---

[1] திருக்களர் : பாரிஜாத வனம் என்றும் வழங்கப்படுகிறது.

[2] முள்ளவாய்க்கரை : இதனை ஓடம்போக்கியாறு என்றும் முள்ளியாறு என்றும் வழங்குகின்றனர். முள்ளியாறு, காவிரியின் கிளை நதி.

[3] திருக்கொள்ளம்பூதூர் : திருக்களம்பூர். இது கொரடாச்சேரிக்கு வடக்கில் சுமார் எட்டு மைல் தொலைவில் உள்ளது.

பாடிக் கண்ணீர் ததும்பத் தொழுது துதித்துத் திருத்தொண்டர்களுடன் அங்கேயே சிலகாலம் தங்கியிருந்தார்.

பிறகு, திருஞானசம்பந்தர், திருநள்ளாற்றினை விட்டுப் புறப்பட்டுத் [1]"திருதெளச்சேரி" சேர்ந்து, அங்கிருந்து [2]"போதி மங்கை"யை அடைந்தார். போதிமங்கை பௌத்தர்கள் மலிந்த ஊர். திருஞானசம்பந்தர் அவ்வூர் வருவதையறிந்த அவ்வூர்ச் சைவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து, திருஞான சம்பந்தருக்கு மகத்தான வரவேற்பளித்தனர். அடியவர்கள் ஆரவாரமும், வாத்தியங்களின் முழக்கமும், கடலோசை போல பேரொலி செய்தன. தனிப்பெரும் காளம் முதலான சின்னங்களோ "பரசமயக் கோளரி வந்தான்" என்று ஊதின.

திருச்சின்ன ஓசையும், சிவநாம முழக்கமும், பௌத்தர்களுக்கு நாராசம் போலிருந்தன. அவர்கள் எல்லோரும் பொறாமையால் மருண்டு ஒன்றாகத் திரண்டு, தங்களது பௌத்த சமய, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய 'புத்தநந்தி' என்பவனைத் தலைவனாகக் கொண்டு, திருஞான சம்பந்தரையும் சிவனடியார் திருக்கூட்டத்தையும் வழி மறித்தனர். அவர்கள் வழிமறித்துக் கொண்டு, "நீங்கள் எம்மை வாதத்தில் வென்ற பிறகல்லவோ வெற்றிச் சின்னங்களைப் பிடித்தல் வேண்டும்?" என்று சின்னங்களை விலக்கினார்கள். அவர்கள் செயலைக் கண்ட சிவனடியார்கள் "இந்தப் பௌத்தர் தலைவனை மாய்த்தல் வேண்டும்; இல்லையென்றால் இவன் தீங்கு விளைவிப்பான்" என்று கருதி திருஞானசம்பந்தரின் முத்துச் சிவிகையருகே சென்று அவரிடம் நிலைமையை அறிவித்தார்கள். அதைக் கேட்டதும் திருஞானசம்பந்தர், "இஃதென்ன நன்றாயிருக்கிறதே! புத்தநந்தியின் திறத்தை வாதத்தில் பார்ப்போம்" என்று கூறினார். அதற்குள் அந்தத் திருக்கூட்டத்தில் தேவார திருமறைகளாகிய திருப்பதிகங்களை எழுதும் நியதியையுடைய அன்பர் மனம் பொறாமல் பிள்ளையாரின் திருவாக்காலே, "உரும் இடித்து விழப் புத்தன் உத்தமாங்கம் உருண்டு வீழ்க" என்று எடுத்துரைத்து "புத்தர் சமண் கழுக்கை" என்னும் ஞானசம்பந்தரின் திருப்பாட்டையே ஓதி, "அத்திரமாவன

---

[1] திருத்தெளச்சேரி : கோயிற்பத்து என்று இப்போது வழங்கப்படுகிறது. இங்கு பங்குனி மாதத்தில் சூரிய பூஜை நடக்கிறது.

[2] போதிமங்கை : முன்பு பௌத்தர்கள் நிறைந்த ஊராக இருந்தது. இந்த ஸ்தலம் கோயிற்பத்திலிருந்து வடக்கே காரைக்கால் – தரங்கம்பாடிப் பெருவழியில், ஒன்றரை மைல் தொலைவிலுள்ளது.



அஞ்செழுத்துமே'' என்று முடித்தார். முடித்ததும், சிவ பூஜையிலிருக்கும் இடையூறுகளை அழிக்கும் சிவாஸ்திரமாகிய இடியினைப்போல், அடியார் திருவாக்கினால் இடியிடித்தது. புத்தநந்தி மீது ஒரு பேரிடி விழுந்தது. அதனால் அவன் உடலும் தலையும் வெவ்வேறாகிக் கீழே விழுந்தன. பௌத்தர்கள் நிலை கலங்கி ஓடினார்கள். திருஞான சம்பந்தருக்குத் தெரியாமலேயே நடந்த அந்த நிகழ்ச்சியை சிவனடியார்கள் திருஞான சம்பந்தருக்குத் தெரிவித்தார்கள். சம்பந்தர் அவர்களை நோக்கி, ''எதிர்த்தடையை விலக்க இது சிவனருள் விளைந்த விதியேயாகும்; ஹரஹரா சிவநாம சங்கீர்த்தனம் செய்யுங்கள்!'' என்றார். அடியார்களும் அவ்வாறே செய்தனர்.

அங்கிருந்து அஞ்சி ஓடிய பௌத்தர்கள் எல்லோரும் ஆச்சரியமடைந்து, மீண்டும் ஒன்றாகக் கூடினார்கள். இடி விழுந்த செய்கை வஞ்சனையால் விளைந்ததோ? அல்லது அவர்களுடைய சைவசமயத்தின் வாய்மைத் திறத்தினால் விளைந்ததோ?'' என்று மருண்டு ''சாரிபுத்தன்'' என்பவனைத் தமது தலைவனாகக் கொண்டு மீண்டும் வந்து, ''வெறும் மந்திரவாதம் வேண்டாம். எங்களுடன் பொருளுண்மை பேசித் தர்க்க வாதம் செய்யுங்கள் பார்ப்போம்!'' என்று அடர்த்தார்கள். அதைக் கேட்டதும் திருஞான சம்பந்தர் ''அழகிது!'' என்று மெத்த மகிழ்ந்து தமது முத்துச் சிவிகையிலிருந்து கீழேயிறங்கி, வேறொரு சத்திரத்தில் உள்ள மண்டபத்தின் மேலேறி,

சிவனடியார்கள் சூழ வீற்றிருந்து, சில அடியார்களை நோக்கி ''வாது பேச விரும்பிய பௌத்தர்களை அழைத்து வாருங்கள்!'' என்று கட்டளையிட்டார்.

அடியார்கள் பௌத்தர்களை அழைத்து வந்தார்கள். பௌத்தர்கள் தலைவனான சாரிபுத்தன், திருஞானசம்பந்தர் அருகே நின்றான். புத்தநந்தியின் தலையைக் கீழே விழும்படிச் செய்த அன்பராகிய, ''சம்பந்த சரணாலயர்'' என்பவர் திருஞானசம்பந்தரின் திருவடிகளை வணங்கித் துதித்து, அவர் அருள் பெற்று சாரிபுத்தனோடு சாஸ்திர வாதம் புரிந்தார். அந்த வாதம் பௌத்தர்களின் தலைவரையும், அவர்கள் மேற்கொண்டு உரைத்த பொருளையும், அவர்களது முக்தி இலக்கணத்தையும் கொண்டு நிகழ்ந்தது. சாரிபுத்தன், வெகு தீவிரமாக வாதம் செய்து முடிவில், சம்பந்த சரணாலயரிடத்தில் தோல்வியுற்று, திருஞானசம்பந்தரைச் சரணடைந்தான். மற்ற பௌத்தர்களும், சைவ சமயமே உண்மைச் சமயம் என்று உணர்ந்து திருஞானசம்பந்தர் அருள் செய்யப் பெருமானை வணங்கினர். திருஞானசம்பந்தர் எல்லோருக்கும் திருநீறு அளித்து அருள் செய்தார்.

பிறகு திருஞான சம்பந்தர், அங்கிருந்து புறப்பட்டு 'திருக்கடவூர்' என்னும் திருத்தலத்தை அடைந்தார். திருக்கடவூரிலுள்ள சிவனடியார்கள் அவரை எதிர்கொண் டழைத்து வரவேற்றனர். அவர் அடியார்களுடன் சென்று திருக்கடவூர் திருக்கோயிலினுள் புகுந்து காலனைக் காலால் உதைத்தருளிய சிவபெருமானை வணங்கித் தொழுது, அங்கேயே சிலகாலம் தங்கியிருந்தார்.

அப்பொழுது அவருக்கு திருநாவுக்கரசரைப் பற்றிய நினைவு வந்தது. அவர் அடியார்களை நோக்கி, ''வாகீச மாமுனிவர் திருநாவுக்கரசர் எங்குள்ளார்?'' என்று கேட்டார் அடியார்கள் ''திருப்பூந்துருத்தியில் நாவுக்கரசர் தங்கியிருந்து திருத்தொண்டு புரிகிறார்!'' என்றார்கள். உடனே, திருஞான சம்பந்தர், அவரைக் காணவேண்டுமென்ற பேரவாவினால், திருக்கடவூரிலிருந்து, திருப்பூந்துருத்திக்கு தம் முத்துச் சிவிகையில் விரைந்து சென்றார்.

திருஞான சம்பந்தரின் வருகையைப் பற்றிக் கேள்விப்பட்டதும் திருநாவுக்கரசர் முகம் மலர அகம் மலர அவரை எதிர்கொள்ள விரைந்து சென்றார். அவர் திருப்பூந்துருத்தியின் எல்லையை அடையும்போது, ஞானசம்பந்தரின் திருச்சின்னத்தின் ஓசையைக் கேட்டு, நாலா திசைகளிலிருந்தும் அடியார்களும் அன்பர்களும் அவரைத் தரிசிக்க கூட்டங் கூட்டமாக வந்தார்கள். அந்த ஜன

நெருக்கத்திலே தம்மைத் திருஞான சம்பந்தர் காணாத வண்ணம், திருநாவுக்கரசர் நிலமுறப்பணிந்து, திருத்தொண்டர் கூட்டத்தினுள்ளே புகுந்து, ஞானசம்பந்தரின் முத்துச் சிவிகையைத் தாங்கிச் செல்கிறவர்களில் தாமும் ஒருவராய்ச் சேர்ந்து கொண்டார்.

திருப்பூந்துருத்தியை திருஞான சம்பந்தர், அடைந்த வுடனேயே ''அப்பர் எங்குற்றார்?'' என்று கேட்டார். அதைக் கேட்டதும் திருநாவுக்கரசர் ''அடியேன் ஒப்பற்ற தவம் செய்ததால், இப்பொழுது தங்கள் திருவடிகள்ளத் தாங்கி வரும் பெருவாழ்வைப் பெற்றிருக்கிறேன்!'' என்றார். பரமஞான வள்ளலாரான திருநாவுக்கரசர் தமது பல்லக்கைத் தூக்கிவரும் ஆட்களில் ஒருவராக இருப்பதையறிந்த திருஞான சம்பந்தர் பதைபதைத்துச் சிவிகையை விட்டுக் கீழேயிறங்கி, ''இப்படியும் செய்யலாமா?'' என்று அப்பரை வணங்கினார். உடனே திருநாவுக்கரசர், பிள்ளையாரை நோக்கி, ''திருஞான சம்பந்தருக்கு இதைவிட வேறு நான் என்ன செய்யவல்லேன்?'' என்று வணங்கினார். அடியார்கள் ஆரவாரம் செய்தார்கள். அப்பரும் பிள்ளையாரும் திருப்பூந்துருத்தியை அடைந்து, திருக்கோயிலுக்குச் சென்று, ஆண்டவனை வழிபட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது திருஞான சம்பந்தர், பாண்டி நாட்டில் நிகழ்ந்தனவற்றையெல்லாம் அப்பர் சுவாமிகளுக்குச் சொன்னார். திருநாவுக்கரசர், தமது தொண்டை நாட்டு யாத்திரையைப் பிள்ளையாருக்கு விளக்கிக் கூறினார். திருஞான சம்பந்தர், மங்கையர்க்கரசியின் மேம்பாட்டையும், குலச்சிறையாரின் திருத்தொண்டுச் சிறப்பையும் எடுத்துக் கூறி பாண்டியனுக்கு உயிருடனே திருநீற்றினையளித்து, சமணர்களை வென்று, சைவ நெறியினை நிலைநிறுத்திய தன்மைகளையெல்லாம் விளக்கிக் கூறினார். பிறகு திருநாவுக்கரசர், பிள்ளையாரிடம் விடைபெற்றுப் பாண்டி நாட்டிற்குப் புறப்பட்டார். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசரிடம் விடைபெற்று, திருநெய்த் தானம், திருவையாறு, திருப்பழனம் முதலிய திருப்பதிகளை வணங்கி இன்னிசை பாடி வழிபட்டு, சீர்காழியை அடைந்தார். அங்கு ''உற்று உமை சேர்வது மெய்யினையே!'' என்னும் திருப்பதிகம் பாடினார். பிறகு தம் தந்தையாருடன் தம் இல்லம் சென்று, மறைக்குலத் தாயாரை வணங்கி இறைவன்மீது பல திருப்பதிகங்கள் பாடி இனிதிருந்தனர்.

ஒருநாள், பிள்ளையாருக்கு தொண்டை மண்டலத்தின்மீது கருத்துச் சென்றது. அவர் தலயாத்திரைக்குச் சித்தமானார். அதைக் கண்ட அவருடைய தந்தை சிவபாத விருதயர் தாமும்

உடன்வர விரும்பினார். பிள்ளையார் அவரைத் தடுத்து ''தந்தையே; நீர் இனி எம்முடன் வருதலை விடுத்து, வேத விதிப்படி வேள்விகளைச் செய்து, தோணியப்பரை வணங்கியிருப்பீராக'' என்றார். சிவபாத விருதயர் அதற்கு உடன் பட்டார். திருஞானசம்பந்தர் சிதம்பரம், திருத்தினை நகர், திருமாணிகுழி, திருப்பாதிரிப் புலியூர் [1]திருவடுகூர், [2]திருவக்கரை, [3]திருவிரும்பை, மாகாளம், திருவதிகை [4]திருவாமாத்தூர், திருக்கோவலூர், [5]திருவறையணி நல்லூர், திருவண்ணாமலை முதலிய திருப்பதிகளுக்குச் சென்று, இறைவனைத் தொழுது தமிழ்ப்பதிகங்கள் பாடி, தொண்டை நன்னாட்டிலுள்ள ★ திருவோத்தூரை அடைந்தார். அவ்வூரிலே வாழும் திருத்தொண்டர்கள் திருஞான சம்பந்தர் அங்கு வருவதையறிந்து, மிக மகிழ்ந்து விளக்குகளையும் தோரணங்களையும் வரிசையில் நாட்டி நிறைகுடம் ஏந்தி, பூவும், பொடியும், பொற்சுண்ணமும் தூவி, திருஞான சம்பந்தரை எதிர்கொண்டார்கள். அவர் முத்துச் சிவிகையினின்று இறங்கி, அடியார்களுடன் கோபுரத்தையும் திருமதிலையும் வலம் வந்து, முறைப்படி பணிந்து எழுந்து, திருக்கோயில் உள்ளே சென்று, வேதங்களின் உட்பொருளாய் நின்ற சிவபெருமானை வணங்கித் திருப்பதிகங்கள் பாடித் துதித்து, அவ்வூரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார்.

அந்த ஊரில் சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் திருஞான சம்பந்தரிடம் அழுதுகொண்டே வந்து, வணங்கி நின்று சிவபெருமானுக்காக, அடியேன் பயிரிட்டு வளர்த்த பனை மரங்களெல்லாம், மிக உயரமாக வளர்ந்தும்கூட, எல்லாம் ஆண்பனைகளாகிக் காய்க்காமல் இருந்தன. அதைக் கண்ட

---

[1] திருவடுகூர் : தற்போது ஆண்டார் கோயில் என வழங்கப் படுகிறது.

[2] திருவக்கரை : வக்கிராசுரன் என்ற அசுரன் ஒருவன் பூஜித்ததால் இப்பெயர் பெற்றது.

[3] திருவிரும்பை மாகாளம் : மகாகாளர் பூஜித்ததால், இப்பெயர் பெற்றது.

[4] திருவாமாத்தூர் : இது பசுக்களாகிய (ஜீவர்களுக்கு) இறைவன் தாய்போல அருள் செய்யுமிடம்.

[5] திருஅறையணி நல்லூர் : இப்போது அறைகண்ட நல்லூர் என்று வழங்கப்படுகிறது. கோயிலானது பெண்ணையாற்றின் வட கரையில் உள்ள ஒரு பெரும்பாறையாலான மலை மீதுள்ளது.

★ திருவோத்தூர் : இது தேவர்களுக்கு, இறைவன் வேதங்களை ஓதுவித்த ஸ்தலம்.

சமணர்கள் ''உமது ஆண்பனைகள் காய்க்க முடியுமா? உங்கள் சிவனருளால் அவைகளைக் காய்க்கச் செய்ய முடியுமா? என்று என்னை ஏளனம் செய்து சிரித்து இழிவுபடப் பேசுகிறார்கள். அவ்விழிவைப் போக்க ஆண்பனைகள் காய்க்கும்படி அருள் புரியவேண்டும்!'' என்று விண்ணப்பம் செய்தார். அதைக் கேட்ட பிள்ளையார் திருக்கோயிலினுள்ளே நுழைந்து, ஆண்டவனை நினைந்து நினைந்து உருகினார். ''பூத்தேர்ந்தாய் என'' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்.

அதன் திருக்கடைக் காப்பிலே ''குறும்பை ஆண்பனை ஈங்குலையோத்தூர்'' என்று பாடியருளினார். ஆண் பனைகளெல்லாம் பெண்பனைகளாயின. ஒவ்வொன்றிலும் குலைகள் தொங்கின; காய்கள் பழுத்தன; இவ்வாறு திருஞான சம்பந்தர் அருள் செய்தார்.

அதைக் கண்டவர்களெல்லாம் அதிசயம் கொண்டனர். இறைவன் அருளால் ஆண் பனைகள் பெண் பனைகளாய் ஆனதோடு குலைகள் தள்ளிப் பழுத்ததைக் கண்டதும், சமணர்களில் பலர் ஊரைவிட்டு ஓடினர். சிலர் வெண்ணீறணிந்து சிவநெறி நின்றனர். பனைகள் பிள்ளையாரின் அருள்பெற்ற காரணத்தால் தங்கள் காலம் கழித்து, முடிவில் சிவமயமாயின.

திருஞானசம்பந்தர் திருவோத்தூரிலிருந்து புறப்பட்டு திருமாகறல் [1]திருக்குரங்கணின் முட்டம், காஞ்சி, திருவேகம்பம், காமகோட்டம், [2]திருக்கச்சி நெறிக் காரைக்காடு, திருக்கச்சியனேக தங்காவதம், திருக்கச்சி மேற்றளி, திருமாற்பேறு, திருவல்லம், திருவிலம்பயம் கோட்டூர், திருவிற்கோலம், திருஊறல் முதலிய திருப்பதிகளை வணங்கிப் பாமாலைகள் பாடி, திரு ஆலங்காட்டை அடைந்தார். ''காரைக்கால் அம்மையார், தலையாலே நடந்து வணங்கி பேறு பெற்று இறைவனை எப்போதும் போற்றியிருக்கும் பதி திருவாலங்காடாகும்'' என்று நினைத்த சம்பந்தர், அந்தத் தலத்தை தம் காலால் மிதித்து உட்செல்வதற்கு அஞ்சி, அவ்வூரின் அருகிலுள்ள ஒரூரின் கண் அன்றிரவு தங்கிப்

---

[1] திருக்குரங்கணின் முட்டம் : வாலியும், அணிலும், காகமும் பூஜித்த ஸ்தலம். முட்டம் – காகம், இந்த ஸ்தலம், காஞ்சிபுரத்திற்கு தெற்கே எட்டு மைல் தொலைவிலுள்ளது.

[2] திருக்கச்சி நெறிக் காரைக்காடு : இப்போது திருக் காலீஸ்வரன் கோயில் என்று வழங்கப்படுகிறது. காஞ்சிக்குக் கிழக்கே ஆடிசன் பேட்டைக்கு அருகில் உள்ளது. காரைமரம் அடர்ந்த காட்டில் கோயில் அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றது.



படுத்துறங்கினார். அப்போது திருவாலங்காட்டுப் பெருமான் திருஞானசம்பந்தரின் கனவில் தோன்றி, ‘‘நம்மைப் பாடுவதற்கு மறந்தனையோ?’’ என்று கூறி மறைந்தார். உடனே, திருஞானசம்பந்தர் அந்த நள்ளிரவிலேயே எழுந்து, தொழுதபடியே இறைவனைப் போற்றி மெய்யுருகி, ‘‘துஞ்சவருவாரும்’’ என்று ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளினார். இருள் நீங்கிப் பொழுது விடிந்தது. அப்பொழுது திருத்தொண்டர் குழாம் திருஞான சம்பந்தரைச் சந்தித்தனர். அவர் திருத்தொண்டர் கூட்டத்துடன் திருப்பதிகத்தை மீண்டும் பாடித் துதித்துத் திருவாலங்காட்டைத் தொழுது மேலே சென்றார்.

பிறகு அவர் திருவாலங்காட்டிலிருந்து புறப்பட்டு திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்காரிகரை முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று திருக்காளத்தியை நோக்கிச் சென்றார்.

திருக்காளத்தியன்பர்கள் பெருந்திரளாக வந்து சம்பந்தரை எதிர்கொண்டு வரவேற்றார்கள். அச்சிவனடியார்களை திருஞான சம்பந்தர் நோக்கி, ‘‘இம்மலைகளில் காளத்தி மலை எது?’’ என்று கேட்டார். அவர்கள், ‘‘இதுதான் காளத்தி மலை!’’ என்று சுட்டிக் காட்டினார்கள். திருஞானசம்பந்தர், ‘‘வானவர்கள் தானவர்கள்’’ என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். அதிலே, கண்ணப்பரின் திருத்தொண்டைச் சிறப்பித்துப் பாடினார். பொன்முகலியாற்றைக் கடந்து மலையடிவாரத்தையடைந்தார். ஆண்டவனை வணங்கினார். மலைமேல் ஏறினார். அங்கேயும் இறைவனைக் கண்டு தொழுதார். அங்கே அன்பே உருவாக நின்றருளும் கண்ணப்பரைக் கண்டார். அவரது திருவடிகளில் விழுந்து

வணங்கினார். பிறகு அந்த மலையை விட்டு ஒரு திருமடத்திலே தங்கியிருந்தார். அங்கிருந்தபடியே திருக்கயிலாயம், திருக்கேதாரம், திருக்கோகரணம், திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) இந்திர நீலபருப்பதம் முதலிய க்ஷேத்திரங்கள் இருந்த திக்குகளை நோக்கித் திருப்பதிகங்களைப் பாடினார். பிறகு, திருக்காளத்தியிலிருந்து புறப்பட்டு, திருவேற்காடு, திருவலிதாயம், முதலிய திருப்பதிகளைக் கண்டு தொழுது, பாமாலைகள் பாடிச்சென்று திருவொற்றியூரை அடைந்து, இறைவனை வழிபட்டுக் கொண்டிருந்தார்.

அந்நாளில் மைலாப்பூரில் சிவநேசர் என்ற வணிகர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் தொன்றுதொட்டுப் பெரும் புகழ்படைத்த பெருங்குடியில் பிறந்தவர். பொன், மணி முதலிய பொருட்களோடு செல்வம் பெருகும்படி, மரக்கலங்கள் பலவற்றைக் கடல் வாணிபத்துறையில் செலுத்திப் பெருநிதி படைத்திருந்தார். அவர் சிவபெருமானிடத்தில் மெய்யடிமை பூண்டவர். சிவனடியார்களிடத்தில் பேரன்பு கொண்டவர். பரசமயங்களால் சைவ சமயத்திற்கு ஏற்படும் தீங்கை ஒழிக்க வேண்டும் என்னும் சிந்தனையுடையவர். அவர் திருஞான சம்பந்தரின் சிறப்புகளைக் கேள்வியுற்று, அவரிடம் பேரன்புடையவராகத் திகழ்ந்தார்.

அல்லும் பகலும் ஞான சம்பந்தரைப் பேசவும் கேட்கவுமே விரும்புவார். இத்தகைய அன்பரான சிவநேசருக்குப் புத்திரப்பேறு இல்லாமலிருந்தது. அது குறித்து, அவர் தவங்கிடந்தார். குபேரனைக் காட்டிலும் செல்வமுடையவராக இருந்தும் மக்கட்பேறு இன்றிக் கவலையுற்று மனைவாழ்க்கையில் மருண்டிருந்தார். பிறகு அவர் தவம் செய்தும் சிவனடியார்களுக்கு உரிய பூசைகளைச் செய்தும் வந்ததனால், அவருடையமனைவியின் வயிற்றில் பூமகள் என ஒரு பெண்கொடி உதித்தாள். பூமகளான இலக்குமியைப் போல் விளங்கியதால் அந்தக் குழந்தைக்குப் பூம்பாவை என்று பெயர் சூட்டினார். பூம்பாவை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தாள். தவழ்ந்து விளையாடித் தளர்நடை பயின்றாள். மின்னல் கீற்றின் சிறுமுனை போலவும், பவளக்கொடியின் இளந்தளிர் போலவும், மாணிக்க ஒளியின் வளர்கொழுந்து போலவும் இளம் வனப்புடன் ஏழாண்டு பருவமடைந்த சிறுமியானாள்.

அழகின் முதல் இளம் பதம் எனவும் அணி விளக்கு எனவும் விளங்கிய பூம்பாவைப் பிள்ளை போன்ற சிறுமியர்களோடு சேர்ந்து விளையாட்டில் ஈடுபட்டு, பூப்பந்து, கழல், அம்மானை, மணலால் வீடு கட்டுதல், பாவனைப்

பொருட்களால் சமைத்தல், ஊஞ்சலாடுதல், வடை லட்டு முதலானவற்றையெல்லாம் விளையாடி மென்மொழிக் கிளிகளின் கூட்டத்திடையே ஒரு தனிக் கிளியென வளர்ந்தாள். இளங்கொம்பு போன்ற தமது மகள் பூம்பாவைக்கு ஒத்த தன்மை இவ்வுலகில் வேறு ஒருவருக்கும் இல்லையென்று தந்தை சிவநேசர் மிகவும் மகிழ்ந்து, ''இவளைத் திருமணஞ் செய்து கொள்ளும் நாயகனே, என் பெருநிதி முழுமைக்கும் உரியவனாவான்!'' என்று யாவரும் அறிய மொழிந்து வந்தார். அப்பொழுது அவரிடம் சிலர் வந்து திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டதையும், சமணர்களை வென்று நிகழ்த்திய அற்புதங்களையும் விவரித்துக் கூறினார்கள். சிவநேசர் அவர்களுக்குப் பொன்னையும் துகிலையும் வாரி வாரி வழங்கினார். ஞான சம்பந்தரின் ஊர் இருந்த திசை நோக்கி அவர் இருகை கூப்பிக் கும்பிட்டிருந்தார். மகிழ்ச்சிப் பெருக்கினால் அவர், தம் சுற்றத்தினரெல்லாம் கேட்கும்படி, ''நான் பெற்றெடுத்த என் புதல்வியான பூம்பாவையையும், என் பெருநிதியையும் எனக்குள்ள மற்ற எல்லாவற்றையும் என்னையுமே முற்றிலும் சீர்காழிப் பிள்ளையாருக்குக் கொடுத்தேன்!'' என்று சொல்லி, இன்பக் கடலில் திளைத்தார். முல்லைச் சிரிப்பும் மொட்டு இளமையும் வாய்ந்த பூம்பாவையும் செல்வ வளமையும் சீர்காழி ஞானசம்பந்தப் பிள்ளைக்கே உடமையென்று நினைத்து நினைத்து சிவநேசர் சிந்தை மகிழ்ந்திருந்தார்.

ஒருநாள் பூம்பாவை தனது தோழிகளோடு கன்னி மாடத்தை அடுத்துள்ள பூஞ்சோலையின் அருகே பூக்கொய்யும் பொருட்டுப் புகுந்தாள். அங்கு விரியும் பருவத்து மலர்களைக் கொய்து கொண்டிருந்தாள். மலர் போல் சிவந்த கையும் மான்போன்ற கண்களும், நல்ல நெற்றியும், அடர்த்தியான கூந்தலும், கொவ்வைப்பழம் போல் சிவந்த வாயும் படைத்த பூம்பாவை வெகு அழகாக விளங்கினாள். அப்போது ஒரு பாம்பு மல்லிகைக் கொடிப்புதரில் மறைந்திருந்தது. பூம்பாவை அன்றலர்ந்த மல்லிகை மலர்களைப் பறிக்கும்போது, மாதவிப் பந்தரில் மறைந்திருந்த அந்தப் பாம்பு, பூம்பாவையின் அரும்பு விரலிலே தீண்டியது. காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்ற நான்கு நச்சுப் பற்களாலும் அந்தப் பாம்பு பூம்பாவையின் விரல் எலும்பளவும் பாயும்படி அழுத்திக் கடித்து, நஞ்சை உகுத்து, மேலே படத்தை விரித்து நின்று ஆடி, வேறு இடத்தில் சென்று மறைந்தது. மெல்லிய பூமாலையொன்று நெருப்பில் பட்டது போல், பூம்பாவை தத்தளித்துப் பாம்பின் விஷம் தலைக்கேற மனமயங்கி நிலத்தில் விழுந்தாள். தோழியர்கள் திடுக்கிட்டு அஞ்சி, அவளைத் தூக்கிக் கொண்டு கன்னி மாடத்தினுள்ளே சென்றார்கள். அதனால் சிவநேசச் செட்டியார்

வாயும் மனமும் நிலையழிந்து துயரத்தில் அழுந்தித் தம் சுற்றத்தாருடன் சேர்ந்து அழுதார். பாம்பின் விஷத்தை அகற்றுவதற்காக மாந்திரீகர்களும் மருத்துவர்களும் விரைந்து வந்தார்கள். கை வித்தைகளையெல்லாம் காட்டினார்கள். மணிமந்திர ஔஷத முயற்சிகள் யாவும் செய்யப்பட்டன. ஆனால் பயன் விளையவில்லை, மென் பூங்கொடி போன்ற பூம்பாவையின் தலையில் விஷ வேகம் அடங்காமல் பொங்கிப் பெருகவே உயிர் நீங்கிய குறிகள் தோன்றிவிட்டன. மருத்துவர்கள் ''இது விதி!'' என்றார்கள். சுற்றத்தார், ஓவென அலறிப் பாவை மீது விழுந்து அழுதார்கள். சிவநேசரும் அவரது உறவினர்களும் துயரக்கடலில் மேன்மேலும் அழுந்திக் கொண்டே இருந்தார்கள்.

பெருந் துன்பமடைந்த சிவநேசர், ஒருவாறு தெளிந்து ''உலகத்திலுள்ளவர்களில் யாவராயினும் இந்த விஷத்தை நீக்குவாரானால், அவருக்கு என்னுடைய அளவிறந்த செல்வத்திரள் முழுவதையும் கொடுப்பேன்!'' என்று பறையறைவித்தார். மூன்று நாட்கள் வரை, அரசர்களிடத்தி லுள்ள மந்திரவாதிகள், இராஜ வைத்தியர்கள் உட்பட உலகத்திலுள்ள திறமைசாலிகள் பலரும் வந்து விஷத்தைப் போக்க முயன்றனர். ஆனால் முயற்சி பலிக்காமல் திரும்பிச் சென்றார்கள். அதைக் கண்ட சிவநேசர், ''என்மகள் பூம்பாவையைச் சீர்காழிப் பிள்ளையாருக்கு என்று சொல்லி விட்டபடியால், இனி நான் துன்புற வேண்டியதில்லை'' என்று தெளிந்து புதல்வியின் உடலைத் தகனஞ் செய்து, அவளது எலும்புகளையும் சாம்பலையும் சீர்காழிப் பிள்ளையார் வருமளவும் சேமித்து வைப்பதற்காக ஒரு குடத்திலிட்டுக் கன்னி மாடத்தில் ஒரு பஞ்சணை மீது அந்தக் குடத்தை வைத்தார். அந்தக் குடத்திற்குப் பொன்னும் மணியும் அணிகலன்களும் மெல்லிய பூந்துகிலும் பொன்னரி மாலைகளும் புனைந்தார். தாதியர்களைக் காவல் வைத்தார். நாள்தோறும் தவறாமல் அந்தக் குடத்திற்கு திருமஞ்சனம், மாலை, சந்தனம், பால்சோறு, விளக்கு முதலியவற்றைப் படைத்து வந்தார். யாவரும் அதைக் கண்டு வியந்தனர்.

இவ்வேளையில், திருஞானசம்பந்தர் திருவொற்றியூருக்கு வந்து அங்கு தங்கியிருப்பதை அவ்வூர் வாசிகள் சிலர் சிவநேசரிடம் வந்து சொன்னார்கள். சிவநேச செட்டியார் மிகவும் மகிழ்ந்து அவர்களுக்கெல்லாம் துகிலும் காசும் பொன்னும் வாரி வழங்கினார். திருஞானசம்பந்தரை மயிலாப்பூருக்கு அழைத்துவர அவர் விரும்பினார். திருமயிலாப்பூரிலிருந்து திருவொற்றியூர் வரைக்கும் நடைப் பந்தரிட்டார். ஆடைகளால் விதானம் அமைத்து,

மகர தோரணங்கள் கட்டி, கமுகு, வாழை முதலியன நாட்டி கொடி மாலைகளைத் தொங்க விட்டார். பிறகு, இவ்வாறு நடை வழியைப் பொன்னுலக வாசல் போல் அலங்கரித்த பிறகு திருமயிலையில் இருக்கும் சிவனடியார்களுடன் சிவநேசர் புறப்பட்டுத் திருவொற்றியூருக்குச் சென்றார். திருஞானசம்பந்தர், திருவொற்றியூர் இறைவரைப் பணிந்து விட்டுத் திருமயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரரை வணங்குவதற்காகத் திருவொற்றியூரிலிருந்து சிவனடியார்களுடன், புறப்பட்டு மயிலாப்பூரை நோக்கி வந்து கொண்டிருந்தார். வழியில் சிவநேசரும் அவரது கூட்டத்தாரும், ஞானசம்பந்தப் பிள்ளையாரைக் கண்டு முகம்மலர்ந்து, பெருமகிழ்ச்சியோடு தரையில் விழுந்து வணங்கினார்கள். பிள்ளையாரும் தம் முத்துச் சிவிகையிலிருந்து இறங்கி அவர்களை எதிர் தொழுது அவர்களோடு கலந்து கொண்டார். அப்பொழுது அடியார்கள் சிலர் சிவநேசச் செட்டியாருக்கு நேர்ந்ததை ஞானசம்பந்தரிடம் சொன்னார்கள். அதை அவர் தம் திருவுள்ளத்தில் வைத்துக் கொண்டு மகிழ்ச்சியோடு அனைவரையும் அழைத்துக் கொண்டு மயிலாப்பூருக்குச் சென்றார். அங்கு கபாலீச்சுரம் என்னும் திருக்கோயிலினுள்ளே புகுந்தார். ஆண்டவனைத் தொழுது புறத்தே வந்தார்.

அப்பொழுது, திருஞானசம்பந்தர் சிவநேசரை நோக்கி, ''உலகத்தோரெல்லாம் அறியும்படி உம்முடைய மகளின் எலும்பு நிறைந்த அக்குடத்தை மயானத்திலே நடனம் புரியும் பெருமானிடம் இத்திருக்கோயிலின் மதிற்புற வாயிலின் முன்பு கொண்டு வருக!'' என்று கூறினார். சிவநேசச் செட்டியார் பெரிதும் மகிழ்ந்து அவரை வணங்கி விட்டுத் தம்முடைய திருமனைக்குச் சென்று, கன்னி மாடத்துள்ளே புகுந்தார். புதல்வியின் வெந்த சாம்பலும், எலும்புகளும் அடங்கிய குடத்தை எடுத்து நவமணிப் பல்லக்கில் வைத்து தோழிமார்கள் புடைசூழ அதைக்கொண்டுவந்து, மணிக் கோபுரத்திற்கு எதிரே பல்லக்கிலிருந்து குடத்தை எடுத்து கபாலீச்சுரப் பெருமானின் சந்நிதி எதிரில் வைத்து வணங்கினார். மயிலாப்பூரில் வாழ்பவர்களும் பிற ஊர்களிலிருந்து வந்திருந்த மக்களும் சமணர் பௌத்தர் முதலான புறமதச் சார்புடையவர்களுங்கூட அங்கே நிகழப்போகும் காட்சியைக் காண்பதற்காகத் திரண்டு வந்து அங்கே சூழ்ந்து நின்றார்கள். பூம்பாவையின் எலும்புகள் நிறைந்த மண்குடத்தைப் பார்த்து திருஞானசம்பந்தர் திருவருளைச் சிந்தித்தார். இந்த மாநிலத்தில் இறந்தவரின் எலும்புக் கூட்டை நன்னெறிப்படுத்தி உயிர்ப்பிப்பது நன்மையே என்று கருதினார். அதனால் அவர் பூம்பாவையின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு, ''சிவனடியார்களுக்கு அமுதூட்டியதும் அவர் விழாவைக் கண்ணால் காண்பதும் மண்ணில் பிறந்தார்

பெறும்பயன் என்பது உண்மையானால் உலகோர் முன் வருக!'' என்று உரைக்கலானார். ''மட்டிட்ட புன்னை'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.

''மட்டிட்ட புன்னையுங் கானல் மடமயிலைக்
கட்டடங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டங் காணாதே போதியோ பூம்பாவாய்!''

– தேவாரம்



இந்தப் பதிகத்தினுள் ''போதியோ?'' என்ற மெய்த் திருவாக்காகிய அமிர்தம் அக்குடத்திலுள்ள எலும்பிற் பொருந்தப் பொருந்த எலும்பு ஓர் உருவமாய்க் கூடியது. ''மட்டிட்ட புன்னை'' என்று தொடங்கிய முதற் பாட்டில், பிரிந்த பிராணவாயுவும் உருவம் பெறும் அங்கப் பகுதிகளும் அழகு நிரம்பிய பாவையார் வடிவுபெற்றன. அதற்கு மேல் அருளிய எட்டுத் திருப்பாடல்களில், பன்னிரண்டு வயதினையுடைய வளர்ச்சியை அடைந்து பூம்பாவையார் உருப்பெற்றனர். ''உருஞ்சாய வாழ்க்கை'' என்னும் திருப்பாட்டைப் பிள்ளையார் பாடியதும் குடம் உடைந்தது. அமுதகலத்திலிருந்து தோன்றிய திருமகளைப் போல் பூம்பாவை

எழுந்து நின்றாள்; அதுகண்டு, ஞானசம்பந்தரும் தம் பதிகத்திற்குத் திருக்கடைக் காப்புச் சாத்தினார். குடத்திலிருந்து பெண் உருவமாக எழுந்து நின்ற பூம்பாவையை எல்லோரும் பார்த்து அதிசயித்தார்கள். ஹரஹரா என்று சிவனடியார்கள் சிவநாமங்களை முழங்கினார்கள். அமரர்களும் முனிவர்களும் மலர்மாரி சொரிந்தனர். மண்ணகத்தோர் ‘‘எம்பிரான் கருணை’’ என்றே விழுந்து கும்பிட்டார்கள். சமணர்கள் மானபங்கமடைந்தது போல் தள்ளாடினர்.

கன்னிப் பெண்ணாக நிற்கும் பூம்பாவையின் பேரழகையெல்லாம் எல்லோரும் பார்த்துப் பார்த்து வியந்தார்கள். முன்னால் நின்றவர்களுக்குப் பூம்பாவையின் முன்னழகு தெரிந்தது. செந்தாமரை போன்ற சிவந்த முகம், பனிமலர் சூடிய அடர்த்தியான கூந்தலின் பாரம்! வானவில்லைப் போல் ஜொலிக்கும் அழகான நெற்றி! புருவங்களோ மன்மதனின் வில்கள்! கண்களின் அழகோ முகமெனும் நிலாவெளிச்சத்தில் துள்ளும் இரு கயல் மீன்கள்! இளம் மயிலைப் போன்ற சாயல்! அமுத கலசம் போன்ற மார்பகங்கள், வாழைத் தண்டு போன்ற தொடைகள்! இவ்வாறு ஓவியருக்கும் எழுதவொண்ணாத ஓவியமாய் அழகிற்கும் ஓர் அழகாய் பூம்பாவை நின்றாள். அவளைக் கண்ணுதல் பெருமானின் கருணை வெள்ளத்தைக் காண்பது போல் ஞானசம்பந்தர் தம் அகக் கண்களால் கண்டார். மகளை முழுவடிவில் கண்ட தந்தையான சிவநேசச் செட்டியாரோ சம்பந்தரைப் பணிந்தார். பூம்பாவை இலக்குமி போன்ற பொலிவுடன் அன்னம்போல் முன்னால் நடந்துவந்து திருஞான சம்பந்தரைத் தொழுது வணங்கி நின்றாள். திருஞானசம்பந்தர் சிவநேசரை நோக்கி, ‘‘நீர் பெற்ற மகளை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்லும்’’ என்றார்.

சிவநேசச் செட்டியார் பக்தியோடு திருஞானசம்பந்தரை அடி வணங்கி, ‘‘உம் அருள் அருமையால் அடியேன் பெற்ற பூம்பாவையை அடிகளே திருமணம் செய்தருளல் வேண்டும்!’’ என்று வேண்டினார். அதற்குத் திருஞான சம்பந்தர், சிவநேசரை நோக்கி, ‘‘நீர் பெற்ற பெண்விஷத்தால் மாண்டாள்! பின்னர்ச் சிவபெருமான் அருளால், நான் அவளை உற்பவித்தேன்! அதனால் நீர் சொல்லும் இவ்வுரை தகாது!’’ என்று மறுத்தார். சிவநேசரும் அவரது உறவினரும் திகைத்து மயங்கி அவருடைய காலடியில் விழுந்து அழுதார்கள். திருஞானசம்பந்தர்; அவர்களுடைய துயரம் தணிவதற்காக வேத, சிவாகமத் துணிபுகளை எடுத்துரைத்து, அவர்களைத் தேற்றினார். பிறகு திருஞான சம்பந்தர் பள்ளத்தில் பாயும் நீரின் வேகம் போலக் கோபுரப் புறவாயிலிருந்து திருக்கோயிலுக்குள் விரைந்து சென்றார். சிவநேசச் செட்டியார்

தம்முடைய புதல்வியை திருஞான சம்பந்தருக்குத் திருமணம் முடிக்க வேண்டும் என்ற விருப்பத்தைக் கைவிட்டுச் சென்றார் என்றாலும், ''முன்பு ஞானசம்பந்தருக்கென என் மனதால் உரிமையாக்கிய பூம்பாவையை இனி வேறொருவருக்கு மணஞ்செய்ய இசையேன்'' என்று தீர்மானித்து தம் மகளை அழைத்துக் கொண்டு போய், கன்னிமாடத்தில் வைத்து அங்கு வாழச் செய்தார். பூம்பாவை அந்தக் கன்னிமாடத்திலே கன்னிப் பெண்ணாகக் காலம் முழுவதும் தவம் கிடந்து இறுதியில் சிவனடி சேர்ந்து சிவமயமானாள்.

திருஞானசம்பந்தர் இறைவனை இசைப்பதிகங்களால் போற்றி இன்புற்றுத் திருமயிலாப்பூரில் சில நாட்கள் தங்கியிருந்தார். பிறகு, அங்கிருந்து தலயாத்திரை புறப்பட்டுச் சிவநேசரிடமும் மற்ற சிவனடியார்களிடமும் விடைபெற்று, திருவான்மியூரை அடைந்தார். அங்கு கோயில் கொண்டிருக்கும் மருந்தீசரை வணங்கித் தொழுது வினாவுரையாகிய திருப்பதிகத்தைப் பாடினார். பிறகு திருவுடைச்சுரம், திருக்கழுக்குன்றம், அச்சிறுபாக்கம், திருவரசீலி, திருப்புறவார், பனங்காட்டூர் முதலிய திருப்பதிகளைத் தொழுது, பதிகம் பாடிக்கொண்டே தில்லைநகரை அடைந்தார்.

சிவஞானத் தலைவராகிய திருஞானசம்பந்தர் வரும் செய்தியைக் கேட்ட தில்லைவாழ் அந்தணர்களும் திருத் தொண்டர்களும் அவரை வரவேற்று, எதிர்கொண்டழைத்துச் சென்றனர். திருஞானசம்பந்தர், முத்துச் சிவிகையிலிருந்து இறங்கி தில்லைநகரின் எல்லையினைப் பணிந்து மேற்சென்றார். வடதிசை வாயிலை வணங்கி, வேதமுழங்கும் அழகிய மாடவீதியைக் கடந்து, திருவம்பலத்தின் பக்கத்தில் வலமாக வந்து பேரம்பலத்தை வணங்கினார். சிவபூதங்கள் நெருங்கிய திருவணுக்கன் திருவாயிலையும் வணங்கிக் கொண்டு, சிவகாமியம்மையார் தனியே கண்டுகளிக்கும் வண்ணம் திருவம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் ஆடும் நடராஜப் பெருமானின் திருக்கோலத்தைத் தொழுதார். திருக்களிற்றுப் படியினை வணங்கி, நடராஜப் பெருமானின் சிவானந்தப் பேரின்பத்தில் திளைத்தார். பிறகு, திருமடம் ஒன்றில் தங்கியிருந்தார். கனகசபாநாயகரைக் காலந்தோறும் தரிசித்துத் திருப்பதிகங்கள் பாடியருளிக்கொண்டு, இனிதாக எழுந்தருளியிருந்தார்.

இந்நிலையில், சிவபாத விருதயரும் மற்றவர்களும், திருஞான சம்பந்தர் தில்லையில் வந்திருப்பதைக் கேள்விப்பட்டார்கள். உடனே அவர்கள் சீர்காழியிலிருந்து புறப்பட்டுத் தில்லையை அடைந்தார்கள். அவர்களுடன்

திருஞானசம்பந்தரும் கலந்து, பல திருப்பதிகளைக் கண்டு தொழுதுகொண்டே தோணியப்பரைத் தரிசிக்கப் பேராவல் கொண்டு சீர்காழியை நோக்கிச் சென்றார். சீர்காழி தூரத்தில் காட்சியளித்தது. உடனே, திருஞானசம்பந்தர் தம் முத்துச் சிவிகையை விட்டிறங்கி, ''வண்டார் குழலறிவை'' என்று தொடங்கி, ''நலங்கொள் காழி மக்கள்'' என்று தொடங்கி, ''நலங்கொள் காழி சேர்மின்'' என்று பாடிக்கொண்டே, திருக்கோயிலை அடைந்தார். பிறகு, ஆண்டவனைத் தொழுது, தம் திருமாளிகையைச் சேர்ந்தார்.

அப்பொழுது முருக நாயனார், திருநீலநக்க நாயனார் முதலிய திருத்தொண்டர்கள் தத்தமது சுற்றத்தாருடன் சீர்காழிக்கு வந்தார்கள். திருஞானசம்பந்தர் அவர்களுடன் திருத்தோணியப்பரை வழிபட்டு இசைபாடி இனிதிருந்தார்.

அப்பொழுது, அவருடைய தந்தை சிவபாத விருதயரும் சுற்றத்தார்களும் கூடி ''நம் திருஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்வதற்குரிய பருவம் இது!'' என்று கருதினார்கள். அதனால் அவர்கள் திருஞான சம்பந்தரிடம் வந்து, வேதநெறியின்படி பல வேள்விகளைச் செய்வதற்கு ஒரு கன்னியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று விண்ணப்பித்தார்கள். ஆனால் ஞானசம்பந்தரோ சுற்றம் முதலான பெரும் பாசத் தொடர்பை அறுத்திடப் பெரு நிலையை இறைவனருளால் அடைந்திருந்ததாலும், உலகம் உய்யவந்த அவர் எதை முன்னிட்டுப் பிறந்தாரோ அது முற்றுப் பெற்றுவிட்டதாலும் அவர் திருமணஞ் செய்துகொள்ள இசையவில்லை. மறையவர்களோ மேலும் அவரை வணங்கி ''உலகத்தில் வேதநெறியை நிலைபெறும்படி நீர் செய்தீர்; ஆகையால் அவ்வேத விதிப்படி நீர் திருமணம் செய்து காட்டவேண்டும்! அதற்குத் திருவுள்ளங் கொள்ள வேண்டும்!'' என்று மிகவும் வேண்டினார்கள்.

அதனால் திருஞானசம்பந்தர், தம் இறைவன் திருவருளை நினைந்து திருமணம் செய்து கொள்வதற்கு உடன்பட்டார். பெற்றவர்களும் மறையவர்களும் பெரிதும் மகிழ்ந்து, ''இறைவன் அருள்!'' என்று மனமுருக யாவரும் ஒன்றுசேர்ந்து சிந்தித்து ''திருநல்லூரிலுள்ள நம்பியாண்டார் நம்பி பெற்ற தவப் புதல்வியே திருஞானசம்பந்தர் கைபிடிக்கப் பொருத்தமான மணப்பெண்'' என்ற முடிவுக்கு வந்தார்கள். உடனே மணம் பேச திருநல்லூருக்குச் சென்றார்கள். அவர்கள் வருவதை அறிந்ததும் நம்பியாண்டார் நம்பி பெரிதும் உவகை அடைந்து மங்கல நீர்க்குடங்களாலும் வீதியை அலங்கரித்து அவர்களை எதிர்கொண்டு வரவேற்றுத் தம் மாளிகைக்கு அழைத்து வந்தார். சம்பந்தரின் தரப்பினர் அவரிடம், ''எங்கள்

ஞானப் பிள்ளையாருக்கு உம்முடைய பெண்ணை மணம் பேசவந்தோம்!'' என்றார்கள். ''அது எனக்குப் பெருமையே ஆகும்! உலகமனைத்தையும் ஈன்றளிக்கும் உமையம்மையாரிடம் ஞானப்பால் உண்டவருக்கு எங்கள் குலக்கொழுந்தைத் தருகிறோம்! அதனால் நாங்கள் உய்யப் பெற்றவரானோம்!'' என்று பெரிதும் மகிழ்ந்துரைத்தார்! அவரிடம் சிவபாத விருதயரும் மற்றவர்களும் விடைபெற்றுக் கொண்டு சீர்காழிக்குத் திரும்பினார்கள். ஞானசம்பந்தரிடம், நம்பியாண்டார் நம்பியின் சம்மதத்தை அறிவித்தார்கள். திருமணத்திற்கான நன்னாளைக் குறித்தார்கள். நகரை மகர தோரணங்கள் மங்கல தீபங்களால் அலங்கரித்தார்கள். திருமண ஓலை எங்கணும் அனுப்பப்பட்டது. நம்பியாண்டார் நம்பியும் திருமண முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார்.

திருமணத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்பாகவே நம்பியாண்டாரின் சுற்றத்தார்கள் எல்லோரும் ஊரில் வந்து நிறைந்தனர். முரசங்கள் முழங்க, இசைக் கருவிகள் ஒலிக்க, பொன்மணிப்பாலிகைமீது புனித முளையை நிறைத்துத் தெளித்தார்கள். மாடமாளிகைகளையும் மண்டலங்களையும் அழகுபெற அலங்கரித்தார்கள். வாயிற்புறங்களில் மங்கலத் தோரணங்கள் இட்டார்கள். வீதிகளில் தோரணங்கள் தொங்கவிட்டு இடையிடையே கொடிமாலைகளும் மணி மாலைகளும் கட்டினார்கள்.

வேதிகைகள் எழுப்பி முத்துப் பந்தல்கள் பலவற்றை அமைத்தார்கள். திருமண காரியமான திருமுளை பூரித்த நாள் தொடங்கி, வரும் நாட்களிலெல்லாம் வீதிகள் தோறும், வீடுகள் தோறும், தலை வாயில்கள் தோறும் அழகு செய்யும் மணிவிளக்குகளையும் வாசநீர்ப் பொற்குடங்களையும் கற்பக மாலைகளையும் தூப தீபங்களையும் வைத்தார்கள். நாள்தோறும் திருமணச் செய்தியறிந்தவர்கள், பற்பல ஊர்களிலிருந்து சீர்காழியை வந்தடைந்து கொண்டிருந்தார்கள். வேதியர்களும் திருத்தொண்டர்களும் கூடி, மறைநூல் விதிப்படி, திருஞான சம்பந்தருக்கு, இறைவனின் திருவருள் பொருந்திய திருக்காப்பு நாண் செய்து, அதைத் தொண்டர்களும் மறையவர்களும் மாதர்களும் ஆடவரும் நகர்வலம் செய்வித்தார்கள். திருமாளிகை புகுந்த பிறகு, நவமணிகளால் புனையப்பெற்ற சித்திர விதான மண்டபத்தில், வைதிக முறைப்படி சமாவர்த்தன கிரியையைச் செய்து முடித்தார்கள். செம்பொன் பதிகலத்தினில் செந்நெல் பரப்பின்மேல், மாலைகள் சூழ்ந்த நிறைகுடங்களும் அரசிலை, தருப்பை, மணிவிளக்கு முதலி யனவும் நிறைந்த இடத்தில், மங்கல ஒலியும் வேத கீதமும் முழங்க, திருஞான சம்பந்தரை, அமரச் செய்து, அவரது திருக்கையிலே மறைவிதிப்படி சடங்குகளைச் செய்யும்

வேதியர்கள் காப்பு நாணைச் சாத்தினார்கள். அப்போது அங்கிருந்தவர்களின் முகங்களெல்லாம் மலர்ந்தன. வேதங்கள் முழங்கின. அன்றிரவு திருஞான சம்பந்தர், மழைபோல் தானங்கள் வழங்கினார். மறுநாள் பொழுது விடிந்தது. சூரியன், திசைகள், பூமி, அக்னி, தென்றல் காற்று ஆகிய யாவும் திருமண நிகழ்ச்சியைக் குறித்து மலர்ச்சியுற்றன.

பொழுது புலர்ந்ததும், திருஞான சம்பந்தர், தோணியப்பரின் கோயிலுக்குச் சென்று வணங்கி இறைவனின் திருவருளோடு திருமணம் செய்து கொள்ளப் புறப்பட்டார். தம் முத்துச் சிவிகைமீது ஏறினார். சங்கு தாரை காளம் துந்துபி முதலான கருவிகளெல்லாம் ஊதி முழங்கின. மாதவரும் மங்கையரும் புடைசூழ தந்தை சிவபாத விருதயர், உறவினர், அடியார்கள் எல்லோருடனும் திருஞான சம்பந்தர் புறப்பட்டுச் சென்று மணப் பெண்ணின் ஊரான திருநல்லூரை அடைந்து ‘‘பெருமணம்’’ என்னும் திருக்கோயிலுள் புகுந்தார். அவர் இறைவனை வழிபட்டுத் திருப்பதிகம் பாடி இன்னருளைப் பெற்றார்; மற்றவர்களும் மறையவர்களும், திருஞான சம்பந்தரிடம் வந்து, ‘‘திருமணக் கோலத்தைப் புனைந்தருள வேண்டும்’’ என்று வேண்டினார்கள். அதற்காக திருஞானசம்பந்தர் ஒரு மடத்தில் புகுந்தார்.

அங்கு அவருக்குத் திருமணக் கோலம் புனைவிக்க வந்தவர்கள், அவரை ஒரு பொற்பீடத்தில் அமர்த்தினார்கள். பொற்குடங்களிலுள்ள வாசனை மிகுந்த தூய திருமஞ்சன நீரினால் திருஞான சம்பந்தரை நீராட்டினார்கள். வெண் பட்டாடையை அணியச் செய்து மேலாடையைத் தோளின்மேல் சாத்தினார்கள். கஸ்தூரியுடன் பற்பல வாசனைப் பொருள்களைக்கூட்டி அமைத்த சந்தனத்தைப் பூசினார்கள். திருவடிகளிலே முத்துக் கோவைகள் உள்ள இரத்தின வளையைப் புனைந்தார்கள். பாட்டிலே முத்து மாலைகளைக் குஞ்சமாக்கிப் புனைந்தார்கள்; பருமுத்துக்களைப் பொற் கயிற்றிலே கோத்த அரைஞாணைக் கச்சத்தின் திருவரையில் விளங்கச் செய்தார்கள். முத்து வடங்களாலான அரைப் பட்டிகையின்மேல், வீரச் சங்கிலியை அணிவித்தனர்; முத்துக் கோவையாகிய முப்புரி நூலை அணிவித்து, முத்துமாலையை கழுத்திலிட்டார்கள். விரல்களில் வயிரமணி மோதிரங்களை அணிவித்தனர். பிள்ளையார், ‘‘அந்தணர்கள் புனைவனவெல்லாம் புனைக’’ என்றிருந்து முடிவில் உத்திராக்க மாலையைத் தாமே எடுத்து அணிந்து கொண்டார்; ஐந்தெழுத்தை ஓதித்திருவெண்ணீற்றையும் அணிந்து கொண்டார். பிறகு முத்துச் சிவிகையில் ஏறி மணமேடைக்குப் புறப்பட்டார். மாலைகளும், மயிற்பீலிகளும், குடைகளும், சாமரைகளும் ஆகாயமெங்கும் நிறைந்தன. மங்கல



வாத்தியங்கள் முழங்கின. தாரை, திருச்சின்னம், எக்காளம், தாளம் முதலிய கருவிகளின் ஒலியோடு வேத முழக்கமும் வானளாவ எழுந்து முழங்கியது.

திருஞான சம்பந்தர், திருமணக் கோலத்தோடு, வந்தபோது நம்பியாண்டார் நம்பியின் திருமாளிகையில் மங்கலங்கள் பொங்கிப் பொழிந்தன. பெருந் தவத்தால் பிறந்து கற்பகப் பூங்கொம்புபோல் பொலிவுறும் மணப்பெண்ணுக்கு காப்புக்கட்டி, சங்கற்பம் முதலிய சடங்குகளைச் செய்தனர். பவளக்கொடி போன்ற மணப் பெண்ணுக்குச் செம்பொன்னாலான நுதலணி மாலையையும் நவமணிகள் பதித்த அணிகளையும் பொன்னரி மாலையையும் வரிசை பெறச் சூட்டி, செம்பொன் விளக்குபோல், அழகுக்கே அழகு செய்து அலங்கரித்து வைத்தார்கள்.

அந்தணகுல மைந்தர்கள் எல்லோரும் திருமண எழுச்சியின் எதிரே சென்று செம்பொற் சுண்ணத்தையும் நவமணிகளையும், தூய மலர்களோடு கலந்து வீசினார்கள். வேதியர்கள் அரசிலையையும் தர்ப்பையும் கொண்டு, பொற்கலச நன்னீரினை வீசித் தெளித்தார்கள்.

மணம் நிறைந்த இளம் தென்றல் வீசியது. அழகிய தோரணங்கள் கட்டப்பட்ட பூப்பந்தலின் முன்பு புண்ணியத்தின் பயன் போன்றவராகிய ஞானசம்பந்தர் வந்தருளினார். தம் முத்துச் சிவிகையிலிருந்து அவர் இறங்கி பலவகை மலர்களும்

பொற் சுண்ணமும் தூவிய நடைப் பாவாடைமீது நடந்து வந்தார்.

வேதியர் குலத்து மங்கல மகளிர் புன்சிரிப்பு தவழும் முகங்களோடு நீர் நிறைந்த பொற்குடங்களையும், தூப தீபங்களையும் மலர் மாலைகளையும் முளைப் பாலிகைகளை வைத்த பொற்றட்டுகளையும், கலவைச் சாந்தையும் ஏந்திக்கொண்டு மணமகனாராகிய திருஞான சம்பந்தர்முன் எதிர்வந்து வரவேற்றார்கள்! வரவேற்ற பெண்கள், அவருக்கு மங்கல மொழிகளோடு வாழ்த்துக்கூறி கமண்டல நீரைத் திருமுன்னே வார்த்து, அவரை வலம்வந்து மங்கல வினைகளைச் செய்தார்கள். மங்கலப் பொருட்களை மாதர்கள் ஏந்திக்கொண்டு முன்னே செல்ல, திருஞான சம்பந்தர் நம்பியாண்டார் நம்பியின் பொன் மாளிகையிலுள்ள 'ஆதிபூமி' என்னும் மணவறையிலே புகுந்தார்.

அகிற் புகையின் நறுமணம் வீச அழகாக அமைந்த துகில் விதானத்தின் கீழே மலர்ப் பீடத்தின் மேல் மாதர்கள் சிரித்த முகங்களோடு வாழ்த்துக்கூற வேதியர்கள் மத்தியில் ஞானசம்பந்தர் உவந்து அமர்ந்தார். பெண்கொடுக்கும் நம்பியாண்டார் நம்பிகளும், அவரது அருந்தவப் பேறுள்ள அருமை மனைவியாரும், ஆவின்பாலையும், தூய நீரையும் ஏந்தியவண்ணம் மணமகனாரின் பாதங்களை விளக்க முன்வந்தார்கள். ''சிவபெருமான் இவர்'' என்று நம்பியாண்டார் நம்பி நினைத்து கமண்டல நீரையெடுத்து, பிள்ளையாரின் பாதங்களை விளக்கினார். பிறகு அவர் அந்நீரைத் தலைமீதும் சுற்றத்தார்மீதும் தம் திருமாளிகையினுள்ளும், புறத்திலும் தெளித்தார். சம்பந்தரின் மலர்க்கைமீது அவர் தம் கமண்டலத்திலுள்ள மங்கல நீரை வார்த்துத் தமது குலமும் கோத்திரமும், பெயரும் எடுத்துச் சொல்லி, ''எனது செல்வமகளான அருநிதிப் பாவையாரைப் பிள்ளையாருக்குக் கொடுத்தேன்!''என்று மும்முறை கூறினார்.

தவக் கன்னியின், திருக்கரத்தை, திருஞானசம்பந்தர் கைப்பற்றும் நல்ல வேளை வந்தது. கன்னியின் பெற்றவர்களும், உடன் பிறந்தவர்களும், மற்றவர்களும், மணவறைக்குக் கன்னியை அழைத்து வந்தார்கள். சிவஞானத்தைப் பெற்ற பிள்ளையாரது வலப் பக்கத்தில் நற்றவக் கொழுந்தாகிய மணப் பெண்ணை வெண்மேகத்தோடு பொருந்தும் மின்னற் கொடி போல் விளங்கும்படி அமரச் செய்தார்கள். பிள்ளையாரும் மெல்லிய பூங்கொம்பு போன்ற மணப்பெண்ணும் ஒன்றாக அமர்ந்திருக்கும் அந்த அருமையான காட்சியை மண்ணகத்தவரும் விண்ணகத்து தேவர்களும் கண்ணிமைக்

காமல் கண்டு களித்து மங்கல வாழ்த்துக்கள் கூறி, மனம் பூரித்து நின்றார்கள்.

திருநீலநக்க நாயனார் ஆசிரியராக இருந்து இறைவனை வணங்கித் திருமணச் சடங்குகளைப் பிள்ளையார் திருமுன்பு செய்தனர். மறையொலி ஓங்கியது; மங்கல வாழ்த்துக்கள் பெருகின. மணப்பெண்ணின் மலர்க் கரத்தைப் பிள்ளையார் பற்றுவதற்காக, மணப்பெண் முன்னே திருநீலநக்கர் வெண்பொரியைக் கையிலெடுத்து, வேள்வித்தீயில் ஆகுதியாகப் பெய்து சிவபெருமானைத் துதித்தார். அப்பொழுது, ‘‘பிள்ளையார் அக்னியை வலமாக வருவதற்காக, கன்னியின் திருக்கரத்தைப் பிடித்துக்கொண்டு ‘‘நாம் விரும்பும் அக்னியாவர் சிவபெருமானே’’ என்று திருவுள்ளத்தில் கருதினார். ‘‘இந்த இல்வாழ்க்கை எம்மை வந்து சூழ்ந்து கொண்டதால், இவளுடனேயே சிவன்தாள் சேர்வேன்’’ என்று அவர் ஆர்வம் பொங்க நினைத்து திருக்கோயிலை நோக்கிப் புறப்பட்டார்.

அப்போது திருஞான சம்பந்தர், பெருங்கிளைஞரும் திருத் தொண்டர் கூட்டமும் சூழ, ‘‘அளவுபடாத மெய்ஞ்ஞானத்தின் முக்தியை அடையவேண்டும்’’ என்ற உள்மனக் கருத்தோடு தமக்கு உலக மணம் புரிவித்த இறைவனாரின் பெருங்கோயிலை அடைந்தார். பிறவி நீங்க என்னை முன்னை நாளில் ஆண்டருளிய அத்தகைமைக்கேற்பச் சிவபெருமான் இப்போது என்னைத் திருவடிகளில் சேர்த்து அருளும்’’ என்ற கருத்துடன் ‘‘கல்லூர்ப் பெருமணம்!’’ என்று திருப்பதிகம் பாடத் தொடங்கினார். தம் திருமணத்தைக் கண்டவர்களின் பிறவிப் பிணியையும் போக்கத் திருவுளம் கொண்டார். ‘‘நாதனே! திருநல்லூர் மேவும் பெருமணநம்பனே! உமது திருவடி நீழல் சேரும் பருவம் இதுவேயாம்!’’ என்று திருப்பதிகம் பாடினார்.

உடனே சிவபெருமான் தோன்றி, ‘‘நீயும் உன் மனைவியும் இங்கு உனது புண்ணியத் திருமணத்தினைக் காண வந்தவர்களும் எம்மிடத்தில் இந்தச் சோதியினுள்ளாக வந்து அடையுங்கள்’’ என்றுகூறி ஒரு சோதிச் சுடராக மாறினார். அவரது ஒளியால் மூவுலகமும் சோதி பெற்றது. சோதி லிங்கமாகத் தென்பட்டார். அப்பேரொளியிலிருந்து ஒரு திருவாயில் தோன்றி, அவர்களுக்கு வழிகாட்டியது. பரஞ்சுடரான சிவபெருமானைத் தம் மெய்யுருகத் துதித்தார் பிள்ளையார். பிறகு, உலகம் உய்யும் பொருட்டு, ‘‘சிவஞான



நெறியை எல்லோர்க்கும் கொடுக்கவல்லது 'நமச்சிவாய' என்னும் திருவைந்தெழுத்தாகிய சொல்லே ஆகும்!'' என்ற கருத்து விளங்குமாறு 'காதலாகி' என்று தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை அவ்விடத்திலே விண்ணவரும், மண்ணவரும் கேட்கும்படி பாடியருளினார்.

பின்னர், திருஞான சம்பந்தர், அங்கிருந்தவர்களை நோக்கி ''இந்த திருமணத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் பிறவி நோய் தீர இப்பெரும் ஜோதியினுள் புகுவீர்களாக!'' என்று கூறினார். அவ்வாறே அனைவரும் புகுந்தனர். சீர்பெருகு திருநீல நக்கர், திருமுருகா முதலான தொண்டர்களும் பிள்ளையாரின் தந்தை சிவபாத விருதயரும், மாமனார் நம்பியாண்டார் நம்பியும், நண்பர் திருநீலகண்டப் பெரும்பாணரும் மற்றும் ஏனையவர்களும், வந்தணைந்தவர்களும், உலகில் நிலவிய சுற்றத்தார்கள் சூழ்ந்து வரத் தத்தம் மனைவியார்களோடு அப்பெரும் சோதியினுள் புகுந்தனர். முத்துச் சிவிகை முதலாக முத்துச் சின்னங்கள் முதலி யவற்றைத் தாங்கிச் சென்றவர்களும் பணிகள் பல செய்தோரும், பாச பந்தங்களை வென்றவர்களும், பரிசனங்களும் தொழுதபடியே அந்தச் சோதியினுள் புகுந்தனர். தவ முனிவர்களும், கும்பிட்டுச் செல்வோம் என்ற கருத்துடன் வந்தவர்களும் கூட உள் சென்றனர்.


உலகத் தீமைகளைக் களைய வந்த திருஞான சம்பந்தர் தம் புத்திளம் மனைவியின் கையைப் பற்றிக்கொண்டு அப்பெரும் சோதியினை வலம் வந்தார். பின் அச்சிவச் சோதியில் புகுந்தார். அதன் பின் அச்சோதியும் மறைந்தது. வழிகாட்டிய வாயிலும் மறைந்தது. திருநல்லூர்ப் பெருமணக் கோயில் அங்கு முன்போல் பழையபடியே தோன்றியது. சோதியினுள் புகும் பேறு பெறாதவர்களெல்லாம் தமக்கெல்லாம் கிட்டவில்லையே என்று பெரும் துயரமடைந்தார்கள்.

சீர்காழிப் பிள்ளையார், இறைவனுடைய பேரொளியில் கலந்து விட்டதை, அருகிருந்தும், தூரத்திலிருந்தும் பார்த்து அத்தகைய பேறு கிடைக்கப் பெறாத தேவர்களும் முனிவர்களும் பிரமதேவனே முதலாகிய எண்ணற்றப் பெருந்தேவரும் தங்கள் துன்பம் நீங்க, கைகுவித்துப் போற்றித் துதித்தார்கள்.

தமிழ் நாவலரான திருஞான சம்பந்தரின் சரிதையை அடியேனுக்குத் தெரிந்தவரை சொல்லிப் போற்றினேன். அடுத்ததாக கலிக்காமனாரின் திருத்தொண்டைக் கூறுகிறேன்.

''வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற்பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்



34. ஏயர்கோன் கலிக்காம நாயனார்

சோழ நாட்டில் [1]திருப்பெருமங்கலம் என்னும் அழகிய நகரம் ஒன்று உண்டு. அது பொன் கொழிக்கும் காவிரியின் வடகரையில், கிழக்குத் திசையிலே அமைந்துள்ளது. அந்நகரின்



மதில்களில் இயந்திரங்கள் வரிசையாக நிறைந்திருக்கும். மாளிகைகளில் மேகங்கள் கவிந்திருக்கும். வீதிகளெல்லாம் திருவிழாக்கள் நிறைந்திருக்கும். அங்குள்ள பெண்களின் கண்களில் காதல் மயக்கின் நஞ்சு வேகம் சூழ்ந்திருக்கும். ஆண் பெண் ஊடலின்போது, பெண்கள் செம்பஞ்சுக் குழம்பு பூசிய தங்கள் மெல்லிய பாதத்தால் உதைப்பதால் ஆண்களின் குடுமிகளில் காதலியரின் பாதச் சின்னங்களாகச் செம்பஞ்சுக் குழம்பும் படிந்திருக்கும். கூந்தல் அழகிகளின் நடன அரங்குகளிலே ஓயாமல் மத்தள ஓசைகள் கேட்கும். மங்கலம் பொலிவுறும் மாளிகை முற்றங்களில் குழந்தைகள் ஓயாமல்

[1] திருப்பெருமங்கலம் : இந்த ஊர் திருப்புன்கூருக்கு வடக்கே சுமார் ஒரு மைல் தொலைவிலுள்ளது.

விளையாடுவார்கள். அவ்வூர்க் குடிமக்கள் உழவுத் தொழிலில் நீங்காத பெரும் வளமைகளைக் கொண்டிருப்பார்கள். நெற்றியில் திருநீறு அணிந்திருக்கும் சிவனடியார்கள் அந்நகர் முழுவதும் நிறைந்திருப்பார்கள். அவர்கள் செய்யும் வழிபாட்டுச் சிறப்பினால் அந்த நகரம் சிவபுரியைப் போல் விளங்கும்.

இத்தகைய சிறப்புடைய திருப்பெருமங்கல ஊரில் ''ஏயர்கோக்குடி'' என்ற புகழ் வாய்ந்த குடியினர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வேளாண்மையில் சிறந்தவர்கள். பரம்பரையாக சோழ மன்னர்களின் சேனாதிபதிகளாக விளங்கும் குடிச் சிறப்பைப் பெற்றவர்கள். இத்தகைய பெருமை வாய்ந்த குடியிலே 'கலிக்காமர்' என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சிவ பக்தர். சிவனடியார்களின் திருவடிகளை வணங்கிப் பொங்கும் அன்போடு அவர்களுக்குப் பணி பல செய்து அவர் சிறந்து வாழ்ந்தார். சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் 'திருப்புன்கூர்' என்னும் சிவஸ்தலத்தில் அவர் அனேகத் திருப்பணிகளைச் செய்து, ''திருநீற்றை விரும்பும் சிவபெருமானின் திருவடியே உண்மையான செல்வம்!'' என்று ஏயர்கோன் கலிக்காமர் கருதி இறைவனைத் துதித்து இன்புற்று வந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானையே நங்கை பரவையாரிடம் தூதனுப்பிய செய்தியை ஏயர்கோன் கலிக்காமர் கேள்விப்பட்டார். ''இச்செயலை யார்தான் செய்வார்?'' என்று அவர் சுந்தரமூர்த்தி நாயனாரை இகழ்ந்து குறை கூறினார். அதனால் சுந்தரமூர்த்தி நாயனாரைப் பற்றி கலிக்காமர் கொண்டிருந்த கருத்தைத் திருத்தும் பொருட்டு, சிவபெருமான் செய்த அருட்செயலின் வரலாற்றை இனிக் காண்போம்.

''நம்பியாரூரரான சுந்தரர் சிறிதும் மனம் நடுங்காமல் அச்சமின்றி, தம்பிரானாரான சிவபெருமானையே ஒரு பெண்ணிடத்தும் தூதுவிட்டார்!'' என்ற செய்தியை திருப்பெரு மங்கலத்திலிருந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் கேட்டு மனம் வெம்பினார்; அதிசயித்தார். வெகுண்டு மிகக் கோபம் கொண்டார். இத்தகைய செய்கையை யார் செய்வார்?'' என்று அவர் சுந்தரமூர்த்தி நாயனாரைக் குறை கூறிக் கொண்டே யிருந்தார். ''ஆண்டவனையே அடியான் தூதனுப்புவதோ? சிவலோக நாயகனையே ஓர் அடியான் ஏவும் காரியம் மிகவும் நன்று! இச்செயலுக்கு தூண்டத் துணிந்த ஒருவனும் திருத்தொண்டனா? கேவலம் ஒரு பெண்ணின் பொருட்டாக ஆண்டவனையா தூது விடுவது? என்ன பாவம்! இந்தப்

பொறுக்க முடியாத பிழையை என் செவியுறக் கேட்டும் என் ஆவி மாயவில்லையே! நானும் பேயேன் ஆனேன்! பெண்ணொருத்தி புலவியைத் தீர்த்து அவளிடம் செல்ல வேண்டும் என்கிற காதலால் ஓர் அடியான் ஏவிவிட ஆண்டவன் தன் திருவடிகள் நோகத் தெருவில் நடந்தாராமே? திருவாரூர் வீதியில் போவதும் வருவதுமாக ஓரிரவு முழுவதும் அடியானுக்காக ஐயன் தூதனாக உழன்றானாமே! இது என்ன கொடுமை?'' என்பார்.

''அரியும் பிரும்மாவும் அகில தேவர்களும் அறியவொண்ணாத ஆண்டவன்தான் தம்முடைய அடியார்களுக்கு ஆற்றாராகிப் பெண்ணொருத்தியிடம் தூது போக இசைந்தாலும் அவரை அடியான் ஒருவன் தூதுக்கு ஏவலாகுமோ? அப்படி ஏவுவதற்கும் நடுங்காமல் மனந்துணிந்த அத்தகைய வன் தொண்டனை என் கண் முன்னால் காணும் நாள் எந்நாளோ? ஆரணங்கு ஒருத்தியின் மீதுள்ள ஆசையின் காரணத்திற்காக ஆளுடைய பரமசிவனை அர்த்த ராத்திரியில் தூதுபோகும்படி ஏவி விட்டுக் காத்திருந்த அந்தத் தொண்டனை என் கண்முன் வரக் காணபேனாகில் என்னதான் விளையுமோ?'' இவ்வாறெல்லாம் கலிக்காம நாயனார் மனங்குமுறி சுந்தரர் மீது வெறுப்பும் கோபமும் கொண்டிருந்தார். கலிக்காம நாயனாரின் கோபத்தைப் பற்றி சுந்தரமூர்த்தி நாயனார் கேள்விப்பட்டார். உண்மையிலேயே தான் செய்தது பிழைதான் என்று சுந்தரர் உடன்படுவாராகி, அதற்குத் தீர்வுகாண வேண்டி, நாள்தோறும் சிவபிரானிடம் சென்று, முறையிட்டு வந்தார். சிவபெருமான் சிறந்த சிவனடியார்களான அவர்களிருவரையும் ஒருமைப்படுத்த திருவுள்ளம் கொண்டார். எனவே அவர்களிருவரும் நட்பு பூண்டு ஒன்று கூடும் தன்மையை அருள் செய்வதற்காக உடலை வாட்டிக் கொடுமை புரியும் 'சூலை நோயினை' ஏயர்கோன் கலிக்காம நாயனாரிடம் ஏவி விட்டார். இறைவர் ஏவிய சூலை நோயானது, நெருப்பில் காய்ச்சிய வேல் குடைவதைப் போல், கலிக்காம நாயனாரைப் பற்றி முடுக்கிக் குடைந்தது.

அந்த சூலைநோயின் வேதனைக் கொடுமையைக் கலிக் காமர் தாங்க முடியாமல், சிவபிரானின் பொன்னடிகளை தம் மனத்தாலும் வாக்காலும் போற்றினார். அப்போது சிவபெருமான், கலிக்காமர் முன்வந்து தோன்றி, 'உன்னை வாட்டி வருத்துகின்ற இந்தச் சூலைநோய் வன்றொண்டனான சுந்தரன் தரத்தாலன்றி வேறு எந்த வழியாலும் தீராது!' என்று கூறினார். ஏயர்கோன் கலிக்காமர் அதைக் கேட்டு ''எம்பெருமானே! என் தந்தையும் என் பாட்டனும், முப்பாட்டனும்

எமது கூட்டம் முழுவதும் காக்கும் நீரே, எமது இறைவர் என்று வழி வழியாக வழியடிமைத் தொண்டு செய்யும் மரபிலே தோன்றியவன் நான்! அப்படிப்பட்ட என்னை வருத்தும் இந்த சூலை நோயை, புதிதாக நீர் வம்பென ஆண்டு கொண்ட ஓர் அடியானோ வந்து தீர்ப்பவன்? அவன் வந்து தீர்ப்பதைக் காட்டிலும் இந்த நோய் தீராமலேயே என்னை வாட்டி வருத்துவதே நன்று! இடபக் கொடியுடைய பெருமானே! உமது பெருமையை யாவரே அறிந்தவர்? வன்றொண்டனுக்கோ ஆகின்ற உறுதியைச் செய்தீர்!'' என்று கூறி வருந்தினார். சிவபெருமான் அப்போதே மறைந்து விட்டார்.

அதன் பிறகு சிவபெருமான், வன்றொண்டரான சுந்தரரிடம் சென்று, ''இன்று நம் ஏவலாலே ஏயர்கோன் சூலை நோயால் வருந்துகிறான். நீ சென்று, அந்நோயைத் தீர்ப்பாயாக!'' என்று கூறி மறைந்தார்.

நம்பியாரூரர் மிகவும் மகிழ்ந்து, சிவபெருமானின் திருவடிகளை வணங்கி ஏயர்கோனது நட்பைக் கருதும் கண்ணியமான மனத்துடன், கலிக்காம நாயனாரின் சூலைநோயைத் தீர்க்கும் பொருட்டு தாம் வரும் செய்தியினை ஆள் மூலம் சொல்லியனுப்பி விட்டுத் தாமும் திருவாரூரில் இருந்து விரைந்து புறப்பட்டு கலிக்காமரின் ஊரை நோக்கிச் சென்றார். கலிக்காமரோ, இறைவரின் அருளினாலே தமக்கு வந்த சூலைநோயும், அதன் மேல் இறைவர் மொழிந்தருளியதைக் கேட்ட துன்பம் தரும் மொழியும், தம்மை மிகவும் வேதனை செய்வது போதாதென்று அதன் மேலும் வன்றொண்டரது வரவைப் பற்றிக் கேள்விப்பட்டதும், ''எம்பிரானைத் தூதனாக ஏவிய நம்பியாரூரன் இங்கு வந்து என் நோயைத் தீர்ப்பானாகில் குற்றம் வந்து சேருமே, அப்போது நான் என்ன செய்வேன்? என்னைப் பற்றிக் கொண்டு நீங்காமல் வாட்டும் இந்தப் பாதகச் சூலைநோயை அந்த ஆரூரன் வந்து தீர்ப்பதற்கு முன் இச்சூலை நோய் தங்குதற்கு இடமாகவுள்ள என் வயிற்றினோடும் கிழித்து அழித்து விடுவேன்'' என்று துணிந்து, தமது உடைவாளை எடுத்து, தம் வயிற்றினை தமக்குத்தாமே கிழித்துக் கொண்டார். உடனே, அவரது உயிருடனே அவரைப் பற்றியிருந்த சூலைநோயும் அப்பொழுதே தீர்ந்தது!

அதைக் கண்டு எண்ணுதற்கரிய பெருமையும் அன்புள்ளமும் கொண்ட கலிக்காமரது தேவியாரும் தம் கணவரோடு உயிர்துறந்து, அவருடன் தானும் போவதையே விரும்பி, அதற்குரியவற்றைச் செய்யலானார். அப்போது

''நம்பியாரூரர் வருகிறார்'' என்று பரிஜனங்களில் சிலர் முன்னால் ஓடிவந்து கூறினார்கள். உடனே அந்த அம்மையார், அங்கு அழுது கொண்டிருந்தவர்களை நோக்கி, ''இங்கு ஒருவரும் அழாதீர்கள்!'' என்று கூறித் தன் கணவரின் தற்கொலை நிகழ்ச்சியை மறைத்தார். பிறகு காவலாளர்களை நோக்கி, சுந்தரமூர்த்தி நாயனார் இங்கு எழுந்தருளும்போது திருமனையை மிகவும் அலங்கரித்து எதிர்கொள்ளுங்கள்'' என்று கட்டளையிட்டார். அம்மையாரின் கட்டளைக்கேற்பக் காவலர்கள் அந்த வீட்டின் வாசல்களிலெல்லாம் விளக்குகளையும், நிறைகுடங்களையும் வைத்து மலர் மாலைகளைத் தொங்கவிட்டு நற்சிந்தையோடு நம்பியாரூரரை எதிர்கொண்டு வரவேற்று வணங்கினார்கள். ஆளுடைய நம்பிகள் அவர்களுக்குப் புன்சிரிப்பு முகம் காட்டி, விருப்பமுடன் மாளிகையினுள்ளே வந்தார். அப்பொழுது மனை ஆட்கள் நம்பியாரூரரை ஒரு மலர்த்தவிசின்மீது அமரச் செய்து, சம்பிரதாய முறைப்படி அர்ச்சனை எல்லாம் செய்ய, அவர் அவற்றை ஏற்றுக்கொண்டார்.

பிறகு நம்பியாரூரர், அவர்களை நோக்கி ''இப்பொழுது கலிக்காமருக்குத் துன்பம் செய்யும் சூலை நோயை நீக்கி, அவருடனிருப்பதற்கு காலம் தாழ்ப்பது குறித்து நாம் மிகவும் வருந்துகின்றேன்'' என்று கூறினார். அதற்குள் கலிக்காமரின் மனைவியாரின் ஏவுதல்படி அவரது வீட்டு வேலைக்காரர்கள், ''இங்கே கெடுதி ஒன்றுமில்லை! கலிக் காமர் உள்ளே பள்ளி கொள்கின்றார்!'' என்று கூறினார்கள். அதைக் கேட்டதும் சுந்தரர், ''அவருக்குத் தீங்கில்லை என்றாலும் இன்னமும் என்மனம் தெளிவடையவில்லை. ஆகையால் நான் அவரைக் காண வேண்டும்'' என்றார். மேன்மேலும் அதையே வன்றொண்டர் வற்புறுத்தினார். அதனால் வேறு வழியின்றி ஏவலாளரும், நம்பியாரூரரை உள்ளே அழைத்துச்சென்று ஏயர்கோன் கலிக்காம நாயனாரைக் காட்டினார்கள். உடலில் குருதி மிகவும் வடிய வயிறு அறுப்புண்டு குடல் சொரிந்து, உயிர் நீங்கிக் கிடந்த கலிக் காமரை நம்பியாரூரர் கண்டதும், ''நிகழ்ந்தவாறு நன்று! இவர்முன் இவ்வாறே நானும் உயிர் துறப்பேன்!'' என்று கூறித் தற்கொலை செய்துகொள்ளத் துணிந்து குற்றுடைவாளைத் தம் கையிலெடுத்தார்.

அப்பொழுது, சிவபெருமான் திருவருளால் ஏயர்கோன் கலிக்காம நாயனார் மீண்டும் உயிர்பெற்று உய்ந்து, ''நண்பரே! அந்தோ கெட்டேன்!'' என்று விரைந்தெழுந்து வன்தொண்டரின் கையிலிருந்த வாளைப் பிடித்துக் கொண்டார். உடனே

வன்தொண்டர் பணிந்து கீழே விழுந்து கலிக்காமரை வணங்கினார். அவரைக் கலிக்காமரும் கழலடிகளில் விழுந்து வணங்கினார். இந்த அற்புதத்தைக் கண்டு உலகத்தார் போற்றினார்கள். தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். நாயனார்கள் இருவரும் எழுந்து ஒருவரையொருவர் தழுவிக் கொண்டார்கள். அதன் பிறகு இடைவிடாத நட்பினாலே இருவரும் பெருமகிழ்ச்சி கொண்டு, ''திருப்புன்கூர்'' சென்று அங்கு கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் திருவடிகளைப் பணிந்து துதித்தார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் தம்பிரானின் திருவருட் பெருமையை நினைத்து ''அந்தணாளன்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி வணங்கினார்.

இவ்வாறு சிலநாள் கழிந்த பின்னர் நம்பியாரூரர், ஏயர்கோன் கலிக்காம நாயனாருடன் திருவாரூர் சென்றார். ஆங்கு, பூங்கோயிலில் குடிகொண்ட தியாகேசரை, இருவரும் வணங்கினர். ஏயர்கோன் சிலநாட்கள் திருவாரூரில் தங்கியிருந்தார். பிறகு நம்பியாரூரரிடம் விடைபெற்று, மீண்டும் தம் ஊருக்குச் சென்று அங்கு தமக்குரிய பல திருத்தொண்டுகளைப் புரிந்து வாழ்ந்துவிட்டு, காலமாகிச் சிவபெருமானின் திருவடி நிழலையடைந்தார். நள்ளிரவில் எம்பெருமானைத் தூதுவிட்ட நம்பியாரூரர்மீது கோபங்கொண்டு பிறகு அவருக்கே நண்பரான ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் மலரடிகளை வணங்கிவிட்டு அடுத்ததாக திருமூலரின் பெருமையைக் கூறுகிறேன்.

''ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்!''

– சுந்தரர்



35. திருமூல நாயனார்

திருக்கயிலாயத்தில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலுக்கு முதற் பெருங் காவலாக இருப்பவர், திருநந்தி தேவர்! அவர் இந்திரன், திருமால், பிரமன் முதலான தேவர்களுக்குச் சிவநெறியினை அருளும் பணி செய்பவர். அந்த நந்தியெம்பெருமானிடம் திருவருள்பெற்ற ★ **சிவயோகியார்** பலர் உண்டு.



அவர்களில் ஒரு சிவயோகியார் அணிமா முதலிய சித்திகளில் வல்லவர். அகத்திய முனிவரிடம் அவர் நட்புக் கொண்டவர். அந்த நட்பின் ஆர்வத்தால் அகத்திய முனிவருடன் சிலநாட்கள் தங்கியிருக்க வேண்டும் என்று அவர் எண்ணமிட்டு வடகயிலையிலிருந்து புறப்பட்டு, நற்றமிழ் கமழும் பொதியமலை நோக்கிப் பயணம் சென்றார்.

அவர் தமிழ் நாடு நோக்கி வரும்போது, வழியில் உள்ள திருக்கேதாரம் என்னும் தலத்தை வழிபட்டுப் பசுபதி நேபாளத்தினைப் பணிந்து துதித்தார். பிறகு, அவர்,

★ சிவயோகியார் : இவரது முழுப்பெயர் சுந்தரநாதர் ஆகும்.

கங்கைக்கரையை அடைந்து கங்கைத் துறையிலே நீராடினார். ★அவிமுத்தத்தை (காசித் தலத்தை) பணிந்து துதித்தார். விந்திய மலையோடு தொடர்புடைய திருப்பருப்பதத்திற்கு (ஸ்ரீசைலம்) சென்று, இறைவனை வணங்கினார். திருக்காளத்தி மலையைச் சார்ந்து வழிபட்டார். இறைவன், அருட்கூத்தாடும் மன்றங்களில் ஒன்றாகிய 'திருவாலங்காடு' என்ற சிவஸ்தலத்தைத் தொழுது போற்றினார். பிறகு அவர் காஞ்சி நகருக்குச் சென்று திருஏகாம்பர நாதரை வணங்கி அங்கு சிவயோகிகள் சிலரோடு, சில நாட்கள் தங்கியிருந்தார். திருவதிகை வீரட்டானம் சென்று பணிந்து, அங்கும் சிலகாலம் தங்கியிருந்தார். பிறகு சிவபெருமான் அருட்பெருங் கூத்தாடும் பொன்னம்பலம் உள்ள சிதம்பரத்தை அடைந்தார். அங்கு, சிந்தை மகிழ நடராசப் பெருமானின் திருக்கூத்தைக் கண்டு, அங்கேயே சிலகாலம் தங்கியிருந்துவிட்டுக் காவிரி நதியின் வடகரையை அடைந்தார். காவிரியில் நீராடி அதனைக் கடந்து, தென்கரையில் ஏறினார்.

பசுவின் கன்றாக வடிவுகொண்டு உமாதேவியார் தவஞ் செய்தருளிய திருவாவடுதுறையை அவர் அடைந்தார். அங்குள்ள திருக்கோயிலினை வலம் வந்து வழிபட்டு வணங்கினார். பெரும் அன்புகொண்டு அந்த இடத்திலேயே தங்கியிருக்க விருப்பங் கொண்டார் சிவயோகியார். அத்தலத்தை விட்டுப் பிரியாமல் அங்கேயே இருக்கவேண்டும் என்ற கருத்து அவருடைய உள்ளத்தில் உந்திக் கொண்டேயிருந்தது.

ஆயினும் ஒருநாள் அவர் அந்தத் தலத்தை விட்டுக் கிளம்பி, காவிரிக் கரையோரமாகச் சென்று கொண்டிருந்தார்.

அவர் சென்றவழியில், ஒரு புறவில் பசுக்கள் கூட்டமாகக் கூவிப் புலம்பும் கூக்குரலைக் கேட்டார். அந்தப் பசுக்கள் இருக்கும் இடத்தை அடைந்தார்.

அப்பசுக்களை மேய்க்கின்றவன், அந்தணர்கள் வாழ்கின்ற [1]சாத்தனூரில், இடையர்களின் குடியிலே பிறந்து தன் குலத்தொழில் முறையில் பசுக்களை மேய்த்துவரும் [2]மூலன் என்ற பெயரையுடையவன் ஆவான். மேய்ச்சலிடையில் அவன்

★ அவிமுத்தம் : அருஉருவம்கொண்டு, இறைவன் இங்கு எழுந்தருளியிருப்பதால் இப்பெயர் பெற்றது. (காசி)

[1] சாத்தனூர் : இது திருவாவடு துறையினை ஒட்டியதாக அதன் தென்புறம் உள்ள ஊர் ஆகும்.

[2] மூலன் : இது ஒரு இடையனுடைய பெயர். இப்பெயர் இவனது உடல் காரணமாக வந்தது. இவன் உடலிற் புகுந்தெழுந்த சிவயோகியார்க்கும் திருமூலர் என்ற பெயர் வரலாயிற்று.

துணையின்றித் தனியே வந்து, பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்போது, அவனை ஒரு பாம்பு கடித்தது. அதனால் விதிமுடிந்து அவனுடைய உயிரை எமன் உண்டதால் அவன் இறந்து நிலத்தில் வீழ்ந்தான். இறந்து கிடந்த இடையனான மூலனின் உடம்பை, அந்தப் பசுக்கள் வளைய வளைய வந்தணைந்து, மிகக் கதறிச் சுழன்று, முகந்து முகந்து பார்த்து மிகவும் வருந்தின. சிவயோகியாருக்கு அப்பசுக்களின் மீது கருணை பிறந்தது. உடனே அவர், ''சிவபிரானது திருவருளினாலே, இப்பசுக்களின் துயரத்தை நான் ஒழிப்பேன்!'' என்று உறுதி கொண்டார். ''இந்த இடையன் மீண்டும் உயிர்பெற்று எழுந்தாலன்றிப் பசுக்களின் துயரம் நீங்கமாட்டாது'' என்று திருவுள்ளங்கொண்டு, அவர் தம் உடலை ஓரிடத்தில் மறைத்துப் பாதுகாப்பாக வைத்துவிட்டு [1]பிராகாமியம் (பரகாயப் பிரவேசம்) என்ற சித்தியினாலே தம் உயிரை, இறந்து கிடந்த இடையனின் உடலில் பாய்ச்சி, திருமூலராய் எழுந்தார்.

அதைக் கண்டதும் பசுக்களெல்லாம், நாத்தழும்பேறத் திருமூலரை நக்கி மோந்து, அருகில் வந்தன; கனைத்தன; களிப்பின் மிகுதியினால் வால்களை மேலே தூக்கி வளைத்துத் துள்ளின; துன்பம் நீங்கியதால் அவை வரிசையாய்ச் சென்று மேய்ந்தன. திருமூலர், அப்பசுக்களின் மகிழ்ச்சியைக் கண்டு, அவை சேர்ந்து மேயும் இடங்களிலெல்லாம் தாமும் அவற்றின் பின்னே சென்று மேய்த்து, காவிரியாற்றில் ஓட்டி நீர் ஊட்டிக் கரையேற்றி, நிழலுள்ள இடத்தில் தங்கவைத்துப் பாதுகாத்தார்.

சூரியன், மேற்குத் திசையில் மறையும்பொழுது, பசுக்கள் தமது கன்றுகளை நினைத்துக்கொண்டு பையப் பையச் சாத்தனூரை நோக்கி திரும்பிச் சென்றன. சிவயோகியாராகிய திருமூலரும் இடையனின் உடம்பில் இருந்தபடியே அவற்றின் பின்னே தொடர்ந்து சென்றார். பசுக்கள் அதனதன் வீடுகள்தோறும் அடையத் திருமூலர் வெளியிலேயே நின்றார்.

மூலன் என்ற இடையனுக்கு மனைவி ஒருத்தி உண்டு! அவள், ''என் புருஷன் காலம் தாழ்த்தாமல் ஆசையோடு என்னிடம் ஓடிவருவாரே! இன்றைக்குப் பொழுது கழிந்த பின்னும் என் நாயகர் வரவில்லையே'' என்ற அச்சத்துடன் தன் கணவனைத் தேடிச்சென்று, திருமூலர் நின்றுகொண்டிருந்த இடத்தையடைந்தாள். அங்கு திருமூலர்

---

[1] பிராகாமியம் : வாயு மூலமாகப் பிறரது உடலினுள் உயிரைச் செலுத்துவதாகும்.

நின்று கொண்டிருந்த நிலையினைக் கண்டதும் ''இவருக்கு ஏதோ ஒரு ஈனம் நேர்ந்திருக்கிறது'' என்று நினைத்து தன் புருஷன் என்ற நினைப்பினால் தொட்டிழுப்பதற்காக திருமூலரைத் தீண்டப் போனாள். திருமூலர் சட்டென விலகி அவளைப் பார்த்து ''என்னைத் தீண்டாதே!'' என்றார்.

மூலனுடைய மனைவிக்கு மக்களுமில்லை; எத்தகைய சுற்றமுமில்லை; தன் கணவனைத் தவிர வேறு யாருமே உறவுமில்லை. அதனால் அவள் மிகவும் பயந்து நடுங்கி, மிகவும் மயங்கி தத்தளித்து, ''என்ன செய்தீர்?'' என்று கூறி மனம் தளர்ந்து கூவினாள்.

திருமூலர் அவளை நோக்கி, ''உனக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை!'' என்று கூறி அங்கிருந்த ஒரு பொது மடத்தினுள்ளே போய்ப் புகுந்து, சிவயோகத்திலிருந்தார்.

இடையனின் மனைவி திகைத்தாள். தனக்குரிய நாயகனின் மனப்போக்கு வேறானதை நினைத்து மனங்குமுறினாள். இரவு முழுதும், துயிலாமல் வருந்தினாள். மறுநாள் பொழுது விடிந்ததும் அவ்வூரிலுள்ள நீதிமான்களிடம் அவள் விரைந்து தன் நாயகனின் நிலையைக் கூறி முறையிட்டாள். அவர்கள் சென்று திருமூலரைப் பார்த்தார்கள். பார்த்து ''இவருக்குப் பித்து பிடிக்கவில்லை. இது பித்துப் பொருந்திய மயக்கமன்று; வேறொரு சார்புள்ளதுமன்று. சித்த விகாரங்களையெல்லாம் களைந்தெறிந்து இவரது சித்தம் என் சிவயோகத்தில் ஈடுபட்டிருக்கிறது. இவரது தன்மையினை யாவராலும் அடைய முடியாது. இவர், இருவகைப் பற்றுக்களையும் அறுத்த ஞானோபதேசத்தினால், இறைவனது திருவடிகளைப் பெற்ற ஜீவன் முக்தர்களைப்போல எல்லாம் உணர்ந்த மெய்ஞ்ஞானியாகத் திகழ்கிறார். ஆகையால், இனிமேல் இவர் முன்போல் சுற்றத்தார்களோடு சேர்ந்து வாழமாட்டார்'' என்று சொல்லிவிட்டார்கள். அதைக் கேட்டதும் மூலனின் மனைவி, பெரும் துயரம் எய்தி, பித்துப் பிடித்தவள்போல் மயங்கிச் சுழன்றாள். அவர்கள் அவளை அழைத்துக்கொண்டு, அவ்விடத்தைவிட்டு அகன்று போயினர்.

சாத்தனூர்ப் பொது மடத்தில், சிவயோகத்தில் அமர்ந்திருந்த திருமூலர், அந்நிலையிலிருந்து எழுந்து முன்னாளில் பசுக்கள் வந்த வழியினையே பற்றிச் சென்று தாம் பாதுகாவல் செய்துவைத்த தமது முந்தைய உடலைத் தேடினார். ஆனால் அந்த உடலைக் காணவில்லை. அதனால் அவர் ஞானயோகத்திலமர்ந்து சிந்தித்தார். ''சிவாகமத்தின்

உண்மைப்பொருளைத் தம் வாயிலாகத் தமிழில் வெளியிடவேண்டித் தம் பழைய உடலை மறைத்தது சிவபெருமான் திருவருள்தான்!'' என்பதைத் தமது ஞான உணர்வினால் திருமூலர் தெளிவாகத் தெரிந்து கொண்டார். பிறகு தம்மைச் சுற்றமாகக் கருதி, அங்குவந்து சூழ்ந்து கொண்ட இடையர்களிடம் ''உங்களுக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை!'' என்ற உண்மையை முழுவதும் அறிவுறுத்திக் கூறினார்; அவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள்.

அவர்கள் போன பிறகு காமம் வெகுளி மயக்கம் முதலானவற்றைத் துறந்த திருமூலர் திருவாவடுதுறைக்கு வந்தார். அங்குள்ள திருக்கோயிலையடைந்து, சிவபெருமானை அவர் வணங்கிவிட்டு, திருக்கோயிலின் சுற்றுப்புறத்திலே வானோங்கி நிற்கும் அரசமரத்தின் கீழே யோகாசனத்தில் அமர்ந்தார். சிவராஜயோக நிஷ்டையிலிருந்து, இதய கமலத்தில் எழுந்தருளிய இறைவருடன் இரண்டறக்கூடி ஒன்றித்துத் திகழ்ந்தார். உலகத்தார் பிறவித் துன்பம் என்னும் விஷத் தொடர்பிலிருந்து நீங்கி, உய்யும் பொருட்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய நான்கு நெறிகளையும் விரித்துக் காட்டும் திருமந்திர மாலையை ஆண்டுக்கு ஒரு திருமந்திரப் பாடலாகப் பாடத் துவங்கினார். பரம்பொருளாகிய சிவபெருமானைப் போற்றி, 'ஒன்றவன்தானே' என்று தொடங்கி, மூவாயிரம் ஆண்டுகள்வரை சிவயோகத்தில் மகிழ்ந்து வாழ்ந்து மூவாயிரம் திருமந்திரப் பாடல்களைப் பாடி உலகுக்கு வழங்கியருளினார். பிறகு, சிவபெருமானது திருவருளினால் அவர் தம் திருக்கயிலைதனையடைந்து என்றும் பிரியாதபடி, இறைவரது திருவடி நிழலில் சேர்ந்தார்.

திருமந்திரம் மொழிந்த திருமூலரை வணங்கிவிட்டு அடுத்ததாகத் தண்டியடிகளின் திருத்தொண்டைச் சொல்லுவோம்.

''தம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்''

— சுந்தரர்



36. தண்டியடிகள் நாயனார்

★தண்டியடிகள், சோழநாட்டிலே திருவாரூரிலே பிறந்த பெருந்தவமுடையவர், வேதங்கள் பாட ஆனந்த நடனமாடும் சிவபிரானின் திருவடிகளை மனத்தினுள்ளேயே



அகக்கண்ணால் கண்டுகளிக்கும் சிறப்புப் பெற்றவர். புறக்கண்ணை விரும்பாதவர்போல, பிறந்தநாளிலிருந்தே அவர் பிறவிக் குருடராயிருந்தார். காணுதற்குரிய கண்ணினாலே, காணப்பெறுவது இறைவரது மெய்த் திருத் தொண்டேயாகும் என்ற கருத்தையுடையவர்.

அவர் தினந்தோறும் திருவாரூர்த் திருக்கோயிலை வணங்கி வலம் வருவார்; நமச்சிவாய என திருவைந்தெழுத்தை பேரன்போடு ஓதுவார்.

திருவாரூர் திருக்கோயிலுக்கு மேற்குப் புறத்தில், திரு தீர்த்தக்குளம் உண்டு. அந்தக் குளத்தின் பக்கங்கள் எங்கும்

★ தண்டியடிகள் : தண்டி – இது நாயனாரின் இயற்பெயர்.

சமணர்களுடைய பாழிகளாக்கித் தூர்க்கப்பட்டு, இடத்தினாலே குறைவடைந்திருந்தன. அதனால், ‘‘நான் இங்கே இக்குளம் பெருக மண்ணைத் தோண்டவேண்டும்!’’ என்று தண்டியடிகள் அதனை யடைந்து, திருக்குளத்தைப் பெருக்க முயன்றார். குளத்தினுள் அகழும் குழியோரத்தில், குறிப்புக் குறியாகிய ஓர் கோல் நட்டு, அதில் கட்டிய கயிற்றினை குளக்கரையின் சிறங்கு புறத்தில் நட்ட ஒரு தறியினுடன் இறுகப் பிணைத்துக் கட்டினார். பிறகு, அக்கயிற்றைத் தடவிப் பிடித்துக்கொண்டே வழியறிந்து குளத்திலிறங்கி, மண்ணை வெட்டிக் கூடையிலெடுத்துக் கொண்டு வந்து, கரையிலே கொட்டுவார். இப்படிச் செய்யும் பொழுதெல்லாம் ‘‘நமச்சிவாயா’’ என்று திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டே செய்வார். இவ்வாறு, தினந்தோறும் இடையறாத முயற்சியுடன் தண்டியடிகள் அந்த திருக்குளத்தை அகழ்ந்து கொண்டிருந்தார்.

அவரது செயலை, சமணர்கள் கண்டார்கள்; பொறாமை கொண்டார்கள். அவர்கள் தமக்குள் ஆலோசித்துத் தண்டியடிகளிடம் வந்து அவர் முன்னால் நின்று ‘‘மண்ணை வெட்டாதீர்! அதனுள் வாழும் பிராணிகள் மடியும். அவைகளைத் துன்புறுத்த வேண்டாம்! நீரும் துன்புற வேண்டாம்!’’ என்று கூறினார்கள்.

அவர்கள் கூறிய மாற்றத்தைக் கேட்டதும் தண்டியடிகள் அவர்களை நோக்கி, ‘‘திருவிலிகாள்! சிவபெருமானுக்குச் செய்யும் திருப்பணி எதுவோ, அதுவே குற்றமற்ற அறமாகும்! இது அறியுமோ உமக்கு!’’ என்றார்.

அதுகேட்ட சமணர்கள் ‘‘நாங்கள் கூறிய அறவுரையைக் கேளாதொழிந்தாய். கண்களை இழந்ததோடு காதுகளையும் இழந்தனையோ?’’ என்று அவமதித்துக் கூறினார்கள்.

தண்டியடிகள் அவர்களை நோக்கி, ‘‘மந்த உணர்வும், குருட்டுக் கண்ணும், செவிட்டுக் காதும் உங்களுக்கே இவ்வுலகில் உள்ளன. திரிபுரத்தை எரித்த விரிசடைக் கடவுளின் திருவடிகளைத் தவிர வேறொன்றையும் என் கண்ணால் காண மாட்டேன்; அந்த நுட்பம் உங்களுக்கு விளங்காது! நிலையில்லாத நிலையினை உடையவர்களே! நீங்கள் உணர்வும் கண்ணும் இழந்து, உலகமெல்லாம் அறியும்படி நான் காணக் கண்பெற்றால், நீங்கள் என்ன செய்வீர்கள்?’’ என்று கேட்டார்.

சமணர்கள் அதைக் கேட்டதும், ‘‘உன் தெய்வத்தின் வல்லமையால் நீ கணபெற்றாயானால் அதன் பிறகு நாங்கள்

இந்த ஊரிலேயே இருக்கமாட்டோம்!'' என்று சபதங்கூறி, தங்கள் முரட்டுக் கைகளால் அவரது கூடையைப் பலாத்காரமாகப் பறித்து எறிந்தார்கள். அவர் பிடித்துக் கொண்டு குளத்தில் இறங்கியேறுவதற்காகக் கட்டியிருந்த கயிற்றையும் குறித்தடியையும் மண் வெட்டியையும் பறித்து எறிந்தார்கள்! தண்டியடிகள் என்ன செய்வார்?

சமணர்களின் தீயசெயல்களை உணர்ந்து தண்டியடிகள் வெகுண்டார். தம் இறைவனாரது பூங்கோயிலின் வாசல் முன்னே சென்று, வணங்கி, ''எம்பெருமானே! சமணர்கள் இன்று என்னை அவமானம் செய்ததினால் நான் மிகவும் மனமுடைந்தேன். அது தீரத் திருவருள் புரியவேண்டும் அடியேனுக்கு!'' என்று முறையிட்டு நிலமுற வீழ்ந்தார். பிறகு, தமது திருமடத்தினுள்ளே புகுந்து வழக்கம்போலத் திருப்பணி செய்ய இயலாது போய்விட்டதையெண்ணி, அழுதுகொண்டே துயின்றார்.

அன்றிரவு தண்டியடிகள் துயிலும்போது, அவருடைய கனவில் அகிலமெலாம் அறிந்த சிவபெருமான் தோன்றி ''அன்பனே! உன் மனக் கவலையை ஒழி! உனது கண்கள் பார்வை பெற்று அந்த சமணர்களின் கண்கள் மறைவதைக் காண்பாய்! அஞ்சவேண்டாம்!'' என்று கூறி மறைந்தார். பிறகு அன்றிரவே சோழ மன்னனின் கனவிலும் சிவபெருமான் தோன்றி, ''தண்டியென்பவன், நமக்காகத் திருக்குளம் கல்லினான். அதைக்கண்டு சமணர்கள் பொறுக்காமல் இடையூறு செய்து அவனுடைய திருத்தொண்டைத் தடுத்தார்கள். அதனால் அவன் வெகுண்டான். நீ அவனிடம் சென்று அவன் கொண்ட குறிப்பால் அவன் கருத்தை முடிப்பாயாக!'' என்று கூறி மறைந்தார்.

மன்னன் கண்விழித்தான். உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிய அவன் சிவபெருமானைத் துதித்தான். மறுநாள் பொழுது விடிந்ததும் தண்டியடிகளிடம் சோழமன்னன் வந்து அடைந்து, தான் கண்ட கனாவைக் கூறினான். அது கேட்ட தண்டியடிகளார், சிவபெருமானின் திருவருளை நினைத்து, அரசனை நோக்கி, ''மன்னா! நான் சிவபெருமானுடைய திருக்குளத்தைத் தோண்டி அகழப்படுத்த முனைந்தேன். அப்போது சமணர்கள் வந்து அது அறமன்று, என்று பலவாறு கூறி, நான் கயிறு கட்டிய நடுத்தறியினையும் பறித்து, வன்மை பேசி, எனது கூடையையும் தூக்கியெறிந்தார்கள். குருடனாகிய உனக்கு அறிவில்லையோ!'' என்றும் ஏசினார்கள். அதற்கு நான், 'சிவபெருமானுடைய திருவருளினால் நான் கண்பார்வை பெற்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ''நீ கண்

பார்வை பெற்றால், நாங்கள் இந்த ஊரிலிருக்க மாட்டோம்'' என்று சபதம் செய்தார்கள். இதுவே நிகழ்ந்த செய்தியாகும்! இதன் உண்மை நிலையினைக் கண்டு, இந்த வழக்கை நீங்கள் முடித்தல் வேண்டும் என்று கூறினார். சோழ மன்னன் சமணர்களை அழைத்து விசாரிக்கவே அதற்கு அவர்களும் சம்மதித்தார்கள். தண்டியடிகள், குளக்கரைக்கு சென்றார். சமணர்களும் போந்தனர். மன்னன் கரையிலே நின்று, தண்டியடிகளின் முகத்தை நோக்கி, ''சிவநேசரே! சிவனருளால் கண்ணைப் பெறுதலைக் காட்டுக!'' என்று கூறினான்.

தண்டியடிகள் குளத்தின் தண்ணீர் முன் நின்று ''நான் சிவபெருமானுக்கே தொண்டு செய்வது உண்மையானால் இன்று, இம் மன்னனுக்கு எதிரே யான் கண் பெறுதல் வேண்டும்! இத்திருவாரூர்ச் சமணர்கள் கண்ணிழத்தல் வேண்டும்!'' என்று மொழிந்து, திருவைந்தெழுத்தினை எடுத்து ஓதிக் கொண்டு, திருக்குளத்தில் மூழ்கினார். பிறகு அவர் தொழுதபடி கண்பார்வை பெற்றே எழுந்தார்; வானத்து அமரர்கள் பூமாரி பொழிந்தார்கள். சமணர்கள் கண் பார்வை இழந்து தடுமாறினார்கள். அதைக் கண்ட சோழமன்னன், ''பழுது செய்த சமணர்கள் கெட்டவர்கள்'' என்று நினைத்து, ''தண்டியடிகளோடு ஒட்டிக்கெட்ட சமணர்களையெல்லாம் திருவாரூரை விட்டே போக்கி ஒழியுங்கள். இவ்வூரில் எங்குமே சமணர்கள் தட்டுப்படாதபடி விரட்டியடியுங்கள்!'' என்று கூறித் தன் வீரர்களை ஏவினான்.

அதனால் வீரர்கள் வந்து மோதி விரட்டவே சமணர்களெல்லாம் அவ்வூரைவிட்டே நாலாபுறமும் ஓடலானார்கள். ஓடும்போது சிலர், குழிகளில் விழுவார்கள். சிலர், நிலை தவிர்வார்கள். ''கைக்குக் கோலும் இல்லையே!'' எனச் சிலர் கூவுவார்கள். ''இதுதான் வழி!'' என்று சிலர் தூரத்தில் ஓடுவார்கள். ''மாண்டோம்!'' என்பார்கள் சிலர். ''மதிகெட்டோம்! அழிவை வலிந்தழைத்து அழிந்தோம்!'' என்பார்கள் சிலர். ''அரசனுக்குப் பழி இதாமோ?'' என்பார்கள் சிலர். பாய்களை இழப்பார்கள்; மயிற்பீலிகளைத் தடவித் தேடிக் காணாமல் பெயர்வார்கள். காலோடு கைமுறிய கல்மேல் இடறி வீழ்வார்கள். சிலர் முட்டிக்கொள்வார்கள். சிலர் மனம் அழிந்தோடி வழிகள் அறியாமல் மயங்குவார்கள். இவ்வாறு சமணர்களையெல்லாம் ஊரைவிட்டு சோழமன்னன் துரத்தினான்; சமணர்களுடைய பள்ளிகளையும் பாழிகளையும் இடித்தான். திருக்குளத்தை நாயனார் கருத்துப்படி ஒழுங்கு செய்தான். பிறகு நாயனாரைப் பணிந்து வணங்கி மன்னன் விடைபெற்றுச் சென்றான்.

தண்டியடிகள் வழக்கம்போலத் திருத்தொண்டு செய்து சிவபெருமானது திருவடி நிழலையடைந்தார்.

''கண் பார்வை இல்லாமலே திருக்குளம் தோண்டிய தண்டியடிகளின் பாதத்தை வாழ்த்தி வணங்கிவிட்டு அடுத்ததாக மூர்க்க நாயனாரின் செயலை உரைப்போம்!''

''நாட்டமிகு தண்டிக்கும்... (அடியேன்)''

– சுந்தரர்

37. மூர்க்க நாயனார்

தொண்டை வளநாட்டில், பாலியாற்றின் வடகரையில் ★திருவேற்காடு என்னும் ஓர் ஊர் உண்டு. அந்த ஊரிலுள்ள தடாகங்களில் அன்னப் பேடைகள், நீரினில் நீந்தியும் மூழ்கியும் மலர்ந்த தாமரை மலர்களில் ஏறியும் விளையாடும். விழாக்காலங்களில் ஆடலரங்குகளில் துணிக் கொடிகளோடு மின்னற் கொடி போன்ற பெண்களும் ஆடுவார்கள்.

மதில்கள் சூழ்ந்த திருவேற்காட்டில் அமர்ந்துள்ள சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்து வந்த ஒரு குடியில் ஒரு பெரியார் இருந்தார். அவர் ஒரு வேளாளர். அறிவு தோன்றிய நாளிலிருந்து, சிவபெருமானின் திருவெண்ணீற்றையே மெய்ப்பொருள் என்று கருதி வந்தார். அவர் பெயர் மூர்க்க நாயனார். அவர், சிவனடியார்களுக்கு அமுது செய்வித்து, அதைப் பார்த்து மகிழ்ந்த பிறகுதான் தான் உண்பது வழக்கம்.

அவர், நாள்தோறும் தூய்மையான, சோறு, நெய், சுவை மிகுந்த கறி வகைகள் முதலியவற்றை நன்றாகச் சமைக்கச் செய்து தம்மையடைந்த சிவனடியார்களை வணங்கி, உபசரித்து, அவர்களுக்குத் திருவமுது செய்வித்து, அவர்கள் வேண்டிய பொருள்களையும் கொடுத்துதவி அத்தொண்டிலே பெரிதும் மகிழ்ந்து வந்தார். இப்படியிருக்க, நாளுக்கு நாள் அடியவர்கள் கூட்டம் பெருகலாயிற்று. நாயனாரிடமிருந்த பொருள்களெல்லாம்

★ திருவேற்காடு : இவ்வூர் சென்னையை அடுத்த பூவிருந்தவல்லிக்குச் செல்லும் பெருவழியில் சுமார் 4 மைல் சென்று கிழக்கே காடு வெட்டி ஆற்றைக் கடந்து அடையத்தக்கது.



செலவாயின. அவர், தம்மிடமிருந்த அடிமைகளோடு பரம்பரை உரிமையான நிலம், அணிகலன்கள் முதலிய பொருள்களையெல்லாம் விற்று, சிவனடியார்களுக்கு திருவமுது படைப்பிக்கும் திருத்தொண்டினில் மகிழ்ந்து வந்தார். முடிவில் எவ்வகைப் பொருளும் இல்லாத நிலைமை வந்து சேர்ந்தது. மேன்மேலும் திருவமுது படைப்பதற்கு வழியில்லாமல். அவர் வறுமையில் வாடி, இனி பொருளுக்கு என்ன செய்வதென மனம் சோர்ந்தார். பிறகு முன்னாளில் கற்ற சூதாட்டத்தினால், பொருளீட்டக் கருதினார். அவ்வூரிலே சூதாடுவோர் இல்லாததால், அவ்வூரிலிருந்து புறப்பட்டார். பல திருப்பதிகளுக்குச் சென்றார். ஆங்காங்குள்ள இறைவனைப் பணிந்து, உள்ளமுருகித் தொழுது ஆங்காங்கே சூதாடி, அதன் மூலம் வரும் பொருளைக் கொண்டு சிவனடியார்களுக்கு அன்னமிடும் திருத்தொண்டைத் தொடர்ந்து செய்விப்பார்; இவ்வாறு அவர் கும்பகோணத்தையடைந்தார். அங்கும் பல பொது இடங்களுக்குச் சென்று சூதாடி, வெற்றி பெற்று, அதன் மூலம் கிடைக்கும் பொருள்களை, இறைவன் திருவருளால் தமக்குக் கிடைத்தனவாகக் கருதி, அடியார்களுக்குத் திருஅமுது செய்து மகிழ்ந்திருந்தார்.

அவர் சூதாடும்போது, முதல் ஆட்டத்தில் தோற்றுப் பணயப் பொருளை இழப்பார். ஆனால் பின் ஆட்டங்களில் எல்லாம் வெற்றி பெற்றுப் பெரும் பணயப் பொருள்களை வாரிக்

கொள்வார். ஆட்டத்தில் வாயுரைகளால் மாறுபடுவோரை தம் உடைவாளை உருவிக் குத்துவார். அதனால் அவரை, உலகத்தார் ★ நற்சூதர், மூர்க்கர் என்று அருமையான பெயரிட்டு அழைத்து வந்தனர்.


மூர்க்க நாயனார், சூதாட்டத்தில் தாம் வெற்றி பெற்ற பொருளை, தம் கையாலும் தீண்டமாட்டார்; தமக்காகவும் பயன்படுத்தமாட்டார்; அவற்றை சமையல் செய்வோரிடம் கொடுப்பார். அவர்கள் அமுதாக்குவார்கள். அடியார்கள் யாவரும் திருவமுது செய்த பிறகு, கடைசிப் பந்தியில் தாமும் அமர்ந்து அமுது செய்வார்.

இவ்வாறு சில நாள், கும்பகோணத்திலேயே மூர்க்க நாயனார் திருத்தொண்டு செய்து, இறைவன் திருவருளினால் குற்றங்களினின்று நீங்கப் பெற்றவரானார். அவர் இவ்வுலகை விடுத்த பின்பு, சிவபுண்ணியப் பேற்றால் பூதகணங்கள் சூழ்ந்து இசைபாட, ஆனந்தத் தாண்டவம் செய்தருளும். சிவபெருமானது உலகமாகிய சிவபுரத்தினில் புகுந்து பேரின்பமுற்றார்.

வல்லவர்களையும் சூதிலே வென்று அதனால் பெரும் பொருள்கொண்டு அடியார்களுக்கு அன்னமிட்ட மூர்க்க நாயனாரை வாழ்த்திவிட்டு அடுத்ததாக சோமாசி மாறர் செயலைச் சொல்லுவோம்.

''......மூர்க்கருக்கும் அடியேன்''

— சுந்தரர்



★நற்சூதர், மூர்க்கர் : இஃது நாயனாருக்குக் காரணப் பெயர்களாகும்.

38. சோமாசிமாற நாயனார்

சோழ நாட்டில் ★ திருவம்பர் என்னும் இடத்திலே சோமாசிமாறர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு வேதியர்; சிவனடியார் அவர். அந்தணர் குலத்திற்கேற்ப மிகவும்



மேம்பட்டு விளங்கினார். அவர் முறையாக யாகஞ் செய்தலையும், ஐந்தெழுத் தோதுவதையும் தூய பணியாய் மேற்கொண்டார். ''எத்தன்மையராயினும் ஈசனுக்கு அன்பர் என்றால் அத்தன்மையர் தாம் நம்மை ஆள்பவர்கள்!'' என்ற கொள்கையோடு அவர், தம்மை நாடிவரும் அடியவர்களுக் கெல்லாம் அடியவராயிருந்து, அவர்களது திருவடிகளைப்

★ திருவம்பர் : அது அம்பர்ப் பெருந்திருக்கோயில் என்று வழங்கப் பெறும்.

போற்றி திருஅமுது படைப்பார். அடியார்களுக்கு பாரபட்சம் காட்டாது அன்போடு பழகும் அவரது அரும் பண்பு கண்டு, அடியவர்களெல்லாம் அவரே சிவமெனக் கொண்டு வழிபாடு செய்தார்கள். சிவபெருமானது திருவைந்தெழுத்தினை விதிப்படி ஓதினால் தமது சித்தமும் தெளியும் என்ற நம்பிக்கையில் இதனையே நித்தியக் கடனாகக் கொண்டார்.

இவருக்கு சுந்தரமூர்த்தி நாயனாரிடத்தில் பேரன்பு உண்டு. அதனால் அவரோடு சேர்ந்திருக்கக் கருதி திருவாரூரை அடைந்தார். சுந்தரமூர்த்தி நாயனாரோடு பெருநட்பு வைத்து, நட்பின் இலக்கணமாகப் பழகினார்; ஐம்புலன்களையும் அடக்கி காமம், குரோதம், கோபம், மதம், மாச்சர்யம் என்னும் அறுவகைக் குற்றங்களையும் ஒடுக்கி, தன்னையும் காத்து மற்றவர்களையும் காக்கக் காரணமாய் வாழ்ந்தார். இதன் மூலம் பெறுதற்கரிய பெரும் பேறான சிவலோகமடைந்து என்றும் நீங்காத பேரின்பம் பெற்றார்.


''அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்''

— சுந்தரர்

39. சாக்கிய நாயனார்

''**திருச்சங்கமங்கை**'' என்னும் பதியில் வேளாளர் குலத்திலே சாக்கிய நாயனார் என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர், மெய்ப்பொருளை நன்றாக ஆராய்ந்தவர். எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டவர். ''பிறந்தும் இறந்தும் வரும் பிறவித் தொடர் நிலையில் மேன்மேலும் செல்லாமல், இப்பிறவியிலேயே அதினின்று நீங்குவேன்'' என்ற கருத்துக் கொண்டார். அதற்காக அவர், தம்மூரை விட்டு, மதில்கள் சூழ்ந்த காஞ்சிபுரம் என்ற நகரினை அடைந்தார். அங்கு மெய்யறிவு பெறுவதற்குரிய பல வழி வகைகளை நாடி, முதலாவதாக சாக்கியர்களை (பௌத்த மதத்தினரை) அடைந்து அவர்கள் கூறும் தர்ம வழியிலே நின்று, பிறப்பையொழிக்கும் உறுதிப்பாட்டின் வழியை ஆராய்ந்தார். பௌத்த சமய நூல்களைப் படித்தார். பிறகு பௌத்த சமய முடிவையும் மற்ற புற சமயங்களின் முடிவுகளையும் ஆராய்ந்து, அவையெல்லாம் உண்மைப் பொருளினை உணர்த்துவன அல்ல, என்பதை

திருச்சங்கமங்கை : இது தொண்டை நாட்டில் காஞ்சீபுரத்தை அடுத்துள்ள ஓர் ஊர்.



உணர்ந்து கொண்டார். சிவபெருமானின் திருவருள் கூடியதால் ''அழிவில்லாத சிவ நன்னெறியே உண்மைப் பொருள்'' எனப் பெரும் நல்லுணர்வைப் பெற்றார். அறிவிக்க அறியும் சித்தாகிய ஆன்மாக்களும் அவ்வான்மாக்களால் செய்யப்படும் புண்ணிய பாவ கர்மங்களும், அக்கர்மங்களினால் விளையும் சுகதுக்கங்களான பயன்களும், அப்பயன்களை அவ்வான்மாக்களுக்கு ஊட்டுகின்ற தானே அறியும் சித்தாகிய பதியும் ஆகப் பொருள் நான்காகும் என்று தெளிவு கொண்டார். இச்சிறப்பின் இயல்புநிலை சைவநெறியல்லாத ஏனைய சமய நெறிகளுக்கு இல்லையெனத் துணிவையும், சிவனெறியொன்றே உண்மை நெறி என்பதையும், தாம் முன் செய்த தவத்தின் திறத்தால் உளம் கொண்டு சிந்தித்து, இறைவன் திருவருளால் உணர்ந்து, அறிந்தார்.

''ஒருவன் எந்நிலையில் நின்றாலும், எக்கோலம் கொண்டாலும் சிவபெருமானின் திருவடிகளை மறவாதிருத்தல் ஒன்றே உறுதிப் பொருள்!'' என்று சாக்கிய நாயனார் கருதினார். அதனால் அவர் தம்முடைய பௌத்த கோலத்தை நீக்காமல் தூய சிவத்திடம் பேரன்பு கொண்டு, அன்பினால் சிவபெருமானை மறவாது நினைந்து சிறந்து விளங்கினார்.

சாக்கிய வேடங்கொண்ட இப்பெரியார், ''அரு உருவத்திரு மேனியாகிய சிவலிங்கமானது, பிரமனாலும், திருமாலாலும் காணமுடியாத விசும்பையும் பாதாளத்தையும் அளாவும் அழல் தூணாகித் தோன்றிய வடிவமே ஆகும்!'' என்று தெளிந்தார். ''நாள்தோறும் சிவலிங்கத்தைக் கண்டு

வழிபட்ட பின்னரே, உணவருந்தல் வேண்டும்!'' என்ற ஓர் உறுதியைக் கொண்டார்.

ஒருநாள், சாக்கியர் வேடந்தாங்கிய இப்பெரியார் ஒரு வெளியிடத்திலேயே சிவலிங்கம் ஒன்றைக் கண்டார். கண்டதும் மனதில் பெரு மகிழ்வு கொண்டு, சிவார்ச்சனை செய்ய வேண்டுமெனப் பதைபதைத்து, தாம் செய்யும் செயல் இன்னதென்றறியாமல் அருகில் கிடந்த ஒரு கல்லை எடுத்து, அதையே மலராகப் பாவித்து, அச்சிவலிங்கத்தின் மேல் அர்ச்சிப்பது போல் அந்தக் கல்லை எறிந்தார். தம் குழந்தைகள், தம்மீதுள்ள அடங்காத அன்பினால் இகழ்வாகிய வன் செயல்கள் புரிந்தாலும் பெற்றோர்கள் அச்செயல்களைக் கண்டு மகிழ்வார்கள். பெற்றவர்களுடைய மகிழ்ச்சியைக் கண்ட குழந்தைகளுக்கும் தங்கள் வன் செயல்களில் இன்பமே உண்டாகும். அதுபோன்றே, சாக்கியர் வேடப் பெரியாரின் கல்லெறி செய்கையைக் கண்டு சிவபெருமான் மகிழ்ச்சிதான் அடைந்தார்.

அடுத்த நாள், சாக்கிய வேடப் பெரியார், சிவலிங்கத்தைக் கண்டு அர்ச்சித்த பின்புதான் உண்பது என்ற தம் நியதியின்படி முந்திய நாளில் அன்பின் அர்ச்சனையாகச் சிவலிங்கத்தின் மேல் கல்லெறிந்ததைப் பற்றி நினைத்தார். ''நேற்று எனக்கு இந்த எண்ணம் தோன்றும்படிச் செய்து அதை நிகழ்வித்தது, சிவபெருமானின் திருவருளே ஆகும்'' என்று துணிந்தார். அதுவே தாம் செய்யும் திருத்தொண்டாக மேற்கொண்டு, தினந்தோறும் ★சிவலிங்கத்தைக் கண்டு கல்லெறிந்து வழிபட்டு வந்தார். ஆயினும், தாம் கொண்டிருந்த சாக்கிய வேடத்தைக் கலைக்காமலிருந்தார். அன்புநெறியில் கற்களையெறிதலை அவர் நாள்தோறும் வழுவாமல் செய்து வந்ததால், அந்த மெய்த்தொண்டு சிவபெருமானுக்குச் சிறந்த பூஜையாயிற்று. சாக்கிய நாயனார் கல்லெறிந்த செயலும் அன்புச் செயலே என்று கருதினால், கண்ணப்பரது செருப்படியும் இறைவரது திருமுடியில் பொருந்தப் பெற்றதேயாகும்.

இவ்வாறு சாக்கிய நாயனார் சிவலிங்கத்தின்மீது கல்லெறியும் திருத்தொண்டு செய்து வரும் காலத்தில் ஒருநாள் சாக்கிய நாயனார் திருவருட் சோதனையினால், தமக்கு வழக்கமான வழிபாட்டை அயர்வு மிகுதியினால் மறந்து, உணவு கொள்வதற்குச் சென்றார். அப்போது, தமது திருத்தொண்டின்

★ சிவலிங்கம் : இது இறைவரை ஒரு குறியின் கண் வைத்து வழிபடும் பொருட்டு விளங்குவது.

நினைவு அவருக்குத் தோன்றியது. உடனே அவர், ''இன்றைக்கு எமது பெருமானை கல்லெறிந்து வழிபட மறந்தேனே!'' என்று நினைத்து உணவு உண்ணாமல் இருக்கை விட்டெழுந்து, பெருவிருப்பத்தோடு மிக விரைந்து சென்று, சிவலிங்கத் திருமுன்னே நின்றார். ஒரு கல்லை எடுத்து சிவலிங்கப் பெருமான் மீது எறிந்தார். சிவபெருமான் அவரது அன்புக்கு எளியராய், உமா தேவியாருடன் மழவிடையின் மேல், ஆகாயத்தில் எழுந்தருளிக் காட்சி கொடுத்து, அவரை சிவலோகத்திற்கு அழைத்துச் சென்றார்.

''வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்''

— சுந்தரர்

40. சிறப்புலி நாயனார்

காவிரி நதியால் வளங்கொழிக்கும் சோழ நாட்டில் ★**திருஆக்கூர்** என்னும் அழகிய ஊர் ஒன்று உண்டு. உலகத்திலுள்ளவர்கள் வறுமையால் வாடிச் சென்று யாசித்தவர்களுக்கு இல்லையென்னாது வேண்டுவனவற்றை வழங்கும் தன்மையுடைய வேதியர்கள் வாழும் ஊர், என்று திருஞானசம்பந்தரால் புகழப்படும் தமிழ் மறைத் திருவாக்கினைப் பெற்றது அவ்வூர்.

அங்கு மரச் சோலைகளிலும் மாடங்களிலும் மேக முழக்கத்தை விட வேதமுழக்கம் மேலோங்கி நிற்கும். அழகு நிறைந்த வீதிகளில் படரும் அகிற் புகையின் தூப மணம் தாழும்படி, வேள்விச் சாலையில் பொழியும் ஆகுதிகளின் புகை, மேலோங்கிச் செல்லும். கரும்புச் சோலைகளை, கமுக மர வேலிகள் சூழ்ந்து நிறைந்திருக்கும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருஆக்கூரில் வேதியர் குலத்தைச் சேர்ந்த 'சிறப்புலியார்' என்னும் பெரியார் வாழ்ந்து வந்தார். அவர், நீலகண்டப் பெருமானுக்குத் திருத்தொண்டு

★ திருஆக்கூர் : இந்த ஊர் தரங்கம்பாடி இருப்புப் பாதையில் ஆக்கூர் நிலையத்திற்கு வடக்கே முக்கால் மைல் தொலைவில் உள்ளது. இங்குள்ள திருக்கோயிலுக்கு 'தான்தோன்றி மாடம்' என்று பெயர்.




புரியும் தன்மை யுடையவர். சிறந்த வள்ளல். தம்மை வந்தடைந்த சிவனடியார்களின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அன்பு மேலீட்டினால் இனிய மொழிகளைப் பேசி நாள்தோறும் நல்ல அமுது படைத்துவந்தார். சிவனடியார்கள் விரும்புவன யாவற்றையும் மேகம்போல் வழங்கிப் பெரும் புகழ் பெற்றார்.

சிறப்புலிநாயனார், சிவபெருமான் மீது வற்றாத அன்பு கொண்டு, ★ திருவைந்தெழுத்தினை நாள்தோறும் நியமமாக ஓதுவார். நித்தியாக்னி ஆகிய முத்தீயினை முறைப்படி வளர்த்து வருவார். நல்ல சிவவேள்விகளையெல்லாம் சிவபெருமானைக் குறித்தே செய்வார். இவ்வாறு பற்பல சிவ புண்ணியங்களையெல்லாம் செய்து, சீரும் சிறப்பும் பெற்ற தன்மையினால், சிறப்புலியார், சிவபெருமான் திருவடி நிழலிலே சிறப்புற்று, பேரின்ப நிலை பெற்றார்.

''சீர் பெற்ற புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்''

— சுந்தரர்



★ திருவைந்தெழுத்து : இதுவே பஞ்சாட்சரம். இது தூலம், சூக்குமம், அதி சூக்குமம் என்று மூவகையுடையது.

41. சிறுத்தொண்ட நாயனார்

காவிரி வளநாடு என்று வழங்கப்படும் சோழநாட்டில் வளமை பொருந்திய சிறு நகராக ''திருச்செங்காட்டங்குடி'' என்ற ஊர், விளங்கி வருகிறது. அது காமனை எரித்த கண்ணுதற்கடவுள் மகிழ்ந்து கோயில் கொண்டிருக்கும் திருத்தலமாகும். அங்கு ★**மாமாத்திரர் குலத்தில்** 'பரஞ்சோதியார்' என்று பலராலும் புகழப்படும் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

அவர், சிவபெருமானது நீங்காத அன்புடையவர். திருநீற்றுச் சார்புடையவர். அதனால் உலகத்து உயிர்களெல்லாம் உயர்வுறும்படி காவல் தொழிலை மேற்கொண்டவர். ஆயுர்வேதமாகிய மருத்துவ நூற்கலையையும், அளவிலாத வடமொழி நூற்கலைகளையும், படைக்கலப் போர்க்கருவிகளின் தொழிற் கலையையும், அளவறக் கற்றுணர்ந்தவர். யானையேற்றம், குதிரையேற்றம், முதலான வித்தை பலவற்றிலும் பரஞ்சோதியார் சிறந்து விளங்கிவந்தார். அவர் மனம் அமைதி பெறுவதற்கு ஏதுவாகிய பல கலைகளையும் ஒழிவின்றிப் பயின்று, அவற்றின் மூலம் 'தெளிந்த பொருள், சிவபெருமானின் திருவடிகளே ஆகும்' என்பதை அறிந்துணர்ந்து இருந்தார். அந்த உணர்வினால் பள்ளத்தில் பாயும் வெள்ளம்போல், அவரது அன்பானது, இறைவனின் திருவடிகளிடமே பாய்ந்து சென்று தேங்கி நின்றது. அவர், சிவனடியார்களுக்கு ஏற்ற திருத்தொண்டுகளை, தினந்தோறும் செய்து வந்தார். புகழ்மிகுந்த தமது அரசனுக்குப் பரஞ்சோதியார் பக்கத் துணையாகவும், சேனாதிபதியாகவும் இருந்து, தம் அரசன் பொருட்டே யானைப் படையைச் செலுத்திச் சென்று, பல போர்களில் வெற்றியடைந்து, பகையரசர்களையும்,

---

★ மாமாத்திரர் குலம் : இது வழிவழியாக மருத்துவத் தொழில் புரியும் ஓர் மரபு என்பர். ஒரு சிலர் மகாமாத்திரர் என்பது மாமாத்திரர் என்று மருவிற்று என்பர். மந்திராலோசனைத் தலைவரே இவர்தானென்றும், அரசர் இவரைக் கலந்தேதான் அரச காரியங்களைச் செய்வாரென்றும் கூறுவர். அந்தணர் போன்று பூணூல் அணியும் பண்பும் இவர்களுக்குண்டு என்று பலர் கூறுவர். மாமாத்திரர் குலமல்லாது ஆமாத்தியர் குலம் ஒன்று உண்டு. அது வேறு; இது வேறு.

தேசங்களையும் கைப்பற்றி, அரசனால் பெரிதும் மதிக்கப்பட்டு, பெருஞ் சிறப்புகளைப் பெற்று, அரச சேவையிலேயே அமர்ந்திருந்தார். பரஞ்சோதியார், ஒரு சமயம், தமது அரசனுக்காக வடநாட்டிலுள்ள 'வாதாபி' என்னும் பழைய நகரம், துகளாக இடிபடும்படி யானைப்படை முதலான சேனைகளுடன் படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றார். அந்த வெற்றியின் பயனாக, அங்குள்ள பல மணிகளையும்,



நிதிக் குவைகளையும், யானைக் கூட்டங்களையும், குதிரைப் பந்திகளையும் இன்னும் எண்ணிலாதன வற்றையும், பரஞ்சோதியார் திரட்டிக்கொண்டு வந்து அரசன் முன் நின்றார். அவற்றைக் கண்ட மன்னன், பரஞ்சோதியாரின் வீரதீர வெற்றித் திறங்களையெல்லாம் கண்டு வியந்து வியந்து போற்றிப் புகழ்ந்தான்.

அப்பொழுது அங்கிருந்த மற்ற அமைச்சர்கள் மன்னனைப் பார்த்து, ''இவர் சிவனடியார், சிவத் தொண்டின் வல்லமையினால், இவரை எதிர்த்து நிற்பவர்கள் இவ்வுலகில் எவருமில்லை'' என்று எடுத்துக் கூறினார்கள். சிவபெருமானின் திருத்தொண்டர் என்பதைக் கேட்டதும் மன்னன் நடுநடுங்கி, ''அந்தோ! கெட்டேன்! இதுவரை இவரைச் சிவனடியாரென்று நான் உணர்ந்தேனில்லையே! கொடிய போர் முனையில் சென்று, போர்புரியும்படி இவரை ஏவிவிட்டேனே!'' என்று சொல்லிப்

பரஞ்சோதியாரின் காலில் விழுந்து ''அடியவரே! என் பிழையைப் பொறுத்தருளல் வேண்டும்!'' என்று வேண்டினான்.

அதற்குப் பரஞ்சோதியார், அரசனை வணங்கி, ''நான் என் கடமையைச் செய்தேன். என் உரிமைத் தொழிலை, திறமையாகச் செய்தேன், அதனால் என்ன தீங்கு உண்டு?'' என்று பணிவுடன் சொன்னார். அவருக்கு சோழமன்னன் பல நிதிக் குவைகளையும், இறையிலி மானியங்களையும் அளித்து, ''உமது மெய்ந் நிலைமையை நான் அறியாதவாறு இதுகாறும் நடந்து வந்தீர். இனிமேல் என் கருத்துக்கு இசைந்து நடக்குமாறு வேண்டுகிறேன். இனி இப்பணியைச் செய்தல் வேண்டாம். திருத்தொண்டு செய்துகொண்டிரும்'' என்று வணங்கி விடைகொடுத்தான். பரஞ்சோதியாரும் விடைபெற்று தம் சொந்த ஊருக்குச் சென்றார்.



திருச்செங்காட்டங்குடியிலுள்ள கணபதீஸ்வரப் பெருமானைப் பரஞ்சோதியார் வழிபட்டு சிவனடியார்களுக்குச் செய்யும் திருத்தொண்டை வழுவாமல் நடத்திவந்தார். குற்றமற்ற நற்குடியில் பிறந்த திருவெண்காட்டு நங்கை என்கிற அம்மையாரை இல்லக் கிழத்தியாக அடைந்து அந்தக் காதல் மனைவியோடு கூடிக் கருத்தொருமித்து, இல்லற வாழ்க்கையிலும் சிறந்து விளங்கினார்.

பரஞ்சோதியார், தினந்தோறும் சிவனடியார்களுக்கு அமுதூட்டிய பிறகுதான் தாம் உண்பார். அதையே தம்முடைய பெரும் விருப்பமாகவும் தலையாய திருத்தொண்டாகவும் நித்திய நியதியாகவும் கொண்டிருந்தார். அறுசுவைக்கறி, நெய், பால், தயிர், சர்க்கரை, பழம் முதலானவற்றோடு சிவனடியார்களுக்கு, அன்னம் படைத்து அமுதூட்டி மகிழ்வார். அதனால், அடியார்கள் எண்ணிறந்தோர், இவரிடம் வந்து திருவமுது உண்டு மகிழ்ச்சியடைவார்கள். பரஞ்சோதியாரோ அச் சிவனடியார்களின் முன்னே, தம்மை மிகவும் சிறியோராகக் கருதி மிகவும் பணிவோடு தொண்டு புரிவார். அதனால் அவருக்குச் சிறுத்தொண்டர் என்ற பெயர் வழங்கலாயிற்று.

சிறுத்தொண்டர், 'கணபதீஸ்வரம்' என்னும் ஆலயத்தில், உள்ளன்புடன் திருப்பணிகளைச் செய்து சிவனடியார்களுக்கு விருந்திட்டு மகிழ்ந்துவரும் நாட்களில் சிவபெருமானின் திருவருளினால் சிறுத்தொண்டரின் மனைவியாரான வெண்காட்டு நங்கையார் கருவுற்றார். அவருக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அப்புதல்வனுக்குச் 'சீராள தேவர்' என்னும் பெயர் சூட்டப்பட்டது. பெறுதற்கரிய மணிபோன்ற மகனை அருமையாகப் பெற்றதினால் சிறுத்தொண்டர் பெருமகிழ்ச்சியடைந்தார். அவரது உறவினர்களும் களிப்புற்றனர். அதை முன்னிட்டு திருச்செங்காட்டங்குடியில் உள்ளோர் யாவரும் நெய்யாட்டலி விழாவைக் கொண்டாடினார்கள். மங்கலக் கருவிகளும், மறைகளும் வானளாவி முழங்கச் சிறுத்தொண்டர், சிவனடியார்களுக்கு அளவிலாத பொருட்களை வாரி வாரி வழங்கினார். தம் மரபினிற்குரிய சடங்குகளைப் பத்து நாட்கள் மேன்மேலும் செய்து, மகிழ்ச்சியுடன தம் புதல்வனுக்கு திருநீற்றுக் காப்பு அணிவித்தார். அக்குழந்தைக்குப் பருவங்கள்தோறும் செய்யப்படும் சடங்குகளையெல்லாம் முறைப்படி செய்து வந்தார்.

சிறு மகன் சீராளதேவன் தன் சின்னஞ் சிறிய கால்களில் கிங்கிணிச் சதங்கை அசையும்படி நடக்கும் தளர்நடைப் பருவத்தை அடைந்தான். அப்பாலகனின் சுருள் சுருளான கூந்தல் நிறைந்த நெற்றியிலே சுட்டி தொங்கியது. இரண்டு காதுகளிலும் மணிக் குதம்பைகள் ஆடின.

கழுத்திலே கண்டசரமும், மார்பிலே ஐம்படைத் தாலியும் திகழ்ந்தன. கைகளில் வைர வளையல்கள் ஒளி வீசின. அரையிலே பொன்னரைஞாண் மின்னியது. கால்களிலே சதங்கை ஒலிக்க, பாலகன் சீராள தேவன் தெருக்களிலே விளையாடலானான். பிறைபோல வளர்ந்து அவன் மூன்றாவது வயதை அடைந்தபோது, அவனது பெற்றோர்கள் 'மயிர் நீக்கும் மணவினை' என்னும் மங்கலச் சடங்கை செய்தார்கள். அதன் பிறகு, உரிய பருவத்தில் கலைகள் பயில தங்கள் சிறு மகனைத் தக்கதொரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

அந்நாளில் திருச்செங்காட்டங்குடிக்கு, திருஞான சம்பந்தர் வந்தார். அவரது வருகையைக் கேள்வியுற்ற சிறுத்தொண்டர் அவரை எதிர்கொண்டு அழைத்து வந்தார். அன்பில் மூழ்கிப் பலவித உபசாரங்களைச் செய்தார். திருஞான சம்பந்தர், பெருங் காதற் பண்புடைய சிறுத்தொண்டனாருடன் சிலகாலம் தங்கியிருந்தார். பிறகு அவர் நட்பின் நயத்தோடு சிறுத் தொண்டரைத் தமது திருப்பதிகத்தில் சிறப்பித்துப் பாடி அங்கிருந்து விடைபெற்றுச் சென்றார்.

சிறுத்தொண்டரின் திருத்தொண்டு வடகயிலையில் உள்ள சிவபெருமானுக்கும் எட்டியது. உடனே சிவபெருமான் சிறுத்தொண்டரின் மெய்யன்பைத் தாமே நுகர்ந்து அருள்புரிவதற்காகப் ★**பயிரவச் சங்கமர் திருவேடங்** கொண்டு, திருக்கயிலையை விட்டுப் புறப்பட்டார். கொன்றை மலரணிந்த தமது நீண்ட செஞ்சடையைக் கடல் நீர் உண்ட காளமேகச் சுருள் போல் நீண்டு சுருண்டு, இருண்டு, அடர்ந்து, நெறிப்பும் அசைவும் பொருந்த அழகுபடப் பரப்பி முடித்தார். கருமேகத்தினிடையில் விண்மீன்கள் தோன்றுவதுபோல், அவரது சடை முடியில் தும்பை மலர்கள் இடையிடையே ஒளி வீசின. திருமுடியிலுள்ள அந்தி இளம்பிறையைச் சிறு பிறையாக்கி, செம்பவள ஒளிவீசும் திருநெற்றியில் பிறை நிலாப் பொட்டாக அணிந்து கொண்டார். சூரிய மண்டலமும், சந்திர மண்டலமும், அக்னி மண்டலமும், ஒருங்கே சேர்ந்ததுபோல், காதுகளிலே, சங்கக் குழையினிடையே செவ்வரத்த மலர்களை இரு பக்கங்களிலும் செருகினார். திருக்கண்டத்திலுள்ள விஷத்தை மறைத்தருளும் பொருட்டுப் பாற்கடலில் தோன்றிய அமுதக் குமிழிகளைக் கோர்த்தணிந்தாற் போலப் பளிங்கு மணி மாலையைக் கழுத்தில் அணிந்தார். செக்கர் வானத்தை அந்தி இருள் சூழ்வதுபோல் அழகான செம்மேனியின் மேல் யானைத்தோல் சட்டையாக விளங்கியது.

★ பயிரவச் சங்கமர் வேடம் : அடியார் வேடம்.

எலும்பு மணிகளால் புனைந்த வெற்றிமாலை, முத்துமாலை, கையில் கங்கணம் இடையில் அரைஞாண், காலில் காலணி ஆகியவைகள் விளங்கின. அவர், சிறுத்தொண்டருக்காகப் புவிமேல் வந்து அருள்புரியும் பேரருளின் தன்மையைக் கண்டு, ''இறைவரது திருவருளினையே விரும்பிப் போற்றுவீர், அன்பின் வழியே, நிற்கக் கடவீர்!'' என்று முழங்குவதுபோல, அவரது திருவடிகளில், சிலம்புகள் ஒலித்தன. கபாலம் ஏந்திய அழகிய இடது கையினிலே அணைத்த மூவிலைச் சூலம் திருத்தோளின் மேலே விளங்கியது. வலது திருக்கரம் உடுக்கையை ஏந்தி ஒலி செய்தது. அவரது பாதத் தாமரைகளை அன்னை பூமியும் தாங்கிக் கொண்டாள். இவ்வாறு பைரவச் சங்கமத் திருவேடம் பூண்டுகொண்ட சிவபெருமான், அருள் பொழியும் புன்முறுவல் முகத்தோடு மும்மலங்களையும் கெடுக்கும் முத்தலைச் சூலத்தின் ஒளியோடு, அன்புகொண்ட தெம்போடு, உலகமே வியக்க உள்ளம் பொங்க வண்டமிழ் நாட்டுத் திருச்செங்காட்டங்குடிக்கு வந்து சேர்ந்தார்.

அடங்காத பெரும் பசியால் பீடிக்கப்பட்டவரைப்போல், அவர் செல்லும் வழியில் தம் எதிரில் கண்டவர்களை எல்லாம் நோக்கி, ''சிறுத்தொண்டர் வீடு எங்கே? எங்கே?'' என்று விசாரித்துக் கொண்டே வந்தார். சிறுத்தொண்டரின் வீட்டையடைந்து, வாசலிலே நின்றார். ''சிவத்தொண்டர்களுக்குத் தினந்தோறும் சோறுபோடும் சிறுத்தொண்டர் இந்த வீட்டில் இருக்கிறாரா?'' என்று கேட்டார்.

அப்பொழுது தாதியர் 'சந்தன நங்கையர்' என்பவள் ''இங்கே நம்மிடம் வந்திருப்பவர் மாபெரும் தவசியேயாகும்!'' என்று நினைத்து முன்னேவந்து பைரவ வேடதாரியின் காலடியில் விழுந்து வணங்கி ''எங்கள் நாயனார் அடியவர்களைத் தேடி வெளியே சென்றிருக்கிறார். எம்மை ஆளவந்த அடியாரே! உள்ளே எழுந்தருளும்!'' என்றாள்.

அதற்கு வயிரவர் அந்த இளம்பெண்ணின் முகத்தை நோக்கி, ''பெண்களுள்ள இடத்தில் யாம் தனித்துப் புகுவதில்லை'' என்று கூறினார். அந்த வாசகம் சிறுத்தொண்டரின் மனைவியான திருவெண்காட்டு நங்கையரின் காதிற்கும் எட்டியது. உடனே அவர், ''இச்சிவனடியார் போய்விடுவாரோ?'' என்றெண்ணிப் பயந்து வாசலுக்கு ஓடிவந்தார். அங்கு அம்மையார் வயிரவச் சங்கமரை நோக்கி, ''எமது பெருமானே! அடியேனுடைய நாயகர், சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விக்கும் நியமம் உடையவர். இன்று ஓர் அடியாரும் இங்கு வரவில்லை.

அதனால் அவர் அடியாரைத் தேடி வெளியே போயிருக்கிறார். இப்பொழுது வந்துவிடுவார். அடிகள், புதிதாக எழுந்தருளி இருக்கிறீர்; உம் திருவேடத்தைப் பார்த்தால் என் நாயகர் பெரியபேறு என்று கருதி மிகவும் மகிழ்வார்! அவர் வருவதற்கும் தாமதமாகாது! ஆகையால் அடிகளே! தாங்கள் வீட்டினுள்ளே வந்து இருக்கலாம்'' என்று நங்கையார் கெஞ்சினார்.

அவரை வயிரவச் சங்கமர் ஏறிட்டு நோக்கி, ''ஒப்பற்ற இல்லறத்தை வழுவாது காத்து நடத்தும் அம்மையாரே! நாமிருப்பது வடதேசம், சிறுத்தொண்டரைக் காணவே வந்தோம். அவரில்லாத வேளையில் இங்கே தங்கமாட்டோம். ஆகவே நாம் போய் கணபதீஸ்வரத்தில் திரு ஆத்தியின் கீழ் தங்கியிருப்போம். சிறுத்தொண்டர் வந்ததும், இதைத் தெரிவியுங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்று கணபதீஸ்வரத்தையடைந்து, திருஆத்தியின்கீழ் அமர்ந்திருந்தார்.

வெளியே சென்றிருந்த சிறுத்தொண்டரோ, சிவனடியார்களைத் தேடியலைந்தும் கிடைக்கப் பெறாத பெருந் துயரோடு வீட்டுக்குத் திரும்பி வந்தார். தம் இன்ப மனைவியாரிடம் வீண் அலைச்சலையும் கூறினார். அதைக் கேட்ட அவர் மனைவியார் ''அன்புத் திருவேடம் தாங்கி அடியவர் ஒருவர் வந்திருக்கிறார்!'' என்று ஆனந்தத்தோடு கூறினார். அதைக் கேட்டதும் சிறுத்தொண்டருக்கு சித்தமெல்லாம் குளிர்ந்தது. ''அடியேன் உய்ந்தேன்! அந்த அடியார் எங்கு இருக்கிறார் சொல்!'' என்று சிறுத்தொண்டர் பரபரப்புடன் கேட்டார். அதற்கு அவர் மனைவியார், ''சூலமும் கையிலே கபாலமும் ஏந்திய ஒரு சிவனடியார் வந்தார். வடதேசத்து வாசியென்றார். நான் என்ன சொல்லியும் கேளாமல் இங்கு இருக்க முடியாதென்று மறுத்துவிட்டு, அந்த பயிரவ சந்நியாசி கணபதீஸ்வரத்து ஆலயத்தில் ஆத்தி மரத்தடியில் காத்திருப்பதாகச் சொல்லிவிட்டுப் போனார்!'' என்றார். அவ்வடியாரைப் பற்றிய முழு விவரத்தையும் தம் மனைவியார் எடுத்துக் கூறியதும், அதன்படியே திருவாத்தி மரத்தின் கீழ் வீற்றிருக்கும் அடியாரை தரிசித்து, உபசரித்து வர சிறுத்தொண்டர் விரைந்து சென்றார். சிவத் தொண்டரைக் கண்டார்; சிரம்தாழ்த்தி அவர் முன் பணிந்தார். அவரைக் கண்ட பயிரவச் சங்கமர், ''பெரிய சிறுத்தொண்டர் என்பவர் நீர்தாமோ?'' என்று வினவினார்.

அதற்குச் சிறுத்தொண்டர் அவரை நோக்கி, ''திருநீற்றுத் தொண்டர்களின் முன் நின்று துதிக்கவும் நான் தகுதியற்றவனா யிருந்தும், சிவனடியார்களின் கருணை

மேம்பாட்டினால் அந்தப் பெயர் கொண்டே அழைக்கப்படுகின்றேன்!'' என்று பணிவுடன் தொழுது கூறினார். ''என் வழக்கப்படி இன்று சிவனடியார்களை என் இல்லத்திற்கு அமுது அருந்துவதற்கு அழைத்துச் செல்ல எங்கெங்கோ தேடியலைந்தேன். ஒரு சிவனடியாரைக் கூடக் காணமுடியாமல் மனம் தளர்ந்தேன். கடைசியில் நான் செய்த முன்னைப் பயன்தான் என்னை இங்கு கொண்டுவந்து, தங்கள் முன் நிறுத்தி வைத்திருக்கிறது! அதனால் மறுக்காமல், அருள்கூர்ந்து இப்போதே என் வீட்டிற்கு வந்து திருவமுது செய்ய வேண்டும்!'' என்று மிகக் கெஞ்சலாகப் பணிந்து வேண்டினார்.

பயிரவச் சங்கமர் வேடத்தில் வந்த சிவபெருமான் புன்சிரிப்புப் பூத்து, ''தவச்செல்வரே! உத்திராபதியான வடதேசத்தில் வசிக்கும் நாம் இன்று உம்மைக் காணவே இங்கு வந்தோம். எமக்கு விருப்பமான அமுதூட்ட உம்மால் முடியாது. அச்செய்கை உமக்கு அரிதாகும்!'' என்றார்.

''பெருந்தவங்கொண்டவரே! வெறும் உபசரிப்புக்காக என் வீட்டில் விருந்துண்ண உம்மை நான் அழைப்பேனா? ஆலோசித்தே தங்களை அன்போடு அழைக்கிறேன். தாங்கள் விரும்பியுண்ணும் உணவு முறையைச் சொல்லுங்கள்! அவ்வாறே சமைத்து விருந்தூட்டுகிறேன். சிவனடியார்கள் கிடைக்கப்பெற்றால் அவர்களுக்கு விருந்தூட்ட என்னால் தேடிப் பெறமுடியாத அருமையான பொருள் எதுவும் இல்லை!'' என்றார் சிறுத்தொண்டர்: 'அரியதில்லை' என்று அவர் கூறக்கேட்டதுமே பைரவ வேடதாரி அவரை ஏறிட்டுப் பார்த்து ''உள்ளன்புள்ள தொண்டரே! நான உண்பதைச் சொல்லுகிறேன் கேளும்! ஆறுமாதகாலம் முடிந்தால் ஒருபோது பசுமாமிசம் சாப்பிடுவதே என் வழக்கம்! அதற்குரிய நாள் இன்றையத் தினமாகும். ஆனால் உமக்காக நான் அதை மாற்றிக் கொள்ள முடியுமா? இல்லை உம்மால்தான் பசுமாமிசம் படைத்திட முடியுமா? ஆகவே எனக்குப் பசுமாமிசம் சமைத்து ஊட்டுவது உமக்கு அரிதாகும்!'' என்றார்.

அதைக் கேட்டதும் சிறுத்தொண்டர் இன்னும் உற்சாகமடைந்து, ''ஐயனே! மிகவும் நன்று! பசுக்கூட்டம், ஆட்டுக் கூட்டம், எருமைக்கூட்டம் ஆகிய மூவகை நிரையும் அடையப் பெற்றவன் நான்! எவ்விதக் குறைபாடுமின்றி நிறைவாழ்வு வாழ்பவன் நான்! ஆலமுண்ட நீலகண்டரின் அடியாராகிய நீர் சாப்பிட விரும்புவது இன்ன பசு என்று மட்டும் சொல்லியருளும்! உடனே நான் வீட்டுக்குச் சென்று, அந்த அமுது சமைக்க விரைவில் ஆவன செய்வேன். பசு

மாமிசம் ஆக்கியதும் காலம் தப்பாமல் விரைந்து வருவேன்!'' என்று கையெடுத்துக் கும்பிட்டு அவரது கட்டளைக்காகக் காத்து நின்றார்.

அடியார்க்கும் அடியாராயிருக்கும் அவரது அரும் பண்பையும் அன்பையும் பயிரவச் சங்கம வேடதாரியான சிவபெருமான் தம் மனதிற்குள்ளேயே வியந்துகொண்டு அவரை நோக்கி, ''அடியவர்பால் அன்புள்ளம் கொண்டவரே! நட்பு மிகுந்தவரே! யாம் உண்ண நீர் தேர்ந்தெடுக்கும் பசு, நரப் பசுவாக இருக்க வேண்டும்! அப்பசு ஐந்து வயதே நிரம்பப் பெற்று சின்னஞ்சிறு பாலகனாக இருக்கவேண்டும்! அப்பாலகனுக்கு அவயவங்களில் சிறு பழுதும் அமையாதிருத்தல் வேண்டும். இத்தனைக்கும் மேலாக இன்னொன்றும் நான் சொல்லவேண்டும். அந்தச் சொல்லானது, வெந்திருக்கும் புண்ணிலே மேலும் வேல்கொண்டு குத்துவது போலிருக்கும்!'' என்றார். அதைக் கேட்டும் சிறுத்தொண்டர் சிறிதும் மனம் தளராமல், ''ஐயனே! அரியது எதுவும் இல்லை! தங்கள் ஆன்மதிருப்தியே அடியேனின் திருப்தி! தாமதியாமல் கூறியருளும்!'' என்று துரிதப்படுத்தியவராய் துதித்துப் பணிந்து நின்றார்.

இறையவராகிய பயிரவச் சங்கமர் புன்முறுவலுடன் நோக்கி, ''எனக்குச் சமைக்கப்படும் கறி, உயர் குடியில் பிறந்த ஒரே மகனுடைய உடல் கறியாக இருக்கவேண்டும். அது ஒரு ஐந்து வயதுச் சிறுவனின் கறியாகவே இருக்கவேண்டும்! அந்தச் சிறுவனின் உடலை அறுத்துக் கறி சமைக்க, அவனது தாயாரின் அனுமதியும் வேண்டும். அவன் தாயாரே அவனைப் பிடித்துக் கொள்ள, அவன் தந்தையாரே அவன் உடலை அரிந்து எடுக்கவேண்டும். அப்படி எடுக்கப்பட்ட உடல் துண்டுகளை அப்பாலகனின் பெற்றோர்களே மனமுவந்து பக்குவமாகச் சமைக்க வேண்டும்! அவ்வாறு தயாரிக்கப்பட்ட நரமாமிசத்தைத்தான் நாம் இலையில் இட்டு உண்போம்!'' என்றார்.

அதைக் கேட்டும் சிறுத்தொண்டர் சித்தம் கலங்கவில்லை, சிந்திக்க சிறு அவகாசமும் எடுத்துக் கொள்ளவில்லை! உடனே! அவர் பைரவ வேடதாரியைப் பார்த்து, ''தங்கள் திருவுள்ளம் திருவமுது செய்ய இசைந்தால் இதுவும் எனக்குப் பெரிதில்லை! இப்பொழுதே செல்கிறேன்! இன்னும் சில வினாடிகளே பொறுத்திருப்பீர்!'' என்று அவருடைய திருவடிகளைத் தொட்டுத் தம் கண்களிலே ஒற்றிக்கொண்டு, பெரும்களிப்போடும் அன்போடும் விரைந்து சென்று தம் வீட்டினுள் புகுந்தார்.

வீட்டில் காதலும் கற்பும் மிகுந்த அவருடைய மனைவி திருவெண்காட்டு நங்கையார் கணவரின் வருகையை எதிர்நோக்கி ஆவலோடு காத்து நின்றார். அவர் முன்னால் இன்பம் பெருக மலர்ந்த முகத்தோடு சிறுத்தொண்டர் வந்தார். அதைக் கண்டதும் நங்கையார் தன் கணவரின் காலடிகளை வணங்கிப் பிறகு அவரது மலர்ந்த முகத்தை ஏறிட்டு நோக்கி, ''தவசியார் எங்கே?'' என்று வினவினார்.

சிறுத்தொண்ட வள்ளலார் தம் மனைவியாரை நோக்கி, ''என்னைத் தேடி வந்த அந்த மாபெரும் தவசியார் நம் வீட்டில் விருந்துண்ண சம்மதித்தார். ஆனால் ஒரு குடிக்கு ஒரு மகனாகவும் ஐந்து வயதுள்ள பாலகனாயும், உறுப்பில் ஒரு குறைபாடும் இல்லாதவனாயும் உள்ள ஒரு நல்ல பிள்ளையை அவனுடைய தாயாரே பிடித்துக் கொள்ள அவனுடைய தந்தையாரே கத்திகொண்டு அவனுடைய உடலை அறுத்து பக்குவமாய் நரமாமிசம் சமைத்து வைத்தால்தான் அத்தவசியார் சாப்பிடுவாராம்!'' என்றார்.

அவருடைய கற்பரசியான மனைவியார் அவரை நேரிட்டு நோக்கி, ''அந்தப் பெரிய பயிரவச் சங்கம சிவனடியார் விருந்துண்ண நாம் வேண்டியதைச் செய்வோம். ஆனால் ஒரு குடிக்கு ஒரு மகனாய் பிறந்த சின்னஞ்சிறு பாலகனை நாம் எப்படிப் பெறுவது?'' என்று வணங்கிக் கேட்டார். சிறுத்தொண்டர் தம் மனைவியின் முகம் நோக்கி, ''என் அன்புள்ள நாயகியே, அத்தகையதொரு பாலகனை, பணம் கொடுத்தாலும் நமக்குக் கொடுக்கக் கூடிய பெற்றோர்கள் இருப்பார்கள்! ஆனால் அந்தப் பாலகனை கட்டிக்காத்து, வளர்த்துக் கொள்ள ஒருவருக்கு உரிமை கொடுப்பார்களே தவிர அந்தப் பாலகனை வெட்டிக் கொன்று விருந்தாக உண்டுகொள்ளச் செய்ய, கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்தாலும் மனம் வருமா, நீயே சொல்! மேலும் பெற்ற இளம் பிள்ளையை தாயே அறுத்துச் சமைக்கக் கொடுப்பதுண்டா? அப்படிப்பட்ட தந்தையும் இந்த உலகில் இல்லை. தாயாரும் இந்த பூமியில் இல்லை, ஏன் அந்த சிந்தையே இங்கு எவருக்கும் இல்லை! ஆதலால் நாயகியே! இனி நாம் காலம் தாழ்த்துவதில் காரணமே இல்லை! என் நித்திய நியதிப்படி இன்று பைரவச் சிவனடியாருக்கு விருந்திட்டு நான் உய்ய வேண்டுமென்றால் நம் பாலகனின் உடலை அரிந்து கறி சமைப்பதைத் தவிர வேறு வழியே இல்லை! அதனால் நீ பெற்ற பிள்ளையை அழைத்து வருவோம்!'' என்றார்.

அதைக் கேட்ட அந்தக் கற்புத்திரு உருவம் கணவன் சொல் மாறாத அன்புப் பெருந்தெய்வம், ''நம் சிவபெருமானின்

அடியார் காலம் தாழ்த்தாமல் விருந்துண்டு முகம் மலர்வதைக் காண்பதே நன்று; அதனால் நம்மைக் காப்பதற்காகப் பிறந்த கண்மணியை இப்பொழுதே சென்று பள்ளியிலிருந்து அழைத்து வாருங்கள்!'' என்று வேகமாகக் கூறிவிட்டு விரைவாக எழுந்து, வீட்டினுள் புகுந்து, வேண்டிய காரியங்களைச் செய்யத் தலைப்பட்டார்.

காதல் மனைவியின் சொல்லைக் கேட்டுக் கணவனார் தம் உள்ளமெல்லாம் துள்ளிக் குதிக்கத் தம் மழலை மொழி புதல்வன் படிக்கும் பள்ளிக்கூடம் நோக்கி ஓடிச் சென்றார். அங்கே – பாதச் சதங்கைகள் ஒலிக்க – அவரது பத்தரைமாற்றுச் செல்வம் ஓடோடியும் வந்து தம்மைக் கட்டித் தழுவக் கண்டார். அவனை அவர் அள்ளியெடுத்துத் தம் தோளில் போட்டுக் கொண்டு, வீட்டிற்கு விரைந்து வந்தார். அவர்முன் அவர் மனைவியார் வந்து தன் மைந்தனை வாங்கி அப்பாலகனின் மயிர் திருத்தி, முகம் துடைத்து, ஒப்பற்ற அவன் காதணியிலும் அரைநாணிலும் உள்ள அழுக்கை நீக்கி, கண்மையை ஒதுக்கி, ஆடையையும் ஒரு விநாடியில் எடுத்து நீக்கி, திருமஞ்சனம் ஆட்டுவித்தார். பிறகு குழந்தையை நன்றாக அலங்கரித்துச் சிறுத்தொண்டரின் கையிலும் கொடுத்தார். சிறுத்தொண்டரோ தம் மெய்யெலாம் சிலிர்க்க அந்தப் பொய்யறியாத புனிதச் செல்வனை, கடைசி முறையாகக் கட்டிக் கொண்டார். ஆனால் அந்தப் பச்சிளம் குழந்தை அடியாரின் கறியமுதுக்காகும் என்ற எண்ணம் இருந்ததால், அதை அசுத்தப் படுத்தக் கூடாது என்று அச்சமுற்று அதை உச்சிமோந்து பார்க்கவில்லை. கட்டியணைத்து மாறி மாறி முத்தமாரியும் பொழியவில்லை.

அதன் பிறகு பெற்றோர் இருவரும் வழக்கமாகச் சமைக்கும் அடுக்களைக்குச் செல்லாமல் உலகத்தவர் அறியாவண்ணம் வேறொரு மறைவிடம் நோக்கிச் சென்று தாயார் பாத்திரங்களை நன்றாகக் கழுவிக் கொண்டு வைத்தார். பிறகு பிள்ளையை அறுத்துக் கறியமுது ஆக்குவதற்காகத் தந்தையார் அவன் தலையை பிடித்துக் கொண்டார். மழலை மொழிக் குழந்தையின் கால்கள் இரண்டையும் தாயார் தன் மடியினிடையே இடுக்கிக் கொண்டு, கனிவாய் மைந்தனின் கைகள் இரண்டையும் தம் கைகளால் இறுக்கிப் பிடித்துக் கொண்டார். குழந்தையோ தன் பெற்றோர் தன்னைக் கொஞ்சி மகிழ்கிறார்கள் என்று நினைத்து தானும் மகிழ்ந்து கலகலவென்று சிரித்தான். அப்பாலகனின் தலையைத் தந்தையார் ஒருகையிலே தாங்கிக் கொள்ள, தாயார் அவனது உடல் அசையா வண்ணம் பிடித்துக் கொள்ள தந்தையார் மறுகையால் வாளினை ஏந்தி மளமளவென்று தம் மகனின் உடலையரிந்தார். கறியினை

அரிந்துகொண்டே, சிறுத்தொண்டர், தம் மனைவியைப் பார்த்து ''மெய்த் தன்மையை எனக்குத் தந்த இவனல்லவா என் பெருமைக்குரிய புத்திரன்!'' என்று கூறி மகிழ்ந்தார். அதைக் கேட்ட அவர் மனைவியார் ''என் கணவரின் அருமை உயிரை எனக்குத் தந்த இவனல்லவா என் கண்ணான செல்வன்?'' என்று கூறினாள். இப்படி இருவர் மனம் பேருவகை எய்தியவாறே இருவரும் அகம் மலர்ந்து கறிகளை அரிந்து அரிந்து பாத்திரங்களில் போட்டுக் கொண்டிருந்தார்கள். ''அரிந்து எடுத்த தலையின் இறைச்சி அடியாரின் திருவமுதுக்கு ஆகாது!'' என்று முடிவு செய்து அக்கறிகளைக் கழித்து, மறைத்து நீக்கும் பொருட்டு திருவெண்காட்டு நங்கையார் அவற்றை தாதி சந்தனத்தாளின் கையிற்கொடுத்து அனுப்பிவிட்டு மற்றைய உறுப்புக்களின் இறைச்சிகளெல்லாவற்றையும் கொத்தியும், அரிந்தும், எலும்பினுள்ளே உள்ள மூளைப் பகுதியை திறந்து எடுத்தும், கறியாக்குவதற்கு வேண்டிய பலகாயங்களை, அரைத்துக் கூட்டியும், விரைவில் ஒரு பாத்திரத்திலிட்டு, அடுப்பிலேற்றி வேகவைத்து சமைத்தார். பிறகு கறி வெந்ததும் பக்குவம் தெரிந்து கீழே இறக்கி வேறொரு பாத்திரத்தில் இட்டுத் தாளித்தார். பிறகு மேலும் பலவாகிய பொரிக் கறிகளையும் சமைத்து, வேகமாகச் சோறும் சமைத்துத் தம் கணவருக்கு அறிவித்தார்.

அதைக் கேட்டதும், சிறுத்தொண்டர் முன்னிலும் ஆர்வம் பெருகி மகிழ்ந்து பொங்க விரைந்து சென்று, ஆத்தி மரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் பயிரவச் சங்கமரை அடைந்து, அவரை நோக்கி வணங்கி, ''அடியேனை நீர் தேடி வந்தீர்! என் வீட்டில் நீர் அமுதுண்ண வேண்டுமென நான் மிகவும் வேண்டினேன்! சமைப்பதற்குக் காலதாமதமாகி நீர் பசித்திருக்க நேர்ந்தது என்றாலும் உம் விருப்பப்படியே கறியமுது ஆக்கியுள்ளேன்! அடியேனது விருப்பம் நிறைவேறும்படி இனியும் காலம் தாழ்த்தாது எழுந்தருளி வந்து திருவமுது செய்தருள வேண்டும்!'' என்று வேண்டினார்! ''சரி, சிறுத்தொண்டரே! போவோம்!'' என்று சங்கமரும் புறப்பட்டார். வறியவன் பெருநிதி பெற்றதுபோல் சிறுத்தொண்டர் மகிழ்ந்து அவரை அழைத்துச் சென்றார். இருவரும் வீடு வந்து சேர்ந்தனர். வீட்டிலே சிறுத்தொண்டரும் அவர் மனைவியாரும் பயிரவரை மலர் மணம் கமழும் ஆசனத்தில் அமரச் செய்து கரக நீரால் திருவடிகளைக் கழுவிப் பாத பூஜை செய்து, விதிப்படி வணங்கி வழிபட்டார்கள். பின் அவர் விருப்பப்படி முக்காலியின் மேல் வெள்ளாடையை விரித்து, அதன் மேல் உண்கலத்தை வைத்துத் திருத்தி, செந்நெற்சோறோடு கறியமுது வகைகள் தெரியும்படி படைத்தார்கள்.

அதைக் கண்ட பைரவ சங்கமர், ‘‘யாம் சொல்லியபடி நரப் பசுவினது உறுப்புகள் எல்லாவற்றையும் சுவைபடச் சமைத்து வைத்திருக்கிறீர்களா?’’ என்று கேட்டார்.

உடனே திருவெண்காட்டு நங்கையார், ‘‘தலையிறைச்சி திருவமுதுக்கு ஆகாது என்று எண்ணி, அதை மட்டும் கழித்து விட்டோம்’’ என்று கூறினார்.

‘‘அதையும் யாம் உண்போம்!’’ என்றார் பைரவர்.

சிறுத்தொண்டரும் அவர் மனைவியாரும் சிந்தை கலங்கித் திகைத்தார்கள். அப்போது தாதியாகிய சந்தன நங்கையார் ‘‘நான் தலையின் இறைச்சியை அடியவர் திருவமுது செய்ய நினைக்கலாம் என்று கருதி முன்னமே அதைக் கறியமுதாக சமைத்து வைத்திருக்கிறேன்’’ என்று கூறி, அதை எடுத்து வந்து கொடுத்தாள். உடனே முகம் மலர்ந்து அந்தத் தலையிறைச்சியை திருவெண்காட்டு நங்கையார் வாங்கி, மகிழ்ச்சியோடு சிவபெருமானாராகிய பைரவச் சங்கமருக்குப் பரிமாறினார். சிறுத் தொண்டர் வணங்கி நின்றார்.

பைரவச் சங்கமரோ, சிறுத்தொண்டரை நோக்கி, ‘‘சிவனடியார்கள் யாரேனும் அருகிலிருந்தால் உடனே அழைத்து வாருங்கள். எம்மால் தனியாக உண்ண இயலாது!’’ என்றார்.

‘‘ஆ! அடியார் அமுது செய்ய இன்னும் ஓர் இடையூறோ!’’ என்று சிறுத்தொண்டர் நினைத்து ஏங்கி., வெளியே ஓடி அலைந்து திரிந்து எங்கு தேடியும் சிவனடியார் எவரும் கிடைக்கப் பெறாமல் வாடிய முகத்தோடு வீட்டிற்குத் திரும்பி வந்து சங்கமரிடம் ‘‘நெற்றியில் திருநீறு அணிந்த சிவனடியார் ஒருவரையும் காணவில்லையே; நான் என் செய்வேன்? உலகத்தில் திருநீறு அணிபவர்களுக்கே அடியேன் சோறு இடுவது வழக்கம்!’’ என்று கூறினார்.

அதைக் கேட்டதும் சங்கமர் சிரித்து ‘‘உம்மைப் போல் திருநீறு தரித்த அடியவர்களும் உண்டோ? நீரே என்னுடனிருந்து உண்பீராக!’’ என்று கூறி, திருவெண்காட்டு அம்மையாரை நோக்கி, ‘‘இவருக்கு வேறொரு பரிகலம் திருத்தி இறைச்சியும் அன்னமும் கலந்து நமக்குப் பரிமாறியதிலிருந்து எடுத்து இவருக்கும் பரிமாறுக!’’ என்று கூறினார்.

அவ்வம்மையாரும் அங்ஙனமே எடுத்துப் படைத்தார்.

உடனே சிறுத்தொண்டர் பைரவச் சங்கமரை உண்பிக்க வேண்டி முன்னதாக தாம் விரைந்து, உணவுண்ணப் புகுந்தார்.

அதைக் கண்ட பைரவச் சங்கமர் ‘‘நாம் உண்பதற்கு முன் நீர் உண்ணப் புகுந்த காரணம் என்ன? நாமோ ஆறு மாதங்கள் கழித்து உணவு உண்போம்! நீரோ நாள்தோறும் உண்பவர்! அப்படியிருக்க நீர் எமக்கு முன்னதாக உண்ணப் புகுந்தது என்ன? சற்றுப் பொறும்! உமக்கொரு மைந்தன் இருந்தால் நம்முடன் இருந்து உணவுண்ண உம்முடைய மகனை உடனே அழையும்!’’ என்றார்.

அதற்கு சிறுத்தொண்டர், ‘‘எனக்கொரு புதல்வன் உண்டு! ஆனால் அவன் இப்பொழுது உதவமாட்டான்!’’ என்றார்.

‘‘உம்மகன் இங்கு வந்தால்தான் நாம் அமுது உண்ண முடியும். ஆகவே அவனைத்தேடி அழைத்து வாரும்’’ என்றார் சங்கமர். அதைக் கேட்ட சிறுத்தொண்டர், ‘‘நாம் என்ன செய்தால்தான் இவர் திருவமுது செய்தருள்வார்?’’ என்று யோசித்துப் பிறகு தம் மனைவியாரோடு வெளியே வாசலுக்குச் சென்று, ‘‘மைந்தா, வருவாய்!’’ என்று கூவியழைத்தார். அவருடைய மனைவியாரும் தன் கணவரைப் பின்பற்றி, ‘‘கண்மணியே! சீராளா! ஓடிவா! சிவனடியார் நாம் உய்யும்படி உடன் உண்ண உன்னை அழைக்கின்றார், ஓடிவா!’’ என்று கூவியழைத்து ஓலமிட்டார்.

அப்போது சிவபெருமானுடைய திருவருளினால் பாலகன் சீராளதேவன் பள்ளிக்கூடத்தினின்றும் ஓடி வரும் பிள்ளைபோல் எதிரே ஓடிவந்தான். அம்மையார் அப்பாலகனைத் தன் கைகளால் எடுத்துக் கட்டித் தழுவிக்கொண்டு பெருங் களிப்போடு தம் கணவர் கையில் கொடுத்தார். சிறுத்தொண்டர் மனமகிழ்ச்சி அடைந்து ‘‘இனிச் சிவனடியார் திருவமுது உண்ண தடையேயில்லை’’ என்ற துணிவினால் மைந்தனைத் தூக்கிக் கொண்டு அடியவரைத் திருவமுது செய்விப்பதற்கு உள்ளே வந்தார். ஆனால் அதற்கு முன்பே பைரவச் சங்கமராக வந்த சிவபெருமான், மறைந்து விட்டார். சிறுத்தொண்டர் அவரைக் காணாது மிகவும் சிந்தை கலங்கினார்; திகைத்தார்; மயக்கமுற்றார்; மண்ணிலே விழுந்தார். பின் எழுந்து பரிகலத்திலே இறைச்சிக் கறியமுதும் காணாமல் மறைந்து போயிருப்பதைக் கண்டு மேலும் அச்சமடைந்தார். ‘‘நான் மகிழ அமுதுண்ணாமல் பைரவச் சங்கமர் எங்கே சென்றார்?’’ என்று சிந்தை மயங்கியவாறே அவரைத் தேடி வெளியே வந்தார்.


மறைந்தருளிய பைரவச் சங்கமராகிய சிவபெருமான் உமாதேவியாரோடும், மைந்தன் முருகப்பெருமானோடும்

வெள்விடையின் மேல் ஆகாய வீதியில் வெளிப்பட்டு எழுந்தருளி, பூதகண நாதரும் தேவர்களும் முனிவர்களும் போற்றியிசைக்க, சோமாஸ்கந்தப் பெருமானாகக் காட்சியளித்தார்.

அதைச் சிறுத்தொண்டரும், அவர் மனைவியாரும், மைந்தரும், தாதியரும் கண்டு தரிசித்துப் பரவசமடைந்து தங்களது என்பும், மனமும் கரைந்துருக, நிலமுற வீழ்ந்து வணங்கியெழுந்து நின்று துதித்தார்கள். சிவபெருமானும், உமாதேவியாரும் வெற்றி பொருந்திய நீண்ட வேலினை ஏந்திய முருகப்பெருமானும் தங்கள் திருவடிகளின் கீழ் வீழ்ந்து துதித்து நின்ற சிறுத்தொண்டரையும், அவரது மனைவி திருவெண்காட்டு நங்கையாரையும், பிள்ளை சீராள தேவரையும் சந்தனத் தாதியையும் என்றும் எங்களைப் பிரியாதே வணங்கி இன்புற்றிருக்குமாறு தங்கள் சிவலோகத்துக்குத் தங்களுடனே அழைத்துக் கொண்டு சென்றார்கள். சிவனடியாருக்கு அமுதூட்டத் தம் ஒரே மைந்தனையும் அறுத்து கறியமுதாக்கிப் பெரும் பேறு பெற்ற சிறுத்தொண்டரின் சேவடிகளை வணங்கிவிட்டு அடுத்ததாக கழறிற்றறிவாரின் திருத்தொண்டை விளம்புகிறேன்.

''செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டர்க்கு அடியேன்''

— சுந்தரர்



42. கழறிற்றறிவார் நாயனார்

திருமகள் வீற்றிருக்கும் பெருஞ்சிறப்பும், மிகப் பழமையும் உடையது மலைநாடு! அந்நாட்டிலே, பழந்தமிழ்ப் பாடல்களில் புகழ்ந்து கூறப்படும் சேர மன்னர் மரபினர் வழிவழி வீற்றிருந்து செங்கோல் நடத்தும் சிறந்த நகரம் ★கொடுங்கோளூர் என்பது ஆகும். அங்குச் சிவபெருமான் வீற்றிருக்கும் திருவஞ்சைக்களம் என்னும் திருக்கோயில் உளது.



கொடுங்கோளூர்ச் சாலையில், பயிலப்படும் வேத ஒலியும், யானைக் கன்றுகளின் பிளிறல் ஒலியும்,

★ கொடுங்கோளூர் : இது ஊரின் பெயர். இது திருச்சூர் நிலையத்திலிருந்து, கற்சாலை வழியே சுமார் 23 மைலில் உள்ள புல்லாற்றுக்கரை என்னும் கடற்கழித் தோணித்துறைக்குச் சென்று, அங்கிருந்து நாட்டுத்தோணி மூலம் 2 மைல் அளவில் திருவஞ்சைக் களத்துத் துறையினை அடையத்தக்கது.

சோலைகளில் மெல்லிய வண்டுகள் பண்பாடும் மெல்லிய ஓசையும், குதிரைகளின் கனைப்புச் சத்தமும், பாலை விபஞ்சியாழின் ஒலியும், ஆடல் பாடல்களுக்கு இசைய முழங்கும் இசை ஒலியும் ஒன்றுகூடி, கடலோசையையும் விழுங்கி மேலோங்கி விளங்கும்! செல்வமிக்க வீடுகள்தோறும், விதவிதமான இல்லற இன்பங்கள் விளையும். சாலைகள்தோறும் சத்துப் பிடியான தர்மங்கள் பெருகும். அன்பர்களின் திருமடங்கள் தோறும், சைவத்தின் உண்மைகள் எடுத்துக் கூறப்படும். பிற இடங்களிலெல்லாம் பல்வகைச் செல்வங்கள் பிரகாசிக்கும்.

அங்கு வேதநெறியினின்றும் வழுவாத நல்லொழுக்கமுள்ள அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைச் சாதியினரும் தத்தமது நிலைகளில், நிலைத்து வாழும் தன்மை பெற்றிருந்தனர். சேர மன்னர்களுக்குக் கோதை என்னும் பெயரும் உண்டு. ஆகையால் அவர்கள் அரசு புரிந்து வந்த மதிலும், மா, மகிழ், சரளம் முதலிய மரங்களும் சூழ்ந்த கொடுங்கோளூர், மகோதை என்ற பெரும் பெயரையும் பெற்று விளங்கியது.

வளங்கள் மிகுந்த அந்த மகோதை நகரிலே, கலியை ஒழுக்கத்தினாலே ஒழித்து, அறத்தை நிலைநாட்டும் சைவத்திறம் தழைத்தோங்கும் பொருட்டு யானைப் படையுள்ள சேரர்குலமும் உலகமும் செய்த பெருந்தவப்பயனால், ★ பெருமாக்கோதையார் என்னும் சேரமானார் அவதரித்தார். அப்போது, அவர் பிறந்ததை முன்னிட்டு, கொடுங்கோளூர் நகர மக்கள், நெய்யாட்டு விழாக்கொண்டாடினர். உலகிலுள்ள எல்லா உயிர்களும், மேன்மேலும் பெருமகிழ்ச்சி பெற்று விளங்கின. பெருமாக்கோதையார், உலகில் சைவ நெறியோங்க வளர்ந்து, முற்பிறப்பில் தாம் செய்த தவத்தின் வழியே தொடர்ந்து, அன்பினாலே இளவரசராகும் பருவத்தை அடைந்தார்.

அப்போது அவர், அரசாட்சிக்குரிய தொழிலில் ஈடுபடாமல், சிவபெருமானது திருவடிகளையே பேணும் கருத்துடையவராயிருந்தார். திருவாஞ்சைக்களம் என்ற ஆலயத்தை அடைந்து, அதனருகில் ஒரு மாளிகையை அமைத்துக் கொண்டு திருத்தொண்டு புரிந்து வந்தார். அவர்,

★ பெருமாக்கோதையார் : இவருக்கு 'கழறிற்றறிவார்', 'சேரமான் பெருமாள்' என்னும் பெயர்களும் உண்டு. இவர், 'யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும்' உடமையால் இப்பெயர் பெற்றார்.

''அரசியல்பும், உலகின் இயல்பும் நிலையில்லாதன!'' என்று உணர்ந்திருந்தார்.

அவர் ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் எழுந்து நீராடித் திருவெண்ணீறணிந்து நந்தவனத்திற்குச் செல்வார். அங்கே திருப்பணிகள் பலவற்றையும் செய்து, மலர்களையும் அரும்புகளையும் எடுத்துக் கொணர்ந்து அவற்றை திருமாலைகளாகத் தொடுத்து சிவபெருமானுக்கு சாத்தி மகிழ்வார். இறைவருக்குத் திருமஞ்சனம் கொண்டு வருவார். திருக்கோயிலில் திருவலகும், திருமெழுக்கும் அன்பு மிகுதியால் செய்வார். இத்தகைய திருத்தொண்டுகள் பலவும் செய்து ஒருமைப்பட்ட உள்ளத்தோடு திருப்பாடல்களையும் பாடிச் சிவபெருமானைப் பணிந்து வருவார்.

இவ்வாறு பெருமாக்கோதையார், சிவத்தொண்டு புரிந்து வரும் காலத்தில், கடல்போன்ற அகழியினாலும் மலைபோன்ற மதில்களினாலும் சூழப்பெற்ற கொடுங்கோளூர் நகரத்தில், கொடையில் சிறந்த [1]செங்கோற்பொறையன் என்ற சேரமன்னன் ஆட்சியைத் தானாகவே நீத்து, தவம் புரிவதற்காக கானகம் சென்றான். அரசன் மரபில் வந்த அந்த சேரமன்னன் தபோவனம் அடைந்தபிறகு அறநூலும், ஆட்சி நூலும் அறிந்த அமைச்சர்கள், சிலநாள் ஆராய்ந்து தெளிந்து, ''சிவத்தொண்டு புரியும் பெருமாக் கோதையாரிடமே அரசு தாங்கும் முதன்மை முன்னை மரபினாலே நின்றது'' என்பதைக் கண்டார்கள். உடனே அவர்கள் திருவாஞ்சைக்களத்திற்கு வந்து, பெருமாக் கோதையாரைக் கண்டு, வணங்கி ''மறைநாட்டு அரசர் மரபு, வழிவழியாக வரும் தாயபாக முறையினால், அரசாட்சியை ஏற்று, முடிசூட்டிக் கொண்டு செங்கோல் செலுத்தும் பொறுப்பும் உரிமையும் தங்களுக்கே உரியது!'' என்று கூறினார்கள்.

அமைச்சர்கள் கூறியதைக் கேட்ட பெருமாக்கோதையார், ''இவர்கள் விருப்பத்திற்கு இணங்கினால் இன்பம் பெருகும் நம் திருத்தொண்டுக்கு இடையூறு நேரும் அன்றோ? திருத்தொண்டருக்குத் தடங்கல் நேராதவாறு ஆட்சி செய்ய முடியுமா? அதற்குத் திருவருள் துணை வேண்டும். எதற்கும் சிவபெருமானின் திருவருள் நோக்கை அறிவேன்!'' என்று சிவசந்நிதியை அடைந்தார். இறைவனிடம் விண்ணப்பம் செய்தார். அப்பொழுது, சிவபெருமானின் திருவருளினாலே, அன்பின் வழிபாடு தவறாமல் அரசியற்றும் வல்லமையும்; யாரும்,

---

[1] செங்கோற் பொறையன் : இவன் சேரமான் பெருமாள் நாயனாருக்கு முன் அரசு செய்த அரசனாகும். இப்பெயர் செங்கோலைத் தாங்கி அரசு செலுத்துபவன் என்னும் பொருளுடையது.

யாவும் கழறின (சொல்லிய) எல்லாவற்றையும் அறியும் அறிவும், அளவுபடாத ஆற்றலும், தடையில்லாத பெருங்கொடையும், அரசர்க்குரிய படை, வாகனம் முதலிய அங்கங்களும் ஆகிய இவற்றையெல்லாம் பெருமாக்கோதையார், தம் வசம் பொருந்துமாறு பெற்றார். மாக்கோதையார், ஆண்டவனை வாழ்த்தி வணங்கிவிட்டு வெளியே வந்தார். அமைச்சர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அரசியல் மகுடம் தாங்க முன் வந்தார். (யாரும், யாவும் கழறுவதை உணரும் இயல்பைப் பெற்றமையால், பெருமாக் கோதையாருக்கு கழறிற்றறிவார் என்ற பெயர் வழங்கலாயிற்று. அவரைச் [1]**சேரமான் பெருமாள்** என்றும் அழைப்பார்கள்.)

கழறிற்றறிவார், நல்லதொரு நாளிலே முடிசூடிக் கொண்டார். பிறகு மணிமுடி தாங்கிய சேரமான் பெருமாள் சிவபெருமானின் திருக்கோயிலை வலம் வந்து, திருமுன்பு நிலமுற விழுந்து வணங்கி எழுந்து, துதித்து, யானைமீது ஏறினார். வெண்கொற்றக் குடையையும், வெண்சாமரையையும், பரிஜனங்கள் தாங்கி ஏற்றவாறு பணிபுரியச் சிறப்புடன் நகர் வலம் வந்தார்.

அரசர் பெருமான் நகர் வலம் வரும்போது, தோளிலே உவர்மண் பொதியைச் சுமந்து கொண்டு வண்ணான் ஒருவன் எதிரே வரக் கண்டார். மழையினாலே உவர் மண் கரைந்து அவன் உடல் உவர் ஊறி வெளுத்திருந்தது. வண்ணானது வெண்நிறக் கோலத்தை கழறிற்றறிவார் கண்டதும் விபூதி ★**உத்தூளனம்** செய்த சிவனடியார் திருக்கோலம் இது என்று உணர்ந்து, உடனே யானையினின்று கீழே இறங்கினார். பேராவலோடு விரைந்து, அந்த வண்ணான் முன்சென்று, அவனைக் கைகூப்பித் தொழுதார்.

சேரமான் பெருமான் நாயனார், தன்னை வந்து கைதொழக் கண்ட வண்ணான், மனம் கலங்கி சேரர் பெருமானை முன் வணங்கி, ''அடியேனை யாரென்று கொண்டது? அடியேன் அடி வண்ணான்!'' என்று சொன்னான்.

---

[1]**சேரமான் பெருமாள் :** இவர் பெருமாள் என்னும் பட்டங் கொண்ட குறுநில மன்னர் மரபில் வந்தவர் அதனால் இப்பெயர் பெற்றார் என்பர். இம்மரபு கி.பி. 7ம் நூற்றாண்டில் அழிவுற்ற கதம்ப மரபிற்குப்பின் வந்தது என்பார்கள்.

★ **உத்தூளனம் :** விபூதியை நீரிட்டுக் குழைக்காமல் தூளிதமாகப் பூசுதல்.

சேரர் பெருமானோ "அடியேன் அடிச் சேரன்!" என்று கூறி "உமது வடிவினால் திருவெண்ணீற்றின் பொலிவுள்ள சிவனடியாரின் வேடத்தை நினைவுபடுத்தினீர். வருந்தாமல் செல்வீர்!" என்று மொழிந்தார். அமைச்சர்களெல்லாம், அரசர் பெருமானின் திருத்தொண்டின் தன்மையைக் கண்டு, தங்கள் கைகளையெல்லாம் தலைமேற் கொண்டு, அஞ்சலி செய்து துதித்தனர்.

பிறகு, கழறிற்றறிவார், மீண்டும் யானை மீது ஏறி, நகர்வலம் வந்தார். அரண்மனையை அடைந்தார். யானையிலிருந்து இறங்கி, அலங்கரித்த மணிமண்டபத்தை அடைந்து சிங்காதனத்தின் மீது அமர்ந்தார். வெண்கொற்றக் குடை நிழலின் கீழ், குவளை விழிப்பெண்கள் வெண்சாமரங்களை வீசிப் பணியாற்ற, சிற்றரசர்கள் மலர்களைத் தூவித் துதிக்க, சேரர் பெருமான், அரசு வீற்றிருந்தார்.

அவர், ஈகைத் தன்மையுடைய சோழ மன்னரோடும், அரசுரிமையுடைய பாண்டிய மன்னரோடும் நட்புக் கொண்டார். சேர சோழ பாண்டியர் என்ற மூவேந்தர்களும் மனுநீதி முறைப்படி அரசாட்சி புரிந்தனர். அளவற்ற அரசர்கள் சேரருக்குத் திறை கொணர்ந்து கொடுத்துப் பணிந்தனர். கழறிற்றறிவாராகிய சேரர், அகத்தும், புறத்தும் பகைகளை அறுத்து, திருநீற்று நெறியும், வேதநெறியும் வளர அரசியற்றுவாராயினார்.

சேரர் பெருமான், சிவநேயமும், திருநீற்றுச் செல்வமும் விளங்க, நீதிநெறி தவறாமல் அரசாட்சி புரிந்து வந்தார். "அரசியல் பயனும், நிறை தவமும், தேடும் செல்வமும், பெருந்துணையும் பிறவும் தில்லைச் சிற்றம்பலத்தில் நடமாடும் ஆனந்தக் கூத்தனின் திருவடிகளே!" என்று தெளிந்த அறிவோடு அக்கூத்தர் பிரானையே பூஜித்து வரலானார். வாசனைத் திருமஞ்சனம், பள்ளித்தாமம், மணித்தூபம், செழும் தீபம், முதலானவற்றையும் திருவமுதும் கொண்டு தில்லை நடராஜப் பெருமானை அர்ச்சிப்பார். ஒவ்வொரு நாள் பூஜை முடிவிலும், தில்லைக் கூத்தர் பிரான், தனது திருச்சிலம்பொலியைக் கழறிற்றறிவார் நாயனாருக்கு கேட்கச் செய்வது வழக்கம். சேரர் பெருமான் சிவபூஜையில் ஈடுபட்டு நாளும் இன்புற்றும், சிவனடியார்க்கும், வறியவர்க்கும் செம்பொன் மழைபோல் வாரிக் கொடுத்தும், சிவவேள்விகள் பல செய்தும் வாழ்ந்து வந்தார்.

சேரமான் பெருமான் நாயனார் இவ்வாறு ஆட்சி புரிந்து வரும் நாளில், பாண்டிய நாட்டில் திருஆலவாய் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுள், தம்மை அன்போடு இசைப்பாடல்களால் துதிக்கும் பாணபத்திரர்

என்னும் சிவனடியாருக்குப் பெரும் செல்வமளிக்கத் திருவுள்ளங் கொண்டார்.

எனவே இறைவர் ஒருநாள் பாணபத்திரரின் கனவில் தோன்றி, ''சேரன் நம்மிடம் அன்புடையவன்! அவன் உனக்குப் பொருள் உதவுவான்! பைம் பொன் காசு, பட்டாடை, நவமணிப் பூண், இன்னும் வேண்டுவன எல்லாம் கொடுப்பான்! அதன் பொருட்டு அவனுக்குத் திருமுகம் கொடுக்கிறோம். நீ தாமதமின்றிச் சென்று பெற்று வருக!'' என்று கூறினார். சேரமானுக்கு அருள் செய்த பெருமையினாலே, ''ஒப்பற்ற செல்வத்திற்கேற்றவாறு, பெருநிதியினைக் கொடுக்க'' என்னும் கருத்துடைய பாடல் ஒன்றை திருமுகத்தில் எழுதினார்.

''மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிற(கு)
அன்னம் பயில் பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்!
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்(கு)
உரிமையின் உரிமையின் உதவி ஒளி திகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க!
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப்போந்தனன்;
மாண்பொருள் கொடுத்து வர விடுப்பதுவே''

இது பதினோராம் திருமுறையின் முதற்பாடலாகும்.

இந்த திருமுகப் பாசுரத்தையெழுதிய இதழாகிய திருமுகத்தை இறைவர் கொடுத்தருளினார்.

தமிழ்ச் சங்கப் புலவராகிய சிவபெருமான் அளித்தருளிய அந்த திருமுகத்தைப் பாணபத்திரர், தம் தலைமீது தாங்கிக் கொண்டு, அங்கிருந்து அப்பொழுதே புறப்பட்டார். மலை நாட்டிற்குச் சென்றார். உயர்ந்த மதில்கள் சூழ்ந்த கொடுங்கோளூரை அடைந்தார். மேகமண்டலத்தைத் தொட்டு நிற்கும் அரசரது திருமாளிகையின் முன்னர் வந்து தமது வருகையைச் சேரமானுக்கு அறிவித்தார்.

பாணபத்திரரின் வருகையைச் சொல்லக் கேட்டபோதே, சேரமானது கைகள் தலைமீது குவிந்தன. பேரன்பினால் அவரது கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அவர் ஓடிவந்து பாணபத்திரரை வணங்கினார். பாணபத்திரர் சேர மன்னரைத் தொழுது திருமுகத்தைக் கொடுத்தார். மன்னர் பெருமான் திருமுகத்தை வாங்கிப் படித்துப் பார்த்தார். அதைத்



தலைமீது வைத்துக் கொண்டார்; தம்மை மறந்தார். ஆனந்தக் கூத்தாடினார்; பாணரது பாதங்களிலே வீழ்ந்து வீழ்ந்து வணங்கினார், திருமுகத்தைப் பலமுறை பார்த்துப் பார்த்து மகிழ்ந்தார்; அமைச்சர்களை அழைத்தார்; ''நமது பண்டாரத்திலுள்ள பலவகைப்பட்ட நவநிதிப் பொருள்களையும் எடுத்துப் பொதி செய்யுங்கள். அவற்றையெல்லாம் ஆட்களின்மீது சுமத்தி வாருங்கள்!'' என்று கட்டளையிட்டார்; அப்படியே செய்தார்கள்.

சேரமான் பெருமாள், அச்செல்வங்களையெல்லாம் வரிசையாக வைக்கச் செய்து அவற்றை ஒவ்வொன்றாக பாணபத்திரருக்குக் காட்டி, ''இச்செல்வங்களையும், யானைகள், குதிரைகள், பசுக்கள் முதலாக உள்ள உயிருள்ள பொருள்களையும் அடியேனது அரசாட்சியையும் ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்று வேண்டினார். அவர் கொடுத்த நிதிக் குவியல்களையெல்லாம் பாணபத்திரர் கண்டு மகிழ்ந்து அதிசயித்து, சேரர் பெருமானை நோக்கி, ''எனக்கு வேண்டுவனவற்றை மட்டுமே நான் பெற்றுக்கொள்ள வேண்டும். அதுவே சிவபெருமானின் ஆணை! ஆகவே அரசு முதலியவற்றை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!'' என்று வேண்டினார்.

மன்னன் பெருமாள், ஆண்டவன் ஆணையை மறுப்பதற்கு அஞ்சினார்! பாணபத்திரர், செல்வங்கள் யாவற்றையும் யானை குதிரை முதலியவற்றின் மேலேற்றிக்

கொண்டு, தாமும் ஓர் யானையின் மேலேறி, பூமி நெளியும்படிப் புறப்பட்டுப் போனார். சேரர் பெருமான், அவரைத் தொடர்ந்து சென்றார். நகர்ப்புறத்தையடைந்ததும், பாணபத்திரர், மன்னரிடம் விடைபெற்றுக் கொண்டு போய் மதுரையை அடைந்தார்.

சேரமான் பெருமாள் தம் நாட்டில் ஓர் உயிரும் துன்புறா வண்ணம் அன்பு காட்டி, கொலை களவு முதலியனவற்றைக் கடிந்தகற்றி மற்ற மன்னர்களோடு நேசமுற்றுக் கலந்து மகிழ்ந்து வந்தார்.

ஒரு நாள், வழக்கம் போல் சேரமான் பெருமாள், சிவபூஜை செய்து கொண்டிருந்தார். அன்று அவருக்கு தில்லை நடராஜப் பெருமானின் ஆடல் சிலம்பொலி கேட்கவில்லை. அதனால் அவர், மனம் வருந்தி, மதிமயங்கிப் பூஜையை விரைவில் முடித்துவிட்டு, ''நான் ஏதோ பிழை செய்து விட்டேன்!'' என்று பொருமி, ''இனி இந்த ஆசை உடம்பால் அடையத்தக்க இன்பம் வேறு யாது உள்ளது?'' என்று! அழுத வண்ணம் தமது உடைவாளை உருவித் தம்மை மாய்த்துக் கொள்வதற்காகத் தம் மார்பின்மீது நாட்டினார். நாட்டினதும் திருச்சிலம்பொலி கேட்டது. திருக்கூத்தின் சிலம்பொலி கேட்டதும் சேரமான் பெருமாள் நாயனார், தம் கையிலிருந்த உடைவாளைக் கீழே போட்டு விட்டுத் தமது கைகளைச் சிரமேற் கூப்பி, நிலமுற வீழ்ந்து வணங்கி, ''சிவபெருமானே! திருமாலும் நான்முகனும் அருமறைகளும் தேடுதற்கு அரியவரே! முன்பே சிலம்பொலி தந்து திருவருள் செய்யாமல் இருந்ததற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டார். அப்போது இறைவர், சுந்தர மூர்த்தி நாயனாரை நினைப்பிக்கும் பொருட்டு, நேராகத் தம் உருவைக் காட்டாமல், ''சேரனே! இன்று சிற்றம்பலத்திலே நம் கூத்தாடலை வன் தொண்டன் வந்து வணங்கி வழிபட்டான். அப்பொழுது தமிழில் அவன் திருப்பதிகம் பாடினான்; அந்தத் தமிழ்ப் பாடல் நம்மைத் தன்வயப் படுத்தியது. அப்பாடலையே கேட்டுக்கொண்டு அங்கு நின்றோம்! அதனால் இங்கு வந்து உனக்கு சிலம்பொலி தரக் காலதாமதமாயிற்று'' என்று அசரீரியாகக் கூறினார்.

அதுகேட்ட சேரர் பெருமாள் ''என்னே! அடியார்களுக்கு ஆண்டவன் அருள் செய்யும் திறம் இருந்தவாறு!'' என்று வியந்தார். ''சிதம்பர நகரில் விரிசடைப் பெருமாள் திருநடம் புரியும் பொன்னம்பலத்தையும் தன்னிகரில்லாத வன்தொண்டரான நம்பியாரூரரையும் கண்டு வணங்குவேன்!'' என்று அவர் பெரிதும் விரும்பி உடனே சோழ நாட்டிற்குப் புறப்படலானார். தம் அமைச்சர்களை அழைப்பித்து, ''பெரும் பயணத்திற்கு எழுக!'' என்றார். உடனே சேனை வீரர்களும் வில்லர்களும் யானை குதிரை பரிவாரத்தினரும் வஞ்சி

மாநகரில் திரண்டார்கள். ஒரு நல்ல நாள் சுபவேளையில் சேரமான் பெருமாள் திருவஞ்சைக்களத்துக் கோயிலை வலம் வந்து இறைவனை வணங்கிவிட்டு யானைமீது ஏறி மலைகள் போன்ற யானைகளும் காடுகள் போன்ற சேனைவீரர்களும் கடல் அலைகள் போன்ற குதிரைகளும் புடைசூழப் புறப்பட்டார்.

சேர நாட்டின் எல்லையைக் கடந்ததும் அவர் தம் மந்திரிகளுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு தமக்கு வேண்டுவாரை மட்டும் உடன் அழைத்துக்கொண்டு நெடும்பயணத்தை மேற்கொண்டு, மலைகளையும் காடுகளையும் கடந்து ஆங்காங்கே சிவனடியார்கள் எதிர்கொள்ளப் பல சிவத்தலங்களை வணங்கிச் சென்று சோழ நாட்டை அடைந்து காவேரி நதியில் தீர்த்தமாடினார். தில்லையையும் அடைந்தார். அங்கு சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடும் கூத்தபிரானைக் கண்டார். கூத்தர்பிரான், தாம் ஆடுவதற்கெடுத்த திருவடியை சேரமான் பெருமாளுக்குக் காட்டியருளினார். அந்த ஆனந்தக் கூத்தைக் கண்டு, உள்ளமும் அறிவும் ஒருவழிச் சென்று உருக அன்பிலே மூழ்கிய சேரமான் பெருமாள் நாயனார், ''பொன் வண்ணத் திருவந்தாதி'' என்னும் பிரபந்தத்தை திருக்களிற்றுப்படியின் கீழே நின்று பாடிப் பணிந்தார்.

சேரமான் பெருமான் நாயனாரின், செந்தமிழ்த் திருவந்தாதியைக் கேட்ட சிவபெருமான், அப்பாடல்களுக்கேற்ற பரிசலாகத் தம்முடைய காற்சிலம்பொலியை, அவருக்கெதிரே கேட்கும்படிச் செய்தருளினார். வானுலகையும் எட்டும் வண்ணம் எழும்பிய அந்தச் சிலம்பொலியைக் கேட்டு, சேரமான் பெருமாள் அளவில்லாத ஆனந்தங்கொண்டு வழிபாட்டுக்குரிய பூஜா காலங்கள் எல்லாவற்றிலும் ஆண்டவனைத் தரிசித்து இரவும் பகலும் இறைவனைப் பணிந்தேத்தி இன்புற்று தில்லை நகரிலே தங்கியிருந்தார்.

இவ்வாறு தில்லைக் கூத்தரை தரிசித்துக் கொண்டிருக்கும் காலத்தில், சுந்தரமூர்த்தி நாயனாரைக் காணவேண்டுமென்ற பழைய ஆவல் அவருடைய நினைவில் நிறைந்து பொங்கியதால் அம்பலவாணரை வணங்கி விடைபெற்று திருவாரூருக்குச் செல்ல சேரமான் புறப்பட்டார்.

அறிவின் எல்லையான தில்லையை விட்டு சேரமான் சீர்காழி முதலிய ஸ்தலங்களை வணங்கிக் கொண்டே திருவாரூரை அடைந்தார். அந்நாளில் நம்பியாரூரர் திருநாகைக் காரோணத்திற்குப் போய் தமிழ்ப் பாமாலை பாடி, இறைவனருளால் பொன்மணி, நவமணி ஆபரணங்கள், சாந்தம், குதிரை, பைம்பொன் சுரிகை முதலானவற்றைப் பெற்றுக் கொண்டு பல சிவத்தலங்களுக்கும் சென்று தம்பிரானைப்

பணிந்து போற்றிசைத்து விட்டுத் திருவாரூருக்குத் திரும்பி வந்து சேர்ந்திருந்தார். சேரமன்னரின் வருகையைக் கேள்வியுற்ற நம்பியாரூரர் சிந்தை மகிழ்ந்து அவரை எதிர்கொண்டு சென்று வரவேற்றார். சேரமான் பெருமாள் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தாழ்ந்து வணங்கினார். சுந்தரமூர்த்தி நாயனாரும் அவரைப் பணிந்து வணங்கி அவரைத் தம் கைகளால் முகந்தெடுத்து அன்பும் ஆர்வமும் பொங்கக் கட்டித் தழுவினார். இருவரும் அந்த இன்ப வெள்ளத்திடை நீந்திக்கரையேற மாட்டாமல் என்பும் உருக உயிர் ஒன்றி உடம்பு ஒன்றாகும்படிக் கலந்தார்கள். அந்த நட்பின் ஒருமையால் வன்றொண்டருக்கு சேரமான் தோழர் என்ற ஒரு பெயரும் வழங்கலாயிற்று. நட்பின் பெருக்கோடு ஒருவரில் ஒருவர் கலந்த உணர்வால் இன்ப மொழிகள் உரைத்தார்கள்.

பிறகு இருவரும் சேர்ந்து, திருக்கோயிலுக்குச் சென்றார்கள். அங்கு திருவாரூர் சிவபெருமானை வழிபட்டார்கள். சேரமான் பெருமாள் நம்பியாரூரரின் முன்னிலையில் இறைவன்மீது மும்மணிக்கோவையை பாடினார். அங்கிருந்து இருவரும் பரவையாரின் திருமாளிகைக்குச் சென்றார்கள். அம்மாளிகையில் பெண்கள் நிறைகுடமும் பூமாலைகளும் தூபதீபங்களும் எடுத்தேந்த பரவையாரும் புன்சிரிப்புடன் வந்து அடியார்களை எதிர்கொண்டு வரவேற்றார். சோதிமணி மாளிகையினுள்ளே சேரமான் பெருமானை நம்பியாரூரர் அழைத்துச் சென்று பொன்பீடத்தில் அவரை அமரச் செய்து தாமும் அமர்ந்தார். குணவதியான பரவையார் தன் கணவருக்கும் கணவரின் தோழருக்கும் முறைப்படி அர்ச்சனைப் பூஜைகள் செய்தார். பிறகு, தூண்டு சோதிமணி விளக்குப் போன்ற பரவையார் தம் வாழ்க்கைத் துணைவரின் சொற்படி விருந்து சமைக்கத் தொடங்கினார்.

சேர மன்னருக்கும் அவருடைய பரிசனங்களுக்கும் மற்ற அடியார்களுக்கும் பொருந்தும்படி அப்பொற்கொடியார் பெரும் விருப்போடும் பெருகும் அன்போடும் விதம்விதமான காய்கறிகளும் பானகமும் தயாரித்து விருந்து அமைத்து அனைவருக்கும் திருவமுது செய்வித்தார். பிறகு வளர்பிறை போன்ற அழகு முகம் வாய்ந்த பரவையார் தன் கணவரைப் புன்முறுவலுடன் பார்த்து, பன்னீரும் சந்தனமும் கஸ்தூரியும் நறும் பூமாலைகளும் தாம்பூலமும் அனைவருக்கும் வழங்கினார். அவருடைய மாளிகையிலேயே சேரமான் பெருமாள் தங்கியிருந்து நம்பியாரூரரின் நட்பில் திளைத்து, திருவாரூர் இறைவரை நாள்தோறும் சேவித்து மனமகிழ்ந்து வந்தார். இவ்வாறு நண்பர்கள் இருவரும் மகிழ்ந்து வாழும்போது

ஒருநாள் ''மதுரை முதலிய திருப்பதிகளைக் கண்டு தொழுதல் வேண்டும்.'' என்று வன்தொண்டரான சுந்தரனார் விருப்பங் கொண்டார். அவரைப் பிரிய முடியாத நட்பினால் சேரமான் பெருமாளும் அவருடன் சென்று அந்தத் திருப்பதிகளை வணங்குவதற்கு விரும்பினார். இருவரும் புறப்பட்டார்கள். வழிப் பயணத்திற்குத் தேவையான வாகனங்கள் பணியாட்கள் பொன் பொருட்கள் முதலானவற்றை எல்லாம் ஏராளமாகக் கொண்டு செல்லவும் ஏற்பாடு செய்தார்கள்.

திருவாரூரை இருவரும் வணங்கிச் சென்று, திருக்கீழ் வேளூர் என்னும் தலத்திலுள்ள இறைவரைப் பணிந்து, பின் அங்கிருந்து புறப்பட்டு திருநாகைப்பட்டினத்தில் திருக்காரோணக் கோயிலிலுள்ள சிவபெருமானைப் பணிந்தார்கள். அப்போது நம்பியாரூரர் ''அடியார்களது உள்ளமுருக்கும் திருக் காரோணத்து இருப்பீரே!'' என்னும் மகுடமுடைய திருப்பதிகத்தைப் பாடினார். பிறகு அவரும் சேரமான் பெருமாளும் அங்கிருந்து அகன்று சென்று திருமறைக்காடு என்னும் பதியினை இருவரும் அடைந்து திருக்கோயிலினுள் சென்றார்கள். முன்பொரு சமயம் அங்குள்ள கோயிலின் திருவாயிற் கதவு வேதங்களால் மூடப்பட்டிருந்து திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் இறைவரை நேர்முகமாகத் தரிசிக்க விரும்பி அக்கதவு திறக்கவும் அடைக்கவும் பாடினார்களல்லவா? அத்திருவாயிலை நம்பியாரூரரும் சேரரும் அடைந்தார்கள். கண்களிலே ஆனந்தக் கண்ணீர் சொரிய, அப்பெரியவர்களை மனதால் தியானித்துப் பணிந்தார்கள். நம்பியாரூரர் ''யாழைப் பழித்தன்ன'' என்னும் பாடலடி எடுத்துத் திருப்பதிகம் பாடினார். சேரர் பெருமாள், தாம் பாடிய பொன் வண்ணத்தந்தாதியில் இறைவரைச் சிறப்பித்துப் பாடியவற்றையே ஓதி வணங்கினார். பிறகு இருவரும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று திருவகத்தியான் பள்ளியை அடைந்தார்கள். ★ **திருக்கோடிக் குழகர்** கோயிலைப் பூஜித்தார்கள். பிறகு திருப்புத்தூர்ப் பதிக்கு வந்து இறைவனை வணங்கிச் சென்று மதுரை மாநகரை வந்தடைந்தார்கள். பாண்டிய மாமன்னரால் இருவருக்கும் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்குள்ள ஆலவாய்க் கோயிலில் சொக்கலிங்கப் பெருமானை வணங்கி, இருவரும் தமிழ்ப் பதிகப் பாமாலை பாடிக் களித்தார்கள்.

★ திருக்கோடிக் குழகர் : இது குழகர் கோயில் எனவும் வழங்கப்பெறும்.

பாண்டிய மன்னனின் புதல்வியைச் சோழ மன்னன் மணம் புரிந்து கொண்டிருந்ததால் அவனும் அப்போது மதுரையில் தங்கியிருந்தான். அதனால் முடிமன்னர்கள் மூவரும் ஒன்றுகூடி நம்பியாரூரரோடு மதுரை ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானை வணங்கி வழிபட்டு வந்தார்கள். பாண்டியனின் அரண்மனையிலேயே அனைவரும் தங்கியிருந்தார்கள். பிறகு நம்பியாரூரர் முடிமன்னர்கள் மூவரோடும் மதுரையிலிருந்து புறப்பட்டுத் திருப்பூவணம் என்னும் தலத்திற்கு வந்து சேர்ந்தார். அங்குள்ள இறைவனைத் தொழுது ''திருவுடையார்'' என்று தொடங்கி ''பூவண மீதோ?'' என்று முடியும் திருப்பதிகம் பாடி முடிமன்னர் மூவருடனே, அவ்வூரில் சிலநாள் தங்கியிருந்தார். பிறகு நம்பியாரூரர், தமிழ் மூவேந்தருடன் திருப்பூவணத்தினின்று புறப்பட்டு மதுரைக்குச் சென்றார். அங்கிருந்தவாறே திருவாப்பனூர், திருவேடகம் முதலான பதிகளுக்குச் சென்று வணங்கினார். பிறகு மூவேந்தருடன் சேர்ந்து, திருப்பரங்குன்றத்தை அடைந்தார். அங்குள்ள இறைவனின் திருவடிகளை வணங்கி, ''ஆட்செய அஞ்சுதும்'' என்று இறுதியில் அமைத்து ''கோத்திட்டையும்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தை மூவேந்தர் முன்னிலையில் இசையுடன் பாடித் துதித்தார்.

பாண்டிய நாட்டிலுள்ள திருத்தலங்கள் முதலிய்வற்றையும் வணங்க, சேரமான் பெருமாள் நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் சென்றார்கள். சோழர், பாண்டியர் இருவரும் தென்னாட்டிலே அவர்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்தமைத்தற்குரிய பரிசனங்களை, அவர்களுடன் அனுப்பி வைத்து மதுரைக்கு மீண்டனர். நம்பியாரூரர், சேரமான் பெருமாள் நாயனாரோடு, தலயாத்திரை சென்று திருக்குற்றாலம், திருநெல்வேலி, திருவிராமேஸ்வரம் போன்ற பல சிவஸ்தலங்களை வணங்கித் தமிழ்ப்பதிகப் பாமாலைகளைச் சாத்தினார். இராமேஸ்வரத்தில் இருந்தபடியே ஈழநாட்டிலுள்ள மாதோட்டத்து கேதீச்சுரத்தை, மனத்தால் நினைத்து, தொழுது, திருப்பதிகம் பாடினார். பிறகு நம்பியாரூரர், அங்கிருந்து புறப்பட்டு திருச்சுழியல் என்னும் தலத்தை அடைந்தார். அங்கு, நம்பியாரூரர், கருக்குழியில் விழாமல் காப்பவரான சிவபெருமானைத் தொழுது, ''ஊனாய் உயிர் புகலாய்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடி, சேரமான் பெருமாள் நாயனாருடன் அவ்வூரில் தங்கியிருந்தார். அப்பொழுது, சிவபெருமான், சுந்தரமூர்த்தி நாயனாரின் கனவில் காளையாகிய திருவடிவத்துடன் தோன்றினார். திருக்கரத்தில் பொற்செண்டும், திருமுடியிலே சுழியமும் ஆகிய இவற்றுடன் வேறெங்கும்

காணமுடியாத திருவேடத்தைக் காட்டி "நாமிருப்பது கானப் பேர்" என்று சொல்லி, மறைந்தார். உடனே நம்பியாரூரர் கனவில் கண்ட அதிசயத்தை வியந்துகொண்டே கண் விழித்து எழுந்தார்.

பிறகு நம்பியாரூரர், தாம் கண்ட கனவைச் சேரமான் பெருமாள் நாயனாருக்குச் சொல்லி மகிழ்ந்து, திருச்சுழியற் பெருமானை வணங்கித் தொழுதுவிடை பெற்று "திருக்கானப் பேர்" என்னும் கோயிலை (காளையார் கோவிலை) அடைந்தார். அங்குள்ள இறைவரை வணங்கி, தமிழ் மாலை பாடிப் பரவினார். சேரரும், ஆரூரரும் அங்கேயே சிலநாள் தங்கியிருந்து விட்டுத் "திருப்புன வாயில்" என்னும் பதியை அடைந்தார்கள். அங்குள்ள இறைவனை நம்பியாரூரர் வணங்கிப் போற்றி, "சிந்த நீ நினை என்னொடு" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். அங்கிருந்தவாறே திருக்கோவில்கள் பலவற்றையும் சென்று வணங்கி, மீண்டும் காளையார் கோயிலுக்கு வந்து, இறைவனை வழிபட்டு, அருள் விடை பெற்று, குன்றுகளையும் காடுகளையும் கடந்து சோழநாட்டை அடைந்தார்.

நம்பியாரூரர், சேருடன் சோழ நாட்டிலுள்ள திருப்பாம் பணிமா நகரத்துத் திருப்பாதாளீஸ்வரம் கோயிலை அடைந்து இறைவனை வணங்கிவிட்டு இடைவழியிலுள்ள பல பதிகளையும் தொழுது கொண்டு மிக விரைவாகத் திருவாரூரை அடைந்தார். திருவாரூர்ப் பெருமக்கள் சேரமான் பெருமாள் நாயனாரோடு வரும் சுந்தரமூர்த்தி நாயனாரை பெருவிருப்பத்தோடு எதிர்கொண்டு வரவேற்றனர். சுந்தரர், திருக்கோயிலுக்குச் சென்று, இறைவனை வணங்கிவிட்டுச் சேரமான் பெருமாள் நாயனாரையும் அழைத்துக் கொண்டு தம் துணைவியான பரவையாரின் மாளிகையை நோக்கிப் பரிசனங்களோடு சென்றார். பரவையார் ஆர்வத்தோடு தம் மனையை அலங்கரித்துத் தன் கணவரையும் கணவரின் தோழரையும் வரவேற்று வணங்கி, பலவிதமான காய்கறி போஜனங்களோடு திருவமுது சமைத்து பகல் விளக்கு ஏற்றி, விருந்து பரிமாறினார். மங்கலமான பூஜைகளும் செய்தார்.

அவர் மாளிகையிலேயே நம்பியாரூரரோடு சேர மன்னர் தங்கியிருந்தார். பூஜாகாலங்கள் தோறும் திருவாரூர் கோயிலிலுள்ள இறைவனைத் தரிசித்து வழிபட்டுக் கொண்டும், நிறைச் செண்டு வீசுதல், பரிச்செண்டு வீசுதல் ஆகிய நல்ல விளையாட்டுகளை விரும்பி விளையாடி மிக மகிழ்ந்தும், ஆட்டுக்கடாக்களின் பாய்ச்சல், கோழிச் சண்டை வேறு பல பறவைகளின் சண்டைகள் முதலியவற்றைக் கண்டுகளித்தும், சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூரில் பலநாட்கள்

தங்கியிருந்தார். இவ்வாறு, சுந்தரரும் சேரரும் பெருவிருப்பத்தோடும் நட்போடும் திருவாரூரில் இருக்கும்போது, சேரர் பெருமான் தம் நாட்டிற்கு சுந்தரரை வரும்படி இரவும் பகலும் வேண்டிக் கொண்டிருந்தார். பிறகு சுந்தரர், சேரரின் விருப்பத்திற்கிணங்கிப் பரவையாரின் இசைவைப் பெற்று திருவாரூர் இறைவரை வணங்கி விடை பெற்றுக் கொண்டு சேரநாட்டிற்குப் புறப்பட்டார்.

சேரர்பெருமானும், சுந்தரரும், காவிரி நதியின் தென்கரை வழியாகச் சென்று, வணங்கிக் கொண்டு, திருக்கண்டியூரை அடைந்து, இறைவனைப் பணிந்து சென்றார்கள். அப்பொழுது காவிரியின் வடகரையிலுள்ள திருவையாறு எதிரிலே தோன்றியது. சுந்தரர், தமது உடலும் உள்ளமும் உருக, உச்சியின் மேல் கைகளைக் குவித்துக் கொண்டு, கடல் போலப் பெருகிச் செல்லும் காவிரியைக் கடந்து ஐயாற்றுப் பெருமான் திருவடிகளை வணங்குவதற்கு ஆசை கொண்டார். அப்பொழுது சேரர், சுந்தரரை வணங்கி, ''நாம் இந்த ஆற்றைக் கடந்து சென்று இறைவனை வணங்குவோம்!'' என்றார். அதற்கு நம்பியாரூரர் காவிரியாற்றின் வெள்ளம் இரு கரைகளையும் அழித்து நீந்த முடியாதபடியும், ஓடங்கள் செல்லமுடியாதபடியும் பெருகுவதைக் கண்டு இறைவன் திருவடிகளை நினைத்து, ''பரவும் பரிசு ஒன்றறியேன்'' என்று தொடங்கி திருப்பாட்டுக்கள் ஒவ்வொன்றின் இறுதியிலும் ''ஐயாருடைய அடிகளோ?'' என்று பெரும் வேட்கையோடு அழைத்து திருப்பதிகத்தைத் தென்கரையிலிருந்தபடியே பாடியருளினார்.

அப்பொழுது சிவபெருமான், தனது கன்றானது தடைப்பட்டு எதிர் நின்று கூப்பிட்டு அழைக்க, அதைக் கேட்டுக் கதறிக் கனைக்கும் தாய்ப் பசுவைப் போல, ஒன்றிய உணர்வினாலே, சராசரங்களெல்லாம் கேட்கும்படியாக ''ஓலம்'' என்று கூவியருளினார். உடனே காவிரி நதியும் பிரிந்து, வழிகாட்டியது, மிகவும் பெருகி ஓடிய காவிரியாற்றின் வெள்ளமானது மேலைத் திசையில் பளிங்கு மலையைப் போல் தங்கி நிற்க, கீழ்த்திசையிலுள்ள நீர் வழிந்த இடைவெளியில், நல்ல வழியை உண்டாக்கி, மணலைப் பரப்பியிடக் கண்ட அடியார்கள், பெருமகிழ்ச்சி கொண்டனர். சேரர் சுந்தரரை வணங்கினார். சுந்தரர், சேரரை வணங்கினார். ''இது தேவதேவர் உமக்குச் செய்த திருவருளன்றோ'' என்று சேரர் கூற இருவரும் கூடிமகிழ்ந்து ஆற்று வெள்ளத்தினூடேயுள்ள தமது பரிசனங்களோடு தாமும் சென்று வடகரையில் ஏறித் திருக்கோயிலினுள் சென்று பஞ்சநதேஸ்வரரைப் பணிந்து துதித்தார்கள். பிறகு அவர்கள் அங்கிருந்து திரும்பி,

காவிரியாற்றில் முன்னர், தாம் வந்த வழியாகவே தென்கரையிலேறியவுடன், மலைபோல் தேங்கி நின்ற ஆற்று வெள்ளத்தின் நீரானது முன்போல் விரைந்து தொடர்ந்து பெருகி ஓடியது. அதைக்கண்டு சுந்தரரும் சேரரும் வியந்து இறைவன் திருவருளை நினைத்து வணங்கிவிட்டு மேலைத்திசையை நோக்கிப் புறப்பட்டுச் சென்று வேறு பல சிவஸ்தலங்களையும் தொழுது வணங்கிக் கொண்டு, கொங்கு நாட்டின் வழியாக மலை நாட்டின் எல்லையை அடைந்தார்கள்.

மலைநாட்டு மக்கள், தமது மன்னர் பெருமானும், அவருடைய தோழராகிய தம்பிரான் தோழரும், தமது நாட்டிற்கு வருவதையறிந்து, பெருமகிழ்ச்சி கொண்டனர். அவர்களை எதிர்கொண்டு வரவேற்பதற்காக ஊரெங்கும் பந்தர்களையமைத்து, வழிகளெங்கும் தோரணங்களைக் கட்டினர். வீடுகள்தோறும் அகிற்புகை எழுப்பினர். நிலங்களெங்கும் பொன்மழை பெய்தாற்போல் பூக்களைப் பரப்பினர். இவ்வாறு மலைநாடு முழுவதும் அழகுடன் விளங்கியது. எல்லாத் திசைகளிலும் அமைச்சர்களோடு சேனைகள் நிறைந்து வந்தன. குதிரைப்படைகளின் வெள்ளமும் யானைப்படைகளின் வெள்ளமும் அலங்காரமான பெண்களின் வெள்ளமும் எங்கும் நிறைந்தன. இத்தகைய காட்சிகளைக் கண்டவாறே நம்பியாரூரரும், சேரமான் பெருமாளும் கொடுங்கோளூரை அடைந்தார்கள்.

அவர்களை வரவேற்பதற்காக நகர மாந்தர் நகர் முழுவதையும் அலங்கரித்திருந்தார்கள். கோட்டை வாயிலில் அலங்காரத் தோரணங்கள் ஆடிச்சிரித்தன. ஆடலரங்குகளில் மகரக் குழைகள் அணிந்த மங்கையர் ஆடிப்பாடினர். சேரர் பெருமான் நேரே தமது ராஜ மாளிகைக்குச் செல்லாமல் நம்பியாரூரரை அழைத்துக் கொண்டு திருவஞ்சைக்களம் என்னும் திருக்கோயிலுக்குள் சென்றார். நம்பியாரூரரான சுந்தரமூர்த்தி நாயனார் அங்குள்ள இறைவனை வணங்கி ‘‘முடிப்பது கங்கை’’ என்னும் திருப்பதிகம் பாடித்துதித்தார். பிறகு சேரமான் பெருமாள் நாயனார் உலா விளங்க, அலங்கரித்த ஒரு பெண் யானையின் மீது சுந்தரமூர்த்தியாரை முன்பு ஏற்றி வைத்து அவருக்குப் பின்னால் தாம் ஏறி அமர்ந்து வெண்சாமரை வீசிக் கொண்டு தம் அரண்மனையை நோக்கி வரும்போது, அவ்வூர் வீதிகளின் இருபக்கங்களிலும் கூடி நின்றவர்களெல்லாம் இந்த உலாக் காட்சியைக் கண்டு, மகிழ்ந்து வாழ்த்தினார்கள். ‘‘நம் சேரர் பெருமாளுக்கு நம்பியாகிய இவர் நல்ல தோழர்!’’ என்றார்கள். ‘‘நாம் இவரைத் தொழுது பணிதற்கு முன்பு என்ன தவம் செய்தோமோ?’’ என்றார்கள். ‘‘நமது மலைநாட்டுக்கு இனி பெறவேண்டிய செல்வம் இதைத் தவிர வேறு எதுவுமே

இல்லை!'' என்றார்கள். ''நம் சேரர் பெருமானின் செய்கை வாய்விட்டுச் சொல்லவும் முடியுமோ? பாருங்கள்!'' என்றார்கள். எல்லோரும் பார்த்துப் பார்த்து பரவசப்பட்டார்கள். மலர்களையும், பொரிகளையும், பொற்பொடிகளையும் தூவிக் கொண்டே தொழுதார்கள் பலர். மற்றும் பலர் 'பொன்னித் திருநாடே புவிக்கெல்லாம் திலகம்' என்று போற்றித் துதித்தனர். இவ்வாறு மக்கள் பலவாறு புகழும்படி, சேரமான் பெருமாள் நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் திருமாளிகையின் மணி வாயிலி னூட புகுந்து, பக்கத்தே இறங்கினார்கள்.

சேரர் பெருமான் பேரன்போடு சுந்தரரைத் தம் மாளிகையினுள்ளே அழைத்துச் சென்றார். தம் அரியணைமீது நம்பியாரூரரை அமரச் செய்தார். பிறகு அவர் எதிரே நின்று தம் தேவிமார்கள் செம்பொன் கரகம் எடுத்துத்தர கரகத்தின் மணம்மிக்க நன்னீரினால் நம்பியாரூரரின் பாதங்களைக் கழுவி விளக்க முயன்றார். அதைக் கண்ட சுந்தரமூர்த்தி நாயனார் தம் பாதங்களைப் பின்னுக்கிழுத்து, ''இது தகாது!'' என்றார். உடனே சேரர் தரையில் விழுந்து வணங்கி, ''என் அன்பு மிகுதியால் நான் செய்யும் வழிபாடுகள் எல்லாவற்றையும் மறுக்காமல் ஏற்றருளத்தான் வேண்டும்!'' என்று வேண்டுகோள் விடுத்தார். அதை மறுக்கமுடியாததால் நம்பியாரூரர் தமக்குச் சேரர் பெருமாள் செய்த பூசனைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டார். பூசனைகள் முடித்த சேரர் பெருமாள், அன்புப் பெருக்கோடு தாமே அவருக்குத் திருவமுது படைத்தார். பிறகு அவர் தம் கைகளாலேயே சந்தனம், கஸ்தூரி, நறுமணம் கமழும் பூமாலைகள் முதலியவற்றை சுந்தரருக்குச் சாத்தினார். ஆடல், பாடல், பல்வகை வாத்தியங்கள், விளையாடல்கள், தடாகங்களில் நீர் விளையாடல், சோறு சமைத்து விளையாடல், யானைப் போர் ஆகிய காட்சிகளையும் இனிய வினோதங்களையும் ஏற்பாடு செய்து, சுந்தரரை மகிழ்வித்துப் பல நாட்கள் அவருடனேயே மகிழ்ந்திருந்தார்.

இவ்வாறு பல்வகைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்திருந்த நம்பியாரூரர் ஒருநாள் திருவாரூர் தியாகேசப் பெருமானின் திருவடிகளை சேவிக்க வேண்டுமென்று மிகவும் நினைத்துப் பெருவேட்கை கொண்டு, ''ஆவியை ஆரூரானை மறக்கலுமாமே'' என்னும் கருத்துடைய திருப்பதிகத்தைப் பாடினார். பின் அதைக்கண்ட சேரன் பெருமான், அவரது பிரிவாற்றாமையைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் அவரைப் பின் தொடர்ந்து வந்து அவர் முன்னால் குறுக்கிட்டு நின்று, ''இன்று உமது பிரிவைப் பொறுக்கமாட்டேன், என் செய்வேன் நான்!'' என்று மனமுருகினார். அவரை நம்பியாரூரர் அன்புடன் நோக்கி, ''ஒன்றும் நீர் வருந்தாமல் உமது ஊரிலே இருந்து பகைவரை வென்று அரசாண்டுகொண்டு இரும்!'' என்றார்.

சேரர் பெருமானோ, ''எனக்கு உமது திருவடித் தாமரைகளே விண்ணுலக ஆட்சியாகவும், மண்ணுலக ஆட்சியாகவும் இருக்கும்!'' என்று கூறினார். அதற்கு வன்தொண்டரான நம்பியாரூரர், ''என் உயிருக்கு இன்னுயிரான திருவாரூர் பெருமானை நான் மறந்திரேன். பிறைசூடிப் பெருமானின் திருவருளால் நீர் அரசாண்டு கொண்டு இங்கேயே இரும்!'' என்று வேண்டினார். அதனால் அவரது திருவாரூர்ப் பயணத்தைத் தடுக்க மனமில்லாமல் சேரமான் விடை கொடுத்தார். பிறகு அவர் தம் அமைச்சர்களை அழைத்து, ''நேற்றுவரையில் கொண்டு வரப்பெற்ற பெருஞ்செல்வங்களை யெல்லாம் நம் பண்டாரத்திலிருந்து எடுத்து ஆட்களின் மேலேற்றி உடனே கொண்டு வருக!'' என்று கட்டளையிட்டார். அவர்களும் அவ்விதமே பொற் குவியல்களையும், நவமணிகளையும், இரத்தின ஆபரணங்களையும், ஆடைகளையும், வாசனைத் திரவியங்களின் வகைகளையும் பொதிகளாக்கி, ஆட்களின் மேலேற்றிக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். சேரர் பெருமான் அப்பொருட்களையெல்லாம் வன்றொண்டரது பரிசனங்களுக்கு முன்பாகவே நம்பியாரூரருக்குப் பரிசுகளாகக் கொண்டு செல்லும்படி ஏவி அனுப்பிவிட்டு நம்பியாரூரரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அவரை நம்பியாரூரராம் சுந்தரர் எதிர் வணங்கி தம் கைகளால் எடுத்து அவரது மலைபோன்று உயர்ந்த தோள்களைப் பொருந்தத் தழுவி விடை தந்து புறப்பட்டார்.

நம்பியாரூரர் அங்கிருந்து புறப்பட்டு மலைநாட்டையும், பாலை நிலத்தையும், காட்டாறுகளையும் இன்னும் பல பெரிய காடுகளையும் கடந்து ★ ''திருமுருகன்பூண்டி'' என்னும் ஊரின் பக்கமாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது, சிவபெருமான் இவரைக் கண்டு ''நாம் கொடுக்கும் பொன் பொருட்களை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டிய நம்பிகள், பிறர் கொடுக்கும் பொருட்களைப் பெற்றுச் செல்வதா? அதை நாம் பார்த்துக் கொண்டிருப்பதா? அப்பொருட்களைப் பறித்து நாமே கொடுப்போம்!'' என்று எண்ணினாரோ என்னவோ, தம் பூதகணங்களைப் பார்த்து, ''நீங்கள் வேடர்கள் வடிவம் எடுத்துச் சென்று வன்தொண்டன் கொண்டுவரும் நிதியங்களையெல்லாம் கவர்ந்து செல்லுங்கள்!'' என்று கட்டளையிட்டார்.

★ திருமுருகன்பூண்டி : இது முருகப்பெருமான் பூசித்த பதிகளுள் ஒன்று. ஆதலால் இப்பெயர் பெற்றது. இது திருப்பூர் நிலையத்திலிருந்து வடமேற்கே அவிநாசி செல்லும் பெருவழியில் சுமார் 7 மைலில் உள்ளது.

அவ்வாறே சிவபெருமானின் பூதகணங்கள் வேடவர் பண்டயாக வடிவமெடுத்துச் சென்று, நம்பியாரூரர் வரும் வழியில் இருபுறமும் சினந்தெழுந்து, பொருட்களைச் சுமந்து செல்லும் ஆட்களை வில்லும் அம்பும் கொண்டு வளைத்து நிறுத்தி, ''இப்பொதிகளை இங்கேயே விட்டுவிட்டு உயிர் தப்பிப் போங்கள். இல்லையேல் உங்கள் அனைவரையும் கொல்லுவோம்!'' என்று அச்சுறுத்தி அவர்களிடமிருந்த அளவில்லாத நிதியங்களைக் கவர்ந்து சென்றனர். பறிகொடுத்த சுமையாட்களோ பயந்து, பதறி, சிதறி ஓடினார்கள். வேடர்களாக வந்த சிவ பூதகணங்கள் நம்பியாரூரரை மட்டும் கெடுக்காமல் சிவபெருமானின் திருவருளால் நீங்கிச் சென்றன. பொருட்களைப் பறிகொடுத்த சுமையாட்களோ சுந்தரர் அருகில் வந்து சேர்ந்தார்கள். நம்பியாரூரரோ கடுவேகமாகத் திருமுருகன் பூண்டியை அடைந்தார். சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலினுட் சென்றார். வலம் வந்தார். மெய்சிலிர்க்கக் கரம் கூப்பி சிவபெருமான் முன் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று, ''வெருவுற வேடுவர்கள் வழிப்பறிக்கும் வெஞ்சுரக் காட்டில் எத்துக்கு இங்கு அருகிருந்தீர்?'' என்ற கருத்துடைய ★ கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடித் துதித்தார். உடனே சிவபெருமானது திருவருளால், வேடுவர்கள் தாம் பறித்துச் சென்ற பொருட்களையெல்லாம் திருவாயிலின் முன்னே ஆகாயத்தை முட்டும் வண்ணம் கொண்டு வந்து குவித்தார்கள். சுந்தரர் அது கண்டு ஆனந்தங் கொண்டார். சிவபெருமானை வணங்கினார்; அப்பொருட்களையெல்லாம் பெற்றுக் கொண்டு, ஆட்கள் மூலம் கொண்டுவரும்படிக் கட்டளையிட்டார். பிறகு அவ்வூர் ஆலயத்துப் பெருமானை வணங்கிவிட்டு இறைவனின் திருநாமத்தைப் பாடியபடியே திருவாரூரை அடைந்தார்.

நம்பியாரூரரிடம் விடைபெற்றுச் சென்ற சேரமான் பெருமாள் நாயனார் அவரது நட்பையே ஓயாமல் நினைத்தார். மணமலர்ச் சோலைகள் சூழ்ந்த மகோதைப் பதியை அடைந்து, அங்கேயே வீற்றிருந்து, மலைநாட்டின் அரசைத் தம் வசம் ஒருநிலைப்படுத்தி சீராக அரசுபுரிந்து செழிப்பாக வாழ்ந்து வந்தார். சிலகாலம் கழித்து நம்பியாரூரரான சுந்தரர் தம்முடைய பொன்னி வளநாட்டை விட்டு அகன்று சேரநாட்டிற்கு வந்து சேரமான் பெருமானின் ஊரை அடைந்தார். பிறகு அவர்

★ கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் : இதன் தொடர்பு வெள்ளை யானைச் சருக்கத்தில் கூறப்பெறும்.

யானைமீது ஏறி திருக்கயிலை மலைக்கு எழுந்தருளியபோது சேரமான் பெருமாளும் ஒரு குதிரைமீது ஏறிப் பின் தொடர்ந்தார். அந்தச் செயலைப் பின்னால் கூறுவோம். இப்போது கழறிற்றறிவாரான சேரர் பெருமானின் கழல்களைப் போற்றிவிட்டு அடுத்ததாக கணநாத நாயனாரின் திருத்தொண்டைக் கூறுவோம்.

''கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவார்க்கும் அடியேன்''

— சுந்தரர்

43. கணநாத நாயனார்

உலக முழுவதையும் ஈன்று காக்கின்ற உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டருளிய திருஞானசம்பந்தர் அவதரித்த சீர்காழிப் பதியில் மறையவர் குலத்தில் ★ கணநாதர் என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவநேசர். அவர் திருத்தோணி யப்பருக்கு நாள்தோறும் நல்ல திருப்பணிகளைச் செய்து வந்தார். அவர், திருநந்தவனப் பணி செய்வோர், நறுமலர் பறிப்போர், மாலை தொடுப்போர், திருமஞ்சன நீரைக் கொண்டு வருவோர், திருவிளக்கு ஏற்றுவோர், ★திருமுறைகளை வழுதுவோர், அவற்றை வாசிப்போர் முதலிய கைத்திருத் தொண்டர்களுக்கு ஏதாவது குறை நேருமாயின், அதனை அவ்வப்பொழுதே நீக்குவார். இத்திருத்தொண்டுகளில் மக்களை ஈடுபடுத்தி, அவர்களைத் திருத்தொண்டர்களாக்குவார். இல்லறத்தில் மனைவியோடு அன்பாக இருந்து கொண்டே திருத்தொண்டு புரிவதிலும் வாய்மை காப்பதிலும் அவர் சிறந்து விளங்கி வந்தார்.

திருத்தொண்டராகிய கணநாதர், திருஞானசம்பந்த மூர்த்தி ஸ்வாமிகளை விரும்பும் பேரன்பாலே நாள்தோறும், முப்போதும் அருச்சனை வழிபாடுகள் செய்து வந்தார். அதனால் அவர் திருக்கயிலை மலையை அடைந்து பெரும்

★ கணநாதர் : இது இறைவரின் திருப்பெயர். சிவகணங்களுக்கு தலைவர் என்பது பொருள். காரணப் பெயர்.

★ திருமுறை : தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலியன திருமுறை என்று அழைக்கப்படும்.




சிவகணங்களுக்குத் தலைவராகி, வழித் தொண்டினில் நிலைபெற்றார்.

உலகம் உய்ய நஞ்சுண்ட சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிவதில் உறுதியான மெய்யுணர்வு அடைந்து அலகிலாத தொண்டர்களுக்கும் அறிவளித்து அவர்தம் திறத்தை அவனியில் பெருக்கிய கணநாதனாரின் கழல்களை வாழ்த்திவிட்டு அடுத்ததாகக் கூற்றுவனாரின் தொண்டைச் சொல்வோம்.

''கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்.''

— சுந்தரர்



44. கூற்றுவ நாயனார்

திருக்கடந்தை என்ற ஊரில் குறுநில மன்னர் குலத்தில் கூற்றுவர் என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தமது தோள் வலிமையினால் பகைவர்களுக்குக் கூற்றுவராய்த் திகழ்ந்தார். அவர் சிவபெருமானுடைய திருநாமத்தினை நாள்தோறும் நவின்று வருவார். சிவனடியார்களைப் பணிந்து, அவர்களுக்குத் திருத்தொண்டு செய்வார். இறைவனின் திருவருள் வன்மையினாலே பகை அரசர்களை வென்று, அவர்களைத் தமக்குக் கீழ்ப்படும்படிச் செய்து, ஆட்சி செலுத்தி வந்தார். யானைப்படை, குதிரைப்படை,



தேர்ப் படை, காலாட்படை என்னும் நால்வகைச் சேனைகளையும், எல்லையற்ற செல்வப் பெருக்கையும் பெற்று, பகைவர் அஞ்சும்படி வீரச் செருக்கில் மேம்பட்டு விளங்கினார். தும்பை மாலையைச் சூடி, பகையரசர்களைப்

★ திருக்களந்தை : இது தொண்டை நாட்டிலுள்ள பொன் விளைந்த களத்தூர் ஆகும்.


பல போர்களிலும் எதிர்த்து வென்று, நறுமணம் கமழும் வாகை மாலை சூடி, அவர்களின் நாடுகளையெல்லாம் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் அரசர்க்குரிய செல்வமெல்லாம் அவர் பெற்றிருந்தும் திருமுடி ஒன்று மட்டும் பெறாமலிருந்தார்.

அவர் அந்தக் குறையை நீக்கிக் கொள்வதற்காக தில்லைவாழ் அந்தணர்களிடம் முறையிட்டார். அவர்களோ ''நாங்கள் தொன்றுதொட்டு வரும் சோழ மன்னர்களுக்கன்றிப் பிறருக்கு முடி சூட்டமாட்டோம்'' என்று மறுத்தார்கள். அவர்கள் திருமுடியைக் காக்கும் பொருட்டு ஒரு குடியை மட்டும் அங்கே வைத்துவிட்டு மற்ற எல்லோரும் சேர நாட்டிற்குச் சென்று விட்டார்கள். அதைக் கண்ட கூற்றுவ நாயனார் ஐயுறவு கொண்டு வருந்தி, ''அடியேன் எனக்கு தில்லைக் கூத்தன் திருவடியே முடியாக வேண்டும்!'' என்று நினைத்து இரவில் துயின்றார். சிவபெருமான் நாயனாரின் கனவிலே தோன்றி, தமது திருவடியை முடியாக, நாயனாருக்குச் சூட்டியருளினார். நாயனார் அந்தத் திருவடியை முடியாக அணிந்து உலகத்தைப் புரந்து வந்தார்.

தில்லைக்கூத்தர் மகிழ்ந்து தங்கும் பல சிவத்தலங்களுக்கும் கூற்றுவ நாயனார் சென்று பெரும் பூசனைகள் இயற்றி இறைவனையே வழிபட்டு சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்தார். களந்தைக் கூற்றனார் கழல் வணங்கிவிட்டுப் பொய்யடிமை இல்லாப் புலவர் செயல் கூறுவோம்.

''ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்''

— சுந்தரர்



45. பொய்யடிமையில்லாத புலவர்



பொய்யடிமை இல்லாத புலவர் என்போர், நீலகண்டப் பெருமானின் திருமலரடிக்கே ஆளானவர்கள். அதுவே மெய்யுணர்வின் பயன் என்று துணிந்து விளங்கியவர்கள். இவர்கள் செய்யுட்களில் திகழும் சொற்களைப் பற்றிய தெளிவும், செம்மை தரும் பயனுடைய நூல்கள் பலவற்றைப் பயின்ற ஆய்வுணர்வும் உடையவர்கள். அவைகளால் பெறும் மெய்யுணர்ச்சியின் பயன் சிவபெருமானின் மலரடிகளை வணங்குதலே என்ற கருத்தின் வழி நின்று தொண்டாற்றியவர்கள். சிவபெருமானின் செயலையன்றி வேறெதையும் வாய் திறந்து பாடாத நெறியில் நின்று தொண்டு செய்த மெய்யடிமையுடையவர்கள். அவர்களுடைய பெருமையை அறிந்து உரைக்க வல்லவர்கள் யார்தான் உண்டு?

அவர்களை வாழ்த்தி வணங்கிவிட்டு அடுத்ததாகப் புகழ்ச்சோழரின் திருத்தொண்டை புகல்வோம்.

''பொய்யடிமையில்லாத புலவர்க்கும் அடியேன்!''

– சுந்தரர்


(மெய்யடிமையுடையவர்கள் :–

''தரணியிற் பொய்மையிலாத் தமிழ்ச் சங்க மதிற் கபிலர்
பரணர், நக்கீரர் முதனாற் பத்தொன்பது பல் புலவோர்
அருணமக் கீயுந் திருவாலவாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவி பல பாடும் புலவர்களே.''

திருத்தொண்டர் திருவந்தாதி.)

46. புகழ்ச் சோழ நாயனார்

இமயமலையின் உச்சியில் தமது புலிக்கொடியின் அடையாளத்தைப் பொறித்தவர்கள் சோழர்கள். இவர்கள், வெண்கொற்றக் குடையின் நிழலில் இருந்து, பரந்த உலகத்தைக் காத்து இன்பம் பெருக அர்சளித்தவர்கள். இவர்கள் புகழும் வன்மையும் கொண்ட தமிழ் மன்னர்களேயாவர். இவர்களால் ஆளப்பட்ட சோழவள நாட்டில், உலகத்தின் அழகுகளெல்லாம் ஒருங்கே அமைந்துறையும் பழைய பெரிய ஊர் உறையூர் என்பதாகும்.



அளவற்ற பெரும் புகழ்பெற்ற அந்த உறையூரில் அழகிய ஒளிவீசும் சுடர்மணி விளக்குகள், இளங்கதிரவன் போல ஒளிவீசி, இரவுப் பொழுதை இல்லையென்னும்படிச் செய்யும். எல்லையில்லாத பற்பல வகைப்பட்ட பொருள்கள் யாவும் நிறைந்துள்ள கடைவீதிகள் மூவுலகத்திலும் உள்ளனவற்றை விடச் சிறந்து விளங்கும். மேகக் கூட்டங்கள் தம் இனங்கள் தானென்று கருதி வரும்படியாகக் கருமை நிறம் படைத்த யானைகள், மதநீரைப் பொழிந்து பிளிறிக் கொண்டு, வரிசை வரிசையாக யானைக் கூடங்களில் நின்று கொண்டிருக்கும். லாயங்கள் தோறும், புல்லைத் தின்று கொண்டு வாய் நீர் ஒழுகக் கனைக்கும் குதிரைகள் கடல் போல நிறைந்து விளங்கும். ஐராவதம், உச்சைச்சிரவம், இலக்குமி, கற்பகத்தரு, சிந்தாமணி, அமுதம் ஆகியவற்றை எல்லாம் தேவர்கள்

எடுத்துச் சென்று விட்டதால் வருந்திய பாற்கடலானது, அவற்றுள் ஒன்றையாவது திரும்பப் பெற விரும்பி, தேவருலகத்தையடைந்து வளைந்து சூழ்ந்து கொண்டிருப்பது போல், புறமதிலைச் சூழ்ந்த அகழிகள் நீர் நிறைந்து தோன்றும். அவ்வூரிலுள்ள கோபுரங்கள் எல்லாம் கருமேகங்கள் ஏறும். மலர்ச சோலைகளில் சந்திர சூரியஒலிகள் ஏறும். இளமங்கையரின் மார்புகளில் வார்க்கச்சைகள் ஏறும். அழகான வீதிகளிலெல்லாம், பேரழகுடைய தேர்கள் ஏறி ஓடிக்கொண்டிருக்கும்! அத்தகைய உறையூரின் வளமையையும் பெருமையையும் அளவிட்டு வர்ணிக்கவே முடியாது!

அங்கு, அநபாய சோழரின் மரபில் வந்த புகழ்ச் சோழர் என்ற மன்னர் உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்தார். செல்வத்தால் செழிப்புற்ற பரந்த உலகம் முழுதும் அவர் தம் செங்கோலின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடந்தது. அவரது நாட்டில் வைதீகச் சைவம் தழைத்தோங்கியது. அவர் சிவாலயங்கள் எல்லாவற்றிலும் நிறைந்த பெரும்பூசனைகள் விளங்கச் செய்தார். சிவனடியார்களை அடுத்து உபசரித்து, அவர்களுக்கு வேண்டுவனவற்றையெல்லாம் குறிப்பறிந்து வழங்கி வந்தார். இவ்வாறு, உறையூரில் ஆட்சி புரிந்து வருகையில் கொங்கர்களிடமும், குடபுல மன்னர்களிடமும் கப்பம் வசூலிப்பதற்காகப் புகழ்ச் சோழர் தமது குல மரபுக்கு உரிமையுடைய பெருநகராகிய கருவூருக்கு நல்லதொரு நாளிலே, தமது சுற்றத்தாரோடு சென்றார்.

முதலாவதாக அவர் அங்குள்ள திருஆனிலைத் திருக்கோயிலை அடைந்து சிவபெருமானை வணங்கினார். பிறகு ஒளி பொருந்திய அரண்மனையை அடைந்து அத்தாணி மண்டபத்தில் அரியணையில் அரசு வீற்றிருந்தார்.

அப்பொழுது புகழ்ச்சோழர், குடபுல மன்னர்கள் கொண்டு வந்த திறைப் பொருள்களாகிய யானைகளையும், குதிரைகளையும், பொற்குவியல்களையும், இரத்தின மணிகளையும் கண்காணித்து மகிழ்ந்தார். திறைகளைக் கொண்டு வந்து செலுத்திப் பணிந்த அரசர்களுக்கு, அவரவர் அரசுரிமைத் தொழிலை செய்து வரும்படி பணித்தருளித் தமது அமைச்சர்களை நோக்கி, ‘‘நமது ஆளுகைக்கு அடங்கி நில்லாமல் மாறுபட்ட அரசர்கள் ஒதுங்கியிருக்கும் காவலிடங்கள் ஏதேனும் உண்டா? உண்டாகில் அதை தெரிந்து சொல்லுங்கள்!’’ என்று கட்டளையிட்டார்.

இவ்வாறு கருவூரிலிருந்து புகழ்ச்சோழர் அரசாட்சி புரிந்து வருகையில் ஒரு நாள் சிவகாமியாண்டார் என்னும் சிவனடியார்

இறைவனுக்காகப் பறித்துக் கொணர்ந்த திருப்பள்ளித் தாமம் நிறைந்துள்ள பூங்கூடையை புகழ்ச் சோழரின் பட்டத்து யானை அச்சிவனடியாரின் கையிலிருந்து பறித்துச் சிதறடித்தது. அதனால் எறிபத்த நாயனார் என்பவர் அந்தப் பட்டத்து யானையைக் கொன்று வீழ்த்தி அதன் பாகர்களையும் கொன்றார். அந்த எறிபத்த நாயனாரின் எதிரே புகழ்ச்சோழர் சென்று, ''என் யானை செய்த இக்குற்றத்திற்கு இது போதாது; என்னையும் இதனால் கொன்றருளும்'' என்று வேண்டித் தமது உடைவாளை நீட்டித் திருத்தொண்டின் திறத்தில் மிகச் சிறந்து விளங்கினார். (இதன் விவரத்தை எறிபத்த நாயனார் கதையின் கீழ் காண்க.)

இவ்வாறு புகழ்ச் சோழர் திருத்தொண்டிலும் ஈடுபட்டு மிகச் சிறந்து விளங்கி ஆட்சி புரிந்து வருகையில் ஒருநாள் அமைச்சர்கள் அரசரை வணங்கி, ''திறைப் பொருளை முறைப்படி கொண்டு வந்து செலுத்தாத அரசன் ஒருவன் இருக்கிறான்'' என்று உரைத்தனர். உடனே புகழ்ச்சோழர் வியப்புடன் புன்னகை புரிந்து ''அவன் யார்?'' என்று வினவினார்.

''அவன் அதிகன் என்பவன்; சமீபத்திலுள்ள மலை அரணத்தின் உள்ளே வாழ்பவன்'' என்று அமைச்சர்கள் சொன்னார்கள்.

உடனே புகழ்ச் சோழர் அவர்களை நோக்கி, ''இவ்வுலகில் உங்களுக்கு எதிராக நிலைத்து நிற்கும் அரணும் உண்டோ? நீங்கள் படையெடுத்துச் சென்று அவ்வரணத்தைத் துகளாகச் செய்து, அவனது காவலையும் அழித்து வாருங்கள்!'' என்று கட்டளையிட்டார்.

அமைச்சர்கள் அரசனின் ஆணைப்படி புறத்தே வந்து கடல் போன்ற நாற்பெரும் படைகளை அணிவகுத்து, வஞ்சி மாலைசூடிப் போருக்குப் புறப்பட்டுச் சென்று, அதிகனுடைய காடும், மலையும் அரணும் பொடிபடும்படிக் கொடிய போர் விளைவித்தார்கள். அப்போது அளவில்லாத அரண்களையுடைய குறுநில மன்னனாகிய அதிகனின் வலிமையான சேனைகளும், காஞ்சிமாலை சூடிக் கடும்கோபத்தோடு எதிர்த்தன. பெருங்கடல்கள் இரண்டும் தம்முள் எதிர்த்து எழுந்தாற்போல, இருதிறத்தோரின் படைகளும் ஒன்றையொன்று எதிர்த்தன. யானைகளோடு யானைகள் எதிர் குத்தின. குதிரைகளுடன் குதிரைகள் மோதிச் சண்டையிட்டன. வீரர்களுடன் வீரர்கள் எதிர்த்துப் போர் புரிந்தனர். மலையோடு மலைகள் மோதினாற் போல வில் வீரர்கள் செலுத்திய யானைகள், தாமும் மோதி மோதிக்

கொலையுண்டன. சூறாவளியைப் போல் எதிர்த்துப் பாய்கின்ற குதிரை வீரர்கள், ஒருவரையொருவர் கொன்று உயிர் நீத்தார்கள். போர் வீரர்கள் செஞ்சோற்றுக் கடனைக் கழிக்கத் தம்முள் தாம் எதிர்த்துப் பொறாது உயிர் நீத்தனர்.

போரில் இறந்த வீரர்களுடைய உடல்களினின்றும் பெருகிய இரத்தம் ஆறுபோல் ஓடியது. இறந்த வீரர்களின் பிணக் குவியல்கள் மலைபோல் குவிந்தன. காக்கைகளும், கழுகுகளும், மற்றைய பருந்துகளும் மொய்த்துக் கூடி, உணவாகிய மாமிசத் துண்டங்களை எடுத்துக்கொண்டு, மேலே எழுந்து பறந்தன. போர்க்களத்திலே வில், கதை, சக்கரம், சம்மட்டி, வாள், சிறுசூலம், வேல், ஈட்டி, முத்தலைச் சூலம், கப்பணம் முதலான போர்க்கருவிகள் ஒன்றோடொன்று தாக்கி, முறிந்து மொய்த்துக் கிடந்தன. அதிகனுடைய சேனைகள் அழிதலும்; புகழ்ச் சோழருடைய சேனை வீரர்கள் மலைக்காவல் சூழ்ந்த அரணத்தோடு கணவாய்களையும் இடித்து நிரவினர். அம்மலைநாட்டிலுள்ள அவ்வூரை வளைத்துக் கொண்டனர். உடனே அவ்வூரின் காவலையும் அழிவு செய்தனர். வலிய சேனைகளை இழந்த அதிகன், சிதறுண்ட மதில்களைக் கொண்ட தன் ஊரைவிட்டு ஓடிப் பெருங் காட்டினுள்ளே போய் ஒளிந்து கொண்டான். புகழ்ச் சோழருடைய படைவீரர்கள் அதிகனது சேனையில் வெட்டுப்பட்ட வீரர்களின் தலைகளையும், பெண்களையும், யானைகளையும், குதிரைகளையும் கைப்பற்றிக் கொண்டனர். அதன் பிறகு அமைச்சர்கள், போர்த் தொழிலை விட்டு, வெற்றி பெற்ற தமது சேனைகளுடன் கருவூர்ப்பதிக்கு வந்து சேர்ந்தார்கள்.

கருவூர்த் திருநகரத்தின் வாயிலின் முன்னே கொண்டு வரப்பட்ட பகைவரின் தலைக்குவியல்களை பணியாளர்கள், புகழ்ச் சோழரது முன்னே கொண்டு வந்தார்கள். மண்ணுலகத்திற்கு உயிரே போன்றவராகியப் புகழ்ச்சோழர், தம்முன் கொணர்ந்த தலைக்குவியலுள் ஒரு தலையின் உச்சியில் ஒரு சிறு சடை இருப்பதைக் கண்டார். சிவனடியாரின் சின்னமான அந்தச் சடையைக் கண்டவுடனே புகழ்ச் சோழர் உடல் நடுங்கி, உளங் கலங்கிக் கைகூப்பித் தொழுது, எதிரே சென்று அத்தலையிற் சடையினை நன்கு தெரியப் பார்த்துக் கண்ணீர் பெருக்கி நின்று "முரசு முழங்கச் சென்ற என் அமைச்சர்கள் போரில் பகைவனை வென்று புகழ் பூண்ட வெற்றியைப் பெற்றதோடு பழியையும் என்முன் கொண்டு வந்திருக்கிறார்களே! இந்த உலகத்தில் திருநீற்று நெறியினை நான் பாதுகாத்து அரசு செய்யும் தன்மையின் அழகு நன்று நன்று! மிகவும் நன்று! பகையரசர் பக்கம் போருக்குரிய மாலை சூடித் தமது அரசனுக்குரிய

செஞ்சோற்றுக் கடனைச் செய்து முடித்த இந்தச் சடைமுடி வீரர் சிவபெருமானுடைய திருநெறியினிலே நின்றவராவர். இவரையோ என் சேனை கொன்றது? அறுப்புண்ட இவருடைய சடைத் தலையைச் சுமந்து வரப் பார்த்தும் நான் அரசாட்சியை சுமக்கவோ இருக்கிறேன்? இல்லை; பழியைச் சுமக்கவே இருக்கிறேன்!'' என்று கூறி, இதற்குத் தீர்வாகப் பொருந்தும் ஒரு செயலைச் செய்யத் துணிந்தார்.

அப்போது அரசர், தம் ஆணை வழியிலும், நூல் நெறியிலும் நின்ற அமைச்சர்களை நோக்கி, ''இந் நிலவுலனாகக் காத்து அரசு புரிந்து சிவபெருமானுக்கு வழித்தொண்டு செய்யும் பொருட்டு நீங்கள் என் மகனுக்கு முடிசூட்டுங்கள்!'' என்று கட்டளையிட்டார். அதைக் கேட்டு மனமழிந்து நிற்கும் அமைச்சர்களைத் தேற்றித் தமக்கு நேர்ந்த சிவாபராதமாகிய பழிக்குத் தீர்வு தாமே வகுப்பாராகிச் சிவநெறியிலே நிலைபெற்றுச் செந்தீயை முன்னர் மூட்டி ★ திருநீறுபுனைந்த திருக்கோலந் தாங்கி விளங்கினார். தாம் கண்ட சடைத் தலையை ஒரு பொற்றட்டிலே ஏந்தித் தமது முடியின்மேல் தாங்கிய வண்ணம் கொழுந்து விட்டு எரியும் தீயை வலம் வந்து திருவைந்தெழுத்தை எடுத்து ஓதிக்கொண்டு மகிழ்ச்சியுடன் தீப்பிழம்பினுள்ளே புகுந்தார்.

தீயினுட் புகுந்த புகழ்ச் சோழர், மங்கல வாத்ய ஓசைகள் ஆகாயத்தில் முழங்க, வானவர் மலர்மாரி பொழிய, சிவபெருமானது திருவடி நிழலை அடைந்தார்.

மூவேந்தர்களில் முதன்மையானவரான புகழ்ச் சோழரின் அரும்பெரும் திருத்தொண்டைப் போற்றிவிட்டு அடுத்ததாக நரசிங்க முனையரின் திறத்தை உரைப்போம்.

''பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்ச் சோழருக்கு அடியேன்.''

— சுந்தரர்

★ திருநீறு புனைந்த திருக்கோலம் : இது பிராயச்சித்தத்தின் பொருட்டு உடற்றூய்மையும், உயிர்த் தூய்மையும் உண்டாகத் திருநீறு அணிந்த வடிவமாகும்.

47. நரசிங்க முனையரைய நாயனார்

பெருவளத்தில் சிறந்து விளங்கும் திருமுனைப்பாடி நாட்டில் நீதி பிறழாத குறுநில மன்னர் மரபில் [1]நரசிங்க முனையரையர் என்ற பெயருடைய அரசர் ஒருவர் இருந்தார். இவர், சிவபெருமானுடைய திருவெண்ணீற்றையே தமக்குரிய செல்வமாகக் கருதினார். அவர் பகைவர்களை வென்று தீயநெறிகளின் செயல்களையெல்லாம் நீக்கியவர். சிவனடியார்களுடைய திருவடிகளை அடைதலே அரும்பெரும் பேறாகக் கொண்டவர். சிவபெருமானது திருக்கோயில்கள் தோறும், திருச்செல்வங்களைப் பெருக்கிக் காப்பதில் தம் உயிரையிழக்க நேர்ந்தாலும் பின்வாங்காதவர். சிவநெறித் திருத்தொண்டுகளைக் கனவிலும் மறவாமல், கடமை பூண்டு செய்து வருபவர். [2]திருவாதிரை நட்சத்திரம் வருகிற நாளில், சிவபெருமானுக்கு நியமமாக விசேட பூசை செய்து, அன்று தம்மை வந்தணையும் திருநீறணிந்த திருத்தொண்டர்கள் ஒவ்வொருவருக்கும் நூறு பசும்பொன்னுக்குக் குறையாமல் வழங்கித் திருவமுது செய்வித்து வழிபட்டு வந்தார்.

இவ்வாறு நரசிங்க முனையரையர் முறையாகத் திருவாதிரை நாளிலே சிவநெறித் தொண்டு புரிந்து வழக்கம்போல் சிவனடியார்களுக்குப் பொன்னை வழங்கி வரும்போது, தூர்த்தரான ஒரு சிவனடியாரும் வந்தார். மான நிலை அழியும் தன்மையோடு கூடிய காமவெறியின் அறிகுறிகள் அவ்வடியாரின் மேனியில் தெரிந்தன. ஆயினும் அவர் திருநீறு அணிந்துகொண்டு வந்தார். அவருடைய வடிவத்தைக் கண்டு

---

[1]நரசிங்க முனையரையர் : இவர் திருநாவலூரைச் சேர்ந்தவரென்று கருதப்படுகிறது. முனையதரையர் என்பது, குறுநில மன்னர் மரபைக் குறிக்கும். முனையதரையர் என்பது முனையரையர் என்று வந்தது. இவர், சுந்தரமூர்த்தி நாயனாரைத் தமது அபிமான புத்திரராக எடுத்து வளர்த்தவர். நரசிங்கர் என்பது இயற் பெயர். முனையரையர் என்பது சிறப்புப் பெயர்.

[2]திருவாதிரை நட்சத்திரம் : இந்த நட்சத்திரம் கூடிய நாள் சிவபெருமானுக்கு உகந்த நன்னாளாகும். அந்நாளில் சிவபெருமானை வழிபடுவது மிகச் சிறப்பு வாய்ந்தது என்று சிவாகமங்கள் கூறுகின்றன. பகவத் கீதையில் கண்ணபிரான், அர்ச்சுனனுக்கு ''நான் மாதங்களில் மார்கழியாகவும், நட்சத்திரங்களில் திருவாதிரையாகவும் இருக்கிறேன்'' என்றார். மார்கழி மாதம் திருவாதிரை நாளில் சிவாலயங்களெங்கும் ஆருத்ரா தரிசனம் நடைபெறுகின்றன.

பக்கத்திலிருந்தவர்கள் இகழ்ந்து, அவரை அணுகாமல் அருவருத்து ஒதுங்கினார்கள். நரசிங்க முனையரையரோ அந்த மோக வடிவினரின் எதிரே சென்று, கைகூப்பி வணங்கி, அவரை அழைத்துக்கொண்டு வந்து மிகவும் பாராட்டி உபசரித்தார். [1] நல்லொழுக்கம் இல்லாதவர்களேயானாலும் திருநீறு அணிந்த சிவனடியார்களை உலகத்தார் இகழ்ந்து, அதனால் கொடிய நரகத்தில் வீழாது உய்ய வேண்டும் என்று எண்ணி அங்கு வந்த அடியார்களுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் அந்தத் தூர்த்தருக்கு இரட்டிப்பாக இருநூறு பொன் கொடுத்து, அதற்கு மேலும் அவரைத் தொழுது இனிய மொழிகள் சொல்லி உபசரித்து, அவருக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

இவ்வாறு நரசிங்க முனையரைய நாயனார் பேரன்போடு திருத்தொண்டின் அரிய நெறியினில் எந்நாளும் செயலாற்றித் திருந்திய சிந்தனையுடையவராய் இருந்து சிவபெருமான் திருவடி நீழலை அடைந்து மெய்வழி அன்பின் மீளாத நிலை பெற்றார்.

அந்நாயனாரின் அடிகளைப் போற்றிவிட்டு அடுத்ததாக நாகப்பட்டினத்து அடியாரான அதிபத்தரின் தொண்டைக் கூறுவோம்.

''மெய்யடியான் நரசிங்க முனையரையர்க்கு அடியேன்''

— சுந்தரர்



[1]நல்லொழுக்கம் : உடல் பற்றிய ஒழுக்கத்தினும் உயிர் பற்றிய ஒழுக்கமே மிகச் சிறந்ததாகும்.

48. அதிபத்த நாயனார்

சூரியன் வழி மரபினராகப் பழமை பெற்ற சோழர்களின் திருக்குலத்திற்கு உரிமையுடையது காவிரி வளநாடு! பொன்னி நாடு எனும் அந்தக் கற்பகப் பூங்கொடியினிடம் அலர்ந்த



மலர்போல் நன்மையினில் மேம்பட்டு விளங்குவது நாகப்பட்டினம் என்னும் திருநகரமாகும். அங்கு முத்துமாலைகளும், மலர்மாலைகளும், கூந்தலிலிருந்து சரிந்திட இளம் பெண்கள் பந்தாடும் மேடைகள் மாளிகைகளில் சூழ்ந்திருக்கும். வானமளாவிய அழகான பொற்கடர் மாளிகைகளைக் கருங்கடல் நீரை உண்டெழுந்த கரிய மேகக் கூட்டங்கள், மலைகள் என்று மயங்கி அம்மாளிகைகளின் அருகே தவழும். பெரிய மேகங்களினின்று முழக்கமாகிய பேரொலி எழுவதாலும் இலக்குமி உறைவதனாலும், விரும்பிய பொருள்களை வழங்குவதாலும், பாற்கடலை விடப் பெரியதென்று சொல்லும்படி அந்த நகரம் அலையலைகளாக யானைகள், குதிரைகள், மணிகள், துகில்கள் முதலிய பொருட்களைக் கொணர்ந்து சொரியும். பழம்பெரும் புகழ்

படைத்த பதினெட்டு மொழிகள் வழங்கும் ★ பதினெட்டு நிலங்களிலுமுள்ள பல பொருள்களைக் கைக் கொண்ட மக்கள் சார்ந்து, பெருகி வாழ்வதாலும், கோடியாய்ப் பெருகிய செல்வர்கள் விளங்குவதாலும் அந்த அழகுத் திருநகரம் இந்த உலக முழுவதையும் தனக்குள் அடக்கிக் கொண்டு அவற்றைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி மண்டலம் போல் காட்சியளிக்கும்.

நாகைப்பட்டினத்தின் கடற்கரையோரத்தில் வலை வீசி மீன் பிடிக்கும் மீனவர் குடிகள் நிறைந்த ★ ''நுளைப்பாடி'' என்ற குப்பம் ஒன்று உண்டு.

மேகக் கூட்டங்கள் திகழ்வனபோல அவர்களது சிறு குடில்களின் பக்கத்தில் உலர வைக்கப்பட்டுள்ள மீன்களை விலைக்கு வாங்குவோர், பசும் பொற்குவியல்களை அளந்து கொண்டிருப்பார்கள். மீன் பிடிப்பதற்குப் பயன்படும் கட்டு மரத்தோணியின் தொழிலினால் வாழும் இந்தப் பரதவர்கள் கொண்டு வந்த கயல் மீன்களை பரத்தியரின் கருநெடுங் கண்களே அவை இவ்வளவுதான் விலைபெறும் என்பதை அளந்து விடும்!

உலர்ந்த மீன்களைக் கவர்ந்து செல்லப் பறவைகளுடனே அன்னப் பறவைகளும் சேர்ந்து வரும். அவை சிற்றிடை வலைச்சியரின் அழகிய நடைக்குத் தோற்று, புன்னை மரக்காட்டிலே அதன் கொம்புகளிலிருந்து இறங்காதவாறு மருண்டு கொண்டிருக்கும். வலைகளின் நீண்ட வடங்களை யிழுத்து, செம்மை செய்பவர்கள் எழுப்பும் ஒலியும், மீன் குவியல்களை விலை கூறி விற்பவர்கள் வாங்குவோரைக் கூவியழைக்கும் ஒலியும் வெள்ளிய சங்குகளைக் கொண்டு வந்து கரையினில் கொட்டுபவர்களின் ஒலியும் ஒன்று கலந்துகடலின் ஒலிக்கு எதிரொலி செய்வதுபோல் விளங்கும்.

★ பதினெட்டு நிலங்கள் : இவை சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், கோசலம், தமிழகம் என்பன.

★ நுளைப்பாடி : இது நம்பியான் குப்பம் என்று வழங்கப் பெறுகின்றது என்பர். குப்பம் என்பது கடற்கரையிலுள்ள பரதவர் சேரிக்கு வழங்கும் பெயர் ஆகும்.

இத்தகைய நுளைப்பாடியில் வாழ்ந்து, இல்வாழ்க்கை வளங்களால் திகழும் பரதவர்களது குலத்தினில் ★அதிபத்தர் என்னும் பெரியார் ஒருவர் தோன்றினார். சடைமுடியில் இளம்பிறை அணிந்த சிவபெருமானின் திருவடிகளுக்கு அவர் தொண்டு புரிபவர்; பரதவர்களுக்குத் தலைவர். பல படகுகளைக் கடல் மேல் செலுத்தி வலைகளை வளைத்து வீசி, மீன்களைப் பிடித்துக் குவிக்கும் பலவகை மீன் குவியல்கள் அளவில்லாதன பெற்றுப் பெருஞ் செல்வராய் சிறப்புற வாழ்ந்து வந்தார். அலைகடலில் குறைவில்லாமல் மீன்கள் பிடிக்கும் தொழில் வளமையுள்ள பரதவர் வலைகளால் வாரி எடுத்தலினால் அகப்படும் மீன்களில் ஒரு தலைமையாகிய மீன் அகப்படுந் தோறும் அதிபத்தர், ''இது அருட்கூத்து ஆடும் பெருமானுக்கு ஆகுக'' என்று இடையறாத அன்பினாலே விருப்புடன் எடுத்துக் கடலிலேயே தினந்தோறும் விட்டு வந்தார். வலையிலே ஒரு நாளில், ஒரே ஒரு மீனே அகப்படினும் அந்த ஒரு மீனையும் சிவபெருமானின் திருவடிக்கு என்று கடலிலேயே விட்டுவிடுவார்.

இப்படி நிகழும் நாட்களில் அநேக நாட்கள் தொடர்ந்து அவருக்குத் தினந்தோறும் ஒவ்வொரு மீனே கடலில் கிடைக்க, அந்த ஒவ்வொரு மீனையும் கடவுளுக்கே என்று கடலிலேயே விட்டு வந்தார். இதனால் அதிபத்தரது வருவாய் குன்றிச் செல்வம் குறைந்தது. அவருடைய அரிய சுற்றத்தார் உணவின்றிப் பசியால் வாடினர். ஆனால் அதிபத்தரோ வருந்தாமல் கிடைத்ததொரு மீனையும் சிவபெருமானுடைய திருவடிக்கே உரியது என்று கடலிலே விட்டு மகிழ்ந்தார். அநேக நாட்கள் இவ்வாறு நிகழ்ந்தன. அதிபத்தருக்கும் உணவின்றித் திருமேனி தளர்ச்சியடைந்தது. ஆயினும் அவர் தமது திருத்தொண்டின் செயலைச் சிறிதும் தளராமல் நிறைவேற்றி வந்தார். அச்செயலின் திறத்தை ஆலமுண்ட பெருமான் அறிந்து, இத்திருத்தொண்டரது அன்பெனும் திருவமுதத்தை உண்டு வந்தார்.

இவ்வாறு நிகழும் நாள் ஒன்றிலே இறைவன் அந்த ஓர் அற்ப மீனும் அங்கு அகப்படாதொழியச் செய்து அதற்கு மாறாக மிக அதிசயமான மீன் ஒன்று வலையில் அகப்படும்படிச் செய்தார். உலகம் முழுவதையும் விலையாக மதிக்கப்படும் தன்மையில் பொன்மயமாய்ப் பேரொளி வீசும் நவமணிகளாகிய

★ அதிபத்தர் : இது (இறைவனிடம் மிகுந்த பக்தியுடையவர்) காரணப் பெயர்.

உறுப்புகளைக் கொண்டு அந்த மீன் அதியற்புதமாக விளங்கியது. மீன் வாரி இழுக்கப்பட்ட வலை கடற்கரையில் வந்து ஏற, அதனுள் அகப்பட்ட அதிசய மீன், காலைக் கதிரவன் உதயமானாற்போல் உலகமெலாம் வியக்கும்படி பேரொளி வீசியது. அந்த மீனை வலைஞர்கள் எடுத்துவந்து அதிபத்தரிடம் அளித்து, ''ஒரு மீன் பிடித்தோம்'' என்றார்கள். அதிபத்தர் அதை வாங்கி, ''நவமணி பொலிந்த இம்மீன் என்னை ஆளுடைய சிவபெருமானுக்கே ஆகும்; அவரது பொற்கழல்களைச் சென்று சேர்க!'' என்று கூறி, அதைத் திரைகடலில் சுழற்றி வீசினார்!

எல்லா உலகும் பொருளையே முன் முதலாகக் கொள்ளும். வலிமையான பொருட் பற்றை அதிபத்தர் அறவே நீக்கியவராய் விளங்கினார். அவர் முன்பு சிவபெருமான் விடைமேல் ஏறி, விண்ணில் காட்சியளித்தார். தேவர்கள் கற்பக மலர் மழை பொழிந்தனர். ஐவகை இசைக் கருவிகள் ஆகாயத்தில் ஒலித்தன. அது கண்ட அதிபத்தர் ஆனந்தக் கண்ணீர் மல்க நிலமுற வீழ்ந்து வணங்கி, எழுந்து இரு கைகளையும் சிரமேற் கூப்பி நின்றார். சிவபெருமான் அவருக்குச் சிவலோகத்தில் அடியார்களோடு சேர்ந்து இருக்கும்படி திருவருள் பாலித்தார்.

மீன் பிடிக்கும் பரதவர் குலத்தவரேயாயினும் சிவபெருமானிடம் மெய் அன்பு கொண்டு அருந்தொண்டு புரிந்த அதிபத்தரின் அடிச்சுவடுகளை வணங்கிவிட்டு, அடுத்ததாக கலிக்கம்பரின் திருத்தொண்டைப் பகர்வோம்.


''விரிதிரை சூழ் கடல்நாகை அதிபத்தருக்கு அடியேன்''

— சுந்தரர்



49. கலிக்கம்ப நாயனார்

நடுநாட்டின் மேற்கோடியில், ''திருப்பெண்ணாகடம்'' என்னும் வல்லமை பொருந்திய ஓர் ஊர் உண்டு. அங்கு வணிகர் குலத்திலே கலிக்கம்பர் என்னும் பெரியார் ஒருவர்



வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சிவபக்தர். திருத்தூங்கானை மாடம் என்ற திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவக்கொழுந்து நாதர் திருவடிகளுக்குத் திருத்தொண்டு செய்பவர். சிவனடிப் பற்றைத் தவிர, வேறு எந்தப் பற்றும் இல்லாதவர், கறிவகைகள், நெய், தயிர், பால், கனி வகைகள் முதலானவற்றைக் கொண்டு திருவமுது செய்வித்து அவர்களுக்கு வேண்டுவனவாகிய பிற நிதியங்கள் எல்லாவற்றையும் மகிழ்வுடன் கொடுப்பார்.

இவ்வாறு கலிக்கம்பர் திருத்தொண்டு செய்துவரும் நாட்களில் ஒருநாள் வழக்கம்போல் தமது திருமனையில் அமுது செய்ய வந்த திருத்தொண்டர்களையெல்லாம் விதி முறைப்படி திருவமுது செய்விக்கத் தொடங்குமுன், அவர்களின்

திருவடிகளை விளக்கத் தொடங்கினார். அப்போது அவர் மனைவியார் அத்திருமனை முழுதும் விளக்கம் பெற விளக்கித் திருவமுதும், கறியமுதும் தூய தண்ணீரும் ஆகிய இவற்றுடனே உண்ணும் மற்றை பொருள்களையும் செம்மை பெற அமைத்து விட்டு வந்து கரகத்திலே நீர் வார்க்கக் கணவனார் அடியார்களுடைய காலடிகளையெல்லாம் விளக்கி பாதபூஜை செய்யலானார். அப்போது, முன்னாளில் தமக்குப் பணிவிடைக்காரராய் இருந்து ஏவற்பணியை வெறுத்துக் கோபித்துக் கொண்டு வெளியேறிய ஒருவர், சிவனடியார் வேடந்தாங்கி, அங்கு வந்த அடியார்களுடனே கூடி ஒருவர் பின்னால் வந்து சேர்ந்தார். கலிக்கம்பர் அவரது திருவடிகளையும் விளக்கத் தமது திருக்கரங்களினால் பற்றினார். அப்போது காதல் மனைவியார், ''இவர் முன்பு நமது ஏவலைச் செய்யாது விட்டுச் சென்றவர் போலும்'' என்று எண்ணும்போது கரகநீர், வார்க்கத் தாமதப்பட்டது. அதைக் கண்டதும் கலிக்கம்பர் தம் மனைவியாரை ஏறிட்டுப் பார்த்து ''இவள் இவ்வடியார் முன்பு இருந்த நிலையைக் குறித்து வெட்கித் திருவடி விளக்க நீர் வார்க்காது தயங்குகிறாள் போலும்'' என்று மனத்தில் நினைத்துக் கொண்டு தம் மனைவியாரை மீண்டும் பார்க்காமல் வடிவாளை உருவியெடுத்து மனைவியாரின் கையிலிருந்த நீர்க்கரகத்தையும் வாங்கிக் கொண்டு, கரக நீர் வார்க்கத் தாமதித்த தம் மனைவியின் கையைத் துண்டாக வெட்டியெறிந்தார். பிறகு கரகத்தை எடுத்து அடியாரின் பாதங்களுக்குத் தாமே நீர் வார்த்து அவருடைய பாதங்களை விளக்கினார்.

பின்னர், அவ்வடியார் திருவமுது செய்வதற்கு வேண்டிய ஏனைய செயல்களையெல்லாம் கலிக்கம்பர் தாமே செய்து துலங்காத சிந்தையுடன் அத்தொண்டருக்குத் திருவமுது செய்வித்தார். அதன் பின்னர் அளவற்ற பெருமை பெற்ற கலிக்கம்ப நாயனார், தமக்கேற்ற திருத்தொண்டின் வழியிலே வழுவாமல் நின்று சிவபெருமானுடைய திருவடி நீழலை அடைந்தார்.


முன்பு தம்மிடம் வேலைக்காரராக இருந்தவர் தாம் இப்போது சிவனடியாராக வேடம் தாங்கி வந்திருக்கிறாரோ என்று நினைத்ததும் அடியாரின் பாதபூஜைக்குக் கரக நீர் வார்க்கக் காலம் தாழ்த்திய மனைவியாரின் கையையே வெட்டியெறிந்த திருத்தொண்டரான கலிக்கம்பரின் திருவடிகளை வணங்கி விட்டு அடுத்ததாக கலிய நாயனாரின் பெருமையைக் கட்டுரைப்போம்.

''கைதடிந்த் வரி சிலையான் கலிக்கம்பன்....–
அடியார்க்கும் அடியேன்.

– சுந்தரர்

50. கலிய நாயனார்

புகழோங்கிய தொண்டை நாட்டில் சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் திருப்பதிகளில் சிறந்தது திருவொற்றியூர் என்னும் ஊராகும். அங்கு மேகங்கள் உலாவும்



மலர்ச் சோலைகளும், மதில்களும் சூழ்ந்து விளங்கும். தேர் உலவும் நீண்ட பெரிய வீதிகளில் மணி மாளிகை மாடங்களின் கொடி வரிசைகள் அசைவது கமுகஞ் சோலைகளைப் போல் விளங்கும். அவ்வூரையடுத்த கடல், பயிர்களையுடைய தோட்டம் போல் அழகு காட்டும். மண்டபங்களில் இடைவிடாமல் பதிக இசைப்பாடல்கள் ஓதப்படும். அரங்குகளில் அன்னநடை மாதர்களின் ஆடல்கள் இடைவிடாமல் நடக்கும். மக்கள் நடமாடும் வீதிகள், விழாக்களைப் போலிருக்கும். திருமடங்களில், செந்நெல் அரிசியால் சமைக்கப்பட்டு மலைபோல் குவிந்திருக்கும். மலர்களையுடைய குருக்கத்திகளும், புன்னை மரங்களும், குங்கும மரங்களும், சண்பக மரங்களும், செருந்தி மரங்களும், தாழைகளும், கடல் நீரும் முழு மணம் கமழத் தத்தம் மலர்களின் வாசனையைத் தரும். அத்தகைய கடற்கரையின் வெண் மணற் பரப்பு, செழுமையான வெண்ணிலாவின் கதிர்கள் சிதறிய

துகள்களைப்போல் விளங்கிக் கொண்டிருக்கும்! மதில்களை நெருங்கும் மேகங்களின் முழக்கமும், அலைகளை வீசும் கடலின் முழக்கமும், மக்களால் பயிலப்படும் பல இசைக் கருவிகளின் முழக்கமும் ஒன்று கூடிப் பிரித்தறிய முடியாதபடி ஒலிக்கும்!

இத்தகைய வளம் நிறைந்த திருவொற்றியூரில் எண்ணெய் ஆட்டும் செக்குத் தொழிலுடைய மரபினர் வாழ்வது சக்கரப் பாடி தெருவாகும். அது ஒளி வீசும் பலவகை மணி முதலாகிய தூய பொருள்கள் திகழும் இடமாகும். அங்கு செக்கார் குலம் செய்த முன்னைத் தவப்பயனால், கலியர் என்பவர் வந்து அவதரித்தார். அவர் சைவ சமயத்தில் சிறப்புற விளங்கியவர். சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்யும் நெறியில் நின்றவர்; தமது அளவற்ற செல்வத்தைக் கொண்டு, திருவொற்றியூர் இறைவரது திருக்கோயிலின் உள்ளும் புறமும், இரவும் பகலும் திருவிளக்கு இடுகின்ற திருப்பணியில் கலிய நாயனார் ஈடுபட்டு அழகுறச் செய்து வந்தார்.

நீண்ட நாட்கள் எண்ணில்லாத திருவிளக்கு எரித்து வந்த சிவபுண்ணியத்தின் உழைப்புடைய கலியநாயனாரின் மெய்த்தொண்டை, உலகுக்கு எடுத்துக்காட்ட சிவபெருமான் விரும்பினார். அதனால் ஆண்டவனின் சோதனையால் கலிய நாயனாரின் செல்வநிலை சுருங்கி நீங்கியது. அவரது இரு வினைகளும் சிவ புண்ணியத்தால் மாண்டொழிந்தன போல, செல்வமும் மாண்டது!

அவ்வளவு செல்வமும் அழிந்த பிறகும் கூட, கோயிலுக்கு விளக்கேற்றும் தமது திருப்பணியில் அவர் தவறவில்லை. அவர், தமது மரபில் செல்வர்களால் இருப்பவரிடத்தில், எண்ணெய் வாங்கிக் கொண்டு அதை விற்றுக் கொடுத்து, அதனால் தமக்குக் கிடைக்கும் கூலியைக் கொண்டு, திருவிளக்கேற்றும் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். நாளடைவில் செல்வர்கள் எண்ணெய் கொடுக்காததால் அவரது தொழில் தடைப்பட்டது. அதனால் அவர் மனம் தளர்ச்சியடைந்தது. அதன் பிறகு அவர், எண்ணெய்ச் செக்கு ஆட்டுமிடத்திற்குச் சென்று செக்குமாடுகளைச் செலுத்தி செக்கு ஆட்டி எண்ணெய் எடுத்து கூலி வேலை செய்து, அதனால் பெறும் கூலியைக் கொண்டு எண்ணெய் வாங்கி ஆலயத்தில் திருவிளக்கு ஏற்றி வைக்கும் திருப்பணியை வழுவாமல் செய்து வந்தார். நாளடைவில் செக்காட்டும் தொழில் செய்வோர் தொகை பெருகியதால், கலிய நாயனாருக்கு அத்தொழிலில் கிடைத்து வந்த வருவாயும் முட்டுப்பாடுற்றது.

அப்பொழுது அவர் மிகவும் மனக் கவலை கொண்டு, தமது வீட்டிலுள்ள பொருட்களையும் வீட்டையும் விற்று விளக்கேற்றி வந்தார். அவருடைய எல்லாப் பொருட்களும் தீர்ந்து விட்டன. கடைசியில் மிஞ்சிய தம் மனைவியாரையும் விற்றாவது பொருள் பெற்று விளக்கிடும் திருப்பணி புரிவதற்கு வழி தேடினார். மனமகிழ்ச்சியோடு, மனைவியாரை அழைத்துக் கொண்டு, திருவொற்றியூர் எங்கும் மனைவியாரை விலை கூறினார். ஆனால் அவருடைய மனைவியாரை பொருள் கொடுத்து வாங்குபவர் யாரையும் எங்கும் காணாமல் தளர்ச்சியுற்றார். பிறகு அவர் வேறு செயலற்று, திருக்கோயிலை வந்தடைந்தார்.

தம்மை அடிமை கொண்டு, தமது திருப்பணியை ஏற்றருளும் சிவபெருமானின் திருக்கோயிலினுள்ளே அழகு நிறையும் விளக்கேற்றும் சமயத்தில் ''மணி விளக்கு ஏற்றும் பணி நின்று விடுமானால் நான் மாள்வதே சரி!'' என்று துணிவு கொண்டார். அத்துணிவோடு நாயனார் திருவிளக்கெல்லாம் திரியிட்டு, அகல்களையெல்லாம் அழகாக வைத்துவிட்டுத் தமது திருத்தொண்டு வழுவாமல் நடைபெறும் பொருட்டு, எண்ணெய்க்குப் பதிலாக தம் உடலில் நிறைந்துள்ள இரத்தத்தைக் கொண்டே திருவிளக்குகளை நிறைக்க எண்ணினார். அந்த எண்ணத்தோடு அவர் ஒரு கருவியை எடுத்து தமது கழுத்தை அரிந்தார். அப்பொழுது பெருங்கருணையுடைய சிவபெருமான் தோன்றிக் கழுத்தை அறுக்கும் நாயனாரின் கையைப் பிடித்துத் தடுத்தருளிக் கலியனார் முன்பு மழவிடைமேல் எழுந்தருளிக் காட்சி தந்தார். கலியனார், தம் கழுத்தில் பட்ட ஊறு நீங்கி ஒளி பெற்ற மேனியுடன் தமது கைகளைத் தலைமீது தூக்கி வணங்கினார். சிவபெருமான் அவருக்குத் தமது சிவலோகத்தில் சிறப்புற்றிருக்கும்படி திருவருள் புரிந்தார்.

சிவனார் கோயிலுக்கு விளக்கேற்றும் திருத்தொண்டு தடைப்பட்டதும் தம் கழுத்தையே அறுத்துக் கொள்ளத் துணிந்த கலிய நாயனாரின் கழல் போற்றிவிட்டு அடுத்ததாக சத்தி நாயனாரின் திருத்தொண்டைக் கூறுவோம்.

''கலியன், அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்

ஓம் நமசிவாய

51. சத்தி நாயனார்

சோழர்கள் ஒரே செங்கோல் வன்மையால் எத்திசைகளிலும் வெற்றி ஸ்தம்பம் நாட்டி ஆட்சி புரிவதும், உழவர்கள் களைந்த தாமரை மலர்களின் தேன் நிறைவதுமான நீர்வளம் நிறைந்தது காவிரி நாடு! அந்நாட்டில் ★விரிஞ்சையூர்



என்னும் ஓர் ஊர் உண்டு. அந்த ஊரிலே வாய்மைப் பண்புடைய வேளாளர் குலத்தில் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு பெரும் சிவபக்தர். சிவனடியார்களைப் பற்றி இவ்வுலகில் யாராவது இகழ்ந்து பேசினால், இகழ்வோரின் நாக்கை இழுத்து அறுத்து விடுவார்! அத்தகைய சத்தி வாய்ந்தவராகையால் சத்தியார் என்று அவர் வழங்கப்பட்டார்.

சத்தி நாயனார், சிவனடியாரை இகழ்ந்து கூறும் பாதகரின் நாக்கைப் பிடுங்குவதற்காக வளைந்ததொரு ★தண்டாயத்தினால் அதை இடுக்கி இழுத்து கூரிய கத்தியினால் நாக்கை அரிந்து விடுவார். அந்த வகையில் அன்புடன் திருத்தொண்டு புரிவதில் உயர்ந்து விளங்கினார். இத்தகைய ஆண்மைமிக்க திருப்பணியை நெடுங்காலமாக அவர் அன்புடன் செய்துவந்தார். இத்தகைய வீரத்திருத் தொண்டு புரிந்துவந்த சத்தி நாயனார், உலகம் உய்யும் பொருட்டு மன்றினில் ஆடும் அம்பலவாணரின் திருவடி நிழலை அடைந்தார்.

★விரிஞ்சையூர் : இது நாகைப்பட்டினத்திற்கு அருகில் கீழ்வேளூர் (கீவளூர்) என்னும் ஊருக்குத் தென் கிழக்கில் சுமார் இரண்டு மைல் அளவில் உள்ளதாகும்.

★ தண்டாயம் : பற்றி இழுக்கும் குறடு போன்றதொரு ஆயுதம்.

நம்பிரான் அடியார்க்கும் நலம் கூறாதோரின் நாக்கை அறுக்கும் சத்தி நாயனார் நற்பாதத்தைப் பணிந்துவிட்டு அடுத்ததாக ஐயடிகள் காடவர்கோன் நாயனாரின் திருத்தொண்டைக் கூறுவோம்.

''கழற்சத்தி விரிஞ்சையர்க்கோன் அடியார்க்கும் அடியேன்''

— சுந்தரர்


52. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

புகழுடன் அரசாண்ட பல்லவர்களின் குல மரபிலே ★''**ஐயடிகள் காடவர்கோன்**'' என்ற மன்னர் ஒருவர் இருந்தார். வறுமை, பகை அவற்றால் வரும் துன்பங்கள் ஆகியவற்றைப் போக்கி, சைவ நெறி போற்றும் வழியை அறிந்து, அவர் காஞ்சீபுரத்திலிருந்து ஆட்சி புரிந்து வந்தார். அவர் செங்கோல் செலுத்திப் பெருஞ் செல்வத்தால் புகழ்பெற்று விளங்கினார். உலகிலுள்ள எல்லா உயிர்களும் பெருமையுடன் இனிது வாழுமாறு, அறநெறி தழைத்தோங்க அரசு புரிந்தார். சைவ நெறியும், வேத நெறியும் விளங்கச் செய்த அவர், பகைப்புலங்களை வென்று, தமக்கு அடங்கி ஒடுங்கியிருக்கச் செய்தார். பிற அரசர்களைத் தமது ஏவல் வழியிலே பணி செய்திருக்கச் செய்தார். வடமொழி தென்மொழி நூல்களிலும், கலை ஞானங்களிலும் அவர் வல்லவராய்த் திகழ்ந்தார்.

இவ்விதமாக சிவனெறியில் சிறந்து நின்று ஆட்சி புரிந்து வந்த ஐயடிகள் காடவர்கோன், ''இந்த அரசியல் இன்னல் தருவது ஆகும்!'' என்று அரசாட்சியை இகழ்ந்து, நீத்து தமது மைந்தனுக்கு முடிசூட்டிவிட்டுச் சிவனெறியிலே திருத்தொண்டு செய்ய முனைந்தார். சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் திருக்கோயில்கள் எல்லாவற்றையும் தரிசித்து, வணங்கித் திருத்தொண்டு புரிந்து, தாம் சென்ற ஒவ்வொரு திருத்தலத்திலும் ஒவ்வொரு வெண்பா பாடித் துதித்து வந்தார்.

★ ஐயடிகள் காடவர்கோன் : ஐயடிகள் – இது நாயனார் பெயர். இவரை நம்பியாண்டார் நம்பிகள் ''பக்திக் கடல் ஐயடிகள்'' என்று துதிப்பர். இவர் இளமையிலே கடவுள் பக்தியில் மிகுந்து விளங்கியதால் ஐயடிகள் (ஐ – தெய்வம்) என்று வழங்கப்பட்டார் போலும்.

காடவர்கோன் – இது மரபுப் பெயர். (காடவர் – பல்லவர்) ஐயடிகள் காடவர்கோனை, ஆராய்ச்சியாளர், மூன்றாம் சிம்மவர்மன் என்று கருதுகின்றனர். இவர் மகன் சிம்ம விஷ்ணு என்பவன்.



அவர் பொங்கியெழும் பெரும் காதலுடன் சிதம்பர நகருக்கும் சென்று சிவபெருமானின் திருக்கூத்தைக் கண்டு கும்பிட்டுச் ★செந்தமிழ் வெண்பாவாகிய மலரினைப் புனைந்தார்.

இவ்வாறு ஐயடிகள் காடவர்கோன், தில்லைக் கூத்தரை வணங்கி வழிபட்டுத் திருவருள் பெற்று, அங்குச் சிலநாள் தங்கியிருந்தார். பிறகு சிவ ஸ்தலங்கள் எல்லாவற்றிற்கும் சென்று, வெண்பாக்கள் பாடித் துதித்தார். சிவனடியார்கள் இன்பமுறுவதற்காகத் தமக்கிசைந்த திருப்பணிகளைப் பன்னெடுங்காலம் செய்தபின் அவர் இவ்வுலக வாழ்வை நீத்து, சிவபெருமான் திருவடியின் கீழே வழிவழி நிற்கும் அன்பர்களோடு கூடி இருந்தார்.

பரமசிவனாருக்குப் பாமாலை அணிவித்த ஐயடிகள் காடவர்கோன் நாயனாரின் பாதத் தாமரைகளை வணங்கிவிட்டு அடுத்ததாக கணம்புல்ல நாயனாரின் திருத்தொண்டை விரித்துரைப்போம்.

''ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்''

— சுந்தரர்

★ வெண்பா : இது க்ஷேத்திரத் திருவெண்பா ஆகும். இந்த க்ஷேத்திரத் திருவெண்பா 11ம் திருமுறையைச் சேர்ந்தது. தற்போது 24 வெண்பாக்களே உள்ளன. அப்பாடல்கள் யாவும் யாக்கை நிலையாமையைப் பற்றிக் கூறி மூப்பும் இறப்பும் வருமுன்னே, உடல் வலிமை உள்ளபோதே இறைவனை அடைந்து உய்ய வேண்டும் என்ற உபதேசத்தைக் கொண்டுள்ளன.

53. கணம்புல்ல நாயனார்

வடவெள்ளாற்றின் தென்கரையில் இருக்கு வேளூர் என்ற செழுமையான ஊர் ஒன்று உள்ளது. அங்கு சோலைகளிலுள்ள பெரிய பலாப்பழங்களின் நீண்ட சுளைகளிலிருந்து பொழியும் தேன்வெள்ளம் மடுக்களை நிறைத்து, வயல்களை விளையச் செய்யும்.

அங்கு ஒரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் அங்கு வாழும் பெருங்குடி மக்களுக்கெல்லாம் தலைவராக விளங்கினார். அவர், பெருஞ் செல்வம் படைத்தவர். ஒப்பற்ற பெருங்குணத்தால் மேன்மையுற்று விளங்கி வந்தார். அவர் சிவபெருமானின் திருவடிகளே உண்மையான பொருள் என்றுணர்ந்து சிவபெருமானிடம் பேரன்பு கொண்டிருந்தார். அவர் சிவன் கோயிலுக்குத் திருவிளக்கிட்டு, எரிப்பதையே தாம் பெற்ற பெருஞ் செல்வத்தின் பயனாகக் கருதி, நாள் தோறும் ஆலயத்திலுள்ள விளக்குகளுக்கு எல்லாம் எண்ணெய் வார்த்து ஏற்றி எரியச்செய்து நம்பிரானை நாவாரத் துதித்து வந்தார். இவ்வாறு திருத்தொண்டு புரிந்து வந்த அவருக்குச் செல்வம் குறைந்து வறுமை வந்தடைந்தது.

அதனால் அவர், அவ்வூரை விட்டுத் தில்லைபதியான சிதம்பர நகருக்குச் சென்றார். அங்கு அம்பலத்தில் திருநடனம் செய்தருளும் நடராசப் பெருமானின் திருவடிகளைப் பேரன்போடு வணங்கினார். பிறகு அவர் சிதம்பரத்திலேயே தங்கியிருந்து, தம்முடைய வீட்டிலுள்ள பொருள்களை எல்லாம் விற்று விற்று அங்குள்ள [1]**திருப்புலீச்சுரம்** என்னும் திருக்கோயிலில் திருவிளக்கேற்றும் திருப்பணியைச் செய்து வந்தார்.இவ்வாறு செய்துவரும் நாளில், அவர்வீட்டிலுள்ள பொருள்களெல்லாம் தீர்ந்து விட்டன. பிறகு, அவர் அயலாரிடம் சென்று யாசிப்பதற்கு அஞ்சி, தமது உடலின் முயற்சியாலே கணம்புற்களை அரிந்தெடுத்து வந்து அவற்றை விற்று அதன் மூலம்கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, நெய்வாங்கித் திருவிளக்குகளை எரித்து வந்தார். கணம் புல்லறுத்து விளக்கு எரித்ததால் அவருக்கு [2]**கணம்புல்லர்** என்ற பெயர் உண்டாயிற்று.

ஒருநாள் கணம்புல்லர் மெய்வருந்த அரிந்து எடுத்து வந்த கணம்புல்லானது, எவ்விடத்திலும் விலை போகவில்லை.

---

[1] திருப்புலீச்சுரம் : இது சிதம்பரம் பெரிய கடை வீதியின் மேல்பால் உள்ள சிவாலயம்.

[2] கணம்புல் : இஃது ஒருவகைப் புல். வீடு வேய்தலுக்குப் பயன்படுவது.



ஆயினும் அவர் தம் திருவிளக்குப் பணியைக் கைவிடாமல், அந்தப் புல்லையே கொண்டு வந்து அழகிய திருவிளக்கில் இட்டு எரித்தார். ஆனால், அந்தப் புல் வழக்கம் போல இறைவரது திருமுன்பு திருவிளக்கு எரிக்கும் முறைப்படியுள்ள முதல் சாமம் வரைக்கும் கூட எரிப்பதற்குப் போதவில்லை. அதனால் கணம்புல்லர் அடுத்த விளக்கிற்குத் தமது தலையிலுள்ள சிகையையே விளக்கில் மடித்து வைத்து பேரன்புப் பெருக்கினால் தம் என்பும் கரைந்துருகும்படி தீ மூட்டி விளக்காக எரித்தார். உடனே தலைத் திருவிளக்கு எரித்த திருத்தொண்டருக்கு சிவபெருமான் திருவருள் புரிந்தார். கணம்புல்ல நாயனார், சிவலோகத்தை அடைந்து இனிதாக வணங்கி வீற்றிருந்தார். தம்பிரானுக்குத் தலை முடியால் விளக்கெரித்த கணம்புல்லரின் தாள் வணங்கிவிட்டு அடுத்ததாக காரிநாயனாரின் திருத்தொண்டைக் கட்டுரைப்போம்.

''கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த கணம்புல்ல நம்பிக்கும் அடியேன்''

– சுந்தரர்



54. காரி நாயனார்

வேதியர் நிறைந்து வாழும் ''திருக்கடவூர்'' என்னும் பதியிலே காரியார் என்னும் ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். அவர், தம்முடைய தமிழ்ப் புலமையினால் சொற்கள் விளக்கமாகி உள்ளுறை பொருளாகிய வீடு பேற்றின் நிலை வெளித் தோன்றாமல் பொருள் மறைந்து கிடக்கும்படி தமது பெயரால் ★ காரிக்கோவை என்ற நூலை இயற்றினார். அதனால் தமிழ் மூவேந்தரிடமும் சென்று, மன்னர்களின் நட்பைப் பெற்றார். அவர்கள் மகிழும் வண்ணம் தம் நூலை விரித்து பொருளுக்கேற்ற சொற்களை உரை நயம் பெறக் கூறி, பெருஞ் செல்வக் குவியல்களையும் பெற்றார்.



அவர், மூவேந்தர்களிடம் பெற்று வந்த நிதிக் குவியல்களைக் கொண்டு பிறைசூடிப் பெருமான் இனிதமரும் சிவன் கோயில்கள் பலவற்றைக் கட்டினார். யாவரும் மனம் உவக்கும்படி இன்பமொழிப் பயன் இயம்பி சிவனடியார்களுக் கெல்லாம் பெரும் நிதியங்களை அன்புடன் அளித்து வந்தார். சிவபெருமானின் திருக்கயிலாய மலையை எப்பொழுதும் மறவாமலிருந்தார்.

★ காரிக்கோவை : இது அகப்பொருட்டுறைக் கோவை நூல் ஆகும். இந்நூலைப் பற்றிய விபரம் ஒன்றும் அறிதற்கில்லை.

இவ்வுலகில் அவர் தம் புகழை நிலைநிறுத்தி, இடையறாத அன்பினால் சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று, மனம் போலவே அமைந்த உடலுடன் கூடி, ஜீவன் முக்தராய் வடகயிலை மலைக்குப் போய்ச் சேர்ந்தார்.

அம்பலவாணரின் அடிபேணும் காரியாரின் கழல் வணங்கி அடுத்ததாக மதுரையில் சந்திரகுல மரபில் தோன்றிய நெடுமாற நாயனாரின் திருத்தொண்டைக் கூறுவோம்.

''காரிக்கும் அடியேன்''

— சுந்தரர்

55. நின்றசீர் நெடுமாற நாயனார்

பாண்டிய நாட்டில், மதுரை மாநகரில் ஏழுலகங்களிலும் தமது பெருமை விளங்கும்படி நெடுமாறனார் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் சமண நெறியையே தவநெறியென்று கருதி, சமணர்களது சூழ்ச்சியிலகப்பட்டு உழன்றார். பிறகு திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் திருவடிகளை அடைந்து சைவத்தை மேற்கொண்டு, பாண்டிய நாடு முழுவதிலும் சிவமணம் பெருகச் செய்தார். திருவைந் தெழுத்தின் நெறியாகிய சைவ நெறியைக் காத்தார்.

பாண்டிய நெடுமாறனார் நெல்வேலிப் போர்க்களத்தில் தம்முடன் போர் செய்ய வந்த வடநாட்டுப் பகையரசரோடு, தமது நால்வகைச் சேனைகளையும் அணிவகுத்துச் சென்று போரிட்டார். அதன் பிறகு இருதிறத்துப் படைவீரர்களும் போரிட்டு வெட்டி வீழ்த்திய யானைகளின் உடற்றுண்டங்களும், குதிரைகளின் உடல்கள் அறுபட்ட துண்டங்களும், போர் வீரர்களின் மலை போலக் குவிந்த தலைகளும் ஆகிய இவற்றினின்றும் வரும் இரத்தப் பெருக்குக் கலக்கப்பெற்ற கடலானது, முன்னே உக்கிர குமார பாண்டியன் பெருகி வந்த கடல் சுவர் வேல் வாங்கியது போல, மீளவும் இவர் வேல் வாங்கும்படி பெருகி நின்றது. குதிரைகளின் கனைப்பு ஒலி யும் வீரர்களின் படைக் கலங்களின் ஒலியும் யானைகளின் பிளிற்றொலியும், இசைக் கருவிகளின் ஒலியும் ஒன்று சேர்ந்து ஊழிக் காலத்து மேகங்களின் முழக்கமோ என்று நினைத்து, உக்கிரகுமார பாண்டியன் போல, அவற்றைச் சிறையிடுதற்கு விலங்கை விடுக்கும்படி ஒலித்தன. போர்க்களத்தில் வெட்டுண்ட உடல்கள் தோய்ந்து கிடக்கும் குருதி நிறைந்த

மடுவில், பூதங்களும் பேய்களும் குளித்து நிணங்களை உண்டு கூத்தாடின. இத்தகைய கொடும்போர் மூளும்படி பொருத போர்க்களத்தில் யானைப்படையுடைய பாண்டிய மன்னனின் சேனைகளிடம் வடபுலத்தரசனுடைய சேனைகள் சிதைந்து தோற்றுப் போயின. அப்போது பாண்டியர் பெருமானாகிய நெடுமாறனார், தமது வேப்ப மாலையுடன் வாகை மாலையையும் சேர்த்து அணிந்தார்.



சோழ மன்னரின் திருமகளாராகிய மங்கையர்க்கரசி அம்மையாரை மணந்து இல்லறத்தில் மகிழ்ந்து நெடுமாறனார் சிவத்தொண்டுகளையெல்லாம் சிறப்புறும்படி விளங்கச் செய்து, சிவனருள் பெருகும்படி ஆட்சி புரிந்தார். உலகில் திருநீற்று நெறியாகிய சிவநெறி விளங்க நெடுங்காலம் அரசு புரிந்தபின், சிவபெருமான் திருவருளாலே எல்லாராலும் போற்றப்படும் பெரிய சிவலோகத்தையடைந்து பணிந்து இன்புற்றிருந்தார்.

நாவுக்கரசரின் நாவன்மையால் சிவனடியாராக மாறிய தென்மதுரை நெடுமாறனாரின் செங்கமலக் கழல்களை வணங்கிவிட்டு அடுத்ததாக வாயிலாரின் திருத்தொண்டைக் கூறுவோம்.

''நிறைக் கொண்ட சிந்தையான் நெல்வேலிவென்ற

நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்

✽ ✽ ✽

56. வாயிலார் நாயனார்

தொண்டை நாட்டில் சிறந்த வளங்கள் நிறைந்ததும், வாய்மையிற் சிறந்த பெருங்குடி மக்கள் வழி வழியாகப் பெருஞ் செல்வத்துடன் வாழுவதுமான ஊர், திருமயிலாப்பூர் ஆகும். அங்கு, அருகிலுள்ள கடலானது தன்னிடமுள்ள மணி முதலிய நிதிகளை வைப்பதற்குத் தேடிப் பெற்றதொரு பெரிய பண்டாரம் என்று கூறும்படியாக மரக்கலங்களைத் தள்ளிக் கொண்டிருக்கும். கடற்கரைக் கானலின் இடங்கள் எங்கிலும் மரக்கலங்கள் அயல்நாடுகளில் இருந்து கொண்டு வந்து



இறக்கிய யானைக் கன்றுகளும் எருமைக் கன்றுகளும் கடலிற் படிந்து அணைகின்ற மேகங்களோடு பிரித்து அறியக்கூடாத நிலையில், நிறவொப்புமையோடு விளங்கும். வீதிகள் எங்கும் விழாச் சிறப்புகளின் அலங்காரங்கள் நிறைந்திருக்கும். மாதர்களின் கூந்தல்களில் காளையர்களின் தூதராக இயங்குவன போலக் கருவண்டுகள் மொய்த்திருக்கும். அழகிய மாளிகைகள் எங்கும் நிதிகளும் அணிகளும் நீங்காமல் நிலைத்திருக்கும். இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமயிலாப்பூரில் வேளாளர் குலத்தில் ★வாயிலார் என்னும் பெரியார் ஒருவர் தோன்றினார்.

பழமையாகிய பெருங்குடியில் சிறப்புற்ற வாயிலார், சிவ பெருமானுக்குத் திருத் தொண்டு புரிவதில் பெருவிருப்புடன் விளங்கி வந்தார். மறவாமையாகிய கருவியினால் அமைந்த

★ வாயிலார் என்பது குறுக்கையர் – சேக்கிழார் – என்பன போல ஒரு குடிப் பெயராகும். இவ்வாயிலார் என்ற பெயர் இறைவனை அடைந்து, நன்மை பெறுதற்கு வாயில் – வழி ஆகவுள்ளவர் என்பது பொருள்.

மனமாகிய கோயிலிலே, சிவபெருமானை எழுந்தருளச் செய்து, அப்பெருமானை உணருகின்ற ஞானம் என்ற சுடர் விளக்கை ஏற்றி வைத்துப் பேரானந்தம் என்ற திருமஞ்சனமாட்டி, அன்பு என்ற திருவமுதை அமைத்து அர்ச்சனை செய்து ஞான பூஜையை நாள்தோறும் செய்து வந்தார்.

வாயிலார் இவ்வாறு தமது மனதுக்குள்ளாகவே செய்து வந்த அகப்பூஜையினால், சிவபெருமானை நெடுங்காலம் அன்போடு இடையறாது வழிபட்டு, இறுதியில் சிவபெருமானது திருவடி நிழலையடைந்தார்.

மங்கையொரு பாகரான சிவபெருமானைத் தம் மனக்கோயிலிலே வைத்து ஆராத அன்பினால் அர்ச்சனை செய்து பெரும்பேறு பெற்ற அப்பெருந்தகையாரைப் போற்றிவிட்டு அடுத்ததாக திருநீடூர் முனையடுவாரின் திருத்தொண்டைக் கூறுவோம்.

''துறைக் கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதி

தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்

57. முனையடுவார் நாயனார்



பகைவர்களை வென்று உலகத்தைக் காக்கும் சோழ வளநாட்டில், நறுமணங் கமழும் சோலைகளின் மலரரும்புகள் பொழியும் தேனானது, பெருக்கெடுத்தோடும் வெள்ளத்துடன் கலந்து, வயல்களில் பாய்ந்து கொண்டிருக்கும். அந்த வெள்ளத்தைக் கொண்டு, உழவர்கள் வயலை உழும்போது, சேறுகூட நறுமணங் கமழும்! அத்தகைய செல்வவளம் நிறைந்த ஊர் திருநீடூர் ஆகும்.

அவ்வூரில் வள்ளல் தன்மை மிகுந்த வேளாளர் மரபில் தோன்றிய சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானின் திருவடியிடத்துப் பேரன்பு கொண்டவர். போர்முனையில் பகைவர்களை வென்று அதன் மூலம் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு சிவனடியார்களுக்கு

வாரி வழங்கித் திருத்தொண்டு புரிந்து வந்தார். போரில் பகைவர்களுக்குத் தோற்றவர்கள் தம்மிடம் வந்து தமது துணையை நாடினால், அவர்களிடம் பெருநிதியம் பெற்று இயமனும் அஞ்சும்படிப் போர் செய்து பெரும் வெற்றி பெற்று, அதற்கு இசைந்த கூலியாகிய பொன்னையும் பெறுவார்.

அதனால் அவரை யாவருமே முனையடுவார் என்று வழங்கி வந்தனர். அவர் தாம் பெற்ற பொருளையெல்லாம் சிவனடியார்களுக்கு வழங்கி வந்தார். அன்றியும், நற்சோறு, வெல்லம், நெய், கறி, தயிர், பால், பழம் முதலியவற்றுடன் சிவனடியார்களுக்குத் திருவமுதும் அளித்து வந்தார்.

இவ்வாறு முனையடுவார் திருத்தொண்டுகள் செய்து கொண்டு சிவநெறியில் நின்று, இவ்வுலகில் பன்னெடுங்காலம் வாழ்ந்த பிறகு உமையாள் கணவரான சிவபெருமானின் திருவருளினால் சிவலோகத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

போர்முனையில் வெற்றியோடு விளையாடி அதனால் கிடைக்கும் பொருளைக் கொண்டே திருத்தொண்டு புரிந்த முனையடுவாரின் பூங்கமலப் பாதங்களைப் போற்றிவிட்டு அடுத்ததாகக் காவலர் கழற்சிங்கரின் திருத்தொண்டைக் கட்டுரைப்போம்.

''அறைக் கொண்ட வேல்நம்பி முனையடுவார்க்கு அடியேன்''

— சுந்தரர்

58. கழற்சிங்க நாயனார்

உலகத்தில் பழமையான காடவர் (பல்லவர்) குலத்தில் ★கழற்சிங்கர் என்ற அரசர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் கங்கையணிந்த சிவபெருமானின் திருவடிகளை யன்றி வேறு ஒன்றையும் தமது அறிவினில் ஒரு பொருளாகக் குறியாத சிந்தனையாளராகத் திகழ்ந்தார். அவர் சிவபெருமானின் திருவருளினால் போர்க்களங்களுக்குச் சென்று ★ வடபுலத்துப் பகையரசர்களைப் போரில் வென்று, அவர்களது நாடுகளைக் கைப்பற்றி, அறநெறி தவறாமல் ஆட்சி புரிந்து வந்தார்.

★ கழற்சிங்கர் : இது (கழலையணிந்த சிங்கம் போன்றவர்) காரணப் பெயர். இக் கழற்சிங்க மன்னரை 'மூன்றாம் நந்தி வர்மர்' என்பர். இவனது பட்டத்தரசியின் பெயர் சங்கா. அவள் சமணச் சார்புடையவள். நல்ல அழகி. அமோகவர்ஷ நிருபதுங்கன் மகள் என்பர்.

★ வடபுலத்திலுள்ள பகையரசர்கள் : இவர்கள்தாம் சாளுக்க அரசர்கள் என்பர்.



அவர், சிவபெருமானின் திருக்கோயில்கள் பலவற்றிற்கும் சென்று, பேரன்போடு இறைவனை வணங்கி மெய்யான திருத்தொண்டுகள் செய்து வந்தார்.

இவ்விதமாக அவர், பல சிவ ஸ்தலங்களை வழிபட்டு வரும்போது சிவபுரி என்று வழங்கும் படியான தென் திருவாரூரை அடைந்து, அரசியல் ஆயத்தராகிய ஐவகைக் குழுக்கள் சூழ, திருக்கோயிலினுள் சென்று, புற்றிடங் கொண்ட பெருமானை வணங்கினார்.

அப்போது அவருடைய உரிமைத் தேவியர்களில் சிறப்பான பட்டத்தரசியார், திருக்கோயிலை வலம் வரும்போது அங்குள்ள கலையழகு பெருமை முதலான வற்றை யெல்லாம் தனித் தனியே கண்டு மயிலின் சாயலோடு மெல்ல நடந்து சென்றாள். ஒருபுறம் இறைவனுக்குத் திருமாலை கட்டும் பெரு மண்டபத்தின் அருகே வந்தாள்.

அங்கு ஒரு புதிய மலர் கீழே விழுந்து கிடந்தது. அதைக் கண்ட கழற்சிங்கரின் மனைவி ஆவலோடு அதையெடுத்து மோந்தாள். அவ்வாறு ஆண்டவனுக்குரிய புதுமலரைப் பட்டத்தரசி மோந்து பார்க்கும் போது அதைக் கண்ட செருத்துணையார் என்ற திருத்தொண்டர் சினங்கொண்டார்.

''இறைவனுக்குரிய புதுமலரைத் திருமுற்றத்திலிருந்து ஒரு பெண் எடுத்து மோந்து பார்ப்பதா? இது பெரும் சிவ அபராதமாகும்!'' என்று அவர் துணிந்து விரைவாக ஓடிச் சென்று கருவியொன்றை எடுத்துக் கொண்டு வந்தார்.

இலக்குமி போன்ற பட்டத்தரசியின் கூந்தலைப் பிடித்து இழுத்து தரையில் வீழ்த்தி அவளது மூக்கை ஒரு கையினால் பிடித்து அறுத்து விட்டார்.

கலாப மயில் போன்ற பட்டத்தரசியின் அரிந்த மூக்கிலிருந்து இரத்தம் பெருகி வழியவும், கூந்தல் அவிழ்ந்து அலையவும், சோர்வடைந்த அவள் நடுநடுங்கிக் கீழே விழுந்து ஓவென்று புலம்பினாள். அந்தச் சமயத்தில் மன்னர் கழற்சிங்கர், புற்றிடங் கொண்ட பெருமானை வணங்கிவிட்டு அங்கு வந்தார். அங்கு மலர்ந்த கற்பகத்தின் நறுமணம் கமழும் பூங்கொம்பு ஒன்று நிலத்தின் மேல் விழுந்து கிடப்பது போல், புலம்பும் தம் தேவியாரைப் பார்த்து, ''இங்கு இக்கொடிய செயலைச் சிறிதும் அஞ்சாமல் செய்தது யார்?'' என்று கழற்சிங்கர் கேட்டார்.

செருத்துணை நாயனார் அங்கு வந்து நிகழ்ந்ததைக் கூறினார். அவர் கூறியதைக் கேட்டதும் கழற்சிங்கர் ''அப்படியா? இறைவனுக்குரிய பூவை முதலில் எடுத்தது கையன்றோ? அதையல்லவா முதலில் துணித்தல் வேண்டும்?'' என்று சொல்லி, தமது உடைவாளை உருவி, தமது காதல் மனைவியான பட்டத்தரசியின் சிவந்த கையை, அதில் அணிந்திருந்த வளையலோடும் அப்படியே வெட்டி வீழ்த்தினார்.

இத்தகைய செயற்கரும் செய்கையைக் கண்ட அமரர்கள் பூமாரி பொழிந்தார்கள். திருத்தொண்டர்களும் ஹரஹர என்று முழக்கம் செய்தனர்.

கழற்சிங்க நாயனார் பன்னெடுங்காலம் அரசாண்டு சிவத்தொண்டு புரிந்து, இறுதியில் சிவபெருமான் திருவடி நிழலை அடைந்தார்.

மங்கையொரு பாகனான சிவபெருமானுக்கு உரிய ஒரு சிறு பூவைக் கையால் எடுத்து மோந்து பார்த்தாள் என்பதற்காகத் தம் காதலுக்குரிய மாபெரும் தேவியின் வளைக்கரத்தை வெட்டியெறிந்தார் கழற்சிங்கர். அவருடைய கழல்களைத் தொழுது போற்றிவிட்டு அடுத்ததாக இடங்கழியார் எனும் மெய்யருள் தொண்டரின் செயலை விளம்புவோம்.

''கடல் சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர் கோன் கழற்சிங்கன அடியார்க்கும் அடியேன்''

— சுந்தரர்

59. இடங்கழி நாயனார்



அலைகள் மேன்மேலும் எழுந்து வரும் பெருங்கடலாகிய ஆடையை அணிந்திருக்கும் பெரிய நிலமாகிய பெண்ணின் மார்பில், இலைகள், மலர்கள் முதலிய வடிவங்களை அழுத்திச் சித்தரித்த தொய்யலின் அணியைப் போல் மான் துளிர்களைக் கோதும் குயில்கள் நாடுகிற நாடு [1]கோனாடு ஆகும். அந்தக் கோனாட்டின் தலைநகரம் [2]கொடும்பாளூர் என்பதாகும். அந்நகரில் பொன்னம்பலத்து முகட்டைக் கொங்கு நாட்டுப் பசும் பொன்னால் வேய்ந்த ஆதித்த சோழனது மரபில், இருக்கு வேளிர் என்ற குறுநில மன்னர் குலத்திலே இடங்கழியார் என்ற பெரியார் ஒருவர், பெரும்புகழுடன் விளங்கி வந்தார். அவர் சிவபெருமானுக்குத் திருவடித் தொண்டு புரிவதையன்றிப் புறச்சமயத்தைக் கனவிலும் கருதாதவர். அவரது ஆட்சியில் சைவம் தழைத்தோங்கியது. சைவ நெறியும், வைதீக நெறியும்

---

[1] கோனாடு : இது திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மறவ நாட்டில் கானாடு, கோனாடு என்ற இரு நாடுகளில் ஒன்றாகும்.

[2] கொடும்பாளூர் : இது திருச்சிராப்பள்ளி, மணப்பாறை நிலையத்தினின்றும் தென்கிழக்கே, புதுக்கோட்டை செல்லும் பெரு வழியில் சுமார் பன்னிரண்டு மைலில் இருக்கிறது. கொடும்பாளூரைச் சிலப்பதிகாரம் 'கொடும்பை' என்று கூறுகிறது.

வளரும் பொருட்டு சிவபெருமானது திருக்கோயில்கள் எங்கும் சிவாகம விதிப்படி, வழிபாடுகள் செய்ய ஏற்பாடுகள் செய்தார்.

இடங்கழியார் அரசு புரிந்து வரும் காலத்தில் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விக்கும் தவமுடையார் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒருநாள் சிவனடியார்களுக்குத் திருவமுது ஆக்குவதற்குரிய பண்டங்கள் எங்கும் அகப் படாமையால் அவர் நியதிக்கு தடைப்பாடு உண்டாயிற்று. அதனால் அவர் மனந்தளர்ந்தார். எப்படியாவது நெல் பெற வேண்டுமேயென்று பெருவிருப்பம் கொண்டார். அதனால் இடங்கழியாரின் அரண்மனைக்குள் நள்ளிரவில் அவர் ஒரு திருடனைப்போல் புகுந்தார். அங்கு பண்டாரத்தில் நெற்கூட்டி லிருந்த நெல்லை அவர் முகர்ந்து எடுத்தார். நாழிகைப்படி இரவு முழுவதும் காவல் முரசு முழக்கும் காவலர்கள், அதைக் கண்டு அந்தச் சிவனடியாரைப் பிடித்துத் தங்கள் அரசரான இடங்கழியார் முன் கொண்டு வந்தார்கள்.

மன்னர் அவரை நோக்கி, ‘‘ஏனய்யா நெல்லைத் திருடினீர்?’’ என்று கேட்டார்.

அதற்கு அவர், ‘‘சிவனடியார்களுக்கு திருவமுது செய்விப்பது எனது வழக்கம், பொருளின்மையால் அது முட்டுப்பட்டது. அதனால் இவ்வாறு செய்தேன்!’’ என்று சொன்னார்.

அதைக் கேட்டதும் இடங்கழியார் மனமிரங்கி, ‘‘இவரன்றோ எனக்குப் பண்டாரமாவர்!’’ என்று அவரை விடுதலை செய்தார். பிறகு அவர், நிலையழிந்த உள்ளத்தோடு, ‘‘சிவனடியார்கள் எல்லோரும் நற்பண்டார மட்டுமேயன்றி குறைவில்லாத மற்றைய நிதிகளின் பண்டாரங்களாகிய எல்லாவற்றையும் கொள்ளையாக முகர்ந்து கவர்ந்து கொள்க!’’ என்று எங்கும் பறைசாற்றும்படிச் செய்தார். அந்தக் கொள்ளைக் காட்சியைக் கண்டு அவர் மனமகிழ்ந்தார். இவ்வாறு இடங்கழி நாயனார் நெடுங்காலம் அரசு புரிந்து, சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்தார்.

அத்தகைய இடங்கழியாரின் கழல்களை வணங்கிவிட்டு அடுத்ததாக சிவபெருமான் நெறியன்றி வேறொன்றையும் மேலாக அறியாத செருத்துணை நாயனாரின் திருத்தொண்டை மொழிவோம்.

‘‘மடல் சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்கும்...அடியேன்’’

— சுந்தரர்

60. செருத்துணை நாயனார்

காவிரி பாயும் சோழ நாட்டின் ஒரு பகுதியாகிய மருகல் நாட்டிலுள்ள [1]தஞ்சாவூர் என்பது, உள்ளும் புறமும் குல ஒழுக்கத்தினின்றும் வழுவாத குலநெறியினைக் கொண்ட பழங்குடி மக்கள் வாழும் ஊராகும். அவ்வூரில் வேளாளர் மரபில் [2]செருத்துணையார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபக்தியிலும் சிவனடியார் பக்தியிலும் சிறந்த மெய்யன்பர்.



அவர் திருவாரூரை அடைந்து திருத்தொண்டுகள் பல செய்து வந்தார். திருவாரூர்ப் பூங்கோயிலில் உரிய காலங்கள் தோறும் வன்மீக நாதரை வழிபட்டார். அக்காலத்தில் ஒருநாள் காடவர்கோன் கழற்சிங்கருடைய பட்டத்துப் பெருந்தேவி,

---

[1] தஞ்சாவூர் : இத் தஞ்சாவூர், கீழைத் தஞ்சாவூர் எனவும் வழங்கும்; இது நன்னிலம் தாலுகா திருமருகலின் தென்கிழக்கில் சுமார் 5 மைலில் உள்ளது.

[2] செருத்துணையார் : இவர் ஒரு குறுநில மன்னவர் என்றும் திருவாரூர் குமரக் கோட்டத்தில் வசித்தவர் என்றும் கூறுவர்.

திருப்பூ மண்டபத்தின் பக்கத்தில் கீழே விழுந்து கிடந்த ஒரு புது மலரையெடுத்து மோந்து பார்த்தாள். அதைக் கண்டு பொறாத செருத்துணை நாயனார் ஒரு கூர்மையான கத்தியை எடுத்துக் கொண்டு விரைந்தெழுந்து சென்று பட்டத்தரசியின் கூந்தலைப் பிடித்திழுத்து கீழே படியில் தள்ளினார். அரசியின் அழகான மூக்கைப் பிடித்து, ''திருக்கோயில் திருப்பூ மண்டபத்திலுள்ள மலர்கள், சிவபெருமான் திருமுடியில் ஏறத் தக்கவை. அத்தகைய ஒரு மலரை எடுத்து மோந்து அபராதம் செய்த இந்த மூக்கை தண்டிப்பேன்'' என்று கூறி, அந்த மூக்கை கத்தியால் அறுத்து விட்டார். இவ்வாறு இத்திருத்தொண்டை உலகறியச் செய்த ஆண் சிங்கம் போன்ற செருத்துணை நாயனார், பலகாலம் சிவத்தொண்டு செய்து, சிவபிரானது திருவடி நீழலையடைந்து இறவா இன்பம் எய்தினார்.

அவருடைய கழல்களை வணங்கிவிட்டு அடுத்ததாகப் புகழ்த்துணையாரின் உரிமைத் தொண்டை எடுத்துரைப்போம்.

''தஞ்சை மன்னவனாஞ் செருத்துணை தன் அடியார்க்கும் அடியேன்''

— சுந்தரர்


61. புகழ்த்துணை நாயனார்

[1]செருவிலிப்புத்தூரில், சிவவேதியர் குலத்தில் ஒரு பெரியார் இருந்தார். அவர் மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானுக்கு [2]அகம்படிமைத் தொண்டு செய்து வந்தார். அவர் பெயர் புகழ்த் துணையார்.

புகழ்த்துணையார், சிவபெருமானை சிவாகம விதிப்படி அர்ச்சித்து வழிபட்டு வரும் நாளில் உலகில் பஞ்சம் தோன்றியது. மக்கள் யாவரும் உணவின்றிப் பசியால் மிகவும் வருந்தினர். புகழ்த் துணையாரோ, ''எமது பெருமானை நான் விடுவேனல்லேன்'' என்று குளிர்ந்த நீரினைக் கொண்டும் பன்மலர் கொண்டும் இரவு பகலாக இறைவனை அர்ச்சித்து

[1] செருவிலிப்புத்தூர் : இது அரிசிற்கரைப்புத்தூர் என்றும் அழகாத்திரிப்புத்தூர் என்றும், அழகார்புத்தூர் என்றும் வழங்குகிறது. இத்தலம் கும்பகோணத்திற்குத் தெற்கில் குடவாசலுக்குச் செல்லும் பெருவழியில் சுமார் 5 மைலில் உள்ளது.

[2] அகம்படிமைத் தொண்டு : இறைவன் திருமேனி தீண்டுதல், திருமஞ்சனம் எடுத்தல், அலங்கரித்தல், நிவேதித்தல், பூசித்தல், கற்பக் கிரகத்தைச் சுத்திபுரிதல் முதலியன.



வந்தார். ஒருநாள் அவர் சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டி (நீராட்டிக்) கொண்டிருக்கும்போது, மிகுந்த பசி நோயால் வருந்தி, நிலை தளர்ந்து, திருமஞ்சனக் குடத்தைத் தூக்க முடியாமல் கைதவறி, சிவபெருமானுடைய திருமுடியின்மீது விழுந்துடையும்படி கை நழுவவிட்டு விட்டு, நடுநடுங்கிச் சோர்ந்து தாமும் விழுந்தார். சங்கரர் தம் திருவருளால் அவருக்கு ஓர் உறக்கம் வந்தது. சிவபெருமான் அவரது கனவில் தோன்றி ''இந்தப் பஞ்சகாலம் தீரும்வரை உனக்கு நாம் நாள்தோறும் ஒவ்வொரு பொற்காசு இங்கு வைப்போம்!'' என்று கூறி மறைந்தார். புகழ்த்துணை நாயனார் துன்பம் நீங்கித் துயில் நீங்கி எழுந்தார். அப்போது சிவபெருமான் தமது பீடத்தின் கீழே, ஒரு பொற்காசு வைத்தருளினார். பெரும்பசியினால் வாடிய புகழ்த்துணையார், அந்தக் காசைக் கைக்கொண்டு முகமலர்ச்சி பெற்று மகிழ்ந்தார்.

இவ்வாறே பஞ்சம் நீங்கும்வரை, இறைவர் நாள்தோறும் அளித்து வந்த பொற்காசைக் கொண்டே துன்பம் நீங்கியபின், சிவபெருமானுக்கு அகம்படித் தொண்டு புரிந்து, புகழ்த்துணையார் பலகாலம் வாழ்ந்தார். பிறகு தேவர்கள் சேரும்படியான சிவபெருமானின் திருவடியில் சேர்ந்து இன்புற்றார்.

மாதொரு பாகரை மனத்துணையாகக் கொண்டு பெரும்பேறு பெற்ற புகழ்த்துணையாரின் மலரடிகளை வாழ்த்திவிட்டு அடுத்ததாக தனிப்பெரும் வீரரான கோட்புலி யாரின் செயலுரைப்போம்.

''புடைசூழ்ந்த புலியதன்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும்
அடியேன்''

— சுந்தரர்

62. கோட்புலி நாயனார்

சோழவள நாட்டிலுள்ள திருநாட்டியத்தான் குடியிலே வேளாளர் மரபினில் [1]கோட்புலியார் என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சோழ மன்னரது சேனைத் தலைவராக விளங்கினார். பகைவர்களை எதிர்த்துப் போரிட்டு, புகழும் வெற்றியும் கொண்டு திகழ்ந்தார். அரசரிடம் தாம் பெறும் சிறந்த செல்வ வளங்களையெல்லாம் கொண்டு சிவபெருமானின் திருக்கோயில்கள்தோறும் திருவமுதுக்குரிய செந்நெல்லை வாங்கி நெல்லை மலைச்சிகரம் போல் சேமித்து வைப்பார். அதுவே அவருடைய தனிப்பெரும் திருத்தொண்டு! அத்திருப்பணியை அவர் நெடுங்காலம் செய்து வந்தார்.

இவ்வாறு திருப்பணி செய்து வரும் காலத்தில் அவர் அரசனது ஆணையை ஏற்று, போர்முனைக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அப்போது சிவபெருமானின் திருவமுதுக்காக தாம் திரும்பி வரும்வரையில் தேவைப்படும் அளவு செந்நெல் நெற்கூடுகளைக் கட்டி அக்கூடுகளில் நெல்லை சேமித்து வைத்தார். பிறகு அவர் தமது சுற்றத்தார்கள் எல்லோரையும் தனித்தனியே கூப்பிட்டு, ''சிவபெருமானுடைய அமுதுபடிக்காக நான் சேமித்து வைத்துள்ள இந்நெற்கூடுகளை எக்காரணம் பற்றியும் உங்களுக்கென்று எடுத்துச் செலவழிக்கக் கூடாது. அப்படி செலவழிக்க உங்கள் மனத்தினாலாவது நினைத்தீரென்றால், [2]திருவிரையாக்கலி'' என்று கூறி இறைவன் ஆணை வைத்துவிட்டுப் போர் முனைக்குச் சென்றார்.

---

[1] கோட்புலியார் : இக்கோட்புலியார் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு மிக நண்பர் என்பதன் வரலாற்றை ஏயர்கோன் கலிக்காம நாயனார் வரலாற்றில் காண்க.

[2]திருவிரையாக்கலி : திருவருளாணை; சிவனது ஆணை. விரையாக்கலி – ஆணை; உறுதிமொழி. ''பொய்தீர் விரையாக்கலி யெனும் ஆணையும்'' என்பது 'கோயில் நான்மணிமாலை' 4ம் பாடலின் அடி ஆகும்.



கோட்புலியார் போருக்குச் சென்ற சில நாட்களுக்கெல்லாம் அந்த நாட்டில் கொடும் பஞ்சம் வந்தது. கோட்புலியாரின் சுற்றத்தார்கள் ''உணவுப் பொருள் இல்லாமல் நாம் மாண்டுபோவதைக் காட்டிலும் இறைவரின் திருவமுதுக்காகச் சேமித்து வைத்திருக்கும் நெல்லையெடுத்துப் பயன்படுத்திக் கொள்வோம். பஞ்சம் நீங்கியபின் திரும்பக் கொடுத்து விடுவோம்'' என்றெண்ணித் துணிவு கொண்டு நெற்கூடுகளைக் குலைத்து நெல்லையெடுத்துப் பயன்படுத்தினார்கள்.

கோட்புலியார், போர் முனையில் வெற்றி கொண்டு மன்னரிடம் நிதி பெற்றுத் திரும்பினார். வழியில் தம் சுற்றத்தார்கள் செய்த பிழையை அறிந்தார். ஆனால் அவ்வாறு தாமறிந்த செய்தியைப் பிறரறியாதபடி மறைத்துக் கொண்டு ''அச்சுற்றத்தாரையெல்லாம் வெட்டி வீழ்த்துவேன்'' என்று துணிவு கொண்டு வந்தார்.

வெற்றி வீரராகத் திரும்பிய கோட்புலியாரை, அவரது சுற்றத்தார்கள் எதிர்கொண்டு வரவேற்றார்கள். கோட்புலி நாயனார் அவர்களுக்கு இனியமொழி கூறிவிட்டு வீடு சேர்ந்தார்.

அவ்வூரிலுள்ள தமது சுற்றத்தாருக்கெல்லாம் பைந்துகிலும் நிதியமும் தருவதாகக் கூறி, தமது மாளிகைக்கு

அழைத்தார். எல்லோரும் வந்து சேர்ந்ததும், அவர்களுக்குப் பெருநிதியம் கொடுப்பவர்போலக் காட்டித் தம் பெயருள்ள கோட்புலி என்னும் காவலாளனை தலைவாயிலிருந்து காவல் செய்யும்படி வைத்தார். பிறகு ''இறைவரது வலிய ஆணையையும் மறுத்து, இறைவர் அமுதுக்குரிய நெல்லை அழித்து அடாத செயல்கள் புரிந்த இவர்களைக் கொல்லாமல் விடுவேனோ?'' என்று மிகச் சினந்தெழுந்து தம் தந்தை, தாய், உடன் பிறந்தார், மனைவியர்கள், சுற்றத்தார்கள், ஊரிலுள்ள உரிமையடிமைகள் இன்னும் அமுதுபடி நெல்லை அழித்துண்ண இசைந்தவர்கள் எல்லோரையும் தம் உடைவாளால் வெட்டி வீழ்த்தினார்.

அதன்பிறகு ஒரே ஓர் ஆண் குழந்தை மட்டும் எஞ்சி நின்றது. நாயனார் அதையும் கொல்ல அதன்மீது பாய்ந்தபோது, வாயிற்காப்போன் அவரைப் பார்த்து, ''பெருமானே! இந்தக் குழந்தை என்ன செய்தது? இது சிவன் சோற்றை உண்ணவில்லையே? ஒரு குடிக்கு ஒரே பிள்ளை! இந்தக் குழந்தையை வெட்டாது அருள் புரியும்!'' என்று கெஞ்சினான்.

அதற்கு, கோட்புலி நாயனார், ''இந்தக் குழந்தை சிவன் சோற்றை உண்ணவில்லை என்பது உண்மைதான்! ஆயினும் அந்தச் சோற்றை உண்டவளின் முலைப்பாலை உண்டது!'' என்று கூறி அந்தக் குழந்தையையெடுத்து மேலே வீசியெறிந்து, வாளினால் இரு துண்டாக விழும்படி வெட்டித் தள்ளினார். அந்நிலையில் சிவபெருமான் தோன்றி, ''புகழோய்! உன்னுடைய கையிலேந்திய வாளினாலே வெட்டுண்ட உன் சுற்றத்தார்கள், எல்லோரும் பாசம் நீங்கப் பெற்றார்கள். அவர்கள், யாவரும் பொன்னுலகை விடச் சிறந்த உலகையடைந்து, அதன் பிறகு நமது உலகத்தினைச் சார்வர். நீ இந்நிலையிலேயே நம்முடன் வருவாயாக!'' என்று கூறி அன்பான கோட்புலி நாயனாரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு எழுந்தருளினார்.

அத்தனாய் அன்னையாய் ஆருயிராய் அமிர்தமாகி முத்தனாம் முதல்வன் தன் திருவடிகளை அடைந்து சுற்றத்தாரைத் தண்டித்த கோட்புலியாரின் அடிகளை வணங்கிவிட்டு அடுத்ததாகப் பத்தராய்ப் பணிவார் தம் தன்மையைப் பகர்வோம்.

''அடல் சூழ்ந்தவேல் நம்பி கோட்புலிக்கும் அடியேன்''

— சுந்தரர்

63. பத்தராய்ப் பணிவார்

சிவபெருமான் திருவடிக்கே அன்பு பூண்டு, பக்தியுடன் தவத்தோடு பணிபவர்கள் பத்தராய்ப் பணிவார் ஆவர். அண்ணலார் அடியார்கள் எவரையும் தாம் கண்டால் உள்ளம் கூச, மிகவும் குதூகலமடைந்து கொண்டாடி மனமகிழ்வார்கள். பசுவைத் தொடர்ந்து செல்லும் கன்றைப்போல அடியார்களைத் தொடர்ந்து செல்வார்கள்.



பேசுவன வெல்லாம் இனிய மொழி களாகவே பணிவுடன் பேசுவார்கள். எவரேனும் சிவ அர்ச்சனை செய்வதைக் கண்டால், இனிது மகிழ்ந்து, வணங்கி, அவர்களது பாவனையாலும் அருள் நோக்கத்தாலும் பலரும் காணும்படிப் பயன் பெறுவார்கள். தாங்கள் கொள்ளும் அன்பின் திறத்தாலே மேம்பாடுடையவர்களுக் கெல்லாம் மேம்பாடுடையவர்களாகத் திகழ்வார்கள். சிவபெருமானையும் சிவனடியார்களையும் தெவிட்டாத பெரு விருப்பத்தினால் மேன்மேலும் உவகை பொங்க விரும்பிப் பூஜிப்பார்கள்.

பத்தராய் விளங்குவோர், தாம் செய்யும் செயல்கள் எதுவாக இருந்தாலும் அவையெல்லாம் ‘‘இறைவரின் திருவடிக்கே சேரும் தகுதியுடையவனவாகுக!’’ என்று அன்பினோடு சிவப்பணிகளைச் செய்வார்கள். பிறவிக் குழியில் விழாதவர்கள் அவர்களது புகழுக்கு இவ்வுலகத்தையெல்லாம் ஒப்பாகக் கூறினும் போதாது. அவர்கள் சிவபெருமானைப் பற்றிய கதைகளைக் கேட்கப் பெரிதும் விரும்புவார்கள். சிவபெருமானிடம் தாம் கொண்ட

அன்பின் பெருக்கை அயலார் அறியாது ஒழுகும் திறத்தாலே, அவரது செந்தாமரை மலர்களைப்போன்ற திருவடிகளை அடைவதற்கு உரியவராவார்கள். சிவபெருமானைப் பணிந்து, உள்ளம் உருகுவார்கள். அதனால் உள்ளூற எழும் இன்பப் பெருக்காலே மகிழ்வடைந்து, நாத்தழு தழுத்த வண்ணம் பேசுவார்கள். கண்களினின்று ஆனந்தக் கண்ணீர் பெருகி ஓட, மெய்சிலிர்க்க, உடல் நடுங்க செயலற்று நிற்பார்கள்.

இத்தகைய மெய்க்குணம் வாய்ந்த பக்தர்கள் என்னும் திருத்தொண்டர்கள் நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்து சென்றாலும், உண்டாலும், உறங்கினாலும், விழித்தாலும், கண் இமைத்தாலும், மன்றாடும் பெருமானின் மலர்ப்பாதங்களை ஒருபோதும் மறவாத மனம் கொண்டவர்களாயிருப்பார்கள்.

அவர்கள் சிவபெருமானுக்கே ஆளாகிய தவக்கோலத்தை மேற்கொண்டு, சிவநெறியை உலகிற்கு உணர்த்தி, அதனால் ஏற்படும் பயனை உலகம் பெறும்படிச் செய்து, தாமும் பெறுவார்கள். சிவபெருமானுடைய திருவடிகளில் வணங்கி மேன்மேலும் பொங்கியெழுகிற சித்தத்துடனே பணிபவர்கள், பத்தராய்ப் பணிவார் ஆவார்கள்!


''பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்''

– சுந்தரர்



64. பரமனையே பாடுவார்


முப்புரங்களை எரித்தவரும், பாம்புகளை ஆபரணமாக அணிந்தவரும், இணையற்ற பெரும்பொருளாய் விளங்குபவரும் உலகமனைத்தையும் தமது மாயா சக்தியால் உருவாக்கியவரும், கருவி காரணங்களால் காணப்படாதவராயினும் உலகில் நின்று நிறைந்து காட்டுபவருமாகிய சிவபெருமானையே பாடுவர்களது பெருமையை எடுத்துச் சொல்வோம்.



பரமனையே பாடுவார், தமிழ்மொழி, வடமொழி, பிறதேச மொழி இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயின்று பிரமனும், விஷ்ணுவும் காணப்பெறாத சிவபெருமானையே மெய்ப் பொருளாகக் கொண்டு இயல் இசைப் பாடல்களை மெய்யுணர்வுடன் உள்ளமுருகப் பாடும் மெய்யடியார் ஆவார்கள்.

''பரமனையே பாடு வார் அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்



65. சித்தத்தை சிவன்பாலே வைத்தார்

பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவம் என்ற காரணக் கடவுளர் ஐவருக்கும் முறையே உரிய இருதயம் கண்டம், உண்ணாக்கு, புருவமத்தி, பிரம்ம ரந்திரம் என்ற ஸ்தானங்களைக் கடந்து மேலே சென்று, நிறை உடையதாய், மெய்ப் பொருளாய், சுயஞ் சோதியாய் உள்ள பரமசிவமானது ஞானஒளி வீசித் திகழும் நாதாந்தத்தில், சிவயோக நெறியில் சித்தத்தை சிவன்பாலே வைத்திருப்பார்கள். இவ்வாறு பொன்னம்பலத்தில் திருக்கூத்தாடும் சிவபெருமானுடைய திருவடித் தொண்டின் வழியிலே நின்று அவரை அடைந்தவர்கள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் ஆவார்கள்.

காரணபங்கயம் ஐந்தின்
கடவுளர் தம் பதம் கடந்து
பூரணமெய்ப் பரஞ்சோதி
பொலிந்திலங்கு நாதாந்தத்
தாரணையாற் சிவத்தடைந்த
சித்தத்தார் தனி மன்றுள்
ஆரணகா ரணக் கூத்தர்
அடித்தொண்டின் வழியடைந்தார்

''சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்''

– சுந்தரர்

66. திருவாரூர்ப் பிறந்தார்

உருவமற்றவராகவும், உருவமுடையவராகவும் எல்லாப் பொருளுமாகி நின்ற பெருமானும் உமாதேவியாரின் மணவாளருமாகிய சிவபெருமான் மனமகிழ்ந்து வீற்றிருக்கும் திருவாரூரில் பிறந்தவர்களுடைய பெருமையைச் சிறியேனது வாக்கினாலே தெரிந்து உணரும்படி உரைப்பது இயலுந் தன்மையாகுமோ? திருவாரூரில் பிறந்தவர்கள், திருக் கயிலாயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானின் கணங்களே யாவார்கள். ஆகையால் ஐம்பொறிகளையும் அடக்கி, அவர்களுடைய திருவடிகளை வணங்கி ஒரு மனப்பட்டவர்க்கே உயர்ந்த நன்னெறியாகிய வீடு கிட்டுவதாகும்.

''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்''

– சுந்தரர்

67. முப்போதுந் திருமேனி தீண்டுவார்

உயிர்களிடத்து எக்காலத்தும் அன்பு கொண்டவராகிய சிவபெருமானைச் சிவாகம விதிமுறைமைகள் தவறாத வண்ணம், ஆசையும் அன்பும் பெருக, காலை, நண்பகல், மாலை என்ற மூன்று காலத்திலும் அர்ச்சனை செய்பவர்கள் [1]ஆதிசைவ முனிவர்கள் ஆவார்கள்.



முன் கூறிய மூன்று காலத்திலும் இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆக மூன்றாகப் பகுக்கப்படும் எக்காலத்திலும் வழி வழியாக அர்ச்சனை செய்யும் திருத் தொண்டானது [2]சிவ வேதியர்களுக்கே உரியனவாம். அப் பெருந்தகையாரது குலப்பெருமையை, எம்மால் புகழப் படுமோ? புகழப் பட்டால் அடங்குமோ? அடங்காது!

"முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்"

– சுந்தரர்

---

[1]ஆதிசைவர் : இவர் சதாசிவ மூர்த்தியின் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற ஐந்து முகங்களின் வழியே சிவ சிருஷ்டியில் வந்த அகத்தியர். கௌதமர், பாரத்துவாசர், காசிபர், கௌசிகர் என்ற, பஞ்சரிஷிகளின் கோத்திரத்தில் தோன்றியவராவர்.

[2] சிவவேதியர்க்கே என்றதனால் மற்றைய வேதியர் முதலிய யாவர்க்கும் உரியனவல்ல.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்கும் பொல்லா வியாதியாம்,
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமும் ஆமென்றே,
சீர்கொண்ட நந்தி தெரிந்து உரைத்தானே!

– திருமூலரின் திருமந்திரம்.

68. முழுநீறு பூசிய முனிவர்

யாவற்றுக்கும் ஆதாரமாயும், எல்லாப் பொருள்களுமாகியும் நின்ற சிவபெருமான் அருளிச் செய்த சிவாகமங்களினுள்ளே [1]அகற்பம் என்ற ஒரு வகையை நீக்கி கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்ற மூவகைத் திருநீற்றை (விபூதியைத்) தயாரிக்கும் முறையைக் கூறுவோம்.

1. கன்றை ஈன்று அணிமையுடையதும், நோய் இல்லாததுமாகிய பசுவின் சாணத்தைச் சத்தியோசாத மந்திரம் கூறிக் கையிலேற்றுக் கோசலம் (பசுவின் சிறுநீர்) விட்டுப் பிசைந்து, உலர்த்திச் சிவமந்திரம் கொண்டு உண்டாக்கப்பட்ட சிவாக்கினியாகிய ஓமத் தீயில், சிவபெருமானுடைய திருவடிகளை நினைத்து இட்டுத் தகித்து எடுத்த தூய திருநீறு, கற்ப விபூதி என்று போற்றப்படும்.

2. காற்றினில் உலர்ந்து கிடக்கும் பசுச் சாணத்தைக் கொண்டுவந்து நுண்ணிய பொடியாக்கி, பசுவின் சிறுநீர் விட்டுப் பிசைந்து அத்திர மந்திரத்தினாலே உருண்டையாகப் பிடித்து, உலர்த்தி, ஓமத் தீயிலிட்டு வெந்தபின் கைக்கொள்ளும் திருநீறு அநுகற்ப விபூதி என்று போற்றப்படும்.

3. பசுக்கள் மேயும் காட்டிலுள்ள மரங்கள் பற்றியெரிந்து வெந்த நீறும், பசுக்களின் சாணம் இருக்குமிடங்கள் தீப்பற்றிக் கொள்ள வெந்த நீறும், செங்கற்கள் சுட்ட தீயிலுண்டாகிய நீறும் ஆகிய இவற்றை ஒன்றாகச் சேர்க்காமல், தனித்தனியாகப் பசுவின் சிறுநீர் விட்டுப் பிசைந்து உருண்டை செய்து உலர்த்தித் திருமடங்கள் விளங்கும் சிவாக்கினியில் விதிப்படி தகித்து எடுத்த விபூதி, உபகற்ப விபூதி என்று வழங்கப்படும். இந்த மூன்று வகை விபூதிகளில் ஏதேனும் ஒன்றைச் சிறிது கையிலெடுத்து, அகமும் புறமும் சுத்தம் உண்டாகும்படி பாவித்து ஒரு சிறிது நிருதி மூலையில் (தென்மேற்கில்) அத்திர மந்திரத்தினால் தெரிந்த பின்பு பூசிக் கொள்ள வேண்டும். சிவசந்நிதி முன்பும், ஓமத் தீயின் முன்பும், குருவின் முன்னிலையிலும், நடக்கும் வழியிலும், தூய்மையற்ற இடங்களிலிருக்கும் பொழுதும் திருநீறு அணியலாகாது. திருநீற்றை உத்தூளனமாகவேனும், திரிபுண்டராகமாகவேனும் (மூன்று

[1]அகற்பம் : இது மலை, பூமி, இடிவிழுந்த இடம் இவைகளில் தானே உண்டாகிய விபூதி. இவ்விபூதி தீட்சையில்லாதவர்களுக்குரியது. மற்றைய மூன்று விபூதிகளும் தீட்சையுடையார்க்கு உரியன.

கீற்றுகள் வடிவாகவேனும்) பிறைவடிவமாகவேனும், சிவாகம விதிப்படி அன்போடு அணிதல் வேண்டும். ஜாதி ஒழுக்கத்தில் சிறந்தவர்கள், தத்துவ நெறி உணர்ந்தவர்கள், நீதிநெறி பிழையாதவர்கள், மும்மலங்களையும் அறுத்த முனிவர்கள் முதலியோர் சிவாக்கினியில் விதிப்படி விளைவித்தெடுத்த திருநீற்றை, புதிய பாத்திரத்தில் வைத்துக் கொண்டு, சிவபெருமானை வணங்கித் துதித்து, அந்தத் திருநீற்றை திருமேனி முழுவதும் பூசுவார்கள். இத்தகையவர்களே முழுநீறு பூசிய முனிவர்கள் என வழங்கப்படுவார்கள்.

''முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்'

– சுந்தரர்

69. அப்பாலும் அடிச்சார்ந்தார்



சேரசோழ பாண்டியர் என்ற மூவேந்தர்களின் நாடாகிய தமிழ் வழங்கும் நாடுகளுக்கு [1]அப்பாலுள்ள நாடுகளில் தோன்றிச் சிவபெருமானுடைய திருவடியை அடைந்தவர்களும் திருத்தொண்டத் தொகையிலே சொல்லப்பட்ட திருத்தொண்டர் களாகிய தனியடியார்களின் காலத்துக்கு முன்னும் பின்னும் சிவபெருமான் திருவடிகளைச் சார்ந்தவர்களும் அப்பாலும் அடிச்சார்ந்தார் ஆவர்.

''அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்''

– சுந்தரர்

[1] அப்பாலுள்ள நாடு : இது தமிழ்நாடு அல்லாத 17 நாடுகள் ஆகும். இந்நாடுகளிலும் சிவனடியை சார்ந்த திருத்தொண்டர்கள் உண்டு என்பதாகும்.

70. பூசலார் நாயனார்

இந்த உலகத்தில், எக்காலத்திலும் நல்லொழுக்கம் உயர்ந்தோங்கும் பெருமையுடையது தொண்டை நாடு. அந்நாட்டில் நான்கு வேதங்களும் விளங்குவதற்கு இடமாகிய பழைய ஊர் [1]திருநின்றவூர் ஆகும். இவ்வூரில் அந்தணர் மரபில் பூசலார் என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார்.



அவர், தமது உணர்வுகளனைத்தையும் சிவபெருமான் திருவடியிலே சாரும்படி செய்தவர். நன்னெறியாகிய சிவனெறி பிறழாத அன்பு நெறி வளர்ந்தோங்க தாமும் வளர்ந்தவர். உண்மைப் பொருளைப் பெறுவதற்கு ஏதுவாகிய வேதம், நீதி முதலிய கலைகளைக் கற்றுணர்ந்தவர். சிவனுக்கும் சிவனடியார்களுக்கும் பணி செய்வதையே மனிதப் பிறவியின் கடமையென்ற துணிவு கொண்டவர். எவ்வகையாலும் பொருளைத் தேடி அடியவர்களுக்குக் கொடுப்பவர். சிவபெருமான் எழுந்தருளியிருப்பதற்கு திருக்கோயில் ஒன்று அமைக்க பூசலார் நினைத்தார். அதற்கான பொருள்களைத் தேட முயன்றார். எவ்வளவோ வருந்தித் தேடியும் பொருள் கிடைக்கவில்லை! அதனால் ‘‘இனி என் செய்வேன்’’ என்று வருந்தினார். ஆலோசித்தார். முடிவில் பிறைமதியணிந்த பெருமானுக்குத் தம் மனத்தினாலேயே திருக்கோயில் கட்டத் துணிந்தார். அதற்கு வேண்டிய திரவியங்களையெல்லாம் தம்

---

[1] திருநின்றவூர் : இவ்வூர் இப்பொழுது தின்னனூர் என்று வழங்கப்படுகிறது. இத்தலம் தின்னனூர் நிலையத்திலிருந்து தெற்கில் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது.

மனக் கற்பனையாலேயே சிறிது சிறிதாகத் தேடித் தம் மனத்தினுள் சேர்த்துக் கொண்டார்.

திருக்கோயில் கட்டுவதற்குரிய சாதனங்களோடு, தச்சர்களையும் நல்லதொரு நாளையும், நல்ல வேளையையும் குறித்துக் கொண்டு, சிவாகம விதிப்படி அடிநிலை கோலி னார். அன்பின் நிறைவினாலே, ஆசையினால் இரவிலுங்கூடக் கண்துயிலாமல் தம் மனதிற்குள் ஒரு கோயில் கட்டலானார். அடிவரி முதல் உபாதான வரி முதலாக வரும் அடுக்குகள் எல்லாவற்றையும் சிற்ப வேலைப்பாடுகள் பொருந்த, திருக்கோயிலை மனத்தினாலே எழுப்பினார். விமானத்தின் முடிவில் வரும் சிகரத்தை ஒரு முழ அளவுள்ளதாகக் கொண்டு, நீண்ட நாட்கள் செல்லக்கோயிலை நிறைவுபட நினைப்பினாலேயே செய்தார். ஸ்தூபியையும் நட்டார். சுதை வேலைகளைச் செய்து முடித்தார். கிணறெடுத்தார்; மதிலெடுத்தார்; திருக்குளமும் எடுத்தார். இப்படியாகத் தம் மனத்தாலேயே கட்டிய திருக்கோயிலில், சிவபெருமானை ஸ்தாபிக்க ஒரு நல்ல நாளையும் நல்ல வேளையையும் குறிப்பிட்டார்.

இது இப்படியிருக்க, காடவர்கோனாகிய பல்லவ அரசன் காஞ்சீபுரத்தில் கற்கோயில் ஒன்றைக் கட்டி எழுப்புவித்து, அதில் சிவபெருமானை ஸ்தாபிக்க ஒரு நாளையும் வேளையும் நியமித்திருந்தான். அந்த தினத்திற்கு முதல் நாள் இரவிலே அரசனது கனவிலே சிவபெருமான் தோன்றி, ''திருநின்ற ஊரில், பூசல் என்ற பெயருடைய அன்பன் ஒருவன் இருக்கிறான். அவன் நீண்ட நாட்களாக நினைத்து நினைத்து எழுப்பிய நல்லதோர் ஆலயத்திலே நாம் புகுவோம். ஆதலின், உனது ஆலயப் பிரதிஷ்டையை நாளை ஒழிந்து பின்னர் வைத்துக் கொள்வாயாக!'' என்று கூறிவிட்டு, பூசலாரின் மனக்கோயிலினுள் கொண்டருளப் போனார். பூசலாரின் திருத்தொண்டை உலகத்தார் அறியச் செய்யும் பொருட்டு சிவபெருமான் கூறிச் சென்றதும், மன்னன் காடவர்கோன் துயிலுணர்ந்து எழுந்து, ''அத்தகைய திருப்பணி செய்த மெய்யன்பரை நான் சென்று வணங்க வேண்டும்'' என்று பெருங்காதல் கொண்டான். உடனே தம் பரிவாரச் சேனைகளோடு திருநின்ற ஊருக்கு வந்து சேர்ந்தான். அங்கிருந்தவர்களை அவன் ஏறிட்டு நோக்கி ''இங்குப் பூசலார் என்னும் அன்பர் கட்டிய திருக்கோயில் எந்தப் பக்கத்தில் இருக்கிறது?'' என்று கேட்டான்.

அதற்கு அவர்கள் ''இங்கு நீங்கள் சொல்லிய பூசலார் கட்டிய கோயில் ஒன்றும் இல்லையே!'' என்றார்கள். மன்னன் அதைக் கேட்டு அவ்வூர் அந்தணர்களையெல்லாம் வருக

என்று அழைப்பித்தான். வேதியர்களெல்லாம் வேந்தனைக் காண வந்தார்கள். அப்போது அரசன் அவ்வேதியர்களை நோக்கி ''மாசிலாப் பூசலார் தாம் யாவர்?'' என்று கேட்டான்.

அதற்கு மறையவர்கள், ''அவன் ஒரு வேதியன். இவ்வூரைச் சேர்ந்தவன்தான்!'' என்று கூறிவிட்டு பூசலாரை அழைத்து வருவதற்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது பல்லவ மன்னன் காடவர் கோன் அவரைப் போய் அழைத்துவர விடாமல் தானே பூசலாரிடம் சென்றான். பூசலாரைக் கண்டு அவன் தொழுது, ''அடிகளே! நீர் இங்கு கட்டிய சிவன்கோயில் எங்கே இருக்கிறது? அந்தத் திருக்கோயிலின் பிரதிஷ்டை நாள் இன்று என்பதை சிவபெருமான் அருளால் அறியப்பெற்றேன். அதனால் உம்மைக் கண்டு அடி வணங்க வந்தேன்!'' என்று சொன்னான்.

இவ்வாறு மன்னன் சொல்லக் கேட்ட மெய்யன்பரான பூசலார் மருண்டு நோக்கி, ''என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு, இறைவர் அருளிச் செய்தாரோ? அவருக்கு நான் திருக்கோயில் கட்ட முயன்றேன். பொருளோ கிடைக்கவில்லை. அதனால் நான் மானசீகமாக ஒரு மனக்கோயிலைக் கட்டினேன்'' என்று சொல்லி, தாம் கட்டிய அகக்கோயில் முறையை விளக்கினார். அதைக் கேட்டு காடவர்கோன் வியந்து, ''என்னே மெய்யன்பரின் பெருமை!'' என்று அவரைப் போற்றித் தரைமீது விழுந்து நாயனாரைத் தொழுது வணங்கி விடைபெற்றுக் கொண்டு பரிவாரச் சேனைகளோடு தன் நகருக்குத் திரும்பிச் சென்றான்.

அன்பராகிய பூசலாரும், தன் மனத்தினால் அமைத்த ஆலயத்தில் நல்ல வேளையில் சிவபெருமானை ஸ்தாபித்து சிலகாலம் அர்ச்சனை வழிபாடு செய்து இறுதியில் அம்பல வாணரின் பொன்னடி நீழலில் புகுந்தார்.

நினைப்பினால் மனக்கோயில் எழுப்பிய மெய்யன்பரான பூசலாரின் பொற்றாள் போற்றிவிட்டு அடுத்ததாகப் பாண்டிமா தேவியான மங்கையர்க்கரசியார் திருத்தொண்டைக் கூறுகிறேன்.

''மன்னிய சீர் மறைநாவன நின்றவூர்ப் பூசல்... அடியேன்''

— சுந்தரர்

71. மங்கையர்க்கரசியார்



மங்கையர்க்கரசியார் என்பவர் மங்கையர்களுக் கெல்லாம் தனி அரசியாக விளங்கியவர். சோழர்களின் குலக்கொழுந்து! "மானி" என்னும் திருநாமமுடையவர். செந்தாமரை மலரில் வாழும் இலக்குமியைப் போன்றவர். நின்றசீர் நெடுமாறப் பாண்டியருக்கு மனைவியாகித் தம் கணவரின் சமணச் சார்பால் பாண்டிய குலத்திற்கு நேர்ந்த பழியைத் தீர்த்தவர். தெய்வப் பாவை போன்றவர். தமிழ் நாட்டிற்கு வந்த இடரினை சண்பையர் கோனாகிய திருஞான சம்பந்தரின் அருளால் போக்கிச் சைவ சமயத் திருநீற்று நெறியை பாண்டிய நாடெங்கும் பரவச் செய்தவர்.

திருஞான சம்பந்தர் சிவஞானம் உண்டு பொழிந்த தூய திருவாக்கினாலே புகழ்ந்து காட்டப்பெற்ற பெருமையும் முந்தைத் தவமும் உடையவர் மங்கையர்க்கரசியம்மையார்! அத்தகையவரின் பெருமையை நாம் என்னென்றுதான் போற்ற வல்லோம்? புகழ் கொண்ட பாண்டிய மன்னனாகிய நின்றசீர் நெடுமாறனாருக்கு, சைவத் திறனில் வழித்துணைவியாராகி நீண்டகாலம் வாழ்ந்திருந்து, அதன் பிறகு, சிவநெறியிலே நின்று தம் நாயகரோடு சிவபெருமானது திருவடி நீழலை அடைந்து திருவருளில் நிலை பெற்றிருக்கும் பெரும் பேறு பெற்றார் மங்கையர்க்கரசியார்!

அத்தகைய மங்கையர்க்கரசியாரின் மலரடிகளைப் போற்றிவிட்டு அடுத்ததாக சாலியர் குலத்தில் தோன்றிய நேச நாயனாரின் திருத்தொண்டைக் கூறுவோம்.

''வரிவளையாள் மானிக்கும்... அடியேன்''

– சுந்தரர்

72. நேச நாயனார்

உலகில் புகழோங்கிய பழம்பெரும்பதி [1]"காம்பீலி" என்னும் நகரமாகும். அன்பு மிக்க சிந்தையும் வாய்மையும் சிறப்புமிக்க செயல்களில் முதன்மையான நல்லொழுக்கமும் குறையாத நன்மையும் வாய்ந்த பெரியோர்கள் வாழுவதற்கு அது அருமையான இடமாகத் திகழ்ந்தது. அந்தத் திருநகரத்தில் சாலியர் குலத்தில் [2]நேசர் என்ற நெசவாளி ஒருவர் இருந்தார். அவர் தமது மரபுக்கேற்ற துணி நெய்யும் நெசவுத் தொழிலில் மேன்மையுற்றிருந்தார். அவர், சிவனடியார்களுடைய திருப்பணியைத் தம் தலைமையானதாக ஏற்றுக் கொண்டு, அவர்களது திருவடிகளைத் தலையில் சூடித் துதிக்கும் அன்புடையவர். அவர் தம் மனத்தின் செய்கையைச் சிவபெருமானின் திருவடித் தாமரைக்காக ஆக்கினார். வாக்கின் செய்கையை, திருவைந்தெழுத்து ஓதுவதற்காகவே ஆக்கினார். கைத்தொழிலின் செய்கையைச் சிவனடியார்களுக்காக ஆடையும் கீளும் கோவணமும் நெய்து சிவனடியார்களுக்கு வேண்டியவாறு அளித்து வந்தார். அவர் நாள்தோறும் சிவனடியார்களின் திருவடிகளை வணங்கித் துதித்து அதனால் அடையும் நன்மையைப் பெற்று, சிவபெருமானின் திருவடி நீழலை அடைந்தார்.

அவரைப் போற்றி வணங்கிவிட்டு அடுத்ததாக ஆலயங்கள் பல கட்டிய கோச் செங்கட் சோழ மன்னரின் பெருமையைக் கூறுவோம்.

''நேசனுக்கும் அடியேன்''

– சுந்தரர்

[1] காம்பீலி : இது விஜய நகரத்திற்கு வடக்கில் துங்கபத்திரை நதிக்கரையில் சுமார் இருபத்தி ஐந்து மைலில் உள்ளது.

[2] நேசர் : இவர் மாயூரம் கொர நாட்டில் வசித்தவர் என்று கூறப்படுகிறது.

73. கோச் செங்கட் சோழ நாயனார்

சோழ நாட்டிலே சிபிச் சக்கரவர்த்தி என்னும் மன்னர் ஒருவர் இருந்தார். அவர் தம்மிடம் அடைக்கலம் புகுந்த ஒரு புறாவின் எடைக்குச் சமமாகத் துலைத் தட்டில் தனது உடல் தசையை நிறுத்துக் கொடுத்த பெருமை வாய்ந்தவர்; அவரது மரபில் வரும் சோழர்களுக்கு உரிமையாகிய சோழ நாட்டிலே காவிரி நதியானது, தன் அலைக் கரங்களினால் முத்துக்கள், அகிற் கட்டைகள், பலவகை மணிகள் ஆகியவற்றைக் கொண்டு வந்து கொழிக்கும். அத்தகைய காவிரிக் கரையில் சந்திர தீர்த்தம் என்றொரு பொய்கை உண்டு. அதனருகிலே பெருமரங்கள் நிறைந்த காடு ஒன்று உண்டு. அந்தக் காட்டில் ஒரு வெண் நாவல் மரத்தின் கீழே சிவலிங்கம் ஒன்று வெளிப்பட்டது. அதைப் பெருந் தவம் படைத்த ஒரு [1]வெள்ளை யானை கண்டது. உடனே அது தன் துதிக்கையினால் நீரை முகந்து வந்து, அந்த சிவலிங்கத்திற்குத் திருமஞ்சனம் ஆட்டி, மணங் கமழும் பூங்கொத்துக்களைச் சாத்தி நாள்தோறும் வழி பட்டு வந்தது. இவ்வாறு யானையால் வழிபாடு செய்யப்பட்டு வந்ததால் அந்த இடத்திற்கு திருவானைக்கா என்னும் பெயர் வழங்கலாயிற்று.

அங்கே ஞானமுள்ள ஒரு [2]சிலந்தியும் இருந்தது. திருவானைக்காவில் வீற்றிருக்கும் சிவலிங்கத் திருமுடியின் மேல் சூரிய வெப்பமும் மரக்கிளைகளின் சருகுகளும் படாமலிருப்பதற்காக அந்தச் சிலந்திப் பூச்சி தன்னுடைய வாயின் நூலினாலே சிவலிங்கத்திற்கு மேலே கூரை போல் நூல் வலைப் பந்தலைக் கட்டி விரித்து ஒரு விதானம் அமைத்தது. வழக்கம் போல் இறைவரது திருமுடியை வணங்கச் சென்ற வெள்ளை யானையானது, சிவலிங்கத்தின் மேலே சிலந்தி வலை ஒன்று இருப்பதைக் கண்டு, ''இது [3]அநுசிதம் என்று கருதி அந்த வலைவிதானத்தைச் சிதைத்தது. அதைக் கண்ட

---

[1]வெள்ளை யானை : இது இந்திரனது யானை அல்ல. சிவ கணத்தவனான புட்பதத்தன் சிவ வழிபாட்டில் பொறாமையும் சினமும் ஏற்பட்டதால் நேர்ந்த சாபத்தின் காரணமாக வந்த வெள்ளை யானையாகும்.

[2]சிலந்தி : இது சிவகணத்தவனாகிய மாலியவான் சிவத் தொண்டில் பொறாமையும், கோபமும் ஏற்பட்டதால் உண்டான சாபத்தின் காரணமாக நேர்ந்த வடிவம் ஆகும்.

[3]அனுசிதம் : தூய்மையற்றது.



சிலந்தி "இன்று யானையின் துதிக்கை சுழன்றதால் நூல் பந்தல் சிதைந்தது" என்று எண்ணி, மறுநாள் மீண்டும் புதிய வலையை இழைத்தது. அன்றும் அவ்வெள்ளை யானை அந்த வலைப்பரப்பை அழித்தது! அதைக் கண்ட சிலந்தி, "எமது சிவபெருமான் திருமுடிமேல் சருகுகள் விழாமலிருப்பதற்காக நாம் வருந்தியமைத்த நூலிழைப் பந்தலை இந்த யானை அழிப்பதோ?" என்று கோபித்து எழுந்து, யானையின் துதிக்கையின் உள்ளே புகுந்து கடித்தது. அந்த வேதனையைத் தாங்கமுடியாத வெள்ளையானை, தன்னுடைய துதிக்கையைத் தரையில் வேகமாக மோதி, நிலைகுலைந்து வீழ்ந்து இறந்தது. அதன் துதிக்கையினுள்ளே புகுந்து கடித்த சிலந்தியும், துதிக்கையை நிலத்தில் மோதியடித்ததால் அப்போதே இறந்தது. சிவபெருமான் அருள் தரும் முறையின்படி, வெள்ளை யானைக்கு ஏற்ற நற்பதத்தையளித்து, சிலந்தியை சோழர் குலத்தில் வந்துதித்து, உலகம் காத்து, சிவத்தொண்டு புரிந்து, பின்னர் வீடு பெறும்படி அருள் புரிந்தார்.

அந்தக் காலத்தில், சோழ மன்னனாகிய சுபதேவன் என்பவன், தன்னுடைய பெருந்தேவியான கமலவல்லியுடனே சிதம்பரத்தையடைந்தான். பொன்னம்பலத்தில் திருக்கூத்தாடும் சிவபெருமானைத் தம் மனைவியோடு வழிபட்டுக்

கொண்டிருந்தான். அவர்களுக்கு மக்கட்பேறு இல்லாமையால் அரசமாதேவியான கமலவதி சிவபெருமானிடம் பிள்ளை வரம் வேண்டி நின்றாள். அம்பலவாணர், அவளுக்கு இரங்கித் தமக்கு பெரும் திருப்பணி செய்த சிலந்தியை கமலவதியின் திருவயிற்றில் அழகியதோர் ஆண் மகவாக வந்தடையும்படி செய்தார்.

கமலவதிக்கு கர்ப்பகாலம் நிரம்பி பிரசவ வேதனை நெருங்கியது. அப்போது காலக்கணிதர்களான சோதிடர்கள் "இப்பிள்ளை இன்னும் ஒரு நாழிகை கழித்து பிறக்குமானால் மூவுலகங்களையும் அரசு புரியும்!" என்று கூறினார்கள்.

அதைக் கேட்டதும் கமலவதி, "ஒரு நாழிகை கழித்து என்பிள்ளை பிறக்கும்படி எனது கால்களைக் கட்டித் தலைகீழாகத் தூக்கி நிறுவுங்கள்!" என்று கட்டளையிட்டாள். அவர்கள் அவ்வாறே அவளை மேலே தூக்கிக் கட்டினார்கள். சோதிடர்கள் குறித்த அக்கால எல்லை நெருங்கியதும், கட்டவிழ்த்து விட்டார்கள். கமலவதி அரிய மணிபோன்றதோர் ஆண் குழந்தையைப் பெற்றுக் கையிலெடுத்தாள். அக்குழந்தை காலம் தாழ்த்துப் பிறந்தமையால், சிவந்த கண்களையுடையதாயிருந்தது. அதைக் கண்டதும் கமலவதி, "ஆ! எனக்குப் பிறந்த என் கோச் செங்கண்ணானோ?" என்று கூவியவாறு உடனே இறந்து விட்டாள். செங்கோல் சோழனாம் சுபதேவன், தன் அரிய உயிர் போன்ற புதல்வனான கோச் செங்கண்ணனை அருமையாக வளர்த்து, உரிய பருவத்தில் அம்மகனுக்கு முடிசூட்டி விட்டுப் பெரிய தவநெறியை அடைந்து, பின்னர் இறைவரது சிவலோகத்தை சார்ந்தான்.

அநபாய சோழ மன்னரது முந்தையோராக வரும் குலமுதல்வராகிய கோச்செங்கட் சோழர் சிவபெருமான் திருவருளினாலே தமது முற்பிறப்பின் நிலையை அறியும் உணர்வுடனே பிறந்தவராவார். அவர் அவ்வுணர்வுடனேயே உலக ஆட்சி புரிந்து சிறந்து விளங்கினார். அவர் பேரன்போடு சிவபெருமானுக்குப் பெரிய திருக்கோயில்கள் பலவற்றை கட்டியெழுப்பும் திருத்தொண்டைத் தம் கடமையாகக் கொண்டார். தாம் முற்பிறவியில் சிலந்தியாக இருந்து திருவானைக்காவில் திருவருள் பெற்றதை உணர்ந்து, அங்கு சென்று மெய்ஞ்ஞானத்தின் சார்புள்ள வெண்ணாவல் மரத்தினுடனே சிவபெருமானுக்கு அரிய திருக்கோயில் ஒன்றைக் கட்டியமைத்தார். தமது அமைச்சர்களை ஏவியனுப்பி சோழ நாட்டில் பல ஊர்கள்தோறும் சிவபெருமானுக்கு அழகு

நிறைந்த [1]மாடக்கோவில்கள் பலவற்றையும் கட்டி எழுப்பினார். அத்திருக்கோயில்கள் தோறும், இறைவருக்குத் திருவமுதுக்குரிய படித்தரம் முதலான பெரும் செல்வங்களைத் தம் விருப்பத்தோடு மிகவும் பெருக அமைத்தார்.

எத்திசைகளிலும் தமது புகழ் விளங்கச் செங்கோல் ஆணை செலுத்திய கோச்செங்கட் சோழர், திருத்தில்லைப் பதியை நினைத்து, முற்படச் சென்று அந்நகரை அடைந்து, சைவ மெய்த்திருவே மிக்க பொன்னம்பலத்தில் திருநடம் செய்தருளும் பெருமானை அடிவணங்கிப் பேரன்பு மேன்மேலோங்க உள்ளம் உருகி மகிழ்ச்சியடையத் தொழுது துதித்தார். அங்கு அவர் தங்கி வாழ்ந்து வரும் நாளிலே தில்லைவாழ் அந்தணர்களுக்கு உறையுளாக பல மாளிகைகள் எடுப்பித்தார்.

இவ்வாறு பற்பல திருத்தொண்டுகள் புரிந்த [2]**கோச்செங்கட் சோழராகிய செங்கண்ணார்**, உலகம் தமது வெண் கொற்றக்குடை நிழலிலே விளங்கத் தனியாட்சி பல்லாண்டு புரிந்து, நல்ல சிவத்தொண்டுகளைச் செய்து வாழ்ந்த பின்னர் தேவர்கள் வந்து வணங்கும்படி திருத்தில்லைக் கூத்தரது திருவடி நீழலை அடைந்தார்.

''அம்மன்னரின் மலரடிகளை வாழ்த்திவிட்டு, இசையாழின் தலைவராகப் புகழ்பெற்ற திருநீலகண்டப்பாணரின் திருத்தொண்டைக் கூறுவோம்.


''தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கு அடியேன்''

– சுந்தரர்.

[1] மாடக்கோயில் : ''இருக்கு மணிவாய் எண்டோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்துலகமாண்ட திருக்குலத்து வளச்சோழன்...'' திருமங்கை மன்னன் திருவாய் மொழி.

[2] செங்கண்ணனார் : ''புத்தியினாற் சிலந்தியும் தம் வாயின் நூலாற் புதுப்பந்தர் அது விழைத்துச் சருகான் மேய்ந்த சித்தியினால் அரசாண்டு சிறப்புச் செய்து சிவகளத்துப் புகப்பெய்தார் திறலான் மிக்க வித்தகத்தால் வெள்ளானை வில்லா அன்பு விரவியரா கண்டதற்கு வீடு காட்டி. பக்தர்களுக்(கு) இன்னமுதாம் பாசூர்மேய பரஞ்சுடரை கண்டடியேன் உய்ந்தவாறே!'' (அப்பர் தேவாரம்)

74. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்



நடுநாட்டிலே திருவெருக்கத்தம்புலியூரில், பாணர் மரபில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமானின் திருப்புகழை யாழில் இட்டு சிறப்பாக யாழ் வாசித்து வந்ததால் யாழ்ப்பாணர் என்று அழைக்கப்பட்டார். அவரது மனைவியாரின் பெயர் மதங்கசூளாமணி என்பதாகும். அவரும் இசையில் வல்லவர். கணவர் யாழ் வாசித்துப் பாட, அவரது மனைவியும் இனிய குரலில் பாடுவார். இவர்கள் சோழ நாட்டிலுள்ள சிவத்தலங்களையெல்லாம் வணங்கிக் கொண்டு, மதுரை மாநகரை அடைந்தார்கள். அவ்விருவரும் அங்குள்ள திருஆலவாய் என்ற திருக்கோயிலுக்குச் சென்று சாதியின் காரணமாக ஆலயத்தினுள் நுழைய முடியாமல் கோயிலின் வெளிவாசலில் நின்று யாழை மீட்டிக் கொண்டு காலாகாலத்திற்குரிய பண்களை அருமையாக அமைத்து சிவபெருமானின் புகழைப் பாடிவந்தார்கள். யாழ்ப்பாணரின் இசையைக் கேட்டு இன்புற்ற திருஆலவாய்ப் பெருமான், தமது தொண்டர்கள், எல்லோருடைய கனவிலும் அன்றைய இரவிலே தோன்றி, ''பாணரை எம் திருமுன் அழைத்து வருக!'' என்று கட்டளையிட்டார். மறுநாள் பொழுது விடிந்ததும், அடியார்களெல்லோரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரைக் கோயிலுக்குள்ளே அழைத்துச் சென்றனர். திருநீலகண்ட யாழ்ப்பாணர், இறைவனை வணங்கித் தொழுது மகிழ்ந்து, கூடல்பெருமானின் புகழை யாழினில் அமைத்து, ஆனந்தமாகப் பாடினார்.

அப்போது சிவபெருமான் திரிபுரத்தையெரித்த பண்ணையும், அந்தச் செயலுக்காக பூமியாகிய தேரின்மீது நின்ற தன்மையையும், யானையின் தோலையுரித்துப் போர்த்திக் கொண்ட வரலாற்றையும், காமனை எரித்த கதையையும், திருமாலுக்கும் பிரமனுக்கும் அரியவராய் விளங்கும் அவர் அடியார்களுக்கு எளியராய்க் காட்சி தரும் நிலையையும், பெரும்பாணர், தமது யாழினில் அமைத்து அன்போடு

உள்ளமுருக யாழிசைத்ததைக் கேட்டு சிவபெருமான், ''இந்தப் பாணனார் பாடுகிற சந்த யாழானது, தரையிலுள்ள சீதம் தாக்கினால், அதனுடைய நரம்புகளின் இறுக்கம் அழியும். ஆதலால் இவருக்கு முன்னால் அழகான பலகையொன்று இடுங்கள்!'' என்று ஒரு வானொலி வழங்கினார். அதைக் கேட்ட தொண்டர்கள், அவ்வாறே ஒரு பொற்பலகையைப் பாணர்முன் கொண்டு வந்து இட்டார்கள். பாணரும் அந்தப் பலகையினில் உட்கார்ந்து, யாழ வாசித்து, அம்மையப்பரின் புகழைத் தீந்தமிழில் பாடித் திருவருள் பெற்றார்.

பிறகு, பெரும்பாணர் இன்னும் பல சிவத்தலங்களையும் கும்பிட விரும்பி மதுரையிலிருந்து புறப்பட்டு, திருவாரூருக்கு வந்து சேர்ந்தார். அங்கு, தமது மரபு ஒழுக்கத்தின்படி, திருக்கோயில் திருவாயிலின் முன்பு உட்கார்ந்து, கூற்றுவனை உதைத்தருளிய சிவபெருமானின் திறத்தையும் அடியார்களுக்குத் தாயை விடச் சிறந்த பெருங்கருணை தந்தருளும் பேரருட் திறத்தையும் யாழிலே அமைத்து அழகாகப் பாடினார். சிவபெருமான் அதைக் கேட்டு மகிழ்ந்து, அங்கு பாணருக்கென்றே வேறொரு வாயிலை, வடதிசையில் வகுத்தருளினார். பெரும்பாணர், அதன் வழியே சென்று, வன்மீகநாதரை மூலத்தானத்தில் நேரில் தரிசித்து வணங்கி வழிபட்டு வந்தார்.

இவ்வாறு யாழ்ப்பாணர் திருவாரூரில் சிலகாலம் தங்கியிருந்துவிட்டு, பிறகு அங்கிருந்து புறப்பட்டு பல சிவத்தலங்களையும் வணங்கிச் சென்று சீர்காழிக்கு வந்து சேர்ந்தார். அங்கு திருஞானசம்பந்தரின் திருவடிகளை வணங்குவதற்காக, அவரைக்காணச் சென்றார். பாணனார் வந்த செய்தியை, திருஞானசம்பந்தர் தெரிந்து கொண்டு அவருக்குத் தக்கவாறு சிறப்புகள் செய்தார். பிறகு யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தர் பாடியருளும் திருப்பதிகத்தின் இசையைத் தம் யாழிலே அமைத்து வாசிக்கும் பேறு பெற்று, அவருடனேயே பலகாலம் தங்கியிருந்து முடிவில் திருநல்லூர்ப் பெருமணத்தில் ஞானசம்பந்தருடனே சிவஜோதியில் கலந்து சிவபெருமானின் திருவடி நீழலை அடைந்தார்.

இத்தகைய பெரும்பாணரின் மலர்ப்பாதங்களை வணங்கிவிட்டு அடுத்ததாக ஆதி இசை அந்தணர் மரபில் தோன்றிய சடையனாரின் பெருமையைச் சொல்லுவோம்.

''திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்''

— சுந்தரர்

75. சடைய நாயனார்

★சடையனார் என்பவர், சுந்தரமூர்த்தி நாயனாரின் தந்தையாவார். சுந்தரமூர்த்தி நாயனார் முன் தவப்பயனால் சிவபெருமானையே தமக்குத் தோழராக ஆக்கிக் கொண்டு, தம் காதலியான பரவையாரிடம் சிவபெருமானையே தூதாகச் செல்லுமாறு ஏவியும், சேரமான் பெருமாள் நாயனாருக்குத் துணைவராகி உலகம் உய்யவும் சிறந்து விளங்கினார். அத்தகையவரைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவர்தான் சடையனார். அவர் திருநல்லூரில் ஆதி சைவகுலத்தில் அவதரித்து, அந்தக் குலம் விளங்க வாழ்ந்திருந்தவர்.

''என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
(அடியேன்)''

— சுந்தரர்

76. இசை ஞானியார்

அளவில்லாப் பெருமைகள் வாய்ந்த சடையனாரின் அருட்செல்வத் திருமனைவியார் இசை ஞானியார் என்பவர்! சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப் பெற்ற சுந்தரமூர்த்தி நாயனாரைத் தமக்குப் புதல்வனாகப் பெற்ற பெரும் புகழுக்குரியவர். உயர்வான சிவவேதியர் குலத்தில் வந்தவர். இசைஞானிப் பிராட்டியான இவ்வம்மையாரை எனது சிறு பொன் மொழிகளால் புகழ முடியுமோ? முடியாது! வேறு எவருக்குமே முடியாது!

''இசைஞானி (அடியேன்)''

— சுந்தரர்

★ சடையனார் : இது இறைவர்க்குரிய பெயர். இதை இவர்க்குத் தூய்மையின் பொருட்டு இட்டு வழங்கினர்.

77. வெள்ளை யானை
(சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றின் பிற்பகுதி)

உலகில் நீடிய பக்தியென்னும் பயிர் நாற்றானது அன்பெனும் நீரினாலே பருத்துச் சுந்தரமூர்த்தி நாயனாரின் செம்பொன் மேனியையே தனது வடிவமாகக் கொண்டு வளர்ந்து, இருவினைகள் என்ற களைகளை நீக்கி, ஞானக்கதிர்களாகிய கதிர்களைப் பரப்பிச் சிவபோகம் என்னும் கனி முதிர்ச்சி பெற்றுச் செழிப்பாக விளைந்தது.

இவ்வாறு, சிவபோகத்தில் பழுத்த சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில் தங்கியிருந்தார். அப்போது ஒருநாள் சேரமான் பெருமானான கழறிற்றறிவார் நாயனாரைப் பற்றிய நினைப்பு அவருக்கு வந்தது. உடனே அவர், தியாகேசரை வணங்கி, அருள்விடை பெற்று, சேரமான் பெருமானின் மலைநாட்டை அடைவதற்குத் தடுக்கவொண்ணாப் பெருவிருப்பத்தோடு புறப்பட்டுச் சென்றார்.

பொன்னிவள நாடாகிய சோழ நாட்டில் சிவபெருமான் மகிழ்ந்து கோயில் கொண்டிருக்கும் திருத்தலங்கள் பலவற்றை நம்பியாரூரரான சுந்தரர் வணங்கிச் சென்று முல்லை நிலச் சார்புடைய மேலைக் கொங்கு நாட்டிலுள்ள [1]திருப்புக் கொளியூரை அடைந்தார். அங்கு வேதியர்கள் வாழும் மாடவீதியின் வழியாகச் சென்று கொண்டிருந்தார். அந்த வீதியில் மிகுந்த செல்வத்துடன் ஒன்றுக்கொன்று எதிராக அமைந்திருக்கும் இரண்டு வீடுகளில் ஒரு மனையில் மங்கல ஒலியும். மற்றொன்றில் அழுகை ஒலியும் கேட்டன. அவற்றைக் கேட்டதும் சுந்தரமூர்த்தி நாயனார் அங்குள்ள வேதியர்களை நோக்கி, ‘‘இவ்விரண்டொலியும் ஒருங்கே நிகழ்வதற்குக் காரணமென்ன?’’ என்று கேட்டார்.

அதற்கு அந்தணர்கள் நம்பியாரூரரை வணங்கி ‘‘ஐந்து வயதுடைய இரண்டு சிறுவர்கள் ஒரு மடுவில் சென்று குளித்தார்கள். அவர்களில் ஒரு பிள்ளையை முதலை ஒன்று விழுங்கிற்று, தப்பிப் பிழைத்துவந்த பிள்ளைக்கு இந்த வீட்டில்

---

[1] திருப்புக்கொளியூர் : இது இப்பொழுது அவிநாசி என்று வழங்குகிறது. இதனை தக்ஷிண காசியென்றும், காசியில் வாசி அவிநாசி என்றும் கூறுகின்றனர். இது திருப்பூர் நிலையத்திலிருந்து வடக்கே எட்டு மைல் தொலைவிலுள்ளது.

பூணூல் அணியும் உபநயனம் நடைபெறும் மங்கல ஒலி எழுகிறது! எதிர் வீட்டிலோ பிள்ளையை இழந்தாரது அழுகை ஒலி எழுகிறது!" என்று கூறினார்கள்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி நாயனாரின் மனம் இரங்கியது. புதல்வனை இழந்த வேதியரும் அவரது மனைவியும் சுந்தரரின் வருகையை அறிந்ததும் அவரைத் தரிசித்து வணங்க வேண்டுமென்று முன்னமே எண்ணியிருந்ததால் தமது ஒரே மகனையிழந்த சோகத்தையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஓடோடியும் வந்து நம்பியாரூரரது திருவடியில் வீழ்ந்து வணங்கினார்கள்.

மகனையிழந்த சோகமாகிய துன்பம் நீங்க, முகமலர்ச்சியுடன் வந்து தம்மை வணங்கிய அவர்களை நம்பியாரூரர் அன்புடன் நோக்கி "இன்ப மைந்தனை இழந்தவர்கள் நீங்களோ?" என்று கேட்டார்.

அதற்குப் பெற்றோர்கள் "ஆம்! அது முன்னேயே நேர்ந்து கழிந்தது! அது நிற்க; நாங்கள் தங்களை வணங்க நெடுங்காலமாக விரும்பியிருந்தோம். எங்களுடைய அன்பு வீண்போகாமல், தாங்கள் இங்கு எழுந்தருளும் பாக்கியத்தை இப்போது பெற்றோம்!" என்று கூறினார்கள்.

அவர்களுடைய அன்பைக் கண்டு, அதில் கட்டுண்ட நம்பியாரூரர் மகனை இழந்த துன்பத்தையும் மறந்து நான் வந்ததற்காக இவர்கள் மன மகிழ்ச்சியுறுகிறார்கள்! ஆதலால் "நான் இவர்களது புதல்வனை அந்த முதலையின் வாயிலிருந்து அழைத்துக் கொடுத்த பிறகே, அவிநாசிப் பெருமானது திருவடிகளைச் சென்று வணங்குவேன்!" என்று அருளிச்செய்து, அவர்களது துன்பத்தைப் போக்க முற்பட்டார்.

பிறகு வன்றொண்டரான சுந்தரர், "இவர்களது புதல்வனைக் கொடிய முதலை விழுங்கிய மடு எங்கேயுள்ளது?" என்று கேட்டு அறிந்து, அந்த மடுவின் கரையில் வந்து நின்று, அம்முதலை முன்னாளில் விழுங்கிய சிறுவனை, மீளக்கொண்டு வரும் பொருட்டு, [1]"எற்றான் மறக்கேன்" என்று தொடங்கும் திருப்பதிகம் எடுத்து

[1] எற்றான் மறக்கேன் : இத்திருப்பதிகத்தினால் நீர் வறண்டிருந்த மடுவில் நீரினையும், நீரினுள் முதலையினையும், முதலை வயிற்றினில் புதல்வனையும், புதல்வனுக்குச் சென்ற வயதினையும் வருவித்தருளினர் என்பதை "வறந்திடு பொய்கை முன் நிரம்ப மற்றவண், உறைந்திடு முதலை வந்துதிப்ப அன்னதால் இறந்திடு மகன் வளர்ந்து எய்தப் பாடலொன்று, அறைந்திடு சுந்தரன் அடிகள் போற்றுவாம்" என வரும் கந்தபுராணச் செய்யுளால் அறியலாம்.

''முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே'' என்று பாடலானார். அதில் நான்காவது திருப்பாட்டு முடியுமுன்னே, எமதர்மன் அச்சிறுவனது உயிரைக் கொண்டு வந்து, மடுவின் நீரிலுள்ள முதலையின் வயிற்றிலே, நிலத்திலிருந்து வளர்ந்தது போலக் கழிந்த இரண்டு ஆண்டுகளின் வளர்ச்சியுமுடையதாகத் தோற்றுவித்து, அந்த முதலையின் வாயில் வரச் செய்தான். உடனே பெருவாய் முதலையொன்று பிள்ளையைக் கரையில் கொண்டு வந்து உமிழ்ந்தது. அப்பொழுது அன்பு மேலீட்டினால் மனமுருகிய தாயானவள், ஓடிச்சென்று அந்தப் புதல்வனையெடுத்துக் கொண்டு வந்து, தன் புத்திரனின் உயிரை மீட்டுத் தந்த நம்பியாரூரரின் திருவடிகளில் தனது கணவனோடும் வீழ்ந்து வணங்கினாள்.

இத்தகைய செயற்கரிய செயலைக் கண்ட தேவர்கள் கற்பக மழை பொழிந்தனர். மண்ணுலக மக்கள் அதைக் கண்டு வியந்தனர். மறையவர்கள் எல்லோரும், தங்கள் மேலாடைகளை ஆகாயத்தில் வீசி, ஆரவாரம் செய்தனர். பிறகு சுந்தர மூர்த்தி நாயனார், கண்ணின் மணி போன்ற அந்தப் புதல்வனை அழைத்துக் கொண்டு, அவிநாசியிலுள்ள சிவபிரானை வணங்கித் திருப்பதிகம் பாடிப் பணிந்து புறம்போந்தார். அதன் பிறகு நம்பியாரூரரான சுந்தரர், தம்மிடம் அன்பு பூண்ட வேதியரின் புதல்வனுக்கு மங்கல முரசம் முழங்க உபநயனம் செய்வித்து விடைபெற்றுக் கொண்டு குளிர்ந்த சோலைகள் நிறைந்த மலை நாட்டிற்குப் புறப்பட்டார்.

அவர், மேலைத் திசையிலுள்ள நாட்டில் ஆங்காங்குத் திகழும் பல சிவ ஸ்தலங்களையும் காடுகளையும், காட்டாறுகளையும் கற்கள் நிறைந்த நிலங்களையும் கடந்து சென்று மலை நாட்டையடைந்தார். அப்பொழுது மலைநாட்டிலுள்ள சிவனடியார்கள், அவருக்கு முன்னதாக ஓடிச்சென்று, ''முன்னாளில் முதலை விழுங்கிய மைந்தனை, முன்போல உயிர்பெற்றுவர மீட்டுக் கொடுத்த நம்பியாரூரர் வருகிறார்!'' என்று சேரமான் பெருமாள் நாயனாருக்கு அறிவித்தார்கள். அந்தச் செய்தியை அறிவித்தவர் களுக்கெல்லாம் சேர மன்னர், பொற்கிழியும், மணிப்பூணும், காசும், துணியும் வாரி வழங்கினார். மகிழ்ச்சிப் பெருக்கால் தாம் செய்வது இன்னதென்று அறியாது, ''என் ஐயனாகிய நம்பியாரூரர் வந்து விட்டார்! என்னை ஆட்கொள்ளும் அண்ணலார் வந்து விட்டார்! ஆரூரில் வீற்றிருந்தருளும் சைவப் பெருமகனார் வந்துவிட்டார்! என் துணைவராகிய தலைவர் வந்துவிட்டார்! உலகுய்யும் பொருட்டு அவதரித்த பெருந்தகையார் வந்துவிட்டார்!'' என்று பலவாறும் எடுத்துச்

சொல்லி மகிழ்ச்சி முரசை நகரெங்கும் சாற்றும்படி ஆணையிட்டார்.

பிறகு சேரமான் பெருமாள் நாயனார், தம் அமைச்சர்களை யழைத்து, நகரத்தை அலங்கரிக்கச் செய்தார். அதன் பிறகு அவர் யானைமீதேறி ராஜவீதியைக் கடந்து, சுந்தரமூர்த்தி நாயனாரை எதிர்கொள்ளச் சென்றார். மலைநாட்டின் எல்லையினுள்ளே வந்தடைந்த சுந்தரமூர்த்தி நாயனாரை சேரர் பெருமான், எதிர்கொண்டு வரவேற்று, யானையிலிருந்து கீழே இறங்கி விரைந்து ஓடிச் சென்று, அவருடைய திருவடிகளைப் பணிந்து கும்பிட்டார். நம்பியாரூரரும் சேரலர் பெருமானை எதிர்வணங்கிக் கட்டித் தழுவிக்கொண்டார். இருவருடைய அழகிய மேனிகள் வெவ்வேறாயிருந்தும் ஒன்றே ஆகும்படி, அகமகிழ்ந்து தழுவிக் கொண்டார்கள். பிறகு, சேரர் பெருமான் நம்பியாரூரரின் திருவாரூர்த் தியாகேசப் பெருமானின் சிறப்பின் நன்மைகளைக் கேட்டு அறிந்து இன்புற்றார். ஒருவர் உள்ளே ஒருவர் மனம் கலந்து எவ்விதமான குறைவும் இல்லாது பழகிய இருவரது நட்பின் சிறப்பைக் கண்டு மக்கள் யாவரும் பெருமகிழ்ச்சி கொண்டு ஆரவாரம் செய்தார்கள். சேரமான் பெருமாள் நாயனார், சுந்தரமூர்த்தி நாயனாரை தாம் ஏறிவந்த யானைமீது ஏற்றிவைத்து தாம் அவர்பின்னால் அமர்ந்து, அவருக்கு வெண் கொற்றக் குடை பிடித்தார். கடல்போல் சேர மன்னரின் சேனைகள் ஆரவாரிக்கவும் கங்கையாறு முழங்கியெழுந்ததுபோல் வெண்ணீறு அணிந்த சிவனடியார்கள் ஆரவாரிக்கவும் அமைச்சர்கள் ஏறியிருந்த குதிரைகளின் காலடிகளிலிருந்து எழும்பும் தூசிகள் எங்கும் எழுந்து பரவவும் சந்திரனும் மேகமும் தவழும் மதில்களையுடைய வஞ்சிமா நகரத்தின் அழகிய வாயிலை, நம்பியூரரும், சேரமான் பெருமாள் நாயனாரும் வந்தடைந்தார்கள்.

அப்பொழுது, அந்தணர்கள் வேத முழக்கத்துடன் குணலைக் கூத்தாடினார்கள்; யானைகள் மழைபோல மதநீரைப் பொழிந்தன; குதிரைகள் கிளர்ச்சியின் ஒளிகள் எங்கும் வீசின. நிறைகுடங்கள் எங்கும் வரிசையாகக் காணப்பட்டன. வீதியின் வழியாகத் தோழர்களைத் தாங்கிச் சென்ற யானை ஊர்வலம் சென்றபோது, மங்கல மகளிர்கள் பூமாரி தூவினார்கள். ஆடற் பெண்டிர்கள் தெருவில் சிலம்பொலிக்க நடனமாடினார்கள். முரசுகள் முழங்கின; சங்குகள் ஒலித்தன; நம்பியாரூரரும் சேரர் பெருமானும் அரண்மனையின் நீண்ட வாயிலினருகே, தாம் செலுத்திவந்த யானையை நிறுத்திக் கீழே இறங்கினார்கள்.

அவர்கள் இருவரின் இரண்டு பக்கங்களிலும், வேதங்களில் வல்ல முனிவர்கள் மலர்களையும்,

முத்துக்களையும், பொடிகளையும் கலந்து தூவி, மங்கல வாழ்த்துக்களைக் கூறினர். அவர்களுக்கு மேலே வெண்கொற்றக் குடை நிழல் பரப்ப, சாமரைகள் இருபக்கங்களிலும் வீச, நம்பியாரூரரும் சேரர் பெருமானும் அரண்மனையின் நடுவில் சென்றார்கள்.

அங்கே, சேரர் பெருமான், நம்பியாரூரரை தமது சிங்காதனத்தின்மீது வீற்றிருக்கும்படி வணங்கி வேண்டிக் கொண்டு பலவித உபசாரங்களுடன் பூசைகள் செய்து, பரிசனங்கள் மனமகிழும்படி அவர்களுக்குப் பொன்னும் மணியும் வாரி வழங்கினார்.

நம்பியாரூரரும், சேரர் பெருமானும் இவ்வாறு மகிழ்ச்சியுடன் கொடுங்கோளூரில் இருக்கும் நாட்களில் மலை நாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் பலவற்றை நம்பியாரூரர் சேரர் பெருமானுடன் சென்று வணங்கித் துதித்து, மகோதை நகருக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

இவ்வாறு பலநாட்கள் சென்றபின் ஒருநாள் சேரர் பெருமான் ஸ்நானம் செய்து கொண்டிருக்கும்போது, சுந்தரர் முன்பு தம் பரமசிவனாரைத் திருக்கயிலையிலிருந்து பிரிந்து இவ்வுலகில் பிறந்த நன்னெறி முடியும் கால எல்லை வந்தது. அதனால் சுந்தரர் தனியே திருவஞ்சைக்களத்தையடைந்து, திருக்கோயிலை வலம் வந்து, அன்பு பெருகும் உள்ளத்துடன் இறைவரது திருமுன் துதித்து, நிலமுற வீழ்ந்து வணங்கியெழுந்து, ''ஆண்டவனே!'' இவ்வுலகில் பாசத்தால் கட்டப்பட்ட என் மனைவாழ்க்கையை அறுத்திட்டு, நம் திருவடியிலே அடியேனைச் சேர்த்தருள வேண்டும்'' என்று நினைத்து ஆண்டவனை வேண்டி ''தலைக்குத் தலைமாலை'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.

அப்பொழுது திருக்கயிலையில் கணநாதர்கள் சூழப் பார்வதி தேவியாரோடு வீற்றிருந்த பரமசிவனார் பிரம்மா, விஷ்ணு, முதலான தேவர்களையெல்லாம் நோக்கி, ''நீங்கள் போய் ஒன்றிய சிந்தையுள்ள நமது ஆரூரனை வெள்ளை யானையின்மீது ஏற்றி இங்கே அழைத்துக்கொண்டு வாருங்கள்!'' என்று கூறினார்.

உடனே தேவர்கள், சிவபெருமானை வணங்கி விடைபெற்று, தூயநலம் திகழும் ஜோதிமயமான வெள்ளை யானையையும் உடன் கொண்டு மகோதை நகரிலுள்ள திருவஞ்சைக்களத்தை அடைந்தார்கள். நம்பியாரூரரும்



திருக்கோயிலை வலம் வந்து, பிறகு மதிலின் திருவாயிலுக்கு வந்து சேர்ந்தார். அப்போது தேவர்கள், சுந்தரரைக் கண்டு, சிவாஞ்ஞையைத் தெரிவித்தார்கள். சுந்தரர் சிவபெருமானை நினைத்து தம்மை மறந்து நின்றார். தேவர்கள் அவரை வெள்ளையானை மீது ஏற்றினார்கள். சுந்தரர், தம் தோழரான சேரமான் பெருமாள் நாயனாரை நினைத்துக் கொண்டே வெள்ளை யானைமீது சென்றார். கடல் முழக்கம்போல் ஐவகை வாத்தியங்களும் ஒலித்தன. வானவர் பூமழை பொழிந்தார்கள். தம்பிரான் தோழனாகிய சுந்தரமூர்த்தி நாயனாரின் செயலை, சேரமான் பெருமாள் நாயனார் அறிந்தார். அப்பொழுதே அவர் அருகிலிருந்த குதிரையின் மேல் ஏறிக்கொண்டு, திருவஞ்சைக்களம் சேர்ந்தார். அங்கு வானவெளியில் வெள்ளையானையின் மேல் சென்று கொண்டிருக்கும் சுந்தரரைக் கண்டார். உடனே சேரமான் பெருமாள் உலகில் நில்லாமல் நம்பியாரூரரிடம் அடைந்த தம் மனதைப்போல், தம் குதிரையையும் முற்படச் செலுத்த எண்ணினார். உடனே அவர் தம் குதிரையின் காதுகளில் [1]திருவைந்தெழுத்தோடு சிவ மந்திரத்தை ஓதினார். உடனே அவருடைய குதிரை,

[1] திருவைந்தெழுத்து : இச்சிவ மந்திரம் ஓதுபவர்க்கு விரும்பியது கிடைத்தருளும். இதனை ''நல்லவர் தீயரெனாது நச்சினார், செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ, கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத் தல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே'' என வரும் சம்பந்தர் தேவாரத்தால் அறியலாம்.

ஆகாயத்திலே பாய்ந்து எழுந்து, சுந்தரமூர்த்தி நாயனார் ஊர்ந்து செல்லும் வெள்ளையானையை அணுகி, எதிரே வலம் வந்து அதன் முன்னாகச் சென்றது.

சேரமான் பெருமாள் நாயனாருடைய படை வீரர்கள், தங்கள் தலைவர் குதிரையின்மேல் வானவீதியில் செல்லுவதைப் பார்த்தார்கள். தங்கள் கண்பார்வைக்குப் புலப்படும் எல்லை வரைக்கும் ஆகாயத்தில் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். பிறகு குதிரைபோய் மறைந்ததால் அதற்கு மேல் அக்காட்சியைக் காணமுடியாமல் அவர்கள் உருகினார்கள். பிறகு திட பக்தியினால் அவர்கள் தங்கள் உடைவாள்களை உருவித் தமது உடலைச் சிதைத்து, வீழ்த்திவிட்டு வீர நுண்ணுடல் பெற்று, விரைந்து சென்று, சேரமான் பெருமாள் நாயனாருக்கு முன்னதாக அவர் ஏவலை மேற்கொள்ளச் சென்றார்கள்.

''சேரமான் பெருமாள் நாயனார் தம் குதிரைமீது திருக்கயிலையை நோக்கி முன்செல்ல, வெள்ளை யானையின் மேல் பின் சென்று கொண்டிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் ''தானெனை முன்படைத்தான்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிக் கொண்டு, திருக்கயிலையின் தென் திசைத் திருவாயிலை அடைந்தார்!''.

உண்மையான அன்பருடைய சிந்தையைப் போல் மணிவாயிலில் பேரொளி பரவியிருந்தது. அங்கு, சேரர் பெருமான் தம் குதிரையிலிருந்தும் நம்பியாரூரர் வெள்ளை யானையிலிருந்தும் கீழே இறங்கி, ஒன்றாகச் சேர்ந்து, நெடுந்தூரம் பல வாயில்களையும் கடந்து சென்று திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். அவ்வாயிலி லே சேரர் பெருமான் தடைபட்டு நின்றார். நம்பியாரூரர் மாத்திரம் இறைவன் திருவருளால் சிவபெருமான் திரு முன்புசென்று, வீழ்ந்து, வணங்கியெழுந்து, தாய்ப் பசுவைக்கண்டு விரைந்து வரும் இளங்கன்றினைப் போல், பெரும் அன்போடு விரைந்து, அணுகி நின்று, துதித்தார். பெரும் தொண்டராகிய வன்றொண்டரை சிவபெருமான் நோக்கி, ''உலகமெல்லாம் உய்யும் வண்ணம் ஆரூரனே! வந்தனையோ?'' என்று கேட்டார்.

அதற்கு சுந்தரர், ''அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளி, அடியேனை வலிந்து, அடிமைகொண்டு, பாசத்தை யறுத்து, முக்தி நெறியினைத் தந்தருளிய இந்தப் பெருங்கருணை, அடியேன் தரத்ததோ? பெருமான கருணையே கருணை!'' என்று சொல்லிப் போற்றிப் பணிந்தெழுந்தார். பிறகு சுந்தரர் ஆனந்தமே வடிவாக நின்றதுபோல சிவானந்த வெள்ளத்துள் அழுந்தி நின்றார்.

இவ்வாறு பேரின்ப வெள்ளத்துள் அழுந்திய சுந்தரர், ஆவலோடு சிவபெருமானை நோக்கி, ''நீரணி வேணிய! நின்மலர்க்கழல் சாரும் பொருட்டு வந்த சேரலார் பெருமான், திருவணுக்கன் திருவாயிற்புரத்தில் தடைப்பட்டு நிற்கின்றான்!'' என்று விண்ணப்பித்தார்.

சிவபெருமான், உடனே நந்திதேவரை அழைத்து, ''நீர் போய் சேரமானை இங்கு கொணர்க!'' என்று கட்டளையிட்டார். நந்திதேவர் அவ்வாறே சென்று, சேரமான் பெருமாள் நாயனாரை உள்ளே வரும்படி அறிவித்தார். அவர் நந்திதேவரின் கழலை வணங்கிவிட்டுச் சிவபெருமான் திருமுன்பு வந்து, பேரன்போடு போற்றித் துதித்து நின்றார்.

சிவபெருமான், புன்னகை தவழ சேரமானை நோக்கி, ''நாம் உன்னை அழையாமலிருக்க நீ இங்கு வந்தது என்ன?'' என்று வினவினார்.

அப்போது கழறிற்றறிவாரான சேரமான் பெருமாள் அஞ்சலி செய்து, ''அடியேன் நம்பியாரூரருடைய திருவடிகளை வணங்கிப் போற்றிய வண்ணம், வெள்ளையானையின் முன்னே தொழுது வந்தேன்! பெருமானே, உம் பெருங்கருணை வெள்ளமானது, அடியேனை இழுத்துக் கொண்டு வந்து, தங்கள் முன் நிறுத்தியது! அதனால் அடியேன், திருமுன்பு வரப் பெற்றேன். இப்பொழுது அடியேன் செய்து கொள்ளும் விண்ணப்பம் ஒன்றுள்ளது. அடியேனுக்கு வன்றொண்டப் பெருமானது நட்பையருளிய நாதரே நான்மறைகளும், முனிவர்களும் துதிக்கும் மேன்மையுடைய பெருமானே! உம் மீது கொண்ட அன்பு காரணமாக நான் திருவுலா என்னும் பிரபந்தம் ஒன்று பாடியுள்ளேன். அதைக் கேட்டருள வேண்டும்!'' என்று பணிந்தார்.

சிவபெருமானும் ''சொல்லுக!'' என்று திருவாய் மலர்ந்தருளினார். சேரமான் பெருமாள் நாயனார் தாம் பாடிய ஞானவுலா என்னும் திருக்கயிலாய ஞானவுலாவைக் கேட்பித்தார்.

பிறகு சிவபெருமான், மகிழ்ந்து அவரை நோக்கி, ''நம்பியாரூரனாகிய ஆலாலசுந்தரனும், நீயும் நமது கணநாதர்களுக்குத் தலைமையாய் இருப்பீர்களாக!'' என்று அருள் புரிந்தார்.

அவ்வாறே இருவரும் பணிந்தெழுந்து இறைவன் திருவருளைத் தங்கள் தலைமேற் கொண்டார்கள்.

நம்பியாரூரர் முன்போல் ஆலால சுந்தரராகித் தாம் முன்பு செய்து வந்த திருத்தொண்டினில் நிலைபெற்றார். சேரமான் பெருமாள் நாயனாரும், சிவகணத்தலைவராகி, தாம் ஏற்ற திருத்தொண்டை மேற்கொண்டார். மண்ணுலகில் நம்பியாரூரர்க்கு காதல் மனைவிகளாக வந்து அவதரித்த பரவையார், சங்கிலியார் என்னும் இரு பெண்மணிகளும் வலிய வினைத் தொடக்கு நீங்கி, உமாதேவியாரின் திருவருளினால் முன்போல் கமலினியாகவும் அனிந்ததையாகவும் மாறி, உமாதேவியாரின் திருக்கோயிலில் திருத்தொண்டு புரியும் திருப்பேறு பெற்றார்கள்.

ஆலாலசுந்தரர், தாம் வரும் வழியில் பாடியருளிய ஏழிசைப் பதிகமான ''தானெனை முன் படைத்தான்'' என்னும் திருப்பதிகத்தை உலகத்தார் போற்றும் பொருட்டு வருணதேவனிடம் கொடுத்தார். வருணதேவனும், ஆலாலசுந்தரரின் திருவருளைப் பெற்று, அத்திருப்பதிகத்தை திருவஞ்சைக் களத்திற்குக் கொண்டு வந்து யாவரும் உணரும்படி வெளிப்படுத்தினான்; திருக்கயிலையில் சிவபெருமானின் முன்னிலையில் சேரமான் பெருமாள் நாயனார், விண்ணப்பம் செய்த ஞானவுலாவை அப்பொழுது கேட்ட மாசாத்தனார், அந்நூலை எடுத்துக் கொண்டு வந்து தமிழ்நாட்டிலுள்ள ★திருப்பிடவூரிலே அதன் நன்மை விளங்கும்படி வெளியிட்டருளினார்.

''என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்''

– பெரிய புராணம்.

முற்றும்.

வாழ்த்து

வையநீடுக: மாமழை மன்னுக;
மெய்விரும்பிய அன்பர் விளங்குக;
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக;
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே!

– பெரிய புராணம்.

★ திருப்பிடவூர் : இது திருக்கடவூருக்கு மேற்கே திருவிடைக் கழியின் அருகில் உள்ளது.

★ தனியடியார் : அறுபத்து மூவர், தொகையடியார் எண்ணற்றோரின் வரலாறுகளடங்கிய பெரியபுராண வசனம் முற்றிற்று.

கதைகள்

விக்கிரமாதித்தன் கதைகள்	140	00
விக்கிரமாதித்தன் கதைகள் *(டெம்மி சைஸ்-H. Bound)*	200	00
மதனகாமராஜன் கதைகள்	85	00
மரியாதைராமன் கதைகள்	20	00
வேதாளம் சொன்ன கதைகள்	30	00
திராவிட நாட்டுக் கதைகள்	75	00
கதைக்கடல்	110	00
தெனாலிராமன் கதைகள்	20	00
இராயர் அப்பாஜி கதைகள்	20	00
பீர்பால் கதைகள்	20	00
ஈசாப் கதைகள்	30	00
பாட்டி சொன்ன கதை	200	00
போதிசத்துவர் கதைகள்	120	00
சிந்தைக்கு விருந்தாகும் குட்டிக் கதைகள்	33	00
ஹாத்திம்தாய்	95	00
குரங்கு மாமுனிவர் கதைகள்	60	00
பைபிள் கதைகள்	160	00
உமார் கயாம்	78	00
மங்கம்மா சத்திரத்து மனமோகன கதைகள்	125	00
குரு சிஷ்யக் கதைகள்	35	00

பொன்மொழிகள்

விவேக சிந்தாமணி பொன்மொழிகள்	15	00
ஔவையார் பொன்மொழிகள்	24	00
பஞ்சதந்திரம் பொன்மொழிகள்	10	00
மகாகவி பாரதியார் பொன்மொழிகள்	40	00
மகாத்மா காந்தி பொன்மொழிகள்	35	00
அதிவீரராம பாண்டியன் பொன்மொழிகள்	15	00
பாரதிதாசன் பொன்மொழிகள்	20	00

ஜோதிட நூல் வரிசை

திசாபுத்தி பலன்கள்	80	00
நீங்கள் பிறந்த மாத அதிர்ஷ்ட ஜோதிடம்	120	00
12 மாதங்களில் பிறந்தவர்களுக்கும் ஒரே புத்தகம்		
பெண்கள் பூப்படையும் பலன்கள்	40	00
ஜாதகமும் திருமணப் பொருத்தங்களும்	30	00

அரு. ராமநாதன் எழுதியவை

குண்டு மல்லிகை	200	00
நாயனம் சௌந்திரவடிவு	20	00
வீரபாண்டியன் மனைவி *(3 பாகங்கள்)*	380	00
அசோகன் காதலி	20	00
காலத்தால் அழியாத காதல்	25	00
அரு.ராமநாதனின் சிறுகதை தொகுப்பு–1	25	00
இராஜராஜ சோழன் *(நாடகம்)*	50	00
சுந்தரரின் பக்தியும், காதலும் *(நாடகம்)*	30	00
கிளியோபெத்ரா *(சரித்திர நாவல்)*	40	00
பழையனூர் நீலி *(சமுக நாவல்)*	40	00

வரலாறு

வீரபாண்டிய கட்டபொம்மன்	150	00
ராணி மங்கம்மாள்	100	00
மேரி க்யூரி	35	00
மார்ட்டின் லூதர் கிங்	45	00
தாமஸ் ஆல்வா எடிசன்	45	00
ரவீந்திரநாத்தாகூரும் கீதாஞ்சலியும்	75	00

மற்ற நூல் விவரங்கள் கொண்ட இலவச விலைப்பட்டியலுக்கு,
பிரேமா பிரசுரம், 59, ஆற்காடு சாலை, சென்னை – 600 024.
✆ : 24800325, 24833180, 24811755.



விநாயகர் புராணம்
சிறந்த நூல்கள்!
குறைந்த
விலையில்!!
ஸ்ரீ கந்த புராணம்
ஸ்ரீ சிவமகா புராணம்
ஸ்ரீ தேவி பாகவதம்
பிரேமா
பிரசுரம்
திருமந்திரம்
1952
நிறுவப்பட்டது
ஸ்ரீ கருட புராணம்
சென்னை 600024.
: 24800325, 24833180